*Issued* 21—6—1966]

1756

226

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

MONDAY, 7TH MARCH 1966

**VOLUME XXXV—No. 1**

*CONTENTS*



| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 1–14 |
| II Statement by the Minister for Industries on his visit to Japan. .. | 15–16 |
| III Privilege Matter—Publication of expunged portions of Assembly Proceedings in the "Navasakthi" .. .. .. | 17 |
| IV Voting on Demands for Grants for 1966-67— | |
| Demand No. XIII—Education.. .. .. .. | 17–106 |
| V Papers laid on the Table of the House .. .. .. | 106 |



©
GOVERNMENT OF MADRAS
1966

*Legislative Assembly Department*
*Madras*

PRICE 50 *Paise*]

137839

D
V2N,31 'N66
N66.35

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Monday, 7th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Kalpakkam Atomic Power Project*

* 187 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any foreign collaboration has been arranged, in respect of the erection of the Kalpakkam Atomic Power Plant ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The ...pakkam Atomic Power Project is a Central Sector Project and ...State Government is not in possession of the information ...rding foreign collaboration in respect of the erection of this ...

...ரு. வை. சங்கரன் : இது மத்திய சர்க்காருடைய ப்ராஜக்ட் ... இருந்தாலும் கூட நம்முடைய ராஜ்யத்திலே இருப் ...லே இதுவரைக்கும் இதுசம்பந்தமாக என்ன என்ன ...ள் நடந்து இருக்கின்றன, என்ன வேலைகள் இன்னும் நடக்க ...ன்றன, இது முடிவடைவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் ...ற விவரங்களையாவது அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

...ளம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நில ஆர்ஜிதம் நடந்து ...ண்டிருக்கிறது. இதற்கு வேண்டிய பிளான்ஸ் எல்லாம் ...பாராகிக் கொண்டிருக்கின்றன. அன்னிய நாட்டுச் செலாவணி ...சம்பந்தமான விஷயம்தான் நம்மிடம் இல்லையென்று சொன்னேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த கல்பாக்கம் அணுசக்தி மின்சார நிலையத்தினை ஏற்படுத்துவதற்காக அணுசக்திக் கமிஷன் தலைவராக இருந்த மறைந்த திரு. பாபா அவர்கள் உதவி செய்து இருக்கிறார்கள். அவர்களுடைய நினைவாக இந்த அணு மின்சக்தி நிலையத்தை அவருடைய பெயரிட்டு அழைக்கவேண்டுமென்ற யோசனையை ராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பின்னாலே பரிசிலனை செய்யவேண்டிய விஷயம். இன்னும் அந்த ஸ்டேஷனே வரவில்லை.

*திரு. ஜே. மாதா கவுடர் :* இந்தத் திட்டம் முடிந்த பிறகு நம்முடைய ராஜ்யத்திற்கு எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று சொல்ல முடியுமா ?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :* 400 மெகாவாட்.

*திரு. வை. சங்கரன் :* இதற்கு உத்தேசமாக என்ன காஸ்ட் ஆகும் என்று தெரிவிக்கமுடியுமா ? இது முடிவுபெறுவதற்கு இன்னும் எத்தனை காலம் பிடிக்கும் ?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :* காஸ்ட் 60 கோடியிலிருந்து 65 கோடி ரூபாய் வரையிலும் ஆகும். ஒரு அணுசக்தி மின்சார நிலையத்தை ஏற்படுத்துவதற்கு 4, 5 வருஷங்களாவது ஆகும்.

*திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :* இந்தத் திட்டம் மத்திய சர்க்காருடைய திட்டமாக இருந்தாலும் இந்த மாநிலத்திற்கு இது மிகவும் முக்கியம் என்பதை வற்புறுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்ய ஏற்பாடு செய்யுமா ?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :* அதற்கு அவசியமே ஏற்படவில்லை. அதற்குவேண்டிய நிதி எல்லாம் மத்திய சர்க்கரால் பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எல்லாம் நம்முடைய நிதியிலிருந்தே செய்து கொண்டிருக்கிறோம்.

*திரு. ஜே. மாதா கவுடர் :* கல்பாக்கம் அணுசக்தி மின்சார நிலையத்தின் மூலமாக 400 மெகாவாட் மின்சார சக்தி கிடைக்குமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது போதாத காரணத்தால் தூத்துக்குடி மின்சார நிலையத்தையும் துரிதப் படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :* தூத்துக்குடி மின்சார நிலையம் சம்பந்தமாகப் போதிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

*திரு. வை. சங்கரன் :* இந்தத் திட்டம் முடிந்தவுடனே ப்ரொட்யூஸ் ஆகும் கரண்ட் விலைக்குக் கொடுக்கப்படுமா ? இது என்ன முறையில் கொடுக்கப்படும் ? பங்கிடு முறையில் நம்முடைய ராஜ்யத்திற்கும் மற்ற ராஜ்யங்களுக்கும் ஒதுக்கவேண்டியிருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :* அந்த மாதிரிப் பிரச்னைக்கு இப்பொழுது இடமில்லை.

### அணு ஆராய்ச்சி நிலையம்

*** 188 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவில் அணு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது உண்மையா?



(இ) ஆம் என்றால், அதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்ய இம்மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

(உ) இத்திட்டத்தின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A suitable site has been selected in the Fairlawn area. The matter is under correspondence with the Atomic Energy Commission, Government of India.

(*c*) The details have not yet been finalised.

*திரு. டி. கார்ச்சா கவுடர் :* சார், இந்த அணு ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கும் நிலையிலே நம்முடைய நாட்டிற்கு அடிக்கடி ஏற்படும் ஆபத்துக்களை அரசாங்கம் கவனத்தில் கொண்டு அணுகுண்டு தயாரிப்பதற்கும் மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுமா ?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :* இது மத்திய சர்க்காருடைய பொறுப்பு.

### அனல் மின்சார நிலையம்

* 189 கேள்வி.—*திரு. து. ப. அழகமுத்து :* கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காரைக்குடி பகுதியில் கிடைக்கும் நிலக்கரியை உபயோகப்படுத்தும் வகையில் அங்கு ஒரு அனல் மின்சார நிலையம் அமைக்கக் கோரி அண்மையில் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :* (அ) ஆம்.

(இ) காரைக்குடி பழுப்பு நிலக்கரிப்படிவங்கள் குறித்து மேற்கொண்ட தொடக்க ஆராய்ச்சிகளின் முடிவு ஊக்கமளிப்பதாக இல்லை.

*திரு. து. ப. அழகமுத்து :* தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியின் முடிவு ஊக்கம் அளிப்பதாக இல்லையென்று அமைச்சர் கூறினார்கள். அதற்குள்ள விவரங்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :* நாம் ஆராய்ச்சி செய்து பார்த்ததில் போதுமான அளவு லிக்னைட், பழுப்பு நிலக்கரி இல்லை. நல்ல கனமான ஸீம்ஸ் இருந்தால்தான் நாம் பயன்படுத்த முடியும். குறைவான சத்துடையதாகத்தான் இருக்கிறது.

*திரு. வை. சங்கரன் :* இப்பொழுது அங்கே கிடைக்க இருக்கும் பழுப்பு நிரிக்கரியைக்கொண்டு வேறு என்ன ஊக்கமளிக்கக்கூடிய தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்று உத்தேசம் இருக்கிறது ?

[7th March 1966

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அங்கே ஒன்றுமே செய்ய முடியாது. பழுப்பு நிலக்கரி அகப்பட்டாலும் அது ½" திக்னஸ் தான் இருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** அந்த நிலக்கரியை எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எடுக்கலாமா வேண்டாமா என்று ஆராய்ச்சி நடந்து எடுப்பதில் பயன் இல்லை என்ற முடிவுக்கு வரப்பட்டிருக்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த அணு மின்சார நிலையம் ஆரம்பிப்பதால் அனல் மின்சாரத்தின் சக்தி குறையுமா அல்லது கூடுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கேள்வி புரியவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** மேலே அணு மின்சாரமும், கீழே அனல் மின்சாரமும் இருக்கிறது. அணு மின்சார உற்பத்தி அதிகப்படுகிற நேரத்திலே அனல் மின்சாரம் குறையுமா அல்லது கூடுமா என்று கேள்வி கேட்டேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எவ்வளவு மின்சாரம் நமக்குத் தேவையோ அதற்கு எந்த எந்த முறையில் உற்பத்தி செய்ய முடியுமோ அவ்வாறு செய்யப்படும்.

### *Cellular Concrete Plan at Ennore*

*190 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a Cellular Concrete Block Factory in the State ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Government have under consideration a proposal to set up a Celluar Concrete Plant at Ennore (Madras) at a cost of Rs. 121·28 lakhs with foreign assistance. Fifty per cent of the cost of the Project will be financed from the Central Plan as loan and the other 50 per cent will be met from the State Plan. The price of the Cellular Bricks may compare favourably with the price of ordinary bricks.

**திரு. வை. சங்கரன் :** இதனுடைய புரொடக்ஷன் கெப்பாஸிடி ஆண்டுக்கு எவ்வளவு இருக்கும் ? இது என்ன, என்ன காரியங் களுக்காகப் பயன்படுத்தப்படும் ? பிரைவேட் செக்டாரின் மூலம் பயன்படுத்தப்படுமா ? அல்லது பப்ளிக் செக்டாரின் மூலம் பயன் படுத்தப்படுமா ?



7th March 1966]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** செங்கல் மாதிரி உபயோகப் படுத்தப்படும். பிரைவேட் செக்டார், பப்ளிக் செக்டார் என்று இல்லாமல் எல்லோருக்கும் இது பயன்படும். இதனுடைய புரொடக்ஷன் கெப்பாசிடி 91 ஆயிரம் க்யூபிக் மீட்டர்ஸ்.

### 'சிமெண்ட்' ஆலை

*191 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

மாவட்டந்தோறும் சிமெண்ட் ஆலை துவக்கும் உத்தேச முண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

### சித்த வைத்தியர்கள்

*192 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பாரம்பரை சித்த வைத்தியர்களை வாய்மொழித் தேர்வு வைத்துப் பதிவு செய்யப்படு கிறதா ?

(இ) ஆமெனில், அந்தத் தேர்வுகள் எந்தெந்த ஊர்களில் நடத்தப்படுகின்றன ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) ஆம்.

(இ) (1) கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகிய இடங்களிலிருந்து வருபவர்களுக்கு கோயம்புத்தூரிலும், (2) சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலிருந்து வருபவர்களுக்குச் சென்னை யிலும், (3) கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, இராமநாத புரம் ஆகிய இடங்களிலிருந்து வருபவர்களுக்குப் பாளையங் கோட்டையிலும் ஆக மூன்று இடங்களில் வாய்மொழித் தேர்வு கள் (oral tests) நடத்தப்படுகின்றன.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** இதுவரை எத்தனை சித்த வைத்தியர்களுக்கு சர்ட்டிபிகேட் வழங்கப்பட்டிருக்கிறது ? அவர் கள் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்ஸரிகளிலே வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதற்குத் தனிக்கேள்வி வேண்டும். அவர்களுடைய அப்ளிகேஷன்களையெல்லாம் ஆராய்ந்து, அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியிருக்கின்றன.

**திரு. மு. கருணாநிதி :** அந்தத் தேர்வு நடத்துகிற அதிகாரிகள் எத்தகைய திறமை வாய்ந்தவர்களாக எடுக்கப்படுகிறார்கள் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Administrative Officer and ex-officio Deputy Secretary to Government, Education & Public Health Department, Principal, College

[7th March 1966

of Indigenous Medicine, Palayamkottai, and Lecturer Grade I in the particular system of indigenous medicine in which the applicant is trained—these three constitute the Board of Examiners for the oral test.

**திரு. து. ப. அழகமுத்து:** சித்த வைத்தியர்களுக்கு வாய் மொழித் தேர்வுகள் நடத்துவதற்கு மூன்று இடங்களை மட்டும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சித்த வைத்தியர்கள் பெரும்பாலும் ஏழைகளாக இருப்பவர்கள். இவர்கள் இந்த இடங்களுக்குச் செலவு செய்து கொண்டு போவதென்றால் மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் இந்தத் தேர்வை நடத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** 1964-ம் ஆண்டு வரை இந்தத் தேர்வு சென்னையில்தான் நடந்து கொண்டிருந்தது. சித்த வைத்தியர்கள் பல ஜில்லாக்களிலிருந்து சென்னை நகரத்திற்கு வரவேண்டியதில் இருக்கும் சிரமத்தை உணர்ந்துதான், நான் சற்று முன்பே குறிப்பிட்ட மூன்று இடங்களில் தேர்வை நடத்தலாம் என்று ஏற்படுத்தினோம்.

**திரு. மு. கருணாநிதி:** அந்தத் தேர்வில் வெற்றி பெறுகிறவர்களுக்கு என்ன பட்டம் வழங்கப்படுகிறது ? அப்படி வெற்றி பெறாமலே கூட, அப்படிப் பட்டங்கள் குறித்துக்கொண்டு துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்களா ? அதுபற்றி கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அவர்களை "வைத்யாஸ்" என்று தான் சொல்ல முடியும். சித்த, ஆயுர்வேத, யுனானி ஆகிய இந்த மூன்று இந்திய வைத்திய முறைகளை ப்ராக்டிஸ் பண்ணக் கூடியவர்களை "வைத்யாஸ்" என்கிறோம். 'துஷ்பிரயோகம்' என்று சொன்னார்கள். துஷ்பிரயோகம் பலர் செய்கின்றார்கள். பட்டம் இல்லாமலேயே எக்ஸ்ப்பீரியன்சைக் கொண்டு துஷ்பிரயோகம் செய்கிறார்கள். அதனால்தான் சென்ட்ரல் போர்டு ஆப் இண்டிஜினஸ் சிஸ்டம்ஸ் ஆப் மெடிசின்சில் உள்ள மெம்பர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தகுதி வாய்ந்தவர்களா என்று பார்த்து ரிஜிஸ்தர் செய்துகொண்டுவிட்டால் பிறகு துஷ்பிரயோகம் ஏற்படாது என்ற காரணத்தினால்தான் இதை ஏற்படுத்தியிருக்கிறோம்.

**திரு. வை. சங்கரன்:** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித் தனியாகத் தேர்வுக் குழு வைக்காவிட்டாலும், ஒரே தேர்வுக் குழு வெவ்வேறு தேதிகளில் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று வாய் மொழித் தேர்வு நடத்தினால் வைத்தியர்களுக்குச் சௌகரியமாக இருக்கும். அம்மாதிரி செய்ய உத்தேசம் இருக்கிறதா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சார், அப்படிச் செய்ய இயலாது.

**திரு. எம். எஸ். மணி:** இந்தத் தேர்வு பெற்ற சித்த வைத்தியர்களை ஊக்குவித்துத் தொழில் நடத்த அவர்களுக்கு அரசாங்கம் ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா ?



7th March 1966]

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சார், பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து டிஸ்பென்சரிகளில் பலருக்கு உத்தியோகம் கொடுக்கப்படுகிறது. சிலர் ப்ரைவேட் ப்ராக்டிஸும் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன என்னவெல்லாம் செய்யலாமோ அவற்றையெல்லாம் தக்கவாறு அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** இந்தத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் 'டாக்டர்' என்று, தங்கள் பெயருக்கு முன்னால் போட்டுக் கொள்ளலாமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சார், அவர்கள் இண்டிஜினஸ் ஸிஸ்டம்ஸ் ஆஃப் மெடிஸினில் தேர்வு பெற்றவர்களாதலால் "வைத்யாஸ்" என்றுதான் சொல்லிக்கொள்ள முடியும். 'டாக்டர்' என்று சொல்லிக் கொள்ள முடியாது.

**திரு. மு. கருணாநிதி:** தேர்வில் வெற்றி பெற்றவர்கள், திறமை உள்ளவர்கள், நம்பிக்கையுடன் வைத்தியம் செய்துகொள்வதற்குப் போகலாம் என்று மக்களுக்கு அவர்களிடம் நம்பிக்கை ஏற்படும் வகையில், தேர்வில் வெற்றிபெற்ற சித்த வைத்தியர்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் ஏதாவது பட்டங்கள் கொடுக்கலாம் என்பதைப் பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சார், தமிழ் வைத்தியர்களைப் பொறுத்தவரையில், பல குறிக்கோள்களெல்லாம் குறிப்பிடப்பட்டு ஒரு போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. கன்ஸாலிடேடட் ஆக்ட்டும் வர இருக்கிறது. வைத்தியம் பண்ணுவதற்கு கட்டாயமாக என்ன என்ன தகுதிகள் இருக்கவேண்டும், பயிற்சி இருக்கவேண்டும் என்பதெல்லாம் சட்டத்தில் இடம்பெறும். அந்தச் சட்டம் வந்தபிறகு இவர்களை ரிஜிஸ்டர் செய்தபிறகு, எல்லோருக்கும் நல்ல முறையில் வைத்தியம் செய்ய இவர்கள் பயன்படுவார்கள்.

**கனம் சபாநாயகர்:** சித்த வைத்தியர்களுக்கு ஏதாவது ஒரு புதுப் பட்டப் பெயர் கொடுக்கலாமா என்பது கனம் அங்கத்தினருடைய கேள்வி.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சட்டம் வரும்போது தான் நாமகரணத்தைப்பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும்.

**திரு. ஏம். எஸ். செல்வராஜன்:** தமிழில் அழைக்கும்போது "வைத்தியர்கள்" என்று அழைக்கலாம். ஆங்கிலத்தில் 'டாக்டர்' என்று இருப்பதற்குப் பதிலாக வேறு என்ன வார்த்தை இவர்களுக்கு இருப்பதாக அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** 'நேடிவ் டாக்டர்' என்று போடலாமோ என்னவோ.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** மருத்துவருக்கும் வைத்தியருக்கும் என்ன வேறுபாடு இருக்கும் என்று அமைச்சர் கருதுகிறார்கள் ?

[7th March 1966

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** மருத்துவர் ஆங்கில முறைப்படி மருத்துவ சிகிச்சை கொடுப்பார். வைத்தியர் தமிழ் வைத்திய முறைப்படி சிகிச்சை கொடுப்பார்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** தலைவர் அவர்களே, ஹோமியோபதி வைத்தியர்கள் என்றும், சித்த வைத்தியர்கள் என்றும், யுனானி வைத்தியர்கள் என்றும் பல வைத்தியர்கள் இப்போதே வைத்தியம் செய்வதைப் பார்க்கிறோம். அவர்களுக்குக் கடைசிபட்சமாக என்ன என்ன வழிமுறைகள் அரசாங்கத்தின் மூலமாக வகுக்கப்பட்டு அவர்கள் வைத்தியம் செய்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** கொஞ்சம் பேர் ரிஜிஸ்டர் செய்துகொண்டு வைத்தியம் செய்கிறார்கள். கொஞ்சம் பேர் 'பை வர்ச்சு ஆஃப் ஹெரிடிடரி ப்ராக்டிஸ்' வைத்தியம் செய்கிறார்கள். இதையெல்லாம் ஒழுங்குப்படுத்தவேண்டும் என்றுதான் கன்ஸாலிடேடெட் ஆக்ட் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அந்தச் சட்டம் கொண்டுவந்து நிறைவேறிய பிறகு, தக்கவாறு ரிஜிஸ்டரேஷன் செய்துகொண்டுவிட்டால், அவர்கள் தக்க பொறுப்புள்ள வைத்தியர்களாக அமைந்துவிடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** நான்கு வருஷ எக்ஸ்பீரியன்ஸ் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறதே, அதை எந்த அடிப்படையில் கணித்து, சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்தப் பிரச்னையைப் பற்றியெல்லாம், அந்தச் சட்டம் வந்தபிறகு தான் நான் திட்டமாகக் கூற முடியும். சட்டம் வரும்போது, எல்லா கனம் அங்கத்தினர்களுக்கும் கருத்துத் தெரிவிக்க வாய்ப்பு கிடைக்கும். அப்பொழுது அவர்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறலாம். சட்டம் வரும்போதுதான், நான்கு வருஷமா, ஐந்து வருஷமா என்பதைப்பற்றியெல்லாம் ஒரு முடிவு செய்ய முடியும்.

### ஸ்தல ஸ்தாபனங்களின் பொருளாதார நிலை

*** 193 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:**
**திரு. வை. சங்கரன்:** } கனம் தலநிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்தல ஸ்தாபனங்களின் பொருளாதாரத்தைப் பரிசீலனை செய்ய ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்பட்டிருக்கிறாரா?

(இ) ஆமெனில் அவரின் வேலைமுறைகள் என்ன?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** (அ) ஆம்.

(இ) விசேஷ அதிகாரி (நகர்ப் பகுதியிலும், கிராமப் பகுதியிலும் உள்ள) உள்ளாட்சி மன்றங்களின் தற்போதைய வருவாய் ஆதாரங்களைப்பற்றித் தனி ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டு பின்வரும் வழிகளில் கூடுதல் நிதி வசதிகளைப் பெறுவதற்காக அரசாங்கத்துக்குப் பரிவுரை செய்வார்:—



7th March 1966]

(1) உள்ளூர் வரி விதிப்புக்காக, வீடுகளின் பெறுமானத்தை, மதிப்பிடுவதற்குரிய தற்போதைய நிர்வாக அமைப்பையும் நடைமுறையையும் சீராக்குதல்.

(2) லாபகரமான தொழில் முயற்சிகளையும் அவைபோன்ற பிறவற்றையும் விவேகமாக அபிவிருத்தி செய்தல்.

**திரு. து. ப. அழகமுத்து:** இந்தப் பரிசிலனை இவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்று சர்க்கார் ஏதாவது கட்டளை இட்டிருக்கிறதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ஒரு வருஷத்திற்கு அந்த அதிகாரியை நியமித்திருக்கிறோம். அதற்குள் வேலை முடிந்துவிட்டால் மேற்கொண்டு நீடிக்கவேண்டிய அவசியம் இருக்காது. மேலும் தேவைப்படுமா, நீடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதைச் சர்க்கார் பின்னால் பரிசீலனை செய்யும்.

**புலவர் கா. கோவிந்தன்:** சில ஊராட்சி மன்றங்கள் மிகச் சிறிய அளவில் இருக்கின்றன. தெரு விளக்குகள் அமைப்பதற்கு வேண்டிய பணம் கூட அந்தப் பஞ்சாயத்திடம் இல்லை. தெரு விளக்கு அமைப்பதற்காகத் தனியாக வரி விதித்தாவது அதற்குரிய பணத்தைப் பெற வழிவகை செய்யப்படுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** பொதுவாக, உள்ளாட்சி மன்றங்களின் வருவாயை அதிகரிப்பது பற்றி ஆலோசனை கூறவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஆபீசரை நியமித்திருக்கிறோம்.

**திரு. வை. சங்கரன்:** ஓராண்டுக் காலத்திற்கு ஒரு ஆபீசரை நியமித்திருப்பதாகக் கூறப்பட்டது. இத்தனை ஸ்தல ஸ்தாபனங்களையும் அவர் ஒருவரே ஓராண்டுக்குள் பார்த்துவிட முடியுமா? தேவைப்பட்டால், எண்ணிக்கையை அதிகரிக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடிய உத்தேசம் இல்லை. அந்த அதிகாரிக்குக் கீழ் சூபரின்டென்டுகள், க்ளார்க்குகள் முதலியோர் ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரியும், ஏற்கனவே லோகல் பண்டு ஆடிட் டிபார்ட்மெண்டில் அனுபவம் பெற்றவர். அவர் ராஜ்யம் பூராவும் சென்று, குறிப்பிட்ட காலத்திற்குள் வேலையை முடித்துவிடுவார். அதற்குள் வேலை முடியவில்லை என்று ஏற்பட்டால், அவரையே நீடிக்க வேண்டுமா என்பதைப் பின்பு பரிசீலனை செய்து நீடிக்கலாம்.

**திரு. மு. கருணாநிதி:** அந்தப் பரிசிலனை செய்யும் தனி அதிகாரி அவர்கள் தருகிற முடிவுகளின் அடிப்படையிலே அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்குமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அதிகாரிக்கு ஒத்துழைப்பு அளிக்கும் வகையில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் அபிப்பிராயத்தை எழுதி சர்க்காருக்கு அனுப்பலாம், அல்லது அவருக்கே கூட எழுதி அனுப்பலாம்.

[7th March 1966

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** பெருவாரியான நகரப் பஞ்சாயத்துக் களில் வசூலிக்கும் வரிப்பணம் அங்கேயே எஸ்டாப்ளிஷ்மெண்ட் சார்ஜ்ஜுக்கே பெரும்பகுதி சரியாய்ப் போய்விடுகின்றது. அதனால் அபிவிருத்தி வேலைக்குப் பணம் போதவில்லை. அபிவிருத்தி வேலை தடைப்படுகிறது. ஆகவே, எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் உள்ள டவுன் பஞ்சாயத்தை ஆர்டினரி பஞ்சாயத்தாக ஆக்கவும் இந்த அதிகாரி யோசனை கூறலாம் என்று சர்க்கார் சொல்லியிருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** மக்கள் தொகையையும் வருமானத்தையும் அடிப்படையாகக் கொண்டு தான் நகரப் பஞ்சாயத்துக்கள், சட்டப்படி அமைக்கப்படுகின்றன. நகரப் பஞ்சாயத்துக்களை கிராமப் பஞ்சாயத்தாகத் தாழ்த்துவதற்கு இப்போது உத்தேசம் இல்லை. வரிவிதிப்பு அம்சங்களைக் கூடுமானவரை குறைத்து விதிப்பதால் இந்த நிலைமை ஏற்படுகிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

**திரு. வை. சங்கரன் :** பொருளாதார நிலை சரியாக உள்ள குறிப்பிட்ட நகராட்சி அல்லது பஞ்சாயத்துக்கள் பற்றி அவர் பார்வைக்குக் கொண்டுவரப்படுமா ? அல்லது பொதுவாக எல்லாவற்றையுமே எடுத்துப் பரிசீலனை செய்வார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** எல்லாவற்றையுமே பரிசீலித்து தம் அபிப்பிராயத்தைச் சர்க்காருக்குத் தெரிவிப்பார்.

**திரு. அ. ரா. இராமசாமி :** பரிசீலனை அவரது யுக்தானுசாரத்தின் பேரில் நடைபெறுமா ? அல்லது முறையாக எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெறுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** வேறு விவரம் என்னிடம் இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ஸ்தல ஸ்தாபனங்களின் பொருளாதார நிலையைப் பரிசீலனை செய்ய அமைத்திருக்கிற ஸ்பெஷல் ஆபீசர்—ரோடுகளுக்கு ஜனவிகிதாசாரப்படி கொடுக்கிற மானியத்தை—ரோடுகளின் தூரம் அடிப்படையில் கொடுக்க ஏதாவது பரிசீலனை செய்வார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சம்பந்தப்பட்ட டிமாண்டில் பேச வேண்டிய விஷயம் இது. அல்லது தனிக்கேள்வி போடவேண்டும்.

### *New Municipalities*

*194 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the names of new Municipalities still continuing under the charge of Special Officers; and

(*b*) whether there is any proposal to hold elections for these Municipalities and if so when ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) (1) ஆலந்தூர்; (2) அல்லி நகரம்; (3) தர்மபுரி; (4) பரமக்குடி; (5) கோயில்பட்டி; (6) சங்கரன்கோயில்; (7) தாம்பரம்; (8) சிவகங்கை; (9) பட்டுக்



7th March 1966]

கோட்டை. (10) கிருஷ்ணகிரி; (11) புளியங்குடி; (12) ஆத்தூர்; (13) சிங்காநல்லூர்; (14) திருச்செங்கோடு; (15) தென்காசி; (16) இடப்பாடி முதலிய நகராட்சிகள்.

(இ) ஆம். வார்டுகளைப் பிரித்தல்; வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைத்தல் போன்ற தேர்தல் முன்னோடி வேலைகள் இப்போது பல நிலைகளில் நிறைவேறி வருகின்றன. இவை முடிவுற்றதும், இவற்றிற்குத் தேர்தல்கள் நடத்தப்படும்.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த நகராட்சிகள் தனி நபர் பொறுப்பில் வந்து எத்தனை நாட்களாகின்றன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இரண்டு பேஸ்டு (Phared) ப்ரோக்கிராமாக எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆலந்தூர், அல்லி நகரம், தர்மபுரி, பரமக்குடி, கோயில்பட்டி, சங்கரன்கோயில்; தாம்பரம் ஆகிய 7 முனிசிபாலிடிகளும் 1—4—1964 முதல் எடுத்துக் கொள்ளப்பட்டன. சிவகங்கை, பட்டுக்கோட்டை, கிருஷ்ணகிரி போன்ற பாக்கி ஒன்பதும் 1—4—1965 முதல் எடுத்துக்கொள்ளப் பட்டன.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இந்த நகராட்சி மன்றங்களின் தேர்தல்கள் பொதுத்தேர்தலுக்கு முன்பு நடத்தப்படுமா ? பின்பு நடத்தப் படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நான் முன்பு கூறியபடி வார்டுகளைப் பிரித்தல், வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைத்தல், போன்ற தேர்தல் முன்னோடி வேலைகள் பூர்த்தியானவுடன் நடைபெறும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** பொதுத் தேர்தலுக்கு முன்பு இந்த வேலைகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டன என்றாலும் இந்தத் தேர்தலைப் பொதுத் தேர்தலுக்கு முன்பு நடத்துவது சரியா ? பொதுத் தேர்தல் நடந்த பிறகு நடத்தக் கூடாதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சர்க்கார் எல்லாவற்றையும் யோசித்துத்தான் முடிவு செய்யும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நகர சபைகள் எந்த அடிப்படையில் ஸ்தாபிக்கப்படுகின்றன ? ஜனத்தொகை எவ்வளவு இருக்கவேண்டும் ? வருமான வரம்பு எவ்வளவு இருக்கவேண்டும் ? இந்த வரம்புகளுக்கு உட்பட்டு இந்த ராஜ்யத்தில் எவ்வளவு முனிசிபாலிடிகள் இருக்கின்றன ? எல்லாவற்றிலும் நகர்சபையைத் தோற்றுவிக்க உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இருபது இருபத்தையாயிரம் ஜனத்தொகை இருக்கவேண்டும். வருமான வரம்பு ஒரு லட்சத்திற்கு மேற்பட்டது, எவை எவை நகரசபையாக மாற்றப்படவேண்டும் என்பது பற்றி பஞ்சாயத்து போர்டுகள், யூனியன்கள் அபிப்பிராயம் சொல்லவேண்டும்.

[7th March 1966

திரு. நா. இராசாங்கம் : தென்னாற்காடு ஜில்லாவில் பெண்ணாடம், பண்ணுருட்டி நெல்லிக்குப்பம் போன்றவைகளும் நகரசபைகளாக மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அவை இந்தப் பட்டியலில் இடம் பெறாததற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே முடிவு செய்யப் பட்ட முனிசிபாலிடிகளைப் பற்றித்தான் மூலக் கேள்வி கேட்கப் பட்டது. ஆனால் இவை எல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஜனத்தொகையிலும் சரி, வருமானத்திலும் சரி, நகரசபையாக இயங்குவதற்குரிய வரம்பைத் தாண்டியுள்ள நகர பஞ்சாயத்துகளின் லிஸ்டைத் தயாரித்து அந்த அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு அனுப்பி அபிப்பிராயம் கேட்பார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** சர்க்காரே எல்லாவற்றையும் நகரசபையாக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதில்லை. ஏழை ஜனங்கள், அதிக வரி கட்டுவதற்கு வருமானம் இல்லாத இடங்களும் இருக்கக்கூடும். ஆகவே, அந்த, அந்த பஞ்சாயத்துக்களே சிபாரிசு செய்தால் அது பரிசீலனை செய்யப் படும்.

### சிறு சேமிப்புத் திட்டம்

* 195 கேள்வி.—திரு ஜே. மாதா கவுடர் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ல் நவம்பர் மாதம் முடிய சிறு சேமிப்புத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை சேர்ந்திருக்கிறது ?

(இ) திட்டத்தைத் தீவிரப்படுத்த என்ன ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 10·77 crores.

(*b*) Due to the conduct of Savings fortnight and special campaigns all over the State in different periods from July to November, 1965 the total collection for the State has already exceeded the target of Rs. 10 crores for the year 1965–66. Besides the conduct of Savings fortnight and special campaign, other measures of publicity have also been undertaken for popularising the Small Savings Schemes. The Government have recently sanctioned a scheme to intensify collections under Cumulative Time Deposit Schemes. This scheme is to pay a saving allowance of 50 pase per annum for every Rs. 5 account and multiple thereof to the Village Officers through whose efforts the Cumulative Time Deposit accounts are opened and maintained. Special Revenue Inspectors have also been sanctioned for each group of Rs. 20,000 account in one municipal area or a group of municipal areas for effective follow-up work.



7th March 1966]

**திரு. ஜே. மாதா கவுடர் :** இது சாதாரண மக்களுக்கு ஒரு நல்ல திட்டமாக அமைந்திருக்கக் கூடிய காரணத்தினால் ஒரு முறை டார்ஜெட் எவ்வளவு என்று வைத்துக்கொண்டு வசூல் செய்வதற்குப் பதிலாக வருடம் முழுவதும் இந்தச் சேமிப்புத் திட்டத்தைத் தீவிரமாக நடத்த சர்க்கார் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** குறிப்பிட்ட சில வாரங்களில் தீவிரமாக இது கவனிக்கப்படுகிறது. ஆனால் ஆண்டு பூராவும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்த ஸி.டி.டி. திட்டத்தைக் கல்லூரிகளில் ஆரம்பித்தால் சிறு வயது முதலே சேமிப்புப் பழக்கம் மாணவர்களிடையே வளர்வதற்கு உதவியாக இருக்காதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாணவர்களும் அக்கறை கொள்ளும்படி ஏற்பாடு செய்யப்படுகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்க் கணக்கில் கொடுக்கப்படுகிற வட்டி விகிதம் எவ்வளவு? இந்த சேமிப்புத் திட்ட அடிப்படையில் முதலீடு செய்கிற தொகைக்குக் கொடுக்கப்படுகிற வட்டி விகிதம் எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தபாலாபீஸ் சேவிங்ஸ் கணக்கிலும் பணம் போடலாம். அது பழைய திட்டம். இதுவும் அதோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அதிலும் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : பள்ளிகளில் பிள்ளைகளிடத்தில் 9–00 a.m.
சேமிப்பு அட்டைகள் கொடுக்கப்படுகின்றன. நான்கணா நான்கணாவாக சேமிப்பு முத்திரைகளை ஒட்டிக் கொண்டு வருகிறார்கள். குழந்தைகள் அந்த முத்திரைகளை ஒட்டுவதற்காக எடுத்துச் செல்லும்போது தொலைந்து போகும் நிலைமை இருக்கிறது. அவ்வாறு தொலைந்து போகாதிருக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தக் குறைபாடுகள் எல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிற விஷயம்.

### இந்திய மொழிகளுக்குப் பொது லிபி

* 196 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்திய மொழிகளுக்கு ஒரு பொது லிபி நடைமுறைக்கு கொண்டு வருவதுபற்றி மத்திய அரசு நமது மாநில அரசின் அபிப்பிராயம் கேட்டனரா ?

(இ) ஆமெனில், நமது சர்க்கார் தெரிவித்த கருத்தென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b( Does not arise.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** வெளிநாடுகளில், குறிப்பாக தாய்லந்தில் பொது லிபி முறை இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? வெளிநாடுகளில் இந்த முறை எந்த அளவு நடைமுறையில் இருக்கிறது என்று பார்த்து நம்முடைய நாட்டிலும் பொது லிபியைக் கொண்டு வருவது பற்றிப் பரிசீலிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த நாட்டிலே அவரவர்களுடைய தாய் மொழிக்கு என்று இருக்கிற லிபியிலே ஒரு பெருமை இருக்கிறது. அதை மாற்றிப் பொது லிபியாக அமைப்பதைச் சாதாரணமாக மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆகவே, அவ்வாறு செய்வதாக அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை. ஆனால் மக்கள் தங்களுடைய தாய்மொழி அல்லாத வேறு ஒரு மொழியைக் கற்றுக் கொள்ளும் அவசியத்தை உணர்ந்து வேறு ஒரு மொழியைக் கற்பதாக இருந்தால் அதை ஒரு பொது லிபி மூலமாகக் கற்றுக் கொள்வது நல்லது என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** நமது மாநில அரசாங்கத்திடம் இதைப் பற்றிய அபிப்பிராயத்தைக் கேட்டால் எந்த லிபியை ஆதரித்துச் சொல்வார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பே கூறினேன். அந்தந்தத் தாய் மொழியைச் சேர்ந்த லிபியை மாற்றுவதாக உத்தேசமில்லை. தாய் மொழி அல்லாத ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது என்றால், உதாரணமாக தமிழ் நாட்டு மக்கள் இந்தி கற்றுக் கொள்வதாக இருந்தால் அதற்கு ஒரு பொது லிபி இருந்தால் சுலபமாகக் கற்றுக் கொள்ள முடியும். இந்திக்காரர்கள் தமிழ் கற்றுக் கொள்வதாக இருந்தால் அவர்களுக்குத் தெரிந்த லிபியில் அவர்கள் தமிழைக் கற்றுக் கொள்ளலாம். அதல்லாமல் எல்லாவற்றுக்கும் பொது லிபி என்றால் அது விபரீதமாக இருக்கும். தமிழ் நாட்டு மக்கள் தமிழ் மொழியை வேறு ஒரு லிபியில் கற்றுக் கொள்ளும் பேச்சே இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** நமது நாட்டிலே உள்ள அத்தனை மொழிகளுக்கும் ஒரு பொது லிபி இருக்க வேண்டுமென்ற கருத்து பேசப்பட்டு வருகிற நிலையோடு வற்புறுத்தப்பட்டு வரும் நிலைமை இருக்கிறது. தமிழ் எழுத்துக்கள் தமிழின் இலக்கணத் தொடர்புடைய நிலையிலே உள்ளவை. இந்த எழுத்தை மாற்றினால் இலக்கணம் நயம் கெட்டு விடும். ஆகவே, இந்தச் சர்க்கார் பொது லிபியை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று உறுதியாகக் கூறுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் சிறிது முன்புதான் விளக்கினேன். கனம் அங்கத்தினர் புரிந்து கொள்ளவில்லை என்றால் என்ன செய்வது ?

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.





[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—STATEMENT BY THE MINISTER FOR INDUSTRIES ON HIS VISIT TO JAPAN.

MR.* SPEAKER : The Hon. Minister for Industries will now make a statement under Rule 82 of the Assembly Rules.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, Honourable Members are aware that the Government have ventured to take up an ambitious planning pattern for the Fourth Five-Year Plan commencing 1966–67. From the draft outline of the Fourth Five-Year Plan placed before the House in July last, honourable Members would have noticed that the industrial content of the Fourth Plan is envisaged to be of the order of Rs. 600 crores. Although the specific schemes for the industrial programme are yet to be finalised, the State Government have formulated proposals for the setting up of new units in the fields of Electronics, Chemicals, Petro-chemical Machine Tools, etc. We have under consideration the setting up of a Machine Tools Factory, a plant for producing agricultural oriented equipment as also the utilisation of the multi-mineral lead-zinc-copper ore in mamandur in South Arcot District. As Japan has been helping our country as a member of the India Consortium and the range of their manufacture would suit our needs, I have been thinking of visiting their country to acquaint myself with more recent developments in the field of industries there and also to discuss with the representatives of industry and the representatives of the Government there to explore the possibility of securing their assistance for some of the programmes contemplated for implementation during the Fourth Plan in our State.

Honourable Members are no doubt aware of the deep desire of this Government for setting up the Neyveli-Salem Steel Plant for which the Indian Consulting Engineers, commissioned by the Government of India, have drawn up a detailed Project Report. The Japan Consulting Institute who had sent out a Survey Team to our State during August-September 1965 for an 'on the spot study' of the various facilities connected with the steel plant, requested Government to send a team to Japan for discussions on some of the outstanding issues and to help them in the finalisation of their report. I was in Japan for about two weeks and I was accompanied by the Secretary of the Industries Department and the Special Officer for Neyveli-Salem Steel Project. I had very useful discussions with the Japan Consulting Institute and the representatives of leading industrial houses like Yawata Iron and Steel Co., Ltd., Fuji Iron and Steel Co., Ltd., and Ishikawajima Harima Heavy Industries who form the Consortium for the Neyveli-Salem Steel Plant. Our discussions principally centred round the capacity of the plant, the metallurgical process and the financial arrangements for the setting up of the plant. We had occasion to visit a number of iron and steel works including one at Ariake where the raw materials in use and the Yawata process adopted have great similarity to those proposed for the Salem Steel

Plant. It emerged that the Japan Consulting Institute would suggest two alternatives relating to the plant capacity, viz., 500,000 tonnes of low alloy and plain carbon steels or 250,000 tonnes exclusively of low alloy and special steels. It was stressed by them that even if it is decided to go in for the lower capacity plant of 250,000 tonnes, the plant would be technically feasible and economically attractive. Their final report embodying the discussions would be submitted in a few days.

Honourable Members are also aware that for sometime past we have been thinking of putting up a Machine Tools Plant to produce precision tools to cater to the expanding needs of the engineering industries in this State. The Japan Machine Tools Trade Association comprising several leading manufacturers of Machine Tools in the country had sent out a Team to our country in May last during which time they also visited our State. Based on a preliminary assessment of the needs in our State they have suggested alternative plans indicating the family of machine tools to be manufactured, the probable capital cost thereof, etc. We visited the machine tool complex at Numazu in Japan and had discussions with the Japan Machine Tool Trade Association. We also accepted their offer to send out a Survey Team to our State in the course of the next few weeks to assess the exact requirements of machine tools in our State and to evolve a production pattern which would complement the items of machine tools already produced in our country.

The Government have already decided to set up an Agro-Industries Corporation in the Fourth Plan for the production of machine tools designed to help the farmers and to modernise the farming equipment and techniques. The idea is to produce agricultural implements like power tillers, small tractors and the like. I had an interesting visit to a factory near Osaka turning out these equipment. I am glad to say that the manufacturers have shown a very keen interest in collaborating with us in setting up a factory to produce farm implements.

During our stay in Japan we also availed of the opportunity to visit a number of industries ranging from iron and steel, petrochemicals, electronics and the like. The representatives of the Government and leading industrial houses in Japan showed a keen sense of interest in the progress we are making and in our efforts to further industrialise the State. Sir, I would like to take this opportunity to place on record our deep sense of gratitude and appreciation to the Government of Japan, the Japan Consulting Institute and the various industrial houses there for all the courtesies and facilities they so warmly accorded to the Delegation while we were in Japan. Government wish to assure the House that we will diligently pursue all the schemes mentioned above and endeavour within the limit of our resources to implement them as quickly as possible.



### III.—PRIVILEGE MATTER.

### PUBLICATION OF EXPUNGED PORTIONS OF ASSEMBLY PROCEEDINGS IN THE "NAVASAKTHI"

MR. SPEAKER: The Hon. Member Sri T. P. Alagamuthu has given notice of a matter of privilege. On 4—3—1966 when the Temporary Chairman, Sri M. Dhandayuthapani was in the Chair, the words used by the honourable lady Member Srimathi Kulandai Ammal, namely "பேச்சு தரக் குறைவானது" were ordered to be expunged by him. But in spite of this specific direction. I find that the newspaper "Navasakthi" in its issue, dated 5th March 1966 has repeated all the relevant remarks made in the House and finally concluded its report with the observation— "இந்த வார்த்தைகளை நீக்கிவிட தாற்காலிக சபா நாயகர் உத்தரவிட்டார்". After the Chairman has ordered the expunction of certain words, it is very interesting to know what amount of legal sense has prevailed with either the Reporter or the Editor in publishing the very words which were ordered to be expunged and then telling that the Chairman has ordered their expunction. I think evidently the persons concerned are ignorant of the rules. I want to make it very clear that if once it is ordered that a word be expunged or not to be reported, it means that the newspapers have no authority or right—rather it is wrong—to publish such a word in the Press. Since it is a technical matter and on the face of it I find that the persons concerned have committed a mistake, out of ignorance, I give a warning and leave the matter there.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I would like to make one point in this connection. I have nothing to say about the order of the Chairman to expunge certain portions of the proceedings. So far as the term is concerned, I do not think it is unparliamentary. If you will kindly agree with me, I would like your making it clear. In the context in which the term was used in the course of the speech, some heat was introduced and the Chairman perhaps rightly ordered that certain portion of the proceedings must be expunged. 'Tharak kuraivu' (தரக் குறைவு) means not up to the standard, the standard is lower. I think it is not objectionable and unparliamentary.

MR. SPEAKER: I do not think the words "தரக் குறைவு" by themselves are unparliamentary when they are used impersonally.

### IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67.

### DEMAND NO. XIII—EDUCATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 45,30,53,500 under Demand No. XIII—Education."

முறையிலும், கணக்கிட்டால் பற்றாக்குறை இன்னும் அதிகமாகும். ஆனால் 14 ஆயிரம் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்று இருந்தும் கூட, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அதிகப்படுத்துவதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் வழிவகை செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. ஆசிரியர் பயிற்சிக்கான வசதிகளை அதிகரிப்பது அவசியமில்லை என்ற முடிவை முதலமைச்சர் அவர்கள் கொண்டிருக்கிறார்கள். இது நல்ல முடிவுதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆரம்பப் பள்ளிகளில் எல்லாம் பி.டி. ஆசிரியர்களைத் தான் தலைமை ஆசிரியர்களாகப் போட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் தம் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். நல்ல கருத்துத்தான். இது எங்களுடைய வெட்டுப் பிரேரணையிலும் சொல்லியிருக்கின்ற கருத்துக்களில் ஒன்று. ஆனால் 31 ஆயிரம் ஆரம்பப் பள்ளிகள் இந்த நாட்டில் இருக்கின்றன. இதைக் கொண்டு பார்க்கும் போது 31 ஆயிரம் பி.டி. ஆசிரியர்கள் இருக்க வேண்டும். இப்போதுள்ள நிலையில் உயர்நிலைப் பள்ளிகளுக்கே தகுந்த அளவு பி.டி. ஆசிரியர்களைக் கொடுக்க முடியவில்லை. இந்த நிலையில் மேலும் 31 ஆயிரம் பி.டி. ஆசிரியர்களை எப்படி இவர்கள் பெறப் போகிறார்கள்? இந்த நிலையில் இரண்டு ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிக்கூடங்களைத் துவக்கப் போகிறோம் என்று சொல்லியிருப்பது போதுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கணக்கு, விஞ்ஞானம் இப் பாடங்களுக்குப் போதுமான ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். நான்காண்டு படித்துப் பட்டம்பெற்று, ஓராண்டு பயிற்சியும் பெற்ற பின்னால் அவர்களுக்குக் கிடைப்பது 140 ரூபாய் என்றிருந்து வருகிறது. இந்த நிலையை மாற்றி அவர்களைக் கெசட்டெட் ஆபீசர் அளவுக்கு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தினால் தான் நல்ல பி.டி. ஆசிரியர்கள் கிடைப்பார்கள். இல்லையென்றால் இந்த நிலையேதான் நீடித்துக் கொண்டிருக்கும் என்பதைக் கூறவிரும்புகிறேன். சர்க்கார் செலவு செய்யக் கூடிய பணம் எல்லாம் நல்ல முறையில் பயன் படுகிறதா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். 6-11-வது வகுப்பு வரையுள்ள வகுப்புக்களில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை எடுத்துக்கொள்ளும்போது 11 வயது முதல் 14-வது வயது வரையுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொள்கின்ற நேரத்தில் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. 14வது வயதிலிருந்து 17-வது வயது வரையிலும் இன்னும் குறைந்து விடுகிறது. இதிலிருந்து தெரிவது, மாணவர்கள் படிக்கத் தொடங்கியதிலிருந்து கடைசி வரைக்கும் தொடர்ந்து படிப்பதில்லை. இடையிலே நின்று விடுகிறார்கள். அது மட்டுமல்ல. ஒரே வகுப்பில் ஓராண்டு, இரண்டாண்டு நின்று விடுகிறார்கள். அதோடு சில வகுப்புக்களோடு நின்று விடுவதுமுண்டு. இந்த நிலையில் மாணவர்களுக்குச் செலவு செய்கின்ற பணம் எந்த அளவுக்குப் பாழாகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

அடுத்து, இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பள்ளிகளைப் பெருக்க வேண்டும், மாணவர்களையும் பெருக்க வேண்டும், அதே நேரத்தில் கண்காணிக்கின்ற முறை



யிலும் நல்ல ஏற்பாடுகள் இல்லை. 45 கோடி ரூபாய் கல்வி மான்யத்திற்காக நமது முதலமைச்சர் அவர்களால் கோரப்படுகிறது. இதில் 30 கோடி ரூபாய் தொடக்கக் கல்விக்காகவும் உயர்நிலைக் கல்விக்காகவும் செலவு செய்ய மான்யம் கோரப்படுகிறது. 66 ஆயிரம் ஆரம்ப ஆசிரியர்கள், 14 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், 31 ஆயிரம் ஆரம்பப்பள்ளிகள், 2,366 உயர்நிலைப் பள்ளிகள் இத்தனையும் தவிர ஆய்வாளர்கள் என்ற முறையில் 550 துணை ஆய்வாளர்கள், மாவட்ட அதிகாரிகளாக இருப்போர் 51 பேர்கள் இத்தனை ஒரு பெரிய அமைப்புக்கும் ஒரே இயக்குநர். அவரால் இத்தனை பெரிய அமைப்பைத் திறம்படக் கண்காணிக்க இயலுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒருவருக்கு எவ்வளவு வேலை பார்க்க முடியும் என்பதைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். கல்லூரிகள் மேற்பார்வைக்கு என்று இருக்கக்கூடிய அமைப்பை எடுத்துக் கொண்டால் 93 கல்லூரிகளை நடத்துவதற்கு ஒரு கோடி 83 லட்சம், இதற்குத் தனியாக ஒரு இயக்குநர், என்று பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இவ்விதம் பிரித்துக் கொடுத்திருப்பது நல்லமுறை என்பதில் சந்தேகமில்லை. இந்தக் கொள்கையை நாங்கள் இந்த மன்றத்தில் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கல்வித் துறை மூன்று பிரிவாக நடைபெற வேண்டும். ஆரம்ப பள்ளிகளுக்கு ஒரு இயக்குநரும். இடைநிலைக் கல்விக்கு ஒரு இயக்குநரும், கல்லூரிகளுக்கு ஒரு இயக்குநரும் இருப்பது தான் நல்லது என்று நாங்கள் கூறிய நேரத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் அப்போது மறுத்து விட்டார்கள். அப்போது மறுத்து வந்து, மறுத்து வந்து, இப்போதைக்கு அதே கொள்கையை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் அவர்கள் பிரித்திருக்கின்ற முறையை எடுத்துக் கொண்டால் 1 கோடி 83 லட்சம் மான்யம் கோரிச் செலவு செய்கின்ற ஒரு அமைப்புக்கும் ஒரு இயக்குநர், அதே நேரத்தில் 36 கோடி ரூபாய் செலவு செய்கின்ற ஒரு அமைப்புக்கும் ஒரு இயக்குநர், 93 கல்லூரிகளை நிர்வகிப்பதற்கு ஒரு இயக்குநர் 33 ஆயிரம் பள்ளிகள், 80 ஆயிரம் ஆசிரியர்கள் இத்தனையும் நிர்வகிப்பதற்கு ஒரு இயக்குநர் என்றிருப்பது போதுமா, என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட கண்காணிப்பு முறை சரியாக அமையாததால் தான் மாணவர்களின் தரமும் குறைந்து வருகிறது என்பதை நமது முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கொள்கையை வைத்திருக்கின்றார். எதிர்க்கட்சியினர் கூறுவதை ஏற்றுக் கொள்வது கூடாது. எதிர்க்கட்சிகள் சொல்லுவதிலுள்ள கொள்கையை ஏற்றுக் கொள்வது, ஆனால் எதிர்க்கட்சியினர் சொல்லுகின்ற கொள்கையை ஒப்புக்கொண்டாலும், அவர்கள் இதைக் கூறுகிறார்கள் என்பதற்காக அதை ஏற்றுக்கொள்வதில்லை என்கின்ற ஒரு முடிவை தன் உள்ளத்தில் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பின்னால் நாங்கள் கூறுகின்றவைகளை ஒப்புக்கொள்கிறார்கள். அந்த முறையிலாவது நாங்கள் சொல்லுவதை எடுத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன். ஆரம்பப்பள்ளிகளுக்குத் தனியாக ஒரு இயக்குநரும், இடைநிலைக் கல்விக்குத் தனியாக ஒரு

[புலவர் கா. கோவிந்தன்] [7th March 1966

முறையிலும், கணக்கிட்டால் பற்றுக்குறை இன்னும் அதிகமாகும். ஆனால் 14 ஆயிரம் ஆசிரியர்கள் பற்றுக்குறை என்று இருந்தும் கூட, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அதிகப்படுத்துவதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் வழிவகை செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. ஆசிரியர் பயிற்சிக்கான வசதிகளை அதிகரிப்பது அவசிய மில்லை என்ற முடிவை முதலமைச்சர் அவர்கள் கொண்டிருக் கிறார்கள். இது நல்ல முடிவுதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆரம்பப் பள்ளிகளில் எல்லாம் பி.டி. ஆசிரியர்களைத் தான் தலைமை ஆசிரியர்களாகப் போட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் தம் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். நல்ல கருத்துத்தான். இது எங்களுடைய வெட்டுப் பிரேரணை யிலும் சொல்லியிருக்கின்ற கருத்துக்களில் ஒன்று. ஆனால் 31 ஆயிரம் ஆரம்பப் பள்ளிகள் இந்த நாட்டில் இருக்கின்றன. இதைக் கொண்டு பார்க்கும் போது 31 ஆயிரம் பி.டி. ஆசிரியர்கள் இருக்க வேண்டும். இப்போதுள்ள நிலையில் உயர்நிலைப் பள்ளி களுக்கே தகுந்த அளவு பி.டி. ஆசிரியர்களைக் கொடுக்க முடிய வில்லை. இந்த நிலையில் மேலும் 31 ஆயிரம் பி.டி. ஆசிரியர்களை எப்படி இவர்கள் பெறப் போகிறார்கள்? இந்த நிலையில் இரண்டு ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிக்கூடங்களைத் துவக்கப் போகிறோம் என்று சொல்லியிருப்பது போதுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கணக்கு, விஞ்ஞானம் இப் பாடங்களுக்குப் போது மான ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். நான்காண்டு படித்துப் பட்டம்பெற்று, ஓராண்டு பயிற்சியும் பெற்ற பின்னால் அவர்களுக்குக் கிடைப்பது 140 ரூபாய் என்றிருந்து வருகிறது. இந்த நிலையை மாற்றி அவர்களைக் கெசட்டெட் ஆபீசர் அளவுக்கு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தினால் தான் நல்ல பி.டி. ஆசிரியர்கள் கிடைப் பார்கள். இல்லையென்றால் இந்த நிலையேதான் நீடித்துக் கொண் டிருக்கும் என்பதைக் கூறவிரும்புகிறேன். சர்க்கார் செலவு செய்யக் கூடிய பணம் எல்லாம் நல்ல முறையில் பயன் படுகிறதா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். 6-11-வது வகுப்பு வரை யுள்ள வகுப்புக்களில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை எடுத்துக்கொள்ளும்போது 11 வயது முதல் 14-வது வயது வரை யுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொள்கின்ற நேரத்தில் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. 14வது வயதிலிருந்து 17-வது வயது வரையிலும் இன்னும் குறைந்து விடு கிறது. இதிலிருந்து தெரிவது, மாணவர்கள் படிக்கத் தொடங்கிய திலிருந்து கடைசி வரைக்கும் தொடர்ந்து படிப்பதில்லை. இடை யிலே நின்று விடுகிறார்கள். அது மட்டுமல்ல. ஒரே வகுப்பில் ஓராண்டு, இரண்டாண்டு நின்று விடுகிறார்கள். அதோடு சில வகுப்புக்களோடு நின்று விடுவதுமுண்டு. இந்த நிலையில் மாணவர் களுக்குச் செலவு செய்கின்ற பணம் எந்த அளவுக்குப் பாழாகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

அடுத்து, இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பள்ளிகளைப் பெருக்க வேண்டும், மாணவர்களை யும் பெருக்க வேண்டும், அதே நேரத்தில் கண்காணிக்கின்ற முறை



7th March 1966] [புலவர் கா. கோவிந்தன்]

யிலும் நல்ல ஏற்பாடுகள் இல்லை. 45 கோடி ரூபாய் கல்வி மான்யத் திற்காக நமது முதலமைச்சர் அவர்களால் கோரப்படுகிறது. இதில் 30 கோடி ரூபாய் தொடக்கக் கல்விக்காகவும் உயர்நிலைக் கல்விக்காகவும் செலவு செய்ய மான்யம் கோரப்படுகிறது. 66 ஆயிரம் ஆரம்ப ஆசிரியர்கள், 14 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், 31 ஆயிரம் ஆரம்பப்பள்ளிகள், 2,366 உயர்நிலைப் பள்ளிகள் இத்தனையும் தவிர ஆய்வாளர்கள் என்ற முறையில் 550 துணை ஆய்வாளர்கள், மாவட்ட அதிகாரிகளாக இருப்போர் 51 பேர்கள் இத்தனை ஒரு பெரிய அமைப்புக்கும் ஒரே இயக்குநர். அவரால் இத்தனை பெரிய அமைப்பைத் திறம்படக் கண்காணிக்க இயலுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் ஒருவருக்கு எவ்வளவு வேலை பார்க்க முடியும் என்பதைப்பற்றி நமது முதல மைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். கல்லூரிகள் மேற்பார் வைக்கு என்று இருக்கக்கூடிய அமைப்பை எடுத்துக் கொண்டால் 93 கல்லூரிகளை நடத்துவதற்கு ஒரு கோடி 83 லட்சம், இதற்குத் தனியாக ஒரு இயக்குநர், என்று பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இவ்விதம் பிரித்துக் கொடுத்திருப்பது நல்லமுறை என்பதில் சந்தேகமில்லை. இந்தக் கொள்கையை நாங்கள் இந்த மன்றத்தில் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கல்வித் துறை மூன்று பிரிவாக நடைபெற வேண்டும். ஆரம்ப பள்ளிகளுக்கு ஒரு இயக்குநரும். இடைநிலைக் கல்விக்கு ஒரு இயக்குநரும், கல்லூரி களுக்கு ஒரு இயக்குநரும் இருப்பது தான் நல்லது என்று நாங்கள் கூறிய நேரத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் அப்போது மறுத்து விட்டார்கள். அப்போது மறுத்து வந்து, மறுத்து வந்து, இப் போதைக்கு அதே கொள்கையை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் அவர்கள் பிரித்திருக்கின்ற முறையை எடுத்துக் கொண் டால் 1 கோடி 83 லட்சம் மான்யம் கோரிச் செலவு செய்கின்ற ஒரு அமைப்புக்கும் ஒரு இயக்குநர், அதே நேரத்தில் 36 கோடி ரூபாய் செலவு செய்கின்ற ஒரு அமைப்புக்கும் ஒரு இயக்குநர், 93 கல்லூரி களை நிர்வகிப்பதற்கு ஒரு இயக்குநர் 33 ஆயிரம் பள்ளிகள், 80 ஆயிரம் ஆசிரியர்கள் இத்தனையும் நிர்வகிப்பதற்கு ஒரு இயக்குநர் என்றிருப்பது போதுமா, என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட கண்காணிப்பு முறை சரியாக அமையாததால் தான் மாணவர்களின் தரமும் குறைந்து வருகிறது என்பதை நமது முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். நம் முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கொள்கையை வைத்திருக் கின்றார். எதிர்க்கட்சியினர் கூறுவதை ஏற்றுக் கொள்வது கூடாது. எதிர்க்கட்சிகள் சொல்லுவதிலுள்ள கொள்கையை ஏற்றுக் கொள்வது, ஆனால் எதிர்க்கட்சியினர் சொல்லுகின்ற கொள்கையை ஒப்புக்கொண்டாலும், அவர்கள் இதைக் கூறுகிறார்கள் என்பதற் காக அதை ஏற்றுக்கொள்வதில்லை என்கின்ற ஒரு முடிவை தன் உள்ளத்தில் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பின்னால் நாங்கள் கூறுகின்றவைகளை ஒப்புக்கொள்கிறார்கள். அந்த முறை யிலாவது நாங்கள் சொல்லுவதை எடுத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன். ஆரம்பப்பள்ளிகளுக்குத் தனியாக ஒரு இயக்குநரும், இடைநிலைக் கல்விக்குத் தனியாக ஒரு

இயக்குநரும் என்று அமைக்க வேண்டும். தரம் உயர வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளை மனதில் எடுத்துக் கொண்டு, இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது அமைக்க வேண்டும் என்று கனம் முதலமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆதாரக் கல்வியைப் பொறுத்தளவில், ஆதாரக் கல்வியைப்பற்றி எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 1964-வது ஆண்டு நிதிநிலை அறிக்கையின் விவாதத்தின் போது பேசினார்கள். திரு. அரியநாயகம் அவர்கள் இந்த ஆதாரக் கல்வி பயனற்றுப் போய்விட்டது என்று கூறியிருப்பதை அரசாங்கம் பார்த்துச் செயல்பட வேண்டும் என்பதை எடுத்து விளக்கிக் கூறினார்கள். அப்போது அதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதிலை தங்கள் மூலமாக அவர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

"திரு. அரியநாயகம் ஒரு வைதீகி. வைதீகி நிபுணர்களுக்கெல்லாம் திருப்தி இருக்காது. ஆதாரக் கல்வியைப் பொறுத்த மட்டில், ஆதாரக் கல்வியின் அடிப்படைக் கொள்கையை இந்த அரசாங்கம் கண்டிப்பாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. அதைக் கொஞ்சம் கூடத் தளர்த்தவே இல்லை. இந்த கல்வித் திட்டத்திலே அடிப்படையான கொள்கை என்ன? வேலை செய்யக் கற்றுக் கொடுக்க வேண்டும். இன்ன வேலை என்று இல்லை. எந்த வேலையும் கற்றுக் கொடுக்க வேண்டும். நூற்பு வேலை தான் செய்ய வேண்டுமென்றில்லை. முக்கியமாக 'டெக்னிக்கல் பயஸ்' என்பது வற்புறுத்தப்பட வேண்டிய விஷயம். முன்பு ஒரு சமயம் நம்முடைய முதல் மந்திரி அவர்கள் என்னிடம் ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். அவர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த போது, அவரை அங்குள்ள ஒரு பெரிய விவசாயக் கல்லூரிக்கு அழைத்துச் சென்று காட்டிய போது, அந்தக் கல்லூரித் தலைவர் அங்கே இருக்கின்ற நம்முடைய இந்திய நாட்டு மாணவர்களைக் காட்டி 'அவர்கள் எல்லாம் இங்கே படிக்கிறார்கள், ஆனால் பால் கறக்கச் சொன்னால் இன்ஃப்ரான்டிக் என்று சொல்லி, இதற்காகவா இங்கே வந்து படிக்கிறோம் என்று பரிகாசமாகச் சொன்னார்கள்' என்று கூறினார். ஏதோ இரண்டு எழுத்து படித்துவிட்டால் வேலை செய்வது கேவலம் என்று எண்ணும் எண்ணம் போக வேண்டும். அது தான் ஆதாரக் கல்வியின் அடிப்படைக் கொள்கை" . . . என்று ஆதாரக் கல்வியின் அவ்வளவு தூரம் வக்காலத்து வைத்துப் பேசினார்கள். ஆனால் இப்போது கொடுத்திருக்கின்ற அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள்? . . . "அரியநாயகம் குழு பரிந்துரைத்தவைகளின் அடிப்படையில் ஆதாரக் கல்வியை இனிமேல் விரிவுபடுத்தக் கூடாது என்று அரசாங்கம் முடிவு செய்தது. எனவே இவ் வேலைத் திட்டம் 1962-63 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது . . ." என்ற முடிவை எடுத்துக் கூறியிருக்கிறார்கள் நமது முதலமைச்சர் அவர்கள். 1964-ல் எதிர்க்கட்சித் தலைவர் இதைப்பற்றி எடுத்துக் கூறிய போது, அமைச்சர் அவர்கள் வக்காலத்து வைத்துப் பேசினார்கள். ஆனால் இப்போது வேலை நிறுத்தி வைக்க முடிவு செய்



திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஏன் இந்தப் போக்கு? எதிர்க்கட்சி கூறினால் அதை மறுப்பது என்பது தானே. வேறு என்ன இருக்க முடியும்?

**கனம். திரு. எம். பக்தவத்சலம் :** பழைய முறைப்படி வகுக்கப்பட்ட திட்டத்தை இப்போதும் அமல் நடத்த வேண்டாம் என்பது தான். முன்புள்ள அடிப்படையிலே நிறை வேற்ற வேண்டாம் என்பது தான் முடிவு செய்திருப்பது. ஆனால் தொடர்ந்து ஆதாரக் கல்வியை நடத்த வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் கொள்கை. புதியக் கொள்கைகளுக்கு இணங்க, புதிய முறைகளின் அடிப்படையில் ஆதாரக் கல்வியை நிறைவேற்ற வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் திடமான கருத்து. இதில் மாறுபட்ட போக்கு எதுவும் இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** இப்போது அமைச்சர் அவர்கள் கூறுவது, முன்னால் தான் சொன்னதைச் சரி என்று சாதிப்பதற்காகத்தான். இது மேலும் குழப்பத்தை ஏற்படுத்தும். ஆகவே இப்பேர்ப்பட்ட குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அரியநாயகம் அவர்கள் ஆதாரக் கல்வியில் இருக்கின்ற குறைகளை எடுத்துச் சொன்ன பின்னால் தான் இப்படிப்பட்ட திட்டம் தேவையில்லை என்று நாங்கள் எடுத்துச் சொன்னோம். ஆனால் அதை மறுத்து முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குத் தருகின்ற அறிக்கையில் இந்த வேலைத் திட்டம் 1962-63-லிருந்து நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இன்னும் பழைய நிலைக்கே மீண்டும் போக வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் சொல்வதை அப்படியே எடுத்துக் கொண்டாலும், 1962-63-லிருந்து இந்தத் திட்டத்திற்கான வேலைகள் நிறுத்தப்பட்டுவிட்டால், 1963-64-ல் ஆதாரப் பயிற்சிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவானேன்? அது மட்டுமல்ல, 1962-63-லிருந்து கைவிட்டாகிவிட்டது என்றால் அமைச்சர் அவர்கள் 1964-ல் எதிர்க்கட்சியிலிருந்து கூறியபோது மறுப்பானேன்? அது மட்டுமல்ல 1966-67-ல் ஆதாரப் பயிற்சிப் பள்ளிக் கட்டடம் கட்ட 0.30 லட்சம் 9-30 a.m. நிதி ஒதுக்கல் செய்வதற்கு அவசியம் என்ன என்பதை இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் நுட்பக் கல்விக்காக 12 கல்லூரிகள், 35 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. இது தேவை எதிர்பார்க்கப்பட்டு மேலும் அதிகரிக்கப்படும் என்று குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். தேவை எதிர் பார்க்கப்படுகிறது. "நம் நாட்டிலே தொழில்கள் வளருகின்றன; தொழில்கள் வளர வளர தொழில் நுட்பக் கலைஞர்கள் தேவைப்படுகிறார்கள்; அது மட்டுமல்லாமல் பிற மாநிலங்களிலும் நம் தொழில் நுட்பக் கலைஞர்கள் தேவைப்படுகிறார்கள்; ஆகவே தொழில் நுட்பக் கலைஞர்களின் எண்ணிக்கை பெருக வேண்டும்" என்று சொன்னார்கள். அது வரவேற்கக் கூடியது தான். ஆனால் நாட்டிலே நடப்பது என்ன என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நான் பல முறை பேசியிருக்கிறேன்.

தொழில் அமைச்சரிடம் ஒரு கேள்வி கூடக் கேட்டேன். "பொறியியல் பட்டம் பெற்றவர்கள் தேங்கிக் கிடக்கும் நிலை இருக்கிறது; ஆகவே பி.இ.-க்களை அதிகமாக ஆக்கக் கூடாது என்ற கருத்து கூறப்படுகிறதே, அது குறித்து அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன?" என்று கேட்டேன். அப்போது அமைச்சர் அவர்கள் தேங்கிக் கிடக்கும் நிலை இல்லை என்று மறுத்தார்கள். அண்மையில் பத்திரிக்கைகளில் "நெய்வேலியில் 344 பொறியாளர்களில் 245 பொறியாளர்களுக்கு வேலை இல்லை; நான்கு ஆண்டு காலத்தில் அந்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்" என்ற செய்தி வெளி வந்திருக்கிறது. இந்த நிலைமையை மனத்திலே வைத்து பொறியியல் வல்லுனர்களை உற்பத்தி செய்து அவர்களுக்கு வேலை இல்லாமல் போனால் என்ன நிலைமை உண்டாகும் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். தாங்கள் தாங்களாகத் தொழில் செய்து கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். அந்த நிலையிலே கூடத் தொழில் செய்ய வாய்ப்பு இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** குறிப்பிட்ட ஒரு திட்டம், நெய்வேலித் திட்டத்தைப் போன்ற ஒரு திட்டம், எந்தத் திட்டமாக இருந்தாலும், அது பரிபூர்ணமாக நிறைவேற்றப்படுகிற வரையில் அதிகமான என்ஜினீயர்கள் வேண்டியிருக்கும். திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு குறைவாகத் தான் வேண்டியிருக்கும். அந்த நிலையில் தேவையில்லை என்று சிலர் வெளியேற்றப்பட்டால், என்ஜினியர்கள் பற்றாக்குறை நீங்கிவிட்டது என்று பொருள் இல்லை. அவர்களுக்கு வெளியே எவ்வளவோ வேலை காத்துக் கொண்டிருக்கிறது. ஒரு திட்டத்தை எடுத்துக் கொண்டால், இன்வெஸ்ட்டிகேஷன் விஸ்தரிப்புச் செய்ய வேணடுமென்றால் அந்த அளவுக்கு வைத்துக்கொள்ள வேண்டும். நிரந்தரமாக என்ஜினீயர்களை வைத்துக் கொள்ளும் அளவுக்குத் தான் அப்போதும் வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், திட்டங்களை நிறைவேற்ற முடியாது. மொத்தத்தில் மேலும் என்ஜினியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. என்ஜினீயர்களுக்குத் தேவை இருக்கிறது என்று தங்கள் மூலமாக என்ஜினியரிங் படிப்பில் அக்கறை உள்ள இளைஞர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் அவர்கள், கன்ஸ்ட்ரக்ஷன் ஸ்டேஜில் அதிக அளவு தேவைப்படுகிறார்கள், மெயின்ட்டினன்ஸ் ஸ்டேஜில் அவ்வளவு தேவையில்லை என்று சொன்னார்கள். அது தான் நிலைமை. நாட்டின் நிலைமை மெயின்ட்டினன்ஸ் நிலைமைக்கு வந்த பிறகு அதிகப்படியாக இருக்கிற பொறியியல் வல்லுனர்களை எங்கே அனுப்புவது? இப்போது நெய்வேலியில் 245 பொறியாளர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லி விட்டார்கள். இப்படி ஒவ்வொரு திட்டத்திலும் வேலை இல்லை என்று வந்து விட்டால் அவர்களுக்கு எங்கு வேலை என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.





அடுத்தபடியாக, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கடைசியில் ஆட்சி மொழி பற்றி உருக்கமாக ஒன்றரைப் பக்கத்திற்கு மேல் படித்துக் காட்டினார்கள். "இந்தி ஆட்சிமொழி ஆவது பற்றி அமரர் நேரு அவர்கள் அளித்த வாக்குறுதிகள், தேசத் தலைவர்களால் மனப்பூர்வமாக மீண்டும் ஒப்புக் கொள்ளப்பட்டு, அவை விரைவிலேயே சட்டப் புத்தகத்தில் பொறிக்கப்படும்" என்று கூறினார்கள். அதற்கு இது வரையிலே என்ன செய்தார்கள்? எதுவும் செய்யவில்லை. இந்த நிலை நாட்டுக்கு எதிர்காலத்தில் நல்ல சூழ்நிலையை உருவாக்குமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். மாணவர்களைத் தூண்டி விடுகிறார்கள் என்று சொல்ல முடியாது. மாணவர்களுக்கு உணர்ச்சி இருக்கிறது. அவர்களாகவே எழும் நிலை உண்டாகும், அந்த நிலையை உருவாக்கக் கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், பயிற்சி மொழிக்கும் ஆட்சி மொழிக்கும் தொடர்பு இருக்கிறது. இதை நான் வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன். இது பற்றிப் பல முறைகள் பேசியும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லவில்லை. பயிற்சி மொழி தமிழ் என்று ஆக்கி விட்டோம். பயிற்சி மொழியாகத் தமிழை ஏற்றுப் படிக்க மாணவர்கள் முன் வரவில்லை. வெளியிட்டுள்ள தமிழ் புத்தகங்களை மாணவர்கள் விரும்பி வாங்கவில்லை என்ற குற்றச் சாட்டைச் சொல்லுகிறார்கள். நான் சொல்லுவதெல்லாம் தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்கிவிட்டதாலேயே மாணவர்கள் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படித்து விட மாட்டார்கள். இதற்குக் காரணம் என்ன? பயிற்சி மொழிக்கும் ஆட்சி மொழிக்கும் தொடர்பு உண்டு. ஆட்சி மொழிக் கொள்கை மீது இந்த மன்றத்தில் விவாதம் நடந்தபோது, கனம் முதல் அமைச்சர் அவர்கள், 31—3—65 அன்று மதிப்புக்குரிய அங்கத்தினர் கரிவேங்கடம் அவர்களுடைய பேச்சின் போது குறுக்கிட்டு, "படிப்பதற்கு, கல்வியைப் பொறுத்த வரையில் தான் மும்மொழிக் கொள்கை, நிர்வாகத்தைப் பொறுத்த வரையிலும் இரு மொழிக் கொள்கை தான். அதில் ஒன்றும் வித்தியாசம் இல்லை" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இதை நன்றாகப் படிக்க வேண்டும். படிப்பதற்கு கல்வியைப் பொறுத்த வரையில் தான் மும்மொழிக் கொள்கை, அதில் ஒன்றும் வித்தியாசம் இல்லை என்றால், என்ன பொருள்? படிக்கிற நேரத்தில் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துக் கொண்டு படிக்கலாம். படித்துவிட்டு நிர்வாகத்திற்குப் போனால் பயிற்சி மொழி ஒன்றும் பலன் அளிக்காது; ஒன்று ஆங்கிலத்தில் திறன் இருக்க வேண்டும்—அல்லது இந்தியில் திறன் இருக்க வேண்டும் என்று சொன்னால், எதிர் காலத்தில் அவர்களுக்கு எது பயன்படுமோ அதைத் தான் எடுத்துப் படிப்பார்கள். ஆட்சி மொழியாக எந்த மொழி இருக்கிறதோ அந்த மொழியிலே தான் விருப்பு உண்டாகும். அந்த மொழி ஆட்சி மொழியாக இருக்காது என்று சொன்னால், தாய் மொழி என்ற காரணத்திற்காகக்கூடப் படிக்க மாட்டார்கள். புறநானூற்றிலே ஒரு செய்யுளில்—

[புலவர் கா. கோவிந்தன்] [7th March 1966

"ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்,"

என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தொடரிலே 'ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும், மூத்தோன் வருக என்னாது, அவருள் அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும் என்ற கூற்றின்படி அரசுத் துறையிலும் நல்லெண்ணத்தைப் பெறலாம் என்று எண்ணித் தான் படிக்கிறார்கள். மொழி அறிவு வேண்டும், தேர்ச்சி பெற வேண்டும் என்று படிப்பது வேறு. அந்த அளவுக்கு எல்லோரும் படிப்பதில்லை. கனம் சபாநாயகர் அவர்களே நேற்று குறிப்பிடும்போது, போலி, வழக்கு எல்லாம் எனக்கே தெரியவில்லை என்று சொன்னார்கள். அவருடைய நினைவாற்றலை நான் பாராட்டுகிறேன். இளமை நாட்களில் படித்ததை நினைவில் கொண்டு போலி, வழக்கு என்ற சொற்கள் இலக்கணத்தில் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். இப்போது மாணவர்களைக் கேட்டால், 'போலி என்றால் என்ன? வழக்கு என்றால் என்ன? கிரிமினல் வழக்கா? சிவில் வழக்கா?' என்று கேட்கும் அளவுக்கு நிலைமை தாழ்ந்து கிடக்கிறது. தமிழின் இலக்கியச் சுவைக்காகப் படிப்பது ஒரு சிலர். ஆங்கிலத்தைப் படித்தால் என்ன பலன் இருக்கிறது, தமிழைப் படித்தால் என்ன பலன் இருக்கிறது, இந்தி படித்தால் என்ன பலன் இருக்கிறது என்று எண்ணிப் படிக்கிறவர்கள் தான் இருக்கிறார்கள். தமிழைப் படித்தால் நிர்வாகத்திற்குப் பயன் படாது என்றால் அதைப் படிக்க மாட்டார்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பொருட்காட்சி சாலைகள், தொல்பொருள் ஆராய்ச்சி பற்றிச் சென்ற ஆண்டில் என்ன வாக்கியத்தைக் கொடுத்தார்களோ அதே வாக்கியத்தைத்தான் இந்த ஆண்டிலேயும் கொடுத்திருக்கிறார்கள். சட்டம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். எப்போது வரும், உடனடியாக வருவதற்கு வழி செய்வார்களா என்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ப்ளானிங் ஃபோரம் என்று ஆரம்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இது மாணவர்களை ஆளும் கட்சியின் வலையில் இழுக்கும் வேலையாக ஆகி விடக் கூடாது என்று வேண்டுகோளைக் கூறிக் கொள்கிறேன்.

எஸ்.எஸ்.எல்.சி. இந்திப் புத்தகத்தில் சிலப்பதிகாரக் கதை வந்திருக்கிறது. அதில் பாண்டியனைக் குடிகாரன் போலவும், மற்ற கதைகளைத் திரித்தும் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகம் எப்படி அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தியில் இருப்பதால் தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கு இந்தி தெரியாது என்ற காரணத்தினால் இம்மாதிரி நுழைந்து விட்டதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதுவும் சிலப்பதிகாரம் நாட்டு மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட வரலாறு ஆகும். அதில் வரும் பாண்டி



7th March 1966] [புலவர் கா. கோவிந்தன்]

யனை இழித்தும் பழித்தும் பேசும் முறையில் எழுதி, பிள்ளைகளின் பாடப் புத்தகத்தில் சேர்த்து, அதுவும் அரசாங்கத்தால் அனுமதிக்கப்படுவது எவ்வளவு தூரம் நாட்டுப் பண்பாட்டை நாட்டின் மானத்தைச் சாக்கும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தி நமக்குத் தெரியாது. வேறு ஒரு மொழியில் இருந்தால் அதை அப்படியே ஏற்றுக்கொள்வோம். "ஏக தந்தாய நம:"—இது மந்திரம். 'லம்போ தராய நம:"—இது ஒரு மந்திரம். இதை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். அதற்கு "ஒற்றைப் பல்லனே" "சால்வயிற்றனே" என்று நம் மொழியில் சொன்னோமானால் இழிவாக இருக்கும். பிற மொழியில் இருப்பதை அப்படியே நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். சிறந்த வரலாறுகள் இப்படிப்பட்ட முறையில் பழிக்கப்பட்டிருக்கின்றன என்று நான் அறிகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு இவைகளைத் தடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதியில் ஒரு டிவிஷனல் இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார். இந்த ஒன்றை மட்டும் கூறி நான் முடித்துக் கொள்கிறேன். மாணவர்கள் ஒழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். நல்ல நடத்தை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். அப்படி என்று சொன்னால் மாணவர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், அவர்களைக் கண்காணிக்கும் அதிகாரிகள் அத்தனை பேர்களும் நல்லவர்களாக இருக்க வேண்டும். டிவிஷனல் இன்ஸ்பெக்டர் வந்த போதே, அவர் எப்படி என்று விசாரித்தேன். அவருடைய சொல் வேறு, செயல் வேறாக இருக்கும் என்று சொன்னார்கள். ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லுகிறேன். என்னுடைய தொகுதியில் இரண்டு ஆசிரியர்கள் கணவன்-மனைவி; கணவன் கழக உயர்நிலைப் பள்ளியில் பணி புரிகிறவர்; மனைவி பஞ்சாயத்து யூனியன் உயர்நிலைப் பள்ளியில் பணி புரிகிறவர். இருவரும் 20 மைல்களுக்கு அப்பால் இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றுபட வேண்டுமென்று எத்தனையோ மனுக்களைக் கொடுத்தார்கள். பயன் இல்லை. கடைசியில் என்னிடம் வந்து கூறினார்கள். நான் டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு ஒரு கடிதமும், எஸ்.டி.இ.ஓ.-க்கு ஒரு கடிதமும் எழுதினேன். டிவிஷனல் இன்ஸ்பெக்டரிடமிருந்து எனக்கு ஒரு பதில் வந்தது. "கணவனை மனைவி இருக்கிற இடத்திற்கு மாற்ற ஏற்பாடு செய்ய எஸ்.டி.இ.ஓ-க்கு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது, கூடிய விரைவில் மாற்றப்படுவார்" என்று எனக்குக் கடிதம் எழுதி இருந்தார்கள். கடிதம் எழுதி ஒரு மாதம், இரண்டு மாதங்கள் ஆகியும் அந்த ஆசிரியர் என்னிடம் வரவில்லை. சரி, கடிதப்படி நடந்துவிட்டது என்று எண்ணினேன். இரண்டு மாதங்கள் கழித்து அந்த ஆசிரியர் மறுபடியும் என்னிடம் வந்து, நடக்கவில்லை என்று சொன்னார். எஸ்.டி.இ.ஓ. அவர்களிடம் சென்றேன். இது போல எனக்கு கடிதம் வந்திருக்கிறது என்று சொன்னேன். 'கடிதம் வந்திருக்கிறதா, உடனே நான் ஏற்பாடு செய்கிறேன்' என்று சொன்னார். மேலும் ஒரு மாதம் ஆகியும் ஒன்றும் நடைபெறவில்லை. மறுபடியும்

[புலவர் கா. கோவிந்தன்] [7th March 1966

எஸ்.டி.இ.ஓ. அவர்களிடம் சென்று கேட்டேன். உங்களுக்கு இப்படிச் கடிதம் எழுதியிருக்கிறார், எங்களுக்கு வேண்டாம் என்று எழுதியிருக்கிறார்' என்று சொல்லிவிட்டார். 'இதை மேற்கொண்டு வளர்த்தாதீர்கள். இன்னும் இரண்டு மாதங்களில் தமிழ் ஆசிரியர்களுடைய நிலை உயரும். செகண்டரி கிரேடு ஃபர்ஸ்டு கிரேடு ஆகும். அப்பொழுது மாற்றி விடுகிறேன். மேற்கொண்டு நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாம்' என்று எஸ்.டி.இ.ஓ. அவர்கள் சொன்னார்கள். இந்த நிலையை கனம் முதல் அமைச்சர் அவர்கள் மனத்திலே கொள்ளவேண்டும்.

" கனவிலும் இன்னாது மன்னோ, சொல் வேறு
செயல் வேறு பட்டார் தொடர்பு."

இது இருக்கலாமா ? ஆசிரியரை மாற்ற முடியாது என்றால் தைரியமாகக் கூறவேண்டும். மாற்றுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டேன் என்று சொல்லிவிட்டு, எஸ்.டி.இ.ஓ. அவர்களுக்கு மாற்ற வேண்டாம் என்று எழுதுவது பண்பட்ட செயலா ? இப்படிப்பட்ட அதிகாரிகள் இருந்தால், கீழே இருக்கிற மற்ற ஊழியர்கள் ஆசிரியர்கள் மாணக்கர்கள் நல்ல ஒழுக்கமுடையவர்களாகத் திகழ்வார்களா என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* Srimathi A. SUARES : Mr. Speaker, Sir, while supporting the Demand for about Rs. 45,30,00,000 under ' Education ', I wish to congratulate the Hon. Chief Minister on his having increased the Budget allotment for Education from Rs. 38,38,00,000 to Rs. 45,30,00,000 in next financial year. During the last 15 years, the total increase in the Budget allotment has been Rs. 35 crores which shows remarkable progress. The advancement made in Third Five-Year Plan period is most impressive. By the end of this Plan period, enrolment in schools will be 92 per cent in the age-group 6—11, 49 per cent in the group 11—14 and 31 per cent in the group 14-17. This is undoubtedly the highest the Madras State has ever recorded. In the next Budget, the Free Education Scheme which was inagurated two years ago will be extended to cover the supply of free text-books to all children in Standards I to III who have been admitted to the benefits of the Midday Meal Scheme. Tis will be a great boon to the people in the lower income-groups who can not find the means to purchase books though education is free.

Our thanks are due to the Government for having decided to meet from their own funds the contribution towards the provident fund of teachers serving in aided secondary schools. We have also to thank the Government for raising the minimum pension of teachers to Rs. 20 per month from the coming year.

In this year's Budget a sum of Rs. 13·18 crores has been set apart for secondary education. To get the maximum results from this large expenditure, greater attention should be paid to the selection of teachers to man the secondary schools. We are well aware that the cream of the students in S.S.L.C. schools move on to colleges, technical and polytechnic institutions to qualify



7th March 1966] [Srimathi A. Suares]

themselves for jobs that will carry higher salaries. Those who take up the teaching profession are mostly mediocre students who have managed to pass the S.S.L.C. and the degree examinations. This was revealed in the recent surveys made by Education Commissions. To attract candidates to the teaching career, salaries of teachers should be made more attractive. It is true that the Pay Commission's scales have improved the lot of teachers in various categories but with the unforeseen increase in the prices of food and other commodities during the past two or three years, the little increase in salaries has been wiped out and perhaps the teachers are now worse off than they were prior to the introduction of the Pay Commission's scales of pay.

A secondary grade teacher now earns the maximum basic salary of Rs. 140. There is some D.A. but when the Pay Commission's scales of pay were given effect to, Rs. 31 out of the D.A. was merged in the Pay Commission's scales of pay.

This year, I wish to highlight the plight of teachers working in Anglo-Indian schools. It is a well-known fact that the Anglo-Indian schools maintain special traditions that go back to nearly 50 years. High standards of work, good discipline, specially qulaified staff good standard of athletics and N.C.C. and extra curricular activities are some of the characteristics of the Anglo-Indian Schools. During the last ten years more and more non-Anglo-Indians have sought admission in the Anglo-Indian schools. Now this type of schools is an important factor in High School Education in this State.

Unfortunately, the teachers in Anglo-Indian schools are not too happy now because they have been left out when the increased scales of pay and dearness allowance have been afforded to their counterparts in the S.S.L.C. schools. It is a fact that the scales of pay in the Anglo-Indian schools were at one time higher than the scales in other schools but in the present day, Anglo-Indian teachers receive less pay and less allowances than teachers in other schools. Their scales of pay have not been revised for the past 20 years. The Pay Commission's scales did not apply to them. Enhanced dearness allowance has not been given to them every time it was given to teachers in other schools. Perhaps, this has been due to inadvertence on the part of the authorities; because, the Government Order that applies to the S.S.L.C. schools, does not apply automatically to the Anglo-Indian schools. A separate Government Order is necessary for such a purpose.

No representation was made in the past years by the Anglo-Indian schools to bring this state of affairs to the notice of the Government. But in view of the conditions of living in the present day, with prices rising from month to month or perhaps even from week to week, the teachers are in a desperate condition. Their children do not come under the Free Education Scheme because they attend Anglo-Indian schools which are fee-levying.

[Srimathi A. Suares] [7th March 1966

We are aware that all educationists realise that the teachers are working under difficult conditions. Secondary grade teachers who form the bulk of the teaching staff in the secondary schools do not earn more than Rs. 120 in Anglo-Indian schools and Rs. 140 in S.S.L.C. schools even after 20 to 30 years of service.

I need not enumerate all the details relating to the high cost of living in the present day. House rent has risen to almost fantastic limits. Even if teachers spend 20 to 30 per cent of their salary towards house rent, it would be difficult to find suitable accommodation. The cost of every item of food and other commodities has risen up to three or four times the old prices. The poor man pays the same price at the ration shop, as the man with a four figure income, for rice, wheat, sugar, fuel, etc. Families with one earning member like the teacher live a precarious life.

I appeal to Government to consider the present plight of teachers sympathetically. Rupees 45 crores will be spent on education in the ensuing financial year. Another crore or two will be enough to raise the salaries of teachers substantially. It is an imperative need. Let us try to get more people to join the noble profession of teaching. There are at present 2.235 secondary schools in the State. Thousands of teachers will be needed to manage these schools. Let us try to get a better type of teachers who will be content to make teaching their profession in life. Those who were connected with teaching in the past years did not have such difficulties. Though the scales of pay were low at that time, the cost of living was also low. So, the teachers were happy in their work and spent the best years of their lives in training the younger generation. Now, if I may say so, teaching has become commercialised in many cases. Teachers try to supplement their income by taking an excessive number of tuitions at the expense of their own legitimate duties. Perhaps they are compelled to do this owing to the inadequate scale of pay.

To encourage teachers to stay in the teaching profession let them be given an incentive to acquire higher qualifications. Secondary grade teachers can study privately and become graduates. There are evening courses in a few colleges for the benefit of such teachers. The shortened course for the B.T. is provided for such graduate teachers. Graduates can become post-graduates. If a graduate teacher acquires a post-graduate degree, he should be given an incentive in the form of advance increment. This has been done in the case of the medical services. Two advance increments are given to doctors who acquire post-graduate degrees.

When the Kothari Commission visited Madras last year, educationists were asked to give evidence. The Chairman of that Commission expressed the view that something must be done to improve the lot of teachers and to attract a better type of teachers. He added that recognition should be given to added qualifications of teachers. We hope this will be given effect to very soon.



7th March 1966] [Srimathi A. Suares]

Once again I appeal to Government to give priority to the scheme of bettering the lot of teachers both in Anglo-Indian and non-Anglo-Indian schools.

Thank you.

* *திரு. வை. சங்கரன்* : கனம் சபாநாயகர் அவர்கள், இந்த 1966-67-ஆம் ஆண்டு நிதி நிலையிலே, ரூ. 43 கோடிக்கும் மேலாக் கல்விக்காகக் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட மொத்தில் 23 சதவிகிதம் கல்வி மானியத்திற்காக ஒதுக்கப்படுகிறது. சாதாரணமாக நம் இராச்சியத்தில் கல்விக்கு நாம் எவ்வளவு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதற்கு அது எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

இந்த டிமாண்டில் பார்த்தால், பல புதிய திட்டங்களெல்லாம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு கொடுப்பதோடு கூட, புத்தகங்களுக்காகவும் புத்தகங்களை இலவசமாகக் கொடுக்கவும் வழி வகை செய்யப் பட்டிருக்கிறது. அடல்ட் எஜுகேஷன் அல்லது முதியோர் கல்வி அளிக்கவும் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. நாம் பார்க்கிறோம். ரஷியா போன்ற பல நாடுகளிலும் கூட, பல்வேறு துறைகளில் ஈடுபட்டிருக்கும் 70, 80 வயது ஆனவர்களுக்கெல்லாம் கூட கல்விப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது என்று. அதே போன்று, நம் இராச்சியத்திலும் முதியோர் கல்விக்கு என்று வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்குக் குறைந்த பட்சம் ரூ. 20 பென்ஷன் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதோடுகூட ப்ராவிடெண்ட் பண்ட் கண்ட்ரிப்யூஷன் மேனேஜ் மெண்டுகளுக்குக் கொடுத்துவிடாமல், அரசாங்கமே செய்வதாக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மேலும், மெட்ராஸ் ஸ்டேட் பேரண்ட்ஸ் அசோசியேஷன் என்று தனியாக ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து மாணவர்கள் ஆசிரியர்கள் உறவு நல்ல முறையில் உருவாவதற்காக இப்படி ஒரு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. புதிய பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் முதலியவை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பாக ஒன்றே ஒன்றைமட்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே இதைப் பலதடவை சொல்லியிருக்கிறேன். இப்போதும் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது ஏழையாகவும் அதே சமயத்தில் திறமை உள்ளவனாகவும் ஒரு மாணவன் இருந்தால், அவனுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்க வழி செய்ய வேண்டும் நம் அரசாங்கம். வேறு எந்தக் காரணத்திற்காகவும் கிடையாது என்று சொல்லிவிடக் கூடாது. அப்படிக் கொடுக்காமல் இருப்பது, அரசியல் நிர்ணய சட்டத்தில் எல்லோருக்கும் சம வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பது வெறும் ஏட்டிலே எழுதிவிட்டதாகத்தான் இருக்கும். திறமை உள்ளவனாக இருந்து, ஏழையாகவும் ஒரு மாணவன் இருந்தால் ஏதோ குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவன் என்கிற காரணத்திற்காக அவனுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்காமல் இருக்கும் நிலைமை, அடிப்படை உரிமையைப் பாதிக்கும் பிரச்சினையாகி விடுகிறது. தனிப்

பட்டவன் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், இராச்சியத்திற்கே அது ஒரு இழப்பாக இருக்கும். அப்படி இருக்கக்கூடிய ஒரு மாணவன் பெரிய அறிவாளியாக வரலாம், மேதையாகவோ விஞ்ஞானியாகவோ வரலாம், நாட்டின் பெரிய தலைவனாகவேகூட வரலாம். ஆனால் அந்த வாய்ப்பு அளிக்காமல் இருந்தால், அவனை நாடு, இராச்சியம் இழந்து விடுகிறது. ஆகவே, தனிப்பட்டவர்கள் முன்னேற்றம் அடையாமல் போவது மட்டுமல்லாமல், அது இராச்சியத்திற்கே கூட பெரும் இழப்பாக இருக்கும் . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆண்டு வருமானம், ரூ. 3,000-க்கு மேற்படாமல் இருந்தால், எந்த ஜாதியாக இருந்தாலும் ஸ்காலர்ஷிப் அளிக்கப்படும். அப்படி அளிக்கப்பட்டு வருகிறது. தகுதி உள்ளவனாக இருந்தால், அதைப் பயன் படுத்திக் கொண்டு முன்னேற்றம் அடையமுடியும். அந்த வகையில் அரசாங்கம் வசதிகளை, ஆதரவுகளை அளித்து வருகிறது.

**திரு. வை. சங்கரன் :** மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் அந்த வகையில் கொடுக்கப்படுகிறது. கொள்கை அளவிலே அதை ஒப்புக் கொண்டிருந்தாலும், நம் இராச்சியத்திலே ஸ்காலர்ஷிப்புகள் அந்த வகையிலே நடைமுறையில் கொடுக்கப்படவில்லை. ஆகவே, கொடுக்கும் ஸ்காலர்ஷிப்களில் ஒரு 10 சதவிகிதத்தையாவது, ஏழைமையும் திறமையும் உள்ளவர்களுக்கு என்கிற அடிப்படையில் அளிக்க வழிவகை செய்யப்பட வேண்டும். பாக்வேர்ட், மோஸ்ட் பாக்வேர்ட் என்கிற மாணவர்களுக்குக் கொடுப்பது இருக்கிறது. அதே நேரத்தில் மத்திய சர்க்காருடைய முறையைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டு, நடைமுறையில் அவ்வாறு செய்ய நிதி ஒதுக்கவில்லை. ஆகவே, இராச்சிய ஸ்காலர்ஷிப்புக்கு என்று ஒதுக்கும் தொகையில் ஒரு 10 சத விகிதத்தை ஏழைமையைய, திறமை உள்ள மாணவர்களுக்கு என்ற அடிப்படையில் ஒதுக்கினால், அது இராச்சியத்திற்கே நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்கள் தரம் உயரவேண்டும் என்பதற்கு சில யோசனைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மாணவர்கள் புத்தகங்களைப் படிப்பதைவிட, கைடுகளை நெட்டுருப் போட்டுவிட்டு, பொதுவாக ஜெனரல் நாலட்ஜ், எக்ஸ்ட்ரா நாலட்ஜ் குறைவாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எக்ஸ்ட்ரா நாலட்ஜ் பெருக, பள்ளிகளில் லைப்ரெரிகளையும் புத்தகங்களையும் அதிகப்படுத்தி, அதற்குத் தனி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட புத்தகங்களை மாணவர்கள் படிக்க ஊக்கம் கொடுக்க வேண்டும். அது முக்கிய லாங்க்வேஜாக இருந்தாலும், வேறு சப்ஜெக்டுகளாக இருந்தாலும், எனக்கு முன்னாலே புலவர் கோவிந்தன் குறிப்பிட்டது போல, நம் மாணவர்கள் தரக்குறைவானவர்கள் என்கிற பெயர் வாங்காத அளவில் எக்ஸ்ட்ரா புக்ஸ் படித்து பொது அறிவைப் பெருக்கிக்கொள்ள மாணவர்களுக்கு ஊக்கம் அளித்து, வகை செய்ய வேண்டும்.



திரும்பத் திரும்ப நான் ஒன்றைச் சொல்லிக் கொண்டு வருகிறேன். அதையே இப்பொழுதும் சொல்ல விரும்புகிறேன். ஒரு சில பள்ளிக் கூடங்களில் லீவ் விடுவதற்கு முன்பாகவே, ஒரு சில தினங்களுக்கு முன்னாலேயே பரீட்சை ரிசல்டுகளை வெளியிட்டுவிட்டு, அடுத்த வருஷ புத்தகங்களின் லிஸ்டையும் வெளியிட்டு விடுகிறார்கள். அதனால் பெரிய அனுகூலம் என்னவென்றால், பள்ளி மாணவர்கள் லீவு நாட்களில், இரண்டு மாதமும் பெற்றோர்கள் உதவிகொண்டு, முன்கூட்டியே அடுத்த வருஷப் பாடங்களைக் கற்று; பின்னால் நல்ல முறையில் பள்ளி திறந்ததும் படிக்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது. என்னுடைய ஊரில், கான்வெண்டு பள்ளியில் அந்த மாதிரி நடக்கிறது. அரசாங்கம் அதைப் பற்றி யோசிக்கலாம். நேரிடையாகக் கட்டாயமாகச் செய்யாவிட்டாலும்; எல்லா தனியார் பள்ளிகளுக்கும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய யோசனையாகக் கூறலாம். அதனால் இரண்டு மாதங்கள் புத்தகங்களைப் படிக்க முன்னதாகவே வாய்ப்பு இருந்தால், படிப்பின் தரம் உயரும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து ஆசிரியர்கள் பிரச்னையைப் பார்ப்போம். பைலேட் 10-00 p.m.
கேடெட் கோர்ஸ் 1948-ம் ஆண்டு ஆரம்பித்தோம். ஆசிரியர்களுக்கான சர்விஸ் ரூல்ஸ் ஃப்ரேம் பண்ணாததால், பர்மெனென்ட் சிப்பந்திகளுக்குள்ள லீவ் வசதி, மற்ற வசதிகள் இந்த ஆசிரியர்களுக்கு டெம்பரரி என்ற காரணத்தால் கொடுக்கவில்லை என்று குறை கூறுகிறார்கள். இதைக் கேள்வி ரூபமாகவும் நான் எழுதியனுப்பியிருக்கிறேன். பதில் இன்னும் வரவில்லை. 1948-ம் ஆண்டிலிருந்து ஆண்டுக்காண்டு மட்டும் எக்ஸ்டென்டு பண்ணிக் கொண்டு வருகிறார்கள். இந்த ஆண்டும் அதே வகையில்தான் அரசாங்கத்திலிருந்து பதில் வருகிறது. "பர்மெனென்ட் ஸ்டாஃபுக்குள்ள வசதி கிடையாது, லீவ் வசதியும் கிடையாது" என்ற வகையில்தான் பதில் வந்திருப்பதாக அறிகிறேன். 1948-ம் ஆண்டிலிருந்து சர்விஸ் ரூல்ஸ் ப்ரேம் பண்ணாமல் இருக்கும் நிலைமையைக் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஸாலரி டிஸ்பர்ஸ்மெண்டைப் பொறுத்த வரையில் ட்ரெஷரிக்குப் போய் கால தாமதம் ஏற்படுகிறது. எலிமென்டரி எஜுகேஷனைப் பொறுத்து, செக்கை டிபார்ட்மென்ட் அவர்களிடம் கொடுத்துவிடுகிறார்கள். முடியுமானால் உயர்நிலைப் பள்ளிகளிலும் இதே முறையை புகுத்தி தாமதத்தைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பயிற்சி பெறாத ஆசிரியர்களைப் பொறுத்து, சென்ற ஆண்டு வற்புறுத்தப்பட்டு, அன்க்வாலிபைடு ஆக இருந்தாலும் கன்டின்யூ பண்ண வசதி அளிக்காத நிலை இருக்கிறது. குறிப்பிட்ட ஆண்டுக்குள்ளேயே ட்ரெயினிங்கை அன்டர்கோ பண்ணியாக வேண்டும் என்று இருக்கிறது. ஐம்பது, நூறு பேர்கள்தான் ஒரு சமயத்தில் ஒரு ஆண்டில் ட்ரெயினிங்குக்குப் போக முடிகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் ட்ரெயினிங்குக்கு போக முடியாமல், நான்கைந்து ஆண்டுகளாக அப்படியே இருந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, ஒன்று ட்ரெயினிங் ஸ்கூல்களை அதிகமாக்க வேண்டும்; அல்லது கோர்சை காலவரை குறைத்து அத்தனை பேருக்கும் ட்ரெயினிங் அளிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். அன்க்வாலிபைடு ஆசிரியர்களை எடுத்துவிடவேண்டும் என்று சொல்வது நியாயமாகாது. அனைவருக்கும் ட்ரெயினிங்குக்கு வேண்டிய வசதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 250 ரூபாய்க்கு மேல் ஸ்கேல் கிடையாது. ஆரம்பத்தில் 23 வயதில் ஆசிரியராக வேலைக்கு வந்துவிட்டால், 41-வது வயதில் ரூ. 250 ஸ்கேல் வந்து விடுகிறது. அடுத்து 18 ஆண்டுகள் 250 ரூபாய் சம்பளத்திலேயே இருந்து கொண்டிருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு முன்பு ஸ்பெஷல் க்ரேட் இருந்தது. சமீபத்தில் அதை நிறுத்திவிட்டார்கள் என்று கேள்விப்படுகிறேன். ஸ்பெஷல் க்ரேட் பே அளித்தால் இன்ஸென்டிவ்வாகவும், இன்டெரெஸ்டாகவும் இருக்கும். லீவ் ஃபெஸிலிடியை சர்க்கார் எடுத்த பிறகு, காஷுவல் லீவ், சிக் லீவ், இருக்கிறது. ஏர்ன்ட் லீவ் அல்லது ப்ரிவிலேஜ் லீவ் இல்லாத காரணத்தால், வீட்டிலே ஏதாவது நல்லதோ கெட்டதோ ஏற்பட்டாலும் லீவ் எடுத்துக்கொள்ள வசதி இல்லாமலிருக்கிறது. முன்பு இருந்ததுபோல் லீவ் வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்.ஜி.ஓ.-க்களுக்கு உள்ள வைத்திய வசதிகள் சலுகையை ஆசிரியர்களுக்குக் கொடுக்க வகை செய்யவேண்டும். என்.ஜி.ஓ.-க்களுக்கு வீடு வாடகை அலவன்ஸ் தரப்படுகிறது. வீட்டு வசதி, வீடு கட்டும் வசதி இவையெல்லாம் இருக்கின்றன. ஆனால், அதே நிலையில் உள்ள ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் பூரணமான அக்கறை செலுத்தவில்லை. அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். அல்லது, வீட்டு வாடகை அலவன்ஸைக் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும்.

கம்பல்சரி ப்ராவிடென்ட் பண்டு என்று எமர்ஜன்சி காலத்தில் ஏற்பட்டது. ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், ஐந்து முதல் பத்து, பதினைந்து ரூபாய் வரை கூட மாதா மாதம் இந்த வகையில் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். எமெர்ஜன்சி இருந்த காலத்தில் இந்தப் பிடிப்பு அவசியமாக இருந்தாலும், இப்பொழுது உள்ள விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு பார்த்தால், இப்படி இன்னும் பிடித்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதைச் சர்க்கார் மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ப்ராவிடென்ட் பண்டிலும் அவர்கள் பகுதிதான் கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் தங்களுடைய பகுதியைக் கொடுப்பதில்லை. இந்த நிலையில், எமெர்ஜன்சிக்காகப் பிடித்துக்கொண்டிருக்கும் பிடிப்பை நிறுத்தவேண்டும். அல்லது, அவர்கள் கொடுக்கும் ப்ராவிடென்ட் பண்ட் கான்ட்ரிப்யூஷனோடு சர்க்காரும் தங்களுடைய கான்ட்ரிப்யூஷனைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இது வரை டீச்சிங் ஸ்டாஃபைப் பற்றிச் சொன்னேன். டீச்சிங் ஸ்டாஃபைப் பொறுத்த வரையில் 31—3—1964 அன்று என்ன கண்டிஷன் இருந்ததோ அந்த சம்பளத்தைக் கொடுக்க



சர்க்கார் உத்திரவு போட்டு இருக்கிறார்கள். ஆனால் நான்-டீச்சிங் ஸ்டாஃபிற்கு அவ்வாறு போடப்படவில்லை. நான்-டீச்சிங் ஸ்டாஃப் தங்களுடைய குரலை எழுப்பத் தனியாக அசோசியேஷன் இல்லை. அவர்களுக்குப் பல கோரிக்கைகள் இருக்கின்றன; சரியான முறையில் சிந்தித்துப் பரிசீலனை செய்து முடிவு எடுத்ததாகத் தெரியவில்லை. கோரிக்கைகள் எல்லாம் 'அண்டர் கன்சிடரேஷன் என்று இருக்கிறதே தவிர, நியாயமான குறைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. 31—3—1964-இல் உள்ள சம்பளம் கொடுக்க 'அண்டர் கன்சிடரேஷன்' என்று சொல்லியிருக்கிறார்கள், அதையும் செய்ய வேண்டும். சர்விஸ் அக்ரிமென்ட் கிடையாது. அதனால் நிர்வாகிகள் நினைத்தவுடனே வேலையைவிட்டுப் போகச் சொல்லலாம் என்ற நிலைமை இருக்கிறது. அதையும் சர்க்கார் கவனித்து சர்விஸ் அக்ரிமெண்டுக்கு வழி செய்யவேண்டும்.

பென்ஷன் சம்பந்தமாக ஆசிரியர்களுக்கு இருக்கும் முறை நான்-டீச்சிங் ஸ்டாஃபுக்கும் அமல் செய்யப்படவில்லை. அதுவும் அண்டர் கன்சிடரேஷனில் இருக்கிறது. அதிலும் சீக்கிரம் முடிவு காண வகை செய்யவேண்டும்.

பல ஆண்டுகளாக சர்வீசில் இருந்தும், குறிப்பிட்ட க்வாலிபிகேஷன் இல்லாவிட்டால் 90 ரூபாய்க்கு மேலே கொடுக்க வகை இல்லை. 90 ரூபாய் அதிகபட்சமாகக் கொடுக்க வேண்டும். ஸ்கேல் ஆஃப் பே அவர்களுக்கு அளிக்க வகை செய்யவேண்டும். 1-4-1950-க்குள் சர்வீஸ் பத்து ஆண்டுகளாக இருந்தால், ஸ்கேல் ஆஃப் பே கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது 26 ஆண்டுகளாவது சர்வீஸ் இருக்க வேண்டும். அதற்குக் குறைவாக இருந்தால் என்ன செய்வது என்பதையும் கவனிக்கவேண்டும். எம். ஈ. லோன் ஸ்கீம் ஆசிரியர்களுக்குத்தான் எக்ஸ்டென்ஷன் பண்ணப்பட்டிருக்கிறது. நான் டீச்சிங் ஸ்டாஃபுக்கு எக்ஸ்டெண்டு பண்ணவில்லை. ப்ரைவேட்டாக செகண்டரி டிரெயினிங் அல்லது சர்வகலாசாலை பரீட்சைக்கு அப்பியர் ஆவதற்கு டீச்சிங் ஸ்டாஃபுக்கு வசதி இருக்கிறது. நான்-டீச்சிங் ஸ்டாஃபுக்கு அந்த வசதி இல்லை. ஆசிரியர்களுக்கு 1955-லிருந்து 1960 வரை ரிடயர்ட் ஆகி இருந்தால் முப்பது ரூபாய் பென்ஷன் என்றும், 1960-க்குப் பின்பு சம்பளத்தில் கால் பகுதி பென்ஷன் என்றும் இருக்கிறது. 1955-1960-ல் ரிடயர்ட் ஆனவர்களுக்கும் அந்த அளவு உயர்த்த பென்ஷனை அதிகரிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

MR. SPEAKER : Only one cut motion has been moved. I do not think the other Members are moving their cut motions.

* திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 1966-67-ம் ஆண்டுக்கான கல்வி மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு நமது கல்வி அமைச்சர் அவர்கள் கல்விக்காக 45 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மிக அதிகமான தொகையைத்தான் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்காக நிதிகளை

[திரு. சி. ம. அம்பிகாபதி] [7th March 1966

ஒதுக்கி, கிராமப் புறங்களிலெல்லாம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களை கட்டிக் கொடுத்திருக்கிறோம். என்றாலும், அநேக இடங்களில் பக்காக் கட்டடங்களாக இல்லாமல் இருக்கின்றன. இன்னும் குடிசைகளிலேயே பள்ளிக்கூடங்கள் நடந்து கொண்டிருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிகளையெல்லாம் பக்காக் கட்டடங்களாக கட்ட வேண்டிய முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு ஒன்று முதல் மூன்று வகுப்புக்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு இலவசக் கல்வி, உணவு, புத்தகங்கள், கரும்பலகை போன்றவையெல்லாம் கொடுத்து உதவி செய்யவேண்டும் என்ற திட்டங்களையும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இது கிராமப் புற மக்களுக்கு உள்ளபடியே நல்ல பலனளிக்கக் கூடிய திட்டம், அநேக ஏழை எளிய மக்களுக்கு நல்ல வாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டமாகும்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பல இடங்களில் ஆரம்பித்திருக்கிறோம். உயர்நிலைப் பள்ளி மட்டத்தில், மாணவர்களுக்கு விஞ்ஞான அறிவு அளிப்பது மிக, மிக அவசியம் என்பதையும் நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம், அரசாங்கமும் உணர்ந்திருக்கிறது. விஞ்ஞானக் கல்விக்கு அதிகமான சலுகை கொடுக்கவேண்டும் என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அப்படியிருந்தும், பல உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்கள் இல்லாமல் இருக்கிறது. சில பள்ளிகளில் அவற்றுக்கு வேண்டிய லாபரடரி சாமான்கள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் விஞ்ஞானக் கல்வி அளிப்பதற்கான வகையில், லாபரட்ரிகள் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரியைப் பொறுத்த வரையில் ஒருசில வார்த்தைகளை குறிப்பிட விரும்புகிறேன். நாம் தமிழை ஆட்சி மொழியாக ஏற்படுத்தியிருக்கிறோம். ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்த நேரத்தில், கல்லூரிகளில் முதல் பாடமாக ஆங்கிலத்தை வைத்திருந்தார்கள். அதையேதான் இப்பொழுதும் முதல் பாடமாக நாம் நீடித்துக் கொண்டு வருகிறோம். தமிழை ஆட்சி மொழியாக்கியதற்குப் பிறகு தமிழைப் போதனமொழியாக ஆக்கவேண்டும் என்று சில கல்லூரிகளில் நாம் ஏற்பாடு செய்து, அதற்கு வேண்டிய துவக்கம் செய்தும், மாணவர்கள் தமிழை விரும்பிப் படிக்க முன்வரவில்லை என்பது மிகப் பெரிய குறையாக இருந்து வருகிறது. தமிழைப் படிக்க மாணவர்கள் விரும்பவில்லை என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில், ஒரு பக்கத்திலே பார்த்தால், தமிழுக்காக மாணவர்கள் செய்த கிளர்ச்சியையும் நாம் பார்த்தோம். ஆகவே, கல்லூரிகளில் நாம் செய்ய வேண்டிய மிகப் பெரிய கடமை என்னவென்றால், முதல் பாகமாக ஆங்கிலம் இருக்கக்கூடிய இடத்தில் தமிழை வைக்கவேண்டும். அப்படிச் செய்துவிட்டால், தமிழைப் படித்துத்தான் ஒரு மாணவர் டிக்ரி வாங்கவேண்டும், என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆனால், தற்போதிருக்கும் நிலைமையைப் பார்த்தால், ஆங்கிலம் முதல் பாடமாக படித்து, இரண்டாவது மொழியாக வேறொரு மொழியை எடுத்து படித்து



7th March 1966] [திரு. சி. ம. அம்பிகாபதி]

டிக்ரி வாங்கும் நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை நீடிப்பதால் தமிழ் புறக்கணிக்கப்படுகிறது என்பதை நாம் அறிகிறோம். தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டுவருகின்ற நாம் இந்த நேரத்தில் தமிழை யாரும் புறக்கணிக்க இடமளிக்கக் கூடாது. ஆகவே முதல் பாடமாக கல்லூரிகளில் தமிழை வைத்துவிட வேண்டும். இரண்டாம் பாடமாக ஆங்கிலம் இருக்கவேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம் என்பதாக வைத்துவிடுவது சரியாக இருக்கும்.

அடுத்து கல்லூரிகளில் வேலை செய்கிற, ஆசிரியர்களுக்கும் ஹைஸ்கூல்களில் வேலை செய்கிற ஆசிரியர்களுக்கும் சம்பள வித்தியாசம் இருப்பதை நாம் உணர்கிறோம். யுனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபார்சுப்படி கல்லூரியில் வேலை செய்கிறவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவேண்டும். இதை கொடுக்காததால் பட்டதாரிகள் லெக்சரராக இருப்பவர்கள் வேறு வேலை தேடிக்கொண்டு கல்லூரியை விட்டு போய்விடுகிறார்கள். ஆகவே, நிரந்தரமாக உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வேலை செய்ய ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. இதனால் கல்வி பாதிக்கப்படுகிறது. யுனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபார்சுப்படி கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மெடிக்கல் க்காலேஜ் மாணவர்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். Integrated Course அதாவது முதல் வருடம் படிப்பவர்கள் fail ஆகிவிட்டால், அடுத்த முறை private ஆக பரீக்ஷைக்குப் போக வேண்டும். அந்த முறையும் fail ஆனால்; மூன்றாம் முறையாக பரீக்ஷை எழுத முடியாது. இந்த நிலைமையை மாற்றி Agriculture கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களைப்போல், முதல் வருடம் fail ஆகியவர் சேர்ந்து படித்து பரீட்சை எழுதலாம் என்றிருப்பதாக தெரிகிறது. அதேபோலவே மெடிகல் காலேஜ் மாணவர்கள் விஷயத்திலும் கையாள வேண்டும். மேலும் private ஆக எழுதுபவர்கள் இரண்டு தடவைக்கு மேல் மூன்றும் முறையாகவும் பரீக்ஷை எழுதலாம் என்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதாக கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. பெ. தர்மலிங்கம்: தகுதிமிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் இங்கே கோரப்பட்டிருக்கிற கல்வி மானியம் ரூ. 45,30,53,500 ஆகும். இதில் ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ஏறக்குறைய ரூ. 22,87,12 லட்சமாகும். உயர்நிலைக் கல்விக்காக ரூ. 13,17,94 லட்சமாகும். பல்கலைக் கழகக் கல்விக்காக ரூ. 1,83,36 லட்சமாகும். சிறப்புக் கல்விக்காக ரூ. 99.97 லட்சமாகும். பிற இனங்கள் என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 4,31,58 லட்சமாகும்.

இதிலே ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை அதிகமானதுதான். மொத்தத்தில் 52.96 சதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றாலும் கூட ஒதுக்கப்படுகிற தொகை செலவழிக்கப்படுகிறதா என்று பார்க்கவேண்டும். சென்ற 1963-64-ம் ஆண்டு ஆரம்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [7th March 1966

பக் கல்விக்காக ரூ. 30,14,24,600 சொச்சம் ஒதுக்கினார்கள். ஆனால்; செலவானது ரூ. 27,93,56,855 சொச்சம் தான் என்பதாக பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் குறிப்பிட்டார்கள். இரண்டு கோடியே இருபது லட்சம் சொச்சம் செலவழிக்கப்படாமலேயே விடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவ்வாறு ஒதுக்கப்படுகிற தொகை பூரணமாகச் செலவழிக்கப்படாமல் விடுவதற்குக் காரணம் என்ன என்பதை நான் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கல்வியை மிக விரைவாக, விரிவாக விஸ்தரிக்கவேண்டும் என்ற பெருநோக்கோடு நாம் நல்லபல காரியங்களைச் செய்ய முனைகிறோம். நமது முதல் அமைச்சர் அவர்கள், "பள்ளித் தொடக்க நிலையில் நூற்றுக்கு நூறு பிள்ளைகள் பள்ளிகளில் சேர்க்கப்படவேண்டும் என்ற எண்ணம் ஈடேறுவதற்காக நான்காம் திட்டத்தில் ஏழைச் சிறுவர்கள் அனைவருக்கும் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்க வகை செய்திருக்கிறோம். நான்காம் திட்டத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரையில் நண்பகல் உணவுத் திட்டத்தின் நன்மைகளைப் பெற்று வருகிற எல்லாச் சிறுவர்களுக்கும் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குவதை மேற்கொள்ள நினைத்திருக்கிறோம்" என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையில் அது வரவேற்க வேண்டிய ஒன்றாகத்தான் இருக்கிறது. கட்டாயக் கல்வி அமலில் இருக்கிற வட்டாரங்களிலாவது எல்லாப் பிள்ளைகளும் பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என்றால் எனக்குத் தெரிந்த வரையில் பிள்ளைகளின் பெயர்கள்தாம் வருகைப் பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவே தவிர மாணவர்கள் பள்ளிக்கு வருவதில்லை. அவ்வாறு பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமென்ற விதியிருந்தாலும் அது அமலாக்கப்படுவதில்லை. அதை அமலாக்கவும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். பெற்றோர்களை அணுகிக் கேட்கும்போது அவர்கள் தங்களுடைய வறுமை நிலையைத்தான் எடுத்துச் சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் படிக்கக்கூடிய வயது வந்த குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பதற்கு தக்கமுறையிலே நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். கட்டாயக் கல்வி திட்ட அடிப்படையில் 6–11 வயதுக் குழந்தைகள் வந்தாலும் 2-5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பால்வாடி அமைக்கப்படுவது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன். பெரிய நகரங்களில் அதிகச் சம்பளம் கட்டக்கூடியவர்களுக்குத் தனியார் அதுபோன்ற பள்ளிவசதியை அளித்து வரலாம். அப்படியின்றி ஒவ்வொரு பஞ்சாயத்து மன்றங்களிலும் ஏற்படுத்த வகை செய்யவேண்டும். மேலும் குறைந்தபட்சம் ஹையர் கிரேடாவது பயிற்சி பெற்ற ஆசிரியர்களை இங்கே நியமித்தால் தான் நல்ல பிள்ளைகளாக ஆக்கமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



7th March 1966] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

ஆண்டுதோறும் அதிகப் பிள்ளைகளைச் சேர்க்க பள்ளிகள் ஏற்படுத்துவது போல, அதிக ஆசிரியர்களை நியமிக்க வகை செய்வது போல—பள்ளிகளைக் கண்காணிக்க அதிக அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை என்று நான் அறிகிறேன். கண்காணிப்பு சரியாக இல்லையென்பதால் பல பள்ளிகள் சரியாக நடைபெறுவதில்லை. இன்றைக்கு இருக்கக் கூடிய கண்காணிப்பாளர்களுக்கும் 'CARE' கேர் ஸ்தாபனம் அளிக்கும் நன்கொடைக்குக் கணக்கு எழுத சரிக்கட்டத்தான் நேரம் இருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன், பள்ளிகளின் எண்ணிக்கைக்கு, ஆசிரியர்களின் விகிதாசாரத்திற்கு ஏற்றபடி கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தவேண்டும்.

அதுபோல மதிய உணவுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் நம் மாநிலத்தில் தான் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது என்றாலும் கூட அதில் உள்ள குறைபாட்டைச் சுட்டிக்காட்டுவது தவறு அல்ல என்று நினைக்கிறேன். மதிய உணவுக்காக அரசு 6 காசு அளிக்கிறது. பஞ்சாயத்து 2 காசு போட்டுக் கொண்டு பொதுமக்களிடம் இருந்து 2 காசு நன்கொடை வாங்கி ஆக 10 காசுக்கு உணவு அளிக்கவேண்டும். ஆனால் ஹரிஜன் வெல்பேர் இலாகா மூலம் நடக்கிற பள்ளியில் அரசு 15 காசு அளிக்கிறது. ஒரு ஊரில் இரண்டு பள்ளிகள் இருக்கின்றன. ஒன்று பஞ்சாயத்து கூட்டு மன்றத்தினால் நடத்தப்படுவது, இன்னொன்று ஹரிஜன இலாகாவினால் நடத்தப்படுவது. ஹரிஜன இலாகாவினால் நடத்தப்படுகிற பள்ளியில் 15 காசுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. பள்ளியில் 10 காசுக்குத்தான் அளிக்கப்படுகிறது. இத்தகைய ஏற்றத் தாழ்வு ஒரு ஊரிலேயே இருப்பது சரியல்ல. அதுவும் பொதுமக்களிடம் இருந்து நன்கொடை வாங்கப்படவேண்டும் என்று இருக்கிறதே தவிர அதை வாங்க முடியவில்லை. வாங்க வேண்டுமென்று சொல்வதும் இன்றைய நிலையில் சாத்யமாக இருக்காது. மேலும் பல பஞ்சாயத்துக்களால் 2 காசு கூடக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆக அரசு நல்ல முறையில் பரிசீலனை செய்து எல்லா இடங்களிலும் அரசே 15 காசு கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். நாம் எத்தனையோ கோடிக்கணக்காக செலவிடுகிறோம். மதிய உணவுத் திட்டம் வெற்றிபெற இதனால் சில லட்சம் செலவானாலும் நாம் பொருள்படுத்தக்கூடாது. அதைவிட்டு ஏதோ போட்டதாக கணக்கை சரி செய்து காட்ட நாம் முறைமுகமாக வசதி அளிக்கக் கூடாது. நமது முதல் அமைச்சர் அவர்கள்—

"இம்மாநிலத்தின் எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் உள்ள ஏழை மாணவ, மாணவிகளுக்கு இப்போது இலவச நண்பகல் உணவு வழங்கப்பட்டு வருகிறது. 30,296 பள்ளிகளில் இத்திட்டம் இப்போது செயலில் உள்ளது. அதனால், ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் 17.41 லட்சம் சிறுவர், சிறுமியர் பயனடைகின்றனர்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். உண்மையில் பல பஞ்சாயத்துக்களில் பணமில்லாத காரணத்தினால் சாப்பாடு போடாமல் நிறுத்திவிட்டார்கள். அதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் அவசியம் வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் எடுத்துக்

சொன்னேன். அப்போது அங்கு வந்து இருந்த திட்ட வளர்ச்சி இயக்குநர் தாம் ஒரு உத்தரவு பிறப்பிப்பதாகவும், பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்து யூனியனை அந்தச் செலவுத் தொகை ஒதுக்கிவிடலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவிட்டால் யூனியனிலிருந்தே ஈடு செய்து கொள்ளலாம் என்று சொன்னார்கள். யூனியனுக்குத் தீர்மானம் போட்டு அனுப்புகிற அளவுக்கு பஞ்சாயத்துக்களில் உள்ளவர்கள் மனம் இருக்கிறவர்களாக இருந்தால் பஞ்சாயத்திலிருந்தே கொடுத்துவிட்டிருப்பார்கள். பஞ்சாயத்துப் போர்டுகளுக்கு ஆகக்கூடிய மின்சாரக் கட்டணத்தைப் பஞ்சாயத்து யூனியனே கொடுத்து பிறகு ஈடுசெய்து கொள்கிறார்கள்.

அதேமாதிரி இந்த மதிய உணவிற்காக ஆகக்கூடிய செலவை பஞ்சாயத்துக்களுக்காக பஞ்சாயத்து யூனியனிலிருந்து கொடுத்துவிட்டு பஞ்சாயத்துக் கணக்கிலே பற்று எழுதிக்கொள்கிற வழிவகை இருந்தால் இந்தத் திட்டம் நன்றாக நடைபெறும். என்னுடைய தொகுதியிலே மணக்காலிலே இரண்டு பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. குடியானவர்களுக்காக உள்ள பள்ளிக்கு மதிய உணவிற்காக பணத்தைப் பஞ்சாயத்துத் தலைவரே கொடுத்து விடுகிறார். ஆனால் மணக்கால் காலனியிலே ஆதிதிராவிடர் பள்ளி இருக்கிறது. அதற்கு அந்தத் தலைவர் பணம் கொடுக்காத காரணத்தால் அங்கே சோறே போடாமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்த ஏற்கனவே நிர்வாக இலாகா போடவேண்டுமென்று சுட்டிக்காட்டி இருக்கிறேன். இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்ற நேரத்தில், பிள்ளைகளுடைய படிப்பிற்காக கோடிக் கணக்கான ரூபாய்களை ஒதுக்குகிற நேரத்தில், இந்த மதிய உணவு வெற்றிகரமாக நடைபெறவேண்டுமென்றால், மற்றக் காரியங்களுக்குப் பணம் அதிகமாக ஒதுக்குவதைப்போலவே இந்த மதிய உணவு நிர்வாகத் திட்டத்திற்கும் ஒதுக்கவேண்டுமென்றும், இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்திசெய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். தனியார் நடத்துகின்ற பள்ளிகளுக்கும், வெல்ஃபேர் டிபார்ட்மெண்ட் நடத்துகின்ற பள்ளிகளுக்கும் வேறுபாடு இருக்கிறது. அவர்களுக்கு ஒன்று, இவர்களுக்கு ஒன்று என்று நடைபெறுவதால், இந்த வெல்ஃபேர் பள்ளிகளையும் பஞ்சாயத்து யூனியனிலிருந்து நடத்துகின்ற பள்ளிகளுடன் சேர்த்துவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மதிய உணவுத் திட்டத்தின் அடிப்படையில் சில இடங்களிலே ஆசிரியர்களே சமையல் செய்து வருகிறார்கள். பள்ளிகளையெல்லாம் கூட்டுவதற்கு ஆள் போட்டிருக்கிறோம். அதைப்போல் மதிய உணவு சமைப்பதற்காகத் தனியாகப் போடாவிட்டாலும் மற்ற வேலை செய்பவர்களிடமே இந்த வேலையை விட்டு அவர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்கலாம். ஆகவே, ஆசிரியர்களுக்கு இந்த வேலையைக் கொடுக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு 750 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாக இந்தக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அதிகமான வீடுகள் ஆசிரியர்களுக்குக் கட்டிக்கொடுப்பதற்கு வழி





வகை செய்யவேண்டும். இப்பொழுது கட்டப்படுகிற வீடுகள் எல்லாம் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ முடியாத அளவுக்குச் சிறியவையாக இருக்கின்றன. ஆகவே இவற்றை மாற்றிப் பெரிய அளவில் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும்.

அரசாங்கமே பாடப்புத்தகங்களை அச்சடித்துக்கொடுக்கும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அச்சடித்துக்கொடுக்கும் புத்தகங்களில் நிறையப் பிழைகள் இருக்கின்றன. காலம் குறைவாக இருப்பதால் நான் அதைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. புத்தகள்கள் எல்லாம் அரசினரால் அச்சடிக்கப்பட்டு "மாவட்ட விற்பனையாளர்கள் மூலமாகப் பொது மக்களுக்குப் பாடப் புத்தகங்களை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப்பற்றி சென்ற ஆண்டு கூட வலியுறுத்தியிருக்கிறோம். பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களே இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டு, அவர்களே இலவசமாகப் புத்தகங்களை வழங்கிவிடலாம். இதன் மூலம் கிடைக்கும் கழிவுத் தொகையைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்தால் அவர்கள் இந்தப் பணத்தை மதிய உணவுச் செலவிற்கு ஈடுசெய்து கொள்ளலாம் என்று கூறியிருக்கிறோம். அதை இந்த ஆண்டு நிறைவேற்றி இருப்பார்கள் என்று கருதினோம். ஆனால் என்ன காரணத்தாலோ நிறைவேற்றாமல் விடப்பட்டிருக்கிறது. அதை அரசாங்கம் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்காமல் பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுத்து விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே முதியோர் கல்வி விஷயத்தில் ஒரு மேஜர் பஞ்சாயத்துக்கு ஒரு பள்ளியாவது திறக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில் 6 முதல் 11 வயது வரையில் உள்ள மாணவர்களுக்கு 3,750 ஆசிரியர்களை நியமிப்பதாகவும், 11 முதல் 14 வயது வரையில் உள்ள மாணவர்களுக்கு 6,666 ஆசிரியர்களை நியமிப்பதாகவும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களை வழங்குகின்ற முறையிலே ஒரு மாற்றம் செய்யவேண்டும். இந்த மாநிலத்திற்கு இத்தனை ஆசிரியர்கள் என்று ஏற்படுத்தி, அதில் மாவட்டத்திற்கு இத்தனை ஆசிரியர்கள் என்று பிரித்து, பிறகு கல்வி மாவட்டத்திற்கு இத்தனை ஆசிரியர்கள் என்று பிரித்து அதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசினர் உத்தரவு கூறுகிறது. உதாரணமாக ஒரு பஞ்சாயத்துக் கூட்டுமன்றத்திற்கு 35 ஆசிரியர்கள் தேவையென்றால் அரசாங்கத்திலிருந்து, 8 பேர்கள் கொடுத்திருக்கிறோம் அந்த 8 பேர்களை வைத்துக்கொண்டு போட்டுக்கொள்ளுங்கள் என்று உத்தரவு வருகிறது. தணிக்கை அதிகாரிகள் வந்து தணிக்கைசெய்து ஆசிரியர்கள் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று சிபாரிசு செய்தும்கூட கொடுக்கிற ஆசிரியர்களை வைத்துத்தான் போட்டுக் கொள்ள வேண்டு

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [7th March 1966

மென்று சொல்வதை மாற்றி வேண்டிய அளவு ஆசிரியர்களை ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஆதாரக் கல்வித் திட்டத்தைக் கை விட்டுவிட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் மொத்தம் 58 பள்ளிகள் உள்ள பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தில் 7 ஆதாரக் கல்வி பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளில் ஆதாரப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைத்தான் போட வேண்டும். ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளில் ஆதாரப் பயிற்சி பெறாத ஆசிரியர்களைப் போடக்கூடாது, ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளாக இல்லாதவற்றில் ஆதாரப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை போடக்கூடாது. இப்பொழுது ஆதாரக் கல்வித் திட்டத்தை கை விட்ட பிறகும்கூட இன்னும் அவை இருந்துவருகின்றன. இதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு குருளையர் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு உடை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதே போல் ஆசிரிர்களுக்கும் இலவசமாக உடை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப்போட்டு நம்முடைய சர்க்கார் கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து கல்வியைச் சிறந்த முறையிலே பரப்பியிருக்கிறார்கள். இதற்குக் காரணமாக இருக்கிற நம்முடைய கல்வி அதிகாரிகள், இயக்குநர் எல்லோரையும் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். இப்பொழுது கல்விக்காக 45 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது போதாது. ஆகவே, இதை 50 கோடியாக ஒதுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய நாட்டிலே கல்வியை வளர்ப்பதற்காக, பிற நாட்டிலே இருந்து வருகின்ற மடாதிபதிகள் (மொனஸ்ட்ரீஸ்) போன்றவர்கள் எல்லாம் முயற்சி செய்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலேகூட கோவில்களிலும் சரி, மடங்களிலும் சரி, தேவஸ்தானங்களிலும் சரி, தர்ம ஸ்தாபனங்களிலும் சரி, பணம் குவிந்திருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய பணத்தைக்கொண்டு நல்ல முறையிலே கல்வியின் வளர்ச்சியை அதிகரிக்கலாம் என்பது என்னுடைய கருத்து. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே இருந்ததைவிட அதிகமாக ஆரம்பப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மதிய உணவுத் திட்டத்தின் மூலமாக ஏழைகளாக இருக்கிறவர்கள், படிக்கமுடியாதவர்கள்கூட நல்ல உணவைப் பெற்று படித்து வருகிறார்கள். கிராமங்களிலே கூட உயர்நிலைப் பள்ளிகள் வேண்டுமென்ற முறையில் நல்ல முறையிலே அமைத்து இருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கும் வசதிகள் செய்யவேண்டுமென்று திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இதை நான் மிகவும் பாராட்டுகிறேன். நாம் அதிகமான அளவுக்கு உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்த ஏற்படுத்த பிள்ளைகள் அதிகமாகப் படித்துக் கொண்டுவருவதால் கல்லூரிகள் அதற்குத் தகுந்த அளவு அதிகமாக இல்லாமல் இருக்கிறது. ஏற்கனவே இம்மாநிலத்தில் 93



7th March 1966] [திரு. கி. நாராயணசாமி பிள்ளை]

கல்லூரிகள் இருந்தாலும்கூட, மேலும் நம்முடைய மாநிலத்தில் 30 கல்லூரிகளைத் திறக்க நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது என்றும், அவைகளில் 6 கல்லூரிகளை 1966-67-ஆம் ஆண்டில் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அவை ஒவ்வொன்றும் தென் ஆற்காடு, வட ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் நிறுவப்படும் என்றும், அவைகளில் தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களில் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளவை மகளிர் கல்லூரிகளாகும் என்றும் அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக தென் ஆற்காடு ஜில்லாவிலே, விருத்தாசலம் தாலுகாவில், மணவாளநல்லூரில் கொளஞ்சியப்பர் கோயில் என்று ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலில் உபரியாக 8½ லட்சம் ரூபாய் இருக்கிறது. கள்ளக்குரிச்சி தாலூகா, திருக்கோயிலூர் தாலூகா, விருத்தாசலம் தாலூகா ஆகிய மூன்று தாலூகாக்களும் பிற்போக்காக இருக்கின்றன. 10-30 a.m. இப்போதுதான் அங்கு உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. அந்த இடத்திலே மையமாக, கோயிலின் பணத்தைக் கொண்டும்—கோயிலிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் கொடுக்க இசைந்துள்ளார்கள்—பொதுமக்கள் நன்கொடையைக் கொண்டும் ஒரு கல்லூரியை நிறுவவேண்டும். இந்த ஆண்டில் தென்னாற்காடு ஜில்லாவில் திறக்க இருக்கும் கல்லூரியை விருத்தாசலத்தில் திறக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு வேண்டிய இடமெல்லாம் கூட இருக்கிறது. பழமலைநாதர் கோயிலில் இருக்கின்ற 90 ஏக்கர் நிலத்தில் 40 ஏக்கர் நிலத்தை இதற்காக கொடுக்க முன்வந்துள்ளார்கள். அந்த இடத்தை யுனிவர்சிடியாரும், ஹையர் எஜுகேஷன் அதிகாரியும் மனமுவந்து வந்து பார்த்தார்கள். விருத்தாசலத்திலுள்ள தேவஸ்தான இடத்தில் கல்லூரியை அமைக்க வேண்டுமென்பதற்காகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கூறினார்கள். ஊர் மக்கள் எல்லோரும் இதிலே ஆர்வம் கொண்டு தங்களுடைய நன்கொடையைக் கொடுக்க முன்வந்துள்ளார்கள். இந்தக் கல்லூரியை அங்கே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலத்திற்கு அருகில், கூரைப்பேட்டை என்ற இடத்தில் 120 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தில் பயிர் செய்யமுடியாது. இந்த ஆண்டு துவக்கப்பட இருக்கும் பாலிடெக்னிக் ஸ்கூலை கூரைப்பேட்டையில் வைத்தால் நல்லது. விருத்தாசலத்தில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி போதவில்லை. அதற்காக கட்டடங்களைக் கூடிய விரைவிலே கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விருத்தாசலம் தாலூகாவில் திட்டக்குடி, பெண்ணாடம் என்ற ஊர்களிலே நிறைய மகளிர் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மகளிர்களுக்கான உயர்நிலைப் பள்ளி ஒன்றைப் பெண்ணாடத்திலும், திட்டக்குடியிலும் அமைக்கவேண்டும். புதிதாகப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் ஏற்படுத்துகின்றபோது மாணவர்களுக்கான விடுதிகள் கட்டும் அதே சமயத்தில் ஆசிரியர்களுக்கான விடுதிகளுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

[திரு. கி. நாராயணசாமி பிள்ளை] [7th March 1966

இந்த ஆண்டு மாலை நேரக் கல்லூரிகளில் நிறையப் பேரைச் சேர்த்திருக்கிறார்கள். சட்டக் கல்லூரியிலும் மாலை நேர வகுப்பை வைத்து 100 பேருக்கு மேல் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதெல்லாம் பாராட்டத் தக்கது. இந்த நிலையிலே நம்முடைய மாநிலத்திலே நிறைய ஆரம்பப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் திறந்து வைத்து 45 கோடி செலவு செய்கிற அரசாங்கம் அதை 50 கோடியாக உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. பொன்னையன் :** கனம் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கல்வி மானியத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது பட்ஜெட்டிலே கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகையிலே 52 சதவிகிதத்தை ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலிருந்து, இந்த நாட்டிலே அறியாமையைப் போக்க எவ்வளவு தூரம் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். கடந்த 17–18 ஆண்டுகளில், சில காலத்திற்கு முன்பு வரை, இந்த மாநிலத்தின் மொத்த வருமானமே ஏறக்குறைய 45 கோடி அளவுக்குத்தான் இருந்தது. இன்று கல்விக்காக மட்டும் தனியாக 45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் ராஜ்யத்தின் வளர்ச்சியைக் காட்டுவதற்கு இது ஒன்றே போதும். கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் 31 சதவிகிதத்தை உயர்நிலைக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டு இருந்தும், என்னுடைய பிராந்தியத்தில் ஒருசில குறைகள் அதிக நாட்களாக இருப்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வால்பாறை ஏரியாவில் நமது சர்க்காருடைய நிலம் 200 ஏக்கருக்கும் உள்ளாகவேதான் இருக்கும். இந்த 200 ஏக்கருக்குள்ளேதான் வால்பாறை பொது மக்களுக்கான உயர்நிலைப் பள்ளி, யூனியன் ஆபீஸ் போன்றவை எல்லாம் இருக்கின்றன. பாக்கி எல்லாம் பிரைவேட் எஸ்டேட்டாக, தனிப்பட்டவர்களுடைய சொத்தாக லட்சக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. ஒவ்வொரு எஸ்டேட்டிலும் எஸ்டேட் மானேஜ்மென்டின் கீழ் ஆரம்பப் பள்ளிகளை நடத்துகிறார்கள். அவர்கள் பிளான்டேஷன் லேபர் ரூல்சுக்கு இணங்க பெயரளவில் ஆரம்பப் பள்ளிகளை வைத்திருக்கிறார்கள். அங்குள்ள அத்தனை மாணவர்களையும் அவர்கள் பள்ளியில் சேர்த்துக்கொள்வதில்லை. இது விஷயத்தை அதிகாரிகளுக்கும் கனம் அமைச்சர்களுக்கும் அடிக்கடி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். இன்னும் இந்தப் பிரச்னை தீர்ந்தபாடில்லை. நாங்கள் கிணற்றுத் தவளை போல் இருக்கிறோம். எல்லாப் பிள்ளைகளுக்கும் அந்தப் பள்ளிக்கூடங்களில் இடம் கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும் அவர்கள் கேட்பதில்லை. தோட்ட முதலாளிகள் சர்க்கார் அதிகாரிகளையும் மற்றவர்களையும் மதிப்பதில்லை. டெபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் அவர்களுடைய வார்த்தைகளையே கேட்பதில்லை, அதே சமயத்தில் பஞ்சாயத்து



7th March 1966] [திரு. கே. பொன்னையன்]

யூனியன்கள் மூலமும் எஸ்டேட்டுகளில் ஆரம்பப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அந்தப் பள்ளிகளுக்கான கட்டடங்கள், உபாத்தியாயர்களுக்கான குடியிருப்பு ஆகியவை எல்லாம் எஸ்டேட்டைச் சேர்ந்தவை. அதனால் 'at the mercy of the planters", இருக்க வேண்டியிருக்கிறது. அதிலும் எல்லா மாணவர்களுக்கும் இடம் கிடைப்பதில்லை. உபாத்தியாயர்களுக்கு வைத்திய வசதி, வீட்டு வசதி எல்லாம் மிகவும் குறைவு. எல்லா யூனியன் பள்ளிகளும் எஸ்டேட்டில் நடத்தப்படுகிறபடியால் எஸ்டேட் மானேஜர் தயவில் இருக்கவேண்டியிருக்கிறது. அந்தப் பள்ளிக் கூடத்திற்குப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும்போது கூட பிளான்டேஷன் லேபர் யூனியன் விதிகளின் படி ரிஜிஸ்டர்டு லேபரர்களுடைய பிள்ளைகள்தான் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பார்பர், டோபி, கார்ப்பெண்டர், ப்ளாக்ஸ்மித் ஆகியவர்களுடைய பிள்ளைகளுக்குப் பள்ளிகளில் இடம் கொடுப்பதில்லை. We are denied even the elementary education. கனம் அமைச்சர் அவர்கள் இதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிஸ் என்ற பிராந்தியம் இருக்கிறது. அங்கு ஒரு ஹைஸ்கூல் ஆரம்பித்து 4, 5 வருஷம் ஆகிறது. மானேஜ்மென்டில் இருந்து அதற்கு ஒரு இடம் கொடுத்தார்கள். மதுரையில் ஒரு பள்ளிக் கட்டடம் விழுந்த பிற்பாடு ஒவ்வொரு கட்டடத்திற்கும் எஞ்சினீரிங் சர்ட்டிபிகேட் வேண்டுமென்ற முறையில் இந்தப் பள்ளியின் கட்டடத்தைப் பார்த்து விட்டு அது ஆபத்தான நிலைமையில் இருக்கிறது, இடத்தை மாற்ற வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். அப்போது மானேஜ்மென்டில் மறுத்து விட்டார்கள். அதற்குப் பிறகு அது ஒரு சர்ச் காம்பவுண்டில் நடந்து கொண்டிருக்கிறது. அது ரொம்பவும் வெட்கப்படக் கூடியதாக இருக்கிறது. அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு அந்தப் பகுதியில் உள்ள நாலைந்து ஏக்கர் நிலத்தை அக்விசிஷன் செய்து உடனடியாக ஒரு கட்டடத்தைக் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும். அதே போன்று ஒவ்வொரு எஸ்டேட்டிலும் ஒரு ஏக்கர் அல்லது இரண்டு ஏக்கர் நிலத்தை அக்வயர் செய்து எலிமெண்டரி ஸ்கூல்களுக்கும் கட்டடம் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். வால்பாறையில் உள்ள ஒரு ஹைஸ்கூலில் 2,000 பிள்ளைகள் படிக்கிறார்கள். அங்கு ஷிஃப்ட் சிஸ்டம் இருக்கிறது. மலைப் பிராந்தியமான அங்கு ஷிஃப்ட் சிஸ்டத்தின் காரணமாக பிள்ளைகள் மாலை 5½ மணிக்கு மேல் பத்துப் பதினைந்து மைல் தூரத்திலுள்ள தங்களுடைய வீடுகளுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. வருஷத்தில் ஆறு, ஏழு மாதங்கள் மழை பெய்கின்ற நிலையில் பிள்ளைகள் 5½ மணிக்கு மேல் வீடு திரும்பிச் செல்ல பஸ் கிடைப்பதில்லை. அதனால் அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, புதிய கட்டடங்களைக் கட்டி ஷிஃப்ட் சிஸ்டத்தை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பப் பள்ளிகளுக்காக 45 கோடி ரூபாய் அளவுக்குப் பெருந் தொகையை ஒதுக்கியும் அதனால் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்கவில்லை என்பதைச் சொல்லும்போது வேதனைப்படுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்,

[7th March 1966

* *திரு. காஞ்சி மணிமொழியார் :* கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிற கல்வி மான்யத்தின் மீது என் கருத்துக்களை வைக்கவிரும்புகிறேன். இம்மாநிலத்தில் கல்விக்காக இன்று 45 கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட சர்க்கார் செலவில் கால் பங்கிற்கு மேல் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும். ஏராளமான ஆரம்பக் கல்விக் கூடங்களையும், உயர்நிலைப் பள்ளிகளையும் நாம் திறந்து கொண்டே போய்க் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில், கல்வித் துறையில் நிபுணர்களாக இருப்பவர்களும், எதிர்க்கட்சியில் இருக்கிற நாங்களும் பலமுறை கல்வியின் தரம் நாளுக்குநாள் குறைந்துகொண்டே போய்க் கொண்டிருக்கிறது, அதை உயர்த்தவேண்டுமென்று சொல்லி வரும்போது கல்வியில் தரக்குறைவு இல்லை என்று சொல்லி வந்த கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு தம்முடைய அறிக்கையில் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டு அந்தத் தரக்குறைவை நீக்குகிற பணியை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பாகமாக நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கல்வியின் தரக்குறைவைப் போக்குவது திட்டத்தின் ஒரு பாகம் என்று சொல்லியிருப்பது நாம் சிந்திக்க வேண்டிய விஷயம். பெரிய திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து விட்டன. இவற்றிற்காக ஏராளமான பணம் செலவழித்திருக்கிறார்கள். இவ்வளவிற்கும் பின்னால் கல்வியில் தரக்குறைவு இருக்கிறது என்பதை உணர்ந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பாகமாக தரக்குறைவை போக்க வேண்டுமென்று ஏற்றுக்கொண்டிருப்பது உண்மையில் வருந்தத் தக்க ஒரு செயலாகும். அந்தத் தரக்குறைவு ஏன் ஏற்பட்டது என்று இவ்வளவு ஆண்டுகளாகச் சிந்தித்துப் பார்த்திருக்கவேண்டும். அப்படி சிந்தித்துப் பார்த்திருந்தால் நம் செலவில், மக்கள் வரிப்பணத்தில், ஒரு பெரும் தொகையை மிச்சம் செய்திருக்கமுடியும். கல்வியின் தரம் குறைவதற்கு முக்கிய காரணம், நமக்குள்ள அளவு கடந்த ஆசைதான். பொது மக்களுக்குக் கூட ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு பகுதியிலும் பள்ளிகள் விரைவில் வந்து விடவேண்டும். வசதியிருக்கிறதோ, வாய்ப்பிருக்கிறதோ, கட்டடம் இருக்கிறதோ இல்லையோ. எது எப்படியிருந்தாலும் பள்ளிக்கூடம் வந்து விட வேண்டும் என்று அளவு கடந்த ஆசை மக்களுக்கும் இருப்பதால் கல்வியைப் பரப்பியிருக்கிறோமே தவிர தரத்தைப் பெறுவதற்குள்ள வாய்ப்பை இழந்துவிட்டோம். ஆகவே அடுத்த திட்டத்தில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துப் பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். இன்னொரு காரணத்தையும் நாங்கள் பல ஆண்டுகளாகவே சொல்லி வருகிறோம். இந்த ஆதாரக் கல்வித் திட்டம் இந்த நாட்டில் இருக்கிற வரையில் கல்வியின் தரம் நிச்சயமாக உயரவே உயராது. அதை சர்க்கார் உணர வேண்டும். பல நிபுணர்கள்கூட இதைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்தில் அது கைவிடப்பட்டு விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருக்கிறார்களே தவிர இங்கு மேலும் மேலும் இடைநிலை ஆதாரக் கல்விக் கூடங்களை முதல் நிலை



7th March 1966] [*திரு. காஞ்சி மணிமொழியார்*]

ஆதாரக் கல்விக் கூடங்களாக மாற்றுவதற்கும் உயர்நிலை ஆதாரப் பள்ளிகளில் விரைவுத் திட்டத்தை மேற்கொள்வதற்காகவும் ஒவ்வொரு பள்ளிக்கும் 10,000 ரூபாய் கொடுக்க இருக்கிறோம் என்று சொல்வது உண்மையில் அது கை விடப்பட்டு விட்டது என்பதற்கு அடையாளமா? அந்தத் துறையை கை விடவேண்டும். பாராளுமன்ற மேல் அவையில் திரு. சாக்ளா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் தோற்றுப் போய் விட்டது என்று. அப்படி அவர் சொன்னபோது ஒரு உறுப்பினர், மேல் அவைத் தலைவர் அவர்கள்தான் அத்திட்டத்திற்கு தந்தை என்று சொல்லப்படுகிறதே, அவர்கள் அத்திட்டம் தோற்று விட்டது என்பதை ஒத்துக்கொள்கிறார்களா என்று கேட்டபோது மேல் அவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், 'நான்தான் அந்த செத்துப் பிறந்த குழந்தைக்கு தந்தை, ஆனால் இதற்கு பதிலை என்னிடமிருந்து எதிர்பார்க்காதீர்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். செத்து பிறந்த குழந்தையை வைத்துக் கொண்டு அதற்கு முத்தம் கொடுப்பானேன்? அது பிறக்கும்போதே செத்துப் பிறந்தது, அது பயனற்ற திட்டம். திரு. சாக்ளா அவர்களே பதில் கூறியிருக்கிறார்கள். 'இதை மேலவைத்தலைவர் போலிப் புகழ்ச்சிக்குரிய திட்டம் என்று சொல்கிறார்கள். அதை மாற்றியமைக்க முயற்சிக்கிறோம்' என்று சொன்னார்கள். புகழ்ச்சிக்குரிய திட்டம் என்று சொல்லிக் கொண்டு, செத்துப் பிறந்த குழந்தையை வைத்துக் கொண்டு அதை இத்தனை ஆண்டுகளாகத் தாலாட்ட என்ன அவசியம் வந்தது? புகழ்ச்சிக்குரிய திட்டம் என்று வெளியே மக்களிடம் காட்டுவதிலும் கல்விக்காக பெரிய திட்டம் போட்டிருக்கிறோம் என்று சொல்வதிலும் பயன் இல்லை. இது துவக்கப்பட்ட நேரத்தில் மனமும் உடலும் ஒன்றுபட்டு இணைந்து நடக்கவேண்டுமென்று போடப்பட்டது. ஒவ்வொருவரும் தொழிலின் பெருமையை உணர வேண்டுமென்று போடப்பட்ட திட்டம் இது. ஆதாரக் கல்விக் கூடங்களில் படித்து வந்தவர்கள், அல்லது அதில் ஆசிரியர்களாக இருக்கிறவர்கள் யாராவது தாங்கள் கற்ற தொழில்கள்செய்து வாழ்க்கைத்தரம் உயர்ந்தது, ஆதாரக் கல்வி கற்றுத் தரப்பட்டதினால் தொழில் துறை உயர்ந்திருக்கிறது என்று சொல்கிறார்களா? எவ்வளவோ ஆசிரியர்களை நான் சந்தித்துக் கேட்டிருக்கிறேன். ஆதாரக் கல்வி ஆசிரியர்கள் அவ்வளவு பேர்களும் இது பிரயோஜனமற்ற திட்டம், யாருமே வாழ்க்கையில் இதனால் துளி அளவு கூட பயன் அடைந்ததில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டத்திற்காக இந்த ஆண்டும் ஏன் பணம் செலவழிக்கப்பட வேண்டும் என்பதைச் சர்க்கார் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் பள்ளிகள் நம் நாட்டில் கிட்டத்தட்ட மொத்தமுள்ள ஆரம்பப்பள்ளிகளில் கால் பங்கு இருக்கிறது. தனியார் பள்ளிகளில் கல்வியின் தரம் நிச்சயமாக மற்றப் பள்ளிகளைவிட உயர்ந்திருக்கிறது என்பதில் ஆட்சேபணையில்லை. அது மட்டுமல்ல. பொதுவாக மாணவர்களின் ஒழுக்கம், பண்பாடு இவை தனித் தனியாக கவனிக்கப்பட்டு வருகின்றன தனியார் நடத்தும் பள்ளிகளில்.

[திரு. காஞ்சி மணிமொழியார்] [7th March 1966

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

ஆனால் மற்ற பள்ளிகளில் அந்தக் கண்ணோட்டம் கொஞ்சம் குறைவு. தனியார் பள்ளிகளை வளர்க்கிற முயற்சியில் அவர்களின் உள்ளத்தை எந்தளவு தளர்ச்சிக்கு கொண்டு வர முடியுமோ அதற்கான அறிக்கைகளை அடிக்கடி கல்வி அதிகாரிகள் விட்டுக்கொண்டிருப்பது சரியல்ல. அவர்களுக்கு தரப்படுகிற நிர்வாக மான்யம் இருக்கிறதே அது, அந்தப் பள்ளிக்கூடங்களை மூடி விடவேண்டுமென்று சொல்வதற்கான முறையில், 10 சதவிகிதம் தான் நிர்வாக மான்யம் கொடுக்கப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு, கொடுக்கப்படுகிற நிர்வாக மான்யத்தைக் குறைந்தது 20 சத விகிதம் என்றாவது உயர்த்தினால் தவிர தனிப்பட்ட நிர்வாகிகள் அந்தப் பள்ளிகளில் பழையபடி ஒவ்வொரு மாணவனையும் கவனித்து அவர்கள் பண்பாட்டை, ஒழுக்கத்தை வளர்க்கும் விதத்தில் கல்வித் தரத்தை உயர்த்தும் முயற்சியில் ஈடுபட முடியாது. அவர்களின் உள்ளம் தளர்ந்து போய் இருக்கிறது. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கப்படும் நிர்வாக மான்யத்தை உயர்த்தித் தரவேண்டும். ஆசிரியர்களுக்கு 100 ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் இருக்கக் கூடாது என்று திரு. சாக்ளா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு 85 ரூபாயில்தான் துவக்குகிறோம். பொருள்களின் விலைகள் ஏறிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் 100 ரூபாய் கூட மிகமிகக் குறைவுதான். இந்த 100 ரூபாய்க்கும் கீழே இருப்பது சரியல்ல. ஆகவே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் 100 ரூபாய் சம்பளத்தில் துவக்கப்படவேண்டும். அப்போதுதான் அவர்கள் உற்சாகமாக இருப்பார்கள். அதற்கான திட்டத்தை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து, கல்வித் துறையில் சர்க்கார் அடிக்கடி தலையிடுவது அவ்வளவு நல்லதல்ல. அடிக்கடி மாற்றங்கள் செய்வது என்றால், அவர்கள் விருப்பு வெறுப்புக்கு இணங்க மாற்றங்கள் செய்வது என்றால், அது சரியல்ல ; அதனாலும் கல்வியின் தரம் குறைகிறது. பல காரணங்களில் இதுவும் ஒன்று. சர்க்கார் அதிகாரிகள், கல்வி இயக்குனர் இவர்கள் அடிக்கடி அறிக்கைகள், உத்தரவுகள் போடுகிறார்கள். அதேபோல் சர்க்காரும் அடிக்கடி சில உத்தரவுகள் போடுகிறார்கள். இதனாலும் கல்வியின் தரம் குறைகிறது. கல்வியில் மாற்றம் செய்ய வேண்டுமென்று கருதுகிறபோது பெரிய கல்வி நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று அமைத்து அவர்கள் கருத்தை அறிந்து அதற்குப் பிறகுதான் அதில் மாற்றங்கள் செய்ய வேண்டும். அவர்கள் அவற்றை ஏற்றுக்கொண்ட பிறகுதான் செய்ய வேண்டும். கல்வி அமைச்சர்களாக வருகிறவர்கள், அவரவர்கள் எந்தெந்த கருத்தைப் பின்பற்றுகிறார்களோ அந்த விதத்தில் எல்லாம் மாற்றி அமைத்துவிடுவது என்றால் கல்வியின் தரம் குறையத்தான் செய்யும். ஆகவே மாற்றங்கள் அவசியமாயின் கல்வி நிபுணர்களைக் கொண்ட குழு அமைத்து அவர்கள் அதை ஏற்றுக்கொண்ட பிறகு தான் செய்யவேண்டும். ஆசிரியர்களைப் பெருமைப்படுத்த ஆசிரியர்கள் வாரம் மட்டும் கொண்டாடினால் போதாது. காங்கிரஸ் சர்க்கார் வந்த பிறகு



7th March 1966] [திரு. காஞ்சி மணிமொழியார்]

52 வாரங்களுக்கும் வார விழாக்கள் வைத்துவிட்டார்கள். எதை எடுத்தாலும் வார விழா கைத்தறிக்கு மட்டுமல்ல வார விழா. குழந்தைகள் வாரம், சுகாதார வாரம், கொசு ஒழிப்பு வாரம் என்று பல வாரங்கள் இருக்கின்றன. மரியாதை வாரம் கொண்டாடத் தொடங்கியபிறகு இருந்த மரியாதையும் இன்று குறைந்து விட்டது. எந்தக் கடைக்குப் போனாலும் வாங்க வருகிறவர்களை விரட்டி விரட்டி அடிக்கிறார்கள். பஸ்ஸில் ஏறினால் மரியாதை கிடையாது. குடியரசுத் தலைவர் அவர்களின் பேரில் ஐந்தாம் தேதி முதல் ஆசிரியர் வாரம் என்று வைத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் பெருமையை மாணவர்களிடம் உணர்த்தவேண்டும். மாணவர்கள் எப்படி நடக்கவேண்டும், பள்ளி எப்படி நடத்தப்படவேண்டும் என்பதை உணர்த்த வேண்டும். நான்கு ஆசிரியர்கள் சேர்ந்து ஆசிரியர் வாரம் கொண்டாடினால் போதாது, அரிஜன விழா கொண்டாடுவது போன்று. ஒரு அரிஜன வார விழா நடப்பது யாருக்குத் தெரிகிறது? மந்திரி அவர்கள் வந்திருந்தாலும் பத்து பேர்கள் தான் கூடி இருக்கிறார்கள். இந்த வாரத்தைக் கொண்டாடுவதினால் நாட்டுக்கோ அல்லது அந்த மக்களுக்கோ ஏதாவது பலன் ஏற்படுகிறதா என்றால் பொருள் செலவைத் தவிர ஒன்றுமில்லை. அது மட்டுமல்ல ; அரிஜன வாரத்தில் யாரை அழைக்கிறார்கள்? எதிர்கட்சியிலுள்ள ஒருவரைக்கூட அழைப்பதில்லை. எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு அரிஜனங்கள் முன்னேற்ற அடையவேண்டும் என்பதில் ஆசையில்லையா? எதிர்கட்சியிலுள்ளவர்களை அழைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாஜி எம்.எல்.ஏ.-க்கள், மாஜி எம்.ஸி.-க்கள் இப்படிப்பட்ட காங்கிரஸ்காரர்களை அழைக்கிறபோது மற்றகட்சிகளின் தற்போதைய உறுப்பினர்களை ஏன் அழைப்பதில்லை? இந்த நிலைமை மாற வேண்டும். அரிஜன வாரம் என்றால் அதில் எல்லா கட்சிக்காரர்களையும் அழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது). இந்த அளவோடு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கல்வி மான்யக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். வெள்ளைக்காரன் நமது நாட்டை ஆண்டு வந்த காலத்தில் கல்வி என்பது பெரும் பணக்காரர்களுக்கும் ஒரு சில குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கும் மட்டும் பரம்பரை சொத்தாக இருந்து வந்தது. நாம் சுதந்திரம் அடைந்த பிறகு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி, கல்வி எனப்படுவது, கல்வி என்கிற சொத்தானது, இந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் சொந்தம் என்கின்ற நிலையில், இந்த நாட்டிலுள்ள குடிசையிலிருக்கின்றவர்களுக்கும் கூட கல்வி வாசனை ஏற்படக்கூடிய நிலையில் அமைந்திருக்கிறது. இந்தப் பெரும் மாற்றத்தைப் பொறுத்தவரையில், நமது தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால் இதற்குக் காரணமாக இருந்து வருகின்ற நமது அமைச்சரவையும், குறிப்பாக கல்வி இலாகாவிலுள்ள இயக்குநர்களும், மற்ற அதிகாரிகளும் பெரும் பாராட்டுதல்களுக்குரியவர்களாவார்கள். குறிப்பாக நமது கல்வி

யைப்பார்க்கும்போது, ஆரம்பக் கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, சிறப்புக் கல்வி இப்படியிருக்கின்ற எல்லாக் கல்வித்துறைகளையும் எடுத்துக்கொண்டால், நமது ஜனத்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பாகம் பள்ளிக்கூடங்களில் படித்து வருகிறார்கள். இப்படி மூன்றில் ஒரு பாகம் ஜனத்தொகை பள்ளிக்கூடங்களில் படித்து வருகின்ற காரணத்தால், கல்விக்காக பணம் ஒதுக்கும்போது, நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கியிருக்கும் 45 கோடி ரூபாய் போதாது. நமது வருவாயில் மூன்றில் ஒரு பாகம் என்ற அளவுக்கு உயர்த்தினால் நலமாக இருக்கும் என்ற கருத்தை இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆரம்பக்கல்வியை எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்து பார்த்தோமேயானால் இந்த நாட்டில் ஆரம்பக் கல்வி வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு வேகம், மற்ற மாநிலங்களிலுள்ளவர்கள் நம்மைப் பார்த்து வியக்கும் அளவுக்கு நாம் வளர்ந்திருக்கிறோம். குறிப்பாக நமது ஆரம்பக் கல்வியை எடுத்துக்கொண்டால் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்காக இருந்து வரும் கட்டடங்களை எடுத்துக் கொண்டால் பெரும்பாலும், கிராமப்புறங்களாக இருந்தாலும் சரி, நகரப்புறங்களாக இருந்தாலும் சரி, இவைகள் எல்லாம் வாடகைக் கட்டடங்களிலேயே நடைபெற்று வருகின்றன. இந்த ஒரு நிலையை மாற்றி ஆரம்பக்கல்வி நல்ல முறையில் வளருவதற்கேற்ற வகையில் —ஆரம்பக் கல்விதான் வாழ்க்கையின் அடிப்படையாக (ஃபவுண்டேஷன்) இருக்கிறது—ஆகவே இப்படிப்பட்ட கல்விக்கான கட்டடங்களை எல்லாம் அரசாங்கமே கட்டிக்கொடுக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த அளவிற்கு பஞ்சாயத்து மன்றங்களிலிருந்து பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு 4,000 ரூபாய் என்ற அளவுக்கு ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். ஆனால் நீலகிரி ஜில்லாவில் இந்தத் தொகை போதாது. அரசாங்கமே இதை ஒத்துக்கொண்டு உத்தரவு போட்டுள்ளது. அந்த முறையில் பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து கொடுக்கப்படும் தொகையை ஒன்றறை மடங்கு அளவிற்கு உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மதிய உணவுத்திட்டம். எந்த ஒரு திட்டமானாலும், நமது இந்தியா தேசத்தைப் பொறுத்தவரையில் நமது தமிழ்நாடு தான் ஒரு முன்னோடியாக இருந்து கொண்டு வருகிறது. அந்த முறையில் இன்றையதினம் 20 லட்சம் மாணவர்களுக்கு உணவு கொடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்றால் அது மிகவும் பாராட்டப்பட வேண்டிய அளவுக்கு ஏற்பட்டிருக்கின்ற ஒரு பெரும் சாதனையேயாகும். இந்தச் சமயத்தில் நமது அமைச்சர் அவர்களின் கனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இந்த மதிய உணவுக்காக கொடுக்கப்படும் அரிசியின் தரம் கொஞ்சம் குறைவாக இருந்து வருகிறது என்று சொல்லப்படுவதால், குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் இந்த மதிய உணவுக்காக நல்ல தரமான அரிசி வழங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பதாகும்.





இப்போது ஒரு புதிய திட்டத்தை இந்தப் பட்ஜெட்டில் காண்கிறோம். ஒன்று முதல் மூன்றாவது வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்களும், சிலேட்டுகளும் வழங்கப்போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான பல திட்டங்களைப்பார்த்தால் ஒரு குடும்பத்தில் தாயும் தகப்பனும் எப்படித் தங்களுடைய குழந்தைகளை கவனிக்கிறார்களோ அதைப் போலவே, அதை விடவும் சற்று அதிகப்படியாக, இந்த காங்கிரஸ் அரசாங்கம், இந்த நாட்டிலுள்ள குழந்தைகளை பார்த்துக்கொண்டு வருகிறது என்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

அடுத்தபடியாக, ஆரம்பக் கல்வி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் போதாத நிலையில் தான் இப்போதும் இருந்து கொண்டு வருகிறது. நமது முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பஞ்சப்படி உயர்வு வரும்போது அவர்களுக்கும் சிறிதளவு உயர்வு கிடைக்கும் என்றாலும் அவர்களுடைய நிலையை இன்னும் ஓரளவுக்கு உயர்த்தத்தான் வேண்டியிருக்கிறது. மத்திய கல்வி அமைச்சர் திரு. சாக்ளா அவர்கள் சொல்லியது போல—ஆரம்ப ஆசிரியர்களுக்குக் குறைந்த பட்சம் 100 ரூபாயாவது சம்பளம் நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்—அந்தக் காலம் வந்து விட்டது என்றே நான் கருதுகிறேன். நீலகிரி ஜில்லா குளிர் பிரதேசம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அங்கு கொடுக்கப்படும் ஹில் அலவன்ஸ் முன்பிருந்த நிலைமையிலேயே இருக்கிறது. இந்த ஹில் அலவன்ஸ், வீட்டு வாடகை அலவன்ஸ் இவைகளை ஆசிரியர்களுக்குச் சற்று உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பக் கல்விக்காக நாம் சுமார் 23 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். இத்தனை பெரும் செலவு செய்தும், இந்த ஆரம்பக் கல்வி யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது? தகராறுகள் நிறைந்த பஞ்சாயத்து கூட்டுமன்றங்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அது அவ்வளவு சரியானதாக இருக்குமா என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆரம்பக்கல்வி நிர்வாகத்தின் பொறுப்புகளை பஞ்சாயத்து கூட்டுமன்றங்களிடமிருந்து எடுத்துக் கொண்டால்தான், ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர்களும் அரசியல் பகடைக் கட்டைகளாக நினைத்து ஆட்டுவிப்பது நிறுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் அரசாங்கத்திற்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

பென்ஷன் வழங்கும் திட்டத்தில் குறைந்தது 20 ரூபாய் அளவிற்கு பென்ஷன் இருக்க வேண்டும் என்ற திட்டத்தை இந்த பட்ஜெட்டில் கொண்டு வந்திருக்கிறோம். நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தளவில் கெஜெட் பதிவுள்ள ஆசிரியர்களுக்கு 'வார்ம் க்ளோத்திங் அலவன்ஸ்' கொடுக்கப்பட்டு வருகிறது. இதைப் போன்று ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், உயர்நிலைக்கல்வி ஆசிரியர்கள் போன்ற பிற எல்லா ஆசிரியர்களுக்கும் கம்பளித்துணிகள் வாங்குவதற்கு இந்த அலவன்ஸ் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, உயர்நிலைக் கல்வியைப் பொறுத்தளவில், நாம் பெரிய அளவில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். நீலகிரியை எடுத்துக் கொண்டால் 1947-ல் ஐந்து உயர்நிலைப் பள்ளிகள் தான் இருந்தன. இப்போது எங்கள் மாவட்டத்தில் 40 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன என்றால், உயர்நிலைக் கல்வி எவ்வளவு வேகத்தில் வளர்நது வருகிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இவ்வளவு பெரிய அளவில் பல முன்னேற்றங்கள் கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கின்றன. இதில் ஒன்று, சமீபத்தில் பத்திரிகையில் பார்த்தேன், மதிப்புமிக்க கைத்தொழில் அமைச்சர் அவர்கள் மேல் சபையில் கூறியதாக—அதாவது எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் இரண்டு ஆண்டுகள் தோற்றால் 30 ரூபாய் அபராதம் போடவேண்டும் என்று சொல்லியிருப்பதாகக் கண்டிருந்தது. இது நல்ல திட்டம் தான். ஆனால் முன்பெல்லாம் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை எழுதுவதற்கு முன்னால் பள்ளிக்கூடத்தில் செலெக்ஷன் பரீட்சை இருந்தது. அப்போது மாணவர்கள் செலெக்ஷன் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அக்கறை கொண்டு விழுந்து, விழுந்து படிப்பார்கள். ஆசிரியர்களும் நல்ல கவனம் செலுத்துவார்கள். எப்படியாவது செலெக்ஷனில் தேறவேண்டும் என்ற அச்சம் இருந்து வந்தது. இப்போது அத்தகைய அச்சம் மாணவர்களிடையே காணவில்லை என்பதை எல்லாப் பெற்றோர்களும் அறிவார்கள். அந்த நிலையில் அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர ஆசைப்படுவது, முன்பிருந்த செலெக்ஷன் பரீட்சையை இப்போதும் கொண்டு வருவதற்கு வழி செய்ய வேண்டும் என்பதாகும்.

அடுத்தபடியாக, கல்லூரிப் படிப்பைப் பொறுத்தமட்டில், நீலகிரி ஜில்லாவில் கல்லூரியில் 1,000 மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு 25 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டது. அதில் இப்போது இரண்டு கட்டடங்கள் முடியும் தறுவாயில் இருக்கின்றன. மூன்றாவது கட்டடம் கட்டுவதற்கும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. முக்கியமாக அங்கே ஹாஸ்டல் வசதியில்லாத காரணத்தால் மாணவர்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். இதனால் பல மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஸ்காலர்ஷிப் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே அங்கு ஹாஸ்டல் கட்டுவதற்கு உடனடியாக ஏதாவது வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போஸ்ட் கிராஜுவேட் படிப்புக்கு—அதாவது எம்.ஏ., எம்.எஸ்.ஸி. போன்ற பட்டப்படிப்புக்கும் இந்த ஆண்டிலேயே வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த சோஷல் ஸ்டடீஸ் பற்றிச் சில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பி.யூ.ஸி.-யில் விஞ்ஞானப் பாடப் பிரிவில் சேர, கணக்கில் 40 சத விகிதம், விஞ்ஞானப் பாடத்தில் 40 சத விகிதம் இருக்கவேண்டும் என்று கூறியிருப்பது சரி. ஆனால் பத்திரிக்கைகளில் சோஷல் ஸ்டடீஸில் கூட 35 சத விகிதம் வாங்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.





இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படு 11-00 a.m.
கிறேன். அதோடு சோஷல் ஸ்டடீஸை இரண்டாகப் பிரித்து, ஹிஸ்டரி, ஜியாகாரஃபி என்று போடவேண்டுமென்று மன்றத்தில் வற்புறுத்தி வந்திருக்கிறோம். அந்த முறையில் அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கல்வி மான்யக் கோரிக்கையை வரவேற்கிறேன்.

சுதந்திரத்திற்கு முன்பு கல்வித் துறைக்கு நாம் செலவிட்ட தொகையையும், இப்போது செலவு செய்கிற தொகையையும் எண்ணிப் பார்த்தால், அப்போது கலால் வருமானத் தொகையோடு இணைந்து, கலால் வருமானத்திற்கு ஏற்ப அதிகரித்துக் கொண்டு இருந்தாலும் மொத்தவருமானத்தில் 16-ல் ஒரு பாகம் தான் செலவிடப்பட்டிருக்கிறது என்று புள்ளிவிவரத்திலிருந்து தெரியும். இன்றைய தினம் மாநிலத்தின் நிதி அளவில் 4-ல் ஒரு பாகம் செலவிடப்படுகிறது. அந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்து வருகிறது என்று அறிகிறோம்.

இந்த ஆண்டு அறிக்கையில் இன்னும் சில விசேஷ அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன நாடகக் கலைச் சங்கங்கள், லலித கலா அகாடமி போன்ற விவரங்கள் கூட இந்த ஆண்டு குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சில புதிய அம்சங்கள், ஒன்றாவது வகுப்பிலிருந்து மூன்றாவது வகுப்பு வரையில், கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம், 750 ஆசிரியைகளுக்கு வீடு கட்டும் திட்டம்—இதெல்லாம் சிறந்த அம்சங்கள். 7-வது வகுப்புக்குத் தமிழ், ஆங்கிலப் பாடப் புத்தகங்கள் சர்க்கார் தரப்பிலேயே வெளியிடுவது, அதற்கென்று தனியாக ஒரு அச்சகம்—இதெல்லாம் கூட சிறந்த அம்சங்கள்.

இன்னும் நாம் பார்க்கிற போது, ஆசிரியர்கள் நியமனம் திட்டமிட்ட படி தான் செய்யப்படுகிறது. வருஷாவருஷம் இவ்வளவு ஆசிரியர்கள் வருகிறார்கள், இவ்வளவு பேர்களைப் போடுகிறார்கள் என்று திட்டம் இருந்தாலும், திட்டத்திலே ஏதாவது சிரமம் இருக்கிறதா, அல்லது திட்டத்திலே கோளாறு இருக்கிறதா என்று நான் நினைப்பது உண்டு. திருநெல்வேலி ஜில்லாவிலே சென்ற ஆண்டிலே எடுத்த கணக்குப்படி 1,100 பயிற்சி பெற்றவர்கள், பதிவு செய்து கொண்டவர்கள் வருஷக் கணக்காக வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆசிரியர்கள் போதவில்லை என்று டிரைனிங் ஸ்கூல்களை வைத்துக்கொண்டிருப்பது ஒரு புறம், மறு புறத்தில் இந்த மாதிரி வேலைக்குப் பதிவு செய்துகொண்டாலும் வேலை கிடைக்காமல் இருப்பது என்றால், இதற்கு என்ன காரணம் என்று யோசிக்க வேண்டும். சென்ற ஆண்டு திட்டப்படி ஆசிரியர்கள் நியமனம்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [7th March 1966

நடைபெறவில்லை என்று கருதுகிறேன். இதைப் பூர்ணமாக யோசித்து எந்த அளவுக்குப் பரிகாரம் காண முடியும் என்று யோசிக்கவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது திட்ட காலம் முழுவதிலும் ஹைஸ்கூல் வகுப்புகளில் 75,000 குழந்தைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி தெரிகிறது. வருகிற ஆண்டில் மாத்திரம் அதே வகுப்பு களில் 80,000 பிள்ளைகளைக் கூடுதலாகச் சேர்த்துக்கொண்டு கல்வி கொடுக்கப்படும் என்று சொல்லும்போது நமது மாநிலத்தில் கல்வி எத்தகைய வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பது பெருமைக்கு உரியது.

இந்த ஆண்டு ஆறு கல்லூரிகள் புதிதாக ஏற்படுத்துவதற்கு வழி செய்யப்படுகிறது. நான் துருவித்துருவிப் பார்த்தேன். திருநெல்வேலியில் ஏதாவது இருக்குமா என்று. திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு மாதத்திற்கு முன் கல்லிக்குளம் என்ற இடத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் ஒரு கல்லூரிக்கு அஸ்திவாரம் இட்டார்கள்; கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஒரு லட்சம் ரூபாய் அந்தக் கல்லூரிக்கு நன்கொடை கொடுப்பதாக திரு. சிவாஜி கணேசன் அவர்கள் அறிவித்தார்கள். மக்களும் ஆர்வம் காட்டி அதை இந்த ஆண்டே கொண்டுவரவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரி இதிலே ஏன் இடம் பெறவில்லை என்று புரிந்து கொள்ள முடியவில்லை. இதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலிடெக்னிக்குகள் அமைப்பது வரவேற்கத் தகுந்தது. 20 பாலிடெக்னிக்குகளுக்குத் திட்டமிட்டார்கள். மூன்றாவது திட்டத்தில் 20 ஜூனியர் பாலிடெக்னிக்களுக்குத் திட்டமிட்டதில் ஆறு முடியாமல் போய்விட்டன. 14 நிறைவேறியிருக்கின்றன. வருகிற ஆண்டில் மீதி 6-ஐயும் நிறைவேற்றத் திட்டமிட்டிருக்கிறார் கள். நான் பார்க்கிறேன், எங்கெல்லாம் பாலிடெக்னிக்குகள் இருக் கின்றனவோ அவைகளை இணைத்து ஜூனியர் பாலிடெக்னிக்குகள் கொடுக்கப் படுகின்றன. பாலிடெக்னிக் இல்லாத பகுதிகளில் அமைப்பதிலே என்ன கஷ்டம் இருக்கிறது என்று தெரியவில்லை. அந்த மாதிரி அமைத்தால் பல பகுதிகளுக்கு வசதி செய்து கொடுக்கலாம். சில காலத்திற்கு முன் நாஸரத்தில் பாலிடெக்னிக் இருந்தது எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்திலே திருநெல் வேலிக்கு சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிற இஞ்சினியரிங் கல்லூரி அமைக்கப்படுமா, அதற்காக வகை செய்யப்படுமா, அந்த நிலம், கட்டடம், பணம் ஆகியவைகளை மானியமாக வைத்துக் கொண்டு அந்தக் கல்லூரியை அங்கே ஏன் ஆரம்பிக்கக் கூடாது என்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதோடு பெண்கள் பாலிடெக்னிக் ஜூனியர் பாலிடெக்னிக் ஏதாவது திருச்செந்தூருக்குக் கொடுக்க முடியாதா என்றும் யோசிக்கலாம்.

கல்வியின் தரத்தை வளர்க்க 'காட்ஃபாதர் ஸ்கீம்'—ஞானத் தந்தைத் திட்டம்—என்று பிரஸ்தாபிக்கப்பட்டது, அது நல்ல



7th March 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

திட்டம். ஆனால் அது நடை முறையில் கொண்டுவரப்படாமல் இருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கம் தீவிரமாக யோசிக் கலாம.

சில இடங்களில் செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஹையர் கிரேட் சம்பளத்தில் இருக்கும் நிர்ப்பந்தம் இருக்கிறது. இப்போது மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் போதிக்க வசதி செய்திருக்கிறோம். மூன்றாவது வகுப்பிலிருந்தே ஒவ்வொரு செக்ஷனுக்கும் செகண்டரி கிரேட் ஆசிரியர் கொடுப்பது என்பது இந்தக் குறையைப் போக்காதா என்று யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப் போலவே, ஆசிரியர்களுக்கு 20 ரூபாய் குறைந்த பட்சப் பென்ஷன் என்று திட்டமிட்டிருப்பது சந்தோஷமானது. டி.பி.ஃஎப். முடிவு செய்வதிலே காலதாமதம் ஏற்படுகிறது. கடன் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படுகிறது. 1-ம் தேதி அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று திட்டமிட்டிருந்தாலும், 20-ம் தேதியிலே கணக்கை எல்லாம் முடிவு செய்துவிட்டாலும், 1-ம் தேதி கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் குறைபாட்டை நீக்க முடியுமா என்று பார்க்கவேண்டும்.

இந்தத் திட்டத்தில், என்.ஜீ.ஓ.-க்களைப் போல ஆசிரியர்க ளுக்கும் ஏதாவது நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்த் தார்கள். சரச விலையில் சாமான்கள் கொடுக்க ஏற்பாடு செய்ய லாம். திருச்செந்தூரில் தாலுகா ஆசிரியர்கள் யூனியன் இருக் கிறது. நன்கு இயங்கிவருகிறது. ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தாலுகா ஆசிரியர்கள் கூட்டுறவு சங்கம் அமைக் கலாம். யூனியன் கூட்டத்திற்குப் போகிற போது ஸ்டேஷனரி முதற்கொண்டு தேவையான பொருள்களை அந்த இடத்திலேயே வழங்கலாம். பரீட்சார்த்தமாகக் கூட இந்த இடத்தில் அமைக்க வினியோகம் செய்ய முடியும். பங்குத்தொகையை மானியமாக வழங்கலாம், பரீட்சார்த்தமாகக் கூட இந்த இடத்தில் அமைக்க முடியும் என்றால் அதைத் தீவிரமாகப் பரிசீலிப்பதன் மூலமாக நல்ல முடிவு எடுத்தால் நமது ராஜ்யத்தில் இருக்கிற ஆசிரியர் களுக்கு வசதி செய்துகொடுக்க முடியும் என்று நினைக்கிறேன். இந்தத் திட்டத்தில் ஒரு பரிகாரம் கண்டு விட்டோம் என்றால் மற்ற இடங்களுக்குக் கூட உதவி கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு ஹைஸ்கூலில் இலவசக் கல்விக்கு வசதி செய்யப்பட்டிருந்தது. இப்போது எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி என்று ஆகி விட்டது. நான் காவது திட்டத்தில் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கல்லூரி வரையில் இலவசக் கல்வி கொடுக்க முடியும் என்று நினைக்கிறேன். அதை இந்த அரசாங்கம் செய்ய முடியும் என்று நான் நினைக் கிறேன். இந்த ஆண்டிலேயே ஆரம்பமாக ஆசிரியர்களின் குழந் தைகளுக்கு கல்லூரிப் படிப்புக்கு உதவி செய்வதைப் பற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [7th March 1966

அதைப்போலவே, தரத்தை உயர்த்தும் நோக்கத்திலே, 5-வது வகுப்பிலே கூட பொதுப் பரீட்சை நடத்தலாம். குறைந்தபட்சம் 6-வது வகுப்பிலாவது ஈ.எஸ்.எல்.ஸி. இருந்தது போல வைத்து வடிகட்டுவது போல வைத்தால் நல்ல நிலை ஏற்படும் என்று மக்கள் நம்புகிறார்கள், நான் நம்புகிறேன்.

மெயின்டினன்ஸ் கிராண்ட் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று ஒரு அங்கத்தினர் தெரிவித்தார். கூடுதல் கொடுப்பதுடன், கொடுக்கின்ற தொகையும் எந்தக் குறிப்பிட்ட காரியத்திற்காகக் கொடுக்கப்படுகிறது, கொடுத்தவகைக்கு முறையாக செலவிடப்படுகிறதா என்று இன்னும் ஜாக்கிரதையாகக் கண்காணிப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

இன்றைய தினம் ஆசிரியர்களுக்கு நேரடியாக டி.பி.எஃப்.-க்கு மானேஜ்மெண்ட் பங்குத் தொகையை அரசாங்கமே கொடுத்துக் கொண்டிருக்கிறது. கூடுதலாக ஆசிரியர்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்றால் அதற்கு உரிய தொகையை அரசாங்கம் ஏற்றுக் கொடுக்க முடியுமானால் அவர்களை உற்சாகப்படுத்துவதாக இருக்கும். அவர்களுக்கும் அதிகமாகச் சேர்க்க வசதி செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் பஞ்சாயத்துத் தலைவர்களிடத்திலோ அல்லது ஒரு குழுவினிடத்திலோ நிர்வாகப் பொறுப்பைக் கொடுத்துவிடலாம் என்பது என் எண்ணம். ஆசிரியர்கள் பொறுப்பில் இருக்கிறது என்றால் அவர்களுடைய பண்பைப் பாதிக்கும் நிலையில் இருக்கிறது. ஆசிரியர்கள் தவறான கணக்குகளை எழுதும் நிர்ப்பந்தம் வருகிறது. பஞ்சாயத்துக்கள் சில சமயங்களில் கொடுப்பதில்லை. பஞ்சாயத்துக்கள் கட்டாயம் கொடுக்கவேண்டும் என்று சட்டமாவது செய்து விடவேண்டும். மக்களிடத்திலே சென்று சேர்ப்பது கூட கஷ்டமாக இருக்கிறது. எப்படியாகிலும் கணக்குக் காட்டவேண்டும் என்பதால் தவறு செய்யச் சந்தர்ப்பம் இருக்கிறது. இந்தச் சங்கடத்தைத் தீர்க்க வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகளுக்கு வழங்கக்கூடிய சீருடைத் திட்டம் இந்த ராஜ்யம் மிகவும் பெருமைப்படக்கூடிய திட்டம். இந்தத் திட்டத்தை அமல்படுத்துவது ஒருபுறமிருக்க ஒவ்வொரு ஜில்லாவிற்கும், ஒவ்வொரு தாலுகாவிற்கும் தனித்தனியாக இன்னென்ன துணிகள் குழந்தைகளுக்குக் கொடுப்பது என்று ஒதுக்குவதன் மூலம், பாதித் தொகைக்கு, சப்ஸிடைஸ்டு ரேட்டுக்கு, துணிகளைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கு முடியுமா, அந்த அளவுக்கு அரசாங்கம் தங்களுடைய பங்கை செலுத்த முடியுமா என்பதைப் பற்றி தீர்க்கமாக ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நூல் நிலையத்தைப் பொறுத்தவரையில் சமீபத்தில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. நூல்நிலையத்தைப்பற்றி கனிமாரா லைப்ரரியில் பயிற்சி கொடுப்பது மிகவும் வரவேற்கத் தகுந்த திட்டம்.



7th March 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

ஹைஸ்கூல்கள் ரூ. 70,000 என்டௌமெண்டு கட்டவேண்டும் என்று இருப்பது அதிகம் என்று நான் கருதுகிறேன். நான் சமீபத்தில் குஜராத்தில் பார்த்திருக்கிறேன். கல்லூரிக்குக் கூட எந்தவிதமான என்டௌமெண்டும் கட்டவேண்டும் என்ற திட்டம் அங்கு இல்லை. கல்லூரிகளை தனியார் கமிட்டியே நிர்வகித்து வருவதற்கு அங்கு வசதிகள் செய்வதற்கு முடிகிறது. கமிட்டி நிர்வாகத்தினிடம் நம்பிக்கை வைப்பதில் தவறு இல்லை. தனியார் துறையிலே செய்துகொண்டு வந்தாலும், நல்ல காரியங்கள் தாராளமாகச் செய்வதற்கு முடியும், அதற்கு வேண்டிய வழிவகைகள் செய்ய முடியும் என்று நான் கருதுகிறேன். இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் அதிகமாகப் பணம் ஒதுக்கி, என்டௌமெண்டு கட்டவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாமல் செய்து, உதவி புரியவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி:** கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கல்வி மான்யக்கோரிக்கையின் பேரில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையை ஆங்கிலத்திலும் வாசித்தேன், தமிழிலும் வாசித்தேன். 'தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பரிசு' என்ற தலைப்பில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் திறமை வாய்ந்த பணியை மெச்சி, அரசாங்கம் பரிசு வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் ஒரு சந்தேகம், ரூ. 230 மதிப்புள்ள வெள்ளி மெடல் பரிசாகக் கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரூ. 230 மதிப்புள்ள வெள்ளியில் எப்படி மெடல் செய்ய முடியும்? அப்படியிருந்தாலும் அந்த வெள்ளி மெடலை எப்படி அணிய முடியும் என்ற ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களுக்கு ஓய்வுச் சம்பளம் குறைந்தபட்சம் ரூ. 20 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தச் சலுகை காலம் கடந்து தரப்பட்டாலும் கூட பாராட்டத்தக்கது. இதை முன்னமே செய்திருக்க வேண்டியது. அதே நேரத்தில் 1955-ம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகை இல்லை. 1955-ம் ஆண்டுக்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகத்தான் இருக்கும். அவர்களுக்கு இப்பொழுது வயது சுமார் 70 ஆகியிருக்கலாம். அவர்களுக்கும் இந்தச் சலுகையைக் கொடுக்க முன்வந்தால் நன்றாக இருக்கும் என்ற எனது கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது 60 என்று தனியார் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் தனியார் பள்ளி ஆசிரியர்கள் மிகவும் குறைவு. கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தான் அதிகமாக உள்ளார்கள். அவர்கள் ஓய்வு பெறும் வயதையும் 60-க்கு உயர்த்தினால் கிராமங்களில் ஆசிரியர்கள் பணியாற்ற முன்வருவார்கள். ஆசிரியர்கள் பற்றாக்குறை நீங்கும் என்பது என்னுடைய கருத்து. அதையும் அமைச்சர் அவர்களிடம் சொல்லிக்கொள்ளு

[திரு. வி. எஸ். எஸ். மணி] [7th March 1966

கிறேன். தொடக்கப் பள்ளிகளில் தமிழ் கல்வியின் தரத்தை உயர்த்த ஆறாவது வகுப்பில் நான்கு பிரிவுக்கு மேலே உள்ள பள்ளிகளில் தனியாக தமிழ் பண்டிதர்களை நியமித்தல் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆறாவது வகுப்பில் நான்கு பிரிவுகள் இருக்கக்கூடிய பள்ளிகள் எல்லா ஊர்களிலும் இருக்க முடியாது. பெரிய நகரங்களில் குறிப்பிட்ட சில பெரிய பள்ளிகளில் தான் ஆறாவது வகுப்பில் நான்கு பிரிவுகளுக்கு மேல் இருக்கும். மற்றபடி கிராமாந்திரங்களில் உள்ள பள்ளிகளில் ஆறாவது வகுப்பில் நான்கு பிரிவுகள் இல்லாத நிலைமையில் தமிழ் பண்டிதர்கள் நியமிப்பதில்லை என்றால், தமிழ் தரம் எப்படி உயரும். 6, 7, 8 வகுப்புகள் பூர்த்தியாக இருக்கும் உயர்நிலைப் பள்ளிகளில் தனியாக தமிழ் பண்டிதர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நூலக (Library) வசதிக்காக ரூ. 25 ஒவ்வொரு உயர் ஆரம்ப பள்ளிக்கும் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அம்மாதிரி கொடுக்கப்படும் பள்ளிகளின் எண்ணிக்கை 4,000. 18,000 ஆரம்பப்பள்ளிகளுக்கு ரூ. 15 வீதம் நூலக வசதிக்காக கொடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொடக்கப் பள்ளி ஆரம்பத்திலேயே மாணவர்களுக்கு புத்தகங்களை படிக்கும் பழக்கத்தை உண்டாக்குவது சாலச்சிறந்தது. ரூ. 25-க்கு என்ன புத்தகங்கள் வாங்கமுடியும் என்று நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும்? ரூ. 15-க்கு என்ன புத்தகங்கள் வாங்க முடியும்? ரூ. 15 அல்லது 25-க்கு புத்தகங்கள் வாங்கிவைத்துவிட்டால், நூலகம் என்று அதை சொல்ல முடியுமா? இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த 'லைப்ரரி கிராண்டு', அதாவது நூலகத்திற்காகக் கொடுக்கப்படும் பண உதவி 10 மடங்காக உயர்த்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நிதி வசதிக் குறைவினால் அவ்விதம் செய்ய முடியாவிட்டாலும், ஒரு 'பேஸ்டு ப்ரோகிராம்' (Phased Programme) போட்டு, 10 ஆண்டுகளில் இம்மாதிரி அமைப்பு ஏற்படுத்த வேண்டும். இம்மாதிரி நூலகம் நிறுவவேண்டும் என்று ஒரு திட்டம் போட்டுக்கொண்டு, 10 ஆண்டுகளில் எல்லா பள்ளிகளிலும் பூரணமான ஒரு நூலகம் அமைக்கவேண்டும். அதற்குத் தகுந்தபடி திட்டம் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கும் திட்டம் கொண்டுவந்தது பாராட்டத்தக்கது. அதனால் தனியார் பள்ளிகளை நடத்தும் நிர்வாகத்தினருக்கு பெரிதும் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. நமது நாட்டில் கல்வித் தரம் உயர்ந்ததற்கு முக்கிய காரணம் தனியார் பள்ளிகளின் சேவை தான். தனியார் பள்ளிகளை செவ்வனே நிர்வாகம் செய்யாமல் இருந்தால், நமது நாட்டில் கல்வியின் தரம் இவ்வளவு தூரம் உயர்ந்திருக்காது. ஆகவே, அவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அதற்குத் தகுந்த பரிகாரம் ஏதாவது செய்து கொடுக்க வேண்டும்.



7th March 1966] [திரு. வி. எஸ். எஸ். மணி]

கடைசியாக, 'கிராண்டு-இன்-எய்டு கோட்' தளர்த்தப்படவேண்டும். கட்டடங்கள் கட்டுவதற்கும், விஞ்ஞானக் கல்வி சம்பந்தமாகச் சாதனங்கள் வாங்குவதற்கும் ஏற்படும் செலவில் 50 சதவிகிதம் அரசாங்கமும் 50 சதவிகிதம் தனியார் நிர்வாகத்தினரும் கொடுக்கவேண்டும் என்ற விதி இருக்கிறது. இன்றைய நிலையில் அந்த விதியை தளர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 75 சதவிகிதம் அரசாங்கமும், 25 சதவிகிதம் தனியார் நிர்வாகமும் கொடுத்தால் போதும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தி அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே,

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்ற வள்ளுவரின் கோட்பாடுக்கு இணங்க, பெரும் பழியினின்றும் தப்புவதற்காக, நன்றிப் பெருக்குடன் இந்தக் கல்வி மான்யக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன்.

'தெய்வ மணம் கமழும் திருமேனி' என்று தெய்வ மணம் கமழ்வதைப்பற்றி குமாரகுரு அடிகளாரும், தென்றல் வீசுதல் பற்றி, தென்றல் மணம் கமழுதல் பற்றி

'வண்டொடு புக்க மணம் வாய்த் தென்றல் கண்டு
மகிழ்வெய்தி'

என்று இளங்கோவடிகளும், தமிழ் மணம் கமழ்வதுபற்றி தமிழ் விடு தூது என்ற இலக்கிய நூலிலும், அருளை பழுத்த சிவதருவின் அருள் மணம் கமழ்வது பற்றி ராமலிங்க அடிகளும் கூறியவாறு நான் இன்று கூறுகின்றேன், தமிழகத்தில் இன்று கல்வி மணம் கமழ்கிறது என்று. கல்வி மணம் கமழ்வதைப் பார்க்கும்பொழுது நான் பெற்ற அந்த நுகர்ச்சியை இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நேற்று மாலையிலே இந்தக் கல்வி மான்யக் கோரிக்கைச் சம்பந்தமான அறிக்கையை நான் படித்துக்கொண்டிருந்தேன். படித்துக் கொண்டிக்கும் பொழுது ஏதோ ஒரு இடத்திலே மெய் மயிர் சிலிர்க்கின்ற ஒரு நிலைக்கு நான் வந்தேன்.

'கண்ட கண்கள் களி கூற
களிப்பால் உள்ளம் களர் [illegible]
விண்ட மொழியும் நாக்குளர
விம்மி மேனி மயிர் பொடிப்ப'

என்பது போல் ஒரு பரவச நிலையை அடைந்தேன். அதற்கு என்ன காரணம் என்று நான் பிற்பாடு ஆராய்ந்தேன். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற தொன்மையாக வருகின்ற மரபு பற்றி தமிழகத்துச் சிற்றூர்கள் தோறும் விநாயகக் கடவுளுக்கு ஆலயம் சமைத்து, வழிபாடு ஆற்றுகின்ற ஒரு நிலையை நாம் காண்கிறோம். அதே போல, வெள்ளைக் கலையுடுத்தி, வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக்கமலத்தில் வீற்றிருக்கும், "தவளத்தா

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [7th March 1966

மரைத் தாதார்கோயில் அவளைப்போற்றுவதும் அருந்தமிழ் குறித்தே" என்று புறப்பொருள் வேண்பா மாலையில் கூறிய வண்ணம், அந்தக் கலைமகளுக்கு தமிழகத்துச் சிற்றூர்கள் தோறும் கோயில்கள் அமைத்து,

ஈறு இரண்டு இரட்டி, நல்லியாண்டு ஆறினில்
கழிப்பிய அறம் நவில் கொள்கை,

என்று ஆற்றுப்படையில் கூறிப் போந்த வண்ணம், பாலப் பருவம் நீங்காத போதே சிறுவர், சிறுமியர் கலைமகளின் வழிபாடு ஆற்றும் காட்சியினைத் தமிழகத்தில் காணுகின்ற வாய்ப்பினை நினைந்ததும், ரோமஞ்சலி ஏற்பட்டது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஞான சம்பந்தப் பெருமான்,

'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே'
'இருங்கடல் வைத்துள், ஆதரித்தும் போற்
றியும், வழிபடும் அதனாலே'

என்று குறிப்பிட்டது போது, இளங்கோவடிகள், தீவலம் செய்வது, காண்பார் கண் நோன்பென்னை என்றது போலும், இந்த வாய்ப்பு கிடைத்ததற்கு நாம் ஈட்டிய தவந்தான் என்னே என்ற நினைவின் நிலையில் அந்த மாதிரி உள்ள நெகிழ்வு ஏற்பட்டது என்பதனை கூறி கொள்ளுகிறேன். இந்தப் பெரிய வாய்ப்பினை, இந்தப் பெரிய நிலையை ஏற்படுத்திக் கொடுத்ததற்கு, இந்த அமைச்சரவைக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும், கல்வி இலாகாவினருக்கும், என் மனங்கனிந்த நல்வாழ்த்துக்களைச் சொல்லிக் கொண்டு, தமிழ் மக்கள் சார்பாக என் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (குறுக்கீடு) ஆம், பாயிரம் முடிந்தது. இனிமேல் நூல் வரும்.

கல்வி நிலை பற்றி இரண்டு நிலைகளைக் கூற விரும்புகிறேன். சோஷலிசம் அல்லது சமதர்ம சமுதாயம் என்று சொல்லுகின்றோம். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரசாங்கம், காங்கிரஸ் மகாசபையின் சார்பாக, சமதர்ம சமுதாயத்தின் அடிப் படையை, அப்படிப்பட்ட சமுதாயம் ஏற்படக்கூடிய சூழ்நிலையை, கல்வியின் வாயிலாக தமிழகத்தில் அமைத்துவருகின்றது, அமைத்துவிட்டது என்பதைக் காண்கின்றோம்.

புறநானூற்றில் கூறியிருக்கிறது:

"வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,
கீழ்ப்பால் ஒருவன் கற்பின், மேற்பால் ஒருவனும் விரும்பும்

வர்ணாசிரம தர்மம்" என்று இருந்தது—இப்பொழுது கூடக் கொஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது. கீழ் பக்கத்தில் உள்ள ஒருவன் படித்துவிட்டான் என்றால், மேற்பால் என்று சொல்லக் கூடிய வருணத்தில் உள்ளவனும் விரும்பி அவனை ஏற்றுக்கொள்வான் என்று சொல்லப் பெற்று இருக்கிறது. "அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்" என்று ஔவையார் கூறிப் போந்தார். ஆகவே, சமதர்ம சமுதாயத்தை கல்வி வாயிலாக நிச்சயம் இந்த அரசாங்கம் அமைத்து விட்டது என்பதைக் காண்கிறோம், அந்தப்



7th March 1966] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

பெருவாய்ப்புக் குறித்து மறுத்துக் கூறவோ, மறைத்துக் கூறவோ யாராலும் முடியாது. அப்படிப் பாந்த வல்லமையோடு கூடிய ஒரு நல்லாட்சியை மறைப்பது எப்படி? "விண்ணியங்கும் ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்" என்பது ஒரு பாடல். வானத்தில் இயங்கும் சூரியனை தன்னுடைய கையை நீட்டி மறைத்துவிட முடியுமா? தன்னுடைய முகத்தை வேண்டுமானால் மறைத்துக் கொள்ளலாம். ஆகவே கல்வி வாயிலாக ஏற்படுத்திக் கொடுத்து இருக்கும் வாய்ப்புகளை மறைத்துக்கூற யாராலும் முடியாது. குறைபாடுகள் இருக்கலாம், கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அது வேறு. அதைச் சொல்லப் புகவில்லைதான். ஆக இந்த நல்லாட்சியானது, கல்வி வாயிலாக சமதர்ம சமுதாயத்தை இந்தத் தமிழகத்தில் நிச்சயமாக ஏற்படுத்திவிட்டது என்பதனை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கு மேலும் ஆட்சி மொழி பற்றிய என்னுடைய கருத்து என்ன என்று விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். பயிற்சி மொழி மூன்று என்றும், ஆட்சி மொழி இரண்டு என்றும், கனம் முதல் அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பிறகு தமிழகத்து சிறுவர்களுக்கு தமிழைக் கற்கும் ஆர்வம் குறைந்திருக்கிறது என்று புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னதில் வேறுபாடே கிடையாது. மாநில ஆட்சி மொழி தமிழ் தான். தமிழகத்தில் ஆட்சிமொழி தமிழ் என்பதில் வேறுபாடே கிடையாது. அது முடிவு. மத்திய ஆட்சி மொழி இந்தி. ஆங்கிலமா, இந்தியா என்கிற வாதமே கிடையாது. இந்திதான் ஆட்சிமொழி என்பதும் உறுதி செய்தாகிவிட்டது. ஆனால், இந்தி தெரியாத மாநிலங்களில் உள்ள மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். என்றைக்கு இருந்தாலும் ஒரு நாள், இந்தி ஆட்சி மொழியாக வரும்போது, ஆங்கிலம் ஒழியத்தான் போகிறது. அப்பொழுது, இந்தியும் தமிழும் இரண்டு ஆட்சிமொழியாக இருக்கும். இப்பொழுது ஆங்கிலமும், தமிழும் தமிழகத்து மக்கள் இந்திப் பயிற்சி பெறும் வரையில், நாம் ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லும் வரையில், மாநிலத்து ஆட்சி மொழி தமிழாகவும், இந்திய ஆட்சி மொழி ஆங்கிலமாகவும் இருக்கும். அதில் வேறுபாடே கிடையாது. அது உறுதி, அது முடிவு. ஆங்கிலமும், இந்தியும், தமிழும் ஆக மூன்று பயிற்சி மொழியும் இருக்கும். ஆட்சி மொழி சம்பந்தப் பட்டவரை மத்திய ஆட்சி, மாநில ஆட்சி மொழி, ஆக இரண்டும் இருக்கும். ஆகவே, புலவர் கோவிந்தன் சொல்லுவதில் வேறுபாடு இல்லை. இதை மாணவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நாம்தான் புரிந்து கொள்ளவேண்டும். மாணவர்கள் விரும்பி ஆங்கிலத்தைப் படிக்கிறார்கள். தமிழைப் படிக்கிறார்கள். இதெல்லாம் வரவேற்கத் தக்க நிலைமைகள். தமிழை மட்டும் கற்றுக் கொண்டால், அவர்கள் பணி தமிழ் நாட்டோடு சரி. அண்டை மாநிலங்களுக்கோ அல்லது மத்திய ஆட்சிக்கோ செல்ல வேண்டும் என்றால் வழி கிடையாது. ஆகவே, ஆங்கிலத்தையும் இந்தியையும் படித்தாக வேண்டும். ஆங்கிலம் இருக்கும் வரை அது இருக்கும். அதன் பிறகு இந்தி. ஆகவே, ஆட்சி மொழி மாநில ஆட்சி ஒன்று, மத்திய ஆட்சி மொழி.

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [7th March 1966

ஒன்று; ஆக இரண்டு. அதே சமயத்தில் பயிலும் மொழிகள் மூன்று. அதிலே எந்த விதமான தப்பு அபிப்பிராயமும் ஏற்பட நியாயம் இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தக் கல்வி மான்யத்தை வரவேற்பதுடன், இந்த நல்ல வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்த, இந்த அமைச்சரவைக்கும், முதல் அமைச்சருக்கும்; கல்வி இலாகாவினருக்கும், அருள்கலந்த நல்வாழ்த்துக்களைக் கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

11-30 a.m. * SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Deputy Speaker, Sir, I would like to say a few words on the Education Demand which is before the House for discussion to-day. It is gratifying to note that sufficient allocation has been made in the budget for Education in the State. I would like to deal with primary and secondary education.

As far as primary education is concerned, the schools that are being maintained by panchayat unions are being geared up to just get the standard. The administration at the panchayat union level as far as managerial services are concerned and at the level of the Deputy Inspector of Schools is not in a satisfactory condition. There is no co-ordination between the Extension Officer for Education and the Deputy Inspector of Schools at the panchayat union level. Whenever certain technical matters have to be decided by the panchayat union, the Deputy Inspector is not consulted. The Deputy Inspector of Schools does not co-operate at that level. To-day we see at the district and taluk levels the Education Department feeling as though it is being neglected or is not being consulted and at the same time it is not magnanimous enough to co-operate with the panchayat union in formulating and implementing schemes properly. I would only suggest that the posts of Deputy Inspectors of Schools be brought within the panchayat union set-up and the officers made responsible to the panchayat unions.

We have entrusted secondary education, which was looked after by the district boards, to the control of Special District Edutional Officers. I do not see why both the administrative and the technical sides should be entrusted to them. There may be Divisional Inspectors of Schools who may control them. We have opened so many high schools. It is for consideration whether it would not be desirable to entrust the entire field of administration to the Special District Educational Officers. It may also be considered whether District Development Councils could not function as advisory bodies and whether chairman could not be appointed to control secondary education which was hitherto looked after by the district boards.

Regarding high school and elementary school buildings, much headway has not been made in the construction of elementary school buildings in the panchayat unions. Matching grants have been provided for secondary education. For construction of high school buildings, panchayat unions can contribute from the gene-



7th March 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

ral funds ignoring the need for construction of elementary school buildings. Wherever we have opened high schools, there are some important persons and they are able to get contribution from the panchayat unions for high school buildings and elementary school buildings are being neglected. For an elementary school building estimated to cost Rs. 10,000, the Government give a grant of only Rs. 4,000. The panchayat union is not able to make up the balance and elementary school buildings are not constructed. I request the Government to make the panchayat unions responsible for the construction of elementary school buildings. Only if excess funds are available after meeting the needs of elementary school buildings, they should contribute towards the construction of high school buildings.

Regarding University education, I would suggest to the Government that more facilities for research should be provided in the Madras University, because the number of doctors in the diffierent fields that the Madras University is producing is definitely less compared to other States.

Coming to my constituency, the Tiruttani Devasthanam has agreed to give sufficient funds for starting a college. The question of starting a college may be considered.

Regarding the teachers who have been transferred from the Andhra Pradesh to Madras, their services have not yet been integrated and even their provident fund accounts have not yet been settled. I request the Government to expedite the integration of their services and also to settle the provident fund accounts and then get reimbursement from the Government of Andhra Pradesh. Because the Andhra Pradesh Government have not yet transferred the amount, the teachers should not be made to suffer.

With regard to the scale of pay of secondary grade teachers in the course of one year three government orders have been issued and the orders have been interpreted in different ways by the different panchayat unions. The scales of pay of teachers have not been properly fixed and their services have not been integrated. I request the Government to consider this matter and issue clear instructions in this regard.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தக் கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இந்த ஆண்டு நாம் கல்விக்காக 45 கோடி ரூபாய் கொடுக்க இருக்கிறோம். இது கல்வியின் சரித்திரத்திலேயே காணாத ஒரு புதுமை என்று கூறினால் மிகையாகாது என்று நினைக்கிறேன். "கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்பது போன்ற பலப் பல பழமை வாக்குகளுக்குக் கல்வியிலே என்றுமே வறுமை இருந்ததில்லை. கல்வி உடையவர்கள் தான் நல்ல அறிவு உடையவர்கள், ஞானக் கண்களை உடையவர்கள், மற்றவர்கள் வெறும் ஊனக்

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [7th March 1966

கண்களை உடையவர்கள். இதுபோன்று கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறும் வகையிலே நாம் பழம் பெருமை வாய்ந்த குடிப் பிறப்பிலே வந்தவர்கள். கல்வியின் சரித்திரத்திலேயே காணாத வகையில் 45 கோடி ரூபாய் செலவு செய்ய நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள் என்றால், அதற்காக நாம் அவரை முழு மனதுடன் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறோம்.

பலசில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பழமொழி சொல்வதுண்டு. "மழைக்காகக் கூடப் பள்ளியிலே ஒதுங்காதவன்" என்று. மழை அடித்து கப ஜுரம் வந்தாலும் கல்விச்சாலையின் கீழ் போகத் துணியமாட்டான். அந்த நிலையிலே கல்வி என்பது ஒரு சாராருக் குத் தான் என்ற அளவிலே, அவர்களுக்கு மட்டும் உரிமை உள்ள தாக இருந்தது போக, இன்று நாட்டில் இருக்கும் அத்தனை பேருக் கும் கல்வி அளிக்கப்படுகிறது. 6 முதல் 11 வயது வரை கட்டாயக் கல்வி 92 சதவிகிதம் மூன்றாவது திட்டத்தில் நாம் நிறைவேற்றி விட்டோம். 100 சதவிகிதம் அளவை நாம் நான்காவது திட்டத்தில் நிறைவேற்ற இருக்கிறோம் என்று பெருமிதத்தோடு கூறி இருக் கிறார்கள் என்றால் இது தமிழர்களே பெருமைப்படக்கூடிய ஒரு நிலையாகும்.

தமிழ்நாடு கல்வியிலே இரண்டாவதாக இருக்கிறது என்று நான் ஒரு அறிக்கையிலே படித்தேன். இன்று முன்னேற்றம் அடைந்தி ருக்கும் ரஷ்யா போன்ற பெரும் தேசங்களை எடுத்துப் பார்த்தால், அவர்கள் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்து ஆட்சிக்கு வந்த வுடனே முதலிலே செய்த அரும்பெரும் செயல், கல்விக் கதவுகளைச் சமுதாயத்தில் இருக்கும் அத்தனை பேருக்கும் திறந்துவிட்டார்கள் என்ற விசேஷ அம்சம்தான். காரணம், கல்வி கற்றவர்கள் சமுதா யத்தில் நல்ல பயன் உள்ளவர்களாக இருந்து, திட்டங்களை நிறை வேற்றுவதிலே உறுதுணையாக இருக்கக்கூடும். விவசாயத்திலானா லும், வியாபாரத்திலானாலும்; வணிகத்திலானாலும் வேறு எந்தத் துறையிலானாலும் விவேகம் அதிகம் பெறக் கூடிய வகையிலே கல்வி அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறது. திட்டங்களும் நல்ல முறையில் நிறைவேற்றப்படக் கல்வி ஏதுவாக அமைகிறது. கற்ற விவசாயி, கல்வியறிவு இல்லாத விவசாயியைவிட அதிகப் பயனுள்ள முறையில் விவசாயம் செய்து, தனக்கும் அதிகப் பயனை அடைந்து, சமுதாயத்திற்கும் நல்ல பயனை அளித்து, திட்டத் திற்கும் வெற்றி தேடித்தரக்கூடிய வகையில் கல்வியறிவு அவனுக்கு வழிகோலுகிறது என்பதை நாம் பார்க்கிறோம். இந்தக் கல்வி இலாகாவிற்கு மொத்த வரவு-செலவுத் திட்டத்திலே 25 சதவிகிதத் திற்கு மேல் செலவிடுகிற நிலை வந்துவிட்டது என்றால், நாட்டி லிருக்கும் அத்தனை பேருக்கும் கல்வி இன்றியமையாதது என்பதை உலகத்திற்கே எடுத்துக்காட்டுகிற வகையிலே இந்த மானியம் இங்கே காட்சியளிக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

மருத்துவக் கல்லூரிகளிலும், இன்ஜினியரிங் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் இடம் கிடைக்கவில்லை, இடம் கிடைக்க வில்லை என்று சமுதாயத்தில் இருக்கிறவர்கள் சலித்து கொள்



7th March 1966] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

வதைப் பார்க்கிறோம். இதிலிருந்தே நமக்கு நன்றாகப் புலனாகிறது. ஒரு சில வருஷங்களுக்கு முன்பு, இம்மாதிரி டாக்டர், இன்ஜினியர் படிப்புக்குப் போகக்கூடியவர்கள் சமுதாயத்தில் எத்தனை பேர்கள் என்று விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆனால், இப்பொழுது க்யூ வரிசையில் நின்று எங்களுக்கு, எங்களுக்கு என்று போட்டி போட்டுக்கொண்டு, எங்களுக்கு இடம் கிடைக்கவில்லையே, எங்களுக்கு இடம் கிடைக்கவில்லையே என்று கேட்கும் அளவுக்குச் சமுதாயத்தில் கல்வி பெறவேண்டும், என்கிற எண்ணம் வளர்ந் திருக்கிறது. இதற்குக் காரணம், இந்தக் கல்வியிலே நம்முடைய அரசாங்கம் எடுத்துக் கொண்ட தீவிரமான ஒரு கொள்கைதான். அதோடுகூட, ப்ளானிங் ஃபோரம் என்று கல்லூரிகளில் நம் முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்திலேகூட மாணவர்களுக்கு ஒரு செமினார் நடத்தினார்கள். அங்கே இரண்டு மூன்று நாள் பயிற்சி கொடுக்கப் பட்டது. ஆசிரியர்களுக்கும், இம்மாதிரி ப்ளானிங் ஃபோரம் நடத்தினால் நன்றாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது எனது வேண்டுகோள் ஆகும். திட்டத்தை எடுத்துச் சொல்லக் கூடிய வகையில் இம்மாதிரி ஃபோரம்கள் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

அடுத்து, கல்விக்கான ,லோன் ஸ்காலர்ஷிப்பைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எல்.டி.ஸி., யு.டி.ஸி. போன்று மாதம் 100 ரூபாய், 150 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய நிலையில் இருப்பவர்களுக்கு இரண்டு மூன்று குழந்தைகள் இருக்கும். மூத்தவனை மெடிக்கல் காலேஜுக்கு அனுப்பலாம். அடுத்தவனை இன்ஜினீயரிங் காலேஜுக்கோ, பாலிடெக்னிக்குக்கோ அனுப்ப லாம்; இன்னொருவனை பி.டி.க்கு அனுப்பலாம் என்றால், அவருடைய சம்பள வருமானம் அனுமதிக்கக்கூடாத வகையில் இருக்கும். 1,500 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இத்தகைய லோன் ஸ்காலர்ஷிப் என்னும்போது அநேக இடங் களில் நான் பார்த்த வரையில், விவசாய வருமானம் இருக்கக் கூடியவர்கள், மாதா மாதம் திட்டவட்டமாக இத்தனை ரூபாய் தான் வருமானம் வாங்குகிறார்கள் என்று சொல்லக்கூடாத அளவுக்கு இருப்பவர்கள். கிராமத்திலுள்ள கர்ணத்திடமிருந்து சர்டி- பிகேட் வாங்கிக்கொண்டு வரக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அந்த சர்டிபிகேட் வாங்கி அவர்கள் நல்ல சலுகையைப் பெற்று விடுகிறார்கள். ஆனால், மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட வருமானத்தைப் பெறக்கூடிய ஃபிக்ஸ்ட் இன்கம் க்ரூப்பில் உள்ள வர்கள் அத்தகைய சர்ட்டிபிகேட்டை வாங்க முடியாது. அதன் காரணமாக அவர்களுக்கு அந்த லோன் ஸ்காலர்ஷிப் கிடைக்காமல் போகிறது. அவர்கள் இப்படி மிகவும் கஷ்டமான நிலையில் இருக் கிறார்கள். இத்தனை மெடிகல் காலேஜ்கள், இன்ஜினீரிங் காலேஜ் கள், பாலிடெக்னிக்குகள் திறந்தும் கூட, குறிப்பிட்ட மாதச் சம்பளம் வாங்குகிற இத்தகையோர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமல் இம்மாதிரி இடையூறுகள் இருந்து

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [7th March 1966

கொண்டிருப்பதை தயவு செய்து அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, அவர்களுக்கும் ஆவன செய்யவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, மாவட்டங்கள் தோறும் நூல் நிலையங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏற்கனவே நடமாடும் நூல் நிலயமாக விளங்கும், நவீனமாகப் பேசும் சக்தி படைத்தவர்கள் கூடப் படிக்கவேண்டும் என்ற ஆசை இந்த இயக்கத்தின் மூலம் ஏற்பட்டிருக்கிறது. அதிலே ஒரு குறை என்னவென்றால், மாவட்டந்தோறும் பெண்களுக்குத் தனியாக நூல் நிலையங்கள் இருந்தாலும், குழந்தைகளுக்கு என்று தனியாக இல்லை. ப்ளானிங் கமிட்டியிலே கூட நான் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். குழந்தைகள் போய் உட்கார்ந்து படிக்கக்கூடிய வகையில் நூல் நிலையங்கள் கவர்ச்சிகரமாக அமையவில்லை. அங்கே சிறு சிறு டெஸ்க், மேஜை, நாற்காலி முதலியவைகளைக் குழந்தைகளுக்காக அமைத்துக் கொடுத்து, குழந்தைகளுக்கான நூல் நிலையம் ஒவ்வொரு மாவட்டத் தலை நகரிலும் அமையவேண்டும். குழந்தைகளுக்கான தியேட்டர் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமையவில்லையென்றாலும், குழந்தைகளுக்கான நூல் நிலையங்களை அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் நெல்லையில் பல கல்லூரிகள் இருக்கின்றன. தலைநகரில் மட்டும் நான்கு கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால் அங்கே போஸ்ட் கிராஜ்வேட் கோர்ஸ் கிடையாது. இப்போது திருச்சிக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். மேலும், கோவையில் கொண்டுபோய் கொடுக்கிறார்கள். கோவையிடத்தில் எனக்குப் பொறாமையில்லை. சமதர்ம அடிப்படையில்—எல்லா மாவட்டங்களும் சீராக வளர்ச்சி அடைய மாவட்ட ரீதியில் திட்டங்களை வகுக்கிற நாம் கல்விச் செல்வத்தையும் மாவட்ட ரீதியாக பகிர்ந்தளிக்க வசதி செய்யவேண்டும். ஆகவே, பாளையங்கோட்டையிலாவது, திருநெல்வேலியிலாவது எம்.எஸ்.ஸி., எம்.டி. கோர்ஸ் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெல்லையில் இருந்துதான் அகத்தியர் தமிழை வளர்த்தார் என்று நாங்கள் சொல்வது உண்டு. ஆகவே அங்கே ஒரு தமிழ்க் கல்லூரியை ஏற்படுத்தித் தரவேண்டும். தமிழ்ப்புலவர் பயிற்சிக் கல்லூரியையும் ஏற்படுத்தித்தரவேண்டும். "பெண்ணைப் பொன்னிட்டுப் பார்" என்று சொல்வார்கள். அப்படி பொன்னோடு பெண்ணை காலங்காலக் காலம் முதல் தொடர்பு படுத்தி வந்த இந்த நாட்டிலே என்றைக்கும் சரித்திரம் காண முடியாத வகையில் பெண்கள் போருக்காகவும், பாதுகாப்பிற்காகவும் பொன்னாபரணங்களை எல்லாம் எடுத்து வழங்கியிருக்கிறார்கள். அப்படி இருந்தும் வாரி வாரிக் கொடுத்தான் பாரி என்பதாகப் பாடிய புலவர் பரம்பரையில் இன்றைக்கு வாரி வாரி பொன்னை நாட்டுக்காக எடுத்துக் கொடுத்த பெண்களைப் பாட ஒரு புலவர் இல்லை.



7th March 1966] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

ஆகவே, அகத்தியர் இருந்து தமிழ்கொடுத்த நெல்லையில் ஒரு தமிழ்க் கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதியில் மேலப்பாளையம் என்ற நகரில் அதிகமான முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய மத ஸ்தாபனத்திற்கு நிறைய சொத்து இருக்கிறது. நெல்லையில் பராசக்தி கல்லூரி என்று ஏற்படுத்தியிருப்பதுபோல, நெல்லையப்பர் கோயில் அம்மன், காந்திமதி அம்மன் பெயரில் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தியிருப்பதுபோல, இந்த முஸ்லிம் மத ஸ்தாபனச் சொத்தைக்கொண்டு அவர்கள் 50 ஏக்கரா கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள்—முஸ்லிம் கல்லூரி ஒன்றை மேலப்பாளையத்தில் ஏற்படுத்தித்தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலப்பாளையம், பாளையங்கோட்டை இங்கே தான் அதிகமான முஸ்லிம் ஜனங்கள் இருக்கிறார்கள். ஒருவேளை மந்திரி மஜீத் அவர்கள் தம்முடைய கடையநல்லூருக்கு அதை எடுத்துச்செல்லவேண்டும் என்பதனால் தகராறு ஏற்பட்டிருக்கிறதோ என்னவோ, அதை மேலப்பாளையத்தில் வைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்கிற என்னுடைய அபிப்பிராயத்தைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொறியியல் கல்லூரிகளைப் பற்றி நான் புகழ்ந்து கூறாமல் இருக்க முடியாது. முதல் ஐந்தாண்டுத் திட்ட தொடக்கத்தில் 437 மாணவர்கள் தாம் சேர்த்துகொள்ள முடிந்தது என்றாலும், அடுத்த திட்டத்தில் 1,157 ஆகவும், மூன்றாவது திட்ட காலத்தில் 2,167 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளும் வேகத்தில் குதிரை வேகத்தைவிட வேகமாகச் செல்கின்ற அளவில் முன்னேற்றம் அடைந்து வந்திருக்கிறது. தொழில் பயிற்சி கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் தேர்வும் நல்லமுறையில் நடந்து வருகிறது. இன்றையதினம் மற்றவற்றைவிட பிற்போக்காக உள்ள திருநெல்வேலி மாவட்டமும் முன்னேற்றம் அடைய கவனம் செலுத்தவேண்டுமென்று அத்துறையைப் பாராட்டி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மெட்ராஸ் சங்கீத நாடக அகடமியைப்பற்றி இவ்வாண்டு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுபற்றி ஒரு வார்த்தை. இந்த அகடமிக்குத் தலைவராகக் கர்நாடக சங்கீதத் துறையில் சிறப்பு வாய்ந்த ஒரு தமிழரைப் போடவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் எங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் தான் நையாண்டி மேளம், கரக ஆட்டம் என்பதான கலை நிகழ்ச்சிகளில் நையாண்டி மேளக்காரர்கள், கரக ஆட்டக்காரர்கள் கண்டு வரட்டும் என்றுவிடாமல் சென்னையில் நடக்கும் கலா நிகழ்ச்சிகளில் நையாண்டி மேளக்காரர்கள், கரக ஆட்டக்காரர்கள் பங்கு கொள்ள வசதி ஏற்படுத்தவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின் மீது நான் எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்கள்

மிருந்த ஆர்வத்தோடு 45 கோடிக்கும் அதிகமாக இந்த ஆண்டு கல்வி மானியத்திற்காகக் கோரியிருக்கிறார்கள். இவ்வளவு அதிகமான தொகை இந்த மானியத்திற்காக ஒதுக்கிவிட்டு அதுபற்றி, விவாதித்து பேசுகின்ற அங்கத்தினர்களுக்குத் தங்கள் கருத்தை எடுத்துச்சொல்ல வாய்ப்பு அதிகமாக இல்லாமல் பத்து நிமிடம், பத்து நிமிடம் என்று ஒதுக்குவது சரியல்ல.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பணம் குறைவாக ஒதுக்கியிருந்தால் கனம் அங்கத்தினர்கள் அதிக நேரம் பேசவேண்டியிருக்கும். அதிகமாகவே ஒதுக்கியிருப்பதனால் பேசுவதற்கு அதிக நேரம் தேவைப்படாது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு மிக்க நன்றி. ஆயினும் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்வதற்கு இந்தப் பத்து நிமிடங்கள் போதவில்லை என்பதனால் தான் குறிப்பிட்டேன்.

அத்தபடியாக, கல்விக்காக நாம் ஒதுக்கியுள்ள 45 கோடி சொச்சத்தில் ஆரம்பக் கல்விக்காக 2,287.13 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். என்றாலும் கிராமப் பகுதியிலே இன்றைக்கு பள்ளிக்கூடங்கள் மரத்தடியில் நடக்கின்றன. ஆசிரியர்கள் அங்கே குடியிருப்பது இல்லை. ஏன் குடியிருக்கவில்லை என்றால் வீட்டு வசதி இல்லை என்கிறார்கள். பெண் ஆசிரியர்களுக்கு அந்த அந்த ஊர்களிலேயே வீடுகள் கட்டித்தரப்படும் என்கிறார்கள். கட்டித்தரப்படுவதில்லை. கட்டிக்கொடுத்தாலும் அவை குடியிருக்க வசதியின்றி விழுந்துவிடுகின்ற நிலையில் இருக்கின்றன. குறிப்பாக வானூர் பகுதியில் ஒட்டை கிராமம் என்ற இடத்தில் கட்டப்பட்ட வீடு வீறிப்போய் அங்கே குடியிருப்பது அபாயம் என்பதாக பெண் ஆசிரியர் குடியிருக்கவில்லை. இதை பி.டி.ஓ. கவுன்சிலிடம் சொன்னாலும், அவர்களிடம் ஏதும் விமோசனம் கண்டதாகத் தெரியவில்லை.

உயர்நிலைப் பள்ளிகள் எல்லாம் கூட கட்டிட வசதியின்றி மரத்தடியிலும், கீத்துக்கொட்டகையிலும் நடக்கின்றன. அதன் காரணமாக சையன்ஸ் பாடம் சொல்லிக்கொடுக்கப் போதுமான லாபரெடரி வசதி ஏற்படுத்த முடியாமல் இருக்கிறது. திரு. ராமசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல அரக்கோணத்தில் தக்கோலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞான பாடப்பிரிவை ஏற்படுத்த வசதியின்றித் தவிக்கிறார்கள். அவற்றுக்கு கட்டிட வசதி செய்துதரவேண்டும். கட்டாயக்கல்வி என்றால் 6—11 வயது வரையில் உள்ள மாணவர்கள் படித்தாக வேண்டும் என்பதாகும். இந்த நிலையிலும் என்னுடைய தொகுதியிலே தேக்குளம் கிராமத்திலே ஆயிரம் விவசாயிகளுக்குமேல் குடியிருக்கிறார்கள். அது கிட்டதட்ட 300 பிள்ளைகள் படிக்கவேண்டிய நிலையில் உள்ள இடம். அந்தப் பகுதியிலே காலனியிலே மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அங்கே 45 வீடுகள் தான் இருக்கின்றன. அந்த இடத்தில் ஆர்.ஸி. மானேஜ்மெண்டார் உதவிபெறும் பள்ளியை நடத்திவருகிறார்கள். இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் வந்தபிறகு சர்க்கார் பள்ளிக்கூடம் ஒன்று ஏற்ப



டுத்த வேண்டுமென்று பலமுறை சொல்லியும்கூட அந்த மானேஜ்மெண்டார் அனுமதி கொடுக்க மறுத்து வருகிறார்கள். அங்கேயிருக்கின்ற பிள்ளைகள் எல்லாம் அங்கே மத போதனை செய்கிறார்கள் என்பதால் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப்போய் படிப்பதற்கு விரும்பவில்லை. இதை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக்கூடிய நிலைமை வந்துவிட்டது. இப்பொழுது இருக்கிற ஆதி திராவிடர் பள்ளிக்கூடம் அதே இடத்தில் இருக்கட்டும். அதைத்தவிர மற்றவர்களுக்கு அதாவது வன்னியர்கள் வாழுகின்ற பகுதியிலே, ஆயிரம் பேர்கள் குடியிருக்கக்கூடிய இடத்திலே, 300 பிள்ளைகளுக்குமேல் படிக்கக்கூடிய நிலை இருக்கும் இடத்திலே தனியாகவாவது ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு முடியாவிட்டால் இந்தப் பிரச்னையைத் தீர்க்கமுடியாது என்று சொல்லிக்கொண்டு அதற்கு உடனடியாக வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுசம்பந்தமாக முதலில் 9—10—1965-ஆம் தேதியில் ஒரு தீர்மானமும், அடுத்து 29-12-1965-ஆம் தேதியன்று ஒரு தீர்மானமும் ஆக இரண்டு தீர்மானங்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு அனுப்பப்பட்டும்கூட இன்னும் இதற்கு பரிகாரம் காணப்படாமல் இருக்கிறது. அடுத்தபடியாக இரும்பையில் இருக்கிற பெண்கள் பயிற்சி பள்ளிக்கூடத்தை ரோடு அருகிலுள்ள திருச்சிற்றம்பலத்திற்கு கொண்டுவரவேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டு, அதற்காக 10 ஏக்கர் நிலம்கூட அந்தப் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் இனாமாக கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றிச் சொல்லி 3, 4 ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் அதற்கு ஏற்பாடு செய்யவில்லை. அந்த ஆசிரியர் பயிற்சி பள்ளியை இரும்பையில் இல்லாமல் அதை விழுப்புரம் கொண்டு போவதாகச் சொல்கிறார்கள். அதை விழுப்புரத்திற்கு கொண்டு போவதாகச் சொல்வதால், நான் இதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவராமல் இருக்கமுடியாது. முதலமைச்சர் அவர்கள் இதை தயவுசெய்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நான் இன்றைக்குப் பேச வேண்டியதுபற்றி என்னுடைய கட்மோஷனில் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தி வந்தால் தமிழ் கெடுமா, கெடாதா என்பதுதான் பிரச்னை. இந்தி வந்தால் தமிழ் கெடும் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு நான் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. இந்தி டெக்ஸ்ட்புக்கில் ஒரு பாடம் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு பத்திரிகை தலையங்கம் எழுதியிருப்பதை நான் பார்த்தேன். இது சம்பந்தமாக நான் புலவர்களிடமும் கேட்டேன். அவர்களும் தவறுதான் என்று சொன்னார்கள். எனக்கு இந்தி தெரியாது. ஆகையால் இது எந்த அளவுக்கு உண்மை என்பதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதில் சிலப்பதிகாரத்தை ஓரங்க நாடகமாக எழுதியவர்கள், பாண்டிய மன்னனைக் குடிகாரன் என்றும், காணாமல் போன பாண்டிமா தேவியின் சிலம்பு ஒன்றைக் கால் சிலம்பிற்குப் பதிலாக இரட்டைக் கால் சிலம்பு என்றும் எழுதி இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலேயே ஐம் பெருங்காப்பியங்களில் ஒன்றாக உள்ள இந்த சிலப்பதிகார இலக்கியத்தைப்பற்றி, அதிலும் மிகவும் சிறப்பான காப்பியம் என்று சொல்லப்படுகிற சிலப்பதிகாரத்தைப்பற்றி

எழுதி அதனுடைய சிறப்பான நடையையே மாற்றி ஒழுங்கில்லாத முறையில் மாற்றி எழுதியிருக்கிறார்கள். இது ஒன்றே போதும், இந்தி வந்தால் தமிழ் கெடும் என்பதற்கு. இப்படியிருக்கும் பொழுது இந்தி வந்தால் தமிழ் கெடாமல் எப்படி இருக்கும் என்பதை முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது உண்மையாக இருந்தால், அந்தத் தவறைச் செய்தது யார்? இது அரசாங்கமே வெளியிடுகிற புத்தகம், இதிலே இருக்கிற தவறுக்குப் பரிகாரம் தேட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக கல்லூரிகளைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்டெக்ரேட் கோர்சில், பி.ஈ., பி.எஸ்.சி. (அக்ரி); பி.வி.எஸ்.சி., எம்.பி;பி.எஸ்; பி;டி;எஸ், போன்ற பிரிவுகள் இருக்கின்றன. இதிலே பி.ஈ. படிப்பிலே ஒரு பாடம் தவறிவிட்டால் ப்ரமோஷன் கொடுத்து தவறியதை அடுத்த ஆண்டு படித்து பாஸ் செய்துகொள்ளலாம் என்று இருக்கிறது. அதைப்போலவே பி.எஸ்.சி. (அக்ரி.) யிலும் ஒரு பாடம் தவறிவிட்டால் ப்ரமோஷன் கொடுத்து தவறியதை அடுத்த ஆண்டு பாய் செய்துகொள்ளலாம் என்று இருக்கிறது. கால்நடை மருத்துவப் படிப்பைப் பொறுத்த வரையிலும் கூட இதேமாதிரி ஒரு பாடத்தில் தவறிவிட்டால் ப்ரொமோஷன் கொடுத்து தவறியதை அடுத்த ஆண்டு பாஸ் செய்துகொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் இந்த மருத்துவத்திலே மட்டும் ஒரு பாடத்தில் தவறிவிட்டால் கல்லூரியை விட்டுத் துரத்திவிடுகிறார்கள். இது ஏன் என்று தெரியவில்லை. பொதுவாக இன்டெக்ரேட்டடு கோர்ஸ் என்று தலைப்புக்கொடுத்து, இதற்கு மட்டும் அந்தச் சலுகையைக் கொடுக்காமல் பாரபட்சம் காட்டி இருப்பதை மாற்றி அதற்கும் உரிய நிலையைக் கொடுத்தால் என்ன என்பதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தக் கல்வித்துறை மானியத்திலே ஆதித் திராவிடர்களுக்கு அதிகச் சலுகைக் கொடுக்கிறார்களே என்று சில அங்கத்தினர்கள் பேசுவதுபோல் இலேசாக எனக்கு பட்டது. ஆதித் திராவிடர்களுக்கெல்லாம் கல்வி எவ்வளவு அவசியம் என்பதை சர்க்கார் உணர்ந்து, அவர்களுக்கு நல்ல முறையிலே கல்வியளிப்பதற்கு எந்த எந்த முறையிலே அவர்களுக்கு உற்சாக மூட்டமுடியும் என்பதைப் பார்த்து அவர்களை முன்னேற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவாவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** கனம் தலைவரவர்களே, இந்தக் கல்வி மானியத்தில் 45 கோடி ரூபாய் கோரப்படுகிறது. நமக்கு எல்லாம் தெரியும், அந்தக் காலத்தில், யுத்தத்திற்குப் பிறகு 1952-ஆம் வருஷத்திற்குப் பிறகுகூட நாம் 10 கோடி ரூபாய் வரைதான் கல்விக்காகச் செலவு செய்யவேண்டியிருந்தது. ஆனால், அது இப்பொழுது 4 மடங்காக 45 கோடியாக செலவு செய்யக் கூடிய அளவுக்கு நம்முடைய அரசாங்கம் அதிகமான அக்கறை





செலுத்திக்கொண்டு வருகிறது. சேல்ஸ் டாக்ஸ் மூலம் நமக்குக் கிடைக்கும் வருமானம் 46 கோடி ரூபாய் தான். சேல்ஸ் டாக்ஸ் மூலமாக வரக்கூடிய பணம் பூராவும் கல்விக்காக ஒதுக்கப்படுகிறது. சேல்ஸ் டாக்ஸ் மூலமாக வருகிற பணம் அந்த வகையில் நல்ல காரியத்திற்காகத்தான் செலவிடப்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 45 கோடி ரூபாய் இதற்குச் செலவழிக்கப்படுவதால் இதில் வேஸ்டேஜ் இல்லாமல் இருக்கக் கூடிய வகையில் கவனம் செலுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல் இப்பொழுது பள்ளிகளில் படிப்பு முடிந்தவுடன் கல்லூரிகளில் படிப்பைத் துவங்குகிறார்கள். மேனாடுகளில் எல்லாம் எந்தப் பாடத்தை எடுத்துப் படிக்கவேண்டும், எந்தத் துறையிலே செல்ல வேண்டும் என்பது மாணவர்களுக்கே தெரிகிறது. அதோடு பெற்றோர்களும் படித்தவர்களாக இருக்கின்ற காரணத்தால் அவர்களும் தங்களுடைய பிள்ளைகள் எதில் ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து கல்லூரிகளுக்கு அனுப்புகிறார்கள். நம்முடைய நாட்டில் அப்படிப்பட்ட முன்னேற்றம் இல்லாமல் இருப்பதால் ஏதோ சலுகை கொடுக்கப்படுகிறது, காலேஜில் படிக்கலாம் என்றுதான் போய் கல்லூரிகளில் படிக்கிறார்களே தவிர, உண்மையிலேயே ஆர்வமுள்ள வகையில் படிக்கின்றார்களா என்பதைப் பார்க்கவேண்டும். ஹைஸ்கூல்களில் எஸ்எஸ்.எல்.சி. படிப்பை முடித்தபிறகு பி;யூ;சி; படிப்பிற்குக் கல்லூரிகளில் சேர்ப்பதற்கு முன்னால் அவர்களுக்கு ஆப்டிட்யூட் டெஸ்ட் வைப்பது மிகவும் அவசியம். அப்படி டெஸ்ட் வைப்பதின் மூலம் சாதாரணமாக ஒவ்வொரு மாணவனும் எந்தத் துறையில் ஆர்வமாக இருக்கிறான் என்பதைப் பார்த்து அந்தத் துறையிலே படிப்பதற்கு உற்சாகம் கொடுக்க முடியும். அதேபோல் ஆசிரியர்களை எடுத்துக்கொண்டாலும் இன்றைக்குப் பஞ்சாயத்து யூனியன்களில் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். மேனாடுகளில் உள்ள ஆசிரியர்களின் மனப்போக்கைப் பார்க்கும்பொழுது அவர்களுடன் சாதாரணமாகப் பேசும்பொழுது அவர்கள் மரியாதை செலுத்துவதையும், அவர்களை மற்றவர்கள் பூஜிக்கக்கூடிய அளவிற்கு ஆசிரியர்கள் இருந்துவருகிறார்கள். இங்கே இருக்கின்ற சில ஆசிரியர்களைப் பார்க்கும்பொழுது அவர்கள் ஆசிரியர்கள்தானா என்று சந்தேகம் வருகிறது. கிராமங்களிலே இருக்கின்ற ஆசிரியர்கள், ஹைஸ்கூலில் மூன்றாவது அல்லது நான்காவது ஃபாரம் வரை படித்துவிட்டு, பாலிடெக்னிக் போக வேண்டுமென்ற எண்ணம் கூட வராமல், ஏதாவது வேலைக்குப் போனால் சரி என்ற எண்ணத்துடன் டிரெய்னிங் ஸ்கூல்களில் படித்து ஆசிரியர்கள் வேலைக்கு வருகிறார்கள். அவர்கள் ஆசிரியர் வேலை பார்ப்பது இல்லை. ஊர் வம்புகளுக்குப் போகிறார்கள். இரண்டு கட்சிகள் இருந்தால் அதில் ஒரு கட்சியில் சேருகிறார்கள். பெட்டிஷன்கள் எழுதிக் கொடுக்கிறார்கள். "நீங்கள் ஏன் பெட்டிஷன் எழுதிக் கொடுக்கிறீர்கள், உங்களுக்கு என் ஊர்வம்பு" என்றும், "உங்களுக்கு சொல்லிக்கொடுக்கும் வேலைதானே தவிர, ஊர்வம்புகளில் தலையிடுவது அல்ல" என்றும் நாம் சொன்னால், அந்த மனுஷன் கெட்டவன்தான் அவனுக்கு அப்படித்தான் செய்யவேண்டுமென்று சொல்லக்கூடிய முறையிலே இருக்கிறார்களே தவிர, உண்மையாக குழந்தை

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [7th March 1966

களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கக்கூடியவர்களாக இல்லை. ஆகவே, எலிமெண்டரி ஸ்கூல்களில், ஹைஸ்கூல்களில், கல்லூரிகளில் பணிபுரிய வரும் ஆசிரியர்களுக்குக்கூட டிரெய்னிங் போவதற்கு முன்னாலே ஆப்டிட்யூட் டெஸ்ட் வைப்பது மிகவும் அவசியமாகும். அப்படியிருந்தால்தான் நிலைமை சீர்திருந்தும். 12-00 noon. இல்லாவிட்டால் தரக்குறைவு, தரக்குறைவு என்று சொல்வது எல்லாம் இருக்கத்தான் செய்யும். இங்கே ஒரு அம்மையார் சொன்னார்கள், புலவர்களுக்குக் காலேஜ் வைக்கவேண்டுமென்று. இப்பொழுதே புலவர்கள் நிறைய இருக்கிறார்கள். தமிழ் பாஷையிலே மொழிபெயர்க்கவேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. சிலர் ஆங்கில வார்த்தைகளையெல்லாம் மொழிபெயர்த்து தமிழ் ஆக்க வேண்டுமென்று ஆர்வப்படுகிறார்கள். 'காவல் நிலையம்' என்று எழுதியிருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷன் என்றால் என்ன? அதனுடைய முக்கியத்துவம் போகக் கூடிய அளவுக்கு மொழிபெயர்க்கிறார்கள். மற்ற தேசங்களில் எல்லாம் எப்படி அவர்களுடைய மொழி வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மலேயாவை எடுத்துக்கொண்டால் அங்கு தமிழ், மலேயன், சைனிஸ் ஆகிய மொழிகளைப் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய நாட்டைப் போல் அங்கும் வெள்ளைக்காரன் இருந்த காரணத்தால் ஆங்கிலத்தைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும். ஒரு தமிழன்—ஆங்கிலம், தமிழ், மலேயன் ஆகிய மூன்று மொழிகளைப் படிக்கவேண்டும். ஒரு சைனிஸ்—சைனிஸ், ஆங்கிலம், மலேயன் ஆகிய மொழிகளைப் படிக்க வேண்டும். ஆனால் அங்கே ரோமன் ஸ்கிரிப்டை அடாப்ட் பண்ணிவிட்டார்கள். இந்த பாஷைப் பிரச்சினை இங்கு மட்டுமல்ல; 'மல்டி. லாங்வேஜ்' உள்ள தேசங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவர்கள் எல்லாம் இந்தப் பிரச்சினையை தேசிய நோக்கோடு அணுகிப் பார்க்கிறார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் துரதிருஷ்டவசமாக எந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள் என்றால், அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள். ஒரு தகராறு வந்தால் அதனாலே நம்முடைய கட்சிக்கு எவ்வளவு லாபம் இருக்கும் என்று பார்க்கிறார்கள். காங்கிரஸ் கட்சி, டி.எம்.கே., கம்யூனிஸ்ட் கட்சி எல்லாம் ஒன்று சேர்ந்து தேசியக் கண்ணோட்டத்துடன், தேசத்திற்கு எது நல்லது, எந்த பாஷை இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அலசிப் பார்க்கவேண்டிய முக்கியமான கட்டம் இருக்கிறது.

ஒரே ஒரு முக்கியமான விஷயத்தைக் கூறி முடித்துக் கொள்கிறேன். சமீபத்தில் நான் பிஜி தீவுக்குச் சென்றிருந்தேன். அங்குள்ளவர்கள் என்னிடம் மிகவும் குறைபட்டுக் கொண்டார்கள். அந்தத் தீவில் 51 சதவிகிதம் ஜனங்கள் தமிழர்கள். அது ஒரு பெரிய பிரிட்டிஷ் காலனி. அங்கு ஹைஸ்கூலுக்கு மேல், காலேஜ் கிடையாது. யாராவது காலேஜ் படிக்கவேண்டுமென்றால் ஆஸ்திரேலியாவுக்கோ அல்லது நியூசிலாந்துக்கோதான் போகவேண்டும். அங்குள்ள தமிழர்களில் பெரும்பாலோர் தோட்டத்தில் கூலி வேலை செய்யக்கூடியவர்கள். ஏதோ கொஞ்சம்



7th March 1966] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

படித்தவர்கள் கிளார்க்குகளாக வேலை பார்த்து வருகிறார்கள். அவர்கள் படிக்க இந்தியாவுக்கு வருவதாக இருந்தால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. அங்கு ஜனத்தொகையிலே 51 சதவிகிதம் தமிழர்கள். மற்றபடி தெலுங்கர்கள், இந்திக்காரர்கள், குஜராத்திகள் போன்றோரும் இருக்கிறார்கள். தெலுங்கு மாணவனுக்கு ஆந்திர அரசாங்கத்திலிருந்து ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள். அதே போன்று குஜராத் மாநிலம், மகாராஷ்டிர மாநிலம்; யு.பி. போன்ற மாநிலங்களில் எல்லாம் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ் மாணவன் இங்கு படிக்க வரவேண்டுமென்றால் நம்முடைய அரசாங்கம் ஸ்காலர்ஷிப் கொடுப்பதில்லை. அங்குள்ள எல்லோரும் இந்தக் குறையைச் சொன்னார்கள். நான் ஹை கமிஷனரைப் பார்த்துக் கேட்டேன். அவர்களும், நாங்கள் அப்ளிகேஷனை அவரவர்களுடைய மாநிலங்களுக்கு அனுப்புகிறோம், தமிழ் மாநிலத்திலிருந்து மட்டும் இதுவரை யாருக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படவில்லை, ஒரு பதில் கூட, அக்னாலெட்ஜ்மென்ட் கூடக் கிடையாது என்று சொன்னார்கள். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அவ்வாறு வருபவர்கள் வருஷத்தில் பத்துப் பேர்கள் வேண்டுமானால் இருக்கலாம். ஆகவே, முக்கியமாக நம்முடைய அரசாங்கம் பிஜி தீவிலுள்ள தமிழ் மாணவர்கள் இங்கு வந்து படிக்க ஸ்காலர்ஷிப் கேட்டால் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. அ. ராகவ ரெட்டி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் இவ்வாண்டு சுமார் 43 கோடி ரூபாயைக் கல்விக்காகச் செலவு செய்யப் போகிறது. அதிலே பெரும்பாலும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ஆரம்பப் பள்ளிகளுக்கும் செலவு செய்யப் போகிறது என்பதைப் பார்க்கும்போது சந்தோஷப்படாமல் யாராலும் இருக்க முடியாது. நடைமுறையில் பார்க்கும்போது சில குறைகள் இருக்கின்றன. அவற்றைச் சொல்லாமலும் இருக்கமுடியாது என்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

எங்கள் பகுதியைப் பொறுத்தவரை கல்லூரியிலே சேருவது பெரிய கஷ்டமாக இருந்தது. எங்கள் பகுதியில் ஒரு கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கனம் முதலமைச்சர் அவர்களிடம் பல முறை கேட்டுக் கொண்டிருந்தேன். கடந்த ஆண்டு பொன்னேரியில் ஒரு கல்லூரியை வைத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே ஒரே ஒரு குறை. பொன்னேரியில் உள்ள கல்லூரியில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பில் உள்ள கமிட்டியில் அந்தப் பகுதியில் இருப்பவர்களையே போட்டு, அந்தப் பகுதியில் உள்ள மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் முதலிடம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை செங்கற்பட்டு ஜில்லாவில் 1947-ம் ஆண்டில் 3 தான் இருந்தன. இன்று சுமார் 100 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளைச் சமீப

[திரு. அ. ராகவ ரெட்டி] [7th March 1966

காலம் வரை ஜில்லா போர்டு தலைவர்கள் கண்காணித்து வந்தார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எஸ்.டி.இ.ஓ. என்று ஒரு அதிகாரியைப் போட்டு அவர் ஜில்லா பூராவும் சுற்றி கண்காணித்து கொண்டிருக்கிறார். செங்கற்பட்டு ஜில்லாவைப் பொறுத்தவரை, ஒரு அதிகாரி மதுராந்தகத்திலிருந்து ஆர்ம் பாக்கம் வரையில் சுமார் 100 மைல் நீளம் உள்ள பகுதியில் இருக்கக் கூடிய பள்ளிகளைக் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. அவர் அவற்றையெல்லாம் சென்று பார்ப்பதற்கு வாகன வசதி இல்லாமல் பஸ்ஸிலேயே சென்று பார்க்கவேண்டியிருக்கிறது. இதனால் எல்லாவற்றையும் சரியாகப் பார்க்க முடிவதில்லை. அவர்கள் ஒரு மாதத்தில் இரண்டு மூன்று பள்ளிகளைத்தான் பார்க்க முடிகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த எஸ்.டி.இ.ஓ.-க்களுக்கு ஜீப் வசதி செய்து கொடுத்தால்தான் அவர்கள் நல்ல முறையில் பள்ளிகளைக் கண்காணிக்க முடியும். அப்போதுதான் நாம் செலவு செய்யக்கூடிய பணத்தினால் பலன் ஏற்பட முடியும்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தில் 2,235 உயர்நிலைப் பள்ளிகள் இருப்பதாக அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டிலும் நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிகளை ஆரம்பித்து வருகிறார்கள். ஆனால் அந்த அளவுக்குக் கட்டட வசதியோ, மற்ற வசதிகளோ இல்லாமல் இருப்பதன் காரணமாக, பள்ளிகள் நல்ல முறையில் நடத்த முடியாத நிலை இருக்கிறது. என்னுடைய பகுதியில் உள்ள ஒரு பள்ளியிலிருந்து கடந்த ஆண்டு 64 மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்குப் போனார்கள். அதிலே நான்கு பேர்கள்தான் பாஸ் செய்தார்கள் என்று கேள்விப்பட்டேன். 64 பேரில் 4 பேர்தான் பாஸ் செய்தார்கள் என்றால் அதற்கு யார் காரணம்? ஹெட்மாஸ்டர் காரணமா, எஸ்.டி.இ.ஓ. காரணமா, எஜுகேஷன் டிப்பார்ட்மெண்டில் உள்ள மற்ற அதிகாரிகள் காரணமா என்று தெரியவில்லை. இதே நிலைதான் எங்கு பார்த்தாலும் இருந்து கொண்டிருக்கிறது. கிராமங்களில் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளில் வேறு வசதி இல்லாமல் போனால்தான் பிள்ளைகளைச் சேர்க்கிறார்களே தவிர, மற்றப்படி வசதியுள்ளவர்கள் எல்லாம் தங்களுடைய பிள்ளைகளைச் சேர்ப்பதில்லை. அந்த நிலையை மாற்றியமைக்கவேண்டும். பள்ளிகளைப் பொறுத்து ஜில்லாபோர்டு தலைவர்களிடமிருந்து நிர்வாகத்தை எடுத்துக் கல்வி இலாகாவுக்குக் கொடுக்கும்போது அது நல்ல முறையில் நடக்குமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அனுபவத்தில் அந்த மாதிரி நல்ல முறையில் நடப்பதாகத் தெரியவில்லை. சம்பந்தப்பட்ட டைரக்டர் அதைக் கவனித்து நல்ல முறையில் பள்ளிகள் நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், சென்னை போன்ற நகரங்களில் காண்ட்ரிப்யூஷன் கொடுக்கும்படி கேட்பதில்லை. கிராமங்களில் உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க வேண்டுமென்று சொன்னால் முதலில் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும். கட்டடத்திற்கு ஆகும் செலவில் பாதி



7th March 1966] [திரு. அ. ராகவ ரெட்டி]

யை நீங்கள் கொடுக்கவேண்டும், பாதி அரசாங்கம் கொடுக்கும் என்று சொல்லுகிறார்கள். கிராமவாசிகளுக்கு மட்டும் ஏன் இந்த நிர்ப்பந்தம் இருக்கவேண்டும்? செங்கற்பட்டு ஜில்லாவைப் பொறுத்தவரை இரண்டு லட்சம் ரூபாய் இந்த ஆண்டு பயன்படுத்திக் கொள்ள முடியாமலே சரண்டர் செய்யப்பட்டு விடும் என்று கேள்விப்பட்டேன். வருகிற ஆண்டிலாவது அந்த நிலைமை ஏற்படாமல் செய்யவேண்டும்.

ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை பஞ்சாயத்து யூனியன்களிடத்திலே பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் எந்த முறையில் நடக்கின்றன என்பது பெரிய அதிகாரிகளுக்கு, டைரக்டர் போன்றவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ; அந்தப் பள்ளிகளைப் பள்ளி என்றே சொல்ல முடியாத நிலை இருக்கிறது. 100-க்கு 25 பள்ளிகள் அந்த நிலையில்தான் இருக்கின்றன. உதாரணமாக கும்மிடிப்பூண்டியிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்திலே 600 பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பள்ளிக்கூடத்தில் உள்ள இடமோ, 125 பிள்ளைகளுக்குத்தான் போதுமானது. சுற்றுப்புறத்தில் காலியிடம் கூட கிடையாது. அந்த கட்டடத்திற்கு எல்லாப் பக்கங்களிலும் வீடுகளும் ரோடுகளும் இருக்கிறது. மந்தை போல் அங்கு பிள்ளைகளை ஆசிரியர்கள் அடைத்து வைத்திருக்கிறார்கள். கல்வி இலாகாவினர் என்ன செய்கிறார்கள் என்றே புரியவில்லை. குறிப்பாக, எங்கள் பகுதியைப் பொறுத்தவரை டெபுடி இன்ஸ்பெக்டர் ஒருவர் இருக்கிறார். இந்த ஆண்டு பள்ளிகளுக்குத் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் கிடைக்காத காரணத்தால் 'அன்-டிரெயின்டு டீச்சர்ஸ்' 30 பேரை நியமித்தார்கள். ஆனால் அந்த டெபுடி இன்ஸ்பெக்டர் 'அன்-டிரெயின்டு டீச்சர்ஸை' அப்பாயின்ட்மென்ட் செய்ய அதிகாரம் இல்லை என்று சொல்லி அவ்வளவு பேரையும் நீக்கிவிட்டார்.

அந்த 30 பேர்களை பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் ஊஸ்ட் செய்து விட்டார்கள். அதைப்பற்றி டி.டி.சி. கூட்டத்தில் கலெக்டரிடம் சொன்னபோது அவர்கள் அதைப்பற்றிக் கேட்க அவ்வளவு ஆசிரியர்களையும் மூன்று மாதங்கள் கழித்துத் திரும்பவும் நியமித்திருக்கிறார்கள். மூன்று மாத காலம் 30 ஆசிரியர்கள் இல்லாமல் இந்த ஆண்டு பல பள்ளிக்கூடங்கள் கஷ்டப்பட்டிருக்கின்றன. டெபுடி இன்ஸ்பெக்டரும், பஞ்சாயத்து யூனியனும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதில்லை.

"மதிய உணவு" அமல் திட்டம் டெபுடி இன்ஸ்பெக்டர் கையில் கொடுக்கப்பட்ட பிறகு அது ஒழுங்காக நடப்பதில்லை. என் தொகுதியைப் பொறுத்தவரையில் 6,000 மைல்களுக்கு அப்பால் இருக்கும் அமெரிக்காவில் இருந்து வந்த 'கேர்' CARE பால் பவுடரை இந்த ஆசிரியர்களும் டெபுடி இன்ஸ்பெக்டரும் சேர்ந்து விற்றுவிட்டு அதை சென்னைக்கு எடுத்துக் கொண்டு வரும்போது போலீஸார் பார்த்து இரண்டு மூன்று வழக்குகள் என் பகுதியில் போட்டிருக்கிறார்கள். இந்த நிலை தமிழகம் பூராவும் இருக்கிறதா, இல்லையா என்று சொல்லமுடியாது. என் பகுதியைப் பொறுத்தவரையில் இந்தமாதிரி இருந்து கொண்டிருக்கிறது.

[திரு. அ. ராகவ ரெட்டி] [7th March 1966

கடைசியாக, பாலிடெக்னிக், என்ஜினியரிங் காலேஜஸ் பொறுத்த வரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம் மாநிலத்தில் பல பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் செங்கற்பட்டு ஜில்லாவில் வட பகுதியில் பொன்னேரி, திருவள்ளூர், திருத்தணி ஆகிய இந்த மூன்று தாலுகாக்களில் அவை ஒன்று கூட ஆரம்பிக்கப்படவில்லை. கனம் முதல் அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியைச் சார்ந்தவர் என்று நாங்கள் பெருமைப்படுகிறோம். அவர் பெயரில் வைக்கப்பட்டுள்ள பாலிடெக்னிக் கூட காஞ்சிபுரத்தில்தான் இருக்கின்றது. இந்த ஆண்டு ஆரம்பிக்கப்போகும் பாலிடெக்னிக்கில் ஒன்றை அந்தப் பகுதியில் ஏற்படுத்தவேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த என்ஜினியரிங் காலேஜ் அட்மிஷன் சம்பந்தமாக ஒவ்வொரு வருஷமும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். செங்கற்பட்டு ஜில்லாவிற்கு ஒதுக்கப்படும் இடங்களை சென்னையில் இருக்கும் பெரிய அதிகாரிகள், பெரிய வியாபாரிகள், பணக்காரர்கள் அத்தனை பேர்களும் எப்படியோ அதற்கு வேண்டிய ரெசிடென்ஷியல் சர்டிபிக்கேட் போன்றவற்றை வாங்கிக் கொண்டு வந்து எங்களுக்குக் கிடைக்கவேண்டிய இடங்களை அவர்கள் பெற்றுக் கொண்டு போகிறார்கள். அந்தந்தப் பகுதிகளில் ரெஸிடன்ஷியல் சர்டிபிகேட் கொடுக்கும்போது அந்தந்த ஊர் வாக்காளர் பட்டியலில் அவர்கள் பெயர்கள் இருந்தால்தான் அவர்களுக்குக் குடியிருப்பு சர்டிபிகேட் கொடுக்கும்படி டெப்டி தாசில்தாருக்கு உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு சில நிமிடங்கள் வாய்ப்புக் கொடுத்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சா. கணேசன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற கல்வி மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைப் புலப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். மொத்தத்திலே இந்தியாவிலே தமிழகம் கல்விப் பணித் துறையிலே முன்னணியில் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவிலாவது நமக்கு ஓரளவு திருப்தி. அந்தத் திருப்தி முழு நிறைவாக மாறி விடக் கூடாது, மாறி விட முடியாது. இன்னும் வளர வேண்டும், வளர்வதோடு மட்டுமல்ல வளர்ச்சி செம்மையானதாகவும் இருக்க வேண்டும். வளர்ச்சி என்பது நீளத்தில் மட்டுமல்ல; ஆழத்திலும் அகலத்திலும், தரத்திலும் வளர்ச்சியுடையதாக இருக்கவேண்டும் என்பதைக் கணிக்கிறபோது சில கருத்துக்களை நான் முன்னுக்குக் கொண்டு வருவது இன்றியமையாதது என்று எனக்குத் தோன்றுகிறது. கல்வியின் அடிப்படை எழுத்தறிவு, கணக்கு, எழுத்தறிவும் கணக்கும் அதன் அடிப்படை. அதிலிருந்து பிறகு தொடங்குகிறது பொது முறையிலே. அதற்குப் பிறகு உயர்நிலைக்கு வருகிற போதுதான் சிறப்பு இயல்பு கல்வி முறையில் வளருகிறது. அதன் பிறகு அது கல்வி நெறியில் தழைக்கவேண்டும். அதன் பிறகு விஞ்ஞானம், கணிதம், விவசாயம், தொழில் முதலிய பல்வேறு துறைகளில் அது படர்ந்து, அல்லது பிரிந்து இயங்கிப் பலன் தர வேண்டும். இந்த நிலையிலேதான் அந்த ஒவ்வொரு துறையின்



7th March 1966] [திரு. சா. கணேசன்]

மீதும் ஆய்வுகள், ஆராய்ச்சிகள் நடைபெறவேண்டும். இந்த ஒரு அமைப்பு நெறியை மனத்திலே கொண்டு கல்வித்துறை செயல்படுகிறது என்பதை நாம் அறிவோம். அந்த அடிப்படையில் முதலில் என்னென்ன செய்யவேண்டும் என்பதைச் செய்திருக்கிற அளவிலே முழு நிறைவு பெற்றுவிடாமல் இன்னும் மேற்கொள்ளப்படவேண்டும் என்பனவற்றை முதலில் கூறி மேலே செல்ல நான் துணிகிறேன். கிராமந்தோறும் துவக்கப் பள்ளிகள் இருக்க வேண்டும். பாரதி பேசினான், "வீதிகள்தோறும் இரண்டொரு பள்ளி, வீடுகள்தோறும் கலைகளின் விளக்கம்" என்று. ஆனால், இன்றுள்ள நிலையில் வீதிகள்தோறும் இரண்டொரு பள்ளிகள் வைக்க முடியாவிட்டாலும் கிராமங்கள்தோறும் ஒரு பள்ளி, அதாவது முதல் நிலைப் பள்ளி இருக்க நிர்ப்பந்தமான ஒரு நெறி முறையை நமக்கு நாமே வகுத்துக் கொண்டு விடவேண்டும், ஒரு குறிப்பிட்ட ஜனத்தொகை அளவைக் கொண்டு பல கிராமங்களைக் கொண்டதன் ஒரு வட்டத்திற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி என்ற நெறியையும் வகுத்துக் கொண்டுவிடவேண்டும். இப்படி வகுக்கிறபோது சில பிராந்தியங்கள் செல்வ வளம் உள்ளவையாக இருக்கலாம், சில பிராந்தியங்களில் செல்வ வளம் மிகக் குறைந்த அளவிற்குக் காணப்படலாம். அங்கெல்லாம் ஒரே கலைக்கோலைப் போட்டுக்கொண்டு இவ்வளவு தொகை தந்தால்தான் அல்லது இத்தனை அளவிற்குக் கட்டடம் முதலியவை கட்டிக் கொடுத்தால் தான் உயர்நிலைப் பள்ளி அமைக்க முடியும் என்று கூறுவது—அது தவறு என்று சொல்லவில்லை—அது செவ்விய நெறியாக ஆக மாட்டாது. குறிப்பாக எங்கள் பக்கங்களை எடுத்துக் கொண்டால் நேற்று வரையில் ஒரு உயர்நிலைப் பள்ளியோ அல்லது ஆரம்பப் பள்ளியோ கூட கவர்ன்மென்டிலிருந்து செய்தது கிடையாது. ஒரு ஆஸ்பத்திரி கூட கிடையாது. அத்தனையும் தனிப்பட்டவர்கள் நன்கொடை மூலமாகச் செய்தார்கள். வளம் இருக்கிறவர்கள் இருக்கிறபோது அப்படிச் செய்வதை ஆட்சி முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்வது சரி. வளம் இல்லாத இடங்களில் அல்லது வளம் வற்றிவிட்டபோது எங்கும் ஒரே நிலையை வலியுறுத்துவது, நிர்ப்பந்தப்படுத்துவது செவ்விய முறையாக ஆகமாட்டாது. அதே போல் பல பகுதிகள் உள்ளன. என் ஜில்லா, அந்த ஜில்லா, இந்த ஜில்லா என்று நான் பேசவில்லை. வளம் மிக்கவர்கள் நிறைய இல்லாத, அல்லது சாதாரண ஏழை எளியவர்கள், பாட்டாளி மக்கள் இவர்களை மட்டும் கொண்டுள்ள பிராந்தியங்கள் தமிழகத்தில் பல பல; அங்கெல்லாம் இந்த கான்ட்ரிப்யூஷன் என்று சொல்கிற ஒரு நன்கொடைத் தொகை தந்துதான் ஆக வேண்டுமென்று நிர்ப்பந்திப்பது கல்வியை வளர்ப்பதற்கு ஒரு சிறந்த முறை என்று சொல்லிவிட முடியாது. அதை நான் பழிக்கவில்லை. அதை சிறந்த முறை என்று ஏற்றுக் கொண்டு விடமுடியாது. உள்ள இடத்தில் நிறையப் பெற்று, இல்லாத இடங்களின் தேவைக்கேற்ப அளிப்பதுதான் சோஷலிச அரசு மட்டுமல்ல செவ்விய அரசினுடைய நெறி என்பதை யாரும் மறந்து விட முடியாது. இதை மனத்தில் கொண்டு, செயல்படுகிற போது இந்த நெறியை முழுக்க முழுக்க கையாள வேண்டுமென்று

[திரு. சா. கணேசன்] [7th March 1966

நான் வேண்டிக்கொள்கிறேன். இனி கல்வி நிலைகளுக்கு வருவோம். முதல் நிலைப் படிப்பு என்று நான் கூறுவது ஒன்று முதல் நான்காவது வரை உள்ளது. நம்முடைய துரதிருஷ்டம், ஆரம்பப் பள்ளிகளில் மட்டமான ஆள்களை, கல்விப்பயிற்சி முறையைப் படித்தவர்களாக இருந்தால்கூட அங்கு அவர்கள் உபாத்தியாயர்களாக இருக்கலாம் என்ற மனோபாவத்தில் சர்க்கார் அனுமதிப்பது என்பது. லோயர் கிரேட் அல்லது ஹையர் கிரேட் இருந்தால் போதும் என்றால் அங்கு முன்னேற்றம் ஏற்பட முடியாது. இதுதான் அடிப்படைத் துறை. ஆயிரக் கணக்கான, லட்சக்கணக்கான ரூபாய் செலவிட்டுக் கட்டடம் கட்டுகிறபோது, சிறந்த ஒரு என்ஜினியர் அடித்தளம் போடுகிறபோது நான் தேவை. மேல் பூச்சு பூசுவதற்கு அல்லது வர்ணம் அடிக்கிறபோது சிறந்த ஒரு என்ஜினியரிங் அறிவோ அல்லது திறமையோ தேவை என்று சொன்னால் அதை என்னால் புரிந்து கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியாது. அதேபோல்தான் பள்ளிக்குள்ளே விடப்பட்ட மாணவர்களின் உச்சரிப்பு செவ்விய தாகவும் ஒழுங்கானதாகவும், இருந்து பள்ளியைக் கண்டு அஞ்சாமல் பள்ளியில் உள்ள ஆசிரியர்களின்—ஆணோ பெண்ணோ—கனிவு, பரிவு, அறிவு, அவர்களின் மனோபாவத்தை உணரும் ஆற்றல் ஆகிய இவற்றில் ஈடுபட்டு வீட்டை விட்டு எப்போது பள்ளிக்குப் போவோம் என்ற உணர்ச்சி மாணவர்களுக்கும் ஏற்படும் வகையில் ஆசிரியர்களை அங்கு அமர்த்தவேண்டும். இந்த அடிப்படையில் கல்வி, அ, ஆ, சொல்லிக்கொடுக்கின்ற நிலையிலிருந்து ஆரம்பமாகும். இவ்விதம் சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு 250 ரூபாய் வரை சம்பளம் இருக்கவேண்டும். முக்கியமாக அவர்களுடைய தரத்தை உயர்த்தவேண்டும். இந்த வகையில் உயர்ந்த சம்பளம் கொடுத்தேயாகவேண்டும். இப்போது ஆரம்ப நிலையில் படித்துக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளை நாம் காண்கிறோம். பெரும்பாலான பிள்ளைகளுக்கு தமிழ் எழுத்தைச் சரியான முறையில் உச்சரிக்கத் தெரிவதில்லை, சரியாக எழுதத் தெரிவதில்லை; தமிழ் மொழியிலேயே இந்த நிலை என்றால் பிற மொழிகளைப்பற்றி கேட்கவே வேண்டாம். இந்த எண்ணத்தை மனத்திலே கொண்டு சரியான முறையிலே சிறந்த முறையிலே கற்றுக்கொடுக்கக் கூடிய தக்கவர்களை நியமிக்கவேண்டும். இந்தக் கல்வி தான் வாழ்க்கையிலேயே அடிப்படையாக அமைகிறது. அதற்கேற்ற வகையில் உச்சரிப்பு, கையெழுத்து இவைகளை எல்லாம் அடிப்படையிலேயே சீரிய வழியில், சிறந்த வழியில், செவ்விய வழியில் சொல்லிக்கொடுக்கின்றவர்களைப் போட்டால் தான் அடிப்படையில் கல்வியின் தரம் நன்றாக இருக்கும் என்பதை நாம் மறந்து விடப்படாது.

இனி, மேல் வகுப்புக்களை எடுத்துக்கொள்வோமேயானால்—ஆரம்பக் கல்வி என்பது, குழந்தைகளுக்கு ஆர்வம், படித்தல், எழுதல், இவைகளைத்தான் முக்கியமாக போதிக்கின்றோம்—இவை அடிப்படையாக மனதில் பதிந்து விட்டால் மேல் வகுப்புகளுக்குச் செல்லும்போது, அங்கு சொல்லிக்கொடுக்கின்ற கருத்துக்களை சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். உச்சரிப்புத்தான் அடிப்



7th March 1966] [திரு. சா. கணேசன்]

படையாக இருக்கவேண்டும். அடிப்படையிலேயே 'வாலை பலம்' என்று உச்சரிக்க ஒருவன் கற்றுக்கொண்டால், அவன் சாகிற வரையிலும் 'வாழைப்பழம்' என்று உச்சரிக்க முடியாது, அது மட்டும் அல்ல, 'வாளைப்பழம்' என்று கூட உச்சரிக்க முடியாது. இவ்விதமான குறைபாட்டை நீக்குவதில் முக்கியமாக கவனம் செலுத்தவேண்டும். இதற்காக நல்ல முறையில் ஊதியம் கொடுக்கக்கூடிய முறையில், மரியாதை கொடுக்கக் கூடிய முறையில் அடிப்படை ஆசியர்களை நியமிக்க வேண்டும். இப்படிப்பட்ட அடிப்படை ஆசிரியர்கள்தான் வாழ்க்கைக்கே முக்கியம், அதனால் தான் மற்ற எந்த இடத்திலும் ஆசான் என்று சொல்லப்பட்டாலும், எழுத்தை அறிவிக்கின்ற ஆசிரியரை இறைவனுக்குச் சமமாக ஒப்பிட்டிருக்கிறார்கள், 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்று இறைவனுக்குச் சமமாக எழுத்து அறிவிக்கின்ற ஆசானைச் சொல்லுகின்றோம். அந்த அளவிற்கு மரியாதை கொடுத்திருக்கிறது நமது தமிழகம். அந்த அளவிற்கு அடிப்படையாக எழுத்து அறிவிக்கின்றவனுக்கு எத்தகைய மரியாதை கொடுத்து வந்திருக்கிறார்கள் தமிழர்கள் என்பது செவ்வியதாக நமக்குப் புலப்படுகிறது. இதை நாம் மறந்துவிடப்படாது.

முதல் நிலைப் பள்ளியில் இருக்கக்கூடிய பணி, முழுக்க முழுக்க உச்சரிப்புக்குத்தான். உச்சரிப்பு என்று சொல்லும்போது, எழுத்தை எப்படி உச்சரிப்பது, எப்படி எழுதுவது என்பதைக் கற்றுக்கொடுக்கவேண்டும். மேலை நாடுகளில் உச்சரிப்பை எப்படிப் பழகுவது என்பதற்கு 'லிங்க்வா போன்' போன்ற கருவிகள் மூலம் செயல்பட்டு வருகிறார்கள். அந்த அளவில் உச்சரிப்பைச் செவ்விய முறையில் சொல்லிக்கொடுப்பது மிகவும் முக்கியமான அடிப்படை என்பதை நாம் மனதில் இருத்திச் செயல்படவேண்டும் என்று விண்ணப்பித்துக்கொள்ளவேண்டியவனாக இருக்கிறேன். அதற்கடுத்தபடியாக இருப்பது, கணக்கு, அதாவது கூட்டல், கழித்தல்—ஒன்று, இரண்டு மூன்று என்று கணித்தல், கூட்டல், கழித்தல்களைக் கற்றுக் கொள்வது—இவையெல்லாம் முதல் நிலை. அதிலும் கணக்கு என்பதில் எழுதுகிற கணக்கு, மனதில் படிக்கிற கணக்கு, இவ்வாறு முதல் நிலையில் பயிற்சி கொடுக்கவேண்டும். அதற்கு அடுத்த பயிற்சி, இடைகாலப் பள்ளியில் படிக்கின்ற நிலை அதாவது 5 முதல் 8-வது வரை இருக்கின்ற வகுப்புக்கள் என்று நான் கணக்கிடுகின்றேன். இதில் தான் கையெழுத்துத் திறம்பட அமைவதற்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். இதை நான் ஆண்டு தோறும் சொல்லிக்கொண்டே வருகிறேன். ஒவ்வொரு பள்ளி மாணவனும் கட்டாயமாக—கட்டாயமாக என்று சொல்வதை விட நிச்சயமாக என்று சொல்வது தான் பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன். நிச்சயமாக 'காப்பி' எழுதக்கூடிய நிலை இருக்கவேண்டும். பழைய காலத்தில் சட்டம் எழுதுவது என்று சொல்வதுண்டு. ஆசிரியர்கள் மேலே எழுதிக்கொடுத்ததை மாணவர்கள் அதைப்பார்த்து கீழே எழுதுவது என்பது தான் காப்பி எழுதுவது. இங்கு குறுக்கி சிறிய எழுத்தில் எழுதாமல் பெரிய எழுத்துக்களில் எழுதும்படி பயிற்சி கொடுக்கவேண்டும்.

இடை நிலைப் பயிற்சியில், முக்கியமாக சீரிய முறையில், செவ்விய முறையில், நேரிய முறையில், எழுத்துக்களை அகலம், உயரம் இவைகளை எல்லாம் கணித்து எழுதப் பழக்கவேண்டும். இந்தப் பயிற்சிகளில், நிச்சயமாக மாணவர்கள் பென்சிலைத்தான் உபயோகப்படுத்தவேண்டும். பென்சில், சிலேட் குச்சி—பல்பம் என்று சொல்லுவார்களே அது—இவைகளைத்தான் எழுத்துக்களை எழுதுவதற்கு அனுமதிக்கவேண்டுமே தவிர, வேறு எந்தக் கருவிகளையும் அனுமதிக்கக்கூடாது. இதை நான் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சொல்லியிருக்கிறேன். வகுப்புக்களில் பிள்ளைகள் பேனாப் பேனாவைக் கொண்டு வா, என்று சொல்லக்கூடாது, பேனாக் கொண்டு எழுதும் போது கூட ஃபவுண்டன் பென் கூடாது, நல்ல சாதாரணப் பேனாக்களைத்தான் உபயோகிக்க வேண்டும், நல்ல பேனாவும், இங்க்கும் கொண்டே எழுத வேண்டும், அப்போது தான் 'தின் லைன்'—'திக் லைன்' எல்லாம் நன்றாகப் படியும், மேல் நோக்கி எழுதும்போது தின் லைனும் கீழ நோக்கி எழுதும் போது திக் லைனும் இயல்பாகவே அமையும். அதற்குத் தகுந்த முறையில் வாய் பிளந்தும் கூடியும் கொடுக்கும். இதிலும் இன்னும் 'பால் பாயின்ட்.' வேறு வந்திருக்கிறது. இதைக்கொண்டு எழுதும் போது, சில இடங்களில் படும், சில இடங்களில் படாது, இவற்றையெல்லாம் நான் சொல்லும்போது, சாதாரண விஷயங்கள் என்று ஒதுக்கிவிடக்கூடாது, முக்கியமாக மாணவர்கள் ஆரம்பத்தில் கல்வி பெறும்போது, அது ஆர்வமுள்ளதாகவும், ஒழுக்கமாகவும், செவ்வியதாகவும், சரியாகவும் இருக்கவேண்டியது முக்கியம் என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

இனி, உண்மையாகவே கல்வி தொடங்குகின்ற நிலை, அதாவது முதுநிலைப் பள்ளியில் பெறுகின்ற பயிற்சி. இதில் கல்வி பெறும் போதுதான், சொற் கோவை, சொற்களின் சிறந்த பொருள், எழுதுகின்ற எழுத்தின் நோக்கம் இவைகளை எல்லாம் மாணவர்கள் கற்கிறார்கள். இது முதுநிலைப்பள்ளி, இறுதிநிலைப் பள்ளி என்றெல்லாம் சொல்லப்பட்டு வருகிறது. அதாவது 9-வது முதல் 11-வது வகுப்பு வரை—ப்ரி-யூனிவர்சிட்டிக்கு வருவது வரையிலும் கூட—நான் முன்னால் குறிப்பிட்ட சில அடிப்படைகளோடு இங்கு வந்து சேருகிறார்கள். இங்கே தான் சரியான முறையில் மாணவர்கள் கற்கத் தொடங்குகின்றார்கள். அப்போது தான் ஆசான் சொல்வதைக் கேட்கத் தொடங்குகிறார்கள். ஆசான் சொல்வதைக் காதால் கேட்கிறார்கள், கேட்கும் போது ஐயம் ஏற்படுகிறது, ஐயம் ஏற்படுகின்ற நேரத்தில் கேள்விகளைக் கேட்கத் தோன்றுகிறது, அதற்கு விடையும் கிடைக்கிறது. அதை ஆராய்ந்து பார்க்கின்றார்கள். அவ்விதம் ஆராய்ந்து பார்க்கக்கூடிய பக்குவம், அல்லது தரம், இந்த இடத்திலிருந்து தான் வளருகிறது என்பதை நாம் மறந்துவிடப்படாது. ஆகவே தான் இந்த இடத்தில் தான் மனிதன் தனக்குத் தோன்றிய ஆர்வத்தின் காரணமாக எதில் பயிற்சி பெறத் திரும்பலாம் என்கின்ற பாதை—ஏற்படுகிறது—இந்த இடம் தான் ஒரு சந்தியாக வந்து சேருகிறது. நான் டாக்டராக வேண்டுமா அல்லது



என்ஜினியராக வேண்டுமா அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தராக வேண்டுமா, அல்லது சட்டத்துறையில் பக்குவமடைய வேண்டுமா என்றெல்லாம் ஏற்படுகின்ற எண்ணங்களுக்கு வழி பிரித்துவிடுகிற இடமாக இந்த நிலை வந்து சேருகிறது. இதுவரைக்கும் நாம் மாணாக்கர்களிடம் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலையோடு—மாணாக்கர்களோடு ஆசிரியர்களையும் கணிக்கவேண்டும், அவர்களை மற்றவர்கள் கவனிக்கத்தக்க அளவிற்கு, வாய்ப்பும் வசதியும் இருக்கின்ற அளவுக்கு, முக்கியமாக எல்லோருக்கும் அவர்களிடம் மதிப்பு இருக்கின்ற அளவிற்கு ஆசிரியர்களுக்கு நாம் வழிவகை செய்து கொடுக்கவேண்டும். குறைந்தபட்சம் என்னுடைய கருத்து, மூன்று ஆண்டுகளுக்கொருமுறை, 'அறிவுத் துலக்கப் பயிற்சி'—ரிஃப்ரஷர் கோர்ஸ்—கொடுக்கவேண்டும். அப்போது புதிய நிலையில், முக்கியமாக ஏற்பட்டிருக்கின்ற மாறுதல்கள், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்ற கல்வித்துறையில் எந்த அளவிற்கு பல்வேறு துறைகளின் நிலைமைகள் இருக்கின்றன என்பதில் எல்லாம் தங்கள் கவனத்தைச் செலுத்தி அதற்கேற்ற முறையில் தங்களை வளப்படுத்திக்கொண்டு, தயார் படுத்திக்கொண்டு—என்னென்ன முறையில் கல்வியைப் புகட்டவேண்டும என்கின்ற அறிவுத் திறமையுடன் தங்கள் பணியினை அவர்கள் செவ்வியதாக ஆற்ற முடியும். இன்னொன்றையும் நாம் கவனிக்கவேண்டும். இப்படியெல்லாம் செய்தால்தான் நல்ல, திறமையுள்ள, தகுதியுள்ள, தரமுள்ள ஆசிரியர்களையும் மாணாக்கர்களையும் நாம் தயார் செய்ய முடியும். அப்போது தான் மாணவர்கள் பரவலாக பல வழிகளில் சென்று கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றமும் குறையும் மாணவர்களின் உள்ளத்தைக் கல்வித்துறையில் ஈடுபடுத்தி மேம்பாடு அடையச் செய்து, தங்கள் உள்ளத்தைச் சிறப்புடையதாக்கிக்கொள்ள மாணாக்கர்களால் முடியும் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

அதோடு, கல்லூரி, உயர்நிலைப்பள்ளி என்ற நிலைகளில் எல்லாம் சமயக் கல்வியை நிச்சயமாக மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும். சமயக் கல்வி என்று சொல்லும்போது, ராமன், சீதை இவர்களைப்பற்றியெல்லாம் போதிக்கப்படவேண்டும் என்பதல்ல. நான் இதைச் சொல்வதால், என்னை மதப்பிரசாரம் செய்யச் சொல்லுகிறான் என்று யாரும் எடுத்துக்கொள்ளப்படாது. ஆங்கிலத்தில் 'He is a religious man', என்றால் மதவாதி என்று பொருளல்ல. ஆனால் ஒழுக்க சீலன் என்பதே மரபுப் பொருள். வாழ்க்கையில் ஒழுங்காக செல்லவேண்டிய கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்கு, ஒழுக்க நெறிகள், சமய நெறிகள் பற்றிய அறிவுகளைப் பெறும்படியான அளவிற்கு அறம், ஒழுக்கம், சீலம், நீதி ஆகிய இவைகளை எல்லாம் போதித்தாகவேண்டியது தலையாய கடமை என்பதை வற்புறுத்திக் கூறிக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

[திரு. சா. கணேசன்] [7th March 1966

12-30 p.m. அதோடு கூட இந்த 'அ, ஆ, வகுப்பு' இருக்கிறதே, அதை பாலர் வகுப்பு என்று சொன்னாலும், ஆரம்ப வகுப்பு என்று சொன்னாலும் எப்படிச் சொன்னாலும் சரி, அங்கிருந்து எது வரையில் சொல்லுகிறார்களோ அது வரையில் அவர்களுடைய வளர்ச்சிக் குறிப்பேடு (History Sheet) சென்றுகொண்டே இருக்கவேண்டும். வளர்ச்சிக் குறிப்பேடு என்று சொன்னவுடனே சில பேர்களுக்கு அவர்கள் ஃபைன் கொடுத்தது போன்றவைகளெல்லாம் அதிலே வரும் என்று எண்ணவேண்டாம். அந்த மாதிரிக் கஷ்டங்கள் எல்லாம் இல்லாமல் அவர்களுடைய நெறி, நோக்கம், பயிற்சி, திறமை முதலிய எல்லாம் அதிலே தொடர்ந்து குறிக்கப்பட்டு வர வேண்டும்.

இப்படியே ஏராளமாகச் சொல்லலாம். ஆனால் நேரம் தான் குறைவாக இருக்கிறது. குறிப்பாகச் சிலவற்றை மட்டும் பேசி விட்டு—பேசிவிட்டு என்று கூட இல்லாமல்—உச்சரித்து விட்டுச் செல்லுகிறேன்

வேண்டாத அளவுக்கு எக்ஸர்ஸைஸ் நோட்டுகளை வாங்கிச் சுமக்கவேண்டும் என்ற நிலை இன்னும் அறுபடவில்லை. கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாகப் பல முறை எடுத்துக் கூறப்பட்டும் இதற்கு ஒரு விதியாவது போடவேண்டும். எந்த வகுப்பு மாணவன் ஆனாலும் 10 எக்ஸர்ஸைஸ் நோட்டுகளுக்கு மேல் இருக்கக்கூடாது, அப்படி யாராவது வாங்கினால், அல்லது வாங்கும் படி கட்டாயப்படுத்தினால் அந்த மாணவர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ ஒரு கரும் புள்ளியாவது இடம் பெறும் என்று விதி செய்ய வேண்டும். பாடக் குறிப்புகள் எல்லாம் போடுவதைத் தடை செய்ய வேண்டும். எல்லா நிலைகளிலும் தமிழைப் பாட மொழியாக ஆக்கி நல்ல பெரு வளர்ச்சி அடைய வகை செய்யவேண்டும்

■ ■ ■

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நோட்ஸ் போடுவதைத் தடை செய்யவேண்டுமென்றால், ட்யுட்டோரியல்ஸ் இருக்கின்றனவே அவைகளை என்ன செய்வது ? அவைகளைத் தடை செய்தால் செய்யலாம்.

திரு. சா. கணேசன் : அது எனக்குத் தெரியாது. நான் நினைப்பதைச் சொன்னேன்.

"தேனைப் பொழிந்த
தெளிவுரைகள் அத்தனையும்
கோனார் கொடுத்த கொடை !"

என்று ஒரு கல்லூரி மாணாக்கர் பாட்டே பாடி விட்டார். இதனால் ஆசிரியர்களிடத்திலே மரியாதை குறைகிறது. தமிழ் ஆசிரியர்களிடத்திலே, பிற ஆசிரியர்களிடத்திலே ஏன் மரியாதை குறைகிறது என்றால், இவர்கள் நோட்ஸைப் பார்த்துத்தான் பாடம் நடத்தவேண்டும். இல்லாவிட்டால் தெரியாது என்று மாணாக்கர்கள் எண்ணிவிடுகிறார்கள். ஆசிரியர்களிடத்திலே மரியாதை ஏற்படுவதற்காகவாவது இந்த நோட்ஸையெல்லாம் தடை செய்ய வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். முடிந்தால் செய்யுங்கள். இல்லாவிட்டால் ஆண்டவனுக்குத்தான் அர்ப்பணம்.



7th March 1966] [திரு. சா. கணேசன்]

இறுதியாகச் சொல்லும்போது, எல்லாம் தமிழில் வரவேண்டும் என்பதில் ஒன்றை மறந்துவிடப்படாது. கலைச் சொற்களெல்லாம் சர்வதேசச் சொற்களாக அமையவேண்டும். கருத்துக்கள் நிச்சயம் தமிழிலேயே எழுதப்பட வேண்டும். ஒரு சோதனைக் குழாயை எடுத்துக்கொள். அதில் சல்ஃபரைப் போடு என்று எழுதவேண்டும். கந்தகத்தைப் போடு என்று எழுதவேண்டாம். அந்த முறையில் இந்தமாதிரி செவ்விய முறையில் கல்வித் துறையை அமைக்க வேண்டும். அப்படி அமைய அமைச்சர் அவர்கள் துணை செய்யவேண்டும். ஆண்டவன் அருள் புரிய வேண்டும் என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு நடைபெறுகிற இந்தக் கல்வி மான்ய விவாதத்திலே நானும் கலந்து கொள்வதற்கு எனக்குக் கிடைத்த அந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கல்வி மானியத்தின் கீழ் நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஏறக்குறைய 43 கோடி ரூபாய்க்கு மேல் மான்யக் கோரிக்கையாகக் கோரியிருக்கிறார்கள். வழக்கமாக இந்தக் கல்வி மான்யக் கோரிக்கை மீது இரண்டு நாட்கள் விவாதம் நடைபெறவேண்டுமென்று இந்த மன்றத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வந்தும், அந்த ஆசை நிறைவேறாத ஆசையாகத்தான் இன்றும் இருந்து வருகிறது. 40 கோடி ரூபாய்க்கு 4 மணி நேரம் விவாதம் என்றால் ஒரு மணிக்கு 10 கோடி ரூபாய் ஆகிறது. மொத்த மான்யத்தைப் பற்றி ஒருவர் ஆறு நிமிடம் பேசுகிறார் என்றால் 1 கோடி ரூபாய் அளவுக்கு பேச்சு முடிந்து விடுகிற அளவுக்கு அவ்வளவு பெரிய மான்யமாக இருக்கிறது. இந்த நிலையில் 180 கோடி அளவுக்கு உள்ள மொத்த மான்யத்தை நான்கே நாட்களில் கூட முடித்து விடலாம். 40 நாட்கள் நடைபெறுகிற சட்ட சபையில் வன இலாகாவையும், வன விலங்கு இலாகாவையும் பற்றி விவாதத்திற்கு ஏராள நேரத்தை ஒதுக்கி இவ்வளவு பெரிய அளவுக்கு உள்ள மான்யத்திற்கு ஒதுக்கப்படும் நேரம் போதாது. மற்ற உறுப்பினர்களெல்லாம் குறைவான நேரத்திலும் பல கருத்துக்களைச் சொன்னது போல நானும் பல கருத்துக்களைத் தெரியப்படுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கனம் முதல் அமைச்சர் அவர்கள் விளக்கமான முறையில், விரிவான முறையில் 40 கோடி ரூபாய்க்கான திட்டங்களையெல்லாம் விளக்கியிருக்கிறார்கள். பாலைவனத்திற்கு மத்தியில் பனிக்கட்டியைப் பார்த்தால் நமக்குக் கூட சந்தோஷம் வருவது போல், அந்த மாதிரி பனிக்கட்டியைப் பார்க்கும் நோக்கில் அதைப் பாராட்ட வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட நல்ல அம்சங்கள் சில இந்த மான்யக் கோரிக்கையில் இருக்கின்றன. பனிக்கட்டிகள் பின்னால் கரைந்து போகுமாதலால் முதலில் எனது பாராட்டுதலைச் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

புதிய கல்லூரிகள் அமைந்திருப்பது வரவேற்கத் தகுந்த அம்சம். இந்த ஆண்டில் ஏழு அரசாங்கக் கல்லூரிகள் அமைந்திருக்கின்றன. அவைகளைத் தவிர தனியார் நிர்வாகத்தின் கீழ் 7 கல்லூரிகள் அமைந்திருக்கின்றன. அடுத்த ஆண்டில் புதிதாக 6 கல்லூரிகள் வரும் என்று வாக்களித்திருக்கிறார்கள். இது நல்ல பாராட்டத் தக்க அம்சம். இந்தக் கல்லூரிகள் தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் வரும் என்று சொல்லுகிறார்கள். அமைகிற கல்லூரிகளைப்பற்றிக் குறிப்பாக என் கருத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தென் ஆர்க்காடு மாவட்டத்திலே அமைக்கிற கல்லூரியை, துணைச் சபாநாயகர் அவர்களே, தங்களுடைய பகுதியாகிய கள்ளக்குறிச்சிப் பகுதியிலே, பிற்போக்காக உள்ள பகுதியிலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட ஆர்க்காடு பகுதியிலே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சண்முகம் அவர்களுடைய தொகுதி என்று பார்க்காமல் தென் பகுதியாகிய திருவண்ணாமலையில் அமைய வேண்டும். தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக . . . (குறுக்கீடு). முதலமைச்சர் அறந்தாங்கி என்கிறார்கள், மெத்த மகிழ்ச்சி. அமைகிற கல்லூரி திருவாரூரில் அமையலாம். அதுவும் பெண்கள் கல்லூரியாக இருப்பதால் மையமாக இருக்கிற திருவாரூரில் அமையலாம். அல்லது பிற்போக்கான பகுதியில் அமைப்பது என்றால், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதியில் அமையலாம். திருச்சி மாவட்டத்திலே எடுத்துக்கொண்டால், குளித்தலை பகுதியிலோ அல்லது முசிரி பகுதியிலோ அமைய வேண்டும். கோயம்புத்தூரிலே பவானி அல்லது கோபிச்செட்டிப் பாளையத்தில் அமையவேண்டும். மதுரையில் பெரியகுளம், தேனி, கம்பம் பகுதியில் அமைய வேண்டும். இந்த முறையில் புதிய கல்லூரிகள் அமைய வேண்டும் என்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு பெரிய வளர்ச்சிக்குப் பிறகும், 14 கல்லூரிகள் வந்த பிறகும், கல்லூரி வாயிலில் மாணவர்கள் படுகிற சிரமமும், பெற்றோர்கள் ஜூன் மாதத்தில் படுகிற சிரமமும்—30 கல்லூரிகளை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திறக்க வகை செய்யப்பட்டிருக்கிறது என்று ஒத்துக்கொண்டாலும்—சொல்ல முடியாத அளவுக்கு அவர்களுடைய கோரிக்கை நிறைவேறாது இருக்கிறது. 14 கல்லூரிகள் வந்த பிறகும் கூட, யுனிவர்சிட்டி செக்ஷன்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அனுமதி அளித்திருந்தும் கூட, 34,000-த்திலிருந்து 40,000-த்துக்குத்தான் அதிகரித்திருக்கிறது. 14 கல்லூரிகள் வந்தும் கூட 6,000 இடங்கள் தான் அதிகமாகியிருக்கிறது. அடுத்த வருஷம் 6 கல்லூரிகள் தான் வருகின்றன. ஐந்து வருஷத்தில் 30 என்கிறார்கள். இந்த வருஷமே 1½ லட்சம் மாணவர்கள் உயர்நிலைப்பள்ளிகளில் தேர்ந்திருக்கிறார்கள். அக்டோபரில் கொஞ்சம் கூடுதலாகியுள்ளது. இந்த 40,000 போக பாக்கி உள்ள மாணவர் சமுதாயத்தை தெருப்புறங்களில் நிற்க வைத்து, வேலையில்லாமல் திண்டாடுவதைத் தவிர்க்க ஷிஃப்ட் சிஸ்டத்தை அமல் நடத்த சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறார்கள்.





இந்தத் துறையில் ஆலோசனை நடத்துவது முக்கியம். இதைப் பற்றி விவரமாகப் பேச சந்தர்ப்பம் இல்லை. 1½ லட்சம் மேலும் மேலும் அதிகரித்து 2 லட்சம், 2½ லட்சம் என்று அதிகரித்துக் கொண்டு போகலாம். 43 கோடி ரூபாய் செலவு செய்து விட்டாலும், ஜனநாயகத்தின் அடித்தளமாக உள்ள கல்விக்குப் பயன்படும் முறையில் கல்லூரிகளில் இட நெருக்கடியை இப்படித்தான் போக்க முடியும். பெரியவர்களின் ஆதரவு பெற்றிருக்கிற இந்த ஷிஃப்ட் சிஸ்டத்தை அமல்படுத்தவேண்டும். பல கல்லூரிகளின் பெயர்களெல்லாம் கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரொம்ப மகிழ்ச்சி. பெரியார் ராமசாமி அவர்களின் பெயரால் ஒரு கல்லூரி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்களுக்கெல்லாம் தலைவராய் இருந்தவர் பெரியார். தமிழகத்தின் பழம் பெரும் தலைவரின் பெயர் ஒரு கல்லூரிக்கு சூட்டப்பட்டிருப்பது பற்றி மெத்த மகிழ்ச்சி. அதே போல் இன்னொரு கல்லூரிக்கு முத்துரங்கம் அரசாங்கக் கல்லூரி என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதற்கும் நன்றி. அவர் தமிழகத்தின் முதுப் பெரும் தலைவர், முதல் அமைச்சர் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர், மாபெரும் தேச பக்தர். பெரியார் கல்லூரி என்று பெயர் வைத்ததற்குக் காரணம், அவர் பணம் கொடுத்தார், ஆகவே அந்தப் பெயர் வைத்தோம் என்று சொன்னார்கள். இந்த முத்துரங்கம் அவர் குடும்பத்தாரால் இந்த அரசாங்கக் கல்லூரிக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வட ஆற்காடு மாவட்டத்தில் இந்தக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு ரூ. 5½ லட்சம் கொடுக்கப்பட்டது. பணம் கொடுத்தவர்கள் இந்தப் பெயர் வைக்கவேண்டும் என்று கூறினார்கள். அதனால் வைத்தோம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** எனக்கு அந்த பெயர் வைத்ததிலே ஆட்சேபணை இல்லை. அந்தத் திருநாமத்தை நான் வரவேற்கிறேன். அவர் ஒரு பழம் பெரும் தலைவர். ஆந்திரா அன்று பிரிந்து போகாமல் இருந்தால், சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சர் பதவியை அவர் வகித்திருப்பார், அவர் திருநாமத்தை அந்தக் கல்லூரிக்கு வைத்தது பற்றி நான் பாராட்டுகிறேன். ஆனால் பணம் கொடுத்தால் தான் அம்மாதிரி பெயர் வைப்பது என்பதில்லாமல் திரு. வி. கலியாணசுந்தரனார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு. சத்தியமூர்த்தி போன்ற தலைவர்களுடைய பெயரையும் கல்லூரிகளுக்கு வைக்கவேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அம்மாதிரி பெயர்களும் வைக்கவேண்டும். பணமும் வரவேண்டும். கல்லூரிகள் எல்லாம் போதாது என்று கனம் உறுப்பினர்களே சொன்னார்கள். பிற்பட்ட பகுதிகளில் கல்லூரி அமைக்கவேண்டும் என்று கருதித்தான் குறைந்தபட்சம் ரூ. 5 லட்சம் கொடுத்தால் மேலே ஆகிற செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். அந்த வகையிலே அவர்கள் பணம் கொடுக்கிறார்கள். அப்படிப் பணம் கொடுப்பவர்கள் நல்ல பெயரை

[திரு. எம். பக்தவத்சலம்] [7th March 1966

வையுங்கள் என்று கூறினால், அவர்கள் பணத்தைக் கொடுத்தார்கள், அந்த நல்ல பெயரையும் இடலாம் என்று தான் அம்மாதிரி பெயர் வைக்கிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அவ்வாறு பெயரிடுவது பற்றி மகிழ்ச்சி. வட ஆற்காடு மாவட்டத்தில் கல்லூரி ஏற்படுத்தியது பற்றி பெரு மகிழ்ச்சி எய்துகிறோம். அவ்வளவு குறுகிய மனப்பான்மையோடு நான் இந்த விமர்சனம் செய்கிறேன் என்று நினைக்கக்கூடாது. பெரிய தலைவர்களின் திருநாமத்தில் கல்லூரிகள் அமைவது பற்றி மெத்த மகிழ்ச்சி. அது எதிர்கால தலைமுறைக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கும்.

புதிய என்ஜினியரிங் கல்லூரிகள் தொடங்குவது பற்றி ரொம்ப திறமையான மொழியில் கூறப்பட்டிருக்கிறது. மூன்று பொறியியல் கல்லூரிகள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தஞ்சாவூர், வட ஆற்காடு, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தொடங்கப்படும். கூடிய விரைவில் மத்திய அரசு ஏற்பளித்தவுடன், ஒரு பொறியியல் கல்லூரிக்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, நான்காம் திட்டத்தின் நான்காவது ஆண்டிலாவது தொடங்கப்பட்டுவிடும். இது ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்படும் ஒரு நிலை. அதுவும் திட்டக் கமிஷன் அனுமதி கொடுத்தால். கதையிலே வரும் ஜகதலப்பிரதாபன் பல கட்டடங்களைத் தாண்டி ராஜகுமாரியை அடைவது போல்தான் இது இருக்கிறது. இது ஒரு விளம்பர அறிவிப்பாகத் தான் இருக்கிறது. ஏதோ என்ஜினியரிங் கல்லூரி அமைக்கப்படுவதற்கான ஒரு அறிவிப்பாக இல்லை இது. மேலோட்டத்தில் பார்த்தால் ஏதோ என்ஜினியரிங் கல்லூரி அமைக்கப்படுவதாகத் தோன்றும். தஞ்சையில் ஒன்று, வட ஆற்காடு மாவட்டத்தில் ஒன்று, திருநெல்வேலியில் ஒன்று என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், எந்தக் கட்டத்தில் வர இருக்கிறது ?

Land will be acquired for one Engineering College as early as possible so that the college can be started at least in the Fourth-Year of the Fourth Plan, provided the Government of India agree and the Planning Commission gives sanction என்று உள்ளது நான்காவது வருஷத்தில் எங்கே போய் தேடுவது ? யாரிடம் போய் கேட்பது ? முதல் கல்லூரிக்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு நான்காம் திட்டத்தின் நான்காவது ஆண்டிலாவது தொடங்கப்படும். இந்தக் கல்லூரிகள் வருவதற்குள் 7-வது ஐந்தாண்டுத் திட்டம் கூட முடிந்துவிடும். இங்கே இருக்கிற வாசகங்கள் ரொம்ப திறமையாக போடப்பட்டிருக்கிறது. இவ்வளவும் பிளானிங் கமிஷன் அனுமதி தந்தால் தான் நடக்கும். இவ்வளவும் இருந்தால் ராஜகுமாரியை கலியாணம் பண்ணிக்கொள்ள ஒரு ஆசை இருக்கிறது. இதிலே முக்கியமான பிரச்னை என்ஜினியரிங் கல்லூரிகள் இன்றைக்கு இருப்பது போதாது. இன்னும் அதிகமாக தேவை இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையை மாற்றி; உடனடியாக இதை விரைவு படுத்தி, சீக்கிரமாகவே இந்தக் கல்லூரிகளைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



7th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

இன்னொன்றும் இதிலே வேடிக்கையாக இருக்கிறது. 'கிண்டி பொறியியற் கல்லூரியில், கல்லூரிப் பேராசிரியர் களின் நன்மைக்காக, 1965-66 முதற் கொண்டு வடமொழி (சமஸ்கிருதம்) கற்பிப்பதற்காக மாலை வகுப்புகள் நடத்தும் திட்டம் ஒன்று செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆதாரப் பொறியியல் விஞ்ஞானத்தில் அடிப்படை ஆராய்ச்சியை மேற்கொள்ளுவதில் அக்கறை கொண்டுள்ள பேராசிரியர்களுக்காக இத் திட்டம் கொண்டுவரப்பட்டது' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

An evening class in Sanskrit studies has been introduced in the College of Engineering, Guindy, from 1965-66 for the benefit of the staff Members who are interested in taking up fundamental research of basic engineering sciences.

என்று ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். எனக்கு இது வேடிக்கையாக இருக்கிறது. முதலமைச்சர் அவர்களுடைய சமஸ்கிருத ஆர்வம் எனக்குத் தெரியும். நான் அதை ஆட்சேபிக்கவில்லை. அது ஒரு உயர்ந்த மொழியாக இருக்கலாம். காளிதாசரின் சாகுந்தலம் எழுதப்பட்ட உயர்ந்த மொழியாக இருக்கலாம். வேண்டுமென்றால் சமஸ்கிருதம் படிப்பதற்கு தனியாக ஏற்பாடு செய்யட்டும், வேத பாடசாலைகள் ஏற்படுத்தட்டும். என்ஜினியரிங் கல்லூரியில் சமஸ்கிருதம் கற்று என்ன ஆராய்ச்சி செய்யப் போகிறார்கள் என்பது என்னுடைய கற்பனைக்கு எட்டவில்லை. புராணத்தில் படித்திருக்கிறோம். பெரிய நெறுப்பு ஆறு ஓடுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்யப்போகிறார்களா ? கைலையங்கிரி மலை எப்படியெல்லாம் வளர்ந்தது என்று ஆராய்ச்சி செய்யப்போகிறார்களா ? இந்திரப் பிரஸ்த நகரத்தில் எப்படி எப்படி வீதிகள் அமைந்திருந்தன என்று ஆராய்ச்சி நடத்தப்போகிறார்களா ? இது வேடிக்கையாக இருக்கிறது. ரஷ்ய மொழி படிக்கட்டும், ஜெர்மன் மொழி படிக்கட்டும் இன்ஜினியரிங் துறை ஆராய்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும்.

அடுத்தபடியாக, சட்ட கல்லூரி பற்றியும் ஒரு நல்ல விவரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்காக கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி செலுத்திக்கொள்ளுகிறேன். இன்னொரு சட்டக் கல்லூரி வேண்டும். அது மதுரை மாநகரில் அமையட்டும் என்று நாங்கள் சென்ற சட்டமன்றத் தொடரில் தெரிவித்தோம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் படிப்பதற்காக சட்டக் கல்லூரியில் மாலை நேரப் படிப்பைத் துவக்கியிருக்கிறார்கள். அதுபற்றி நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்களுடைய வாதத்தை அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டம் என்பது உத்தியோகஸ்தர்களுக்கு மட்டுமல்ல. தொழில் துறையில் இருப்பவர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் தொழில் சங்கத் தலைவர்களுக்கும், மற்ற நிறுவனங்களில் இருப்பவர்களுக்கும் சட்டம் தெரிந்திருக்கவேண்டியது அவசியம். அதுவும் ஜனநாயகத்தில் அடிப்படை உரிமைகளைப் பற்றி நியாயம் எது அநியாயம் எது என்பதையெல்லாம் அறிந்துகொள்ளுவதற்கு சட்டக் கல்லூரி ஒரு

கல்லூரிக்கு மேலே அவசியமாக இருக்கிறது. ஆந்திராவில் இன்றைக்கு இரண்டு சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. மைசூரில் நான்கு சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. கேரளாவில் இரண்டு சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் மதுரை மாநகரத்தில் இன்னொரு சட்டக் கல்லூரி அவசியம் நிறுவ வேண்டும். சட்டக் கல்லூரி உத்தியோகஸ்தர்களுக்கு மட்டுமல்ல, மற்றபடி எவ்வளவோ துறையில் இருப்பவர்களுக்கும் சட்டம் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது. அரசியல் தலைவர்கள் சட்டம் தெரிந்துகொண்டு ஜனநாயகத்தை வளர்க்கலாம், தொழிலாளர்கள் தலைவர்கள் அப்படி வளர்க்கலாம். மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி நிறுவவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1963-64-ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் கல்விக்காக ரூ. 30 கோடி 14 லட்சம் கோரிக்கை மான்யம் கோரி இருந்தார்கள், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ரூ. 30 கோடி 14 லட்சத்தில் எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள் என்றால் ரூ. 27 கோடி 93 லட்சம் தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தில் ரூ. 30 கோடி மான்யம் கேட்டுவிட்டு, ரூ. 3 கோடி திருப்பி அனுப்புவதா ? இது சரியா ? இது நிதி அமைச்சர் அவர்களுக்குரிய இலக்கணம் அல்ல. பொருளாதாரம் தெரிந்தவர்கள் இதை மிகவும் நன்றாக அறிவார்கள். கல்வி மான்யத்திற்காக அதுவும் நிதி அமைச்சர் ஒருவர் ரூ. 30 கோடி 14 லட்சம் மான்யம் வாங்கி, ரூ 27 கோடி 93 லட்சம் செலவு செய்துவிட்டு, ரூ. 2 கோடி 2 லட்சம் 'சரெண்டர்' செய்திருக்கிறார். இது சிக்கனம் அல்ல. இது தவறான பொருளாதாரம் என்று நான் சொல்லுகிறேன். இதை வேறு வகையிலே திருப்பியிருக்கலாம். ஆசிரியர்களுக்கு பஞ்சப்படி கொடுத்திருக்கலாம். வேறு இனங்களுக்கு 'டைவர்ட்' பண்ணியிருக்கலாம். நம்முடைய காங்கிரஸ் தலைவருக்கு மிக நன்றாகத் தெரியும். மொத்தத்தில் 47 மான்யக் கோரிக்கைகள் கேட்டிருக்கிறார்கள். இதிலே ரூ. 2¼ கோடி சரண்டர் செய்த மான்யக் கோரிக்கையே கிடையாது. அதுவும் ஒரு நிதி அமைச்சராக இருப்பவர் இந்தமாதிரி கல்விக்காக இவ்வளவு ரூபாய் மான்யம் கோரிவிட்டு அதை முழுவதும் செலவழிக்காமல் இப்படி சரெண்டர் செய்வது இந்த மன்றத்தை அவமதிப்பது ஆகாதா ? எந்த இனத்திற்கு கேட்டார்களோ அந்த இனத்திற்கு முழுவதும் செலவு செய்யாமல் திருப்பிவிடுவது முறையா ? ரூ. 2¼ கோடியை அவர்கள் சரெண்டர் செய்திருக்கிறார்கள். இதற்குரிய விளக்கத்தை அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்வளவோ இனங்களுக்குச் செலவு செய்திருக்கலாம். யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபார்சுகளை அமல்படுத்தியிருக்கலாம். ஆசிரியர்களுக்குக் கொடுத்திருக்கலாம், அல்லது சர்க்கார் ஊழியர்களுக்கு பஞ்சப்படி உயர்வை கொடுத்திருக்கலாம். இப்படி எத்தனையோ இனங்கள் இருந்தும், அந்தப் பணமானது செலவு செய்யப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.





சில விவரங்களை நான் மேலோட்டமாகத் தான் சொல்லவேண்டியிருக்கிறது. நான் சொல்ல வேண்டிய பல விவரங்கள் இருக்கின்றன. ஆனால் குறிப்பேடுகளில் குறித்திருப்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். அந்த வகையிலே மேலே தொடங்குகிறேன். மதிய உணவுத் திட்டத்தைப்பற்றி இன்றைக்கு ரொம்பப் பெருமையாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். மதிய உணவுத் திட்டத்திற்கு ரொம்ப பணம் கொடுக்கிறோம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. மதிய உணவுத் திட்டம் என்பது இந்த சர்க்காருடைய பரம்பரைச் சொத்து அல்ல கண்டிப்பாக. அதற்கு முன்பே இருந்தது. நெடுங் காலத்திலிருந்தே இந்தத் துறையில் எவ்வளவோ பண்ணியிருக்கிறார்கள். சென்னை மாநகராட்சியில் நமது முதலமைச்சர் டெப்யுடி மேயராக இருந்த காலத்திலிருந்தே மதிய உணவு கொடுத்துக்கொண்டு தான் வந்தார்கள். அதற்குப் பின் அந்த முறை கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு வந்த கல்வி இலாகா டைரக்டர் ஒருவர் ரொம்ப ஆர்வத்தோடு இதை ஒரு இயக்கமாக ஆரம்பித்தார். அவர் ஆரம்பித்தது இந்தத் திட்டத்திற்கு ஒரு நல்ல தெம்பு ஊட்டியது. அதுகூட ஒரு வருஷம், இரண்டு வருஷங்களுக்கு பொது மக்கள் கொடுத்த நன்கொடையை வைத்துக்கொண்டு தான் இந்தத் திட்டம் நடத்தப்பட்டது. இந்த மன்றத்தில் எங்களுடைய தலைவராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய எம்.எல்.ஏ. சம்பளத்திலிருந்து ரூ. 150-லிருந்து ரூ. 50 அந்த எம்.எல்.ஏ. பதவிக்காலம் முடியும் வரை கொடுத்துவந்தார். இது இவ்வளவு பெரிய இயக்கமாக வளர்ந்து வந்ததற்குக் காரணம் இந்த சர்க்கார் மட்டுமல்ல. இவர்கள் இந்தத் திட்டத்திற்கு ஒரு தனி பாத்யதை கொண்டாட வேண்டிய நிலைமை இல்லை. கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். அதை இந்த மன்றத்தின் மூலம் நாட்டுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 'கேர்' ஸ்தாபனம் மதிய உணவிற்காக கடந்த நான்கு ஆண்டுகளாக கொடுத்திருப்பது ரூ. 6 கோடி பெருமானமுடையது. மில்க் பவுடராகவும், மற்ற பொருள்களாகவும் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஸ்தாபனம் பால் பவுடர் மாத்திரம் ஒரு கோடியே பதினாறு லட்சம் பவுண்ட் அளவும், 83 லட்சம் பவுண்ட் கார்ன் மீலும், 30 லட்சம் பவுண்ட் வெண்ணெயும் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. மத்திய சர்க்காரிலிருந்து இந்த சர்க்கார் செலவு செய்யும் தொகையில் மூன்றில் ஒரு பங்கு, மானியமாக, ப்ளானுக்கு அப்பாற்பட்டதாக கொடுக்கிறார்கள். அதே நேரத்தில், இவர்கள் கொடுப்பது என்ன ? 10 பைசா தான். ஆறு பைசா நாம் கொடுக்கிறோம், இரண்டு பைசா பஞ்சாயத்து கொடுக்கிறது. இரண்டு பைசா ஊர்க்காரர்கள் கொடுக்கிறார்கள். இது போதுமானதா ? இதிலே எவ்வளவோ குறைபாடுகள் இருக்கின்றன. ஆசிரியர்கள் அன்னக் காவடி எடுக்கும் நிலையிலும், ஓட்டல்காரன் போல கணக்கு வைக்கும் நிலையிலும், இருக்கிறார்கள். சரியாக நடைபெறுகிறதா ? பத்து பைசாதான் கொடுக்க முடியுமா ? அமைச்சருக்கு தென்னாலிராமன் கதை யென்றால் பிடிக்கும். தெனாலிராமன் குதிரைக்கு புல் வைத்த கதை போலத்தான் இருக்கிறது. ஆகவே, உடனடியாக 25

பைசாவாவது குறைந்தபட்சம் மதிய உணவுக்கு கொடுக்க வேண்டும். இவையெல்லாம் பஞ்சாயத்து நிர்வாகத்தில் செய்யப் படவேண்டும். இந்த மதிய உணவில் எவ்வளவோ விவகாரங்கள் இருக்கின்றன. ஆனால் இங்கே அமைச்சர் தெம்பாகப் பேசுகிறார் கள். இதைப் பற்றி பெருமை பாராட்டத் தேவையில்லை, இதிலே உள்ள முறைகேடுகளை ஒழிக்க வேண்டும்.

ரொம்பப் பெருமையோடு பேசிக் கொள்கிறார்கள், ஒன்று முதல் மூன்றும் வகுப்பு வரை புத்தகங்கள், சிலேட்டுகள் இலவசமாகக் கொடுக்கிறோம் என்றும், அதற்காக ரூ. 41 லட்சம் வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். சொன்னால் கோபம் வருகிறது. தேர்தல் பட்ஜட் என்று தி.மு.க. சொல்லிவிட்டார்கள் என்கிறார்கள். தேர்தல் ஞாபகம்தான் அவர்களுக்கு, வேறொன் றுமே கிடையாது என்கிறார்கள். ஆனால் நடைமுறையிலே பார்த் தால் யாருக்கு தேர்தல் ஞாபகம் இருக்கிறது என்பது விளங்கும். வாயாலே நாங்கள் சொல்லுகிறோம். ஜனநாயகத்திலே அப்படிச் சொல்வது பாவமா? ரௌரவாதி நரகம் வந்துவிடுமா? அமைச் சருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். புத்தகமும், சிலேட்டும் இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்பது இப்பொழுதுதான் புதிதா? இதே மன்றத்திலே, ஒன்றும் வகுப்பு முதல், ஐந்தாம் வகுப்பு வரை சிலேட்டு புத்தகம் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்து, திட்டம் போட்டார்கள். இத் திட்டம் முன்னமேயே இல்லையா என்று பார்க்கட்டும். மூன்று வருஷத்திற்கு முன்பு என்று நினைக் கிறேன், என் ஞாபகம் சரியாக இருந்தால், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை சிலேட்டுகள், புத்தகங்கள் கொடுக்க மானியம் கோரப்பட்டது. ஆனால் அதுவும் செலவு செய்யப்படாமலேயே—அந்த இரண்டு கோடியைப் போல—திருப்பிக் கொடுக்கப்பட்டது. கணக்கைப் பார்க்கட்டும். (குறுக்கீடு.) செயல்படவில்லை என்று சொல்லுகிறேன். தேர்தல் வருகிற இந்த நேரத்தில் சிலேட்டும், புத்தகமும், அதுவும் ஒன்று முதல் மூன்றாவது வகுப்பு வரை என்றால், அதற்கு என்ன பொருள்? அதிலே தேர்தல் கண் ணோட்டம் இல்லையா? ஒதுக்கீடு செய்யப்பட்டது செலவு செய்யப் படவில்லையென்றால் எங்கே போய்விட்டது? எடுத்துக்கொண்டா போய்விட்டோம்? என்கிறார்கள். மாணிக்கவாசகரைப் போல செய்துவிட்டார்கள் என்று சொல்லுகிறோம்? எங்கே என்றால், ஊதாரித்தனம் செய்தார்கள் என்று அர்த்தம்? முறையாகச் செலவு செய்யவில்லை என்கிறோம்.

கல்வி முறையில் உள்ள தவறுகள், தரக் குறைவு பற்றியெல்லாம், கனம் கணேசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேல் நாட்டு விஞ் ஞான வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் 100 வருஷங் கள் பின்னால் இருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த நிலையில், செலக்ஷன் என்கிற வடிகட்டும் முறை எதற்காக? வீண் விரயம் தானே? ஆகவே, வடிகட்டும் முறையை மாற்றி, மாதா மாதம் அவரவர் படிப்பைப் பொருத்து, ஓர் சோதனை வைத்து பரீட்சை களைக் கூட எடுத்துவிடும் பெரிய மாறுதலை கொண்டு வரவேண்டும்.



அதே மாதிரி, பல புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. அச்சகம் கூட வைத்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எல்லாப் புத்தகங் களையும் ஏன் வெளியிடக் கூடாது? அதில் என்ன சிரமம்? அச்சு ஆபீஸ் இல்லையா? தொழில் அமைச்சரிடம் சொன்னால், பெரிய பெரிய நூற்பாலைகளையும், பார்ட்டிலைசர் ஆலைகளையும் கொண்டுவரும் அவர்களால், பத்து லட்சத்தில் ஒரு அச்சாபீஸ் வாங்க முடியாதா? புத்தக விற்பனைக்கும் ஏஜெண்டுகளை வைத்தி ருக்கிறார்கள். ஏன் அவர்களை வைக்கவேண்டும்? ஏன் நேரிடை யாகச் செய்யக் கூடாது?

தமிழ் புத்தகங்கள் போட்டால்தான் தமிழ் வளர்ச்சி என்று செய்தார்கள். அதில் ஆறு லட்ச ரூபாய் பெருமானமுள்ள புத்தகங்கள் தேங்கிக் கிடக்கின்றன என்று கூறப்படுகிறது. தமிழ் போதனா மொழி என்று சொன்ன நேரத்திலே, தமிழ் புத்தகங்கள் கிடைக்கவில்லை, எங்கே இருக்கின்றன, புத்தகங்கள் வேண்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது கேட்டால், யார் வாங்கு கிறார்கள் தேங்கிக் கிடக்கிறது என்கிறார்கள். ஏன் விற்கவில்லை? அதைப் பற்றிச் சரியான விசாரணை செய்தார்களா? இதற்கென்று ஒரு விசாரணைக் குழு அமைக்க வேண்டும். நாடகத்தைப் படிக்க வில்லை என்கிறார்கள். நாடகக் கலையில் மக்களுக்கு ஆர்வம் இல்லை என்று பொருளா? ஆனந்தவிகடன், திரு. வாசன் அவர்கள் வெளியிடும் பத்திரிகை லட்சக்கணக்கில் விற்கவில்லையா? கருணாநிதி புத்தகம் என்று சொல்லவில்லை. இந்த புத்தகங்கள் விற்கவில்லையென்றால், அதை விசாரணை செய்யவேண்டாமா? ஏன் விற்கவில்லை என்று நான் நிரூபிக்கத் தயார். இந்தப் புத்தகத் தயாரிப்பிலே முறைகேடுகள் நடைபெற்று இருக்கின்றன. முன்ன தாகவே, இவற்றை எப்படிப் போடுவது, எப்படி விற்பது என்பதைப்பற்றி யெல்லாம் ஆராய்ந்தார்களா?

அடுத்து பல்கலைக்கழகங்கள். இரண்டு பல்கலைக்கழக மசோதாக்கள் நிறைவேறியிருக்கின்றன. சென்னை பல்கலைக் கழக திருத்த மசோதா, மதுரை பல்கலைக்கழக மசோதா இரண்டும். இன்னும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருக்கிறது. அங்கே அது குடும்ப சொத்து போல ஆகிவிட்டது. ஆகவே, அண்ணாமலைப் பல்கலைக் கழக திருத்த மசோதாவும் இங்கு வந்து ஆக வேண்டும். எல்லாக் கல்லூரிகளையும் தேசீய மயமாக்க வேண்டும் என்கிற கொள்கை வற்புறுத்தப்படும்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக திருத்த மசோதா வந்தே ஆகவேண்டும். இன்னும் இரண்டு பல் கலைக் கழகங்கள், ஒன்று கோயம்புத்தூரிலும், மற்றொன்று திருச்சி யிலும் துவங்க நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதைத் துவங்க வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சின்ன விவரங்கள் என்றாலும், முக்கியமான இரண்டொரு விஷயங்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். லலிதகலா மன்றம் இருக்கிறது. என்ன லலிதமான பெயராக இருக்கிறது? அது என்ன செய்யும்? மந்திரியின் பக்கத்து வீட்டில் இருக்கிறது என்றால், அது பாவமா என்பார்கள். இந்த லலித கலா மன்றம் என்ன செய்துகொண்டிருக்கிறது?

[திரு. கே. ஏ. மதியழகன்] [7th March 1966

அதே போல, மெட்ராஸ் சங்கீத நாடக சங்கம். இது இசை, நாடகம் இவற்றை வளர்ப்பதற்கு என்று சொல்லப்படுகிறது. ஆனால் எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்கள் சாரங்கதாரா படம் வந்த காலத்து ஆட்களை நிர்வாகிகளாகப் போட்டிருக்கிறார்கள். மணிப்புரி நடனங்களை நாம் பார்த்திருக்கிறோமா ? சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக, மணிப்புரி நடனம் ஏற்பாடு செய்திருக்கக் கூடாதா ? இந்த ஸ்தாபனங்களெல்லாம் யாருக்காக இருக்கின்றன? யாருடைய நிலாச்சாப்பாட்டுக்காக, பொழுது போக்குக்காக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன என்றே தெரியவில்லை. இன்னொன்று (மணியடிக்கப்பட்டது). Ten minutes more, Sir

MR. DEPUTY SPEAKER : The hon. Member has already taken 27 minutes.

1-00 p.m. SRI K. A. MATHIALAGAN : I may be given at least five minutes more, Sir.

MR. DEPUTY SPEAKER : All right.

**திரு. கே. ஏ. மதியழகன் :** மணிபுரி நடனத்தைப்பற்றி நான் சொன்னேன். மெத்த ஆர்வமாக இருக்கிறவர்கள் இந்த சட்ட மன்றத் தொடரிலேகூட செய்யலாம். அதைச் செய்ய வேண்டும். இன்றைக்கு நல்ல நாடக் நிபுணர்கள், திறமையாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பங்குகொள்ளும் பெரும் ஸ்தாபனமாக, உலகத்திலேயே எட்டுத் திக்கிலும் நம்முடைய காரியங்களைச் செய்வதாக அமையவேண்டும்.

**கனம் உதவி சபாநாயகர் :** சட்ட சபை அங்கத்தினர்களில் நடனத்தில் யாராவது திறமையானவர்கள் இருக்கிறார்களா ?

**திரு. கே. ஏ. மதியழகன் :** கதக்களி நடனத்தில் திறமை பெற்றவர் கோரை சட்டசபையில் இருந்தார்கள். அந்த சட்டசபை இன்றைக்கு இல்லை. இந்த சட்டசபையிலே இருக்கிறார்களா என்று தெரியாது. சினிமாவில் ஆண் நடிகர்கள் கூட நடனம் ஆடுகிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** "உலகமே நாடக மேடை" என்று ஒரு ஆங்கில கவி சொல்லியிருக்கிறார்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** உண்மை. ஆனால், வாழ்க்கையிலே நடிக்கக்கூடாது, உண்மையாக நடக்க வேண்டும் என்ற வகையிலே பல்கலைக்கழகங்கள், இந்த மாதிரியான கல்விக் கூடங்கள், புனிதமான நிலையங்களாகும். எதிர்கால சமுதாயத்தை அவை உருவாக்குகின்றன. கல்லூரிப் பேராசிரியர்கள் சம்பள நிலைமை இன்று எப்படி இருக்கிறது ? கல்லூரிப் பேராசிரியர்களின் சம்பள விகிதத்தை உயர்த்தச் சொல்லியது யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன். ஐம்பது சதவிகிதம் கொடுக்கிறோம் என்று சொல்லிப் பல ஆண்டுகள் ஆய்விட்டன. ஐயாயிரம் ஆசிரியர்கள், ஆறாயிரம் ஆசிரியர்கள் நம்மிடம் பிச்சைக் காசு கேட்கவில்லை, பங்களா வேண்டும், வைர மாலை வேண்டும், ரெஃப்ரிஜிரேட்டர் வேண்டும் என்று அவர்கள் கேட்கவில்லை. இந்த நாட்டுக் குடிமக்களாக சாதாரண மனிதர்களாக வாழத்தான் அவர்களும் தங்களுக்குரிய



7th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

சம்பளம் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஐம்பது சதவீதத்தோடு 25 சதவிதம் மாநில அரசு அதிகமாகக் கொடுக்காத காரணத்தினால் டில்லியிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் வந்து சேரவில்லை. யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனுடைய இந்த சம்பள நிர்ணயப்படி இந்த மாநிலத்தில் உள்ள கல்லூரி ஆசிரியர்களுக்கெல்லாம் சம்பள உயர்வு அளிக்கப்படவேண்டும் என்று நான் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். 500 ரூபாய் சம்பளம் பெறுகிறவர், 400 ரூபாய் பெறலாம்; 400 ரூபாய் பெறுகிறவர் 500 ரூபாய் பெறலாம். இது ஏதோ பிச்சைக் காசா ? கோடீசுவரனாக வேண்டும் என்பதற்கான கோரிக்கையா ? ஒரு சாதாரண உரிமை, மனிதனுக்கு உள்ள ஒரு அடிப்படை உரிமை, மனிதன் மனிதனாக வாழ வகை செய்யவேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். யூனிவர்சிடி க்ராண்ட்ஸ் கமிஷனுக்கு கருணை பிறந்தாலும் இங்கே 25 சதவீதம் கொடுக்காததால் அந்தப் பணம் போய்விட்டது. நான் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். நான் எங்கேயோ போகிறேன் என்று கருத வேண்டாம். கல்கத்தா பல்கலைக்கழகத்திலே நடைபெறுகிற சம்பவங்கள் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம் என்று நான் நம்புகிறேன். யூனிவர்சிடி க்ராண்ட்ஸ் கமிஷன் கொடுத்த சம்பள விகிதங்களை அமல்படுத்தாத காரணத்தினால் கல்கத்தாவில் இருக்கிற ஆயிரக்கணக்கான பேராசிரியர்கள் இந்த ஆண்டுக்குரிய பரீட்சைப் பேப்பரைத் தயார் செய்யவில்லை. பரீட்சைக்குத் தாள்களே எழுதவில்லை, பரீட்சையே நடக்காமல் இன்றையதினம் வங்காள நாட்டிலே கல்லூரிகள் மூடப்பட்டு கிடக்கின்றன. தமிழகத்திலே . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழகத்தில் உள்ள நிலைமை என்ன, வங்காளத்தில் உள்ள நிலைமை என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமல் கனம் உறுப்பினர் இரண்டையும் ஒப்பிட்டுச் சொல்லிக்கொண்டே போவது சரியல்ல. இங்கே என்ன நிலை, அங்கே என்ன நிலை என்று அவர்களுக்குத் தெரியாது. "அங்கே ஆசிரியர்கள் பரீட்சைத் தாள்களைத் தயார் செய்ய மறுத்து விட்டார்கள்" என்று சொல்வது, இங்கேயிருக்கும் ஆசிரியர்கள் மறுக்காதது தவறு என்று சொல்வது போல் கருத்து ஏற்படும். அவ்வாறெல்லாம் சொல்வது கூடாது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தமிழகத்தின் நிலை வேறு என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். என்னுடைய கருத்திலே, வங்காளத்தில் நடைபெறுகிற சம்பவங்கள் ஏதோ தற்செயலாக ஏற்படுகிற ஒரு சம்பவம் அல்ல; ஒரு பெரிய இயக்கத்தினுடைய பகுதி; ஒரு தொடர் இழை என்று தான் சொல்ல வேண்டும். வங்காள நாட்டில் பரீட்சை மார்ச் மாதம் 7, 8 தேதிகளில் நடைபெறவேண்டும். இன்றைக்கு பரீட்சைப் பேப்பர்களை தயார் பண்ணவில்லை. கல்லூரிகள் இன்றைய தினம் மூடிக் கிடக்கின்றன. அங்கே யூனிவர்சிடி க்ராண்ட்ஸ் கமிஷன் நிர்ணயித்துள்ள சம்பள விகிதங்களை அமல் படுத்தவில்லை. அங்கு ஆசிரியர்கள் செய்ததுபோல் இங்கும் செய்யவேண்டும் என்பது என்னுடைய ஆசை அல்ல, தமிழகம் அமைதிக்கும் பெரிய

[திரு. கே. ஏ. மதியழகன்] [7th March 1966

அடக்கத்திற்கும் பேர்போனது. ஆனால், அடக்கத்தை ரொம்பவும் சோதிக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே யூனிவர்சிடி க்ராண்ட்ஸ் கமிஷனின் சம்பள விகிதங்களைச் சீக்கிரம் அமல் படுத்தவேண்டும் என்று நான் நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இவ்வளவு பெரிய காரியத்தில் இந்த அடிப்படை அம்சங்களையெல்லாம் அமல் செய்யவேண்டும்.

கல்விக்காக இன்னும் செலவு செய்யுங்கள். இன்னும் நான்கு கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கலாம், அணைக்கட்டிலே பாழாக்கும் பணத்தைக் கல்விக்காகச் செலவிடலாம். அணைக்கட்டு உடைந்தால் மீண்டும் கட்டிக்கொள்ளலாம். வீடாக இருந்தாலும், வேறு வீடு கட்டிக்கொள்ளலாம். ஆனால், கல்வித் துறையில் தவறு செய்துவிட்டால், அல்லது போதுமான பணம் ஒதுக்காவிட்டால், இந்த நாட்டினுடைய எதிர்காலத் தலைமுறையினருக்குக் கெடுதல் வந்துவிடும் என்பதைக் கவனிக்கவேண்டும். கல்வி இலாகா என்பது ஏதோ சீமான் வீட்டு நந்தவனம் போல ஆகிவிட்டது. அவரவர்கள் இஷ்டப்படி அதில் மாற்றம் செய்துகொண்டிருக்கக் கூடாது. ஒருவர் மல்லிகைச் செடி வைக்க, இன்னொருவர் தென்னம் பிள்ளைகளை வைக்க என்று இப்படி கல்வித் துறையிலும் மாற்றுகிறார்கள். செகண்டரி எஜுகேஷன் டைரக்டராக இருந்தவரை ஹையர் எஜுகேஷன் டைரக்டராக்கிவிட்டார்கள். யாராவது அதிகாரியைப் பிடிக்கவில்லையென்றால் இவ்வாறெல்லாம் செய்வதா? இதே அதிகாரியைச் "சிறந்த நிபுணர்; இவரைப் போல் இல்லை; இவரைப் போல் திறமையானவர் இல்லை" என்று ஒரு காலத்தில் சொல்லிவிட்டு, இன்று அவருக்கு அதிகாரம் இல்லாமல் ஆக்குவது பொருத்தமானதாக இல்லை. கல்வி இலாகா டைரக்டரின் பொறுப்பைப் பிரித்திருப்பது ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. எப்படி முரண்பாடு என்று பார்க்கவேண்டும். பொறுப்பு பெரியதாக இருந்தால், பொறுப்பைப் பிரிக்க வேண்டியதுதான். ஆனால், அதற்கு மையம் வேண்டாமா? ஒரு அதிகாரியைப் பிடிக்கவில்லையானால், வேறு இடத்திற்கோ, வீட்டிற்கோ அனுப்புங்கள். அதற்காக முறைகேடான காரியத்தைச் செய்வதா? அவருடைய ஆர்வத்தைப் போக்கும் காரியங்களைச் செய்வது சரியான, பொருத்தமான முறையல்ல என்பது என்னுடைய தெளிவான கருத்தாகும். ஒவ்வொரு துறையிலும் நடைபெறுகிறதைப் பார்த்தால், அவர்களுக்கு வேண்டும் என்றால் ஒரு அதிகாரியைப் போடுகிறார்கள். ரிடையரான சீஃப் செக்ரடரிக்குக் கூட புது வேலை கொடுக்கிறார்கள். கேட்டால், "அவர்களுக்குத் திறமை இருக்கிறது. அவருடைய திறமையைப் பயன்படுத்த வேண்டும்" என்கிறார்கள். இதுமாதிரியான போக்கினால் பெரிய உத்தியோகங்களிலே இந்த அரசாங்கத்திலே வேலை செய்வது தங்களுடைய தன்மானத்திற்கு இழுக்கு, தங்களுடைய நேர்மைக்கு அவமானம் என்று அதிகாரிகள் எண்ணி அச்சவுணர்வு கொள்கிற சூழ்நிலை உருவாகியுள்ளது. இது நல்ல அரசின் அடையாளமல்ல என்று கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.



7th March 1966]

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மானியம் பெரிய தொகையைக் கோருகின்ற ஒரு மானியம் ஆகும். கல்விக்காக 45 கோடி ரூபாய் கோருகிறோம் என்றால், அதைக் குறித்து கனம் உறுப்பினர்கள் பலர் திருப்தியும் பெருமையும் தெரிவித்தார்கள். ஆனால், இந்த விவாதத்தை முடித்துவைத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேசிய தலைவர் கனம் திரு. மதியழகன் அவர்கள், வழக்கமாகப் பேசுகின்ற முறையிலே தான் பேசினார்கள். அவர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் திருப்தி இருக்காது. ஆனால், அவர்கள் பேசுவதை பற்றி நான் வருந்துவது கிடையாது. வருந்துவதாக அவர்கள் நினைக்கிறார்கள். அது கூடத் தவறு. தவறான கருத்துக்கள், என்னைப் பொறுத்த வரையிலோ, அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலோ, கட்சியைப் பொறுத்த வரையிலோ அவர்கள் தெரிவித்திருந்தாலும், அதைக் குறித்துக் கூட நான் வருந்தவில்லை. சிரித்துக் கொண்டுதான் இருந்தேன். அரசாங்கம் எதைச் செய்தாலும், அதைக்குறித்து கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள், "அது யார் செய்தது, நான் முன்னமேயே சொன்னேன்; அவர் சொன்னார், இவர் சொன்னார், ஏன் இன்னும் அதிகம் கொடுக்கக் கூடாது? மதிய உணவு கொடுத்துவிட்டோம் என்று இவர்கள் தானா பெருமைப்படுவது?" என்ற வகையில் பேசினார்கள். இதிலே நாங்கள் என்ன பெருமைப் படுகிறோம்? நாட்டில் நடந்து கொண்டிருப்பதை, இருக்கக்கூடிய நிலைமைகளை அப்படியே சொல்லியிருக்கிறோமே தவிர, வேறு ஒன்றும் சொல்லவில்லை. மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். யார் எப்படிச் செய்தார்கள்? செய்தது பயனுள்ளதாக இருக்கிறதா? பிழை உள்ளதாக இருக்கிறதா? தவறுதலாக இருக்கிறதா? குறை இருக்கிறதா? என்பதையெல்லாம் மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இன்னும் திறமையாகச் செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்களா என்பதையும் மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். ஏதோ தேர்தல் வருகிறது, தேர்தலுக்காகத்தான் நாங்கள் ஏதோ செய்தோம் என்றால், அப்படியே வைத்துக்கொள்ளட்டும், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் சொல்கிறார்களே என்பதற்காக ஒன்றும் செய்யாமல் இருக்க முடியாது. தேர்தல் வருகிறதே என்பதற்காக இந்த வருஷம் எல்லாவற்றையும் தள்ளிப் போட முடியாது. கனம் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்குப் பயந்து, தேர்தலுக்காக ஏதோ செய்து விட்டார்கள் என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சொல்லிவிடுவார்களே என்பதற்காக, ஒன்றுமே செய்யாமல் இருக்க முடியாது. மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தினால், அல்லது புதிய கல்லூரிகளைத் திறந்தால் எதிர்க் கட்சி உறுப்பினர்கள், "தேர்தலுக்காகத்தான் செய்தார்கள்" என்று சொல்லிவிடுவார்களே என்பதற்காக நாம் செய்யவேண்டியதைச் செய்யாமல் இருக்க முடியாது. சென்ற ஆண்டில் நாம் செய்யவில்லையா? அப்பொழுது எங்கு தேர்தல் வந்தது? மக்களுக்கு நன்மை செய்யவேண்டும், உதவி புரிய வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணமாகும்.

மதிய உணவுக்கு மொத்தத்திலே பத்து பைசா போடச் சொன்னோம். போதாதுதான். அரசாங்கம் 6 பைசா கொடுக்கிறது. அதுவும் மூன்றில் ஒரு பங்கு பிள்ளைகளுக்குத்தான்

[திரு. எம். பக்தவத்சலம்] [7th March 1966

கொடுக்கிறோம். அப்படிக் கொடுப்பது கூட ஆண்டுதோறும் பெருகிக் கொண்டு வருகிறது. இந்த ஆண்டில் கனம் உறுப்பினர்கள் கவனித்திருப்பார்கள், அரசாங்கத்தின் பங்கு மட்டும் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது. மேலும் இரண்டு பைசா பஞ்சாயத்து கொடுக்க வேண்டும். இன்னும் இரண்டு பைசா மக்கள் கொடுக்கவேண்டும் என்பது தான் ஏற்பாடு. இப்பொழுது 10 பைசாவிற்குப் பதிலாக 25 பைசா கொடுத்து சாப்பாடு போட்டால் நல்லது தான். சாப்பாடு வேண்டாம் என்று சொல்லவில்லை. பத்து பைசாவிலேயே மிகச் சத்துள்ள உணவைப் போட முடியும் என்று சில நிபுணர்கள் எனக்கே எழுதியிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் வழி சொல்லுகிறோம் என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கருத்தரங்கு ஒன்று கோவையில் நடைபெற இருக்கிறது. அன்னிய நாட்டு நிபுணர் ஒருவர், "பத்து பைசாவுக்கு நல்ல சத்துள்ள உணவு போட முடியும். நான் ஆராய்ந்திருக்கிறேன். அதை நான் நிரூபித்துக் காட்டுகிறேன்" என்று கூறியிருக்கிறார். பத்து பைசாவிற்குப் பதில் 25 பைசா கொடுப்பதாக இருந்தால் இதற்கு மாத்திரம் இரண்டு கோடி ரூபாய்க்குப் பதில் 3½ கோடி ரூபாய் ஆகும்.

அதேமாதிரி சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு 250 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். 250 ரூபாய் கொடுப்பது என்றால் இன்னும் முப்பது கோடி ரூபாய் வேண்டும். 250 ரூபாய் கொடுத்தால் போதும், அவர்களுக்கு 300 ரூபாய் கொடுக்க வேண்டாம் என்று சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களே கூறமாட்டார்கள். பணம் இருந்தால் 300 ரூபாய் கூடக் கொடுக்கலாம். ஆனால், நம்மிடம் எவ்வளவு பணம் இருக்கின்றது, அதைக்கொண்டு எவ்வளவு தூரம் கொடுக்கலாம் என்பதை நன்றாகப் பரிசீலனை செய்துதான் கொடுக்கவேண்டியிருக்கிறது.

இன்னும் மதிய உணவு கொடுப்பது பற்றிச் சொன்னார்கள். இதை யார் சொன்னார்கள், எப்போது செய்யப்பட்டது, என்னமோ பெருமைப்படுகிறார்களே என்றெல்லாம் பேசுவது சரியல்ல. நாங்கள் தான் செய்தோம் என்று சொல்லவில்லை. நடப்பனவற்றை சொல்லியிருக்கிறோம். அவற்றை யாரும் மறுக்க முடியாது. மறைக்க முடியாது. நடப்பனவற்றை எடுத்துச் சொல்லக் கூடாதா? பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் 3-வது வகுப்பு வரை இலவசமாகக் கொடுப்பது என்று செய்திருக்கிறோம். இதனால் 45 லட்சம் ரூபாய் செலவாகும். ஏற்கனவே குறிப்பிட்ட சில வகுப்பு ஏழைப்பிள்ளைகளுக்குத் தான் பாட புத்தகம் கொடுக்கப்பட்டு வந்தது. யார் இல்லை என்கிறார்கள்? இப்போது ஒரு முறையாக ஐந்தாவது வகுப்பு வரை படிக்கிற மாணவர்களுக்கு விஸ்தரிக்கவேண்டும் என்று நினைத்தோம். பணம் இல்லை. ஆகவே 3-வது வகுப்பு வரை கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். செய்வனவற்றை எடுத்துச் சொல்லக் கூடாதா?

ஆசிரியர்கள் சம்பளத்தை எடுத்துக்கொண்டால் பே கமிஷன் போட்டோம். பே கமிஷன் சிபார்சை அப்படியே ஏற்றுக்கொண்



7th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

டிருக்கிறோம். யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபார்சைவிட இது அதிகம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அதற்குப் பிறகு ஒரு சிபார்சு செய்திருக்கிறார்கள். அந்தச் சிபார்சை அண்ணாமலை பல்கலைக் கழகத்தாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. சென்னை பல்கலைக்கழகத்தாரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் குறிப்பிட்டது அரசாங்க ஆசிரியர்களைப் பற்றி. பல்கலைக் கழகத்தைப்பற்றி அவர்கள் கவனிக்கவேண்டும். நாம் ஏதோ கொஞ்சம் கிராண்டுதான் கொடுக்கிறோம்.

ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கிய பணம் செலவு செய்யப்படவில்லையே, அதன் காரணம் என்ன என்று திரு. தர்மலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாம் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கல்விக்குச் செலவிட பணம் ஒதுக்கியிருந்ததில்—பஞ்சாயத்து யூனியன்கள் அப்போதுதான் அமைக்கப்பட்டு வந்தன—அவர்களால் பூரண தொகையையும் பெற முடியவில்லை. அதனால் அவ்வாண்டு ரூ. 2½ கோடி மிச்சமாயிற்று. அதை நாம் வேறு இனத்திற்குச் செலவு செய்து கொண்டோம். பஞ்சப்படி அதிகமாகக் கொடுக்கவேண்டிய நிலைமை வந்தது. அதனாலும் செலவாயிற்று.

அடுத்து, இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் "பணம் எல்லாம் செலவு செய்கிறார்கள். ஆனால் திட்டத்தினால் தான் பலன் இல்லை. தரம் குறைந்துவிட்டது" என்றார்கள். தரம் என்ற வார்த்தையை உபயோகப்படுத்தலாம் என்பதாகக் கனம் சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். தரம் எல்லாவகையிலும் உயர வேண்டும். கல்வியைப் பொறுத்தவரையில் நல்லவகையில் உயர வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். இப்போது தரம் உயரவில்லை என்றும் சொல்லிவிட முடியாது. மொத்த அளவிலும் அதிகப்பட்டுத்தான் வருகிறது. அதைத் தவிர்க்க முடியாது. கிராமங்களில் உள்ளவர்களுக்கு எல்லாம் இப்போது கல்வியில் ருசி ஏற்பட்டிருக்கிறது. உயர்கல்வி பெற முன் வருகிறார்கள். ஆகவே, எண்ணிக்கை பெருக்கத்திற்கு ஏற்ப கல்வி அளிக்கவேண்டியிருக்கிறது. அதோடு, தரத்தை உயர்த்துவதிலும் கவனம் செலுத்துகிறோம்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள், உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள், விஞ்ஞானக் கூடங்கள், நூலக வசதி ஆகியவற்றுக்காக எல்லாம் கவனம் செலுத்தி விசேஷ அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதை அறியலாம். நூலகங்களைப் பொறுத்தவரையில் திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாதர்கள், குழந்தைகள் என்று தனியாகப் படிக்க வசதி இல்லை என்றார்கள். கனம் அம்மையார் போன்றவர்கள்தான் இதுபற்றி கவனம் செலுத்த வேண்டும். ஆங்காங்கே மாதர் பகுதி மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. பள்ளி ஆசிரியை

[திரு. எம். பக்தவத்சலம்] [7th March 1966

கள் நல்ல புத்தகங்களை எல்லாம் கொண்டுபோய் படிக்கக் கொடுத்து வருகிறார்கள். மாதர்கள் படிக்கிறார்கள். குழந்தைகளுக்கு என்று தனி நூலகப் பிரிவு ஏற்படுத்தப்படுகிறது.

அடுத்து, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போதாது என்று கூறினார்கள். அதில் தொடர்ந்து அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. மொத்தத்தில் எவ்வளவு தூரம் கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்தவேண்டுமோ அவ்வளவு தூரம் செலுத்தப்பட்டு வருகிறது. அதோடு நாம் திருப்தி அடைவதற்கில்லை. தரத்தை உயர்த்தவேண்டும், விஞ்ஞான முறையில் அறிவு பெறுவதை அதிகப்படுத்த வேண்டும். அதில் எல்லாம் தீவிரமாகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

'டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரெக்ஷன்' என்று இருந்த அமைப்பை இரண்டாகப் பிரித்தது பற்றி கனம் உறுப்பினர் திரு. மதியழகன் சொன்னார்கள். புலவர் கோவிந்தனும் சொன்னார்கள். அதில் அவர்கட்கு என்ன குறை என்பது தான் எனக்குச் சரியாகப் புலப்படவில்லை. கல்வித்துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப காரியங்கள் துரிதமாக நடைபெறவேண்டும். மேல்பார்வை நல்ல முறையில் இருக்கவேண்டும். அதன் காரணமாக மேல்படிப்பு, உயர்நிலை, ஆரம்பநிலை என்று பிரித்து உயர்நிலைக்குத் தனியாக ஒரு டைரக்டரையும், செகண்டரி எஜுகேஷனுக்குத் தனியாக ஒருவரையும் போட்டதில் என்ன தவறு இருக்கிறது? ஆரம்பக் கல்விக்கு என்று ஏன் போடக்கூடாது என்றால் நான் முன்பே பலமுறை சொல்லிவந்துள்ளதுபோல, உயர்நிலைக் கல்வி, ஆரம்பக் கல்வி ஆகிய இரண்டும் ஒன்றிணைந்த பகுதி—அதைத் தனித்தனியாக மேல்நிலைக் கல்விபோலப் பிரிக்க முடியாது. அவை இரண்டுக்கும் இணைந்த ஒரு தொடர்பு இருக்கவேண்டும். ஆகவே தான், தனியாக அதைப் பிரிக்கவில்லை.

கல்லூரிகள் அதிகப்பட்டு வருகின்றன. மேலும் அதிகப்படும். எந்த இடத்தில் எப்படி ஆரம்பிப்பது என்பது பிரச்னை. கல்லூரி ஏற்படுத்துவது என்றால் ஏராளமாகச் செலவாகிறது. ஆகவே, எந்த இடத்தில் யார் யார் முன் வந்து 5 லட்சம் ரூபாய் நிதி திரட்டித்தர முன் வருகிறார்களோ அந்த இடத்தில் கல்லூரியை ஏற்படுத்தலாம் என்பதாக நான் முன்பே சொன்னேன். இப்போது திருவண்ணாமலையில் கல்லூரி ஏற்படுத்த முன் வந்திருக்கிறோம் என்றால் திரு. ஷண்முகம் அவர்கள் சந்தோஷப்படலாம். சந்தோஷப்படாமலும் இருக்கக்கூடும்.

**திரு. ப. உ. ஷண்முகம் :** தலைவர் அவர்களே, நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன், முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றி உடையவனாகவும் இருப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வெறும் நன்றி போதாது. திரு. ஷண்முகம் அவர்கள் இதில் என்ன பங்கு எடுத்துக் கொண்டுள்ளார்கள் என்பது எனக்குத் தெரியாது. திருவண்ணாமலையில் உள்ளவர்களே 5 லட்சம் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள். ஆகவே, அங்கே ஒரு கல்லூரியை ஏற்படுத்துவதையும் சேர்த்திருக்கிறோம்.



7th March 1966]

**திரு. ப. உ. ஷண்முகம் :** நான் எந்த அளவுக்குப் பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பது தெரியவில்லை என்றார்கள். முதலிலேயே நான் அதைப்பற்றி பேச இருந்தேன். நான் பேசிய காரணத்தினாலேயே வராமல் போய்விடப்போகிறதே என்று பேசாமல் இருந்தேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் பேசுவதில் பங்குகொள்வதைப் பற்றிச் சொல்லவில்லை. நிதி திரட்டுவதில் பங்குகொள்வதைப்பற்றி – உருப்படியான வகையில் பங்குகொள்வதைப்பற்றி— குறிப்பிடுகிறேன்.

ஆதாரக் கல்வியைப்பற்றி கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் முன்பு சொன்னது, பின்னால் சொன்னது, இப்பொழுது சொல்வது எல்லாம் முரண்பட்டதல்ல. ஆதாரக் கல்வியினுடைய அடிப்படைகளை அரசாங்கம் ஒப்புக் கொண்டு இருக்கிறது. குறிப்பிட்ட வகையிலே தொழிலை வைத்துப் பாடம் சொல்லிக்கொடுக்கப்படும் முறையை, அதுதான் வைதீக முறை, அந்த வைதீக முறையின் அடிப்படையில்தான் மாற்றியிருக்கிறோம். கல்வி 'ப்ரொடக்ஷன் ஓரியண்டட்' ஆக இருக்கவேண்டுமென்பது ஒரு கொள்கை. மத்திய ஆட்சியிலே இதற்குத் தனிக் குழு ஒன்று போட்டார்கள். அதில் நானும் ஒரு அங்கத்தினராக இருந்திருக்கிறேன். அப்போது நான் தெரிவித்த கருத்து என்னவென்றால் ஆரம்பப் பள்ளிகளில் எல்லாம் படிக்கிற மாணவர்களுக்கு 'உற்பத்தி செய்கிறோம்' என்ற ஒரு உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது. கிராமங்களிலே கொஞ்சம் நிலம் வாங்கியோ அல்லது குத்தகைக்கு வாங்கியோ அங்கே வேறு ஒன்றும் இல்லையென்றாலும் கூட காய்கறிகள் பயிரிட்டு, அங்கே படிக்கின்ற மாணவர்கள் அதைப் பாதுகாத்து, தண்ணீர் விட்டு பயிர் செய்தால் அவைகளை அவர்கள் தங்களுடைய உணவுக்கே பயன்படுத்திக்கொள்ள முடியும். அவர்கள் நல்ல சத்துள்ள உணவாகத் தாங்களே பயிர் செய்து தாங்களே உபயோகித்துக்கொள்ள முடியும். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் பள்ளிக் கூடங்களிலே கிட்சன் கார்டன்கள் வைத்து பயிர்செய்பவர்களுக்கு அரசாங்கம் பரிசு வழங்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டெக்னிக்கல் எஜுகேஷன்பற்றிச் சொன்னார்கள். இன்று தயாரிக்கப்படுகிற மாணவர்கள் மாணவிகள் போதாது. நெய்வேலியில் எடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். ஒரு திட்டம் என்றால் அதை உருவாக்குவதற்காக அதிகம் வேண்டியிருக்கும். பின்னால் அவர்களைக் குறைக்கவேண்டியிருக்கும். அவர்களுடைய தேவை இன்னும் இருந்துகொண்டு தான் இருக்கிறது. தொழில்கள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன, நம்முடைய நாட்டிற்கு இன்னும் என்ஜினியர்கள் வேண்டும், இன்னும் பற்றாக்குறை இருக்கிறது. அது மட்டுமல்ல. பாலிடெக்னிக்களில் பயிற்சிபெற்றவர்கள் வேறு வழியில்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. என்ஜினியர்கள் உத்தியோகத்திற்குத்தான் போகவேண்டும் என்பதல்ல. என்ஜினியரிங் கல்லூரிகளில் பயிற்சிபெற்று பட்டம்பெற்ற

[திரு. எம். பக்தவத்சலம்] [7th March 1966

மாணவர்கள் பெரிய நிபுணர்களாக இருக்கவேண்டும், தொழில் தலைவர்களாக ஆக வேண்டும், தாமாகவே ஒரு தொழிலை ஆரம்பிக்கலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்சி மொழி, பயிற்சிமொழி பற்றிச் சொன்னார்கள். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் இன்னும் ஆவேசத்துடன் பேசியிருப்பார்கள். ஆனால் ஆவேசம் குறைந்துவிட்டது என்று தவறுதலாக நான் எடுத்துக் கொள்ளவில்லை. ஆட்சிமொழியைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் தான் ஆட்சிமொழி. சில மாநிலங்களிலே இன்னும் இதுகூடச் செய்யப்படவில்லை. ஆந்திராவிலே இனிமேல்தான் செய்யப் போகிறார்கள். ஆனால், நம் தமிழ்நாட்டைப்பொறுத்தவரையில் தமிழ்தான் ஆட்சிமொழி. அது மட்டுமல்ல. தமிழ்நாட்டில் உத்தியோகம் வேண்டுமென்பவர்கள் தமிழ் படித்தால் மட்டும் போதாது, நல்ல முறையில் தமிழ் படிக்கவேண்டுமென்பதைச் சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் தமிழ் படிக்காமல் உத்தியோகம் கிடைக்காது என்ற காலம் வந்துகொண்டிருக்கிறது. யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்விலே தமிழிலே விடையளிப்பதற்கு ஏற்பாடு செய்துவருகிறோம். அது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தமிழிலே போதிய அளவு படிக்காமல் இருப்பவர்களுக்கு உத்தியோகம் கிடைப்பது கஷ்டமாகப் போய்விடும் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன். ஆனால் பாரத நாட்டிலே, மத்திய ஆட்சியிலே நமக்கு அக்கறை இருக்கிறது, அந்தவகையில் நாம் பங்குக்கு உரியவர்களாக இருக்கிறோம். ஆட்சிமொழி ஹிந்தியாக இருக்கவேண்டுமென்று சட்டம் சொல்லியது. ஆனால், அது மட்டும் போதாது, இந்தியோடு ஆங்கிலமும் நாம் வேண்டுமென்ற வரை இருக்கவேண்டும் என்று வற்புறுத்தினோம். அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே. ஆங்கிலத்தையும் நாம் சரியாகக் கற்றுக்கொள்ளவேண்டும், "என்ற கருத்தில்தான் இப்பொழுது மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் சிராகக் கற்றுக்கொள்வதற்கு வழிசெய்கிறோம். வங்காளத்தில்கூட ஆங்கிலம் இதுமாதிரி ஆரம்பப் பள்ளியிலிருந்தே கற்றுக்கொள்வதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு மட்டும் போதாது. மத்திய ஆட்சிப் பரீட்சைக்குப் போவதென்றால் 14 மொழிகளிலும் விடையளிப்பதற்கு வகைசெய்யவேண்டுமென்று காங்கிரஸ் கமிட்டி காட்டிய வழி மத்திய ஆட்சியிலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பதினான்கு மொழிகளிலும், எந்த மொழியிலேயும், விடையளிக்கலாம் என்பது இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிற விஷயம். அது அமலுக்கு வரும்பொழுது, ஆங்கிலம், இந்தி இரண்டிலும் கட்டாயமாகப் பரீட்சை எழுத வேண்டி இருக்கும். ஒன்று மட்டும் வேண்டும், ஒன்று வேண்டாம் என்று சொல்லிவிடமுடியாது. இதிலுள்ள எல்லா சாதக பாதகங்களையும் பார்க்கவேண்டும். ஆனால், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதவேண்டுமென்றால் எங்கே வேண்டுமானாலும் போய் பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கவேண்டும். ஆகவே தான், படிப்புக்கு மும்மொழிக் கொள்கை, ஆட்சிக்கு இருமொழிக் கொள்கை என்று நான் சொன்னேன்.



[library stamp] ...609 ...

7th March 1966]

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தியைப்பற்றி, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே நாம் ஒத்துக்கொள்கிற வரையிலே ஆங்கிலம் நீடிக்கும் என்பது இன்னும் முடிவடையாமல் விவகாரத்தில் இருந்து கொண்டிருக்கிறது. யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்விலே இந்தி முதலிலேயே கட்டாயமாக இருக்கும் என்பதை முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டது முன்னால் இருக்கும் பிரச்னைக்குப் பரிகாரம் காணாமல் இந்தியை வரவேற்பதாக அமையாதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிரச்னைக்கு முடிவு காணாதவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான். நான் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு வருகிறேன், என்னைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் மாறுதல் இல்லை. இந்தியை நாம் புறக்கணிக்க முடியாது, ஆனால் அதைப் புகுத்திவிட முடியாது. இந்தி புகுத்தப்படாது, ஆகவே, மாணவர்களுக்கு அதனால் பாதகம் ஏற்படாது என்பதை நான் மாணவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நமக்கு வேண்டுமென்ற வரையில் ஆங்கிலம் இருக்கும், நாம் இப்பொழுது ஆங்கிலத்தைப் படித்துக்கொள்ளலாம், ஆனால் நமக்குப் பின்னால் வருகின்ற நம்முடைய சந்ததியார்களுடைய நலனையும் நாம் கவனிக்கவேண்டும். இன்றைக்கு இருப்பவர்கள் தவறுதலான பாதைக்கு அழைத்துச்செல்லப்பட்டால் பின்னால் வருகின்ற சந்ததியார்களுடைய நிலையை அது பாதிக்கக்கூடிய அளவுக்கு நாம் விடக்கூடாது. ஆகவே, மும்மொழிக் கொள்கையை இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் காங்கிரசும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. வேறு ஒரு மொழியைப் படிப்பதைவிட . . .

**புலவர் கா. கோவிந்தன் :** இந்தி கட்டாயப்படுத்தப்படாது என்று சொல்கிறார்கள். யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் தேர்விலே இந்தியிலே கட்டாயமாகப் பரீட்சை எழுதவேண்டியிருக்கும் என்று சொல்கிறார்கள். இந்தியைக் கட்டாயப்படுத்தவில்லை, ஆர்வத்துடன் படிக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதுகிற நேரத்தில் இந்தியில் கட்டாயமாக தேர்வு எழுதவேண்டுமென்று சொல்வது, இந்தியைக் கட்டாயமாக மறைமுகமாகப் புகுத்துவதாக ஆகாதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பூதம் என்று நினைத்துக் கொண்டு அச்சப்படுவதில் பயனில்லை. இந்தி மொழியைப் படிப்பது, வேறு மொழியைப் படிப்பதைவிட நல்லது. இந்தியைப் படித்து பரீட்சைக்குப் போகவேண்டுமென்று வைத்திருக்கிறோம். நல்ல முறையில் படித்து அதிகமான மார்க்குகள் வாங்குகிறார்கள். தங்களுடைய நலனை நாடி, எதிர்காலத் தேவையை நாடி இந்தியைப் படித்துக்கொண்டு வருகிறார்கள் மாணவர்களும், மாணவிகளும். பூதத்தைக் காட்டி மாணவர்களைக் கெடுத்துவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினாலே, ஆட்சி மொழிக்கும், பயிற்சி மொழிக்கும் குந்தகம் இல்லை, முரண்பாடு இல்லை, பயிற்சி மொழியைப் பொறுத்தவரையில் உயர்

நிலைப் பள்ளிகளில் தாய்மொழியிலேதான் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. கல்லூரிகளிலும் தாய்மொழியில் படிப்பதற்கு வசதியளிக்கப்பட்டிருக்கிறது. தாய்மொழியிலேயே சொல்லிக்கொடுக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துங்கள், அதற்கு ஒரு டைம் லிமிட் வையுங்கள் என்று புலவர் கோவிந்தன் அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அறிவு வளர்ச்சியிலேயே நாம் கை வைக்கக்கூடாது. உலகத்திலே ஏற்பட்டுள்ள அறிவு வளர்ச்சியிலே நம்முடைய மாணவர்களும், மாணவிகளும் பங்கு கொள்ளவேண்டுமென்ற ஆர்வம் கொள்ளவேண்டும். விஞ்ஞான அறிவை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு உலகத்திலே அந்த அறிவு வளர்ந்துகொண்டு வருகிறது. நாம் இங்கே படித்தாலே போதும் என்று நினைக்கக்கூடாது, உலகத்திலே உள்ள விஞ்ஞான அறிவில் நம்முடைய நாட்டு மாணவர்களும் பங்குகொள்ளச் செய்யவேண்டும். திரு. மதியழகன் அவர்கள், என்ஜினியரிங் காலேஜில், ஆசிரியர்களுக்கு பேஸிக் என்ஜினியரிங் ஸயின்ஸில் ஃபண்டமெண்டல் ரிசர்ச் செய்வதற்கு சமஸ்கிருதம் வைத்திருக்கிறார்களே என்று சொன்னார்கள். நமக்கு பல விஷயங்கள் புரியவில்லை. நமக்குப் புரியாதது எவ்வளவோ. மணிப்புரி டான்ஸ் பார்த்து இருக்கலாம், எப்பவோ பார்த்திருக்கலாம் அதை இப்பொழுது ஞாபகப்படுத்தமுடியுமா? அதைப்பார்த்தாலும் அது
1-30 p.m. புரியலாம், புரியாமலும் இருக்கலாம். பார்த்தால் அனுபவிக்கலாம். நமக்குப் பிரயோசனமில்லை என்று எதையும் தள்ளிவிட முடியாது. சமஸ்கிருதத்தை ஜெர்மனியில் உள்ளவர்கள் படிக்கிறார்கள். ‘காஸ் அண்டு எஃபெக்ட்’ என்பதற்கான விளக்கமெல்லாம் அதிலே இருக்கிறது. ஆர்கியாலஜியைப் பற்றிப் புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னார்கள். சிற்ப சாஸ்திரத்தைப் பார்த்து, வானளாவிய கோபுரங்களை எல்லாம் எப்படிக் கட்டினார்கள் என்றெல்லாம் விஞ்ஞானிகள் ஆச்சரியமடைகிறார்கள். அதெல்லாம் விஞ்ஞான சாஸ்திரந்தான். பழையதிலும் நன்மை இருக்கிறது. புதுமையையும் தெரிந்து கொள்ள வேண்டும். இன்று காலையில் கேள்வி நேரத்தில் ‘வைத்தியரா-மருத்துவரா’ என்ற பிரச்சினை எழுந்தது. வைத்தியர் என்றால் என்ன, மருத்துவர் என்றால் என்ன? புஷ்பம் என்றால் என்ன, பூ என்றால் என்ன? எல்லாம் ஒன்றுதான். பழையதில் சில முறைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். மேனாட்டுச் சிறந்த விஞ்ஞானிகள் எல்லாம் அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஒருமுறை ஸ்விட்சர்லாந்திலிருந்து பெரிய மருத்துவத் தொழிலதிபர் ஒருவர் ராஜபவனத்திற்கு வந்திருந்தார். நானும் அப்போது அங்கு இருந்தேன். விருந்துக்கு வந்தவர் தோட்டத்திற்குள் போனார். அங்கிருந்து ஒரு செடியைப் பிடுங்கிக் கொண்டு வந்தார். ‘இந்தச் செடிதான் எங்களுக்கு வேண்டியது; இதைப்பற்றி உங்கள் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது’ என்று கூறினார். ஆகவே, நாம் ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்று சொல்லிக்கொண்டுவந்தால் ஒன்றுமே இல்லையென்று ஆகிவிடும். அப்போது வேதாந்தம் ரொம்ப முற்றிவிடும். சமஸ்கிருதத்தை அவ்வளவு அலட்சியப் படுத்தக்கூடாது. அதை ஜெர்மனிக்காரர்கள் எவ்வளவு





பாராட்டுகிறார்கள்? உலகத்தில் கிடைக்கக்கூடிய அறிவையெல்லாம் மாணவர்கள் பெற முயலவேண்டும். தமிழை நன்றாகப் படிக்க வேண்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ரஷ்யன் மொழி, ஜெர்மன் மொழி ஆகியவற்றையும் வைக்கலாம் அல்லவா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ரஷ்யன் மொழி படிப்பதற்கு என்று ஒரு பிரிவு இருக்கிறது. பிரஞ்சு மொழி படிக்க வசதி இருக்கிறது. சமஸ்கிருதத்தைப் பற்றி வெறுப்பு வேண்டாம். ரஷ்ய மொழி, ஜெர்மன் மொழி, எந்த மொழியாக இருந்தாலும் படிக்கவேண்டும். நமது நாட்டில் இருக்கும் அற்புதமான ‘என்ஜினியரிங் ஃபீட்’ எல்லாம் தெரிந்து கொள்ளவேண்டும். சிவாஜி காலத்தில், சரபோஜி மன்னன் காலத்தில் பிரஞ்சு நிபுணர்கள் எல்லாம் வந்து உதவி செய்தார்கள். நாம் கிணற்றுத் தவளையாக இருக்க முடியாது. உலகத்தின் எந்த மூலை முடுக்கிலிருந்து அறிவைப் பெறுவதாக இருந்தாலும் அக்கறை கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்களுக்கு ஒரு பிரமை. பொதுவாக, புலவர்களுக்குப் பிரமை ஏற்படுவதைக் கவிதைகளில் பார்த்திருக்கிறோம். பல புலவர்களுடைய கவிதைகளைப் பார்த்திருக்கலாம். மாணவர்கள் நமது திட்டங்களைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக பிளானிங் ஃபோரம் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே அரசியலைப் புகுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். நமது திட்டங்களிலே மாணவர்கள் அக்கறை கொள்ளுகிறார்கள். கருத்தரங்குகளை நடத்துகிறார்கள். நல்ல முறையில் அதைப் பயன்படுத்திக்கொள்ள முற்பட்டிருக்கிறார்கள்.

கனம் உறுப்பினர் மணி அவர்கள், ‘ஆசிரியர்களுக்கு அவார்டு கொடுப்பதில் 230 ரூபாய்க்கு வெள்ளி மெடலாகக் கொடுக்கப்படுகிறது’ என்று கூறியிருப்பது சரியா என்று கேட்டார்கள். 230 ரூபாய்க்கும் வெள்ளியில் மெடலாகக் கொடுப்பதில்லை. 200 ரூபாய் பரிசுப்பத்திரமாகவும் கொடுத்து 30 ரூபாய்க்கு மெடல் கொடுக்கப்படுகிறது. இது பிரிண்டிலே ஏற்பட்ட தவறு.

இன்று நடைபெற்ற விவாதத்திலே எவ்வளவுதான் காரசாரமாகக் கண்டிக்கவேண்டும், குறைகளைச் சொல்லவேண்டும், தேர்தல் வந்து விடுகிறதே என்று பேசினாலும் ஒன்றும் பேச முடியவில்லை. கூடிய வரையில் நல்ல முறையில் கல்வி பட்ஜட்டை அமைத்திருக்கிறோம். சீரிய வகையில் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம். குறைகள் இருந்தால் அவற்றை அகற்றுவதிலும் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். ஆகவே, இந்த மானியக் கோரிக்கையைக் கனம் உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் தலைவரவர்களே, ‘ஸான்ஸ்க்ரிட் ஸ்டடிஸ்’ ஏன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி ஒரு வார்த்தை. ஃபண்டமெண்டல் ரிசர்ச் அடிப்படையில்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [7th March 1966

உள்ள ஆராய்ச்சிகளில் 'காஸ் அண்டு எஃபெக்ட்' என்பதைப் பற்றி ஒரு முக்கியமான பகுதி இருக்கிறது. எது காரணம் எது விளைவு ; விளைவு காரணமாக இருக்கும், காரணம் விளைவாக இருக்கும் ; நாம் எது காரணம் என்று நினைக்கிறோமோ அது விளைவாக இருக்கும். நாம் எது விளைவாக இருக்குமென்று கருதுகிறோமோ அது காரணமாக இருக்கலாம். பழைய தர்க்க சாஸ்திரம் படித்தவர்கள் சொல்வார்கள். நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்று சொல்வார்கள். சமஸ்கிருதத்தில் 'காஸ் அண்டு எஃபெக்ட்' பற்றியெல்லாம் உயர்ந்த கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, ஃபண்டமென்டல் ரிசர்ச் பண்ண வேண்டுமென்றால் 'காஸ் அண்டு எஃபெக்ட்' எது விளைவு, எது காரணம் என்பதையெல்லாம் பற்றி நம்முடைய 'ஏன்ஷியன்ட் லிட்ரேச்சர்' ஆன சமஸ்கிருதத்தில் ஆதாரம் இருக்கிறது. அதனால்தான் அதைப் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற நாடுகளில், வெளி நாடுகளில் இருப்பவர்கள் எல்லாம் இதைப் படித்து தங்களுடைய விஞ்ஞான வளர்ச்சிக்குப் பயன் படுத்திக் கொள்ளுகிறபோது நம்முடைய நாட்டில் இருப்பதை நாமும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற முறையில்தான் அந்தப் பாடம் வைக்கப்பட்டிருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் நல்ல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். கீழ்த் தளத்தில் படிக்கிற பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்கள் உயர்ந்த தரமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர்கள் கிராஜுவேட்டாக இருந்தால் கூட வரவேற்கிறேன். நிதி நிலைமைக்குத் தகுந்தபடி அவற்றையெல்லாம் செய்யலாம். ஆசிரியர்களாக வருகின்றவர்களுடைய கையெழுத்து, உச்சரிப்பு ஆகியவற்றைப் பற்றியெல்லாம் முதலிலேயே பரிசீலிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது ரொம்ப முக்கியமானது. மிகுந்த உற்சாகத்தோடு கல்வித் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கும் கல்வியதிகாரிகள் இதிலே கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன். பஞ்சாயத்து யூனியனில் பணிபுரியக் கூடிய எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் இருக்கிறார்கள். பள்ளிகளை மேற்பார்வை பார்க்கக் கூடியவர்கள் டெபுடி இன்ஸ்பெக்டர்கள். மேல் பார்வை பார்ப்பது வேறு, பஞ்சாயத்து யூனியன்களில் பள்ளிக்கூடங்களைப் பார்ப்பது வேறு. இரண்டையும் ஒன்றுக்கொன்று இணைத்துக் குழப்பக் கூடாது. பஞ்சாயத்து யூனியன் நடத்தும் பள்ளிக்கூடங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். அவைகளில் மேலும் கவனம் செலுத்துவதோடு கட்டடங்கள் கட்டுவதிலும் கவனம் செலுத்தவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது.

**திரு. மு. கருணாநிதி :** சமஸ்கிருதம் பற்றி இரண்டு அமைச்சர்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். அதிலே, எங்களுக்கு எந்த விதமான ஏற்றத்தாழ்வான கருத்தும் கிடையாது. அதிலே நல்ல இலக்கிய வளம், விஞ்ஞான வளம் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறோம். அதற்காக ஒரு வகுப்பு வைத்து நடத்து



7th March 1966] [திரு. மு. கருணாநிதி]

வதிலே கூட அபிப்பிராய பேதம் இல்லை. அதே போல் திராவிட கலாசாரம் உயர்ந்தது என்று உலகத்தில் இருக்கிற ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள்; நாமும் அவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கிறோம்; அது உண்மையான கருத்தும் கூட. ஆகவே, திராவிட கலாசாரங்களைப் பற்றிப் போதிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திராவிட கலாசாரம் என்றால் என்ன என்று கொஞ்சம் தெரிந்து கொள்ளவேண்டும். எது திராவிட கலாசாரம்? எது ஆரிய கலாசாரம்? இன்று இதெல்லாம் இணைக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆர்க்கியாலஜி பற்றிக் கவனம் செலுத்துகிறோம். கல்வெட்டுகளை எல்லாம் எடுத்து கவனம் செலுத்துகிறோம். தமிழகத்திலுள்ள கோயில்களில் எழுதப்பட்டுள்ள கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து பரிசீலிப்பதற்கான காரியங்களையெல்லாம் செய்திருக்கிறோம். சாஸ்வதி மகால் நூல் நிலையத்திலும் இந்த மாதிரி எல்லாம் செய்கிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சமஸ்கிருதத்தின் முக்கியத்துவத்தைப் பற்றித் தொழிலமைச்சர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இதைப் பற்றியெல்லாம் முடிவு செய்ய வேண்டியவர்கள் மொழி நிபுணர்களே ஆவார்கள். ஒரு மந்திரிக்கு இரு மந்திரி இதிலே விசேஷ சிரத்தை எடுத்துக் கொள்வதிலிருந்தே நான் சொன்ன கருத்து உண்மையாகிறது. நான் சொன்ன கருத்தை அவர்கள் ஸ்தாபித்து விட்டார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது மொழி விஷயமல்ல. விஞ்ஞான விஷயம், விஞ்ஞானத்தையொட்டி எங்கிருந்து எது கிடைத்தாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பத்து பைசாவில் சிறந்த முறையில் மதிய உணவைப் போட முடியும் என்று சொன்னார்கள். அரசாங்கம் மதிய உணவுக்காகப் பள்ளிகளுக்கு அளிக்கும் தொகை 15 பைசாவாகும். அப்படி 5 பைசா அவர்களுக்கு ஏன் அதிகமாகக் கொடுக்கிறோம்? இரண்டாவது, உயர்நிலைக் கல்வி வரை தமிழிலேயே எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். தற்போது உடற்பயிற்சி, தேசியப் படைத் திட்டம் என்ற திட்டம் அமைக்கப்பட்டு வருகிறது. எல்லாப் பள்ளிகளிலும், ரைட், லெப்ட்- இடது வலது என்பதற்கெல்லாம் இந்தியிலேதான் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மதிய உணவைப் பொறுத்த வரையிலே ஹரிஜனங்களுக்கு முதலிலேயே அது கொடுக்கப்பட்டிருக்கிறது. 15 பைசா வரையில் கொடுக்கிறோம். அது ஓரளவிற்குத்தான் செலவாகிறது. இது இரண்டு கோடிக்கு மேல் ஆகிறது. பத்து பைசா வைத்துத்தான் செய்கிறார்கள். மேலும் நிதி அனுமதித்தால் அதிகம் கொடுக்கலாம். ஆனால் இதை வைத்துக் கொண்டும் செய்ய முடியும். இதை ஒழுங்காகச் செய்ய வேண்டும். பஞ்சாயத்திற்குத்தான் இதன் பொறுப்பு இருக்கிறது. பஞ்சாயத்து பிரசிடென்ட்தான் இதன் தலைவர். லெஃப்ட், ரைட்

என்று சொல்வதைப் பற்றி ஆட்சேபணையில்லை, இந்தியில் சொல்வதில்தான் ஆட்சேபம். அது கமான்ட். இதை பிரமாதப் படுத்த வேண்டியதில்லை. தமிழிலும் சொல்லலாம். என்.ஸி.ஸி. பயிற்சியைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட. ராணுவ அதிகாரிகள்தான் இதற்கு அதிகாரிகளாக இருக்கிறார்கள். அவர்களிடம் பேசினேன். கமான்ட் தமிழில் சொல்லவேண்டுமென்று சொன்னேன். தமிழில் சொல்ல அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** ஒரு வேண்டுகோள். ஆசிரியர்களுக்கு அடிப்படை பென்ஷனை 20 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஓய்வு பெற்றிருக்கிறவர்கள் நூற்றுக்கணக்கில் தான் இருப்பார்கள். அவர்களுக்கும் சேர்த்து அந்தப் பென்ஷனைத் தர இந்த அரசாங்கம் உடன்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஓய்வுபெற்று பென்ஷன் வாங்குகிறவர்கள் எல்லோருக்கும் இது பொருந்தும். யார் ஓய்வு பெற்று பென்ஷனுக்கு உரியவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு பொருந்தும். யாரும் 20 ரூபாய்க்கு குறைந்து பென்ஷன் வாங்க மாட்டார்கள்.

**திரு. சா. கணேசன்:** முதல் அமைச்சர் அவர்கள் தெளிவு படுத்த வேண்டியது என்னவென்றால், இந்த குறைந்தபட்ச பென்ஷன் தொகை 20 ரூபாய் என்பது 1955-ல் இருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்டோடு அமலுக்கு வருகிறதா அல்லது 1966-ல் இருந்துதான் வருகிறதா

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் ஒன்றுமில்லை. இன்றைக்கு, மார்ச் மாதம் வாங்கி விட்டார்களோ என்னவோ தெரியாது. ஏப்ரல் மாதம் வாங்குகிறவர்கள் யாராக இருந்தாலும் ஆசிரியர்களாக இருந்து ஓய்வு பெற்று பென்ஷன் வாங்குகிறவர்கள் 20 ரூபாய்க்கு குறையாமல் வாங்குவார்கள்.

**கனம் சபாநாயகர்:** எல்லாம் சேர்த்துக் கொடுக்க முடியுமா?

The cut motion was put and lost.

MR. SPEAKER: The question is:—

"That the Government be granted a sum not exceeding Rs. 45,30,53,500 under Demand No. XIII—Education".

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

1-45 p.m. The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

'Nil'.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Tuesday, 8th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*State Transport Bus Stand at Madurai*

* 197 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any site has been assigned for constructing of State Transport Bus Stand in Madurai City; and

(*b*) if so, when the work is likely to be taken up and the time expected for its completion?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) About 1·42 acres of lands in Madurai are required for constructing the bus stand of the Madras State Transport Department. Out of this, about 76 cents have been taken over by the department from the Madurai Municipality. Proposals for transferring about 48 cents of Poromboke lands to the department are under way. The proceedings initiated for acquiring the balance of about 18 cents of private land have been stayed by the High Court consequent on a writ petition filed by the owners against the acquisition.

(*b*) The work of constructing the bus stand at Madurai will be taken up after all the lands required are taken over by the department. The period of completion will be about one year.

**திரு. வை. சங்கரன்:** இது பப்ளிக் பர்ப்பஸ் ஆக இருப்பதினாலே லாண்டை முதலிலே எடுத்துக்கொண்டு பிறகு காம்பன்சேஷன் சம்பந்தமாக தாவா அல்லது விவகாரம் இருந்தால், அதைக் கவனிக்கலாம். ஆகையால் லாண்டை முதலிலே அக்வையர் பண்ணிக்கொண்டு பின்னாலேயே காம்பன்சேஷன் நிர்ணயித்த பின் கொடுக்கலாம். இதில் ஏன் தாமதம் ஏற்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ஹைக்கோர்டிலே ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். இது 'வெகேட்' ஆகும் வரை ஒன்றும் செய்யமுடியாது.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் ஸ்டாண்டானது இப்பொழுது இருக்கிற பஸ் ஸ்டாண்டுக்கு அருகாமையில் இருக்குமா அல்லது வேறு இடத்தில் இருக்குமா? வேறு இடத்தில் இருந்தால் சௌகரியமாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

[திரு. எம். பக்தவத்சலம்] [7th March 1966

என்று சொல்வதைப் பற்றி ஆட்சேபணையில்லை, இந்தியில் சொல்வதில்தான் ஆட்சேபம். அது கமான்ட். இதை பிரமாதப் படுத்த வேண்டியதில்லை. தமிழிலும் சொல்லலாம். என்.ஸி.ஸி. பயிற்சியைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட ராணுவ அதிகாரிகள்தான் இதற்கு அதிகாரிகளாக இருக்கிறார்கள். அவர்களிடம் பேசினேன். கமான்ட் தமிழில் சொல்லவேண்டுமென்று சொன்னேன். தமிழில் சொல்ல அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** ஒரு வேண்டுகோள். ஆசிரியர்களுக்கு அடிப்படை பென்ஷனை 20 ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஓய்வு பெற்றிருக்கிறவர்கள் நூற்றுக்கணக்கில் தான் இருப்பார்கள். அவர்களுக்கும் சேர்த்து அந்தப் பென்ஷனைத் தர இந்த அரசாங்கம் உடன்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஓய்வுபெற்று பென்ஷன் வாங்குகிறவர்கள் எல்லோருக்கும் இது பொருந்தும். யார் ஓய்வு பெற்று பென்ஷனுக்கு உரியவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு பொருந்தும். யாரும் 20 ரூபாய்க்கு குறைந்து பென்ஷன் வாங்க மாட்டார்கள்.

**திரு. சா. கணேசன் :** முதல் அமைச்சர் அவர்கள் தெளிவு படுத்த வேண்டியது என்னவென்றால், இந்த குறைந்தபட்ச பென்ஷன் தொகை 20 ரூபாய் என்பது 1955-ல் இருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்டோடு அமலுக்கு வருகிறதா அல்லது 1966-ல் இருந்துதான் வருகிறதா

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் ஒன்றுமில்லை. இன்றைக்கு, மார்ச் மாதம் வாங்கி விட்டார்களோ என்னவோ தெரியாது. ஏப்ரல் மாதம் வாங்குகிறவர்கள் யாராக இருந்தாலும் ஆசிரியர்களாக இருந்து ஓய்வு பெற்று பென்ஷன் வாங்குகிறவர்கள் 20 ரூபாய்க்கு குறையாமல் வாங்குவார்கள்.

**கனம் சபாநாயகர் :** எல்லாம் சேர்த்துக் கொடுக்க முடியுமா?

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 45,30,53,500 under Demand No. XIII—Education".

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

1-45 p.m. The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

'Nil'.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 8th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*State Transport Bus Stand at Madurai*

* 197. *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any site has been assigned for constructing of State Transport Bus Stand in Madurai City; and

(*b*) if so, when the work is likely to be taken up and the time expected for its completion?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) About 1·42 acres of lands in Madurai are required for constructing the bus stand of the Madras State Transport Department. Out of this, about 76 cents have been taken over by the department from the Madurai Municipality. Proposals for transferring about 48 cents of Poromboke lands to the department are under way. The proceedings initiated for acquiring the balance of about 18 cents of private land have been stayed by the High Court consequent on a writ petition filed by the owners against the acquisition.

(*b*) The work of constructing the bus stand at Madurai will be taken up after all the lands required are taken over by the department. The period of completion will be about one year.

**திரு. வை. சங்கரன் :** இது பப்ளிக் பர்ப்பஸ் ஆக இருப்பதினாலே லாண்டை முதலிலே எடுத்துக்கொண்டு பிறகு காம்பன்சேஷன் சம்பந்தமாக தாவா அல்லது விவகாரம் இருந்தால், அதைக் கவனிக்கலாம். ஆகையால் லாண்டை முதலிலே அக்வையர் பண்ணிக்கொண்டு பின்னாலேயே காம்பன்சேஷன் நிர்ணயித்த பின் கொடுக்கலாம். இதில் என் தாமதம் ஏற்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஹைக்கோர்டிலே ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். இது 'வெகேட்' ஆகும் வரை ஒன்றும் செய்யமுடியாது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் ஸ்டாண்டானது இப்பொழுது இருக்கிற பஸ் ஸ்டாண்டுக்கு அருகாமையில் இருக்குமா அல்லது வேறு இடத்தில் இருக்குமா? வேறு இடத்தில் இருந்தால் சௌகரியமாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

[8th March 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதே இடத்திலா அல்லது வேறு இடத்திலா என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. வேறு கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

### அரசாங்க பஸ் விபத்துகள்

* 198 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965 ஜனவரி முதல் டிசம்பர் வரை எத்தனை அரசாங்க பஸ்கள் விபத்துக்குள்ளாயின ?

(இ) விபத்தில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) 3,189.

*Accidents*—

| Insignificant. | Minor. | Major. | Fatal. | Total. |
|---|---|---|---|---|
| 2,515 | 580 | 53 | 41 | 3,189 |

(b) 41.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறதா ? அப்படியானல் உயர்ந்தபட்சம் எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்குச் சட்டம் இருக்கிறது. சட்டப்படி நஷ்ட ஈடு கொடுக்கப்படும். க்ளெய்ம்ஸ் காம்பன்சேஷன் டிரிபுனல் இருக்கிறது. சட்டப்படி என்ன உரித்தானதோ அது கொடுக்கப்படும்.

திரு. எம். எஸ். மணி : இந்த விபத்துக்களினல் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் என்ன ? நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு இன்ஷூரன்ஸ் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நமக்கு நஷ்டம் நாம் கொடுக்கும் காம்பன்சேஷன்தான். சர்க்கார் அதற்குத்தான் பண்டு வைத்திருக்கிறார்கள். ஓரளவிற்குத் தொகையைப்போட்டு அந்த பண்டு நிறுவப்பட்டிருக்கிறது. அந்தப் பண்டிலிருந்து காம்பன்சேஷன் கொடுக்கப்படுகிறதே தவிர தனியாக இன்ஷூர் செய்வதில்லை.

திரு. செ. மாதவன் : இந்த விபத்துக்கள் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாக இருக்கிறதா ? அப்படியானல் அதற்கான காரணம் என்ன ? ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் ஒழுங்காக விதிகள் பின்பற்றப்படுவதில்லை என்று பெரிய உயர்நீதி மன்ற நீதிபதி முதல் கனம் சபாநாயகர் ஈறாக சொல்லியிருக்கிறார்கள். அதைக் கவனத்தில் கொண்டு விபத்துக்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?



8th March 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விபத்துக்களைப்பற்றிக் கணக்கெடுக்கும்போது ஒரு பத்து லட்சம் மைலுக்கு அதாவது ஒரு மில்லியன் மைல்களுக்கு எவ்வளவு ஆக்ஸிடன்டுகள் நடந்திருக்கின்றன என்றுதான் கணக்குப் பார்ப்பது. அதிகமாக பஸ் ஓடுகின்ற இடத்தில் அதிகமாக பஸ் விபத்துக்கள் ஏற்படுகின்றன. குறைவாக ஓடுகின்ற இடத்தில் குறைவாக இருக்கும். ஆகையால் எண்ணிக்கையைப் பார்த்து அதிகம், குறைவு என்று சொல்லிவிட முடியாது. இவ்வாறு பார்க்கும்போது நம்முடைய ராஜ்யத்தில் ஒரு மில்லியன் எஃபெக்டிவ் மைல்களுக்கு விபத்துக்கள் 1963-லே .8; 1964-லே .75; 1965-லே .82 என்று இருக்கிறது இதையே மற்ற ராஜ்யங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் பம்பாய் ராஜ்யத்தில் 1963-ல் 1.34; 1964-ல் .89, 1965-ல் .78 என்று இருக்கிறது. இது அளவிற்கு மீறியது என்று சொல்வதற்கில்லை. இருந்தாலும் நம்முடைய ராஜ்யத்தில் தலைவர்கள் சொல்லியிருப்பதைக் கவனத்தில் கொண்டு எவ்வளவு விபத்துக்களைத் தடுக்க முடியுமோ, அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ம. கமலநாதன் : இவ்வளவு அதிகமாக ஆக்ஸிடென்ட் ஏற்படுவதால் ஏன் இன்ஷூரன்ஸ் செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு அவசியம் இல்லை. சர்க்காரே ஒரு பண்டு வைத்திருக்கிறது. இதிலிருந்து நஷ்ட ஈடு கொடுக்கலாம். இந்த பண்டு நம்மிடத்திலேயே இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : மோட்டார் வாகனங்களுக்கு தேர்ட் பார்ட்டி இன்ஷூரன்ஸ், காம்ப்ரஹென்சிவ் இன்ஷூரன்ஸ் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனல், நம்முடைய அரசாங்க பஸ்களுக்கு இன்ஷூரன்ஸ் செய்யப்படுவதில்லை. இதற்குத் தனியாக பண்டு வைத்திருக்கிறோம் என்று அமைச்சர் கூறுகிறார்கள். அப்படியானல் சர்க்கார் பஸ்களுக்கு சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சட்டப்படித்தான் செய்யப்படுகிறது. ஆக்ஸிடன்ட் ஏற்படாவிட்டால் சர்க்கார் தங்களுடைய பணத்தை கம்பெனிக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இன்ஷூரன்ஸ் செய்யாமல் சர்க்காரே வைத்துக்கொண்டால், ஆக்ஸிடன்ட் ஏற்படாவிட்டால் அந்தப் பணம் சர்க்காருக்கு மிச்சம் ஆகும். அதற்காகத்தான் நம்முடைய பண்டு வைத்திருக்கிறோம்.

திரு. எஸ். முருகையன் : எந்தெந்த ரூட்டுகளில் அதிகமாக விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன ? அவைகளைத் தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** விபத்துக்களைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைப்பற்றி சட்டசபையிலே சென்ற ஆண்டு ஒரு அறிக்கை வைத்தேன். அதை முக்கியமாக வைத்துத் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இந்த விபத்தானது சென்னை நகரில் அதிகமாக இருக்கிறதா அல்லது மொபசலில் அதிகமாக இருக்கிறதா ? பம்பாயை விட நம் ராஜ்யத்தில் பஸ் போக்குவரத்து குறைவு. அங்கே விபத்துக்கள் அதிகமாக இருக்கலாம். ஆனால் நம்முடைய ராஜ்யத்தில் பஸ் போக்குவரத்து குறைவாக இருந்தும், விபத்துக்கள் அதிகமாக இருப்பது வியப்பிற்குரியதாக இருக்கிறதல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பம்பாயிலும், சென்னையிலும் ஒரு மில்லியன் எஃபெக்டிவ் மைல்களுக்கு எத்தனை ஆக்சிடன்ட்கள் என்று கணக்குப் பார்க்கவேண்டும். எவ்வளவு பஸ்கள் என்று கணக்குப் பார்ப்பதில்லை. ஒரு மில்லியன் எஃபெக்டிவ் மைலுக்கு மெட்ராசிலே எவ்வளவு இருக்கிறது, பம்பாயில் எவ்வளவு இருக்கிறது என்று கணக்குக் கொடுத்தேன். விபத்துக்கள் சென்னையில் அதிகமா மொபசலில் அதிகமா என்று சொல்ல வேண்டுமானால் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. வை. சங்கரன் ·** இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரத்தின் பிரகாரம் பிரைவேட் பஸ்களுடன் கம்பேர் செய்தால் ஒரு மில்லியன் எஃபெக்டிவ் மைலுக்கு பிரைவேட் செக்டாரிலே ஆக்சிடென்ட் குறைவாக இருக்கிறதா அதிகமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தனியாகக் கேள்வி வேண்டும். இது சர்க்கார் பஸ் போக்குவரத்து சம்பந்தமான கேள்வி.

**திரு. சா. கணேசன் :** அரசாங்க பஸ் டிரைவர்கள் ஆட்களை ஏற்றுவதற்கோ அல்லது இறக்குவதற்கோ பல இடங்களில் பஸ் ஸ்டாப்பு ஓரத்தில் நிறுத்தாமல் நடு ரோட்டிலே நிறுத்துகின்ற நிலையைத் . தினப்படி பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதைக் கவனித்து ஒழுங்குபடுத்துவதற்கு என்ன உறுதியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்காக ஸ்பெஷல் ஸ்குவாட்—டிராபிக் சூபர்வைசரி ஸ்டாஃப் போட்டு அவர்கள் நகரம் பூராவும் சுற்றிவருகிறார்கள். எந்தெந்த இடங்களில் தவறு ஏற்படுகிறதோ அது கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். எஸ். மணி :** அமைச்சர் அவர்கள் இன்ஷூரன்ஸ் பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக, ஒரு பஸ்ஸுக்கு இன்ஷூரன்ஸ் தொகை போல் தங்கள் பண்டிலேயே பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஒரு ரூட்டிலே ஒரு ஆக்சிடன்ட்





நடக்கிறது. அதன் காரணமாக கிளெய்ம் போட்டு 20,000 ரூபாய் தரவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் நாம் ஒதுக்குவது ஆயிரம் ரூபாயாகத்தான் இருக்கும். இன்ஷூரன்ஸ் கட்டியிருந்தால் அந்த நஷ்டம் நமக்கு வராது அல்லவா ? ஆகவே, அந்த முறையைப் பின்பற்றுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் சொல்லுவது சரியல்ல. மொத்தமாக நாம் எல்லா பஸ்களுக்கும் பணத்தை ஒதுக்குகிறோம். அந்தக் கணக்கைப் பார்க்கும்போது நாம் பின்பற்றும் முறைதான் லாபகரமானது என்று தெரியும்.

### *Traffic classes*

* 199 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to run " Traffic Classes " for educating traffic offenders; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under detailed examination.

**திரு. வை. சங்கரன் :** இவர்களுக்கு டிராபிக் அஃபென்ஸ் செய்ததின் பின்னால் தண்டனை பெற்ற பிறகு இந்த வகுப்புக்களுக்குப் போகவேண்டும் என்று சொல்லப்படுகிறதா அல்லது அந்தத் தண்டனைக்குப் பதிலாகத் தான் வகுப்புகளுக்குச் செல்லவேண்டும் என்று சொல்லப்படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த வகுப்புக்களுக்கு செல்லவேண்டும் என்பதே ஒரு தண்டனை தான். அமெரிக்கா போன்ற மேல் நாடுகளில் டிராஃபிக் அஃபென்ஸ் செய்தால் கோர்ட்டில் தண்டனை கொடுக்கும்போது, நான்கு வாரம், ஆறு வாரம் இந்த மாதிரியான வகுப்புக்களுக்குக் கட்டாயமாகப் போகவேண்டும் என்று தண்டனை விதிக்கிறார்கள். இதல்லாமல் தனியாக தண்டனையும் கொடுக்கப்படுகிறது.

**திரு. சா. கணேசன் :** இந்த மோட்டார் வாகனங்களைப் பார்க்கும்போது, நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும் ஓட்டும் முறையில் ஏராளமான தவறுகள் நடப்பது வாடிக்கையாக இருந்து வருகிறது. பெரும்பாலும் சென்னை நகரத்தில் டாக்சிக்கார்கள் பஸ்கள், இரண்டும் ஓவர்டேக் செய்யும்போது, ரைட் ஸைடில் போவதற்குப் பதிலாக லெப்ட் ஸைடில் டிரைவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். இது சென்னை நகரத்தில் சர்வ சாதாரணமாக இருக்கிறது. இதன் காரணமாக பலவிதமான அபாயங்கள், ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. இதை நிதர்சனமாகவும், குறிப்பிட்ட நிகழ்ச்சிகளையும் குற்றங்களையும் குறைகளையும் ஏராளமாகப் புலப்படுத்த முடியும். இவற்றைச் சரி செய்வதற்கு நடை

முறையில் ஏதாவது விதிகள் இருந்தாலும், இதைச் சரியான முறையில் கண்காணித்து, இவ்வாறு தவறு செய்கின்றவர்களுக்கு, அவர்கள் உணரத்தக்க அளவுக்கு, அல்லது அவர்கள் திருந்தத்தக்க அளவுக்கு தண்டனை கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஒரு நாட்டின் நிர்வாகத்தை தண்டனை மூலமாக மட்டும் சரியாக நடத்திவிட முடியாது. சாதாரணமாக மக்கள் விதிகளை சரியான முறையில் அமல் நடத்துவதற்கு ஒத்துழைத்தால் தான் நிர்வாகம் சரியான முறையில் இருக்கும். சாதாரணமாக விதிகளை மீறினால் தண்டனை கொடுக்கப்படும் என்று இருக்கிறது. இதனால் மட்டும் நிர்வாகத்தை சரியாக நடத்திவிட முடியாது. நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் மக்களுக்கு டிராஃபிக் டிசிப்ளின் என்பது சரியாகத் தெரியாது. டாக்சிக்காரராக இருந்தாலும் சரி, சர்க்கார் பஸ் ஓட்டுபவர்களாக இருந்தாலும் சரி, சொந்தக் கார் வைத்திருப்பவர்களும் சரி, பாதசாரிகளாக இருந்தாலும் சரி, சில சமயங்களில் விதிகளை மீறியே போய்க்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் எருமைகளும் பசு மாடுகளும் தாராளமாகப் போகின்றன. இதைப்பற்றி நான் மேல் சபையில் கூட விவாதத்திற்குப் பதில் சொல்லும்போது சொன்னேன். நேற்று ரோடில் நான் என் காரில் வந்து கொண்டிருந்த போது, ஒரு பஸ் வந்து கொண்டிருந்தது. என் காரும் வந்து கொண்டிருந்தது. எதிர்த்தாற்போல் ஒரு டாக்சியும் வந்து கொண்டிருந்தது. இதற்கிடையில் ஒரு சிறிய பையன் நாலைந்து எருமைகளை ரோட்டின் குறுக்கே விட்டுக் கொண்டு சிரித்துக்கொண்டே நின்றான். இதில் கடுமையான தண்டனையை எப்படிக் கையாள்வது என்று தெரியவில்லை. அங்கு நின்றவர்கள் மந்திரி என்று தெரியவில்லையா என்று கேட்டார்கள். "மந்திரி என்று தெரிந்துதான் மந்திரியின் காருக்கு பிரேக் சரியாக இருக்கிறதா என்று பார்த்திருப்பான்" என்று நான் சொன்னேன். பொதுவாக நிர்வாகம் சரியாக நடைபெறவேண்டும் என்றால் அரசாங்கத்தோடு மக்கள் சரியாக ஒத்துழைக்கவேண்டும். அந்த முறையில் போக்குவரத்து விதிகளை தானாகவே சரியாகக் கடைப் பிடிக்கவேண்டும். Voluntary observance of laws இல்லாத இடத்தில் அதிகாரிகளைப் போட்டு, ஆங்காங்கு கண்காணித்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எங்காவது குற்றம் அல்லது தவறு செய்தால் தண்டனை விதிக்கப்படுகிறது. தண்டனை எப்படியிருக்க வேண்டும் என்பது கோர்ட் தீர்மானிக்கவேண்டிய விஷயம். நாம் அதைச் சொல்ல முடியாது.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது சில நேரங்களில் ரோடுகளில் ரைட் சைடில் போகாமல் இடது சைடில் போகிறார்கள் என்று சொன்னார்கள். சென்னை நகரத்தில் இடது சைடில் போவது தவறு என்று ஏதாவது விதி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** டிராஃபிக் ரூல்ஸ் சம்பந்தமான கேள்வி. சாதாரணமாக லேன் டிராஃபிக் இருக்கின்ற இடங்களில் ஃபாஸ்ட் டிராஃபிக்கிலிருந்து ஸ்லோ டிராஃபிக்குக்குப் போகவேண்டும் என்றால் இடது பக்கத்தில் போகலாம். அதே போன்று மீடியம் டிராஃபிக்கிலிருந்து ஃபாஸ்ட் டிராஃபிக்குக்கு போகவேண்டுமென்றாலும் ரைட்டில் போகலாம். லேன் டிராஃபிக் இல்லாத இடங்களில் இவ்விதம் செய்யக்கூடாது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** சாதாரணமாக, எக்ஸ்பிரஸ் பஸ்களில் நல்ல எக்ஸ்பெர்ட் டிரைவர்கள் இருந்தும், பஸ்களிலிருக்கின்ற ஹார்ன்கள், சிக்னல்கள் சரியாக இல்லாததின் காரணமாகத்தான் இம்மாதிரிப்பட்ட விபத்துக்கள் அதிகமாக நடைபெறுகின்றன. ஆகவே இதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர், அவர்கள் இதற்காக ஏதாவது ஆலோசனைகளை எழுதி அனுப்பினால் இதை இலாகாவுக்கு அனுப்பிப் பரிசீலிக்கச் சொல்லலாம்.

### *Bus permits*

* 200 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Supreme Court has recently declared invalid the Government Order prescribing the marking system for granting transport route permits; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The decision of the Supreme Court has been brought to the notice of the Transport Authorities and they have been informed that the G.Os. regarding the award of marks and the method to be followed in dealing with applications for stage carriage permits stand quashed, so that they may deal with the applications for such permits on merits.

**திரு. வை. சங்கரன் :** அந்த ஜட்ஜ்மென்டில் தவறுகள் என்று குறிப்பிட்டிருப்பவை எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சுப்ரீம் கோர்ட்டில் ஆர்.டி.எ. க்வாஸி ஜுடிஷியல் அத்தாரிட்டி, ஆகவே அவருக்கு எந்த விதமான இன்ஸ்ட்ரக்ஷனும் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த மார்க் சிஸ்டம் இல்லை என்று ஏதாவது புதிய ஜி.ஓ. போடப்பட்டிருக்கிறதா? ஆமென்றால் வேறு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது?

[8th March 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவ்வாறு எந்தவிதமான விதியும் போடவில்லை. சுப்ரீம் கோர்ட்டில் ஆர்.டி.எ. என்பவர் க்வாசி ஜுடிஷியல் அத்தாரிட்டி, அவருடைய டிஸ்க்ரீஷனுக்கே விட்டு விடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, சர்க்கார் எந்தவிதமான விதியும் போடவில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Is there any proposal under the consideration of the Government to frame comprehensive rules in the matter of issuing bus permits, as the present marking system and also the suggestions made by the Brake Inspectors and Regional Transport Officers are not also felt as genuine at certain levels ?

THE HON. SRI R. VENKATARAMAN : The matter is under examination. If any person is dissatisfied with the grant or refusal of permits, he has the right to appeal to the Appellate Tribunal and even to the High Court. Thus when there is a judicial remedy. I do not think that there is any need to frame any rules at all.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பஸ் ரூட் கொடுக்கப்படுவதில் செக்டார் க்வாலிஃபிக்கேஷன் இன்னின்ன இருக்கவேண்டும் என்று உத்தரவில் போடுவதற்குப் பதில் சட்டவிதிகளில் பெர்மிட் கொடுப்பதற்கான சில கண்டிஷன்களையும் அதோடு சேர்த்துப் போட்டு விட்டால், ஆர்.டி.எ.-யின் அதிகாரத்தில் அரசாங்கம் அடிக்கடி தலையிடுவது என்பது தவிர்க்கப்படலாம். ஆகவே, இது பற்றி சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இவ்விதமான ரூல்ஸ் போட வேண்டிய அவசியமில்லை என்பது தான் என் அபிப்பிராயம். ஏனென்றால் இதில் ஜட்ஜ் ஆக இருக்கின்றவர்கள் இது சம்பந்தமாக உள்ள சட்டப்படி தீர்மானம் செய்ய வேண்டும். அதன் மீது அதிருப்தி இருந்தால் அப்பலட் ட்ரிபுனலுக்குப் போகின்ற உரிமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சர்க்கார் எந்தவிதமான இன்ஸ்ட்ரக்ஷனும் ஆர்.டி.எ.-க்கு அனுப்புவதில்லை.

திரு. ம. கமலநாதன் : பஸ் பெர்மிட் கொடுப்பதில் விதிமுறைகள் எதுவும் இல்லை என்றால் ஆர்.டி.எ. தவறு செய்தார் என்று எந்த அடிப்படையில் அப்பீலுக்கு போக முடியும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சுப்ரீம் கோர்ட்டில் இம் மாதிரியான விதிகள் எதுவும் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாறாக நாம் செல்லவேண்டும் என்று சொல்லுவதாய் இருந்தால், அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன் : சார், சாதாரணமாக ஷார்ட் ரூட் ஆக இருந்தால், அதற்கு ஸ்மால் ஓனர்ஸுக்கு ஆக்கம் கொடுக்க வேண்டும், சலுகை கொடுக்கவேண்டும் என்று நினைக்கிறோம்.



8th March 1966]

இதற்கு அடிப்படை விதிகளாவது இல்லாவிட்டால் எப்படி அந்த முறையைப் பின்பற்ற முடியும் என்று எதிர்பார்க்க முடியும்? அடிப்படை விதிகளையாவது போடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான உத்தேசம் இல்லை. க்வாஸி-ஜுடிஷியல் அத்தாரிட்டியாக இருப்பதால் தன் இஷ்டப்படி அவர் முடிவைச் செய்யலாம் என்பது சர்க்கார் நோக்கம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, considering the public convenience and also the delay in expediting the disposal of these cases, will the Government at least instruct the Tribunals concerned to expedite the disposal of the pending cases ?

THE HON. SRI R. VENKATARAMAN : Ever since the Supreme Court judgment was given, the Government have not issued any instructions nor do they propose to issue any instructions to anybody dealing with Motor Transport.

## லஞ்சக் குற்றம்

* 201 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் லஞ்சக் குற்றத்தின் கீழ் தென்னார்காடு மண்டலப் போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிபவர்கள் யாரேனும் கைது செய்யப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) On a complaint received against a clerk in the Regional Transport Office, South Arcot, a trap was laid and his acceptance of an illegal gratification of Rs. 25 was detected. A case was filed against the accused in the Court of the District Magistrate and Special Judge, Cuddalore, which ended in acquittal, giving the benefit of doubt to the accused.

## வீட்டுவசதி வாரியம்

* 202 கேள்வி.—திரு து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநில வீட்டுவசதி நிறுவனம் (State Housing Board) 22, 23-7-1965-ம் தேதிகளில் நிலங்கள் ஏலத்தில் விற்பதற்காக விளம்பரம் செய்ததா ?

(இ) ஆமெனில், எவ்வளவு நிலம் ஏலத்தில் விற்கப்பட்டது ?

(உ) அதன் மூலம் கிடைத்த லாபம் எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, but the auction was conducted only on 25th July 1965.

(*b*) Seven plots totalling an extent of 18 grounds and 2,230 square feet were sold in auction.

(*c*) The amount received was Rs. 2,02,261.72 paise and the average cost per ground was Rs. 10,685. The cost of ordinary plots in the South Madras Neighbourhood Scheme has been fixed at Rs. 4,050 and that of the Commercial or special plots at Rs. 7,500 per ground. The extra amount obtained by the sale of special plots in auction should be ploughed back to meet the cost of plots allotted to the slum dwellers displaced under the Slum Clearance and Slum Improvement Schemes. The Housing Board is thus not deriving any profit by the sale of these plots.

*திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இப்போது விற்கப்பட்ட நிலம் எதற்காக அக்வயர் செய்யப்பட்டது? பின்னால் விற்கப்படவேண்டிய அவசியம் ஏன் வந்தது ?*

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ஹவுசிங் கடன் மத்திய சர்க்கார் கொடுக்கும்போது, சில பிளாட்டுகளை ஏலத்தில் விடலாம், அவ்வாறு ஏலத்தில் விட்டு வருகிற அதிக வருவாயைக் கொண்டு ஏழை மக்கள், குடிசை வாழ் மக்கள் பகுதியைச் சீரமைப்பு செய்யலாம் என்று விதிகள் இருக்கின்றன. 100 அடி ரோடு இருக்கும் இடங்களில் இரு பக்கங்களிலும் யாராவது அந்த இடம் வேண்டுமென்று சொன்னால் இப்போது அதிகமாகப் பணம் கொடுத்து வாங்க வேண்டுமென்று பெரிய ரஸ்தாக்கள் போட்டிருக்கும் இடத்தில் மாத்திரம் ஆக்ஷனில் விடுகிறோம்.*

*திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பெரும்பாலும் ஏழைகளுடைய இடங்களை இம்மாதிரி அக்வயர் செய்து ஏலத்தில் விட்டு ஹவுசிங் போர்டு லாபம் சம்பாதிக்கிறது என்ற புகார் கூறப்படுகிறது. அதற்கு சர்க்கார் என்ன பதில் கூறுகிறது ?*

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1,000 ஏக்கர், 500 ஏக்கர், 600 ஏக்கர் என்று ஒரு இடத்தில் புதிய நகரம் அமைப்பதாக இருந்தால், அதில் பணக்காரர்கள் நிலம் மாத்திரம் இருக்காது. ஏழைகள், பணக்காரர்கள் எல்லாருடைய நிலமும் இருக்கும். அம்மாதிரி நகரங்கள் அமைக்க வேண்டியதாக இருப்பதால் ஏழைகள் நிலத்தையும் எடுக்க வேண்டியிருக்கிறது. அதிலே ஒரு விதி செய்திருக்கிறோம். அவ்வாறு எடுக்கப்பட்ட அந்த இடத்திலேயே அவர்களுக்கு நிலம் வேண்டுமென்றால் அவர்களுக்கு ஒரு ப்ளாட், இரண்டு ப்ளாட் கொடுப்பது என்று விதி செய்திருக்கிறது. இதில் லாபம் சம்பாதிப்பது ஒன்றும் இல்லை. குறிப்பாக ஸ்லம் க்ளியான்சுக்கு ஸப்சிடியாகப் பணம் செலவழிக்கப்படுகிறது.*





*திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, அப்படி ஏழைகளிடமிருந்து எடுத்துக்கொண்ட இடத்தில் அவர்களுக்குத் திருப்பி மனை கொடுக்க விதி செய்திருக்கிறோம் என்று கூறினார்கள். அந்த விதி இது வரையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா ?*

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு வித்தியாசம்தான். நிலத்தை இம்ப்ரூவ் செய்தால், அதற்கு ட்ரயினேஜ் போட்டு, வாட்டர்-சப்ளை கொடுத்து எலெக்ட்ரிசிட்டி கொடுத்து, ரோடு முதலியவைகளை யெல்லாம் செய்து கொக்கும்போது அந்தச் செலவைக் கொடுக்க வேண்டும். செலவுடன் கொடுத்தால் திருப்பிக் கொடுக்கப்படும்.*

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவில் சில இடங்களில் குறைந்த விலைக்கு வாங்கி அதை ஒரு கிரவுண்ட் 5,000 ரூபாய், 6,000 ரூபாய் என்று இன்றைக்குக் கூட விற்றுக்கொண்டு வருகிறார்களே அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியென்றால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?*

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதில் நடவடிக்கை எடுக்க சர்க்காருக்கு எந்தவித அதிகாரமும் இல்லை.*

*அரசாங்க மருத்துவ மனைகள்*

** 203 கேள்வி.— செ. மாதவன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் அரசாங்க மருத்துவ விடுதிக்கு கட்டடங்கள் கட்டும் திட்டம் ஏதேனும் உண்டா ?*

*(இ) அதற்காக நில ஆர்ஜிதம் செய்யும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டதா ?*

*(உ) இந்தத் திட்டத்திற்கு மக்களிடமிருந்து எவ்வளவு பணம் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது ?*

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :

(*a*) Yes.

(*b*) Yes.

(*c*) Rs. 50,000.

*திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நன்கொடைகள் வசூலிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? ஆர்ஜிதம் செய்யத் தொடங்கி எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன ? செயல் முறைக்குக் கொண்டுவருவதற்குக் காலதாமதம் ஆகக் காரணம் என்ன ?*

*கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எக்ஸ்பான்ட் செய்ய இடம் இல்லாத காரணத்தினால் கொஞ்ச இடம்—சுமார் 4 ஏக்கர் நிலம்—அக்வயர் செய்யப்பட்டது. ஆனால் தனிப்பட்ட ஒருவர்*

கோர்ட்டுக்குப் போயிருக்கிறார். ஆகையினாலே, கேஸ் இருக்கிற வரையில் நிலத்தை அக்வயர் செய்து கட்டடத்தைக் கட்ட இயலாது. அதுதான் காரணம்.

* 204 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெருக்கடி நிலை காரணமாக மருத்துவமனை கட்டட வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகைக்கு மேற்பட்ட வேலைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) & (b) Consequent on the intervention of the National Emergency, the Government ordered towards the end of 1962 that all building programmes relating to Government Medical Institutions on which work had not commenced be deferred or slowed down. On the aggravation of the emergency by the conflict with Pakistan, orders were issued in October, 1965 that all building schemes costing Rs. 1 lakh and above on which work had not yet started and which were not directly related to agricultural production should be stopped and resumed, if need be, only after 1st April 1966.

திரு. ஆ. தங்கவேலு : நெருக்கடி நிலை காரணமாக மருத்துவ மனைகள் கட்டுவது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மருத்துவ மனைகள் கட்டுவதில் 3 லட்சம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கக் கூடியதைக் கட்ட உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதன் மேல் திண்டிவனம் மருத்துவ மனை வேலை நடந்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இது வரையில் துவக்கப்படவில்லை. ஆகையினால், அதை உடனடியாக ஆரம்பிக்க உத்தரவிடுவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சென்ற ஆண்டு சொன்ன பிறகு பாகிஸ்தான் அக்ரெஷன் ஏற்பட்ட பிறகு ஒத்திப் போடவேண்டியிருந்தது.

* 205 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் "புகார் புத்தகம்" வைக்கவேண்டும் என்று தஞ்சை மாவட்ட மக்கள் நல மன்றத்திடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன?





கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் ராஜா மிராஸ்தார் அரசாங்க மருத்துவ மனையில் முன்னமேயே "கருத்துக் குறிப்புப் புத்தகம்" ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய புத்தகங்களை வைக்குமாறு இம் மாநிலத்திலுள்ள மற்றெல்லா அரசாங்க மருத்துவ மனைகளுக்கும், மருந்தகங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* 206 Q.—SRI V. SANKARAN: SRI K. B. PALANI } Will the Hon. the Minister for Pubic Health be pleased to state—

(a) whether it is a fact that a patient developed tetanus post-operative in the theatre resulting in his death, in the Raja Mirasdar Government Headquarters Hospital, Thanjavur; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Yes.

(b) Immediately after the incident, A. T. S. was administered to all the post-operative cases and the theatre completely sterilised. A committee consisting of the Superintendent of the Hospital, the operating Surgeon and the Anæsthetist has been constituted to enquire into the matter.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்த சாவுக்குக் காரணம், அறுவைக் கருவிகள் சரியான முறையில் வைக்கப்படவில்லை என்றும் அதன் காரணமாகத்தான் திடீரென்று இறந்தார் என்றும் செய்தி வந்துள்ளது. அது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அது காரணம் இல்லை. ஏன் என்றால் அந்தக் கருவிகளைக் கொண்டு பிறகு ஆபரேஷன் செய்திருக்கிறார்கள், அதனால் ஒன்றும் நேரவில்லை. ஒரு வேளை ஆபரேஷன் செய்வதற்கு முன்பு பேஷன்ட் கொண்டு போடப்பட்ட இடத்தில் ரோட்டில் பஸ், லாரிகள் அதிகமாக இருக்கிற காரணத்தினால் டஸ்ட் போயிருக்கும் என்று ஸஸ்பெக்ட் செய்கிறார்கள்.

திரு. வை. சங்கரன் : இந்த விபத்து ஏற்பட்ட பிறகு இந்த ஆபரேஷன் தியேட்டரை நன்றாக சுத்தம் செய்த பிறகு, ஸ்டெரிலைஸ் செய்த பிறகுதான் அங்கு மற்ற ஆபரேஷன் செய்யப்படும் என்று சொல்லி டாக்டர்கள் மற்ற ஆபரேஷன்களை நிறுத்தி விட்டதாகத் தெரிகிறது. இது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கண்டிப்பாக வாஷிங் செய்து, ஸ்டெரிலைஸ் செய்த பிறகுதான் ஆபரேஷன்கள் நடத்த முடியும். அதற்கு முன்னால் அந்தத் தியேட்டரில் ஆபரேஷன் செய்ய முடியாது. அதனால்தான் அது மூடி வைக்கப்பட்டிருக்கிறது. 9-00 a.m.

திரு. மு. கருணாநிதி: அஜாக்கிரதையின் காரணமாக இப்படி நோயாளிகள் இறந்து போகிற நேரத்தில் சம்பந்தப்பட்ட நோயாளிகளின் குடும்பங்களுக்கு ஏதாவது உதவி அளிக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இது அஜாக்கிரதையின் காரணமாக அல்ல. இயற்கையான காரணத்தினால் ஏற்பட்டது. அதற்கெல்லாம் நாம் நஷ்ட ஈடு கொடுக்க இயலாது.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்த வலிப்பு ஏற்பட்டது ஆபரேஷனுக்கு முன்பு அல்ல. இந்த ஆபரேஷன் நடைபெற்றதற்குப் பிறகு இந்த வலிப்பு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி அரசாங்கம் ஏதாவது தகவல் கேட்டதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஆபரேஷன் செய்த இன்ஸ்ட்ருமெண்டு, லினன் இவைகளைப் பொருத்தமட்டில், ஆராய்ச்சி செய்து பார்த்ததில் அவையெல்லாம் ரொம்ப ஒழுங்காக, டிடானஸ் ஃப்ரியாக இருந்திருக்கின்றன என்று தெரிய வருகிறது. தியேட்டர் ரோடுக்குப் பக்கத்தில் இருக்கிற காரணத்தினால் ஒரு வேளை டஸ்டு வந்து அதனால் ஏற்பட்டிருக்கலாம் என்று தான் சந்தேகப்படுகிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: முக்கியமாக ஒரு ஆபரேஷன் தியேட்டர் ரோடு ஓரத்தில் இருந்த காரணத்தினால் இப்படி ஏற்பட்டது என்று சொல்லுகிறார்கள். அவ்வளவு அஜாக்கிரதையாக ஒரு ஆபரேஷன் தியேட்டரை ரோடு ஓரத்தில் ஏன் அமைக்க வேண்டும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இம்மாதிரி அசந்தர்ப்பம் ஏற்படுவது ஏதாவது 100-க்கு ஒரு கேசில்தான். எப்பவோ ஒரு சமயத்தில் ஏற்படுகிறது. அதிலும் இந்தத் தியேட்டர் எப்பொழுதோ கட்டப்பட்டது. ஆயிரக்கணக்கான ஆபரேஷன்கள் இந்தத் தியேட்டரில் செய்யப்பட்டிருக்கின்றன. ஏதோ ஒரு சமயத்தில் இப்படி அசந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது என்பதற்காக அந்த ஆபரேஷன் தியேட்டரையே அங்கு இருந்து மாற்ற வேண்டும் என்ற 'நெஸெஸிடி' இல்லை.

திரு. வை. சங்கரன்: பொதுவாக ஆபரேஷன் தியேட்டர்கள் டஸ்டு புரூஃபாக, கண்டாமினேஷன் இல்லாமல் அமைக்கப்பட வேண்டும் அல்லவா? இந்த இலக்கில் தவறு ஏற்பட்டிருக்கிறது. இனியாவது ஆபரேஷன் தியேட்டர்கள் 'டஸ்டு புரூஃபாக', கண்டாமினேஷன் இல்லாமல் அமைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தஞ்சாவூர் ராஜா மிராசுதார் ஆஸ்பத்திரி ரொம்ப பழைய கால ஆஸ்பத்திரி. தஞ்சாவூரில் புதிய ஆஸ்பத்திரிகளில் நல்ல முறையில்தான் ஆப்பரேஷன் தியேட்டர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கெல்லாம் என்ன செய்யவேண்டுமோ அதை யெல்லாம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறது.



## வேலூர் "மார்க்கெட்"

* 207 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் மெயின் மார்க்கெட்டுக்குப் புது கட்டடம் கட்டுவதற்கென வேலூர் நகராட்சிக்கு அரசாங்கம் கடன் தொகை ஏதேனும் வழங்கியதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

(உ) மேற்படி கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டதா?

(எ) இல்லை எனில் காரணம் என்ன?

கனம் திரு சே. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) ரூபாய் இரண்டு லட்சம்.

(உ) இல்லை.

(எ) கட்டட வேலை பல பகுதிகளாக ஒவ்வொரு ஆண்டின் நிதி நிலைமைக்கு ஏற்றவாறு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

## மதுரையில் "டவுன் ஹால்"

* 208 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரசபை டவுன் ஹால் (Town Hall) கட்டுவது எந்நிலையில் உள்ளது?

(இ) அதன் விபரம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) மதுரை நகராட்சி, "நகர மண்டபம்" ஒன்றைக் கட்டுவதற்குரிய மனைக்கட்டை நகராட்சியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வது பற்றி அரசாங்கம் யோசித்து வருகிறது.

(இ) இப்போது நகராட்சிப் பொது இருப்புக் கிடங்குகளும் விலங்கின மருத்துவ மனையும் அமைந்துள்ள இடத்தை தன் பெயருக்கு உரிமை மாற்றம் செய்து தருமாறு மதுரை நகராட்சி மன்றம் கேட்டுள்ளதைக் குறித்துத் தமது குறிப்புரையை அனுப்பும்படி மதுரைக் கலெக்டரைக் கேட்டுள்ளோம். அவரது பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: டவுன் ஹால் கட்டடம் கட்டுவதற்கு ஒரு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட்டதா? இப்பொழுது அதை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவதற்கு முயற்சிக்கப்படுகிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: என்னிடம் அப்படி ஒன்றும் தகவல் இல்லை.

[8th March 1966

*திரு. எம். எஸ். செல்வராஜன் :* இம்மாதிரி நகர மண்டபங்களைக் கட்டுவதற்கு நகராட்சிகள் எந்த அடிப்படை அம்சங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று ஏதேனும் நிபந்தனை விதிக்கப் பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இந்த மாதிரி மண்டபங்களை நகராட்சியினுடைய பணத்திலிருந்து கட்டுவதிலே அவர்களுக்கு அதற்குரிய வருமானம் நல்ல முறையில் வருமா. ஜனங்களுக்கு சௌகரியம் செய்யக்கூடிய ஒரு நல்ல இடத்தில் கட்டக்கூடுமா, இந்த அம்சங்களெல்லாம் இருக்கின்றனவா என்பதை அவர்களும் பார்த்து பரிசீலனை செய்து கட்ட வேண்டும். சர்க்காரும் இவற்றைக் கவனித்துத் தான் அதற்கு அனுமதி வழங்குகிறது.

*திரு. வை. சங்கரன் :* முனிசிபல் டவுன்ஹால் கட்டுவதற்கு முனிசிபாலிட்டியில் பணம் ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்த விஷயமானது ரொம்ப நாட்களாக பெண்டிங்காக இருக்கிறது. இதில் சீக்கிரம் முடிவெடுப்பதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுதே கலெக்டர் அபிப்பிராயம் கோரியிருக்கிறோம் என்று குறிப்பிட்டேன். இந்த உரிமை மாற்றம் செய்வதற்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா என்று கலெக்டர் அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அங்கு வேறு பல காரியாலயங்கள் இருக்கின்றன. அவற்றிக்கு ஏதாவது இடைஞ்சல் இருக்கிறதா என்றெல்லாம் பார்த்துப் பரிசீலனை செய்து அவர்கள் பதில் சொல்லவேண்டும்.

*திரு. எம். எஸ். செல்வராஜன் :* டவுன் ஹால் கட்டுவதற்கு அரசாங்கம் ஏதாவது உதவித் தொகை அளிக்கும் திட்டம் இருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கடனைக் கேட்டால் கடன் வழங்கலாம்.

## இந்தியப் பாதுகாப்புச் சட்டம்

* 209 கேள்வி.—திரு. செ. மாதவன் :<br>
திரு. பி. கே. மூக்கை தேவர் :<br>
திரு. மீ. கலியாணசுந்தரம் :<br>
திரு. ஏ. குஞ்சன் நாடார் : } கனம் முதல்

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்தியா-பாகிஸ்தான் போரின் காரணமாக இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அண்மையில் இம் மாநிலத்தில் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?



8th March 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Twenty-six post-operative in the theatre resulting in his death, in the Raja in the context of hostilities between India and Pakistan. The district-wise figures are as follows :—

| | |
|---|---|
| Madras City ... ... ... ... ... | 14 |
| Chingleput ... ... ... ... ... | 2 |
| Thanjavur ... ... ... ... ... | 2 |
| Tiruchirappalli ... ... ... ... ... | 4 |
| Tirunelveli ... ... ... ... ... | 3 |
| Kanyakumari ... ... ... ... ... | 1 |

*திரு. செ. மாதவன் :* இந்த 26 பேர்களும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களா ? முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது உண்மையா ? அப்படியானால் அவர்கள் கைது செய்யப் படுவதற்கு முன்னால் அவர்கள் எந்தக் குற்றத்தைச் செய்தார்கள் என்று அரசாங்கம் கருதுகிறது அல்லது அவர்கள் பாதுகாப்பு விதிகளின்படி கைது செய்யப்பட்டார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை. அதிலும் அவர்களில் பாகிஸ்தானிலிருந்து வந்திருந்தவர்கள் சிலர் இருந்தார்கள். அவர்களுக்குக் கூட முஸ்லிம் லீகுடன் தொடர்பு இருந்ததா என்பதெல்லாம் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். எனக்குத் தெரியாது.

*திரு. மு. கருணாநிதி :* இந்த மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. அழகமுத்து, திரு. கிருஷ்ணமூர்த்தி இவர்கள் ஒரு கூட்டத்தில் பேசினார்கள் என்ற காரணத்திற்காக பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப் பட்டார்களா ? அப்படியானால், அவர்கள் பேச்சில் குற்றம் கண்டால் வேறு சட்டப் பிரிவுகளின்கீழ் அவர்கள் கைது செய்ய பட்டிருக்கக் கூடாதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடம் தகவல் ஒன்றுமில்லை. அதைப்பற்றி ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

*திரு. கே. ஏ. மதியழகன் :* இந்தப் பாதுகாப்பு சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர் ? விடுதலை செய்யப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட போரினையொட்டி பாதுகாப்பு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்களைப் பற்றியது இந்தக் கேள்வி. அது சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

[8th March 1966

**திரு. கே. ஏ. மதியழகன்** : உள்துறை அமைச்சர் திரு. நந்தா அவர்களிடமிருந்து இந்தியப் பாதுகாப்பு விதிகளைப் பெரும்பாலும் பயன்படுத்தக் கூடாது, மற்ற சட்டங்களைத் தான் பயன்படுத்த வேண்டும் என்று தாக்கீது வந்திருக்கிறதா ? அதன் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இந்த அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்தோ அல்லது வேறு யாரிடமிருந்தோ தாக்கீது ஒன்றும் வரவில்லை. ஆகையினால் அடுத்த கேள்விக்கு இடமில்லை.

**திரு. செ. மாதவன்** : இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சமாதானம் ஏற்பட்டுவிட்டதால், ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களில் எத்தனை பேர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள் ? இல்லை யென்றால் அதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நான் முன்பே கூறினேன், இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டார்கள் என்று.

* 210 *Q*.—SRI M. KALYANASUNDARAM : } Will the
SRI A. KUNJAN NADAR : }
Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of "Left" communists still in detention under D.I.R., as on 17th January 1966; and

(*b*) when was the last review made by the Government ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The number of "Left" Communists in detention under Defence of India Rules as on 17th January 1966 is 91; and

(*b*) the last review was made by the Government in November 1965.

**திரு. கே. ஏ. மதியழகன்** : இந்தப் பரிசீலனையின் போது என்ன முடிவுக்கு வந்தார்கள் ? மீதியிருக்கிற திரு. ராமமூர்த்தி, திரு. வெங்கட்டராமன் போன்ற தலைவர்களை விடுதலை செய்வது பரிசீலனையில் இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : பாதுகாப்பு விதிகளின்படி 'டெடின்யூ'-ஆக வைக்கப்பட்டவர்கள் விஷயம் அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. செ. மாதவன்** : பாதுகாப்புக் கைதிகளுக்குக் கொடுக்கக் கூடிய வசதிகள் சம்பந்தமாக நம்முடைய மாநிலத்திலுள்ள விதிமுறைகள் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தை நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. அந்தக் கருத்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?



8th March 1966]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இப்பொழுது பாதுகாப்புக் கைதிகள் பற்றிய விதிகள் இருக்கின்றன. அவற்றை மாற்றி அமைப்பதாக உத்தேசமும் இல்லை. அதற்கு நிமித்தமும் இல்லை.

* 211 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) the list of papers against which prosecutions have been launched under D.I.R. in connection with anti-Hindi agitation; and

(*b*) the present stage of the prosecutions?

The HON. SRI M. BHAKTAVATSALAM :

| | |
|---|---|
| (1) Malai Murasu (Madras, Tirunelveli, Tiruchirappalli, Coimbatore, Madurai and Salem Editions). | Daily. |
| (2) Dina Thanthi .. .. .. | Do. |
| (3) Murasoli .. .. .. .. | Do. |
| (4) Malai Mani .. .. .. | Weekly. |
| (5) Swadesamitran ... ... .. | Daily. |
| (6) Tamil Nad (Madurai) .. .. | Do. |
| (7) Thenmozhi (Cuddalore) ... .. | Monthly. |

Cases against all these papers except 'Thenmozhi' are pending trial in the Court.

**திரு. கே. ஏ. மதியழகன்** : சார், பாராளுமன்றத்திலே, சமீபத்திலே உள்துறை அமைச்சர் பேசும்போது, பத்திரிகைகள் பேரில் வழக்குத் தொடருவதற்கு முன் ஆல்-இந்தியா பத்திரிகையாளர் சம்மேளனத்தைக் கலந்து கொள்ளாமல் மாநில சர்க்கார் வழக்குகள் போடக் கூடாது, அப்படிப் போடப்பட்ட கேசுகளை வாபஸ் பெறவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்த மாநிலத்திலே போடப்பட்டிருக்கும் வழக்குகளை வாபஸ் பெற முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : பார்லிமெண்டில் என்ன கூறப்படுகிறது, என்ன கூறப்படவில்லை என்பதையெல்லாம் இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இந்த வழக்குகளை வாபஸ் செய்ய எந்த நிமித்தமும் இல்லை.

**திரு. செ. மாதவன்** : பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பல பத்திரிகைகள் மேல் வழக்குகள் போடப் பட்டிருக்கின்றன. இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக எடுக்கப் பட்ட வழக்குகள் இன்னும் பெண்டிங்காக இருக்கின்றன. பின்னால் போடப் பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டுக்கும் வேறுபாடு ஏன் ? இவற்றையும் வாபஸ் வாங்க உத்தேசம் இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இந்தி எதிர்ப்புச் சம்பந்தமாக போடப்பட்ட வழக்குகள் பற்றியது ஒரு விஷயம். பின்னால் எடுக்கப்பட்ட வழக்குகள் வேறு விஷயம். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

[8th March 1966

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சார், இந்தப் பத்திரிகைகளின் பேரில் தொடர்ந்திருக்கும் கேசுகளை வாபஸ் வாங்குவது பற்றி முதல் அமைச்சர் பத்திரிகை ஆசிரியர்களை அழைத்து, சில கண்டிஷன்களைப் போட்டு வாபஸ் பெறுவதற்கு, அவர்கள் அவற்றை ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே, வாபஸ் பெறவில்லை என்று முன்னால் சொன்னார்கள். இப்பொழுது நிலைமை எப்படியிருக்கிறது ? அண்மையிலே பாராளுமன்றத்திலே குறிப்பிட்டது போல பத்திரிகைகளுக்காவது சுதந்திரம் கொடுக்க, இந்த வழக்குகளை வாபஸ் வாங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பத்திரிகைகளுக்கு சுதந்திரம் மறுக்கப்படவில்லை. ஆனால், பலாத்காரத்தை தூண்டும் சுதந்திரம் கோரினால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்பொழுது இருக்கும் நிலையில் எந்த மாறுதலும் கிடையாது. வழக்குத் தொடரப்பட்டுள்ள பத்திரிகைகள் ஹைக்கோர்ட்டுக்குச் சென்று, "ஸ்டே" ஏற்பட்டிருக்கிறது. இந்த வழக்குகள் ஹைக்கோர்ட்டில் இருக்கின்றன.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சார், பத்திரிகை ஆசிரியர்களை அழைத்து முதல் அமைச்சர் என்ன உறுதிமொழி கேட்டார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றியெல்லாம் விளக்க முடியாது. இந்த வழக்குகள் கோர்ட்டில் இருக்கின்றன, ஹைக்கோர்ட்டில் இருக்கின்றன. நான் கேட்பது எல்லாம், அந்த அந்த பத்திரிகையாளர்களுக்குத் தெரியும்.

**திரு. மு. கருணாநிதி :** வழக்குகள் போடப்பட்ட பத்திரிகை ஆசிரியர்களில் சிலர் கைது செய்யப்பட்டார்கள்; மற்றவர்கள் செய்யப்படவில்லை. இந்த வேறுபாட்டிற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பத்திரிகை ஆசிரியர்களைக் கைது செய்ய வேண்டாம் என்றுதான் அரசாங்கம் கருதுகிறது. சில இடங்களில் கைது செய்யப்பட்டதாக நினைத்து இதைப் பெரிது செய்திருக்கலாம்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ADJOURNMENT MOTION.

### Rise in price of foodstuffs in hotels in Madras City.

MR. SPEAKER : The adjournment motion given notice of by Sri K. A. Mathialagan is too vague and too general. Unless it is given for publicity, I am not inclined to take it up at all in the House.

SRI K. A. MATHIALAGAN : The Hon. Speaker must be kind enough to allow me to explain how a *prima facie* case exists. I will confine my remarks to explaining how a *prima facie* case exists.



8th March 1966] [Sri K. A. Mathialagan]

I rise to seek the permission of the House to move the following adjournment motion :—

"That this House do stand adjourned to discuss the failure of the Government to check and regulate the abnormal and mounting rise in prices of foodstuffs in the hotels in Madras City and the consequent discontent and unrest among considerable number of hotel-goers and the floating population of nearly four lakhs who visit the City daily."

In seeking the permission of the House to move this adjournment motion, I shall confine myself to establishing how a *prima facie* case exists.

MR. SPEAKER : The hon. Member may straightaway tell his points.

For raising a matter as an adjournment motion, it must be a specific matter of recent occurrence. What is the specific matter here ?

SRI K. A. MATHIALAGAN : The first is that it should be a specific matter. It is indisputable and undeniable that the prices of foodstuffs in hotels have gone up.

MR. SPEAKER : Is it from to-day or yesterday night?

SRI K. A. MATHIALAGAN : The prices are still going up. The price of one meal has gone up from 80 paise to one rupee.

MR. SPEAKER : The hon. Member spoke in the general discussion on the Budget only a few days ago. What has taken place after that ?

SRI K. A. MATHIALAGAN : The rise in prices is continuing. I will come to the second point. Discontent is a highly inflammable phenomenon. The responsibility of the Government is involved in it. The Government have introduced statutory rationing and they are selling rice, wheat 'rava', maida and sugar at controlled prices. There is no justification for the rise in prices.

SRI M. S. SELVARAJAN : I rise on a point of order, Sir. The Hon. Speaker was kind enough to say a few days ago that there was no scope for raising adjournment motions whenever the Members desired unless . . .

MR. SPEAKER : Does the hon. Member want to raise a point of order against the Speaker ?

SRI M. S. SELVARAJAN : My point is, that the hon. Member is violating the decision of the Speaker himself.

MR. SPEAKER : Let the hon. Member please resume his seat. I will explain the position. Every case is considered on its merits. The hon. Member is not violating my decision. Somehow or other he wants to bring this matter within the scope of an adjournment motion. Anyway he is going to fail.

[8th March 1966

SRI K. A. MATHIALAGAN : The Hon. Speaker need not pre-judge the issue, Sir.

MR. SPEAKER : The hon. Member still feels that he is in the right and that he can get this matter admitted as an adjournment motion. In spite of all that he has said, it is very vague.

SRI K. A. MATHIALAGAN : I will explain one more point and that is about the responsibility of the Government.

SRI V. SANKARAN : On a point of order, Sir. For moving a matter as an adjournment motion, a number of conditions have to be satisfied. Even if one condition is not satisfied and all the other conditions are satisfied, the adjournment motion falls. The hon. Member has failed to establish one condition and the Hon. Speaker has already held that it is not a matter of recent occurrence.

MR. SPEAKER : I want to impress on the minds of the Members that while I am myself driving home that point to the hon. Member Sri K. A. Mathialagan, the interruptions by other hon. Members are themselves a breach of order. The hon. Member Sri Mathialagan has failed to establish the first point he raised. The point of Sri V. Sankaran is that even if one of the conditions is not established, there is an end of it.

SRI K. A. MATHIALAGAN : Clearly the responsibility of the Government is involved in the matter. Not only the content, but also the form of the food articles has gone down. I will demonstrate this, Sir. These are the iddlies (exhibiting two iddlies one in each hand) I have brought from a hotel and the price of each iddli is ten paise. I shall present them to the Hon. Food Minister. Such are the food articles that are sold to the ordinary people. My contention is that the Government have failed in their responsibility to maintain the price level.

** கனம் திரு. எம். பக்தவத்சலம்:* கனம் சபாநாயகர் அவர்களே, அவசரப் பிரேரணையை தாங்கள் அனுமதிப்பதற்குக் கையாளும் முறைகள் இரண்டு உண்டு. ஒன்று அவசரப் பிரேரணையை தங்கள் சேம்பரிலேயே பரிசீலனை செய்து, கொடுத்தவரின் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொண்டு அதை அனுமதிப்பதா இல்லையா என்று முடிவு செய்துவிடுவது. இந்தப் பழக்கம் பாராளுமன்றத்திலும் இருக்கிறது. அடுத்தது, அவசரப் பிரேரணையைப் பற்றிச் சபையிலேயே அதன் முக்கியத்துவத்தை விளக்கச் செய்து அனுமதிப்பது அல்லது நிராகரிப்பது. இப்பொழுது இந்த இரண்டாம் முறைப்படி அவசரப் பிரேரணைக்கான முக்கியத்துவத்தை எடுத்து விளக்க கனம் அங்கத்தினருக்குச் சந்தர்ப்பம் கொடுத்தீர்கள். அதன்மேல் ஓரளவு விவாதமும் நடந்தது. இந்த நேரத்தில் கனம் அங்கத்தினர் இட்டிலியைக் கொண்டு வந்து, காட்டுவது தவறுதலான காரியமாகும் (gross abuse of privilege of the House) பொது விவாதம் நடக்கும்போது இப்படி பொருள்களைக் கொண்டு வந்து காட்டலாம். ஆனால் அவசரப் பிரேரணை பற்றி விவாதிக்கும் போது இப்படிச் செய்தது கொஞ்சங்கூட முறையானது அல்ல.



8th March 1966]

SRI K. A. MATHIALAGAN : How can I explain to the Blind Government ?

*கனம் திரு. எம். பக்தவத்சலம்:* 'ப்ளைண்ட் கவர்ன்மெண்டு' என்று சொல்வதையெல்லாம் பொதுக்கூட்டங்களில் வைத்துக் கொள்ள வேண்டும். சட்ட சபையில் இப்படி நடந்துகொள்வது முறை அல்ல.

சென்ற வாரத்தில் வரவு செலவுத் திட்டத்தின் பேரில் பொது விவாதம் நடந்தது. பல அங்கத்தினர்கள் விலைவாசி உயர்வைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஐந்தாம் தேதி தான் பொதுவிவாதம் முடிவடைந்தது. ஐந்தாம் தேதிக்குப் பிறகு குறிப்பிட்ட ஏதாவது ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால் சபையின் கவனத்திற்கு அதைக் கொண்டுவரலாம். ஐந்தாம் தேதிக்குப் பிறகு தான் இந்த இட்டிலி சுடப்பட்டது என்று சொல்லலாம். வேறு என்ன சம்பவம் நடைபெற்றிருக்கிறது என்று கனம் அங்கத்தினர் ஒன்றும் விளங்கவில்லை. ஆகவே இது அவசரப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Firstly, I rule that it is not a matter for an adjournment motion. Secondly, I want to impress on the hon. Members of the House that if any hon. Member wants to exhibit any material in the House, he must take my permission. This is not a market place to show anything at any time. There must be some rule or way of doing things. To-day one hon. Member will bring 'idli' and tomorrow another hon. Member may bring some bomb. Therefore, it is utterly wrong for any hon. Member to exhibit such things here. Further, it is too general a matter and unless the object of the motion is for the purpose of saying something in the Assembly, hon. Members would do well to refrain from such practices.

### III.—GOVERNMENT MOTION.

#### CHANGE IN THE ORDER OF BUSINESS OF THE HOUSE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That the Demands, viz.,

II—Motor Vehicles Act—Administration

XXX—Road Transport Schemes

XLIV—Capital Outlay on Road Transport Schemes

scheduled to be taken up on Monday, the 14th March 1966 and the Demands, viz.,

XX—Industries

XLI—Capital Outlay on Industrial Development

scheduled to be taken up on Tuesday, the 15th March 1966 be taken up on Friday, the 18th March 1966 and on Thursday, the 17th March 1966 respectively.

[Sri M. Bhaktavatsalam] [8th March 1966

That the Demands, viz.,

I—Land Revenue Department
IV—Stamps—Administration
XXXI—Famine Relief
XXXVII—Compensation to Zamindars
XXVII—Public Works—Works
XXVIII—Public Works—Establishment and Tools and Plant
XLIII—Capital Outlay on Public Works

scheduled to be taken up on Thursday, the 17th March 1966 and the Demands viz.,

XXVI—Irrigation
XLII—Capital Outlay on Irrigation

scheduled to be taken up on Friday, the 18th March 1966 be taken up on Monday, the 14th March 1966 and Tuesday, the 15th March 1966 respectively.

The motion was put and carried.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

(1) DEMAND NO. IX—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 7,19,51,900 under Demand No. IX—District Administration and Miscellaneous.'

PULAVAR K. GOVINDAN : Sir, I move—

'That the allotment of Rs. 7,19,51,900 under Demand No. IX—District Administration and Miscellaneous be reduced by Rs. 100.'

*"குறிப்பிட்ட காலவரைக்குள் மாநிலத்தில் பயிரிடத் தகுதியாக இருக்கும் எல்லாத் தரிசு நிலங்களையும், நிலமற்ற ஏழைகளுக்கு உரிமையாக்கித்தர வேண்டிய இன்றியமையாமையினைச் சுட்டிக் காட்ட" நான் என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகின்றேன்.*

(2) DEMAND NO. XXXII—PENSIONS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 3,65,25,900 under Demand No. XXXII—Pensions.'

PULAVAR K. GOVINDAN : Sir, I move—

'That the allotment of Rs. 3,65,25,900 under Demand No. XXXII—Pensions be reduced by Rs. 100.'



8th March 1966] *[புலவர் கா. கோவிந்தன்]*

*"விலைவாசி ஏற்றத்தைக் குறிப்பில் வைத்து முதியோர் உதவித் தொகையை 30 ரூபாய் அளவுக்காவது உயர்த்தித் தர வேண்டும்" என்பதை வலியுறுத்த நான் என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.*

*திரு. சா. கணேசன் : "விலைவாசிக்குத் தக்கபடி பென்ஷன் அளவை நிர்ணயிக்க வேண்டிய நியாயத்தை எடுத்துரைக்க" நான் என் பெயரில் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.*

"That the allotment of Rs. 3,65,25,900 under Demand No. XXXVI—Pensions be reduced by Rs. 100."

(3) DEMAND NO. XXXIII—MISCELLANEOUS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 4,34,41,900 under Demand No. XXXIII—Miscellaneous.'

SRI S. MURUGAIYAN : Sir, I move—

'That the allotment of Rs. 4,34,41,900 under Demand No. XXXIII—Miscellaneous be reduced by Rs. 100.'

*"இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி காவலில் வைக்கப்படும் அரசியல் தலைவர்களின் குடும்பத்திற்குக் கொடுக்கப்படும் உதவித் தொகை, குடும்ப வாழ்க்கைநிலை, குடும்பத்தில் உள்ளோர் எண்ணிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதை வலியுறுத்த" என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.*

(4) DEMAND NO. XXXVI—OTHER MISCELLANEOUS COMPENSATIONS AND ASSIGNMENTS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 4,65,25,000 under Demand No. XXXVI—Other Miscellaneous Compensations and Assignments.'

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move—

'That the allotment of Rs. 4,65,25,000 under Demand No. XXXVI—Other Miscellaneous Compensations and Assignments be reduced by Rs. 100.'

*"வரிகள், தீர்வைகள் இவற்றிலிருந்து நாட்டாண்மைக் கழகங்களுக்குக் கொடுக்கும் தொகையை அதிகமாக்க வேண்டுமென்பதை வலியுறுத்த" வெட்டுப் பிரேரணையை முன் மொழிகின்றேன்.*

[8th March 1966

**திரு. சா. கணேசன்:** "சமண சமயிகள் எண்ணிக்கை குறைந்து போனமையால் பராமரிக்க முடியாமல் விளங்கும் எண் அற்ற சமயப் பாழிகளையும் பள்ளிகளையும் அரசாங்கமே கைக் கொண்டு அவற்றைக் காத்தும் ஆங்காங்குள்ள மூர்த்திகளையும் பிற சிற்பங்களையும் தொகுத்து ஓரிடத்தில் காட்சிக் கூடம் அமைத்து அதில் வைத்துப் பாதுகாத்தும் வரவேண்டிய முக்கியத்துவத்தை எடுத்து விளக்க" நான் என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 4,65,25,000 under Demand No. XXXVI—Other Miscellaneous Compensations and Assignments be reduced by Rs. 100."

(5) DEMAND NO. XLVI—COMMUTED VALUE OF PENSIONS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 3,01,500 under Demand No. XLVI—Commuted Value of Pensions.'

SRI P. MURUGAIYAN: Sir, I move—

'That the allotment of Rs. 3,01,500 under Demand No. XLVI—Commuted Value of Pensions be reduced by Rs. 100.'

(6) DEMAND NO. XLVIII—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 32,34,26,800 under Demand No. XLVIII—Loans and Advances by the State Government.'

SRI A. THANGAVELU: Sir, I move—

'That the allotment of Rs. 32,34,26,800 under Demand No. XLVIII—Loans and Advances by the State Government be reduced by Rs. 100.'

"ஐந்து ஏக்கருக்குக் குறைந்த விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் முதல் சலுகை கொடுக்கவேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க" நான் என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை முன்மொழிகின்றேன்.

**திரு. சா. கணேசன்:** ஆற்றுவழி, கடலோர வழிப் போக்கு வரத்துக்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்த" நான் என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கின்றேன்.

"That the allotment of Rs. 32,34,26,800 under Demand No. XLVIII—Loans and Advances by the State Government be reduced by Rs. 100."



8th March 1966]

MR. SPEAKER: The Demands and the cut-motions are before the House for discussion. Is the Hon. Chief Minister going to make any statement on these Demands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

* **திரு. எம். எஸ். மணி:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம், பென்ஷன், கடன், முன்பணம் ஆகிய மானி யங்களின் மீது எங்கள் கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப் பினர்கள் கொண்டுவந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். 9-30 a.m.

மாவட்ட நிர்வாகத்திலே வேலைகள் மிகவும் தாமதமாக நடை பெற்று வருகின்றன. அதற்குக் காரணம், மாவட்டத்திலே உள்ள அதிகாரிகளெல்லாம் செய்ய வேண்டிய வேலைகளை விட்டு வேறு வேலைக்கு அவர்களுடைய கவனம் திருப்பப்படுகிறது. சில அமைச் சர்களின் தலையீட்டின் காரணமாக அப்படித் திருப்பப்படுகிற படியால் அவர்களுடைய அலுவலக வேலைகள் தாமதப்படுகின்றன. அது மட்டும் அல்ல. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், அதிகாரி களுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட வேலைகளில் பல சமயங்களில் தலையிடுகிற காரணத்தாலும் வேலை தாமதமாக நடைபெறுகிறது. இதை நான் சில உதாரணங்கள் மூலமாகக் குறிப்பிட விரும்பு கிறேன். இப்படிப்பட்ட குறைகளை மாவட்டத் தலைவரிடம் எடுத்துத் தெரிவிப்பதற்கு அரசாங்கம் ஒரு வாய்ப்பு கொடுத்திருந் தது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்டத் தலைவர் அவர்கள் பொது மக்களுக்குப் பேட்டி கொடுத்து, அவர்களுடைய குறை களைக் கேட்டுத் தீர்க்கும் நிலைமை இருந்தது. இப்பொழுதெல்லாம் "க்ரிவன்ஸ் டே" என்று குறிப்பிடப்பட்ட அந்தத் திங்கட் கிழமையன்று கலெக்டர் வருவதில்லை. மக்கள் ஐம்பது, அறுபது மைல் தொலைவிலிருந்து கலெக்டரை பார்க்க வந்துவிட்டுப் போகி றார்கள். இது ஏன் நிறுத்தப்பட்டது? நிறுத்தப்பட்டதற்கு என்ன காரணம்? காரியம் ஆகிறதா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், மக்கள் மனத்திலே உள்ள குறைகளைக் கலெக்ட ரிடம் சொல்லியிருக்கிறோம், ஏதாவது பரிகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்று போய்விட்டதே, அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலே நாங்கள் மாவட்டத்திலே உள்ள குறைபாடுகளைப்பற்றிக் கேள்வி கேட்டு, அதன் மூலமாகப் பதில் பெறக்கூடிய நிலைமை இருந்தது. பல நேரங்களில் காரியங்களை செய்யப்படாவிட்டால், இப்படிக் கேள்வி போடுகிற நேரத்தில் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். இன்றையதினம் அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கேள்விகள் கேட்கக் கூடாது என்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாங்கள் பல நேரங்களில் மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் கேள்வி கேட்டு, அங்கே கிடைக் கும் பதிலையும், அந்தப் பதிலை வைத்துக்கொண்டு சட்ட மன்றத்தில் கேள்வி கேட்டு, இவர்கள் கொடுக்கிற பதிலையும் பார்க்கிறபோது முரணாக இருந்தது. இதைச் சட்டமன்றத்திலே எடுத்துக்

[திரு. எம். எஸ். மணி] [8th March 1966

காட்டியதற்குப் பிறகு, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே இனி கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டாம் என்று அறிக்கை அனுப்பியிருப்பதாக நான் கருதுகிறேன். நிலைமையைப் புரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக கேள்விக்குப் பதில் சொல்லும் போது இருந்தது. இப்பொழுது அங்கே கேள்வி கேட்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அதிகாரிகள் அவர்களுடைய வேலைகளைச் சரிவரச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

அமைச்சர்கள் வருகிறபோது, மாவட்ட அதிகாரிகள் அத்தனை பேரும் அவரைப் பேட்டி காணச் சென்றுவிடுகிறார்கள். பேட்டி கண்டுவிட்டு, அவர்களுடைய அலுவலைப் பார்க்கத் திரும்பி வருவது இல்லை. அமைச்சருடைய சுற்றுப் பயணத்திலும் பல நேரங்களில் கலந்து கொள்ளும் காரணத்தால், நாம் குறைகளைச் சொல்ல அந்த மாவட்ட அதிகாரியிடம் சென்றால், அங்கே மாவட்ட அதிகாரி இருப்பதே இல்லை. குறிப்பாக உங்கள் மூலம், அமைச்சரவைக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திருச்சியிலே டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ ஆபீசர் ஒருவர் வந்திருக்கிறார். அவர் யார் என்று எனக்கு இன்னமும் தெரியாது. எனக்குத்தான் தெரியாது என்பது அல்ல, சட்ட மன்ற உறுப்பினர் திரு. அழகமுத்து அவர்களையும் கேட்டேன், "உங்களுக்குத் தெரியுமா?" என்று. "நானும் பார்த்ததில்லை" என்று அவரும் சொன்னார். திருச்சி கலெக்டர் அலுவலகத்திற்கு நான் தினசரி செல்வேன். ஆனால், அந்த அதிகாரி இருப்பதில்லை. கேட்டால், வெளியூருக்குச் சென்றிருக்கிறார், மற்ற காரியங்களுக்குச் சென்றிருக்கிறார்" என்று சொல்லப்படுகிறதே தவிர, ஏன் அந்த அதிகாரி தங்களுடைய இலாக்கா சம்பந்தப்பட்ட வேலைகளைக் கவனிக்க அலுவலகத்தில் இருப்பதில்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வீட்டுக்குச் செல்வது முறையல்ல என்ற காரணத்தால் வீட்டுக்குச் செல்வதில்லை. இவர் ஒருவர் மட்டுமல்ல. இதுபோன்ற பல அதிகாரிகள் இப்படித்தான் நடந்துகொள்ளுகிறார்கள். கலெக்டரைப் பொறுத்த வரையில் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்து பேட்டி அளித்துக் கொண்டிருந்தார். கலெக்டர் நல்லவராகக் கூட இருக்கலாம். என்னைப் போன்ற ஏழை சட்ட மன்ற உறுப்பினராக வந்திருக்கும் காரணத்தால் கலெக்டர் அலுவலகத்திற்குச் சென்று, அங்கு அவர் இல்லாமலிருந்தால், அவருடைய பங்களாவிற்கு செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப் போகும்போது டாக்ஸியில் போக வேண்டியிருக்கிறது. டாக்சி எடுத்துக்கொண்டு சென்றாலும், ஏற்கனவே அங்கே ஐம்பது அறுபது பேர்கள் கலெக்டரைப் பார்க்க காத்துக் கொண்டிருக்கிறபோது, 'வெயிட்டிங்'குக்காக டாக்ஸிக்காரன் பத்து ரூபாய் கேட்கிறான். எனக்கு வருகிற சம்பளம் ரூ. 250. இந்த நிலையில் எங்களுடைய குறைகளை அங்கே எப்படி எடுத்துச் சொல்ல முடியும்? ஆகவே, அலுவலகம் என்று இருந்தால், அங்கே ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் அதிகாரிகள் தங்கியிருந்தால், மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்குச் சாலச் சிறந்ததாக இருக்கும், ஏழைகளுக்கு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



8th March 1966] [திரு. எம். எஸ். மணி]

அதிகாரிகள் தங்கப் பத்திரங்கள் வசூலிப்பது பற்றி இங்கே சொன்னபோது, முதல் அமைச்சர் அவர்கள், "நாங்கள் கட்டாயப் படுத்தி எந்த அதிகாரியையும் வசூல் செய்யச் சொல்லவில்லை" என்று பதில் சொன்னார்கள். உண்மையிலேயே முதல் அமைச்சர் அவர்கள் அப்படித்தான் செய்திருப்பார். ஆனால், அதிகாரிகளைப் பொறுத்த வரையில், தங்களுக்கு ப்ரமோஷன் வேண்டும் என்பதற்காகவோ வேறு என்ன காரணத்திற்காகவோ, மக்களைக் கட்டாயப்படுத்தி வசூல் செய்திருக்கிறார்கள். நானும் பல நேரத்தில் உடன் இருந்திருக்கிறேன். இப்படிக் கட்டாயப்படுத்துவது முறையல்ல என்று சொன்னபோது, "எங்களுடைய கோட்டாவை நாங்கள் பூர்த்தி செய்யவேண்டுமே" என்ற முறையில் அதிகாரிகள் சொன்னார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திருச்சியிலே உள்ள சின்ன அரிசி வியாபாரிகள் அத்தனை பேரும் ஆளுக்குப் பத்து கிராம் தங்கம் கொடுக்க வேண்டும். கொடுக்காதவருக்கு அரிசி கோட்டா கிடையாது என்று சொல்லிப் பல பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். தங்கப் பத்திரம் வாங்கிக் கொடுத்து பழையபடி அவர்களுக்கு நான் கோட்டா வாங்கிக் கொடுத்திருக்கிறேன். சில வியாபாரிகள் "நாங்கள் தங்கப் பத்திரமும் வாங்கவில்லை, எங்களுக்கு கோட்டாவும் வேண்டாம்" என்றே சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இப்படித் தங்கப் பத்திரம் வசூலிப்பதில் அவர்கள் மட்டும் வந்துவிட்டால் பரவாயில்லை. அவர்கள் சென்ற சில மணி நேரத்திற்கு பிறகு சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் வருகிறார்கள், அவர்களும் தங்களுடைய கோட்டாவைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று அங்கே, "தங்கப் பத்திரம் வாங்குங்கள், இல்லாவிட்டால் 100 ரூபாய் கொடுங்கள், நாங்கள் தங்கம் வாங்கித் தருகிறோம்" என்று சொல்லுகிறார்கள். இப்படி டிஸ்டிரிக்ட் சப்ளை ஆபீசர் ஒரு புறமும், சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர் இன்னொரு புறமும் தங்கப் பத்திரம் வசூலிக்கிறார்கள். இவர்களைத் தவிர, இன்கம்-டாக்ஸ் அதிகாரிகள், மற்றுமுள்ள அதிகாரிகள் வருகிற நிலைமை ஏற்பட்டால், ஒரு தனிப்பட்ட சின்ன வியாபாரி என்ன செய்ய முடியும்?

அதிகாரிகள் தங்கப் பத்திரங்கள் வசூல் செய்வது போன்ற வேலைகளில் ஈடுபடுகிற காரணத்தால் தங்கள் அலுவலகத்தில் அவர்கள் பணியாற்ற முடிவதில்லை. அதனால், பேப்பர் தடைபட்டு அங்கேயே இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. மூன்று தடவை நான்கு தடவை ரிமைண்டர் அனுப்பினாலும் பேப்பர் அலுவலகத்தில் இல்லை என்று பல நேரங்களில் சொல்லப்படுகிறது. குறிப்பாக திருச்சி ஸப்ளை ஆபீசர் அலுவலகத்திற்குச் சென்று நானே நேரடியாகக் கொண்டு போய்ப் பல பேப்பர் கொடுத்திருந்தேன். அவற்றைத் திரும்பப் பார்க்கச் சொன்னால், "புதிதாக ஒன்று எழுதிக் கொடுங்கள், அவர்களுக்குக் கொடுத்து விடுகிறோம்" என்று சொல்லுகிறார்கள். பழைய பேப்பரைத் தேடிப் பார்க்க முடிவதில்லை. காரணம், அவர்களுக்கு அவ்வளவு வேலைத் தொல்லை அதிகமாக இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எம். எஸ். மணி] [8th March 1966

ஒரு தாலுக்காவை விட்டு இன்னொரு தாலுக்காவிற்கோ அல்லது ஒரு மாவட்டத்தைவிட்டு இன்னொரு மாவட்டத்திற்கோ அரிசி போன்ற உணவுத் தானியங்களைக் கொண்டு போகக் கூடாது என்ற உத்தரவை அடிக்கடி மாற்றி மாற்றிப் போடுகிறார்கள். அதன் காரணமாக என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால், செக் போஸ்டிலே இருக்கிறவர்கள் பெறும் பணக்காரர்களாக இருக்கிறார்கள். சாதாரண செக் போஸ்டில் இருக்கும் ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஒரு ஆறு மாத காலம் அங்கே இருந்தால் ஒரு லட்ச ரூபாய்க்கு அதிபதியாக முடியும். ஆனால், ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அரிசி போக முடியவில்லை; ஒரு தாலுக்காவிலிருந்து இன்னொரு தாலுக்காவிற்குப் போவது கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னாலும்கூட, அவர்களைக் கவனித்துக் கொண்டால் லாரி லாரியாக அரிசி கொண்டு வருகிற சாமர்த்தியம் இன்றையதினம் லாரிக்காரர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் எங்களிடம் சொல்லுகிறார்கள், "எவ்வளவு வேண்டும் என்று சொல்லுங்கள், கொண்டுவந்து கொடுக்கிறோம்" என்று. காரணம், செக் போஸ்டில் இருக்கிறவர்களைக் கவனித்தால் போதும் என்ற நிலைமை இருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட லாரிகளை அனுமதித்துவிட்டு யாரைப் பிடிக்கிறார்கள் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ஏழை எளியவர்களை, கூலி வேலை செய்து, கூலிக்குக் கிடைத்த தானியங்களைக் கொண்டுபோகும் போது பிடித்துக் கொள்ளுகிறார்கள். குறிப்பாக கரூர் வட்டாரத்தில் இருக்கும் ஏழை கவுண்டன்மார்கள், நெல் அறுவடை சமயத்தில் ஒரு மாதம் இரண்டு மாதம் வெளியூருக்கு போயிருந்து, கூலிக்கு நெல் அறுவடை செய்து, தினம் ஒரு படி இரண்டுபடி, ஒரு மரக்கால், இரண்டு மரக்கால் என்று கூலி வாங்கிக்கொண்டு, ஒன்றரை மாதம், இரண்டு மாதம் முடிந்தவுடன் தங்கள் ஊருக்குச் செல்வார்கள். அப்படிப் போகிறபோது, ஒவ்வொரு ஏழைத் தொழிலாளிப் பெண்ணும் சாப்பிட்டது போக ஒரு மூட்டை இரண்டு மூட்டை தானியம் மீதப்படுத்துவாள். அந்த நெல்லைக் கொண்டு போக முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. 15, 20 பெண்கள், இரண்டு மாதம் சம்பாதித்த அந்த மூட்டைகளை ஒன்றாகச் சேர்த்து, 20, 22 மூட்டைகளை, அங்கிருந்து கரூருக்கோ அல்லது பள்ளிப்பட்டிக்கோ கொண்டு போக வேண்டும். அப்படி கொண்டு போகிற நேரத்தில், பெட்டவாய்த்தலையில் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பிடித்துவிட்டார். அந்தப் பெண்களெல்லாம் "இது நாங்கள் இரண்டு மாதம் கூலிவாங்கிய தானியம், பஸ்ஸில் அனுமதிக்க மாட்டேன் என்கிறார்கள், ஆகவே, வண்டியிலே கொண்டு போகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். "பர்மிட் எங்கே?" என்று செக்போஸ்டில் உள்ளவர்கள் கேட்டு "இல்லை" என்று சொன்னவுடன் அனுமதிக்க முடியாது என்று சொல்லி, பெட்டவாய்த்தலையிலேயே இறக்கிவிட்டார்கள். அதற்குப் பிறகு திருச்சிக்கு வந்து என்னைப் பார்த்தார்கள். உடனே தாசில்தாரிடம் சென்றபோது, டெபுடி தாசில்தாரிடம் போகச் சொல்லிவிட்டார்கள். அதற்கு மூன்று நாளாயிற்று. மூன்று நாட்களுக்குப் பிறகு, டெபுடி தாசில்தார் அவருக்குக் கீழ் இருக்கும் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் சொன்னார். அந்த



8th March 1966] [திரு. எம். எஸ். மணி]

ரெவின்யூ இன்ஸ்பெக்டர், "கலெக்டர் எனக்கு வேறு வேலை கொடுத்திருக்கிறார், நாளைக்கு அவசியம் பெர்மிட் கொடுக்கிறேன்" என்றார். நிலச் சுவான்தார் சர்ட்டிபிகேட்டும் வாங்கிவரவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். "என்னுடைய நிலத்தில் விளைந்ததைத் தான் கூலியாகக் கொடுத்தேன்" என்று நிலச்சுவாந்தார் சர்ட்டிபிகேட் வாங்கிவந்து கொடுத்தேன். உடனே பெட்டவாய்த்தலையில் எத்தனை நிலத்தில் அவர்கள் அறுவடை செய்தார்களோ அத்தனை நிலச் சுவான்தார்கள் சர்டிபிகேட் தேவை என்றார். உடன் சென்று சர்ட்டிபிகேட் வாங்கி, அத்துடன் கிராம முன்சீப் சர்ட்டிபிகேட்டும் வாங்கி கொண்டுவந்து கொடுத்தேன். அதன் பிறகு "தனித் தனியாக ஒவ்வொருவருக்கும் வாங்கவேண்டும்" என்று சொன்னார்கள். பிறகு நான்போய் தனித்தனியாக எழுதி வாங்கிக்கொண்டு வந்தேன். வாங்கிக்கொண்டு வந்தபிறகு தாசில்தாரும் இல்லை, ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் இல்லை, அவர்களைப் பார்க்க முடியவில்லை. இப்படி கூலிக்காரர்கள் கூலி நெல் வாங்கி மொத்தமாகச் சேர்த்துக் கொண்டு வருகிறபோதுதான் பிடிக்கிறார்களே, தவிர, லாரி லாரியாகக் கடத்திக்கொண்டு போகிறவர்களை விட்டுவிடுகிறார்கள், பிடிப்பதில்லை. ஆகவே ஏழை மக்கள், பொறுக்கு நெல்லைக் கொண்டு வருபவர்கள், கூலிக்காரர்கள் இவர்களுக்கு எல்லாம் சலுகை கொடுக்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். சப்ளையைப் பொறுத்தவரையில் ஒன்று சப்ளை ஆபீஸ் அதிகாரிகளை அதிகமாகப் போட வேண்டும் அல்லது நிர்வாகம் நல்ல முறையிலே நடக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். திருச்சியைப் பொறுத்தவரையிலே நான் எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள், எவ்வளவு சப்ளை செய்ய வேண்டுமென்று ஒரு முறை கேட்டபொழுது அவர்களால் கணக்குச் சொல்லமுடியவில்லை. அவர்களிடம் நீங்கள் அடிக்கடி அரிசி இல்லை, இல்லை என்று சொன்னால் மக்கள் என்ன செய்வார்கள் என்று கேட்டால் அவர்கள் நாங்கள் என்ன செய்வது எங்களால் வேலை செய்யமுடியவில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். நிர்வாகம் அங்கே ஊழலாக இருக்கிறது. குமாஸ்தாக்களை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏழை எளியவர்கள் ராணுவத்திற்குப் போய்வந்தால் நிலம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதே போல் தங்கக் கட்டுப்பாடு உத்தரவால் பாதிக்கப்பட்டவர்களுக்குமே நிலம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். திருச்சியிலே நான் இருக்கின்ற காரணத்தால் இதற்கெல்லாம் பதில் சொல்ல முடியவில்லை. எங்கள் ஊரைப் பொறுத்தவரையில் தங்க வேலை செய்பவர்கள், தட்டார் ஒருவருக்காவது இதுவரை நிலம் கிடைக்கவில்லை. பத்திரிகைகளில் நிலம் கொடுக்கப்படும் என்று செய்தி வந்துவிடுகிறது. பத்திரிகையிலே செய்தி வந்தவுடனே சட்டமன்ற உறுப்பினராக நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் வாங்கிக் கொடுங்கள்" என்று சொல்லுகிறார்கள். நாங்கள் யாரிடம்போய் வாங்கிக் கொடுப்பது? ராணுவத்திலே இருந்து ரிடையர் ஆன ஒருவர் நிலம் வேண்டுமென்று எழுதிக்கொண்டே இருக்கிறார், இன்னும் அவருக்குக் கிடைக்கவில்லை. இதைச்சொன்னால்கூட அமைச்சர் அவர்களுக்குப் புதியதாகத் தெரியும். என்னுடைய தம்பி ராணுவத்

திலேதான் அதிகாரியாக இருக்கிறான். கலெக்டரிடம் நிலத்திற்காக அப்ளை செய்தோம். கலெக்டர் தாசில்தாரிடம் போய் பட்டா நம்பர் பார்த்து வாங்கிக்கொண்டு வாருங்கள் என்று சொன்னார். தாசில்தாரிடம் போனால் அவர் கிராம அதிகாரியிடம் போய் பட்டா நம்பர் வாங்கிக்கொண்டு வரச்சொல்கிறார். இதற்காக பெரம்பலூர்; அரியலூர் என்று நாங்களே கிராமங்களுக்குப் போய் கிராம அதிகாரிகளைப்பார்த்து நிலத்திற்காகப் பட்டா நம்பர் வாங்கிக் கொண்டுவரவேண்டியிருக்கிறது. கிராமத்திலே உள்ள கிராம அதிகாரிகளுக்கு 200, 300 கொடுத்தால் தான் காரியம் நடைபெறுகிறது. இப்பொழுது ராணுவத்திற்குச் சென்று வந்தவர்களுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று விவசாயம் செய்வதற்கு நிலம் தருகிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். கேட்க பிரியமாக இருக்கிறது, ஆனந்தமாக இருக்கிறது. ஆனால் நிலம் இன்னும் கொடுக்கப்படவில்லை. என்னுடைய தம்பியின் மனைவியும், குழந்தைகளும் என்னுடைய வீட்டிலேதான் இருக்கிறார்கள். எங்கள் வீட்டிலே குடும்பம் பாதிக்கப்படுகிற நேரத்திலே தான் எல்லோருக்கும் இந்த நிலைமைதானே இருக்கும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப் பற்றியே பேசிக்கொண்டு போனால் டைம் இருக்காது. அடுத்த விஷயத்திற்கு வரவேண்டும்.

**திரு. எம். எஸ். மணி :** கிராம அதிகாரிகளுடைய ஊதியத்தை உயர்த்தவேண்டும். அப்படிப்பட்டவர்களை ஊக்குவித்தால்தான் லஞ்சத்தை ஓரளவு குறைக்கலாம்.

ஓல்ட் ஏஜ் பென்ஷன் எல்லாத் தாய்மார்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. மேற்கொண்டு கொடுப்பது இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. இதுவரை கொடுத்து வந்தவர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். புதிதாக யாருக்கும் கொடுக்கப்படுவதில்லை. காரணம் பணம் இல்லையென்று சொல்கிறார்கள். வயதானவர்கள் ஓல்ட் ஏஜ் பென்ஷனுக்காக வருகிறார்கள்; அவர்களுக்குக் கொடுக்கமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த பென்ஷனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தைக் கூடுதலாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சமஸ்தான மன்னர்களுக்கு எல்லாம் பென்ஷன் கொடுக்கிறோம். அவர்களுக்கு நிலம் இருக்கிறது, வீடு இருக்கிறது ; அவர்களுக்கு கொடுக்கிற பென்ஷனை நிறுத்தினால் கூட குடும்பத்தை நடத்திவிடலாம். ஆகவே அதை நிறுத்திவிட்டு ஏழைகளாக இருப்பவர்களுக்குக் கொடுப்பதற்கு முன்வரவேண்டும்.

அரசியல் பாதுகாப்புக் கைதிகளாக சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பணக்காரர்களைக் கைது செய்துவிட்டால் அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் ஏழைகளைக் கைதுசெய்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு போதிய வழி வகை செய்யவேண்டும். நகராட்சி சிப்பந்திகளுக்கெல்லாம் பென்ஷன் கொடுக்கப்படுவதில்லை. அரசாங்க சிப்பந்திகளுக்கு



எல்லாம் பென்ஷன் கொடுக்கிறோம். அதையொட்டி நகராட்சி சிப்பந்திகளுக்கு, அவர்கள் சர்வீஸ் முடிந்து வீட்டுக்குச் செல்கிற நேரத்தில் பென்ஷன் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கும் பென்ஷன் கொடுக்கவேண்டும்.

அடுத்து, நகைத் தொழிலாளர்களுக்குக் கடன் கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு ஒரே தவணையில் கடன் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுத்திருந்தால் அந்தப் பணத்தை வைத்து அவர்கள் ஏதாவது வியாபாரம் செய்து பிழைக்கலாம். ஆனால் தவணை தவணையாகக் கடன் கொடுப்பதால் 700, 800 ரூபாய் முதலில் கொடுத்தால் அவர்கள் 2, 3, சைக்கிள் வாங்கி வைக்கிறார்கள். பின்னர் அடுத்த தவணைக் கடன் வருவதற்குள் அவர்கள் அவைகளை விற்றுத் தின்றுவிடுகிறார்கள். ஆகவே ஒரே தவணையில் அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

பர்மா அகதிகளுக்கு லோன் சரியாகக் கிடைப்பதில்லை. ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு 100 ரூபாய் கொடுத்தால்தான் லோன் அவர்களுக்கு சாங்ஷன் செய்கிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் திருச்சிக்கு வரும் பொழுது இந்த பர்மா அகதிகளை இது சம்பந்தமாக விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய விஷயத்தில் யாராவது உதவிசெய்யப்போனால் நீங்கள் என்ன தி.மு.க.வா என்று கேட்கிறார்கள். கனம் உணவு அமைச்சர் அவர்கள் அங்கே வந்திருந்தபோதுகூட அவர்களிடம், 'ஜாக்கிரதையாக இருங்கள்' யார் வீட்டுப் பணத்தை வாங்குகிறீர்கள், யாருக்குக் கொடி தூக்குகிறீர்கள் ?" என்று சொன்னதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுடைய பிரதிநிதிகளையே இப்படிப் பயமுறுத்தினால் அவர்கள் என்ன செய்வார்கள் ? வேதனை பொறுக்கமுடியாமல் அவர்கள் எல்லாம் தற்கொலை செய்து கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. தூக்குப் போட்டுக்கொள்கிறார்கள்; அல்லது கிணற்றிலே விழுந்து உயிர் விடுகிறார்கள். இந்த நிலைமையை மனதிலே வைத்து அவர்களுக்கு உதவிகளைச் செய்ய வேண்டும், அரசாங்கச் சிப்பந்திகளுக்கு கார், சைக்கிள் வாங்குவதற்கு லோன் கொடுக்கிறார்கள். அவர்கள் பணத்தை வாங்கி சாமான்களை வாங்கி கொள்வதற்குப் பதிலாக நாமே அவர்களுக்கு நல்ல சாமான்களை வாங்கிக்கொடுத்து விடலாம். (மணியடிக்கப்பட்டது).

**திரு. ப. உ. சண்முகம் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, சர்க்கார் கொண்டுவந்திருக்கின்ற மானியக் கோரிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் தந்திருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நீதி நிர்வாகத்தைப் பிரித்து நெடுநாள் ஆகிவிட்டது. அதைப் பிரித்தான பிறகுகூட டெபுடி தாசில்தார்களுக்கு மூன்றாம் கிளாஸ் பவர்களைக் கொடுத்து நீதிமன்றங்களை நடத்தச்சொல்லி இருக்கிறார்கள். இது எந்த வகையிலே நியாயம் என்று எனக்கு புரியவில்லை. டெபுடி தாசில்தார்கள் வழக்குகளை நடத்துவதின்மூலம் நீதி எப்படித் தரப்படும் என்று எனக்குப் புரியவில்லை. அருள்கூர்ந்து அரசாங்கம் இதைப் புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சப் மாஜிஸ்

[திரு. ப. உ. சண்முகம்] [8th March 1966

திரேட் கோர்ட்டுகளில் வழக்குகள் குவிந்து கிடக்கின்றன, அதற்காகத்தான் டெபுடி தாசில்தார்களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால் அதற்குப் பதிலாக துணைக் கோர்ட்டுகளை அதிகமாக ஏற்படுத்திவிடலாம். நீதி நிர்வாகம் பிரிக்கப்பட்ட பிறகுகூட அவர்களுக்கு இந்த அதிகாரம் தரப்பட்டிருக்கிறது . . .

கனம் சபாநாயகர் : அவர்களுக்கு டிரெயினிங் கொடுக்கிறார்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்கள் டிரெயினிங் எடுத்துக்கொள்கிறார்கள்.

Sri P. U. SHANMUGAM : They are not given training. They are actually running courts with Third Class powers.
அது எந்த அடிப்படையில் தரப்பட்டிருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. நான் இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நீதி நிர்வாகம் பிரிக்கப்பட்டதற்குப் பிறகுகூட இப்படிச் செய்வது சரியல்ல என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமக் கோர்ட்டுகளைக் கலைத்துவிட்டார்கள். ஏன் கலைத்தார்கள் என்று புரியவில்லை. ஊராட்சி மன்றங்கள் ஏற்பட்டவுடன், ஊராட்சி மன்றங்களுக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டபொழுது, அந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று சொல்லி அதை நிறுத்திவிட்டார்கள். இதனாலே என்ன ஏற்படுகிறது என்றால் கிராமத்திலே இருக்கக்கூடிய விவசாயி 10 ரூபாய் பாண்டுக்காகக்கூட வழக்குப்போடவேண்டுமென்றால் முன்சீப் கோர்ட்டுக்குத்தான் போகவேண்டியிருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டெபுடி தாசில்தார்களுக்கு அதிகாரம் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகின்ற கனம் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டுமென்று கருதுகிறார்கள் என்று நினைக்கிறேன். அரசாங்கத்தினுடைய கருத்து அது சரியல்ல என்பதுதான்.

**திரு. ப. உ. சண்முகம் :** டெபுடி தாசில்தார்களுக்குக் கிரிமினல் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான் சொன்னேன். இது சிவில் அதிகாரம். நீதி நிர்வாகத்தைப் பிரித்த பிறகும் அது சம்பந்தபட்ட ரெக்கார்டுகள் எல்லாம் அங்கிருக்கின்ற பிரசிடென்ட் இடத்திலேயே தேங்கிக் கிடக்கின்றன. தாசில்தார்கள் உடனடியாக உத்தரவு போட்டு அவற்றையாவது நீதிமன்றத்திடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

தாலுகா அலுவலகங்களுக்குள் நுழைந்தால்—கனம் முதலமைச்சர் அவர்கள் மன்னிக்கவேண்டும்—அங்கு அதிகாரிகள் மேஜையின் மேல் ஏதேனும் ஒரு கடன் பத்திரம் இருந்து கொண்டே இருக்கிறது. அவரிடம் எந்த ஒரு காரியத்திற்கும் போவதற்கே பயமாக இருக்கிறது. ஓனர்ஷிப் சர்டிபிகேட் வேண்டுமா, கடன் பத்திரத்தில் கையெழுத்துப் போடு, பர்மிட்



8th March 1966] [திரு. ப. உ. சண்முகம்]

வேண்டுமா; கடன் பத்திரத்தில் கையெழுத்துப் போடு என்று சொல்லுகிறார்கள். தாலுகா அலுவலகம் முழுவதும் கடன் வசூலிக்கும் வேலையைச் செய்து வருகிறதே தவிர அந்த அலுவலகம் எதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்த வேலைகள் நடைபெறவில்லை. சாகுபடிக் கணக்குப் பத்திரம் என்று ஒன்று உண்டு. உட்கார்ந்த இடத்தில் அவர் கையெழுத்துப் போடவேண்டும். ஆனால், எந்த தாலுகா அலுவலகத்திற்குப் போனாலும் யாரையும் நேரடியாகச் சந்திக்க முடியவில்லை. எப்போது போனாலும் வெளியே போயிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் கடன் பத்திரம் வாங்க, விற்க வெளியே சென்றுவிடுகிறார்கள். இந்த நிலைமை அங்கு இருப்பதை மாற்றியமைக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. கடன் வசூலிக்கும் ஏஜண்டுகளாக தாலுகா அலுவலகத்தினர் இருக்கிறார்கள்.

எங்கள் கட்சி உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னது போல் தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த நிலங்களை நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் தயக்கம் காட்டுகின்றது. ஒரு விவசாயி 40 ஆண்டுக் காலமாக ஒரு புறம்போக்கு நிலத்தில் பயிர் செய்து கொண்டிருந்தான். அதற்கான எல்லாக் கணக்குகளும் இருக்கின்றன. ஆனால் அந்த விவசாயிக்குப் புறம்போக்கில்தான் பயிர் செய்து கொண்டிருக்கிறோம் என்பது தெரியாது. அவன் அதிலே கிணறு வெட்டி விட்டான். ஓனர்ஷிப் சர்டிபிகேட் வேண்டுமென்று அவன் கேட்டபோது கடன் பத்திரத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் கொடு என்று கேட்டார்கள். ஆனால், அதை ஏலம் விட்டு 750 ரூபாய் குறைந்து 1,250 ரூபாய்க்குக் கடன் பத்திரத்தை அனுப்பிவிட்டார்கள். இந்த முறையில் கடன் பத்திரத்தை அனுப்பிவிட்டார்கள். இந்த முறையில் கடன் பத்திரம் வசூலிப்பதில் மக்கள் பயமுறுத்தலுக்கும், துன்புறுத்தலுக்கும் ஆளாகிறார்கள். இதை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்ததாகும்.

சிவில் சப்ளைஸ் பற்றிப் பொது விவாதத்தின் போதே குறிப்பிட்டேன். சிவில் சப்ளைஸ் இலாகாவிலிருந்து பரிசிலனைக்காக வருகிறவர்கள் கணக்குகளைப் பார்க்கிறார்கள்; அதைப் பற்றி விசிட்டர்ஸ் புத்தகத்தில் ஒன்றை எழுதுகிறார்கள். தங்களுடைய டயரியில் எதையோ எழுதிக் கொள்ளுகிறார்கள். விசிட்டர்ஸ் புத்தகத்தில் கணக்குகள் எல்லாம் சரியாக இருக்கின்றன என்று எழுதிவிட்டு அவர்கள் தங்களுடைய அலுவலகத்திற்குச் சென்று, உங்களுடைய கணக்குகள் சரியாக இல்லை. அதனால் அபராதம் கட்டு' என்று நோட்டீஸ் அனுப்புகிறார்கள். 'கணக்கு சரியாக இருக்கிறது என்று விசிட்டர்ஸ் புத்தகத்தில் எழுதியிருக்கிறீர்களே' இப்போது சரியாக இல்லை என்று எழுதுகிறீர்களே' என்று திருப்பிக் கேட்டால், எந்த இடத்திலாவது ஏற்கனவே தவறு செய்திருக்கக் கூடும்; ஆகவே, பத்து ரூபாய் அபராதம் கட்டு என்று சொல்லுகிறார்கள். இது என் தம்பியினுடைய சொந்த மிஷினிலே நடந்தது. அதனால்தான் விளக்கமாக சொல்ல முடிகிறது. பத்து ரூபாயைக் கட்டி செலானை அவர்களுக்கு அனுப்பிய பிறகு, அவர்கள்

செலானைத் தொலைத்து விட்டு 'பத்து ரூபாய் கட்டச் சொல்லி இதுவரை கட்டவில்லை; ஆகவே, 20 ரூபாய் கட்டு' என்று நோட்டீஸ் அனுப்புகிறார்கள். அவர்களிடம் இன்ன செலானில் பணத்தைக் கட்டியிருக்கிறோம் என்று போய் எடுத்துச் சொன்னால்; அவர்கள் 'எனக்காக இந்தப் பணத்தை மறுபடியும் கட்டி விடுங்கள்' என்று பல்லிளித்துக் கொண்டு கெஞ்சுகிறார்கள். இந்த முறைகளிலே, ஒன்றோடொன்று ஒட்டிப்போகக் கூடிய முறையில் தொடர்பு இல்லாமல் இருப்பதை மாற்றியமைப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொருத்தவரை அரசாங்கம் கொஞ்சம் துரிதப்படுத்த வேண்டும். அங்கு எல்லாக் காரியங்களும் கால தாமதமாகிக் கொண்டிருக்கிறது. பட்டா மாறுதலைப் பற்றி சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது. தாலுகா அலுவலகத்தில் இருக்கும் ரெக்கார்டுகளுக்கும், முனிசிபல் ரெக்கார்டுகளுக்கும் ஒத்து வரவில்லை, மாறுதல் இருக்கிறது. அதற்குக் காரணம் புரியவில்லை. சர்வே ரெக்கார்டில் ஒரு பெயர் இருக்கிறது; முனிசிபல் ரெக்கார்டில் வேறு ஒரு பெயர் இருக்கிறது. எப்போது அது மாறிற்று என்று கேட்டால். தாலுகா அலுவலகத்தில் எங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிடுகிறார்கள்; முனிசிபாலிடியில் எங்களுக்குத் தெரியாது என்று சொல்கிறார்கள். தாலுகா ஆபீஸ் ரெக்கார்டைப் பார்த்து இன்னொருவனுடைய நிலத்தை சப்-டிவிஷன் செய்து விட்டார்கள். முனிசிபல் ரெக்கார்டில் அப்படி இல்லை. இதையெல்லாம் சர்வே நடக்கும் இந்தச் சமயத்தில் மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டங்களில் மற்றொரு முக்கியமான பிரச்சினை காலையில் கூட விவாதம் நடைபெற்ற—விலையேற்றத்தைப் பற்றிய பிரச்சினையாகும். விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது. மாவட்ட ஆட்சி மன்றம் நிச்சயமாக அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். நாம் ஹோட்டல்காரர்களுக்குக் கண்ட்ரோல் விலையில் சாமான்களை எல்லாம் கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் உணவுப்பண்டங்களை அதற்கு தகுந்த விலையில் விற்காமல் தூக்கி விற்கிறார்கள். இதை மாற்றியமைக்கும் பெரும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்ட் மூலம் ஹோல்சேல் டீலர்ஸை ஏற்படுத்துகிறார்கள். இவ்வளவு மூட்டைகள் என்ற கணக்கை அவர்கள் அனுப்புகிறார்கள். கணக்குப் பார்க்க டி.எஸ்.ஓ. வரும்போது 200, 300, மூட்டைகள் குறைகின்றன. அதற்குச் சமாதானம் கொடுக்கிறார்கள். அவர்கள் அந்த மூட்டைகளை என்ன செய்தார்கள் என்று கேட்காமல் அதற்கான அபராதத் தொகையை மட்டும் கட்டி விடுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்கள். அந்த ஹோல்சேல் டீலர்ஸ் வெளியே அவற்றை விற்றுவிடுவதன் காரணமாகத்தான் குறைகிறது. இந்த மாதிரி நிலைமையில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மற்றொன்று; வாங்குகிற விலைக்கும், விற்கிற விலைக்கும் தொடர்பு இருப்பதில்லை.



நெல்லாக வாங்கி அரிசியாக விற்கும்போது இரண்டுக்கும் ஒத்து வருவதில்லை. எங்கள் பகுதியில் ஒரு மூட்டை நெல் 46 ரூபாய் என்று சொன்னால் மேற்கொண்டு 2 ரூபாய், 3 ரூபாய் கையில் கொடுக்கிறார்கள். பில்லுக்கு மேல் தனியாக அதைக் கொடுக்கிறார்கள்; ஏன் அவ்வாறு கொடுக்கிறார்கள் என்று விசாரித்துப் பார்த்ததில் அவர்கள் அதை அரிசியாக்கி விற்கும்போது மூட்டை ஒன்றுக்கு 5 ரூபாய்க்கு மேல் லாபம் வருகிற காரணத்தால் அதிகமான அளவுக்கு நெல் மூட்டைகளை வாங்குவதற்காக அவ்வாறு கொடுக்கிறார்கள் என்று தெரிந்தது. அரிசிக்கும் நெல்லுக்கும் இடையே உள்ள விலை வித்தியாசத்தை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: சார், நமது மாநில முதலமைச்சர் அவர்கள் இன்று கொண்டு வந்திருக்கும் டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் அண்டு மிஸ்ஸேலேனியஸ் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. எம். எஸ். மணி அவர்களும் திரு. ப. உ. சண்முகம் அவர்களும் பேசிய பேச்சைக் கேட்க எனக்குச் சற்று விந்தையாகதான் இருக்கிறது. அவர்கள் மாமன், மைத்துனர்களுக்குக் காரியம் செய்து கொடுக்கப்படவில்லை என்று இந்த சபையில் சொல்லிக் கொண்டிருக்கும் அவர்களைப் பார்த்துச் சிரிக்கத்தான் தோன்றுகிறது. நாட்டுக்குத் தேவையான காரியங்களை இந்தச் சர்க்கார் செய்யத் தவறி இருக்கிறது என்று சொன்னால் நான் அவர்களைப் பார்த்துக் கை கூப்பியிருப்பேன்.

திரு. எம். எஸ். மணி: நான் பல குறைகளைச் சொல்லிவிட்டு என் வீட்டில்—என் தம்பிக்கு ஏற்பட்ட—குடும்பத்தில் ஏற்பட்ட, ஒரு சம்பவத்தையும் உதாரணமாகத்தான் காட்டினேன்.

* திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: என்னுடைய மாவட்டத்தைப் பொருத்தவரை ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கடந்த மாதம் ஜனவரி முதல் தேதியில் எங்கள் ஊரில் ஒரு பொருட்காட்சி நடந்தது. பொருட்காட்சிக்கு மாவட்ட கலெக்டர் தலைவர் ப்ளானிங் (P.A.) காரியதரிசி. அந்த மாவட்டத்திலுள்ள சில அபிஷியல்களையும், அபிஷியல் அல்லாதவர்களையும் கமிட்டியில் போட்டிருந்தார்கள். ஆனால் அந்தத் தொகுதியிலுள்ள பிரதிநிதிக்கு இடமே கிடையாது. அதைப்பற்றி யாரும் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. கழிந்த ஜனவரி பத்தாம் தேதி ரஷ்ய 10-00 a.m.
தேசத்தில் நமது பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் காலம் சென்றதால் எல்லோரும் வருத்தப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அடுத்த நாள் காலையில் என் தொகுதியில் அவர்கள் இறந்ததற்காக ஒரு மௌன ஊர்வலம் நடந்து கொண்டிருந்தது. அப்படி மௌன ஊர்வலம் நடந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் எங்கள் மாவட்ட கலக்டர் அந்தக் கமிட்டியைக் கூட்டி. இந்தப் பொருட்காட்சியை நடத்தவேண்டுமென்ற முடிவு கட்டினார்கள்.

[திரு. ஏ. சிதம்பரநாத நாடார்] [8th March 1966

இதைக் கேட்டவுடன் எங்களுக்கும் அங்குள்ள மாவட்ட மக்களுக்கும் இடையே ஒரு பரபரப்பும் வருத்தமும் ஏற்பட்டது. ஸ்டேட் மோர்னிங் என்பதை அவர்கள் சற்றும் மதித்ததாகத் தெரியவில்லை. அந்தப் பொருட்காட்சியில் இருந்து 75,000 ரூபாய் மிச்சம் வந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அந்தப் பொருட்காட்சி நடந்த தினங்களை உன்னிப் பார்த்தால் எவ்வளவோ சர்க்கார் ஜீப்கள் உபயோகப்படுத்தப்பட்டன; ஆயிரக்கணக்கான ரூபாய் பெட்ரோல் அதற்காக செலவழிக்கப்பட்டது. இவ்வளவு செய்தும் அந்தப் பொருட்காட்சியில் இருந்து 75,000 ரூபாய்தான் மிச்சம் வந்தது என்று சொல்லும்போது அதுகுறித்து நான் உண்மையிலே எள்ளி நகையாடுகிறேன். எங்கள் மாவட்டத்தில் கம்யூனிஸ்ட்கள் பெரிய கூட்டம் ஒன்று போட்டு அதைக் கண்டித்ததைப் பார்த்தேன். அந்த பொருட்காட்சியை நடத்த எங்கள் நகரசபை எல்லைக்குள் எவ்வளவோ இடங்கள் இருந்தும்கூட எஸ்.எல்.பி. பள்ளிக்கூடத்தில் வைத்து நடத்தினார்கள்; அதுவும் பள்ளிக்கூட வகுப்புகள் நடந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில். அப்படி வகுப்புகள் நடக்கும் சமயத்தில் அந்த பொருட்காட்சி நடத்தப்பட்ட காரணத்தினால் அது அந்த பாடசாலையில் படித்து வரும் மாணவர்களின் பெற்றோர்களுக்கும். என்னைப் போன்றவர்களுக்கும் திருப்தி அளிக்கவில்லை; அது மாணவர்களுடைய படிப்பை பாதித்தது. ஆகவே இது குறித்து நல்லமுறையில் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கமிட்டியை அமைத்து இதைப் பரிசீலனை செய்து நல்லதொரு முடிவிற்கு வர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். டிக்கட்டுகள் விற்பதற்காக கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் சிலரை நியமனம் செய்தார்கள். எப்படி நியமனம் செய்தார்கள் என்றால், உங்களுக்கு தரப்பட்டிருக்கும் டிக்கட்களை நீங்கள் விற்றுத் தராமல் இருந்தால் உங்களுக்கு சம்பளம் கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையை இந்த சபையில் சொல்லவில்லை என்றால் வேறு யாரிடம் போய் இதைச் சொல்வது? ஆகவே இதுபற்றியும் நல்லமுறையில் கவனித்து இதற்கு ஒரு முடிவு காணவேண்டுமென்றும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நம் சர்க்கார் நாட்டு மக்களுக்காக எவ்வளவோ செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். இந்த நாட்டின் முதுகெலும்பாக இரண்டு ஸ்தாபனங்கள் உள்ளன. ஒன்று விவசாயிகள்; இன்னொன்று என்.ஜீ.ஓ. க்கள். நம் சர்க்கார் எவ்வளவோ அதிகாரிகளுக்கு 58 வயது வரையில் சர்க்கார் வேலையில் இருக்க இடம் கொடுத்திருக்கிறது. அதேபோன்று சர்க்காரில் வேலை செய்யும் என்.ஜீ.ஓ. க்களுக்கும் 58 வயது வரையில் வேலை செய்வதற்கு இடம் தருவது உசிதமாக இருக்காதா என்பதையும் நல்லமுறையில் பரிசீலனை செய்து நல்லதொரு முடிவு கட்டவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில் திரு. எம். எஸ். மணி அவர்கள் சொன்னதுபோல் எங்கள் மாவட்டத்திலும், விவசாயிகள் இதே மாதத்தில் சூடு அடித்தும், அறுத்தும் கூலி வாங்கி வருகிறார்கள். எவ்வளவோ லாரிக் கணக்காக நெல் கள்ளத்தனமாகப் போய்க் கொண்டிருக்கும்போது சூடு அடித்து, நெல் அறுவடை செய்து அதற்காக கூலியாக நெல்லை



8th March 1966] [திரு. ஏ. சிதம்பரநாத நாடார்]

வாங்கிக் கொண்டு போகும்போது அதைத் தடுத்து நிறுத்தி கொண்டு போகக் கூடாது என்று சொல்லும்போது மிகவும் மனவேதனையாக இருக்கிறது. என் தொகுதியைப் பொறுத்த வரையில் அத்தனை பேர்களும் அறுவடைக்காரர்கள். மெஜாரிட்டியும் அவர்கள்தான். அவர்களுக்கு இப்படிப்பட்ட வேதனை வரும்போது வருகிற தேர்தலில் நான் அவர்களிடம் வோட்டு கேட்கப் போகும்போது அவர்கள் அழகாகச் சொல்வார்கள்; 'அப்பனே, அழகான வார்த்தை; உனக்கு வோட்டு தரவேண்டியதுதான்' என்று சொல்வார்கள். ஆகவே இப்போதுள்ள நிலை மாற வேண்டும். ஒரு பக்கத்தில் லாரி லாரியாகப் போய்க் கொண்டிருக்கிறது. திரு. எம். எஸ். மணி அவர்கள் கூறியதுமாதிரி நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் கூலியாகக் கிடைத்த ஒரு படி நெல்லை கொண்டு போகும்போது அதைத் தடுத்து நிறுத்தி போகக் கூடாது என்று சொல்கிறார்கள். அப்படி அதிகாரிகள் சொல்லும் போது மனவேதனை ஏற்படாமல் என்னதான் ஏற்படும்? ஆகவே இதற்கும் ஒரு முடிவு கட்டவேண்டும் சர்க்கார். அதோடு இதை நாங்கள் செய்யவில்லை; உங்கள் சர்க்கார்தான் செய்கிறது என்று சொல்கிறார்கள். அதுதான் பெரும் வேதனை. காங்கிரஸ் சர்க்கார் இந்த நாட்டு மக்கள் சுபிட்சமாக வாழவேண்டுமென்று என்ன என்னவோ காரியங்களை எல்லாம் செய்ய வேண்டுமென்று ஆசைப்படும்போது இப்படிப்பட்ட அதிகாரிகள் வாயிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகள் வரும்போது நானும் நீங்களும் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்களே முடிவு கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல்; சில பஸ் ரூட்கள் கொடுக்கிறார்கள். கொடுத்தவர்களுக்கே திரும்பத் திரும்பக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் எல்லோரும் சமத்துவமாக வாழவேண்டும். சோஷலிஸம் இந்த நாட்டில் பரவ வேண்டும் என்று சொல்வதை நான் வரவேற்கிறேன். ஆனால், கொடுத்தவர்களுக்கே திரும்பத் திரும்ப பஸ் ரூட்கள் கொடுத்தால் என்ன அர்த்தம் இருக்கிறது? இது ஒரு மாவட்டத்தில் இல்லை. இது எல்லா மாவட்டங்களிலும் காணப்படுவதைப் பார்த்து வருகிறேன், நாஷனலைஸ் செய்யுங்கள். அதை வரவேற்கிறேன். இல்லாவிடில் கொடுத்தால் எல்லோருக்கும் கொடுங்கள். சிதம்பரநாதன் கேட்கிறான் என்று நினைக்காதீர்கள். எனக்கு அதன் தேவையே கிடையாது, அதற்கு அவசியமுமில்லை கொடுத்தால் எல்லோருக்கும் பொருத்தமான முறையில்; எல்லோரும் வரவேற்கத்தக்க முறையில் கொடுங்கள். அதற்கு நான் சம்மதிக்கிறேன்.

அடுத்தாற்போல் எங்கள் ஊரில் எங்கள் பகுதியில் வயோதிகர்களுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் பலருக்கு கிடைக்கவில்லை. ஆகவே அவர்களுக்கு இந்த வயோதிகர் பென்ஷன் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே காம்பவுண்டில் டைரக்டர் ஆஃப் ட்ரஷரீஸ் ஆபீஸ் இருக்கிறது. இது 1961-ல் ஸ்தாபிதமானது. அதற்கு ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமித்திருக்கிறார்கள். சாதாரணமாக, ஒரு ஸ்பெஷல்

ஆபிசரை நியமிப்பது ஒரு வருடத்திற்கு என்றுதான் நினைக்கிறேன். நான் நினைப்பது சரியானால் அதை வரவேற்கிறேன். இந்த ஸ்பெஷல் ஆபீசர் நான்கு வருட காலமாக அங்கிருந்தும் அந்த ஆபீசில் எந்தவிதமான முற்போக்கான காரியங்களும் செய்ததாகத் தெரியவில்லை. அதே சமயத்தில் அந்த ஸ்பெஷல் ஆபீசர் தன் காரியங்களில் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார். அதேபோல் தன் கீழ் வேலை பார்த்துவரும் அத்தனை பேர்களும் சந்தோஷமாக வாழவேண்டும், அதற்காக நாம் பாடுபடவேண்டும் என்ற நல்லெண்ணம் அவர்களுக்கு இருக்கிறதா என்று பார்த்தால் அப்படிப்பட்ட எண்ணம் இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. நல்ல முறையில் நம் சர்க்கார். காரியங்களை செய்து வரும்போது இப்படிப்பட்ட அதிகாரிகள் அவற்றிற்கு இடைஞ்சலாக, நந்தியாக—அதை அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன்—நந்திபோல் இருந்து கொண்டு நாட்டிற்கு நல்லது நடக்க இடைஞ்சலாக இருக்கிற அதிகாரிகளை கண்காணிக்கவேண்டும்.

கடைசியாக ஒரு வேண்டுகோள். மாவட்ட கலெக்டர் என்று சொல்லும்போது அவர் கவர்னர் பிரதிநிதி. கவர்னர் பிரதிநிதியாக வரும்போது கலெக்டர் எப்படியிருக்கவேண்டும் என்றால் நான் சொல்லாமலேயே மிக்க வயது வந்த, மிக்க அனுபவமுள்ள நம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கூடுதலான நான் ஒன்றும் சொல்லத் தேவையில்லை. நம் நாடு நல்லமுறையில் இருக்கவேண்டும். நம் நாட்டு மக்கள் நல்லமுறையில் வாழ வேண்டும் என்ற நல்லெண்ணம் உள்ள சிதம்பரநாதன் சொல்கிறேன்—அதற்கு செவி சாய்ப்பார்கள் என்ற எண்ணத்தோடு சொல்கிறேன்—கலெக்டராக நியமனம் செய்யப்படுகிறவர்கள் வயது வந்தவர்களாகவும், அனுபவம் உள்ளவர்களாகவும், நாட்டுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற அவா உள்ளவர்களாகவும், சொல்வதற்கு செவி சாய்க்கவேண்டும் என்ற நல்ல நோக்கம் உள்ளவர்களாகவும் பார்த்து நியமனம் செய்யப்படவேண்டுமென்று ஆண்டவன் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். திரு. எம். எஸ். மணி அவர்கள் அழகாக, க்ராஃபிக்காகச் சொன்னார்கள். என் மாவட்டத்திலும் ஒரு கலெக்டர் இருக்கிறார். அவரைப் பார்க்கவேண்டுமானால் நம் சீஃப் மினிஸ்ட்டர் அவர்களை ஐந்து நிமிடங்களில பார்த்து விடலாம்; ஆண்டவனை, சிவபெருமானை ஒரு நிமிடத்தில் பார்த்து விடலாம்; ஆனால் எங்கள் மாவட்ட கலெக்டரைப் பார்க்கவேண்டுமானால் நம் அமைச்சர்கள் நினைத்தாலும் நடக்காது. அவரை, வீட்டிற்கு போனாலும் காண முடியாது, எங்கே போனாலும் காண முடியாது. வீட்டில் போய் கேட்டால் ஐயா உறங்குகிறார் என்று சொல்லப்படும். அங்கு அவர் இரண்டு சமயல்காரர்களைப் போட்டிருக்கிறார். கலெக்டர் இருக்கிறாரா என்று கேட்டால் அவர்கள் 'புல் டாக்' விழுவது போல் விழுகிறார்கள். ஐயா இல்லை என்று பதில் வரும். இந்த சபையில் 'புல் டாக்' என்ற வார்த்தையை சிதம்பரநாதன் உபயோகிக்கிறாரே என்று அதை பின் வலிக்க சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இப்படி நாய்போல் எங்களைப் போன்றவர்கள் மீதே விழுகிறார்கள். சில தினங்களுக்கு முன்பு சட்டசபை





அங்கத்தினர்களிடமும், பாராளுமன்ற அங்கத்தினர்களிடமும் அதிகாரிகள் எப்படி நடக்கவேண்டுமென்பது தெள்ளத்தெளிய "இந்து" பத்திரிகையில் வெளி வந்திருந்தது. அதை அவர்களுக்கு அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் பார்த்து இனிமேலாவது அதிகாரிகள் ஒழுங்காக நடந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***புலவர் கா. கோவிந்தன்:** கனம் தலைவர் அவர்களே, இப்போது நடைபெறுகின்ற ஆட்சிமுறையில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பு மிகப் பெரிய அளவில் இருக்கிறது என்பதை நாட்டில் இருக்கின்ற மக்கள் அனைவரும் அறிவார்கள். உணவு உற்பத்தி—உணவு வினியோகம் என்றாலும் சரி, பஞ்சாயத்து நிர்வாகம் என்றாலும் சரி, எல்லாப் பொறுப்புகளும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இருக்கின்றன. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நல்லவர்களாக அமையவேண்டும்—நீண்ட நாட்களாக மாவட்டத்தில் இருக்கவேண்டும்—என்பதில் எங்களுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் எங்கள் வடார்க்காடு மாவட்டத்திலிருந்து நான் சட்டமன்றத்திற்கு வந்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன, இந்த நான்கு ஆண்டுகளில் நான்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களை பார்த்து இருக்கிறேன். சென்ற முறை நான் எங்கள் மாவட்டத்தில் ஆட்சித்தலைவராக இருந்தவரைப்பற்றி பாராட்டிப்பேசினேன். அவர் மாற்றப்பட்டார். நான் பாராட்டிப் பேசினேன் என்ற காரணத்திற்காகத்தான் மாற்றப்பட்டாரோ என்னவோ தெரியவில்லை. ஆனால் இப்போதுள்ளவரைப்பற்றியும் சொல்லுகின்றேன். இப்போதுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் நல்ல உற்சாகத்துடன் பாடுபட்டுவருகிறார். அவர்கள் எந்த வயதினராக இருக்கிறார் என்பதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நல்லமுறையில் பணியாற்றிவருகின்ற அதிகாரிகள் யாராக இருந்தாலும் அவர்களைப் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித்தலைவர்களைப்பற்றி ஆளும் கட்சியிலுள்ளவர்கள் குறை கூறுகிறார்கள் என்றால் அதை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று குறைபடும்போது அதை திட்டவட்டமாகத் தெரிவிக்கவேண்டும். அவ்விதம் நானும் பல முறை இங்கே திட்டவட்டமாக சில குறைகளை எடுத்துக்காட்டியிருக்கிறேன். ஆனால் ஆளும் கட்சிக்காரர்கள் அதிகாரிகளைப்பற்றி குறை கூறுகின்றதை எடுத்துக் கொண்டால் அதிகாரிகளிடத்தில் இவர்கள் சென்று, அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்பதை மறந்து, தாங்கள்தான் ஆட்சியில் இருப்பதாக எண்ணி அதிகாரிகளிடம் அணுகுகின்றார்கள். தாங்கள் சொல்வதை எப்படியாவது மாவட்ட ஆட்சித்தலைவர்கள் செய்தேயாகவேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். முன்பு ஒரு முறை கூட இங்கு சொல்லப்பட்டது, மாவட்ட அதிகாரிகள் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதைத்தான் செய்கிறார்கள் என்று. எதிர்க்கட்சிக்காரர்கள் அதிகாரிகளிடத்தில் சென்று நியாயமான, மக்களுக்குத் தேவை

யான காரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும் என்று உரிமையோடு கேட்கிறார்கள். அவர்களும் அதிலுள்ள நியாயத்தை உணர்ந்து செய்து முடிக்கிறார்கள். இதுதான் காரணமே தவிர வேறு எதுவும் இல்லை என்பதை நான் இந்த மன்றத்தில் திட்டவட்டமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதே சமயத்தில் அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறேன், "உங்களுக்கு ஏதாவது மாற்றம் ஆகிவிட்டால் ஆளும் கட்சியிலுள்ளவர்களைப் பிடித்து எப்படியாவது அங்கேயே இருப்பதற்கு வழி செய்து கொடுங்கள் என்று கேட்காதீர்கள். அப்படிக் கேட்டுவிட்டால் அவர்களுடைய தயவினால்தான் காரியம் நடந்தது என்ற நிலை வரும்போது உங்களை அவர்கள் எந்த அளவுக்கும் பயன்படுத்தப் பார்ப்பார்கள். ஆகவே நீங்களும் கொஞ்சம் கட்டுப்பாடோடு அவர்கள் தயவுக்கு போகாமல் இருக்கவேண்டும்" என்ற வேண்டுகோளை தங்கள் மூலமாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

மேலும், அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் தங்குகின்ற இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியில் காத்துக் கொண்டு நிற்கின்றார், மண்டல காங்கிரஸ் தலைவர் உள்ளே அமைச்சரோடு உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்க்கின்ற பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் மற்ற அதிகாரிகளிடத்திலும் மதிப்பு இருக்குமா என்பதை நாம் பார்க்கவேண்டும். இந்த நிலை மாறவேண்டும்.

அடுத்து, நிதி திரட்டுகின்ற பணியில் அதிகாரிகள் ஈடுபடுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இந்தப் பணி வந்து சேருகிறது. அவர் வருவாய்த் துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கிறார். இன்றையதினம் இந்த நிதி திரட்டும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டதின் காரணமாக அதிகாரிகளுடைய மதிப்பு அத்தனையும் இழந்திருக்கின்ற நிலையைப் பார்க்கிறோம். இந்த அளவுக்கு நீங்கள் வசூலித்தாக வேண்டும் என்கின்ற கட்டளை மேலிடத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வருகிறது. அவரிடம் கொடுப்பதற்கு என்னவிருக்கிறது? மாவட்ட ஆட்சித் தலைவர் கோட்டாட்சித் தலைவரிடம் கொடுக்கிறார்கள். அவர் தாசில்தாரை அழைத்துச் சொல்லுகிறார், தாசில்தார் என்ன செய்வார், அவர்களிடம் கொடுப்பதற்கு பொன்னும் பொருளுமா இருக்கிறது? பொதுமக்களிடத்தில் வந்து கேட்கிறார்கள். சாதாரணமாக என்ன நடக்கிறது? செக்ரட்டேரியட்டிலிருந்து ஒவ்வொரு நாளும் போனில் கேட்கிறார்கள், வடார்க்காடு மாவட்டத்தில் இன்று எவ்வளவு வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று. மாவட்ட ஆட்சித் தலைவர் கோட்டாட்சித் தலைவரிடம் கேட்கிறார், கோட்டாட்சித் தலைவர் தாசில்தாரை விரட்டுகிறார், இவ்விதம் விரட்டுகிற நேரத்தில், அவர் பொதுமக்களிடத்தில் வந்து பல்லிளித்து நிற்கின்ற நிலையை நாம் பார்க்கின்றோம். இந்த நிலை இருந்தால் எப்படி பொதுமக்களுக்கு அதிகாரிகளிடத்தில் மதிப்பு ஏற்பட முடியும்? இந்த நிலையை மாற்றி பொதுமக்களுக்கு அதிகாரிகளிடத்தில் மதிப்பு இருக்கும்படியான அளவில் வழிவகை செய்யவேண்டும் என்று





இந்த அரசை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட அளவில், கீழேயிருக்கின்ற அதிகாரிகளுக்கு அரசாங்கம் சொல்லுகின்ற பல ஏவல்களை செய்ய வேண்டியிருக்கிறது. அரசாங்கம் சொல்வதையும் கேட்க வேண்டும். அதே நேரத்தில் பொதுமக்களிடத்திலும் அவர்கள் நல்ல பெயர் எடுக்கவேண்டும். இவ்விதம் அவர்கள் படும் பாடு பெரும்பாடாக இருக்கிறது.

ஜமாபந்தி முறையை எடுத்துக்கொண்டால், நல்ல முறைதான். அதில் பொதுமக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. குறைகளைக் கேட்டுவிட்டு அங்கேயே சில உத்தரவுகளைப் போடுவதற்கு ஜமாபந்தி நடத்துகின்ற அதிகாரிக்கு தனி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவர்கள் பிறப்பிக்கின்ற உத்தரவுகள் ஓராண்டு காலத்திற்குள் நிறைவேற்றப் படுகின்றனவா என்று யாரும் பார்ப்பதில்லை. ஒவ்வொரு ஆண்டும் ஜமாபந்தி நடைபெறும்போது, மக்கள் ஒரே குறையைப் பற்றி பலமுறை தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே சென்ற ஆண்டு ஜமாபந்தி நடைபெற்ற போது என்னென்ன உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன, அவற்றில் என்னென்ன நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, நிறைவேற்றப்படாமல் இருந்தால் அதற்கு காரணம் என்ன என்பதை மறு ஆண்டு ஜமாபந்தி காலத்தில் பார்ப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஓனர்ஷிப் சர்டிபிகேட் கொடுப்பதில் கணக்குப்பிள்ளை அடங்கல் சிட்டா கொடுத்தால்தான் கொடுக்கப்படும் என்றிருக்கிறது. ஆனால் கணக்குப்பிள்ளையைக் கண்டுபிடிப்பது பெரும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே தாலுகா அளவில், தாசில்தார் ஒரு குறிப்பிட்ட நாளில் ஒவ்வொரு பிர்க்காவுக்குச் சென்று அங்கே கணக்குப்பிள்ளைகளையும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களையும் வைத்துக்கொண்டு, யார் யார் சர்டிபிகேட் கேட்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் ஓனர்ஷிப் சர்டிபிகேட் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அதிகாரிகளுக்கு அவர்களுடைய மேல் அதிகாரிகள் 'பேர்ஸனல் ஃபைல்' எழுதுகிறார்கள். கீழேயிருக்கின்ற அதிகாரி மேலேயிருக்கின்ற அதிகாரிக்கு வேறு ஏதாவது காரணங்களினால் விரோதமாக இருந்தால் அவர்கள் கீழேயிருக்கின்ற அதிகாரிகளின் ஃபைலில் விரோதமாக எழுதி வைத்துவிடுகிறார்கள். ஆனால் இவருக்கு முன்னால் இருந்த அதிகாரிகள் நல்ல கருத்துக்களை எழுதியிருக்கக்கூடும். ஆனால் இப்போது இவர் ஒரு குற்றச்சாட்டை எழுதி வைத்திருக்கக் கூடும். இதைமட்டும் அடிப்படையாக எடுத்துக்கொள்ளாமல் இவருக்கு முன்னால் பலர் கூறியிருக்கின்ற கருத்துக்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும். அதோடு மேல் அதிகாரிகள் இவ்வாறு தவறுதலாக எழுதும்போது இவ்வாறு எழுதுவதற்கு என்ன காரணம் என்பதைக் கேட்டு அறிந்து அதை ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்கவேண்டும். இவ்விதம் குறிப்பு எழுதுவது நல்லமுறையில் அமைவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[புலவர் கா. கோவிந்தன்] [8th March 1966

அடுத்து, பாலாறு பேசின் விஷயமாக, வடார்க்காடு மாவட்டம் என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை. பாலாற்றுப் பாய்ச்சலில் கடைகோடியில் இருப்பது செங்கற்பட்டு மாவட்டம், நமது முதலமைச்சர் அவர்களின் மாவட்டம். அங்குள்ள விவசாயிகள் பாலாற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு நல்லமுறையில் விவசாயம் செய்யவேண்டும் என்பதற்காக வடார்க்காடு மாவட்டத்திலுள்ளவர்கள்மட்டும் தண்ணீர் எடுக்கவேண்டுமென்றால் விலக்குச் சான்று வேண்டும் என்று கேட்கப்படுகிறார்கள். இதன் காரணமாக விவசாயிகள் எத்தனையோ தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். இதை அடியோடு விலக்க முடியவில்லையென்றால், விலக்கப்பட்ட ஊர்கள், பாதிக்கப்பட்ட ஊர்கள் எனப் பிரித்துள்ளது போல், பாதிக்கப்பட்ட ஊர்களின் நிலங்களையும், பாதிக்கப்பட்ட நிலங்கள் இன்னின்ன விலக்கப்பட்ட நிலங்கள் இன்னின்ன விலக்கப்பட்ட நிலங்கள் இன்னின்ன என்று கணக்கிட்டு கொடுத்துவிட்டால் எளிதாகப்போய்விடும். இதில் ஒரு தகராறு கூட இருக்கிறது. பெருமாத்தாங்கல் என்ற ஊரில் ஒரு கசம் இருந்து கொண்டிருந்தது, பின்னால் அது கைவிடப்பட்டு விட்டது. அந்தப் பகுதியில் ஒரு கிணறும் இருந்தது. நத்தம் நிலத்தில் கிணறு இருந்தது. கிணறு உள்ள நிலம் ஜாரி செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பதற்கு அடங்கல் சிட்டா கேட்கப்படுகிறது, ஆனால் நத்தத்திற்கு அடங்கல் சிட்டா கிடையாது. அதனால், அந்தக் கிணறுக்கு விலக்குச்சான்று கேட்கும் மனு தாலுக்கா அலுவலகத்துக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் பல முறை போய் வந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன, இதைத் தீர்ப்பதற்கான வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நில அடைமானம் செய்து கொடுக்கின்ற விஷயத்தில் அதிகமாக காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். தாசில்தாருக்கு இதற்கான நேரம் இல்லை. இரண்டாவது, பஞ்சாயத்திடம் இந்த நிலங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முறையாக 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் வைத்திருந்தாலும் கூட, அடைமானம் செய்து கொடுக்கப்படுவது மறுக்கப்படுகிறது. மூன்றாவதாக கர்ணம் குறுக்கே நிற்கிறார். இவ்வளவு நிலைமைகளும் இருந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலங்களை சீக்கிரமாக அடமானம் செய்து வைப்பதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டும். சில பட்டா நிலங்களில் பாதைகள் இருக்கின்றன. பாதையாக பயன்பட்டு வருகின்ற இந்த நிலங்களுக்கு வரியும் செலுத்தப்பட்டு வருகிறது தனிப்பட்ட நபர்களால். ஆனால் பாதைக்குரிய பணம் பெறாமல் இருக்கிறார்கள் இவர்கள். பல முறை இந்திந்த பாதைகள் பற்றிக் கூட இங்கே சொல்லியிருக் அடைமானம் செய்து வைப்பதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பாசனத் துறையிலே ஒரு கால்வாய் வெட்டவேண்டும் அல்லது ஒரு ஏரி மராமத்து ஆகவேண்டும் என்று சொன்னால், பாசனத்துறைக்கும் வருவாய்த் துறைக்கும் ஒரு



8th March 1966] [புலவர் கா. கோவிந்தன்]

தொடர்பு இருக்கிறது. இவர்கள் செய்யலாம் என்று சொன்னவுடனே கலெக்டருடைய கவுண்டர்-சிக்னேச்சர் தேவையாக இருக்கிறது. இந்த நிலையிலே படுகிற பாட்டைப்பற்றி ஓரே ஒரு உதாரணத்தைக் கூறிக்கொள்கிறேன். மாமண்டூர் ஏரியிலிருந்து வாழவந்தல் ஆயக்கட்டுக்கு ஒரு தனிக்கால்வாய் வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அந்த வேண்டுகோள் ஒப்புக் கொள்ளப்பட்டு, மதிப்பீடு சுமார் ரூ. 12,100 என்று மதிப்பிட்டு, 1955-ம் ஆண்டிலே விவசாயிகளிடத்திலே பாதிப் பணம் பங்குப் பணமாக வாங்கவேண்டுமென்று சொல்லி அவர்கள் 1955-லேயே ரூ. 6,050-ஐ கொடுத்துவிட்டார்கள். இதுவரையில் அந்த வேலை எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. நான் 1963-லே இதைப் பற்றி அரசாங்கத்திற்கு முறையிட்டுக்கொண்டேன். அதன்பயனாய் 27-4-1965-ல் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டிலே ஜீ.ஓ. 1406-லே ஒரு உத்தரவு போட்டார்கள். மதிப்பீடு 12,000 ரூபாயிலிருந்து 39,000 ரூபாயாக உயர்ந்து விட்டது.

' The Chief Engineer and the Collector are requested to pursue further action in the matter expeditiously and send a report within three months ''

என்று உத்திரவிடப்பட்டது. 39,000 ரூபாயில் 1/3 கண்ட்ரிப்யூஷன் வாங்கிக்கொண்டு அதை முடித்து விடவேண்டும், அதைப் பற்றி மூன்று மாதங்களில் ரிப்போர்ட் அனுப்பவேண்டும் என்று 1965, ஏப்ரலில் உத்திரவு போட்டு விட்டார்கள். இது வரையிலும் அது கவுண்டர்-சிக்னேச்சர் கூட ஆகவில்லை. அதற்குப் பிறகு எப்போது அட்மினிஸ்ட்ரேடிவ் சாங்ஷன் ஆகி எப்போது முடியும் என்று தெரியவில்லை. இப்போதே 12,000 ரூபாய் எஸ்டிமேட்டாக இருந்தது 39,000 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. மக்கள் 6,500 ரூபாய் கட்டியது போக 7,000 ரூபாயை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக எடுத்துச் செய்யவேண்டுமென்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. அ. ஆறுமுகம்**: கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்புக்குரிய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மான்யக்கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஜில்லாதோறும் கலெக்டர் அவர்கள் வாரத்திலே ஒரு நாள் ஆஃபீஸிலேயே இருந்துகொண்டு ஜில்லாவிலுள்ள பொது மக்களுடைய பிரச்னைகளையும், குறைகளையும் கேட்க, எல்லா அதிகாரிகளையும், குறிப்பாக ரெவின்யூ அதிகாரிகளையும் மற்றவர்களையும் வரவழைத்து பிரச்னைகளைத் தீர்க்கும் முறையில் நல்லதொரு சேவை செய்யும் முறையில் ஒரு ஏற்பாட்டைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக நான் அமைச்சர் அவையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல, டிவிஷனல் ஹெட்க்வார்ட்டர்சிலும் டெபுடி கலெக்டர் அவர்கள் ஒரு நாள் அங்கிருந்து அந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய குறைபாடுகளைத் தீர்க்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் நல்ல பலன்

தந்திருக்கிறது. அதே நிலையில் தாலுகா தலைநகரிலேயும் அத்தகைய ஒரு ஏற்பாட்டை ஏற்படுத்தினால் அந்தப் பகுதி ஏழை மக்களுடைய பிரச்னைகளும் தீரும்.

பஞ்சம தரிசு நிலங்களையும், அடைமானத்திற்கு லாயக்கான தரிசு நிலங்களையும் பட்டா செய்து கொடுக்க சர்க்கார் மிக மிக அக்கறையோடு கண்ணும் கருத்துமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். பல தாலுக்காக்களில் தனியாக அடைமான டெபுடி தாசில்தார் போட்டு பொது மக்கள், ஏழைகள், ஹரிஜனங்கள் ஆகியவர்களுடைய குறைபாடுகளை, வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில் சர்க்கார் பணிபுரிந்து வருகிறது. அதையும் நான் பாராட்டிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறிய விவசாயிகளுக்கும் மற்ற ஏழை விவசாயிகளுக்கும் சுலபமாக அவர்களுக்கு கடன் வசதி கொடுத்து, விவசாயத்தை அபிவிருத்தி செய்கிற வகையிலே, உணவு உற்பத்தியைப் பெருக்குகிற வகையிலே சர்க்காரிலே கடன் வசதி செய்திருக்கிறார்கள். அந்த நிலையிலே இப்போது யூனியன்வாரியாகக் கடன் வசதி பெற நல்ல வசதி ஏற்பட்டிருக்கிறது. அதற்காகவும் சர்க்காரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக ஏழை எளிய விவசாயிகள், 5 ஏக்கர்களுக்குமேல் இல்லாதவர்கள், சுலபமாகக் கடன் வசதி பெற வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜன்ங்களுக்கும், ஏழைகளுக்கும் இனமாக அடைமானம் செய்யப்படும் நிலத்தில் பல வருஷமாக உழுது பயிரிட்டு வந்தும், பக்கத்தில் உள்ள நிலங்களில் அடிப்படையில் மதிப்பு இல்லை, ஸால்வென்ஸி சரியாக இல்லை என்று சொல்லி, நல்ல முறையில் அவர்கள் பயிரிட்டு வந்தாலும், அதையே பிழைப்பாக வைத்துக்கொண்டிருக்கிறவர்களாக இருந்தாலும், கோடிக்கணக்கான ரூபாய் கடன் கொடுத்து விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்று திட்டம் இருந்தாலும், ஸால்வென்ஸி இல்லை என்ற காரணத்திற்காக, நேர்மையான, நல்ல சிறந்த விவசாயிகளாக இருக்கிறவர்கள் இந்த நன்மையை அடைய முடியாத நிலையில் இருக்கிறார்கள். இப்படி இப்படி கடன் கொடுக்கவேண்டும் என்று இருக்கிற கண்டிஷன்களையெல்லாம் அதிகாரிகள் ஏற்றுக்கொண்டு கொடுக்காவிட்டால், பிறகு விவசாயியால் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால், எந்த அதிகாரி கொடுத்தாரோ, யார் சாங்ஷன் செய்தார்களோ அவர்களே திருப்பிக் கட்டவேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறது. அதனால் பல நல்ல அதிகாரிகள், ஏழை மக்கள் மீது பரிதாபம் கொள்ளும் அதிகாரிகள் கூட உதவி செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அத்தகைய உதவிகளைச் செய்ய முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே என்னுடைய யோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம் நாடு விவசாய நாடு. அதிக அளவில் நிலம் வைத்திருக்கிறவர்கள் ஒரு சிலர். இரண்டு ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் வைத்திருக்கிறவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். இரண்டாவது உலக யுத்தம் நடந்த நேரத்திலேயெல்லாம் விவசாயத் துறையை அதிகமாக அபிவிருத்தி செய்ய





நம் நாட்டிலே மான்யமாகக்கூட ரூபாய் 1,000, 2,000, 5,000 என்று கிணறு வெட்டவும் மற்ற வேலைகளுக்காகவும் கொடுத்திருக்கிறோம். சர்க்காரிலே மான்யமாகவோ, கடனாகவோ 5 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு மாடு இல்லை என்றாலும், கிணறு இல்லை என்றாலும் தாராளமாக, கடனாக இல்லாவிட்டாலும் மான்யமாகக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னே பேசிய கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்களெல்லாம், அமைச்சர்கள் அடிக்கடி ஜில்லாக்களுக்கு வருகிறார்கள், அதனால் ஜில்லாக்களில் நிர்வாகம் சரிவர நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அவர்களெல்லாம் மனச்சாட்சிக்கு விரோதமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்களிலேகூட ஒரு சிலர் அமைச்சர்கள் வரும்போது அமைச்சர்களைப் பார்க்கிறார்கள். எங்களைப் போன்றவர்களும் அமைச்சர்களிடத்தில், என்ன என்ன குறைகள் இருக்கின்றன, ஆகாத காரியங்கள், நடைபெறாத காரியங்கள், கவனிக்கப்படாத காரியங்கள், மிக மிக முக்கியமான பிரச்னைகள், அத்தனையும் எடுத்துச் சொல்லுகிறோம். எந்த அமைச்சர் வருகிறாரோ, எந்த எந்த இலாகா பொறுப்பை ஏற்றுக் கொடிருக்கிறார்களோ, அந்த இலாகாக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் வரும் நேரத்தில், அமைச்சர்கள் அந்த வேலையைச் செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள். அப்போதே அவர்கள் சொல்லுகிறார்கள், வேலையும் நடக்கிறது. நம் சர்க்கார் மக்களுடைய குறைகளைப் போக்கத் தானே இருக்கிறது அமைச்சர்கள் தலைமையின் கிழ்? இதை ஏன் வேண்டாமென்று சொல்லுகிறார்கள் என்று புரியவில்லை. அங்கத்தினர்களுடைய பகுதிகளுக்கு அடிக்கடி வரவேண்டும். அமைச்சர்கள் வருகிற காரணத்தினால் அதிகாரிகள் வருகிற சூழ்நிலை இருக்கிறது. அதிகாரிகள் தங்களுடைய பொறுப்பின் காரணமாகப் பலமுறை வருகிறார்கள். இருந்தாலும் அமைச்சர்கள் வருகிற காரணத்தினால், இலாகா சம்பந்தப்பட்ட பெரிய அதிகாரிகள் வருகிற காரணத்தினால் பல சிக்கல்களுக்கு முடிவு ஏற்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு உதாரணமாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். செங்கம் பக்கத்தில் செய்யாறு ஓடுகிறது. அந்த ஆற்றின் மீது பாலம் கட்டப்படாத சூழ்நிலை இருந்தது. அமைச்சர்கள் அந்த வழியாகச் செல்லும் போது ஆற்றின் குறுக்கே பாலம் கட்டினால் நன்றாக இருக்கும் என்று சொன்னபோது, இப்போது தேசிய நெருக்கடி இருந்தும் 3½ லட்சம் ரூபாயில் பாலம் கட்ட உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

திருவண்ணாமலையில் கல்லூரி இல்லாத நிலை இருக்கிறது. கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள்கூட ஏற்றுக்கொள்வார்கள், எங்கள் மாவட்டத்தில் செங்கம் தாலுகா பின்தங்கிய பகுதி என்று. பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரே ஒரு உயர்நிலைப் பள்ளிதான் இருந்தது. அந்தப் பள்ளியில் படித்தவன்தான் நான். இன்றைக்கு 13 உயர்நிலைப் பள்ளிகள் செங்கம் தாலுகாவில் இருக்கின்றன என்றால்,

நாம் கல்வித் துறையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்று சொல்லத் தேவையில்லை. திருவண்ணாமலையில் கல்லூரி இல்லை என்று கூறிக்கொண்டிருந்தோம். அங்கு கல்லூரி வேண்டுமென்று பெரும்பாடு பட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போதுகூட அவசியம் வரப் போகிறது என்று மனமுவந்து சொன்னார்கள். ஆறு கல்லூரிகள் வட ஆற்காடு மாவட்டத்தில் என்று எழுதியிருக்கிறார்கள். திருவண்ணாமலை என்று குறிப்பிடவில்லை. எனக்குத் தெரியும் திருவண்ணாமலையில்தான் என்று. எங்களுக்கு ஒரு கல்லூரி கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது வருவதற்கு வேண்டிய ஒத்தாசை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ காங்கிரஸ்காரர்களாக இருக்கிற நாங்கள் முயற்சி செய்கிறோம், கல்லூரி வந்து விட்டது என்று யோசித்துப் பார்க்காமல்—நாங்கள் கொண்டு வந்தோம் என்பதால் எங்களுக்கு மாத்திரம் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்—நாங்கள் முயற்சி செய்கிறோம் என்பதற்காக, ஆண்களுக்காக கல்லூரி வேண்டுமென்ற நேரத்தில், அந்தப் பகுதியிலே இருக்கிற அங்கத்தினர் அவர்கள், நாங்கள் ஒரு பெண்கள் கல்லூரி கொண்டுவர முயற்சி செய்து கொண்டிருக்கிறோம், அது குறித்து கனம் முதல் அமைச்சரைப் பார்த்திருக்கிறோம் என்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதாகப் பார்த்தேன்.

Sri P. U. SHANMUGAM: On a point of personal explanation,
10-30 am. Sir.

An. Hon. Member: The hon. Member is not speaking from his allotted seat.

Sri P. U. SHANMUGAM: I request the Hon. Speaker to permit me to speak from this seat.

Mr. SPEAKER: It is a breach of the Rules.

(The hon. Member Sri P. U. Shanmugam then occupied his allotted seat.)

திரு. ப. உ. சண்முகம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்பொழுது நான் பொதுக் கூட்டத்தில் ஏதோ பேசினேன் என்று தவறான செய்தியைக் கூறுகிறார். பொதுக் கூட்டத்தில் பேசியதை சட்ட மன்றத்தில் குறிப்பிடுவது மரபு அல்ல. மேலும், நானும் அப்படிக் குறிப்பிடவில்லை. சந்தோஷமா, இல்லையா என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அதற்குப் பிறகுதான் நான் எழுந்து மெத்த மகிழ்ச்சி, நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்று சொன்னேன். நான் துவக்கத்திலேயே எழுந்து அம்மாதிரி சொல்லவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் சொல்லிய பிறகுதான் நான் எழுந்து இம்மாதிரி சொன்னேன்.

Mr. SPEAKER: Let the hon. Member come to the next point.





திரு. அ. ஆறுமுகம்: கனம் அங்கத்தினர் திரு. மணி அவர்கள் பேசும்பொழுது ஆளும் கட்சி அங்கத்தினர்கள் கலெக்டர் அலுவலகத்திலும், மற்ற இடங்களிலும் சென்று அவர்களுடைய அலுவல்களில் தலையிடுகிறார்கள், அதனால்தான் காலதாமதம் ஆகிறது என்றெல்லாம் சொன்னார்கள். எனக்கு நன்றாகத் தெரியும். நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. என்னுடைய மாவட்டத்தில் கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எங்களைவிட அதிகமாக அதிகாரிகள் மத்தியில் சென்று ஜாக்கிரதையாக இருங்கள் என்று பயமுறுத்தி அவர்களிடமிருந்து வேலை வாங்குகிறார்கள். இது எனக்கு நன்றாகத் தெரியும். இன்னொன்றும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏதோ கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சட்டமன்றத்தில் வந்து இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, அதிகாரிகளும், அரசாங்கமும் தப்பு செய்துவிட்டார்கள் என்றெல்லாம் பேசியுள்ளார்கள். தயவுசெய்து பெரிய மனது வைத்து, சர்க்கார் அதற்கெல்லாம் இடம் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டில் மொழியின் பெயரால் திருவண்ணாமலையில் கிளர்ச்சி ஏற்பட்டது. அங்கு மாணவர்களின் பெயரால் நடந்த இந்தி கிளர்ச்சிப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களில் முதலிலிருந்து கடைசி வரையிலும் ஒரு மாணவரும் இல்லை. அங்கு பங்கு எடுத்துக் கொண்டவர்கள், கலவரத்தில் ஈடுபட்டவர்கள், பலவகையான குற்றத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்.

திரு. ப. உ. சண்முகம்: தப்பு, தப்பு, ஆன் எ பாயிண்டு ஆஃப் ஆர்டர். திருவண்ணாமலை வழக்கு நீதி மன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது. வழக்கு இன்னும் முடியவில்லை. அதைப்பற்றி இந்த மன்றத்தில் குறிப்பிடுவது முறையாகுமா என்பதற்கு தாங்கள் தீர்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. அ. ஆறுமுகம்: அது எனக்குத் தெரியும் . . .

(At this stage, the Hon. Speaker sounded the going and called up on the hon. Member Sri Chiranjeevulu Naidu to speak.)

* Sri C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, I would like to say a few words on the Demands that are now before the House for discussion. District Administration is the most important part of the entire administration of the Madras State and so district administration should be properly geared and toned up. We cannot tone up the administration unless the various orders and rules framed under the various Acts are properly implemented. We have appointed District Revenue Officers to attend to revenue matters at the district level, and the Collectors have been entrusted with the work which mostly related to developmental activities at the panchayat and panchayat union level. It may be of use to the villagers if the Collector is directly interested in the developmental activities.

Sir, we have been repeatedly making representations about the delays in effecting patta transfers and in disposing of petitions that have been made by the ryots. Time and again the ryots are representing their difficulties at the time of *jamabandi* and year after year petitions have been presented to the officers concerned but no action has been taken in the matter at the district level. So, I request that necessary instructions may be issued to them to see that the ryots do not run after the concerned papers to the Office and unnecessarily spend money for even small things and also waste their energy. The Government should also try to evolve certain schemes whereby small matters like patta transfer, maintenance of land registers are made up-to-date, and they could be attended to expeditiously. I hope the Government will seriously consider this matter and take necessary action in the matter.

Regarding land acquisition, we have been seeing that there has been land acquisition indiscriminately though the Constitution guarantees property rights for every citizen. We may have faith in a Socialistic pattern of society but that does not mean that we should deprive and take away the right of the landlord. When the Government acquire a particular land, they are lethargic and they are not sympathetic towards the landlord in the matter of fixing and paying compensation. For instance, if a ryot owns five acres of land and a well, the Government or the officers take pleasure in acquiring only 3½ acres of land, leaving out the well and the remaining 1½ acres to the ryot to suffer. Also, there is delay in paying compensation. Sir, to-day there are several ryots who are mainly depending on the land and if their land is acquired by the Government and the compensation is not paid to them even after three or four years, they are put to a lot of difficulties. This is a serious matter which the Government should consider and see that the compensation is paid to them early so that they may seek other avocations or avenues for their livelihood.

Sir, fragmentation of land is a serious bottleneck to the food production. When partition takes place in a family having lands, the fragmentation of land is noticed. So, in such cases, the Government may kindly consider whether it would be possible to bring forward legislation to consolidate such holdings.

Regarding loans and advances sanctioned by the Government, I would suggest to the Government that they might bring all the agencies giving loans to the ryots under one Central agency. Very often, there is a tendency on the part of the ryots to get loans like taccavi loans and loans given by the co-operative societies. So, I request the Government to kindly consider this matter and see that all these loans are handled by one central agency so that the ryots may not take too many loans and thus get themselves indebted.

Regarding religious endowments, I would like to say that the service conditions of temple servants, either in-door or out-door, are horrible. They are being paid the rates of allowance that were paid prior to 1940. That aspect as well as the service conditions



of 'paricharakas' may be kindly looked into. We must first satisfy them and see to their welfare.

The Information and Publicity Department has been doing useful work and it may be given all assistance to see that proper publicity materials are supplied. Sufficient funds may be provided. Once Sir Archibald Nye referred to lack of publicity in this State. Though we have achieved progress in several directions since then, yet the publicity should be made to reach the villagers and the rural folk should be made aware of our achievements under the Plans. That aspect may be kindly looked into and sufficient funds provided for the same.

Coming to my constituency, Tiruttani is a territory transferred from Andhra Pradesh. There are still several problems to be solved. Of course the settlement authorities are trying to solve some problems. It is an ex-zamin area. There are several cases of misclassification of lands. Some lands have been misclassified as "Assessed Waste" or "Assessed Waste Dry". The settlement authorities take some time in disposing of the papers. Such of those ryots who could not take the proper form and who did not adopt the proper procedure and represent the matter to the authorities are denied patta facilities. Government should order the creation of the post of a suitable officer to see that such misclassifications of land are rectified and pattas issued to people who have been enjoying the land and who had the right.

Regarding the roads that have been formed in the Panchayat and Panchayat Union areas, still they are not being sub-divided. Because sub-division has not been done and the roads classified as "road poramboke", we see encroachments. The roads formed by Panchayat Unions may be sub-divided and they may be classified as "road porambokes". Several wells have been sunk by ryots and there has been misclassification there also. It is said that the Zamindar might have sunk the well. No zamindar did so. It was the ryot who sunk the well and to avoid land revenue, they have classified as "well poramboke". Such of those wells which have been classified as "well poramboke" may be taken into consideration and the concerned ryots made the owners of the wells so that they could get electric connection for their wells, because the Electricity Board authorities are not at persent giving connection for "well porambokes".

Regarding sinking of wells, loans were granted under the 'New Well Subsidy Scheme'. In Tirutanni area, Government has given Rs. 500 for sinking a well. Since the revenue authorities have not taken proper action in time to send up completion reports recoveries are being made to-day from ryots with penal interest In such cases Government may order the Collector to inspect the wells, wherever they are in existence, and where electric pumpsets have been connected and are working. Such cases may be given the benefit and subsidy may be granted to the concerned ryots.

With these words I conclude my speech, Sir.

[8th March 1966

*** திரு. து. ப. அழகமுத்து :** கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம், மாவட்ட நிர்வாகம், பென்ஷன், லோன்ஸ் முதலிய ஐந்து இனங்களுக்காக கிட்டத்தட்ட ரூ. 52 கோடி மானியக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எங்கள் பக்கத்திலிருந்து கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஒட்டி, என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாம் திட்டமிட்டு நடத்துகின்ற அபிவிருத்தி வேலைகளில், மாவட்ட கலெக்டர்களுக்கும், அதிகாரிகளுக்கும் முழுப் பொறுப்பு இருக்கிறது. திட்ட வேலைகளை இன்றைக்கு முடித்துத் தர வேண்டிய பொறுப்பு அவர்களிடம் தான் இருக்கிறது. ஆனால், அந்த வேலைகளைக் கண்காணிக்க வேண்டிய நேரம் அவர்களுக்கு இருக்கிறதா என்பதுதான் இப்பொழுது உள்ள பிரச்சினை. எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டதுபோல, இன்றைக்கு மாவட்ட கலெக்டர்களுக்கும், ஆர்.டி.ஓ.-களுக்கும், மந்திரிகள் வந்தால் அவர்களை வரவேற்பதற்கும், மாவட்டங்களிலே கண்காட்சிகளை நடத்துவதற்கும், காற்கறித் தோட்டம் போடுவதற்கும், அதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அவற்றிலே விதைகள் நடுவதற்கும், பின்னால் காய்கறிகளைப் பறித்து விற்க ஏற்பாடு செய்வதற்கும், இப்படிப்பட்ட காரியங்களில்தான் அவர்கள் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதோடு கூட, மாதந்தோறும் அதிகாரிகள் மீட்டிங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கும், அதற்கான காரியங்களைச் செய்வதற்கும் மட்டுமே அவர்களுடைய நேரம் எல்லாம் சரியாக இருக்கிறது. அப்படி இருக்கும்போது திட்ட வேலைகளை கவனிக்க அவர்களுக்கு நேரம் எங்கு இருக்கிறது? காய்கறித் தோட்டம் பயிரிடுகிறார்கள். இந்தத் தோட்டம் பயிரிடுவது பயன் அளிக்கும் முறையில் இருக்கிறதா என்றால், இல்லை. கலெக்டர் ஆபீஸ் காம்பவுண்டில், கட்டாந்தரையை உழுது பயிரிடுகிறோம் என்று பணத்தை பாழாக்கிக்கொண்டிருக்கிறார்கள். என் பகுதியைச் சேர்ந்த அந்தநல்லூர், போதாவூர் என்கின்ற இடத்தில் கிட்டத்தட்ட 100 ஏக்கர் புறம்போக்கை எடுத்து கூட்டுறவு முறையில் காய்கறித் தோட்டம் போட்டு உற்பத்தி செய்வதென்று, விவசாயிகளுடைய பொறுப்பில் ஒப்புவித்து, அந்த நிலத்தை அவர்களுக்கே கொடுக்கிறோம் என்று கூறி, அதற்கு ஒவ்வொரு விவசாயினிடத்திலும், 100 ரூபாய் வீதம், ஏறத்தாழ ரூ. 20,000 வசூலித்து, அந்தப் பணத்தை என்ன செய்தார்கள் என்றே தெரியவில்லை. அந்த காய்கறித் தோட்டம் பயன் இல்லாத முறையில் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் பயன் அளிக்கும் முறையில் இல்லை.

உணவு உற்பத்திப் பெருக்கம் இன்றையதினம் மாவட்ட நிர்வாகிகளிடம் இருக்கிறது. உற்பத்தி பெருக்கத்தை எந்த முறையில் செய்கிறார்கள் என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். எங்கள் துறையூரில் 1961-ல் எக்ஸ்-சர்வீஸ் மென்களுக்காகவும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அப்பொழுது இருந்த மாவட்ட கலெக்டர்—இப்பொழுது இங்கே விற்றிருக்கிறார்—கொஞ்சம் நிலங்களை கொடுத்தார்கள், டெம்பரரி பட்டா கொடுக்கப்பட்டது. அஸைன்மென்ட் ஆகவில்லை. அந்த விவசாயிகள் உழுது பயிர் செய்தார்கள். கம்பு விதைத்துப்



8th March 1966] *[திரு. து. ப. அழகமுத்து]*

பயிரிட்டார்கள். கம்பு கூட ஒரு கதிர் ஒன்றரை அடி நீளம் இருந்து, அதை போட்டோ எடுத்து, பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தார்கள். ஆனால், அந்த நிலம் 1965 வரையில் அஸைன்மெண்ட் செய்து கொடுக்கப் படவில்லை. அவை ஜமீன் நிலங்களாக இருப்பதால், 'டேகன் ஓவர்' செய்த பிறகுதான் அஸைன்மெண்ட் செய்து கொடுக்க முடியும் என்று கூறுகிறார்கள். ஆனால் அதற்கான நடவடிக்கைகள் நடந்து கொண்டு இருக்கின்றனவா என்றால், இல்லை. சர்வே நடத்தப்பட்டதாகக் கூறினார்கள். சர்வே நடத்தப் பட்டதா என்று உரியவர்களை நானே சென்று தேடிப் பார்க்கும்போது சர்வே நடந்தது பற்றிய ஃபைலே காணோம் என்று கூறுகிறார்கள். அப்பாவி ஏழைகள், இவர்களை நம்பிச் செலவு செய்து விட்டுத் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். தற்போது விவசாய அபிவிருத்திக்குச் சர்க்கார் கடன் கொடுக்கிறார்கள். கடனை வாங்கி கிணறு வெட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள் இந்த ஏழைகள். ஏனென்றால் அவர்களுக்கு டெம்பரவரி பட்டாவாக இருப்பதால், கடன் பணம் கொடுக்க மறுக்கிறார்கள். இது பின்னால் எந்த நிலையில் கொண்டுபோய் விடும் என்று கூற முடியாது. இந்த அளவில் மாவட்ட நிர்வாகம் இருக்கிறது.

இது வரையில் மந்திரிகள் தான் பிரசாரம் செய்து வந்தார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் மாவட்ட அதிகாரிகளும் மந்திரிகளை மிஞ்சி விட்டார்கள். பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால்; இந்த மாவட்டக் கலெக்டர் இன்ன கருத்தைத் தெரிவித்தார், அந்த மாவட்டக் கலெக்டர் இன்ன கருத்தைச் சொன்னார் என்றுதான் பார்க்கிறோம். அதிலே எங்களுடைய மாவட்டக் கலெக்டர் முதலிடம் பெற்று இருக்கிறார்கள். அவர்களுடைய விளம்பரத்தைக் கண்டு நான் பொறாமைப்படவில்லை. ஆனால் எந்த அளவுக்குக் காரியங்கள் நடக்கின்றன, அந்த அளவுக்கு அதிகாரிகள் போக வேண்டிய அவசியம் இருக்கிறதா என்று தான் சிந்தித்துப்பார்க்க வேண்டும். நாளைக்கு அவர்களை காங்கிரஸ் டிக்கட்டிலே நிற்க வைத்தால் கூட, நன்றாக ஜெயித்து விடுவார்கள். அதை அமைச்சர் வேண்டுமானால் பரீட்சித்துப் பார்க்கலாம். அப்படிப்பட்ட நிலையில் மாவட்ட கலெக்டர்களுடைய நிர்வாகம் போய்க்கொண்டு இருக்கிறது. சாதாரணமாக மந்திரிகள் மாதத்திற்கு ஒரு முறை அல்லது வெளிநாடுகளுக்குச் சென்று வந்தால், பத்திரிகைக்காரர்களைக் கூப்பிட்டு, செய்திகள் சொல்லுவார்கள். ஆனால் இன்றைய தினம் கலெக்டர்கள் தினம் காலையில் பத்திரிகைப் பிரதிநிதிகளைச் சந்திக்கிறார்கள். நிர்வாகம் அந்த நிலையில் போய்க்கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் அபிவிருத்தி வேலைகள் எப்படி நடைபெறும் என்று சிந்தித்து பார்க்க வேண்டும்.

சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே அரிஜன் வெல்பேர் ஆபீசர் டிஸ்ட்ரிக்டுக்கு ஒருவர் இருப்பது போதாது என்று குறிப்பிடப் பட்டது. இப்பொழுது அரிசன நல இலாகாவில் மாவட்டங்களில் வேலை அதிகமாக இருந்து கொண்டிருப்பதால் அந்த இலாகாவை இரண்டாகப் பிரிந்தால்தான் அரிசனங்களுக்கு நிலம் ஒதுக்குவது

சம்பந்தமான காரியங்களைச் செய்யமுடியும். அந்தக் காரியத்தைச் செய்வதற்கு மாவட்ட அரிசன நல இலாகாவை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பதை மீண்டும் தான் வலியுறுத்திக் கூறிக் கொள்ளுகிறேன்.

மானியக் கோரிக்கையில் மிக அதிகமாக இருப்பது, கடன்களும் முன்பணமும் என்ற வகையில் 32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடன்கள் சரியாகக் கொடுக்கப்படுகின்றனவா என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. இந்தக் கடன்கள் பெரும்பாலும் வீடு கட்டுவதற்காகவும், அபிவிருத்திச் செலவுகளுக்காகவும் கொடுக்கப்படுகின்றன. ஆனால், வீடு கட்டும் திட்டங்கள் எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதைச் சர்க்கார் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து பார்க்கின்றபோது, அவ்வளவு சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை என்று தான் சொல்ல வேண்டும். குறிப்பாக, நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 100 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், 1965-ம் ஆண்டு வரை 56 லட்ச ரூபாய் தான் செலவு செய்திருக்கிறார்கள். மொத்தப் பணம் செலவழிக்கப்படவில்லை. நம்முடைய மாநிலத்தில் எல்லாத் திட்டங்களையும் மிக விரைவாக நிறைவேற்றி விட்டோம் என்று பெருமைப் பெற்றிருக்கிறோம் என்று கூறிக் கொள்ளுகிறார்கள். குறித்த அளவுக்கு மேல் அதிகம் செலவு செய்திருக்கிறோம் என்றும் பெருமைப்பட்டுக் கொள்ளுகிறார்கள். ஆனால், இந்தத் திட்டத்தை ஏன் பூரணமாக நிறைவேற்றவில்லை? ஏழை நெசவாளர்களுக்கு ஏன் அதிகமாக வீடு கட்டிக் கொடுக்கும் காரியத்தைச் செய்யவில்லை? என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

சர்க்கார் ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக மூன்றாவது திட்டத்தில் 500 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், செலவு செய்யப்பட்டிருப்பது பாதி அளவு தான். நம்முடைய சர்க்கார், அவர்களுக்கு மத்திய சர்க்காரைப் போல வீட்டு வாடகை அலவன்ஸ் ஐந்து ரூபாய் அதிகமாகக் கொடுக்கவில்லையென்றாலும் கூட, வீடு கட்டித் தரும் காரியத்தையாவது ஒழுங்காகச் செய்திருக்கக் கூடாதா? ஏன் இந்தக் காரியங்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டு போகிறார்கள்?

குறைந்த அளவு வருமானக்காரர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டமும் சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை. கிராமப் புறங்களில் இருக்கும் வீட்டுப் பற்றாக்குறை நிலைமையைப் போக்குவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்தத் திட்டங்களெல்லாம் மிக விரைவாக நிறைவேற்றப்படவேண்டும் என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் ஜில்லா நிர்வாகம் சம்பந்தமாக இரண்டொரு கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். ஜமாபந்தி முறை



யைப் பொறுத்த வரையில், வருஷம் ஒரு தடவை அதிகாரிகளும் மற்றுமுள்ள குடி மக்களும் கூடி பல்வேறு விஷயங்களைப்பற்றிப் பேசித் தீர்வு காண்பது என்பது பல வருஷங்களாக நடந்து வருகிற ஒரு முறையாகும். இவ்வளவு நாளாக ஜமாபந்தி அன்றைய தினமே விவசாயிகள் விண்ணப்பம் கொடுக்கலாம் என்று முறை இருந்தது. ஆனால், இப்பொழுது ஜமாபந்திக்கு ஒரு வாரத்திற்கு முன்னால் அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் தான் கவனிக்கப்படும், நேரடியாகக் கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்பானது நல்ல முறையில் எல்லோருக்கும் தெரியச் செய்ததற்குப் பின்னால், இந்த முறையை அமலுக்குக் கொண்டுவர முயற்சி எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அநேகமாக இப்பொழுது தாலுக்கா ஆபீசிலிருந்தும், கலெக்டர் ஆபீசிலிருந்தும் பொதுமக்களுக்காகப் பிறப்பிக்கப்படுகிற அறிவிப்புகள் கிராம அதிகாரிகள் மூலமாகத் தான் மக்களுக்குத் தெரியவேண்டும். கிராமங்களில் தண்டோரா போடுவதன் மூலமாகப் பொது மக்களுக்கு விஷயங்களைத் தெரிந்து கொள்வது வழக்கமாக இருந்து வரும் முறையாகும். ஆனால், இந்த ஜமாபந்தி முறையில் ஏற்பட்ட மாறுதலைக் குறித்து அறிவிப்பு தண்டோரா மூலம் கிராம மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. இதன் விளைவாக விவசாயிகளும் பொது மக்களும் தொல்லைக்கு ஆளாகிறார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் கொஞ்சம் நன்றாகக் கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்கள் நூற்றுக்கணக்கான தீர்மானங்களை நிறைவேற்றி அவ்வப்போது சர்க்காருக்கு அனுப்புகின்றன. ஆனால் எத்தனை தீர்மானங்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், குறிப்பிடத்தக்க தீர்மானங்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று பார்த்தால், அந்தத் தீர்மானத்தின் மீது முடியும், முடியாது என்று சர்க்கார் திட்டவட்டமாகச் சொல்லி, நடவடிக்கை எடுக்க சரியான முயற்சிகள் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கன்ஸல்டேடிவ் கமிட்டிகள் என்று மூன்று குழுக்கள் நடைபெறுகின்றன. அந்தக் குழுக்கள் கூட்டத்திலே இந்தத் தீர்மானங்களெல்லாம் அப்போதைக்கப்போது எடுத்து விளக்கப்படுகின்றன; விவாதிக்கப்படுகின்றன. அரசாங்கமும் நிலைமையை விளக்குகிறது.

**திரு. க. ர. நல்லசிவம்:** ஆனாலும் கூட, பல தீர்மானங்கள் போட்டு அனுப்பப்பட்டிருந்தும், ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் ஆனதற்குப் பிறகும் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலில் விசாரித்த போது, "சர்க்காரிடமிருந்து தெளிவான உத்தரவு வரவில்லை" என்று கூறப்படுகிறது. அப்படி ஏதாவது குறிப்பிட்ட தீர்மானங்களைச் சொல்லும்படி கேட்டால், நான் சொல்லத் தயாராயிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கடந்த இருபதாண்டுக் காலத்தில், ஜில்லா நிர்வாகம் எந்த அளவுக்கு வந்திருக்கிறது என்பதை நாம் கவனிக்க

வேண்டும். ஜில்லா கலெக்டர் காரியாலயத்தைப்பற்றிக்கூட நாம் அதிகமாகக் கவலைப்பட வேண்டியதில்லை. ஜில்லாக் கலெக்டரை உருவாக்கக்கூடிய முறையில் நாம் எங்கோ சென்று கொண்டிருக்கிறோம். கலெக்டர் என்ற பதவியைப் பொறுத்த வரையில், ஏதோ ஜமீந்தாரைப்போல் நாம் ஆக்கிவிட்டோமோ என்ற பயம் கூட ஏற்படுகிறது. அதைப் பொறுத்த வரையில் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஏனென்றால், ஆப்பிரிக்க நாட்டில் இருக்கும் சிறிய பகுதிகள் சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்டு ஆட்சியை மாற்றிவிடுவது போன்ற செயல்களில் ஈடுபடுவது போல ஜில்லாக் கலெக்டர் என்று நாம் வைத்துக்கொண்டிருக்கிறோமே அவர், திடீர் என்று ஜில்லா பூராவும் தன்னுடைய ஆட்சியில் வந்துவிட்டது என்று சொல்லக்கூடிய அளவிற்கு, ஜில்லா கலெக்டருக்கு நாம் மேலும் மேலும் அதிகாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோமோ என்ற அச்சம் உண்மையிலேயே இருக்கிறது. இந்தத் துறையைப் பொறுத்த வரையில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். தனிப்பட்ட அதிகாரி யாரையோ நான் குறிப்பாகச் சொல்லவில்லை. அவ்வளவு அதிகாரத்தை நாம் ஜில்லாக் கலெக்டருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் என்ற ஒன்று நடப்பதை நான் பார்க்கிறேன். மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களுக்கு உயர்ந்த ஸ்தானம் கொடுக்கப்பட்டு, அவருக்குக் கீழே உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு நாம் செயல்படுவதை நான் கௌரவமாகவே நினைக்கிறேன். ஆனால், ஜில்லாக் கலெக்டருக்கு ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலில் கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்தானத்தைப் பார்த்தால், இங்கே கனம் சபாநாயகருக்கு இருக்கும் உன்னத ஸ்தானத்தைவிடக் கூட அங்கே அதிகமாகக் கலெக்டருக்குக் கொடுக்கப்படுகிறதோ என்ற எண்ணம் என்னுடைய மனத்தை உள்ளபடியே தொடுகிறது. தனி நபரைப் பொறுத்த வரையில் நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. தனிப்பட்டவரைக் குறித்துச் சொல்வதற்கு என்னைப் பொறுத்த வரையில் ஒன்றும் கிடையாது. என்றாலும், இப்பொழுது ஒரு சிறிய சம்பவம் நடந்தது. முதல் அமைச்சர் அவர்களிடம் நேரடியாக விண்ணப்பம் மூலமாக அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால், பல்வேறு வேலைகள் காரணமாகச் செய்ய முடியவில்லை. சமீபத்தில் கோவை ஜில்லாக் கலெக்டரைச் சந்தித்தேன். கோயமுத்தூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் பொதுவாக மழை கிடையாது. அமைச்சரிடத்தில் விண்ணப்பம் கொடுத்துவிட்டு, எதற்கும் ஸ்தல அதிகாரியிடமும் விண்ணப்பம் கொடுக்கவேண்டும் என்பதற்காக ஜில்லாக் கலெக்டரிடம் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்தேன். "எங்கள் ஜில்லா பூராவும் மழை இல்லை. பரிசீலனை செய்து வரிவஜா செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும், அதுவும் வரி வஜாவைத் துரிதமாகச் செய்யவேண்டும்" என்று குறிப்பிட்டு விண்ணப்பத்தைக் கொடுத்தேன். எனக்கும் கலெக்டருக்கும் இதற்குமுன் ஒருவித பரிச்சயமும் இல்லை என்றாலும், நான் வருவதற்கு முன்பாகவே, கலெக்டர் அறையில் ஒரு நாற்காலி கூட இல்லாமல் ப்யூனை விட்டு அப்புறப்படுத்தி





விட்டாரோ என்று நான் ஐயுறுகிறேன். நான் போயிருந்த போது ஒரு நாற்காலி கூட இல்லை. நான் உள்ளபடியே வேதனைப்பட்டேன். நான் ஜில்லாக் கலெக்டரிடம் நின்றுதான் பேச வேண்டியிருந்தது. நான் பிரச்னையைப்பற்றிக் குறிப்பிட ஆரம்பித்தேன். "ஜில்லா பூராவும் மழை இல்லை . . ." என்று நிலைமையை எடுத்து விளக்க ஆரம்பித்தேன். அதற்குள் கலெக்டர், "நீங்கள் குறிப்பாகச் சொல்லவேண்டும்" என்று சொன்னார்கள். "குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் என்னுடைய பகுதியைப் பற்றிச் சொல்லலாம். எனக்கு இரண்டு மூன்று இடங்களில் கொஞ்சம் கொஞ்சம் நிலம் இருக்கிறது. அவைகளைப்பற்றித் தெளிவாகச் சொல்ல முடியாது. அப்படியிருக்கும்போது ஒவ்வொரு பகுதியாகச் சொல்ல முடியாது. தயவுசெய்து கீழே உள்ள அதிகாரிகள் மூலமாகத் தெரிந்து கொள்ளுங்கள். பொதுவாக உள்ளதை நான் சொல்லுகிறேன். பொதுவாக மழை இல்லை. பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். அடுத்து லோயர் பவானியில் தண்ணீர் வரவில்லை, தண்ணீர் வர வகை செய்ய வேண்டும்" என்று நான் சொன்னேன். லோயர் பவானியைப் பற்றி நான் சொன்னவுடனேயே அவருக்குக் கோபம் வந்து விட்டது. அவர் எந்த ஜில்லாக்காரர் என்று எனக்குத் தெரியாது. அவர் என்ன சொன்னாரோ, அதை நான் இங்கே சொல்லுகிறேன். "நீங்கள் லோயர் பவானியைக் குறித்து அரசியல் பண்ணுகிறீர்கள்" என்று சொன்னார். நான் சொன்னேன், "அரசியல் பண்ணுவதற்காகத்தான் நான் இருக்கிறேன்", அரசியல் பண்ணவேண்டும் என்று அங்கே இருக்கும் அத்தனை மக்களும் என்னைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். நான் அரசியல் செய்வதற்காக இருக்கிறேன். ஆனால், நீங்கள் அரசியல் செய்யக்கூடாது" என்று சொல்லவேண்டியதாயிற்று. அதற்குப் பிறகு என்ன நடந்தது? விண்ணப்பம் கையில் கொடுத்தது என்ன ஆயிற்று என்று தெரியாது. பதினைந்து ஆண்டுக் காலத்தில், 20, 25 கலெக்டர்கள் என்னுடைய ஜில்லாவிற்கு வந்திருக்கிறார்கள். அவர்களில் பலர் செக்ரடேரியட்டில் பெரிய அதிகாரிகளாக இருக்கிறார்கள். டில்லியிலும் அதிகாரிகளாக இருக்கிறார்கள். ஆனால், கோவை ஜில்லா கலெக்டராக இருப்பவர் யார், அவர் என்ன ஜமீந்தார் வீட்டுக் குழந்தையோ, ஜாகிர்தார் வீட்டுக் குழந்தையோ எனக்குத் தெரியாது. ஆனால் ஜில்லாக் கலெக்டருக்கு தனிப்பட்ட முறையில் என் மீது விரோதம் என்றும் நான் நினைக்கவில்லை. கலெக்டர் பதவிக்கு நாம் உன்னத ஸ்தானத்தை அளித்துக் கொண்டே போகிறோம். முதல் அமைச்சருடையதை விட, பிரதம மந்திரியுடையதைவிட, சபாநாயகருடையதைவிட உயர்ந்த பதவிக்கு நாம் அவர்களை உயர்த்திக் கொண்டு போகிறோம். கலெக்டருடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்த சர்க்கார் முயற்சி எடுக்க வேண்டும். தேவைக்கு அதிகமான அளவு அவர்களை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளுவதுதான், அவர்கள் இவ்வாறெல்லாம் நடந்து கொள்ளுவதற்குக் காரணமோ என்று கூட நான் அஞ்சுகிறேன். கடன் வசூலிப்பது, தங்கப் பத்திரம் வசூலிப்பது போன்ற பல பொறுப்புக்கள் கலெக்டரிடம் ஒப்படைக்கப்படுகின்றன. நண்பர்

திரு. அழகமுத்து அவர்களும் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். தேவைக்கு அதிகமாக அவர்களிடம் பொறுப்பு கொடுத்து, அந்தஸ்தைக் கொடுத்தவுடனே, அவர்கள் எல்லோரையும் மீறக்கூடிய அளவுக்கு வளர்ந்து விடுகிறார்கள். நான் இந்த மன்றத்தின் மூலம் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்வது—ஜில்லாக் கலெக்டரை ஓரளவு ஜில்லா கலெக்டராகவே வைத்திருக்க வேண்டும். அவர்களுடைய தகுதிக்கு மேல் உயர்வாகப் போகக்கூடிய அளவிற்கு வேலையைக் கொடுத்து அந்தஸ்தை அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. இந்த நிலையிலே அரசாங்கம் நல்ல முறையில் பரிசீலனை செய்து, ஏதாவது திட்ட மிட்டுக் காரியங்கள் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எதிர் காலத்தில் எங்கே போய் நிற்குமோ தெரியாது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இதை நன்கு கவனிக்கவேண்டும். ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலில் போடப்பட்ட தீர்மானங்களை நன்கு பரிசீலனை செய்து உடனுக்குடனே முடிவு அறிவிக்கப்படவேண்டும். ஜில்லா கலெக்டர்களைப் பொறுத்த வரையில், குறைந்தபட்சம் சட்ட மன்ற உறுப்பினர்களிடத்திலாவது சற்று மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்கு இந்தச் சர்க்கார் கற்றுக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் தலைவர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மானியக் 11-00 a.m. கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். இங்கே பேசிய அங்கத்தினர்களில் பல பேர்கள் "ஜில்லாவிலே இருக்கிற கலெக்டர்கள், ஆர்.டி.ஓ.-க்கள் ஆகியவர்களுக்கு எல்லாம் அமைச்சர் வரும்போது தோரணம் கட்டத்தான் நேரம் பயன்படுகிறது, பொறுப்பாக எந்தக் காரியத்தையும் செய்வதில்லை' என்று குறிப்பிட்டார்கள். எனக்கு முன் பேசிய அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்களும் குறிப்பிட்டார்கள். அமைச்சர்கள் சுற்றுப் பயணம் வருவது நமக்காகத்தான். நாம் தான்—நம்முடைய தொகுதிகளில் உள்ள குற்றங்குறைகளை அமைச்சர் அவர்கள் நேரில் கண்டார் என்றால் அவற்றை நிவர்த்திக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்பதாக—அவர்கள் வர வேண்டும் என்று விரும்புகிறோம். திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள் பேசும்போது "தெய்வத்தைக் கூடப் பார்த்து விடலாம், கலெக்டரைப் பார்க்க முடிவதில்லை" என்பதாகக் குறிப்பிட்டார்கள், எங்கெங்கே குறைகள் இருக்கின்றனவோ, அவற்றை எல்லாம் அவர்களே நேரில் சென்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இந்த அரசாங்கம் பகுக்கிற சட்ட திட்டங்களை நல்லமுறையில் மக்களுக்குப் பயன்படும் வகையில் கண்ணும் கருத்துமாக இருந்து அமல் செய்கிறார்கள். ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஆபீசில் இருந்து "எத்தனை பேர் வந்து மனுக்கள் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளவேண்டும் என்பதாக அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. ஆகவே, மக்களோடு நேரில் தொடர்பு கொண்டு அவர்களுடைய குறைகளைப் போக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாக





நாமே சொல்கிறோம். அடுத்து, அபீசிலியே அவர்கள் இருப்பது இல்லை என்றும் குறை சொல்கிறோம். ஆபீசில் இருந்து வேலை செய்தால் கலெக்டர்கள் சுகமாக ஃபான் அடியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று தான் அப்போது சொல்வார்கள். நல்ல முறையில் வேலை செய்பவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் நாம் செயல்படாது இப்படி எடுத்ததற்கெல்லாம் குற்றங்குறைகள் சொல்வது சரியல்ல. சில கலெக்டர்கள் பேசிக்கொண்டே வருகிறார்கள் என்றார்கள். பேச்சுத் திறனும் ஒரு நிர்வாக அதிகாரிக்கு வேண்டித்தான் இருக்கிறது. சிலபேர் நடக்கக்கூடிய காரியங்களைக் கோருவார்கள். செயல்படுத்த முடியாத கோரிக்கைகளைச் சிலர் வைப்பார்கள். இவர்களுடன் பேசித்தான் இவர்கள் கோரிக்கை சரியானது அல்ல என்று கன்வின்ஸ் பண்ண வேண்டியிருக்கிறது. ஏதோ அதிகாரிகளை வைத்துக் காரியங்களைச் செய்கிறார்கள் என்று சொல்வது முறை அல்ல, நல்லதும் அல்ல என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்னும் கடன் வசூல், தங்க வசூல் ஆகியவற்றை அதிகாரிகளைக் கொண்டு பயமுறுத்தி நடத்துகிறார்கள் என்று சொல்வதும் சரியல்ல. ரசீது கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதிகாரிகளே பல்விடங்களுக்கு வந்தார்கள். "ஒரு ஐந்து பவுன் கொடு ஐயா" என்றாலும் கூட "நீங்க போங்கய்யா, என்ன கொடுத்தா வைத்திருக்கிறீர்கள்?" என்பதாகத்தான் மக்கள் தைரியமாக அங்கங்கே பேசினார்களே தவிர, யாரும் பயப்படவில்லை. சிவப்புத் தொப்பிக்குப் பயந்து ஓடிய காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்றைக்கு கலெக்டர்களே வந்தாலும் கூடப் பயப்படுவதில்லை. நாங்களாக மக்களிடம் சென்று கேட்டோம். மக்கள் ஆர்வத்துடன் தேசப் பாதுகாப்புக்காக உதவினார்கள். அதற்கு இப்படி ஒரு மாசு கற்பிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கப் பத்திரம் வாங்க தங்கம் கொடுக்கக் கூடாது என்பதாகக் கூட மக்களிடம் பிரசாரம் செய்தார்கள். விளம்பரம் செய்தார்கள். அவை ஒன்றும் மக்களிடம் பலிக்கவில்லை என்றவுடன் இதுபோல அதிகாரிகள் பயமுறுத்தி வாங்கினார்கள் என்கிற அவதூறைக் கிளப்புவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்து டி.டி.ஸி. கூட்டங்களில் கேள்வி கேட்க முடியவில்லை என்றார்கள். மற்ற மாவட்டங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய மதுரை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், நாங்கள் எத்தனை கேள்வி கேட்டாலும், குறைகளைச் சொல்லிக் கொண்டாலும் கலெக்டர் நல்லமுறையில் அவற்றைக் கேட்டு தக்க பரிகாரம் உடனுக்குடன் தேடி வருகிறார் என்கிற காரணத்தினால், என் பாராட்டுதலை இந்தச் சந்தர்ப்பத்தில் கலெக்டர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளுக்குக் குடியிருக்க வீடுகள் கட்டித் தருகிறோம். ஜில்லா அதிகாரிகள், தாலுக்கா அதிகாரிகள் என்ன பாவம் செய்தார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கின்றது. பலர் குடியிருக்க வீடுகள் இன்றி

தங்கள் குடும்பத்தை கூட அழைத்துவர முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே ஜில்லா தலைநகரங்கள், தாலுக்கா தலைநகரங்கள் ஆகியவற்றில் அந்த அதிகாரிகளுக்குக் குடியிருக்க வீடுகள் கட்டித்தரவேண்டும் என்பதாக கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கமிஷனர்களுக்கு எல்லாம் ஜீப்புகள் கொடுத்திருக்கிறோம். தாசில்தார்கள் என்றால் எல்லோருக்குமே இன்னும் கொடுக்கவில்லை. மதுரை ஜில்லாவுக்கு பிரையாரிடி கொடுத்து அங்குள்ள தாசில்தார்களுக்கு ஜீப் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் கிராம அதிகாரிகளாகிய கர்ணம், வி. எம். இடத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக்கொடுத்தால் ஒரு ரூபாய் வாங்கினார், இரண்டு ரூபாய் வாங்கினார் என்கிற குறைபாட்டுக்கும் இடமிருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சர்டிபிகேட் வாங்குவதில் பல தொல்லைகள் இருக்கின்றன. அதனால் கல்விக்காக சர்டிபிகேட் வாங்குவதில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்கும் அளவில் எல்லோருக்கும் எம்.ஏ., பி.ஏ. பட்டம் படிக்கும் வரை சம்பளம் இல்லை என்ற நிலையை உருவாக்கி பணக்காரர்கள் வசம் கல்வி வரி என்ற அடிப்படையில் வசூல் செய்து கொண்டால், சிரமத்தைத் தவிர்க்க முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்தபடியாக, தாலுக்கா தலைநகரத்தில் ஜமாபந்தி நடத்துகிறார்கள். அங்கு வரக்கூடிய அதிகாரிகள் தங்குவதற்குக் கூட சரியான இடம் இல்லை. நிலக்கோட்டை தாலுக்காவை எடுத்துக் கொண்டால் இரண்டு பேர்களைத் தோந்தெடுத்து அனுப்புவார்கள். நான்கு யூனியன்கள் இருக்கின்றன. அங்கே ட்ராவலர்ஸ் பங்களா கிடையாது. ஆகவே அங்கே டி. பி. கட்டுவதோடு ஒவ்வொரு தாலுக்கா தலைநகரத்திலும் பிரயாணிகள் தங்க டி. பி. வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசன வசதிகள் சம்பந்தமாக 1958-ஆம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தின்படி ப்ரைவேட் கண்மாய்களைக் கூட பஞ்சாயத்திடம் ஒப்படைத்துவிட்டோம். இருந்தும் அந்த வேலைகள் சரியானபடி நடைபெறவில்லை. என்னுடைய சொந்தக் கண்மாய் கூடத் தகராறில் இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.)

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மாவட்டத் தலைவர் கலெக்டர் அவர்களுடைய நிர்வாகம் மிகச் சிறப்பான முறையில் நடந்துகொண்டிருக்கிறது. அதுவும் மாவட்ட கலெக்டர்களுடைய மனைவிமார்கள் பட்டாதாரிகளாகவும் இருந்தால் எவ்வளவு சிறப்பாகப் பணிகள் நடைபெறும் என்பதற்கு





என்னுடைய மாவட்டம் ஒரு எடுத்துக்காட்டாகும். குறிப்பாக என்னுடைய மாவட்ட கலெக்டர் அவர்களுடைய மனைவியார் ஜவான் பாதுகாப்பு நிதிக் குழு, அவர்களுடைய வெல்பார் குழு ஆகியவற்றில் பங்கு கொண்டு மிகப் பாராட்டத்தக்க வகையில் சிறப்பாக பணி புரிந்து வருகிறார்கள்.

பஞ்சாயத்து கோர்ட்டைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்தார்கள் கோர்ட்டு நடத்தி வந்தார்கள். பிறகு பஞ்சாயத்து கோர்ட்டுகள் வந்தன. பஞ்சாயத்து கோர்ட்டுகளையும் எடுத்துவிட்டு 'ஒன்மேன் கோர்ட்டு' வைத்து கிராம அதிகாரிகளை வைத்து வழக்குகளை விசாரித்து வருகிறார்கள். ஆனால், நகரப் பகுதிகளிலே எல்லாம்—திருநெல்வேலி, மேலப்பாளையம், பாளையங்கோட்டை இந்த இடங்களிலே எல்லாம் இந்த விதமான கோர்ட்டுகள் இல்லாத காரணத்தால், ஏழை எளிய மக்கள், சிறு தொழில், பெரிய தொழில் நடத்துகிறவர்கள், வியாபாரம் செய்யக்கூடியவர்கள் எல்லாம் தங்களுடைய வாதங்களை வழக்குகளை எடுத்துச் சொல்லமுடியாமல் இருக்கிறது. ஒன்மேன் கோர்ட்டு வைத்து வழக்குகளை விசாரிக்கலாம் என்று ஜி. ஓ. போட்டு எல்லா கிராமங்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் சில இடங்களுக்கு அனுப்பவில்லை. திருநெல்வேலியிலே பேட்டை என்ற பகுதியிலே ஒன்மேன் கோர்ட்டு இல்லாததால் மக்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ரெவின்யூ போர்டிலிருந்து உடனடியாக இதற்கு உத்திரவு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த கடன்கொடுக்கும் திட்டத்திலே விவசாயக் கடன், இன்னும் மற்ற சிறு தொழில்களுக்கான கடன்கள், பெரிய தொழில்களுக்கான கடன்கள் எல்லாம் கிடைக்கவேண்டுமென்றால், அதில் சிக்கல்கள் நிறைய இருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலிருந்தும் சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. விவசாயிகளுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி காலாகாலத்திலே கடன் கிடைத்தால் தான் பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்வளவு சிரமங்கள் இதில் இருப்பதால், கடன் வாங்குபவர்கள் அரசாங்கக் கடனை வாங்காமல் இருந்துவிடுவோம் என்று அசந்துபோய் ஓய்ந்து போய் மனம் தளர்ந்துவிடக்கூடிய நிலைமை தான் இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஓல்ட் ஏஜ் பென்ஷன் கொடுப்பதை எடுத்துக் கொண்டால், ஒரு இடத்திலே இருப்பவர் மற்றொரு இடத்திற்குப் போய்விட்டாலோ, அல்லது சிறு தவறுகள் ஏற்பட்டுவிட்டாலோ, க்ளெரிக்கல் மிஸ்டேக்ஸ் ஏற்பட்டுவிட்டாலோ அதைத் திருத்திப் பணத்தை வாங்குவதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. சுந்திரம் அம்மாள் கணபதியாபிள்ளையின் மனைவி என்று போடுவதற்குப் பதிலாக புருஷன் என்று போட்டுவிட்டார்கள். இந்தத் தவறைத் திருத்துவதற்கு வெகு நாள் ஆகிவிட்டது. இந்த மாதிரித் தவறுகளையெல்லாம் திருத்துவதற்கு நிர்வாகத்திலே இடம் இருக்க வேண்டும். லிட்டராக பார்க்கக்கூடிய நிலைமை இருக்குமானால்

அதிகக் காலதாமதம்தான் ஏற்படும். ஆகவே இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஓல்ட் ஏஜ் பென்ஷன் வாங்க தகுதியான வயோதிகர்கள் இன்னும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இது கிடைக்காமல் கஷ்டப்படு கிறார்கள். மேலும் மேலும் இதற்கு அப்ளிகேஷன்ஸ் வரும் பொழுது, ஏற்கனவே ஓல்ட் ஏஜ் பென்ஷன் வாங்கிய கிழவன், கிழவி எல்லாம் ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகள்தான் வாழுகிறார்கள். இந்த இடங்களை எல்லாம் நிரப்புவதற்காவது புதிய அப்ளிகேஷன்களுக்கு எல்லாம் வாய்ப்பு கொடுக்கவேண்டு மென்பது என்னுடைய கோரிக்கையாகும்.

அடுத்தபடியாக, முனிசிபல் நகரசபையில் இருக்கக்கூடிய மானேஜர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்படுவதில்லை. அங்கே வேலை பார்க்கிற கமிஷனர்களுக்கும், இன்னும் மற்ற உத்தியோகஸ்தர் களுக்கும் பென்ஷன் கொடுக்கப்படுகிறது. ஆனால் மானேஜர் களுக்குமட்டும் கொடுக்கவில்லை. இதையும் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, கான்ஃபடன்ஷியல் ஃபைலைப்பற்றி ஒரு வார்த் தை. இந்த கான்ஃபிடன்ஷியல் ஃபைல் கழுத்தறுக்கக்கூடிய ஃபைலாக இருக்கிறது என்று ஒவ்வொரு என். ஜி.ஓ.-வும் சொல் கிறார்கள். அவர்கள் மேல் அட்வர்ஸ் ரிமார்க்ஸ் இருந்தால் அதை மேலதிகாரிகள் எடுத்துச் சொல்லலாம். அப்படியில்லாமல் கழுத்தறுக்கக்கூடிய நிலைமையிலே ரிமார்க்ஸ் கான்ஃபிடன்ஷியல் ஃபைலிலே எழுதி விடுகிறார்கள். நேர்மையான முறையிலே, நிர்தாட்சணியமான முறையிலே விருப்பு வெறுப்பற்ற முறையிலே அவர்கள் நடந்துகொள்வார்களானால் கீழே வேலை செய்கிறவர் களுக்கும் கஷ்டம் இருக்காது. வேண்டியவர்களுக்கு ஒன்று, வேண்டாதவர்களுக்கு ஒன்று என்ற நிலைமை இருக்கக் கூடாது. இந்த இன்கிரிமெண்ட்களை எடுத்துக்கொண்டால், வருடா வருடம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டி. ஏ. அதிகப்படுத்தி இருப்பதாகச் சொல்கிறார்கள், அவையெல்லாம்கூட உடனே கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த இன்கிரிமெண்ட்கள் உரிய காலத்தில் கொடுக்கப்படுவதில்லை. ஆண்டுக் கணக்கில் இன்கிரி மெண்ட்கள் சேர்க்கப்படாமல் பல ஆண்டுகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையிலே எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாயில்லாப் பூச்சிகளாக இருக்கிறார்கள். அவர்கள் இது சம்பந்தமாக வாயைத் திறந்தால் அவர்களைப் பழி தீர்த்துக் கொள்ளக்கூடிய முறையிலேதான் மேலே உள்ளவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

அடுத்தபடியாக, இந்த பர்மா அகதிகளுக்கு எல்லாம் பி.டபிள்யூ டி., ஹைவேஸ் போன்ற டிபார்ட்மெண்டுகளில் மேஸ்திரி, அல்லது அன்றாட வேலை ஏதாவது கொடுப்பதற்கு வழிசெய்ய வேண்டும். அப்படி ஒன்றிரண்டு பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக் கிறது. அத்தனை பேர்களுக்கும் இந்த வசதியைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்டங்களிலே ஜில்லா கலெக்டர்கள் குறை தினம் இன்னும் நடத்தி குறைகளைக் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். கலெக்டர் இல்லாவிட்டால் பி.ஏ.





குறைகளை அந்த தினத்தில் கேட்டு வருகிறார். மற்றபடி இதில் குறை சொல்வது பொருந்தாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பர்மா அகதியாக வந்த ஒருவருக்கு அங்கே உள்ள ஒரு ஹாஸ்டலில் சமையல் வேலை கொடுக்கப்பட்டு அவர் செய்துவந்தார். ஆனால் அவரை நீக்கிவிட்டார்கள். குறை தினத்தன்று கலெக்டர் அவர்களிடம் சொன்னவுடன் அவர் மறுபடியும் வேலை வாங்கிக் கொடுத்தார். ஆகவே குறை தினத் தன்று குறைகள் கேட்கப்படுகின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலே நாங்கள் தீர்மானம் போட்டு இங்கே அனுப்பினால் அவைகளுக்கு நெகடிவ் ஆன்ஸர்தான் தரப்படுகிறது. இதையும் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மந்திரிகள் சுற்றுப்பயணத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அதிக மாகச் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டுமென்பதுதான் என்னு டைய கருத்து. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன், எங்கள் பகுதிக்கு கனம் அமைச்சர் திரு. ராமையா அவர்கள் வந்து ஒரு பாலத்தைப் பார்த்தார்கள். பார்வையிட்ட உடனேயே பத்து லட்சம் ரூபாய் அதற்கு சாங்ஷன் செய்தார்கள். இன்னும் பத்து மாதங்களுக்குள் அந்த வேலை துரிதமாக நடத்தப்பட்டு முடிந்துவிடும். ஆகவே, அதிகமாக மந்திரிகள் சுற்றுப்பயணம் செய்தால்தான் அதிகாரிகளை முடுக்கிவிட்டு வேலைகளைத் துரித மாகச் செய்ய முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

**திரு. ம. கமலநாதன்:** மதிப்பிற்குரிய சட்டமன்ற தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கும் மான்யங்களின்மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரே ணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். மாவட்ட நிர்வாகம்தான் நாட்டில் நிர்வாகத்தின் அடிப் படை என்ற முறையிலே மாவட்ட நிர்வாகத்தைச் செம்மையாக வும், சீராகவும் நடத்தவேண்டிய பொறுப்பிலே அரசாங்கம் இருக் கிறது. மாவட்ட நிர்வாகத்திலே பொறுப்புகள் அதிகமாக இருக் கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். கனம் முதலமைச்சர் அவர்களும் அதை உணர்வார்கள். மாவட்டங்களை இரண்டாகப் பிரிப்பது, ஜாயிண்ட் கலெக்டர் போடுவது, அல்லது டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ ஆபீசர் போடுவது இவையெல்லாம் நிர்வாகச் செலவை அதிகப்படுத்தக்கூடிய தன்மையில்தான் இருக்கின்றன. இதற்கு நான் மாற்று யோசனைகளைக் கூற விரும்புகிறேன். மாவட்டங் களைப் பிரித்து ஜாயிண்ட் கலெக்டர்களைப் போடாவிட்டாலும், டிவிஷன்களாகப் பிரித்து ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஆர். டி. ஓ.-க்களைப் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும், வெட்டியாக இருக்கும் டிஸ்ட்ரிக்ட் காதி ஆபீசர், டிஸ்ட்ரிக் பப்ளிசிடி ஆபீசர், பேமிலி ப்ளானிங் ஆபீசர் இவர்களையெல்லாம் நீக்கிவிட்டு, அவர் களுக்குப் பதிலாக ஆர்.டி.ஓ.-க்களை நியமிக்கவேண்டும். ஃபைனல் செட்டில்மெண்ட் முடிந்து எஸ்டேட்டுகள் எல்லாம் எடுத்துக்

[திரு. ம. கமலநாதன்] [8th March 1966

கொள்ளப்பட்ட பிறகும் கூட இன்னும் எஸ்டேட் மானேஜர்கள் இருந்து வருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் எப்படியிருக்க வேண்டுமென்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையாகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு முதியோராக இருந்தால் தான் எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு நடத்தமுடியும். இளைஞராக இருந்தால், அவர் துடிப்பாகக்கூட இருக்கலாம், கீழே உள்ள முதிய அதிகாரிகளை நிர்வகிக்க முடியாத சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே பொறுப்புகள் உள்ள பதவிகளுக்கு வயது முதிர்ந்தவராக இருப்பவர்கள் இருந்தால் அது வரவேற்கத் தகுந்த ஒன்றாகும். அதிகாரிகளை அடிக்கடி மாற்றிவிடுகிறார்கள். ஹோசூர் பகுதியை எடுத்துக்கொண்டால் அங்கே உள்ள சப்-கலெக்டரை அடிக்கடி மாற்றிக்கொண்டே இருக்கிறார்கள். இதில் ஆளுங்கட்சி ஈடுபட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனால் எங்கள் பகுதி சப்-கலெக்டர் அடிக்கடி மாற்றப்படுகிறார். ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவரது வீட்டிலே 350 மூட்டை ராகியை அவர் பிடித்திருக்கிறார். இன்னும் அவை அவருடைய வீட்டிலேயே இருக்கின்றன. சப்-கலெக்டரை அவர் ஏதாவது கேட்டிருப்பார் இவர் மறுத்திருப்பார். அதற்காக அவர் அங்கிருந்து இன்னும் 24 மணி நேரத்திற்குள் மாற்றிவிடுகிறேன் என்று சவால்விட்டு இங்கு வந்தார். இங்கு வந்து மேலிடத்திலே, நான் அவருடைய ஆபீசுக்கு போயிருந்தேன், என்னை வெளியேறச்சொல்லிவிட்டார் என்ற அளவுக்குப் புகார்கள் சொல்லி அவரை மாற்றவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆளுங்கட்சியினர் தங்கள் கட்சி ஆளுகிற மேலிடத்திலே அணுகி அதிகாரிகளை மாற்றக்கூடிய சூழ்நிலை இருப்பதால் பல அதிகாரிகள் தங்களுடைய வேலைகளைச் சரிவரச் செய்யமுடியவில்லை.

அதுமட்டுமல்ல, கடந்த ஜூன் மாதத்திலிருந்து பிப்ரவரி மாதம் 27-ம் தேதி வரை சிறு சேமிப்பு நிதி, சேமிப்பு பாண்டுகள், பாதுகாப்பு நிதி, தங்கப்பத்திரம், மின்சாரக் கடன் ஆகியவற்றை வசூலிப்பதிலே ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மற்ற அதிகாரிகளும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில் எப்படி அபிவிருத்தி வேலைகளை அவர்கள் செய்ய முடியும்? 1954-ம் ஆண்டு அமைக்கப்பட்ட டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ அட்மினிஸ்ட்ரேஷன் கமிட்டி மாவட்ட நிர்வாகங்களைப் பற்றி நன்றாக ஆராய்ந்து பல குறைபாடுகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகள் நீக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டனவா என்றால் இல்லை. வெள்ளையன் காலத்தில் இருந்த ஸ்டாஃப் எண்ணிக்கைதான் இன்னும் இருக்கிறது. டெம்பரரி ஸ்டாஃப் அதிகமாக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, அவர்களுடைய உத்தியோகங்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. கிராமங்களில் சென்று பார்த்தால் சாவடிகளும், பவுண்டுகளும் வெள்ளைக்காரன் ஆட்சியை நினைவூட்டும் வகையில் சீரழிந்து இருக்கின்றன. அவற்றைப் பஞ்சாயத்துக்கோ, பஞ்சாயத்து யூனியனுக்கோ கொடுத்தால் சீர்படுத்தி உபயோகத்திற்குக் கொண்டு வர வாய்ப்பு இருக்கும்.



8th March 1966] [திரு. ம. கமலநாதன்]

பெரிய மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற முறையில் எங்களுடைய மாவட்டம் பிரிக்கப்பட்டிருக்கிறது. தலைநகர் துரதிருஷ்டவசமாக எங்கள் பகுதிக்குக் கிடைக்கவில்லை என்றாலும் 'செத்தும் கொடை கொடுத்தார் சீதக்காதி' என்பதைப் போல மதிப்புக்குரிய வீரப்பச் செட்டியார் மறைவினால் தர்மபுரி தலைநகராயிற்று. ஆனால் ஓரளவு அலுவலகங்களைக் கிருஷ்ணகிரியில் திறப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கட்டடம் கட்டுவதற்கான முயற்சியோ, அதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் வேலைகளோ இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. டி. இ. ஓ. அலுவலகம் கிருஷ்ணகிரிக்குக் கொடுக்கப்பட முடியாது என்று சொல்கிறார்கள். இப்படிப் பல அநியாயங்கள் எங்களுக்குச் செய்யப்பட்டு வருகின்றன. மாவட்டம் பிரிவதற்கு முன்பு ஊத்தங்கோட்டை, டெங்கனிக்கோட்டை இரண்டும் சப்-தாலுகாக்களாக இருந்ததை தாலுகாக்களாக மாற்றவேண்டுமென்று கோரப்பட்டதற்கு, மாவட்டம் பிரிந்த பின்னால் பார்க்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

என். ஜி. ஓ.-க்களுக்குக் கிராக்கிப்படி உயர்வு கிடைக்குமென்று அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது திருப்தி அளிப்பதாக இருந்தாலும், உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். கிராமத்தில் எல்லாக் காரியங்களுக்கும் அஸ்திவாரமாக அமைத்திருப்பவர்கள் கிராமாதிகாரிகள் என்பதை மறக்க முடியாது. அவர்களுடைய சம்பளத்தை எல். டி. சி. ஸ்கேல் அளவுக்கு உயர்த்துவதாக ரெவின்யூ அமைச்சர் அவர்கள் பல முறை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த அளவுக்கு அவர்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்த எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுத்துக் கொள்ளவில்லை. கிராமாதிகாரிகள் நல்ல பாரம்பரியத்தில் வந்தவர்கள். அந்தஸ்திலுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களைச் சில நேரத்தில் மரியாதைக் குறைவாக நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்குப் பிரயாணப்படி கொடுக்கப்படுவதில்லை.

டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலுக்கும், அரசாங்கத்திற்கும், அதிலுள்ள உறுப்பினர்களுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்றால் இல்லை. 1961-ல் இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலும் ரயில்வே செஸ் நிதியைக் கொண்டு மருத்துவக் கல்லூரியைச் சேலத்தில் அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு கூட்டத்திலும் கலெக்டர், அரசினரிடமிருந்து ஆணை எதிர்பார்க்கப்படுகிறது என்றே கடந்த நான்கு ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறார். கனம் முதலமைச்சர் அவர்கள், ரயில்வே செஸ் நிதியை என்ன காரணத்திற்காகப் பயன்படுத்த வேண்டுமோ அதற்குத்தான் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள், மருத்துவக் கல்லூரி அமைக்க அதைப் பயன்படுத்தக் கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள் என்று நான் பலமுறை எடுத்துக் கூறியும் அவர்கள் அரசாங்கத்திடமிருந்து பதில் வரட்டும் என்றே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு சொல்லியதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டதற்கு புரொசீடிங்ஸ் காப்பியை வாங்கித் தருகிறேன் என்று சொன்னேன்.

அரசாங்கம் அதற்கு ஒரு கிளாரிபிகேஷன் கொடுக்க வேண்டும். கூட்டம் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடி முடிவு எடுக்காமலே கலைந்து விடுகிற நிலை இருக்கிறது. டெவலப்மென்ட் கவுன்சிலுக்கு அதிக அதிகாரம் தேவை என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் ஜில்லா நிர்வாகம் மற்றும் இதர மானியக் கோரிக்கைகளை ஆதரிக்கிறேன். சமீப காலத்தில் ஜில்லாக்களில் எல்லாம் கலெக்டர்கள் குறிப்பிட்ட நாளில் தலைநகரில் இருக்கவேண்டுமென்று திட்டமிட்டு அதன்படி அந்த நாளில் தலைநகரில் இருக்கிறார்கள். அதே போன்று மற்ற அதிகாரிகளும் முடிவு செய்திருக்கிறார்கள். ஜில்லாத் தலைமை அதிகாரிகள் எல்லோரும் குறிப்பிட்ட நாளில் ஜில்லாவின் தலைநகரில் இருப்பார்களேயானால் வசதியாக அவர்களை எல்லாம் சந்திக்க ஏதுவாக இருக்கும். அதே போன்று ஜில்லா, டிவிஷன், தாலுகா தலைநகர ஆபீஸ்களிலே ஒரு விசாரணை அதிகாரி (பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர்) இருப்பதும் அவசியம். எவ்வளவு அபிவிருத்தி வேலைகளை இந்த ராஜ்ய அரசாங்கம் செய்து முடித்து இருந்தாலும் கூட, கிராம ஜனங்களுக்கு அது எந்த அளவுக்குப் பயன்பட்டிருக்கிறது என்பதற்கு அளவுகோலாக இருப்பது தாலுகா ஆபீஸ்கள் தான். அங்கு தக்க வசதிகளைச் செய்யவேண்டும். வெளியிலிருந்து வருகிற மக்கள் அதிகாரிகளிடம் நேரடியாகப்போய் விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று சொன்னால் கஷ்டமாக இருப்பதால், ஒரு தனியான அதிகாரி இருந்தால் அதற்கு வசதியாக இருக்கும். தாலுகா ஆபீஸ்களில் வேலை செய்யும் சர்க்கார் அதிகாரிகளும், சிப்பந்திகளும் இரவில் வெகு நேரம் வரை வேலை செய்ய வேண்டிய வேலைப் பளு அவர்களுக்கு இருக்கிறது. தாலுகா ஆபீஸ்களில் ஒரு பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசரைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு வருஷத்திற்கு முன்பு நடந்த பஞ்சாயத்துத் தேர்தல்களுக்காக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கெல்லாம் இதுவரை பிரயாணப்படி கொடுக்கப்படாமல் இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவைப் போன்று பல ஜில்லாக்களிலும் அந்த நிலைமை இருக்கிறது. இவ்வளவு காலதாமதத்திற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. தாமதம் இல்லாமல் அவர்களுக்குப் பிரயாணப்படியைக் கொடுக்க ராஜ்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஜில்லாக்களில் இன்றையதினம் லெவிக்கு நெல் கொள்முதல் பண்ணும் வேலையை, ஜில்லா கலெக்டர்கள் அவரவர்களுடைய ஜில்லாவின் நிலைக்கு ஏற்ப பகுதிகளுக்கு ஏற்ப கொள்முதல் செய்வதிலே சில தாக்கீதுகளைக் கொடுக்கிறார்கள். கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு உட்பட்டவர்கள் நெல் கொடுக்கவேண்டியதில்லை என்று தாக்கீது கொடுத்தார்கள். திருநெல்வேலி ஜில்லாவிலும் சமீபத்தில் அந்த மாதிரித் தாக்கீது கொடுத்தார்கள். சில ஜில்லாக்களில் அந்த மாதிரி





தாக்கீது இல்லாமல் இருக்கலாம். கொள்முதல் காரியம் பல லட்சக்கணக்கான விவசாயிகளைப் பாதிக்கக் கூடிய ஒன்று அதிலே ராஜ்ய அரசாங்கத்தின் கொள்கை இதுதான் என்று திட்டவட்டமாகத் தெளிவாகச் சொல்லவேண்டும். ஒரு ஏக்கருக்கு குறைவாக உள்ள விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய வேண்டாமென்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. அதை அரசாங்கம் அறிக்கை மூலம் ராஜ்யம் பூராவும் அறியச் செய்யவேண்டும். ஒரு வயது வந்த நபருக்கு மூன்றே முக்கால் மூட்டை தேவை என்று வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இரண்டு போகம் நெல் விளையக்கூடியதாக இருக்குமானால் ஆறு மாதத் தேவையை மாத்திரம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. சில பகுதிகளில் மூன்றே முக்கால் மூட்டையை எடுத்துக் கொள்ள வேண்டுமா அல்லது ஒன்றே முக்காலே அரைக்கால் மூட்டை எடுத்துக்கொள்ள வேண்டுமா என்பது வில்லங்கமாக இருக்கிறது. பொதுவாக இருக்கக்கூடிய கொள்கையை ராஜ்ய அரசாங்கம் தெரிவிக்கவேண்டும்.

ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சிலில் ஜில்லா கலெக்டர் தலைவராக இருக்கிறார். யார் தலைவராக இருக்கிறார்கள் என்பதிலே நபரைப் பொறுத்தமட்டிலே உள்ள விஷயமல்ல நான் சொல்ல விரும்புவது. பல்வேறு ராஜ்யங்களோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழ் நாடு ஒன்றைத் தவிர மற்ற ராஜ்யங்களில் ஜில்லா அபிவிருத்தித் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக, பொதுஜனங்களின் பிரதிநிதிகளாகத்தான் இருக்கிறார்கள். ஜில்லா கலெக்டருக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. அவற்றோடு அவர் இதிலும் ஈடுபட வேண்டியிருக்கிறது. இதிலே முக்கியமாகக் கருதுவது பரிணாம அளவில் அதிகாரிகளைப் பயன்படுத்துவதன் மூலம், ஜில்லா கலெக்டர் அவர்கள் தலைவராக இருப்பதன் மூலம் சாதனைகள் அதிகமாக இருக்கலாம். வரக்கூடிய நாட்களில் இந்தப் பரிட்சை போதுமானதுதானா? பொது ஜனங்கள் பிரதிநிதிகள் இருந்தால் சாதனை அளவு குறைந்துவிடும் என்று நினைக்க முடியாது. பரிணாம அளவைச் சாதிக்க வேண்டுமென்பது ஒரு புறமிருக்க, கொள்கை அளவிலே கூட இந்தத் தேசம் அடிப்படையான ஜனநாயகத்திலே நம்பிக்கை வைத்திருக்கும் தேசம். கிராம மட்டத்திலிருந்தும், ஜில்லா மட்டத்திலிருந்தும் தலைவர்களைத் தயாரிக்கவேண்டும் 'Second rank leadership should be created''. ஆகவே ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக இருப்பதன் மூலமாக அதிகாரிகளிடத்தில் அதிகாரக் குவியல் ஏற்படுகிறது என்ற எண்ணத்திற்குக்கூட இடம் இல்லாமல் போகலாம்.

நாம் எல்லாம் ஜமீன் முறையை ஒழித்து விட்டோம், சமஸ்தானாதிபதிகளை மாற்றிவிட்டோம் என்று பெருமைப்படக்கூடிய நிலையில் இருக்கிறோம். ஆனால் இன்றும் கிராமங்களில் உள்ள 11-30 a.m.
மக்கள் துண்டை இறக்கி அரையில் கட்டிக் கொண்டு அதிகாரிகளை எஜமானர்களாகக் கருதி அவர்களிடம் பிச்சை கேட்பது போன்ற

ஒரு உணர்வு ஏற்படுவதைத் தடுக்கவேண்டியது மிக அவசியம். ஒரு பக்கத்தில் பரிமாண அளவு, மற்றொரு பக்கத்தில் கொள்கை அளவு. இந்த பரிமாண அளவின் சாதனையும், கொள்கை அளவினால் ஏற்படுகிற சாதனையும் இரண்டும் எந்த அளவிற்குச் சாதனையை அடைந்திருக்கிறதோ அந்த அளவிற்குத்தான் நம் நாட்டில் ஜனநாயகம் நல்ல வகையில் நிலைக்கும். இலங்கையில் இருந்து வந்துள்ள குழந்தைகளுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கும் அதிகாரம் கலெக்டரிடம் இருக்கிறது. ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அதுபற்றிய புகார்களுக்கு இடம் கொடுக்காமல் அவை தாமதமின்றி கொடுக்கப்பட வழிவகை செய்யவேண்டும்.

இன்றைய தினம் பொற்கொல்லர்களுக்கு நிலம் ஜாரி செய்வதில், சர்க்கார் நிலமோ அல்லது சர்க்கார் நிலங்கள் இல்லாத இடங்களில் மற்றவர்களின் நிலத்தை எடுத்துக் கொடுப்பதோ இதில் சர்க்கார் கொள்கை என்னவென்று புரியவில்லை. பூர்ணமாக ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டால் அதற்குள்ள தொகையைப் பயன்பெறும் மக்கள் கொடுக்கவேண்டுமா அல்லது பாதி கொடுக்க வேண்டுமா என்பதைப் பற்றிய விளக்கம் சரியாக இல்லாததால் சிலவிடங்களில் அதுகுறித்துச் சில கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன என்று அறிகிறேன். கடன் வழங்குவதில் சர்க்யூட்டஸ் ப்ரொஸீஜர் சுற்றி வந்து வாங்கும் நிலைதான் இருக்கிறது. ஒரு ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கும்போது, தொழில் கடன் அல்லது விவசாயக் கடன் எதுவாகயிருந்தாலும் சரி, வில்லங்க சர்ட்டிபிகேட் வாங்குவதில் ஏற்படக்கூடிய விரயத்தை ஓரளவு தவிர்க்கலாம், தவிர்க்க வேண்டும். கடன் வழங்கும் அதிகாரிகள் சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்கே நேரில் சென்று வில்லங்கம் இருக்கிறதா என்பதையெல்லாம் பரிசீலித்து கடன் வழங்கினால் விவசாயிகள் படும் சிரமத்தையும் ஓரளவு குறைக்கலாம், காலதாமதம் ஓரளவிற்குத் தவிர்க்கப்படும். புதுக் கிணறுகள் தோண்டுவதற்குக் கடன் வழங்கும் திட்டம் போல் கிணறுகளை ஆழப்படுத்தவும் கடன் கொடுக்கிறார்கள். அது மட்டும் போதாது. அதில், கொள்கை அளவில் 25 சத விகிதம் அதற்கு மான்யம் கொடுக்கவும் ராஜ்ய சர்க்கார் ஒரு திட்டம் வகுக்க வேண்டும்.

கிராமங்களில் இருக்கக் கூடிய சர்க்கார் சிப்பந்திகளான வெட்டியான், தலையாரிகள், சர்க்கார் ஜீப்களைச் செலுத்தக் கூடிய டிரைவர்கள், இதர சர்க்கார், பஞ்சாயத்து யூனியன் சிப்பந்திகள் இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு நிர்ணயித்திருக்கக் கூடிய பிரயாண படியில் மாறுதல் இல்லாமலேயே இருக்கிறது. ஜீப்பை ஓட்டிச் செல்லக்கூடிய டிரைவருக்கு அவர் 12 மணிநேரம் வேலை செய்து 10 மைல்கள் கடந்து வெளியே போனால் 1¼ ரூபாய் பிரயாணப் படி கொடுக்கப்படுகிறது. பன்னிரண்டு மணி அளவிற்கு உள்ளாகவோ அல்லது 10 மைலுக்குக் குறைவாகவோ இருந்தால், 11 மணி நேர வேலை அல்லது 9½ மைல்கள் போயிருந்தால் கூட அதற்கு 10 அணாதான் கொடுக்கப்படுகிறது. ஆக, இந்த அளவில் இது நீடிக்க வேண்டுமா? படியை உயர்த்திக்கொடுப்பதற்கு வழிஎன்ன என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். கிராமங்களில் தலையாரிகள்





போன்றவர்களுக்கு இன்றையதினம் கொடுக்கப்படும் பிரயாணப்படி—ஐந்து மைல்கள் வரை செல்வது என்றால் எந்தவிதமான படியும் இல்லை—ஐந்து மைல்களுக்கு மேலே சென்றால்தான் அவர்கள் பிரயாணப்படிக்கு உரியவர்களாக ஆகிறார்கள். இதை மாற்றி யமைத்தால்தான் அவர்களுக்கு உதவி செய்தவர்களாக ஆக முடியும்.

கிணறுகளுக்குக் கொடுக்கப்படும் உதவியை விவசாயிகள் பயன்படுத்த முடியாத அளவிற்கு பாதி கிணறு வெட்டியவுடன் பாறை தென்படுகிறது. ஆகவே, மேற்கொண்டு அவர்களால் செல்லமுடியவில்லை. ராஜ்ய லெவலில் ஒரு வாட்டர் டிவைனரை, நீர்நிலையை அறிந்து சொல்லும் நுணுக்க அதிகாரியை நியமனம் செய்திருப்பதாக அறிகிறேன். ஜில்லாதோறும் இப்படிப்பட்ட வாட்டர் டிவைனர்களைக் கொடுப்பதன் மூலம் கிணறுகள் வெட்டுவதில் பணம் விரயமாகாமல் நல்ல முறையில் கிணறுகள் வெட்டுவதற்கு உதவி செய்தவர்களாவோம். நிலத்தீர்வை பொறுத்தமட்டில் தீர்வை விகிதாசாரத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதை விவசாயிகள் தெரிந்து கொள்வதில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே விவசாயிகள் இதுபற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள அவர்களுக்குள்ள தீர்வை என்ன என்பதுபற்றி எல்லாம் விவரமாக அறிந்துகொள்ள தாலுகா ஆபீசில் ஒரு போர்டு தொங்கவிடப்படலாம். அதில் முழு விவரமும் இருக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன்களில் கிராமச் சாவடிகளில் பஞ்சாயத்து ஆபீஸ்களில் அப்படிப்பட்ட போர்டுகளைத் தொங்கவிடலாம். இவ்வளவுதான் தீர்வை, அடிப்படைத் தீர்வை இவ்வளவு, சர்சார்ஜ் இவ்வளவு என்பன போன்ற விவரங்களை எல்லாம் முழுமையாகக் கொடுத்தால் விவசாயிகள் கஷ்டமில்லாமல் அவற்றை அறிந்து கொள்ளமுடியும். (மணி அடிக்கப்பட்டது.) இந்த நிலையில் இந்த மான்யக் கோரிக்கைகளை ஆதரிக்கிறேன்.

* திரு. செ. மாதவன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் இன்றைக்கு பஞ்சாயத்து நிர்வாகம், ரெவின்யூ நிர்வாகம் என்ற இரண்டு முறைகளிலே நிர்வாகம் நடத்தப்படுவதில் இருக்கிற குறைபாடுகளை நம் அரசாங்கம் அப்போதைக்கப்போது பரிசீலிக்க வேண்டும். ஒன்றோடொன்று இணைந்து செயல்படக் கூடிய முறையில் புதிய விதிமுறைகள் இருக்கின்றனவா அல்லது இருக்கிற விதி முறைகளால் குறைபாடுகள் அதிகமாக ஏற்படுகிறதா என்பதை அரசாங்கம் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. பொதுவாக, பஞ்சாயத்து நிர்வாகத்திற்குத் தீட்டப்பட்ட திட்டங்களைக் கொடுத்து அவர்கள் அவற்றை நிறைவேற்றும் போது யாருக்கு அந்தப் பொறுப்பு இருக்கிறது, தவறுகள் ஏற்பட்டால் அதற்கு பொறுப்பாளி யார், என்று நிர்ணயிப்பதில் இன்றைக்கு மாவட்ட கலெக்டர்களுக்குச் சங்கடமான ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். நிர்வாகச் சீர்திருத்தம் நீண்ட நாட்களாகவே அரசாங்கத்தினிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இதுபற்றி விரிவாக

அவர்கள் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நிர்வாகச் சீர்திருத்தம் உண்மையில் செய்யப்படுகிறதா, அதனால் மக்கள் நன்மை பெறுகிறார்களா என்பதை நாம் பரிசீலித்தாக வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்போது புதிய முறையிலே "ஆபீசர் ஓரியன்டட் ஸ்கீம்" என்று ஒன்றை நம் அரசாங்கம் பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. இதன் உட்பொருள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். ஆபீசர் ஓரியன்டட் ஸ்கீம் என்ற முறையில் உயர்தர அலுவலர்களை நாம் அதிகரித்து அதன் மூலம் இருக்கிற ஸ்டாஃபைக் குறைக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதா அல்லது உண்மையில் 'ரெட் டேப்பிசம்' இருக்கிறது அதைத் தடுக்க, அதைக் குறைப்பதற்காக இந்த ஒரு சீர்திருத்தத்தை அரசாங்கம் நிர்வாகத்தில் நுழைப்பதற்கு முயற்சிக்கிறதா என்பது தெளிவாக்கப்படவில்லை. கால தாமதத்தைப் பொறுத்த வரையில் அடிக்கடி அது இங்கே எடுத்துச் செல்லப்படுகிறது. ஆனால் இதுவரையில் அதில் எந்த விதமான முன்னேற்றத்தையும் அரசாங்கம் அடையவில்லை என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன். மதுரை மாவட்டத்தில் ஒரு கண்மாயைக் குத்தகைக்கு விடுவது, இது சாதாரணப் பிரச்னை இந்த பிரச்னையில் மக்களின் வரிப் பணம் எவ்வளவு பாழாக்கப்பட்டிருக்கிறது அரசாங்கத்தின் கால தாமதத்தினால் என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் குத்தகையை உடனடியாகக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதை மாற்றி கலெக்டர் கீழேயுள்ள தாலுகா அலுவலர் ஒரு உத்தரவு போடுகிறார்கள். ஒரு தனிப்பட்ட நபருக்காக. அதை மீண்டும் கலெக்டர் மாற்றி உத்தரவு போடுகிறார்கள், மீண்டும் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று, அரசாங்க பரிசீலனைக்கு இங்கே வருகிறது. அரசாங்கம் உடனே ஸ்டே கொடுக்கிறார்கள். ஸ்டே கொடுத்துவிட்ட பிறகு உடனடியாக அதில் ஒரு முடிவு கண்டார்களா என்றால் வருடக்கணக்கில் முடிவு எடுக்கப் படாமல் இருந்திருக்கிறது. அதற்குப் பொறுப்பு ரெவின்யூ அதிகாரிகளா அல்லது ரெவின்யூ பொறுப்பிலுள்ள அமைச்சரா என்பது தெளிவாக்கப்படவில்லை. அரசாங்கத்திலிருந்து உத்தரவு கீழே போவதற்குள்ளாக மீன் பிடிக்கக்கூடிய வாய்ப்பும் போய் விட்டது என்று கலெக்டர் ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். இதனால் சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம் கிட்டத்தட்ட ரூ. 10,600. ஒரு சிறிய தாமதத்தினால், ஒரு பேப்பரை சரியாக டிஸ்போஸ் செய்ய முடியவில்லை என்ற குறைபாடு அரசாங்க அளவில் இருக்கிற காரணத்தினால் மக்களின் வரிப்பணம் எப்படிப் பாழாகிறது என்பதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலதாமதத்தைக் குறைக்கவேண்டுமென்று கூறுகிற ஒரே காரணத்தினால் திறமைக்குறைவு ஏற்படக் கூடாது என்ற காரணம் சொல்லக்கூடும். அதை ஒத்துக்கொள்கிறேன். திறமைக்குறைவு ஏற்படக் கூடாதுதான். ஆனால் திறமைக் குறைவு எதனால் ஏற்படுகிறது, எப்படி ஏற்படுகிறது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒரு





இலாகாவில் கேஸிங் பைப்ஸுக்கு ஒரு திட்டம் போட்டு பேப்பர் மூவாகிறது. அதற்காக டென்டர்கள் 'கால் ஃபார்' செய்கிறார்கள். இரண்டு கம்பெனிகள் டென்டர்கள் கொடுக்கிறார்கள் 62-ல். நம் அரசாங்கம் அந்த இரண்டு கம்பெனிகளும் வேண்டாமென்று ரிஜக்ட் செய்கிறது. உடனடியாகப் புதிதாக ஒருவருக்கு உத்தரவை கொடுக்கிறார்கள். அவர் கேட்ட கால அளவிற்குள், டென்டரில் என்ன சொன்னாரோ அதன்படி செயல்படவில்லை. அப்படி செயல்படாவிட்டால் அந்தக் கம்பெனி மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அப்படி நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கத்திற்கு மனம் இல்லை. இதனால் நம் அரசாங்கம் ஏற்கனவே எந்த டென்டர் ரிஜக்ட் செய்யப்பட்டதோ அந்த டென்டருக்குவிட்டு அவர்களிடமிருந்து அந்தச் சரக்கு வாங்கப் படுகிறது. என்ன விலையில்? 21½ ரூபாய்க்கு கொடுப்போம் என்று முதலில் சொல்லியிருக்கிறார்கள். அதை வேண்டாம் என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது. பின்னால் 41½ ரூபாய்க்கு அதே கம்பெனியிடம் வாங்குகிறது. இதன் விளைவு என்ன? அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ. 1,89,296. இந்தக் குறைபாட்டிற்கு யார் காரணம்? நஷ்டம் இதோடு நிற்கவில்லை. காலதாமதம் ஏற்பட்டதின் காரணமாக மத்திய விற்பனை வரி அதிகமாக்கப் பட்டு அதன் காரணமாக, நம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் ரூ. 14,699. இவ்வளவு கஷ்டப்பட்டு வாங்கியதையாவது முறையோடு வாங்கியிருக்கிறார்களா? பார்த்தாவது வாங்கியிருக்கிறார்களா? வாங்கப்பட்ட பைப்களில் உபயோகமற்றுப் போய் இந்த அரசாங்கத்திற்கு முடிவாக வந்ததின் மதிப்பு ரூ. 17,427. ஏன் இந்த ஊழல்கள் நம் நிர்வாகத்தில் ஏற்படவேண்டும்?

ஆக, நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய ஊழல்களை தடுக்கமுடியாமல் இருப்பதற்கு என்ன காரணம்? இப்போது இருக்கின்ற விதிமுறைகள் போதாதா அல்லது அதிகாரிகள்தானா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்வதற்கு மறுக்கின்றபோதுதான் நமக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது. நிர்வாகத்தில் ஏற்படுகின்ற தவறுகளுக்கு அவ்வப்போது அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. அரசியல் அமைப்புச் சட்டம் இதற்கான வகையில் அண்மையில் மாற்றப்பட்டிருக்கிறது. இத்தகைய முறைகள் எல்லாம் இருக்கின்றன என்று உயர்நீதிமன்றங்களில் தெளிவாகத் தீர்ப்புகள் கொடுக்கப்படுகின்றன. சர்க்காரிடத்தில் விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளை அதிகாரிகள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் விதிகள் இருப்பதைப் பரிசீலிக்க மறுக்கிறார்கள். இதன் காரணமாக மக்களுடைய வரிப் பணம் பாழாக்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் ஒரு இலாகாவில் ஒரு அதிகாரி ஏதோ தவறு செய்தார் என்பதற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்டார். இவ்விதம் டிஸ்மிஸ் செய்தது விதிகளின்படி சரியல்ல, விதிகளை நன்றாகப் பரிசீலிக்கவில்லை என்று உயர்நீதிமன்றம் எடுத்துச்சொன்னது. கீழேயிருக்கின்ற அதிகாரி இதைப்பற்றி வேறு ஒரு கருத்துத் தெரிவித்திருக்கிறார். அதைப் பரிசீலிப்பதற்கு யாரும் முன்

வரவில்லை. இதன் காரணமாக வழக்கு நீதிமன்றத்தில் வெற்றி பெறவில்லை. மீண்டும் வழக்குத் தொடரலாமா என்று கேட்டு கீழே போன பின்னால் வழக்கைத் தொடரலாம் என்று கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இவ்விதம் இரண்டு கோர்ட்டுகளிலும் தள்ளுபடி. செய்வதற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றியும் சட்ட இலாகா—உயர்நீதிமன்றத்திலுள்ள தீர்ப்பைபற்றியும் பரிசீலித்தது. ஆரம்பத்தில் வழக்குப் போடலாம் என்று சொன்னதும் இதே சட்ட இலாகா தான். ஆரம்பத்தில் சொன்ன கருத்தை வைத்துக் கொண்டு கவர்ன்மென்ட் ப்ளீடர் வழக்குப் போடுகிறார். பின்னால் கேட்கும் போது, இதே சட்ட இலாகா 'இல்லை, இல்லை' 'நாங்கள் கருத்துக்களை மாற்றிக்கொண்டு விட்டோம், நீதி மன்றத்திற்கு இந்த வழக்குப்போகக்கூடாது' என்று சொல்லுகின்றார்கள். இந்த விதமான முரண்பாட்டுககுக் காரணம் என்ன? இவ்விதமான முரண்பாடு ஏற்பட்டதின் காரணமாக ஏற்பட்ட நஷ்டம் 50 ஆயிரம் ரூபாய். ஏன் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டது ஏன் இந்த நஷ்டம் சர்க்காருக்கு ஏற்பட இடம் கொடுத்திருக்கவேண்டும்? இதில் அதிகாரிகள் கவனம் செலுத்தாதது ஏன்? இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால் தான் ஊழல்கள் ஏற்படுகின்றன. இதை மாற்றி அமைப்பதற்கு—சட்டமன்றத்தில் அமைக்கப்படுகின்ற குழுக்களுக்கு இப்படிப்பட்ட பதில்கள் தருகின்ற நேரத்தில் அந்த அதிகாரி சம்பந்தமான ஃபைல்கள் எங்கே என்று பார்க்கும்போது சம்பந்தப்பட்ட அதிகாரியின் ஃபைல் கிடைக்கவில்லை. இதன் மூலமாகச் சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம் 50 ஆயிரம் ரூபாய். இருந்தும், இவ்வளவு பெரும் நஷ்டத்திற்குக் காரணமாயிருக்கின்ற ஒரு அதிகாரியினுடைய ஃபைல் எங்கே என்று கேட்கும்போது, ஃபைல் காணப்படவில்லை என்கின்ற பதில் தான் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தரப்படுகிறது. இப்படிப்பட்ட நிலை ஏன் ஏற்படுகிறது? அதிகாரி இங்கே வந்து ஏதாவது செய்திருப்பார் என்றுதான் ஊகிக்கவேண்டியிருக்கிறது. இதன் காரணமாகத் தான் ஊழல்களும் பெருகிவருகின்றன. இதைப்பற்றி நிர்வாகச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று சொல்லுகின்ற நமது முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழேயிருக்கின்ற மாவட்ட அதிகாரிகள் சில திட்டங்களைச் செயலாற்ற வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், சரியான முறையில் செயல்படுத்துகிறார்களா என்ற கண்காணிப்பு இன்றைய தினம் சரியாக இல்லை. புதிய கிணறுகளை வெட்டவேண்டும் என்ற திட்டம் நீண்ட நாளாக இருந்து வருகிறது. இதை சர்க்கார் அமல் நடத்தும்போது சரியான முறையில் அமல் நடத்தப்படுகிறதா என்று பார்ப்பதில்லை. 1962-63-ல் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 18 லட்சம். ஆனால் பயன்படுத்தியிருக்கும் தொகை கிட்டத்தட்ட ரூ. 7 லட்சம். மீதியிருப்பது ரூ. 11 லட்சம்.

உணவு உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றி நாம் அனைவரும் பிரமாதமாகப் பேசிக்கொண்டேயிருக்கிறோம். இதற்காகப் பல திட்டங்களைப் போடுகிறோம். ஆனால் இவ்விதம் போடப்படுகிற



திட்டங்கள் சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை என்றால், நாம் போடுகின்ற திட்டத்தினால் பலன் உண்டா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதே போன்றுதான் 1963-64-ல் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 14 லட்சம், செலவு செய்திருப்பது ரூ. 7 லட்சம். இவ்விதம் குறைத்துச் செலவழிக்க வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டிருக்கிறது? மாவட்ட மன்றக் கூட்டங்களில் இதைப்பற்றி நாங்கள் கேட்கிறோம், ஆனால் சரிவர பரிசீலனை செய்வதில்லை. இதற்கு என்ன காரணம்? அரசாங்கத்தின் செயல் முறைகளில் இருக்கின்ற தவறா, அல்லது திட்டங்களில் இருக்கின்ற தவறா, அல்லது அதிகாரிகளினால் செயல்படுத்த முடியவில்லையா என்பதைச் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கொள்முதல் செய்யவேண்டும் என்று பொதுவான சில உத்தரவுகளை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது. ஆனால், அவைகளை எப்படியெல்லாம் செயல்படுத்துவது என்பதற்கான விரிவான விளக்கங்களை அரசாங்கம் கொடுக்கவில்லை. இதன் காரணமாக ஏற்படுகின்ற ஊழல்களைப்பற்றி நாங்கள் அடிக்கடி இங்கே சொல்லி வருகின்றோம். இங்கே கேட்கும்போது, எந்தவிதமான டார்ஜெட்டும் போடவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் கீழே கொள்முதல் நடத்துவதில் பல ஊழல்கள் நடக்கின்றன, கொடுமையான பல நடவடிக்கைகள் நடக்கின்றன. கொள்முதலைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள், எழுதியுமிருக்கிறார்கள். "ப்ரொக்யூர்மெண்ட் வித்அவுட் டியர்ஸ்", கண்ணீர் இல்லாத கொள்முதல் என்ற முறையில் மிக விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் இதைப்பற்றி விவாதித்தார்கள். அப்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை மத்திய அமைச்சர் அவர்கள் உள்ளத்திலே ஏற்றுக் கொண்டு ஓர் அறிக்கை தயார் செய்து உறுப்பினர்களுக்கெல்லாம் அனுப்பி உங்கள் யோசனைகளைக் கூறுங்கள் என்று கேட்டார்கள். அங்கே இவ்விதம் எல்லாம் நடந்திருக்கக்கூடிய நேரத்தில், இங்கே நமது அமைச்சர் அவர்களுக்கு இதைப்பற்றிச் சரியான பதில் சொல்வதற்குக் கூட மனம் வரவில்லை. கண்ணீர் இல்லாத கொள்முதல் என்று சொல்லுகிறார்களே தவிர, உண்மையில், அவ்விதம் செயல்படவில்லை, கடுமையாகத்தான் நடைபெற்றுவருகிறது, ஆகவே இவைகளை எல்லாம் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுகின்ற வகையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மாவட்ட நிர்வாகத்தைப்பற்றி அவ்வளவு விரிவாக அறிந்து கொள்ளுகின்ற வாய்ப்பு இல்லாவிட்டாலும்கூட, தங்கள் அனுமதியோடு ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்லவிரும்புகிறேன். குறிப்பாக மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், மாவட்டத்தின் அளவு பெரிதாக இருக்கிறது என்ற எண்ணத்தில் பிரிக்கவேண்டும் என்று

சொல்லப்பட்டது. அந்த அடிப்படையில் சேலத்தை இரண்டாகப் பிரித்தோம். சில மாவட்டங்களில் டி.ஆர்.ஓ. என்றும் ஜாயின்ட் கலெக்டர் என்றும் அதிகாரிகளைப் போட்டு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தைத்தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் இரண்டு கலெக்டர்களைப் போட்டு வேலை செய்வார்களேயானால் இன்னும் சற்று துரிதமாக வேலை நடப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கலெக்டர், டி.ஆர்.ஓ. என்று போடும்போது, எந்தெந்த இலாகாக்கள், டி.ஆர்.ஓ. வினிடத்தில் இருக்கிறது? எந்தெந்த இலாகாக்கள் கலெக்டரிடம் இருக்கிறது என்கின்ற விவரங்கள் சரியாகத் தெரியாத காரணத்தால் சிறு குழப்பங்கள் அங்கங்கே இருந்து வருகின்றன. இதை நிவர்த்தி செய்வதற்கு எந்தெந்த முறையில் இலாகாக்கள் இருக்கும் என்பதை வரையறுத்துக் கொடுப்பது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, மாவட்ட கலெக்டர்களாக இருப்பவர்கள், சில நேரங்களில் க்வாஸி ஜுடிஷியல் வேலைகளை எடுத்துச் செயலாற்றும் போது சில சட்டங்களின் அடிப்படையில் தீர்ப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மோட்டார் வெஹிக்கல்ஸ் ஆக்ட், ஸினிமாட்டோகிராப் ஆக்ட் என்ற சில சட்டங்களுக்குட்பட்டு இவர்கள் நியாயாதிபதிகளாக இருந்து சட்டக் கண்ணோட்டத்தோடு கவனித்துவருவது சிறந்ததாக இருக்கும். ஏன் இதைச் கூறுகிறேன் என்றால் இரண்டு பேர்கள் சினிமா கொட்டகைக்காக அப்ளிக்கேஷன் போடுகிறார்கள் என்றால், அதில் இரண்டு பேர்களும் மனுச் செய்திருக்கிற இடத்தை எடுத்துக்கொண்டால், ஒருவர் கேட்டிருக்கும் இடத்திற்கும் இன்னொரு இடத்திற்கும் நாலைந்து ஃபர்லாங் அல்லது 1 மைல் தூரம் இருக்கும். ஆனால் இதன் பேரில் உத்தரவு போடும் போது காரணங்களை ஒன்றும் தெளிவாகச் சொல்லாமல், எழுதிவிடுகிறார்கள். இதன் காரணமாக கோர்ட்டில் வரும்போது சீக்கிரமாகத் தள்ளிவிடுகிறார்கள். நன்றாகக் கவனியாமல் ஆர்டர் எழுதிவிடுவதால்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. இதன் காரணமாக இருக்கின்ற பணத்தையும் அப்பீலுக்கு என்று வந்து செலவு செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கையிலுள்ள சில ஆயிரம் ரூபாய்களைப் போட்டு ஏதாவது சினிமா நடத்தலாம் என்று வருகின்றவர்கள் இதில் வந்து பெரிய அவஸ்தையில் மாட்டிக்கொள்கிறார்கள். அதே போன்று சில சட்டங்களை அமல் நடத்தும்போது அதிகாரிகள் எந்த அளவுக்குச் சட்ட நுணுக்கங்கள் இருக்கிறது என்பதில் சற்று அக்கறை காட்டுவார்களேயானால் கள்ளங்கபடமற்ற சாதாரண மக்கள் காப்பாற்றப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பெல்லாம் இருந்த ஐ.ஸி.எஸ். அதிகாரிகள் தங்களிடம் வந்த அப்ளிகேஷன்களில் ஏதாவது தீர்ப்பு எழுதித் தள்ள வேண்டுமானாலும், ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றாலும் சரியாக எல்லாவற்றையும் குறிப்பு எழுதிவிடுவார்கள், ரிட்டில் வந்தால் கூட அந்தக் குறிப்புக்கள் அசைக்க முடியாத நிலையில் இருக்கும். அதே போன்று ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் கவனிப்பார்கள் என்றால்





பல கஷ்டங்களைத் தவிர்க்க முடியும் என்று நினைக்கிறேன். இதே போன்று கலெக்டர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வருவது என்பது இப்போது குறைந்து கொண்டே வருகிறது. அவர் வருகைக்காக 50 பேர்கள், இரண்டு மணிநேரம், மூன்று மணிநேரம் காத்துக் கொண்டிருக்கின்ற நிலையை நாம் பார்க்கிறோம். **எத்தனையோ** வேலைகளை விட்டுவிட்டு அங்கே போய் காத்திருக்கவண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட குறைகளை அதிகாரிகள் தீவிர்க்க முயற்சி எடுத்துக்கொள்வது நல்லது. கலெக்டர் சரியாக இருந்தால்தான் மற்ற அதிகாரிகளும் மாவட்டத்தில் சரியாக இருப்பார்கள். தலைவரே காலதாமதமாக வந்தால், இருக்கிற கிளார்க்குகள் எத்தனை மணிக்கு வருவார்களோ? அவர்கள் நேரத்தில் வருவார்கள் என்பது சந்தேகம்தான். நிர்வாகத்திலே தலைமை தாங்கும் அதிகாரிகள் முடிந்தவரையில்—எங்களைப் போன்ற அரசியல் வாதிகள் வேண்டுமானால் காலதாமதமாக வரலாம், புறப்படும் போது பல பேர்கள் வோட்டர்கள் வருவார்கள், போ என்றும் சொல்ல முடியாமல், வா என்றும் சொல்ல முடியாமல் இக்கட்டில் மாட்டிக் கொள்ள வேண்டியிருக்கும்—காலத்தில் வந்து, குறித்த காலத்தில் வேலையை ஆரம்பிப்பது என்று முயற்சி எடுத்தால் ஓரளவுக்குத் தாமதத்தைத் தவிர்க்கலாம்.

சில இடங்களில் அதிகாரிகளை மக்கள் போய்ப் பார்ப்பது என்பதே முடியாது இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சிலரை எம்.எல்.ஏ.-க்கள் போய்ப் பார்ப்பதே கடினமாக இருக்கும்போது பொது மக்கள் எப்படிப் போய்ப் பார்க்க முடியும்? பொது மக்களைச் சந்திப்பதில் கொஞ்சம் தாராளமாக இருக்கவேண்டும். குறித்த காலத்தை வைத்து பொது மக்களைச் சந்திக்க ஏற்பாடு செய்து அவர்கள் குறைகளைக் கூறும்போது, நன்மை தீமைகளைப் பற்றிச் சொல்லும்போது நிலைமைகளைப் புரிந்துகொள்வதற்குக் கலெக்டருக்கே ஒரு வாய்ப்பாக இருக்கும். இல்லாவிட்டால் நிர்வாகத்தில் இருக்கிறவர்கள் சொல்லுவதைத் தான் கவனிக்க முடியுமே தவிர உண்மையைத் தெரிந்துகொள்ள முடியாது. மக்களிடத்திலிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளுவது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்து அறநிலையத் துறை பற்றி இந்த மானியத்தின்கீழ் தான் கொண்டு வருகிறார்கள். பல கோவில்களின் சொத்துக்களைப் பலர் பல்லாண்டு காலத்திற்கு முன்னாலிருந்து தானம் கிடைத்த மாதிரி அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலைமையைச் சீரமைத்து அந்தகைய சொத்துக்களைக் கோவிலுக்குத் திருப்பிக்கொண்டு வர சட்ட அறிவு இருப்பவர்கள் ஓயாது உழைத்தால்தான் முடிகிறது. டிரஸ்டிகளாக இருக்கிறவர்கள், அதிகாரம் இல்லாத அதிகாரிகள், வேலை செய்கிறோம். வந்து விடுகிறோம். எக்ஸிக்யூட்டிவ் ஆஃபீஸர்களை ஆறு மாதங்களுக்கு அல்லது வருஷத்திற்கு ஒரு முறை மாற்றிக்கொண்டிருக்கிறோம். கோவிலுடைய சொத்து என்ன, அவைகளில்

நிலைமை என்ன, எங்கே சிக்கிக்கொண்டிருக்கின்றன என்று சிந்தித்துப் பார்க்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அற நிலைய இலாகாவில் சட்ட இலாகா என்று ஒரு பிரிவை ஏற்படுத்தி, சொத்துக்களைப் பராமரிக்க என்று ஒரு பகுதியை ஏற்படுத்தினால் கோவில் சொத்துக்கள் எப்படியெல்லாம் யார் யார் கையில் மாட்டிக் கொண்டிருக்கிறது என்று பார்த்து மறுபடியும் கோவிலின் நிர்வாகத்திற்குக் கொண்டு வந்து எப்படி வருமானத்தைப் பெருக்குவது என்று சிந்தித்துப் பார்க்க முடியும்.

* திரு. பி. முருகையன் : மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று கொண்டு வரப்பட்டிருக்கிற மான்யங்களின் மீது நானும் என் கட்சிக்காரர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணைகள் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று எனக்கு முன் பேசிய பல அங்கத்தினர்களும் மாவட்ட நிர்வாகம் சரிவர நடைபெறவில்லை என்றும், மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்றும் எடுத்துக் கூறினார்கள். என்னைப் பொறுத்த வரையிலும் நானும் இதைப் பற்றி விளக்கமாக விரிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் இருக்கிற பெரிய பிரச்னை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து புதுக்கோட்டையை ஒரு தனி மாவட்டமாக ஆக்கவேண்டுமென்பதுதான். இந்தப் பிரச்னை நீண்ட நாட்களாக இருந்துகொண்டு வருகிறது. அப்போதுதான் நிர்வாகம் சரியாக நடத்த முடியும். அண்மையிலே நடைபெற்ற தேர்தலின்போது சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்ததுபோல 1966-67-ல் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் காலங்களில் புதுக்கோட்டையை தனியாகப் பிரித்து தனி மாவட்டமாக்க தீர்மானம் வைத்திருக்கிறார்களோ என்னவோ புரியவில்லை. அப்படிப்பட்ட நிலைமையை அந்த நேரத்திலாவது உருவாக்கித் தர வேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

புதுக்கோட்டையில் ஒரு உதவிக் கலெக்டர் இருக்கிறார். ஆண்டுக்கு ஒருவரைப் புதிதாகப் போட்டு அவர்கள் தங்கள் வேலைகளைப் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். அப்படி போடப்படுகிற உதவிக் கலெக்டர், நடக்க வேண்டிய காரியங்களையும் அலுவலகத்தில் இருக்கிற நிர்வாகத்தையும் புரிந்துகொள்வதற்கு ஏறத்தாழ ஓராண்டுக் காலம் ஆகிறது. ஓராண்டிற்குள் அவரை மாற்றி விடுகிறார்கள். வருகிறவர் புதிதாக அவைகளைப் புரிந்துகொள்ளவேண்டிய நிலைமை இருக்கிறது. இதனால் உதவிக் கலெக்டர் நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இது பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் நல்ல



முறையில் கவனம் செலுத்தி நீண்ட நாட்களுக்கு ஒருவர் இருந்து உதவிக் கலெக்டர் வேலையில் பணியாற்ற விடவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல, மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் நடைபெறுகிற கூட்டங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கேள்விகள் கேட்கவும், தீர்மானங்கள் கொடுக்கவும் வழி செய்து இரண்டு உரிமைகள் இருந்தன. இப்போது கேள்விகள் கேட்பது என்பது எடுக்கப்பட்டு, தீர்மானங்களின்மீது மட்டும் கேள்வி கேட்கலாம் என்று இருக்கிறது. தீர்மானங்களும் நல்ல முறையில் பரிசீலிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றனவா என்றால், அப்படிச் செய்யப்படுகிறது என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. காரணம், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஆலோசனை கூறும் அந்தஸ்தைப் பெற்றிருக்கிறதே தவிர, நிர்வாகத்தை ஏற்று நல்ல முறையில் நடத்த அந்த மன்றம் இருக்கிறதா என்றால், உள்ளபடி அப்படி இல்லை என்றுதான் நான் கூற ஆசைப்படுகிறேன். மாவட்ட வளர்ச்சிக் கவுன்சிலுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக இந்த லெவி கொள்முதல் பற்றிப் பல அங்கத்தினர்கள் கூறினார்கள். லெவி கொள்முதல் செய்யும் நேரத்திலே பல அங்கத்தினர்கள் கூறியது போல விவசாயிகளிடம் கட்டாயப்படுத்தி, துன்புறுத்திக் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த நிலைமையில் தஞ்சை ஜில்லாவுக்கும், திருச்சி ஜில்லாவுக்கும் ஒரே பிரிவாகப் பிரித்து கணக்கு வைத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். திருச்சி ஜில்லாவிலே கணக்கு எடுக்கும் நேரத்தில் புதுக்கோட்டையைப் பிரத்தியேகமாகக் கவனம் செலுத்தி லெவி கொள்முதலில் விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று கனம் உணவு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன்களிலே ஆசிரியர்கள் புதிதாக நியமனம் செய்யப்படும் நிலைமை ஏற்படுகிறது. அப்படி ஆசிரியர்களை நியமிக்கும் நேரத்திலே கடந்த ஆண்டு எங்கள் தொகுதியில் இருக்கும் பஞ்சாயத்து யூனியனிலே ஆசிரியர்களைப் புதிதாகப் போட 50 ரூபாய், 100 ரூபாய் வாங்கிக்கொண்டு ரசீது வழங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைப் போக்கவேண்டுமென்று ஆட்சியில் இருக்கிற அமைச்சர்களுக்கு நான் தங்கள் மூலம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன்கள், முதியோர்களுக்குக் கொடுக்கும் பென்ஷன், ஓய்வு பெற்றவர்களுக்குக் கொடுக்கும் பென்ஷன் இவைகளை நல்ல முறையிலே கொடுக்க அமைச்சர் அவை முன் வரவேண்டுமென்று தங்கள் மூலமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தாசில்தார்களுக்கு "ஜீப்" கொடுக்கவேண்டும். தாசில்தார்கள் தங்கள் வேலைகளைக் கவனிக்க முடியாமல் பல தொல்லைகளை மேலதிகாரிகள் கொடுத்து வருகிறார்கள். அதேமாதிரி கிராமத்தில் இருக்கும் கணக்கப்பிள்ளை, மணியக்காரர்கள் தங்கள் வேலைகளைச் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். இதிலிருந்து தடுக்கப்பட வேண்டும். ஜமாபந்தி காலத்தில் அவர்கள் தப்புத் தவறான புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. அ. ராகவ ரெட்டி: கனம் சபாநாயகர் அவர்களே, ஜில்லா நிர்வாகத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் பேச எனக்குச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக முதன் முதலாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே எனக்கு முன் பேசிய சில அங்கத்தினர்கள் அமைச்சர்களை வரவேற்கவே கலெக்டர்களுக்கு நேரமெல்லாம் போகிறது என்று சொன்னார்கள் அல்லவா, ஆனால் எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையிலே தினந்தோறும் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வரும் அமைச்சர்கள் அதிகாரிகளை வரவேற்பதிலேயே எங்கள் கலெக்டருடைய காலம் அதிகமாகச் செலவாகிப் போகிறது. இந்த நிலையிலே கலெக்டர்கள் ஜில்லாவிலே பல இடங்களுக்குச் செல்ல, அங்கு தங்க சந்தர்ப்பம் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. இது கனம் அமைச்சர்களுக்குக்கூடத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். இதை மாற்றி வரும் தலைவர்களை வரவேற்க சென்னை கலெக்டரை நியமிக்கவேண்டுமென்ற ஒரு யோசனையைக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஜில்லா நிர்வாகத்தைப் பொறுத்த வரையிலே, குறிப்பாக கடந்த ஒரு ஆண்டுக் காலமாக எப்போது பார்த்தாலும் சிறு சேமிப்புத் திட்டம் முதல் கடைசியாக எலெக்ட்ரிஸிட்டி பான்ட்ஸ் கலெக்ஷன் வரையில் இந்த வேலைகளுக்கே போகிறதே தவிர ஜில்லா நிர்வாகத்தைப் பற்றி கவனம் செலுத்துவதற்குக் கொஞ்சம் கூட சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. இந்த வசூல் வேலை இத்துடனாவது முடிந்து விட்டதோ என்னவோ தெரியவில்லை.

ஜில்லா நிர்வாகத்திலே குறிப்பாக ரெவின்யூ டிப்பார்ட்மென்ட்டிலே செய்ய வேண்டிய வேலைகளை ஒரு வேலை கூட சரிவரச் செய்வதில்லை. ஏனென்றால் இப்போது புதிதாக வேலை உயர்த்தப்பட்ட டெபுடி தாசில்தார்கள் சரியானவர்கள் அல்ல என்று நான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. 1948-49-ல் 10 தாசில்தார்கள் இருந்த மாவட்டத்தில் இன்றைக்கு 150 தாசில்தார்கள் இருக்கிறார்கள். தகுதியற்றவர்கள் எல்லோரையும் தாசில்தார்களாகப் போட வேண்டிய நிலை இருக்கிறது. அதன் பலன் என்ன என்றால் சாதாரண குமாஸ்தாவாக இருந்த ஒருவர் மறு நாள் காலையில் டெபுடி தாசில்தாராக உயர்த்தப்பட்டு அனுப்பினால் பழைய குமாஸ்தாவாக





இருந்த நிலைமையை அவர் மறப்பதே இல்லை. அங்கு ஒரே ஊழல் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் எவ்வளவோ சொல்லலாம். ஆனால், 12-00 noon
அதையெல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை நான் கேள்விப்பட்ட வரையில் பொதுவாக ரெவின்யூ அட்மினிஸ்டிரேஷன் எந்த மாவட்டத்திலும் சரியாக நடக்கவில்லை என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது.

குறிப்பாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எனது தொகுதியில் ஒரு கிராமத்தில் 1947-48-ல் வெல் ஸப்ஸிடி ஸ்கீமின் கீழ் ரூ. 300 இனமாகக் கொடுக்கப்பட்டது. அந்தக் கிணற்றை வெட்டி முடித்துவிட்டார்கள். அப்பொழுது அதிகாரிகள் சென்று அந்தக் கிணற்றை பார்வையிட்டதாகக்கூட கிராமவாசிகள் சொல்லுகிறார்கள். இப்பொழுது திடீரென்று அவர்களுடைய பயிர்களை அறுவடை செய்வதற்கு முன்னால் ஜப்தி செய்து விட்டு, அந்த ரூபாயை வட்டியுடன்கூட உடனே கட்ட வேண்டும் என்று அதிகாரிகள் சொன்னதாக என்னிடம் அந்த மக்கள் கூறினார்கள். நான் உடனே ஒரு மனுவைத் தயார் செய்து கொண்டு, ஜில்லா கலெக்டர் ஆபீஸில் நானே நேரில் எடுத்துக் கொண்டு கொடுத்தேன். உடனே ஸ்டே ஆர்டர் போட்டு, விசாரணை செய்து உண்மை என்னவென்று பார்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொண்டு ஆவன செய்யவேண்டுமென்று சொல்லி வந்தேன். ஒரு மாதம் ஆகிறது, இன்றுவரையில் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தப் பயிர் அறுக்காமலேயே அப்படியே காய்ந்து போய்விட்டது. இந்த நிலை ஜில்லாவில் இருந்துகொண்டிருக்கிறது. இம்மாதிரி எத்தனையோ சம்பவங்களைச் சொல்லிக்கொண்டிருக்கலாம். இம்மாதிரி தவறாக நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்டந்தோறும் ஓனர்ஷிப் சர்டிபிகேட், சான்றிதழ் வாங்குவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன, சரியான முறையில் தரப்படவில்லை என்று நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். செங்கல்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரம்புதூரில் ஒரு ஓனர்ஷிப் சான்றிதழ் தேவை என்று தாலுகா ஆபீசில் மனுப் போட்டு 6 மாதங்கள் ஆகியும் இன்னும் அந்த சர்டிபிகேட் கிடைக்கவில்லை. ஓனர்ஷிப் சர்டிபிகேட் வருவதற்குள் எலக்டிரிசிடி கட் வந்துவிட்டது. நாம் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். இவ்வளவு கால கட்டத்திற்குள் சான்றிதழ் கொடுக்கப்படவேண்டும் என்று ஒரு முறையை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். அப்ளிகேஷன் போட்ட மூன்று மாதங்களுக்குள் ஓனர்ஷிப் சர்டிபிகேட் கொடுத்துவிடவேண்டும் என்ற ஒரு நியதியை நாம் வற்புறுத்தவேண்டும். அந்தமாதிரி

ஆர்டர் போட்டுவிட்டால் இவ்வளவு காலத்திற்குள் ஓனர்ஷிப் சர்டிபிகேட் கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கை விவசாயிகளிடத்தில் ஏற்படும், பொது மக்களுக்கும் ஒரு நல்ல ஏற்பாட்டை நாம் செய்தவர்களாவோம் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, டி.டி.ஸி. மீட்டிங்கில் கலெக்டர் அவர்கள் தலைமை வகிப்பதா அல்லது மற்ற அங்கத்தினர்களில் ஒருவர் தலைமை வகிப்பதா என்ற பிரச்னையை எடுத்துக்கொண்டால், கலெக்டர்களைவிட மற்ற அங்கத்தினர்கள் ஒன்றும் குறைந்துவிடவில்லை. அங்கத்தினர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆகவே, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒருவரை தலைவராக உட்காரவைத்து, அவர் தலைமையின்கீழ் மற்ற அங்கத்தினர்கள் இயங்குவது என்றால், அவர் சில சமயங்களில் ஒருசில கோரிக்கைகளுக்கு அனுமதி மறுக்கலாம், அதையும் கூட அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும், இது அவ்வளவு முறையாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருந்தாலும் சரி, எம்.எல்.ஏ.வாக இருந்தாலும் சரி, அல்லது பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட யாராவது ஒருவரை, வருடா வருடம் ஒருவரை தலைவராக வைக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

நான் இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தில் கலெக்டர் ஆபீசில் ரைஸ் மில் வைப்பதற்கு லைசென்சுக்காக கொடுக்கப்பட்ட 70, 80 அப்ளிகேஷன்கள் இன்னும் 'பெண்டிங்காக' இருக்கின்றன. அது பற்றி முடிவு ஏற்படவில்லை. ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் பொழுது உணவு அமைச்சர் அவர்கள் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டால் அந்த இடங்களுக்கு நாங்கள் லைசென்ஸ் கொடுத்துவிடுகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அங்கே நடப்பது என்ன ? இவர்கள் இங்கே சொல்லுவதற்கும் அவர்கள் அங்கே நடப்பதற்கும் முறை வேறாக இருக்கிறது. ஒன்றுக்கொன்று குழப்பமான ஒரு கொள்கையாக இருக்கிறது. இங்கே அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய உறுதி வேறு, அங்கே செய்யப்படுவது வேறு. கட்டடம் கட்டி முடிந்த ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ் கொடுத்துவிடுவோம் என்று இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் ஆனால் அங்கே நிலைமை வேறு, செயல்படுவது வேறு ரூ. 40,000, ரூ. 50,000 செலவு செய்து கட்டடம் கட்டிவிட்டு, அவர்களுக்கு லைசென்ஸ் வராமல் இருப்பது பெரும் குறையாக இருக்கிறது. என்னுடைய மாவட்டத்தில் இது ஒரு பெரிய தலைவேதனையாக இருக்கிறது. அம்மாதிரி நிலைமை இருக்கக்கூடாது. அமைச்சர் அவை இதில் சரியான முடிவை மேற்கொள்ளவேண்டும். ரூ. 40,000, ரூ. 50,000 செலவு செய்து கட்டிடம் கட்டி முடித்தவர்களுக்கு ரைஸ் மில் துவக்குவதற்கு காலதாமதம் இல்லாமல் அனுமதி கொடுத்துவிட வேண்டும் என்று தான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





வயதானவர்களை கலெக்டர்களாக நியமிக்கலாமா அல்லது இளைஞர்களை நியமிக்கலாமா என்ற பிரச்னையை எடுத்துக்கொண்டால், இளைஞர்களை நியமிப்பது தான் சரியான முறை என்று நான் சொல்லுவேன். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் அனுபவித்துத் தான் எழுதியிருக்கிறார்கள். இளைஞர்களாக இருப்பவர்களின் வாய்ப்பை, உற்சாகத்தை பயன்படுத்திக்கொள்ளலாம் அரசாங்கம். எங்கள் மாவட்டத்தில் அருமையான கலெக்டர் ஒருவர் இருக்கிறார். அவர் நல்ல இளைஞர். நமது அமைச்சர் அவர்களின் நல்ல மாப்பிள்ளையாக இருக்கிறார். அவர் நல்ல கலெக்டர். அவரைப்பற்றி எங்கள் மாவட்டத்தில் நல்ல அபிப்பிராயம் இருக்கிறது. நான் சொன்னதற்காக அவரைப்பற்றி வேறு அபிப்பிராயம் கொள்ளவேண்டாம். நான் சொல்லவந்தது என்னவென்றால், வயது ஆனவர்களைப் போடுவதைவிட இளைஞர்களைக் கலெக்டராகப் போட்டால் நல்லது. எங்கள் மாவட்டத்தில் வயதானவர் ஒருவர் கூட கலெக்டராக வரவில்லை. சிலர் கலெக்டர்களை மிரட்டுகிறார்கள். குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு சில காங்கிரஸ்காரர்கள் கலெக்டரை மிரட்டுகிறார்கள். அதனால் தான் நிர்வாகச் சிக்கல் ஏற்படுகிறது. ஊழல் ஏற்படுகிறது. கலெக்டர்களை ஃப்ரீயாக பணிபுரிய நாம் விட்டுவிட வேண்டும். பப்ளிக் மீட்டிங் போடுவதற்கு கலெக்டர் வர வேண்டுமா ? அங்குள்ள காங்கிரஸ்காரர்கள் இதைச் செய்யக் கூடாதா ? கலெக்டர்கள் ஏன் அந்த வேலையைச் செய்யவேண்டும் ? அமைச்சர்கள் பயமும், உள்ளூர் காங்கிரஸ்காரர்கள் 'இண்டர்வென்ஷனும்' தான் இதற்குக் காரணம்.

அடுத்தபடியாக, அமைச்சர் அலுவலகங்களிலுள்ள ப்யூன்களுக்கு உடைகள் வழங்கப்படுகின்றன. ஆனால், கலெக்டர் ஆபீசில் டபேதாருக்கு மட்டும் தான் யூனிபாரம் இருக்கிறது. மற்ற சிப்பந்திகளுக்கு யூனிபாரம் கொடுக்கப்படுவதில்லை. மற்ற சிப்பந்திகளுக்கும் யூனிபாரம் வழங்கினால் தான் இவர் கலெக்டர் ஆபீஸ் சிப்பந்தி, இவர் தாலுகா ஆபீஸ் சிப்பந்தி என்று தெரிந்துகொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே உடைகளை அவர்களுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது). அதற்குள் சபாநாயகர் அவர்கள் மணி அடித்துவிட்டார்கள். இன்னும் ஒரே ஒரு நிமிஷம் அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பட்ஜெட் விவாதத்தில் கூட நான் பேசவில்லை. செங்கல்பட்டு மாவட்டத்தைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை. அங்கு டி.ஆர்.ஓ. இருக்கிறார். அங்குள்ள 'பி' செக்ஷன் ஹெட்கிளார்க் ஒருவரை நம்பித்தான் அவர் வேலை செய்கிறார். அவர் சொல்லியபடி தான் டி.ஆர்.ஓ கேட்கிறார் ; பேரை பார்த்து, நிலைமையைப் பார்த்து, அவரே ஏன் ஒரு முடிவுக்கு வரக்கூடாது ? ஏன் 'பி' செக்ஷன் கிளார்க்கை நம்பியிருக்கவேண்டும் ? ஏன் இப்படி நடக்க வேண்டும் ? சில டி.ஆர்.ஓ-க்கள் இம்மாதிரி நடந்துகொள்ளுகிறார்கள்.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். செங்கல்பட்டு மாவட்டம் சிறிய மாவட்டம். வட ஆற்காடு மாவட்டம்

பெரிய மாவட்டம். அந்தப் பெரிய மாவட்டத்திலிருந்து சில தாலுக்காக்களை நீக்கிவிட்டு, செங்கல்பட்டு மாவட்டத்தோடு சேர்த்து, செங்கல்பட்டை இரண்டாகப் பிரித்து, காஞ்சிபுரத்தை ஒரு ஜில்லாவாக அமைத்தால், நிர்வாகம் செய்வதற்கு வசதியாக இருக்கும். ஒரு மாவட்டத்திற்கு இரண்டு கலெக்டர்கள் இல்லையா? டி.ஆர்.ஓ. கலெக்டர் என்று இரண்டு பேர்கள் இல்லையா? சுற்றுப் புறத்தில் இருக்கக் கூடிய செய்யாறு, அரக்கோணம், ராணிப்பேட் இவைகளையெல்லாம் சேர்த்து காஞ்சீபுரத்தை ஒரு ஜில்லாவாக அமைத்தால் வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விளம்பர இலாகா என்று ஒரு இலாகா இருக்கிறது. சர்க்கார் செய்யக் கூடிய வேலைகளை விளம்பரம் செய்வது தான் இந்த இலாகாவினுடைய வேலை என்று நினைக்கிறேன். பொன் குடத்திற்கு ஏன் பொட்டுக் கட்டவேண்டும்? அலுமினியக் குடமாக இருந்தால் தான் பொட்டு வைக்கவேண்டும், பொன் குடத்திற்கு எதற்காக பொட்டு வைக்கவேண்டும்? இதற்கு ஆகக்கூடிய செலவு வீண்தான் என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*** திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மான்யங்களின் மொத்தத் தொகை சுமார் 50 கோடியாகும். அதற்கான மான்யம் கோரப்படுகிறது.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இந்த மான்யக் கோரிக்கையின் 'மீது. . . . (குறுக்கீடு) கனம் முதல் அமைச்சர் அவர்கள் நேற்றும், இன்றைக்குமாகச் சேர்ந்து ரூ. 100 கோடிக்கு மேலாகி விட்டதாகச் சொல்லுகிறார்கள். நேற்று சுமார் ரூ. 50 கோடி மான்யத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. கல்வி என்பது பெரிய விஷயம். அதைப் பற்றி ஒரே நாளில் பேசவேண்டும் என்றதனால் தான் ரொம்ப சிக்கல்கள் வந்தன. எனக்குக் கூட வருத்தம். பல விஷயங்களை தெளிவு படுத்திக் கொள்வதற்கோ அல்லது தெரியப்படுத்தி விளக்கம் கொடுப்பதற்கோ வேண்டிய அளவுக்கு காலம் இல்லாமல் போய்விட்டது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அன்றாடம் கொஞ்சம் கொஞ்சம் பேசலாம். இன்று கொஞ்சம் பேசலாம், நாளை கொஞ்சம் பேசலாம், நாளை மறு நாள் கொஞ்சம் பேசலாம்.

**திரு. சா. கணேசன்:** அவற்றுடன் தொடர்புடைய மற்ற விஷயங்களைப் பற்றி குறிப்பிடவேண்டியவற்றை, குறிப்பிட நேரம் கிடைக்காமல் போய்விடுகிறது.





இப்பொழுது, என்னுடைய வெட்டுப் பிரேரணைகளில் கொடுக்கப்பட்டுள்ள சில முக்கிய கருத்துக்களை, அம்மையார் அவர்கள் எனக்காக வாதாடினார்கள். முதலிலே அதற்காக அவர்களுக்கு என் நன்றி. (குறுக்கீடு) அதெல்லாம் அச்சடித்து எல்லோருக்கும் கொடுத்திருக்கிறார்களே! மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டால், அதனால் ஏற்படுகின்ற பலன் அல்லது நலன் பெரிது என்பதை தெளிவாக கூறினார்கள். சென்னையைப் பிரிக்க முடியாது பல காரணங்களாலே. சேலம், தர்மபுரி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. பாக்கி இருப்பதில், நீலகிரியும், கன்யாகுமரியும் பிரிக்கப்படவேண்டாத சிறிய அளவு நிலப் பரப்பை கொண்டவை. பிற ஒன்பது ஜில்லாக்களையும், இரண்டிரண்டாகப் பிரித்தால், மிக்க பலன் தருவதாக இருக்கும். சென்ற ஆண்டிலேயே இதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். மீண்டும் அதையே இப்பொழுதும் கொண்டு வரவிரும்புகிறேன்.

கடன் மனுக்களைக் கொடுத்து விட்டு, அவற்றிற்காக சாதாரணமான அப்பாவி ஏழைமக்கள் படுகின்ற பாடும், எவ்வளவு ரூபாய்க்குக் கடன் கொடுக்கிறார்களோ, அதிலே கிட்டத்தட்ட சரிபாதியை அல்லது பாதிக்கும் மேற்பட்டு, அவற்றைப் பெறுவதற்கு நேரான வழியிலோ, நேர் அல்லாத வழியிலோ செலவிடவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிற நிலையும் நமக்குத் தெரியாதவை அல்ல, கவனத்திற்கு வாராதது அல்ல. இவற்றை மிக மிகக் கண்காணிப்போடு இருந்து தவறுகள் ஏற்படாவண்ணம், விவசாயத்திற்கு சம்பந்தப்பட்ட, பிறவற்றிற்கு சம்பந்தப்பட்ட கடன்களை மிக விரைவில் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும், என்கிற கோட்பாட்டை வைத்துவிட்டால், கிடைக்குமா, கிடைக்காதா என்பது தெரிந்து, செலவுகள் செய்யும் நிர்ப்பந்தம் இல்லாமல் தவிர்க்கலாம். கடன் மனு கொடுக்கப்பட்டு இத்தனை மாதங்களில், உண்டு, இல்லை என்று முடிவு கட்டி அறிவித்துவிட்டால், திருப்தி அளிக்கும். அதற்கு ஒரு கால வரையறை செய்து விடுவது ஆட்சியின் நேர்மைக்கு, மக்களின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இனி, கிராம அதிகாரிகளை நியமனம் செய்வது பற்றியது. பழங்காலமாக இருந்து வந்த முறை, அதன் பலனை அறிந்து வந்திருக்கிற நிலையில், வழி வழி பாத்தியதையை பின்பற்றவிட்டாலும்—கேவலம் குடியில் பிறந்தான் என்கிற காரணத்திற்காகச் சொல்லவில்லை—திறமையும், அந்தப் பணிபுரியும், அதற்குரிய அனுபவமும், தரமும் உடையவராக இருந்தால், அவர்களே தொடர்ந்து கிராமாதிகாரியாகப் பணியாற்றுவது நலம். இன்றைக்கு அமைக்கப்பட்டு இருக்கிற சூழ்நிலைக்கு மாறான போக்கானாலும், அவரையே வைத்துக்கொள்வது எவ்வளவு நல்லது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அவர் பரம்பரையாக இருப்பதால், அவருக்கு இன்னின்னாருடைய நிலம் இன்னின்னது. ஊரின் நிலைமை என்ன என்று புரிந்து, கொடுமையான, அல்லது

தீமையான காரியங்களைச் செய்தால், தன்னை ஊர் தூற்றும் என்ற அச்சத்தால், நல்ல வகையில் பணிபுரிய வழி ஏற்படும். இன்றைக்கு வெளியிடத்திலிருந்து நியமிக்கப்படும் ஆட்களை விட பரம்பரை யாக வரும் இந்த கிராம அதிகாரிகள் ஒழுங்காக, நேர்மையாகப் பணிபுரிய முடியும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

பென்ஷன் தொகை கொடுக்கிறோம். நம்முடைய மாநிலத்தி லிருந்து பல்வேறு பதவிகளிலிருந்து விடுதி பெற்றவர்களுக்கு, காலத்திற்கு ஏற்றபடி மற்றவர்களுக்கு படிவகைகள் கூடுதலாக வருவதுபோல, அவர்களுக்கும் கூடுதலாகக் கொடுக்க வழி காண வேண்டும். அவர்கள் பணியாற்றிவிட்டு இப்பொழுது ஓய்வு எடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஓய்வு எடுத்து இருக்கிறார்களே ஒழிய, அவர்கள் உபயோகிக்கும் மற்ற பொருள்கள் விலை ஏறுவதில் ஓய்வு எடுக்கவில்லை. அவையெல்லாம் மேலும் மேலும் ஏறிக் கொண்டே போகின்ற உண்மையை உணருகின்றோம். ஆகவே, சர்க்கார் உத்தியோகத்தில் இருந்து விடுதி பெற்றாலும், அவர்க ளுடைய வாழ்வு அவலமாக இருக்கக்கூடாது என்றுதான் பென் ஷன் முறையே வைக்கப்பட்டது என்பதை ஒப்புக் கொள்ளு கிறோம். உணருகிறோம். அந்த நிலையில் கொடுக்கும் பென்ஷன் தொகை, இன்றைக்கு இருக்கும் விலைவாசிக்கு தக்க அளவுக்கு, அவை ஏறிவிட்ட நிலையில், இவர்கள் பென்ஷன் மிக அடிமட்டத் திலே நின்றிருப்பதால், அதை உயர்த்த வேண்டிய பொறுப்பு ஆட்சியைச் சார்ந்தது என்பதனால், தக்க வழிவகைகளைக் கண்டு, அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்ல முன்வருகிறேன்.

முதியோர் பென்ஷன் சம்பந்தப்பட்டவரை, இது சிலருக்குக் கிடைத்திருக்கிறது. கொடுத்திருக்கிற வரையில் திருப்தி, ஆனால், ஏராளமானவர்கள் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். அது மட்டுமல்ல, ஏதாவது, எங்காவது யாராவது செய்த தவறின் காரணமாக வந்த பென்ஷன், திடீரென்று நின்றும் விடுகிறது. அடுத்த வீட்டுக்காரன், வேண்டாதவன், "இவன் செத்துவிட் டான்" என்று எழுதிப் போட்டு விட்டால், ஒழுங்கான, முறையான, நெறியான விசாரணையின்றியே, பென்ஷன் நின்று விடுகிறது. அதன் பிறகு இவர் போய், நான் உயிரோடுதான் இருக்கிறேன் என்று நிரூபித்துக் காட்டவேண்டும். இப்படிப்பட்ட கஷ்டங்கள் நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன. இந்தக் குறைகளை நீக்க தக்க வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று எடுத்துக் கூற விரும்பு கிறேன்.

இனி, நான் பிரேரேபித்த வெட்டுப் பிரேரணையிலேயே கொடுத் திருக்கிறேன். தமிழகத்திற்கு மிக முக்கியமான, பெரும் பணி செய்திருக்கிற ஒரு துறை, சமணத்துறை. கிட்டத்தட்ட நம் முடைய சிற்பங்கள், ஆலய அமைப்புக்கள், இவையெல்லாம் பற்றி மட்டுமல்லாமல் நம்முடைய இலக்கியங்கள் இலக்கணங்கள் அனைத்





தையும் தந்து, தமிழ் மக்கள் சிறப்புறச் செய்திருக்கிறது. அன்று தமிழக மக்கள் பலர் சமணர்களாக வாழ்ந்தவர்கள்; பிற்காலத்தில், அந்தச் சமணர்கள், சைவர்களாகவும், வைணவர்களாகவும் மாறி விட்டார்கள். இன்றைக்கு அவர்கள் நூற்றில் ஒரு பங்கு, ஆயிரத் தில் ஒரு பங்குகூட இல்லாத நிலைக்கு, மிக அருகி, —அவர்கள் பெயர் அருகர் என்பதாலேயே அருகுகிறதோ என்னவோ— பெரிய தாக இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் அன்று வைத்திருந்த கோவில்கள்—10,000 அல்லது லட்சம் அல்ல--சிலவே, நூற்றுக்குட் பட்ட கோவில்கள் தான் இன்று தமிழகத்தில் இருக்கின்றன. நம்முடைய கலை, பண்பாடு, நாகரிகம் எப்படியெல்லாம் வளர்ந்து இருக்கிறது என்பதற்கு அவை எடுத்துக்காட்டாக இருக்கின்றன. அவை தமிழனுக்கே ஒரு தனியான, சிறப்பான "ரெகார்டட் எவிடன்ஸ்", பதிவு செய்த தஸ்தாவேஜுகளாக இருக்கின்றன என்று சொல்லும் அளவில் இருக்கின்றன. அந்தச் சாதனங்கள் பிற நாட்டவர்கள், வேறு மாநிலத்தவர்கள் ஆகியோர்க்கு இல்லை; தமிழ் மக்களாகிய நமக்குத்தான் உண்டு. கி.மு. காலத்திலிருந்து இன்று வரை தொடர்ந்து எவ்வளவு சிறப்பும் சீரும் உடையவர் களாக இருந்தார்கள் என்பதைக் காட்டிக் கொண்டிருக்கும் அருமையைக் கண்டு நாம் பெருமைப் பட உரிமை உண்டு. அவற்றைப் பாதுகாக்கவேண்டுவது, இந்த அரசின் தலையாய கடன் இவற்றையெல்லாம் தொகுத்து, அந்தக் கட்டடங்கள் பழுது அடை யாமல் பாதுகாத்து, அரிய சிற்பங்களைத் திரட்டி ஒரு இடத்தில் வைத்து அவற்றைக் காப்பது நம்முடைய பண்பாட்டின் வளர்ச்சி (evolution of our culture) என்ற வகையில் அதைக் காட்டுவதோடு மட்டுமின்றி, அவற்றின் அருமைப்பாட்டை உணரும் அளவில் செய்ய வேண்டும் என்று வேண்டுகிறேன்.

சமணர்கள் பள்ளிதான், பராமரிப்பவர்கள் அற்று, அவர்கள் தொகை அருகிப் போனமையினாலே, இப்படிக் கிடக்கிறது என்று நாம் எண்ணிவிடப்படாது. ஹிந்துக்கள் அதாவது சைவர்கள் அல்லது வைணவர்கள் என்று சொல்லுகிற, வைதிக மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகுகிற மக்களுடைய கல்வெட்டுக்களும் ஆயிரக் கணக்கானவை இடிபட்டவைகளாகக் கிடக்கின்றன. பல்வேறு மகோன்னதமான, கோடிக்கணக்காக மதிக்கப்படவேண்டிய அந்தத் தரமுள்ள கல் எழுத்துக்கள் இதுவரையிலும் கவனிப் பாரற்றுக் கிடக்கின்றன பல்வேறு இடங்களில். அவற்றையெல் லாம் நாம் பராமரிக்க வேண்டும். சுற்றிக் கம்பி வேலிகள் போட்டு, மேலே கண்டவர்கள் போய் கால் வைக்காமல் செய்ய வேண்டும்.

அதுமட்டுமின்றி, மதுரை எவ்வளவு பெரிய நகரம் என்பது நமக்குத் தெரியும். அதனுடைய வரலாற்றுச் சிறப்பைப்பற்றி யெல்லாம் நாம் பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறோம். அங்கு ஒரு அற்புதமான மண்டபம், புது மண்டபம் இருக்கிறது. அங்கே தோசைக் கல், இருப்புச் சட்டி முதலியவை வியாபாரம் செய்யப்

[திரு. சா. கணேசன்] [8th March 1966

படுகின்றன. சென்ற வாரம் நான் அங்கு போய்ப் பார்த்தபோது எனக்குக் கண்ணீர் வந்தது. இரத்தம் வரவில்லை. அவ்வளவுக்கு என்னுடைய உள்ளம் கசியவில்லை. அற்புதமான சிற்பங்கள் மோதப்படுகின்றன. அருமையான முத்திரையோடு உள்ள கை விரல்கள் துண்டிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இப்படியே விட்டுக்கொண்டு போனால், இனி முகம், உரு ஒன்றும் இல்லாமல், "உத்தரத்தைத் தாங்கத்தானே தூண் வேண்டும், தூணில் ஏன் பொம்மை இருந்துதொலைய வேண்டும்" என்று சிந்திக்கவும் தொடங்கிவிடுவார்களோ என்னவோ! அந்தக் கடைகளை அங்கே வைத்திருப்பதன் மூலம் கோயிலுக்கு ஐயாயிரமோ, ஆயிரமோ, ஐந்நூறோ ஏதோ வருமானம் வருகிறதே என்று சொல்லலாம். இந்த நிலையிலே பார்க்கின்றபோது அவர்களுக்கு இதன் மூலம் வருகிற வருமானத்தைச் சர்க்காரிலிருந்து நஷ்ட ஈடாகக் கொடுத்தாலுங்கூட, இந்தத் தொகை நம்முடைய கலையைவிட உயர்ந்ததல்ல; அந்தக் கலையை நாம் காக்கவேண்டும். இன்றொன்று கூடச் சொல்வேன், இந்தச் சந்தர்ப்பத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் இப்பொழுது காட்சிக்கூடம் அமைத்திருக்கிறார்களே அதைத் தூக்கி இந்தப் புது மண்டபத்தில் கொண்டுவந்து வைத்துவிட்டால் மண்டபமே ஒரு காட்சிச்சாலையாகவும், மண்டபத்தில் உள்ள சிற்பங்களும் காட்சிப் பொருளாகவும் அமையக் கூடும். அதோடு, பிற சிற்பங்கள், பிற துறைப் படங்கள், படிமங்கள் இவையெல்லாம் இருந்தால் இது மேலும் பொலிவைத் தரும். இந்தத் துறையிலே அக்கறையும் ஆர்வமும் உடைய நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்தி, இதிலே தக்க பாதுகாப்புத் தரவேண்டும் என்று நான் மனமார தம்பி— வேண்டுகிறேன்.

இதே மாதிரி இன்னொன்றும் செய்ய வேண்டும். நான் சொல்லப்போகிற யோசனையினால் ஒரு ஜில்லாவிற்குக் கிட்டத்தட்ட மூன்று, நான்கு வருஷங்களுக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் செலவு வராது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு காட்சிக்கூடம் அல்லது கலைக்கூடம் ஏற்படுத்தவேண்டும். அங்கே அந்த ஜில்லாவைப் பொறுத்த வரையிலும் உள்ள சிறப்பியல்புகளைக் கொண்ட மூர்த்திகள், ஆலயங்கள், அதற்கென்றே விசேஷ தனித்தன்மை உடையவற்றுக்கு படிமங்கள் (ரெப்ளிகா) செய்து வைத்து, ஒரு ஜில்லாவிலே எங்கெங்கே என்ன என்ன கல்வெட்டுக்கள், சான்றுகள் இருக்கின்றன என்பவை அங்கே குறித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த ஜில்லாவில் உள்ள பிற வேறு அருமைப்பாடுகள் வரலாற்றுக்கு உதவுபவை, இன்னும் இயற்கைச்செழிப்பு, சிறப்பு இவற்றைக் காட்டக்கூடிய புள்ளிகள், இவற்றையெல்லாம் அங்கே குறித்து வைத்திருக்க வேண்டும். கலெக்டருக்குக் கீழே இதற்கென்று ஒரே ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டுவிட்டால் போதும், அவருக்குக் கீழ் ஒரு க்ளார்க், ஒரு டைபிஸ்ட், ஒரு ப்யூன் போட்டுவிட்டால், இதைச் செம்மைப்படுத்திவிடலாம். நாளடைவில் தமிழகத்தின் அருமைப்பாடு, எந்த எந்த ஜில்லாவில் என்ன என்ன இருக்கின்றன என்பதை அந்தந்த ஜில்லாவில்



8th March 1966] [திரு. சா. கணேசன்]

அது காட்டிக்கொண்டிருக்கும். திடீரென்று அவசரமாகச் செல்ல வேண்டிய பெரிய வரலாற்று ஆசிரியர்கள் காடுகளுக்கும் மேடுகளுக்கும், மலைகளுக்கும் சென்று திண்டாடித் தேடித் துருவி ஆய்ந்து தான் தனக்கு வேண்டிய எந்த விஷயத்தையும் சேகரித்துக் கொள்ளவேண்டும் என்ற அவஸ்தை இல்லாமல், ஓரிடத்தில் எளிதில் 'அதாரிடேடிவ்' என்று சொல்வதுபோல, அதிகார பூர்வமான நிலையில் பெற வாய்ப்பு இருக்கும். இதை மனத்திலே கொண்டு இதற்குத் தக்க வழிவகை செய்யவேண்டுமாய் வேண்டுகிறேன்.

ஆற்று வழிப் போக்குக்கு நமது மாநிலத்தில் ஏராளமான வசதிகள் இல்லை என்பது எனக்குத் தெரியும். பெருக்கு-வடிவு உள்ள ஆறுகள் நமக்கு இல்லை, அதிர்ஷ்டமோ, துரதிர்ஷ்டமோ, ஆனால் கிட்டத்தட்ட சுமார் 400 மைல்களுக்கு மேற்பட்ட கடலோரப் பகுதி நமக்கு இருக்கிறது. ஆகவே, கடலோரப் போக்குவரத்திற்கு நாம் விசேஷ கவனம் செலுத்தி, அதிலே வெறுமனே சரக்கு ஏற்றுவது தான் என்று இல்லாமல், மக்கள் பயணம் செய்ய வசதியும் செய்து கொடுக்கவேண்டும். கொஞ்சம் அழகான சிறந்த படகுகளை உற்பத்தி செய்து விட்டால் மகிழ்ச்சிப் பயணமாகக் கூடச் செல்வதற்கு ஏராளமானவர்கள் வருவார்கள். பிற நாட்டிலிருந்து வரும் யாத்திரிகர்களும் அதிலே பயணம் செய்யத் தொடங்குவார்கள். அதனாலெல்லாம் வருகிற வருமானம் அன்னியச் செலாவணியையும்கூட நமக்குத் தேடித் தரும் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில், தனிப் பட்டாவாக இருந்தவற்றையெல்லாம் கூட கூட்டுப் பட்டாவாக்கினார்கள். சம்பந்தப்பட்டவர்களைக் கேட்காமலேயே கூட்டுப் பட்டாக்களாக்கி விட்டார்கள். அவற்றைத் தனிப் பட்டாக்களாகப் பிரித்துக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டும், தனிப்பட்டாக்களாகப் பிரித்துக் கொடுக்காமல் கால தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. இதை விரைவில் முடித்துவிடவேண்டும் என்ற முயற்சி செய்யப்படுகிறது. அந்த வகையிலே திருப்தி. அதைக் கூடிய விரைவில் செய்து விடவேண்டும். தற்போது, அரை ஏக்கர், முக்கால் ஏக்கர் ஒரு ஏக்கர், ஒன்றரை ஏக்கர் நிலம் வைத்திருக்கும் சாதாரண மக்கள் கூட்டுப் பட்டா காரணமாகக் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் பட்டா பிரித்துக்கொடுக்க வழிவகை செய்ய வேண்டும்.

ஏராளமான ஏழைகள், சிறப்பாக ஹரிஜனங்கள் புஞ்சை நிலங்களை உழுது கொண்டு வந்தார்கள். அதற்குரிய ரசீதுகளைப் பரம்பரையாக வைத்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று இரண்டு மூன்று வருஷங்களாக அவ்வளவையும் 'காடு' என்று சொல்லி வேலியிட்டு விட்டார்கள். அதுபற்றி மகசர்கள் காட்டிலாகாவிற்குக் கொடுத்தும் இன்னும் அதற்கு வழி ஒன்றும் ஏற்படவில்லை. விவரம் சொல்ல முடியும். புள்ளி வாரியாக, எண் வாரியாக

[திரு. சா. கணேசன்] [8th March 1966

வேண்டுமானாலும் விவரம் தரத் தயாராயிருக்கிறேன். இம்மாதிரி பரம்பரையாகப் புஞ்சைப் பயிர் செய்துவந்த ஏழை எளியவர்களுடைய நிலங்களையும் சுற்றி வளைத்துவிட்டார்கள். காடு என்றால் 'புஞ்சைக்காடு' என்று சொன்னோம் அந்தக் காலத்தில், காட்டு வெள்ளாமை என்று சொல்வோம். 'காடு' என்பதற்கு டிக்ஷனரியில் என்ன பதம் இருக்கிறது என்று பார்த்து, 'ஃபாரஸ்ட்' என்று போட்டிருப்பதை வைத்துக் கொண்டு, புஞ்சைக் காட்டையெல்லாம், 'ஃபாரஸ்ட்' என்று கொண்டு வேலியிட்டு விட்டார்கள். காடு என்று சொல்கிறார்களேயொழிய, அங்கே முக்கால் முழத்திற்கு மேலே செடி வளருவது இல்லை. அதிலிருந்து சர்க்காருக்கு ஏதாவது வருமானம் வருகிறது என்றாலும் பரவாயில்லை, சர்க்காருக்கும் நன்மை இல்லை. உணவுப் பற்றாக்குறை காலத்தில் நமக்கு வேண்டிய உணவுத் தானியங்களை உற்பத்தி செய்ய முடியாமல் இருக்கும்போது, காடு மேடாக இருக்கும் பகுதிகளில் ஏதோ புஞ்சை விவசாயம் செய்கிறார்கள் என்றால், அதை வேலியிட்டு வளைத்துக் கொள்வதென்றால் அது சரியல்ல. வறுமையை வலிய வரவழைத்துக்கொள்ளும் நிலைமையாகத்தான் இருக்கும். ஆகவே, இவற்றையெல்லாம் கவனித்து, சர்க்கார் செவ்விய முறையைக் கையாண்டு, சிக்கல்களைத் தீர்த்து, முடிந்த வரையில் சுலபமாக, சுமுகமாக, சுபீட்சமாக மக்கள் வாழ வகை செய்யவேண்டும் என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

* திரு. மு. கருணாநிதி: கனம் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சி நிர்வாகம், ஓய்வு ஊதியங்கள், கடன்களும் முன் பணங்களும் ஆகிய தலைப்புகளில் இங்கு விவாதிக்கப்படுகிற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுப் பிரேரபணைகளை ஆதரிக்கும் அடிப்படையில் என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

எதிர்க் கட்சியினுடைய சார்பிலே உறுப்பினர்கள் தந்துள்ள வெட்டுப் பிரேரபணைகளில் மிக முக்கியமாக கிராம அதிகாரிகளினுடைய ஊதியத்தையும் மதிப்பையும் உயர்த்தவேண்டும் என்றும், அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்றும், கிராம அதிகாரிகளுக்குச் சம்பள உயர்வு தரப்பட வேண்டும் என்றும், கிராமக் கடைநிலை ஊழியர்களான வெட்டி, தலையாரி போன்றவர்களுக்குச் சம்பள உயர்வு தரப்படவேண்டும் என்றும், அவர்களுக்குப் பயணப் படி போன்றவை கொடுக்கப்பட வேண்டும் என்றும், அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களின் ஓய்வு ஊதியத்தை நிர்ணயிப்பதில் ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்றும், விவசாயிகளுக்கு அரசாங்கம் தருகிற கடனில், அது தரப்படுகிற நேரத்தில் ஏற்படுகிற காலதாமதமும், இடையிலே ஏற்படுகிற குறைபாடுகளும் அறவே களையப்பட வேண்டும் என்றும், ஐந்து ஏக்கருக்குக் குறைந்த விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் முதல் சலுகை பிரத்தியேகமாகக் கவனிக்கப்பட்டுத் தரப்படவேண்டும் என்றும், பொதுவாக மாவட்டங்களின் நிர்வாக வசதியை முன்னிட்டு மாவட்டங்கள் பிரிக்கப்படுவது சாலச் சிறந்ததாக இருக்கும்



8th March 1966] [திரு. மு. கருணாநிதி]

என்றும் வெட்டுப் பிரேரபணைகளில் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பற்றியெல்லாம் இங்கு பேசிய கனம் உறுப்பினர்கள் தங்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

இன்றையதினம் மாவட்ட நிர்வாகம் ஒழுங்காக, சீராக அமையவும், அதற்காகச் செலவழிக்கப்படுகிற பணம் சேரவேண்டியவர்களைச் சேரவும், எந்த நல்ல நோக்கத்தோடு அவை செலவழிக்கப்படுகிறதோ, எதற்காக இந்த மானியம் ஒதுக்கப்படுகிறதோ அவை நேரான வகையில் பயன்படவும் இன்றைக்கு மாவட்டம் அளவிலே 12-30 p.m.
பெரியதாக இருப்பது ஒரு இடையூறாக இருக்கிறது என்று பல முறை இந்த மன்றத்திலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அவற்றிற்கெல்லாம் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அவ்வப்போது பதில்கள் அளித்திருக்கிறார்கள். ஆனாலும் அந்தப் பதில்கள் திருப்திகரமான பதில்களாக நமக்குத் தோன்றவில்லை. ஏனென்றால் அவர்களே கூட கடந்த 1964-65 ஆம் ஆண்டு இந்த மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் அளிக்கும் நேரத்தில் "மாவட்டங்கள் சிறிதாகிவிட்டால் நிர்வாக ஒழுங்கும், நிர்வாகச் செழிப்பும் ஏற்படும் என்பதில் எனக்கும் நம்பிக்கை உண்டு" என்று கூறிவிட்டு ஆனால் அவைகளைச் செயல்படுத்த முடியாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்களைச் சொன்னார்கள்.

இன்றுள்ள நிலையில் சில மாவட்டங்களின் அமைப்பைப் பார்த்தால் ஒன்றுக்கொன்று எவ்வளவு முரண்பாடாக இருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும். பத்து லட்சம் மக்களைக் கொண்டதும், நான்கு வட்டாரங்களைக் கொண்டதுமான கன்னியாகுமரி ஒரு மாவட்டமாக இருக்கிறது. அதே நேரத்தில் 33½ லட்சம் ஜனத்தொகையும், 12 வட்டங்களைக் கொண்டதுமான தஞ்சை மாவட்டம் தனி மாவட்டமாக இருக்கிறது. 35½ லட்சம் ஜனத்தொகையையும், 9 வட்டாரங்களைக் கொண்டதுமான கோவை தனி மாவட்டமாக இருக்கிறது. 31½ லட்சம் ஜனத்தொகையையும், 11 வட்டாரங்களைக் கொண்டதுமான வடாற்காடு ஒரு தனி மாவட்டமாக இருக்கிறது. இப்படி பத்து லட்சம் ஜனத்தொகையையும், நான்கு வட்டாரங்களைக் கொண்டதுமான கன்னியாகுமரி ஒரு மாவட்டமாகவும், 32½ லட்சம் ஜனத்தொகையும் பத்துப் பன்னிரண்டு வட்டாரங்களைக்கொண்டதுமான சில மாவட்டங்களும் இருக்குமானால் இவற்றிலே நிர்வாகம் எப்படிச் செம்மையாக நடைபெற முடியும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இதைச் சொல்கிற நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் பெரியதாக இருக்கிற, மாவட்டங்களைப் பிரிக்க முடியாது என்பதற்கு எடுத்துச் சொன்ன இரண்டு காரணங்களையும் பரிசீலிப்பது நம்கடமையாகும்.

முதல் அமைச்சர் அவர்கள் இவற்றைப் பிரிப்பதற்கு இயலாது என்பதற்குக் கூறிய இரண்டு காரணங்களில் முதலாவதாக அவை பிரிக்கப்படுகிற காரணத்தினால் பெயர்கள் மாற்றப்படும்படியாக

[திரு. மு. கருணாநிதி] [8th March 1966

இருக்கும், "டிரடிஷன்" கெட்டுவிடும். அத்தகைய பெயர் மாற்றத்தைப் பொதுவாக அந்த அந்த மாவட்டங்களில் உள்ள மக்கள் விரும்பவில்லை என்பதாகக் குறிப்பிட்டார்கள். அவர் அப்போதே இன்னொன்றையும் சொன்னார்கள். தாம் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கலாமா என்பதைப் பற்றிப் பலருடன் கலந்தாலோசித்ததாகவும் "அவ்வாறு பிரிக்கலாம், ஆனால் தஞ்சை மாவட்டம் என்ற பெயரைத் தாங்கள் இழக்க விரும்பவில்லை" என்று கூறினார்கள் என்பதாக எடுத்துச் சொன்னார்கள். அடுத்து அவர் கூறிய காரணம் மாவட்டங்கள் பிரிக்கப்படுகிற காரணத்தினால் நிர்வாகச் செலவு அதிகமாகக் கூடும் என்பதாகும். இது எப்படி இருக்கிறது என்றால் கல்யாணம் செய்து கொள்ளாத ஒருவரிடம் சென்று "நீ கல்யாணம் செய்து கொள்கிறாயா?" என்று கேட்டால், "கல்யாணம் செய்து கொண்டால் பிரம்மசரியம் கெட்டுவிடுமே" என்றால் அவன் பிரம்மசரியத்தைக் காத்துக்கொள்வதில் உறுதியாக இருக்கிறான் என்று பொருள். அடுத்து "குடும்பச் செலவு அதிகமாகிவிடுமே" என்று பதில் சொல்வான் என்றால் அவன் பிரம்மசரிய விருதத்தில் இருந்து இறங்கிவிட்டான். குடும்பம் என்று நடத்தத்தான் அஞ்சுகிறான் என்று பொருள். இங்கே கவனிக்க வேண்டியது—பிரம்மசாரியாக இருந்து செலவழிக்கின்ற ஊதாரிச் செலவுகளை எல்லாம் குடும்பம் என்று அமைத்துவிட்டால் தவிர்க்க முடியும், குடும்பம் நடத்துவதில் சிரமம் இருக்காது என்பதுதான். அப்படி இன்று ஒரே ஒரு மாவட்டமாக பெரிய நிலப்பரப்பை வைத்துக்கொண்டிருப்பதனால் அங்கும் இங்கும் போவதற்கு ஆகும் வீண் பயணச் செலவுகளை எல்லாம் சீரான அளவில் மாவட்டம் பிரிக்கப்படுமானால் தவிர்க்கக் கூடும். இன்றைக்கு ஆகும் வீண், ஊதாரிச் செலவுகளே, பயனுள்ள வகையில் நிர்வாகம் ஒழுங்காக, சீராக நடைபெறுவதற்கு ஆகும் செலவை ஈடுகட்டிக்கொள்ளும் என்பதுதான். ஆகவே மாவட்டங்களைப் பிரிப்பதனால் ஏற்படக்கூடும் செலவைப் பற்றிக்கூட முதல் அமைச்சர் அவர்கள் பயப்படத் தேவையில்லை என்ற நிலையை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"பெயரை மாற்றுவதில் என்ன இருக்கிறது? இந்தப் பெயர் தான் இருக்கவேண்டும், அந்தப் பெயர்தான் இருக்கவேண்டும் என்று சண்டையிட்டுக்கொள்வது எனக்குப் பிடிக்காது," என்கிற வாதத்தையே நமது முதல் அமைச்சர் அவர்கள் வேறு சந்தர்ப்பத்தில் இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள். அவர்களே இப்போது மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்கிற போது "மாவட்டங்களைப் பிரிப்பதனால் வேறு பெயர் வைக்க வேண்டியிருக்கும். டிரெடிஷனாக வருகிற பெயரை மாற்றுவதை மக்கள் விரும்பவில்லை" என்கிற வாதத்தை எடுத்து வைக்கிறார்கள். அவர்கள் வாதத்திலே மிக்க திறமைபடைத்தவர்கள். சூழ்நிலைக்கு ஏற்ப தம் வாதங்களை எடுத்து வைக்கும் அவரது திறனை நாம் பாராட்டலாமே தவிர அவர் கூறுகின்ற இரண்டு வாதங்களுமே—மக்களுடைய கோரிக்கையை, எதிர்க்



8th March 1966] [திரு. மு. கருணாநிதி]

கட்சிக்காரர்கள் எடுத்து வைக்கின்ற கோரிக்கையை நிறைவேற்றி வைக்கவேண்டுமென்ற பரிவு உணர்ச்சியோடு கூடிய ஆலோசனையின் பேரில் எழுந்ததாகத் தெரியவில்லை. அவரது பிடிவாதத்தின் பேரில் எழுந்தனவாகும். அவர் தம்முடைய வாதத்தில்கூட அழுத்தந்திருத்தமாக இருந்திருக்கிறார் என்று சொல்ல முடியாது. இன்றைக்கு சேலம் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு பிரிவுக்குச் சேலம் என்று பெயர்; இன்னொரு பிரிவுக்குத் தர்மபுரி என்று பெயர். தர்மபுரி பகுதியில் உள்ள மக்கள் ட்ரெடிஷனாக வந்த பெயரை மாற்றிக்கொள்ளத் தயாராக இருந்தார்களா? அவர்களது அபிப்பிராயம் வாக்கெடுப்பின் மூலம் நிர்ணயிக்கப்பட்டதா? அல்லது முதல் அமைச்சர் அவர்களிடத்தில் வந்து தாங்கள் தர்மபுரி என்கிற பெயர்மாற்றத்திற்கு இசைகிறோம் என்று சம்மதம் அளித்தார்களா? என்பது எனக்குத் தெரியாது. நான் தர்மபுரி என்று பெயர் வைத்திருப்பதை குறைகூற விரும்பவில்லை. எப்படி சேலம் மாவட்டம் நிர்வாகச் சீரமைப்பை உத்தேசித்து சேலம் என்றும், தர்மபுரி என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ அதுபோல தஞ்சை, கோவை, வடாற்காடு போன்ற மாவட்டங்களும் பிரிக்கப்படவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குத் தடையாக ட்ரெடிஷனலாக வந்த பெயரை மாற்ற விரும்பவில்லை என்கிற வாதம் பொருந்தாது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இரவல் தலைநகரம். அதுபோல முதல் அமைச்சர் அவர்களுடைய மாவட்டமாகிய செங்கல்பட்டுக்கும் இரவல் தலைநகரம். இந்த இரவல் தலைநகரம் இரண்டுக்கும் இருப்பதை மாற்றவேண்டும் என்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியும், இவ்வாறு அந்த அந்த மாவட்டங்களின் தலைநகர் வேறு இடத்தில் இருப்பதன் சங்கடங்களை நன்கு உணர்ந்தும் அவற்றை மாற்றாமல் இருப்பதற்குக் காரணமாக நிர்வாகச் செலவு அதிகரிக்கும் என்பதை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். ஏறத்தாழ இத்தகைய மானியங்களுக்கு 52½ கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. அதில் இப்படி தலைநகரங்களை அந்த அந்த மாவட்டத்திலேயே ஏற்படுத்துவதன் மூலம் அதிகமாக எவ்வளவு செலவாகிவிடக்கூடும்? செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகரை காஞ்சீபுரத்திற்கு மாற்றவேண்டும் என்றால் காஞ்சீபுரத்தின் பெருமையை முதல் அமைச்சர் அவர்களே எடுத்து விளக்கியிருக்கிறார்கள். சரித்திரப் பெருமை வாய்ந்த இடம் என்று கூறியிருக்கிறார்கள். இருந்தாலும் அவரது மாவட்டத்தின் தலைநகரையே அவரால் பாராட்டப்படுகிற சொந்த இடத்திற்கு மாற்ற முடியவில்லை என்று அவர் கைவிரிப்பார் என்றால் மதுரையில் இருந்து இராமநாதபுரம் மாவட்டத் தலைநகரை அந்த மாவட்ட சொந்த நகருக்கு எடுத்துப்போங்கள் என்றால் எங்கே இரக்கம் பிறக்கப்போகிறது? மாவட்டங்களைப் பிரிப்பதனாலும், அந்த அந்த மாவட்டங்களின் தலைநகரை அந்த அந்த மாவட்டத்தின் சொந்த நகரத்தில் ஏற்படுத்துவதனாலும் எவ்வளவு செலவாகக் கூடும்? அது ஏன் இப்போது சாத்தியமில்லை என்பதையாவது முதல்

[திரு. மு. கருணாநிதி] [8th March 1966

அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களோடு எடுத்துக் கூறி, நாங்கள் சொல்வதற்கு முற்றுப்புள்ளி வைத்தால் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட ஆட்சி நிர்வாகங்களில் ஏறத்தாழ எல்லா மாவட்டங்களிலும் சட்டமன்ற, பாராளு மன்ற உறுப்பினர்களுடைய யோசனைகள் வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் ஆங்காங்கே இயங்குகின்றன. அப்படிப்பட்ட மாவட்ட வளர்ச்சிக் குழுக்களில் இடம் பெறுகிற சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட மாட்ட வளர்ச்சிக் குழுக்களில் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கின்றதே தவிர அந்த அந்த மாவட்ட நகர சபை மன்றங்களில்—திருச்சி, கோவை, மதுரை, சேலம் போன்ற இடங்களில் நடைபெறும் நகராட்சி மன்றங்களின் நிர்வாகக் குழுக்களில் இடம் பெற்று, நகர வளர்ச்சியில் அவர்கள் யோசனைகள் தெரிவிப்பதற்கான வாய்ப்பு, வசதி இல்லாமல் இருக்கின்றன. குறிப்பாகவும், சிறப்பாகவும் சென்னை மாநகராட்சி மன்றத்தில் பல குழுக்கள் இருக்கின்றன. வட்டாரக் குழுக்கள் வேறு நல்ல பணிபுரிந்து வருகின்றன. ஆனால் சென்னை மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர்களும், பாராளு மன்ற உறுப்பினர்களும்—சென்னை மாநகராட்சி மன்ற அபிவிருத்திக் குழுக்களில் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பில்லை. அத்தகைய வாய்பை ஏற்படுத்தித் தரவேண்டும். மாவட்ட நிர்வாகப் பொறுப்பு நான் ஏற்கெனவே எடுத்துக்காட்டியது போல் தொலை தூரத்திலே இருக்கின்ற எல்லைகளிலே யெல்லாம் பரவி நடைபெறுகின்ற காரணத்தால், சிவப்பு நாடாமுறை பலமாக இருப்பதைக் குறைக்கவேண்டும். முதலமைச்சர் அவர்கள் சிவப்பு நாடா முறையைப்பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் கூறினார்கள். 'இது என்ன பழைய காலத்து ராஜ தர்பாரா, ஒரு குறையை எடுத்து வைத்தவுடனே உண்டு அல்லது இல்லை என்று உடனே முடிவு எடுத்துப் பதில் சொல்ல ? ஒரு பெரிய நிர்வாகத்தில் அது யோசிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படுவதற்கு முன்னால் ஒரு தடவைக்கு இரண்டு தடவைகளாகச் சிந்தித்துப்பார்த்த பிறகுதான் எந்த ஒரு காரியத்தையும் நிறைவேற்றவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். ஆகவே சிவப்பு நாடா முறையை நீக்குவது இயலாது என்று குறிப்பிட்டார்கள். பலமான சிவப்பு நாடாவைக் கூட, முரட்டு சிவப்பு நாடாவைக்கூட, சில கருவிகள் அறுத்து விடுகின்றன. அந்தக் கருவிகள் இரும்பு ஆயுதங்கள் அல்ல, வெறும் கரன்சி நோட்டுகள்தான். இந்தக் கருவிகளால் சிவப்பு நாடா பல இடங்களில் அறுக்கப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் சிபாரிசுகளால்கூட அந்த சிவப்பு நாடா முறை அறுக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் சுலபமாக அறுக்கப்படுகிற இந்தச் சிவப்பு நாடா முறையை ஒழுங்காகவோ அல்லது நிரந்தரமாகவோ தாமதமில்லாத வகையில் தவிர்ப்பதற்கு ஏன் இந்த சர்க்கார், நல்வழி காணக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். அதற்காக



8th March 1966] [திரு. மு. கருணாநிதி]

நான் சிவப்பு நாடா முறையே வேண்டாமென்று கேட்கவில்லை. முரட்டுச் சிவப்பாக இருப்பதை ரோஸ் கலராக மாற்றுங்கள், முரட்டுச் சிவப்பாக இருக்கிற காரணத்தினால் ஏழை எளியவர்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கோ அல்லது தங்களுடைய கோரிக்கைகளைப் பெறுவதற்கோ இயலாமல் உதவிகளை நாடிச் செல்லுகின்ற உழவன் தேவைகளைப் பெற முடியாமல், உரிமைகளைப் பெற முடியாமல் அலுவலகங்களிலே இழுத்தடிக்கப்படுகிறான் என்பதை எண்ணிப்பார்த்தால் இந்தச் சிவப்பு நாடா முறையினால் ஏற்படக்கூடிய தவறுகள் தெற்றென விளங்கும். கிராமங்களின் இதயநாடிகளாகப் பணி புரிகின்றவர்கள், கிராம அதிகாரிகள், தலையாரிகள், வெட்டியான்கள் போன்றவர்கள். அவர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென்று பல முறை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே கிராம அதிகாரிகளின் எண்ணிக்கை 11,559 ; கர்ணங்களின் எண்ணிக்கை 11,503 ; தலையாரிகளின் எண்ணிக்கை 15,378 ; வெட்டியான்களுடைய எண்ணிக்கை 15,675 கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் 34 ரூபாய் ; கிராமக் கர்ணங்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் 36 ரூபாய் ; அதையும் பார்க்கிறேன். அதே நேரத்திலே அலுவலகங்களிலே ப்யூனாக இருக்கிறார்களே அவர்களுடைய சம்பளம் என்ன என்பதையும் பார்க்கிறேன். ப்யூனாக இருக்கிறவர்களுடைய சம்பளம் குறைந்த பட்சம் 50 ரூபாய். ப்யூன் சம்பளம் 50 ரூபாய்—அது தவறு என்று நான் கூறவில்லை ; அதைக் குறையுங்கள் என்று கேட்கவில்லை. ப்யூன் சம்பளமே 50 ரூபாயாக இருக்கிற நேரத்திலே கிராம அதிகாரிகள், அதாவது வில்லேஜ் ஹெட்ஸ், இவர்களுடைய சம்பளம் 34 ரூபாய் தான். அதுதான் கொடுக்க முடியும் என்றால் தயவுசெய்து அந்தப் பெயரை மாற்றி 34 ரூபாய் சம்பளத்திற்கு ஏற்றவகையிலே பெயர் சூட்டுங்கள். ப்யூனுக்குச் சம்பளம் 50 ரூபாய், ஆனால் கிராம அதிகாரிகளுக்குச் சம்பளம் 34 ரூபாய் தான், கிராமக் கர்ணங்களுக்குச் சம்பளம் 36 ரூபாய்தான், என்றால் என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். தலையாரிக்குச் சம்பளம் 28 ரூபாய்; வெட்டியானுடைய சம்பளம் 28 ரூபாய். ஓய்வு ஊதியம் கூட அடிப்படையாக குறைந்தபட்சம் 20 ரூபாய் அளிக்கப்படுகிறது. ஆனால் ஒரு தலையாரியும், வெட்டியும், கிராமத்திலே பெறுகின்ற சம்பளம் 28 ரூபாய் என்றால் இது நியாயமானதல்ல. இவர்கள் மனச்சோர்வில்லாமல் இருந்தால்தான், பட்டினியில்லாமல் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தால்தான், நம்முடைய மாநில வளர்ச்சித் திட்டங்கள் எப்படி முன்னேறிக்கொண்டு வருகின்றன என்பதற்கான புள்ளி விவரங்களை ஒழுங்காக நாம் பெற முடியும். சட்ட மன்றத்திலே எவ்வளவோ புள்ளிவிவரங்கள், தகவல்கள் தரப்படுகின்றன. பயிர்களைப்பற்றியும், இன்னும் வேறு பல காரியங்களைப்பற்றியும் புள்ளிவிவரங்கள் தரப்படுகின்றன. இந்தப் புள்ளிவிவரங்களினுடைய அடிப்படைக் கர்த்தாக்கள் கிராமத்திலே இருக்கின்ற இவர்கள்தான். உதாரணமாக நண்பர் மதியழகன் அவர்கள் இங்கே ஒரு கேள்வியை எழுப்புகிறார் என்றால், 10 நாட்களுக்குள்ளே அந்தக் கேள்விக்கு விடையளிக்கவேண்டுமென்றால்,

அந்த மூலக்கேள்வி மாவட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு, மாவட்ட அதிகாரிகள் மூலமாக கிராம அதிகாரிகள் வரைசென்று அவர்கள் தருகின்ற புள்ளிவிவரங்களைத்தான் இங்கே சட்டமன்றத்திலே மொத்தமாகச் சேர்த்துக் கொடுக்கிறார்கள். களைப்புற்ற நிலையில், சோர்வுற்ற நிலையில், வாடிக்கொண்டிருக்கின்ற நிலையில், ஊதியம் போதாது என்று ஒவ்வொரு நாளும் பெருமூச்சுவிட்டுக் கொண்டு வாழ்க்கையை நடத்துகின்ற நிலையில் புள்ளிவிவரங்கள் தரப்பட்டால் அவை எப்படி இருக்கும்? சில சமயங்களிலே இலாகாவினரால் கொடுக்கப்படுகின்ற புள்ளிவிவரங்களே தவறாக இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நண்பர் ப. உ. சண்முகம் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துத் தெரிவித்தார்கள். கிராமங்களிலே பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன என்று சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் யாரும் தீர்ப்பு வழங்குமாறு செய்வது குறிக்கோளாக இருக்கக்கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் வாதம் செய்ய விரும்பவில்லை. அவர்கள் கூறியது சரியா இல்லையா என்ற விவாதத்திற்குக்கூட நான் வர விரும்பவில்லை. சரி என்று வைத்துக்கொண்டே பேசுகிறேன். கிராமங்களில் பஞ்சாயத்துக்கோர்ட்டுகள் மூடப்பட்டது அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கின்ற கொள்கையின் விளைவு என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். கிராமங்களிலே பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இல்லை என்று வாதிட்ட முதலமைச்சர் அவர்களால், அது சில கிராமங்களிலா அல்லது பல கிராமங்களிலா என்ற புள்ளி விவரத்தைத் தரமுடியுமா என்றால் சந்தேகம்தான். நகரங்களிலே அவை இருக்கின்றன. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்தான். நகரங்களிலே உள்ள உறுப்பினர்கள் தங்களுக்குள் தாங்களாகவே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர். அவர் நீதிமன்ற வழிகளை அனுசரித்து வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவார். திருவண்ணாமலையிலே உள்ள கோர்ட்டில் திரு. கே. எம். கிருஷ்ணசாமி என்பவர்தான் கோர்ட்டின் தலைவராக இருக்கிறார். இரண்டு மாத காலத்திற்கு முன்புதான் அந்தத் தேர்தல் பூரணத்துவம் பெற்று கெஜட் நோட்டிஃபிகேஷன் வந்திருக்கிறது. இவ்வளவுக்கும் பிறகு முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குத் தீர்ப்புச் சொல்லும் அதிகாரத்தைக் கொடுப்பதல்ல எங்கள் கொள்கை என்று வாதிட்டிருக்கிறார்கள். நண்பர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டபொழுது, முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குத் தீர்ப்புச் சொல்லும் அதிகாரத்தைத் தருவது எங்கள் கொள்கையல்ல என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது திருவண்ணாமலை போன்ற இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் தீர்ப்பு வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட கோர்ட்டுகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட தவறான தகவல்களைக் கூடுமானவரை ஓரளவு சம்பளம் பெறுகின்றவர்கள் இருக்கக்கூடிய இலாகாவிடமிருந்து முதலமைச்சர் வாங்கியது துர்ப்பாக்கியமான நிலைதான்.





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் பெற்றிருக்கிற தகவல்களில் தவறு இல்லை. எனக்கு எல்லாத் தகவல்களும் தெரியும். நான் அரசாங்கத்தினுடைய போக்கைத்தான் சொன்னேன். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கக் கூடாது என்று சொன்னால் நடைமுறையில் மாற்றியாகிவிட்டது என்ற அர்த்தம் அல்ல. ஆகவே இதைப்பற்றிக் குறை கூறுவதற்கு அவசியமில்லை.

**திரு. மு. கருணாநிதி:** நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணமே—முதலில் சொல்லவேண்டாமென்று கருதினேன்—நான் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களிடம் இதைப்பற்றிக் கேட்டபொழுது அவர்கள் அவர்களுக்கு வந்த தகவலின்படி திருவண்ணாமலையில் பஞ்சாயத்துக் கோர்ட்டே இல்லை என்றுதான் தகவல் இருப்பதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு நான் நண்பர்கள் திரு. ப. உ. சண்முகம் அவர்களையும் திரு. எஸ். முருகையன் அவர்களையும் விசாரித்து அறிந்த பிறகுதான் முழுத் தகவலையும் தருகிறேன். முதலமைச்சர் அவர்களுடைய சிந்தனைக்கு இதை வைக்கிறேன். மாவட்டங்களில் மாவட்ட அதிகாரிகளால் அதிகாரங்கள் துர்விநியோகப்படுத்தப்படுகின்றன என்பதற்குப் பல சான்றுகள் இங்கே கனம் உறுப்பினர்கள் எடுத்து வைத்தார்கள். குறிப்பாக நான் முதலிலேயே சொன்னேன், சிவப்பு நாடா முறை எந்த அளவுக்குத் தகர்க்கப்படுகிறது, யார் யாரால், எந்த வகையில் என்பதை எடுத்துச்சொன்னேன். குறிப்பாக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருவாரூரில் தஞ்சை கூட்டுறவு மார்கெட்டிங் ஃபெடரேஷனுக்கு ஒரு இடம் தேவை என்று கருதி அதற்குப் பக்கத்திலே உள்ள இடத்தைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஒப்புதல் பெற்றிருக்கிறார்கள். அந்த இடத்தில் ஒரு நெல் வயல் இருக்கிறது. அந்த வயலுக்கு நடுவில் ஒரு தீவுபோன்ற மேடு இருக்கிறது அந்த மேட்டில் பத்துக் குடிசைகள் இருக்கின்றன. அந்தக் குடிசைகளில் ஏழை மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பத்துக் குடிசைகளுக்கு நடுவே ஒரு கிறிஸ்தவ ஆலயம் இருக்கிறது. இந்த ஏழைகள் வாழுகின்ற பத்து குடிசைகளும் பிரிக்கப்படவேண்டும். ஃபெடரேஷனுக்காக இடம் தேவை என்று சம்பிரதாயமாக நோட்டீஸ் தரப்பட்டது. அவர்கள் கொஞ்சம் காலக் கெடு கேட்டார்கள், அவ்வளவுதான். காலக் கெடு கேட்டவர்களுடைய மனு அதிகாரிகளைச் சேருவதற்கு முன்பாகவே அந்த இடம் இடித்துத் தகர்க்கப்பட்டது. அந்தக் கோயிலையாவது விட்டு விடுங்கள் என்று கேட்டார்கள். சிலுவையோடு அந்தக் கோயில் தகர்த்து எறியப்பட்டது; இடித்து நொறுக்கப்பட்டது. இருக்க இடம் இல்லாமல் அந்த ஏழை மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பிரசவ நேரத்தை எட்டிக் கொண்டிருந்த கர்ப்பவதி அந்த வீடு இடிக்கப்பட்டதன் காரணமாகத் தெருவில் இழுத்து எறியப்பட்ட கொடுமை திருவாரூரிலே நடைபெற்றது. அதிகாரிகளைக் கேட்டால், 'நாங்கள் என்ன செய்வது, உள்ளூரில் இருக்கும் பெரிய காங்கிரஸ் தலைவர்கள் வற்புறுத்துகிறார்கள்; நாங்கள் அதைச் செய்யாவிட்டால் எங்களைக் கண்டிருக்கிறார்கள்'

[திரு. மு. கருணாநிதி] [8th March 1966

என்று அந்த அதிகாரிகள் குறைபட்டுக் கொள்கிறார்கள். அவ்வளவு அவசரமாக அது இடித்து எறியப்பட வேண்டுமா? இடித்து விட்ட மறுநாளே அந்த இடத்தைத் தூர்த்து விட்டு கட்டடம் எழுப்பினார்களா? ஆறு மாத காலத்திற்கு அதிலே கட்டடம் எழுப்ப முடியாது. இப்பொழுது தான் வயலிலே நாற்றுகள் கொஞ்சம் தலை காட்டுகின்றன. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை. அந்த வயலைத் தூர்க்கப் போகிறார்களா என்றால் இல்லை. வயல்களின் நடுவிலே திட்டாக மேடு இருக்கிறது. அந்த மேட்டில் ஒரு பத்து குடிசைகள். அந்தக் குடிகைகளை அழித்தார்கள்; இடித்துத் தகர்த்தார்கள். மேடு அப்படியே இருக்கிறது. வயல் பள்ளம் தூர்க்கப்படவில்லை. காரணம் அங்கே பயிர் இருக்கிறது. அந்தப் பயிர் வளர்ந்து அறுவடையான பிறகு அந்த இடம் மேடாக்கப்பட்டு அங்கே கட்டடம் எழுப்பப் போகிறார்கள் அதற்ள்ளாக அந்தப் பத்துக் குடிசைகளும் அகற்றப்பட வேண்டிய காரணம் என்ன? ஏன் அகற்றப்பட்டிருக்கவேண்டும்? இதைத்தான், தங்களுடைய கட்சி நலத்திற்காக அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள் என்பதற்கு உதாரணமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜனநாயகத்திலே, சோஷலிசத்திலே நம்பிக்கையுள்ள சர்க்கார் என்று கூறப்படுகிறது. ஜனநாயகத்திலே இந்தச் சர்க்காருடைய கட்சிக்கு மாத்திரமல்ல, சர்க்காருக்கே நம்பிக்கை இருக்க வேண்டும். இந்தச் சர்க்கார் அந்த அடிப்படையில் இயங்கினால் அந்தக் கட்சி எடுத்துச் சொல்கிற ஜனநாயகக் கொள்கை இன்றைய தினம் ஒளிவிடுகிறது என்று அர்த்தம். ஆனால் இது இருக்கிறதா? சர்க்காருடைய சிப்பந்திகள், மாவட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் அந்த ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கிறார்களா? கிடையாது. எங்களைப் பொருத்தவரையில், ஆளும்கட்சிக்கு எதிர் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகப் பண்பு காப்பற்றப்பட வேண்டுமென்பதற்காக எத்தகைய செயல்களில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்கு உதாரணமாக, சென்னை மாநகராட்சியின் பெயரால் காமராஜர் அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தோம்; உத்தமர் சத்தியமூர்த்தி அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தோம்; மறைந்த மாவீரர் பண்டித ஜவஹர்லால் அவர்களை அழைத்து திறந்து வைக்கச் செய்தோம். இதை இந்த மாமன்றத்திலுள்ள அனைவரும் அறிவார்கள். அதே நேரத்தில் அந்த ஜனநாயகத்தைக் காங்கிரஸ் கட்சி காப்பாற்றவேண்டும்; அந்தக் கட்சியை இயக்குகிறவர்கள் காப்பாற்றவேண்டுமென்பதோடு கூட அதிகாரிகள் அதற்கு ஒத்துழைக்கிறார்களா என்றும் பார்க்கவேண்டும். துறையூரில் உள்ள ஒரு பேருந்து நிலையத்திற்கு—பஸ் ஸ்டாண்டுக்கு—பஞ்சாயத்திலுள்ளவர்கள் 'அண்ணா பேருந்து நிலையம்' என்று பெயர் வைக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டார்கள். இதற்கு ஒரு திறப்பு விழாவுக்காக நாள் குறித்தார்கள். அந்தத் தீர்மானத்தை ரத்து செய்யவேண்டுமென்று உடனடியாக ஆர்.டி.ஓ. என்ற அதிகாரி உத்தாவிடுகிறார். அந்த உத்தரவை எதிர்த்து நீதிமன்றத்தில் ஸ்டே வாங்கப்படுகி[illegible]து. ஸ்டே வாங்கப்பட்ட காரணத்தால், எங்கே



8th March 1966] [திரு. மு. கருணாநிதி]

விழாவை நடத்தி விடுவார்களோ என்று அஞ்சி ஆர்.டி.ஓ. ஊரிலே 144 சட்டத்தைப் பிறப்பிக்கிறார். 144 சட்டத்தை எப்போது பிறப்பிக்கவேண்டும்? அந்தப் பகுதியில் இருக்கிற காவல் துறையினர் 'கலவரம் ஏற்படலாம், அமைதிக் குறைவு ஏற்படலாம்; ஆகவே, 144 தடை உத்தரவு பிறப்பியுங்கள்' என்று காவல் துறையினர் சுட்டிக்காட்டினால்தான் ஆர்.டி.ஓ. 144 பிறப்பிக்கலாம். அவருடைய உத்தரவு நீதிமன்றத்தில் தடுக்கப்பட்டிருக்கிறது. தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற காரணத்திற்காக, அந்த விழா நடந்து விடக்கூடாது என்பதற்காக, 144 தடை உத்தரவு போடப்பட்டது. அது தடுக்கப்பட்டது. இது தான் ஜனநாயக மரபா? ஜனநாயகத்திற்கு அழகா? கட்டிக் காத்து வரப்படுவதாகக் கூறப்படும் ஜனநாயகத்திற்கு எடுத்துக்காட்டா? என்று அமைச்சரவையைக் கேட்க விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிக் காங்கிரசிலே இருக்கின்ற மற்றவர்கள் என்ன கருதினாலும், பொறுப்புள்ள அமைச்சர்கள் எந்த அளவுக்கு அவர்களிடம் மரியாதை வைத்திருக்கிறார்கள், மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். நான் பொறுப்புள்ளவர்களைக் கேட்கிறேன், நடைபெற்ற காரியம் பொறுப்பான செயலா?

அடுத்து, மாவட்டங்களில் இருக்கிற மாவட்ட ஆட்சி நூலகங்களைப் பற்றி ஒருசில வார்த்தைகள் இங்கே கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். மாவட்ட ஆட்சி நூலகங்களுக்கு ஒவ்வொரு வட்டத்தில் இருந்து ஒரு உறுப்பினரும் நகரத்தில் இருந்து இரு உறுப்பினர்களும், டி.பி.ஐ. நியமிக்கிற 10 நியமன உறுப்பினர்களும், கூட்டுறவு நூலங்களில் இருந்து ஒருவரும் நியமிக்கப்பட்டு, நியமிக்கப்பட்ட உறுப்பினர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட, செயலாளராக டி.இ.ஓ. இருக்க, மாவட்ட ஆட்சி நூலகங்கள் நடைபெறுவது அடிப்படை. இந்த மாவட்ட நூலகங்களுக்காக இன்றையதினம் மாவட்டத்திலே ஒரு கணிசமான தொகை செலவழிக்கப்படுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு லட்ச ரூபாயை இதற்காகத் திரட்டுகிறார்கள் என்றால் அதற்கான ஈட்டுத் தொகையாக ஒரு லட்சம் ரூபாயைச் சர்க்கார் தருகிறது. இந்த இரண்டு லட்சம் ரூபாயில் அந்த நூலகங்கள் செவ்வனே நடைபெருகிறதா? நிர்வாகச் செலவுகளுக்காகச் செலவழிக்கப்படுகிற பணம் போக மிச்சமுள்ள தொகை நல்ல நூல்களை வாங்கப் பயன்படுத்தப்படுகிறதா என்றால் இல்லை. அமைச்சர் அவர்கள் இதை ஏதோ எதிர்க்கட்சி வாதம் என்று கருதாமல் தயவு செய்து அந்த நூலகங்களிலே திடீர் சோதனை நடத்துவார்களேயானால்—சில மந்திரிகள் முன்பு மாறுவேடங்கள் போட்டுச் சென்றார்கள் என்று பத்திரிகையில் பார்த்திருக்கிறேன்—நிச்சயமாக அந்தப் புத்தகங்கள் எப்படிப்பட்டவை என்பதை நன்றாக உணர்ந்து கொள்ள முடியும். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், ஒரு புத்தகக் கம்பெனிக்காரர் 100

என்று அந்த அதிகாரிகள் குறைபட்டுக் கொள்கிறார்கள். அவ்வளவு அவசரமாக அது இடித்து எறியப்பட வேண்டுமா? இடித்து விட்ட மறுநாளே அந்த இடத்தைத் தூர்த்து விட்டு கட்டடம் எழுப்பினார்களா? ஆறு மாத காலத்திற்கு அதிலே கட்டடம் எழுப்ப முடியாது. இப்பொழுது தான் வயலிலே நாற்றுகள் கொஞ்சம் தலை காட்டுகின்றன. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை. அந்த வயலைத் தூர்க்கப் போகிறார்களா என்றால் இல்லை. வயல்களின் நடுவிலே திட்டாக மேடு இருக்கிறது. அந்த மேட்டில் ஒரு பத்து குடிசைகள். அந்தக் குடிசைகளை அழித்தார்கள்; இடித்துத் தகர்த்தார்கள். மேடு அப்படியே இருக்கிறது. வயல் பள்ளம் தூர்க்கப்படவில்லை. காரணம் அங்கே பயிர் இருக்கிறது. அந்தப் பயிர் வளர்ந்து அறுவடையான பிறகு அந்த இடம் மேடாக்கப்பட்டு அங்கே கட்டடம் எழுப்பப் போகிறார்கள் அதற்குள்ளாக அந்தப் பத்துக் குடிசைகளும் அகற்றப்பட வேண்டிய காரணம் என்ன? ஏன் அகற்றப்பட்டிருக்கவேண்டும்? இதைத்தான், தங்களுடைய கட்சி நலத்திற்காக அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள் என்பதற்கு உதாரணமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜனநாயகத்திலே, சோஷலிசத்திலே நம்பிக்கையுள்ள சர்க்கார் என்று கூறப்படுகிறது. ஜனநாயகத்திலே இந்தச் சர்க்காருடைய கட்சிக்கு மாத்திரமல்ல, சர்க்காருக்கே நம்பிக்கை இருக்க வேண்டும். இந்தச் சர்க்கார் அந்த அடிப்படையில் இயங்கினால் அந்தக் கட்சி எடுத்துச் சொல்கிற ஜனநாயகக் கொள்கை இன்றைய தினம் ஒளிவிடுகிறது என்று அர்த்தம். ஆனால் இது இருக்கிறதா? சர்க்காருடைய சிப்பந்திகள், மாவட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் அந்த ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கிறார்களா? கிடையாது. எங்களைப் பொருத்தவரையில், ஆளும்கட்சிக்கு எதிர்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகப் பண்பு காப்பற்றப்பட வேண்டுமென்பதற்காக எத்தகைய செயல்களில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்கு உதாரணமாக, சென்னை மாநகராட்சியின் பெயரால் காமராஜர் அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தோம்; உத்தமர் சத்தியமூர்த்தி அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தோம்; மறைந்த மாவீரர் பண்டித ஜவஹர்லால் அவர்களை அழைத்து திறந்து வைக்கச் செய்தோம். இதை இந்த மாமன்றத்திலுள்ள அனைவரும் அறிவார்கள். அதே நேரத்தில் அந்த ஜனநாயகத்தைக் காங்கிரஸ் கட்சி காப்பாற்றவேண்டும்; அந்தக் கட்சியை இயக்குகிறவர்கள் காப்பாற்றவேண்டுமென்பதோடு கூட அதிகாரிகள் அதற்கு ஒத்துழைக்கிறார்களா என்றும் பார்க்கவேண்டும். துறையூரில் உள்ள ஒரு பேருந்து நிலையத்திற்கு—பஸ் ஸ்டாண்டுக்கு—பஞ்சாயத்திலுள்ளவர்கள் 'அண்ணா பேருந்து நிலையம்' என்று பெயர் வைக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டார்கள். இதற்கு ஒரு திறப்பு விழாவுக்காக நாள் குறித்தார்கள். அந்தத் தீர்மானத்தை ரத்து செய்யவேண்டுமென்று உடனடியாக ஆர்.டி.ஓ. என்ற அதிகாரி உத்தரவிடுகிறார். அந்த உத்தரவை எதிர்த்து நீதிமன்றத்தில் ஸ்டே வாங்கப்படுகிறது. ஸ்டே வாங்கப்பட்ட காரணத்தால், எங்கே





விழாவை நடத்தி விடுவார்களோ என்று அஞ்சி ஆர்.டி.ஓ. ஊரிலே 144 சட்டத்தைப் பிறப்பிக்கிறார். 144 சட்டத்தை எப்போது பிறப்பிக்கவேண்டும்? அந்தப் பகுதியில் இருக்கிற காவல் துறையினர் 'கலவரம் ஏற்படலாம், அமைதிக் குறைவு ஏற்படலாம்; ஆகவே, 144 தடை உத்தரவு பிறப்பியுங்கள்' என்று காவல் துறையினர் சுட்டிக்காட்டினால்தான் ஆர்.டி.ஓ. 144 பிறப்பிக்கலாம். அவருடைய உத்தரவு நீதிமன்றத்தில் தடுக்கப்பட்டிருக்கிறது. தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற காரணத்திற்காக, அந்த விழா நடந்து விடக்கூடாது என்பதற்காக, 144 தடை உத்தரவு போடப்பட்டது. அது தடுக்கப்பட்டது. இது தான் ஜனநாயக மரபா? ஜனநாயகத்திற்கு அழகா? கட்டிக் காத்து வரப்படுவதாகக் கூறப்படும் ஜனநாயகத்திற்கு எடுத்துக்காட்டா? என்று அமைச்சரவையைக் கேட்க விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிக் காங்கிரசிலே இருக்கின்ற மற்றவர்கள் என்ன கருதினாலும், பொறுப்புள்ள அமைச்சர்கள் எந்த அளவுக்கு அவர்களிடம் மரியாதை வைத்திருக்கிறார்கள், மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். நான் பொறுப்புள்ளவர்களைக் கேட்கிறேன், நடைபெற்ற காரியம் பொறுப்பான செயலா?

அடுத்து, மாவட்டங்களில் இருக்கிற மாவட்ட ஆட்சி நூலகங்களைப் பற்றி ஒருசில வார்த்தைகள் இங்கே கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். மாவட்ட ஆட்சி நூலகங்களுக்கு ஒவ்வொரு வட்டத்தில் இருந்து ஒரு உறுப்பினரும் நகரத்தில் இருந்து இரு உறுப்பினர்களும், டி.பி.ஐ. நியமிக்கிற 10 நியமன உறுப்பினர்களும், கூட்டுறவு நூலங்களில் இருந்து ஒருவரும் நியமிக்கப்பட்டு, நியமிக்கப்பட்ட உறுப்பினர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட, செயலாளராக டி.இ.ஓ. இருக்க, மாவட்ட ஆட்சி நூலகங்கள் நடைபெறுவது அடிப்படை. இந்த மாவட்ட நூலகங்களுக்காக இன்றையதினம் மாவட்டத்திலே ஒரு கணிசமான தொகை செலவழிக்கப்படுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு லட்ச ரூபாயை இதற்காகத் திரட்டுகிறார்கள் என்றால் அதற்கான ஈட்டுத் தொகையாக ஒரு லட்சம் ரூபாயைச் சர்க்கார் தருகிறது. இந்த இரண்டு லட்சம் ரூபாயில் அந்த நூலகங்கள் செவ்வனே நடைபெருகிறதா? நிர்வாகச் செலவுகளுக்காகச் செலவழிக்கப்படுகிற பணம் போக மிச்சமுள்ள தொகை நல்ல நூல்களை வாங்கப் பயன்படுத்தப்படுகிறதா என்றால் இல்லை. அமைச்சர் அவர்கள் இதை ஏதோ எதிர்க்கட்சி வாதம் என்று கருதாமல் தயவு செய்து அந்த நூலகங்களிலே திடீர் சோதனை நடத்துவார்களேயானால்—சில மந்திரிகள் முன்பு மாறுவேடங்கள் போட்டுச் சென்றார்கள் என்று பத்திரிகையில் பார்த்திருக்கிறேன்—நிச்சயமாக அந்தப் புத்தகங்கள் எப்படிப்பட்டவை என்பதை நன்றாக உணர்ந்து கொள்ள முடியும். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், ஒரு புத்தகக் கம்பெனிக்காரர் 100

[திரு. மு. கருணாநிதி] [8th March 1966

புத்தகங்களை அச்சடிக்கிறார் என்றால், 100 புத்தகங்களும், எல்லா மாவட்டத்திலும் 100 நூலகங்கள் இருந்தால் ஒவ்வொரு நூலகத்திற்கும் ஒன்று விதம் வாங்கப்படுகிறது. ஓரே கம்பெனியில் 100 வகை புத்தகங்கள் இருந்தால் ஒரு மாவட்டத்திற்கு மட்டும் 10,000 புத்தகங்கள் வாங்கப்படுகின்றன. அந்தப் புத்தகங்கள் கடைத் தெருவில் விற்கப்படும்போது அதன் விலை 2 ரூபாய். ஆனால் நூலகத்திற்குக் கொடுக்கிறோம் என்று சொல்லி அதன் விலை 4 ரூபாய் என்று போடப்படுகிறது. நூல் நிலையப் பதிப்பு என்ற வார்த்தைகளைப் போட்டு, அழகான அட்டையைப் போட்டு 2 ரூபாய்க்கு வெளியே விற்கப்படுவது, 4 ரூபாய்க்கு நூல் நிலையத்திற்குத் தரப்படுகிறது. ஒரு கம்பெனி 100 விதமான புத்தகங்களை அச்சடித்து நூலகங்களுக்குக் கொடுப்பதன் மூலம் கம்பெனி வருமானத்தைப் பெறுகிறது. அதிலே 25 சதவிகிதம் என்ன 35 சதவிகிதம் வேண்டுமென்றாலும் கமிஷன் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிற புத்தகத்தை 4 ரூபாய் என்று போட்டுக் கொடுக்கும்போது 25 சதவிகிதமானால் என்ன, 35 சதவிகிதமானால் கூடக் கொடுப்பார்கள். அதுமாத்திரமல்ல; சில நேரங்களில் அட்டையை மாத்திரம் மாற்றி விடுகிறார்கள். உள்ளே அப்படியே இருக்கும். உதாரணமாக, 'ஓவியப்பாவை' என்ற புத்தகம் இருந்தால் அதிலே 50 புத்தகத்தைக் கொடுத்து விட்டு, அட்டையை மாற்றி 'சித்திரப் பாவை' என்று போட்டு அதே புத்தகத்தை விற்கிறார்கள். இவை வேடிக்கையாகச் சொல்லப்படுவதில்லை. அமைச்சர்கள், அல்லது திறன் படைத்த, நேர்மை படைத்த அதிகாரிகள் இந்த நூல் நிலையங்களில் திடீர் சோதனை இடுவார்களேயானால் ஏற்பட்டிருக்கிற இந்தத் தவறுகளை ஒழுங்காகக் கண்டு பிடிக்க முடியும். இந்த நூல் நிலையங்களில் நடைபெறுகிற தவறான செயல்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பொதுமக்கள் வரிப்பணம் பாழாகாமல் இருக்க மாவட்ட ஆட்சி நூலகத்திற்கு என்று சட்டம் செய்ய வேண்டுமென்று முன்பு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை விரைவாகக் கொண்டு வரவேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, மாவட்ட நிர்வாகத்தில் மற்ற அரசியல் கட்சியினுடைய தலைவர்களும், சட்டமன்ற, பாராளுமன்ற, உறுப்பினர்களும் கலந்து கொள்ளுவதற்கான வழிவகைகள் வகுக்கப்பட வேண்டும். பாதுகாப்பு நேரங்களில் எப்படி எல்லாக் கட்சித் தலைவர்களும் அரசியலிலே இணைந்து நிற்கிறார்களோ அதே போன்று முக்கியமான பிரச்சினைகள் வரும்போது, குறிப்பாக உணவுப் பிரச்சினை என்று எடுத்துக் கொண்டால் மாவட்ட நிர்வாகத்தைப் பொருத்து சட்ட மன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகியோருடைய யோசனைகளையும் கேட்டு நடக்க வேண்டிய விதத்தில் அமைப்புகளை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



8th March 1966]

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் துணை சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் மான்யங்கள் நாலைந்து சேர்த்து விவாதிக்கப்பட்டன. கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் பெரிய தொகைதான் இப்போது கோரப்படுகிறது. நாட்டு நிர்வாகத்தின் பெரும் பகுதியாகப் பார்த்து எதற்காக மான்யம் கோருகிறோமோ அதுவும் இதில் சேர்ந்ததாக இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். மாவட்ட நிர்வாகம் என்பது, அதை ஆங்கிலத்தில் சொன்னால் Pivot of administration என்றுதான் சொல்லவேண்டும். அதுதான் அடிப்படை. அதுதான் தூண். நாட்டின் நிர்வாகத்தில் தூணாக விளங்குகிற மாவட்டத்தைத் தான் ஒரு யூனிட்டாக, முக்கியமானதொரு யூனிட்டாக அமைத்திருக்கிறோம். பெரிய மாவட்டங்களாக இருக்கலாம், சிறிய மாவட்டங்களாக இருக்கலாம். கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், மாவட்டங்களை எல்லாம் சிறிதாக்கவேண்டிய நிமித்தம் பற்றி. இதைப்பற்றி நான் கொண்டிருக்கிற கருத்துக்களையும் அவர்கள் நினைவுபடுத்தினார்கள். மாவட்டங்கள் பெரிதாக இல்லாமல் சிறிதாக இருந்தால் நலம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுத் தான் வருகிறது. நானே இந்த மன்றத்தில் கூறினேன் என்று நினைக்கிறேன். காலம் சென்ற பிரதம மந்திரி அவர்கள் கூட சென்ற ஆண்டில் டெல்லியில் நிர்வாகத்தைப் பற்றியெல்லாம் பேசியபோது மாவட்டங்கள் பற்றி—அவர்களுக்கு இந்த மாவட்டங்களைப் பற்றித் தெரியாது—குறிப்பிட்டு பேசும்போது வேறு மாநிலங்களில் உள்ள மாவட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டு நிர்வாகம் சீராக நடைபெறவேண்டுமென்றால் மாவட்டங்களைச் சிறிதாக ஆக்குவது அவசியம் என்ற கருத்தை வெளியிட்டார்கள். கன்னியாகுமரி, நீலகிரி, சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களை எல்லாம் இரண்டாக ஆக்க வேண்டும் என்பதுதான் கனம் எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்களின் யோசனை. மாவட்டங்களை எல்லாம் இரண்டாகப் பிரிப்பது என்றால் நிர்வாகச் செலவு அதிகமாகும். அதற்கு அவசியம் இருந்தால், நிர்வாகச் செலவை அதிகப்படுத்துவதற்கு அவசியம் இருந்தால், அதை நான் பொருட்படுத்தமாட்டேன். ஆனால், அதற்கு அவசியமில்லை என்று தான் நான் கருதுகிறேன். ஒரு மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதில் உள்ள சங்கடத்தைப் பற்றி குறிப்பிட்டதை கனம் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நினைவுபடுத்தினார்கள். ஆனால் 'ட்ரெடிஷன்' என்று ஒன்று இருக்கிறது. தஞ்சையை இரண்டாகப் பிரிப்பது என்றால் அது ட்ரெடிஷனுக்கு ஏற்றது அல்ல. நான் அறந்தாங்கிக்குச் சென்றிருந்தபோது அவர்கள் அங்கெல்லாம் வாட்சிமயமாக இருக்கிறது என்று கூறினார்கள். அப்போது, புதுக்கோட்டையோடு அல்லது இராமநாதபுரத்தோடு சேர்த்து விடலாமே என்று நான் சொன்னேன். அதற்கு அவர்கள், நாங்கள் தஞ்சையை விட்டுப் போக மாட்டோம், தஞ்சை என்ற பெயர் எங்களுக்கு வேண்டுமென்று கூறினார்கள். அதைத்தான் நான் குறிப்பிட்டேன். கோவை மாவட்டத்தைப் பிரித்து ஈரோடு மாவட்டம் என்று ஆக்கலாம் 1-00 p.m.

என்று சொன்னால் அவர்கள் கோவை என்ற பெயரை விட்டு விடுவதற்குச் சம்மதிக்கமாட்டார்கள். கன்னியாகுமரி சிறியதாகத் தான் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கிறது. முன்பு ஒரு யோசனை கூறப்பட்டது. நான் கூட வற்புறுத்தினேன். சம்பந்தப்பட்ட சட்டமன்ற அங்கத்தினர்களிடம், நாங்குனேரி தாலுகாவை கன்னியாகுமரியோடு சேர்த்துவிட்டால் என்ன, சேர்ந்தாற்போலவே இருக்கிறது, ஒற்றுமை கூட இருக்கிறது என்று நான் கூறினேன். அப்போது நாங்குனேரியைச் சார்ந்த பிரதிநிதிகள் உறுதியாக "அதைப்பற்றி நீங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவே வேண்டாம், அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம், இதுவரையில் திருநெல்வேலியில் தான் இருந்தோம். திருநெல்வேலியில் தான் தொடர்ந்து இருப்போம். கன்னியாகுமரிக்கு நாங்கள் போக மாட்டோம்" என்று கூறினார்கள். நிர்வாக வசதியை யொட்டி இந்த யோசனையை கூறினேன் என்றபோது அதை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று உறுதியாக தெரிவித்து விட்டார்கள். ஆக, நம் மாவட்டம் என்று கருதும் ஒரு ட்ரெடிஷன் வளர்ந்திருக்கிறது. அதை மாற்றுவதற்கு சாதாரணமாக சம்மதிக்க மாட்டார்கள். இருந்தாலும் கனம் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறியதெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் பல மட்டங்களிலும் பரிசீலனை செய்யப்பட்டது. ரெவின்யூ போர்டு பரிசீலனை செய்தது. அரசாங்கம் இதைப் பரிசிலனை செய்தது. பல யோசனைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஒரு நேரத்திலே பல மாவட்டங்களை இரண்டாகப் பிரிப்பது என்ற யோசனை கூட நன்றாக ஆராயப்பட்டது. ஆனால், மொத்தத்தில் அவ்வாறு எடுத்துக் கொள்வது என்பதில், தவிர்க்கக்கூடிய செலவு இல்லாமல் நிர்வாகத்தை சீர்ப்படுத்தி விடலாம், நிர்வாகத்தை திருப்திகரமாக மாற்றியமைக்கலாம் என்றுதான் நினைக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்தையும் இரண்டாகப் பிரித்துக் கொள்வதினால் நிர்வாகச் செலவு ஆண்டுதோறும் அதிகமாவதோடு முதலில் கட்டடம் போன்றவைகளுக்காக முதலீடு செய்வது என்று இம்மாதிரி இரண்டு வகைகளிலும் அதிகமான செலவு ஏற்படும். அந்தச் செலவிற்கு அவசியமில்லை என்பதை உணர வேண்டும். ஆனால், எல்லா மாவட்டங்களையும் விட சேலம் மாவட்டம் மிகப் பெரிதாக இருந்தது. ஆதி முதற்கொண்டே சேலத்தை பிரிக்க வேண்டுமென்ற யோசனை இருந்துவந்தது. ஹோசூரில் இருக்கிறவர்களுக்கும் தர்மபுரி, கிருஷ்ணகிரியில் இருக்கிறவர்களுக்கும் இடையே, பொதுவாக சேலத்திற்கும் இதற்கும் அவ்வளவு தொடர்பு இல்லை. தர்மபுரி, கிருஷ்ணகிரி இவற்றிற்கும் ஹோசூருக்கும் இடையே வெகு தூரம் இருக்கிறது. நானே கவனிந்திருக்கிறேன். அவ்வாறு தூரம் அதிகமாக இருப்பதால் மாவட்ட அதிகாரிகளால் போதிய கவனம் செலுத்த முடியவில்லை என்பதை நானே கவனித்திருக்கிறேன். ஆகவே. சேலம் மாவட்டத்திற்கு மட்டும் விலக்கு அளித்து, செலவு அதிகமாகிறது என்றாலும் தவிர்க்க கூடாத செலவு என்று அது எடுத்துக் கொள்ளப்பட்டது. பின்னர் அதுமாதிரி இரண்டு மாவட்டங்



களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவற்றிற்கு அங்கேயே தலைமை ஸ்தானம் இல்லாமல் இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒரு பக்கத்தில் பார்த்தால் அது திருப்தி இல்லைதான்: இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வெளியே அதன் தலைமை ஸ்தானம் மதுரையில் இருக்கிறது. அதே போல் செங்கல்பட்டு மாவட்டம். முன்பு செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமை ஸ்தானம் செங்கல்பட்டு மாவட்டத்திற்குள்ளே தான் இருந்தது. ஆனால் அதை சென்னைக்கு எடுத்துக் கொண்டு விட்டார்கள். சைதாப்பேட்டை சென்னைக்கு வேண்டுமென்று எடுத்துக் கொண்டதினால்தான் இப்போது செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமை ஸ்தானம் அம்மாவட்டத்திற்கு வெளியே இருக்கிறது. இதில் கவனிக்க வேண்டியது நம் ஊர், நம் மாவட்டம் அதற்கு ஒரு தலைமை ஸ்தானம் வேண்டும் என்று நினைக்கிறார்கள். அங்குள்ள கலெக்டருக்கு இங்கு எனக்கு ஜூரிஸ்டிக்ஷன் இல்லையே என்று வருத்தம். தலைமை ஸ்தானம் மாவட்டத்திற்கு சென்ட்ரலில், மத்தியில் இருக்கிறதா என்று பார்த்தால் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மதுரையை விட மத்தியமான ஸ்தலம் வேறு ஒன்றுமில்லை. (திரு. சா. கணேசன் : மானாமதுரை இருக்கிறது.) விருதுநகரில் உள்ளவர்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ளவர்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எல்லோருக்கும் மதுரைக்கு வரக்கூடிய வேலை இருக்கிறது: அப்படியே வந்து விட்டு போய் விடுகிறார்கள். சென்னை நகரம் தான் செங்கல்பட்டுக்கு மத்தியமாக இருக்கிறது. பலர் இப்போது வருகிறார்கள், தங்கள் வேலைகளை பார்த்து விட்டுப் போகிறார்கள். அந்த மாவட்ட எல்லைக்குள் இருக்கிறதா என்பது மட்டும் முக்கியம் அல்ல. காஞ்சீபுரம் தலைநகரமாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்கும் பிடித்தமாகத்தான் இருக்கிறது. காஞ்சீபுரம் சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம். அழகான நகரம். மிகச் சிறந்த நகரம். அந்த நகரம் செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைமை ஸ்தானமாக இருப்பது நல்லது என்பது தான் என்னுடைய கருத்தும். ஆனால் ஜாக்ரஃபிக்கலாகப் பார்த்தால் அது ஒரு பகுதியில் இருக்கிறது. மத்தியமாக இருக்கிறது என்று சொல்ல முடியாது. எதற்காக தலைமை ஸ்தானத்தை வைக்கிறோம்? மஹாராஜாக்கள் மேடைக்கு வந்து கிரீடம் போட்டுக் கொள்கிறார்களே, அதற்காகவா தலைமை ஸ்தானம். மக்களின் நலனை, மக்களின் சௌகரியத்தைத்தான் முக்கியமாக கவனிக்கவேண்டும். அந்தமாதிரிப் பார்த்தால் இதற்கெல்லாம் அவசரமில்லை. அங்கு வைப்பதா, இங்கு வைப்பதா என்று அதற்கு ஒரு சர்ச்சை, இதெல்லாம் வேண்டியதில்லை. இப்போதுள்ளபடி அப்படியே இருந்து விட்டுப் போகலாம். எதற்காக அனாவசியமாகச் செலவை ஏற்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

கிராம அதிகாரிகள் பற்றி கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எதிர்கட்சி துணைத்தலைவர் அவர்களும் கூறினார்கள். கிராம அதிகாரிகள் நிர்வாகத்தின் தூண்களாகத் தான் விளங்குகிறார்கள். அவர்கள் முழு நேர வேலை செய்கிறார்கள்.

அவர்களுக்கு என்ன சம்பளம் கொடுப்பது என்பதையெல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை நான் முற்றிலும் ஏற்றுக் கொள்கிறேன். இந்த அமைப்பின் அடிப்படை இருக்கிறதே அதை மாற்றுவது சரியல்ல என்பது என் கருத்து, இதுவே அரசாங்கத்தின் கருத்தும் கூட; பப்ளிக் சர்வீஸ் கமிஷன் விளம்பரப்படுத்தி, மனுக்கள் வாங்கி, குறைந்த பட்ச படிப்பு எவ்வளவு இருக்கவேண்டும், எஸ்.எஸ்.எல்.சி. ஆவது படித்திருக்கவேண்டும், இண்டர்வ்யூ செய்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும், அப்படி தேர்ந்தெடுத்து அந்தந்த கிராமங்களுக்கு அவர்களை போஸ்ட் செய்யவேண்டும் என்று செய்தால் அது திருப்திகரமாக இருக்காது. அதிலும் ஒரு ட்ரெடிஷன் இருக்கிறது. பரம்பரை பாத்தியத்தை பற்றி அரசியல் அமைப்புச் சட்டத்திலே இடமில்லை. அது இப்போது மறைந்து விட்டது என்று கூறலாம். அது முன்னமே இருந்தது. பரம்பரை பாத்தியதையை நான் ஆதரிக்கவில்லை, ஆதரிக்கமாட்டோம். ட்ரெடிஷன் இருக்கிறது. அங்கிருந்து பழக்கப்பட்டவர்கள், அந்த நிலத்திலே இருந்தவர்கள், கிராம நிலவாரத்தைத் தெரிந்தவர்கள், கிராம நிர்வாகத்தில் அனுபவப்பட்டவர்கள், அல்லது அனுபவப்பட்டவர்களோடு பழக்கப்பட்டவர்கள், அவர்களுடன் இருந்து தெரிந்து கொண்டவர்கள் அம்மாதிரியுள்ளவர்கள் தான் இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் ஒரு பெண்மணி கர்ணம் வேலை பார்க்கிறார்கள். ரொம்ப திருப்திகரமாக இருக்கிறது. அஜ் மாஷ், நிலத்திற்கு போவது, வயல்களை பார்ப்பது இவற்றை எல்லாம் செய்து வருகிறார்கள். அவர் கணவர் அந்த வேலையை பார்த்துக் கொண்டிருந்தார், அவருக்கு கண் தெரியவில்லை. ஆகவே இந்த அம்மையாரே பார்க்கிறார். ரொம்ப திருப்திகரமாக இருக்கிறது. இங்குள்ள அம்மையார்கள் இதைத் தெரிந்து கொள்ள வேண்டும், இது அவர்கள் ரொம்ப பெருமைப்படக்கூடிய விஷயம். அவ்வளவு திறமையாக இருக்கிறார். ஆண்கள் கூட அவ்வளவு திறமையாகச் செய்ய மாட்டார்கள்; அவ்வாறெல்லாம் பார்க்கிறோம். இதெல்லாம் அப்ளிகேஷன் போட்டு, படிப்பை மட்டும் வைத்துக்கொண்டு எடுத்தால் வராது, ட்ரெடிஷனை வரவேண்டும். அந்த முறையில் தான் இப்போது நாம் நியமித்துக் கொண்டிருக்கிறோம். இப்படிச் சொல்லும்போது, அவர்களுடைய சம்பளத்தைப்பற்றி கேட்கிறார்கள். எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், பியூனுக்கு கூட 50 ரூபாய் சம்பளம் இருக்கிறது, கிராம அதிகாரிகளுக்கு 34 ரூபாய் தானே சம்பளம் இருக்கிறது என்று கேட்டார்கள். கிராம அதிகாரிகளுடைய சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது என்பதை அரசாங்கம் ஆலோசித்துப் பார்த்து அவர்களுடைய பஞ்சப்படியை கொஞ்சம் உயர்த்தினோம். இதை மேலும் உயர்த்திக்கொடுக்கலாம் என்றால் இன்னும் செலவு அதிகமாகும். எத்தனை கிராமங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி அவர்களே கணக்கு சொன்னார்கள். இத்தனை கிராமங்களிலுள்ளவர்களுக்கும் சிறிதளவு உயர்த்திக் கொடுத்தால் கூட செலவு அதிகமாகும். கணிசமான





அளவுக்கு இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறது என்று கிராம அதிகாரிகளே திருப்தி அடையக்கூடிய நிலையில் தான் இப்போதுள்ள சம்பளம் இருக்கிறது. ஆனால் எவ்வளவுதான் உயர்த்தினாலும் திருப்தி ஏற்பட முடியாது. அதோடு திருப்தி ஏற்பட்டிருந்தாலும் அதை அதிருப்தியாக்கலாம், அவர்களாகவே அதை ஆக்கிக்கொள்ளலாம். எவ்வளவு கொடுத்தாலும் போதாது, என்ன விமோசனம் கிடைக்கப்போகிறது என்று கேட்டுக்கொண்டேயிருக்கலாம். ஆகவே தாரதம்மியப்படுத்துவது சரியல்ல; பியூனினுடைய சம்பளத்தை எடுத்துச் சொன்னார்கள்; எல்லோருக்கும் சமமாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள்; அதற்காக பியூனுடைய சம்பளத்தைக் குறைக்கவேண்டும் என்று அவர்கள் சொல்வதாக நான் எடுத்துக்கொள்ளவில்லை. இப்படி தாரதம்மியப் படுத்திப்பார்த்தால், இப்போது தாசில்தார்கள் இருக்கிறார்கள் கலெக்டர்கள் இருக்கிறார்கள், டெப்யுடி கலெக்டர்கள் இருக்கிறார்கள் —இவர்களில் தாசில்தாருடைய சம்பளத்தை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு 400 ரூபாய் மாக்ஸிமம் சம்பளம் இருக்கிறது. 84 ரூபாய் பஞ்சப்படி கொடுக்கிறோம். ஆனால் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு 250 ரூபாய் தான் சம்பளம் கிடைக்கிறது; சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் சாதாரணமானவர்கள் அல்ல; மக்களுக்கு எஜமானர்கள்; மந்திரிகளுக்கே எஜமானர்கள்; கலெக்டரையோ அல்லது டெபுடி கலெக்டரையோ எப்படி வேண்டுமென்றாலும் தாக்கிப் பேசக் கூடிய சக்தி படைத்தவர்கள் இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் (சிரிப்பு) இவர்களுக்கே 250 ரூபாய் தான் சம்பளம்; தாசில்தார்களுக்கு 400 ரூபாய் சம்பளம் இருக்கிறதே, அப்படியானால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 250 ரூபாய் சம்பளம் இருப்பது போதுமா என்று யாராவது கேட்க முடியுமா என்ன?

**திரு. மு. கருணாநிதி :** சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுவது சம்பளம் என்ற அடிப்படையிலா கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எப்படி கொடுக்கப்படுகிறதோ அதே முறையில் தான் கிராம அதிகாரிகளுக்கும் தரப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் என்று சொல்லும்போது, அவர்கள் கெஸட்டட் அந்தஸ்தில் இருந்து வருகிறார்கள். ஆகவே, சம்பளம் கொடுக்கப்படுவதில் அரசாங்கம் எப்போதும் கவனம் செலுத்திக்கொண்டு தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிவப்பு நாடா முறையைப்பற்றி பல உறுப்பினர்கள் சொன்னார்கள். ஓரளவுக்கு இதைப்பற்றி கவனம் செலுத்த வேண்டியது தான். கண்ணை மூடிக்கொண்டு தர்பார் ஆட்சி செய்து விட முடியாது. ஆனால், எந்த அளவுக்கு நடைமுறைகளை தளர்த்த முடியுமோ அந்த அளவுக்கு தளர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜில்லா நிர்வாகத்தில் தாமதம் ஏற்படுகிறது என்று கூறப்பட்டது. அவ்விதமான தாமதம் ஒன்றுமே யில்லை, அதற்கு ஆதாரமேயில்லை என்று நான்

கூறமாட்டேன். எனக்கும் நன்றாகத் தெரியும், இந்த அரசாங்கத்திற்கும் நன்றாகத் தெரியும். இதை உணர்ந்து அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. இப்போது போடப்பட்டிருக்கும் சிக்கன கமிட்டியார், ஜில்லா நிர்வாகத்தையும் எடுத்துக்கொண்டு நன்றாக ஆராய்ந்து நிர்வாகத்தில் ஏதாவது மாற்றி அமைக்க முடியுமா, எப்படி கால தாமதத்தைத் தவிர்ப்பது, எப்படி குறையில்லாமல் நிறைவேற்றுவது, எப்படி திருத்தி அமைப்பது என்பதில் கவனம் செலுத்த முற்பட்டிருக்கிறார்கள். கலெக்டர் அவர்கள் பெரிய நிர்வாகத்தை கவனிக்கவேண்டியிருக்கிறது என்றும் அதில் இருக்கின்ற குறைகளைப்பற்றியும் பல உறுப்பினர்கள் சொன்னார்கள். ஒன்றை நான் முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கலெக்டரைப் பொறுத்தளவில் மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக விளங்குகிறார்கள். அவர்களை சிறுமைப்படுத்தி பேசுவது அழகல்ல, மக்களுக்கும் நல்லதல்ல. ஏதோ ஒரு சிற்றரசு போல இருக்கிறது என்று சொன்னார்கள், ஜனநாயகத்தின் கீழ் சிற்றரசாகத்தான் இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம். கலெக்டர்களுக்கு எவ்வளவு அந்தஸ்து கொடுத்தாலும் தகும். ஜில்லா நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு எல்லா விஷயங்களிலும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. கலெக்டர்களுக்கு பல வேலைகள் இருக்கின்றன. இன்றைக்கு நடைபெறக்கூடிய ஆட்சி வெறும் போலீஸ் ஆட்சி அல்ல. க்ஷேம நல ஆட்சி, எதிர்க்கட்சியினர் கூட க்ஷேமநல ஆட்சி என்று அடிக்கடி பேசிவருகிறார்கள், இதில் குறையிருக்கிறது என்று சொல்லுகின்ற நேரத்தில் கூட அவர்கள் வாயால் அடிக்கடி க்ஷேமநல ஆட்சி என்று பேசப்பட்டு தான் வருகிறது. மாவட்ட அளவில் எல்லாப் பொறுப்புக்களையும் கலெக்டர் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் கருத்து. அவர்கள் கறிகாய் விஷயத்தில் தான் கவனம் செலுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். கறிகாய் அவ்வளவு மோசமானதல்ல. அதை எவ்விதத்திலும் அலட்சியம் செய்துவிட முடியாது. மாவட்டங்கள், பஞ்சாயத்து அமைப்புகள் எல்லாம் இதில் அக்கறை எடுத்துக்கொண்டு இதில் கவனம் செலுத்த வேண்டும் என்பது திட்டத்தின் ஒரு அம்சம். அந்த முறையில் கலெக்டர்கள் இதில் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அதை நான் வரவேற்கிறேன், அதை நான் குறை சொல்ல மாட்டேன். அவர்களுக்கு பல வேலைகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டது, உண்மைதான், ஆனால் இருக்கின்ற வேலைகளை எவ்வாறு பிரித்துக் கொள்ளலாம், எப்படி பிரித்துக்கொடுப்பது என்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மாவட்டம் பெரிதாக இருக்கின்ற இடங்களில் அதைப் பிரிக்கவேண்டும் என்ற கருத்தும் சொல்லப்பட்டது. மாவட்டத்தை பிரிப்பது என்பதில் எந்த அளவுக்கு கவனம் செலுத்த முடியும் என்பதைப்பற்றி ஆராயலாம். ஆனால் பல மாவட்டங்களாக பிரிப்பதில்லை என்கின்ற முடிவு எடுத்த பின்னால் அரசாங்கம், டி.ஆர்.ஓ. என்ற ஆபீசர்களை நியமித்து, கலெக்டர் அவர்கள் பார்க்கவேண்டிய வேலைகளை டி.ஆர்.ஓ.-க்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்ற ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.



கடன் வசூலிப்பதில் தான் கவனம் செலுத்துகிறார்கள் என்று குறையாக சொல்லப்பட்டது. அவர்கள் வியாபாரத்திற்காக கடன் வசூலிக்கவில்லை. திட்டத்தை நிறைவேற்றும்போது, நிர்வாகச் செலவை நாம் சமாளிக்க வேண்டும், அதற்குத் தகுந்தபடி வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கிறோம், அப்படி தயாரிக்கும் போது, மக்களுக்கு வேண்டிய பணத்தை கொடுப்பதற்கு நாம் வருமானத்தை பெருக்கிக்கொள்ளவேண்டியிருக்கிறது. வருவாய் வேண்டியிருக்கிறது. வரியின் மூலமாக மட்டும் நாம் வருவாயை வசூலிப்பதில்லை. பல மூலதனச் செலவுகளுக்கும் பணம் வேண்டும். அதற்காக அரசாங்கம் கடன் வசூலிக்கின்றது. இதுவல்லாமல் மின்சாரக்குழு கடன் எழுப்புகிறது. இவ்விதம் கடன் எழுப்பும்போது கடனை வசூல் செய்யவேண்டும். அதிலும் மாவட்ட அதிகாரிகள். கலெக்டர் இவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து இதில் ஈடுபடுகின்றனர். அதில் தவறொன்றுமில்லை. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் நாடு நெருக்கடியான நிலையில் இருந்த போது, காலஞ்சென்ற நமது பிரதம அமைச்சர் அவர்கள்—நாட்டை பாதுகாப்பதற்கு பெரிய தளவாடங்களை பெறுவதற்கு—வீரத்தோடும், தீரத்தோடும் போராடிக் கொண்டிருந்த நமது வீரர்களுக்கு தளவாடங்களை அளிப்பதற்கு- -தளவாடங்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைப்பதற்கு அன்னிய நாட்டு செலாவணி பெருகவேண்டும், தளவாடங்கள் பெருகவேண்டும்--இதற்காக தங்கத்தை எல்லோரும் தாராளமாக வாரி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளும் வகையில், இந்த அரசாங்கம் அதை ஒரு இயக்கமாகவே கருதியது. அதை வெற்றிகரமாகவும் நடத்தியது. அதைப் பார்த்து எதிர்க்கட்சிக்காரர்கள் குறை கூறுவதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. இந்த அரசாங்கம் அதை ஒரு இயக்கமாகவே நடத்தியது. பிரதம மந்திரி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள், மின்சாரக்குழு போன்ற பல குழுக்கள் கடன் எழுப்புவது போல இதையும் கருதவேண்டும் என்று. அதே போன்று தான் சிறு சேமிப்பு இயக்கம் நடந்தது, அதில் உத்தியோகஸ்தர்கள் உத்யோகப் பற்றற்றவர்கள் கலந்து கொண்டார்கள். இதையெல்லாம் அரசாங்கம் ஒரு இயக்கமாகவே கருதுகிறது. இப்படி அரசாங்கம் நடத்தும்போது, இதில் கலெக்டர்கள், மற்றுமுள்ள அதிகாரிகள் இவர்கள் எல்லாம் பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்றால் அவர்கள் தங்கள் கடமையை உணர்ந்துதான் பொறுப்பேற்றிருக்கிறார்கள், அவர்களைக் கட்டாயப்படுத்தினோம் என்று சொல்வது சரியல்ல. அதற்கு இடமே இல்லை. எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு, எதிர்க்கட்சியிலுள்ள பல உறுப்பினர்களுக்கு இதைப்பற்றி சரியாக தெரியாமல் இருக்கலாம். இந்த விபரங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளாமல் குறைபட்டுக் கொள்வதில் மட்டும் பிரயோசனம் இல்லை. மக்கள் எவ்வளவு ஆரவாரத்துடனும் உற்சாகத்துடனும்—கிராமங்களிலும் சரி—நகரங்களிலும் சரி—குறிப்பாக பெண்மணிகள் இதைத் தங்கள் இயக்கமாகவே கருதி தங்கத்தைக் கொடுக்க முன்வந்தார்கள். அங்கங்கே இருக்கின்ற

பஞ்சாயத்துத் தலைவர்கள், கிராமங்களிலுள்ள விவசாயிகள், அலுவலகங்களில் இருக்கின்றவர்கள், தொழிலாளர்கள் எல்லோரும் மிகுந்த உற்சாகத்துடன் இதில் ஈடுபட்டார்கள். பெண்கள் குறிப்பாக இதில் எந்த அளவுக்கு ஈடுபட்டிருந்தார்கள் என்பது நாட்டிலுள்ள அனைவருக்கும் தெரியும். இதைப்பற்றி குறைகூறிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு இதைப்பற்றி நன்றாகத் தெரியாது—அவர்களுக்கு தொடர்பில்லை—அவ்விதம் தெரியாத காரணத்தால் தான்—"நாம் இல்லாமல் நன்றாக நடந்துவிட்டதே" என்று ஏதோ குற்றஞ்சாட்டப்பட்டது. "நாங்கள் இல்லாமல் எப்படி தங்கத்தை வசூலிக்க முடியும்?" என்று எண்ணியிருந்தார்களோ என்னவோ தெரியாது, அதனால் தான் குறை சொல்கிறார்கள். இதை வைத்துக் கொண்டு அதிகாரிகள் தங்கத்தை வசூலிப்பதற்கு கட்டாயப்படுத்தப்பட்டார்கள் என்று சொல்வது சரியல்ல. இந்த மாதிரி இயக்கங்களில் அரசாங்கம் ஈடு பட்டிருக்கிறது என்றால் அதில் அக்கறை கொள்வது அரசாங்க அதிகாரிகளுடைய கடமையாகும், பொறுப்புமாகும். ஆனால், இதில் முக்கியமாக எந்தவிதமான தவறும் நடந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில்தான்—ஆரம்பத்திலேயே—இவ்வாறு குறை சொல்லுவார்கள் என்று கருதியே—தவறுதல் வரும் என்று அல்ல, ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இதில் யாரும் கட்டாயமாக கேட்க வேண்டாம் என்று திருப்பித் திருப்பித் தெரிவித்திருக்கிறோம். அதே மாதிரி நான் கலெக்டர்களைச் சந்தித்துக் கேட்கும்போதெல்லாம், அவர்கள் 'நாங்கள் அறிக்கைகளை அனுப்பியிருக்கிறோம்; அதிகாரிகளுக்கெல்லாம் சொல்லியிருக்கிறோம், நீங்களாகக் கேட்கவேண்டாம், கட்டாயப்படுத்தவேண்டாம் என்று தங்கக் கட்டுப்பாட்டைப் பொறுத்த வரையில் சொல்லியிருக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள் . . .

**புலவர் கா. கோவிந்தன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் பெர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், ஸார், நம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த தங்கம் எப்படி வசூலானது என்று எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தெரியாது என்று சொன்னார்கள். திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். எங்கள் பகுதியில் தங்க வசூலுக்குப் பல அதிகாரிகளுடன் நானும் சென்றிருக்கிறேன். எப்படி தங்கம் வசூலிக்கப்பட்டது என்று எனக்கு நன்றாகத் தெரியும். என்னுடைய டைரியில் எப்போது எப்போது யார் யாருடன் சென்று, என்னென்ன முறையில் எவ்வளவு எவ்வளவு வசூல் செய்யப்பட்டது என்று எழுதி வைத்திருக்கிறேன். ஆகையினால் எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தெரியாத காரணத்தினால் குற்றம் சாட்டுகிறார்கள் என்று சொல்லுவது தவறு என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்தை மாற்றிக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தெரியாது. பல பேர்களுக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் இதிலே ஈடுபட்





டிருக்கலாம், ஆனால் பொதுவாக எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தெரியாது. அவர்களுக்குப் பொதுவாகத் தொடர்பு இல்லை என்று தான் சொல்லுகிறேன்.

மாவட்ட ஆட்சியிலே தலையீடு இருக்கிறது என்று கூறினார்கள். தலையீடு என்றால் எந்த விதத் தலையீடும் கூடாது. எந்த விதமான தலையீட்டையும் இந்த அரசாங்கம் அனுமதிக்காது. அவற்றைத் தவிர்க்க அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. இங்கிருந்து அதிகாரிகளை மிரட்டுவது போல் பேசுவது கூட தலையீடு தான். இந்தப் பேச்சு, அந்தப் பேச்சு என்று நான் சொல்லவில்லை. சிலர் அப்படிப் பேசுவதைக் கண்டு கூட அஞ்சுகிறார்கள். இன்னும் சிலர் இந்த மாதிரி செய், அப்படிச் செய்யாது போனால் சட்ட சபையிலே பேசுவேன் என்று சொல்லுகிறார்கள். அந்த மாதிரிப் பேசுவது கூடத் தப்புத்தான். மன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் மன்றத்தை அந்த முறையில் பயன்படுத்திக்கொள்வது கூடத் தவறுதான். எந்தக் கட்சியினராக இருந்தாலும், அந்தக் கட்சியாக இருந்தாலும் இந்தக் கட்சியாக இருந்தால், அதிகாரிகளைத் தவறுதலாக நடந்துகொள்ள வற்புறுத்தினால் தவறுதான். அரசாங்கம் அதற்கு இடம் கொடுப்பதில்லை. அதிகாரிகளும் இதையெல்லாம் பொருட்படுத்தாது தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும், நேர்மையாக நடந்துகொள்ளவேண்டும், திறமையாக நடந்துகொள்ளவேண்டும். மக்களுக்குத் திருப்தி அளிப்பது தான் முக்கியமானது. இதையெல்லாம் சொல்லும் போது, அதிகாரிகளிடம் பிரதிநிதிகள் வந்து சொன்னாலும் கூட அவர்கள் தகாத முறையில் நடந்துகொள்ளவேண்டும் என்ற நிமித்தம் கிடையாது. யாராக இருந்தாலும், பிரதிநிதிகளாக இருந்தாலும், மற்றவர்களாக இருந்தாலும், சொல்லுவது தவறாக இருந்தாலும், தலையிடுவது போல் பேசினாலும், அதிகாரிகளைப் பார்க்க வருகிற போது அவர்களை மரியாதையாக வரவேற்று, பொறுமையாக அவர்கள் கூறுவதைக் கேட்டு, செவி சாய்த்து தங்கள் கடமை என்ன உண்டோ அதைச் செய்ய வேண்டும். இதற்காகத் தாங்கள் மிரண்டு போகக் கூடாது. ஆனால் மரியாதைக் குறைவாக நடந்துகொள்ளவும் கூடாது. அதிகாரிகளிடத்தில் வருகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மரியாதையாகச் சந்தித்துப் பேசி, சொல்லுவது தகாததாக இருந்தாலும், குற்றம் சாட்டினாலும், பயமுறுத்தினாலும், அவர்கள் சொல்லுவதற்கு செவி சாய்த்து, மரியாதையாக விடையளித்து, கடைசியில் தங்கள் கடமை எது உண்டோ அதைச் சீராகச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம் என்றும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

*திரு. து. ப. அழகமுத்து எழுந்தார்—*

MR. DEPUTY SPEAKER : Is it on a point of order?

SRI T. P. ALAGAMUTHU : No. Sir.

[8th March 1966

MR. DEPUTY SPEAKER: Then I am sorry I cannot allow the hon. Member to interrupt the Hon. Chief Minister's speech. The Hon. Chief Minister may proceed.

*கனம் திரு. எம். பக்தவத்சலம்:* ஜில்லா டெவலப்மென்ட் கவுன்சிலிலே கலெக்டர்கள் தலைமை வகிப்பது பற்றிப் பல கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி நான் முன்பே விளக்கியிருக்கிறேன். டெவலப்மென்ட் கவுன்சில் என்பது ஒரு ஆலோசனைக் குழு. அந்தக் குழுவில் மாவட்ட ஆட்சி பற்றிப் பல பிரச்னைகள் வருகின்றன. கனம் அங்கத்தினர்கள் அக்கறை எடுத்துக்கொள்வதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். சட்ட சபை அங்கத்தினர்களாக இருந்தாலும், பாராளுமன்ற அங்கத்தினர்களாக இருந்தாலும், பஞ்சாயத்து யூனியன் பிரதிநிதிகளாக இருந்தாலும் தொடர்ந்து அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியது தான். ஆனால், இது ஆலோசனைக் குழு. அந்தக் குழுவில் தீர்மானங்கள் வரும்போது அவைகளை எந்த அளவுக்குத் தாங்களே ஏற்றுக்கொள்ள முடியும் என்பதால், அல்லது அரசாங்கத்திற்குத் தெரிவித்து அரசாங்கத்தின் முடிவை எதிர் பார்க்கும் முறையில் செய்வதற்குக் கலெக்டரை விட பொருத்தமான தலைவர் வேறு யாரும் இல்லை. சட்ட மன்ற உறுப்பினர்கள், லட்சம் ஓட்டு வாங்கியவர்கள், கலெக்டர் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் அதிகாரி தானே என்று தராதரம் பார்ப்பது, யார் பெரியவர் என்று பார்ப்பது சரியல்ல. வேலை செய்யவேண்டும். வேலை செய்வதற்காகத் தான் இதை வைத்திருக்கிறோம். கலெக்டர் தலைமை வகிப்பதால் அங்கத்தினர்கள் மீது அதிகாரம் செலுத்துகிறார்கள் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. இது ஆலோசனைக் குழு. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டியவர் கலெக்டராக இருக்கிறார். மற்ற மாநிலங்களில் என்ன காரணத்திற்காக வேறு விதம் போட்டிருக்கிறார்களோ தெரியாது. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஆலோசனைக் குழுவாக இருக்கிற காரணத்தினால், கலெக்டர் தலைவராக இருந்து தொடர்ந்து கவனம் செலுத்துவதுதான் சரி என்ற முறையில் இந்த டெவலப்மென்ட் கவுன்சில் அமைந்திருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதிகாரிகள் கிடைப்பதில்லை, வெளியே போய்விடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு எத்தனையோ வேலை என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் அதிகாரிகளுக்கு வற்புறுத்தப்பட்டிருக்கிறது, கலெக்டர்களுக்கு வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் வெளியே போய்ப் பார்க்க வேண்டியது தான். ஆனால் வாரத்திற்கு ஒரு நாள் யார் அவர்களிடத்தில் என்ன தெரிவிக்கவேண்டுமென்றாலும், அவர்கள் தலைநகரத்தில் இருந்து வருகிறவர்களைச் சந்திக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு வாரம், இரண்டு வாரம் வேறு எதிர்பாராத வேலைகளினால் இல்லாமல் இருந்தாலும், தொடர்ந்து ஒழுங்காக கலெக்டர்கள் கவனிப்பார்கள் என்றுதான் நம்புகிறேன்.



8th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

பென்ஷன் கொடுப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். பென்ஷன் தொகை உயர்த்தப்படுவதைப் பற்றி அப்போதைக்கப்போது அரசாங்கம் யோசித்துக்கொண்டுதான் வருகிறது. ஆனால் பென்ஷனையெல்லாம் உயர்த்துவது என்றால் அரசாங்கத்திற்கு அதிகச் செலவு ஆகிறது. ஆகவே தான் உடனடியாக பென்ஷனை உயர்த்துவதில் தயக்கம் இருக்கிறது.

முதியோர் பென்ஷனை உயர்த்துவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது ரூ. 20 கொடுக்கிறோம். வரம்பு ஒன்றும் இல்லை. மேற்கொண்டு யார் மனுவையும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று இல்லை. ஆரம்பத்தில் 50 லட்சம் ரூபாயாக இருந்தது இப்போது 108 லட்சம் ரூபாயாக கொடுக்கப் பட்டு வருகிறது.

முன்பு மன்னர்களாக இருந்தார்களே அவர்களுக்குக் கொடுப்பதைக் குறைத்து விடுங்கள் என்றால் அது நம் கையில் இல்லை. மத்திய அரசாங்கத்தின் கையில் கூட இல்லை. இதற்குச் சட்டம் இருக்கிறது. சட்டத்தை மீறி மத்திய அரசாங்கம் கூடச் செய்ய முடியாது.

அதே மாதிரி பாதுகாப்புக் கைதிகளுக்குக் கொடுக்கும் டிடென்யூஸ் அலவன்சை அதிகரிக்கவேண்டும் என்று சொன்னார்கள். மற்ற மாநிலங்களை விட அதிகமாக தாராளமாகத் தான் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

பர்மா அகதிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். முக்கியமாக திருச்சி மாவட்டத்தைப்பற்றி நான் குறிப்பிடுவேன். அங்கே நல்ல முறையில் அவர்கள் நலன் கவனிக்கப்பட்டு வருகின்றது. வீடுகள் கட்டிக்கொடுத்து, தொழில்கள் ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் நல்ல முறையில் வாழ வழி செய்திருக்கிறார்கள். சில இடங்களில் சில குறைகள் இருக்கலாம். அது வேறு விஷயம். அந்தக் குறைகளையும் போக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுத்தான் வருகின்றன.

டெபுடி தாசில்தார்களுக்கு மூன்றாவது வகுப்பு நீதிபதி அதிகாரம் கொடுப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். கொடுப்பதெல்லாம் பயிற்சி தான். டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அப்போதைக்கப்போது கண்காணிக்கிறார்கள். இது பற்றி ஆராய வந்த மத்தியக் குழுவிடம் கூட நான் குறிப்பிட்டேன், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு கிரிமினல் வழக்குகள், அல்லது சிவில் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் கொடுப்பது சரியல்ல என்று. ஓட்டு வாங்கிக் கொண்டு வந்திருப்பவர்களுக்கு இதைக் கொடுப்பது அவ்வளவு சரியாக இருக்காது என்பது எனது கருத்து. இதைத் தான் நான் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறேன். அதில் ஒன்றும் மாறுதல் இல்லை.

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1966

பட்டா மாறுதல் பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது ஒரு சர்வே நடக்கிறது. மெட்ரிக் அளவில் அமைக்கவேண்டுமென்று சர்வே நடக்கிறது. ரீ-சர்வே சீக்கிரத்தில் முடிவடையும் என்று நான் நினைக்கிறேன். ரெக்கார்டுகளை யெல்லாம் சரி செய்து பட்டாக்களை மாற்றி விடலாம். பட்டாக்களை மாற்றாமல் இருப்பதில் எனக்கும் திருப்தி இல்லை. அதை மாற்றத்தான் வேண்டும். அதை மாற்றலாம் என்று நினைக்கிறேன்.

கலெக்டர்கள் பத்திரிக்கைக்காரர்களைப் பார்க்கிறார்கள் என்று கூறினார்கள். வாரத்திற்கு ஒரு முறை பார்ப்பது நல்லது. பார்த்துச் சொன்னால் கூட சில சமயங்களில் தவறாக வருகிறது. பார்க்கவில்லை என்றால் அவர்களுடைய இஷ்டம்போல் போட்டு விடுகிறார்கள். பத்திரிகை வேறு, நிருபர்கள் வேறு. எனக்கு மாவட்ட நிருபர்களைப் பற்றித் தெரியும். பத்திரிக்கை நிருபர்களைப் பார்ப்பது தான் நல்லது. அது தவறு என்று சொல்லக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

1-30 p.m. MR. DEPUTY SPEAKER: How much further time does the Hon. Chief Minister require?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Five more minutes, Sir.

கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சில நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். பழமையான ஜெயின் கோவில்கள், மற்றக் கோவில்களிலுள்ள அற்புதமான சிற்ப வேலைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். ஜெயின் கோவில்கள் நம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டதாக இல்லை. ஒவ்வொன்றாக நோட்டிபிகேஷன் போட்டு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. மதுரை புது மண்டபத்தைப்பற்றி அவர் கூறியதை முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். அந்த மண்டபம் தாறுமாறாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது, அதைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னார்கள். எங்கும் வெஸ்டெட் இண்டரஸ்ட் உள்ளவர்கள் நான்கு பேர்கள் இருப்பார்கள். அங்குள்ள கடைகளை எடுக்கக்கூடாது என்று சொல்லுவார்கள். அங்குள்ள கடைகளை அப்புறப்படுத்தி அதை ஒரு நல்ல ஸ்தலமாக, வருகின்றவர்கள் பார்ப்பதற்குரிய ஒரு கட்டடமாக பாதுகாக்கவேண்டும் என்பது தான் என்னுடைய கருத்து. மாவட்ட ரீதியாக ஒரு கலைக்கூடம் வைக்கவேண்டும் என்று கனம் சுதந்திராக் கட்சித் தலைவர்கள் சொல்லிய கருத்து கூட நல்ல கருத்து. அதிலும் நாம் கவனம் செலுத்துவோம்.

நூலகத்தைப் பற்றி கனம் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நல்ல புத்தகங்கள் வேண்டும் என்பது தான் என்னுடைய கருத்தும். எனக்கும் கொஞ்சம் தொடர்பு இருக்கிறது. நான் போகிற இடங்களில் மாவட்ட நூலகங்கள், கிளை நூலகங்கள் எப்படி இருக்கின்றன என்று விசாரிக்கிறேன். ஆனால், கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறியது



8th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

போல் அவ்வளவு அதிருப்திகரமாக இல்லை. முழுவதும் திருப்தி
கரமாக அவை இயங்குகின்றன என்று சொல்லமுடியாமல்
இருக்கலாம். ஆனால் ஒன்று என்னுடைய கவனத்திற்குக் கூட
கொண்டுவரப்பட்டது. என்னிடம் சில பேர்கள் 'நல்ல பிரசு
ரங்களை வெளியிட்டிருக்கிறோம், யாரும் வாங்குவதில்லை' என்று
சொன்னார்கள். நான் அவர்களிடம் 'லைப்ரரிகளுக்குக் கொடுங்
கள், லைப்ரரி பிரைசுக்கு, அதாவது 25 சதவிகிதம் விலையைக்
குறைத்துக் கொடுங்கள்' என்று சொன்னேன். பிறகு நான்
அதுபற்றி விசாரித்தேன். 25 சதவிகிதம் விலையைத் தூக்கிப்
போட்டுக் கொடுத்தார்கள் என்று லைப்ரரி அதாரிடி தலைவர் அவர்
கள் என்னிடம் சொன்னார்கள். ஆகையினால் எனக்குக் கூட இது
பற்றிக் கவலையாக இருக்கிறது. இந்த நூலகங்களுக்குப் பஞ்சா
யத்துக்கள் வரி வசூலிக்கிறார்கள். அதற்கு ஈடாக நாம் மான்யம்
கொடுக்கிறோம். இதையெல்லாம் வைத்துக்கொண்டு நாமே ஏன்
புத்தகங்களை வாங்கிக்கொடுக்கக்கூடாது என்று கூடத் தோன்று
கிறது. நல்ல புத்தகங்கள் எவ்வளவோ இருக்கின்றன. என்னிடம்
நல்ல புத்தகங்கள் வரும்பொழுது, இவற்றையெல்லாம் நூலகங்
கள் வாங்கவேண்டுமே, எங்கு வாங்கப்போகிறார்கள் என்றுதான்
எனக்குக் கவலை ஏற்படுகிறது. எனக்கு இன்னொரு யோசனை
தோன்றுகிறது. சென்னை நகர நூலகக் குழுவுக்குக் கொடுக்க
வேண்டிய அவசியமில்லை. மற்ற இடங்களைப் பொறுத்தவரையில்,
சர்க்காரே நல்ல புத்தகங்களாகப் பார்த்து வாங்கி அவைகளைக்
கொடுத்து விடலாமா என்ற ஒரு யோசனை கூட என்னிடம் இருக்
கிறது. நூலகம் சம்பந்தமாக ஒரு மகாநாடு கூட்டி அவர்களும்
எவ்வளவோ யோசனை கொடுத்திருக்கிறார்கள், மேலும் அவர்க
ளுடைய யோசனையைக் கேட்டு, எப்படிச் சட்டத்தை மாற்றுவது
என்பது பற்றி இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ஏதோ நாங்கள் ஜனநாயக முறைப்படி நடக்கவில்லை, கட்சி
வகையிலே நடந்துகொள்ளுகிறோம், திராவிட முன்னேற்றக்
கழகத்தினருக்கு இருப்பது போல் அவ்வளவு அகன்ற மனப்
பான்மையோடு எங்கள் பக்கத்தில் நடந்து கொள்வதில்லை என்று
கனம் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.
அப்படி ஒன்றுமில்லை. அவர் குறிப்பிட்ட விஷயம் துறையூரில்
பஸ் நிலையத்தைப் பற்றியது. பஸ் நிலையம் என்றால் பஞ்சாயத்
திற்கு மாத்திரம் அக்கறை இல்லை. பஸ்களை உபயோகிப்பவர்களும்
இருக்கிறார்கள். அதற்கு கலெக்டர் அவர்களுடைய அனுமதியும்
வேண்டும். அவர்கள் 'ஆர்.டி.ஏ.' அனுமதி இல்லாமல் ஒன்றும்
செய்ய முடியாது. பஸ் நிலையம் இல்லாமல் ஏதோ ஒரு நூலகம்
என்றால், பஞ்சாயத்து என்ன பெயர்வேண்டுமானாலும்
வைத்துக்கொள்ளலாம். பஸ் நிலையம் அப்படி இல்லை. எல்லோ
ருடைய சம்மதமும் வேண்டியிருக்கிறது அதற்கு. அதைப்
பயன்படுத்திக்கொள்ளுபவர்கள் அந்தப் பெயர் வைப்பதற்கு
ஆட்சேபனை தெரிவித்திருந்தார்கள். அந்த வகையில் அதிகாரி
கள் இதிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டார்களே தவிர, வேறு
ஒன்றுமில்லை.

[8th March 1966

திரு. மு. கருணாநிதி : மதிப்பிற்குரிய காமராசர் ஜீ அவர்கள் முதல் மந்திரியாக இருந்தபோது அல்ல, அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கின்றபொழுது லால்குடி நகரப் பஞ்சாயத்தில் காமராசர் பேருந்து நிலையம் என்ற பெயர் வைக்கவேண்டும் என்று சொன்னபொழுது இதே அதிகாரி அதை அங்கீகாரம் செய்திருக்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கு இந்த மாதிரி ஆட்சேபணை வரவில்லை. காமராசர் பெயருக்கு ஆட்சேபணை வரவில்லை. ஆனால் இங்கு ஆட்சேபணை வந்திருக்கிறது. அதற்கு நான் என்ன செய்வது? (குறுக்கீடு). ஹைக்கோர்டில் ஸ்டே ஆர்டர் வாங்கப்பட்டது. ஹைக்கோர்ட்டில் இதுபற்றி முடிவும் கூட ஆகிவிட்டது. இதைப்பற்றி என்னுடைய கவனத்திற்குக் கூட கொண்டு வரப்பட்டது. நான் விசாரித்திருக்கிறேன். ஏதோ கட்சி ரீதியிலே அதிகாரிகள் செயல்படுகிறார்கள் என்று சொல்வது முறையல்ல. அதற்கு ஆதாரம் இல்லை என்று தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாவட்ட நிர்வாகம் என்பது பெரிய விஷயம். நேரம் ஆகிவிட்டது. ப்ரொக்யூர்மெண்டு பற்றிக் குறிப்பிட்டார்கள். மறுபடியும் குறை கூறினார்கள். கொள்முதலைப் பொறுத்தமட்டிலும் நான் கூறிய வகையில் தான் வேலை நடந்து கொண்டிருக்கிறது. அதாவது 'ப்ரொக்யூர்மெண்டு விதௌட் டியர்ஸ்' என்று இப்பொழுதும் சொல்லுகிறேன். எப்படியும் விற்கக்கூடியதை விற்பனை செய்யுங்கள் என்று சொல்லி வாங்குவது தான் அரசாங்கத்தின் கொள்கை. அது தான் நடந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இதைப்பற்றி விசாரித்துத் தெரிந்துகொண்டிருக்கிறேன். கொடுப்பதற்கு மனம் இல்லாதவர்கள் குறை சொல்லலாம். அல்லது நிலைமை என்னவென்று தெரிந்துகொள்ளாதவர்கள் குறை சொல்லலாம். நமது மாநிலத்தை எடுத்துக்கொண்டால் பாதி மாவட்டங்களில் பற்றாக்குறை இருக்கிறது. அந்த மாவட்டங்களுக்கு நாம் உணவு தானியம் அளிக்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் செய்யவேண்டியிருக்கிறது. விற்கக் கூடியதைத் தான் நாம் கேட்கிறோம். அவர்கள் சொந்தமாக வைத்துக் கொள்ளுவதை நாம் கேட்பதில்லை. அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு அதிகமாக விற்கமுடியாது. அந்த விலையைக் கூட கொஞ்சம் உயர்வாகத் தான் நிர்ணயித்திருக்கிறோம். விவசாயிகள் அதை வரவேற்கிறார்கள், நல்ல விலை என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள், திருப்திப்படுகிறார்கள். சில பேர்கள் குறை கூறலாம். நிலைமையைத் தெரிந்து கொள்ளாதவர்கள் குறை கூறுவார்கள். இதற்கு மேல் நான் பேச விரும்பவில்லை. இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கும்பகோணத்தில் சமீபத்தில் நடந்த கிராம அதிகாரிகள் மகாநாட்டில் அவர்களுடைய குறைகளைக்



8th March 1966] [கே. ஏ. மதியழகன்]

கவனிப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். அதன்படி சம்பள விகிதம் மற்றவைகளை மாற்றி அமைப்பது சம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அவர்களிடம் கூறியது சம்பளத்தைத் தவிர மற்றக் குறைகளை கவனிக்கிறேன் என்பது தான். சில குறைகள் கவனிக்க வேண்டியவை இருக்கின்றன. நான் அவைகளைக் கவனிக்கப் போகிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : முதல் அமைச்சர் அவர்கள் கொள்முதலைப் பற்றிச் சொல்லும்பொழுது போனஸ் கொடுப்பதாக அறிவித்தார்கள் . . .

MR. DEPUTY SPEAKER: The hon. Member is bringing a new point.

The cut motion of Pulavar Govindan was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 7,19,51,900 under Demand No. IX—District Administration and Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

The cut motions of Sri Saw Ganesan and Pulavar Govindan were put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,65,25,900 under Demand No. XXXII—Pensions."

The Demand was put and carried and the Grant was made.

The cut motions of Sri S. Murugaiyan was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,34,41,900 under Demand No. XXXIII—Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

The cut motions of Sri Saw Ganesan and Sri T. P. Alagamuthu were put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,65,25,000 under Demand No. XXXVI—Other Miscellaneous Compensations and Assignments."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Sri P. Murugaiyan was put and lost.

[8th March 1966

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,01,500 under Demand No. XLVI—Commuted Value of Pensions."

The Demand was put and carried and the Grant was made.

The cut motions of Sri A. Thangavelu and Sri Saw Ganesan were put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 32,34,26,800 under Demand No. XLVIII—Loans and Advances by the State Government."

The Demand was put and carried and the Grant was made.

1-42 p.m. MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

*141. *Notification issued with G.O. Ms. No. 519, Industries, Labour and Co-operation, dated the 8th February 1966, notifying certain banks situated within the State of Madras, as approved banks for the purposes of the Madras Chit Funds Act, 1961. [Laid on the Table of the House under section 63 (4) of the Madras Chit Funds Act, 1961 (Madras Act 24 of 1961).]*

*142. *Notification issued with G.O. Ms. No. 4282, Home, dated the 4th December 1965 making certain amendments to the Madras Motor Vehicles Rules, 1940. published with Home Department Notification No. 357, dated the 29th March 1940, at pages 1-40 of the* Fort St. George Gazette *Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended, the same having been previousy published. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act 1939 (Central Act IV of 1939).]*

*143. *Notification issued with G.O. Ms. No. 4073, Home, dated the 16th November 1965 making an amendment to the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

*144. *Notification issued with G.O. Ms. No. 4256, Home, dated the 1st December 1965 amending Rule 134-A of the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*



8th March 1966]

145. *Notification issued with G.O. Ms. No. 2072, Education, dated the 3rd December 1965, approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Tiruvarur Municipal Council, the same having been previously published. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]*

### B. Reports, Notifications and other papers.

† 39. Note on Demand XIII—Education (English).

‡ 40. Note on Demand XIII—Education (Tamil).

§ 41. Housing in Madras State, 1965-66.

---

* Laid on the table of the House on 7th March 1966.

† Circulated to Members on 5th March 1966.

‡ Circulated to Members on 6th March 1966.

§ Circulated to Members separately o 7th March 1966.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

---

**Wednesday, 9th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I. OBITUARY REFERENCE TO SRI AR. A. RM. CHOCKALINGAM CHETTIAR, AN EX-M.L.A.

MR. SPEAKER: It is my sad duty to inform the House of the demise of Sri AR. A. RM. Chockalingam Chettiar, a former Member of the Madras Legislative Assembly from 1952–57 representing Karaikudi Assembly Constituency on the 7th February 1966.

I request the hon. Members to stand in silence for a minute as a mark of respect to the departed soul.

On behalf of the House, I will convey the condolence to the members of the bereaved family.

The Members stood in silence for a minute.

## II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: Let us take up question No. 212.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, I request that this question may please be postponed to 28th or 29th March, as in the light of my visit to Japan, the answer prepared for this question requires revision.

MR. SPEAKER: Yes. This question is postponed. Let us take up the next question.

### சென்னையில் உரத்தொழிற்சாலை

* 213 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அமெரிக்க உதவியுடன் சென்னையில் ஒரு உரத் தொழிற் சாலை தமிழக அரசு ஆரம்பிக்க இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The Government of India proposes to set up a fertiliser factory in the public sector as an adjunct to the Petroleum refinery near Manali, with the collaboration of the American International Oil Company.

*திரு. வை. சங்கரன்* : இதனுடைய மதிப்பு எவ்வளவாக இருக்கும். இதனுடைய கெப்பாஸிடி என்னவாக இருக்கும், என்று ஏற்கனவே நிர்மானிக்கப்பட்டிருக்கிறதா, அப்படியானால் அதனுடைய விவரம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இரண்டு லட்சம் டன் நைட்ராஜன் உற்பத்தி செய்யவேண்டும். இதில் அமெரிக்கன் இன்வெஸ்ட்மெண்ட் மாத்திரம் மில்லியன் டாலர், அதாவது ஆறு கோடி டாலர்.

*திரு. வை. சங்கரன்* : அதிலே என்ன என்ன வகையான உரங்கள் எல்லாம் உற்பத்தி செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் பாஸ்பேட், காம்ப்ளக்ஸ் ஃபெர்டிலைசர்ஸ் முதலியவை தயாரிக்கப்படும்.

*திரு. சா. கணேசன்* : இதில் சென்னை சர்க்கார் எவ்வளவு முதலீடு போடுகிறது? நிர்வாக முறை முதலிய ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சென்னை சர்க்கார் முதலீடு செய்யப்போவதில்லை. ஆனால், சென்னை சர்க்காருக்கு போர்டு ஆப் டைரக்டர்ஸில் ஒரு அங்கத்தினர் கொடுப்பதாக மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கிறது.

*திரு. வை. சங்கரன்* : இப்பொழுது வேலை எடுத்துக்கொள்ளப்பட்டால் முடிப்பதற்கு எவ்வளவு காலம் ஆகும்? இதில் கிடைக்கக் கூடிய உரம் பூராவும் நம்முடைய ராஜ்யத்திற்கே உபயோகப் படுத்தப்படுமா ? அல்லது, இந்தியா பூராவும் உபயோகப்படுத்தப் படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது முடிப்பதற்கு, எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு இரண்டிலிருந்து மூன்று வருஷங்கள் ஆகும். இந்த உரம் இந்திய நாடு பூராவுக்கும் விநியோகம் செய்யப்படும்.

*திரு. து. ப. அழகமுத்து* : இந்த உரத்தினுடைய விலையை நிர்ணயிக்கும் உரிமை யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது எல்லாம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

*திரு. செ. மாதவன்* : அண்மையிலே பாராளுமன்றத்திலே இதைப்பற்றி விவாதிக்கும்பொழுது இது தனிப்பட்ட முதலாளிகளிடம் விடப்படுவதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. அதன் மூலம் இது தடைப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அமெரிக்கன் ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி தனியாகத்தான் இதைச் செய்வதாக ப்ரப்போஸல் வந்திருக்கிறது.



## *Photo film factory at Ootacamund*

* 214 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the stage reached in the establishment of the Photo Film Factory at Ootacamund; and

(*b*) the time estimated to take for its completion ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Work on the various departments of the Project is in an advanced stage and nearing completion.

(*b*) It is likely to commence production by June 1966.

*திரு. வை. சங்கரன்* : ஆரம்பத்தில் இந்த ப்ராஜக்ட் நிறுவுவது திட்டமிட்ட காலத்திற்குள்ளே முடியவில்லை. அதிக கால தாமதம் ஆகிறது என்பதால் ஆரம்பத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்ட என்ஜினியர்கள் எல்லாம் பொறுப்பான வேலைகள் அதிகமாக இல்லையென்பதால் வேறு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டது வாஸ்தவம்தானா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதைப்பற்றி இந்த சர்க்காரிடத்திலே தகவல் இல்லை. இது மத்திய சர்க்காருடைய ப்ராஜக்ட்.

*திரு. இராம. அரங்கண்ணல்* : நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் திரைப்படத் தொழில் பெரிய தொழிலாக இருந்து கொண்டு இருக்கிறது. திரைப்படத் தொழிலுக்குத் தேவையான பிலிம்கள் இப்பொழுது கிடைக்கவில்லை. இதிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு எப்பொழுது பிலிம்கள் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கலாம்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நான் முன்பே சொன்னேன், ஜூன் 1966-லே வேலை துவங்கலாம் என்று.

*திரு. வை. சங்கரன்* : இது எப்பொழுது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது மத்திய சர்க்கார் ப்ராஜக்ட். அவர்களிடம்தான் இந்த விவரங்கள் எல்லாம் இருக்கும்.

*திரு. ம. கமலநாதன்* : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையில் எத்தகைய பிலிம்கள் தயாரிக்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதில் சினி பிலிம்ஸ், அதாவது திரைப்பட பிலிம்ஸ், எக்ஸ்ரே பிலிம்ஸ், ரோல் பிலிம்ஸ், கிராஃபிக் ஆர்ட்ஸ் பிலிம்ஸ், போட்டோ பேப்பர்ஸ் எல்லாம் தயாரிக்கப்படும்.

[9th March 1966

திரு. இராம. அரங்கண்ணல் : இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே திரைப்படத் தொழிலுக்குத் தேவையான மாதிரி பிலிம் தயாரிக்கப்பட்டு அது நல்ல முறையில் இருப்பதாகவும் தகவல் வந்ததே, அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் சப்ளை செய்யாததற்குக் காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது மத்திய சர்க்காரிடத்தில் இருக்கும் ப்ராஜக்ட். ஆகவே, ரிப்போர்ட்டுகள் எல்லாம் அவர்களுக்கு அனுப்புவார்கள்.

திரு. வை. சங்கரன் : இது நம்முடைய தேவையில் எத்தனை சத வீதத்தைப் பூர்த்தி செய்யும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சொல்லமுடியாது. ஏனென்றால், நாளுக்குநாள் தேவை வளர்ந்து கொண்டே போகிறது.

## *Handloom industry*

* 215 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that flooding of the cloth market in the State with fine varieties of cloth like terylene, nylon and nylex has seriously affected the handloom industry in the State; and

(*b*) if so, the action proposed to be taken to protect the handloom industry ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : டெரிலின், நைலான், போன்ற துணிகள் கவர்ச்சிகரமாக இருப்பதாலும் இஸ்திரி போடவேண்டிய அவசியம் இல்லாததாலும் இளைஞர்கள், பெண்கள் எல்லோரும் வாங்கி விடுவதாலும், கைத்தறி பாதிக்கப்படுகிறது. கைத்தறி பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அப்படிப்பட்ட துணிகளின் வரத்தை, விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது, குறைப்பதற்கோ நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டெரிலின், நைலானினால் கைத்தறி பாதிக்கப்படுகிறது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. நைலான், டெரிலின் வாங்குபவர்கள் வாங்கிக்கொண்டுதான் இருப்பார்கள். கைத்தறியை வாங்குபவர்கள் வாங்கிக் கொண்டுதான் இருப்பார்கள். சில வகைகள் எல்லாம் கைத்தறித் துணிகளில்தான் போடமுடியும். இதில் பொதுவாக மந்தம் இருப்பதால், மற்ற துணிகளினால் மந்தம் இருப்பதாகச் சொல்வதற்கில்லை.



9th March 1966]

திரு. மு. கருணாநிதி : ப்ளீடிங் மெட்ராஸ் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் தடங்கல் இருப்பதால் கைத்தறித் தொழிலுக்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இது சம்பந்தமாக இரண்டு, மூன்று விவரங்கள் கூற விரும்புகிறேன். சாதாரணமாக, நம்முடைய நாட்டிலிருந்து இரண்டு கோடி கஜம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. சென்ற ஆண்டு 2½ கோடி கஜம் என்ற அளவிலே அதிகமாக ஏற்றுமதியாகிவிட்டது. வெளிநாடுகளில் தேவை ஒரேமாதிரியாக இருக்கிறது. நாம் எந்த அளவுக்கு உற்பத்தி செய்கிறோமோ அந்த அளவுக்கு வெளிநாடுகளில் தேவை அதிகரிக்காது. 2½ கோடி கஜம் அளவுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஏற்றுமதியாகும் என்று சொல்ல முடியாது. ஆனால், இந்த ஆண்டு 1½ கோடிக்குக் குறையாது.

திரு. மு. கருணாநிதி : ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து சென்ற துணிகளின் விலை குறைவாக இருக்கின்ற காரணத்தால்தான் வெளிநாடுகளில் இங்கேயிருந்து ஏற்றுமதிசெய்யப்படுகின்ற துணி விலை அதிகமாக இருப்பதால் விற்பனையாகவில்லை என்று சொல்லப்படுவது சரியா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சரியல்ல. ஜப்பானிலிருந்து செல்லுகின்ற துணிகள் எல்லாம் ஆலைகளில் நெய்யப்பட்டவை. ஆனால் ப்ளீடிங் மெட்ராஸ் கைத்தறிமூலம் நெய்யப்பட்டது. அமெரிக்காவில் இருக்கிறவர்கள் ப்ளீடிங் மெட்ராஸ், ஹாண்ட்லூம்தான் வேண்டுமென்கிறார்கள். ஜப்பானிலிருந்து வருகின்ற துணி விலை குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் அமெரிக்கர்கள் வாங்குவதில்லை. அவர்களிடம் நிறையப் பணம் இருக்கிறது. எது வேண்டும் என்று நினைக்கிறார்களோ அதைத்தான் தேர்ந்தெடுத்து வாங்குகிறார்கள். நான் அமெரிக்காவிற்குச் சென்றிருந்தபோது நானே சில கடைகளில் பார்த்திருக்கிறேன். துணி வாங்க வருகிறவர்கள் ஆண்களும் பெண்களும் ப்ளீடிங் மெட்ராஸ் இருக்கிறதா என்றுதான் பார்த்து வாங்குகிறார்கள். நாம் இண்டியா மெட்ராஸ் என்று டிரேட் மார்க் ரிஜிஸ்டர் செய்திருக்கிறோம். அதைப்பார்த்துதான் வாங்குகிறார்கள். வேறு துணி எதுவாக இருந்தாலும் வாங்குவதில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : டெரிலின் துணியால் உடல்நலம் பாதிக்கப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரிக் கருத்து எங்கும் சொல்லப்படவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தரம் மிக இன்றியமையாதது ஆகும். ப்ளீடிங் மெட்ராஸ் துணியின் தரம் கெடாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ப்ளீடிங் மெட்ராஸ் துணிக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறோம். அதற்குக் குறைவான விலைக்கு யாரும் ஏற்றுமதி செய்யக்கூடாது. கெஜம் ஒன்றுக்கு 52 சென்ட்

என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். இந்த 52 சென்ட் கொடுத்து வாங்குபவர்கள்தான் நல்ல துணியை வாங்குவார்கள். தரக்குறைவான துணியை வாங்கமாட்டார்கள். இரண்டாவதாக, தரக்குறைவு ஏற்படாமல் இருப்பதற்காக 'அட் ராண்ட' மாக இன்ஸ்பெக்ஷன் செய்யப்படுகிறது.

திரு. சா. கணேசன் : இந்த மாதிரி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிற ப்ளீடிங் மெட்ராஸ் போன்ற பல்வேறு துணி வகைகள் பிற தேச துணிகளுடன் போட்டியிடுவதற்குத் தகுந்த முறையில் கணிசமான வரிக் குறைப்பு போன்ற நெறியிலே உதவிகள் அளித்து ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது மத்திய சர்க்கார் செய்யவேண்டியது. ராஜ்ய சர்க்காரைப் பொறுத்த அளவில் for any transaction in the course of export சேல்ஸ்டாக்ஸ் கிடையாது என்று சொல்லப்படுகிறது.

திரு. மு. கருணாநிதி : ப்ளீடிங் மெட்ராஸ் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது முழுமையும் அரசாங்கமே செய்கிறதா ? அல்லது, தனிப்பட்டவர்களுக்கு அந்த உரிமை தரப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்காருடைய Handicrafts, Handloom Export Corporation மூலமாகவும் ஓரளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. Established exporters நீண்டகாலமாக ஏற்றுமதி செய்து வருகிறவர்கள் இதை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றால் அவர்கள் மூலமாகவும் ஓரளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : கரைபோட்ட வேஷ்டி, புடவைகள் எல்லாம் கைத்தறிக்கே கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப்பற்றி அசோக் மேத்தா கமிட்டி கூட சிபாரிசு செய்திருக்கிறது. இன்னும் முடிவு எடுக்கவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த நைலான், ரேயான் இவைகள் செய்வதற்கான மூலப்பொருள்கள் யூகலிப்டஸ் மரத்திலிருந்து தான் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிற விவரம் பற்றி அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ரேயான் போன்றவற்றை வுட் பல்ப் மூலமாகவும், வாட்டில், ப்ளுகம் மூலமாகவும் உற்பத்தி செய்யலாம். அப்படிச் செய்யமுடியும் என்பதால் தான் ஆண்டு ஒன்றுக்கு மூவாயிரம் ஏக்கர் நிலத்தை இதை உற்பத்தி செய்வதற்குத் தகுந்த முறையிலே அதிகரித்துக்கொண்டு வருகிறோம்.

திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம் : இங்கிருக்கிற ப்ளீடிங் மெட்ராஸ் அத்தனையும் அமெரிக்காவிலிருந்து வந்த ஒருவர் விலைக்குக் கேட்டார் என்பது உண்மையா ? ஏன் கொடுக்கப்படவில்லை என்று அறியவிரும்புகிறேன்.



கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்பெக்குலேஷனுக்காக கேட்டிருந்தால் சர்க்கார் இந்த டிரேடையே அவர்களுக்குக் கொடுத்துவிட்டு நாசப்படுத்திக்கொள்வதற்குத் தயாராக இல்லை. குறைந்த விலைக்கு வேறு யார் கேட்டாலும் கொடுக்கமாட்டோம்.

திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம் : தலைவரவர்களே, அவர் என்ன விலைக்குக் கேட்டார், நாம் என்ன விலைக்குக் கொடுக்கலாம் என்று இருந்தது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர் விலையே கேட்கவில்லை. எல்லா டிரேடர்களையும் அழைத்து விலையைக்குறைக்க வேண்டுமென்று அஜிடேஷன் செய்யச்சொன்னார். விலையைக் குறைத்தால் தரம் குறைந்துவிடும். மேலும், தொடர்ந்து நடக்கும் வியாபாரம் பாதிக்கப்படும். போதிய ஆர்டர்கள் வராது என்ற காரணத்தாலே தான் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சென்ற ஆண்டு 2½ கோடி கஜம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், இந்த ஆண்டு 1½ கோடி கஜம்தான் ஏற்றுமதி செய்யமுடியும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் தேக்கம் ஏற்படுமே, சர்க்கார் இதைச் சரிக்கட்டுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேக்கம் என்பது கிடையாது. நாம் ஆரம்பத்திலேயே உற்பத்தி செய்கிறவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம், எகென்ஸ்ட் ஆர்டர்ஸ்தான் உற்பத்தி செய்ய வேண்டுமென்று. சாதாரணமாக எல்லா நாடுகளிலும் வாங்குகிற பண்டம் அல்ல இது. ஸ்பெஸிபைட் டிமாண்டு குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்குத்தான் உற்பத்திசெய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆர்டர்ஸ் இருந்தால்தான் உற்பத்தி செய்யவேண்டும். வியாபாரத்திலே ஸ்பெக்குலேட்டர்ஸ் இருப்பார்கள், அவர்கள் வாங்கவேண்டும். விற்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : முன்பு இருந்த தரம் இப்பொழுது குறைந்திருக்கிறது என்று புகார் வந்திருக்கிறதா ? அப்படியானால், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரே ஒரு வியாபார ஏற்றுமதியாளரிடமிருந்து புகார் வந்தது. ஆனால் அது பரிசீலனை செய்யப்பட்டு உண்மை இல்லை என்று மத்திய சர்க்கார் சொன்னதாக ஞாபகம்.

திரு. மு. கருணாநிதி : இந்தப் ப்ளீடிங் மெட்ராஸ் துணி எந்த எந்த வெளிநாடுகளில் கிராக்கியோடு ஏற்றுக்கொள்ளப்படுகிறது ? இந்திய நாட்டிலேயே ஏற்றுக்கொள்வதற்கும் வழிவகை செய்யப்பட்டு இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : குறிப்பாக அமெரிக்க நாட்டில் விற்பனை அதிகம். வேறு நாடுகளிலும் விற்பனை செய்வதற்கு முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறோம். உதாரணமாக

நாம் அமெரிக்காவுக்கு இவற்றை ஏற்றுமதி செய்து, அமெரிக்காவிலே கார்மெண்ட்களாக செய்யப்பட்டு, ஜப்பானிலே அவை விற்கப்படுகின்றன. சில நாட்களுக்கு முன்பு ஜப்பானிலிருந்து அந்த தேசத்தினுடைய முதன்மையான டிரஸ் டிசைனர் வந்திருந்தார். அப்பொழுது ப்ளீடிங் மெட்ராஸ் துணிகளை ஜப்பானே நேரடியாக இந்தியாவிலிருந்து வாங்கி கார்மெண்ட்கள் தயாரிக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. இதைத் தவிர ஹாங்-காங்கிலும் இது விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் பல நாடுகளில் விற்பனை செய்வதற்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்தியாவிலிருந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதியாகின்ற பொருள்களில் அவர்கள் விரும்புவது ரெடிமேட் களைதான். ஆகவே, இந்த ரெடிமேட் ஆடைகளை நாமே தயார் செய்து அவர்களுக்கு ஏற்றுமதி செய்யலாம் அல்லவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவர்கள் விரும்புகிறார்களா என்று தெரியாது. எனக்குத் தெரிந்த அளவில் ப்ளீடிங் மெட்ராஸ் துணிகள் ஹாட் சீஸன்களில்தான் உபயோகப்படுத்த முடியும். கோல்ட் சீஸனில் குளிர் தாங்காது. அப்பொழுது உபயோகப்படுத்த முடியாது. அவர்கள் கடற்கரைக்கு செல்லும்போது 'பீச்-வேராக" உபயோகிப்பது, 'ஸ்போர்ட்ஸ்-வேர்' ஆக உபயோகிப்பது. இந்த மாதிரியாகத்தான் இதை உபயோகப்படுத்துகிறார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ரேயானுக்கு வேண்டிய பொருள்களை வென்லாக் டவுன்சிலிருந்து கொச்சினுக்கு எடுத்துக்கொண்டு போகிறார்கள். நம்முடைய ராஜ்யத்திலேயே மேட்டுப்பாளையத்தில் ரேயான் தொழிற்சாலை இருக்கும்பொழுது அங்கு கொண்டுசெல்லாமல், கொச்சினுக்கு எடுத்துக்கொண்டு போகிறார்களே, அதற்கு காரணம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விவரம் எனக்குத் தெரியாது. வாட்டில், ப்ளுகம் இவைகளை நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற கம்பெனிக்குத்தான் ஒதுக்கியிருக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி :** டெரிலின், நைலான் போன்ற மென்மைரகத் துணிகளால் கைத்தறித் தொழில் பாதிக்கப்படவில்லை என்ற பதிலை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பொதுவாக, கைத்தறித் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால், அதற்கு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பொதுவாக எல்லாத் துணிரகமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நாட்டிலே சில பொருள்களிலே ஓரளவு 'ரெஸிஷன்' இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதைத் தவிர, விசேஷமாக இந்தக் கைத்தறித் துணிக்கு மாத்திரம் ஒரு தனியான, குறிப்பிட்ட சிரமமோ கஷ்டமோ ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது. ஏனென்றால், கைத்தறித் துணிகள் விற்கப்படுவதற்காக நாம் விசேஷ சலுகை கொடுக்கவேண்டும்



என்று, பத்து பைசா ரிபேட் கொடுத்து இந்த தள்ளுபடி கொடுக்கும் காலம் ஒரு வாரமாக இருந்ததைக்கூட இப்பொழுது 15 நாட்களாக நீடித்து தள்ளுபடி செய்து கொடுத்திருக்கிறோம். மேலும், ராஜ்ய சர்க்காருடைய நிதியிலிருந்து ஸ்டேட் சொஸைட்டிக்கு ஒரு கோடி ரூபாய் அளவுக்குப் பணம் கொடுத்து துணி வாங்க ஏற்பாடு செய்து வைத்திருக்கிறோம். ஹாண்ட்லூம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக, கைத்தறிக் கூட்டுறவு சங்கத்திற்கு அப்பால் இருக்கின்றவர்களும் துணி வாங்கி வைப்பதற்கு வசதிகள் செய்து வைத்திருக்கிறோம்.

**திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம் :** தலைவர் அவர்களே, ப்ளீடிங் மெட்ராஸ் துணிகளை உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கெல்லாம் இந்த இன்டஸ்ட்ரியல் கூட்டுறவு சொஸைட்டியிலே கூலி கொடுக்க முடியாமலும், மேலும் நூலும், பாவும் கொடுக்க முடியாமலும் இருப்பதால், துணித் தேக்கம் இருக்கிறது. அவர்களுக்கு என்ன பரிகாரம் செய்ய முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதையெல்லாம் சர்க்கார் அவ்வப்போது பரிசீலனை செய்து கொண்டு வருகிறது. தனிப்பட்ட சொஸைட்டியிலே ஏதாவது கஷ்டங்கள் இருக்குமானால் அதை எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** செயற்கைப் பட்டு நூலின் விலை கிலோ ஒன்றுக்கு ஒன்பது ரூபாயில் இருந்து, இப்பொழுது 14 ரூபாயாக ஏறிவிட்டது. திடீர் திடீர் என்று விலை ஏறுவதால் செயற்கைப் பட்டு நூல் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதைத் தடுக்க ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

**கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் :** எந்த ஒரு ராஜ்யத்தில் சாதாரணமாக 'ஃப்ரீ இக்கானமி' என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறதோ அங்கே ஏற்றத்தாழ்வைத் தடுக்க முடியாது. ஏற்றத்தாழ்வைத் தடுக்க வேண்டும் என்றால், எல்லாம் 'கம்ப்ளீட்லி கண்ட்ரோல்டு இக்கானமி' யாகச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய இப்பொழுது வசதி கூட இல்லை.

**திரு. எம். எஸ். மணி :** ப்ளீடிங் மெட்ராஸ் துணியிலே ஏற்பட்ட வண்ணம் அடிக்கடி மாறுகிறது. அது எத்தனை தடவை மாறும் என்பதைக் கூற முடியுமா?

**கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் :** எத்தனை தடவை சலவைக்குப் போட்டு, அது 'வாஷ் செய்யப்படுகிறதோ அத்தனை தடவை மாறும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கைத்தறித் துணிக்கு வேண்டிய மூலப் பொருளாகிய பருத்தி 'ப்ளெயின்ஸ்'ஸில் கிடைக்கிறது. அதேபோன்று ரயான் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் நீலகிரியில் விளைகிறது. ஒருக்கால் கைத்தறித் தொழில் ரயான் துணியினால் பாதிக்கப்படுகிறது என்று சொன்னாலும், நீலகிரி மக்களுடைய நன்மையைக் கருதி ரயான் துணி உற்பத்தியை அதிகமாக ஊக்குவிக்க சர்க்கார் முற்படுமா?

(பதில் இல்லை.)

## தொழில் மூலதனக் கூட்டு நிறுவனம்

* 216 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மெட்ராஸ் இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் மூலம் தமிழகத்திலுள்ள பஞ்சாலைகளுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள கடன் தொகைகளின் மதிப்பென்ன?

(இ) அவ்வாறு கடன் வழங்குவதற்கு வரையறை ஏதேனும் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Corporation has sanctioned up to 31st December 1965 cash and joint loans amounting to Rs. 9-13 crores and guarantee loans amounting to Rs. 2-07 crores to the Textile Mills in the State.

(b) The policy of the Corporation is to sanction a maximum loan of Rs. 25 lakhs to a textile Mill if it is a new unit and Rs. 16 lakhs if it is an old unit.

திரு. எம். எஸ். மணி : இப்படிக் கடன் வழங்கப்பட்ட தொகைகளைத் திரும்பப் பெறுவதற்கு அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முயற்சி எடுக்கவேண்டும் என்பது அல்ல. திரும்பிக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. இதுவரை 'டீஃபால்ட்' ஏற்படவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : 31—12—1965 வரையில் சுமார் ஒன்பது கோடி ரூபாய் கடன் அளிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனை ஆலைகளுக்கு இந்தப் பணம் சென்றிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சற்றேறக்குறைய நம்முடைய ராஜ்யத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு ஆலைக்கும் கொடுக்கப்பட்டதாக எனக்கு ஞாபகம்.

## *State Transport Bus Service between Madras and Tirupathi*

* 217 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR :
SRI V. SANKARAN :
SRI S. J. RAMASWAMI :
} Will the Hon. the Minister for Industries be pleased to state the decision reached at the Conference of the Chief Ministers and the Transport Ministers of the Madras and Andhra Pradesh Governments held on 30th August 1965 on the re-introduction of the State Transport bus service between Madras and Tirupathi?

THE HON. SRI R. VENKATARAMAN : At the conference it was agreed that Andhra Pradesh authorities and the Director, Madras State Transport Department might meet and work out



the details regarding the reintroduction of services on the routes from Madras to Tirupathi. Accordingly they met and it has been decided that the Madras State Transport Department and the Andhra Pradesh State Road Transport Corporation should operate two routes each from Madras to Tirupathi. The services commenced operation on 15th October 1965.

திரு. வை. சங்கரன் : திருப்பதி அடிவாரத்திற்குப் பிரயாணிகள் போய்விட்டால், அங்கிருந்து திருமலைக்குப் போக பஸ் கிடைப்பதற்குப் பல மணி நேரம் காத்திருக்கவேண்டியிருக்கிறது. திருப்பதி வரையில் செல்லும் பஸ்கள், தொடர்ந்து திருமலைக்கும் போவதற்கு ஏதாவது உடன்பாடு செய்துகொள்ளப்படுமானால் பிரயாணிகளுக்கு வசதியாக இருக்கும். அதையும் செய்ய சர்க்கார் முற்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஆந்திர சர்க்காரினுடைய பொறுப்பு. இந்த சர்க்கார் இதில் ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : சென்னைக்கும் திருப்பதிக்கும் இடையே இப்பொழுது இரண்டு சர்க்கார் பஸ்கள் தான் ஓடுகின்றன. அது மிகவும் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் துரித பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது இன்டர்-ஸ்டேட் விவகாரமாக இருப்பதால், ஆந்திர சர்க்கார் அதிகமாக விடுவதற்கு ஒத்துக்கொண்டால்தான் நாம் அதிக பஸ்களை விட முடியும். நாம் எத்தனை பஸ்கள் விடுகிறோமோ அத்தனை பஸ்கள் அவர்களும் விடவேண்டும். இது இரண்டு ராஜ்யங்களும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். கனம் உறுப்பினர் சொல்வது போல், இரண்டு பஸ்கள் போதவில்லை என்ற கருத்து எங்களிடம் தெரிவிக்கப்படவில்லை.

## *Marina Road.*

* 218 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state :—

(a) whether there is any proposal before the Government to remove the massive concrete balustrades on either side of Marina Road in the City of Madras to preserve its scenic beauty; and

(b) If so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. வை. சங்கரன் : நீலக் கடல் ; அதையொட்டி தங்க நிறமான கடற்கரை; அதையடுத்து வண்ண மலர்கள் நிறைந்த பூங்காக்கள்; அதையடுத்து செங்கல் நிற நடைபாதைகள் ; இதன் நடு நடுவே

[9th March 1966

குறுக்குக் கிராதி போன்ற கைப்பிடிச் சுவர்கள் இயற்கை எழிலைக் குறைத்து விடுகின்றன என்று சில கலை நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தோடு இதைப் பரிசீலனை செய்து எடுக்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இந்த அமைப்புகளெல்லாம் அங்கு இருப்பதற்குக் காரணம், போக்குவரத்திலே எந்தவிதமான விபத்தும் வந்து விடக்கூடாதே என்பதற்காகத்தான். ஆனால், கனம் அங்கத்தினர் விரும்புவதைப் போல, பார்க்க நல்ல தோற்றத்தோடு இருக்கும் முறையில் ஏதேனும் புது முயற்சிகள் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நமது அரசாங்கம் கார்ப்பரேஷன் கமிஷனருக்கும் மற்றவர்களுக்கும் எழுதி, இதற்கு வேறு வழி கண்டுபிடிக்க முடியுமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.

*Laying of road on Palani hill*

* 219 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to lay a motorable road to Palani Andavar Hill Temple at the top of the hill; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*b*) There is no such proposal under the consideration of the Government.

**திரு. வை. சங்கரன் :** அம்மாதிரி பாதை அமைப்பதிலே ஏதாவது கஷ்டம் இருக்கிறதா? வேறு ஏதாவது காரணத்தையொட்டி அம்மாதிரி உத்தேசம் இல்லையோ?

**கனம் திரு. வெ. ராமையா :** கஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால், அதுபோன்ற யோசனை இல்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** மின்விசையால் இழுக்கப்படும் 'விஞ்ச்' என்னும் வாகனத்தில் போகிறவர்களையும், சாலை அமைத்து மோட்டாரில் போகிறவர்களையும், பக்தர்கள் என்று முருகன் ஏற்றுக்கொள்ளமாட்டார், நடந்து செல்கிறவர்களைத்தான் உண்மையான பக்தர்கள் என்று முருகன் ஏற்றுக்கொள்ளுவார் என்று சிலர் சொல்லுகிறார்கள். படியேறி நடந்து செல்கிறவர்களைத்தான் பக்தன் என்று முருகன் ஏற்றுக்கொள்வாரும். அது மட்டுமல்ல. விஞ்ஞான வளர்ச்சியிலே ஸாட்டிலைட் மூலம் சந்திர பகவானைத் தொடுவதுகூட சரியல்ல, ஆஸ்திக வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுகிறது என்று இராஜாஜி போன்றவர்கள் கருதுகிறார்களே, அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர், பக்தர்களைப் பற்றி இவ்வளவு ஆராய்ச்சி செய்வதைக் குறித்து சந்தோஷம். அடிவாரத்திலிருந்து மலைக்குப் போகிறவர்கள் நடந்தும் போகலாம், சமீபத்தில் அமைக்கப்பட்ட எலெக்ட்ரிக் விஞ்சிலும் போகலாம்.



9th March 1966]

**திரு. து. ப. அழகமுத்து :** தற்போது பழனி மலைக்குப் போவ 9-00
தற்கு போடப்பட்டுள்ள மின்சார விஞ்சில் ஏறுமிடத்தில் a.m.
"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பதிழுக்கு" எனப் போர்டு போடப்பட்டுள்ளதே, அதற்குப் பொருள் என்ன என்று சொல்வார்களா?

**கனம் திரு. வெ. ராமையா :** நான் இந்த போர்டைப் பார்க்கவில்லை. தேவஸ்தான அதிகாரிகளுக்கு எழுதினால் அவர்கள் அதன் பொருளை விளக்குவார்கள்.

**திரு. து. ப. அழகமுத்து :** அந்த இடத்தில் போர்டு போடப்பட்டுள்ளதன் பொருள் என்ன என்றுதான் கேட்டேன் (சிரிப்பு).

(பதில் இல்லை.)

*Seshasayee Paper Mills*

* 220 *Q*.—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether there is any proposal before the Government to supply goods from the Forest Department to Seshasayee Paper concerns; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) & (*b*) The Government have already been supplying bamboos from the Reserved Forests to the Paper Mills set up by Seshasayee Paper and Boards, Limited, at Pallipalayam, Salem district. The period of the agreement is six years from 11th April 1962. There is no proposal to supply other goods to the mills pending with Government.

**திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, ஆறு ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ½ லட்சம் டன் மூங்கில் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு ஏராள நஷ்டம் வருவதாக அக்கவுண்டென்ட் ஜெனரல் குறிப்பிட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதில் ஒன்றும் குறைபாடு இல்லை. ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கு அதிகம் போகாமல், 25 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கு கீழே போகாமல் கொடுக்கவேண்டும் என்பது அக்ரிமெண்டு. அந்த வகையில் விற்பனையாவதில் நமக்கு அதிகத்தொகை வந்து கொண்டிருக்கிறது.

**திரு. செ. மாதவன் :** அந்த ஒப்பந்த ஷரத்துக்களில் உள்ள குறைபாடு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? 1963-64 இல் மட்டும் 1½ லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

[9th March 1966

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அப்படி ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டதாக இல்லை. 1963-64-ல் பதினாறு லட்சத்து எழுபத்தோராயிரத்து நானூற்றுப் பதினொன்று ரூபாய்க்கு மூங்கில் காண்ட்ராக்ட் மூலமாக விற்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** காட்டிலாகாவில் மூங்கில் காண்ட்ராக்ட் விடும்போது—அவர் குறிப்பிட்ட ஆலைக்குக் கொடுக்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டோடு குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்வதினால் மார்க்கெட் விலையோடு ஒப்பிடும்போது மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால் நஷ்டம் ஏற்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** மொத்தத்தில் கூப்பாக ஏலம் விடுகிறோம். அவற்றில் இவ்வளவு பேப்பர் மில்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். வெட்டுக்கூலி, ஏற்றி இறக்குகின்ற கூலி எல்லாவற்றையும் பார்த்துத் தான் விடுகிறோம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஒப்பந்தம் செய்துகொண்டவர்கள் எந்த ஒரு ஜில்லாவில் இருந்துதான் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற கட்டுப்பாடு இருக்கிறதா? எல்லா ஜில்லாக்களில் இருந்தும் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறதா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** குறிப்பாக நீலகிரி, கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் சென்ட்ரல், சேலம் டிவிஷன், தர்மபுரி டிவிஷன், வேலூர் கிழக்கு, வேலூர் மேற்கு ஆகிய எட்டு இடங்களில் இருந்து வெட்டிக்கொள்ள கொடுக்கப்பட்டிருக்கிறது.

### *Fishing harbour at Colachel*

* 221 *Q.*—Sri A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) the amount sanctioned for the construction of the fishing harbour at Colachel in Kanyakumari district; and

(*b*) whether there is any proposal to construct a dockyard for fishing boats and pier in that port?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) கொளச்சலில் மீன்பிடி துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கான திட்டத்தின் தொடக்க ஆய்வுக்கெனக் கீழ்க்கண்ட செலவுத் தொகையை அரசாங்கம் அனுமதித்துள்ளது.

| | | |
|---|---|---|
| 1. மாதிரி ஆய்வுகள் நடத்துவதற்காக ஏற்றவற்ற நிலைகள், அலைகளின் இயல்புகள் முதலியன பற்றிய தொடக்க ஆய்வு பரிசீலனை, புள்ளிவிவரங்கள் சேகரித்தல் ஆகியவற்றிற்கு. | ரூ. | 9,600 |



9th March 1966]

| | | |
|---|---|---|
| 2. மேற் சொன்ன பகுதியின் நீர்ப்பரப்பு ஆய்வு இதை இந்திய அரசு மேற்கொண்டுள்ளது. | | 54,800 |
| 3. கொளச்சல் மீன்பிடி துறைமுகத்திட்டத்திற்காக அதற்கு வேண்டப்படும் மாதிரி ஆய்வுகளை நடத்துவதற்கு. | | 7,100 |
| 4. போரிங் வேலைகளுக்காக (Boring operations) | | 75,000 |
| | | 1,46,500 |

(இ) மீன்பிடி துறைமுகத்தின் பகுதியாகக் கப்பல்துறை ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு எதுவுமில்லை. எனினும், கொளச்சலில் சிறு துறைமுகத் திட்டத்தின் ஒரு பகுதியாக அங்கே கடற்பாலம் ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு துறைமுகத் துறையினரிடம் உள்ளது. இது மாதிரி ஆய்வு நடத்தப்படும் நிலையில் உள்ளது.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** நமது மாநிலத்தில் மீன்பிடித் துறைமுகங்கள் எந்த எந்த ஊர்களில் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன என்று அறியலாமா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** நமது மாநிலத்தில் எண்ணூர், பேமணப்பாடு, குலசேகரப்பட்டினம், பே, புன்னக்காயல் முதலிய இடங்களில் பரிசீலனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** நமது சர்க்கார் ஓரிடத்தில் மீன் பிடிக்க உத்தரவு போடுகிறார்கள், இன்னொரு இடத்தில் மீன் பிடிக்கக் கூடாது என்று உத்தரவு போடுகிறார்கள், இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** மூலக்கேள்வி மீன்பிடித் துறைமுகங்களைப் பற்றியது. இதற்குத் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

### *நகராட்சியின் கடிதப்போக்குவரத்துக்கள்*

* 222 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலுள்ள நகராட்சிகள் நடத்தும் கடிதப் போக்குவரத்துக்கள் அனைத்தும் தமிழிலேயே இருக்கவேண்டும் என அரசாங்கம் ஏதேனும் உத்திரவு பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், இவ்வுத்தரவு எப்போது அமுலுக்கு வரும்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) & (இ) நகராட்சி மன்றங்கள் அனுப்பும் கடிதங்கள் அனைத்திலும் தமிழைப் பயன்படுத்தப் பொருத்தமான துணை விதிகளை வகுத்துக் கொள்ளலாமென அவைகட்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சிமன்றங்களிலிருந்து வரும் எந்தெந்தக் கடிதங்கள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டுமென்பதும் மசோதாத் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[9th March 1966

118-ம் என் சட்டசபைக் கேள்விக்கு 7-8-1965 தேதியன்று அளிக்கப்பட்ட பதிலையொட்டிச் சபைமுன் வைக்கப்பட்ட மாதிரித் துணை விதிகளின் நகலைக் கவனிக்குமாறு கனம் உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன். இது நகராட்சி மன்றங்களும், நகராட்சி நகரங்களும் தங்கள் கடிதங்களில் தமிழைப் பயன்படுத்துவதற்குப் பரிந்தனுப்பப்பட்டதாகும். இத்துணை விதிகளை நகராட்சி மன்றங்கள் தாங்களே ஆட்சிக்குக் கொண்டு வரவேண்டும். இத்துணை விதிகள் அரசாங்கத்தின் அங்கீகாரத்தையும் உறுதிப்பாட்டையும் பெற்றபின் மாவட்ட அரசிதழில் வெளியானதிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்னர் செயலுக்கு வரும்.

திரு. ஜே. மாதா கவுடர் : நகராட்சி மன்றங்கள் தமிழில் கடிதப் போக்குவரத்து செய்யும்போது—இப்போது தமிழில் உந்து வண்டி நிலையம், பேருந்து நிலையம் என்பதாக பிறருக்குப் புரியாத அளவில் போடுகிறார்களே, அந்த வகையில் செய்தால் மற்றவர்களுக்குப் புரியாது. ஆகவே, இத்தகைய வார்த்தைகள் இன்றி கடிதப்போக்குவரத்தை நடத்த உத்தரவிடுவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நாளடைவில் உபயோகிக்கும் போது மக்களுக்குப் புரிந்துவிடும்.

*Exemption from Madras Shops and Establishments Act*

* 223 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether the Government have exempted the establishments under the Madras State Electricity Board from certain provisions of the Madras Shops and Establishments Act subject to certain conditions; and

(b) if so, whether those conditions are enforced?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Yes. It is, however, reported by the Commissioner of Labour that a general representation has been received by him on 12th January 1966 from the Tamil Nadu Electricity Board Accounts Subordinates Union, Coimbatore, about the non-compliance of the conditions. This is being looked into by the Commissioner of Labour.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நமது அரசாங்கம் ஸ்டேட் எலெக்ட்ரிசிடி போர்டுக்கு எக்ஸம்ஷன் கொடுத்தபோது சில குறிப்பிட்ட விதிகளை அனுஷ்டிக்கவேண்டும் என்பதாக அந்த ஜி.ஓ. விலேயே கண்டிருக்கிறது. அதுபற்றி முதல் அமைச்சர் அவர்களுக்கு மனு வந்திருப்பதாகவும் பரிசீலிப்பதாகவும் சொன்னார்கள். முக்கியமாக ஓவர் டைம், வேஜஸ் போன்றவைகளில்கூட அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை பின்பற்றுவது இல்லை. இதைப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?



9th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நமது அரசாங்கம் அதற்கு எக்ஸெம்ஷன் கொடுத்ததற்குக் காரணம் மின்சார போர்டு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம், மற்ற சலுகைகள் எல்லாம் தொழிற்சட்டத்தில் கண்டுள்ளனவற்றுக்கும் அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். அதனால்தான் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைக்கூட அமல் செய்யவில்லை என்பதான புகார் வந்தது. அதை கமிஷனரை விட்டு பரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறோம். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : மின்சார போர்டு ஊழியர்களுக்கு விதிவிலக்கு கொடுத்ததற்குக் காரணம் சட்டத்தில் கண்டுள்ளவற்றுக்கும் அதிகமாக சம்பளம், மற்ற சலுகைகள் கொடுப்பது தான் என்றார்கள். அதுபோலவே தனியார் ஸ்தாபனங்களிலும் சட்டத்தில் கண்டுள்ளனவற்றுக்கு அதிகமாக, தாராளமாக சம்பளம், மற்ற சலுகைகள் அளித்தால் இவற்றுக்கும் விதிவிலக்குக் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மின்சார போர்டு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதுபோல தொழிலாளர்களுடைய நலனுக்கு உகந்ததாகக் கொடுக்கப்படுமானால் அதையும் கவனிக்கலாம்.

*Spinning and Weaving Mills at Coimbatore*

* 224 Q.—SRI V. SANKARAN : } Will the Hon. the Chief
SRI M. S. MANI : }
Minister be pleased to state :

(a) whether the Government are aware of the closure of the Coimbatore Spinning and Weaving Mills, and non-payment of wages to its workers, since October, 1965; and

(b) if so, the action taken thereupon by the Government.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The question was examined by the Government. It has been reported that the management of the mills could not pay the wages for October 1965 and for seven days in November 1965 due to financial difficulties; also, that the payment will be effected as soon as the new managements to be constituted, succeed in securing sufficient loan to restart the mills and to clear the debts. It is likely that the mills will resume work shortly.

திரு. வை. சங்கரன் : இதுவரை சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது நிறுத்தப்பட்டு விட்டது. அப்படி என்றால் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் ரெகுலேஷன் ஆக்டின்கீழ் ஒரு கமிட்டி அமைத்து என்ன காரணத்தால் அந்த மில் நிறுத்தப்பட்டு விட்டது என்று பரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்; மில் நடத்தப்பட வேண்டும். அதுதான் கவனிக்கப்படுகிறது. கனம் அங்கத்தினர் கூறுவதுபோல் கமிட்டி நியமிப்பதில் பயன் இல்லை.

**திரு. எம். எஸ். மணி :** இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்பட்டு முதலாளிகள் மில்லை மூடிவிடுகிறபோது அரசாங்கம் மகாராஷ்டிர அரசாங்கம் செய்தது போல், அந்த மில்லை ஏற்று நடத்த முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி கனம் தொழிலமைச்சர் அவர்கள் முன்பே விளக்கிக் கூறியிருக்கிறார்கள். திறமையோடு நடத்தப்பட்ட ஒரு மில்லை அரசாங்கம் ஏற்று நடத்துவதில் பயன் இருக்கிறது. சரியாக நடக்காத மில்லை அரசாங்கம் ஏற்று நடத்துவதில் பயன் இல்லை. தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள என்ன செய்வது என்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் கவனித்துக் கொண்டுதான் வருகிறது.

**திரு. செ. மாதவன் :** இப்படி லாக் அவுட் செய்வது திறமையற்ற செயலின் காரணமாக இருக்கலாம். சில சமயங்களில் தொழிலாளர்களைப் பழி வாங்க வேண்டுமென்றும் செய்யலாம். அப்படிப்பட்ட நேரத்தில் மானேஜ்மெண்டை ஒர்க்கர்ஸிடத்தில் ஒப்படைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தொழிலாளர்களைப் பழி வாங்குவதற்காகச் செய்ததா அல்லது திறமையின்மை காரணமாக மில்லை மூடும் நிலை ஏற்பட்டதா என்பதையெல்லாம் அப்போதைக்கப்போது அரசாங்கம் பரிசீலனை செய்து, தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. தொழிலாளர்களே மில்லை நடத்துவதாக இருந்தால் அதற்கு அவர்கள் முன் வந்து அதற்கு ஆற்றல் தங்களிடம் இருப்பதாகத் தெரிவித்தால் அரசாங்கம் கவனம் செலுத்தலாம்.

**திரு. எம். எஸ். மணி :** நமது அரசாங்கம் சோஷலிசத்தைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்க, மூடப்பட்ட மில்களை இன்றைய தினம் அரசாங்கம் ஏற்று நடத்தினால் அரசாங்கத்திற்கு நஷ்டம் வரும் என்று கருதுவது ஏன் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சோஷலிசம் என்பதைப்பற்றி அவரவர்களுக்கு வேறு வேறு கருத்து இருக்கிறது. இதையெல்லாம் எடுத்துக்கொண்டு ஆராய்ந்து அதற்கு விளக்கம் கொடுக்க முடியாது. பிரச்சினை இந்த மில் மூடப்பட்டதைப் பற்றியது. சீரான நிலையில் இல்லாத மில்லை அரசாங்கம் எடுத்துக் கொண்டு நடத்துவதில் பயன் இல்லை. தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் ஆலை மறுபடியும் நடக்க என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது. இரண்டு மில் அதிபர்கள் இந்த மில்லை ஏற்று நடத்த பணம் சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். முதலீடு இப்போது இல்லை. அதை எப்படி நடத்துவது என்பதிலே கவனம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள்.

* 225 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government examined the representation, dated 3rd November 1965 sent to them by the Secretary of Coimbatore District Mill Workers' Union, regarding partial closure of shifts in C.S. & W. Mills Ltd.; and





(*b*) if so, the steps taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes, the representation has been examined by the Government. It is expected that the Mills would resume work shortly.

### தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டம்

* 226 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Workmen's Compensation கமிஷனர்களுக்கு பிராசிகியூஷன் அதிகாரம் கொடுக்க சட்டத்தைத் திருத்தும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Sub-section (2) of Section 18-A of the Workmen's Compensation Act, 1923 already empowers the Commissioner for Workmen's Compensation to prosecute the defaulters for contravening the provisions specified in the said section. In view of this, the question of amending the Act for the said purpose does not arise.

MR. SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## III.—CALLING ATTENTION TO MATTER REGARDING DETENU SRI UMANATH, M.P.

* **திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, உங்களுடைய அனுமதியின் மீது இந்தச் சட்டசபை விதி 41-ன் படி கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கீழ்க்கண்ட விஷயத்தை நான் கொண்டு வர விரும்புகிறேன்.

பார்லிமெண்ட் உறுப்பினரான கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கனம் உமாநாத் அவர்களைச் சென்னை சர்க்கார் கைது செய்து வைத்திருந்தும், பிறகு அவரை விடுதலை செய்த பிறகு அவர் தம்முடைய உரிமையாகிய பார்லிமெண்ட் கூடத்திற்குச் செல்வதைத் தடை செய்திருப்பதாகவும், சென்னை சர்க்கார் அப்படிச் செய்யலாமா, செய்வது முறையா என்பது போன்ற வாதப் பிரதிவாதங்களை லோக் சபையில் எழுப்பி இருக்கிற காரணத்தால், இது ஒரு பார்லிமெண்ட் உறுப்பினரின் உரிமை என்பது மட்டுமல்லாமல் சென்னை அல்லது மாநில சர்க்காரின் அதிகார வரம்பு, எல்லை முதலியவற்றை எல்லாம் கணிப்பதற்கு ஒரு காரணமாக இருப்பதாலும் இதைப்

பற்றிய விஷயத்தை அமைச்சர் அவர்கள் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். இந்த மாதிரி ஒருவரைப் பரோலில் விடும்போது அவர் தம்முடைய உரிமை, கடமை ஆகியவற்றை நிறைவேற்றக்கூடாது என்று ஏன் அரசாங்கம் தடை செய்யவேண்டும்? அப்படித் தடை செய்யவேண்டிய காரணம் இருக்குமானால் ஏன் பரோலில் விட வேண்டும்? பரோலில் விட வேண்டிய நிலையில் இன்னும் அபாயகாமானவராக கருதப்பட்டு கைதியாகவே கருத்தில் வைத்திருக்கிறார்களா? பரோலில் ஏன் விடப்பட்டார்? இதிலே சென்னை சர்க்காரின் அதிகார வரம்புக்கு எந்த அளவுக்கு உரிமை உண்டு? வேறு எந்தக் கண்ணேட்டத்திலும் இல்லாமல், சபை, அரசு இயங்க வேண்டிய முறையை அறிய வேண்டிய காரணத்தை முன்னிட்டு இதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் சபைக்கு விளக்குவார்கள் என்று நம்புகிறேன். அப்படி விளக்குகிறபோது, பிற மாநிலங்களிலோ, சபையிலோ நம்மைப்பற்றி ஒரு வாதம் எழுவதற்குக் காரணமாக, அடிப்படையாக, இது இருப்பது சரியா அல்லவா என்பதையும் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் இதைத் தங்கள் அனுமதியின் பேரில் பிரஸ்தாபித்ததற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். நிலைமையை இந்த மன்றத்தில் விளக்குவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினருக்குப் பொறுப்பு இருக்கலாம்; உரிமை இருக்கலாம்; கேட்கலாம். ஆனால், வேறு ஒரு மாநில அரசாங்கத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது போதிய பொறுப்புணர்ச்சியோடு சொல்லவேண்டுமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு மாநில அரசாங்கம் பாராளுமன்றத்தைப் பொருத்து 'கன்டெம்ப்ட்' என்ற முறையில் நடந்து கொண்டது என்ற குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன்பு தங்களுடை பொறுப்பை உணர்ந்து எப்படி கன்டெம்ப்ட் ஏற்பட்டது என்பதைத் தெரிந்து கொண்டு சொல்லியிருக்கவேண்டும். திடீரென்று, இந்த அரசாங்கம் ஏதோ தவறுதல் செய்து விட்டதாகக் கூறும்போது, மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் என்ன செய்ய முடியும்? ஆகையால் அவர்கள் டிரங்க்-கால் செய்திருக்கிறார்கள். இப்போது மத்திய உள்துறை அமைச்சர் அவர்களுடைய டிரங்க்-கால் காத்துக் கொண்டிருக்கிறது. நடைபெற்றது இது.

டிடென்யூக்களைப் பரோலில் விடுவது, எந்த அரசாங்கம் பாதுகாப்புக் கைதியாக வைத்திருக்கிறார்களோ அவர்களுடைய உரிமை, டிஸ்க்ரீஷன். பரோலில் விட்டுத்தான் ஆகவேண்டுமென்று இல்லை. பரோலில் விடுவது அல்லது விடாமல் இருப்பது எல்லாம் மாநில அரசாங்கத்தின் உரிமை. டிடென்யூக்களை விடுவதில் இந்த அரசாங்கம் கொஞ்சம் தாராளமாகவேதான் இருந்து வருகிறது





என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பலர், பாதிக்கு மேல், முக்கால்வாசி என்று கூடச் சொல்லலாம், எண்ணிக்கை நினைவு இல்லை, வெளியில்தான் இருக்கிறார்கள். பரோலில் வெளியே வரவேண்டும் என்றால் அவர்கள் காரணம் சொல்லுகிறார்கள். இன்ன ஊருக்குப் போக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். தன்னுடைய மகனுக்குப் பெண் தேட வேண்டுமென்பதற்காகக் கூடப் பரோலில் விட்டிருக்கிறோம். இன்னின்ன ஊருக்குச் சென்று பெண் தேட வேண்டுமென்று கேட்டார்கள். அந்த அளவுக்குக் கூடத் தளர்த்தியிருக்கிறோம். ஸ்ரீ உமாநாத்தை முன்பு நாம்தான் பரோலில் விட்டோம்; இந்த அரசாங்கந்தான் விட்டது. இந்த அரசாங்கத்துக்கு யாரும் உத்தரவு போடுவது என்பது இல்லை. டில்லிக்குப்போக வேண்டுமென்று சொன்னார்கள், அதற்குக் கூட அனுமதி கொடுத்தோம். கோர்ட்டில் வழக்கு இருக்கிறது என்பதற்காக டெல்லிக்குப் போகக் கூட அனுமதி கொடுத்தோம். பிறகு திருச்சிக்கு வந்த பிறகு இன்னும் கொஞ்சம் பரோலை நீடிக்க வேண்டுமென்று பெட்டிஷன் வந்தது. அதையும் நீடித்தோம். அப்போது அவர்களுடைய மனைவி டிடென்யூவாக இருந்தார்கள். அவர்களுக்கு உடல் நிலை சரியாக இல்லை என்று சொன்னார்கள். முன்பும் பரோலில் விடுவித்தோம். பிறகும் நீடிக்கவேண்டும் என்று சொன்னார்கள். பிறகும் நீடித்துக் கொடுத்தோம். பின்னால் உமாநாத் அவர்களின் மனைவியார், 20, 25 நாட்களுக்கு முன்பு எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள், "எனக்கு உடல் நிலை சரியாக இல்லை. ஆகவே என்னுடைய பரோலை நீடிப்பதோடு, என்னுடைய கணவருக்கும் பரோல் அனுமதிக்கவேண்டும், என்னோடு இருந்து என்னைப்பார்த்து கவனித்துக்கொள்ள வேண்டும், ஆகவே அவர்களுக்கும் பரோல் அனுமதிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டதோடு—நான் 21-ம் தேதி திருச்சிக்குப் போவதாக இருந்ததை வைத்து, "தங்களை நான் 21-ம் தேதி திருச்சியில் நேராக சந்தித்துப் பேசுவதற்கும் அனுமதி வேண்டும்" என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் எனக்கு அன்றைய தேதியில் உடல் நிலை சரியாக இல்லாததால் நான் திருச்சிக்குப் போகவில்லை. ஆனால், அந்த அம்மையாருடைய உடல் நிலை காரணமாக பரோல் நீடித்திருக்கவேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு நான் அவர்களை பாதுகாப்பிலிருந்து விடுதலை செய்து விடலாம், அவர்கள் பெண்மணியாக இருக்கிறார்கள் என்று எண்ணி விடுதலை செய்துவிட்டேன். ஆகவே அவர்கள் என்னைப் பார்ப்பதற்கு நிமித்தமே இல்லை. இவர்களை விடுதலை செய்ததோடு உமாநாத் அவர்களும் பரோல் கேட்டிருந்தார்கள். "திருச்சியிலுள்ள என் மனைவியோடு இருந்து அவரை கவனிக்கவேண்டும். அவர்களுடைய உடல் நிலை சரியாக இல்லை" என்று கேட்டிருந்தார்கள், அவர்களையும் பரோலில் விட்டோம். பரோலில் விடுவது என்றால் அதற்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன. அவற்றை அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். பரோலில் விடுவதற்கு முன்பாக இந்த நிபந்தனைகளில் கையெழுத்துப் போடவேண்டும்.

[திரு. எம். பக்தவத்சலம்] 19th March 1966

தாங்கள் இன்னின்ன நிபந்தனைகளுக்குட்பட்டு இருப்பதாக கையெழுத்துப் போடவேண்டும். அந்த நிபந்தனை என்னவென்றால், அவர்கள் நாங்கள் திருச்சியில் இருக்கப்போகிறோம். என்றதால் திருச்சியை விட்டு வெளியே போகக்கூடாது என்பது நிபந்தனை. அந்த நிபந்தனையில் உமாநாத் அவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். அதன்படி பரோலில் விடப்பட்டார். அதன் பிறகு அவர்கள் பாராளுமன்றத்தில் கலந்து கொள்ள முடியுமா முடியாதா என்பது வேறு கேள்வி. அதற்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை. நம்மைப் பொறுத்தவரையில் இவ்வளவு தான் நடந்தது, வேறு ஒன்றுமில்லை. நேற்று இதைப்பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டபோது, ஏதோ சப்-இன்ஸ்பெக்டர் போய் டெல்லிக்கு போகக்கூடாது என்று உத்தரவு கொடுத்தார் என்று சொல்வதெல்லாம் வெறும் அபாண்டம். அப்படி எந்தவிதமான உத்தரவையும் இந்த அரசாங்கம் போடவில்லை. பாராளுமன்றத்தில் கேள்வி கேட்பது என்றால் இந்த அரசாங்கம் என்ன செய்தது என்பதைப் பற்றி ஓரளவுக்கு தெரிந்து கொண்ட பின்னால் கேட்டிருக்க வேண்டும். அதல்லாமல் அரசாங்கத்தை குறை கூறுவது என்பது தகாத காரியம். நான் முன்னால் சொன்னதைத் தவிர வேறு இரண்டாவது எந்தவிதமான உத்தரவும் போடப்படவில்லை. சப்-இன்ஸ்பெக்டர் போய் பார்த்தார் என்றால், பார்த்திருக்கலாம், பரோலில் இருக்கின்றவர்களைப்போய் பார்க்கக்கூடாது என்பது கிடையாது. ஏதோ உத்தரவை "சர்வ்" செய்தார்கள் என்று சொல்லுவது சரியல்ல, அரசாங்கம் வேறு எந்தவிதமான உத்தரவும் போடவில்லை. 'திருச்சியில் இருக்க வேண்டும், மனைவி உடல் நலக் குறைவாக இருக்கிறார்கள், ஆகவே பரோலில் விடுதலை செய்ய வேண்டும்', என்று கேட்டார்கள். அந்த நிபந்தனையின் பேரில்—திருச்சியில் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்—அதில் கையெழுத்திட்டு—அவர் பரோலில் விடப்பட்டு இருக்கிறார். பாராளுமன்றத்திற்கு போகக்கூடாது, டெல்லிக்குப் போகக் கூடாது என்ற பிரச்னை நமக்கு வரவும் இல்லை, நாம் அதற்காக எந்தவிதமான உத்தரவும் போடவில்லை. பரோலில் ரிலீஸ் செய்ய வேண்டும் என்ற உத்தரவு போடப்பட்டது, அதில் திருச்சியில் இருப்பதாக நிபந்தனை இருக்கிறது, அதில் அவர்கள் கையெழுத்தும் இட்டிருக்கிறார்கள். இது தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லை. நிலைமை இவ்வாறு இருக்கையில், பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் இந்த அரசாங்கத்தை கண்டனம் செய்கிற வகையில் பேசியிருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய பொறுப்புணர்ச்சி எத்தகையது என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறது என்பதை தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தோழர் உமாநாத் அவர்கள் பரோலில் விடுதலை செய்வதற்கு முன்பாக இந்த நிபந்தனையில் கையெழுத்து வாங்கப்பட்டதா, அல்லது வெளியில் வந்த பிறகு டெல்லியில் பாராளுமன்றத்தில் கலந்து கொள்ளக் கூடிய பிரச்னை வந்ததின் பின்னால் திருச்சியைவிட்டு வெளியே போகக்கூடாது என்று கையெழுத்து வாங்கப்பட்டதா?



9th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பரோலில் விடுவதற்குத்தான் நிபந்தனை. அவர்கள் ஜெயிலில் கையெழுத்துப் போட்டாரா அல்லது வெளியில் போட்டாரா என்கின்ற விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. பாராளுமன்றத்தில் கலந்து கொள்ளுகின்ற பிரச்னை எழுவதற்கு முன்பே இந்த நிபந்தனை போடப்பட்டது. அதன்படிதான் பரோலிலும் விடப்பட்டார். பரோலில் விடுவதற்கான நிபந்தனையிலும் கையெழுத்திட்டிருக்கிறார்.

MR. SPEAKER: I will take up the privilege matter given notice of by the hon. Member Sri S. Madhavan tomorrow.

## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

### DEMAND NO. XXIV—LABOUR INCLUDING FACTORIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,19,16,200 under Demand No. XXIV—Labour including Factories."

திரு. தா. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, 'தொழிலாளர் நலனுக்காக இயற்றப்பட்டுள்ள சட்டங்கள் சரிவர அமல் நடத்தப் படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட' என்ற என் பெயரில் இருக்கும் வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கின்றேன்.

"That the allotment of Rs. 2,19,16,200 under Demand No. XXIV—Labour including Factories—be reduced by Rs. 100."

MR. SPEAKER: I think no other Member is moving his cut motion. The Demand and the cut motion are now before the House for discussion.

திரு. செ. மாதவன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தொழிலாளர் துறைக்கான மான்யக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சித் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப்பிரேரணையின் மீது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தொழிலாளர்களுக்கு பூரண வேலை பாதுகாப்பு இருக்கவேண்டும், அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும், அவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. அவற்றை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது. எந்தெந்தத் தேவைகள் தொழிலாளர்களுக்கு வேண்டும் என்பதை அறிந்து அதைப்பற்றி அரசாங்கம் அடிக்கடி பரிசீலிக்கவேண்டும் என்பதை நாங்கள் அடிக்கடி வற்புறுத்திக் கூறிக்கொண்டு வருகிறோம். சட்டங்களைப் போட்டு அதன் மூலமாக தொழிலாளர்களின் குறைகளை நீக்குவதற்கு முயற்சிக்கும்போது, அந்தச் சட்டங்கள் ஒழுங்காக நிறைவேற்றப்படுகின்றனவா, அவர்களுடைய குறைகள் என்ன, நீதிமன்றத்தில் வற்புறுத்தப்படுகின்ற கருத்துக்கள் என்ன என்பதை

யெல்லாம் அரசாங்கம் அடிக்கடி பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். முக்கியமாக சட்டங்களிலிருந்து தப்பிக்க முயற்சிக்கும் பெரும் நிறுவனங்கள் மீதும், முதலாளிகள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டக்கூடாது என்பதை நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, நாட்டில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும், வேலை பாதுகாப்பும் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்பட்டு வருகிறது. 'செக்யூரிடி ஆஃப் எம்ப்ளாய்மென்ட்' என்கின்ற நிலை பூரணமாக இல்லாததின் காரணமாக, எந்த நேரத்தில் வேண்டுமானாலும் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவிடலாம், அதற்கு எதையாவது காரணமாகச் சொல்லலாம் என்கின்ற நிலை நாட்டில் தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறது. சில தினங்களுக்கு முன்னால் நமது தொழில் அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். தனிப்பட்ட நிறுவனங்கள் நிர்வாகத் திறமைக் குறைவின் காரணமாகவோ, பொருளாதார வசதிக் குறைவின் காரணமாகவோ தங்கள் தொழிலை நிறுத்திவிட்டு அரசாங்கம் தலையிடுவதற்கும் எந்தவிதமான வாய்ப்பும் இல்லாத சூழ்நிலையை ஏற்படுத்திவிடுகிறார்கள் என்று எடுத்துக் கூறினார்கள். அது ஓரளவுக்கு உண்மையாக இருக்கலாம். இந்த நிலை தொடர்ந்து வளருவதற்கு அரசாங்கம் வழிசெய்யக்கூடாது என்பது தான் என்னுடைய கோரிக்கை. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன் வர வேண்டும். உதாரணமாக அவர்களே ஒன்றைச் சொன்னார்கள். நிர்வாகத்தில் குறை ஏற்பட்டதின் காரணமாக தொழிலை நிறுத்திவிட்டு, எங்களுக்கு 50 லட்சம் ரூபாய் கடன் கொடுங்கள், மீண்டும் தொழிலை ஆரம்பிக்கிறோம் என்று அரசாங்கத்திடம் வந்து கேட்கின்றார்கள் என்று சொன்னார்கள். மூலதனம் இல்லாத இப்படிப்பட்ட நிறுவனங்களை பல லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படக்கூடிய சூழ்நிலையை இந்த நாட்டில் அனுமதிக்கலாமா என்பதைப் பார்க்க வேண்டும். முதலாளித்துவக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் அது வேறு விஷயம், சோஷலிசக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்த அரசாங்கம் இத்தகைய ஒரு சூழ்நிலையை அனுமதித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். சமீபத்தில் தொழிற்சங்கங்கள் எல்லாம் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை கணக்கிட்டு, இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்ற தொழிற்சாலைகளையும் கணக்கிட்டு, இவைகளை எல்லாம் பரிசீலித்து, அப்படிப்பட்ட நிறுவனங்களை எல்லாம் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு கடன் கொடுக்க முன் வராவிட்டாலும், இத்தகைய நிறுவனங்களை சர்க்காரே ஏற்றெடுத்து, பப்ளிக் செக்டாரில் நடத்துவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





உழைப்புக்கேற்ற ஊதியம் தேவை என்பதுதான் க்ஷேம நல சர்க்காரின் அடிப்படையான தத்துவம். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் ஜப்பான் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு, அங்கே தொழிலாளர்களுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்பதைப்பற்றி விளக்கிக் கூறினார்கள். அதிலே அவர்கள் 9.30 a.m. முக்கியமாக வற்புறுத்திக் கூறியது, தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு ஊதியத்தைப் பெருக்கிக் கொடுக்க முடியுமோ, எந்த அளவுக்கு வசதி வாய்ப்புகளை அதிகப்படுத்திக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுத்து, அந்த அளவுக்கு உற்பத்திப் பெருக்கத்தைக் கண்டேன் என்று தெரிவித்தார். அந்த அளவுக்கு தொழில் துறை வளரவேண்டும் என்று தெரிவித்தார். அதில் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிகளுக்கும் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. அப்படிப்பட்ட நிலைமை இங்கே உருவாகாததன் காரணம் என்ன? பொதுவாக நாட்டின் பொருளாதார நிலைமை தான் காரணம் என்று சொல்லுவதற்கில்லை. தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் நிறுவனங்களில் ஏராளமான லாபம் சம்பாதிக்கும் முறையில் நடத்தும் சூழ்நிலையைப் பார்க்கிறோம். தனிப்பட்ட முதலாளிகள் லாபத்தைக் கருத்தில்கொண்டு பார்க்காமல், தொழிலாளர்களுக்குப் பூர்ண வசதி செய்து கொடுக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல சர்வீஸ் கண்டிஷன்ஸ், இன்றைக்கு எது இல்லாவிட்டாலும் நடைமுறையில் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தரக் கூடிய விதி முறைகள் தொழிற்சாலைகளில் பின்பற்றப்படாவிட்டால், தொழிலாளர்களைப் பழி வாங்கும் சூழ்நிலை உருவாகும். ஏராளமான தொழிற்சாலைகளில் இந்த விதிகளிலிருந்து தப்பிக்க எந்தெந்த முறைகளைப் பின்பற்றலாமோ அவைகளைப் பின்பற்றும் வாய்ப்பு, சூழ்நிலை இருக்கிறது என்பதை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழில்கள், தொழிலாளர்கள், நிறுவனங்கள், முதலாளிகள் இவர்களிடத்திலே அமைதி ஏற்படவேண்டும், அவர்களுக்குள் இணக்கமான செயல் திட்டம் உருவாகவேண்டும் என்று அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக கோட் ஆஃப் டிசிப்ளின் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதில் தவறு ஏற்பட்டால், தொழில் சட்டங்கள் மூலமாக விசாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இந்தத் துறையிலே கூட நம் அரசாங்கம் சரியான முறையில் தொழிலாளர்கள் குறையைப் பரிசீலிக்கத் தவறியிருக்கிறது என்று இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இதிலே முதலாளி பக்கம் குறையா, அல்லது தொழிலாளி பக்கம் குறையா என்று பார்க்காமல் இதனால் இரண்டு விளைவுகள் ஏற்படுகின்றன. சமுதாயத்திற்கு முதுகெலும்பு போல் இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. நாட்டின் பொருளாதாரம் க்ஷீணிக்கும் நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலையை

புதிதாக தொழிலாளர்கள் முதலாளிகள் உறவிலே நம் தொழில் அமைச்சர் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். கடமை உணர்வும், பொறுப்பு உணர்ச்சியும் நம் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்த முயன்றால் தான் நம் நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும் என்று சொன்னார்கள். கொள்கை அளவில் அதை நாங்களும் ஒத்துக்கொள்கிறோம். ஜப்பான் நாட்டில் இப்படி இருப்பதாக அமைச்சர் அவர்கள் வேறு ஒரு இடத்தில் கூறினார்கள். நம் நாட்டில் அந்த மாதிரி நிலைமை இல்லாததற்கு என்ன காரணம் என்று பரிசீலித்தாகவேண்டும். இயற்கையாக பொறுப்புணர்ச்சி இல்லை என்று அரசாங்கம் வாதாடுகிறதா? அல்லது சமுதாயச் சூழ்நிலை காரணமா? அல்லது இன்றைக்கு இருக்கும் முதலாளி-தொழிலாளி உறவு காரணமா? அல்லது இதையெல்லாம் நிர்ணயிக்கும் சட்டங்கள் காரணமா? அல்லது இந்தச் சட்டங்களை நிறைவேற்றுகிற அரசாங்கம் காரணமா என்று தெளிவாகப் பரிசீலித்தாக வேண்டும். உதாரணத்திற்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மோட்டார் தொழிலாளர் சட்டம், மத்திய சர்க்கார் சட்டம், 1961-ல் பிறப்பிக்கப்பட்டது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற விதிகளைப் பிறப்பிக்க நான்கு ஆண்டுகள் இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டது. என்ன காரணம்? இந்த நிலை நீடிப்பதன் காரணமாகத் தான், தொழிலாளர்களுக்கே முதலாளி மீது, அரசாங்கத்தின்மீது, அவர்களுக்கு நன்மை செய்ய ஏற்படுத்தும் சட்டத்தின் மீது, சட்டங்களை நிர்வகிக்கும் இலாகா மீது நம்பிக்கையற்ற நிலைமையை உருவாக்கி விடுகிறது. இதை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். 1962-ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பிரச்னையைச் சட்ட மன்றத்தில் எழுப்பினோம். விதிகள் செய்தீர்களா, விதிகளைப் போட்டு சட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுக்க மாட்டீர்களா என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தோம். விதிகள் டிராஃப்ட் ஸ்டேஜில் இருக்கின்றன, இலாகாவில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது, இப்போது தான் பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள், மக்கள் கருத்து அறிய கெஜெட்டில் பப்ளிஷ் செய்யப்பட்டிருக்கிறது என்று பல முறை தொழில் அமைச்சர் அவர்களும் முதல் அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்களே தவிர வேறு ஒன்றும் சொல்லவில்லை. விதிகளைப் பிறப்பிப்பதற்கே நான்கு ஆண்டுகள் எடுத்துக் கொண்டதற்கு என்ன காரணம் என்பதைத் தெளிவாக்க வேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகரவர்களே, இதை உடனடியாக விளக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த டிரான்ஸ்போர்ட் வொர்க்கர்ஸ் சட்டமானது பாக்டரி ஆக்டை அப்படியே மாற்றி டிரான்ஸ்போர்ட் வொர்கர்சுக்கு அமல் நடத்துகிற மாதிரி செய்துவிட்டார்கள். இன்று தொழிலாளர்களே அதிலிருக்கிற விதிகளின்படி எங்களுக்கு அமல் நடத்தவேண்டாம், அவைகளை மாற்றி அமைத்துக்கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். உதாரணமாக, டிரான்ஸ்போர்ட் வொர்க்கர்ஸ் சம்பந்தப்பட்ட வரை 'டபிள் ட்யூடி, டபிள் ஆஃப்', அதாவது இன்று





மத்தியானம் வேலை, இரவு ஓய்வு, மறு நாள் காலை வேலை இப்படி இரண்டு வேலையையும் செய்துவிட்டு, மறுநாள் மத்தியானம், இரவு ஓய்வு எடுத்துக்கொண்டு, மறுபடியும் மூன்றாம் நாள் வேலைக்கு வருகிறார்கள். டிரான்ஸ்போர்ட் வொர்க்கர்ஸ் ஆக்ட் படி அம்மாதிரி கொடுக்க முடியாது. இந்த டிரான்ஸ்போர்ட் வொர்க்கர்ஸ்க்கு சாதகமாக இந்த ஆக்ட் பிரகாரம் விதிகள் பிறப்பிக்க முடியாமல் பல சங்கடங்கள் இருக்கின்றன.

திரு. செ. மாதவன் : சர்க்கார் போட்ட சட்டத்தின்படியே தொழிலாளர்களுக்கு தீமை விளைவிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படியிருந்தால் அதை மாற்றுவதற்கு நமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அரசாங்கத்தின் கொள்கை காரணமாக பஸ் நிறுவனங்களிலுள்ள ஏராளமான தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு 'செக்யூரிடி ஆஃப் எம்ப்ளாய்மெண்டு' கிடையாது. அவர்களுக்குப் போதிய வசதிகளும் கொடுக்கப்படவில்லை. சில நிறுவனங்களில் சம்பளம் கூட கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த நிறுவனங்களின் சொந்தக்காரர்கள் காங்கிரஸ்காரர்கள் சார்பில் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தொழிலாளர்களுக்குச் சாதகமாக உடனடியாக இதைக் கொண்டுவருவதற்கு சர்க்கார் முழு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நமது சர்க்கார் சில நிறுவனங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எலெக்ட்ரிசிடி போர்டில் உள்ளவர்களுக்கு ஏன் எக்செம்ப்ஷன் கொடுத்தோம் என்பதற்கு இன்று காலையில் முதல் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். எலக்ட்ரிசிடி போர்டில் உள்ளவர்களுக்கு அரசாங்க சிப்பந்திகளைப் போல் சில சலுகைகள் இருக்கும், ஆகையால் எக்செம்ப்ஷன் கொடுத்தோம் என்று சொன்னார்கள். எக்செம்ப்ஷன் கொடுத்தது 1964-ம் ஆண்டில். 1964-ம் ஆண்டில் ஜி.ஓ. போட்டார்கள். இந்த ஜி.ஓ.-வில் பொதுவாக கண்டிஷன்ஸ் போட்டார்கள். அந்த கண்டிஷன்ஸ் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. இதை அரசாங்கம் பரிசீலித்திருக்கிறதா என்றால், இரண்டு ஆண்டுகளாக பரிசீலிக்கவில்லை. ஏன்

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த கண்டிஷன்ஸ் நிறைவேற்றப்படவில்லை என்று இப்பொழுது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உடனே அதுபற்றி கவனிக்கவேண்டும் என்று கமிஷனர் அவர்களுக்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதிலே வேறு என்ன செய்வது அரசாங்கம்?

திரு. செ. மாதவன் : அந்தக் கருத்துத் தான் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்த கண்டிஷன்ஸ் போட்டது அரசாங்கத்தில் இருப்பவர்கள். இம்மாதிரி இந்த கண்டிஷன்ஸ் நிறைவேற்றப்

படுகிறதா என்று பரிசீலிப்பதற்கே ஒரு பிரிவு இருக்கிறது. சில இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். இம்மாதிரி தொழில் நிறுவனங்களைப் பொருத்தவரையில் அவர்கள் பரிசீலித்திருக்கவேண்டும். ஆனால், மின்சார போர்டைப் பொருத்தவரையில் பரிசீலிக்கவில்லை. ஏன் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** குறிப்பிட்ட ஒரு சங்கம் சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னார்கள். அதை கமிஷனர் ஆஃப் லேபர் கவனிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடன் லேபர் கமிஷனருக்கு உத்தரவு போட்டிருக்கிறோம். சட்டப்படி கவனிக்கவேண்டியவர்கள் கவனிக்கவில்லை என்று புகார் வந்தாலும், அது பற்றியும் பரிசீலனை செய்யப்படும். இதில் மேற்கொண்டு கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

**திரு. செ. மாதவன் :** இலாகா தவறு செய்தார்கள், பரவாயில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட கண்டிஷன்ஸ் நிறைவேற்றப்படவில்லை என்று 1966-ம் ஆண்டில் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்த மனுக் கொடுத்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. இதுவரையில் இன்ஸ்பெக்டர் அங்கு செல்லவில்லை. ஓவர்-டைம் சம்பளம் வாங்கமுடியாத நிலைமை இருக்கிறது. கண்டிஷன்படி எத்தனை மணி நேரம் வேலை செய்தார்கள் என்பதற்கு ரிஜிஸ்டர் மெயின்டைன் பண்ண வேண்டும். இன்றுவரையில் இல்லை. பரிசீலிப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காலதாமதம் இல்லாமல் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொழில் அமைச்சர் அவர்கள் எலக்டிரிசிடி போர்டு தொழிலாளர்கள் தொழிலாளர்கள் சட்டத்தின்கீழ் வருவார்களா அல்லது அரசாங்க சிப்பந்திகளைப் போல் கருதப்படுவார்களா என்பது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த தகவல்படி மின்சாரக் கழகமும், தொழிலாளர்களும் ஒரு 'கோட் ஆப் டிசிபிளின்'-படி நடக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த 'கோட் ஆப் டிசிப்ளின்' நல்ல முறையில் பின்பற்றப்படுகிறதா என்பதை நம்முடைய அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்குக் கிடைத்த தகவல்படி இந்த 'கோட் ஆப் டிசிப்ளின்' 1965-ம் ஆண்டு அக்டோபரில் ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்படி ஒப்புக்கொண்டவுடன் ஹைகோர்ட்டில் 'ரிட்' போடப்பட்டிருக்கிறது. பேச்சு வார்த்தைகள் தொடங்குவதற்கு முயற்சி எடுப்பதற்கு முன்னால் உயர்நீதி மன்றத்திற்கு செல்லக்கூடாது என்று கருதுகிறேன். அதை மின்சாரக் கழகம் மீறியிருக்கிறது. மின்சாரக் கழகம் 'கோட் ஆப் டிசிப்ளினை' பின்பற்ற வேண்டும் என்று நமது அரசாங்கம் வற்புறுத்தவேண்டும். இதை ஏற்றுக் கொள்ளுவது மட்டுமல்ல. அதிலே போட்டிருக்கிற விதிகளை பின்பற்றுவதற்கு நமது அரசாங்கம் தகுந்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். எனக்கு வந்த தகவல், நமது மின்சார போர்டு





இந்த 'கோட் ஆப் டிசிப்ளினை' ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் அதிலுள்ள 'ப்ரொவிஷன்ஸ்' விதிகளை பின்பற்றுவதற்கு முயற்சி எடுக்கவில்லை.

இப்படிப்பட்ட நிறுவனங்களிலே, எலக்ட்ரிசிடி போர்டில் கன்சல்டேடிவ் கமிட்டி என்ற கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அமைப்புகளிலே தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும் என்ற கருத்தை அரசாங்கம் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. போடப்படக்கூடிய பிரதிநிதி யாருடைய பிரதிநிதியாக இருக்கவேண்டும், எந்தத் தொழிற்சங்க பிரதிநிதியாக இருக்கவேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், எந்தவிதமான தொழிற்சங்க பிரதிநிதியும் இல்லாத ஒருவரை அந்த கவுன்சிலில் அமைப்பது என்ற கொள்கையை நமது தொழில் அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்படியில்லை. ஒரு தொழிற்சங்க பிரதிநிதியைத்தான் நியமித்திருக்கிறோம்.

**திரு. செ. மாதவன் :** இப்பொழுது நியமிக்கப்பட்டிருப்பவர் அப்படிப்பட்ட தொழிற்சங்க பிரதிநிதி இல்லை என்பது என்னுடைய தகவல். அதை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது இன்கரெக்ட். அவர் ஒரு தொழிற்சங்க பிரதிநிதி தான்.

**திரு. செ. மாதவன் :** மெஜாரிடி வொர்க்கர்ஸ் எந்த தொழிற்சங்கத்தில் இருக்கிறார்களோ, எதிலே அதிகமாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 40,000 தொழிலாளர்கள் உள்ள ஒரு ஸ்தாபனத்தில் 500 மெம்பர்கள், 600 மெம்பர்கள் என்று இருக்கிற தொழிற்சங்கங்கள் எப்படி 'ரெப்ரஸெண்டேடிவ்' ஆகும்? ஒரு சங்கத்தில் 501 மெம்பர்கள் இருந்தால், அது 500 மெம்பர்கள் கொண்ட சங்கத்தைவிட பிரதிநிதித்துவம் வாய்ந்தது, ஆகவே அதற்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டால் எப்படி என்பதை திரு. மாதவன் அவர்கள் கொஞ்சம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். 'கோட் ஆப் டிஸிப்ளின்' படி மெஜாரிடி, அதாவது அதிகப்படியான மெம்பர்கள் இருக்கக்கூடிய யூனியனுக்கு 'ரெகக்னிஷன்' கொடுக்கவேண்டும், அதாவது 51 சதவீதம் மெம்பர்கள் இருக்கக்கூடிய யூனியனுக்கு. ஆனால், 5 சதவீதம், 5 சதவீதம் கூட மெம்பர்கள் இல்லாத யூனியன்கள் இருக்கின்றன.

**திரு. செ. மாதவன் :** எதிலே தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்களோ, அந்த சங்கங்களையாவது கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்படிப்பட்ட குறைகள் அடிக்கடி ஏற்படுகின்றன. இந்தக் குறைகளைப் பரிசீலிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் எந்த முறைகளைக் கையாளுகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது முதல் அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும் என்று சொன்னார்கள். இந்த சட்டம் சரிவர நிறைவேற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு எந்த இலாகா ஏற்படுத்தப்பட்டதோ, அந்த இலாகா சரியாக நடக்கிறதா என்பதை அரசாங்கம் பரிசீலிக்க வாய்ப்பு இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். போடப்பட்ட சட்டத்தை சரிவர நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மிக முக்கியமான மான்யக் கோரிக்கை இது. பொருளாதார சமத்துவத்தின் முதுகெலும்பு தொழிலாளர்கள். அவர்களுக்கு எந்த அளவுக்கு நன்மை செய்து, அவர்களை திருப்திப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு நம்முடைய பொருளாதார வளர்ச்சி மேலும் பெருகும் என்பதில் சந்தேகம் கிடையாது. குறிப்பாக நம்முடைய மாநிலத்தை எடுத்துக்கொண்டால், எத்தனையோ சட்டங்களைப் போட்டு, அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுக்கு வசதிகளைச் செய்துகொடுத்துக் கொண்டு வருகிறோம். இருந்தாலும், இன்னும் அதிகமாக அவர்களுக்கு செய்யப்படவேண்டிய கடமைகள் இருக்கின்றன என்பதை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள பிரியப்படுகிறேன்.

குறிப்பாக, சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால், பெரிய பிரச்னை வேலையில்லாத பிரச்னை ஒன்று தான். வீட்டிற்கு வீடு படித்த மாணவர்கள் வேலையில்லாமல் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு செய்து தருவது எப்படி என்பதைப் பற்றி நாம் யோசிப்பது சாலச் சிறந்தது. ஆண்கள் மாத்திரமல்ல, பெண்களும் வேலை வாய்ப்பு இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நகர்புறங்களில் ஆணும் பெண்ணும் சேர்ந்து சம்பாதித்தால் தான் அரை மாதத்திற்காவது ஒழுங்காக சாப்பிடக் கூடிய வாய்ப்பு இருக்க முடியும் என்பதற்கான சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆண்களுக்கு வேலை வாய்ப்பு தேடித்தருவது மாத்திரம் அல்லாமல் பெண்களுக்கும் வேலை வாய்ப்பு தேடித்தரவேண்டிய ஒரு கடுமையான சூழ்நிலை நகர்புறங்களில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்கு என்ன திட்டத்தை தீட்டுவது என்பது பற்றி யோசிப்பது நலமாக இருக்கும். குறிப்பாக, பல தொழில் நிறுவனங்களுக்கு, சிறு ரக தொழில்கள், கனரகத் தொழில்கள், இன்னும் இரண்டுக்கும் மத்தியில் இருக்கும் தொழில்கள் இவற்றிற்கெல்லாம் அரசாங்கத்தில் கடன் வசதிகள்





கொடுக்கிறோம். அதோடு இன்னும் பல வசதிகளும் செய்து கொடுக்கிறோம். அப்படிப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும் போதே 'உங்களுடைய நிறுவனத்திலே இத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்' என்கிற ஒரு விதியைப் போட்டால், அவர்கள் பலருக்கு வேலை கொடுக்கும் சூழ்நிலை ஏற்படும். இன்றைக்கு அப்படியில்லாமல், அவரவர்கள் விருப்பப்படி, ஆள்களை குறைத்துக்கொண்டு, மெஷின்களுடைய பலத்திலேயே காரியங்களை நடத்திவிடலாம் என்று யோசிக்கிறார்கள். அந்த நிலையில்லாமல் சர்க்காரிடம் கடன், மற்ற வசதிகள் பெறும் காலத்திலேயே இத்தனை பேருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்கிற கட்டாயம் இருக்கவேண்டும். அதே போன்று நகரப்புறத்திலே பெண்களுக்கும் வேலை வாய்ப்புக்கள் கொடுக்க வேண்டும். இன்றைக்கு பல தொழில்களிலே பெண்களையும் ஈடுபடுத்தக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இருந்தும், அதிகம் பேர்களை எடுப்பதில்லை. காரணம், பெண்களை எடுத்தால் அதைத் தொடர்ந்து இன்னும் வேறு பிரச்னைகள் வருகின்றன. இருந்தாலும், இத்தனை சதவிகிதம் வேலை கொடுக்க வேண்டும், அதற்கு தொழிலதிபர்கள் முன் வரவேண்டும், என்கின்ற முறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, நம்முடைய அரசாங்க நிறுவனத்திலேயே, முக்கியமான அளவுக்கு வேலைகள் தரப்படவில்லை. குறிப்பாக பப்ளிக் ஒர்க்ஸ் ஒர்க்ஷாப்பை எடுத்துக் கொண்டால், அங்கே வேலை செய்பவர்களுக்கு சம்பளம் மிகக் குறைவு. சம்பளம் குறைவு என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு வேலையே காயம் இல்லை. தொழிலாளிகள் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் என்ன? காயமான வேலை, நியாயமான கூலி, இவைதான் தொழிலாளர்கள் எதிர்பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டமான நிலைமையை அரசாங்கமே சில இடங்களில் ஏற்படுத்துகிறது. இது மிக, மிக வருந்தத்தக்கது. இந்த நிலைமை பப்ளிக் ஒர்க்ஸ் ஒர்க்ஷாப்பிலே இருக்கிறது. நான்கு வருஷம், ஐந்து வருஷம் தான் ஆகிறது என்றால், காயமாக வில்லையென்றால் சரி. ஆனால், 20, 30 வருஷங்கள் வேலைசெய்த பிறகும், இன்னும் காயம் இல்லாமல் இருக்கிறார்கள், எந்த நிமிஷமும் வீட்டுக்குப் போகவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள் என்றால் அது பரிதாபகரமாக இருக்கிறது. அது வருத்தத்தக்க நிலைமை, அதைப்போக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக ஐந்தாண்டுக்குமேல் வேலை தேவைப்பட்டால், நம்முடைய அரசாங்க விதிப்படி அது காயமாக்கப்படவேண்டும் என்று கூறப்படுகிறது. அப்படியிருந்தும் கூட, ஐந்தாண்டுக்குமேல் வேலை தேவைப்பட்டிருந்தும், ஏன் அவற்றைக் காயப்படுத்தவில்லை என்பதை சிந்திக்க வேண்டும். சாகும் வரையில் டெம்பரரியாகவே இருந்து செத்து விடவேண்டியதுதானா என்பதைச் சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். இதை அவசரமாகக் கவனிக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

[திருமதி டி. என். அனந்தநாயகி ] [9th March 1966

அதே போன்று இன்றைக்கு டாம் கன்ஸ்ட்ரக்ஷனை எடுத்துக் கொண்டால், மேஸ்திரிகள் 10, 11 ஆண்டுகள் சர்வீஸ் போட்டு விட்டு இன்னும் காயமாகாமலேதான் இருக்கிறார்கள். இவர்களை வீட்டுக்குப் போ என்று நோட்டீஸ் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. 10, 11 ஆண்டுகள் சர்வீஸ் ஆனவர்களை வேலையை விட்டுப் போ என்று சொன்னால், அவர்கள் என்ன செய்வார்கள்? சில பேரை 'ஓர்க்சார்ஜ்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட்' என்று சொல்லுகிறார்கள். அந்த வகையிலே இருப்பவர்களை, ஆள் குறைப்பு என்றவுடன் வீட்டுக்குப் போ என்று சொல்லிவிடுகிறார்கள். அப்படியே ஆள்குறைப்பு என்று வந்தாலும், ஜூனியர்-மோஸ்ட் மேஸ்திரியாக இருப்பவரை வீட்டுக்கு அனுப்பியுங்கள் என்றுதான் சொல்லுவேன். பத்து ஆண்டு வேலை செய்துவிட்ட சீனியர் மேஸ்திரியை வீட்டுக்குப்போ என்று சொன்னால், அவன் என்ன செய்வான் என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அவன் எங்கே போய் வேலை தேடுவான்? அவனுக்கு மாற்று வேலை கொடுக்கும் திட்டம் வேண்டாமா? பப்ளிக் ஓர்க்ஸ் மேஸ்திரி ஒருவன் வேலை இழக்கிறான் என்றால், அவனுடைய குடும்பமே செத்துவிடும். ஐந்தாறு ஜீவன்கள் கொண்ட குடும்பமாக இருக்கலாம். பத்து ஆண்டு கழித்து இன்றைக்கு வேலையை விட்டுப் போ என்றால், அவன் பரதேசி போல வேலை கிடைக்குமா என்று சுற்றிக்கொண்டிருப்பதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்? அவனை நம்பி இருக்கும் குடும்பத்தின் கதி என்னவாகும் என்பதை மிகமிகக் கவனத்தோடு ஆராய்ந்து பார்த்து, அதற்குத் தக்க பரிகாரம் தேடவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன். ஓர்க் சார்ஜ்ட் எஸ்டாப்ளிஷ்மெண்டில் இத்தனை பேர்கள்தான் என்று திட்டமாகச் சொல்லிவிட்டாலும், அதிகமான ஆள்கள் வேறு வழி தேடலாம். ஆகவே, இதிலே அரசாங்கம் மனதைச் செலுத்தி, எந்த அளவுக்கு பர்மெனன்ட் ஆக எடுக்கலாம், எந்த அளவுக்கு காஷுவல் லேபராக வைக்கலாம் என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டால் நலமாக இருக்கும். மூன்று ஆண்டுகளுக்குள்ளே, காஷுவல் லேபராக இருப்பவன், காயப்படுத்தப்படுவது நியாயமானதாக இருக்கும். இந்த பிரச்னையில் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்தவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சாகும் வரையில் டெம்பரரியாகவே இருப்பானேயானால், அவன் முடிவுதான் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும்.

ஃபாக்டரி ஆக்டிலே, 92, 94 செக்ஷன்களிலே, சாதாரண ஒரு குற்றத்திற்கு கூட இம்ப்ரிசன்மெண்ட் என்று போட்டிருக்கிறது. Imprisonment or fine or both என்றெல்லாம் போட்டிருக்கிறது. இது சம்மந்தமாக நான் கூட ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது இன்னும் சபைக்கு வரவில்லை. அதைப் பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டும். ஒரு தொழில் நடத்துபவன், கையில் இருக்கும் சொற்ப முதலைப் போட்டு, ஒரு தொழிலை ஆரம்பிக்கிறான் என்றால், அவனுக்கு non-submission of returns என்பதற்காக தண்டனை; அவன் தொழிலே முழுவதும் ஆரம்பிக்கவில்லை. அதற்குள் ரிடர்ன் இல்லை என்று அதில் கொஞ்சம் தவறிவிட்டால் அதற்காக அவன் கம்பி எண்ண



9th March 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி ]

வேண்டும் என்பது, தொழிலே சிறு தொழில், அதை ஆரம்பிக்கும் போதே, சிறு தவறுக்காக அவன் கம்பி எண்ண வேண்டுமென்றால், அவன் உள்ளம் என்ன பாடுபடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தால், அவர்கள் சிறைக்குப் பயந்து கொண்டு, இனி தவறுகள் செய்யாமல் இருப்பார்கள். ஆனால், இப்படிச் சிறு சிறு தவறுகளுக்கெல்லாம் சிறை சிறை என்றால், அதற்கு மதிப்பே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. ஆகையினால், ஃபாக்டரிஸ் ஆக்டிலே, இப்படிப் பட்ட விதிகளை மாற்றி, சிறை வாசம் என்பதை மாற்றி, வெறும் ஃபைன் என்று மட்டும், சொல்லுவதானது சாலச் சிறந்ததாக இருக்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆலைகள் சட்டம் பெரிய சட்டம். அதிலே சுகாதார வசதிகள் கவனிக்கப்படவேண்டும். பாதுகாப்புக்கள் கொடுக்க வேண்டும். இதெல்லாம் மிக முக்கியமானது. அதிலேயெல்லாம் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். சிறு தவறு என்று ஃபைன் என்றால், அதைக் கொடுத்து விட்டுப் போய்விடுவார்கள். ஆகவே, கண்டிப்பாக சிறை தண்டனை இருப்பதுதான் நலம். அங்கத்தினர் அபராதம் மட்டும் போதும் என்று சொல்லுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** தொழிலாளிகளுக்கு நலன்கள் செய்வதில் தவறு என்றால் கண்டிப்பாக சிறை தண்டனை வேண்டும். ஆனால், non-submission of returns கணக்குக் கொடுப்பதைக் கொஞ்சம் லேட்டாகக் கொடுத்தார் என்று இருக்கிற தவறுக்கு சிறை என்பதை மாற்ற வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். தொழிலாளிகளுடைய நலன் என்று வரும்போது, கட்டாயமாக, கொஞ்சம் கூடத் தளர்த்தவேண்டும் என்று சொல்லக் கூடாது. ஆனால், சாதாரண விஷயங்களுக்கு இப்படிப்பட்ட தண்டனை வேண்டாம் என்பதைச் சிந்தித்து, இந்த சட்டத்தை துருவித் துருவிப் பார்த்து சாதாரண குற்றத்திற்கு சிறைத் தண்டனை . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** Imprisonment என்பது minimum sentence இல்லை. அதையே மினிமம் செண்டன்ஸாகப் போட்டிருந்தால் கனம் அங்கத்தினர் ஆட்சேபிக்கலாம். கோர்ட்டார் பார்த்துச் செய்யலாம் என்றால், இம்ப்ரிஸன்மெண்டும் என்றுதான் இருக்கிறது.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** அமைச்சர் சொல்வது போல அது மினிமம் சென்டன்ஸ் என்று இல்லாவிட்டாலும், போடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினால், சிறு குற்றங்களுக்கும் போடுகிறார்கள், என்று சிறு தொழில் அதிபர்கள்கூட தங்கள் கஷ்டத்தை எடுத்துச் சொல்லுகிறார்கள். கனம் முதல் அமைச்சர் பார்த்து எது நல்லதோ அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி இல்லாமலே இருந்தால், இன்னும் பயப்படாமல், தொழிலை நல்லமுறையில் நடத்தலாம். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் இருக்கின்ற சிறு முதலாளிகள் அப்படி சட்டத்தில் இருப்பது கஷ்டமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். அந்த நிலையை யோசிக்க வேண்டும் என்று எடுத்துக் கூறவிரும்பினேன்.

அடுத்து, வொகேஷனல் கைடன்ஸ் அண்ட் ட்ரெயினிங், என்று ஆங்காங்கே யூனிட்டுகளை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த அதிகாரிகள், பள்ளிக் கூடங்களில், எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு முன்பாக, வகுப்புக்களுக்கே சென்று, எப்படி எப்படி வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் மாணவர்களுக்கு எடுத்துச் சொன்னால், காலேஜுக்குப் போகமுடியாமல் யோசித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு தங்களுக்கு என்னென்ன வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும். 10-வது படித்து முடிந்த பிறகு தங்களுக்கு பலவகைகளில் வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதே தெரியவில்லை. ஆகவே, மாவட்டங்களில் எம்ப்ளாய்மெண்ட் ஆபீசுகளில் இருக்கிறவர்கள், அந்தந்த பள்ளிகளுக்குச் சென்று, வாரத்தில் ஒன்றிரண்டு முறை கடைசி டர்ம் போது வகுப்பில் சென்று பிள்ளைகளுக்கு இருக்கும் வாய்ப்புக்களை எடுத்துச் சொன்னால், அவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும்.

அடுத்தபடியாக, ஃபிஸிகலி ஹேண்டிகாப்ட் மனிதர்கள். கால் நொண்டி, கை நொண்டி என்று ஒச்சத்தோடு பிறந்தவர்கள். இவர்களில் 362 பேர்கள் பதிவு செய்யப்பட்டு, 92 பேர்களுக்கு வேலைக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ஃபிஸிகலி ஹேண்டிகாப்டாக இருப்பவர்களுக்கு அதிகமாக வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. காரணம், பழைய காலம் மாதிரி, இப்படிப்பட்டவர்களை சும்மா வீட்டில் வைத்துக்கொண்டு சாப்பாடு போட்டுக்கொண்டு இருக்க முடியவில்லை. நொண்டி, முடமாக இருப்பவர்கள் பெரிய பாரமாக இருப்பதால், மனம் நொந்து போகும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஒச்சமானவர்களுக்கு துரிதமாக வேலைவாய்ப்புகளை வகுத்துத் தரவேண்டும்.

அதே மாதிரி, அனாதை ஆசிரமங்களிலிருந்தும் வரும் பெண்களுக்கும் உதவி கொடுக்க வேண்டியது அவசியமும், அவசரமும் கூட. படிக்கும் வரையில், அவர்களுக்கு ஆசிரமத்தில் பாதுகாப்பு இருக்கிறது. சர்வீஸ் ஹோமிலே அவர்களைக் கவனித்துக் கொள்ளுகிறார்கள். அப்படிப் படித்து வெளிவந்தவர்களுக்கு வேலை கிடைக்கிறது என்கின்ற உறுதி கிடையாது. தங்க வீடு கிடையாது. அவர்கள் வேலையில்லாமல் திண்டாடுவது பரிதாபகரமாக இருக்கிறது. ஆகையினால், நொண்டி, முடம் இவர்களுக்குப் போல, இந்த அனாதைகளுக்கும் சலுகைகள் கொடுக்க முன்வந்து உதவியளித்தால், சமுதாயத்தில் நொண்டியாகக் காட்சியளிக்கும் இவர்களுக்கும் நன்மை செய்ததாக இருக்கும். ஆகவே, உடனடியாக இந்த அனாதைகளுக்கு, ஆதரவற்றவர்
10-06 a.m. களுக்கு வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுப்பது மிக மிக அவசியமானது. அடுத்து, வீட்டு வசதியைப் பார்க்கிறோம். அரசாங்கத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கே வீட்டு வசதியை நாம் இன்னும் செய்து தரவில்லை. 14 லட்ச ரூபாயில் ஆறு லட்ச ரூபாய்தான் செலவழித்திருக்கிறோம். கவர்ன்மெண்ட் ப்ரெஸ்ஸில்



3,500 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 300 குடும்பங்களுக்குத்தான் நாம் வீட்டு வசதி செய்து தந்திருக்கிறோம். 3,500 தொழிலாளர்கள் எங்கே? 300 வீடுகள் எங்கே? சென்னை நகரத்தில் வீட்டுப் பிரச்னை மிக வேதனையான பிரச்னையாக இருக்கிறது. 40 ரூபாய், 50 ரூபாய் கொடுத்தாலும் ஒரு அறை கிடைப்பது கூடக் கஷ்டமாக இருக்கிறது. ஐம்பது ரூபாய் வாடகை என்றாலும், அதையும் முன்பணமாகக் கேட்கிறார்கள். தொழிலாளர்கள் படும் அவஸ்தை மிகக் கடினமாக இருக்கிறது. வீட்டு வசதியை நாம் அவசர அவசரமாகச் செய்து கொடுத்தாக வேண்டும். சென்னை நகரத்தில் இருக்கும் நாம் நடத்தும் நிர்வாகத்திலுள்ள தொழிலாளர்களுக்கே வீட்டு வசதி இல்லையென்றால், எங்கிருந்து தனிப்பட்ட முதலாளிகள் வீட்டு வசதி ஏற்படுத்தித் தரப்போகிறார்கள்? அரசாங்கம் நடத்தும் தொழில் ஸ்தாபனங்களாகிய ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட், கவர்ன்மெண்ட் ப்ரெஸ், பி. டபிள்யூ. டி. ஒர்க்ஷாப் இவைகளில் நம்மிடம் வேலை செய்யும் க்ளாஸ்-4 ஊழியர்களை எடுத்துக்கொண்டால், எல்லோரும் வீடு, வீடு, வீடு என்று காக்காய் மாதிரிப் பறக்கிறார்கள். சென்னை நகரத்தில், அவர்களுடைய சம்பளத்தில் 25 சதவிகிதம் வீட்டு வாடகையாகப் போய்விடுகிறது. அப்படிக் கொடுத்தும் கூட நிம்மதி கிடையாது. எங்கே வெளியே போகச் சொல்லி விடுவார்களோ என்ற பயம் இருந்துகொண்டிருக்கிறது. வீடு இல்லாத பிரச்னை தொழிலாளர்களை வாட்டிக்கொண்டிருப்பதைப் பார்க்கும் போது, 14 லட்ச ரூபாயில் எட்டு லட்ச ரூபாயை மிச்சப்படுத்துவது மாபெரும் பாவம். ஆகவே, உடனடியாக நம்மிடத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். எங்களுக்குச் சம்பளம் கூட அதிகம் தேவையில்லை, இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுத்தால் போதும் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாக வீட்டு வசதி செய்து கொடுக்க முன்வரவேண்டும்.

ஸ்டேட் ஹவுசிங் போர்டு, லோ-இன்கம், மிடில் இன்கம் க்ரூப்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தாலும், அதெல்லாம் ஏறக்குறைய அப்பர்மிடில் க்ளாஸ்தான் அனுபவிக்க முடியும். ஸ்லம் ட்வெல்லர்களுக்காகக் கட்டிக் கொடுக்கும் கட்டடங்களில் ஸ்லம் ட்வெல்லர்களைத் தவிர, மற்ற ஏழை எளியவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை. ஸ்லம்மிலே குடியிருந்தவர்களுக்கு மாத்திரம் என்று இல்லாமல், ஒரு பத்து சத வீதம் மிக ஏழையாக இருக்கிறவர்களுக்கும் கொடுக்கலாம் என்று ஒதுக்கி வைத்தால் இந்தப் பிரச்னையை ஓரளவு தீர்க்க முடியும்.

அடுத்து, பர்மா ரிபாட்ரியேட்ஸ் நம்மைக் காட்டிலும் அதிகமாக வீட்டுக்குக் கஷ்டப்படுகிறார்கள். பர்மாவிலிருந்து வந்தவர்கள் பிழைப்பில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வீடு வேண்டும் என்று ஹவுசிங் போர்டை அணுகினால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், "இது சேரி ஒழிப்புக்காகக் கட்டப்படும் வீடுகள், அதற்கு மத்திய அரசாங்கம் கடன் கொடுக்கிறது, அவர்கள் குறிப்பிட்ட ஒரு விஷயத்திற்காகக் கடன்

கொடுக்கும்போது, பர்மாத் தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க முடியாது" என்று சொல்லுகிறார்கள். ஆகையால், பர்மா தமிழர்கள் பிரச்னையைப் பார்க்கும்போது, பத்து ரூபாய் பதினெட்டு ரூபாய் வாடகையில் கட்டிக்கொடுக்கும் வீடுகளில் ஒரு ஐந்து சத வீதமாவது இவர்களுக்குக் கொடுக்க முன்வர வேண்டும். வாடகைக்குத்தான் அவர்கள் கேட்கிறார்கள். இப்படி ஒதுக்குவதற்குக் கூட முடியவில்லையென்றால், மிக மிகக் கஷ்டமான நிலைமையிலே அவர்கள் இருப்பார்கள் என்பதை நான் மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகையால், ஹவுசிங் போர்டுக்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு உத்தரவு பிறப்பித்து, அங்கங்கே கட்டப்படுகிற வீடுகளில் 5 சத விகிதம் அல்லது 10 சத விகிதம் இப்படிப்பட்ட மக்களுக்காக நாம் ஒதுக்கித் தரவேண்டும் என்று யோசிப்போமானால், மிக அத்தியாவசியமான பிரச்னையைத் தீர்க்க முடியும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. ஆர். செங்காளியப்பன் : கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67-ம் ஆண்டு தொழிலாளர் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

இன்று நாட்டிலே பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் முன்பே இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், ஆறு, ஏழு மாதங்களாகியும்கூட, பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய கஷ்டங்கள் இன்னும் நம்மால் தீர்க்கப்பட முடியவில்லை. பஞ்சாலைத் தொழிலை எடுத்துக்கொண்டு பார்த்தால், நிறைய லாபம் சம்பாதித்த ஆலை முதலாளிகளெல்லாம், இன்றைக்கு ஏதோ ஒரு நெருக்கடி வந்துவிட்டது, ஏதோ லாபத்தில் கொஞ்சம் குறைந்துவிட்டது என்ற காரணத்திற்காக இன்று ஒவ்வொரு ஆலையாக மூடிக்கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். ஆனால், லாபம் வந்தபோது, அவர்கள் அதைத் தங்களுடைய சொந்தத்திற்கு உபயோகப்படுத்திக்கொண்டும், தனிப்பட்ட முறையில் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்திக் கொண்டும், பல புதிய சொத்துக்களைச் சேர்த்துக்கொண்டும் இருந்துவிட்டார்கள். ஆனால், இன்று நஷ்டம் வந்துவிட்டது என்ற காரணத்திற்காக ஆலைகளை மூடிக் கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். அவர்களிடத்தில் நேரில் சென்று பேசும்போது அவர்கள், "எங்களுடைய சொத்துக்களெல்லாம் எங்களுடைய குடும்பச் சொத்துக்கள். ஆனால், ஆலையில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, எங்களுடைய சொந்தச் சொத்தை அதிலே போட்டு நடத்த முடியாது" என்று கூறுகிறார்கள். நாம் இந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஆலை முதலாளிகள் எத்தனை வசதி உள்ளவர்களாக இருந்தார்கள், இன்று எப்படி அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் சொத்து வந்தது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆலையிலே இரண்டு மூன்று கணக்குகளை வைத்து, ஆலையிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களையும், அரசாங்கத்தையும் ஏமாற்றி பல வழிகளிலே சம்பாதித்த பணத்தைத்தான் அவர்கள் தங்களுடைய தனிச் சொத்து என்று கூறுகிறார்கள். ஆனால், தொழிலாளர்கள் கஷ்டப்படும் நேரத்தில், இன்று எப்படியாவது மில்லை நடத்தவேண்டும், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்கும்போது, 'எங்களால் நடத்த முடியாது' என்று கூறுகிறார்கள். இந்த நேரத்தில் தான் அரசாங்கம் நல்ல முறையில் கண்காணித்து, அந்த ஆலைகளையெல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். இன்று பக்கத்திலே இருக்கும் மகாராஷ்டிர மாநிலத்தில் மூன்று நான்கு மில்களை அந்த அரசாங்கம் ஏற்று நடத்துகிறார்கள். ஒரு மில்லை அரசாங்கம் 45 லட்சம் ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கி நல்ல முறையில் அந்த ஆலையை நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால், நம்முடைய அமைச்சர் அவர்களை இந்த மன்றத்தில் ஒரு கேள்வி கேட்டு, அதற்கு அவர்கள் பதில் சொல்லும்போது, "மோசமான மில்லை நாம் எடுத்துக்கொள்ள முடியாது" என்று கூறுகிறார்கள். அதே நேரத்தில், புதிய மில்களுக்கு லைசன்ஸ் கொடுக்கிறோம். புதிய மில்லுக்கு லைசன்ஸ் கொடுக்கும்போது, கட்டடத்திற்குப் பணம் செலவழிக்கிறோம். மெஷினரிக்குப் பணம் செலவழிக்கிறோம். மூலதனத்திற்கும் பணம் கொடுக்கிறோம். மற்ற சலுகைகளும் கொடுக்கிறோம். ஆனால், அதைக் காட்டிலும், பழைய மில்களை எடுத்துக்கொண்டால் கட்டடம் புதிதாகக் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. மெஷினரி வாங்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு பத்து, இருபது லட்சம் பணம் போட்டால் ஆலையை நல்ல முறையில் நடத்த முடியும். ஆனால், அந்தப் பணத்திற்கு உத்தரவாதம் யார் என்று கேட்கலாம். ஆனால் அரசாங்கத்தின் கண்ட்ரோலில் வைத்துக்கொண்டு, அந்த ஆலை அதிபர்களையே அதில் டைரக்டர்களாகப் போட்டு, அரசாங்கக் கண்ட்ரோலில் நடத்தினால் நிச்சயமாக எதிர்காலத்தில் நல்ல லாபத்தைச் சம்பாதிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு தொழிற்சங்கம் ஆதரவு கொடுக்கத் தயாராய் இருக்கிறது. அந்த ஆலைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டால், அதற்கு நல்ல முறையில் ஆதரவு கொடுப்பதற்குத் தொழிற்சங்கங்கள் தயாராயிருக்கின்றன என்று நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ளுகிறேன்.

இதுவரை சர்க்காருடைய சட்ட திட்டத்திற்கு உட்பட்டு தொழிலாளர்களுக்கு இவ்வளவு தான் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று வரையறுக்கப்பட்டு வந்தது. அந்தச் சம்பளத்தில் 30 சத விகிதத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டும் என்று சில ஆலைகளில் நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். நாங்கள் கூற விரும்புவது இதுதான். தொழிலாளர்களும் தங்களுடைய வேலையை 30 சத விகிதம் குறைத்துக்கொள்வோம் என்று சொல்வார்களானால் இன்று அரசாங்கமோ அல்லது ஆலை முதலாளிகளோ ஒத்துக் கொள்ளத் தயாராயிருக்கிறார்களா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். ஆகையால், இப்படி ஆலை முதலாளிகள் எடுக்கும்படியான நடவடிக்கைகளை உடனடியாகத் தவிர்த்தாகவேண்டும். ஆறு மாத காலம் ஆகிவிட்டது. இந்தப் பிரச்னையை நாம்

இன்னும் தீர்க்க முடியவில்லையென்றால், ஆலைத் தொழிலாளர்களுடைய நிலைமை எப்படி இருக்கும் என்பதை நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கூட்டுறவு ஸ்டோர் ஆங்காங்கு இருக்கிறது. மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கிடையாது. தொழிலாளர் கூட்டுறவு ஸ்டோர்ஸும், கூட்டுறவு பாங்கும் மூடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுடைய பணத்தையும் பாங்கிலிருந்து எடுத்து அவர்கள் ஆலைக்குப் போட்டுச் செலவழித்துவிட்டோம் என்று முதலாளிகள் கூறுகிறார்கள். ஆலைதான் மூடிக் கிடக்கிறது என்றால், ஸ்டோர்ஸிலும் நல்ல முறையில் ரேஷன் அரிசி கிடையாது. கூட்டுறவு பாங்கில் கடன் கொடுத்தாவது அதை வாங்கி ஓரளவு தொழிலாளர்கள் காலம் தள்ளலாம். அந்த நிலைமை கூட இப்பொழுது இல்லை. இதையெல்லாம் அரசாங்கம் உடனடியாகக் கவனித்து நல்ல முறையில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஸ்பின்னிங் டிபார்ட்மெண்டில் சிக்கனச் சீரமைப்பு அமல் நடத்தப்பட்டு, இன்று அவர்கள் அதிகச் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதர டிபார்ட்மென்டில், ப்ரிபரேடரி செக்ஷனிலும் சிக்கனச் சீரமைப்பு அமல் நடத்தி நல்ல முறையில் சம்பள உயர்வு பெறவேண்டும் என்பதற்காக டெபுடி கமிஷனர் அவர்களை நியமித்தார்கள். ஆனால், ஏழெட்டு மாத காலம் ஆகியும் கூட, கிணற்றில் போட்ட கல்லைப் போல இருக்கிறது. எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அதிலும் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பிரச்னையை முடித்துக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தனியார் துறையில் இருக்கும் தொழிற்சாலைகள்தான் இப்படி இருக்கின்றன என்றால், அரசாங்கத் துறையிலே வேலை செய்யக்கூடிய தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய உரிமை அங்கிருக்கும் அதிகாரிகளால் பறிக்கப்படுகிறது. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் ஸ்தாபனத்தார் தொழிலாளர்களுக்காக ஆஸ்பத்திரி வைத்து நடத்துகிறார்கள். அந்த ஆஸ்பத்திரியில் தொழிலாளர்களுடைய குடும்பத்தினருக்கும் நல்ல முறையில் வைத்தியம் செய்யப்படுகிறதா என்றால் இல்லை. இன்று அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் குடும்பங்கள் அத்தனை பேர்களுக்கும் வைத்தியம் செய்யப்படுகிறது. சாதாரண ஒரு தொழிலாளியினுடைய விட்டு பிரசவ கேஸ் என்றால் "இங்கே வைத்தியம் செய்ய முடியாது. வெளியே கொண்டு போங்கள்!" என்று சொல்லிவிடுகிறார்கள். அந்த பிரசவ கேசுக்காக வெளியில் செல்வது என்றால் 300 ரூபாய்க்கு மேல் செலவாகும். 100 அல்லது 150 ரூபாய் சம்பளக்காரன் தம்முடைய இரண்டு மாதச் சம்பளத்தை அதற்காக ஒதுக்கவேண்டியிருக்கிறது. இப்படி அங்கு இருக்கக் கூடிய அதிகாரிகள் செய்கிறார்கள். இதையும் கவனிக்கவேண்டும்.





அதுபோலவே அங்கு பள்ளிக்கூடம் நடைபெறவேண்டும் என்று அரசாங்கம் செய்திருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் அங்குள்ள அதிகாரிகளுடைய குழந்தைகள் தாம் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. ஏழைத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் என்றால் இடமளிக்கப்படுவதில்லை. அதனால் இவர்களுடைய குழந்தைகள் வெளியில் சென்று படிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலையையும் போக்கியாக வேண்டும்.

அதுமாத்திரம் அல்ல. லிக்னைட் ப்ராஜெக்டை எடுத்துக் கொண்டால் அங்கே மிகச் சிறப்பாக இயங்கி வருவது ஐ.என்.டி.யு.ஸி. தொழிற்சங்கமாகும். அதுதான் மெஜாரிடி தொழிற்சங்கம். அந்தத் தொழிற்சங்கத்தை உடைக்கவேண்டும் என்று கருதி அதிகாரிகள் பத்துத் தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்தார்கள். அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகக் கோரி லேபர் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றோம். அவர்களில் 7 தொழிலாளர்களைத் திரும்பவும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாக கோர்ட்டும் தீர்ப்பு அளித்தது. அந்த உத்தரவை வரவேற்று ஓர் ஊர்வலம் நடத்த இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்தது. உடனே அதிகாரிகள் தாசில்தாரிடம் சென்று 144 தடை உத்தரவு பெற்று வந்துவிட்டார்கள். அப்படித் தடை செய்யவேண்டிய காரணம் என்ன ? இந்தத் தொழிற்சங்கம் தேசப்பற்று கொண்டு சுதந்திரப் போராட்ட காலத்தில் ஆற்றியிருக்கும் பணிகள் குறைவானதா ? ரயில்வே வேலை நிறுத்தம் நடந்த காலத்தில் ரயில்களை நேரம் தப்பாமல் ஓட்டுவதற்கு அரசாங்கத்துடன் வேலை செய்தது. தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தம் நடத்த காலத்தில் தேசத்திற்கு விரோதமான செயல் என்பதாக—அந்த நேரம் தபால் பட்டுவாடா செய்யும் வேலையை ஏற்றுக்கொண்டது. இப்படி தேசிய உணர்வோடு நாட்டின் நலனையும், தொழிலாளர்களுடைய நலனையும் போற்றி வருகின்ற இந்தச் சங்கத்தின் ஊர்வலத்தையும், கூட்டத்தையும் நடைபெறவொட்டாமல் அதிகாரிகள் தடுத்திருக்கிறார்கள். அப்படியானால் எல்லோருக்குமே ஒருவிதமாக நடந்து கொள்கிறார்களா என்றால் இல்லை. அறிஞர் அண்ணா அவர்களை தொழிற்சாலைக்குள்ளேயே அழைத்து, அதிகாரிகள் தலைமையிலேயே கூட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அதிகாரிகள் அண்ணாவைப் பாராட்டுவதும், இவ்வளவு துணிவாக அதிகாரிகள் தம்மைப் பாராட்டுவதைக் கண்டு அண்ணா அதிகாரிகளைப் பாராட்டுவதும்—முத்தமிழ் மன்றம் என்ற பெயராலே நடைபெற்றிருக்கிறது. அரசாங்க அதிகாரிகளே இத்தகைய துணிவுடன் செயல்படுகின்ற நிலையை நாம் பார்க்கிறோம். இந்தக் கேவலமான நிலையைப் போக்கி—இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் ஸ்தாபனம் திறம்பட வேலைசெய்வதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகாரிகள் இவ்வாறு நடந்துகொள்வதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. து. ப. அழகமுத்து: கனம் தலைவர் அவர்களே, இன்றையதினம் கோரப்பட்டுள்ள தொழில், தொழிலாளர் நலன் என்கிற மானியத்திற்கு இரண்டு கோடியே, பத்தொன்பது லட்சம் கோரப்பட்டிருக்கிறது. இந்த மானியத்தின் மீது நான் கொடுத்த வெட்டுப் பிரேரணையையொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதிலே திட்ட வேலைக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஒரு கோடியாகும். இது நான்காவது திட்ட அபிவிருத்தி வேலைகளுக்காக. இந்தத் தொகை குறைவான தொகை என்பதை ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மானியத்தைப் பற்றி அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படுகிற குறிப்புக்களைப் பற்றி நான் சென்ற தடவையே சட்டமன்றத்தில் குறிப்பிட்டேன். இவ்வாண்டும் மிக்க காலதாமதமாக அதுவும் ஆங்கிலத்தில் குறிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மன்ற உறுப்பினர்களுக்கு உதவியாக இல்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் இந்த இலாகாவின் அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் 1962 வரை தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர அதற்குப் பின்னால் உள்ள ஆண்டுகளுக்குக் கொடுக்கப்படவில்லை. அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் கூடுமான வரை மிக அண்மையில் உள்ள ஆண்டுகளுக்குக் கொடுத்தால்தான் அங்கத்தினர்களுக்கு விவரங்களைத் தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும். இதைக் காலதாமதப்படுத்துவதற்குரிய காரணம் என்ன என்பது தெரியவில்லை.

இந்த மானியத்தின் கீழ் தொழிலாளர்களுடைய நலனை பாதுகாப்பதற்காக பல சட்டங்கள் இயற்றப்பட்டு, அவற்றைப் பரிபாலிக்கவும் பல அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். தொழிற்சாலைச் சட்டம், ஷாப் ஆக்ட், ஹோட்டல் தொழிலாளர்களுக்கான சட்டம் ஆகிய பற்பல சட்டங்கள் எல்லாம் தொழிலாளர்களுடைய நலனுக்காக ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. அவற்றைக் கண்காணிக்கவும் அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் வருமான அதிகாரிகளுக்கு ஆண்டுக்கு ஆண்டு வருமானத்தைக் கூட்டிக் கணக்கு காட்டுவது போல புள்ளி விவரங்களை அதிகப்படுத்திக் கூட்டிப்போடுகிற நிலைமை இருக்கிறதே தவிர உண்மையில் தொழிலாளர்களுடைய நலனை அதிகப்படுத்துவதாக இல்லை. இன்றைக்குத் தொழிற்சாலைகளும், வர்த்தக ஸ்தாபனங்களும் பெருகி வருகின்றன. அப்படிப் பெருகி வருவதற்கு ஏற்றவகையில் கண்காணிப்பும் அதிகப்படுமானால் தொழிலதிபர்கள் ஜாக்கிரதை உணர்ச்சியுடன் நடந்துகொள்வார்கள். அது இப்போது குறைவாக இருக்கிறது.

மோட்டார் தொழிலைப் பொறுத்தவரையில் இன்றைக்குப் பலவிடங்களில் ட்ரைவர்களையும், கண்டக்டர்களையும் டெம்பரரியாக வைத்துக்கொண்டிருக்கிற நிலைமையை தான் காண்கிறோம். தொழிலதிபர்களிடையே சட்டத்தை ஏமாற்றுகின்ற நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது.





அதுபோல, ஹோட்டல் தொழிலாளர் சட்டமும் சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை. தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளை முதலாளிகள் கவனிக்கின்ற நிலை சரியானபடி இல்லை. அதோடு மட்டுமல்லாமல் தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கு அடிக்கடி பெயர் மாற்றத்தைச் செய்கிற தந்திரத்தை முதலாளிகள் கையாண்டு வருகிறார்கள். அதைக் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஷாப் ஆக்டை எடுத்துக்கொண்டால் நகரத்தைப் பொறுத்தவரையில் ஓரளவு அமல்படுத்தப்படுகிறது என்றே எடுத்துக்கொண்டாலும் கிராமப் புறங்களில் அல்லது சென்னையைத் தவிர மற்ற நகரங்களில் சரியான முறையில் கண்காணிக்கப்படவில்லை. கடை சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய வசதிகள் கொடுக்கப்படுவதில்லை. இந்தச் சட்டத்தில் செக்ஷன் 25 1-ஆவது பிரிவுப்படி அவர்கள் 12 மாதம் வேலை செய்தால் சம்பளத்தோடு 12 நாட்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் அந்தச் சட்டத்தில் 'not exceeding 12' days என்று இருப்பதால் அதைப் பயன்படுத்திக்கொண்டு 12 நாட்களுக்குக் குறைவாகத்தான் லீவு கொடுப்போம் என்கிறார்கள். அதற்குப் பதிலாக 'not less than 12 days' என்று சட்டம் திருத்தப்பட்டால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சம்பளத்தோடு கூடிய ஓய்வு நாட்களையாவது அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதைச் சர்க்கார் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சட்டங்களைக் கண்காணிப்பதற்காக போடப்பட்டுள்ள லேபர் அதிகாரிகளுக்கு 200 ரூபாய் முதல் 270 வரை சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்பது "பே ஸ்கேல்" புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 180 ரூபாய்தான் கொடுக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அதற்கும் காரணம் என்ன என்றும் யோசிக்கவேண்டும். ஃபாக்டரீஸ் ஆக்ட் படி, ஃபாக்டரிகளைப் பார்வையிடுகின்ற இன்ஸ்பெக்டர்கள் ஓரளவு செய்து வருகிறார்கள் என்றாலும், சென்னையைப் பொறுத்தவரையில் தொழிலாளர் சங்கங்கள் ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்கள் கவனிப்பது கிடையாது என்று புகார் சொல்லக்கூடிய அளவு குறைபாடு என்னிடம் வந்தது. ஆகவே, இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் போக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும். தனியார் துறை ஸ்தாபனங்களைப் பொறுத்தவரையிலே பார்வையிடச் செல்லுகின்ற பார்வையாளர்கள், சர்க்கார் துறை ஸ்தாபனங்களுக்குச் செல்வது இல்லை. நம்முடைய சர்க்கார் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் ஒன்று வைத்து அதிலிருந்து பல தொழில்களை நடத்தி வருகிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு "ஸ்கேல் ஆப் பே" கிடையாது. இது முறைதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திருச்சியிலே ஃபார்ம் இப்ளிமென்ட்ஸ்களில் தற்காலிகக் கூலிகளை வைத்து வேலை வாங்குகிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரமாக்குவதற்கு வழிவகை செய்யவேண்டும். நிரந்தரம் ஆக்காம

விருப்பது முதலாளி மனப்பான்மையைவிட மோசமான மனப்பான்மையாக இருக்கிறது. இதை சர்க்கார் மாற்றவேண்டும். இதைத் தவிர மற்றொரு முக்கியமான பிரச்னையைப்பற்றிக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். எம்ப்ளாயீஸ் பிராவிடண்ட் பண்ட் ஆக்ட் என்ற சட்டத்தின் மூலமாகத் தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. 20 தொழிலாளர்களுக்கு மேல் இருக்கக் கூடிய ஸ்தாபனங்களாக இருந்தால் 5 ஆண்டுகள் வரை அந்த ஸ்தாபனங்கள் நடந்திருந்தால் அதை இந்தச் சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வார்கள். தொழிலாளர்களிடமிருந்து 6¼ சத விகிதம் பிடித்து—இப்பொழுது அதை 8 சத விகிதம் ஆக உயர்த்தி இருக்கிறார்கள்—அப்படிப் பிடிக்கப்படுகிற தொகையோடு சரிசமமாக முதலாளிகளும் அந்தத் தொகையைப் போட்டு 15 தேதிக்குள் ரீஜனல் பிராவிடண்ட் பண்ட் கமிஷனர் ஆபீசில் செலுத்தவேண்டுமென்று இருக்கிறது. இந்த சட்ட பரிபாலனத்தில் 1965-ஆம் ஆண்டில் வசூலான தொகை 6 கோடி 16 லட்சம் ரூபாய் என்றும், நிர்வாகச் செலவு 14 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் என்றும், பரிசோதனைச் செலவுகள் 2 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நிர்வாகத்திலே தவறுகள் இல்லையா? முதலாளிகள் ஒழுங்கான முறையில் கொடுக்கிறார்களா என்ற விளக்கம் இந்த குறிப்பிலே தரப்படவில்லை. எனக்குக் கிடைத்த தகவல்படி தவறுகின்ற முதலாளிகள் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். 200 தொழிலாளர்களைக்கொண்ட, மாதத்திலே 18 ஆயிரம் ரூபாய் இந்த பண்டுக்குப் பணம் கொடுக்கக்கூடிய ஒரு கம்பெனி சென்னையிலே இருக்கிறது. அந்தக் கம்பெனி 1962-லிருந்து 1964 வரை பிராவிடண்ட் பண்ட் பணத்தைத் தவறுதலாகவே கட்டிக் கொண்டே வந்தது. தவறாகக் கட்டினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம், அல்லது டேமேஜ் விதித்து பணத்தை வசூல் செய்யலாம். முதல் மாதத்திலே தவறினால் 2 சத விகிதம் டேமேஜ் வசூல் செய்யலாம். இரண்டாவது மாதத்திலே தவறினால் 5 சத விகிதம் டேமேஜ் வசூல் செய்யலாம். மூன்றாவது மாதத்திலே தவறினால் 10 சத விகிதம் டேமேஜ் வசூல் செய்யலாம். நான்காவது மாதத்திலே தவறினால் 15 சத விகிதம் டேமேஜ் வசூல் செய்யலாம். ஐந்தாவது மாதத்திலே தவறினால் 25 சத விகிதம் டேமேஜ் வசூல் செய்யலாம். இதன்படி அவர்கள் 2, 3 ஆண்டுகளுக்குக் கட்டவேண்டியது ரூ. 97,974.75 பைசா. நிர்வாகச் செலவுக்காக 2,203 ரூபாய். இந்தத் தொகையைக் கொடுக்கவேண்டுமென்று கமிஷனர், 1—2—1965-இல் எழுதி அனுப்பினார். ஆனால் அந்தக் கம்பெனியார் கமிஷனருக்குப் பதில் எழுதாமல் சர்க்காருக்கு, இந்தத் தொகையைத் தள்ளித்தரவேண்டுமென்று மனுக்கொடுத்தது. ஆனால் சர்க்கார் அந்த ஸ்தாபனம் மனுக்கொடுத்ததின் பேரில் என்ன பதில் கூறுகிறீர்கள் என்று கமிஷனருக்கு அனுப்பி வைத்தது. கமிஷனர் தள்ளித்தரமுடியாது என்று பதில் எழுதி விடவே சர்க்காரிலுள்ள ஜாயிண்ட் செக்ரட்டரி அந்த மனுவின் மீது The Regional Provident Fund Commissioner is informed that the request for the waiver of the damages in the above case has been rejected. உங்கள் அப்பீலை ஏற்றுக் கொள்வதற்கில்லை,





தள்ளுபடி செய்ய முடியாது என்று கம்பெனிக்கு உத்தரவு போட்டார்கள். அதற்குப்பின்னாலே அந்தக் கம்பெனியார் விடவில்லை. மீண்டும் 12—6—1965-ஆம் தேதியன்று சர்க்காருக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார்கள் அதன்மீது யார் தள்ளுபடி செய்யமுடியாது என்று உத்தரவு பிறப்பித்தாரோ அதே ஜாயிண்ட் செக்ரட்டரி அந்தத் தொகை வசூலிப்பதை நிறுத்தி வையுங்கள் என்று 16—6—1965-இல் கமிஷனருக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இந்தப் பணத்தை ஏன் தள்ளுபடி செய்யக்கூடாது என்று கமிஷனரை மறுபடியும் கேட்டிருக்கிறார்கள். அதன்மீது கமிஷனர் 22—7—1965-ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யக் கூடாது என்று திருப்பியும் பதில் எழுதியிருக்கிறார்கள். பிறகு 30—9—1965-இல் அந்த கம்பெனி டாமேஜாக தரவேண்டிய ஒரு லட்சம் ரூபாயில் 60 சத விகிதம் அதாவது அறுபதாயிரம் தள்ளுபடி செய்துவிட்டு 40 சத விகிதம் அதாவது நாற்பதாயிரம் பணத்தை வாங்கிக்கொள்ளுங்கள் என்று சர்க்கார் கமிஷனருக்கு உத்தரவு அனுப்பி இருக்கிறது. அந்தச் சலுகையைப் பெற்ற ஆசாமி யார் என்றால் மெட்ராஸ்—பெங்களூர் டிரான்ஸ்போர்ட் கம்பெனிக்காரர். பஸ் முதலாளிக்குச் சலுகை கொடுக்கிறார்கள் என்று நாங்கள் சொல்கிற நேரத்திலே குற்றம் கூறுகிறார்கள் என்று சொல்கிறவர்கள், ஒரு பஸ் முதலாளிக்கு இவ்வளவு சலுகைகள் கொடுக்கலாமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே இப்படித்தான் நிர்வாகம் நடந்துகொண்டு வருகிறது என்பதைக் கூறிக்கொண்டு, வேலைவாய்ப்புத் தருகின்ற ஸ்தாபனம் சரியாக நடைபெறவில்லை என்பதை முன்பே குறிப்பிட்டோம். அதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி நீண்ட நாட்களாக வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய ராஜ்யத்திலே தொழிலாளர்களுடைய நிலைமை கடந்த காலங்களிலே நல்ல முறையிலே அதிகமாக அன்ரெஸ்ட் இல்லாமலே இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் தற்போது அன்ரெஸ்ட் வரக்கூடிய நிலைமையை எடுத்துக்கொண்டு பார்த்தால் ஓரளவு அன்ரெஸ்ட் ஏற்படுமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. பல காரணங்களினாலே, வேலைக் குறைவினாலோ அல்லது பவர் கட்டினாலோ வேறு எந்தக் காரணம் என்று சொல்ல முடியாத அளவில், கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் சில பல ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பஞ்சாலை அதிபர்களுக்கு போதிய அளவு நிதி வசதியில்லாவிட்டால் அரசாங்கம் அவர்களுக்கு பைனான்ஸ் ரெய்ஸ் பண்ணிக்கொடுத்து பல உதவிகளைச் செய்துவருகிறது. லைசென்ஸ் போன்றவைகளையெல்லாம் கொடுத்து உதவிசெய்து வருகிறது. ரா மெட்டீரியல்ஸ் கிடைக்காவிட்டால் அதற்கு வேண்டிய வழிகளையும் செய்துகொடுக்கிறது. ஆனால் அவர்கள் இன்று அரசாங்கத்தைக்கூடக் கலந்து கொள்ளாமல் நினைத்துக் கொண்டால் நிறுத்திவிடுவது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இஷ்டப்பட்டால் நிறுத்திவிடலாம் என்ற நிலைமையைப்

[திரு. வை. சங்கரன்] [9th March 1966

பார்த்து அரசாங்கம் வாளா இருந்துவிட கூடாது. இன்னொரு அடிப்படையையும் நாம் பார்க்கவேண்டும். நம்முடைய அரசாங்கம் சோஷலிஸத்தை இலட்சியமாகக் கொண்ட அரசாங்கம். அந்த நிலையிலே வேலைவாய்ப்புக்களை அதிகப் படுத்திக் கொடுக்கவேண்டிய நிலையிலே இன்றைக்கு ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையைவிட்டு தெருவிலே நிற்கும் படியான நிலைமை ஏற்பட்டிருப்பதைக் கண்டு நாம் வாளா இருக்க முடியாது. ஒரு பழமொழி சொல்வார்கள், இருக்கின்ற கோயில் களிலே விளக்குகள் எரியாமல் இருக்கும்பொழுது, புதிய கோயில்கள் கட்டிக்கொண்டு போவது என்று. அதேபோல தான் இன்று அரசாங்க நடவடிக்கை இருந்து வருகிறது. அரசாங்கம் புதிய ஸ்பின்னிங் மில்களைக் கட்டுகிறது. அது தவறு என்று நான் சொல்லவில்லை. அவைகளை அதிகப்படுத்த வேண்டியதுதான். ஆனால் ஏற்கனவே உள்ள பஞ்சாலைகளில் உள்ள தொழிலாளர்களை ஏன் குறைக்கவேண்டும் நிறுத்தவேண்டும் என்பதைப் பரிசீலித்து வேலை அளிக்கவேண்டும். அரசாங்கம் எடுத்துக்கொள்ளுவதானால் மேனேஜிரியல் ரெஸ்பான்ஸ்பிலிட்டி மட்டும்தானே இருக்கிறது. அதை கண்ட்ரோலர் போட்டு எடுத்துக்கொள்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அது இயலாவிட்டால் மத்திய கவர்ன்மெண்ட்டில் இதற்காக இண்டெஸ்ட்ரியல் டெவலெப்மெண்ட் ரெகுலேஷன் ஆக்ட் இருக்கிறது. அதன்கீழே இதை ஆராய்ந்து, நியாயமான காரணத்திற்காகத்தான் நிறுத்தப்பட்டிருக்கிறதா என்பதைப் போன்ற விவரங்களையெல்லாம் ஆராய்ந்து பாதிக்கப் பட்ட தொழிலாளர்களுக்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூடிய சீக்கிரத்திலே தொழிலாளர்களுக்கு மறுபடியும் வேலை கொடுப்பதற்குப் போதிய வழிகளை எல்லாம் அரசாங்கம் செய்துகொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

10-30 a.m. இன்றைக்கு சிலபல எஞ்சினியரிங் இண்டஸ்ட்ரீஸ், பர்டிலைசர் இண்டஸ்ட்ரீஸ், கெமிகல் இண்டஸ்ட்ரீஸ், போன்றவற்றுக்கு ரா-மெட்டீரியல்ஸ் போதுமான அளவு கிடைக்காத. காரணத்தால் தொழிலாளர்களைக் கணிசமான அளவு குறைத்துவிடும் நிலைமை ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கிறது. அவற்றுக்குப் போதுமான அளவு ரா-மெட்டீரியல்ஸ் பெற்றுத் தருவதற்கு ராஜ்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்; அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனை எடுத்துக் கொண்டால், 85 எஞ்சினியர்களையும், சூப்பர்வைசர்களையும் எடுத்து விட அவர்களுக்கு ரிட்ரென்ச்மெண்ட் நோட்டீஸ் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. மேலும் நூற்றுக்கணக்கான பேர் ரிட்ரென்ச் செய்யப்படுவார்கள் என்றும் தெரிகிறது. ஒரு பக்கத்தில் அதிகமாக எஞ்சினியரிங் கல்லூரிகளை ஏற்படுத்தி மேலும் மேலும் எஞ்சினியர்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். நமது ராஜ்யத்தில் உள்ள பெரிய சென்ட்ரலி ஸ்பான்சர்டு ஸ்கீம்களில் ஏற்கனவே வேலையில் இருப்பவர்களையே ரிட்ரென்ச்மெண்ட்



9th March 1966] [திரு. வை. சங்கரன்]

செய்யும் நிலைமை இருக்கிறது. ஒன்றுக்கொன்று பொருந்தாத நிலை இருக்கிறது. அந்த நிலை மாற போதிய வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரியில் ஸ்பின்னிங் செக்ஷனைத் தவிர, மற்ற எல்லா டிப்பார்ட்மெண்ட் ரெஷனலைசேஷனுக்காக ஒரு ஸ்பெஷல் ஆபீசர் போடப்பட்டிருப்பதாகப் பக்கம் 12-ல் கூறப் பட்டிருக்கிறது. The Government have therefore appointed a Special Deputy Commissioner of Labour in their Order No. (MS.) 3106, Department of Industries, Labour and Co-operation, dated 19th June 1965 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஓராண்டுக் காலம் ஆகிறது. வரையறை காலம் முடியப் போகிறது. கொடுக்கப்பட்ட வேலைகள் செய்யப்படவில்லை என்று அறிகிறேன். அவர்களுக்கு என்ன வேலை கொடுக்கப்பட்டதோ அதிலே இம்மி கூட நடக்கவில்லை என்று தொழிற்சங்கங்கள் மூலமாக அறிகிறேன். காலம் முடியும் நிலையிலும் வேலை நடக்காததன் காரணம் என்ன என்று கவனிக்க வேண்டும்.

'நியூ சீரிஸ் ஆஃப் கன்ஸ்யூமர் பிரைஸ் இண்டெக்ஸ்' தயாரிப்பதற்காக ஒரு ஆபீசரைப் போட்டிருக்கிறார்கள். ஏற்கனவே, இண்டெக்ஸ் தயாரிக்கும் பழைய முறையில் குறைபாடுகள் இருந்தன. 1939-ம் ஆண்டை பேஸிஸ் ஆக வைத்துத் தயாரிக்கும் போது, சோளம், ராகி போன்றவற்றை உபயோகிப்பதற்குப் பதிலாக அரிசியை உபயோகித்துக் கொண்டிருந்த நிலை ஏற்பட்டு அதனால் சில தவறுகள் ஏற்பட்டன. தற்போது 1960 பேஸிஸில் தயாரிக்கப்படும் என்று நினைக்கிறேன். அப்படித் தயாரிக்கும் போது இதுபோன்ற குறைபாடுகள் மறுபடியும் ஏற்படக்கூடும். பழைய தேவையை மட்டும் வைத்துப் பார்க்காது இன்றைக்குள்ள தேவை என்ன என்று பார்த்து அதற்கு தற் போதிய மதிப்பை கணித்து காஸ்ட் ஆஃப் லிவிங் இண்டெக்ஸ் நம்பரைத் தயார் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

இ.எஸ்.ஐ. தற்போது 36 ஊர்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கோயில்பட்டி, மணப்பாறை சேர்க்கப்படவில்லை. முக்கிய நகரங்களிளெல்லாம் ஃபாமிலிக்கு எக்ஸ்டென்ட் பண்ணவில்லை. சீக்கிரத்தில் ஃபாமிலிசுக்கு எக்ஸ்டென்ஷன் செய்ய வழி வகைகளைச் செய்யவேண்டும்.

இ.எஸ்.ஐ. டிஸ்பென்சரீஸ் இன்றைக்கு ராஜ்யத்தில் பல இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. ஹாஸ்பிடல் இன்னும் முக்கியமானது. மதுரையில் இ.எஸ்.ஐ. ஹாஸ்பிடலுக்காக இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாண்டு காலமாக பூர்த்தியாகாமல் இருக்கிறது. நான்கு டிஸ்பன்சரிகள் அங்கு சில மாதங்களுக்குள்ளாகவே கட்டி முடிக்கப்பட்டு விட்டன. அதைப் பாராட்ட வேண்டும். ஆனால் ஹாஸ்பிடல் கட்டும் வேலை இன்னும் கணிசமான அளவுக்குக் கூட வரவில்லை. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காக டி.பி. சானடோரியத்தில் தனியாகவே ஒரு வார்டு ஒதுக்கப்பட்டாலும், இன்ஷூர்டு பர்சன்ஸ் என்ற ரைட் அவர்களுக்கு இருப்பதால் தனியாகவே அவர்களுக்காக ஒரு டி.பி. சானடோரியம் இருந்தால் கால தாமதத்திற்கு இடம் இல்லாமல், அதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதைத் தவிர்த்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வசதி ஏற்படும். அதிகமான நிதி வசதி இருப்பதால் லேபரர்களுக்கு என்று தனியாக ஒரு டி.பி. சானடோரியத்தைக் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும்.

இம்ப்ளிமென்டேஷன் ஆப் அவார்ட்ஸ் பொறுத்து எடுத்துக் கொண்டால், 'நான்-இம்ப்ளிமென்டேஷன்' தான் அதிகமாக இருக்கிறது. மதுரையில் ஃபிரூக்ள் போட்டோ கம்பெனி என்ற ஸ்தாபனம் இருக்கிறது. ரிட் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆன பிறகும் கூட அங்கு அவார்டை இம்பிளிமெண்ட் பண்ணவில்லை. இது போன்ற கேஸ்கள் இருந்து கொண்டிருக்கின்றன.

லேபரர்ஸ், எம்ப்ளாயர்ஸ் இடையே சுமுகமான நிலைமைகள் உருவாக ஒர்க்ஸ் கமிட்டி ஃபார்ம் பண்ண வேண்டுமென்று கூறி யிருப்பது நல்ல ஒரு முறையாகும். இதைப் பற்றிப் 15-ம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. அசோக் லேலண்டு ஸ்தாபனம், சிம்ப்ஸன் ஸ்தாபனம் ஆகியவற்றில் கூட இன்னும் ஒர்க்ஸ் கமிட்டி ஃபார்ம் ஆகவில்லை என்று கூறப்படுகிறது. சீக்கிரத்தில் அங்கெல் லாம் ஒர்க்ஸ் கமிட்டி ஃபார்ம் செய்ய வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஃபேர் வேஜஸைப் பற்றி 16-ம் பக்கத்தில்—

The Government of India have constituted Wage Board for Engineering Industry and Port Workers in Major Ports.

என்று செல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு சென்னை ராஜ் யத்தைப் பொறுத்தவரை ஸ்டீவர்டு கம்பெனிகள், கப்பல் ஏஜன்ட் ஸ்தாபனங்கள் ஒன்றுகூட இண்டரிம் வேஜ் போர்டு சிபாரிசை இம்ப்ளிமென்ட் செய்யவில்லை. வேஜ் போர்டு சிபாரிசை இவை உடனே இம்ப்ளிமென்ட் செய்வதற்கு சீக்கிரத்தில் ஏற்பாடு செய்யவேண்டும்.

கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்களையும், ஃபேர் பிரைஸ் ஷாப்புகளையும் 300 தொழிலாளர்களுக்கு மேல் இருந்தால் அமைப்பதற்கு எம்ப்ளாயிஸ் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பல இண்டஸ்ட்ரியல் எஸ்டாபிளிஷ்மென்ட்ஸிலிருந்து அதற்கு வேண்டிய இட வசதியோ, ஸ்டாஃபோ, மற்ற வசதியோ போதுமான அளவு கொடுக்கப்படவில்லை. ஆகவே; இந்த ஸ்கீமை நல்ல முறையில் பூரணமாக நிறைவேற்ற முடியவில்லை. இண்டஸ்ட்ரியல் எஸ்டா- பிளிஷ்மென்ட் வைத்திருப்பவர்கள் எல்லாம் பூரணமாக ஒத்துழைப்புக் கொடுத்து கட்டட வசதிகள், மற்ற வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும். அட்ஜூடிகேஷன் ரெஃபர் பண்ணு வதிலே காலதாமதம் ஆகிறது. அதையும் கவனிக்கவேண்டும்.





நேஷனல் அண்டு ஃபெஸ்டிவல் ஹாலிடேஸ் ஆக்டில் காந்திஜி பிறந்த நாளான அக்டோபர் மாதம் 2-ம் நாள் சேர்க்கப்பட்டிருக் கிறது. ஆனால் கேட்டரிங் எஸ்டாப்ளிஷ்மென்ட் ஆக்டிலே அது சேர்க்கப்படவில்லை. "மகாத்மாஜி பர்த் டே" ஆன அக்டோபர் மாதம் 2-ம் தேதியை பிந்திய ஆக்டிலும் ஹாலிடேயாகக் கொண்டு வரவேண்டும். பாக்டரி ஆக்டில் 240 நாள் இருந்தால்தான் லீவ் வசதி உண்டு என்று இருக்கிறது. அந்த 240 நாட்களில் தேசிய விடுமுறை நாட்களான 8 நாட்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மாச் பாக்டரி சம்பந்தமாகக் குறிப்பாகச் சொல்ல விரும்பு கிறேன். சட்ட மன்றத்திலும் ஏற்கனவே கூறியிருக்கிறேன். ரா-மெட்டீரியல்ஸ் கிடைக்காத காரணத்தால் அந்தத் தொழில்கள் மூடப்பட்டு வருகின்ற நிலை இருக்கிறது. பல மூடப்படும் தறுவாயில் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து வருகிறார்கள். சிவகாசியில் மாச் பாக்டரி மூடப் பட்டது; சாத்தூரில் மூடப்பட்டது. திருநெல்வேலியில் மூடப் பட்டது என்று வாரா வாரம் பேப்பரில் பார்க்கிறோம். சர்க்கார் ரா-மெட்டீரியல்ஸ் கிடைக்க ஏற்பாடு செய்வதாகப் பதில் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் வேலை இழந்து கொண்டே இருக்கும் நிலைமை இருக்கிறது. இனி இது போன்ற தொழில்களிலே தொழிலாளர்கள் பெருமளவு பாதிக்கப்படக் கூடிய காரணத்தால் ரா-மெட்டீரியல்ஸ் கிடைப்பதற்குப் போதிய கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ரா-மெட்டீரியல்ஸ்ஸை உற்பத்தி செய்ய தொழிற்சாலை அமைத் தாவது அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்படியான நிலைமையை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சோஷலிச லட்சியத்தோடு செயல்பட வேண்டுமென்று சொல்லும் போது யாரும் வேலை இழந்து நிற்கக் கூடிய நிலைமை ஏற்படாமல் அரசாங்கம் கவனித்து தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆ. தங்கவேலு : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே கனம் முதலமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தொழிலாளர்கள் நலன், தொழிற்சாலைகள் என்ற மான்யத்தின் மீது, நானும் என்னுடைய கட்சிக்காரர்களும் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். பொதுவாக தொழிலாளர்கள் தான் இந்த நாட்டின் முதுகெலும்புகள். அவர்களுடைய வாழ்வு ஓரளவு வளம் பெறுவதற்கு அரசாங்கம் சரியான முறையில் சட்டங்கள் இயற்றப்பட்டதாகத் தெரியவில்லை. இதோடு இயற்றப்பட்டிருக் கின்ற சட்டங்களும் சரியான முறையில் நடத்தப்படுவதாக தெரிய வில்லை. குறிப்பாக, மோட்டார் தொழிலாளர்களுக்கு 1961-ல் மத்திய சர்க்காரில் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் நம்முடைய மாநில சர்க்கார் அதை 1965 டிசம்பரில்தான் அமலுக்கு கொண்டு வந்தது. பெயரளவுக்கு வந்ததே தவிர நடைமுறையில் துரித மாக அமல் நடத்தப்படுகிறதா என்று பார்த்தால் அவ்விதம்

என்று காலவரம்பு நிர்ணயித்தால் ஒழிய இதில் எந்தவிதமான பயனும் கிடையாது. தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களுக்கு இப்போது லேபர் ஆபீசர் திருச்சியில் இருக்கிறார். இவர் கீழ் நாலைந்து ஜில்லாக்கள் இருக்கின்றன. லேபர் ஆபீசர் தென் ஆற்காடு மாவட்டத்திற்கு வருவது என்றால் இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை தான் வருகிறார்; அதிலும் அவர் வருகின்ற இடம் கடலூரோ, விருத்தாசலமோ ஆக இருக்கும். திண்டிவனத்திலிருந்து தொழிற்சங்கங்களை நடத்தும் எங்களைப் போன்றவர்கள் அங்கு போய் பார்க்க முடியாது. முதலாளிகள் எங்கு வந்தாலும் அவர்கள் போய் பார்த்துக்கொள்வதற்கு வசதியிருக்கிறது. அவர்களுக்கு எந்த இடத்தில் ஆபீசர் வந்தாலும் போய் பார்த்துக்கொள்வார்கள். அதற்கு வேண்டிய வசதியும் இருக்கிறது. ஆனால் தொழிற்சங்கங்கள் நடத்தும் எங்களுக்கு அந்த அளவுக்கு அதிகமான தூரத்தில் போய் வழக்குகளை கவனிப்பதற்கு வசதியில்லை. இதன் காரணமாக காலதாமதம் ஏற்படுகிறது. ஏராளமான வழக்குகள் நின்று விடுகின்றன. சென்ற ஆண்டு பட்ஜெட் விவாதத்தின் போதும் சொன்னேன். தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களுக்கு சேர்த்து தனியாக ஒரு லேபர் ஆபீசரை போட்டுவிட்டால் தொழிலாளர்களுக்கு மிக வசதியாக இருக்கும். ஏற்கனவே தென் ஆற்காடு மாவட்டம் சென்னையோடு சேர்ந்திருந்த காலத்தில் லேபர் ஆபீசர் மாதத்திற்கு ஒரு தடவை வந்து கொண்டிருந்தார். அங்குள்ள தொழிலாளர்களுக்கும் ஓரளவுக்கு சீக்கிரமாக நியாயம் கிடைத்துக்கொண்டிருந்தது. இப்போது அதிக காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களுக்கு சேர்த்து ஒரு லேபர் ஆபீசரை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மான்யத்தில் கேட்டிருக்கும் 2 கோடி 19 லட்சத்து 16 ஆயிரத்து 200 ரூபாய் தொழிலாளர் துறைக்கும், தொழிலாளர் நலனுக்கும் போதாது. தொழிலாளர் நலனை இன்னும் நல்ல முறையில் கவனிப்பதற்கு இன்னும் அதிகமாக அதிகாரிகளை நியமித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கு இந்தத் தொகை போதாது, இன்னும் அதிகமான தொகை ஒதுக்கி இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் தொழிலாளர்களின் நலனை கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது நம் முன் கனம் முதல் அமைச்சர் அவர்களாலே சமர்ப்பிக்கப் பெற்றிருக்கிற, சுமார் ரூ. 2 கோடிக்கு உரிய தொழிலாளர்-தொழிற்கூடம் பற்றிய மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைப் புலப்படுத்த நான் முன் வருகிறேன்.

இந்தத் துறை தமிழகத்தின் மிக இன்றியமையாத பாட்டாளி மக்களையும் அவர்களை வேலை வாங்குகிற தொழிற்கூடங்களையும் பற்றிய ஒரு துறை. இதைக் கவனிக்கிறபோது தொழிலாளர்கள், உற்பத்தி, தேச மக்கள், அவர்களுடைய தேவை, பண்டங்களின் தரம், விலையில் குறைவு ஆகிய எல்லாவற்றையும் கணித்து நம் கவனத்தைச் செலுத்தவேண்டும். இப்படிக் கருதி அல்லது சிந்தித்துப் பார்க்கிற நேரத்திலே, இன்றைய நம்முடைய தேச நிலையையும் மனத்திலே கொண்டு பார்ப்போமானால், இன்று இருக்கிற நிலையிலே, இந்த வேலை நேரக் கட்டுப்பாடுகள் போன்றவை இருப்பது நன்மை பயக்க இல்லை என்பதை நாம் உணருவோம். தேசத்தின் தொழில் உற்பத்தி அளவுக்கும், அல்லது தரத்திற்கும் கூட இது உதவி செய்ய இல்லை. அன்றியும், ஆற்றலும், வாய்ப்பும் உள்ள தொழிலாளர்களுக்கு உழைப்பின் மூலமாக மேலும் அதிகத் தொகையை ஈட்டலாம் என்பதற்கும் இது குறுக்கீடாக அமைந்து கிடக்கின்றது என்ற உண்மையையும் நாம் மறுத்து விடுவதற்கோ அல்லது மறந்து விடுவதற்கோ இல்லை. உண்மையிலேயே பண்டத்தின் தரம் உயரவேண்டும்; அதே காலத்திலே உற்பத்தியும் பெருக வேண்டும். அதே நேரத்திலே விலையும் வாங்கும் சக்திக்கு உட்பட்டதாக அமையவேண்டும். மேலாகப் பார்க்கிறபோது இது ஏதோ ஒரு கனவு மாதிரிக் கூடத் தோன்றலாம். ஆனால், பிற நாட்டுத் தொழில் துறை, உற்பத்தி இவற்றையெல்லாம் ஆழ்ந்து, ஆய்ந்து காண்கின்றபோது, இந்த நிலைமை நமக்கு எளிதான, சாத்தியமாகக்கூடிய ஒன்றுதான் என்பது புலப்படும். அங்கே தொழிலாளர்களுக்கு இருக்கிற உரிமை, அதை விட வேலை நேரக்கட்டுப்பாட்டின்மை, அதிலும் இந்த தேசத்திலே இன்று இருக்கிற நிலையிலே வேலை நேரக் கட்டுப்பாடு முதலியவற்றாலே உற்பத்தி பெருகுவதற்கு வாய்ப்பில்லாத நிலை, சில உற்பத்திகள் பெருக வேண்டாத நிலையிலே கூட நமக்குப் போதியதாக இருக்கலாம், சில உற்பத்தித் துறைகளிலே அளவும் பெருக வேண்டிய நிலையிலே இருக்கும், தரத்தையும் உயர்த்த வேண்டிய நிலையிலே இருக்கும். இதையெல்லாம் மனத்திலே கொண்டு விருப்பு வெறுப்பின்றி கணிக்கத் தொடங்குவோமானால், இந்த வேலை நேரக் கட்டுப்பாடு தேவையற்றது, இது நல்ல பயன் அளிக்காதது என்ற முடிவுக்கு நாம் மிக எளிதில் வரக் கூடும். வேலை நேரக் கட்டுப்பாடு ஏதோ ஒரு சட்டம் போல் இருக்கிறதே அன்றி அது தொழிலாளிக்கும் அவன் விரும்புகிற அளவுக்குப் பயனை அல்லது நன்மையைத் தர இல்லை. தொழிற்கூடங்களும் தம்முடைய ஆற்றலுக்கு ஏற்ற வகையில் பணி புரிய முடியவில்லை. இதையெல்லாம் மனத்திலே கொண்டு இந்த வேலை நேரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி விடுவது —சில இடங்களிலே கொஞ்சம் தளர்த்தியும் காணப்படுகிறது, எங்கும் இந்த மாதிரியான நியதி அல்லது நிர்ப்பந்தம் இல்லாத நிலையை உண்டாக்கி விடுவது—எல்லாத் துறையிலும், பொருளாதாரம், உற்பத்தி, தேவையைப் பூர்த்தி செய்தல், தொழிலாளிக்குப் போதிய ஊதியம், இப்படிப் பல்வேறு வகையினாலும் அது நிறைந்த பலனைத் தரும் என்ற கருத்தை முதற்கண் புலப்படுத்திக் கொள்கிறேன்.

அடுத்து, தொழில் துறையிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களை இன்னும் நாம் பொறுப்பும், மதிப்பும் உடையவர்களாக ஆக்க வழிவகைகளைச் செய்யவேண்டும். அது அரசின் தலையாய

கடமை. ஒரு தொழிலைப் பற்றிச் சொல்லுகிற போது ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் தொழில் துறை நிபுணர்கள் "மென், மெட்டீரியல், மணி அண்ட் மானேஜ்மென்ட்" என்று. நான்கு எம்-கள் —ஃபோர் எம்ஸ்— என்று கூடச் சொல்லுவார்கள். தொழிலுக்கு மனித சக்தி இன்றியமையாதது; அதற்கு அடுத்தபடியாக, மூலப் பண்டம் இன்றியமையாதது; அதற்கு அடுத்தபடியாக பணம் இன்றியமையாதது; அதற்கு அடுத்தபடியாக, நிர்வாகம் இன்றியமையாதது. இந்த நான்கும் ஒன்றை விட ஒன்று உயர்ந்தது என்றோ, தாழ்ந்தது என்றோ, ஒன்று மிக இன்றி அமையாத தேவை என்றோ, ஒன்று இன்றி அமையாத் தேவை அற்றது என்றோ தள்ளி விடுவதோ, ஒதுக்கிவிடுவதோ, இயலாது. நான்கும் இன்றியமையாத் தேவைகளாக இருந்து, ஒன்றையொன்று முட்டாமல் மோதாமல் ஒன்றையொன்று தாக்காமல் தாங்கி நின்று நன்கு ஒத்துழைத்துச் செயல்படுகிறபோது தரம் முதலிய அனைத்தும் வளர வகை உண்டு. இந்த நிலையிலே ஒரு அளவுக்குத் தொழில் துறையிலே ஈடுபட்டிருக்கிற தொழில் வர்க்கத்தாருக்கு, பாட்டாளி மக்களுக்கு, சில இடங்களிலே பொறுப்பு அற்று நடந்துகொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு ஏற்படுகிறது. அதை நான் மறுக்க இல்லை—உண்மையும் கூட. சில இடங்களில் அவர்களுக்கு ஒரு விதமான உரிமையும் இல்லாமல், யந்திரக் கருவி மாதிரி பணி செய்து காசு வாங்கிக்கொண்டு வெளியே போகும் நிலையிலேயே இருக்கிறார்கள். எவ்வளவுதான் நிபுணத்துவம், திறமை, அனுபவம், ஆற்றல் முதலியனவோடு பொலிந்தாலும் சரி, அவர்களுக்குத் தொழில் பொறுப்பில், தொழில் முறையில், தொழில் அமைப்பில், தொழில் விஸ்தரிப்பில் கருத்துச் செலுத்த அல்லது பங்குகொள்ளப் போதிய வாய்ப்போ, வசதியோ தரப்பட இல்லை. ஆகவே, இந்த நெறியை, தொழிற்கூடங்களின் வளர்ச்சியில் பங்கு பெறும் உரிமையை—அதன் வளர்ச்சியில் பங்கு பெறுதல் என்று சொன்னால், லாபத்திலே மட்டும் டிவிடென்ட் பெற்றுக் கொள்வது என்று பொருள் அல்ல—அதனுடைய நிர்வாகம், அதனுடைய பொறுப்பு, அதனுடைய வளர்ச்சி, அதனுடைய வாழ்வு, அதனுடைய கஷ்டநஷ்டங்கள் அனைத்தையும் உணர்ந்து, பணம் போட்டவரோ அல்லது நிர்வாகியோ எத்தனை அளவு அதிலே அக்கறையும், கவலையும், ஆர்வமும் காட்டுகிறார்களோ அத்தனை அளவுக்குத் தொழிலாளர் வர்க்கமும் அதிலே பொறுப்பு, கவலை, அக்கறை, ஆர்வம், லாபப் பங்கீட்டிலே தங்களுக்கு ஒரு குறிப்பிட்ட பாகம் பெறுவதற்கு உரிமை, இவையெல்லாம் கொண்டதாக இருக்கவேண்டும். இதை, மேலை நாட்டுத் தொழில் துறையாளர்கள் 'ப்ரோக்ரெஸ்-ஷேரிங் ரைட்ஸ்' என்று கூறுவார்கள். ப்ரோக்ரெஸ் என்பது வெறுமனே லாபம் மட்டும் அல்ல. தொழில் துறையிலே ஏற்படுகிற அமைப்பு, வளர்ச்சி போன்ற எல்லாத் துறையிலும் பங்கு கொள்வது ஆகும். ப்ரோக்ரெஸ்-ஷேரிங் என்பது மேல் நாட்டிலே சாதாரணமாகத் தொழிற்கூடங்களிலே, முதலாளித்துவம் என்று தைக்கப்படுகிற பிராந்தியமாக இருந்தாலும் சரி, சர்வாதிக்கம் நிறைந்த பகுதி



என்று ஒதுக்கப்படுகிற பகுதியாக இருந்தாலும் சரி, இரண்டும் இல்லாமல் சிறப்பாக இருக்கிற வெஸ்ட் ஜெர்மனி போன்ற நாடுகளிலும் காண முடியும்.

இந்த மாதிரியான ஒரு லட்சியம், பயன் தரத்தக்க சிறந்த ஒரு நிலைக்கு இந்த மாநிலத்தில் தொழில் துறையும் அடி எடுத்து 11-00 a.m. வைத்து அந்த நிலையை எட்டுவதற்குள்ள ஆர்வத்தோடு செயல்படவேண்டும். அதேபோல் தொழிலாளர்கள் என்றவுடனேயே நமக்குத் திடீரென்று தோன்றுவது எல்லாம் ஏதோ இயந்திர சாதனங்களை வைத்துக்கொண்டு தொழிற்கூடங்களில் பணியாற்றுகிற ஒரு குறிப்பிட்ட வகை தொழிலாளர்கள் மட்டுமே. கருவிகளைக் கையில் எடுத்துக்கொண்டு, சுத்தியல் போன்றவற்றை எடுத்துக்கொண்டு பணியாற்றுகிறவர்கள் மட்டுமே நம் கவனத்தில் முதற்கண் இடம் பெற்றுவிடுகிறார்கள். அவர்களைப் போலவே, அவர்களுக்கு எந்த அளவிலும் குறைந்தவர்களாக இல்லாமல் அவர்களுக்குச் சமமாகவே, இன்னும் பிற கணக்குப்படி பார்த்தால் இவர்களுக்குச் சிறிது மேம்பட்டவர்களாக விளங்குகிற ஒரு தொழில் துறை வர்க்கம் இருக்கிறது. அவர்கள் மிராசுதாரர்கள் அல்ல, நிலச்சுவாந்தார்கள் அல்ல. விவசாயத் தொழிலாளர்கள். நிலம் இன்றி விவசாயப் பண்ணைகளில் அல்லது சிலருடைய குறிப்பிட்ட நிலங்களில் மாதக் கூலிகளாகவோ அல்லது வருடக் கூலிகளாகவோ, உம்பளமாகவோ—சம்பளம், உம்பளம் என்று பல வேறுபாடுகள் காணப்படுகின்றன—அப்படிப் பணி செய்கிறவர்களுக்கு, பெரிய பண்ணைகளில் வருடக்கணக்காக வேலை செய்கிறவர்களுக்கு மொத்தத் தொகை வருடக்கணக்காக கொடுத்து விடுகிறார்கள். அவர்களைப் பற்றிக் கூட மிகுந்த கவலையில்லை. எங்கள் பகுதியில் எல்லாம் அற்றைக் கூலி என்று சொல்வார்கள். செய்த அளவிற்குக் கூலி, அவ்வளவுதான். அதற்கு மேலே அவர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. இப்படி அற்றைக் கூலிக்கு வேலை செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு, மிக அதிகமாகப் போனால் வருடத்திற்கு நான்கு மாதங்களுக்கு மேல் வேலை வாய்ப்புக்கு இடமில்லை. ஆகவே அத்தகையவர்களுக்கும், பண்ணைகளில் வருடக்கணக்காக இருக்கிறவர்களுக்கும்—அவர்களும் நேரடியாகப் பாடுபடவேண்டிய காலம், கண்காணிக்க வேண்டிய காலத்தை உட்படுத்தி நாலாறு மாதங்களுக்கு மேல் அவர்களுக்கும் வேலை இல்லை. அவர்களுடைய பணி உழவுத் தொழில் நடந்து கொண்டிருக்கிற காலத்திலே மட்டுந்தான்—உழவுத் தொழில் நடக்காமல் பூமி வரண்டு இருக்கிற காலத்தில் உப தொழில் கொடுக்கவேண்டுவது மிக இன்றியமையாதது. ஆகவே விவசாயத் துறையில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு வேண்டிய துணைத் தொழில் அல்லது உப தொழில் கிடைக்கச் செய்யவேண்டும். துணைத் தொழில் என்பது பாடுபட்டுக்கொண்டிருக்கிறபோதே, நேரம் கிடைக்கும்போது இடையிடையே பணியாற்றிப் பயனையும் ஊதியத்தையும் பெருக்கிக் கொள்ள உதவுவது. உப தொழில் என்றால் வேலை இல்லாமல் இருக்கும் நேரத்தில் கைக்கொள்வதான ஒரு மாற்றுத் தொழில். உழவுப் பணி இல்லாத காலத்தில் அவர்கள்

[திரு. சா. கணேசன்] [9th March 1966

திடீரென்று பாக்டரி வேலைக்குப் போவது என்பது சாத்தியமில்லாததுடன் நல்லதுமல்ல. இதை எல்லாம் கணிக்கவேண்டும். அவர்களுக்கு ஏற்ற, விவசாயிகளுக்கு ஏற்ற, அவர்கள் சூழ்நிலைக்கேற்ற, அவர்கள் மிகத் தூரம் சென்றுவர நிர்ப்பந்தமின்றி அந்தந்தக் கிராமங்களில் அல்லது அந்த அந்தப் பகுதிகளுக்குள்ளேயே ஒரு தொழில் துறையை ஆங்காங்கே அமைத்து அந்தத் தொழில் துறை சிறப்பாக அந்த விவசாயிகளுக்கு உதவியாகவும் இருக்கச் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு சிறிது அதிக ஊதியம் தருவதாகவும் இருக்கவேண்டும். இந்த நெறியில் கவனம் செலுத்தி அதற்குரிய வழிவகைகளைக் கண்டு அதற்குரிய தொழில் துறைகளை நிர்வகித்து அதை அவரவர்களிடமே விட்டுவிட்டு அதைப் பணமாக்கும் கவலை அவர்களுக்கு இல்லாமல் செய்யவேண்டும். உற்பத்தி செய்வது தான் அவர்களின் பொறுப்பு. அதற்குப் பிறகு அப்படிப்பட்டவர்களை மார்க்கட் பண்ணச் சொல்வது கஷ்டம். இதற்கு ஒரு டிப்பார்ட்மென்டல் ஸ்டோர்ஸ் மாதிரி வைத்துக்கொண்டு அவற்றை எல்லாம் கொள்முதல் செய்து விற்பனைக்கு அனுப்புகிற பொறுப்பை ஆட்சி ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் உற்பத்தியான பொருள் உடனே விலை போயிற்று என்று அவர்களை நிச்சிந்தையாகத் தொழிலில் ஈடுபடுவது இயல்பாக இருக்கும். அந்த நெறியில் அவர்களைத் தொழிலில் ஈடுபடுத்துவதோடு மட்டும் விட்டுவிட்டு, அதற்குமேலே விற்பனை செய்யவேண்டும், ஏற்றுமதி செய்யவேண்டும், இறக்குமதி செய்யவேண்டும். அல்லது எங்கு அவற்றைக் கொண்டு செல்லவேண்டும் என்ற இந்தவிதமான கவலைகளுக்கு அவர்களை ஆள்படுத்தாதபடி செய்தால் தேசத்தின் வளர்ச்சிக்கும், ஆட்சியின் சிறப்பிற்கும் அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும். ஜப்பானிய முறைகளை எல்லாம் பற்றி அமைச்சர்கள் எல்லோரும் அறிவார்கள்; பலர் நேரிலும் சென்று பார்த்திருக்கிறார்கள். அந்த நெறிகளை எல்லாம் நம் நாட்டிலும் கையாண்டால் செம்மையாக இருக்கும் என்பதைப் புலப்படுத்திக் கொள்கிறேன். பின்னர், குறிப்பாகச் சொன்னால், தீப்பெட்டித் தொழில் என்பது, கனம் உறுப்பினர் திரு. சங்கரன் அவர்கள் குறிப்பிட்டார்கள்—அதை ஏதோ ஒரு பெரிய பாக்டரியாக வைத்து ஒன்றிரண்டு பேர்கள் மெஷினரிகளை வைத்துக்கொண்டு லட்சக்கணக்கில் முதல் போட்டு நடத்திக்கொண்டிருக்கலாம்—ஆனால் தென்னகத்தைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட சர்க்காவில் நூல் நூற்பதைப் போன்று சிறிய குடிசைத் தொழில் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. வீட்டுக்கு வீடு கஞ்சி காய்ச்சுகிற நேரம் போக அடுப்பில் உலை இருக்கிறபோது கூட ஏதோ குச்சியை எண்ணி அடுக்கிக் கொண்டோ அல்லது தாளை சுற்றிக்கொண்டோ அல்லது குச்சிக்கு மருந்து தோய்த்து விடுவதோ அல்லது அதை எடுத்துக் காய வைத்தோ அல்லது காய வைத்த பிறகு ப்ரேமிலிருந்து உருவி தனித்தனியாக எடுத்து அடுக்குவதோ இப்படிச் செய்வதைக் காணமுடியும். அவர்கள் கிட்டத்தட்ட படிக்காதவர்களும் கூட. அந்தத் தொழில் நசித்து விடும்படி விட்டுவிடக்கூடாது. இப்போது வரும் செய்திகளைப் பார்க்கிறபோது அவர்களுக்கு



9th March 1966] [திரு. சா. கணேசன்]

வேண்டிய ரசாயனப் பொருள்கள் கிடைப்பதில்லை. ஆகவே நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் மூடிவிடும். நிலையில் அல்லது மூடப்பட்டு விட்டன என்ற நிலையில் இருக்கின்றன. சுமார் லட்சம் பேர்கள் அதனால் வாழ்வை நடத்தமுடியாத துர்ப்பாக்கியகரமான அல்லது கொஞ்சம் சிரமமான நேரம் வந்து சேரக்கூடிய நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பன போன்ற செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் முதல் இடம் தந்து கவனிக்கவேண்டும். இவர்கள் எல்லாம் கிட்டத்தட்ட பாக்டரி ஆக்டுக்கு அடங்காத தங்களைத் தாங்களே வேலை வாங்கிக் கொள்கிற, தங்களுக்குத் தாங்களே எஜமானவர்களாக-தொழிலாளர்களாக இருந்துகொண்டிருக்கும் "செல்ஃப் எம்ப்ளாய்ட் பெர்சன்ஸ்". அப்படிப்பட்ட வர்க்கம் இது. இதில் முதல் கவனம் செலுத்தவேண்டும். பிற தொழில்களுக்கு முதல் போட வேண்டும், கண்காணிக்கவேண்டும், வேறு பல நிர்ப்பந்தங்களை, பொறுப்புகளை எல்லாம் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டி வரும். இந்தமாதிரி குடிசைத் தொழில்களில் தங்களுக்குத் தாங்களே வேலை அளித்துக் கொண்டு, தங்களுக்குத் தாங்களே எஜமானர்களாக இருந்து கொண்டு, செய்யக் கூடிய தொழிலாகும் இத்தகைய தொழில்கள். இவர்கள் வாழ்வு வளம் பெறுவதற்கு நாம் ஒன்றும் புதிதாகத் தொகை ஒதுக்கவேண்டிய அவசியமில்லை. போய்க்கொண்டிருக்கிற தடம் புரண்டு விடாமல் அவர்களுக்கு இயல்பாக இதுவரை வந்து கொண்டிருக்கிற பண்டங்கள் தடைபட்டு விடாமல் காப்பாற்றிக் கொடுக்கவேண்டியது சர்க்காரின் பொறுப்பு. அவர்கள் எல்லாம் வேலை இல்லாமல் பட்டினியாகத் தெருவில் நிற்பார்களானால் சர்க்காரின் கதி என்னவாகும்? அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க, நிவாரண நிதி திரட்ட, திரட்டுவதைக் கண்காணிக்க என்று ஏராளமான உத்தியோகஸ்தர்களை நியமித்து அவர்களுக்காக லட்சக்கணக்கில் பணம் விரயமாகும். இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டு இந்தமாதிரியான தொழில் துறையில் இருப்பவர்களுக்கு அவர்கள் வேலை இழந்து விடாமல் பார்த்துக்கொள்வது சர்க்காரின் தலையாய கடமை. அரசாங்கத்தின் கடமை முதலில் காத்தல். அப்புறந்தான் கொடுத்தல். தெய்வத் திருவுருவ அமைதியிலிருந்தே இதை உணரலாம். ஆகவேதான் வலக்கரம் அபய முத்திரையில் இருக்கும். அஞ்சாதே! நான் இருக்கிறேன் உன்னைக் காக்க! என்பதே அதன் பொருள். அப்புறம்தான் கொடுத்தல். அரசின் நெறியும் அதுதான். இதைச் சேக்கிழார் ஒரு பாட்டில் நமக்கு உணர்த்துகிறார்.

"மாநிலம் காவலன் ஆவான் மன்னுயிர் காக்கும் காலை
தானதனுக்கு இடையூறு : தன்னால், தன் பரிசனத்தால்,
ஊனமிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர்கள் தம்மால்,

ஆன பயம் ஐந்தும் தீர்த்து அறம் காப்பான் அல்லனோ"

என்று. இதற்கு ஒரு உதாரணம் நமக்கு இருக்கிறது. பிரத்தியட்சப் பிரமாணமாகப் பார்க்கிறோம். பொற்கொல்லர்கள், தட்டார்கள் இவர்கள் தட்டித் தட்டிக் கொண்டிருந்தார்கள். இனிமேல் இவர்கள் 'தட்டார்கள்' என்ற நிலைக்கு அவர்களை

[திரு. சா. கணேசன்] [9th March 1966

கோல்ட் கண்ட்ரோல் ஆர்டர் கொண்டுவந்து வைத்து விட்டது. இன்று அதனால் நிலைமை என்னவாயிற்று? இதுவரை வந்து கொண்டிருந்த ஏராளமான விற்பனை வரி நமக்கு வராமல் போய் விட்டது. இன்கம் டாக்ஸ் வராமல் போய்விட்டது. அதற்கு மேலே அவர்களுடைய புனர்வாழ்விற்காக ஒரு பெரும் தொகை கொடுக்கப் படவேண்டி வந்தது. அது 20 கோடி; 30 கோடிக்கு மேல் விற்பனை வரி வராமல் போய்விட்டது. சுமார் 27 கோடி ரூபாய் வருமான வரி மூலம் வரவேண்டியது வராமல் போய்விட்டது. வராமல் போனது ஒரு நஷ்டம். ஆக, 57 கோடி ரூபாய் கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போய் விட்டது ஒரு நஷ்டம். நம்மிட மிருந்து கையைவிட்டுப் போன பணம் 20 கோடி. அதுவும் நஷ்டம். ஆக இரு வகை நஷ்டங்கள். இதுமாதிரிப்பட்ட ஒரு பாடம் போதாதா? நம் நெறியை நாம் எப்படி வகுக்கவேண்டும் என்பதற்கு இந்த ஒரு பாடம் போதாதா? பொற்கொல்லர்களைப் பொறுத்தவரையில் தென்னகம்தான் மிக அதிகமாக அடிபட்டது. பிற மாநிலங்களில் உள்ள பொற்கொல்லர்களின் சதவிகிதத்தைப் பார்க்கிறபோது தமிழகத்தின் விகிதாசாரம் மிக மிக. பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை மிக அதிக அளவிற்கு இங்குதான் இருக்கிறது என்பது புலப்படும். ஆகவே, இந்த முன் மாதிரியான பிரத்தியட்சமான நிகழ்ச்சிகளைக் கொண்டாவது இதுமாதிரியாகத் தனக்குத் தானே வேலை வாங்கிக்கொள்ளும் தொழிலாளர்களைப் பாதிக்காமல், அவர்கள் இருக்கிற வேலை வாய்ப்புகளை இழக்காமல், இருக்கிற வேலை வாய்ப்புகளை இழந்து, 'எனக்கு வேலை தா' என்று அரசாங்கத்தை அணுகவேண்டிய நிலை ஏற்படாமல் அவர்கள் அப்படி அணுகும்பொழுது அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாமல் அவர்களுடைய புனர்வாழ்வுக்காக லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பணத்தை ஒதுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாமல் இருக்க முதலிலேயே நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டாமா? அந்த நெறியிலே, செம்மையாக தொழில் துறை முறையை அமைத்து இம்மாதிரி எல்லாம் தொழிலாளர், பணம், பண்டம், நிர்வாகம் ஆகிய நான்கும் இணைந்து செவ்விய நெறியிலே வளர்ந்து, ஒன்றை ஒன்று தாக்காமல், ஒன்றை ஒன்று தாங்கி வளர, உழைப்பவர்களுக்கும், பணம் கொடுப்பவர்களுக்கும், வேலை வாங்குபவர்களுக்கும் இடையிலே ஒரு சுமுகமான உறவு நிலையை வளர்ப்பதிலே அரசாங்கம் கண்ணும் கருத்தும் செலுத்தினாலன்றி, நாட்டில் தொழில் துறை செம்மையாக, திறமையாக, வளமாக அமைந்து நிற்காது என்பதைப் புலப்படுத்திக்கொண்டு, இந்தத் துறையிலே செவ்விய கவனத்தை ஆட்சியாளர், ஆளும் கணத்தவர் செலுத்தவேண்டும் என்று வேண்டுகிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, தங்கள் அனுமதியின் பேரில் நான் மற்றொரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், பொதுவாக அமைச்சர் அவையின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றையதினம் ஒரு தந்தி எனக்குக் கிடைத்தது. தந்தி என்ன என்பதைப் படித்து விடுகிறேன்.



9th March 1966] [திரு. சா. கணேசன்]

'800 Match Factories on verge of closure for want of Chemical Chloride. About one lakh workers would be thrown out of employment. Severe consequences developing. Kindly represent Government to rush sufficient stocks—Sivakasi Chamber of Match Industries'.

என்று தந்தி வந்தது. அதன் மீது சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் 'நீங்கள் இதைப்பற்றி ஒரு ஷார்ட் நோட்டீஸ் குவெஸ்சின் கொடுத்துவிடுங்கள்' என்று குறிப் பிட்டார்கள். ஆதலினாலே ஷார்ட் நோட்டீஸ் குவெஸ்சின் கொடுத்து, அமைச்சர் அவர்களைக் கலந்து, பதில் சொல்லுகிறேன் என்று சொன்னதினால் அதைப்பற்றிச் சொல்லவேண்டாம் என்று விட்டுவிட்டேன். இப்பொழுது இம்மாதிரியான சந்தர்ப்பம் கிடைத்ததனாலே மேலும் சிறிது பேசுகிறேன். நாம் இச்சந்தர்ப் பத்தில் ஒன்றை மனத்திலே கொள்ளவேண்டும். சிவகாசிப் பகுதியிலே கிட்டத்தட்ட அத்தனை பேர்களும் குடிசைத் தொழில் செய்பவர்கள். அதிலும் 10 பேர், 50 பேர், முதலாளிகள் ரூ. 1,000, 1,000, 10,000, லட்சம் இப்படிப் போட்டு இதையெல்லாம் வாங்கி, அடுக்கி விற்பனை செய்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால், மிகப் பெரும்பாலானவர்கள் இதைக் குடிசைத் தொழிலாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் பலரும் நேரில் போய்ப் பார்த்திருக்கலாம். நானும் பார்த்திருக்கிறேன். அவர்கள் மிகப் பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தொழிலாளர்கள் என்று சொல்லி போட்டி போட்டு, சண்டை போட்டு, தொழில்துறை கமிஷனரிடத்திலே தங்களுடைய குறை பாடுகளைச் சொல்லி, அதற்குள்ள பரிகாரம் தேடிக்கொள்வதற்கு வாய்ப்பற்ற தொழிலாளர்கள். அவர்கள் எந்தவிதமான கட்டுப் பாட்டுக்கும், விதிகளுக்கும் உட்படாமல் இம்மாதிரி குடிசைத் தொழில் செய்து, பண்டங்களை விற்று பணம் செய்துகொண்டிருக் கிறார்கள். இப்படி லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு வேண்டிய முக்கியமான மருந்துப் பொருள், ரசாயனப் பொருள், மூலப்பொருள் கிடைக்கவில்லை. இவற்றை சப்ளை செய்வதிலே குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது அப் பகுதிக்கு அதிலே 50 சதவிகிதம், 30 சதவிகிதம் போகிறதா, அல்லது 20 சதவிகிதம் போகிறதா அல்லது முற்றிலும் போகாமல் நின்றுவிட்டதா என்பதையெல்லாம் ஒன்றும் இப்பொழுது சொல்லுவதற்கில்லை. ஆனால், கணிசமான அளவுக்குக் குறைந்து விட்டது என்பது நன்றாகப் புலப்படுத்தப்படுகிறது. ஆகவே, இந்த விஷயத்தை உடனடியாக அமைச்சர் அவை கவனிக்க வேண்டும். வேறு எந்த விதிக்கும் உட்பட்டல்ல. ஆட்சியில் கடமை இது மாதிரி அவல நிலைக்குட்டவர்களைத் துன்பத் திலிருந்து, துயரத்திலிருந்து மீட்க வேண்டும். பாதுகாக்க வேண்டும் என்ற பரிவுணர்ச்சியுடன் செயல்படவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இங்கே கவனிக்கவேண்டும். அந்தப் பகுதி யில் பெரும்பாலும் இந்தத் தொழில் துறையிலேயே அல்லது இந்தத் தொழில் துறையை ஒட்டியே அங்கே இருப்பவர்களெல்லாம்

வாழ்கிறவர்கள். விவசாயத்திலே பிரமாதமாக வளம் சிறந்த பகுதி அல்ல சாத்தூர், சிவகாசிப் பகுதி. ஆறு என்று பெயர் தான். ஆற்றில் தண்ணீர் ஓடுகிறதா, மணல் ஓடுகிறதா என்பது நமக்குத் தெரியும். வேறு பிரமாதமான தொழில் துறை எல்லோருக்கும் கிடைப்பதற்குரிய வாய்ப்பைத் தரக்கூடிய வசதிகள் அங்கு கிடையாது. குறிப்பாக சிவகாசியைச் சுற்றிலும் எல்லோரும் இதே தொழிலில் தான் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏதோ சிலர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கலாம். அவர்களுக்கெல்லாம் இது ஒரு உப தொழில் மாதிரி இருக்கிறது என்பது அமைச்சர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏதோ மிளகாய், பருத்தி போட்டுவிட்டு அவர்கள் அங்கே உட்கார்ந்து வேலை பார்க்கவேண்டிய அவசியமில்லை. வீடுகளில் வந்து உட்கார்ந்து ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், கிழவர்களும் தீக்குச்சி செய்யும் தொழிலில் ஈடுபடுகிறார்கள். இதில் பலவகை அங்கங்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு அங்கத் தொழிலில் ஈடுபட்டு ரூ. 1, ½, 2 இப்படி ஏதோ சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிழைப்புக்கே இப்பொழுது இடிசாமம் வந்திருக்கிறது. ஆகவே, இந்த அவல நிலையைப் போக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவசரமாகச் செய்யவேண்டும் என்று சபாநாயகர் அவர்களே, நான் உங்கள் மூலமாக அரசினரைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. கே. பொன்னையன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தொழிலாளர் மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். முதலாவதாக, பல வருஷங்களாகச் சொல்லிக் கொண்டிருந்து, தேயிலை ஊதிய போர்டு ரிபோர்ட்டு கடந்த வருஷத்தில் வெளியானது பற்றி மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஊதிய போர்டின் ரிப்போர்ட்டின் பிரகாரம் ஆண் தொழிலாளிக்கு ரூ. 2.25, பெண் தொழிலாளிக்கு ரூ. 1.80, இளைஞர்களுக்கு ரூ, 1.35, சிறுவர்களுக்கு 1.12½ ஊதியம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய நிலையிலே எங்களுக்கு இது போதுமானதாக இல்லை என்றுதான் சொல்லிக்கொள்ளுகிறேன். இருந்தாலும், கொடுத்ததை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு, இன்னும் எங்கள் வாழ்வு வளம் பெற நாங்கள் பாடுபடுவோம் என்பதை நான் சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தேயிலைத் தோட்டமானது 1951-ம் ஆண்டு பிளாண்டேஷன் லேபர் ஆக்ட் பிரகாரம் நடந்துகொண்டிருக்கிறது. அந்த சட்டப்படி பரிபாலனம் ஒழுங்காக நடந்துகொண்டிருக்கிறது. 8 மணி நேர வேலை, பேமெண்டு ஆப் வேஜஸ், மெடர்னிடி அலவன்ஸ், சிக்னெஸ் பெனிபிட், ஃப்ரீ குவார்ட்டர்ஸ், மெடிகல் எய்டு. குழந்தைகளுக்குக் கல்வி இவைகளெல்லாம் இலவசமாகக் கொடுக்கிறார்கள். குழந்தைகளுக்குக் கல்வி என்கிற விஷயத்திலே பிளாண்டேஷன் ஆக்ட் ரூல்ஸ் பிரகாரம் அந்தந்த எஸ்டேட் மானேஜர்கள் பள்ளிகள் வைத்திருக்கிறார்கள். ஆனால், அந்தந்த





டிவிஷனில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் படிப்பதற்கு அங்கே இடம் கொடுப்பதில்லை என்பதை மிகவும் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாம் கல்விக்காக நிறைய செலவழிக்கிறோம். அப்படியிருந்தும் எலிமெண்டரி எஜுகேஷன் அங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே நான் கல்வி மான்யக் கோரிக்கையின் மீது நடந்த விவாதத்தின்பொழுது சொல்லியிருக்கிறேன். அதை இப்பொழுதும் சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்களுக்கு இன்னும் பல குறைகள் இருக்கின்றன. சுத்தமான தண்ணீர் கிடைக்கவில்லை. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் இல்லை. ஓவர்-டைம் என்று அதிகமாகக் கூலி கொடுப்பதில்லை. பாக்டரியிலே வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு யூனிபார்ம் கொடுப்பதில்லை. எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் திட்டத்தை அங்கே விஸ்தரிக்க வேண்டும். இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

நாம் பல சட்டங்களை இயற்றியிருக்கிறோம். அப்படிப்பட்ட சட்டங்கள் மூலமாகத்தான் நாங்கள் வாழ்கிறோம். பலன்கள் அடைந்திருக்கிறோம். இருந்தாலும், சட்டத்தை சில இடங்களிலே பிரயோகம் பண்ணவில்லை. அது முதலாளிகள் இஷ்டத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது. ஒரு சில விஷயங்களைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு நாள், இரண்டு நாள் சஸ்பென்ஷனுக்கு ரெபரன்ஸ் கொடுப்பதில்லை. அப்படி ரெபரன்ஸ் கொடுத்தால் கேசுகளை நடத்தச் சௌகரியமாக இருக்கும். இரண்டு தடவைகள் ரெபரன்ஸ் கொடுக்காமல் இருந்துவிட்டு, மூன்றாவது தடவை டிஸ்மிஸ் பண்ணப் படுகிறோம். குற்றம் சாட்டும் போது, குற்றம் சாட்டுவதும் முதலாளி, நீதிபதியாக இருப்பதும் முதலாளி. அவர்கள் எப்படி தொழிலாளிகளுக்கு நீதி வழங்குவார்கள்? ஆகவே, சர்க்கார் அவசியம் ஒரு நாள், இரண்டு நாள் சஸ்பென்ஷனுக்கும் ரெபரன்ஸ் கொடுக்க வேண்டும் என்று போடவேண்டும்.

அடுத்து, வழக்கு என்றால் அது நேரிடையாக கோர்ட்டுகளுக்குப் போகும் உரிமை வேண்டும். முதலிலே லேபர் கன்சிலியேஷன், அதன் பிறகு சர்க்காருக்கு ரெபரன்ஸ். இதிலெல்லாம் 6, 7 மாதங்கள் ஆகிவிடுகின்றன. பாதிக்கப்பட்ட தொழிலாளியாலே தாங்கமுடியவில்லை. இதைக் கவனிக்க வேண்டும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை லீவில் ஒரு பர்செண்ட் டிஸ்சார்ஜ் என்று சட்டம் சொல்லுகிறது. ஏதோ குடும்பக் காரியத்திற்காக, அவசர நிமித்தம் டிஸ்சார்ஜுக்கு எழுதிக் கொடுத்துவிட்டு, ஊருக்குப் போய்விட்டால், வேலையை வேண்டுமென்றே அபாண்டன் செய்துவிட்டான், புறக்கணித்துவிட்டான் என்று டிஸ்மிஸ் செய்து கிராசுவடி, மற்றதெல்லாம் கொடுப்பதில்லை. ஆகவே, சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த இண்டஸ்ட்ரியல் ட்ரிப்யூனல் ஆக்டை அமெண்ட் செய்யவேண்டும் அல்லது இருக்கிற

அக்ரிமெண்டைத் திருத்தவேண்டும். இது போன்ற பாதகங்கள் என்னுடைய ஏரியாவில் ஏற்படுகிறது. சர்க்கார் இதை அவசியம் கவனிக்கவேண்டும்.

இன்னொன்று. புருஷன் டிஸ்சார்ஜுக்கு எழுதிக் கொடுத்தால், பெண்டாட்டியையும்கூட எழுதிக் கொடுக்கச் சொல்லுகிறார்கள். பெண்டாட்டியை மட்டும், எஸ்டேட்டில் அலவ் பண்ணமாட்டோம் என்கிறார்கள். இது தவறானது. சட்டப்படி யார் டிஸ்சார்ஜ் வேண்டும் என்கிறார்களோ அவர்களுக்கு மட்டும்தான் டிஸ்சார்ஜ் கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ப்ளாண்டேஷன் ரூல்கள் பிரகாரம், டிஸ்மிஸ் பண்ணப்பட்டவன், அப்படி டிஸ்மிஸ் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு பாடியில் இருக்கலாம். அதாவது அவன் இருக்கிற வீட்டிலேயே ஒரு மாதகாலத்திற்கு இருக்கலாம் என்று சட்டம் இடம் கொடுக்கிறது. ஆனால், எஸ்டேட் மானேஜ்மெண்டில், முதலிலே வீட்டைப் பூட்டிச் சாவியைக் கொடு, அப்பொழுதுதான் டிஸ்சார்ஜ் செய்யமுடியும் என்கிறார்கள். இது ரொம்ப ரொம்ப வேதனை கொடுப்பதாக இருக்கிறது. இதைத் தயவுசெய்து கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, 1951-ம் வருஷ ப்ளாண்டேஷன் லேபர் ஆக்ட் பிரகாரம் எங்களுக்கு இத்தனை மணி நேர வேலை என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ரூல் படி தொழிலாளி மஸ்டருக்குப் போன டைத்திலிருந்து கணக்குப்பண்ண வேண்டியிருக்க, மானேஜ்மெண்டில், காட்டுக்குப் போன டைத்திலிருந்து கணக்குச் செய்கிறார்கள். அப்படிச் செய்யக் கூடாது. காடு ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது என்றால், மஸ்டருக்குப் பிற்பாடு, காட்டுக்குப் போக டைம் ஆகும். அந்த நேரத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது. மஸ்டருக்கு வரும் நேரத்தைத்தான் கணக்கிட வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

குறைந்தபட்ச கூலிப் பிரகாரம், கூலி வாங்குகிறோம். ஆனால், தேயிலைத் தொழில், ஒரு சீசனல் வேலை. அது ஒரு சீசனல் கிராப். வருஷத்திலே சில மாதங்கள்தாம் தழை வரும். அப்படித் தழை எடுக்கும்போது, ஓவர்-டைம் கொடுப்பதில்லை. இந்த ஓவர்-டைம் பற்றி கமிஷனுக்கு ரெபரன்ஸ் கொடுத்திருக்கிறோம். கோயம்புத்தூர் கூட்டத்திலே கூட இது பற்றிப் பேசியிருக்கிறோம். சீசனல் டைத்தில் ஓவர்-டைம் அவசியம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழில் கோர்ட் வால்பாரைக்கு வருவதில்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளிகள் சாட்சிகளை அழைத்துக் கொண்டு பொள்ளாச்சிக்கும், கோயம்புத்தூருக்கும் போவது என்பது வேதனையான விஷயம். ஆகவே, வால்பாரைக்கு தொழில் கோர்ட் மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது அல்லது சௌகரியப்பட்ட போதாவது போகவேண்டும் என்று உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





எஸ்டேட் கண்டிராக்ட் தொழில்களுக்கு டெம்பரரி ஆட்களை வைத்துக் கொண்டு செய்யாமல், ரிஜிஸ்டர்ட் தொழிலாளிகளையே வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கட்டாயப்படுத்த வேண்டும். ஏன் தற்காலிகத் தொழிலாளிகளை வைத்துக் கொண்டுவிடுகிறார்கள் என்றால் அவர்களுக்கு கிராசுவடி, பிராவிடண்ட் பண்ட் பெனிபிட், மெடர்னிடி பெனிபிட், சிக்னஸ் பெனிபிட், கம்பளி கொடுத்தால், இதெல்லாம் செய்யவேண்டாம். ஆகவேதான், முதலாளிகள் கூடுமான வரையில் நிரந்தரமான தொழிலாளிகளை உபயோகிப்பதில்லை. ஆகவே, இந்த வேலைகளுக்கும் டெம்பரரி வேலையாட்களைத் தவிர்த்து, நிரந்தர ஆட்களைதான் உபயோகிக்கவேண்டும் என்றும் செய்யவேண்டும். அப்படிப்பட்ட தொழில்களில் இருக்கும் டெம்பரரி தொழிலாளிகளை நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். எஸ்டேட்டில் இருக்கிற பல வேலைகளுக்கு—ப்ரூனிங் முதலியவை கன்ட்ராக்ட் வேலைகள்—இவைகளுக்கெல்லாம் டெம்பரரி ஆட்களையே உபயோகிக்கிறார்கள். அதற்குப் பதிலாக நிரந்தரத் தொழிலாளிகளையே உபயோகித்தால் அவர்களுக்குக் கொஞ்சம் அதிகமான வருமானமும் வரும், அது அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற உதவியாகவும் இருக்கும்.

இவற்றையெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு, என் பேச்சை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் கொண்டு வந்திருக்கின்ற மானியத்தின் பேரில் என்னுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

தொழிலாளிகள் நலன் பற்றி கவனிக்க இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறோம். இன்றைக்கு இருக்கின்ற சட்டங்களையெல்லாம் பார்த்தால், இவ்வளவு சட்டங்களா இருக்கின்றன என்று நாம் பிரமிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். பற்பல சட்டங்கள் இருக்கின்றன. ட்ரேட் யூனியன் ஆக்ட், பாக்டரி ஆக்ட், ஷாப்ஸ் அண்ட் எஸ்டாப்லிஷ்மெண்ட் ஆக்ட், கேடரிங் எஸ்டாப்லிஷ்மெண்ட்ஸ் ஆக்ட், இப்படி ஏறக்குறைய 16 சட்டங்களை வைத்துக்கொண்டு, இந்த இலாகாவினர் செயல்படுகிறார்கள். இப்படி நிர்வாகம் செய்தாலும், ஒரு பக்கத்திலே, மானேஜ்மெண்டார் இருக்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இரண்டு பேர்களுக்கும் இடையில், அரசாங்கம் ஒரு நீதிபதி போல இருந்து சட்டங்களை அமல் நடத்த இருக்கிறது. அரசாங்கம் திறமையாகவே இந்த சட்டங்களை அமல் படுத்துகிறார்களா? அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் தொழிலாளிகள் மனக்கிலேசம் நிவர்த்தியாகி இருக்கிறதா என்று பார்த்தால், நாளுக்கு நாள் அவை வளர்ந்துகொண்டே இருக்கின்றனவே தவிர, குறையவில்லை என்றுதான் அவர்கள் கொடுத்திருக்கும் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. 1964-65-ம்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [9th March 1966

ஆண்டுக்கான புகார்கள் பற்றிய விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, (1) Number of complaints investigate வரப்பெற்ற புகார்கள், 1964-ல் 6,973; அதே போல 1965-ல் 6,839; (2) கன்சிலியேஷன் செய்யப்பட்டவை, 1964-ல் 1,201, 1965-ல் 1,013, (3) அப்படி கன்சிலியேஷனுக்கு அனுப்பப்பட்டு, அட்ஜுடிகேஷன் செய்யப்பட்டவை, 1964-ல் 201, அதுவே 1965-ல் 229. (4) Number of disputes referred for informal arbitration அதாவது லேபர் கமிஷனராலேயே முடிவு செய்யப்பட்டவை, 1964-ல் 92 என்றும், அதுவே 1965-ல், 73 என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கியிருப்பவைகள், எழுப்பப்பட்ட குறைகள், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் பிரகாரம் தீர்த்து வைக்கப்படவேண்டும்.

ரிஜிஸ்டர்ட் யூனியன் மூலமாக அனுப்பப்பட்ட புகார்கள், 1964-ல் நிராகரிக்கப்பட்டவை, 5,479, 1965-ல் ரிஜெக்ட் செய்யப்பட்டவை 5,524 கேஸ்கள். 1965-ம் ஆண்டிலே நிராகரிக்கப்பட்டவை
11-30 a.m. 5,524. ஏறக்குறைய 90 சதவீதம். தொழிற்சங்கங்கள் விடுக்கின்ற கோரிக்கைளை, ட்ரேட் யூனியன் சட்டத்தின் பிரகாரம் தங்களுக்கு இருக்கும் உரிமையின்படி தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்கிறார்கள் என்றால், அவைகளை அட்ஜுடிகேஷனுக்கு அனுப்பாமலேயே ரிஜெக்ட் செய்திருக்கிறார்கள். 6,839 கோரிக்கைகளில் 5,524 கோரிக்கைகளை ரிஜெக்ட் செய்திருக்கிறார்களே, ஏன் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

சட்டங்கள் எத்தனையோ இருக்கலாம். 16 சட்டங்களைப் போட்டுவிட்டால் மட்டும் போதுமா? நிலத்திற்கு உச்ச வரம்பு விதித்துச் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். அதுவும் சட்டம் தான். ஆனால், அதை அமுல் நடத்தும் விதத்தைப் பார்த்தால் எப்படி இருக்கிறது? சட்டத்தைப் போடும்போதே, லூப்ஹோல்களை மனத்தில் வைத்துக்கொண்டே சட்டம் போடுகிற மாதிரி தோன்றும் விதத்தில் தான் சட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது தவிர்க்கப்படவேண்டும். 16 சட்டங்களை வைத்துக்கொண்டு லேபர் அட்மினிஸ்ட்ரேஷன் நடக்கிறதென்றாலும் ஸ்ட்ரைக் இல்லாமல் இருக்கிறதா? லாக்-அவுட் இல்லாமல் இருக்கிறதா? கனம் உறுப்பினர் திரு. செங்காளியப்பன் அவர்கள் பேசும்போது, நெய்வேலியில் "எங்களுடையதுதான் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்கம், ஊர்வலத்திற்குத் தடை வாங்கினார்கள்" என்று சொன்னார்கள். இந்த முறை இருப்பதற்குக் காரணம், இந்த இலாகா சரிவரச் செயல்படவில்லை என்று தான் நான் சொல்வேன். இலாக்கா சரிவர செயல்படுத்தப்படவில்லை என்பது மட்டுமல்ல; இந்தச் சட்டங்களிலே பல குறைபாடுகள் இருக்கின்றன. நம்முடைய சோசலிச சமுதாயத்தை உருவாக்குகின்ற பணியிலே இன்றுள்ள நிலைமைக்கேற்றபடி சட்டங்கள் திருத்தியமைக்கப்படவேண்டும். முன்பு ஒரு காலத்தில் ஏற்படுத்திய சட்டத்தை வைத்துக்கொண்டே இன்னும் செயல்படுத்துவதென்பது காலத்திற்கு ஒவ்வாததுதான். ஆகையால்தான், பல கதவடைப்புகள், ஸ்ட்ரைக்குகள், ஊர்வலங்கள் வந்து கொண்டே இருக்கின்றன என்று தான் நான் சொல்வேன்.



9th March 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

1965-ம் ஆண்டிலே மட்டும் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 49,557. வேலை நிறுத்த நாட்கள் 4,59,401. ஏறக்குறைய 194-லே இருந்த அளவிற்குத்தான் 1965-லும் நிலைமை இருக்கிறது என்றால், இந்த நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை, இந்தச் சட்டங்களும் ஒழுங்காக அமல் படுத்தப்படவில்லை, இந்தச் சட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பில் உள்ள அதிகாரிகள் திறமையாகக் கண்காணிக்கவில்லை என்று தான் நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அரசாங்கத்திற்கு மில் அதிபர்களுடைய துணை வேண்டியதாக இருக்கலாம்; ஆலை அரசர்களுடைய உதவி வேண்டியதாக இருக்கலாம்; ஆலை நிர்வாகிகளுடைய உதவிகளும் வேண்டியதாக இருக்கலாம். அவர்களுக்கு சாதகம் செய்வதைப் போல் தான் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட புகார்கள் வந்திருந்தாலும், ஐயாயிரத்திற்கு மேற்பட்ட புகார்களை இன்டஸ்ட்ரியல் ட்ரைப்யூனலுக்கோ அல்லது ஆர்பிட்ரேஷனுக்கோ அனுப்பப்படவில்லை. அதன் மூலமாக, இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய வயிற்றிலே இந்த அரசாங்கம் அடிக்கிறது என்று தான் நான் சொல்வேன். ஆகையால், இந்தச் சட்டங்களை தற்போதுள்ள நிலைமைக்கேற்றபடி 'கோடிஃபை' செய்யவேண்டும். சட்டங்களைச் செய்துவிட்டால் மட்டும் போதாது. அவை காலத்திற்கு ஏற்ற சட்டங்களாகவும் இருக்கவேண்டும். ருஷ்யாவை உதாரணம் காட்டுகிறார்கள். இன்னும் பல சட்டங்களைச் சொல்லுகிறார்கள். மத்திய சர்க்காரிலே ஒன்று சொல்லுகிறார்கள். மாநில சர்க்காரிலே ஒன்று சொல்லுகிறார்கள். இவர்கள் இரண்டு பேருமே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆலை நிர்வாகம் செய்வதிலே தொழிலாளர்களுக்கும் லாபத்தில் பங்கு பிரித்துக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். எந்த ஆலையிலே, எத்தனை நிர்வாகத்தில் இப்படிப் பங்கு பிரித்துக்கொடுத்திருக்கிறார்கள்? எந்த மானேஜ்மென்டாவது லாபத்தில் பங்கு கொடுத்திருக்கிறார்களா? அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள். ஏற்கனவேயே அது நஷ்டத்தில் ஓடுகிறது. பெயர்தான் கூட்டுறவு ஆலையே தவிர, அது சர்க்கார் ஆலையாகத்தான் இருக்கிறது. அது நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. அதிலே தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுக்கிறார்களாம். சம்பளத்தில் 'கட்' பண்ணுவதற்காகவா? இப்படித்தான் செய்கிறார்களே தவிர, லாபம் வருகிற எத்தனை டெக்ஸ்டைல் மில்களிலே மானேஜ்மென்ட்டார் தொழிலாளர்களுக்கு லாபத்தில் பங்கு கொடுத்திருக்கிறார்கள்? கோயமுத்தூரில் எத்தனையோ மில்கள் இருக்கின்றனவே. எத்தனை மில்களில் தொழிலாளர்கள் நிர்வாகம் செய்கிறார்கள்? எத்தனை மில்களில் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது? நஷ்டம் வருகிற ஸ்தாபனங்களில், தொழிலாளர்கள் மானேஜ்மென்ட் செய்தால் என்ன? செய்யாமற்போனால் என்ன? ஆகையால், அரசாங்கம் இந்தத் திட்டங்களை வெளியிலே சொல்லலாமே தவிர, இது உண்மைக்குப் புறம்பாகத்தான் இருக்கின்றது.

அது போல் தான் ப்ராஃபிட் நிலைமையும் இருக்கிறது. மானேஜ்மெண்டுக்கு ப்ராஃபிட் கிடைக்கிறது. அந்த ப்ராஃபிட்டிலே மினிமம் போனஸ் நான்கு சத வீதம் என்று வைத்திருக்கிறார்கள். அதற்குத்தான் எத்தனை எதிர்ப்புகள்? இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், எங்களைக் கேட்காமல் 4 சத விகிதம் மினிமம் போனஸ் என்று போனஸ் ஆர்டினன்ஸ் கொண்டுவந்தார்களே என்று மந்திரிகளே எதிர்க்கிறார்கள். தொழிலாளர்களுக்கு 4 சத விகிதம் மினிமம் போனஸ் என்று ஆர்டினன்ஸ் வந்தவுடன், அந்த ஆர்டினன்ஸ்ஸை அமைச்சர்களே எதிர்க்கிறார்கள். எதற்காக? தொழிலாளர்களுடைய நன்மைகளை எதிர்பார்த்தா? இல்லை. லாபத்திற்கு உச்ச வரம்பு வைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். மீதி ரூபாயைப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். எந்த இடத்தில் எவ்வளவு உச்ச வரம்பு வைத்திருக்கிறார்கள்? கோயமுத்தூரில் உள்ள டெக்ஸ்டைல் மில்லில் தான் எத்தனை போராட்டங்கள்? எவ்வளவு தகராறுகள்? மந்திரிகள் போகிறார்கள். வருகிறார்கள். ஆனால், மானேஜ்மெண்டும் தொழிலாளர்களும் சேர்ந்தால் கூட, அரசாங்கம் அதை "ஒத்துக்கொள்ளாதீர்கள்" என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமை தான் இருக்கிறது. தொழிலாளர்களுக்காகச் சட்டங்களைப் போட்டுவிட்டால் மாத்திரம் போதாது. அந்தச் சட்டங்கள் மூலமாக அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பயன்கள் கிடைக்கவேண்டும். அந்த நிலைமை இப்பொழுது இல்லை.

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒரு ஆஸ்பத்திரி இருக்க வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெயருக்குத்தான் ஆஸ்பத்திரி என்று இருக்கிறது. அதிலே மருந்து வாங்கிச் சாப்பிட்டால் நோய் போய்விடும் என்று சொல்ல முடியாது. எந்த நோய்க்கும் கொடுக்கிற மருந்து ஒரே சிகப்புக் கலர் மருந்து தான். ஜுரத்திற்கும், வயிற்று வலிக்கும், தலை வலிக்கும் ஒரே மருந்தைத்தான் சாப்பிட வேண்டும். வேறு எதாகிலும் மருந்து இருக்குமா என்பது சந்தேகம். இப்படித்தான் ஸ்டாச்சுட்டரி ரிக்வையர்மென்டை ஃபுல்ஃபில் பண்ணுகிறார்களாம். ஆஸ்பத்திரி வைத்து நிர்வாகம் செய்கிறார்களாம். சட்டப்படி ஆஸ்பத்திரியை வைத்துவிட்டார்களேயொழிய, அதில் மருந்து இருக்கிறதா, அந்தந்த மருந்தை நியாயமாகக் கொடுக்கிறார்களா, பிணி தீர்க்கும் மருந்தாகக் கொடுக்கிறார்களா, பிணியை உண்டாக்கும் மருந்தைக் கொடுக்கிறார்களா என்று பார்ப்பது கிடையாது.

தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்று திட்டம் இருக்கிறது. எத்தனை இடத்தில் எங்கெங்கே வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்? அரசாங்கம் வீடு கட்டிக் கொடுக்கிறார்களே தவிர, மானேஜ்மெண்டார் எந்த எந்த இடங்களில் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்? அரசாங்கம் கொடுக்கும் மூன்றில் ஒரு பங்கு பணத்தை இனமாகப் பெற்று எத்தனைத் தொழிலாளர்களுக்கு மானேஜ்மெண்டார் வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்? தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து புரட்சி செய்து



விடுவார்களோ என்ற காரணத்தை மனத்திலே வைத்துக்கொண்டு சட்டங்களைக் காட்டுகிறார்களே தவிர, நியாயமான கோரிக்கைகளைப் புறக்கணிக்கிறார்கள் என்று தான் நான் சொல்வேன்.

கனம் உறுப்பினர் திரு. செங்காளியப்பன் அவர்கள் நெய்வேலியைப் பற்றிச் சொன்னார்கள். அவர் பேச்சிலிருந்து இருக்கும் நிலைமை புரிகிறது. தொழிலாளர்களுக்குத் தலைவராக தொழிலாளர் தான் வரவேண்டும். அது எங்களுடைய கட்சியினுடைய அடிப்படைக் கொள்கை. ஆனால், அதை ஏற்றுக் கொள்ளுவது கிடையாது. ஆலை உண்டாயிற்றோ இல்லையோ உடனே ஐ.என்.டி.யு.சி. அல்லது வேறு சங்கம் அமைக்கப்பட்டு விடுகிறது, எந்த ஆலையில் எந்த இடத்தில் மூன்று சங்கங்கள், இரண்டு சங்கங்களுக்குக் குறைந்து இருக்கிறது? ஒரே சங்கம் இருக்க வேண்டும் என்று ஏன் கொண்டுவரவில்லை? ஐ.என்.டி.யு.சி.-இல் அதிக அங்கத்தினர்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். உண்மை புரியாமல் சொல்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். நெய்வேலியில் மூன்று தொழிலாளர் சங்கங்கள் இருக்கின்றன. அந்த மூன்று சங்கங்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை அங்கத்தினர்கள் என்று பார்த்தால், ஐ.என்.டி.யு.சி.-இல் இருபது சத வீதத்தினர் கூட இல்லை. வேண்டுமென்றால் இரகசிய வாக்கெடுப்பு வைத்துப் பார்க்கட்டும். லேபர் கமிஷனர் சீக்ரெட் பாலெட் எடுத்துப் பார்க்கட்டும். ரிகக்னைஸ்டு யூனியன் என்று பெயருக்கு இருக்கலாமே தவிர, உண்மையான பிரதிநிதிகள், உண்மையான தொழிலாளர்களை வைத்து நடத்துகிற யூனியன் வேறு இருக்கிறது. அதை லேபர் கமிஷனர் பார்ப்பதில்லை. அதை அரசாங்கம் பரிசீலனை செய்வது இல்லை. நாலைந்து சங்கங்கள் சேர்ந்து, "இவ்வளவு போனஸ் தரவேண்டும், இவ்வளவு அடிப்படைச் சம்பளம் இருக்க வேண்டும், இவ்வளவு இன்க்ரிமெண்ட் தரவேண்டும்" என்று கோரிக்கைகளை வைத்தார்களென்றால், ஐ.என்.டி.யு.சி. என்ன செய்கிறார்கள்? "இப்பொழுது கொடுக்காதீர்கள், நாங்கள் ஆறு மாதம் கழித்துக் கேட்கிறோம், அப்பொழுது கொடுங்கள்" என்று சொல்வதாகத்தான் இருக்கிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்கள் இருக்கவே கூடாது என்று சட்டம் கொண்டுவாருங்கள். எதிர்க் கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம். ஆனால், ஒரே ஒரு தொழிற் சங்கம் இருக்க வேண்டுமென்றால், அந்தத் தொழிற் சங்கம் எது என்பதை அங்கிருக்கும் தொழிலாளர்கள் சீக்ரெட் பாலட் மூலமாக முடிவு கட்டவேண்டும். கை தூக்கும் முறை கூடாது. சீக்ரெட் பாலட் மூலமாகத் தொழிற் சங்கங்கள் உருவாக்கப்படவேண்டும். ஒரே ஒரு தொழிற்சங்கம் தான் இருக்கவேண்டும் என்ற வகையில் சட்டத்தைத் திருத்துங்கள். லேபர் கமிஷனரே முன்நின்று வாக்கெடுப்பை நடத்தட்டும். யாருக்கு மெஜாரிட்டி இருக்கிறதோ அவர்கள் தொழிற்சங்கத்தை வைத்து நடத்தட்டும்.

நெய்வேலிக்கு திரு. அண்ணாதுரை வந்தார். முத்தமிழ் மன்றத்தின் பெயரில் ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று சேர்ந்திருந்த கூட்டத்தில் திரு. அண்ணாதுரை அவர்கள் பேசினார்கள்.

"இப்படிச் செய்கிறார்களே" என்று சிலர் குறைப்பட்டுக்கொள்ளுகிறார்கள் என்றால் அவர்களுடைய நிலை புரிகிறது. "ஆளும் அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கம். அங்கே நடப்பது, மத்திய அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தில் இருக்கக்கூடிய நெய்வேலி ஸ்தாபனம். அங்கே போய் திரு. அண்ணாதுரை பேசுவதா?" என்று சிலர் நினைக்கலாம். அதற்கு நாங்கள் என்ன பண்ணுவது? மற்றவர்கள் பேசினால் கும்பல் கூடவில்லை என்றால் நாங்கள் என்ன பண்ண முடியும்? திரு. அண்ணாதுரை அவர்களைக் கூப்பிட்டார்கள். அதனால் அவர்கள் அங்கே போகிறார்கள். திரு. அண்ணாதுரை அவர்களை 'அவுட்லா' பண்ணிவிட்டார்களா? அவர் ராஜ்ய சபை மெம்பர். டெல்லியிலே போய் அவருடைய குறைகளை அவர் எடுத்துச் சொல்லலாம். அதுவும் கூட முத்தமிழ் மன்றம். ரிட்டன் கண்டிஷனை அவர்கள் அரசியலைப் பற்றிப் பேசக்கூடாது என்று உத்தரவாதம் வாங்கிக்கொண்டு பேச அனுமதிக்கப்பட்டார். அறிஞர் அண்ணா முத்தமிழ் மன்றத்தில் தமிழைப் பற்றிப் பேசக் கூடாதா? அதற்கு ஏன் இங்கே வயிற்றெரிச்சல்? காரணம் என்னவென்றால் இவர்களுடைய நோக்கம் அரசியல் தான். தங்கள் அரசியல் கட்சியின் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லையே. என்ற வருத்தமே தவிர தொழிலாளர்களுக்கு நன்மை செய்கிற அடிப்படை அல்ல. நான் மீண்டும் சொல்வேன். இன்றைக்கு அரசாங்கத் துறையில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு என்ன நன்மைகளை இவர்கள் செய்திருக்கிறார்கள்? சர்க்கார் அச்சகத் தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளுங்கள். டிரான்ஸ்போர்ட் இலாகா தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளுங்கள். தனியார் ஸ்தாபனங்களில் என்ன என்ன உரிமைகள், சலுகைகள் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்கிறோமோ அவற்றைக் கொடுத்திருக்கிறார்களா? ஆகவே அரசாங்கம் நடத்துகிற முறை சரியானது அல்ல. தொழிற்சாலையில் வேலை செய்கிற தொழிலாளர்களுடைய நலன் எல்லாவகையிலும் பாதுகாக்கப்படவேண்டுமென்றால், அவர்களுக்கு ஊதியம், போனஸ் ஆகியவை எல்லாம் நியாயமான அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டுமென்றால் தொழிற்சங்கங்களை வளர்த்தாக வேண்டும்.

இன்றைக்குப் பார்க்கிறோம். ரா மெட்டீரியல்ஸ் கிடைக்கவில்லை என்பதாக தொழிற்சாலைகளை மூடுகிறார்கள். 90 சதவிகிதம் கச்சாப் பொருள் கிடைத்து 10 சதவிகிதம் கிடைக்கவில்லை என்றாலும் கூட அதைச் சாக்காக வைத்து மூடுகிறார்கள். பெட்டிக்கு அட்டை கிடைக்கிறது, குச்சி கிடைக்கிறது, தொழிலாளர்கள் கிடைக்கிறார்கள், ஆனால் குளோரைட் கிடைக்கவில்லை என்பதாக தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன என்றால் இதற்கு யார் பொறுப்பாளி? அரசாங்கம் தான். அந்தக் கச்சாப் பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்கும்படியாக ஏன் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை? சட்டத்தைப் போட்டால் போதுமா?

*திரு. ஜே. மாதா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல





விரும்புகிறேன். நாடு விடுதலை அடைவதற்கு முன்பு நம் நாட்டில் இருந்த தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் எந்த நிலையில் இருந்தது, விடுதலை அடைந்த பிறகு நம் அரசாங்கம் தொழிலாளர்களுக்காக இயற்றியுள்ள பல சட்டங்கள் காரணமாக வாழ்க்கைத் தரம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதைத் தொழிலாளர் வர்க்கம் நன்கு புரிந்து கொண்டிருக்கிறது. மற்றவர்களுக்கு ஒருகால் புரியாமல் இருக்கலாம். தொழிலாளர்கள் நன்கு உணர்ந்து இருக்கிறார்கள். சட்டத்தை மாத்திரம் போட்டால் போதுமா என்று நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அங்கலாய்த்தார்கள்.

* * * * *

கனம் சபாநாயகர் அவர்களே, தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக சட்டம் செய்திருப்பதிலே நம் மாநிலம் தான் முன்னணியில் இருக்கிறது. அதை நாம் எல்லோருமே அறிந்திருக்கிறோம். இன்றைக்கு வெளியில் உள்ளவர்களும் அதைப் பாராட்டுகிறார்கள். முதலாளிகள் சட்டத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள பல ஏமாற்று வழிகளைக் கையாளுகிறார்கள் என்றால் அதற்கு நாம் எத்தகைய வழியைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று அரசாங்கத்திற்கு யோசனை சொல்வது சாலச் சிறந்ததாக இருக்குமே தவிர சட்டம் கொண்டுவந்ததே பிரயோசனம் இல்லை என்று சொல்வது சரியல்ல என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கலாம். கடந்த ஒன்பது ஆண்டு காலமாக நாம் பார்த்து வருகிறோம். தங்களுடைய நிலையை எடுத்துச் சொல்ல வாய்ப்பு அளிக்காமல், நோட்டீஸ் கொடுக்காமல், திடீரென்று சில இடங்களில் டிஸ்மிஸ் செய்து விடுகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய நிலைமை என்ன ஆவது? ஸ்டாண்டிங் ஆர்டரை வைத்துக்கொண்டு இம்மாதிரி காரியங்கள் நடைபெறுவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலேயே ஒரு சிறு தவறு நடந்துவிட்டது. முதலாளி, தொழிலாளி சர்ச்சையில் கோர்ட்டில் வாதாடினார்கள். கோர்ட்டில் இரண்டு தரப்பார் பேரில் க்ரிமினல் கேஸ் போடப்பட்டது. இரண்டு தரப்பாரும் குற்றவாளிகள் அல்ல என்று கோர்ட்டார் தள்ளிவிட்டார்கள். இருந்தும் முதலாளிகள் அவர்களை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். இப்படிச் சிறிய, சிறிய விஷயங்களுக்காக டிஸ்மிஸ் செய்வது முறையல்ல என்பதைப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இலாகா காரியதரிசியிடம்கூட இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் கோர்ட்டுகளுக்குப் போவதற்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்பதை நான் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் அவர்களுக்கு அந்த வாய்ப்பைத் தருவதற்கு வழிசெய்வார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமாக அண்மையிலே வேஜ்போர்டு அதனுடைய முடிவைக் கொடுத்திருக்கிறது. நாங்கள் அந்த முடிவை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்

[திரு. ஜே. மாதா கவுடர்] [9th March 1966

கிறோம். நாங்கள் பல நாட்களாக இதைக் கேட்டுக்கொண்டிருந்தோம். இப்பொழுது ஆண்களுக்கு 2¼ ரூபாயும், பெண்களுக்கு 1 ரூபாய் 80 காசுகளாகவும் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆண்களுக்கு 24 காசுகளும், பெண்களுக்கு 27 காசுகளும் உயர்த்திக் கொடுக்கப்படுகிறது. அந்தச் சட்டத்திலே 1947-ஆம் வருஷத்திலே அதிக இலை பறிக்கக்கூடிய பெண்களுக்கு அதிக வேஜ் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு அதே முறையில் தான் பச்சைத் தேயிலை பறித்தால் 7 காசுகள் தான் கொடுக்கப்படுகிறது. இன்னும் உயர்த்தப்படவில்லை. அதை 8 காசு, 9 காசு அல்லது 10 காசு என்று அதிகமாகக் கூட்டி நிர்ணயிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையும் வேஜ் போர்டு மூலமாகவே நிர்ணயிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டும். இது சம்பந்தமாகத் தொழிலதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடந்ததாகத் தெரிகிறது. அங்கே இருக்கக்கூடிய ஸ்டாஃப்புக்கு மற்ற உத்தியோகஸ்தர்களுக்கு எல்லாம் மின்சார வசதி கொடுக்கப்படுகிறது, ஆனால் தொழிலாளர்களுக்குமட்டும் கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது? அவர்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சலவைத் தொழிலாளர்களுக்கு ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக குறிப்பில் காணப்படுகிறது. மிக்க நன்றி. சாதாரணமாக அவர்களைச் சலவைத் தொழிலாளர்கள் என்று விட்டுவிடாமல் அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் மினிமம் வேஜஸ் ஆக்ட் பிரகாரம் ஒரு கமிட்டியைக் கொண்டுவந்திருப்பது மிக மிகச் சிறந்தது. உள்ளே என்ன வியாதி இருக்கிறது என்று கண்டுபிடிப்பதற்கும், அந்த வியாதியைப் போக்குவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று செய்வதற்கும் எப்படி டாக்டர்கள் இருக்கிறார்களோ, அதைப் போல வெளியிலே இருக்கக்கூடிய துணிகளைத் துவைத்துக் கொடுத்து ஆரோக்கியமாக இருப்பதற்கு அவர்கள் பாடுபடுகிறார்கள். அவர்களுக்கு மினிமம் வேஜ் போர்டு ஆக்ட் பிரகாரம் ஒரு கமிட்டியைக் கொண்டுவருவதற்கு நான் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுவது மட்டுமல்ல. லாண்ட்ரிஸ் என்றால் லாண்ட்ரிஸ் வாஷிங் கிளாத் இன்க்ளூடிங் உல்லன் கிளாத் என்று இருக்கிறது. எனக்கு ஒரு அச்சம் இருக்கிறது. கிராமப்புறங்களிலே உள்ள சலவைத் தொழிலாளர்களுடைய நிலைமை என்ன? அவர்களையும் இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டுவர முடியுமா என்று பார்க்க வேண்டும். கிராமப்புறங்களிலே அவர்கள் சலவை செய்து கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக நெல்லோ அல்லது அரிசியோ வாங்கிக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. இதற்கும் ஒரு சட்டம் கொண்டுவந்தால்தான் இது முற்றுப்பெற்ற சட்டமாக இருக்கும். இல்லாவிட்டால் மறுபடியும் இதற்காக ஒரு அமெண்ட்மெண்ட் கொண்டுவர வேண்டியிருக்கும். மெடிக்கல் பெசிலிட்டிசைப் பொறுத்தவரையில் தோட்டத்திலே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளைக் கண்காணிப்பது யார்? மற்ற ஆஸ்பத்திரிகளைக் கண்காணிக்க டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீசர் இருக்கிறார்.



9th March 1966] [திரு. ஜே. மாதா கவுடர்]

ஆனால் இதைக் கண்காணிப்பதற்கு யாரும் கிடையாது. அங்கே டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீசர் போய்விட்டு வரலாம், ஆனால் எந்த அதிகாரத்தோடும் அங்கே போய்க் கண்காணிக்க முடியாது. ஆகவே ஒவ்வொரு ஜில்லாவிலும் இதற்கு ஓர்க்ஸ்மென் மெடிக்கல் ஆபீசர்கள் போடவேண்டும். அவர்கள் அப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகளைக் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் போட முடியாவிட்டாலும்கூட அதிகமான தொழிலாளர்கள் இருக்கக்கூடிய மாவட்டங்களுக்காவது பரீட்சார்த்தமாக இதைப் போடவேண்டும். பிரசவ அலவன்சைப் பொறுத்தவரையில் மத்திய சட்டத்திலே கூட்டிக்கொடுக்கப்படுகிறது. ஆனால் அது மாநில சட்டத்திலே கொடுக்கப்படவில்லை. அதை மாநில சட்டத்திலேயும் ஏற்பாடு செய்யவேண்டும். அடுத்தபடியாக டிஸ்ட்ரிக்ட் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ்களை எடுத்துக் கொண்டால், எங்கள் பகுதியில் கச்சா பிலிம் தொழிற்சாலையில் வேலைக்கு ஆட்கள் எடுத்துக்கொள்வதைப்பற்றி நான் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் கூட எடுத்துச் சொன்னேன்.

*** திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, தொழிலாளரும், தொழிற்சாலையும் என்ற தலைப்புப் பற்றி வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை வரவேற்று நான் என்னுடைய சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். நாம் நன்றாக ஊன்றிக் கவனித்தோமேயானால் நாடு என்று சொல்லக்கூடிய ஒன்றே பெரிய தொழிற்சாலைதான். நாட்டிலே வாழுகின்ற மக்களும் அந்தப் பெரிய தொழிற்சாலையில் உழைக்கின்ற தொழிலாளர்கள்தான். எந்த ஒரு நாட்டு மக்கள் அசைவில்லாத உள்ளத்தோடு, ஊக்கத்தோடு உழைக்கின்றார்களோ அந்த நாடு நல்ல வளப்பமுடையதாக இருக்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இயற்கை வாய்ப்புக்கள் இயந்திரங்கள் ஆகும். அதையும் சேர்த்துக்கொள்ளலாம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** வள்ளுவர் கூறுகின்றார்;

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கமுடையா னுழை."

என்று. ஒரு தனி மனிதனாக இருந்தாலும், ஒரு பெரிய நாட்டிலே வாழுகின்ற மக்கள் சமுதாயமாக இருந்தாலும் அசைவில்லாத உள்ளத்தோடு எந்த நாட்டு மக்கள் உழைக்கின்றார்களோ அந்த நாடு பெரிய வளப்பம் உடைய நாடு ஆகும் என்பது இந்தக் குறளினுடைய கருத்து. அது மட்டுமல்லாமல் எந்தப் பெரிய நாட்டிற்கும், தீங்கு அல்லது இடையூறு வருவது உண்மைதான். தீங்கு நிகழ்ந்த காலத்திலும்கூட எந்த ஒரு நாட்டில் உற்பத்திப் பெருக்கு அதிகரிக்கின்றதோ அந்த நாடு தான் நாடு என்று கூறுகிறார்.

"பெரும்பொருளாற் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு."

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [9th March 1966

என்பது குறள். துன்பம் வந்த காலத்தும் அசைவில்லாத உள்ளத்தோடு அயராது உழைக்கின்ற நாட்டுமக்கள் தான் அந்த நாட்டை வளப்பமுடையதாக ஆக்குவார்கள் என்பது தான் கருத்து. சில நாட்களுக்கு முன்பு கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அரிய பிரசங்கம் ஒன்று ஆற்றினார். ஜப்பான் என்ற ஒரு நாடும், மேற்கு ஜெர்மனி என்ற ஒரு நாடும் யுத்தங்களால் பெரிய இடையூறுகளுக்கு உள்ளாகியும், இடையூறு காலத்திலே அந்த நாட்டு மக்கள் அசைவில்லாத உள்ளத்தோடு, ஆக்க முயற்சியோடு முனைந்து செயலாற்றிய காரணத்தாலே இன்று பெரிய பெரிய நாடுகளுக்கு இணையாக இந்த நாடுகளும் முன்னேறியிருக்கின்றன என்று கூறினார்கள். அது உண்மை தான். தொழில் என்ற ஒரு சொல் நான்கு அங்கங்களைக் கொண்டதாக இருக்கிறது. ஒன்று தொழிலை ஆரம்பிக்கின்றவர்கள், இரண்டு, அதிலே போடப்படுகின்ற முதல், மூன்று தொழிலுக்கு ஏற்புடைய சாலை. நான்காவது தொழிலாளர்களுடைய இனம். தொழிலாளர் இனம் தான் தொழில் வளத்திற்கு, நாட்டு வளப்பத்திற்கு அடிப்படையாக விளங்குகிற அம்சம் ஆகும். அந்தத் தொழிலாளர் இனம் என்று சொல்லப்படுகின்ற அம்சத்தைப் பெற்று எந்த நாடு உறுதியுடன் நின்று வளப்பத்திற்கு உண்டான வழிவகைகளைச் செய்கிறதோ அந்த நாட்டிலேதான் உண்மையான வளப்பம் பெருகும். தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகள், அவர்கள் வாழ்க்கை நடத்திச் செல்லக்கூடிய அளவுக்கு உழைப்பிலே வரக்கூடிய ஊதியம் இவையெல்லாம் மிகுமானால் அவர்களுடைய ஊக்கப்பாடும் மிகும். ஊக்கப்பாடு மிகுந்து அவர்கள் உழைக்கும்போது தொழிலில் வளம் பெருகும். அப்பொழுது நாட்டு வளம் பெருகும். இந்த முயற்சியை மேற்கொண்டுதான் அரசாங்கமானது தொழிலாளர்கள் இனத்திலே கவனம் செலுத்தி, அவர்களுக்கு வேண்டிய நல்ல வாய்ப்புக்களை அந்தந்தச் சமயங்களிலே கொடுத்துக்கொண்டு வருகிறது என்பதை நாம் காணும்பொழுது நாம் நம்முடைய மனத்திலே நிம்மதியைப் பெறுகின்ற நிலையை அடைகின்றோம்.

12-00 noon. விவசாயத் தொழிலைப் பொருத்தமட்டில் நான் கூற விரும்புவது என்னவென்றால்—

'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு'

என்பது வள்ளுவர் கூற்று. எந்த ஒரு நாட்டிலே தட்டுப்பாடு இல்லாது நிறைய விளைகிறதோ அந்த ஒரு நாட்டிலே பஞ்சம் இருக்காது. அப்படி இருக்க வேண்டுமென்றால் விவசாயம் என்று சொல்லக்கூடிய பெரிய தொழில் ஒரு நாட்டிலே வளம் பெருகியிருக்கவேண்டும். அப்படி நாம் பார்ப்போமேயானால், அந்த விவசாயத் தொழிலிலே ஈடுபட்டு உழைக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நல்ல ஒரு ஊதியத்தை அமைத்துக் கொடுக்க வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு உண்டு.

'ஏரும் இரண்டுளதாய்
இல்லத்தில் வித்துளதாய்



9th March 1966] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுடை

நீர் அருகே சேர்ந்த நிலமுளதாய்
சென்று வர எளிதாய்
செய்வாரும் சொல் கேட்பில்
என்றும் உழவே இனிது'

என்ற ஒரு பாட்டு. 'செய்வாரும் சொல் கேட்பில்' என்பது விவசாயத் தொழிலாளர்களைக் குறிப்பிட்டு வருகின்ற சொல். அவர்கள் தாங்கள் ஈடுபட்டிருக்கின்ற விவசாயத் தொழிலிலே நன்றாக முனைந்து வேலை செய்ய வேண்டுமென்றால், அதனால் வருகின்ற ஊதியம் நன்றாக இருக்கவேண்டும். குத்தகைக்கு நிலத்தை எடுத்து உழுகிறவர்களையெல்லாம் கூட விவசாயத் தொழிலாளர் என்ற இனத்திலேதான் சேர்க்கவேண்டும். உழைக்கிறவர்களுக்கு 60 பங்கு, நிலம் உடையவர்களுக்கு 40 பங்கு என்று டெனன்ட்ஸ் ஆக்டில் அரசாங்கம் அமைத்திருக்கிறது. அது ஒரு நல்வாய்ப்பு என்று சொல்லக்கூடிய நிலைமை அமைந்திருக்கிறது. அந்தச் சட்டத்தையும் மீறி தஞ்சை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் விவசாயப் பெருங்குடி மக்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். இதைப் பற்றித் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள், 'நிச்சயமாக கவனித்து ஆவன செய்யப்படும்' என்ற உறுதிமொழியை அளித்தார்கள். அது மிக, மிக வரவேற்கக் கூடிய ஒன்று.

அதற்கு மேலே, நிலம் குத்தகைக்கு வாங்காமல், விவசாயத் தொழிலிலே தொழிலாளர்களாக, மண்வெட்டி ஒன்றுதான் இருக்கக்கூடிய இருப்பு என்ற வகையிலே, உழைக்கின்ற விவசாயத் தொழிலாளருக்கு, நல்ல ஊதியம், தினக்கூலி கிடைக்கக்கூடிய அளவு அரசாங்கம் முனைந்து செயலாற்ற வேண்டுமென்று வேண்டுகிறேன். அந்த ஒரு வகையில் சாதாரணமாகக் கம்பன் சொல்வது—

'நிலம் சுரக்கும் நிறைவளம்
கலம் சுரக்கும் கணக்கிலா நிதி
பிலம் சுரக்கும் பெருமணி
பெறுதற்கரியதம் குலம் சுரக்கும்
ஒழுக்கம் குடிக்கெலாம்'

என்றார். பெருங்குடி என்று சொல்லக்கூடிய நாட்டில் ஓரே ஒரு தொழிற்சாலைதான். அந்தத் தொழிலில் இருந்து வருவது ஒழுக்கம் நிறைந்த மக்கள். ஒழுக்கம் நிறைந்த மக்கள்தான் நாட்டுக்கு இன்றியமையாத கருவி என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த ஒருவகையிலே எந்த நாடு விளங்குகிறதோ அந்த நாடு பெருவளம் மிக்கதாக இருக்கும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. காஞ்சி மணிமொழியார் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, தொழிலாளர், தொழிற்சாலைகள் பற்றிய மானியத்தின் மீது எதிர்க்கட்சியின் சார்பில் கொடுக்கிருக்கும் வெட்டு

பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சுதந்திரம் பெற்றதற்குப் பின்னால் தொழிலாளர்களுடைய நன்மையைக் கருதி பல சட்டங்களை இயற்றியிருக்கிறோம். அவர்களுக்கு வேலை வாய்ப்பு, வேலை உறுதி, கூலி நிர்ணயம் ஆகியவை பற்றிய பலவகைச் சட்டங்களை நிறைவேற்றி வைத்திருக்கிறோம். அதற்காக இந்தச் சர்க்கார் எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு தொழிலாளர்களுக்கு எந்தவகையிலும் பாதகம் ஏற்படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள முயன்று வருகிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே முதலாளிகள் அந்தச் சட்டங்களிலே எங்கெங்கு ஓட்டை இருக்கிறது என்று கண்டறிந்து அதிலிருந்து தப்பிச் செல்லவும் முயலாமல் இல்லை. அதுவும் நன்றாகத் தெரிகிறது.

அச்சுக்கூடத் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால் ஒரு அச்சுக்கூடத்தில் தொடர்ந்து ஒருவர் பத்துப் பதினைந்து ஆண்டுகள் வேலை செய்கிறார். அத்தனை ஆண்டுகள் வேலை செய்த பிறகும் அவர் நிரந்தரமாக்கப்படுகிறாரா என்றால் இல்லை. அவர்கள் எல்லாம் ஏழெட்டு வாரங்கள் வேலை செய்த பிறகு இடையிலே ஒரு வாரம் நிறுத்தி விடுகிறார்கள். பிறகு மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்கிறார்கள். இப்படிப் பத்துப் பதினைந்து ஆண்டு காலம் பல தொழிலாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இடையிலே அவர்களை ஓரிரு வாரங்கள் நிறுத்துவதன் காரணமாக அவர்களுக்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அந்த மாதிரி நிலைமையைப் போக்க சட்டத்திலே எந்த வகையிலே வழி செய்ய முடியும் என்று பார்த்து, செய்யவேண்டும். ஒரு அச்சுக்கூடத்திலே ஒருவர் 240 நாட்கள் தொடர்ந்தோ அல்லது இடைவிட்டோ பணியாற்றி இருப்பாரேயானால் அவர் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற முறையில் சட்டம் திருத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்தால் இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் நிச்சயமாக ஏற்பட முடியாது.

நெசவுத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை எந்த விதமான பாதுகாப்புச் சட்டமும் கிடையாது. ஏனைய தொழிலாளர்களுக்கு எல்லா வகையான பாதுகாப்பையும் கொடுத்திருக்கிறோம். ஷாப்பிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்குக்கூடச் சட்டம் செய்து வைத்திருக்கிறோம். ஒரு ஷாப்பிலே ஒருவர் அல்லது இருவர்தான் வேலை செய்கிறார்கள். ஆனால் நெசவுத் தொழிலிலே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை எட்டு லட்சம் பேர் வரை இருக்கிறார்கள். அவர்களை நம்பி அவர்கள் குடும்பத்திலே ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக எந்த விதமான பாதுகாப்புச் சட்டமும் இதுவரை செய்யவில்லை. சாதாரணமாக அவர்களுடைய நிலைமை அடுத்த நாளுக்கு வழி அற்ற நிலைமையிலே வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களைத் திடீரென்று வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். தூணித் தேக்கம் கொஞ்சம் இருக்குமானால், உடனே ஸ்ட்ரைக் ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்துடனேயே கூலியைக்





குறைக்கிறார்கள். கூலியைக் குறைத்தவுடனே தங்களுடைய சம்பளம் போய் விடுகிறதே என்று வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இப்படி தொடர்ந்து ஒரு மாதம் ஒன்றரை மாதம் சென்று விடுகிறது. வேறு எங்காவது வேலை நிறுத்தம் என்றால் சர்க்காரும் கவலை கொண்டு வேலை நிறுத்தத்தை எப்படி முற்றுப் பெறச் செய்வது என்று முயற்சி எடுக்கிறார்கள். கைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அவர்கள் ரோட்டிலோ தெருக்களிலோ நின்று பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தும் கூட, அவர்களுக்கு என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி யோசிக்காமல் இருப்பது வருந்தத்தக்கது.

மாஸ்டர் வீவர்கள் 20-ல் இருந்து 40 தறி வரை வைத்து வேலை வாங்குகிறார்கள். மற்றத் தொழிலாளர்களுக்கு இருப்பது போல் இவர்களுக்கும் 20 நெசவுத் தொழிலாளர்களுக்கு மேல் வைத்து வேலை வாங்கினால் அந்த மாஸ்டர் வீவர்களை கட்டுப்படுத்தும் வகையில் போனஸ் சட்டம் கம்பெனிச் சட்டத்தை விரிவு படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வது பற்றி இந்தச் சர்க்கார் சிந்தித்துப் பார்ப்பது நல்லது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சாதாரண ஏழை நெசவுத் தொழிலாளர்கள் தாங்களாகப் போராடி எதையும் பெற முடியாது. ஒரு நாள் அல்லது இரண்டு நாளுக்கு மேல் அவர்களால் வேலைக்குப் போகாமல் இருக்க முடியாது. சைதாப்பேட்டையில் இதே மாதிரி கூலி குறைக்கப்பட்டதால் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. இரண்டு பேருக்கும் இடையே சமரசம் செய்து வைக்க எவ்வளவோ முயற்சி செய்தும் முதலாளிகளும் மாஸ்டர் வீவர்களும் ஒத்து வரவில்லை. அதற்குப் பிறகு ஆயிரம் ரூபாய் வரை நிதி திரட்டி நெசவாளர்களுக்கு உணவு கொடுத்துக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. குன்றத்தூரிலும் இதே போன்று நிதி திரட்டி அவர்களைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே, இவர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் நிச்சயமாகத் தேவை. வேலைப் பாதுகாப்பும் அவர்களுக்குத் தரவேண்டும். அதற்கான ஒரு சட்டத்தை எந்த முறையில் கொண்டு வரலாமோ அந்த முறையில் ஒரு சட்டத்தை விரைவில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கைத்தறித் துணி நமக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. அப்படி அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகிற இந்த நெசவாளர்கள் அடிக்கடி ஸ்ட்ரைக் செய்வதும், அதனால் அவர்களுக்கு பாதகம் ஏற்படுவதும் குழந்தை குட்டிகள் கஷ்டப்படுவதும் ஆன இப்படிப்பட்ட நிலைகள் ஏற்படாதிருக்க ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். விவசாயிகளுக்குச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம், தொழிலாளர்களுக்குச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம், பீடித் தொழிலாளர்களுக்கும் கடைச் சிப்பந்திகளுக்கும் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். ஆக, இப்படியெல்லாம் இதர தொழிலாளர்களுக்காக சட்டங்கள் கொண்டு வந்திருக்கிறபோது இந்த நெசவாளர்களுக்

[திரு. காஞ்சி மணிமொழியார்] [9th March 1966

கும் இவர்கள் வேலை போகாமல் இருப்பதற்கான முறையில் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் சட்டத்தை உருவாக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளவேண்டும். ஸ்பெஷல் ட்ரெயினிங் ஸ்கீம் என்று மற்றத் தொழிலாளர்களுக்கு வைத்திருக்கிறோம். இந்த நெசவுத் தொழிலில் இவர்கள் நீடித்து நிற்கமுடியாது என்று தெரிகிறது. அத்தொழில் குறைந்து கொண்டே வருகிறது. ஆகவே இவர்கள் ஒரு மாற்றுத் தொழிலைக் கற்றுக் கொள்ளும் விதத்தில் ஒரு ஸ்பெஷல் ட்ரெயினிங் ஸ்கீம் போட்டு மில்களில் வேலை செய்வதற்கான பயிற்சியை அவர்களுக்கு முதலில் கற்றுக் கொடுத்து விட்டால் புது மில்கள் தொடங்கும்போது வேலையில்லாது திண்டாடிக் கொண்டிருக்கிற நெசவாளர்கள் அங்கு சென்று வேலையில் அமர உதவியாக இருக்கும். ஆகவே அத்திட்டத்தையும் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீட்டு வசதி இவர்களுக்கு செய்து கொடுத்தது நிறுத்தப்பட்டிருக்கிறது. சிலவிடங்களில் மட்டும்தான் வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே ஏழை நெசவாளிகளுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தை மேலும் விஸ்தரிக்கவேண்டும். இந்தியன் டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட்டில் சாதாரணமாக 1½ ஆண்டு காலம் பயிற்சி பெறுகிறார்கள் மாணவர்கள். அப்படிப் பயிற்சி பெற்ற பிறகு ஆறு மாத காலம் ஒரு தொழிற்சாலையில் நேரடிப் பயிற்சிக்காக அனுப்பப்படுகிறார்கள். இங்கிருந்து மதுரை, கோவை, சேலம் போன்ற இடங்களுக்கு அனுப்புகிறார்கள். அங்கு போன பிறகு அங்குள்ள தொழிற்சாலையில் இங்கு வேலை இல்லை என்று திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். இப்படி போய்ப்போய் திரும்பி வந்து ஏராளமானவர்கள் தங்கள் பணத்தையும் காலத்தையும் வீணாக்கியிருக்கிறார்கள். படித்து ஆறு மாத காலம் ட்ரெயினிங் பெற்று வந்தவர்கள் கூட இன்று வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவற்றை எல்லாம் கவனித்து பயிற்சியை முடித்தவர்களுக்கு வேலை கிடைக்கவும், ஆறு மாதம் பயிற்சி பெற வேண்டியவர்களுக்கு உள்ளூரிலேயே பயிற்சி கொடுப்பதற்குரிய வாய்ப்பையும் அளிப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

* **திரு. சீ. சிவசுப்பிரமணியன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தொழிலாளர் நலன் கோரிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகள்கூற முன் வந்திருக்கிறேன். இந்த நாட்டின் முதுகெலும்பு விவசாயிகள் என்று நம் தேசத் தந்தை காந்தி அடிகள் கூறியிருக்கிறார்கள். அம்முறையில் விவசாயிகளின் நலனுக்காக நம் அரசாங்கம் நல்லமுறையில் பல பல திட்டங்களை வகுத்து அவர்களின் முன்னேற்றத்திற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்று கூடப் பல பெரும் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தியாகி குமரப்பா அவர்கள் விவசாயிகளுக்கு 100 க்கு 75 வாரம் கொடுக்கவேண்டுமென்று ஒரு காலத்தில் எழுதியுள்ளார்கள். நம் சர்க்கார் இன்றையதினம் விவசாயிகளுக்கு 60-ம் மிராசுதார்களுக்கு 40-ம் என்று ஒரு சட்டத்தை தீட்டியிருக்கிறார்கள். அச்சட்டம் நல்லமுறையிலுள்ள சட்டம்தான். இந்தச் சட்டத்தைப் போட்ட நேரத்தில்தான் நல்ல



9th March 1966] [திரு. சீ. சிவசுப்பிரமணியன்]

முறையில் இதை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். என்னுடைய சிதம்பரம் தாலூகாவைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டம் இன்றைக்கு அமலில் இல்லை. திட்டம் என்று சொல்லிக்கொண்டு முன்பு இருந்த நிலையில்தான் மூன்றில் ஒரு பங்கு, நான்கில் ஒரு பங்கு என்ற முறையில் விவசாயிகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். முறைப்படி பாதி வாரம் என்று சொன்னாலும் ஓரளவு விவசாயிகள் நல்லமுறையில் வாழ முடியும். அதுவும் இல்லை. சட்டப்படி இவ்வளவு வாரம் உண்டு என்று சொன்னால் நிலம் கொடுத்தால் தானே வாரம். நிலத்தை விட்டு வெளியேற்றவேண்டுமென்ற ஒரு கெட்ட மனப்பான்மை அங்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. முறைப்படி ரசீது கொடுக்கவேண்டும். நிலத்தில் ஒருவன் பயிரிட்டால் ரசீது இருந்தால்தான் தொடர்ந்து பயிரிட முடியும். ஆனால் ரசீது கொடுக்க மறுக்கிறார்கள். ரசீது கொடுக்கப்படுவதில்லை. ரசீது கேட்டால் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். இப்போதுகூட சிதம்பரத்தில் அறுவடை நடந்து கொண்டிருக்கிறது. நான் அங்கு சென்று பல மிராசுதார்களைச் சந்தித்து ரசீது கொடுங்கள் அதனால் உங்களுக்கு என்ன நஷ்டம் என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ரசீது கொடுத்துப் பழக்கம் இல்லை. நிலத்தை விட்டு வெளியேற்றினால்தானே ரசீது கொடுக்க வேண்டும், எதற்காக விவசாயிகள் பயப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ரசீது இருந்தால்தான் நிலம் நமக்கு இருக்கும் என்று விவசாயி நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். தகராறு ஏற்பட்டால் மிராசுதார் போலீசுக்குச் சென்று விடுகிறார். சப்-இன்ஸ்பெக்டர் வந்து 'நீ நிலத்தில் இறங்கக்கூடாது, ரசீது இருக்கிறதா' என்று கேட்கிறார் ரசீது கொடுத்தால்தானே அது இருக்கும். ரசீது கொடுக்காவிட்டால் விவசாயியிடம் ரசீது எப்படி இருக்கமுடியும்? ரசீது இருந்தால் உள்ளே வா இல்லாவிட்டால் நிலத்தில் இறங்கக்கூடாது என்று சொல்கிறார் போலீஸ் அதிகாரி. போலீசின் தலையீட்டினால் விவசாயிகளுக்கும் மிராசுதாரர்களுக்கும் இடையே சண்டை மூளுகிறது. அந்த விவசாயி அந்த நிலத்தில் பயிரிடுவது அடுத்துள்ள நிலக்காரருக்குத் தெரியும், கணக்குப்பிள்ளை, மணியக்காரர் இவர்கள் எல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ரசீது வேண்டுமென்று கேட்கிறார்கள். போலீஸ் தலையிடுவதினால் விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. அவர்களின் வாழ்வே பறி போகிறது. ஆகவே விவசாயிகளுக்கு ரசீது கொடுத்து அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படாமல் இருப்பதற்கான வழியை நம் அரசாங்கம் கைக்கொள்ளவேண்டுமென்று கனம் சபாநாயகர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். பண்ணையாள்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு திட்டம் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டப்படி நடக்கவில்லை. ஒரு மிராசுதார் 40 காணி நிலம் வைத்திருந்தால் அவர் நான்கு பண்ணையாட்களை வைத்துக்கொள்கிறார். மற்றவர்களை அத்துக் கூலிகளாக வைத்துக் கொள்கிறார். அத்துக்கூலியாக வருகிறவர்களுக்கு சரியானபடி ஒரு சட்டம் இல்லை. ஆகவே அவர்களுக்கான ஒரு சட்டம் தீட்டப்பட வேண்டும். அவர்களுக்கு நிரந்தரமான ஒரு கூலி இருக்கவேண்டும். குறிப்பாக அறுவடையை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு மூன்று மாதங்களுக்குத்தான் வேலை இருக்கும். உழவடை காலத்

[திரு. சீ. சிவசுப்பிரமணியன்] [9th March 1966

தில் மூன்று மாதங்கள் வேலை செய்கிறார்கள், அறுவடை காலத்தில் மூன்று மாதங்கள் வேலை செய்கிறார்கள். பாக்கி ஆறு மாதங்கள் விவசாயிகள் பட்டினியாகத்தான் இருக்கிறார்கள். அதன் காரணமாக பல குடும்பங்கள் வேதனைக்குள்ளாகிறார்கள். ஆகவே நம் முதல் அமைச்சர் அவர்கள் எப்படியாவது இவர்களுக்காக (அத்துக் கூலியாட்களுக்காக) ஒரு சட்டத்தை அமலுக்கு கொண்டு வர வேண்டும். தொழிலாளர்களுக்காக பலவிடங்களில் கூலி நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதேபோன்று விவசாயிகளுக்கும் கூலி நிர்ணயம் செய்யவேண்டும். அவர்களுக்கு இதுவரை கூலி நிர்ணயம் செய்யவேயில்லை. ஒரு இடத்தில் எட்டணா கொடுக்கிறார்கள், ஒரு இடத்தில் 10 அணா, ஒரு இடத்தில் 12 அணா, ஒரு இடத்தில் 1¼ ரூபாய், ஒரு இடத்தில் 1½ ரூபாய் என்று இப்படியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே இந்த விவசாயிகளுக்கும் கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். மற்ற தொழிலாளர்களுக்கு உள்ளதைப் போன்று இவர்களுக்கும் எல்லாச் சலுகைகளும் கொடுக்கவேண்டும். இவர்களுக்கு (விவசாயிகளுக்கு) ஆஸ்பத்திரி வசதி கிடையாது, கல்வி வசதி கிடையாது, வீட்டு வசதி கிடையாது, ஒரு மிராசுதாரிடம் ஒரு பண்ணையாள் 15 வருடங்களாக வேலை பார்த்து வருகிறார் என்றால் அவனுக்கு குடியிருக்க ஒரு இடத்தை வாங்கி விடுகிறார். அவனுக்கு வயதாகி வேலையை விட்டுப் போகும்போது, அந்த வீட்டை விட்டும் வெளியேறு என்று சொல்கிறார்கள். 15 ஆண்டுகளாக இங்கு குடியிருக்கிறானே, இங்கேயே இருந்து விட்டுப் போகட்டும் என்ற எண்ணம் மிராசுதாரர்களுக்கு ஏற்படுவது கிடையாது. வேலை விட்டு போகச் சொன்னவுடன் வீட்டையும் காலி செய்யச் சொல்கிறார்கள். 12 ஆண்டுகள் ஒரு வீட்டில் இருந்தால் அவர்களை அதைவிட்டு வெளியேறச் சொல்லக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஹரிஜன விவசாயிகளை எடுத்துக் கொண்டால் அவர்கள் வீடுகள் ஹரிஜனத் தெருவில்தான் இருக்கிறது. அங்கே ஒரு வீட்டை வாங்கி விடுகிறார்கள். ஆகவே, விவசாயிகள் 15 வருடங்கள் வேலையில் இருந்து ஒரு வீட்டில் இருந்து கொண்டிருந்தால் அவர்களை அதை விட்டுப் போக வேண்டும் என்று சொல்லக்கூடாது என்ற ஒரு சட்டத்தை அரசாங்கம் செய்ய வேண்டும். நடுத்தரக் குத்தகைதாரர்கள் என்ற ஒரு வகையினர் கிளம்பி இருக்கிறார்கள். சிட்டியில் அதாவது நகரத்தில் இருப்பவர் ஒருவர் கிராமத்தில் 40 காணி நிலம் வாங்கினால் அதை அவர் கிராமத்தில் 40 காணி வைத்திருப்பவர் ஒருவரிடம் ஒப்படைத்து விடுகிறார். அதனால் அந்த நிலங்கள் உழவர்களுக்குக் கிடைப்பதில்லை, பாட்டாளி மக்களுக்குக் கிடைப்பதில்லை. நடுத்தர குத்தகையை அவர் ஏற்றுக்கொண்டு தன் கீழேயுள்ள விவசாயிகளிடம் இந்த நிலங்களை அதிக குத்தகைக்கு விடுகிறார். இதனால் விவசாயிகள் ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, நடுத்தர குத்தகையை ஒழித்தே தீரவேண்டும். அது இருக்கவே கூடாது என்று கனம் சபாநாயகர் அவர்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நடுத்தர குத்தகைதாரர்களுக்கு நிலம் கொடுப்பதைவிட்டு விட வேண்டுமென்றும் அதற்கு சட்டத்தில் குறிப்பிட்ட இடம் கொடுத்து நடுத்தர குத்தகை இருப்பதைத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உழைப்பதற்குத் தகுந்த கூலி கொடுக்கப் படவேண்டும், இதை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஒரு பண்ணையாளை வெளியேற்றுவதாக இருந்தால் பல விதங்களில் வெளியேற்றலாம் என்றிருக்கிறது. முதியோர் என்ற காரணத்திற்காக வெளியேற்றவேண்டுமென்றால், ஆறுமாத வரும்படியைக் கொடுத்துவிட்டு அவர்களை வெளியேற்றலாம் என்று சட்டம் இருக்கிறது. அதாவது வயதாகி விட்டது இனிமேல் உங்களால் வேலை செய்ய முடியாது என்ற காரணத்தைச் சொல்லி அவர்களுக்கு 6 மாத வரும்படி கொடுத்து வெளியேற்றலாம் என்றிருக்கிறது. ஆனால் இது எங்கே சரியாக கொடுக்கப்படுகிறது. ஒரு இடத்திலும் சரியாக கொடுப்பதில்லை. பிற தொழிலாளர்களை எல்லாம் எடுத்துக் கொண்டால் போனஸ் போன்ற பல சலுகைகள் கிடைக்கின்றன. ஆனால் விவசாயத் தொழிலாளர்களுக்கு போனஸ் போன்றவை கிடையாது. ஆகவே இவர்களை வெளியேற்றும்போது, ஆறு மாத சம்பளத்தை கொடுத்து —சந்தோஷமாக—இவர்களை அனுப்புவதற்கு ஏற்ற வகையில் ஒரு சட்டத்தைத் தீட்ட வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



9th March 1966] [திரு. சீ. சிவசுப்பிரமணியன்]

127839

குறிப்பாக நெய்வேலியைப்பற்றிச் சொன்னார்கள். நெய்வேலியில் இருக்கின்ற சேர்மென் ரூர்கேலாவிலிருந்து வந்திருக்கிறார்கள். தென்னாற்காடு ஜில்லாவில் ஏராளமான உழைப்பாளிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலங்கள் தான் நெய்வேலித் திட்டத்திற்காக எடுக்கப்பட்டன. பத்து மைல் சுற்றளவுக்கு நிலங்களை எல்லாம் எடுத்தார்கள். அப்போது நிலங்களை எடுக்கும்போது, உங்களுக்கெல்லாம் நெய்வேலித் திட்டத்தில் வேலை கிடைக்கும், உங்களுக்கு எல்லா விதமான வசதியும் உண்டு. வீடு உண்டு, ஆஸ்பத்திரி உண்டு, எல்லா விதமான வசதிகளும் தரப்படும் என்று சொல்லி அவர்களுடைய நிலத்தை எடுத்தார்கள். ஆனால் அவர்களுக்கு இப்போது அங்கு வேலையில்லை. யாருக்கு வேலை கொடுக்கிறார்கள், ரூர்கேலாவிலிருந்து ஆட்களை வேலைக்கு வரவழைத்திருக்கிறார்கள். சேர்மென் ரூர்கேலாவிலிருந்து வந்திருப்பதால், அவர்கள் அங்கிருந்து வேலைக்கு ஆட்களை இறக்குகிறார்கள். இங்கிருக்கக்கூடியவர்கள் 'ஆ' என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் என்ன செய்வார்கள், ஏதாவது வேலை கொடுங்கள் என்று கேட்டால் வேலை கொடுப்பதில்லை, ஆஸ்பத்திரியில் போய் ஏதாவது கேட்டால், "நீ எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறாய், கார்ப்பரேஷனிலிருந்து வரவில்லையா போ உனக்கு ஒன்றும் இங்கு கிடையாது, பக்கத்து ஊரா கிடையாது, கார்மேட்டுக்குப்பமா கிடையாது" என்று வெளியே அனுப்பிவிடுகிறார்கள். அதோடு பக்கத்திலுள்ள ஊர்களை எல்லாம் சேர்த்து பஞ்சாயத்து அமைத்தால் ஆஸ்பத்திரி போன்ற வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்றால், அதற்கும் கொடுக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கிராமங்கள் எல்லாம் கார்ப்பரேஷனிடம்தான் இருக்கவும் வேண்டும் பஞ்சாயத்துக்காக விட்டுக்கொடுக்கவும் மாட்டோம்

என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக அங்கேயுள்ளவர்கள் எல்லாம் பெரிதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை இருக்கக்கூடாது, இதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கோ. சி. மணி: மாமன்றத் தலைவர் அவர்களே இன்றையதினம் விவாதத்தில் இருக்கின்ற தொழிற்சாலைகள், தொழிலாளர் நலன்கள் என்ற மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய இயக்கத்தின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் 188 கோடி 41 லட்சம் ரூபாய் செலவழிக்க திட்டமிட்டு, தொழிலாளர்கள் நலனுக்காக கேட்கப்பட்டிருக்கின்ற தொகை 2 கோடி 19 லட்சத்து, 16 ஆயிரத்து 200 ரூபாய். இது போதாது என்பதை இந்த மன்றத்தில் பலர் எடுத்துக்கூறினார்கள். என்றாலும், இந்த மன்றத்தில் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தின் போதும், இப்படிப்பட்ட மான்யக் கோரிக்கைகள் வருகின்ற நேரங்களிலும் மானத்தைக் காக்கின்ற நெசவாளர்களுக்கும், உயிரைக்காக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஒரு நிரந்தரமான சட்டம் வேண்டும் என்பதை ஆளும் கட்சியிலுள்ள சிலரும், எதிர்க்கட்சியிலுள்ள பலரும் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். சென்ற தடவை இதைப்பற்றிய விவாதம் நடைபெற்றபோது, அதற்கு நான்கு அமைச்சர்கள் பதில் அளித்தார்கள்—முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். 1952-ம் ஆண்டு போடப்பட்ட தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அதற்கு குறிப்பிட்டு சொன்னேன், அதில் குறிப்பிட்டிருப்பது பண்ணையாள்களைப்பற்றியது, ஆனால் அத்துக்கூலி செய்து பிழைத்துக்கொண்டிருக்கும் தொழிலாளர்கள் பிரச்னை வேறு, வேண்டுமென்று மிராசுதார் நினைத்தால் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடலாம், இவர்கள் விவசாயத் தொழிலாளர்கள். இத்தகைய தொழிலாளர்கள் 92 லட்சம் சொச்சம் பேர்கள் இருக்கிறார்கள் இந்த நாட்டில் என்பதை நான் சொல்லவில்லை, இந்த மன்றத்தில் ரெவின்யூ அமைச்சர் அவர்களே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய 92 லட்சத்து சொச்சம் பேர்கள், ஏறக்குறைய ஒரு கோடி தொழிலாளர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், இவர்களுக்கென்று தனியாக ஏதாவது சட்டம் உண்டா என்றால் இல்லை. தொழிற்சாலைகள், தொழிலாளர்கள் என்று நாம் மான்யக் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறோம். விவசாயிகளுக்கு தனியாக இந்த அளவுக்கு கூலி கொடுக்கவேண்டுமென்றோ, அவர்களுக்கு. நிலங்களில் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றோ இருக்கிறதா என்றால்; இல்லை என்ற நிலைமை தான் இன்று நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. இவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கு நாம் முயற்சி செய்கின்றோமா என்று பார்த்தால் பல சட்டங்கள் செய்து வைத்திருக்கிறோம் என்று





சொல்லப்படுகிறது. பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் என்று நிறைவேற்றப்பட்டது, இன்றைய தினம் அந்தச் சட்டம் பண்ணையார் பாதுகாப்புச் சட்டமாகத்தான் மாறிவருகிறது. எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் அவர்கள் பண்ணையாட்களாக இருக்கின்ற வயது முதிர்ந்தவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுகின்றார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன நிலைமையில் எங்கோ ஒரு சிலர் இருக்கலாம். பண்ணையாட்கள் என்பது உண்டா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. 100-க்கு 90 பேர்களை நீக்கியாய் விட்டது. 200 ரூபாய் கொடுத்துவிட்டால் பண்ணையாட்களை வெளியேற்றிவிடலாம் என்ற அடிப்படையில் பெரும்பான்மையான பண்ணையாட்கள் இன்றைய தினம் வெளியேற்றப்பட்டுவிட்டார்கள். மேலும் நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்ததற்குப் பின்னால், பண்ணையாட்கள் பெரும்பான்மையோர் வெளியேற்றப்பட்டுவிட்டார்கள். பண்ணையாளை பாதுகாக்க வந்த சட்டம் பண்ணையார்களை பாதுகாத்துவிட்டது. இதற்குக் காரணம் அமைச்சர்களா அல்லது இலாகாவினரா என்று என்னால் சொல்ல முடியாது, ஆனால் இயற்றப்பட்ட இச்சட்டத்தினால் தான் என்பதை நான் மிக மிக வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.

நான் இந்தப் பிரச்னையைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில், இதைச் சொல்லுகிறவன் திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்தவன் ஆயிற்றே என்று தயவு செய்து அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை அணுகக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் இந்தப் பிரச்னை அமைச்சர் அவர்களால் முன்பே ஒத்துக் கொள்ளப்பட்ட பிரச்னை. 92 லட்சம் சொச்சம் பேர்கள் விவசாயக் கூலிகளாக இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்பது எல்லோராலும் ஏகோபித்து ஒத்துக்கொள்ளப் பட்ட விஷயம். இவர்களுடைய பிரச்னை என்றால் மிக கேவலமாக நினைக்கின்றார்கள். மேட்டூரில் தண்ணீர் திறந்து விடப்பட்ட உடனே, தஞ்சாவூரில் சாகுபடிக்கு தயாராக இருப்பார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மேட்டூரில் தண்ணீர் திறந்துவிட்டு, தஞ்சாவூர் வருவதற்குள்ளாக, மன்னார்குடிக்கும், மாயவரத்திற்கும் திருத்துறைப்பூண்டிக்கும், போலீஸ் வானும், ஜீப்புக்களும் இலாகா அதிகாரிகளும் செல்லுகின்றார்கள். ரிசர்வ் போலீஸ் வருகிறது, உயர்தர போலீஸ் படை வருகிறது, இதற்கு என்ன காரணம், விவசாயிகளிடையே தண்ணீர் வரும்போது சச்சரவு ஏற்படும், கிஸான் ட்ரபிள் வரும், அவர்களுக்கிடையில் கூலி சம்பந்தமான பிரச்னைகள் வரும், இதன் காரணமாக சச்சரவுகள் வரும். இதன் காரணமாக கலகம் வரும், இதைத் தடுப்பதற்கு போலீஸ் கொண்டு வரப்படுகிறது என்று சொல்கிறார்கள். தொழிற்சாலைகள் திறக்கும்போது இவ்விதம் போலீஸ் வருவதில்லை, வேறு ஒரு இடத்தில் ஒரு தொழிற்சாலையோ சுருட்டுத் தொழிற்சாலையோ மற்றவையோ ஆரம்பித்தால் அதற்கு போலீஸ் வருவதில்லை. ஆனால் விவசாயத் தொழிலாளர்களை அடக்குவதற்கு போலீஸ் வருகிறது; இப்படிப் பட்ட நிலைமை என் ஏற்படுகிறது? இதற்கு காரணம் அங்கே கிஸான் ட்ரபிள் ஏற்படும், அதை தடுப்பதற்குத்

தான் போலீஸ் என்று சொல்லப்படுகிறது. என்னுடைய ஊரை அடுத்து போலீஸ் நிலையம் இருக்கின்ற இடம் குத்தாலம். அங்கே திருடர்கள் லிஸ்ட் இருக்கிறது, ரௌடிகள் லிஸ்ட் இருக்கிறது, இந்த லிஸ்டுகளோடு சேர்ந்து இன்னொரு லிஸ்டும் இருக்கிறது. கிஸான் ஏரியா என்று ஒரு லிஸ்ட் எடுத்திருக்கிறார்கள். இன்னின்ன ஏரியாவில் இன்னின்னார் கிஸான் லீடர்கள் என்று குறிப்பிட்டு பட்டியலையும் சேர்த்திருக்கிறார்கள். கள்ளர்கள் (திருடர்கள்) பட்டியல், ரௌடிகள் பட்டியல், இவற்றின் பக்கத்தில் கிஸான் ஏரியாவில் இருக்கின்ற கிஸான் லீடர்கள் என்ற பட்டியலையும் தொங்கவிட்டிருக்கிறார்கள். இவ்விதம் தொங்கவிடப்பட்டிருக்கின்ற கிஸான் லீடர்கள் பட்டியலில் துரதிருஷ்டவசமாக என்னுடைய பெயரையும் சேர்த்திருக்கிறார்கள். எவ்வளவு கேவலமாக இருக்கிறது . . . . .

**கனம் சபாநாயகர்:** அரசியல் தலைவர்களுடைய பட்டியலும் அவர்களிடம் இருக்கலாம். இதில் கேவலம் என்ன இருக்கிறது ?

**திரு. கோ. சி. மணி:** இப்படி இருப்பதற்கு காரணம் அடிக்கடி கிஸான் தகராறுகள் ஏற்படுகின்றன. விவசாயிகள் கூலி இவ்வளவு வேண்டும் என்று கேட்பார்கள், மிராசுதார் இவ்வளவு தான் தர முடியும் என்று சொல்வார்கள். இவ்வித கூலி கொடுப்பதில் வித்தியாசம் ஏற்படுகிறது. இதன் காரணமாக அடிதடி ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு அடுத்த ஊர்க்காரர்கள் வந்து சேருகிறார்கள். பின்னால் போலீஸ் வருகிறார்கள். போலீஸ்காரர்களிடத்தில் மிராசுதார் இவ்வளவு கூலி இல்லை என்று சொல்லுகிறார்களே என்று முறையிட்டால் ‘இந்த அளவுக்கு தரவேண்டும் என்று நீங்கள் மிராசுதார்களிடத்தில் கேட்கலாம், அவர்கள் இந்த அளவுக்குத்தான் தர முடியும் என்றும் சொல்லலாம், இவ்வளவு தான் கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை. ரத்தக் காயம் ஏதாவது உண்டா, நாங்கள் வருகிறோம் . .’ என்று சொல்லுகிறார்கள். இந்த நிலை இன்னும் நீடித்துக்கொண்டிருக்கிறது. இன்னின்ன ஜில்லாக்களில் இன்னின்ன தாலுக்காக்களில் இவ்வளவு கூலி என்று நிர்ணயித்து விடலாம், இதற்காக வேண்டுமென்றால் ஒரு கமிட்டியைப் போடலாம் விவசாயக் கூலியைப்பற்றி பரிசீலனை செய்யலாம். இந்தக் கமிட்டி கொடுக்கின்ற ரிப்போர்ட்டின் பேரில் ஒரு நியாயமான கூலியை விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயித்து, சமூகமான ஒரு நிலைமையை நாட்டில் ஏற்படுவதற்கு அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதைப் பொறுத்த வரையில், வேலை நிறுத்தம், மற்ற பிரச்னைகள் பற்றி இங்கே சொல்லப்பட்டது. பொதுவாக வேலை நிறுத்தம்
12 p.m ஏற்படுகிறது—இல்லை என்று நான் சொல்லவில்லை. தொழிலாளர்கள் கூலியை அனுசரித்து வேலை நிறுத்தம் செய்கிறார்கள். மில்காரர்கள் கதவடைப்பு செய்கிறார்கள் என்று வேலை நிறுத்தம் செய்கிறார்கள். மூலப் பொருள் இல்லை என்றும் வேலை நிறுத்தம்





ஏற்படுகிறது. கும்பகோணத்தில் மிதிலா மெட்டல் வொர்க்ஸ் என்று ஒரு தொழிற்சாலை இருக்கிறது. பெட் ரூம் லாம்ப்ஸ் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களுக்கு பித்தளைத் தகடு கிடைத்து வந்தது. அதைக் கொண்டு செய்து வந்தார்கள். பித்தளைத் தகடு இல்லை என்று அரசாங்கம் கொடுப்பதை நிறுத்தி விட்டது. வேறு எப்படிச் செய்யலாம் என்று அவர்கள் யோசனை செய்தார்கள். அரசாங்கம் யோசனை சொல்லியது, துத்தநாகத் தகட்டில் செய்யலாம் என்று. துத்தநாகத் தகட்டில் செய்து பார்த்தார்கள். துத்தநாகத் தகட்டில் பொருத்துவது சங்கடமாக இருக்கிறது என்று அதை நிறுத்திவிட்டார்கள். நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டு விட்டார்கள். வழக்கு இப்போது தொழில் கோர்ட்டுக்குப் போயிருக்கிறது. அவர்கள் எப்படி தீர்ப்பு சொல்லுவது? அவர்களாக வேலை நிறுத்தவில்லை. மூலப்பொருள் கிடைக்கவில்லை. மூலப் பொருள் கிடைக்கவில்லையாதலால் வேலை நடக்கவில்லை; வேலை நடக்கவில்லையாதலால் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கவில்லையாதலால் அவர்களுக்குக் கூலி கிடைக்கவில்லை; கூலி கிடைக்கவில்லையாதலால் சோறு கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட பிரச்னையைத் தீர்க்க வேண்டாமா? இதைத் தான் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு இப்படிப்பட்ட காரியங்களில் தான் நிர்ணயம் செய்யவில்லை என்றாலும் குடியிருக்கும் நிலத்திற்காவது பாதுகாப்பு உண்டா? கனம் அங்கத்தினர் சிவசுப்பிரமணியம் அவர்கள் விவசாயத் தொழிலாளர்கள் வெளியேற்றப் படுவது பற்றிச் சொன்னார்கள். எனக்குத் தொலைபேசி மூலம் ஒரு செய்தி வந்தது. என்னுடைய தொகுதியில், குரிச்சி என்ற ஊரில் விவசாயத் தொழிலாளர்கள் வீட்டை காலி செய்ய வேண்டுமென்று கொல்லை, வாசல் புறங்களில் வேலி அடைத்து இருக்கிறார்கள், உடனே வாருங்கள் என்று செய்தி வந்தது. நான் உடனே சென்றேன். அங்கே 80 குடும்பங்கள் இருக்கின்றன, 80 வீடுகள் இருக்கின்றன. 8–9 மிராசுதார்கள் அவர்களை வீடுகளிலிருந்து வெளியேற்றவேண்டுமென்று எந்த விதமான நோட்டீஸும் கொடுக்காமல், சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அடியாட்கள் மூலமாக வெளியேற்ற முயற்சித்து, கொல்லை வாசற் புறங்களில் வேலி அடைத்து, தென்னம்பிள்ளை வைக்க முயற்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட வேலைகளில் ஈடுபட்டுக் கலகம் வந்தது. போலீஸார் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்னை வருவதற்கு முன் பல பிரச்னைகள் வந்திருக்கின்றன. பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அப்போதைக்கப் போது சமரசம் செய்திருக்கிறார்கள். கலெக்டர் வருவது, அல்லது ஆர்.டி.ஓ. வருவது அல்லது யாராவது பிரமுகர் வருவது, மத்தியஸ்தம் செய்வது என்ற நிலை இருந்திருக்கிறது. பிரச்னை அந்த ஊரில் தீர்ந்து விடுகிறது. உடனேயே அடுத்த ஊரில் ஏற்படுகிறது. நிரந்தரப் பரிகாரமாக ஒரு சட்டத்தை இந்த மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றவில்லை. இதைத் தான் நான் மேலும் மேலும் வலியுறுத்துகிறேன். நிலச் சொந்தக்காரர்கள், நிலத்தில்

சுதந்திர தினம், பண்டிகை லீவுகள் இவைகளெல்லாம் கிடைக்காமல் போய்விடும். அதே போல கமர்ஷியல் வொர்க்கர்ஸ்-கடைகள், வர்த்தக ஸ்தாபனங்கள், பார்பர் ஷாப், லாண்டரி, ஹோட்டல் சினிமா ஆகியவற்றில் இருப்பவர்களுக்கு, இன்றைய தினம் குறைந்தபட்ச சம்பளம் பார்ட் 1, ஷெட்யூலில் இம்ப்ளிமெண்ட் செய்யவேண்டும். ஷாப் சட்டத்தில் மூன்று பேர்களுக்குக் குறைவாக இருப்பதற்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, அங்கே வேலை நேரம் கிடையாது, ஸிக் லீவ் கிடையாது, காஷுவல் லீவ் கிடையாது, ஓவர்டைம் கிடையாது அவர்களும் தொழிலாளர்கள் தான். அவர்களுக்கு இப்படிப்பட்ட வசதிகள் கிடைக்காத காரணத்தினால் அவர்களுக்கும் அவைகளெல்லாம் கிடைப்பதற்கு வழிவகை காணவேண்டும். அது மாத்திரமல்ல. அவர்கள் கடையை மூடுவது கிடையாது. வார விடுமுறையும் கொடுப்பதில்லை. இந்த நிலைமையை நாம் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த மாநிலத்தில் அப்படிப்பட்ட தொழிலாளர்கள் தான் 75 சத விகிதம் இருக்கிறார்கள். ஷாப்களில் வேலை செய்யக்கூடியவர்கள், ஷாப் சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள் அப்படிப்பட்ட ஒரு பெரிய சமுதாயத்திற்கு இந்தச் சலுகைகளெல்லாம் கிடைக்கவில்லை. ஆனால் பாக்டரிகளில் வேலை செய்கிற சிலருக்கு மட்டும் இந்தச் சலுகைகள் கிடைக்கின்றன. ஆகவே, இந்தச் சலுகைகள் ஷாப் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளிகளுக்கும் கிடைக்கும்படி செய்வதற்கு பாடுபடவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஷாப் சட்டத்தின் கீழ் ஒரு சில தனிப்பட்டவர்களுக்கு சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இந்த சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. ஷாப் ஆக்ட் 32-வது பிரிவிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்காக நான் சொல்லுவேன். மறைந்த மாஜி மந்திரி டாக்டர் கிருஷ்ண ராவ் அவர்களுக்கு இதிலிருந்து விலக்குக் கொடுத்திருந்தார்கள். இதற்குக் காரணம் என்ன? அவர் அமைச்சராக இருந்தது காரணமா அல்லது அவர் ஒரு பெரிய டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள் என்பது காரணமா? ஆந்திர அரசாங்கத்தில் இப்படிப்பட்ட எக்ஸெம்ஷன் கொடுக்கிற நிலைமை கிடையாது. எனவே நமது முதல் அமைச்சர் அவர்கள் இதையும் கண்காணிக்க வேண்டும்.

பாக்டரியில் வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு இன்றைய தினம் 11 அவுன்ஸ் அரிசியும் மற்ற கோதுமை பண்டங்களும் கொடுக்கப்படுகிறது. அவர்களும் தொழிலாளர்கள்தான். அதே நேரத்தில் உடல் உழைப்பு செய்கிற ரிக்ஷா தொழிலாளர்கள், கைவண்டி தொழிலாளர்கள், ஷாப்புகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் இவர்களுக்கு மட்டும் ஏன் 10 அவுன்ஸ் கொடுக்க வேண்டும்? கொடுத்தால் இரண்டு பேர்களுக்கும் 11 அவுன்ஸ் கொடுக்கவேண்டும். பாக்டரியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தான் தொழிலாளர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவார்களா? காலையிலிருந்து மாலை வரை வண்டி இழுக்கின்ற தொழிலாளிகளுக்கு இந்த அளவு உணவு ரேஷன் கொடுக்கப்படவில்லை. ஒரு அவுன்ஸ் குறைத்துக் கொடுக்கப்படுகிறது. எனவே அவர்களுக்கும்





சரிசமமாக உணவு ரேஷன் கொடுக்கப்படவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வாரத்தில் ஒரு நாள் கடை மூடிவிடவேண்டும் யாராக இருந்தாலும் என்பதிலே நாம் மிகவும் கண்டிப்பாக இருக்கவேண்டும். இதுபற்றி உயர்நீதி மன்றத்தில் திரு. ராஜமன்னார் அவர்கள் ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். முதலாளிகளும் உழைக்கிறார்கள், கடைகளிலே. காலையிலிருந்து அவர்கள் கடையில் உட்கார்ந்து வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கும் வாரத்தில் ஒரு நாள் நிச்சயம் ஓய்வு கொடுக்கப்படவேண்டும். ஆகவே, வாரத்தில் ஒரு நாள் கடையை மூடித்தான் ஆகவேண்டும் என்ற ஒரு தீர்ப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பிற்கு இணங்க வாரம் தோறும் கடைகளை நிச்சயம் ஒரு நாளைக்கு மூடிவைக்கவேண்டும் என்ற உத்தரவை அமைச்சர் அவர்கள் விரைவிலே பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த விதியை அமல் செய்வதற்கு லேபர் இன்ஸ்பெக்டர்கள் கடைகளுக்குச் செல்லுகிற பொழுது, இதிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக தொழிலாளர்களில் ஒருவர், இருவரை வேலையிலிருந்து நீக்கி விடுகிறார்கள் அல்லது உறவினர் என்று சொல்லி எண்ணிக்கையை குறைத்து விடுகிறார்கள். இதற்கான காரணங்கள், இதுபற்றிய நிலைமையெல்லாம் இன்ஸ்பெக்டர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் அவர்களுக்கு நல்ல ஆக்கத்தைத் தரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஷாப் ஆக்டின் பிரகாரம் செக்ஷன் 41 அப்பீலை இன்று டெப்யூடி கமிஷனர் தான் விசாரிக்கிறார். இதையும் லேபர் ஆபீஸர்களே கவனிப்பதற்கு ஒரு வாய்ப்பு அவர்களுக்குக் கொடுக்கலாம். பேமெண்டு ஆஃப் வேஜஸ் ஆக்ட் வழக்குகளை அவர்கள் தான் விசாரிக்கிறார்கள். 31-8-1964 வரை பார்த்தால் 510 வழக்குகள் வந்திருக்கின்றன. 30-11-1963-ல் 796 வழக்குகள் பெண்டிங்காக இருந்தன. லேபர் ஆபீஸர்களுக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தால் உடனுக்குடன் அந்த வழக்குகளை பைசல் செய்ய முடியும். இந்த லேபர் ஆபிசருக்கு துணையாக டெப்யூடி லேபர் ஆபீசரைப் போடலாம். அவர் கெஜட் பதிவில்லாத அதிகாரியாகக் கூட இருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு நிலை இருந்தால் நிர்வாகம் நல்ல முறையில் நடக்க ஏதுவாக இருக்கும். திருச்சியில் நான்கு மாதங்களாக லேபர் இன்ஸ்பெக்டர் இல்லை. அவர் ரிடையர் ஆகிவிட்டார். தஞ்சை லேபர் இன்ஸ்பெக்டர் தான் அங்கு வருகிறார். அவர் வந்தவுடன் ஆபீஸில் உட்கார்ந்துவிட்டு திரும்பிச் சென்றுவிடுகிறார். அது சம்பந்தமாக கவனிப்பதற்கு இன்னும் லேபர் இன்ஸ்பெக்டர் போடப்படவில்லை. உடனே அந்த ஆபீசரையும் போடவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழில் தகராறு சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு மாதிரி சம்பவத்தை முதல் அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் கவனப்படுத்த விரும்புகிறேன். சமீபத்தில் டிரைவர் சாமிநாதன் என்பவர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். கோவை மாவட்டத்தில் மோட்டார் போக்கு வரத்து தொழிலாளர் சங்கத்திற்கும்

[திரு. எம். எஸ். மணி] [9th March 1966

பொள்ளாச்சி ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட் என்ற ஸ்தாபனத்திற்கும் நடந்த தொழில் தகராறில் லேபர் இன்ஸ்பெக்டர் சமாதானம் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்திருக்கிறார். சமரச முறிவு ஏற்பட்டது 3-7-1965-ல். அதற்குப் பிறகு லேபர் இன்ஸ்பெக்டர் 'கன்ஸிலியேஷன் பைல்யூர் ரிபோர்ட்' 22-7-1965-ம் தேதி அனுப்பியிருக்கிறார். அதையொட்டி லேபர் கமிஷனர் 9-8-1965-ல் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியிருக்கிறார். அரசாங்கம் அது கிடைத்தது 16-11-1965-ல் ஒரு டெஸிஷன் கொடுத்திருக்கிறார்கள். அந்த டெஸிஷன் என்னவென்று சொன்னால்—

'It is reported that the management dismissed the worker after framing charges and holding an enquiry in which the charges were proved.'

இது தான் அரசாங்கம் கொடுத்த டெஸிஷன். அரசாங்கம் என்ன சொல்லுகிறது? அவர்கள் இலாகா விசாரணை நடத்தியிருக்கிறார்கள். குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பதால் அந்தத் தொழிலாளி வேலையை விட்டு நீக்கப்பட்டார். இது தான் சரி என்று அரசாங்கம் டெஸிஷன் கொடுத்திருக்கிறது. ஆனால், நிர்வாகஸ்தர்கள் லேபர் ஆபீசருக்கு அனுப்பிய தங்களுடைய புகாரில் இலாகா விசாரணை நடத்தவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாங்கள் விசாரணை நடத்தவில்லை என்று நிர்வாகஸ்தர்கள் சொல்லுகிறார்கள். அரசாங்கம் சொல்லுகிறது விசாரணை நடத்தினார்கள் என்று. அரசாங்கத்திலுள்ள அதிகாரிகளை மானேஜ்மெண்டார் யாராவது கவனித்தார்களா? அல்லது கிளார்க்கை கவனித்தார்களா? எந்த ஆதாரத்தைக் கொண்டு இப்படி அரசாங்கம் எழுதியிருக்கிறது? அங்கு இருக்கிற யூனியன் அரசாங்கம் திரும்பவும் இதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறது. இதுவரையில் ஒரு பரிகாரமும் தேடப்படவில்லை. இதற்கு என்ன காரணம்? எப்படியாவது பைல் லேபர் கமிஷனரிடமிருந்து அரசாங்கத்திற்கு வந்துவிட வேண்டும், அங்கே யாராவது அமைச்சர்களை வைத்து, சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து சரி செய்து விடலாம் என்ற தைரியத்துடன் முதலாளிகள் அதிகமாக டிஸ்மிஸல்ஸ் செய்கிறார்கள்.

மேலும் ஒன்று உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். சம்பத்தில் திருச்சியில் ஒரு வழக்கில் ரெபரென்ஸ் கிடைக்கவில்லை. 'நோ கேஸ் ஃபார் அட்ஜூடிகேஷன்' என்று திருப்பிவிட்டார்கள். பிறகு நான் முதல் அமைச்சர் அவர்களிடம் சென்று நிலைமையை விளக்கினேன். அவர்கள் மிகவும் பொறுமையோடு நான் சொன்னதைக் கேட்டுக்கொண்டார்கள். 'நியாயம் இருக்கிறதா, கோர்ட்டிற்குப் போனால் வெற்றி கிடைக்குமா' என்று கேட்டார்கள். நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று நான் சொன்னேன். பிறகு ரெபரென்ஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்கள். அவர் அன்று ரெபரென்ஸ் கொடுக்காமல் இருந்திருந்தால் 40 தொழிலாளர்கள் நடுத்தெருவில் நிற்கவேண்டிய நிலைமை வந்திருக்கும். அவர் ரெபரென்ஸ் கொடுத்த காரணத்தினால் தான் கோர்ட்டிலே சென்று வெற்றி பெற முடிந்தது. அப்படி கோர்ட்டுக்குச் சென்று வெற்றி பெற்றாலும், சில மானேஜ்மெண்டார்கள் அந்தத் தீர்ப்பை நடைமுறையில் அமல்நடத்துவதில்லை. வசூல் செய்ய சர்க்காருக்கு மனுப் போட்டால் 2 மாதங்கள் ஆகிறது. பணத்தை ரெகவர் செய்வதற்கு ரெகவரி பெடிஷன் கொடுத்தால் ஏராளமான நாட்கள் காலதாமதம் ஆகிறது. இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்கவேண்டும். மானேஜ்மெண்டுகள் கோர்ட்டு தீர்ப்பை சரிவர அமல் நடத்தாவிட்டால் அவர்கள் லைசென்ஸை ரத்து செய்துவிடுவோம் என்ற ஒரு பயமுறுத்தலாவது இருந்தால் தான் நலமாக இருக்கும். தங்கம் வசூல் செய்ய வருவார்கள், எப்படியும் அதிகாரிகளை சரிப்படுத்திக்கொள்ளலாம் என்ற தைரியத்தில் முதலாளிகள் இருக்கிறார்கள். அதற்குக் கொஞ்சம் கூட இடம் கொடுக்காமல், கோர்ட்டு தீர்ப்புகளை ஒழுங்காக அமல் நடத்துவதற்கு, பணத்தை வசூல் செய்வதற்கு வழிவகைகள் காண வேண்டும்.



9th March 1966] [திரு. எம். எஸ். மணி]

வொர்க்மென்ஸ் காம்பென்ஸேஷன் ஆக்டின் கீழ் 1964-65-ல் மொத்தம் வந்த வழக்குகள் 886. ஏற்கனவே பெண்டிங்காக இருந்த கேஸ்கள் 390, ஆக கூடுதல் வழக்குகள் 1,276. இதில் டிஸ்போஸல் செய்யப்பட்டவை 650, பாக்கி பெண்டிங் 626. மூன்று டெப்யூடி கமிஷனர்கள் தான் இந்த வழக்குகளை விசாரிக்கிறார்கள். இப்படி மூன்று பேர்கள் விசாரித்தும் 626 வழக்குகள் பைசல் ஆகாமல் இருக்கின்றன. எனவே தான் சென்ற தடவை நான் மூன்று மாவட்டங்களில் மூன்று கமிஷனர்களைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். முதல் அமைச்சர் அவர்கள் அம்மாதிரி செய்தார்கள். அப்படியும் பற்றாக்குறை இருக்கிறது. ஏனென்றால் பாக்டரிகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. ஆகவே, இன்னொரு டெப்யூடி கமிஷனர் நியமனம் செய்யவேண்டும். அப்படி நியமனம் செய்தால் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கும். அல்லது லேபர் ஆபீசர்களுக்கு அடிஷனல் கமிஷனருக்குள்ள பொறுப்பைக் கொடுத்து, அதிகாரத்தைக் கொடுத்து இந்த வழக்குகளை அவர்களைக் கொண்டு விசாரிக்கலாம். அப்படிச் செய்தால் தொழிலாளர்களுடைய குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மினிமம் வேஜஸ் ஆக்டைப்** பொறுத்தவரையில், குறைந்தபட்ச கூலியை திருத்தி அமைக்கும் எண்ணம் சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது என அறிகிறேன். தற்பொழுது ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை தான் இதை மாற்றி அமைக்கிறார்கள். நாம் ஐந்தாண்டுத் திட்டங்களைப் போடுகிறோம். ஐந்தாண்டுத் திட்டங்கள் போடும்பொழுது முதல் ஆண்டில் இருக்கிற விலைவாசிக்கும், இறுதி ஆண்டிலிருக்கிற விலை வாசிக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, நாம் குறைந்தபட்ச கூலியை நிர்ணயிக்கும் பொழுது முதல் ஆண்டில் நிர்ணயிக்கிறோம். ஐந்தாண்டுகள் கடந்து பார்க்கிறபொழுது, விலைவாசி உயர்ந்துவிடுகிறது. ஆகவேதான், கூலியை நிர்ணயிக்கும் போது, அதை வாழ்க்கைப் புள்ளியோடு இணைந்ததாகச் செய்ய வேண்டும். உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். சென்னையில் ஒரு மேஸனுக்குக் கூலி ரூபாய் 2.50 என்று குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்

[திரு. எம். எஸ். மணி] [9th March 1966

பட்டிருக்கிறது. ஆனால், எங்கே அந்த கூலிக்குக் கிடைக்கிறான்? தச்சுவேலை, கொத்து வேலை செய்பவன் ரூ. 5.50 கொடுத்தால்தான் கிடைப்பான். ஆக, எங்கே ரூ. 2.50-க்குக் கிடைக்கும் நிலை இருக்கிறது? ஆகவே, கூலியை நிர்ணயிக்கும்போது, விலைவாசியை ஒட்டி இருக்கும் படி செய்து பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது எனக்கு முன்னால் பேசிய திரு. சா. கணேசன் அவர்கள், சிவகாசி பற்றிச் சொன்னார்கள். சிவகாசியில் இரண்டு பெரியதொழில்கள் இருக்கின்றன :ஒன்று காலண்டர் வியாபாரம், மற்றொன்று தீப்பெட்டி தயாரித்தல். தீப்பெட்டிக்குத் தேவையான கெமிகல் இன்றையதினம் கிடைக்கவில்லை யென்றால், அதனால் கிட்டத் தட்ட 800 பாக்டரிகள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. அதற்கு வேண்டிய கிளோரைட் கிடைக்கவில்லை. அதனால் லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதில் ஏன் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை என்று கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்தத் தொழிலாளர்கள் அங்கே கஞ்சித் தொட்டி வைக்கவேண்டும் என்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்டிருப்பவர்கள் லட்சம் தொழிலாளர்கள். ஆகவே, அரசாங்கம் உடனடியாக தலையிட்டு ஆவன செய்ய வேண்டும். இல்லை யென்றால் பெரும் புரட்சியே நடக்கும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

மோட்டார் ட்ரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் ஆக்ட் பற்றி கடந்த தடவையே குறிப்பிட்டேன். இந்தச் சட்டத்திலே 10 ஆட்களைக் கொண்டிருந்தால், அதற்கு ரிஜிஸ்ட்ரேஷன் பீஸ் ரூ. 10 தான். அங்கே மட்டும் ஏன் கட்டணம் குறைகிறது? மோட்டார் முதலாளிகள் சர்க்காருக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்றா? அதைக் குறைந்தது ரூ. 25 என்றாவது மாற்ற வேண்டும். அப்படி உயர்த்தினால் அதிகமான வருமானம் வரும். அதை வைத்துக்கொண்டு டிபார்ட்மெண்டில் புதிய அதிகாரிகளை போட்டு, திறம்படக் காரியங்களை நடத்த முடியும்.

பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமாக, சென்ட்ரல் ஆக்ட் வருகிறது, வருகிறது இரண்டு மாதத்தில் வந்து விடும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 1957-ம் ஆண்டில் குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்கப்பட்டது. 2½" பீடி 1,000-க்கு கூலி ரூ. 1-11-0; 3" பீடிக்கு ரூ. 1-13-0. இதில் 13 முதலாளிகள் கையெழுத்துப் பண்ணியிருக்கிறார்களே தவிர, யாரும் இதை இம்ப்ளிமெண்ட் செய்யவில்லை. இன்றைக்கு இருக்கும் நிலை என்ன என்று பார்த்தால், திருச்சியில் ஒரு கூலி, கோவையில் ஒரு கூலி, சென்னையில் ஒரு கூலி; சேலத்தில் ஒரு கூலி என்று இடத்திற்கு இடம் வித்தியாசமாகவே இருக்கிறது. சேலத்திலும் சென்னையிலும் தான் அதிகமாகக் கூலி கொடுக்கப்படுகிறது. இந்தக் குறைந்த பட்சக் கூலியை மாற்றி நிர்ணயம் செய்ய 11 பேர்கள் கொண்ட கமிட்டி ஒன்றை நியமித்து இருக்கிறார்கள். அந்தக் கமிட்டி வேலை செய்கிறதா இல்லையா என்று ஒன்றும் தெரியவில்லை. அது இன்னும் திருச்சிக்கு வரவில்லை. இதில் பொறுப்புள்ளவர்கள் ஒருவரும்



9th March 1966] [திரு. எம். எஸ். மணி]

அங்கம் வகிக்கவில்லை. முதலாளிகள் சார்பாக 4 பேர்களும், தொழிலாளர்கள் சார்பில் நான்கு பேர்களும் இருக்கிறார்கள். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் பிரதிநிதி இல்லை. ஆகவே, உடனடியாக இந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல நிலையை உண்டாக்க இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஹோட்டல் தொழிலாளிகளைப் பொறுத்தவரையில், 1,000 தொழிலாளிகளுக்கு மேல் இருந்தால், மினிமம் வேஜஸ் பிக்ஸ் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. இந்தத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை என்னவென்றால், 65,000. அவ்வளவு தொழிலாளர்கள் இருக்கிறார்கள். செக்ஷன் 13-ன் படி அவர்களுக்கு யூனிபார்ம் கொடுக்க வேண்டும். ஆனால், கொடுக்க வில்லை. நிர்வாகஸ்தர்கள் ஹைகோர்ட்டில் ஒரு ரிட் போட்டு, வெற்றி அடைந்து விட்டார்கள். தைத்துவிட்ட யூனிபார்மைக் கொடுக்காத நிலைமையைப் பார்க்கிறோம். ஆகவே, சட்டத்தைத் திருத்தி, உடை வழங்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, இன்ஷூரன்ஸ், பிராவிடன்ட் ஃபண்ட் பெனிபிட் ஆகியவை எல்லாம் தொழிலாளிகளுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள், டெக்ஸ்டைல் மில்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே இன்றைக்கு பல மில்கள் கதவடைப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. சங்கரன் கோயில் கீதாஞ்சலி மில்ஸ், 280 பேர்களைக் கொண்டது. மூடப்பட்டிருக்கிறது. முதலாளிகள் பணம் இல்லை என்கிறார்கள். அந்த நிலைமை இருக்கிறது. தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். மதுரை டி.சி.எல் அவர்கள் கன்சிலியேஷன் ஃபெயில்யூர் ரிப்போர்ட் அனுப்பி விட்டார்கள். மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த 280 தொழிலாளர்களுக்கும் பரிகாரம் தேடியாக வேண்டும். இல்லையென்றால், கிளர்ச்சி ஏற்படும் நிலைமைதான் உருவாகும். ஊரில் திருட்டுகள் நடக்கும். போராட்டம் நடத்தி சோற்றுக்கு இல்லாமல், ஜெயிலுக்குப் போகும் நிலைமைதான் ஏற்படும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதே மாதிரி கோவை ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில் நிர்வாகத்தினர் அங்கே உள்ள தகராறு காரணமாக தொழிலாளிகள் வேலையிழந்திருக்கின்றனர். எந்த இம்ப்ரூவ்மெண்டும் ஏற்படவில்லை. அதே மாதிரி 250 பேர்களைக் கொண்ட வாசுதேவா டெக்ஸ்டைல் மில் மூடப் பட்டிருக்கிறது. பாலமலை ரங்கநாதர் மில்ஸ், 400 பேர்கள் கொண்டது, மூடப்பட்டிருக்கிறது. 3,500 தொழிலாளர்களைக் கொண்ட சோமசுந்தரம் மில்ஸ் கதவடைப்புச் செய்திருக்கிறது. இதே மாதிரி பல மில்களில் கதவடைப்பு நீடித்துக் கொண்டே இருக்கிறது. கேட்டால் பொருளாதாரத் தட்டுப்பாடு என்கிறார்கள் முதலாளிகள். இந்த அழகில் இவர்களுக்கு அரசாங்கம் வேறு கடன் உதவிகளெல்லாம் செய்கிறது. எது

[திரு. எம். எஸ். மணி] [9th March 1966

பேசப்படுகிற விவசாயத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கிறபோது, அந்த எண்ணிக்கைக்கு ஏற்பவாவது பத்து கோடி ரூபாய் ஒதுக்கக் கூடாதா? மத்திய விவசாய அமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் அவர்கள் அமெரிக்காவிற்குப் போய்வந்தார். அங்கிருந்து விமானம் மூலம் வந்து இறங்கியவுடனே ஒரு விஷயத்தைச் சொன்னார். "ஆள் ஒருவருக்கு ஒரு நாளுக்கு குறைந்தபட்சம் நாற்பது ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள், அமெரிக்காவில்" என்று சொன்னார். ஆனால், நம் நாட்டில் மாதத்திற்கு நாற்பது ரூபாய் கூடக் கிடைக்கவில்லை, பல இடங்களில். அங்கே நாள் ஒன்றுக்கு 40 ரூபாய் பெறும் அளவிற்குத் தொழிலாளர்களை வைத்திருக்கிறார்கள். ஆனால், நாம் ஜனநாயக சோஷலிசம் என்று சொல்லும்போது, 'சோஷலிசம்' என்ற சொல்லிலே நமக்கு மகிழ்ச்சி ஏற்பட்டாலும், சோஷலிசம் என்பதை வாயளவில் சொல்லிக்கொண்டிருக்கிறோமே தவிர, அந்த சோஷலிசத்தை நாம் உண்மையிலேயே எப்படிக் காண்பது? அந்த ஜனநாயகத்தை நாம் எப்பொழுது காண்பது? ஆகவே, கனம் முதல் அமைச்சர் அவர்களே தொழிலாளர் நல அமைச்சராகவும் இருக்கும் காரணத்தால், தொழிலாளர்கள்பால் அக்கறை கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவளச் செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்த வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

1-00 p.m. * **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மானியம் தொழிலாளர்களுடைய நலனைப் பற்றியது; அவர்கள் வேலை செய்யக்கூடிய தொழிற்கூடங்கள் எவ்வாறு பாதுகாப்பை அளிக்கக்கூடிய வகையிலே, பந்தோபஸ்தை அளிக்கக் கூடிய வகையிலே, சுகாதார வசதியை ஏற்படுத்தக்கூடிய வகையிலே அமைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதைப் பற்றியது. அதோடு, தொழிலாளர்கள் என்னும்போது, தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நாட்டிலே தொழில் வளர்ச்சி ஏற்பட ஏற்பட, ஆலைகளிலே பணி புரிகின்ற தொழிலாளர்களுடைய எண்ணிக்கையும் பெருகிக் கொண்டுதான் வருகிறது. ஆனால், விவசாயம் மிகுந்த நம்முடைய நாட்டிலே விவசாயத் தொழிலாளர்களையும் நாம் புறக்கணிக்க முடியாது. அவர்களும் ஒரு பெரும் பகுதியினராக இருக்கிறார்கள். ஆனால், இந்த மானியத்தில் முக்கியமாகக் குறிப்பிடப்படுவது ஆலைத் தொழிலாளர்களுடைய நலன்களாகும். நலன்கள் கவனிக்கப்படுவது என்பது ஒன்று; எந்த, எந்த முறை கையாளப்படுவது என்பது வேறு. ஆலைத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் சில விதிகள், சில நிபந்தனைகளெல்லாம் கண்டிப்பாக அனுசரிக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆனால் அதிலே கூட கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள், "குறிப்பிட்ட நேரங்கள் தான் வேலை செய்ய வேண்டும் என்று எதற்காக விதிக்க வேண்டும்?" என்று தங்களுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். அதை ஒருக்காலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. அகில இந்தியாவில் மட்டுமல்ல; அகில உலகத்திலேயே தொழிலாளர்களுடைய நலன்கள் அகில உலக முறையிலே கவனிக்கப்படும்போதெல்லாம், வாரத்திலே



9th March 1966] [திரு எம். பக்தவத்சலம்]

எத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று நிர்ணயித்து, அதற்கு மேலே வேலை செய்தால் அவர்களுடைய உடல் நலம் கெட்டுப்போய்விடும்; அவர்களுடைய உடல் நலம் முக்கியமாக கவனிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. அது கூடக் கூடாது என்று சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள் என்றால், அதை ஒருக்காலும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், சில இடங்களில், அதைவிட அதிகமாக அவர்கள் ஊதியம் பெறுகிறார்கள். இருந்தாலும், அவர்களும் வேலையினின்று பண்ணையினின்று நீக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதற்கும், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்துவதற்கும், போதிய ஊதியத்தைப் பெறுவதற்கும் தொடர்ந்து அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது.

இந்த விவாதத்தை முடித்துவைத்த கனம் உறுப்பினர் அவர்கள் "நேற்றெல்லாம் நாற்பத்தைந்து கோடி, ஐம்பது கோடி என்று மானியங்கள் கோரப்பட்டனவே. லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பற்றிய மானியத்திலே ஒரு பத்து கோடி ரூபாயாவது ஒதுக்கவில்லையே, இரண்டு கோடி ரூபாய்தானே ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னார்கள். ஒரு பக்கத்தில் எனக்கு ஒரு அச்சம் இருந்தது. எதற்காக இந்த இரண்டு கோடி ரூபாய்?" என்று அவர்கள் குறை சொல்வார்களோ என்றுதான் நான் நினைத்தேன். பத்து கோடி ரூபாய் ஒதுக்கக்கூடாதா? என்று கேட்டார்கள். இந்தத் தொகை தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதல்ல. தொழிலாளர்கள் எவ்வளவு ஊதியம் பெறுவது என்பதைக் குறிப்பிடுவதல்ல இந்த மானியம். தொழிலாளர்கள் போதிய ஊதியம் பெறவேண்டும். அது அதிகப்படுத்தப்பட்டு வருகிறது. அவர்களுக்கு வேலை இருக்கவேண்டும்; அவர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியம் பெறவேண்டும். அது வேறு விஷயம். ஆனால், இது தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பவர்கள், மேற்பார்வை செய்கிறவர்கள் இவர்களுக்காக ஆகும் செலவும், பாக்டரியைக் கவனிப்பது சட்டத்தை அமலுக்குக் கொண்டுவருவது ஆகியவற்றுக்காக ஆகும் செலவுக்குந்தான் இந்த மானியம் கோரப்படுகிறது. ஆகவே, இதற்கு எவ்வளவு பணம் வேண்டுமோ, அது கோரப்படுகிறது.

மற்றொன்றைப்பற்றி இப்போதே நான் கூற விரும்புகிறேன். பல பிரச்னைகளைப்பற்றிக் கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தொழிலாளர் நலனிலே, தொழிலாளர் நிலவரங்களிலே இவ்வளவு தூரம் அக்கறை காட்டி இருப்பதை நான் பாராட்டுகிறேன் ஆனால், இந்த விவாதத்திலே கலந்துகொண்டவர்களில் ஒரு உறுப்பினர் கூட ஒரு விஷயத்தைக் குறிப்பிடவில்லை. ஊதியம் கிடைக்க வேண்டும், பாதுகாப்பை எவ்வளவு தூரம் இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்பதெல்லாம் ஒரு பக்கத்தில் இருந்தாலும், தொழிலா

ளர்களுடைய வாழ்க்கை, அவர்களுடைய குடும்ப நலன் பாதுகாக்கப்படவேண்டியதும் முக்கியமான அம்சமாகும். தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரவேண்டியது தொழிலதிபர்களுடைய பொறுப்பு என்பதைப்பற்றியெல்லாம் கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், பொதுவாக, அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்கள் சீரான வாழ்க்கை வாழ்வதற்கு, அவர்களுடைய க்ஷேமநலன் பாதுகாக்கப்படுவதற்கு என்ன கவனம் செலுத்தப்படுகிறது? நானே தொழிலதிபர்களிடமும், தொழிற்சங்கத்தை நடத்துபவர்களிடமும், மற்றவர்களிடமும் வற்புறுத்திக்கொண்டு வருகிறேன், நீண்ட காலமாக, அதைப்பற்றிக் கனம் உறுப்பினர்களில் யாரும் குறிப்பிடாதது எனக்கு ஒரு ஏமாற்றத்தைத்தான் விளைவித்தது. ஆனால், அதைக்குறித்துக் குறை கூறுவதற்கு நான் வரவில்லை. தொழிலாளர் நலனில் அக்கறை கொள்ளும் கனம் உறுப்பினர்கள், மேலும் தொழிலாளர்களுடைய க்ஷேமநல வாழ்க்கையிலே அக்கறை கொள்ளவேண்டும் என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படுகிறது. பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. அப்போதைக்கப்போது கணக்குப் பார்த்து, பண்டங்களின் விலை உயர்வுக்கு ஏற்றபடி பஞ்சப் படி கொடுக்கப்பட்டு வருகிறது என்றாலும், முக்கியமாக அவர்களுடைய தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றால், எவ்வளவுதான் பஞ்சப் படி கொடுத்தாலும், விலைவாசி ஏறிக்கொண்டிருந்தால், நல்ல பண்டங்கள் நயமான விலைக்குக் கிடைக்காமலிருந்தால் அவர்கள் எவ்வளவு சம்பாதித்தும் பயனற்றதாகப் போய்விடுகிறது. அந்த அடிப்படையில்தான், கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸினுடைய முக்கியத்துவம் வற்புறுத்தப்பட்டு வருகிறது. 250 தொழிலாளர்கள் இருந்தால் அங்கே ஒரு கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் இருக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்துக் கொண்டு வருகிறோம். அவ்வாறு கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் வைக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை என்று கனம் உறுப்பினர்களில் சிலர் குறை சொன்னார்கள். மத்திய அரசாங்கம் கூட ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. அப்படித் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் இவ்விருசாராரும் சேர்ந்து ஈடுபடவில்லை என்றால் கட்டாயப்படுத்த வேண்டிய நிமித்தம் ஏற்படும், அதற்கு வேண்டிய சட்டம் செய்ய வேண்டியிருக்கும் என்று கூட வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நம்முடைய மாநிலத்தில் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். 250 பேர் பணிபுரிகின்ற தொழிற்சாலைகளில் கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் ஸ்டோர்ஸ் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு 160 இன்டஸ்ட்ரியல் எஸ்டாப்ளிஷ்மெண்ட்களிலும், 27 ப்வான்டேஷன் எஸ்டேட்களிலும் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முப்பத்தோரு இன்டஸ்ட்ரியல் எஸ்டாபிளிஷ்மெண்டுகளிலும், 41 ப்ளாண்டெஷன் எஸ்டேட்களிலும் நியாய விலைக் கடைகள் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி ஆங்காங்கு சில பெரிய தொழிற்சங்கங்கள் நடத்தி வருகின்ற கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸை நான் பார்த்திருக்





கிறேன். அவை நல்ல முறையில் இயங்குகின்றன. கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், நியாய விலைக் கடைகள் இவை மூலம் மாதந்தோறும் சராசரி 85 லட்ச ரூபாய்க்கு மேலே விற்பனை ஆகிறது. மற்ற மாநிலங்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த வகையில் நாம் ஒரு நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். என்றாலும், நாம் இத்துடன் திருப்தி அடைந்துவிடுவதற்கில்லை. மேலும் நாம் அதிகமான கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொஸைடிகள் ஏற்படுத்த வேண்டும். சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஏற்படுத்த வேண்டும். வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து நான் நிகழ்த்திய உரையிலேயேகூட இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். இம்மாதிரி கூட்டுறவு பண்டகசாலைகளை ஏற்படுத்தி, பர்ச்சேசிங் மிஷனரி அமைத்து, நியாயமான விலைக்கு வாங்கி பகிர்ந்தளிக்கக் கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்பது தான் நமது நோக்கம்.

இன்னும் பல தொழில்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எந்த எந்தத் தொழில்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்படவேண்டுமோ, அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது.

கைத்தறியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கூட்டுறவு சொஸைடிகள் பாக்டரி சட்டத்தில் கீழ் வருகின்றன. மாஸ்டர் வீவர்ஸ்களிடம் வேலை செய்யக் கூடிய நெசவாளர்களும் இருக்கிறார்கள். எந்த வகையில் தொழில் நடந்தாலும் இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களுடைய வேலை பாதிக்கப்படக் கூடாது என்பதில் நமக்கு அதிக அக்கறை இருக்கிறது. எல்லா நெசவாளர்களும் கூட்டுறவு சங்கங்களின் அடிப்படையில் வந்துவிடவேண்டும் என்பது தான் நம் கருத்து. அப்படிச் செய்துவிட்டால் பல பிரச்சினைகள் குறையும்.

"பல சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன, என்ன பயன்?" என்று ஒன்றிரண்டு அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். சட்டங்களின் அருமையைப் புரிந்துகொள்ளாதவர்கள்தான் அப்படிச் சொல்வார்கள். அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு அந்தச் சட்டங்களின் பயன் தெரியும். முக்கியமாக இங்கேயே ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினோம். அங்கத்தினர்கள் அறிவார்கள். முக்கியமாக தேசிய விடுமுறை நாட்கள், பொதுவிடுமுறை நாட்கள் என்று இவ்வளவு நாட்கள் விடப்படவேண்டும் என்று செய்தோம். கட்டாயமாக 2 நாட்கள் தேசிய விடுமுறை தினமாக அனுஷ்டிக்கப்படவேண்டும் என்று செய்திருக்கிறோம். அதேபோல பண்டிகை விடுமுறை நாட்கள் இவ்வளவு விட்டாகவேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம்

தொழிலாளர்களுக்காக மத்திய சட்டங்கள் இருக்கின்றன. மாநில சர்க்காரும் அவ்வப்போது தொழிலாளர்களுடைய நிலைமையைக் கருத்தில் கொண்டு சட்டங்கள் இயற்றியிருக்கின்றது. இவற்றினால் பயன் ஒன்றுமே இல்லை என்று சொல்வது சரியாகாது. இவை போதும் என்றும் சொல்லவில்லை. மேலும் அவசியம் ஏற்படுகிற போது தக்க சட்டத்தை நிறைவேற்ற இந்தச்

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1966

சர்க்கார் தயங்காது. சட்டங்களைச் செய்கிறபோது அவற்றை நிறைவேற்றும் நோக்கத்தோடுதான் செய்கிறோம். நிறைவேற்றப்பட்டும் வருகிறது. மொத்தத்தில் இந்த மாநிலத்தில் தொழிலாளர்கள், முதலாளிகள் ஆகியவர்களிடையே ஒரு சுமுகமான நிலை இருந்துகொண்டுதான் வருகிறதென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். தொழிலாளர்களுடைய நலன் தான் தொழிலதிபர்களுடைய நலன். தொழிலதிபர்களுடைய நலன் தான் தொழிலாளர்களுடைய நலன். இதை இருசாராரும் உணர்ந்தால் தகராறு இருக்காது. முதலாளிகளை ஏமாற்ற தொழிலாளர்களோ, தொழிலாளர்கள் ஏமாந்து இருக்கிறார்கள், அவர்களைச் சுரண்டலாம் என முதலாளிகளோ முற்படுகிறபோதுதான் தகராறு ஏற்படுகிறது. இன்னொரு காரணம் கூடச் சொல்வேன். ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் என்ற அடிப்படையில் அமைந்திருந்தால் நல்லது. ஆனால், இன்றைக்கு ஒரு தொழிலுக்கே பல சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதுவும் தொழிலாளர்களுடைய நலனுக்காக என்பதை விட அரசியலைக் கொண்டே அவை செயல்படுகின்றன. அதுவும் தலைவராக தொழிற் சங்கத்திற்கு வருவதற்கு எத்தனை தகராறு? இதற்கு என்ன செய்வது? ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் தான் இருக்கவேண்டும் என்பதாகச் சட்டம் கொண்டுவரலாமா என்று கூட மத்திய அரசாங்கமும் சரி, மாநில அரசாங்கமும் சரி யோசித்தது உண்டு. அதுபற்றி தொழிற்சங்கங்களிடமிருந்து ஏகோபித்த அபிப்பிராயம் வரவில்லை. எந்தத் தகராறும் சுமுகமான முறையில் தீர்க்கப்படுவது தான் இருசாராருக்கும் நல்லது. சீராக வேலை நடைபெறவேண்டுமென்றால் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் அமைவது நல்லது. அரசியல் புகுத்தப்படாமல் இருந்தால் நன்றாக இருக்கும். இன்றைக்கு அகில இந்திய தொழிலாளர் சங்கம் இருக்கிறது. இது கம்யூனிஸ்டுக் கட்சியின் அமைப்பு. கம்யூனிஸ்டு கட்சிக்குள் வலது சாரி, இடது சாரி என்று இரண்டு பிளவுகள் ஏற்பட்டது என்றால், அதுபோல இந்தத் தொழிற் சங்கத்திலும் இரண்டு பிரிவு ஏற்பட்டு விடுகிறது. இடது சாரி தொழிற்சங்கம் சொல்வதை வலது சாரி ஏற்றுக்கொள்வதில்லை. இந்தக் குறைபாடுகள் நீக்கப்படவேண்டும்.

எப்படி இருந்தாலும் புகார்கள் வந்தால் கூடுமான வரையில் துரிதமாகத் தான் தீர்க்கப்படவேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. 1965-ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால், இதுவரை 6,639 புகார்கள் வந்தன. அவற்றில் கன்ஸிலியேஷன் மூலமாகத் தீர்க்கப்பட்டவை 1,013. அட்ஜுடிகேஷனுக்கு ரெஃபர் பண்ணியது 229. சட்டபூர்வமாக இல்லாமல் இன்பார்மலாக முடிவு செய்யப்பட்டவை 73.

அட்ஜுடிகேஷனுக்கு விடுவது என்றால் எல்லாவற்றையும் விட வேண்டும் என்பது இல்லை. எவற்றை அட்ஜுடிகேஷனுக்கு விடலாம் என்று பரிசீலித்துவிடுகின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதை வகிக்கவேண்டியிருக்கிறது. சிலவற்றை ரெஃபர் செய்யவேண்டாம் என்று தோன்றுகிறது. அப்படி ஆதாரமில்லாத புகார்கள் என்று நிராகரிக்கப்பட்டவை 300-க்குள் தான் இருக்கின்றன.



9th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

பொதுவாக, வழக்கு மன்றத்திற்குப் போகாமல் தகராறுகள் தீர்க்கப்படவேண்டும் என்றே எல்லோரும் விரும்புகின்றனர். வழக்கு மன்றம் என்று போய்விட்டால் எந்தப் பக்கம் ஜெயித்தாலும் சரி மறுபடியும் அப்பீல் என்பதாகப் போய்க்கொண்டே இருக்கிறது. மேலும் தொழிலதிபர், தொழிலாளர்களிடையே உள்ள சுமுகமான உறவு முறை பாதிக்கப்படுகிறது. அது தொழிலாளர்களுக்கும் நன்மை அளிக்காது. ஆகவே தான் இன்பார்மலாகப் பேசி முடிவு செய்ய எத்தகைய முயற்சி எடுக்கப்படவேண்டுமோ, அவை எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அவர்கள் வந்து பேசுவதற்குத் தயாராக இருந்தால், அதற்காகக் கொஞ்ச நேரம் ஒதுக்கவும் தயாராக இருக்கிறோம். அவ்வாறு தீர்க்கப்பட்டவை தான் 5,200. ஆகவே தான், வழக்கு மன்றத்திற்கு போக அனுமதிக்கப்படுவதில்லை என்று குறைகூற இடமில்லை என்று நான் கூற விரும்புகிறேன்.

பப்ளிக் செக்டார் ஸ்தாபனத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மராமத்திலாகா மின்சார போர்டு தொழிலாளர்கள் ஆகியவர்களைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். ஒன்று இங்கு வேலை செய்கிற தொழிலாளர்கள் சர்க்கார் சிப்பந்திகளைப்போல் எல்லாவிதமான சலுகைகளையும் பெற முன் வரவேண்டும். அல்லது தனியார் ஸ்தாபனத் தொழிலாளர்களைப்போல நடத்தப்படுவதற்கு சம்மதிக்கவேண்டும். இரண்டும் வேண்டும் என்று கோருவது நியாயம் இல்லை. சர்க்கார் சிப்பந்திகள் என்றால் சில விதிகள் இருக்கின்றன. பே கமிஷன் போடுகிறோம். அவர்கள் சிபார்சுப்படி சம்பளம் நிர்ணயம் செய்யப்படுகிறது. தனியார் ஸ்தாபனங்களில் இல்லாத சலுகைகள் இதில் இருக்கின்றன. தனியார் ஸ்தாபனம் என்றால் போனஸ் வசதிகள் இருக்கின்றன. பொதுத் துறையில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் தாம் எந்தவகையில் நடத்தப்படவேண்டும் என்பதை நிர்ணயிக்கவேண்டும். மின்சாரத் தொழிலாளர்கள் விஷயமாகக் கோர்ட்டுக்குச் சென்றார்களே என்றால் அது சட்ட விளக்கத்தைப் பற்றியது. அரசாங்கம் சொல்வதை விட கோர்ட் சொல்லிவிட்டால் நல்லது என்று கருதப்பட்டது. ஆகவே கோர்ட்டுக்குப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. தொழிலாளர்கள் வெகுகாலத்திற்குத் தற்காலிகமாக வைத்துக் கொள்ளப்படுகிறார்கள் என்று கூறினார்கள். சர்க்காரைப் பொறுத்தவரையில் விதி இருக்கிறது. அந்த விதியைக் கவனிக்காமல் எல்லோரையும் நிரந்தரமாக எடுத்துக்கொண்டால் அவசியமில்லாமல் தொழிலாளர்களையும், உத்தியோகஸ்தர்களையும் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். அதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது. அப்போதைக்கப்போது அது கவனிக்கப்படுகிறது.

ப்ராஜக்ட்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நெய்வேலி ப்ராஜக்ட்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள், மற்ற ப்ராஜக்ட்டைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அணைத்திட்டம் பற்றிச் சொன்னார்கள். ஒரு திட்டத்திற்கு எத்தனை பேர்கள் வேண்டுமோ அவர்களைத் தான் எடுத்துக் கொள்கிறோம். அவர்களையெல்லாம் திட்டம் முடிந்தபிறகு கூட அங்கே வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லமுடியாது.

முதலிலே வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறவர்கள் திருப்பி வேலையில்லாமல் போகவேண்டும் என்பது அல்ல. ஒரு ப்ராஜக்ட்டில் 10 ஆண்டுகள், 5 ஆண்டுகள் அல்லது 2 ஆண்டுகள் என்று வேலை செய்திருக்கலாம். ஆனால் அவர்களுக்குத்தான் மற்ற ப்ராஜக்ட்டுகள் ஆரம்பிக்கப்படும் பொழுது முதன்மையான இடம் கொடுக்கப்படுகிறது. நெய்வேலியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இது மத்திய அரசாங்க ப்ராஜக்ட். மத்திய அரசாங்கத்திலே எங்கெல்லாம் ப்ராஜக்ட் வைக்கிறார்களோ, அவற்றில் எல்லாம் ஒரு ப்ராஜக்ட்டிலே இருந்தவர்களுக்குத்தான் முதன்மையான இடம் தரப்படும்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பெண்களுக்கு வேலை வேண்டும் என்று சொன்னார்கள். பெண்களுக்கும் வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றன. குடும்பத்திலே கணவன் வேலை செய்வதோடு மட்டுமல்லாமல் பெண்களும் குடும்பத்தையும் கவனித்துக்கொண்டு வேலையும் செய்கிறார்கள். ஃபேக்டரிகளிலும் வேலை செய்துகொண்டு வருகிறார்கள். ஃபேக்டரியில் கான்டின் வைத்திருப்பதைப்போல், தொழிலாளர்களுடைய குழந்தைகளைக் கவனிப்பதற்கு 'கிரீச்' வைக்கப்படுகிறது. ஆனால் பெண்களுக்கு வேலையை ரிசர்வ் செய்துவைக்க வேண்டுமென்று சொன்னால், ஆண்கள் செய்யும் வேலைகளையெல்லாம் பெண்களால் செய்யமுடியாது. விவசாயத் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆறு மாதம் வேலையில்லை என்ற காரணத்தால் அவர்களுக்கு ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையிலே, சிறிய தொழில்களை அவர்களுக்கு ஆரம்பிக்கின்ற வகையிலே கவனம் செலுத்தப்படுகிறது.

வொக்கேஷனல் கைடன்ஸ் பற்றிச் சொல்லப்பட்டது. பள்ளிக்கூடங்களில் இதற்காக ஒருவரைப்போட்டு அவர் மாணவர்களுடைய மனோபாவத்தைக் கலந்துகொண்டு எந்தப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் அல்லது தொழில் பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறது, அவர்களுடைய வாய்ப்புக்கள் எப்படியிருக்கின்றன என்பதையெல்லாம் கவனிக்கப்படுகிறது. இது இப்பொழுது அமலில் இருக்கிறது. இது சம்பந்தமாக அதிகாரிகள் பள்ளிக்கூடங்களோடு தொடர்பு கொள்கிறார்கள். அது மாத்திரமல்ல. யுனிவர்சிடிகளில்கூட கைடன்ஸ் பீரோ இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு கைடன்ஸ் பீரோ இருக்கிறது. அது நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிறது. அண்மையிலே சென்னைப் பல்கலைக் கழகத்திலும் ஒரு கைடன்ஸ் பீரோ ஆரம்பிக்கப்பட்டு அதுவும் இப்பொழுது நல்ல முறையிலே நடந்துகொண்டிருக்கிறது. இனிமேல் துவக்கப்படுகின்ற மதுரைப் பல்கலைக் கழகத்திலும் இது அமைக்கப்பட இருக்கிறது. இன்றைக்கு மாணவர்கள் இதன் மூலம் பயனடைகிறார்கள். அவர்கள் எவ்வளவு தகுதியுள்ளவர்கள், எப்படி அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதெல்லாம் கவனிக்கப்படுகிறது. இந்த கைடன்ஸ் பீரோக்கள் அவர்களுக்கெல்லாம் நல்ல வழி காட்டக்கூடிய அளவிலே அமைந்திருக்கின்றன. எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ் நல்ல முறையில்





நடந்துகொண்டு வருகிறது. அதிலே பிஸிகல் ஹாண்டிகேப் இருப்பவர்களைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களையும் தொழிலதிபர்கள் பயிற்சிகொடுத்து எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிறது. வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் ரிஜிஸ்டர் செய்தால்தான், அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். ஒரு வேலைக்கு வாய்ப்புக்கொடுத்தால், சிலர் அந்த வேலைக்குப் போவதில்லை. ஒரு ஊரில் போட்டால், ஒரு ஊரிலிருந்து மற்ற ஊருக்குப் போவதில்லை. வேலை தேடித் தரும் ஸ்தாபனம் என்றால் அது வேலையை உடனடியாகக் கொடுக்கிற ஸ்தாபனம் அல்ல. வேலையிருக்கிறது என்ற தகவல் கொடுக்கிற ஸ்தாபனம்தான். ஒரு பக்கத்திலே வேலை செய்கிறவர்களுக்கு பாதுகாப்பு, நியாயமான ஊதியம், வீட்டுவசதி போன்றவற்றை நாம் செய்துகொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

வீட்டுவசதியைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்கு தொழிலதிபர்கள் இன்னும் அதிகமாக வீட்டுவசதியைப் பெருக்கியாகவேண்டும். சென்னை நகரத்தில் உள்ள அரசாங்க தொழில் ஸ்தாபனங்களைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது என்றால், முதலிலே அதைவிட இன்னும் அவசியமான வசதிகளைச் செய்துகொடுத்துக்கொண்டு இருக்கிறோம். குடியிருக்கிற இடங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்குப் போய் வேலைசெய்துகொண்டிருக்கிறார்கள். மாவட்ட தலைமை ஸ்தாபனங்களில்கூட ஹௌஸிங் போர்டு சார்பாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. ரேஷனலைஸேஷன் பற்றிக் குறிப்பிட்டார்கள். அனுபவம்பெற்ற நிபுணர்களைப்போட்டு ரேஷனலைஸேஷன் பற்றியும் நாம் கவனம் செலுத்தவேண்டும். அதற்காக வேலை செய்கின்றவர்கள் வேலையை விட்டுப் போகும் முறையில் அல்ல. பழைய முறையையே வைத்துக்கொண்டிருந்தால் நல்லதல்ல. உற்பத்தியைப் பெருக்கவேண்டும். இந்த ஆண்டு நேஷனல் 'ப்ரொடக்டிவிடி இயர்' ஆக இருக்கிறது. இதற்கு ஒரு தனிக் குழு இருக்கிறது. இந்த ஆண்டு இண்டர்நேஷனல் ப்ரொடக்டிவிடி ஆண்டு. உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால் பழைய இயந்திரங்களை வைத்துக்கொண்டு பழைய முறையிலேயே வேலை செய்வது சரியல்ல. உற்பத்தியைப் பெருக்குவதோடு தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகள், அவர்களுடைய நலம் எல்லாம் கவனிக்கப்படவேண்டும். எம்ப்ளாயீஸ் இன்ஷூரன்ஸ் மூலம் அவர்களுடைய உடல்நலம் பாதுகாக்கப்படும். இது சீரிய முறையில் நடந்து கொண்டுவருகிறது. சென்னையில் அவர்களுக்கு டிஸ்பென்சரி கட்டப்பட்டுவருகிறது. கோவை, விக்கிரமசிங்கபுரம், தூத்துக்குடி போன்ற பெரிய நகரங்களைத் தவிர, மற்ற இடங்களில் எல்லாம் அவர்களுடைய குடும்பங்களுக்கும் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருகிறோம். பெரிய நகரங்களில் இதைப்போல் கொண்டுவரவேண்டுமென்றால், டிஸ்பென்சரிகள், டாக்டர்கள் வேண்டியிருக்கிறது. ஆனால் அவற்றையும் சீக்கிரமே விஸ்தரிக்கவேண்டுமென்பது தான் அரசாங்கத்தினுடைய அபிப்பிராயம். முதன்முதலாக சென்னை நகரத்தில் உள்ள தொழிலாளர்களும், குடும்பங்களும் சேர்த்து கவனிக்கப்படுகிற வகையில் ஆஸ்பத்திரி விஸ்தரிப்பு கவனிக்கப்பட்டு

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1966

வருகிறது. குறைந்த பட்ச கூலி நிர்ணயச் சட்டம்பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்னும் புதிய புதிய தொழில்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அவை சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் 5 ஆண்டு களுக்கு ஒரு முறை கவனிக்கப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை போதாது என்று சொன்னார்கள். முதலில் எல்லாத் தொழில்களுக்கும் இதைக் கொண்டுவந்துவிட்டால் பின்னால் அதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்யலாம். சில உறுப்பினர்கள் குறிப்பாக சில குறைகள் பற்றி சொன்னார்கள். அவற்றையெல்லாம் அதிகாரிகள் கவனித்துக்கொண்டு வருகிறார்கள், எல்லாவற்றிலும் கவனம் செலுத்தப்படும் என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

1-30 p.m. திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நெய்வேலியிலே இருக்கின்ற சிவில் என்சினியர்களிலே 350 பேர்களுக்கு மேல் ரிட்ரென்ச் செய்யப்படுகிற நிலை இருக்கிறது. இந்த ஆண்டு மார்ச் 31-ம் தேதியோடு நூற்றுக்கணக்கானவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட இருக்கிறார்கள். அவர்களுடைய வேலை வாய்ப்புக்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** என்சினியர்கள் எல்லாம் லேபர், பாக்டரி ஆக்டின் கீழ் வரமாட்டார்கள். கனம் அங்கத்தினர் கூறியது போல் 350 பேர் அல்ல; 85 பேருக்குத்தான் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் மத்திய அண்டர்டேக்கிங்கில் வேலை பார்த்துக் கொடுக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி பெரிய ப்ராஜக்டுகளில் இவ்விதமான நிலைமை ஏற்படுவது தவிர்க்க முடியாதது. வேலை செய்கிறவர்களுக்கு அனாவசியமாக பாதகம் ஏற்படக் கூடாது என்பதிலே அரசாங்கம் எப்போதும் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

திருமதி டி. என். அனந்தநாயகி : பி.டபிள்யூ.டி. ஒர்க்ஷாப்பிலே ஐந்து வருஷங்களுக்கு மேலாகியும் காயப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் மனது வைத்தால் அவர்களுக்கு விமோசனம் ஏற்படும். அதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதிலே முதலமைச்சர் மனது வைக்கும் நிலை ஒன்றும் இல்லை. விதிகள் இருக்கின்றன; முறை இருக்கிறது. என்னுடைய சொந்தக்கருத்தாக நான் வற்புறுத்திக் கொண்டு வருவது என்னவென்றால், நிச்சயமாக இத்தனை பேர் அவசியம் இருக்கிறது, எப்போதும் இந்த எண்ணிக்கை குறையாது என்றால், அவர்களையெல்லாம் நிரந்தரமாக்கிவிட வேண்டுமென்பதுதான். கனம் அங்கத்தினர் கூறிய ஒர்க்ஷாப்பில் மட்டுமல்லாது எல்லா இடத்திலும் இந்த மாதிரிச் செய்யவேண்டுமென்றுதான் பார்க்கிறேன்.

The cut motion was put and lost.



9th March 1966]

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,19,16,200 under Demand No. XXIV—Labour including Factories."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

### V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

#### A.—Statutory Rules and Orders.

* 146. *Notification issued with G.O. Ms. No. 163, Rural Development and Local Administration, dated the 1st February 1966 making certain amendments to the rules relating to provident funds maintained by Municipal Councils published with the Rural Development and Local Administration Department, Notification No. 2244, dated the 2nd December 1931, published at pages 1136 to 1145 of Part I-A of the* Fort St. George Gazette, *dated the 22nd December 1931 as subsequently amended. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

* 147. *Notification issued with G.O. Ms. No. 147, Revenue dated the 27th January 1966 directing that the ryotwari settlement of Vysur Agraharam inam estate in Hosur taluk of Dharmapuri district be effected in accordance with the provisions contained in the settlement notification relating to the settlement of estates in northern taluks of composite Salem district. [Laid on the Table of the House under section 67(4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948)].*

* 148. *Notification issued with G.O. Ms. No. 4398, Home, dated the 14th December 1965, making an amendment to insert a new rule 160-P relating to the manner of loading on the goods vehicles to the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

#### B.—Reports, Notifications and other papers.

'*Nil*'.

* Laid on the Table of the House on 8th March 1966.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 10th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Periar Delta area*

* 227 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any scheme has been investigated for improvement, renovation and repairs of irrigation canals and tanks in the Periar Delta area; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (a) The scheme is still under investigation.

(b) Proposals are to be finalised after completion of investigation.

திரு. வை. சங்கரன் : இந்த ஸ்கீமை எடுத்துக்கொள்ளும்போது இர்ரிகேஷன் சானல்களிலும், ஏரிகளிலும் சிமெண்ட் லைன் செய் தால் அவை பழுதாகாமல் இருக்கும் என்பதை ஆலோசித்து கனம் அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கை எடுப் பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இதுபோன்ற ஆலோசனைகளும் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. செ. மாதவன் : பெரியார் ஆயக்கட்டில் விஸ்தரிக்கக்கூடிய திட்டம் இருந்ததே அந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா ? அதைச் செய்யும்போது இராமனாதபுரம் மாவட்டத்திற்கு விஸ்தரிக்கும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பெரியார் ஆயக்கட்டைப் பொறுத்தவரையில் அது ஆரம்பமான தேதியில் இருந்து இன்று வரை புதிய நிலங்கள் சாகுபடிக்கு வந்திருக்கின்றன. ஆனால், சில சமயங்களில் பற்றுக்குறை வந்திருக்கிறது. ஆகையால்தான், அடிப்படையான சில திருத்தங்கள் செய்தால் பயனுக்கு வரக் கூடிய நிலங்களை ஓரளவு பாதுகாக்கக் கூடிய வழி கிடைக்கும். அது முடிந்த பிறகு மேலும் தண்ணீர் கிடைக்கும்போது மற்ற இடங்களுக்கும் கொடுக்க ஆலோசிக்கப்படும்.

[10th March 1966

*திரு. வை. சங்கரன் :* பெரியார் டாமிலிருந்து 100, 110 அடி உயரத்திலிருந்துதான் தண்ணீர் எடுக்கப்படுகிறது. அதற்கு மேலும் ஆழமான மட்டத்திலிருந்து டிரா செய்தால் தண்ணீர் அதிகமாகக் கிடைக்கும். ஆகையால் 10 அடி மேலும் இறக்கி அதிகமான தண்ணீர் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. வெ. ராமைய்யா :* பெரியார் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் எடுக்க இப்போது அங்கே சானல்கள் இருக்கின்றன. அவற்றை ஆழப்படுத்தினால் இன்னும் கொஞ்சம் தண்ணீர்கூட எடுக்கலாம். இது நம்முடைய அரசாங்கம் மட்டும் செய்யக்கூடியதல்ல. கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருக்கிறது. அப்படிக் கலந்து பேசுவதற்குச் சாத்தியப்பட்டால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

*திரு. செ. மாதவன் :* பெரியார் தண்ணீரை முறைப்படுத்தி விட வேண்டும் என்று திட்டம் இருக்கிறது. தண்ணீரை முறைப் படுத்தி விட்ட பிறகு ஏராளமான நிலங்களுக்குத் தண்ணீர் கிடைத்திருக்கிறது. முறைப்படுத்தித் தண்ணீர் விடப்படுவதால் ஏராளமான நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்று பொறுப் புள்ள என்ஜினியர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. வெ. ராமைய்யா :* இந்தத் திட்டத்தினால், பெரியார் திட்டத்திலிருந்து தண்ணீரை ஒழுங்கு படுத்துவதன் காரணமாக, அதிகமான ஆயக்கட்டுக்களைக் காப்பாற்ற முடிந்தது. இதை அனுபவமாக வைத்துக்கொண்டு அடுத்து, அடுத்து வரக்கூடிய வருஷங்களில் எப்படிச் செய்யலாம் என்பது பரிசீலிக்கப்படும்.

*திரு. வை. சங்கரன் :* வைகை நதி வழியாகத் தண்ணீர் எடுத்தால் இராமநாதபுரம், சிவகங்கை போன்ற பகுதிகளுக்கும் எடுத்துச்செல்லக்கூடிய வைகை நதி அபிவிருத்தி வேலையும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. வெ. ராமைய்யா :* வைகைத் தண்ணீர் ரீமாடலில் ஸ்கீம் என்ற முறையிலே பரிசீலனை செய்து பெரிய திட்டமாக அது உருவாகி வருகிறது.

*திரு. செ. மாதவன் :* தண்ணீரை முறைப்படுத்தி விடக் கூடியதைப் பரிசீலிக்கும்போது அதிகமாகத் தண்ணீர் கிடைத்தால், திருப்பத்தூர் தாலுக்காவிற்கும் கொடுப்பதுபற்றி அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்வார்களா?

*கனம் திரு. வெ. ராமைய்யா :* எந்தத் தாலூகா என்பது பிரச்னை அல்ல. வைகை அணைக்கட்டுத் திட்டத்தினால் ஏராளமான தண்ணீர் பாயவேண்டியிருக்கிறது. அது தொடர்ந்து அதிகமான தண்ணீர் கொடுக்கவேண்டுமானால் விவசாயிகளுக்கு எந்த வகையில் லாபம் ஏற்படக்கூடிய முறையில் செய்யமுடியுமோ, அந்த வகையில் செய்யப்படும்.



10th March 1966]

SRI C. CHIRANJEEVULU NAIDU : By renovating these canals and tanks, may I know the extent of land that is proposed to be brought under cultivation?

THE HON. SRI V. RAMAIAH : The proposal is to stabilise the existing ayacut.

### *Water from Bhavanisagar*

* 228 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to let out water from Bhavanisagar at least for a single short-term crop?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

### *Cauvery water for Madras*

* 229 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal for bringing Cauvery water for Madras with a view to supplementing water supply;

(*b*) whether any investigation has been made in this regard; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : An answer[a] is placed on the table of the House.

*திரு. காஞ்சி மணிமொழியார் :* இந்தக் காவேரி திட்டத்தைப் பற்றி சென்னை மாநகராட்சியிலிருந்து ஏதேனும் திட்டம் சென்னை அரசுக்கு வந்திருக்கிறதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

*கனம் திரு. வெ. ராமைய்யா :* சென்னை அரசாங்கம்தான் வேண்டிய இன்வெஸ்டிகேஷன் செய்து ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது.

*திரு. வை. சங்கரன் :* இந்தத் திட்டம் முடிந்துவிட்டால் சென்னை நகரத்தில் தண்ணீர்ப் பற்றுக்குறை தீர்ந்துவிடுமா? இதனால் காவேரி டெல்டாவில் தற்போது இருக்கக்கூடிய இர்ரிகேஷன் உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படாது இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*கனம் திரு. வெ. ராமைய்யா :* தண்ணீர்ப் பிரச்னை தீர்ந்து விடுவதற்குக் காரணம் இல்லை. ஏனென்றால் மக்களுடைய தொகை, இண்டஸ்ட்ரியல் யூஸ், அதோடு இல்லாமல் இங்கு இருக்கக் கூடிய பெரிய கப்பல் துறைமுகம்—இவைகளினுடைய தேவைகளும் வளர்ந்துகொண்டுவருகிற காரணத்தினால் 5, 6 ஆண்டுகளுக்கு முன், போதும் என்று நினைத்து நாம் போட்ட

[a] Printed as Appendix on pages 448.

திட்டத்தை இப்பொழுது ஒரு நிலையான திட்டமாக வளரும் தேவைகளுக்கு ஏற்றதிட்டமாக நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொண்டுவருகிறோம்.

**புலவர் கா. கோவிந்தன் :** காவேரித் தண்ணீரை சென்னை நகருக்குக் கொண்டுவருவதற்கான ஆராய்ச்சி 1960-ம் ஆண்டில் தொடங்கி 6 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இன்னும் முடியவில்லை. அது எவ்வளவு சீக்கிரம் முடியும்? உடனடியாகத் தண்ணீர் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** உடனடியாகச் செய்யக்கூடிய முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை இது நிரந்தரமான திட்டமாக இருக்கிறது. நாம் இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்யும்போது, ஆரம்பத்தில் அப்போது இருந்த தேவைக்கும், அடுத்த பத்து ஆண்டுகளில் ஏற்படக்கூடிய தேவைக்கும் தகுந்தவாறு திட்டங்கள் போட்டோம். ஆனால், இப்போது இருக்கிற தேவை, டிமாண்ட் இவற்றைப் பார்த்து இதை ஒரு பெரிய திட்டமாகப் போட்டு எங்கே இருந்து 'டாப்' செய்யலாம் என்று எல்லாம் பார்த்து முடிவு செய்யப்படும்.

**திரு. மு. கருணாநிதி :** இத்திட்டத்திற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. வெ. ராமையா :** ஆரம்பத்தில் வீராணம் டாங்கிலிருந்து டாப் செய்வதற்கு ஸ்கீம் செலவு 17.13 கோடி ரூபாய். ஆனுவல் மெயின்டினன்ஸ், பம்பிங் போன்றவற்றிற்கு 35 லட்சம் ரூபாய்.

**திரு. மு. கருணாநிதி :** வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிற திட்டம் அமலுக்கு வருமானால் அது நிறைவேற்றப்பட்ட பிறகு அந்தத் தண்ணீர் வருகிற வழியில் உள்ள இடங்களுக்கும்கூட பாசனவசதி கொடுக்க ஏற்பாடுகள் உண்டா ?

**கனம் திரு. வெ. ராமையா :** பாசனத்திற்கு இல்லை. அந்த ஸ்கீம் வரக் கூடிய வழிகளில் உள்ள கிராமங்கள், சிறிய நகரங்கள் இருந்தால் அவைகளுக்குக் குடிதண்ணீர் கொடுக்கப்படும்.

**திரு. சா. கணேசன் :** இந்த வீராணம் ஏரியிலிருந்து சென்னை வரையிலே வருகிற அந்தக் குழாயின் நீளம் எவ்வளவு? இடையில் எவ்வளவு கிராமங்கள் வரக்கூடும்? வருகிற அத்தனை கிராமங்களிலும் எத்தனை கிராமங்களுக்கு தண்ணீ கொடுப்பதற்கு வேண்டிய முன் ஏற்பாடுடன் வசதிகள் செய்யப்பட்டு திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** விவரங்கள் இருந்தாலும் அதற்குள்ளேபோக இப்போது நான் விரும்பவில்லை. வீராணம் ஏரியிலிருந்து டாப் செய்யக்கூடிய திட்டம் சென்னை நகரத் தேவைக்கு இப்போது போதுமானதாக அமையவில்லை. 30, 40



மில்லியன் காலன் போதும் என்று இருந்தது. இப்போது கணக்கு போட்டுப் பார்க்கிறபோது அது போதாது. ஆகவே புதுத் திட்டம் உருவாக்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அந்தப் புள்ளிவிவரங்களைப் படிக்கிறேன். 1961-க்கு மட்டும் டொமஸ்டிக் நீட்ஸ்க்கு 69 மில்லியன் காலன்ஸ், 1981-ல் 104 மில்லியன் காலன்ஸ், 1991-ல் 175 மில்லியன் காலன்ஸ், இன்டஸ்ட்ரியல் ரிக்வொயர்மென்ட்ஸ்க்கு 1961-ல் மில்லியன் காலன்ஸ். 1981-ல் 70 மில்லியன் காலன்ஸ், 1991-ல் 100 மில்லியன் காலன்ஸ் வீரணத்தில் இருந்து தண்ணீர் எடுத்தால் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாது. அதனால் வீராணம் ஏரியில் இருந்து குறைந்த அளவில் டாப் செய்வதற்குப்பதில் காவேரி மேல் பாகத்தில் இருந்து இந்தத் தண்ணீரை எடுக்க முயற்சி செய்தால் அங்கு கிராவிட்டி ஃப்ளோ வரமுடியும். ஆகவே அது பற்றி நம் ராஜ்ய சர்க்கார் ஆலோசித்ததோடுகூட, மத்திய அரசாங்க நீர்ப்பாசன அமைச்சர் டாக்டர் ராவ் அவர்கள் அவர்களுடைய என்ஜினியர்களை அனுப்பி ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டிய முயற்சிகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன.

**திரு. சா. கணேசன் :** வீராணம் ஏரியில் சில பருவ காலத்திலே நீர் குறைந்த அல்லது வற்றிப் போகக் கூடிய நிலைகூட ஏற்படும். ஆகவே அங்கிருந்து நீர் எடுப்பதைவிட ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொன்னபோது இன்னும் மேல் நிலையிலிருந்து கொண்டு வருகிற ஒரு கருத்து இருக்கிறது என்பதையும் புலப்படுத்தினார்கள். அப்படியிருக்கிறபோது, மேட்டூர் அல்லது அது போன்ற பகுதிகளிலிருந்து அந்த ரிசர்வாயர்களிலிருந்து தண்ணீர் கொண்டுவர அல்லது மேட்டூர் போன்ற பகுதிகளைவிட இன்னும் மேலேயிருந்து கொண்டுவர ஏற்பாடுகள் உண்டா? அதுபற்றி சர்க்கார் சிந்தித்திருக்கிறதா? அப்படியானால் விவரம் என்ன ?

**கனம் திரு. வெ. ராமையா :** வீராணம் ஏரி வறண்டு போகும் என்று சொன்னால் காவேரிப் பாசனமே வறண்டு போகும். வீராணம் இன்டிப்பென்டன்ட் ஸோர்ஸ் அல்ல. பலவற்றோடு இணைக்கப்பட்டதாகும். குறைந்த அளவு தண்ணீர் எடுக்கவேண்டுமென்றால் ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சரைக் குறைக்க வேண்டுமென்பதற்காகவும், கிராவிட்டி ஃப்ளோவில் வரக்கூடிய சூழ்நிலையிலும் காவேரியில் இருந்து ஜேடர்பாளையத்தில் இருந்து டாப் செய்யலாம் என்ற ஆலோசனையோடு, மேட்டூரிலிருந்து டாப் செய்ய முடியுமா என்பதும் ஆலோசனையில் இருக்கிறது.

**திரு. வை. சங்கரன் :** இந்தத் தேவையை வேறு முறையில் கணக்கிட்டால் சென்னைக்கு எவ்வளவு ஏக்கர்களுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது? பற்றாக் குறை காலத்தில்கூட பாதிக்கப்படாத நிலை இருக்குமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** பரிசீலிக்கும்போது பாதிக்கப்படக் கூடிய நிலங்களையும் ஞாபகத்தில் வைத்துத்தான் உருவாக்க வேண்டும். அந்த முறையில் காம்பன்சேஷன், மற்ற ஈடு

எவ்வளவோ அதை எல்லாம் திட்டம் அங்கீகரிக்கும்போது அரசு பரிசீலனை செய்து முடிவுக்கு வரும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** காவேரி மேல் பகுதியிலிருந்து சென்னைக்குக் குடிதண்ணீர் திட்டம் கொண்டுவருவதற்கு மைசூர் சர்க்காரின் அனுமதியை நாம் பெறவேண்டுமா ? அப்படி பெறப் பட்டிருக்கிறதா ? அடிக்கடி அனுமதி கொடுத்து விட்டு மறுபடியும் மறுக்கப்படுகிறது, ஒவ்வொன்றுக்கும். இப்போது ஹொகனைக்கலுக்குக்கூட மறுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி விவரிப்பார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நம் ராஜ்யத்தில் கிடைக்கும் தண்ணீரைத்தான், பாசனத்திற்கு கொடுப்பதைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டுதான் நகர குடிதண்ணீருக்குக் கொடுக்க வேண்டும். ஆகவே, மைசூரோடு பேச வேண்டிய அவசியமில்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** பாசனத்திற்குக் குறைப்பதை விட மைசூரிலிருந்து இன்னும் கொஞ்சம் அதிகமாகத் தண்ணீர் கொடுக்க, அங்கிருந்து உற்பத்தியாவதைக் கொடுக்க ஏற்பாடு செய்ய ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அந்த ஆலோசனை இப்போது ஒன்றுமில்லை.

**திருமதி செகதாம்பாள் வேலாயுதம் :** தலைவர் அவர்களே, உடையார்பாளையம் தாலுகாவிற்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க ஒரு ஸ்கீம் இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதை இதுவரையில் காணோம். ஆகவே, உடையார்பாளையம் தாலுகாவிற்கு குடிதண்ணீர் வசதியாவது அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** உடையார்பாளையம் தாலுகா நம் ராஜ்யத்தில் உள்ள பிற்போக்கான பகுதிகளில் ஒன்றாகும். குடி தண்ணீர் வசதியைப் பொறுத்தவரையில் அந்தத் தாலுகாவிற்கு விசேஷ சலுகை காட்டவேண்டும் என்பதுதான். சாதாரணமாக சிறிய திட்டங்களைப் போட்டால் அதில் தண்ணீர் கிடைக்கும் நிலை இல்லை. பக்கத்திலுள்ள கொள்ளிடத்திலிருந்து ஏதாவது பெரிய பம்பிங் ஸ்கீம் போட்டு அங்குள்ள பல கிராமங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் ஆலோசனை.

**திரு. அ. ராகவ ரெட்டி :** சென்னைக்குக் குடிதண்ணீர் ஆந்திராவிலிருந்து கொண்டு வர ஒரு திட்டம் இருந்தது, அது என்னவாயிற்று ? அது கைவிடப்பட்டு விட்டதா அல்லது, பரிசீலனையில் இருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கைவிடப்படவில்லை. அதுவும் பரிசீலனையில் இருக்கிறது.



**புலவர் கா. கோவிந்தன் :** சென்னைக்குக் குடி தண்ணீர் காவேரியில் இருந்து கொண்டு வருவதாகவும், தொழிலுக்குப் பயன்படும் தண்ணீரை நிலத்தின் அடியில் உள்ள தண்ணீரை தோண்டி எடுத்துக் கொள்வது என்ற திட்டம் இருந்ததே அது எந்த நிலையிலுள்ளது ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை எடுப்பதற்கும் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சென்னைக்கு குடிதண்ணீர் கொடுக்கிற பிரச்னைபற்றி, கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகவே, வெயில் நாட்கள் வரும்போது, சென்னையில் குடி தண்ணீர் கஷ்டம் ஏற்படும்போது பேசுகிறார்கள். ஆனால் முடிவு ஏற்படவில்லை. திட்டம் போட்டு இன்வெஸ்டிகேஷன் செய்து 17 கோடிக்கு எஸ்டிமேட் தயார் செய்து பின் மெயின்டினன்ஸ்க்கு என்று 35 லட்சத்திற்கும் எஸ்டிமேட் போட்டு விட்டார்கள். மேல் இடத்தில் கட்டவேண்டுமென்றால் ரிசர்வாயர்கள் கட்டவேண்டும். அது பல கோடிக்குப் போகும். இந்தத் திட்டத்தை ஒத்தி வைப்பதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். அரசியல் காரணங்கள் இருக்கலாம். ஐந்தாறு ஆண்டுகள் கழிந்து, கொண்டு வரவேண்டுமென்ற கருத்தும் இருக்கலாம். தாமதத்திற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நான் பதில் சொன்னதற்குப் பிறகும் கனம் அங்கத்தினர் அவர்கள் எப்படி வேறு காரணங்களைக் கற்பனை செய்தார்கள் என்று தெரியவில்லை. இதிலுள்ள சிக்கல்களைக் கவனித்து, இதற்கு வேண்டிய முயற்சிகளை எல்லாம் செய்து, நிரந்தரமான திட்டம் ஒன்றை அமைக்கவேண்டுமென்று தான் பல இன்வெஸ்டிகேஷன்ஸ் நடந்தன.

**திரு. வை. சங்கரன் :** காவேரி மூலம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது. அவர்களுக்கு தண்ணீர் எடுக்க பூர்ண உரிமை இருக்கிறது. இன்றுபோல் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் காலத்தில் ஆப்டிமம் சப்ளை எடுக்கும்போது அவர்களுடைய தண்ணீர் உரிமை பாதிக்கப் படாத அளவிற்கு இத்திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எந்தப் புதுத்திட்டம் வகுத்தாலும் இப்போதுள்ள உரிமைகள், மக்களுடைய தேவைகள் ஆகியவற்றிற்கு சிறிதும் பாதகம் இல்லாமல்தான் திட்டம் வகுக்கப் படும். முக்கியமாக நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் அந்தக் கொள்கைதான் கண்டிப்பாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. காவேரி நீர்ப்பாசனத் திற்குக் கொஞ்சம்கூட குந்தகம் இல்லாமல் ஓரளவிற்கு சென்னை நகரத்திற்கான குடிதண்ணீருக்காக எடுத்துக் கொள்ளலாம் என்பதை உணர்ந்துதான் இந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தை முதன்முதலாகத் தோற்றுவித்தவர்கள், கண்டவர்கள், மேலும் அதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தவர்கள் அரசாங்கம்தான்.

நகர மன்றம் அல்ல. அரசாங்கம்தான் இதை எடுத்துக் கொண்டு நிரந்தரமான ஒரு வழி காண்பதற்காக இதைச் செய்யலாம் என்று எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இது உடனடியாக நிறைவேற்றப்படக்கூடியதல்ல. இதில் பரிசீலனை செய்யவேண்டும், நிதி வேண்டும். இதில் எல்லாம் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. கோதாவரி, கிருஷ்ணா தண்ணீரிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்தை மத்திய சர்க்கார் தெரிவித்தார்கள். இது சுலபமாக இருக்கும், சிக்கனமாக இருக்கும். அதுவும் பரிசீலனை செய்யப்பட்டு வந்தது. இதெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. சென்னை நகருக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் நிரந்தரமாக கிடைக்கவேண்டும் என்பதில் அரசாங்கத்திற்குப் பரிபூர்ண அக்கறையுண்டு, ஆனால் திருப்பித் திருப்பி தி.மு.க.-வைச் சேர்ந்த எதிர்க்கட்சி கனம் உறுப்பினர்கள், இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கவில்லை, நகரமன்றம்தான் கவனிக்கிறது என்று சொல்வது ஏதோ ஒன்றை மனத்தில் வைத்துச் சொல்கிறார்களேதவிர வேறு அல்ல. சென்னை நகரின் குடி தண்ணீர்த் தேவையைப் பற்றி அரசாங்கத்திற்குப் பரிபூர்ண அக்கறை உண்டு. எதில் என்னென்ன கவனம் செலுத்த வேண்டுமோ, நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டுதான் வருகிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்ததற்காக மிகவும் நன்றி. ஆனால் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு (வொர்ல்ட்) உலக பாங்கிலிருந்து எக்ஸ்பெர்ட்கள் வந்து பார்வையிட்டு, இதற்காக ஒரு திட்டம் போட்டு, அதற்கு 18 லட்சம் ரூபாய் ஆகும் என்றும், அந்தத் தொகையை அவர்கள் நீண்ட காலத்தவணைக் கடனாகத் தருவதாகவும், ஆனால் அதற்கு சென்னை அரசாங்கம் உத்தரவாதம் தரவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு சென்னை அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அப்படி ஒத்துக்கொள்ளாததற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது தவறு. வொர்ல்ட் பாங்கிலிருந்து எக்ஸ்பெர்ட்கள் வந்து அப்படி ஒன்றும் சொல்லவில்லை. அரசாங்கம் அதற்குக் குறுக்கே நிற்பதாகச் சொல்வதும் தவறு.

### வேலூர்-கிருஷ்ணகிரி சாலை

*** 230 கேள்வி—திரு. ர. ஜீவரத்னம்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூரிலிருந்து கிருஷ்ணகிரிக்குப் போகும் பாதையை அகலப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

**(இ) ஆமெனில், அவ்வேலை எப்போது மேற்கொள்ளப்படும்?**



THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) The Vellore-Krishnagiri Road forms part of the Ranipet-Krishnagiri road (National Highway 46) from mile 86/4 to 159/5. The work of widening the black top surface from 86/4 to 87/2 to 22 feet width is in progress. The stretch from mile 87/2 to 124/6 has already been widened to 22 feet width. Proposals for widening the remaining stretch from miles 124/6 to 159/5 have been included in the Fourth Five-Year Plan for National Highways and the approval of the Government of India is awaited.

MR. SPEAKER: I have received information that the Hon. Minister for Health is not doing well. So, I am passing over questions with Nos. 231, 232 and 233.

### மகிழம்பாடி பஞ்சாயத்து

*** 234 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து:** கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) லால்குடி பஞ்சாயத்து யூனியனிலுள்ள மகிழம்பாடி பஞ்சாயத்தில் அரிசன தெருவுக்குக் குடி தண்ணீர் வழங்குவதற்கு பைப் லைன் போட சர்க்காரால் தற்காலிக தடை விதிக்கப்பட்டு இருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** (அ) ஆம்.

(இ) செயற்குறிப்பிலுள்ள இவ்வேலையை நிறைவேற்றுவதை ஆதரித்தும் எதிர்த்தும் முறையீடுகள் வந்துள்ளன. எனவே, எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து முழு விசாரணை செய்த பின்னரே இது பற்றி முடிவு செய்யப்படும்.

**திரு. ப. அழகமுத்து:** தலைவர் அவர்களே, இங்கு ஹரிஜனங்களுக்கும் குடிதண்ணீர் வழங்குவதற்காக செய்யப்பட்ட முயற்சிகளுக்கு கலெக்டர் அவர்கள் ஸ்டே கொடுத்து இருந்ததை பின்னால் பரிசீலனை செய்து கலெக்டரே வெக்கேட் செய்து இருக்கிறார்கள். அதன் பிறகு மறுபடியும் சர்க்கார் ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். இன்னும் காலதாமதம் செய்யாமல் ஸ்டே-யை வெக்கேட் செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இந்த அபிப்பிராயத்திற்கு மாறுபட்டவர்கள், பஞ்சாயத்தில் இருக்கின்ற இப்போதுள்ள தலைவர் அவர்கள், பழைய முன்னாள் தலைவர், இவர்கள் எதிர்ப்பதும் ஆதரிப்பதுமான கருத்துக்களைக் கூறி சர்க்காரிடம் மனுக்கள் கொடுக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களும் மனு கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது சர்க்காரால் ஸ்டே கொடுக்கப்படுகிறது. அந்த முறையில்தான் இப்போது ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி மேலும் ரிப்போர்ட் கலெக்டரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அங்கு சுமுகமாகவும், நேர்மையாகவும் இருக்கின்ற வழியில் ஒரு முடிவு எடுக்கின்ற வகையில் ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. கலெக்டர் அவர்களின் ரிப்போர்ட் கிடைத்ததும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

[10th March 1966

**திரு. பி. முருகையன் :** 1965 மே மாதம் 31-ம் தேதி நடைபெற்ற பஞ்சாயத்து கூட்டத்தில் அரிஜன காலனிக்கு உயர்மட்ட தொட்டி—(ஓவர் ஹெட் டாங்க்) யிலிருந்து தண்ணீர்- கொடுக்கலாம் என்று ஏகமனதாக முடிவு செய்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரியான தகவல் என்னிடம் இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, 9-வது மாதம் ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. 11-வது மாதம் வெக்கேட் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்த மாதம் அதாவது 12-வது மாதத்தில் அங்குள்ளவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். இதற்கிடையில் கலெக்டர் அவர்கள் தடையுத்தரவு கொடுத்திருக்கிறார், பின்னால் வெக்கேட் செய்யப்பட்டிருக்கிறது. முன்னால் போடப்பட்ட தடையுத்தரவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது ? பின்னால் சர்க்கார் போட்டிருக்கும் ஸ்டே உத்தரவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கலெக்டர் அவர்கள் கொடுத்த உத்தரவில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்கின்ற தகவல் என்னிடமில்லை. சர்க்கார் ஸ்டே கொடுத்திருக்கிறது. அவ்வளவு தான் இப்போதிருக்கும் தகவல்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, இந்த விவகாரம் அங்கு இருக்கின்ற முன்னாள் பஞ்சாயத்து பிரசிடென்ட்டுக்கும் இப்போதுள்ள பஞ்சாயத்து பிரசிடென்ட்டுக்கும் ஏற்பட்டிருக்கின்ற தகராறினால் ஏற்பட்டது, அதன் காரணமாக மனுக்கள் கொடுக்கப்பட்டன, ஆகவே, ஸ்டே கொடுக்கப்பட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனால் பாதிக்கப்பட்டிருப்பது அங்கேயுள்ள அரிஜனங்கள். அரிஜனங்களுக்குத் தண்ணீர் கிடைக்க வசதியில்லை. உப்புத் தண்ணீர்தான் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்னைக்குக் காரணம் ஜாதித் தகராறு என்று தெரிகிறது. ஆகவே, மேலும் இந்தத் தகராறை வளரவிடாமல் இப்போது சர்க்கார் கொடுத்திருக்கின்ற ஸ்டே-யை சீக்கிரமாக வெக்கேட் செய்வதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அங்கு இரண்டு ஓவர் ஹெட் டாங்க்குகள் இருக்கின்றன. முதல் டாங்கிலிருந்து 14 வருடங்களாக அரிஜனங்கள் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அதில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்னை காரணமாக ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலித்து எந்த முறையில் தீர்க்கலாம் என்பதைப்பற்றி கலெக்டர் அவர்களிடத்தில் ரிப்போர்ட் கேட்டிருக்கிறோம். அது வந்ததும் சர்க்கார் அதைப் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

**திரு. எம். எஸ். மணி :** ஸார், இந்தப் பிரச்னையில் அரசாங்கம் உடனடியாகத் தலையிடாவிட்டால் அங்கு வகுப்புக் கலவரம் ஏற்படும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?



10th March 1966]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரியாக ஒன்றும் இல்லை.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, அங்கேயிருக்கின்ற மேல் ஜாதியினர் அரிஜன காலனிக்குத் தண்ணீர் கொடுக்க முடியாது என்று மறுத்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நான் முன்பே விளக்கமாகச் சொன்னேன். ஏற்கனவே அம்மாதிரியான பிரச்னை வந்ததால் தான் ஸ்டே வழங்கி நல்லமுறையில் அதைத் தீர்ப்பதற்கு—சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு—அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** ஸார், 2–11–1965-ல் ஸ்டே வெக்கேட் பண்ணியிருக்கிறார்கள். டிசம்பர் 3-ம் தேதி கல்லக்டர் ஸ்டே கொடுத்து, அவர்களிடம் மேலும் ரிப்போர்ட் கேட்டிருக்கிறது அரசாங்கம். டிசம்பர் 3-ம் தேதி கொடுக்கப்பட்ட ஸ்டே சம்பந்தமாக இன்னும் கலெக்டர் அவர்களிடமிருந்து ரிப்போர்ட் வரவில்லையா ? இவ்விதம் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இத்தனை குறுகிய காலத்திற்குள் சாதாரணமாக ரிப்போர்ட் வந்துவிடுவதில்லை. துரிதமாக அனுப்ப வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அவர்களுடைய ரிப்போர்ட் கிடைத்ததும் இதற்கு நிவாரணம் அளிப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளும்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, அங்கு இரண்டு ஓவர் ஹெட் டாங்க்குகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அரிஜனங்கள் பகுதியில் இருக்கும் ஓவர் ஹெட் டாங்க் சர்க்காரால் கட்டப்பட்டதல்ல. திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களால் 14 வருடங்களுக்கு முன்பு கட்டிக் கொடுக்கப்பட்டது. அந்த டாங்க்குக்கு தண்ணீர் கிடைக்கவேண்டிய கிணற்றில் உப்புத் தண்ணீர் இருந்தது. அதை உபயோகிக்க முடியுமா என்று டெஸ்ட் செய்யவும் இல்லை. ஆகவே மேல் ஜாதியினர் இருக்கின்ற பகுதியிலுள்ள டாங்கிலிருந்து அரிஜனங்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் கொடுப்பதற்காக பைப் லைன் போட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அதை மேல்ஜாதி இந்துக்கள் மறுக்கிறார்கள். அதை அதை சர்க்கார் அனுமதிக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சர்க்கார் அதை அனுமதிக்கிறது என்கின்ற முடிவுக்கு வரவேண்டிய அவசியமில்லை. அங்கே குடி தண்ணீர் சம்பந்தமான பிரச்னை எழுந்தது. அதற்காக பைப் லைன் போடும்போது தகராறு வந்தது. இது உச்சக்கட்டத்தில் வந்து விடக்கூடாது என்று நினைத்து ஸ்டே வழங்கப் பட்டிருக்கிறது. பின்னால், கலெக்டர் அவர்களின் அபிப்பிராயத்தின் படி, ஸ்டே வெக்கேட் செய்த பின்பும் பாதிக்கப்பட்டவர்கள் சர்க்காரில் வந்து முறையிட்டார்கள். இதன் காரணமாக ஸ்டே வழங்கப்பட்டிருக்கிறது. கலெக்டர் அவர்களிடத்தில் இதைத் தீர்ப்பதற்காக ரிப்போர்ட் கோரியிருக்கிறோம். அது சீக்கிரமாக வந்து விடும், வந்ததும், சர்க்கார் முடிவு எடுக்கும்.

[10th March 1966

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கலெக்டர் அவர்கள் முதலாவது ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். பின்னால் கலெக்டர் அவர்களே ஸ்டேயை வெக்கேட் செய்திருக்கிறார்கள். அதன் பின்னால்தான் சர்க்கார் ஸ்டே கொடுக்க வேண்டும் என்று கேட்டிருப்பார்கள். அப்படி அவர்கள் கேட்டபோது, கலெக்டர் அவர்கள் போட்டிருந்த ஸ்டே-யைப்பற்றியும், பின்னால் அவர்கள் வெக்கேட் செய்ததைப்பற்றியும் பரிசீலனை செய்ததா? அப்படிப் பரிசீலனை செய்திருந்தால் இப்போது ரிப்போர்ட் ஏன் கேட்டிருக்க வேண்டும்? கலெக்டர் தவறு செய்திருப்பார் என்று எண்ணியிருந்தால், அவ்விதம் செய்த தவறு என்ன? தவறு ஒன்றும் இல்லையென்றால் கலெக்டர் அவர்களின் ஸ்டே-யைப்பற்றி ஏன் பரிசீலனை செய்யவில்லை?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பொதுவாக கலெக்டர் ஸ்டே கொடுக்கலாம். அதைப்பற்றி இங்கு வந்து மனுக் கொடுப்பவர்கள், தங்கள் மனுவில் குறிப்பிடுவதில்லை. இந்த மனுவின் மீது அரசாங்கம் ஸ்டே வழங்குகின்றது. ஆகவே, கலெக்டர் அவர்கள் கொடுத்த ஸ்டே-யைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்குத் தேவை ஏற்படுவதில்லை.

*பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்கு வீட்டுவசதி*

* 235 கேள்வி—திரு. சா. ராமசாமி : கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள மானேஜர், ஹெட் கிளார்க் போன்றவர்கட்குக் குடியிருப்பு வீடுகள் கட்டும் உத்தேசமுண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இல்லை.

9–00 a.m. **திரு. சா. ராமசாமி :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் பணி புரியும் சில விஸ்தரிப்பு அலுவலர்களுக்கே போதுமான வீட்டு வசதி செய்து கொடுக்கப்படவில்லை. மேலாளர்கள்—ஹெட் கிளார்க் போன்றவர்கள்—மிகவும் முக்கியமானவர்கள்; அடிக்கடி தேவைப்படக் கூடியவர்கள். இவர்களுக்கு அதிகாரிகளின் அருகில் வீடு இருத்தல் அவசியம். மேலும் கிராமங்களில் வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் சேர்ந்து வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அந்த மாதிரி உத்தேசம் சர்க்காருக்கு இப்போது இல்லை.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, அம்மாதிரி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இல்லை என்றாலும், தாலூகா தலைநகரில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அமைந்தால் அரசாங்கம் அவர்களுக்கு ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுக்கிறது. வேறு இடங்களில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அமைந்தால் அவர்களுக்கு ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. ஆனால்



10th March 1966]

நகரப் பஞ்சாயத்து இருக்கும் இடங்களில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அமைந்துள்ள இடங்களில் உள்ள பணியாளர்களுக்கும் ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இந்தக் கேள்வியிலிருந்து இந்த உபகேள்வி எழாது.

*சிதம்பரம் வட்டத்திலுள்ள பஞ்சாயத்துகள்*

* 236 கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு ஜில்லா, சிதம்பரம் தாலூகாவில் இருக்கும் பஞ்சாயத்துகள் எத்தனை?

(இ) அந்தப் பஞ்சாயத்துகளில் பிரசிடெண்டாக அங்கம் வகிக்கும் ஹரிஜனங்கள் எத்தனை பேர்?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) 261.

(*b*) 46.

*Evening classes for Law Course*

* 237 Q.—SRI S. NANJUNDA ROW : } Will the Hon. the
SRI M. KARUNANITHI : } Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to conduct evening classes in the Madras Law College for Law Degree Course, for the benefit of the Government servants and others; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) It is proposed to start the course with effect from 1966–67.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த மாலை நேரக் கல்லூரியில் சட்டப் படிப்பு படித்து, பட்டம் பெற நிர்ணயித்துள்ள கால அளவு என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஓராண்டு அதிகமாக இருக்கும். கல்லூரியில் சேர்ந்து படிக்கிறவர்கள் எத்தனை ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற வேண்டியிருக்கிறதோ அதை விட ஓர் ஆண்டு அதிகமாக இருக்கும்.

SRI S. NANJUNDA ROW : Will the Government impress upon the new Madurai University to start evening colleges for Law in Madurai District?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :- There is no question of Government impressing on the University. It is for the University to consider.

**திரு. சா. கணேசன் :** இந்த சட்டப்படிப்பு மாலை நேரத்திலே பயிலுவதற்கு உரிய வாய்ப்பு கொடுக்கும்போது, இது பள்ளிக்கு வந்து படிப்பதோடு பள்ளிக்கு வெளியிலே இருந்தும் படிக்க வாய்ப்புக் கொடுக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லையா? எக்ஸ்டெர்னல் ஸ்டுடென்ட்ஸ் என்ற முறையில் அனுமதிக்கும் நோக்கம் உண்டா? அப்படியானால் எந்த முறையை அதிலே கையாள உத்தேசித்திருக்கிறார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாலை நேர வகுப்பிலே கல்லூரியிலே சேர்ந்து வகுப்புக்கு வந்து குறிப்பிட்ட நேரத்தில் பாடம் படிக்கிறார்கள். அவர்களும் கல்லூரிக்கு வருகிறார்கள். சாதாரணமாக கல்லூரிக்கு வந்து கல்லூரியிலே சேர்ந்து படிக்க முடியாதவர்களுக்கு மாலை நேர வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வேறு துறையிலே வேலை பார்க்கிறவர்கள், அவர்கள் சட்டத்தில் பட்டம் பெறாதவர்கள், சட்டத்தில் பட்டம் பெற விரும்புகிறவர்கள், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று, வேறு உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு மாலை நேர வகுப்பு ஏற்பாடு செய்து, அதில் அவர்கள் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : How many students will be admitted into these evening colleges?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : For F.L. course there will be one hundred students and the admission will be restricted to the *bona fide* students who can satisfy the authorities that by virtue of their being in employment they are unable to join the regular course.

**திரு. வை. சங்கரன் :** சார், இது தினம் எத்தனை மணி நேரம் வகுப்புகள் நடப்பதாக இருக்கும்? எஃப். எல்.-க்கு எத்தனை ஆண்டு காலம்? பி.எல்.-க்கு எத்தனை ஆண்டு காலம்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பே சொன்னேன். சாதாரணமாக எத்தனை ஆண்டு இருக்கிறதோ அதை விட ஓர் ஆண்டு அதிகமாக இருக்கும் என்று சொன்னேன். மாலைப் பொழுதில் எவ்வளவு நேரம், என்ன நேரம் என்பதையெல்லாம் கல்லூரி நிர்ணயித்துக்கொள்ளும்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த மாலை வகுப்புகளில் சேரக்கூடியவர்கள் உத்தியோகத்தில் இருக்கவேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது. உத்தியோகத்தில் இல்லாதவர்கள் கூட, உதாரணத்திற்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட, சேர வாய்ப்பு இருக்கிறது, அவர்களும் படித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் இந்த மாலை வகுப்புகளில் சேருவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுமா?





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உத்தியோகத்தில் இல்லாதவர்கள் முழு நேரக் கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும். அதற்காகத் தான் அப்படி முழு நேரக் கல்லூரி வைத்திருக்கிறோம். இல்லையென்றால் அதை எடுத்து விடலாம். உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு உத்தியோகத்தையும் விட முடியாது, படிக்க வேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது என்பதற்காகத் தான் மாலை நேர வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் தான் உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு மட்டும் என்று வைத்திருக்கிறோம்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, மாலை நேரத்தில் படிக்கும் அரசாங்க ஊழியர்கள் சட்டப் படிப்பு முடிகிற வரையில் வேறு இடங்களுக்கு மாற்றப்பட மாட்டார்கள் என்று அரசாங்கம் உறுதி அளிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது வேறு விஷயம். அம்மாதிரி உறுதி பொதுவாக அளிக்க முடியாது.

## கலைக் கல்லூரிகள்

* 238 கேள்வி—**திரு. வெ. குருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அடுத்த கல்வியாண்டில் தமிழகத்தில் புதிய அரசாங்கக் கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், எத்தனை, எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுள்ளன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Six Colleges one each at Thanjavur, Karur, Virudhachalam, Tiruvannamalai, Dindigul and Tiruppur are proposed to be started during 1966–67.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்படும் கலைக் கல்லூரிக்கு முதல் தவணையாக எவ்வளவு பணம் கட்டவேண்டும்? வட சென்னையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற கல்லூரிக்கு ஏதாவது கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முதல் தவணை மட்டுமல்ல. புதிதாகக் கல்லூரி ஆரம்பிக்க 5 லட்சம் ரூபாய் கட்டி விடவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். நான் முன்பே கூறியது போல வட சென்னை கல்லூரிக்கு இது வரையில் ஒன்றும் கொடுக்கவில்லை. 5 லட்சம் ரூபாய் வசூலித்துக் கொடுப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள் சிலர். கிடைக்கும் என்றே நம்புகிறேன், எதிர்பார்க்கிறேன்.

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிற கல்லூரி தஞ்சையிலேயே ஆரம்பிக்கப்படுமா ? அல்லது வேறு இடத்தில் ஆரம்பிக்கப்படுமா ? அது பெண்கள் கல்லூரியாக இருக்குமா ? அல்லது இருவரும் சேர்ந்து படிக்கும் கல்லூரியாக இருக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் குறிப்பிடும் கல்லூரி தஞ்சையிலே மகளிர்க்கான கல்லூரி.

**திரு. நா. துரைப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதியில் கல்லிக்குளத்தில் புதிதாக ஒரு கல்லூரிக்கு அஸ்திவாரம் போட்டிருக்கிறார்கள். அதற்கு அனுமதி கொடுக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் குறிப்பிட்டது அரசாங்கம் அமைக்கிற கல்லூரிகளைப் பற்றியது. திருநெல்வேலி ஜில்லாவில் அரசாங்கம் எதுவும் அமைப்பதாக இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சார், முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட லிஸ்டில் என்னுடைய மாவட்டமும் இருக்கும் என்று எதிர்பார்த்தேன், ஆனால் ஏமாற்றம் அடைந்து விட்டேன். சர்க்கார் துறையிலே ஆரம்பிக்கவில்லை என்றாலும் செயின்ட் ஜோசப் பெண்கள் கல்லூரி என்று ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்களே, அதைப் பரிசீலிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது அளித்த விடை அரசாங்கமே ஆரம்பித்து நடத்தும் கல்லூரி பற்றியது. கனம் உறுப்பினர் ஏமாற்றம் அடைந்ததாகச் சொன்னார்கள். உதகையிலே சர்க்கார் ஒரு கல்லூரியை அமைத்தது. முதலிலேயே சர்க்கார் அமைத்த கல்லூரிக்கு நீலகிரி மக்கள் உடனடியாக நிதி அளிப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் அளிக்கவில்லை என்பது எனக்கும் பெருத்த ஏமாற்றம். தனிப்பட்டவர்கள் கல்லூரி வேறு விஷயம். அதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லுகிறேன்.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாள் பண்டாரசந்நதி அவர்களின் உதவி கொண்டு ஆடுதுறையில் கல்லூரி ஏற்படுத்த அரசாங்கத்திடம் கோரிக்கை வந்ததே, அது எந்த நிலையில் உள்ளது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

*** 239 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூரில் உள்ள அரசாங்கக் கலைக் கல்லூரிக்கென புதிய கட்டடம் கட்டுவதற்கு எஸ்டிமேட் தயாரித்து டெண்டர் விடப்பட்டது உண்மையா ?

**(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?**



THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A sum of Rs. 24 lakhs has been sanctioned for the construction of permanent buildings for the college. Necessary further action such as calling for tenders is being taken by the Chief Engineer (Buildings), Public Works Department.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, இப்போது புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற கல்லூரியோடு மாணவர்கள் தங்குவதற்கு ஹாஸ்டல் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா ? இப்போது ஹாஸ்டல் வசதி இல்லாது மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கல்லூரியோடு சேர்ந்தாற்போல ஹாஸ்டல் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கல்லூரிக்குக் கட்டடம் கட்டும் போது ஹாஸ்டலும் கட்டத்தான் வேண்டும். கல்லூரிக்கே பொது மக்கள் சட்ட மன்ற உறுப்பினர் உட்பட 5 லட்சம் ரூபாய் நன்கொடை அளிப்பதாகச் சொல்லி அது பூர்த்தி ஆகவில்லை. இன்னும் அவர்கள் வசூலித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதில் கனம் அங்கத்தினரும் பொறுப்பாக அக்கறை எடுத்துக் கொண்டால் மேலும் மேலும் ஹாஸ்டல் கட்டடம் எல்லாம் கட்ட சௌகரியமாக இருக்கும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அரசாங்கம் எழுதிய ஒரு கடிதத்தில், எற்கெனவே கட்டிய 1 லட்சம் ரூபாய் போதாது, மேற்கொண்டு 2 லட்சம் ரூபாயாவது கொடுத்தால் தான் கல்லூரிக் கட்டடம், ஹாஸ்டல் கட்டடம் கட்ட முடியும் என்று எழுதினார்கள். அதற்குப் பிறகு நிதி வசூலித்து 2 லட்சத்திற்கு மேல், கேட்டதற்கு மேல், கொடுத்திருக்கிறோம். சட்ட மன்ற உறுப்பினர் மட்டுமல்ல, மற்றவர்களும் வசூலித்துக் கொடுத்து விட்டார்கள். கல்லூரி கட்டுவதில் 24 லட்சம் ரூபாயோடு மேலும் 2 லட்சம் செலவு செய்து ஹாஸ்டல் கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 3 லட்சம் கொடுத்தது, கொடுத்ததும் பூர்த்தியாக அரசாங்கத்திற்குச் சேரவில்லை. அரசாங்கம் கோருவது, எதிர்பார்ப்பது 5 லட்சம் ரூபாய். இருந்தாலும் அரசாங்கம் இந்த மாதிரித் திட்டம் போட்டு, அதிகமாகச் செலவு செய்து கட்டடம் கட்டுவது அரசாங்கத்தின் அக்கறையைக் காட்டுகிறது. அரசாங்கம் எப்படியும் கட்டும் என்று எதிர்பார்த்த அளவு கூட கட்ட முன் வராமல் இருந்தால் அதனால் அரசாங்கத்திற்குத் தொல்லை ஏற்படும். 5 லட்சம் ரூபாயை வசூலித்துக் கொடுக்க பொது மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ரூ. 5 லட்சம் வசூலிக்கவேண்டும் என்ற முறை எல்லாக் கல்லூரிகள் விஷயத்திலும் கையாளப்பட்டதா ? செங்கற்பட்டு மாவட்டத்தில் எத்தனை லட்சம் கொடுத்

தார்கள்? மேலும் ரூபாய் ஒரு லட்சம், இரண்டு லட்சம் கூடக் கொடுக்காத இடங்களில் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப் படுகின்றன. இப்பொழுது நாங்கள் ரூ. 3 லட்சத்திற்கு மேலே கொடுத்திருக்கிறோம். ஆகவே, இங்கே ஒரு ஹாஸ்டல் கட்டடம் ஆரம்பிக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கடலூரைப் பொறுத்தமட்டில் அதிகச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. கல்லூரி ஆரம்பிக்காமல் இல்லை, கல்லூரி நடக்கிறது. மேலும் புது வகுப்புகள் ஆரம்பிப்பதற்கும் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ கனம் உறுப்பினர் செங்கற்பட்டுக் கல்லூரியைப் பற்றிச் சொன்னார். செங்கற்பட்டைப் பொறுத்தவரையில் ரூ. 5 லட்சத்திற்கு ஒரு பைசா கூடக் குறையவில்லை. கனம் உறுப்பினர் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். வேறு எந்த மாவட்டத்திலும் கூட ரூ. 5 லட்சத்திற்குக் குறைவாக வசூலிக்கப்படவில்லை, ஏதோ ஒன்றிரண்டு இடங்களைத் தவிர. ஆனால், செங்கற்பட்டைப் பொறுத்த வரையில் ரூ. 5 லட்சம் பூராவும் வந்துவிட்டது.

**திரு. ம. கமலநாதன்:** முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் தர்மபுரி எப்படி பின்தங்கிய பகுதி என்பது. கிருஷ்ணகிரியில் அதற்கு மேலே பணம் வசூலிக்க முடியாது என்ற சூழ்நிலையை நன்றாக உணர்ந்து, எங்களை ரூ. 5 லட்சம் வசூலிக்கவேண்டும் என்று வற்புறுத்தாமல், கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது சரியல்ல. மேலும் பிரயத்தனம் செய்து கனம் உறுப்பினர் அவர்களும், மற்றவர்களும் பொது மக்களும் எதிர்பார்க்கிற அளவுக்கு, வாக்குறுதி அளிக்கப்பட்ட அளவுக்கு நிதி அளிக்கவேண்டும். தர்மபுரி கல்லூரி மேலும் மேலும் விருத்தி அடைவதற்கு உரிய வகையில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

***240 கேள்வி.—திரு. கரு. சீமைசாமி:** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதிதாகக் கல்லூரியில் சேரும் மாணவர்களிடமிருந்து அரசியலில் ஈடுபடமாட்டேன் என்ற உறுதி மொழி பெற வேண்டுமென்று கல்லூரிகளுக்கு அண்மையில் அரசாங்கம் உத்தரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No such instructions have been issued.

(b) Does not arise.





## விஞ்ஞான பாட போதனை முறை

***241 கேள்வி.—திரு. செ. மாதவன்:**
**திரு. எஸ். ஜே. ராமசாமி:** } கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் விஞ்ஞான பாடபோதனை முறையையும், பாட திட்டங்களையும் மாற்றி அமைக்கும் திட்டம் உண்டா?

(இ) அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The revision of syllabus for Standards I to XI has been under consideration of the Government. The revised syllabi for Standards I to IX have been published. It has been decided to introduce one Elective in the syllabus for Standards X and XI. Elementary Science is included in the Core subjects. One Elective may be chosen either from the Science subjects or from Humanities. The Universities are concerned with the revision of syllabus and the pattern of teaching in colleges.

**திரு. செ. மாதவன்:** நம்முடைய நாட்டில் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் விஞ்ஞான பாட போதனை சரியான முறையில் நடைபெறவில்லை என்று மேல் நாட்டுக் கல்லூரி நிபுணர்கள் கூறிய கருத்து நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? நமது முதல் அமைச்சர் அவர்களும் விஞ்ஞான பாடத்தை அடிப்படையிலேயே போதிக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதற்கு மேல் நாட்டுக் கல்வி நிபுணர்களின் கருத்தை நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை. நமக்கே இது தெரியவருகிறது. இன்னும் விஞ்ஞான பாட போதனையின் தரமும், மற்றப் பாடங்களின் தரமும் உயர்த்தப்படவேண்டும் என்பதுதான் கருத்து. இது எந்த நாட்டிலும் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இங்கிலாந்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ரஷ்யாவை எடுத்துக்கொண்டாலும் சரி, அமெரிக்காவை எடுத்துக்கொண்டாலும் சரி, இருப்பது போதாது மேலும் ஆராய்ச்சி புரியவேண்டும், கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றுதான் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நாமும் அதிகமான கவனம் செலுத்திவருகிறோம். விஞ்ஞானக் கல்வியை ஆரம்ப கல்வி கட்டத்திலிருந்தே புகட்ட வேண்டும் என்ற கருத்தை நான் கூறியதாகத் தெரிவித்தார்கள். ஆரம்பக் கல்வி கட்டத்தில், உயர்நிலைப் பள்ளியில், சர்வகலாசாலைகளில் கல்லூரிகளில் இவற்றிலெல்லாம் எவ்வாறு விஞ்ஞான அறிவை உயர்த்துவது, எவ்வாறு பாடத் திட்டத்தை மாற்றி அல்லது திருத்தி அமைப்பது என்பதிலெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. வை. சங்கரன் : கல்லூரிகளில் ஹியுமானிடிஸ் Optional ஆக இருக்கிறது. ஆனால் அதற்கு மாணவர்கள் வருவதில்லை. இப்பொழுது 10-வது வகுப்பில் 'ஹியூமானிடீஸ்' 'எலக்டிவ்' சப்ஜெக்டாக வைக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தகுந்த அளவு மாணவர்கள் வருவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள சர்க்கார் உத்தேசித்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது சிலபஸ் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். சிலபஸ் நிர்ணயிக்கப்பட்ட பிறகு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ப. கமலநாதன் : சமூக பாடத்தை எடுத்துவிட்டு, முன்பு போல விஞ்ஞான பாடம் விருப்பப் பாடமாக கட்டாயமாக்கப்படும் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது சிலபஸ் திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. அந்த வகையிலே பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்படும்.

திரு. செ. மாதவன் : இப்பொழுதுள்ள பாடத் திட்டம் தேர்வுக்கு என்று விஞ்ஞான பாடத்தைப் படிக்கக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது. விஞ்ஞான ஆராய்ச்சி மனப்பான்மை ஏற்படக்கூடிய அளவுக்கு இந்தப் பாடத் திட்டம் மாற்றி அமைக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தொடக்கத்திலே ஆராய்ச்சி செய்வது என்ற வகையிலே அல்ல: ஆனால், ஆராய்ச்சி மனப்பான்மை மாணவர்களுக்கு அந்தக் கட்டத்திலேயே வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். எலிமெண்டரி ஸ்டேஜஸில், அதாவது, முதலில் எவ்வளவு தூரம் மாணவர்களுக்கு விஞ்ஞானத்தில் ருசி ஏற்படுத்தி, அடிப்படையிலே அவர்கள் விஞ்ஞான அறிவு பெறச்செய்வது என்பதைப் பற்றித் தான் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

MR. SPEAKER : Now we will take up questions relating to the Hon. Minister for Public Health.

*Orthopaedic Centres in the State*

* 231 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there is any proposal before the Government to open orthopaedic centres in the State for the treatment of patients having squint; and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.



*அறந்தாங்கி வட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்*

* 232 கேள்வி—திரு. ஆ. துரையரசன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தில் 1965-66-ல் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தஞ்சாவூர் ஜில்லாவில் அறந்தாங்கி வட்டத்தில் ஒரு பிரதம சுகாதார நிலையம் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*செங்கிப்பட்டியிலுள்ள காசநோய் மருத்துவமனை*

* 233 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் அமைந்திருக்கும் (M.G.M.) காசநோய் ஆஸ்பத்திரிக்கு அரசாங்கம் மானியம் கொடுக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—PRIVILEGE MATTER.

PROSECUTION OF A MEMBER FOR FORWARDING TO CHIEF MINISTER A PETITION CONTAINING ALLEGEDLY FALSE ACCUSATIONS.

திரு. செ. மாதவன் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் ஒருவரால் அமைச்சர்களுக்கு எழுதப்படக்கூடிய கடிதங்கள் அல்லது குற்றச் சாட்டுகள் இவைபற்றி பிறர் ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு உரிமை இருக்கிறதா ? அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டால், அது சபையினுடைய அங்கத்தினர்களின் உரிமைகளைப் பாதிக்குமா என்பதைப்பற்றி நான் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பியிருக்கிறேன்.

இந்தச் சபையினுடைய உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களிடத்திலே, அவர்களுடைய தொகுதியிலிருந்து அதிகாரிகள் மீது கூறப்பட்ட புகார் ஒன்றை, இந்த மன்றத்தில் வைத்துக் கொடுத்து 'நீங்கள் அதை பரிசீலிக்கவேண்டும்' என்று கூறினார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்களும் இதைப் பரிசீலிக்கும்படி கீழே உள்ள

அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இது தான் நடைபெற்ற நிகழ்ச்சி. இந்த மனுவைப்பற்றி சில விவரங்களைக் கூறுவது நல்லது என்று நான் நினைக்கிறேன். அவர்களுடைய தொகுதியான கடலூர் தொகுதியில் புதுப்பாளையம் என்ற ஒரு ஊரில் ஒருவர் கொலை செய்யப்பட்டுவிட்டார். அந்தக் கொலை செய்யப் பட்ட . . .

MR. SPEAKER: The hon. Member need not go into the details. The point is, he forwarded a petition to the Hon. Chief Minister for the purpose of investigating the charge contained therein. Then, let the hon. Member come to the point of law or the point of privilege and he need not go into the facts of the murder case.

திரு. செ. மாதவன்: சட்டமன்ற உறுப்பினர் கடமையை நிறைவேற்றியிருக்கிறார் என்பதை நான் உதாரணத்திற்காகச் சொல்ல விரும்பினேன். தாங்கள், விவரங்களைச் சொல்ல வேண்டாமென்று கூறினால் நான் சொல்லவில்லை.

கனம் சபாநாயகர்: மர்டரைப் பற்றிய ஃபாக்ட்லைச் சொல்ல வேண்டியது இல்லை.

On representation, he presented a petition to the Hon. Chief Minister and that petition was forwarded. On that petition he has been prosecuted. Now, the hon. Member can ask, "Is it right and has the hon. Member got no privilege to present a petition and even if it is wrong or false, can he be prosecuted and has he not got the privilege as a Member of the House according to the Constitution?"
கனம் அங்கத்தினர் அந்த மாதிரிக் கேட்கலாம்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அவர்களுடைய தொகுதியில் ஏற்பட்ட கொலையைப்பற்றி அவர்களுக்கு வந்திருக்கக் கூடிய ஒரு மனுவை நம்முடைய அரசாங்கத்தின் கவனத்திற்கு கேள்வி போட்டு இந்தச் சபையின் முன் கொண்டுவரலாம். எழுத்து மூலம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சியை வைத்து அவர்கள் மீது இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, ஒரு குறிப்பிட்ட போலீஸ் அதிகாரியினால். இதிலே தாங்கள் இப்பொழுது முதலில் கவனிக்கவேண்டியது 'ப்ரைமா ஃபாஸி' கேஸ் உண்டா, இல்லையா என்பது. அதற்குப் பின்னால், உரிமை இருக்கின்றதா என்று உரிமைக் குழு தீர்மானிக்க வேண்டும் என்பது என் கருத்து. 'ப்ரைமா ஃபாஸி' கேஸ் இருக்கிறதா, அல்லது இல்லையா என்று நன்றாகப் பரிசீலிக்க வேண்டும். சட்ட மன்ற உறுப்பினருடைய கடமை என்ன, உரிமை என்ன, அவை பற்றி விளக்கம் என்ன? அரசியல் அமைப்புச் சட்டத்திலே 194-வது பிரிவிலே, உட் பிரிவு (2) லே என்ன சொல்லியிருக்கிறது? இந்த மன்றத்திலே பேசப்படும் கருத்துக்கள் உரிமையுடையவை,





அந்தக் கருத்துக்களின் மீது நீதி மன்றம் நடவடிக்கை எடுக்க முடியாது என்று திட்டவட்டமாக ஒரு 'ப்ரொட்டெக்ஷன்' கொடுத்திருக்கிறது; ஆனால் இந்த 194 (2)-வது பிரிவில் பேசுவதற்கு மட்டும் தான் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எழுத்து உரிமை இருக்கிறதா? மனுக்கள் கொடுப்பதனால், அதன் விளைவு என்ன என்பதைப் பற்றி இந்த (2)-வது உட்பிரிவிலே எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், அதற்குப் பின்னால், "In respect of other matters" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. "In respect of other matters" என்பதிலே, நாம் என்ன முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதற்கு விளக்கம், ஹவுஸ் ஆஃப் காமன்ஸிலே எந்த முறைகளைப் பின் பற்றுகிறார்களோ, அதைப் பின் பற்றலாம் என்பது தான் அரசியல் அமைப்புச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையாகும். ஹவுஸ் ஆஃப் காமன்ஸில் அது போன்ற கருத்துக்கள் வந்திருக்கின்றனவா, என்ன கருத்து தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தாங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த அடிப்படையிலே ஒரு தனிப்பட்ட அங்கத்தினர், ஒரு அதிகாரிமீது, குறிப்பிட்ட குற்றச் சாட்டுக்களை விவரமாகக் கூறி, அந்த அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது வேறு பிரச்னை. அதே அங்கத்தினர் மக்களிடத்திலிருந்து வரும் குறைகளை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கொண்டு வந்தால் அது வேறு பிரச்னை. இந்த இரண்டும் இரண்டு வேறு வேறு பிரச்னைகள், என்கின்ற கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். சில சமயங்களிலே எங்களுக்கு வரும் மனுக்கள் தவறாக இருக்கலாம். ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனாலும், கூடியவரையில், அவை சரியா என்பதைப் பரிசீலிக்கிறோம். எங்களையும் மீறி தவறுகள் ஏற்படலாம். இந்த குறிப்பிட்ட வழக்கில், முதல் அமைச்சருக்கு, தனிப்பட்ட அங்கத்தினர் மூலம் விவரம் வருவதற்கு முன்னாலேயே, இது பற்றிய குற்றச் சாட்டு வந்திருக்கிறது. அவர்களும் அந்தக் குற்றச் சாட்டைப் பரிசீலித்திருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டிலே குறிப்பிடப் பட்ட அதிகாரிமீது சில குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருந்தன. அதை முதல் அமைச்சர் கையெழுத்துப் போட்டுப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது அமைச்சரிடமிருந்து சென்றதற்குப் பின்னால், மறுபடி விசாரணை வந்தது. இந்த வழக்கு பற்றி இங்கே கனம் அங்கத்தினர் முதல் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அந்தக் குற்றச்சாட்டு அல்லது அது பற்றிய மனுக்கள் கொடுத்த எங்கள் மீது நடவடிக்கை எடுக்கலாமா, எடுக்கக் கூடாதா என்பதற்கு உதாரணங்கள் சொல்ல விரும்புகிறேன்.

1959-ம் ஆண்டிலே ஆந்திரா அசெம்பிளியில் இப்படிப்பட்ட நிலைமை உருவாகியது. சில கனம் அங்கத்தினர்கள், தங்கள் தொகுதிக்குச் சென்றார்கள், தொகுதி வேலையைச் செய்வதற்காக, தங்கள் கடமையைச் செய்வதற்காக. அங்கே, அவர்களுடைய தொகுதியிலே, சிலர் கத்திகளையும், கம்புகளையும் கொண்டு

[திரு. செ. மாதவன்] [10th March 1966

அவர்களைத் தடை செய்தார்கள். இதை அந்த அங்கத்தினர்கள் உரிமைப் பிரச்னையாக எழுப்பினார்கள். அவர்களுக்கு, பொதுமக்களுக்குச் சேவை செய்ய உரிமை உண்டு; அப்படிச் சேவை செய்யப் போகும்போது தடுக்கப்பட்டதால், அதில் உரிமைப் பிரச்னை இருக்கிறதா, 'ப்ரைமா ஃபாஸி' கேஸ் இருக்கிறதா என்பதைப் பரிசீலித்தார்கள், அங்கே உள்ள சபைத் தலைவர் அவர்கள், 'There is a *prima facie* case. So I shall refer it to the privileges committee' என்று கூறி, பிரிவிலேஜ் கமிட்டிக்கு அதை அனுப்பினார்கள். இது 1959-லே, நடந்தது. ஆந்திரா சட்ட சபையிலே இன்னொரு நிகழ்ச்சியும் ஏற்பட்டது. அங்கே வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, வெள்ள நிவாரண வேலைகள் நடந்தன. சில கனம் அங்கத்தினர்கள் தங்கள் தொகுதியில் நிவாரண வேலைகள் சரியாக நடைபெறவில்லை என்கிற குற்றச்சாட்டைப் பேசினார்கள். அது பற்றி அறிக்கை விடுத்தார்கள், அவை பத்திரிகைகளில் வந்தன. அந்தப் பத்திரிகை நிருபர்களை அழைத்து நிவாரண வேலை அதிகாரி, இப்படிப்பட்ட அறிக்கையை விடுவது mad-cap என்கிற வார்த்தையை, கனம் அங்கத்தினர்கள் பற்றி உபயோகித்தார். இது சட்ட மன்றத்திற்கு வெளியே நடந்த நிகழ்ச்சி. அப்படி இருந்தும், கனம் அங்கத்தினர்கள் பற்றிக் குறிப்பிட்டது உரிமைப் பிரச்னை என்று சொல்லி, அங்கேயுள்ள கனம் சபாநாயகர் அவர்கள், அதை உரிமைக் குழுவிற்கு அனுப்பினார்கள். ஆகவே, அது உரிமைப் பிரச்னை என்று சொல்லி, தீர்ப்புக்கள் இருக்கின்றன. அந்த தீர்ப்புக்களிலே, பேசுவது மட்டும் அன்றி, மனுக்களைக் கொடுப்பதற்கும் உரிமை உண்டு, அவை சட்ட மன்றத்திலே நடந்தாலும், சட்ட மன்றத்திற்கு வெளியே நடந்தாலும், அந்த நடவடிக்கைகள் அங்கத்தினர்களுடைய 'பார்லிமெண்டரி ட்யூடீஸ்' என்கின்ற முறையிலே, அவை உரிமைப் பிரச்னைகள் என்று தீர்ப்புக்கள் இருக்கின்றன.

காஃபின் வெர்சஸ் காஃபின் என்கிற வழக்கில்--இது மேஸ் பார்லிமெண்டரி பிராக்டிசிலே கொடுக்கப்பட்டிருக்கிறது--தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பிலே நீதிபதி, "I will not confine it"—It means freedom of speech —'பிரீடம் ஆஃப் ஸ்பீச்' சைக் குறிப்பிட்டு விளக்குவதுபோல அமைந்திருக்கிறது— " to delivering an opinion, uttering a speech or participating in debate but will extend it to giving a vote, to the making of a written report " அதைத்தான் நான் 'எம்ஃபஸைஸ்' செய்ய விரும்புகிறேன்.

" and to every other act resulting from the nature and in the execution of the office.".

உறுப்பினர்களுக்கு இந்த பார்லிமெண்டரி ட்யூடீஸ் அண்ட் ரைட்ஸ் இருக்கின்றன. எங்களுடைய கடமைகள் என்ன என்பதையெல்லாம் தெளிவாக்க இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புவது பொருந்தும் என்பதை இந்தத் தீர்ப்பு தெளிவாக்குகிறது.



10th March 1966] [திரு. செ. மாதவன்]

அடுத்த வழக்கு லேக் வெர்ஸ் சிங் என்பது. இதுவும் மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது 1667-ல் நடந்தது. It was agreed by the Court that exhibiting the petition to a Committee of Parliament was lawful and that no action lies for it, although the matter contained in the petition was fase and scandalous because it is in summary course of justice and before those who have the power to examine whether it be true or false. அந்த அடிப்படையில், இந்த உரிமைப் பிரச்னையை எழுப்புகிறேன்.

**கனம் சபாநாயகர்** : 1957-க்கு வாருங்கள். அது 1667 பற்றியது. நேரம் ஆகிறது.

**திரு. செ. மாதவன்** : இந்த வழக்குகளெல்லாம் மிகப் பொருத்தமானவை என்பதால் எடுத்துக் காட்டுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இன்றைய டிமாண்டுக்குக் கூட பொருத்தம் தான், பேசலாம்.

**கனம் சபாநாயகர்** : 1957-ம் வருஷத்திற்கு வந்தால் நல்லது.

**திரு. செ. மாதவன்** : 1957-ல், ஹவுஸ் ஆஃப் காமன்சில் மிஸ்டர் ஸ்ட்ராஸ் வழக்கு வந்திருக்கிறது. அதிலே ஒரு அங்கத்தினர் லண்டன் மின்சாரக் கழகத்தைக் குறைகூறவேண்டும் என்று எழுதி, அதை மினிஸ்டர் ஆஃப் பவர் இன் சார்ஜ் பே மாஸ்டர் ஜெனரலுக்கு மனுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுவை வைத்து மின்சாரக் கழகத்திற்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டது. மின்சாரக் கழகம் அந்த கனம் அங்கத்தினர் மன்னிப்புக் கேட்கா விட்டால், வழக்குப் போடுவோம் என்று கடிதம் போட்டார்கள். அந்தக் கடிதத்தின்மீது உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டு, அது உரிமைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். அதைப் பரிசீலித்தார்கள். 'ப்ரைமா ஃபாஸி' கேஸ் இருப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. உரிமைக் குழு பரிசீலித்து ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டிலே தெளிவாக உரிமை பாதிக்கப்படும் என்று அவர்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

" Mr. Strauss in writing to the Paymaster-General on 8th February 1957 directing his attention to matters of administration in the London area of the Nationalised Industry of Electricity and criticising the London Electricity Board was conducting or engaged in a proceeding in Parliament and that in so doing he was protected by the privileges declared to belong to Parliament by Bill of Rights of 1688."

" The London Electricity Board and their solicitors have acted in breach of the privileges of Parliament."

[திரு. செ. மாதவன்] [10th March 1966

ஆக அவர்கள் 'Proceeding in Parliament' **என்று கருத்துக்** கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தீர்ப்புக்குப் பின்னால் ஹவுஸ் ஆப் காமன்சில் டிஸ்கஷன் நடந்தது. அங்கே கருத்து வேறுபாடு இருந்தும், ஹவுஸ் ஆப் காமன்சில் கனம் அமைச்சர் உரிமைக் குழுவின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்கள். இதை ஒரு Breach of privilege என்று ஏற்றுக்கொண்டு ஒரு Motion -ஐ சபைக்கு 9-30 a.m. முன்னால் வைத்தார்கள். Motion உடைய வார்த்தையைக் கவனிக்கவேண்டும். அதிலே தான் கருத்து வேறுபாடு இருக்கிறது. அந்த 'மோஷன்' எப்படி வந்திருக்கிறது? "இந்த மன்றம் உரிமைக்குழு சொன்ன தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுகிறது" என்று பொதுவாக 'மோஷன்' வந்திருக்கிறது. மோஷன் டிஸ்கஷனுக்கு வந்தது. அட்வகேட்-ஜெனரல் எதிர்த்தார்கள். அவர் எதிரிடையாகப் பேசிய பிறகு, ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. வேறொரு கனம் அங்கத்தினர் அவர்களால் அந்தத் திருத்தத்தை மன்றம் ஏற்றுக்கொண்டது. உரிமைக் குழுவுக்கு அனுப்பாமலேயே திருத்தத்தை ஏற்றுக்கொண்டது. எந்தத் திருத்தம்? திருத்தத்தைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் படித்துப் பார்க்க வேண்டும். திருத்தத்தின் மீது உரிமைக் குழுவிற்கு உள்ள கருத்துக்கள் பரிசீலிக்கப்படவில்லை. கருத்துக்களையெல்லாம் மறுக்கவில்லை. "கனம் அங்கத்தினர், அமைச்சர் அவர்களுக்கு எழுதும் கடிதங்கள் 'Proceeding in Parliament'. அல்ல என்று தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. Mr. Strauss என்ற கனம் அங்கத்தினர் எழுதிய கடிதம் 'Proceeding in Parliament' அல்ல என்பதுதான் திருத்தம். அந்தத் திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது, சில ஓட்டுக்கள் காரணமாக. அதைப் பிரேரேபித்ததற்குக் காரணம் என்ன என்பதைத் திருத்தத்தைப் பிரேரேபித்தவருடைய 'டிபெட்' டைப் படித்தால் தெரியும். காரணம், Mr. Strauss அனுப்பியிருக்கக்கூடிய கடிதத்திலே குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. ஊழல்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது 'Scandalous Statement' ' என்று அந்தக் கடிதத்தில் இருக்கிறது. அப்படிப்பட்ட கடிதம்—Mr. Strauss எழுதிய குறிப்பிட்ட கடிதம் உரிமை இல்லாமல் இருக்கலாம். அதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால், இங்குள்ள கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொடுத்த கடிதம் எப்படியென்றால், அவருக்கு வந்த கடிதத்தை அப்படியே Forward செய்கிறார்கள். "ஆராய்ச்சி செய்யுங்கள், பரிசிலனை செய்யுங்கள்" என்று Forward செய்கிறார்கள். இதற்கும் அதற்கும் கருத்து வேறுபாடு உண்டு என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து இருக்கிறது. எங்களுடைய கடமையை நாங்கள் செய்கிறோம். தவறாகச் செய்யவில்லை. இப்படி ஒரு கோர்ட்டுக்குச் சென்றால் கோர்ட்டிலே Qualified privilegeவருமா? அங்கத்தினர்கள் மீதுள்ள வழக்கு நீடிக்குமா? இது வேறு பிரச்னை. ஜெயிக்குமா? ஜெயிக்காதா? என்பது வேறு பிரச்னை. சட்டத்திலே இடம்



10th March 1966] [திரு. செ. மாதவன்]

இருக்கிறது. மன்ற அங்கத்தினர் ஒருவர் தங்களுக்கு வரக்கூடிய குறைகளை அனுப்பினாலேயே அவர் மீது வழக்குத் தொடரலாம், அப்படி வழக்குத் தொடர்ந்து வழக்கு மன்றத்திற்கு அங்கத்தினர்களை அழைத்துச் செல்லும் முறையிலே பயமுறுத்தல் செய்வது அவ்வப்போது சாத்தியமாக இருக்கிறது என்றால், இந்த நிலையில் மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணியைச் செவ்வனே செய்ய முடியுமா? அதற்காக ஒரு விளக்கம் தருவதற்கு, அதற்காக ஒரு Protection கொடுப்பதற்கு, அதற்காக வழிவகை ஏற்படுத்துவதற்கு இதில் prima facie case உண்டு என்று நாங்கள் ஒத்துக் கொண்டு, உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்னையை அனுப்ப வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்சினை விஷயத்திலே சட்டம் என்ன கூறுகிறது, சட்டத்தின் நிலை என்ன, கோர்ட்டாருடைய தீர்ப்பு என்ன, அல்லது பாராளுமன்றத்தினுடைய தீர்ப்பு என்ன என்பதில் தான் நாம் கவனம் செலுத்த வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறியிருப்பதாவது—

"194 (1). Subject to the provisions of this Constitution and to the rules and standing orders regulating the procedure of the Legislature, there shall be freedom of speech in the Legislature of every State.

(2) No member of the Legislature of a State shall be liable to any proceedings in any court in respect of anything said or any vote given by him in the Legislature or any committee thereof, and no person shall be so liable in respect of the publication by or under the authority of a House of such a Legislature of any report, paper, votes or proceedings.

(3) In other respects, the powers, privileges and immunities of a House of the Legislature of a State, and of the members and the committees of a House of such Legislature, shall be such as may from time to time be defined by the Legislature by law, and, until so defined, shall be those of the House of Commons of the Parliament of the United Kingdom, and of its members and committees, at the commencement of this Constitution."

இது தான் அரசியல் சட்டப்படி உள்ள நிலைமை. இதற்கென்று தனிச்சட்டம் நாம் செய்ய வேண்டும் என்றால் அது வேறு விஷயம். இதுவரை நாம் இதற்கென்று சட்டம் செய்யவில்லை. நம்முடைய பாராளுமன்றத்திலும் இதைப் பற்றிய தீர்ப்பு இல்லை. ஆனால், கனம் உறுப்பினர் அவர்கள் இங்கிலாந்துப் பாராளுமன்றத் தீர்ப்புகள் பற்றியும், வேறு பல தீர்ப்புகளைப் பற்றியும் சில வழக்குகளைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். இப்பொழுது எழுப்பப்பட்ட பிரச்னைக்குப் பொருத்தமானது மிஸ்டர் ஸ்ட்ராஸ் கேஸ் தான். கனம் அங்கத்தினர் அவர்களே எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்கள்—நம்முடைய உரிமைக் குழு, 'இது உரிமைப் பிரச்னை

தான்' என்று கூறினாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியது தான். எனக்குப் பிடித்தமோ, பிடித்தம் இல்லையோ, இந்த மன்றத்தின் உரிமைக் குழு ஒரு முடிவு செய்தால், அந்த முடிவைத் தான் மன்றத்திலே வைக்கவேண்டுமே தவிர, என்னுடைய கருத்தைத் தெரிவிக்கமாட்டேன். நான் அதை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று கூறுவது முறையல்ல—இங்கிலாந்துப் பாராளு மன்றத்தின் முன்பாக, அரசாங்கத்தின் சார்பாக, அந்த உரிமைக் குழுவின் தீர்மானத்தை வைத்தார்கள். ஆனால், ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. "மின்சாரக் குழுவிற்கு எழுதிய கடிதம் உரிமை ஆகாது" என்று கருதி, அதை ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. "வெளியிலே எழுப்பப் பட்டதனால் அது உரிமை அல்ல" என்றும் ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் தீர்ப்பு கூறியிருக்கிறது. அது ஒன்றைத் தவிர, வேறு தீர்ப்பைப் பற்றி மாற்றியமைக்கலாம் என்பது ஒன்றும் இல்லை.

சட்டம் செய்வது என்றால், அது வேறு விஷயம். புதிதாகச் சட்டம் செய்யலாம். இப்பொழுதிருக்கும் நிலையிலே, அது உரிமைப் பிரச்னை ஆகாது என்று தான் நான் கருதுகிறேன். இப்பொழுதிருக்கும் சட்டம், தீர்ப்புகள் ஆகியவற்றை வைத்துக் கொண்டு தான் இவற்றையெல்லாம் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். ஆகவே, இதுதான் என்னுடைய கருத்தாகும். இன்றைய நிலையில் இது உரிமைப் பிரச்னை ஆகாது. ஆனால், தங்களுடைய தீர்ப்புக்கு விட்டுவிடுகிறேன். தாங்கள் இதிலே எந்தத் தீர்ப்புக் கொடுத்தாலும் அதை நான் ஏற்றுக் கொள்ளு கிறேன். பின்னால் இந்த மன்றமும் அதை ஆலோசிக்கலாம்.

**திரு. சா. கணேசன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தை நாம் மிகக் கவனமாகவும், கூர்மையாகவும் ஆய்ந்து அலசிப் பலாபலன்களை முடிவு செய்யவேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, மற்றொன்று கூற நான் மறந்துவிட்டேன். நான் உள்துறை அமைச்சராக இருந்தபோது, ஒரு முறை ஒரு மன்ற உறுப்பினர்—இந்த மன்றத்து உறுப்பினர் அல்ல, வேறு மன்றத்தைச் சார்ந்தவர்—எனக்கு ஒரு விஷயத்தைக் குறித்துத் தகவல் தெரிவித்தார்கள். ஓரிடத்தில் கொலை நடந்தது, ஏதோ குற்றம் நடந்தது, அதைப் போலீசார் சரியாக விசாரிக்கவில்லை என்று அந்த கனம் உறுப்பினர் எனக்கு எழுதியனுப்பினாரோ அல்லது நேரடியாகச் சொன்னாரோ எனக்கு நினைவு இல்லை. அதற்கும் மறுபடியும் தொடர்ந்து விசாரணை செய்யவேண்டும் என்று அந்த வழக்கு விசாரணை செஷன்சுக்கு வந்தபோது சாட்சியங்களால் வெளிப்படுத்தப் பட்டது. அதைப்பற்றி சென்னை உயர்நீதி மன்றத்தினர், "இம்மாதிரி அந்த மன்ற உறுப்பினர் தலையிட்டே இருக்கக் கூடாது" என்று கருத்து தெரிவித்தார்கள். அது எனக்குத் திருப்திகரமாக இல்லை. இருந்தாலும், அது உயர்நீதி மன்றத்தின்





கருத்து. அதை நாம் புறக்கணிப்பதற்கில்லை. அதற்கு மேலே வேறு ஒரு உயர்நீதி மன்றமோ, அதற்கு மேலே இருக்கும் மன்றமோ இதையெல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவு செய்திருந்தால் நலன் தான். ஆனால், அம்மாதிரி முடிவும் இல்லை. இன்றைக்கு நாம் ஆராய்ந்து ஒரு முடிவு எடுப்பதற்கு அம்மாதிரி உயர்நீதி மன்றங்களோ பாராளுமன்றமோ உருப்படியாக இதுதான் நிலைமை என்று சொல்லக்கூடிய நிலை இல்லை, எவ்வாறு இதைக் கருதுவது, ஆராய்வது என்று இதுவரையில் வழி ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. சா. கணேசன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயம் மிகவும் நாசூக்காக (டெலிகேட்) விஷயம் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இதில் எந்தவிதமான கண்ணோட்டமும் இன்றி, நியாயம் எது, முறை எது, அங்கத்தினர்களின் உரிமை எப்படி அமைந்திருக்கிறது, எப்படி அமையவேண்டும் என்பதை யெல்லாம் நன்றாகக் கவனித்து, ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய விஷயம். உணர்ச்சிவசப்பட்டு ஒன்றையும் செய்து விடக்கூடியது அல்ல. அதனாலே பாதிக்கப்படக் கூடிய ஒன்று அல்ல இது. அங்கத்தினர்கள் யார் என்பது இங்கே பிரச்னை அல்ல. உறுப்பினர்கள், அவர்களுடைய கடமை என்று கருதுகிற ஒன்றை, செய்வதில் எத்தனை சங்கடங்களிருக்கின்றன. ஒரு மனு கிடைத்தால் அதன் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தக்க இலாக்காவிற்கு அல்லது அந்தக் குறிப்பிட்ட அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்து, அல்லது அதிலே ஏதாவது குறிப்பு எழுதி என்டார்ஸ்மென்ட் போட்டுக் கொடுத்துத் தங்கள் பணியைச் செய்யும்பொழுது இப்படியெல்லாம் நிலைகள் ஏற்பட லாம். அவற்றில் எல்லாம் எந்த அளவிற்கு நிர்வாகத்திலோ அல்லது அதிகாரிகளுடைய நிலையிலோ நாம் தலையிடுகிறோம்? அப்படித் தலையிட்டால் அது தவறா? அங்கத்தினர்கள் தங்களுக்கு வருகிற சில மகஜர்கள் அல்லது மனுக்கள் ஆகியவற்றை வாங்கிப் பார்த்து, உடனே அவர்கள் பூராவும் விசாரணை செய்து, அவற்றி னுடைய உண்மை அல்லது உண்மையின்மை இவற்றையெல்லாம் கண்டறிந்த பிறகு தான் உரிய இலாகா அல்லது உரிய அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமா? அப்படி அவர்கள் எல்லாக் காரியங்களையும் செய்வது என்றால், அதற்கு நேரமும் பிற சூழ்நிலை களும், வாய்ப்புக்களும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் உண்டா? அப்படி இல்லாத நிலையில் தங்களுக்கு வருபனவற்றை அமைச்சர் அவர்களிடம் கொடுத்து, "இம்மாதிரி எனக்கு வந்திருக்கிறது, இதன் மீது இருக்கிற உண்மை அல்லது உண்மையின்மையை விசாரித்து, தவறு இருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று கேட்டுக்கொள்ளுவது அங்கத்தினர் களுடைய தலையாய, தவிர்க்கமுடியாத உரிமை அல்ல என்று நிலை நாட்டிவிட முடியுமா? நிலைநாட்டலாமா? இதையும் கவனிக்க வேண்டும்.

அதோடுகூட சட்டமன்றத்திலே இந்த மன்றத்தில் அமைப்புகளுக்குள் இருந்துகொண்டே, தமக்கு வந்த ஒரு கடிதத்தை அதுவும் சட்டமன்ற முகவரிக்கேகூட வந்திருக்கலாம். அதாவது சா. கணேசன், எம்.எல்.ஏ., சட்டமன்றம், சென்னை-9—அல்லது அவரது விலாசத்திற்கும் வந்திருக்கலாம்—அதை அப்படியே அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறார். அப்படிக் கொடுக்கக்கூடிய பல்வேறு சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் இன்று இருக்கின்றன. அது தவறாக இருந்தால் கனம் அமைச்சர் அவர்களே அந்த அங்கத்தினரிடம் சொல்லிவிடலாம், அல்லது வைத்துவிடலாம், அல்லது அதுபற்றி தாம் ஆராய்ந்து தெரிந்துகொண்ட உண்மைகளை அதன்பேரில் எழுதி வைத்துவிடலாம். அப்படி இன்றி அதன்பேரில் வழக்குத் தொடர்வது என்பது சரியா என்பதைத்தான் கவனிக்க வேண்டும். இப்போதுள்ள முறைகளின்படி அங்கத்தினர்களுக்கு உரிமை அளிக்க விதி இல்லை என்றாலும், நாம் அதற்காக நடைமுறைகளைக் கண்டுபிடித்து மேற்கொள்வதற்கு முன்னமேயே அத்தகைய உரிமை கனம் உறுப்பினர்களுக்கு உண்டா இல்லையா என்பதைப் பார்க்கவேண்டும். பிரஸ்தாப விஷயம் குறிப்பிட்ட கனம் அங்கத்தினர் தமக்கு வந்த புகார் ஒன்றை அப்படியே கனம் அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்ததாகத்தான் நான் அறிகிறேன். இந்த மன்றத்திற்குள்ளே அவர் அமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்கும்போதே கூட அதை தடுத்திருக்கலாம். அப்படித் தடுக்கவில்லை என்பதற்காகக் குறை சொல்லவில்லை. நிலை முழுவதும் எனக்குத் தெரியாது. அவற்றை எல்லாம் நன்றாக அலசி ஆராய்ந்து முடிவு செய்யவேண்டும். உரிமையைப் பற்றிய அடிப்படை பிரச்சினையை நிர்ணயிக்க வேண்டிய நிலை இன்று நேர்ந்திருக்கிறது. ஆகவே இதை நிச்சயமாக கனம் சபாநாயகர் அவர்கள் உரிமைக்குழுவுக்கு அனுப்பி, அங்கிருந்து சமாதானமாக பல்வேறு மாநில நிகழ்ச்சிகள், பல்வேறு மாநில சபாநாயகர்களுடைய தீர்ப்புக்கள், இந்திய பார்லிமெண்டின் நிகழ்ச்சிகள், இந்திய பார்லிமெண்டின் சபாநாயகருடைய தீர்ப்புகள், நமக்கு வழிகாட்டியாக இருக்கிற ஹவுஸ் ஆப் காமன்ஸ் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை எல்லாம் ஆராய்ந்து சபைக்கு அனுப்பப்படும் அந்தக் குழுவின் சிபார்சுக்குப் பிறகு முடிவு செய்வதுதான் சிறப்பாகும், நியாயமாகும், தர்மமும் ஆகும். மேலும் இந்தப் பிரச்சினையின் அவசியத்தை முன்னிட்டு, முக்கியத்துவத்தை முன்னிட்டு, இந்த விஷயத்தில் உரிமைக் குழு நல்லதொரு முடிவுக்கு வருவதற்கு அட்வகேட்-ஜெனரல் அவர்களும்கூட உரிடைக் குழுவில் வந்து தம்முடைய கருத்துக்களையும், சட்ட நடைமுறைகளையும் விளக்கவும் நமக்கு உதவி செய்யவும் ஏற்பாடு செய்யலாம். ஆகவே இந்த மாதிரி கனம் சபாநாயகர் ஏற்பாடு செய்வது பொருத்தமும், இந்த சபைக்கு நல்லதொரு வழியைக் காட்டிய பெருமையும் உடையதாக இருக்கும். ஆகவே இது உரிமைக் கமிட்டிக்கு அனுப்பி விவாதிக்கப்



பட வேண்டும். அதற்கு கனம் சபாநாயகர் அவர்கள் வழி செய்ய வேண்டும். அதுதான் நியாயமாகவும் இருக்கும் என்ற என் கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி: கனம் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் கொண்டுவந்துள்ள உரிமைப் பிரச்னை மீது அதை உரிமைக் குழுவுக்கு விடவேண்டுமென்பதற்கான காரணங்களை, உறுப்பினர் திரு. மாதவன் அவர்களும், சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் அவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இடையில் நமது முதல் அமைச்சர் அவர்கள் "இது உரிமைப் பிரச்சினைக்கு உரிய ஒன்று அல்ல" என்று குறிப்பிட்டது எங்களை எல்லாம் திடுக்கிட வைத்திருக்கிறது. ஏனென்றால் இந்த மன்றத்திலே உள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய பிரச்னை மாத்திரம் அல்ல இது. இந்த மன்றத்தில் வீற்றிருக்கிற ஆளும் கட்சித் தரப்பு, எதிர்கட்சித் தரப்பு ஆகிய எல்லாத் தரப்பினர்களுடைய உரிமையைப் பாதிக்கின்ற விஷயமாகும். ஒரு வழக்கில் அதிகாரிகள் தவறாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள் இந்த சட்ட மன்றத்தினுடைய உறுப்பினருக்கு ஒரு மனுவாகத் தர அதை இந்த மன்றத்தின் முதல்வரிடத்தில் நேரே கொடுத்தது தான் நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி செய்த குற்றமாகும். (திரு. சா. கணேசன்: அதைக் குற்றமாகக் கூடச் சொல்லக் கூடாது) நான் குற்றம் என்று சிலேடையாகச் சொன்னேன். அது இன்றையதினம் அதிகாரியால் குற்றம் என்று கருதப்பட்டு, அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பது விந்தைக்குரிய ஒன்றாகும்.

இந்தச் சட்டமன்றத்தில் அதிகாரிகளைப்பற்றி, அவர்களுடைய தவறுகளைப்பற்றிப் பேசுவதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. சட்ட மன்றத்திலே இல்லாத, சட்ட மன்றத்திற்குப் பொறுப்புடைய இலாக்காக்களிலே இல்லாத, மற்றவர்களைப்பற்றிப் பேசுவதற்கு இந்தச் சட்டமன்றத்தின் மரபு இடந்தராது என்பதை நாம் நன்றாக அறிவோம். அப்படித் தவறு விளைவிக்கின்ற நேரத்தில் சபாநாயகர் அவர்களும், மற்றவர்களும், பொறுப்பானவர்களும் குறுக்கிட்டுத் தடுத்திருக்கிறார்கள். ஆனால் இலாக்காவில் உள்ள அதிகாரிகளுடைய தவறுகளை எடுத்துச் சுட்டிக்காட்டுவது இந்த மன்றத்தின் உரிமையைப் பொறுத்த விஷயமாகும். அப்படிச் சுட்டிக்காட்டுகின்ற நேரங்களிலேயே கனம் அமைச்சர்கள் எங்களிடத்தில் கேட்டிருக்கிறார்கள். "மேலெழுந்தவாரியாக விஷயங்களைச் சொல்லிப் பயன் இல்லை. தக்க ஆதார பூர்வமான செய்திகள் இருந்தால் அவைகளை எழுத்து மூலம் எங்களுக்குத் தாருங்கள். அதைப்பற்றி விசாரிக்கிறோம்" என்று கேட்டிருக்கிறார்கள். அப்படி அமைச்சர்கள் கேட்டதை நம்பிக்கொண்டு, பரிதாபத்திற்குரிய நாங்கள் அப்படிப்பட்ட தகவல்களை ஆதார பூர்வமாக தருவது, அப்படித் தரப்பட்ட தகவல்களின் பேரில் போலீஸ் அதிகாரி

வழக்குத் தொடர்வது, நியாயம் கிடைக்கும் என்று இந்த மன்றத்திலே மன்றாடிக் கொள்வது, பிரச்சினையின் தன்மையை உணர்ந்து நடுநிலை வகித்து நியாயம் வழங்க வேண்டிய முதல் அமைச்சர் அவர்கள் "இது உரிமைக்குழு பரிசீலிக்க ஏற்றதல்ல, உரிமைப் பிரச்சினைக்கு வரக் கூடியதல்ல" என்று வாதிப்பது இந்த மன்றத்திலே உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் என்ன பாதுகாப்பு இருக்கிறது என்கிற சந்தேகத்தையே உருவாக்கியிருக்கிறது. இப்படியே நிலைமை வளருமானால், பொது மக்கள் சில பல புகார்களைக்கூட சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் கொடுக்க அஞ்சுவார்கள். பயன் அற்ற வேலை என்று கருதி எங்களை அலட்சியப்படுத்துவார்கள். அதிகாரிகள் தாங்கள் குற்றவாளியா, இல்லையா என்பதை நிரூபித்துக்கொள்ள அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஒரு அதிகாரி பேரில் குற்றஞ்சாட்டப்பட்டால் அந்த அதிகாரி தாம் குற்றம் எதுவும் செய்யவில்லை என்பதை ஆதார பூர்வமாக அமைச்சர்களிடத்தில் விளக்க வாய்ப்பு இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் குற்றம் எதுவும் நடைபெறவில்லை என்பதை இந்த மன்றத்திலே எடுத்து விளக்கவும் வாய்ப்பு இருக்கிறது. அப்படியின்றி சட்டமன்ற உறுப்பினர் அமைச்சரிடத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் மீது போலீஸ் அதிகாரியே வழக்குத் தொடர முடியும் என்ற நிலைமை ஏற்பட்டால்—நல்ல வேளையாக நேற்று மதியழகன் அவர்கள் எந்த ஹோட்டலில் சுட்ட இட்டலி என்று குறிப்பிடவில்லை, அப்படிக் குறிப்பிட்டிருப்பாரானால் அந்த ஹோட்டல் முதலாளியே திரு. மதியழகன் பேரில் வழக்குத் தொடருகின்ற நிலைக்குக் கொண்டுபோய்விடக்கூடும்.

இப்படிப்பட்ட சூழ்நிலை இந்த மன்றத்தில் உரிமையைப் பாதிக்கக் கூடியது. அது கூட நண்பர் கிருஷ்ணமூர்த்தி தானே எழுதித் தந்த பெட்டிஷன் அல்ல. அவருக்கு வேறு ஒருவரால் தரப்பட்ட பெட்டிஷன், பயங்கரமான கொலை வழக்குப் பற்றியது. கொலை நடந்தது உண்மை. கொலையாளிகள் பிடிக்கப்படவில்லை. வழக்கிற்குள் நான் போகவிரும்பவில்லை. கனம் சபாநாயகர் அதை அனுமதிக்கமாட்டார். நான் குறிப்பிட வந்தது வழக்கு உரித்தான முறையில் விசாரணை செய்யப்படவில்லை என்பதாக கொலை செய்யப்பட்டவருடைய தம்பியால் எழுதித்தரப்பட்ட புகார் அது. மறு விசாரணை நடந்திருக்கிறது. கொலையாளி பிடிக்கப்படவில்லை. நல்லமுறையில் கொலையாளியைப் பிடிப்பதற்கு மீண்டும் விசாரணை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையைத்தான் கொலைசெய்யப்பட்டவருடைய தம்பி திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் கொடுக்க, அவர் அதை அப்படியே வாங்கி சபை முதல்வரிடம் கொடுத்திருக்கிறார். இதன் மீது இந்தச் சட்ட மன்ற உறுப்பினராகிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மீது போலீஸ் அதிகாரி வழக்குப்போட என்ன ஆதாரம் இருக்கிறது? இது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் கொண்டு வந்துள்ள உரிமைப் பிரச்சினை. ஆகவே இதை எதிர்க்க வேண்டுமென்ற நிலையில் வாதங்களைத் தயார் செய்து



கொண்டு, இது உரிமைப் பிரச்சினை அல்ல என்பதாக முதல் அமைச்சர் அவர்கள் கூறிய போக்கினைக் கண்டு ஏமாற்றமடைகிறோம். அப்படி இல்லாமல் நடுநிலைமையில் அவர் இருந்து இந்த மன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் தரப்பில் இருந்தாலும், கம்யூனிஸ்ட் தரப்பில் இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தரப்பில் இருந்தாலும், சுதந்திராக் கட்சியின் தரப்பில் இருந்தாலும், சோஷலிஸ்டு கட்சித் தரப்பில் இருந்தாலும், சுயேச்சை தரப்பில் இருந்தாலும் இது அத்தனை பேர்களுடைய உரிமையையும் பற்றிய விஷயம் என்பதை மனதிற் கொண்டு இதைப் புனராலோசனை செய்து நல்ல நீதி பெறுவதற்கு வழி வகுக்க கனம் சபாநாயகர் அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் தெரிவித்த கருத்தைத் தாங்கள் கேட்டுக்கொண்டு இருந்தீர்கள், மன்றத்திலுள்ள கனம் உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டு இருந்தார்கள். இதைப்பற்றி விபரீதமாக ஏதோ நியாயம், நியாயம் இல்லை, அவர்கள் எழுப்பிய பிரச்சினை, இந்த உறுப்பினர் எழுப்பிய பிரச்னை, எதிர்க்கட்சி உறுப்பினர் எழுப்பிய பிரச்னை என்பதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு நான் தவறுதலாகச் சொல்லிவிட்டதுபோலவும், ஏதோ தவறான போக்கைக்கொண்டிருப்பதாகவும் அதை மாற்றிக் கொள்ளவேண்டுமென்றும் அவருக்கு உரிய வகையிலே கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பிரமாதமாகப் பேசினார்கள். ஆனால் அதற்கு இது இடம் இல்லை, வேறு இடத்தில் அப்படிப் பேசியிருக்கலாம். பிரைமா ஃபேஸி கேஸ் இருந்தால் உரிமைப் பிரச்னைக்கு இடம் இருக்கும். சட்டத்தை வைத்து, தீர்ப்புகளை வைத்துப் பார்க்க வேண்டும். மன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கவேண்டுமா, வேண்டாமா என்பது வேறு விஷயம். உரிமைப் பிரச்னைபற்றி ஆராயும்பொழுது, சட்டம் இருக்கிறது; பாராளுமன்றத் தீர்ப்புக்கள் இருக்கின்றன; எதுவும் இல்லாவிட்டால் ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் தீர்ப்பை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அரசியலமைப்புச் சட்டத்திலே இருக்கிறது. இதையெல்லாம் வைத்துக்கொண்டுதான் பார்க்கவேண்டுமென்று சொன்னேன். இந்தக் கருத்தை சட்டவரம்பிற்கு உட்பட்டுத்தான் நான் தெரிவித்தேன். மற்ற உறுப்பினருக்கு இந்த உரிமை இருக்கவேண்டுமா, இருக்கவேண்டாமா என்பதைப்பற்றி யெல்லாம் நான் பேசவில்லை. நான் பேசி முடித்தபிறகுதான் ஒன்றை மறந்துவிட்டது எனக்கு ஞாபகம் வந்தது. எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திருத்திக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். நான் உள்துறை அமைச்சராக இருந்தபொழுது ஒரு உறுப்னர் கொலை வழக்கைப்பற்றித் தெரிவித்தார்கள் மேலும் விசாரியுங்கள் என்று சொன்னார்கள். செஷன்ஸ் கோர்ட்டிலே விசாரணை நடைபெற்றது. அதை வைத்துக்கொண்டு மன்ற உறுப்பினர் தவறுதலாகத் தலையிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது எனக்கு பிடித்தமல்ல. மன்ற உறுப்பினர்களைப் பாதுகாப்பதிலே எதிர்க்கட்சியிலுள்ள

[திரு. எம். பக்தவத்சலம்] [10th March 1966

உறுப்பினர்களுக்கு இருக்கின்ற அக்கறைக்கு மேலே எனக்கு அக்கறை இருக்கிறது. கனம் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் இதை உணர்ந்துகொள்ளவில்லை. இதற்காக நான் வருந்துவது உண்டு. உரிமைப் பிரச்னையை எதிர்க்கட்சிக்காரர்கள் கொண்டுவந்தால் சட்ட மன்ற உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்படும் என்பதல்ல என்னுடைய கருத்து. சட்டப்படி இந்த மன்றத்திலே நடைமுறைகள் எல்லாவற்றிற்கும் பாதுகாப்பு இருக்கிறது. வேறு மாநிலங்களிலே, பாராளுமன்றத்திலே தீர்ப்புகள் இருந்தால், உரிமைக் குழுவிலே சட்டத்தை வைத்துக் கொண்டு பரிசீலனை செய்யலாம். அப்படி இல்லாமல் இருக்கும்பொழுது உரிமைக்குழு இதற்கு என்ன முடிவு செய்யமுடியும்? அதை வைத்துக்கொண்டு கடைசியிலே இந்த மன்றம்தான் என்ன செய்யமுடியும்? தங்களுடைய தீர்ப்புக்கு விட்டுவிடுகிறேன் என்று தான் நான் சொன்னேன். உரிமைக் குழுவுக்கு அனுப்பவேண்டும் அல்லது வேண்டாமென்று நான் சொல்லவில்லை, அந்த வகையிலேதான் என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன். தாங்கள் முடிவு செய்யலாம் என்று தானே கூறினேன்? இதற்காக இவ்வளவு பிரமாதமாகப் பேசுவதற்கு அவசியமில்லை. ஏதோ முதலமைச்சரைத் தாக்க சமயம் வந்தால் பேசிவிடலாம் என்றுதான் பேசிவிட்டார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இதை உரிமைக் குழுவுக்கு விடுவதா அல்லது வேண்டாமா என்பதை தங்களுக்கு நான் விட்டுவிடுகிறேன். தாங்கள் என்ன முடிவு செய்தாலும் அதில் ஆட்சேபணையில்லை. எனக்கு வேறு ஒரு யோசனை தோன்றியது. நம்முடைய மாநிலத்திலும், வேறு மாநிலங்களிலும், பாராளுமன்றத்திலும் இதைப்போன்ற கேஸ் இல்லை. ஹவுஸ் ஆஃப் காமன்ஸிலும் ஸ்டராஸ் கேஸ் டெஃபனிட் ஆக இருக்கிறது. ஆனால் ஹவுஸ் ஆஃப் காமன்ஸின் தீர்ப்பு இதற்கு விரோதமாக இருக்கிறது. பாராளுமன்றத்திலும், வேறு மாநிலங்களிலும் இதுசம்பந்தமாக தீர்ப்பு இல்லை. இந்த நிலையிலே இதை உரிமைக்குழுவுக்கு எடுத்துக்கொண்டுபோய் அங்கே உரிமை இல்லை என்று சொல்லி பிறகு இந்த மன்றத்திலும் உரிமை இல்லை என்றுமுடிவு செய்தால் அது அவ்வளவு நல்லதல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, பிரிஸைடிங் ஆபீஸர்ஸ் கான்ஃப்ரன்ஸில் எல்லா சட்டசபைகளின் பிரிஸைடிங் ஆபீஸர்களும் கலந்துகொள்கிறார்கள். அது அகில இந்தியாவிற்கும் பொதுவானது. சட்ட மன்ற உறுப்பினர்களின் உரிமைகளைப்பற்றி அங்கே கருத்துக்கள் தெரிவிக்கலாம். இந்தப் பிரச்னையையும் அடுத்த பிரிஸைடிங் ஆபீஸர்ஸ் கான்ஃபரன்ஸ் கூட்டத்திலே விவாதித்து எல்லோரும் சேர்ந்து ஒரு நல்ல முடிவு எடுக்கலாம் என்று எனக்குத் தோன்றியது. அதை நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I want to make one point clear. What does a petition presented in this House mean? If it is not referred to in the speech, it is not part of the proceedings and it cannot be taken notice or cognisance of.



10th March 1966]

**திரு. ப. உ. சண்முகம்:** அக்ராஸ் டேபிள் . . .

**கனம் சபாநாயகர்:** நானே சொல்லிவிடுகிறேன். மந்திரிக்குப் பக்கத்திலே உட்கார்ந்து கொடுத்து விடுகிறார்கள். பெட்டிஷனைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறேன் என்று தங்களுடைய ஸ்பீச்சில் சொல்வது இல்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இட்லியைப்பற்றிச் சொன்னார்கள். எந்த ஹோட்டலில் இருந்து வந்தது என்று சொல்லியிருந்தால் அது பிரிவிலெஜ். இட்லியைக் காட்டியவர், கொண்டுவந்தவர் எல்லோரும் பிரிவிலெஜ் விதிகளின் கீழ் வருவார்கள். இவை மன்றத்தின் நடவடிக்கையைச் சேர்ந்தவை.

**திரு. மு. கருணாநிதி:** அன்றைய தினம் இட்லி காட்டப்பட்ட பொழுது உரிமையை மீறுவதாக முதலமைச்சர் அவர்கள் கோப மாகச் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது அதை மாற்றிக்கொண் டதற்காக நன்றி.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் மிகவும் சூட்சமாகக் கவனிக்கிறார்கள். குற்றம் கண்டு பிடிக்க வேண்டுமென்று அப்படிக் கவனிப்பதில் சில சமயங்களில் தவறிவிடுகிறார். நான் அன்று சொன்ன கருத்துக்கும், இப்பொழுது சொல்கின்ற கருத்துக்கும் முரண்பாடு இல்லை. முறைப்படி தவறு இருக்கிறது. இருந்தாலும் இந்த மன்றத்தின் மதிப்பைக் காப்பாற்றவேண்டுமென்பதற்காக அப்படிச் சொல்லப் படுவதில்லை.

MR. SPEAKER: Is giving a peition to a Minister individually without the knowledge of the House a part of the proceedings of the House? That is one point. The case is now in the Court and the matter is therefore *sub judice*. Whether the same matter should be referred to the Privileges Committee is the second point. These two points are to be considered. Like the Leaders of Parties, I also feel that it is a very delicate point. Any-way I am reserving my ruling, and in the course of one or two days I will give my ruling.

**திரு. செ. மாதவன்:** "ஸப்ஜுடிஸ்" என்ற பாயிண்டைச் சொன்னார்கள். சப்ஜுடிஸா இல்லையா என்ற கேசும் பிரிவி கவுன்ஸிலின் ஒபினியனுக்கு அனுப்பப்பட்டது. அந்த மாதிரி நிலை ஏற்பட்டபொழுது,

The opinion of the Judicial Committee of the Privy Council was that the House would not be acting contrary to the Parliamentary Privilege Act, 1770, if it treated the issue of a writ against a Member of Parliament in respect of a speech or proceeding by him in Parliament as a breach of its privileges.

என்று சொல்லப்படுகிறது. அந்த மாதிரி நிலை ஏற்பட்டபோது கூட நீதி மன்றத்திற்குச் சென்றிருந்தாலும் கூட ஒபினியன் வாங்கி இருக்கிறார்கள். அதையும் பரிசீலிக்க வேண்டும்.

MR. SPEAKER : I raised two points. The hon. Member has answered one point. What about the next point?

திரு. செ. மாதவன் : இந்த மன்றத்திலேயே மனு கொடுக்கப் பட்டது. ஆனால் ஸ்டராஸ் கேஸில் வெளியே கொடுக்கப்பட்டது.

கனம் சபாநாயகர் : ஸ்டராஸ் கேஸை வேண்டாம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சில சமயங்களில் அப்படிச் செய்யலாம். "கனம் சபாநாயகர் அவர்களே, இதோ நான் மந்திரிக்குக் கொடுக்கிறேன்" என்று சொல்லலாம்.

MR. SPEAKER : If a Member refers to the petition in the course of his speech and says 'I have received a petition like this. I want an investigation and I request the Government to investigate this.', then it is part of the proceedings of the House, and nobody can pursue the matter outside this House. But if it is given by the Member to the Minister without the knowledge of the House, it cannot form part of the proceedings in this House.

(Sri K. A. Mathialagan rose.)

MR. SPEAKER : The hon. Member will please answer the question whether it is part of the proceedings of the House.

SRI K. A. MATHIALAGAN : It need not form part of the proceedings of the House, Sir.

MR. SPEAKER : If it is not part of the proceedings, has a Member got a privilege? That is the point. Ruling is reserved.

10-00 a.m. திரு. இராம அரங்கண்ணல் : தாங்கள் கூறியது போல் அதை 'பார்ட் ஆஃப் தி ப்ரொசீடிங்ஸ்' என்று கருதப்படவேண்டிய தில்லை. கருதப்படவும் கூடாது.

It is not part of the proceedings.

மந்திரிகள் பெட்டிஷனை வாங்கிக் கொள்வதனால் உறுப்பினர்கள் என்ற முறையில் மனுக்களைக் கொடுப்பதற்கான உரிமை உறுப்பினர்களுக்கு இருக்கிறது.

MR. SPEAKER : That I have already told the House. That is another point and I am aware of it. But the question is, is it part of the proceedings?

I have sent hundreds of petitions.





## III.—ANNOUNCEMENTS

### (1) ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES.

MR. SPEAKER : I have to announce to the House that the following fifteen Members were duly nominated for the election of fifteen Members of the Madras Legislative Assembly to the Committee of Privileges for the year 1966–67 :—

1. The Hon. Sri M. Bhaktavatsalam.
2. Sri V. R. Nedunchezhiyan.
3. Sri M. Kalyanasundaram.
4. Sri Saw. Ganesan.
5. Sri P. Ramachandran.
6. Sri A. Arumugam.
7. Sri A. Chidambaranatha Nadar.
8. Sri N. Ramachandra Reddy.
9. Sri S. Sadasivam.
10. Sri M. S. Selvarajan.
11. Sri N. Shanmugasundaram.
12. Sri S. Madhavan.
13. Sri K. A. Mathialagan.
14. Sri S. Murugaiyan.
15. Sri T. B. Kesava Reddy.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., Fifteen, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges for the year 1966–67. The Deputy Speaker is a Member ex-officio of the Committee.

Under rule 183 (4) of the Madras Assembly Rules, I nominate Sri K. Parthasarathy to be the Chairman of the Committee.

### (2) ELECTION TO THE HOUSE COMMITTEE.

MR. SPEAKER : I have also to announce to the House that the following eleven Members were duly nominated for the election of eleven Members of the Madras Legislative Assembly to the House Committee for the year 1966–67 :—

1. Sri L. Anandan.
2. Sri V. S. Arunachalam.
3. Sri K. Cheemaichamy.
4. Sri S. Mani.
5. Sri G. Narayanaswamy Naidu.
6. Sri A. Raghava Reddy.
7. Sri P. Rajagopal.
8. Sri R. Sengaliappan.
9. Sri N. P. Sengottuvelu.
10. Sri D. N. Vadivel.
11. Sri M. P. Vadivelu.

As the number of candidates who were duly nominated is equal to the number of vacancies to be filled viz., Eleven, I hereby declare them to have been duly elected to the House Committee.

[Mr. Speaker] [10th March 1966

Under Rule 221 (1) of the Madras Legislative Assemly Rules, I hereby nominate—

1. Sri A. K. Kaliappa Gounder.
2. Srimathi A. S. Ponnammal.
3. Sri S. J. Ramaswamy.
4. Sri M. R. Krishnamurthi.

to be Members of the House Committee.

The Deputy Speaker is the ex-officio Chairman of the House Committee.

## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

### (1) DEMAND NO. VI—STATE LEGISLATURE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 17,26,500 under Demand No. VI—State Legislature.'

PULAVAR K. GOVINDAN : Sir, I move—

'That the allotment of Rs. 17,26,500 under Demand No. VI —State Legislature be reduced by Rs. 100.'

சட்ட மன்றம் நிறைவேற்றும் சட்டங்கள், விதி முறைகள் அனைத்தும் தமிழிலேயே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த என்னுடைய வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

SRI Saw. GANESAN : Sir, I move—

'That the allotment of Rs. 17,26,500 under Demand No. VI —State Legislature be reduced by Rs. 100.'

கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் கிடைப்பதை துரிதப்படுத்த வழிவகைக் காண்பது பற்றி விவாதிப்பதற்காக என்னுடைய வெட்டுப் பிரேரணையை முன்மொழிகிறேன்.

### (2) DEMAND NO. VII—ELECTIONS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 59,84,600 under Demand No. VII—Elections.'

SRI K. A. MATHIALAGAN : Sir, I move—

'That the allotment of Rs. 59,84,600 under Demand No. VII Elections be reduced by Rs. 100.'

SRI Saw. GANESAN : Sir, I move—

'That the allotment of Rs. 59,84,900 under Demand No. VII Elections be reduced by Rs. 100.'



10th March 1966] [திரு. சா. கணேசன்]

அமைச்சர்கள் தேர்தல் அலுவலில் கட்சிக்காரராக ஈடுபடுவதைத் தடுக்கும் அவசியம் பற்றி விவாதிக்க என்னுடைய வெட்டுப் பிரேரணையை முன்மொழிகிறேன்.

### (3) DEMAND NO. VIII—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 3,22,10,000 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff.'

SRI M. KARUNANITHI : Sir, I move—

'That the allotment of Rs. 3,22,10,000 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100.'

ஆட்சிமொழிப் 'பிரச்னையில் இம்மாநில மக்களின் எண்ணங்களை மத்திய அரசுக்குச் சரியான முறையில் எடுத்துரைக்காத இம் மாநில அரசின் போக்கைப்பற்றி விவாதிக்க என்னுடைய வெட்டுப் பிரேரணையை முன்மொழிகிறேன்.

SRI Saw. GANESAN : Sir, I move—

'That the allotment of Rs. 3,22,10,000 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100.'

பொற்கொல்லர்கள், பர்மா அகதிகள் ஆகியோர்க்கு கஷ்ட நிவாரண உதவிகளைச் செம்மையாகச் செய்யத் தவறியது பற்றி விவாதிக்க என்னுடைய வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

MR. SPEAKER : Now the Demands and the cut motions are before the House for discussion.

* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு விவாதத்தில் இருக்கிற மாநில சட்டப் பேரவை, தேர்தல்கள், மாநில ஆட்சி தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ஆகிய மானியங்களைக் குறித்து சில வார்த்தைகள் கூறுவதற்காக எனக்கு அளித்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகளில் இன்றைக்கு மிக முக்கியமாக இருக்கின்ற அம்சம் இந்த மாகாணத்தினுடைய ஆட்சித் தலைவராகிய கவர்னர் அவர்களுடைய பொறுப்பு பற்றிய தாகும். கவர்னர் அவர்கள்தான் இந்த மாநில ஆட்சியின் தலைவ ராக இருந்து வருகிறார்கள். இந்த கவர்னர் பதவியைப் பற்றி அரசியல் சட்டத்திலே நிர்ணயிக்கப்படுகிற நேரத்திலேயே, அரசியல் நிர்ணய சபையிலே பல விவாதங்கள் எழுப்பப்பட்ட பிறகு அந்தக் கவர்னர் பதவி அரசியல் சட்டத்திலே சேர்க்கப் பட்டது. வெளிநாடுகளிலே, அமெரிக்கா போன்ற நாடுகளிலே கவர்னர்கள் இருக்கிறார்கள். ஐம்பத்திரண்டு மாநிலங்களில் கவர்னர்கள் இன்றைக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் அமெரிக்காவில். அவர்களுக்கு அங்கு பெரிய உரிமைகள் எல்லாம்

இருக்கின்றன. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை கவர்னர்கள் ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு அரசியல் சட்ட ரீதியாக பல உரிமைகள், நியாயங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. என்றாலும், நடைமுறையில் பார்த்தால், அனுபவத்தில் பார்த்தால் கவர்னர் பதவி அதிகாரம் இல்லாத ஒன்றாக இருக்கிறது, எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறதோ அந்தக் கட்சியிலுள்ளவர்களை அனுசரித்து நடக்க வேண்டியிருக்கிறதே தவிர, தங்களுடைய மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்க வேண்டியிருக்கிறதே தவிர . . . .

MR. SPEAKER: Can the hon. Member criticise the Governor?

SRI K. A. MATHIALAGAN: Sir, we cannot criticise the Governor personally but we can criticise the Office of the Governorship.

MR. SPEAKER: But can the hon. Member say that he is partial and so on?

SRI K. A. MATHIALAGAN: I am telling . . .

MR. SPEAKER: I am now concerned with the hon. Member's reference to a particular Governor . . .

SRI K. A. MATHIALAGAN: The discussion is permissible.

MR. SPEAKER: The hon. Member can refer to the expenditure incurred. . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், கனம் உறுப்பினர் அவர்கள், கவர்னர் பதவிக்கு ஆட்சேபம் தெரிவிக்கிறார்களா அல்லது கான்ஸ்டிடியூஷனலாகக் கவர்னர்களுக்கு உரிமைகள் இல்லை என்பதற்கு ஆட்சேபமா என்பதைக் கொஞ்சம் விளக்கவேண்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** என்னுடைய வாதத்தை வலியுறுத்துவதற்காக . . .

**கனம் சபாநாயகர்:** கவர்னர் 'பார்ஷியலாக இருக்கிறார்' என்று சொல்லக்கூடாது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** கவர்னர் பதவி என்பதை எடுத்துவிட வேண்டுமென்று கூறி அதற்குப் பதிலாக வேறு ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். இன்று அது சரியாக நடைபெறவில்லை. செல்வாக்கிழந்த அரசியல் தலைவர்களுக்கு ஒரு ஓய்வு மாடமாக கவர்னர் பதவி இன்று இருக்கிறது. கவர்னர் பதவியைப் பற்றி ஒருவர் வேடிக்கையாகச் சொன்னார்; அவருடைய பெயர் எனக்கு இப்போது நினைவில்லை. 'அரசியல் நோயாளிகளின் ஆஸ்பத்திரியாக இன்று ராஜபவனம் இருக்கிறது' என்று சொன்னார். "It is a hospital for political parties"

கவர்னர்கள் தங்கள் மகாநாட்டிலே கூட அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். அந்தந்த மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களின் அங்கத்தினர்களால் சபாநாயகர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்





படுகிறார்கள். கவர்னருக்கு என்று எந்தப் பொறுப்புக்கள் இருக்கின்றனவோ அவற்றை சபாநாயகர் அவர்கள் நடத்தக்கூடிய முறையில் அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்தவேண்டும். நம் இவ்வளவு நாளைய அனுபவத்தில் பார்க்கிறோம். ஒரிசாவில் தோற்றுப்போன திரு. குமாரசாமி ராஜா அவர்களை கவர்னராக நியமித்ததையும், தோற்றுப்போன திரு. சந்தானம் அவர்களை விந்தியத்தில் கவர்னராக நியமித்ததையும், இப்போது சிக்கன சீரமைப்புக் கமிட்டி என்று ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள், சமுதாயத்தில் சீரமைப்புவருகிற வரையில், அரசியல் சீரமைப்பு வருகிற வரையில் இப்படிப்பட்ட நிர்வாகச் சீரமைப்பினால் ஒரு வித பலனும் கிடைக்கப் போவதில்லை. எதற்காக சிக்கனச் சீரமைப்பு நிர்வாகத்தில் செய்யவேண்டுமென்று சொல்கிறோம்? பணக்காரர்களுக்கு உதவி செய்வதற்காகவா, அல்லது லைசென்ஸ் கொடுப்பதற்காகவா, அல்லது மில்காரர்கள் வரிகளை ஏமாற்றுவதற்காகவா நிர்வாகத்தை சீரமைக்க உத்தேசிப்பது? நம் கனம் முதல் அமைச்சர் அவர்கள் முதல் அமைச்சராக வந்த பிறகு இந்த நான்கு ஆண்டுகளில் நிர்வாகத்தில் சீரழிவு ஏற்பட்டிருக்கிறதென்ற பெரிய ஒரு குற்றச்சாட்டை நான் சாட்டுகிறேன். நிர்வாகத் திறமைக்குறைவு, ஊழல்கள், வேண்டியவர்களுக்கு வேலை கொடுத்தல், இப்படி பல பல ஊழல்கள் நடந்துள்ளன. சந்தானம் கமிட்டி அறிக்கையில் கூறியிருப்பதை இந்த மன்ற அங்கத்தினர்கள் அறிவார்கள். லஞ்ச ஊழல் என்றால் என்ன என்பதுபற்றி பலரகங்களை சொல்லியிருக்கிறார்கள். லஞ்ச ஊழல்களின் வகையை கூறும்போது Corruption is not confined to illegal gratification for service or favour. It includes all forms of improper or selfish exercise of power and influence attached to a public office or to the special position one occupies in public life.

பணம் கொடுப்பது மட்டுமல்ல லஞ்ச ஊழல். அதிகாரத்தில் உள்ளவர்கள் பதவியில் உள்ளவர்கள் தங்கள் செல்வாக்கை சுயநலத்திற்காக தவறாகவோ அல்லது முறைகேடாகவோ துஷ்பிரயோகம் செய்வது கூட லஞ்ச ஊழலில் ஒரு வகை என்று சொல்லியிருக்கிறார்கள். பாராளுமன்றத்திலும் இந்த சந்தானம் கமிட்டி அறிக்கை ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த கமிட்டி மேலும்

"That corruption is not confined to low grade Government servants. It is rampant in a large measure among high officials and Ministers."

என்று சொல்கிறது. சாதாரண கீழ்தர உத்தியோகஸ்தர்கள் மட்டுமல்ல, உயர்தர அதிகாரிகள் மத்தியிலும், மந்திரிமார்கள் மத்தியிலும் இப்படிப்பட்ட லஞ்ச ஊழல்கள் பரவலாக இருக்கின்றன என்று சொல்லிவிட்டு ஒரு எச்சரிக்கையையும் கொடுத்திருக்கிறது.

A new tradition of integrity can be established only if the example is set by those who have the ultimate responsibilty for the Government of India, namely the Ministers of the Central and State Governments.

[திரு. கே. ஏ. மதியழகன்] [10th March 1966

என்று சொல்லியிருக்கிறார்கள். இதேமன்றத்தில் நான் கனம் பக்தவத்சலம் மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது சொன்னேன். சிராஜுதீன் என்ற பி.டபிள்யூ.டி. பிரத மஎன்ஜினியரைக் கைது செய்த பிறகு ஏன் வழக்கு போடவில்லை என்று கேட்டேன். இன்று கேஸ் போட்டிருக்கிறார்கள். அதன் நிலை என்ன என்று இந்த மன்றத்திற்கு அறிவிக்கப்படவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : வழக்கு ஹைக்கோர்ட்டில் இருக்கிறது. தீர்ப்பு கொடுக்கவில்லை. ஆகவே அதுபற்றி பேசுவது முறையல்ல, நான் விளக்குவதும் முறையல்ல.

**திரு. கே. ஏ. மதியழகன்** : ஹைக்கோர்ட்டில் கேஸ் இருக்கிறது என்று சொன்னார்கள். அவரைக் கைது செய்து விட்டு விட்டார்கள். நான் அதுபற்றி இங்கே எழுப்பிய பிறகுதான் வழக்கு தொடரப்பட்டது என்பது மறந்து பேசுவது . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : மறதி இல்லை. இங்கு சொல்வதை வைத்துச் செய்வதில்லை. நிர்வாகத்தில் எப்படிச் செய்ய வேண்டுமோ அது செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்** : ஜெனரல் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் முத்து என்பவரின் கேஸ், அதுவும் ஹைக்கோர்ட்டில் இருக்கலாம். இன்று அதிகாரத்தை பாழ்படுத்துகிறார்கள், நிர்வாகத்தை பாழ்படுத்துகிறார்கள், ஆட்சியை பாழ்படுத்துகிறார்கள். இன்று உத்தியோகங்களில் பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது, எதேச்சாதிகாரம் ஏற்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் மோதிராம என்பவர் வழக்குத்தீர்ப்பில்

The Supreme Court has remarked in the case of Moti Ram : "In a modern democratic State the efficiency and incorruptibility of public administration is of such importance that it is essential to afford the civil servants adequate protection against capricious action from their superior authority."

'பாரபட்சமான தீங்குகள், கெடுதல்களிலிருந்து அரசாங்க ஊழியர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதல் மந்திரியான பிறகு இந்த நான்கு ஆண்டுகளில் அவர்கள் சந்தானம் கமிட்டியின் இலக்கணப்படி 14 லஞ்ச ஊழல் குற்றங்களை செய்திருக்கிறார் என்று நான் பகிரங்கமாக குற்றஞ் சாட்டுகிறேன். மேலே சொன்ன அந்த இலக்கண அடிப்படையில் அவர் செய்துள்ள 14 லஞ்ச குற்றங்களை நான் இங்கு உங்கள் முன்னால் சமர்ப்பிக்கிறேன். அவர்கள் மீது இதேமன்றத்தில் பல குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. அதற்கு சமாதானம் சொல்லவில்லை. சமாதானம் அவர்களால் சொல்லவும் முடியாது. ஏதோ சாக்குப் போக்கு சொல்லுவார். வேண்டியவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. உறவினர்களுக்கு சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன. அரசியல் கட்சிகள் அடிமைப்படுத்தப்



10th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

பட்டிருக்கின்றன. இப்படிப்பட்டவிதங்களில் உள்ள 14 லஞ்ச குற்றச்சாட்டுகளை இங்கு கூற நான் முற்படுகிறேன். முதல் குற்றச்சாட்டு, அட்வக்கேட் ஜெனரல் நியமனம். டெல்லியில் இருந்து திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களை அனுப்புவதற்கு முன் திரு. சசிந்திர கவுத்திரி அவர்களின் பெயர் எப்படி தயாரானதோ . . .

MR. SPEAKER : Has not the hon. Member spoken about this matter last time?

SRI K. A. MATHIALAGAN : Yes, Sir. ஆக, அட்வகேட் ஜெனரல் நியமனம் ஒன்று. இரண்டாவதாக, பப்ளிக் ப்ராசிக்யூட்டர் நியமனம். அதுபற்றி உங்களுக்குத் தெரியும். முதலமைச்சர் வக்கீல் என்ற காரணத்திற்காக ஒரு இளைஞருக்கு அந்தப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக, முதல் அமைச்சர் அவர்களின் உறவினரான மந்திரி அழகேசன் அவர்களின் மருமகனுக்கு மின்சார நிறுவனத்தில் சட்ட ஆலோசகராக, உதவி ஆலோசகராக வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. நான்காவதாக, எதிர்கட்சித் துணைத் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் முனிசிபல் ஆதாரங்களைப் பெருக்குவதற்காக ஒரு கமிட்டி போடுவார்களா என்று ஒரு கேள்வி கேட்டார்கள்—இன்று தேவானுக்ரகம் என்ற ரிட்டயரான டெப்டி செகரட்டரியை அந்த கமிட்டி தலைவராக போட்டிருக்கிறார்கள். அவருக்கு 800, 900 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படும். அத்தோடு பரிவாரத்திற்கு வேறு எவ்வளவு செலவு. இப்படி வேண்டுமென்றே அவருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறுவது போல திரு. கருணாநிதியின் கேள்வியின் விலை மிக அதிகமாகிவிட்டது. ஐந்தாவதாக, மாஜி தலைமை செயலாளராக இருந்த திரு. வர்க்கீஸ் அவர்களை விஜிலன்ஸ் கமிஷனர் என்ற பேரில் நியமனம் செய்திருக்கிறார்கள். ஆறாவதாக, எதிர்க்கட்சிகளின் புனிதத்தன்மையை களங்கப்படுத்தி வேறு கட்சி அங்கத்தினர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திருமதி விஜயலட்சுமி என்ற அம்மையாரை சிறு சேமிப்பு நிதியின் உதவி தலைவராக நியமித்திருக்கிறார்கள். இவர் கடந்த தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டார். ஏழாவதாக, திரு. ராதாகிருஷ்ணனுக்கு பத்திரிகை உறவு தொடர்பாளராக வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு திறமை குறைவு என்று நான் சொல்லவில்லை. எங்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்து லஞ்சம் கொடுத்திருக்கிறீர்கள். திரு. ராதாகிருஷ்ணனைப் பற்றி நான் குறை கூறவில்லை. திருமதி விஜயலட்சுமியின் திறமையைப்பற்றி குறை கூறவில்லை. இங்கே இன்ஃபர்மேஷன் அமைச்சர் என்று ஒருவர் இருக்கிறார், வேண்டுமென்றால் இன்பர்மேஷன் அமைச்சராக திரு. ராதாகிருஷ்ணன் அவர்களை போட்டுக்கொள்ளட்டும். அதே போன்று இந்த அம்மையாருக்கு மட்டுமல்ல இன்னொரு அம்மையாருக்கு வேண்டுமென்றாலும் அமைச்சர் பதவி கொடுக்கட்டும். ஆனால் பொது வாழ்வில் அனுசரிக்கப்பட

[திரு. கே. ஏ. மதியழகன்] [10th March 1966

வேண்டிய அரசியல் ஆரோக்கியத்தை பாழ்படுத்துகின்ற இப்படிப்பட்ட காரியத்தை செய்யாதீர்கள் என்று தான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இன்பர்மேஷன் மந்திரி என்று திரு. பூவராகன் அவர்கள் இருக்கிறார்கள், அவரிடம் இன்னொரு இலாகாவை கொடுங்கள். முதன் மந்திரியிடமுள்ள எத்தனையோ இலாகாக்களில் ஒன்றை எடுத்து தனியாக ஒரு அமைச்சர் பதவியை அம்மையாருக்கோ அல்லது வேறுயாருக்கு வேண்டுமென்றாலும் கொடுங்கள். அதைச்செய்யாமல் இப்படிப் பட்ட அரசியல் சூழ்நிலையை கெடுக்கின்ற வகையில் முறைகேடாக ராதாகிருஷ்ணன் என்பவருக்கும், அந்த அம்மையாருக்கும் அதிகாரிகள் என்ற முறையில் நியமனம் செய்திருக்கிறார்கள். இப்படி 'பொல்யூட்' செய்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் திரு. அசோக் மேத்தாவுக்கு கொடுத்த பாணியை கொஞ்சம் இவர்களும் இங்கு கையாண்டிருக்கிறார்கள். இதெல்லாம் பொலிட்டிக்கல் கரப்ஷன் இல்லையா? . . .

(இச்சமயத்தில் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் கையில் வைத்துக்கொண்டிருந்த பென்ஸில் கைதவறி, எதிர் வரிசையில் அமர்ந்திருந்த கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் மீது விழுந்தது.)

Sri K. A. MATHIALAGAN : I am so sorry, Mr. Speaker, Sir.

The Hon. Sri R. VENKATARAMAN : In the House of Commons there is a line drawn beyond which the Opposition cannot even step. Seats are arranged on either side of the line and the two sides (Government and Opposition) are not supposed to go beyond this line. The purpose of this is that there should be no possibility of anybody exchanging missiles like this. However this being a trivial missile, I have no objection. (Laughter)

Sri K. A. MATHIALAGAN : I am thankful to the Hon. Minister for Industries. மந்திரிகளாக இவர்களை வைக்கட்டும்,

இன்றையதினம் முதலமைச்சர் அவர்களே எத்தனையோ இலாகாக்களை பாரம் தாங்க முடியாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், எத்தனையோ பொறுப்புக்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் "ஏறுமயில் ஏறும் ஆறுமுகம்' என்று சொல்வது போல் எவ்வளவோ இலாக்காக்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நிதி மான்யமா அதை கோரும் முகம் ஒன்று, கல்விமான்யமா அதை கோரும் முகம் வேறொன்று, திட்ட மான்யமா அதற்கு இன்னொரு முகம்; இவற்றில் ஒன்றை பிரித்து யாரையாவது நியமிக்கலாம். திரு. ராதாகிருஷ்ணனை நியமிக்கட்டும் அல்லது அந்த அம்மையாரை நியமிக்கட்டும். அவ்விதம் செய்யாமல் நாட்டில் இருந்து வருகின்ற பொதுவாழ்வை அவமதிக்கிற வகையில் ஜனநாயக மரபுகளை பாழ்படுத்தலாமா என்று தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



10th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

எட்டாவது நான் சொல்லுகின்ற குற்றச்சாட்டு, அறநிலைய நிறுவன போர்டின் தலைவராக திரு. சாரங்கபாணி முதலியார் என்பவரை அமைச்சர் அவர்களுடைய சொந்தம் என்ற காரணத்திற்காக நியமித்திருக்கிறார்கள். . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்பே, 'சொந்தம்' என்று குறிப்பிடுவதைப்பற்றி சொல்லியிருக்கிறேன். அமைச்சருக்கு சொந்தம் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. சொந்தம் என்பதால் இவ்விதம் நியமனம் செய்யப்படுகிறார் என்று சொல்வது தவறு. சொந்தமாக இருக்கிறவர்கள் இவ்விதம் நியமனம் பெறுவது தவறு என்று சொல்ல நான் முன்வரவில்லை. அமைச்சருக்குச் சொந்தம் என்பதற்காக நியமனம் செய்யப்படுகிறார் என்று எடுத்ததற்கெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் ஊரெல்லாம் சொந்தம் என்று தான் வைத்துக் கொள்ள முடியும் . . . .

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, எனக்கு கொஞ்ச நேரம் அவகாசம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் ஆறுமுகம், ஏறுமயில் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தால் மானியத்தைப்பற்றி பேச நேரம் எங்கிருந்து கிடைக்கும்? சொந்தம் சொந்தம் என்று சொல்லும் போது, எப்படி சொந்தம் என்று சொல்லுங்கள் . . .

**திரு. கே. ஏ. மதியழகன் :** எல்லா சொந்தத்தையும் சொல்லுகிறேன் . . . . அதை சொல்லாமல் நான் எங்கும் போய் விடப்போவதில்லை . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி நான் இப்போதே சொல்லிவிடுகிறேன். இந்து மத அற நிலையத்திற்குத் தலைவராக நீதி இலாகாவிலிருந்து ஒருவரைபோட வேண்டும் என்று சட்டம் கூறியது. அதற்கு தகுந்த முறையில் பெயர்களை சொல்லும்படி ஹைக்கோர்ட்டைக் கேட்டோம். நாங்கள் மூன்று பெயர்களை கேட்டிருந்தோம். உண்மையிலேயே நான் வேறு ஒருவரை நினைத்து வைத்துக்கொண்டிருந்தேன். ஹைக்கோர்ட் ஒருவரின் பெயரை எடுத்துக் கூறியது. அந்த பெயரை சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்பினோம். அவர்களும் இதே நபரை போடுவது தான் நல்லது, இவரை விட மேலானவர் இந்தப் பதவிக்கு வேறு யாரும் இல்லை. இவர் நீதிபதியாக இருந்திருக்கிறார், ஆகவே, இவரைப் போடலாமே என்று கூறியது. அந்த முறையில் தான் அவர்களை போட்டோம், எனக்கும் அவர்களுக்கும் சொந்தம் ஒன்றும் கிடையாது. சொந்தம் என்றால் எவ்வாறு சொந்தம் என்பதையெல்லாம் தெரிந்து கொண்டு பேசவேண்டும். இவ்விதம் குறிப்பிடும்போது கொஞ்சம் பொறுப்போடு பேச வேண்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பொறுப்போடு, சொந்தத்தை எல்லாம் தெரிந்து கொண்டுதான் பேசுகிறேன். திரு. ஓ. வி. அழகேசன் அவர்களுடைய . . .

[10th March 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஓ. வி. அழகேசனுக்கும் இவர்களுக்கும் சொந்தம் ஒன்றும் கிடையாது . . .

**திரு. கே. ஏ. மதியழகன்:** சொந்தம் இருக்கிறது, அதை என்னால் நிரூபிக்க முடியும். அமைச்சர் பக்தவத்சலம் அவர்களும், அழகேசனும் ஷட்டகர்கள், அழகேசனும் சாரங்கபாணி முதலியாரும் சம்பந்திகள், அவருடைய மகனுக்கும் இவருடைய மகளுக்கும் திருமணமாகியிருக்கிறது . . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தக் கல்யாணம் நடப்பதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகவே இது நடந்தது . . . .

**திரு. கே. ஏ. மதியழகன்:** அது மட்டுமல்ல, இப்பதவிக்கு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாக இருக்க தகுதியுள்ளவர்களைத்தான் போடலாம் என்றிருக்கிறது, அந்தத் தகுதியில்லாத சாரங்கபாணி முதலியாரை, இந்தப் பதவிக்குக் கொண்டுவர சட்டமே மாற்றியமைக்கப்பட்டது என்பது என் குற்றச்சாட்டு.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சப்-ஜட்ஜாக இருந்த போது, டெபுடி கமிஷனராக இருந்தார்கள், அதன் பிறகு ஹைக்கோர்ட் தான் இவருடைய பெயரை தந்தார்கள், அதன்படி இவரைப்போட்டோம். அப்படியிருக்கும் போது, ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத விஷயத்திற்கு தாவிக்கொண்டு போவதில் பயனில்லை. இவ்விதம் பேசும்போது கொஞ்சம் பொறுப்புணர்ச்சியோடு பேச வேண்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு தான் நான் பேசுகிறேன். அமைச்சருக்கும் பொறுப்புணர்ச்சி வேண்டும். நான் சொல்வதில் உண்மையிருக்கிறது என்ற அடிப்படையில் தான் இவற்றை சொல்லுகிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

அடுத்தபடியாக, அதிகாரிகள் மத்தியில் சுயமரியாதைக்குப் பங்கம் நேரும் வகையில்—டிவைட் அண்ட் ரூல்—பாலிசியை கைக்கொள்வது போல், இலாகாக்களை இரட்டை மண்டலங்களாக ஆக்கியிருக்கிறார்கள். 9-வது குற்றச் சாட்டு போலீஸ் இலாகாவில் ஐ.ஜி. மகாதேவன் அவர்கள். ஆனால் அந்த வேலையைப் பார்ப்பது அடிஷனல் ஐ.ஜி. யான அருள். ஐ.ஜி.யை வேறு வேலைக்குத்தள்ளி அடிஷனல் ஐ.ஜி.—ஏன் ஐ.ஜி. வேலை பார்க்கவேண்டும்? காரணம் என்ன?

10-வது குற்றச்சாட்டு—நேற்றுவரை மிக திறமையானவர் என்று சொல்லிக்கொண்டிருந்த திரு. மகாதேவனை ஏன் விஜிலன்ஸ் டைரக்டர் என்று நியமிக்கவேண்டும், அதற்குப்பிறகு அதற்கும் டேப்ளிகேட்டாக கமிஷனராக தலைமைச் செயலாளர் வர்கீசை நியமித்திருக்கிறார்கள். இதற்கு என்ன அவசியம் வந்துவிட்டது?

நான் சொல்லக்கூடிய 11-வது குற்றச்சாட்டு, இப்போது டி.எம்.எஸ். உத்தியோகத்தில் மரைக்காயர் என்ற அம்மையார் இருக்கிறார். அவர்க்கு அடிஷனலாக குமாரவேல் முதலியார்



10th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

என்பவரை நியமித்து, அவர் ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி சம்பந்தப்பட்ட காரியங்களை பார்த்துக்கொள்வதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அதேபோன்று 12-வது குற்றச்சாட்டு கல்வி இலாகாவில் சுந்தரவடிவேலு அவர்கள் டைரக்டராக இருந்து வந்தார்கள். இப்போது இந்த இலாகாவை இரண்டு கூறாக செய்திருக்கிறார்கள். திறமையான முறையில் நிர்வாகம் நடக்க உத்திரவாதம் உள்ளது என்பது உண்மையாக இருந்தாலும், டைரக்டராக இருக்கும் சுந்தரவடிவேல் அவர்கள் மிகுந்த திறமைசாலி என்றெல்லாம் புகழ்ந்த இவர்கள் இன்றைக்கு அவரை என்ன வேலைக்கு அனுப்பியிருக்கிறார்கள்? பெரியார் அவர்களுடைய வாசகத்தில் சொல்வதாக இருந்தால் 'பேன் குத்துகிற வேலைக்கா அனுப்பியிருக்கிறார்கள்' என்று தான் கேட்கவேண்டியிருக்கிறது?

13-வது குற்றச்சாட்டு—வரி கொடுக்கின்ற விஷயத்திலிருந்து ஏமாற்றிக்கொண்டிருந்தவர்களை சரியான முறையில் கண்டுபிடித்துக் கொண்டிருந்த ராயப்பா என்ற அதிகாரிக்கு இப்போது வேறு ஒரு இலாகாவில் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. விக்கிரமாதித்தன் கூடுவிட்டு கூடு பாய்வது போல் டிரான்ஸ்போர்ட் இலாகா போன்ற பல இலாக்காக்களுக்கு அவரை மாற்றியாகி விட்டது. இப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு ஏதாவது பாதுகாப்பு உண்டா? அவர்களுடைய சுயமரியாதை காப்பாற்றப்படுமா? நான் இதையெல்லாம் தவறான கருத்தில் சொல்லவில்லை. சந்தானம் கமிட்டியின் முடிவுகளின் அடிப்படையில் சொல்லுகிறேன். இலாகாக்களை இரட்டை மண்டலங்களாகப் பிரித்து தனக்கு வேண்டியவர்களை பதவிகளில் அமர்த்துவது கூடாது என்பது தான் என் கோரிக்கை. நான் கூறுகின்ற அவ்வளவு குற்றச்சாட்டுகளையும் "ஃபேவரிட்டிஸம், நெப்பாடிஸம், பொலிட்டிக்கல் கரப்ஷன்", என்ற அளவில் சொல்லப்பட்டிருக்கும் இத்தனையும் நான் பொறுப்போடுதான் சொல்லியிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் அறநிலையங்களில் இருக்கின்ற தர்மகர்த்தாக்கள் இருக்கின்ற நிலைமையை எடுத்துக் கொண்டால் எல்லோரும் முதலியார்களாக ஒரு குறிப்பிட்ட சமூகமாக இருக்கிறார்கள். இது எனது 14-வது குற்றச்சாட்டு—கபாலீஸ்வரர் ஆலயத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அங்கே அப்படியில்லை என்று சொல்ல முடியுமா இவர்களால்? ஆண்டவனுக்கு முன்னால் அனைவரும் சமம் என்று சொல்வார்கள். இதில் குறுகிய மனப்பான்மையில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று வேண்டுமென்றால் அமைச்சர் அவர்கள் சொல்லலாம். ஆனால் இத்தகைய குறுகிய மனோபாவத்தோடுதான் இத்தனையும் செய்திருக்கிறார்கள் என்பதை தான் திட்ட வட்டமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர்களுடைய சுற்றுப் பயணத்தைப்பற்றி குறிப்பிட்டு ஒரு சில வார்த்தைகள் மட்டும் சொல்லிக்கொள்கிறேன். மக்களோடு தொடர்பு கொள்வதற்காகத்தான் சுற்றுப்பயணம் செல்லுகின்றோம் என்று அடிக்கடி இந்த மன்றத்திலும் சொல்லுகிறார்கள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வது போல் தான் ஒரு அமைச்சருடைய சுற்றுப்பயணத்தை மட்டும் எடுத்துக்

காட்ட விரும்புகிறேன். நான் இதை சொல்லும் போது, அமைச்சர்கள் என் பேரில் கோபித்துக் கொள்ளக் கூடாது. மற்ற அமைச்சர்களைப்பற்றி நான் சொல்லவரவில்லை. எங்கள் ஊர் அமைச்சராக இருக்கின்ற திரு. மன்றாடியார் அவர்கள் சுற்றுப் பயணம் செய்ததை எடுத்துக்கொள்கின்றேன். கோபித்தாலும் பரவாயில்லை. அவர்களுடைய சுற்றுபயண நிகழ்ச்சி நிரல் . . . நவம்பர் 15-ம் தேதி திங்கள் கிழமை, டிப்பார்ச்சர்—(புறப்பாடு) 1 பி. எம். மட்ராஸ்—சென்னையில் புறப்பட்டு, பங்களூருக்கு காலை 5 மணிக்குப் போய் சேருகிறார். அடுத்த நாள் 16-ம் தேதி செவ்வாய்க்கிழமை 7-30 எ. எம். டிப்பார்ச்சர்—அறைவல் 8-30 எ. எம். ஹோசூர்—விஸிட்—திரும்பவும்—டிப்பார்ச்சர் 2-30 பி. எம். அறைவல் 3-00 பி.எம். பங்களூர்—அடுத்த நாள்—17-ம் தேதி காலை7-30-க்கு புறப்படுகிறார் 8-30-க்கு ஹோசூர்—திரும்பவும் மாலை 3-00 மணிக்கு பங்களூர்—அடுத்த நாள் 18-ம் தேதி காலை 7 மணிக்கு பங்களூரிலிருந்து புறப்பட்டு 11 மணிக்கு சென்னை வந்து சேருகிறார். இந்த 70 மணி சுற்றுப் பயணத்தில் "கேட்டில் ஃபார்மை" பார்வையிட்டது எட்டு மணி நேரம். சுற்றுப்பயணம் செய்ததோடு சேர்த்துப் பார்த்தால், இன்னும் சில மணி சேரும். மீதி 5 மணி நேரம் பங்களூரில்தான் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பங்களூரில் தங்கியிருந்தார்கள் என்றால் வேறு ஏதோ தவறான காரியத்திற்கு போவார்களே பங்களூருக்கு, அப்படி நான் தவறாகப் போனார் என்று சொல்லவில்லை. எங்களுடைய அமைச்சருடைய குணங்களைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். ஹோசூரில் டி.பி. இருக்கிறது, அங்கு தங்கியிருக்கலாம். அவ்விதம் இருந்தும் பங்களூரில் தங்கியிருக்கிறார்கள். இதற்கு டிராவலிங் அலவன்ஸ் கொடுக்கவேண்டும், இன்னொரு ஸ்டேட்-க்கு போகும்போது, வேறு டி.ஏ. போடவேண்டும் . . .

**கனம் சபாநாயகர்** : இதற்கெல்லாம் ரூல்ஸ் இல்லையா . . .

**திரு. கே. ஏ. மதியழகன்** : ரூல்ஸ் எல்லாம் இருக்கிறது. அது அல்ல என்னுடைய வாதம். இந்த 70 மணி நேரத்தில் எந்த மக்களோடு தொடர்பு கொண்டார்கள் என்பது தெரியவில்லை, அவர் ஹோசூரில் சென்று பார்த்தது மாடுகளை, மக்களை பார்க்கவில்லை. பங்களூரில் மீதியிருந்த நேரத்தில் எங்கிருந்தார் என்பது எனக்கு தெரியாது. எனக்கு இருக்கிற பெரிய சந்தேகம், நம்முடைய அமைச்சர் அவர்களுடைய குடும்பத்தை சேர்ந்தவர்கள் பங்களூரில் ஒரு தொழிற்சாலை நிறுவிக்கொண்டிருக்கிறார்கள். சொந்த குடும்பத்திலிருந்து நிறுவப்படுகின்ற தொழிற்சாலை வேலைகளைப் பார்வையிடுவதற்கு—தனது சொந்த காரியத்திற்கு—நான்கு நாட்கள்—அரசாங்கச் செலவில் பயன்படுத்தப்பட வேண்டுமா என்பது தான் என் கேள்வி—இம்மாதிரி சுற்றுப்பயணங்களில் எந்த மந்திரியும் விதிவிலக்கு அல்ல. 'Ceaser's wife is above suspicion' என்பது தான் ரோமாபுரியினுடைய சித்தாந்தம். அதாவது சீஸரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும் என்பதை சரித்திர விற்பன்னரான முதல் அமைச்சர் தெரிந்து கொள்ள வேண்டும். நான் குறிப்பிட்ட இந்த 14 குற்றச்சாட்டுகளுக்கும் அமைச்சர்கள் பதில் சொல்ல கட்டைப்





பட்டிருக்கிறார்கள், அமைச்சர்கள் பதில் கூறினாலும் கூறாவிட்டாலும் சீக்கிரத்தில் மக்கள் தீர்ப்பு கூறுவார்கள் என்பதைக் கூறி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. நா. துரைப்பாண்டியன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கைகளை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். **10-30 a.m.**

அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணங்களில் அவர்கள் படும் தொல்லையை நாம் சொல்ல முடியாது. மத்தியானம் ஒரு மணிக்குச் சாப்பிடுவதாக ப்ரோக்ராம் இருந்தால் 5 மணிக்கு வந்து சாப்பிடுகிறார்கள். மந்திரிகளும், சட்ட சபை அங்கத்தினர்களும் மக்கள் மத்தியில் பழகி அந்த முறையில் பழகி விட்டார்கள். ஆனால் அவர்களுடன் வரும் உத்தியோகஸ்தர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டிக்கொள்கிறேன்.

அடுத்தாற் போல 1967-ல் அதிக அங்கத்தினர்கள் வரவேண்டியிருப்பதால் இந்தக் கட்டடம் அதற்கு இடம் கொடுக்காது என்று நினைக்கிறேன். இந்த பட்ஜெட்டில் புதிதாகக் கட்டடம் கட்ட ஒன்றும் நிதி ஒதுக்கவில்லை. இதற்கு நல்ல கட்டடம் கட்ட வேண்டும். காங்கிரஸ் பார்ட்டிக்கு ஒரு அறை இல்லை. அதற்கும் ஒரு அறை கட்டவேண்டும்.

மேலும், மந்திரிகளோடு வெளியில் செல்லுகிற உத்தியோகஸ்தர்களுக்கு 1936-ம் ஆண்டில் இருந்த டிராவில்லிங் அலவன்லே இன்றும் இருக்கிறது. இன்றைய விலைவாசிக்கு ஏற்ப அதைக் கூட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்ட சபை அங்கத்தினர்களுக்கு 150 ரூபாய் சம்பளமாக இருந்தது, 250 ரூபாயாக ஆகியிருக்கிறது. ஆனால் மந்திரிகளுக்கு 1946-ம் ஆண்டிலிருந்து, அன்று 1,000 ரூபாயாக இருந்ததே இன்றும் இருக்கிறது. எல்லோரும் விலைவாசி காரணமாகச் சம்பளம் உயர்த்தப்பட்டிருப்பதன் காரணமாக, மந்திரிகளுக்கும் 1,000 ரூபாய் சம்பளம் என்பதை 2,000 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைபடுகிறேன்.

தேர்தல் சம்பந்தமாக கணக்கு காட்ட வேண்டிய முறைப்படி ஏதோ 7,000 ரூபாய் என்று காட்டியிருந்தாலும், உண்மையிலே என்ன என்பதை எதிர்க் கட்சி அங்கத்தினர்களும் ஆளும் கட்சி அங்கத்தினர்களும் நன்றாக அறிவார்கள். பல பல லட்சக் கணக்கான ரூபாயைத் தேர்தலிலே செலவழித்து விடுகிறார்கள். அப்படிச் செலவழித்து விட்டு, மனச்சாட்சிக்கு விரோதமாகக் கணக்கு எழுதிக் காட்டுகிறோம் என்று பொது மக்கள் கேவலமாகக் கூறுகிறார்கள். அதைத் திட்டவட்டமாக வரையறுத்து உண்மையிலேயே கண்காணிக்கவேண்டும். தேர்தலிலே கார், பெட்ரோல் ஆகியவற்றுக்குத்தான் அதிகச் செலவு ஆகிறது. ஆகவே, அபேட்சகராக இருக்கிறவர் எத்தனை கார் வைத்திருக்கலாம் என்று ஏற்பாடு செய்து, நண்பர்கள், சொந்தக்காரர்கள் ஆகியவர்களுடைய கார் என்றெல்லாம் கார்களைக் கொண்டு வைத்து வோட்டர்

*[திரு. நா. துரைபாண்டியன்]* [10th March 1966

களைக் காரில் ஏற்றிக்கொண்டு செல்வது, பணம் கொடுப்பது எல்லாவற்றையும் தடுக்கவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அல்லது, ஒரு சிறிய கிராமத்திலிருந்து ஓட்டுச் சாவடிக்கு 3 மைல், 4 மைல் இருக்குமானால், அந்த இடத்திலே நடமாடும் ஓட்டுச் சாவடிகளை வைத்தால் நலமாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேல் சபை பற்றி யோசிக்கும்போது உண்மையிலேயே மேல் சபை வேண்டுமா, வேண்டாமா என்பது ஒருபுறம் இருக்கிறது. அதைப் பற்றி அன்றும் ஒரு முறை சொன்னேன். மேல் சபையில் பட்டதாரிகள், ஆசிரியர்கள், ஸ்தல ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியவர்களுக்கு ரெப்ரெஸென்டேஷன் இருக்கிறதே தவிர மற்றவர்களுக்கு இல்லை. இந்த நாட்டிலே ஜனநாயக சமுதாயம் உருவாகவேண்டுமென்றால், உழைப்பின் பேராலும், தொழிலின் பேராலும் தான் நமது பொருளாதாரம் முன்னுக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே தொழில் அதிபர்களுக்கு என்று ஒரு ஸ்தானம் ஒதுக்கப்படலாம், வர்த்தகர்களுக்கு என்று ஒரு ஸ்தானம் ஒதுக்கப்படலாம், தொழிற் சங்கத்தினர்களுக்கு ஒரு ஸ்தானம் ஒதுக்கப்படலாம் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுமக்கள் மத்தியில் ஓட்டுக் கேட்டு கட்சித் தலைவர்கள் தேர்தலுக்கு நிற்கும்போது சில சமயங்களில் தோற்கடிக்கப்படுகிறார்கள். அவர்கள் எம்.எல்.ஸி. என்றோ, நாமினேஷன் என்றோ நமது சட்ட சபைக்கு வந்து விடுகிறார்கள். இதைப் பற்றி பொது மக்கள் கேலியாகவும், கிண்டலாகவும் சொல்லுகிறார்கள். மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்கள், மக்களால் அவர்களுடைய கொள்கை பிடிக்காமல் வெறுக்கப்பட்டவர்கள், தோற்கடித்து விடுகிறார்கள். அவர்கள் பின்வாசலால் வர அரசாங்கம் சட்டம் ஏற்படுத்தி வைத்திருக்கிறது என்றும், அது ஒழிக்கபடவேண்டும் என்று பரவலாக, பரபரப்பாக இருக்கிறது என்று தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லஞ்ச ஒழிப்பைப் பற்றி கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். லஞ்சம் என்பது மனிதன் எப்போது பிறந்தானோ அப்போது முதற்கொண்டே அவனுடன் இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன். ஆண்டவன் அவதரித்து இருந்தாலும், சர்க்கரைப் பொங்கல் போட்டால் சாதகம் செய்கிறான் என்று வேதம் சொல்லுகிறது. ஒவ்வொரு சாமிக்கும் இது இது தேவை என்று வைத்து பூஜை செய்கிறோம். லஞ்சம் என்பது இந்த நாட்டிலே காங்கிரஸ் அரசாங்கம் வருவதற்கு முன்பேயிருந்து வருகிறது என்பதை மறுக்க முடியாது. எந்தக் கட்சியானாலும் அங்கே லஞ்சம் இருக்கிறது. லஞ்சத்தை ஒழிக்க என்று வைத்திருக்கிற லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் ஒரே டிப்பார்ட்மென்ட்டிலிருந்து, போலீஸ் டிப்பார்ட்மென்ட்டிலிருந்து வந்திருக்கிறார்கள். அதனால் ஒரு பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. அது என்ன என்றால், பொது மக்கள் என்ன கூறிக்கொள்ளுகிறார்கள் என்றால் போலீஸ் டிப்பார்ட்மென்ட்டிலிருந்து லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் வந்திருப்பதால் அவர்கள் டிப்பார்ட்மென்ட்டில் இருக்கிறவர்களைப் பிடிக்கவில்லை என்று. அதுவும் ஓரளவு



10th March 1966] *[திரு. நா. துரைபாண்டியன்]*

உண்மை போல் தெரிகிறது. மாறாக, இந்த டிப்பார்ட்மென்ட் என்று இல்லாமல் ரிட்டயர்ட் ஜட்ஜ், ஆஃபீஸர்கள், மற்றவர்கள் கொண்ட கமிட்டியாகப் போட்டால் லஞ்ச ஒழிப்பைத் தீவிரமாகச் செய்யலாம் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்த சட்ட மன்ற நிகழ்ச்சிகளுக்கான செலவுக்கான மான்யம் கோரியிருக்கிறார்கள். இந்தச் சட்ட மன்றம் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்' என்று சொல்லப்படுகிற பொது மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்கிற மன்றம் ஆகும். ஆகவே, இந்தச் சபையை மன்னர்க்கு மன்னர்கள் கூடி இருக்கும் மன்றம் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால், இந்த மன்றத்திலே கூடி இருக்கிற இவ்வளவு பெருமைக்கு உரிய உறுப்பினர்கள் சில நேரங்களில் உணர்ச்சி வயப்பட்டு இந்த மன்றத்தினுடைய பெருமை குன்றக்கூடிய சில நிகழ்ச்சிகளைச் செய்து விடுகிறார்கள். அது எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள் மட்டும் தான் செய்கிறார்கள் என்ற ஒரு நிலை இல்லாமல், ஓரளவுக்கு எதிர்க்கட்சிக்காரர்களை அந்த அளவுக்குக் கொண்டு செல்லக் கூடிய நிலையிலே ஆளும் கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களும், அமைச்சர்களும் கூட சில நேரங்களில் அந்த நிலைக்குக் கீழே இறங்கி விடுகிறார்கள். இந்த மன்றத்தில் வள்ளுவர் படத்தின் கீழே—

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்

என்ற ஒரு நல்ல திருக்குறளைப் பொறித்திருக்கிறார்கள். இந்தத் திருக்குறள் மட்டும் போதாது. சொல்லுகிறவர்கள் நல்ல சொற்களைச் சொல்லலாம். ஆனால், கேட்கிறவர்களுக்கு அந்த நல்ல சொற்களை ஏற்றுக்கொள்ளுகிற அளவுக்கு மனப் பக்குவம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். விதை நல்ல விதையாக இருக்கலாம். அதைக் களர் நிலத்தில் போட்டால் பலன் அளிக்காது. நிலத்திலுள்ள களரைப் போக்கவேண்டும். அந்த நிலையிலே தான் அந்த விதை பலன் அளிக்க முடியும். வள்ளுவரே

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு

என்று கூறுகிறார். அந்த அளவுக்கு, கூறுகிறவர்கள் யார் என்று பார்க்காமல், கூறப்படுகிற பொருள் என்ன என்று எண்ணிப் பார்க்கிற நிலை ஆளும் கட்சியிலே இருக்கிற அங்கத்தினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் இல்லாமல் போய் விடுகிறது. அதனால் கேட்கிறவர்கள் நல்லவர்களாக இல்லை என்ற காரணத்தினால் சொல்லுகிறவர்கள் கூட ஒரு சில சமயங்களில் அந்த நிலையிலிருந்து வழுவுகிற நிலை ஏற்படுகிறது.

ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்

என்ற முறையில் நல்லவர்கள் கூட ஒரு நேரத்தில் நல்ல கருத்துக்களைத் திறம்பட சொல்லக் கூடியவர்கள், கேட்கிறவர்கள் நல்லவர்களாக அல்லாது இருக்கிற நேரத்தில், அவர்கள் சொல்லுகிற சொல்கூட அவர்களுக்கு ஏற்ற நிலையில் ஏற்படும் என்று சொல்லுகிறார். அந்த நிலையை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் அமைச்சர்கள் சொல்லுகிற பதிலும், ஆளும் கட்சியில் எழுப்புகிற சில சொற்களும் ஆத்திரமூட்டக் கூடியனவாக இருக்கின்றன. அந்த சமயத்தில் அங்கத்தினர்களும் உணர்ச்சி வயப்பட்டு விடுகிறார்கள்.

ஆகவே, இந்தச் சபையிலே தவறு நடைபெறுவதும், அப்படி தவறு நடைபெறுகிற அளவுக்கு நிலைமை வளர்வதும், இந்த நிலைகளை வெளியிலே சொல்லாமல் இருக்கக்கூடிய அளவுக்கு தீர்ப்புகள் ஏற்படுவதும், இவைகளெல்லாம் தொடர்ந்து நடைபெறாமல் இருப்பதற்கு ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் ஒன்றுபட்ட நிலைமையில், ஒரு மனதோடு பாடுபட வேண்டும் என்ற எனது வேண்டுகோளை தங்கள் மூலம் விடுத்துக் கொள்ளுகிறேன்.

அமைச்சர்களைப் பற்றி இங்கே சொன்னார்கள். இந்த நாட்டில் இருக்கிற ஆட்சிமுறை நல்ல முறையிலே நடைபெறவேண்டும் என்றால், அமைச்சர்கள் நல்ல முறையில் பணியாற்றவேண்டும். அமைச்சர்களுக்கு எவ்வளவோ பணிகள் இருக்கின்றன. அது எங்களுக்குத் தெரியும். அதே நேரத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் பணிகள் இருக்கின்றன. அவர்கள் காலமும் அருமையானது தான். சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களை காண வருகிற நேரத்தில் பல மணி நேரம் காத்துக் கிடக்கவேண்டியிருக்கிற ஒரு நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்கவேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் அங்கத்தினர்களை காணுவதற்கு என்று ஒதுக்கிவிட்டு, அந்த நேரத்தில் அமைச்சர்கள் வேறு பணியில் ஈடுபடக்கூடாது. ஒரு செகரடரி வருகிறார். அவர் போனபிறகு இன்னொரு செகரடரி வருகிறார். செகரடரீஸ் கான்பெரன்ஸ் நடந்துகொண்டிருக்கிறது என்று அமைச்சர்கள் உள்ளே இருக்க, அங்கே வெளியே சட்டமன்ற உறுப்பினர்கள் காத்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமைச்சர்களின் சுற்றுப் பிரயாணத்தைப்பற்றி திரு. மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். கட்சிப் பணிக்கும், சொந்தப் பணிக்கும் அமைச்சர்கள் போவதைப்பற்றி நாங்கள் யாரும் கூறுவதற்கில்லை. கட்சிப் பணிக்கும் சொந்தப் பணிக்கும் போகிற நேரத்தில் ஓரிரு அரசுப் பணிகளை ஏற்றுக்கொண்டு நடத்துவது நல்ல முறையாகாது என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தேர்தல் நிதி வசூலிப்பதற்கு அமைச்சர்கள் செல்லுகிறார்கள். இது எந்த அளவுக்கு நல்ல முறையாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நான் ஆளும் கட்சிக்கு தங்கள் மூலமாக ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். பணத்தை நம்பி 1967-ம் ஆண்டு தேர்தலை எதிர்நோக்காதீர்கள். அதை நம்பி ஒரு





காலத்தில் பலன் கண்டிருக்கலாம். ஆனால், 1967-ல் பணம் உங்களுக்குப் பலன் கொடுக்காது. சாதாரணமாக ஒரு பொதுக் கூட்டத்தில் ஒருவர் சொல்லக் கேட்டேன். கணவன் காலையிலிருந்து மனைவியை அடித்து துன்புறுத்திவிட்டு, மாலையில் வந்தவுடன் ஒரு பொட்டலத்தையும், கொஞ்சம் பூவையும் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தவுடன் அந்த பொட்டலத்தை எடுத்துக்கொண்டு, பூவை சூட்டிக்கொண்டு காலையில் கணவன் அடித்து துன்புறுத்தியதையெல்லாம் மனைவி மறந்துவிடுகிறாள். அதைப்போல காங்கிரஸ்காரர்கள் எவ்வளவோ கொடுமைகள் செய்தாலும் கடைசியில் பணம் கொடுப்பது மூலம் மக்கள் அந்தக் கொடுமைகளை மறந்துவிடுவார்கள் என்று சொல்லப்பட்டது. பொது மக்கள் அப்படி இப்பொழுது ஏமாந்துவிடுவார்கள் என்ற நினைப்பு வேண்டாம். அந்தக் காலத்து பெண்கள் அப்படி இருந்திருக்க முடியும். ஆனால், இந்தக் காலத்தைக் கொண்டு பார்த்தால் அந்த அளவுக்கு இல்லை என்பதை அவர்கள் உணர வேண்டும். காசு கொடுத்து வோட்டு வாங்கிவிடலாம் என்ற நிலையை மறந்துவிடுங்கள். நீங்கள் அவிழ்த்துவிட்ட பூதம் உங்களையே சாப்பிட்டுவிடும் . . .

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது அந்தக் காலத்து பெண்கள் அப்படி இருந்தார்கள், ஆனால் இந்தக் காலத்துப் பெண்கள் அப்படியில்லை என்று சொன்னார்கள். இந்தக் காலத்துப் பெண்கள் எப்படி இருப்பார்கள் என்று அவருடைய அபிப்பிராயத்தை அறியலாமா?

**புலவர் கா. கோவிந்தன்:** கணவன் கொடுக்கிற பொட்டலத்தையும் வாங்கிக்கொண்டு, பூவையும் சூட்டிக்கொண்டு, கணவன் காலையில் செய்ததை மனதில் வைத்துக்கொண்டு, அவனைத் திருத்தும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது. அந்த அளவுக்கு இந்தக் காலத்துப் பெண்கள் நடந்துகொள்ளுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இங்கே ஒரு கருத்தை மட்டும் கூற விரும்புகிறேன். இந்த நெல் கொள்முதல் திட்டத்தை பற்றி பல முறை இந்த மன்றத்திலே கூறப்பட்டும்கூட, அதிலே அமைச்சர் அவர்கள் கருத்தைச் செலுத்தியதாகத் தெரியவில்லை. நெல் கொள்முதல் திட்டத்தில் மாவட்டத்திற்கு மாவட்டம் முறைகள் வேறுபடுகின்றன. அதுமட்டுமல்லாமல் ஒரே மாவட்டத்தில் ஒரு தாலூகாவுக்கு தாலூகா முறை வேறுபடுகிறது. இம்மாதிரி வேறுபடுவதற்குக் காரணம் என்ன? நெல் அதிகமாக விளைந்திருக்கிற மாவட்டத்தில் அரசாங்கம் நெல் கொள்முதல் வியாபாரிகள் என்று சிலரை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் அல்லாமல் 'ஜெ' லைசென்ஸ்தார் என்றும் சிலரை நியமித்திருக்கிறார்கள். அரசாங்கக் கொள்முதல் வியாபாரிகள் வாங்கிய நெல் தான் அரசாங்கக் கணக்கில் வரும் 'ஜெ' லைசென்ஸ்தார் வாங்குகிற நெல் கணக்கில் வராது. நமது மாகாணத்தில் பற்றாக்குறை இருக்கிற சில ஜில்லாக்களுக்கு அரிசி நெல் கொள்முதல் வியாபாரிகள் மூலம் நெல்லை அனுப்புகிறார்கள். ஒரே மாவட்டத்தில் பற்றாக்குறை இருக்கிற சில தாலூகாக்களில் ஒரு சில வியாபாரி

[புலவர் கா. கோவிந்தன்] [10th March 1966

களை. நியமித்து 'ஜெ' லைசென்ஸ்தாரரிடத்திலே நீங்கள் அரிசி வாங்கிக் கொள்ளுங்கள், நெல் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லிவிடுகிறார்கள். 'ஜெ' லைசென்ஸ்தார் எத்தனை மூட்டைகள் நெல் வாங்கினார்கள் என்பதற்கு கணக்கு இருக்கிறதா என்றால், கணக்கு இல்லை. அவர்கள் வாங்கிய நெல்லை, வாங்கிய அரிசியை உரிய முறையில் விற்றிருக்கிறார்களா என்று கண்காணிப்பதற்கு இப்பொழுது இருக்கிற முறையிலே அமைப்பு இல்லை. அந்தக் காரணத்தினால் அவர்கள் இங்கே வாங்குகிற நெல்லையும் அரசியையும் தங்களுடைய இஷ்டம்போல், தங்கள் விருப்பம் போல் எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்கிறார்கள். அப்படி விற்கின்ற காரணத்தினால் நெல் உரியவர்களுக்குக் கிடைக்காமல் எங்கேயோ செல்லக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இதை அனுசரித்து நெல்லுக்குக் கொடுக்கின்ற விலை நல்ல விலையாக இருப்பதற்கும், நெல்லுக்கு கொடுக்கிற விலை மற்ற துறையிலே சென்று தவறான முறையில் செல்லுவதற்கு வழி இல்லாத வகையிலும், இந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்று என்னுடைய கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். மாதா, பிதா; குரு தெய்வங்கிறேன். வணக்கம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, மா்நிலச் சட்டப் பேரவை. தேர்தல்கள்; மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள்; தலைமையிடப் பணியாளர்கள் ஆகிய மான்யக் கோரிக்கைகளின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஒட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது சட்டசபையின் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கை 206-லிருந்து 234-ஆக 1967-ல் அமைய இருக்கிறது. அதைப் போல மேல்சபை வேண்டுமா, வேண்டாமா என்பது ஒரு புறம் இருக்க, மேல்சபையின் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையும் அந்த அளவுக்கு உயர்த்தப்படவேண்டும். அப்படி உயர்த்தப்படுமா, உயர்த்தப்படாதா என்று சூழ்நிலை தெரியவில்லை. ஆகவே, மேல் சபை அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையை ஒன்பதில் ஒரு பங்கு அதிகப்படுத்தவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அடுத்தபடியாக, ஆசிரியர்களுக்குத் தனித் தொகுதி இருக்குமா, இருக்காதா என்ற பிரச்னை. பாராளுமன்றத்தில் ஆசிரியர்களுக்கு தனித் தொகுதி இருக்கக்கூடாது என்ற எண்ணம் இருப்பதாகவும், அந்தக் கருத்தை ஒட்டியே நம் மாநில ஆட்சியினரும் ஆசிரியர்களுக்கு தனித் தொகுதி தேவையில்லை என்கின்ற கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். மாதா, பிதா; குரு தெய்வம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாதா, பிதாவுக்கு அடுத்தாற்போல் குரு; அதாவது ஆசிரியர் தெய்வமாகக் கருதப்படுகிறார். ஆசிரியர்கள், சமுதாயத்தினருக்கு கண்ணைக் கொடுக்கக்கூடியவர்கள். அவர்களுக்கு தனித்தொகுதி இல்லை என்று சொல்லுவது வருந்தத்தக்க ஒரு நிலையாகும். ஆசிரியர்களுக்கு தனித்தொகுதி இல்லை என்ற நிலை ஏற்படாமல், ஏற்கனவே இருப்பதைப் போலவே



10th March 1966] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

தொடர்ந்து ஆசிரியர்களுக்கு தனித் தொகுதி இருக்க ஆவன செய்யவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல சட்டமன்றத்தில் சென்ற ஆண்டு இதே மான்யக் கோரிக்கை விவாதிக்கப்பட்டபொழுது எடுத்துச் சொல்லப்பட்ட கருத்து ஒன்றை மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர்கள் கேள்விகளுக்குரிய அத்தனை விடைகளையும் தயாராக வைத்துக்கொண்டு, பைலைப் படித்து தயார் செய்துகொண்டு, சட்ட மன்றத்தில் பதில் சொல்லுவதில்லை; மன்ற உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கும் பொழுது, அவைகளுக்கு தனிக் கேள்வி போடவேண்டும், தகவல் என்னிடம் இல்லை என்கிற அளவுக்கு பரவலாக பல கேள்விகளுக்கு அதே பதிலைத் தான் அமைச்சர்கள் சொல்லுகிறார்கள் என்று கூறப்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் கூடுமானவரையில் தகவல் முழுவதையும் வைத்திருக்கிற அளவுக்கு அமைச்சர்கள் நடந்துகொள்ளுவார்கள் என்று உறுதிமொழி தந்தார்கள். அந்த உறுதிமொழி சரிவர நிறைவேற்றப்படவில்லை. அதே சமயத்தில் ஒரு கேள்வி போட்டு, ஓராண்டு, இரண்டு ஆண்டு ஆகியும் கூட, அந்தக் கேள்விக்கு உரிய தகவல்கள் சபை முன்பு வைக்கப்படுவதில்லை, அமைச்சர்கள் அறிவிப்பதில்லை; மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. இம்மாதிரி கால தாமதத்தைப் போக்குவதற்குரிய நடவடிக்கைகளை சபை முதல்வர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல, சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதிக்காக 1964-65-ஆம் ஆண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் விடுதி கட்டியபாடு இல்லை. ஆகவே, பழைய விடுதியிலேயே நால்வர், ஐவராக ஒரே அறையில் இருக்க வேண்டிய நிலைதான் இருக்கிறது. அதிலே ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு, ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு வந்து இருப்பதுபோல அவஸ்தைப் படவேண்டிய நிலைதான் இருக்கிறது. நால்வர் ஐவராக இருப்பது கஷ்டமாக இருப்பதால் வேறு இடங்களுக்குப் போகவேண்டிய அவசியம் இருக்கிறது.

சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு, வாசகசாலை ஒன்று அங்கேயே ஏற்படுத்தித் தரவேண்டும் என்று சென்ற ஆண்டு விவாதத்தின் போதே அங்கத்தினர்கள் யோசனைகள் தெரிவித்தார்கள். அப்பொழுது முதல் அமைச்சர் அந்த யோசனையை, நல்ல யோசனை என்று பாராட்டிவிட்டு, அது உடனடியாக செய்து தரப்படும் என்றும் தெரிவித்தார்கள். ஆனால் ஓராண்டு காலமாகியும், வாசகசாலை ஏற்படுத்தமுடியாத நிலைதான் இருக்கிறது. அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

அமைச்சர்களுக்கு நிறையச் செயலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய வேலைகள் செவ்வனே நடைபெற முடிகிறது. ஆனால் எதிர்த் தரப்பில் இருக்கும் எங்களைப் பொறுத்தவரையில், எங்களை நாங்களேதான் பார்த்துக் கொள்ள

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [10th March 1966

வேண்டியிருக்கிறது. எங்களுடைய சட்ட மன்ற அலுவல்கள் சம்மந்தப்பட்டவரை, எங்கள் பணிகளை செவ்வனே ஆற்ற, ஒரு ஐவரைப் போட்டு; "அபொஸிஷன் பார்டி செக்ரடேரியட்" என்று ஏற்படுத்தினால், நாங்கள் எங்களுடைய லெஜிஸ்லேடிவ் பிஸினஸ் களைக் கவனிக்க உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, தேர்தலைப் பற்றி இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. நகராட்சித் தேர்தல்கள் நடந்து விட்டன. 1952-லே பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஜாபிதாவை வைத்துக்கொண்டு, முனிசிபல் தேர்தல்கள் நடந்தேறிவிட்டன. 1,500 வோட்டர்கள் உள்ள வார்டுக்கும் ஒரு பிரதிநிதி; 500 வோட்டர்கள் இருக்கும் வார்டுக்கும் ஒரு பிரதிநிதி என்ற முறையில் அந்தத் தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன. நடந்தது நடந்துவிட்டது. இனிமேலாவது, நகராட்சி மன்றங்களுக்கு வாக்காளர்கள் சமத்துவமாக இருக்கும் முறையில் வார்டுகள் போடவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1967-ம் ஆண்டுத் தேர்தல் வெகு வேகமாக வர இருக்கிறது. 750 வாக்காளர்களுக்கு ஒரு ஓட்டுச்சாவடி என்று அமைய வேண்டும். இந்த நாட்டிலே கிராமங்களெல்லாம் சிதறிக் கிடக்கின்றன. அங்கெல்லாம் சிறுசிறு கொட்டகைகள் போட்டு வசதிகள் செய்கிறோம். அதே பிரகாரம் மக்களுடைய நலனைக் கருதி, ஒரு மைலுக்கு உட்பட்டு; 300 வாக்காளர்களே இருந்தாலும், அங்கே மையமான இடத்தில் ஓட்டுச் சாவடி அமைக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். ஒரு வாக்காளர் பெயர் பட்டியலிலே விட்டுவிட்டு இருக்கிறது என்றால் தேர்தலுக்கு முன்னாள் வரை கூட; அந்தப் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கலாம் என்று வசதி செய்யவேண்டும். அப்படி விடப் பட்டவர் விண்ணப்பம் போட்டு, தன் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. கே. ஆர். ஆர். எம். கரியமாணிக்கம் அம்பலம்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் கொண்டு வந்திருக்கும்; மானியக் கோரிக்கைகள் மீது கொடுக்கப்பட்டிருக்கும், எதிர்க்கட்சி வெட்டுப்பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

எலெக்ஷனிலே வாக்காளர்கள் வோட்டுச்சாவடிக்குப் போய்ச் சேருவது கஷ்டமாக இருக்கிறது. இதிலே எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் தொல்லை இருக்கிறது. வாக்காளர்களில் சிலருக்கு யார் ஆட்சிக்கு வந்தால் என்ன என்கின்ற நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க கட்டாயமாக வாக்காளர்கள் வோட்டுச்சாவடிக்குச் சென்று வோட்டுப் போடவேண்டும் என்று ஒரு சட்டம் இருந்தால் மிக்க நன்றாக இருக்கும். அப்படி இருந்தால் ஓரளவு தவறுகள் கூட நிவர்த்தியாகச் சாதகமாக இருக்கும். அவர்கள் யாருக்கு வேண்டுமானாலும் வோட்டுப் போட்டுவிட்டுப் போகட்டும். அதைப்



10th March 1966]

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

பற்றி கவலை இல்லை. ஆனால் கட்டாயமாக வோட்டைப் போட வேண்டும். அதற்கான சட்டம் ஒன்று இருக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வோட்டுச்சாவடிகளுக்குச் சென்று வோட்டுப் போடப்போகிறோம். பகல் 12 மணி நேரத்தில் தாய்மார்கள், குழந்தைகளையும் வைத்துக்கொண்டு வோட்டுப் போட நிற்பதைப் பார்க்கிறோம். மிகக் கஷ்டமாக இருக்கிறது. பார்ப்பதற்கு கண்ணராவியாக இருக்கிறது. எங்குமே நிழலே இல்லை. எங்கு பார்த்தாலும் நிழல் இல்லாமல், வெயில் காயும் நிலைதான். அதிலே தாய்மார்கள் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு நிற்பதில், சிலர் மயங்கி விழுந்துவிடக்கூடச் செய்கிறார்கள். ஆகவே ஆங்காங்கு இருக்கின்ற வோட்டுச்சாவடிகளில் தென்னோலையால் காவணம் அமைத்து, வோட்டர்கள் க்யூவில் நின்று வோட்டுப் போட வசதி செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். இதை அவசியம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எலெக்ஷனிலே ஆங்காங்கே ஒரு எலெக்ஷன் ஏஜெண்ட் போடப் பட்டு இருக்கிறது. ஏஜெண்டுகளும், அபேட்சகர்களுமாக எல்லா போலிங் ஸ்டேஷன்களையும் கவனித்துத் தவறுகளை நிவர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட ஜெனரல் ஏஜெண்டுகள் இரண்டு பேர்களைப்போடும் வாய்ப்புக் கொடுத்து, மூன்று பேராகச் சுற்றினால், தவறுகள் எங்கே நடக்கிறது என்று பார்க்க முடியும். ஆகவே, இரண்டு ஜெனரல் ஏஜெண்டுகள் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்பார்வை இழந்தவர்கள் வோட்டுப்போடச் சொல்கிறார்கள். எலெக்ஷன் ஆபீசரிடம் யாருக்கு போடுகிறோம் என்று சொல்கிறார்கள். அந்த வோட்டை எலெக்ஷன் ஆபீசர் ஓட்டருடைய எண்ணத்திற்கு மாறாகவும் போடலாம். அதைத் தவிர்க்க அந்த எலெக்ஷன் ஏஜண்டுகளுடைய முன்பாக, அவர்களுக்குத் தெரியும் படியாக அந்த ஆபீசர் மார்க் பண்ணினால், நல்ல முறை ஏற்படும். இதையும் கவனித்து ஆவனசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எலெக்ஷனிலே அமைச்சர்கள் தலையிடுகிறார்கள். இதனால் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. முன்பெல்லாம் யுத்தம் நடக்கும் போது, நிராயுதபாணிகளை எதிர்க்கக்கூடாது என்கின்ற தர்மம் இருந்தது. இன்றைக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் நிராயுத பாணிகளாக இருக்கிறோம். ஆளும் கட்சியோ ஆயுதபாணிகளாக—பவர் தான் ஆயுதம்—ஆளும் கட்சிக்காரர்கள் அரசாங்கப் பவரை வைத்துக்கொண்டு, ஆயுதபாணிகளாக, நிராயுதபாணிகளாகிய எங்களை எதிர்க்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் நாங்கள் அடிக்கடி அமைச்சர்கள் தேர்தலுக்கு ஆறு மாதத்திற்கு முன்பாக பதவிகளை விட்டு விலகிக் கொள்ளவேண்டும் என்று கூறுவதெல்லாம். ஆறு மாதத்திற்கு முன்பு அமைச்சர்கள் பதவியை விட்டு விலகினால்தான், நியாயமான, தர்மமான எலெக்ஷன் நடக்குமே தவிர, இவர்கள் பதவியில் இருந்துகொண்டு எதிர்க்கட்சிக்காரர்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதானது நியாயமான

[திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம்]

எலெக்ஷன் என்று நாங்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஆகவே, ஆறு மாதத்திற்கு முன்பாக அமைச்சர்கள் தங்கள் பதவிகளை விட்டு விலகிக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பொய் வோட்டுகள், தவறாக வோட்டுகள் போடுவது இருக்கிறது. அதற்கு இப்பொழுது கடுமையான நடவடிக்கை எடுப்பதில்லை. பொய் வோட்டுப் போடுகிறவர்களைக் கண்டுபிடித்துக் கொடுத்தால், கடுமையான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 1967 எலெக்ஷனுக்கு முன்னாலே நடக்கும் காரியங்கள் பயங்கரமாக இருக்கிறது. அதிகாரிகள் திடீர் திடீர் என்று மாற்றப் படுகிறார்கள். நியாயமான அதிகாரிகள் எங்கேயும் நிலைத்து இருக்க முடியவில்லை. ஆளும் கட்சிக்காரர்களுக்கு அனுகூலமாக இருக்கும் அதிகாரிகள் மட்டும்தான் விட்டு வைக்கப்படுகிறார்கள். நியாயமான அதிகாரிகள் இப்பவே மாற்றப் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். முக்கியமாக என்னுடைய பகுதி திருவாடானை தாலுகாவில் அம்மாதிரி நடந்து கொண்டு இருக்கிறது. இந்தமாதிரி பல இடங்களிலேயெல்லாம், அதிகாரிகள் மாற்றப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆளும் கட்சிக்கு அனுலகூமாக இருக்கிறவர்கள் அங்கே போடப்படுகிறார்கள். இதையெல்லாம் தேர்தலுக்காகத்தான் செய்கிறார்களோ என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1·00 a.m. சட்டசபையைப் பொறுத்த வரைக்கும்; தமிழிலேயே எல்லா நடவடிக்கைகளும் இருந்தால், எல்லோருக்கும் தெரிந்து பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அமைச்சர்கள் கேள்விக்கு முதலிலே பதில் சொல்லும்போது கூட, தமிழிலேயே பதில் சொன்னால் எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். தமிழ் படித்தவர்களும் இந்தச் சட்ட மன்றத்தில் இருப்பதனாலே, ஆங்கிலத்தில் பதில் சொல்வது புரிவது இல்லை. ஆகவே, இனிமேலாவது தமிழிலே பதில் சொல்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று நான் அமைச்சர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சட்ட மன்றப் பிரதிநிதிகளுக்காக இப்பொழுது புதிதாக ஒரு கட்டடம் கட்டப்படுகிறது. அதற்கு ஒரு 'மாடல் ரூம்' செய்து வைத்திருக்கிறார்கள். நான் போய்ப் பார்த்தேன். அது 'ரிமாண்டு ரூம்' மாதிரி இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு லாயக்காக இல்லை. பாதி இடத்திலே கக்கூசும் பாத்ரூமும் வந்துவிட்டது. மழை காலத்திலே, பனி காலத்திலே, வெயில் காலத்திலே வெளியே வர முடியாது. காரணம், வராந்தா கூடக் கிடையாது. பின்னாலும் வராந்தா கிடையாது. முன்னாலும் வராந்தா கிடையாது. மழை, பனி இம்மாதிரி நேரத்தில் உள்ளே ஒண்டிக்கொண்டுதான் இருக்கவேண்டும். வசதியாக இல்லை. இப்போதிருப்பதே வசதியாக இருக்கும் போலிருக்கிறது. இப்பொழுது இருக்கும் பழைய ஹாஸ்டல் ரூமில் அதிகமாக ஆட்கள் தங்கத் தொந்தரவாக இருக்கும் என்பதைத் தவிர, வேறு அசௌகரியம் இல்லை. பழைய ஹாஸ்டலில் இருக்கும் சௌகரியம்



[திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம்]

இதிலே வராது. அவ்வளவு சௌகரியம் இதிலே இருக்க முடியாது என்றாலும், உடனடியாக இதைக் கவனிக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் நேரடியாகக் கவனித்து, புதிதாகக் கட்டக்கூடிய ஹாஸ்டலைச் சௌகரியம் உள்ளதாகக் கட்டச் செய்யவேண்டும். ஹாஸ்டல் என்றால், ஏதோ ஹோட்டல் ரூமில் இரண்டு மூன்று நாட்கள் தங்கிப் போவது என்பது அல்ல. பட்ஜெட் செஷன் வந்தால், ஒரு மாதம் தங்கியிருக்கவேண்டிய நிலை இருக்கிறது. இது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இதை மிகவும் கவனிக்கவேண்டும். இதிலே சற்றுத் தாராளத்தைக் காட்ட வேண்டும். இருப்பதைவிட மோசமாக இருந்தால், அது ரொம்ப சிரமமாக இருக்கும். ஹாஸ்டல் வசதி இல்லாததற்காக கட்டப்பட்டால், இதிலே தங்கியிருப்பதைவிட ஊருக்குப் போய்விடலாம் என்று கூடக் கருதி, ஊருக்குப் போகவேண்டிய நிலை கூட சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படும். மெம்பர்கள் ஹாஸ்டலில் வசதியாகத் தங்கியிருக்கவேண்டும் என்பதைக் கருத்திலே கொள்ள வேண்டும். சட்ட மன்ற நடவடிக்கைகளில் சட்ட மன்ற உறுப்பினர்கள் அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்று நினைத்தால், சட்ட மன்ற உறுப்பினர்களுக்காகக் கட்டப்படும் ஹாஸ்டலைக் கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு கட்டிக் கொடுக்கவேண்டும். கக்கூஸ், பாத் ரூம் உள்ளே இருக்கக் கூடாது. பின்னால் ஒரு லைனைப் போட்டு விட்டால் வசதியாக இருக்கும். அதை இப்போதே செய்தால்தான் முடியும். ஓரளவிற்குக் கட்டி விட்ட பிறகு செய்வது என்றால், அது சிரமமாக இருக்கும். முன்னால் வராந்த வேண்டும். வராந்தா இல்லாவிட்டால் அறைக்குள்ளேயே வெயில் அடிக்கும் மிகவும் கஷ்டமாக இருக்கும். எப்படியும் முன்னால் ஒரு வராந்தாவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, அசெம்ப்ளி மெம்பர்களுக்காக பஸ் விட்டிருக்கிறார்கள். மெம்பர்கள் ஊரிலிருந்து சென்னை வருகிறபோது, இரயில்வே ஸ்டேஷனில் திண்டாடவேண்டிய நிலை இருக்கிறது. அசெம்பிளிக் கூட்டம் ஆரம்பிக்கும் தினத்தன்றும் அந்த பஸ்ஸை இரயில்வே ஸ்டேஷனுக்கு ஒவ்வொரு இரயில் வருகிற நேரத்திலும் அனுப்பி வைக்கவேண்டும். இதைப்பற்றி எத்தனையோ தடவை எடுத்துச் சொன்னோம். ஹவுஸ் கமிட்டியிலும் சொன்னோம். அதைச் செய்வதாகச் சொன்னார்கள். இதுவரை செய்யப்படவில்லை. அதைச் செய்து கொடுக்க வேண்டும். அசெம்பிளிக் கூட்டம் முடியும் அன்றைக்கும் இரயில்வே ஸ்டேஷனுக்கு ஹாஸ்டலிலிருந்து ஒவ்வொரு ரயிலுக்கும் பஸ் விடப்படவேண்டும். அதையும் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. கோ. வெங்கட்டராமன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாநில சட்டப் பேரவை, தேர்தல்கள், மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் சம்பந்தமான மானியங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாநில சட்ட மன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்தெடுக்கப் படுகிறார்கள். அவர்கள் மக்களின் பிரதிநிதிகளாகப் பணி புரிகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களுடைய உண்மையான பணி சரியான முறையில் வரையறுக்கப்படாமல் இருப்பதை நான் ஒரு சில உதாரணங்களோடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, நகரப் பகுதியைச் சார்ந்த மாநிலச் சட்டசபை அங்கத்தினர்கள், எப்படி நகரத்தின் பிரதிநிதிகளாகத் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியும் என்பதை ஆராய்ந்து பார்க்கிறபோது, சட்ட மன்றத்திலே நகரத்தினுடைய நிலையைப் பற்றி எடுத்துச் சொல்ல முடியுமே தவிர, நகரத்திலே இயங்கிக்கொண்டிருக்கிற நகர மன்றத்திலே இது சம்பந்தமாக நடக்கின்ற காரியங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இன்றையதினம் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. கிராமப் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற அங்கத்தினர்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் அங்கம் பெறுகிறார்கள்; ஆகவே அவ்வப்போது அந்தத் தொகுதிகளிலே இருக்கும் குறைகளையும் காரியங்களையும் தெரிந்துகொள்ள முடியும்; எப்படி நிறைவேற்றப்படுகின்றன என்பதையும் தெரிந்துகொள்ள முடியும். ஆனால், நகரப் பகுதிகளில் இருக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும், நகரசபைக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. நகரசபையினர் நிறைவேற்றுகிற தீர்மானங்கள், நகரசபையினர் செய்யக்கூடிய காரியங்களை அந்த நகரத்தைச் சார்ந்த சட்டசபை அங்கத்தினர்களும் தெரிந்துகொள்ளுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, சட்ட மன்ற உறுப்பினர்கள் நகரசபையிலே அங்கம் வகிக்கலாமா என்பதைப்பற்றி ஆராய்ந்து பார்க்கப்பட்டு, இதே சர்க்காரில் ஆலோசனையில் முன்பு இது போன்ற ஒரு கருத்து இருந்து, அது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. ஓட்டு போடும் அதிகாரம் இல்லாமல், சட்டசபை அங்கத்தினர்கள் எப்படி இன்றையதினம் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் அங்கம் வகித்துக் கொண்டிருக்கிறார்களோ, அதேபோல், சட்ட மன்ற உறுப்பினர்களும் அவர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற நகர சபையிலே ஓட்டு போடும் அதிகாரம் இல்லாத அங்கத்தினர்களாக இருந்தால், அந்த நகரசபை அதிகாரிகள் செய்கிற காரியங்கள், இருக்கும் திட்டங்கள் எந்த அளவிற்கு நிறைவேற்றப்படுகின்றன, எந்த அளவுக்கு தாமதம் ஏற்படுகிறது. ஆகியவற்றைப்பற்றியெல்லாம் சரியாகத் தெரிந்துகொண்டு இங்கே சர்க்காரிடத்தில் எடுத்துச் சொல்வதற்கும், சட்ட மன்றத்திலே எடுத்து விளக்குவதற்கும் வசதியாக இருக்கும் என்ற காரணத்தினால், இந்த கருத்தை அரசாங்கம் மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சட்டசபை அங்கத்தினர்கள் உண்மையிலேயே ஆட்சி நிர்வாகம் சரியான முறையில் அமைவதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். ஆகவேதான், இந்த அரசாங்க அதிகார நிர்வாகத்திலே ஊழல் இருக்கிறது என்று பரவலாகத் தெரிவிக்கப்படுகிற கருத்தை ஆராயும்போது கூட லஞ்ச ஊழல்களைப்பற்றி சரியான முறையில் ஆலோசிப்பதற்கு ஒரு கமிட்டி அமைத்தார்கள். எனக்கு முன்பு பேசிய நண்பர் திரு. மதியழகன் அவர்கள், 16 குற்றச்சாட்டுக்களை



ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிப் பேசினார்கள். அதற்கு முன்பு அவர்கள் எடுத்துச் சொல்லும்போது, சந்தானம் கமிட்டியினுடைய அறிக்கையை எடுத்துச் சொல்லி, அதைத் தனக்குப் பக்கபலமாக, ஆதாரமாக எடுத்து வைத்துப் பேசினார்கள். சந்தானம் கமிட்டி, லஞ்சத்தை ஒழிப்பதற்கான பல ஆலோசனைகளைத் தந்திருக்கிறது, அதை இந்த அரசாங்கம் ஏற்கத் தவறிவிட்டது என்ற பாணியில் இருந்தது அவருடைய குற்றச்சாட்டு. ஆனால், அடுத்து அவர் பேசுகிறபோது, இந்த சென்னை மாநில சர்க்காரைப் பொறுத்த வரையில், லஞ்ச ஊழலைச் சரியான முறையில் கண்டு பிடிப்பதற்காக விஜிலென்ஸ் கமிஷனர் என்ற ஒரு ஸ்தானத்தை ஏற்படுத்தியிருப்பதைப்பற்றிக் குறை சொன்னார்கள். இதற்கு என்ன காரணம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எப்படியும் நிர்வாகத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஊழல் இருக்க முடியும். அதுவும் இப்பொழுது வியாபாரத் துறையிலும், மற்ற மற்ற துறைகளிலும் எல்லா வகைகளிலும் விரிந்து கிடக்கும் இந்த நிர்வாக அமைப்பில் வெறும் சாதாரண லஞ்ச ஊழல் மட்டுமல்ல, மிகப் பெரிய அளவிலே, லட்சக் கணக்கான, கோடிக் கணக்கான ரூபாய்கள் புழங்குகின்ற இடத்திலே லஞ்ச ஊழல் தலைவிரித்துத் தாண்டவம் ஆடாவிட்டாலும், ஓரளவுக்காவது லஞ்ச ஊழல்கள் இருக்க முடியும். இவைகளைப்பற்றியெல்லாம் மக்களிடமிருந்து, மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து வருகின்ற புகார்களை ஆராய்ந்து, சரியான முறையில் நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் விஜிலன்ஸ் கமிஷனர் என்ற ஸ்தானத்தை உருவாக்கி, அந்த லஞ்ச ஊழலை ஒழிப்பதற்காக வேண்டிய முயற்சியை இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டு வருகிறது. இதைப் புரிந்துகொள்ளத் தவறிய நண்பர் திரு. மதியழகன் அவர்கள், லஞ்சம் ஒழிக்கப்படவேண்டும் என்று ஒரு பக்கம் பேசிவிட்டு, லஞ்ச ஊழலைக் கண்டுபிடிக்க எடுத்துக் கொள்ளுகிற நடவடிக்கைகளைக் குறைத்துப் பேசியிருக்கிறார்கள், பழித்துப் பேசியிருக்கிறார்கள். இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பல குற்றச்சாட்டுகளை அவர்கள் சாட்டினார்கள். பதினாறு குற்றச்சாட்டுகளைக் குறித்து ஆணித்தரமாக அவர் எடுத்துப் பேசுகிற சந்தர்ப்பங்களில், இந்த அரசாங்கம் செய்திருக்கின்ற பல நல்ல காரியங்களை மறைத்துப் பேசிக்கொண்டிருக்கிறார் என்பதைத் தவிர, வேறு விதத்திலே இந்த நேரத்தில் கூற முடியவில்லை. ஏதோ அரசியல் நோயாளிகளுடைய ஆஸ்பத்திரியாக ராஜபவனம் இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன், சட்டசபையிலே பேசுகிறபோது, கவர்னரைப் பற்றியோ அல்லது ராஜபவனத்தைப் பற்றியோ பேசுகிறபோது, தரக் குறைவான வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது என்ற நிலை இருந்தும் கூட, "அரசியல் நோயாளிகளினுடைய ஆஸ்பத்திரி" என்று ராஜபவனத்தைக் குறிப்பிட்டதை நாம் அனுமதிப்பது சரியல்ல; அதைப்பற்றிக் கனம் சபாநாயகர் அவர்கள் ஆலோசித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. கோ. வெங்கட்டராமன்] [10th March 1966

ஒரு மாநிலத்தின் தலைவராக இருப்பவரைக் குறித்துப் பேசுகிற போது, எத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்தலாம் என்பது இல்லாமல், "ராஜ பவனம்" என்று சொல்வது இந்த நாட்டினுடைய, அதுவும் குறிப்பாக இந்த மாநிலத்தினுடைய ஆட்சியின் தலைமைப் பொறுப்பில் இருக்கிற கவர்னரைக் குறிக்கக்கூடியதாக இருக்கிறது. அந்தக் கவர்னர், இந்தச் சட்ட மன்றம் கூடியிருக்கும் சந்தர்ப்பத்திலும் சரி, இந்தச் சட்ட மன்றம் இல்லாதிருக்கும் சந்தர்ப்பங்களிலும் சரி, ஆட்சித் தலைவராகக் கருதப்படுகிறார்கள் அதே போல்தான், அரசியல் அமைப்புச் சட்டப்படி மேல் சபை உருவாக்கப்பட்டிருக்கிறது. கீழ் சட்டசபையும் உருவாக்கப் பட்டிருக்கிறது. கீழ் சட்டசபைப் பிரதிநிதிகள், மேல் சபை உறுப்பினர்கள் இவர்களுக்கென்று உரிமைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இந்த உரிமை கூட சட்ட மன்றத்தின் உள்ளே பேசப்படுகிற கருத்துக்களுக்குத்தான். சட்ட மன்றத்தில் பேசப்படுகிற கருத்துக்கள் அத்தனையும் வெளியில் நின்று பேசிவிடலாம் என்று கனவு கூடக் காண முடியாது. சட்ட மன்ற உறுப்பினராக இருக்கும் இந்த உரிமையை அதிக அளவிற்கு துஷ்பிரயோகம் செய்வது சரியல்ல என்ற கருத்தை, இந்த நேரத்தில் நான் அவருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தேர்தல்களைப் பொறுத்தவரையில் தேர்தல்களுக்கு ஓட்டர் ஜாப்தா சேகரிப்பதிலே, தயாரிப்பதிலே பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேர்தல் நடக்கின்ற தேதிக்கும் ஒருசில நாட்களுக்கும் முன்பு தான் இந்த ஓட்டர்கள் ஜாப்தா தயாரிக்கப்படுகிறது. உயிரோடு இருக்கிற பலபேர்கள் இறந்ததாக விண்ணப்பங்கள் கொடுக்கப் பட்டு அவை சரியாக விசாரிக்கப்படாமலேயே ஓட்டர் ஜாப்தாவில் இருந்துவிடப்பட்டு விடுகின்றன. அந்த ஊரில், அந்தத் தெருவில் இல்லாதவர்கள் பெயர்கள் சேர்க்கப்படுகின்றன. தேர்தலின்போது வாக்காளர்களை அணுகுகின்றபோதுதான், இந்தக் குறைபாடுகள் தெரியவருகின்றன. தேர்தல் வேலையை ஒட்டி அபேட்சகர்கள் வேலை செய்கிறபோது கண்டுபிடிக்கிற இந்தக் குறைபாடுகள் உடனடியாக திருத்தப்படுவதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஜாப்தாவில் சேர்க்கப்படவேண்டிய பெயர்கள், நீக்கப்பட வேண்டிய பெயர்கள்—என்பதற்காக அதிகாரிகள் விண்ணப்பங்கள் கோரிப் பெறுகின்ற நேரத்தில் அவை சரியான முறையில் முன் கூட்டியே விசாரணை செய்யப்படவேண்டும். அவசரம் அவசரமாக 3 நாட்களுக்குள் விசாரணையை முடிப்பதாகச் சொல்லி—ஆயிரக் கணக்கான விண்ணப்பங்கள் வர சரியான முறையில் விசாரணையும் நடப்பதில்லை. நோட்டீஸ் அனுப்பினோம், அவர்கள் வரவில்லை என்பதாகவும் சொல்லி விடப்படுகிறது. வந்தவர்கள் விசாரிக்கப் படாமலும் போகிறார்கள். ஆகவே, இனியாவது குறிப்பிட்ட ஒரு காலவரைக்குள்—தேர்தலுக்கு முன்கூட்டியே சேர்க்கப்பட வேண்டிய, நீக்கப்படவேண்டிய பெயர்கள் சரியான முறையில் விசாரணை செய்யப்பட்டு ஓட்டர் ஜாப்தா நல்ல முறையில் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இதைக் கவனத்தில் வைத்து ஓட்டர் ஜாப்தா தயாரிக்கப்பட



10th March 1966] [திரு. கோ. வெங்கட்டராமன்]

வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கி. இரா. சம்பந்தன்:** கனம் உதவிச் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு விவாதத்தில் இருக்கக் கூடிய மாநிலச் சட்டப் பேரவை, தேர்தல்கள், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ஆகிய மானியங்களின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சபை முன்பு வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய சர்க்காரால் நடத்தப்படுகிற நிர்வாகத்தில் உள்ள சிப்பந்திகளுக்கு சரியான முறையில் வேலை செய்ய முடியாத சூழ்நிலை தேர்தல் நெருங்க நெருங்க ஏற்படுகிறது என்பதைப்பற்றி எதிர்க்கட்சியில் இருக்கக் கூடிய பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். திரு. மதியழகன் சொல்லும்போதுகூட திரு. ராயப்பா அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அனுபவத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் நியாயம் ஏற்படவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். எதிர்க்கட்சி என்றால் எதிர்ப்பதற்காக அமைக்கப்பட்ட கட்சி அல்ல. அவர்களும் இந்த நிர்வாகம் சரியான முறையில் நடப்பதற்கு ஒத்துழைக்கவேண்டும் என்ற உண்மையை எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த முறையில் விற்பனை வரியைப் பொறுத்த வரையில் திரு. கோயங்கா, டி. வி. எஸ்., ஸ்தாபனத்தார் ஆகிய பெரிய தொழிலதிபர்கள் கையாண்ட ஏமாற்று முறைகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்து அரசாங்கத்தின் வருமானத்தையும் அதிகரித்துக் காட்டியுள்ள திரு. ராயப்பா அவர்களுக்கே இந்த நிலைமை என்றால், மற்ற அதிகாரிகள் எப்படி. வேலை செய்வது என்பதைப்பற்றி அவர்களுடைய மனது கவலைப்படக் கூடிய நிலைமை ஏற்படுகிறது.

டி.வி.எஸ். ஸ்தாபனம் நன்றாக இயக்கப்பட்டு வருகிறது என்பதைப் பற்றி நாம் எல்லோருமே ஏற்றுக்கொண்டபோதிலும், அவர்கள் 15 வருஷங்களுக்கு முன்பு கட்டிய பஸ்களையே ஓட்டிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அந்த 40 பஸ்களைவிட 45க்கும் மேற்பட்ட ஸ்பேர் பஸ்களைக் கூட்டம் அதிகமுள்ள நேரங்களில் உபயோகப் படுத்துகிறார்கள் என்கிற பிரச்னை எல்லாம் இன்றைக்கு எழுகின்றன. அந்த மாதிரி குற்றங் குறைகளைக் கண்டு பிடிக்கிற நேரத்தில், அவ்வாறு கண்டு பிடிக்கக் கூடிய அதிகாரிகளை மாற்றுவது என்றால் நியாயம் வழங்காது விடப்படுகிற நிலைமை ஏற்பட்டால் அதற்குக் காரணம் என்ன என்று சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. தேர்தல் நெருங்கிவிட்டது. தொழிலதிபர்களும், வியாபாரிகளும் தேர்தலுக்காகப் பணம் கொடுக்கிறார்கள். அவர்களை எல்லாம் சர்க்கார் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக காரியங்களைச் செய்வதானது அநீதியானதாகும் என்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

சட்டசபை அங்கத்தினர்கள் குறிப்பிடும் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும். அவர்கள் ஒரு கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்றாலும், அந்தத் தொகுதியில் உள்ள எல்லா மக்களுடைய நலனுக்காவும் செயல்படவேண்டியவர்களாக இருக்

கிறார்கள். ஆகவே அவர்களுடைய தொகுதியைப் பற்றி அவர்கள் குறிப்பிடும் விஷயங்களைச் செய்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அமைச்சர்களைப் பார்ப்பதற்கு சட்டசபை உறுப்பினர்கள் அவர்களுடைய அறைக்குப் போகும்போது க்யூ வரிசையில் நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் தான் ஏற்படுகிறது. தொகுதி சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் சட்டமன்றத்தில் எடுத்துசொல்ல நேரம் இல்லை. இதற்காக தொகுதியில் இருந்து அடிக்கடி வருவது என்பதும் இயலாததாக இருக்கிறது. ஆகவே மன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களைப் பார்க்கப் போகும்போது—அமைச்சர்களுடைய பொன்னான நேரத்தை அவர்கள் வீணடிக்க வரவில்லை மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல வருவதால் இரண்டு மணி, மூன்று மணி என்று காக்க வைக்காமல் உடனடியாக டிஸ்போசல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மைசூர் சட்டசபை உறுப்பினர்களுக்கு விடுதியில் வாடகை வாங்கப்படுவதில்லை. அதுபோலவே நம்முடைய உறுப்பினர்கள் விடுதியைப் பொறுத்தவரையில் அங்கத்தினர்களிடமிருந்து வாடகை வாங்காத ஒரு நிலையை ஏற்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அரசாங்க நிர்வாகம் ஒழுங்காக நடைபெற உதவி செய்யவேண்டியிருக்கிறது. மக்களுடைய பிரச்சினைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, இங்கு நடக்கும் விவாதங்களிலே பணிபுரிய வேண்டியதாக இருக்கிறது. ஆகவே அவர்கள் வந்து தங்கக் கூடிய அறைகளுக்காக என்று அரசாங்கம் வாடகை வாங்குவதை நிறுத்தவேண்டும். அவர்கள் வந்து தங்க வேண்டியது முக்கியமாக இருக்கிறது. கொசு உபத்திரவம் இருக்கிறது என்றாலும் அவர்களிடம் ரூ. 2½ வாடகையும் வாங்குவதில் பயனில்லை. அங்கத்தினர்களுக்கு 2½ ரூபாய் என்றால் கெஸ்ட்களுக்கு 3 ரூபாய். உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் வாடகை இல்லாமல் இருக்கக் கூடிய நிலைமை ஏற்படுத்த வேண்டும்.

ஏற்கெனவே பார்லிமெண்டு அங்கத்தினர்களுக்குக் கொடுப்பது போல சட்டசபை அங்கத்தினர்களுக்கும் சில்வர்பாஸ் கொடுக்க வேண்டுமென்று இங்கே கேட்டோம். ரயில்வே மத்திய நிர்வாகத்தில் இருப்பதால் அவர்கள் செய்ய முடியும். நமக்கு அப்படிச் செய்ய வசதி இல்லை என்பதாக 1952-57-ஆம் வருட காலத்திலேயே கூறப்பட்டது. இன்றைக்கு நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் எல்லா இடங்களுக்கும் சர்க்கார் பஸ் போக்குவரத்து இருக்கிறது. ஆகவே இந்த பஸ்களிலாவது அவர்கள் பிரயாணம் செய்ய சில்வர் பாஸ் போன்ற பாஸ் வசதியை உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். அங்கத்தினர்கள் இன்றைக்கு தம்முடைய தொகுதியில் பல இடங்களுக்குப் போகவேண்டி இருக்கிறது. தம்முடைய க்டமைகளை அவர்கள் சரிவர இயற்ற இந்த வசதி ஏற்படுத்தித்தர வேண்டும்.

அடுத்து, தேர்தலைப் பற்றிச் சொல்லும்போது பாதுகாப்புச் சட்டத்தை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்த முயற்சி செய்யக்



கூடாது. கையைக் கட்டி விட்டுச் சண்டைக்கு வா என்றால் என்ன செய்ய முடியும்? தேர்தல் சமயத்தில் தான் கட்சிகள் தங்கள் கருத்துக்களை எடுத்து மக்கள் முன் வைக்க முடியும். தங்கள் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்ற அபேட்சகர்களும் மக்களும் சுதந்திரமாகவிடப்படவேண்டும். ஜனநாயக அமைப்பிலே இந்தச் சுதந்திரத்தைக் கூட கொடுக்காது பாதுகாப்புச் சட்டத்தை வைத்திருப்போம் என்றால், இதை ஜனநாயக சர்க்கார் என்று எப்படி ஒப்புக்கொள்வது என்கிற என் அபிப்பிராயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தேர்தல் காலத்திலே அமைச்சர்கள் பதவியிலேயே இருந்து கொண்டு தேர்தலை நடத்துவதும் சரியல்ல. ஒரு தேர்தல் கூட்டத்திற்கு அமைச்சர் வருகிறார் என்றால் அதிகாரிகள் எல்லாம் பின்னே வருகிறார்கள். எத்தனையோ ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் தங்கள் பிரச்சினை அமைச்சர் சொல்கிற நபருக்கு வோட்டளித்தால் இந்த அதிகாரிகள் எல்லாம் தீர்த்துவிடுவார்கள் என்பதுபோன்ற ஒரு எண்ணம் மக்களிடத்தில் ஏற்படத்தான் இது வாய்ப்பு அளிக்கிறது. இது ஜனநாயகத்திற்கு முரணானது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். தேர்தலுக்கு சிலமாதங்களுக்கு முன்பாகவே கவர்னரிடத்தில் ஆட்சியை ஒப்படைத்து விடலாம். கேரள சர்க்காரைக் கவர்னர் ஆட்சி செய்து வரவில்லையா? அதேமாதிரியாக ஆறு மாதங்கள் கூடவேண்டாம், 2 அல்லது 3 மாதங்களுக்காவது கவர்னர் இடத்திலே சர்க்காருடைய பொறுப்பை விட்டுவிட்டு தேர்தலில் குதிப்பார்களானால், அது உண்மையிலேயே ஜனநாயக முறையிலே நடைபெற்ற தேர்தலாக அமையும் என்று சொல்லலாம். அடுத்தபடியாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியனிலே சட்ட சபை உறுப்பினர்கள் பிரதிநிதிகளாக இருந்தபோதிலும், அவர்கள் அங்கே டம்மியாக இருக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அவர்கள் தீர்மானம் கொண்டு போகமுடியாது. கொண்டு போனால் நிராகரிக்கிறார்கள். அதேமாதிரி எங்கள் பகுதியில் நான் காங்கிரஸ் எம்.எல்.ஏ.-ஆக இருந்த பொழுதே நிராகரித்துவிட்டார் பஞ்சாயத்து யூனியன் தலைவர். இப்படி இருந்தால் சட்டசபை பிரதி நிதிகள் எப்படித் தங்களுடைய வேலையைச் செய்யமுடியும். பஞ்சாயத்து யூனியன் தலைவரை மெம்பர்களே தேர்ந்தெடுக்கின்ற நடைமுறையைவிட்டுவிட்டு, எல்லோருமே பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற முறையை—முன்பிருந்த முறையை—வைத்தால்தான் ஜனநாயகம் நல்ல முறையில் நீடிக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்காமலே இருக்கும்பொழுது, கருணையோடு எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நான் தங்களுக்கு மிகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் காரியாலய நிர்வாகம், அமைச்சர்கள் பற்றிய இதுபோன்ற பல மானியங்களுக்கு இன்று இந்தக் கோரிக்

[திருமதி டி. என். அனந்தநாயகி] [10th March 1966

கைகள் சபையின் முன்னே வைக்கப்படுகின்றன. சட்டசபை அங்கத்தினர்களுக்கு எல்லாம் இன்னும் சலுகைகள் தேவை என்பதை எப்பொழுதுமே சொல்லிக்கொண்டே இருக்கிறோம். குறிப்பாக, மேல்நாடுகளில் எல்லாம் சட்டசபை அங்கத்தினர்களுக்குப் பலவசதிகளைச் செய்து தருகிறார்கள் செகரட்டேரியட்டில் அவர்களுக்குத் தனியாக இடம் தருகிறார்கள். ஷார்ட்ஹாண்ட் டைப்பிஸ்ட் எல்லாம் அவர்களுக்குத் தருகிறார்கள். ஆனால், இங்கே நமக்கு அந்த வசதிகள் எல்லாம் கிடையாது. இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் வந்து தங்குவதற்கு அந்தமாதிரி வசதிகளையெல்லாம் செய்துகொடுத்தால் நல்லது. லாபியிலே தான் இப்பொழுது உட்கார்ந்துகொள்கிறோம். வசதியாக செகரட்டேரியேட்டிலேயே ஒரு தனி அறை மாதிரி செய்து கொடுத்தால் அது வசதியாக இருக்கும். அது அவசியம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உணவு விடுதியிலே இடம் மிக நெருக்கடியாக இருக்கிறது. 1 மணியிலிருந்து 2 மணி வரை உட்கார்ந்து சாப்பிடுவதற்கு இடம் கிடையாது. அதிக விசாலமான ஒரு விடுதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எம்.எல்.ஏ.-க்கள் உட்கார்ந்து சாப்பிடுகின்றபொழுது வெளியிலிருந்து வருகிறவர்கள் எல்லாம் உட்காரக்கூட இடம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த லேடீஸ் ரூம் இருக்கிறது. அது அசெம்பிளி செஷன் டைமிலேதான் சுத்தமாக வைக்கப்படுகிறது. வருஷத்திலே 365 நாட்களும் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருக்கின்ற என்னைப் போன்ற நகரத்துப் பிரதிநிதிகளுக்கு எல்லாம் செஷன் இல்லாத நேரங்களில் வரும்பொழுது அந்த லேடீஸ் ரூம் சாவியைக் கண்டு பிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. சாவியை வைத்துக்கொண்டு எங்கோ ஒரு ஆள் சுற்றப்போய்விடுகிறார். சாவியைக் கண்டு பிடிப்பதற்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, வந்த உடனே சாவி கிடைக்கக்கூடிய வகையில் அந்தச் சாவியை பப்ளிக் டிபார்ட்மெண்டில் கொடுக்காமல் லெஜிஸ்லேச்சர் டிபார்ட்மெண்டிலேயே கொடுத்துவிட்டால், வருகின்ற பெண் பிரதிநிதிகள் உடனே வந்துதங்குவதற்கு வசதி ஏற்படும். அந்த ரூமைச் சுத்தம் செய்வது செஷனுக்கு செஷன் தான். தீபாவளிக்குத் தீபாவளி எண்ணெய் தேய்த்துக் குளிப்பதுமாதிரி, இந்த அறையை செஷனுக்கு செஷன் தான் சுத்தம் செய்கிறார்கள். அடிக்கடி சுத்தம் செய்வது கிடையாது. இடையில் வந்தால் ஒரே தூசியாக இருக்கும். ஆகவே அதையும் அடிக்கடி கூட்டியும் வந்த நேரத்தில் சாவி கிடைக்குமாறு செய்வது வசதியாக இருக்கும்.

எம்.எல்.ஏ.-க்களுடைய மற்றைய வேலைகளையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அரசாங்கத்தினுடைய பல நிகழ்ச்சிகளில் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பது கிடையாது. எங்கள் தொகுதியிலே ஒரு நல்ல காரியம் நடக்கும்பொழுது, ஒரு பாலம் திறக்கப்படுகிறது, ஒரு காலேஜ் திறக்கப்படுகிறது என்றால் அதிலே கலந்து



10th March 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

கொள்வதற்கு எம்.எல்.ஏ.-க்களுக்கு வாய்ப்புத் தரப்படுவதில்லை. மக்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் சில நேரங்களில் நாங்களே முயற்சியெடுத்துத்தான் பல காரியங்களைச் செய்கிறோம், அப்படிப்பட்டவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படுவதில்லை. ஏதோ 1000-ல் ஒருவர் மாதிரியே எங்களையும் அழைத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர, அந்தகைய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பை அதிகாரிகள் தருவதில்லை. அது மாபெரும் தவறு. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், மிகவும் கஷ்டப்பட்டு முதலமைச்சர் அவர்களிடம் வாதாடி வாதாடி, ஒரு பெண்கள் கல்லூரியை பெற்றோம். அந்தக் கல்லூரியின் திறப்பு விழாவிலே கலந்துகொள்வதற்கு லோக்கல் எம்.எல்.ஏ.-க்கள் யாருக்கும் வாய்ப்புத்தரப்படவில்லை. மாலையிலே விழா என்றால் காலையிலேதான் அழைப்பு வருகிறது. இதெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களைத் துச்சமாக கருதுகிறார்களோ என்று நினைக்கத்தான் தோன்றுகிறது. நாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு மக்களுக்கு ஏதோ நல்லதைச் செய்யவேண்டும் என்று முயற்சியெடுக்கின்ற நேரத்தில் எம்.எல்.ஏ.-க்களுக்கு எல்லாம் வாய்ப்புத் தருவது மிகவும் அவசியம். ஆகவே அந்த வாய்ப்பை அதிகாரிகள் தருவதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியின் கையிலே இருந்துகொண்டிருக்கின்ற கார்ப்பரேஷனிலே எல்லா வேலைகளையும் அவர்கள்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடம், வீடு, தண்ணீர் வசதி, விளக்கு வசதி எல்லாவற்றிற்கும் அவர்கள் தான் நேரடியாகச் சென்று பங்குகொள்கிறார்கள். எங்களுக்குப் பங்குகொள்ள வாய்ப்புத் தருவதில்லை. அங்கே எங்களுக்கு ஓட்டுரிமை வேண்டுமென்று சொல்லவில்லை. அங்கே பங்குகொள்ளக்கூடிய வாய்ப்பை மட்டும் தந்தால் போதும் என்று கடந்த 5, 6 வருஷங்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஒயிட் பேப்பர் வருவதற்கு முன்பு கொடுக்கவில்லை, இப்பொழுது ஒயிட் பேப்பர் வந்தபிறகும்கூட கொடுக்கவில்லை. ஆகவே, இந்த நகரத்தைப் பொறுத்தவரையில் நகரத்தின் பிரதிநிதிகளுக்கு வாய்ப்புத்தர வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கக் கடனை வாங்கித்தான் கார்ப்பரேஷன் நடத்தப்படுகிறது. தானே நடந்து கொண்டு வருகிறது என்று சொல்ல முடியாது. அங்கே வேலைபார்க்கிற சிப்பந்திகளுக்குக் கூட அரசாங்கக் கடன் வாங்கித்தான் கொடுக்கிறார்கள். ஆனால் எதற்காகக் கடன் வாங்குகிறார்களோ அதற்காகச் செலவழிக்காமல் வேறு நிர்வாகச் செலவுகளுக்கு அவை செலவழிக்கப்படுகின்றன. ஆறு பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கம் கடன் கொடுத்தது. கொடுத்து ஆறு வருஷங்கள் ஆகியும்கூட இன்னும் அந்தக் காரியத்திற்காக அந்தப் பணம் செலவழிக்கப்படவில்லை; அரசாங்கம்தான் பணம் கொடுப்பதில் தாமதப்படுத்துகிறது என்று மேல்சபையில் ஒரு அங்கத்தினர் சொன்னாராம். அரசாங்கம் கொடுத்த கடனை வாங்கிக்கொண்டு ஆறு வருஷங்களாக குறட்டை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைப்போன்ற வாங்கிய லோன்கள்

*எல்லாம் சரியாகச் செலவழிக்கப்படுகின்றனவா என்று பார்ப்பதற்காகவாவது எங்களுக்கு எல்லாம் பிரதிநிதித்துவம் அங்கே கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் நகராண்மைக் கழகத்திலே பல்வேறு பிரதிநிதிகளுக்கு இடம் அளிக்க முன்வருவார்களேயானால் சென்னை நகரப் பிரதிநிதிகள் எல்லோரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களாக இருப்போம் என்பதைச் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.*

*திரு. கோ. நாராயணசாமி நாயுடு : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சட்டசபை அமைப்பு மானியத்தை ஆதரித்து நானும் ஒரு சில வார்த்தைகளைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். சட்டசபை அங்கத்தினர்களுக்கு அதிகமான உரிமைகளைக் கொடுக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி நண்பர்கள் மட்டுமல்ல, இந்தப் பகுதியிலே உள்ளவர்களும் சொன்னார்கள். வேறு ஒரு நண்பர் சொன்னார், பணம் கொடுத்து மாத்திரம் 1967-ல் வோட்டு வாங்கிவிடலாம் என்ற கனவை மாத்திரம் விட்டுவிடுங்கள் என்று சொன்னார். பணம் கொடுத்தது அவர்கள்தான் என்பதைப் பின்னாலேயே அவர்கள் பணம் கொடுக்கும்பொழுது, ஜனங்கள் மத்தியிலே மறைக்க வேண்டுமென்பதற்காக, அவர்கள், பணம் கொடுத்து நீங்கள் வோட்டு வாங்கிவிடலாம் என்று நினைக்காதீர்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு வோட்டு போடுகிறவர்கள் அவர்கள் கொடுக்கும் பணத்திற்காக அல்லாது அவர்கள் செய்த சேவைக்காகப் போடுகிறார்கள் என்ற எண்ணத்தை எழுப்பி*
11 30 a.m. *விடலாம் என்ற கனவின் கீழேதான் அவர்கள் அந்த வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகையால் நானும் சில யோசனைகளைச் சொல்லுகிறேன். நேர்மையான முறையில் தேர்தலை நடத்துவதில் ஆட்சேபணை கிடையாது. நேர்மை தப்பி, எங்கெங்கோ செத்தவர்களை எல்லாம் படம் போட்டுக் காண்பித்து, ஜனங்களைக் குழப்படி செய்து, அந்தக் குழப்பத்தில் தங்களுக்கு ஒரு ஆதிக்கம் வர வேண்டுமென்ற நினைப்பு பொல்லாத நினைப்பு. அந்த மாதிரி எதுவும் நாங்கள் செய்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. ஓட்டர்களிடத்திலிருந்து பணம் வாங்கிக் கொண்டுதான் அவர்களிடத்திலிருந்து ஓட்டையும் வாங்குகிறோம். பணம் கொடுத்து ஓட்டு வாங்கும்படியான நிலைமையில் பெரும்பகுதி ஆட்கள் இருக்க மாட்டார்கள், அப்படி ஏதாவது சந்தேகம் இருக்குமானால், அவர்கள் செய்ததை முன்கூட்டியே சொல்கிறார்களோ, 'நீங்களும் கொஞ்சம் பணத்தைச் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லுகிறார்களோ என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. எப்படி இருந்தாலும் அடுத்த தேர்தலில் என்னென்ன செய்யப் போகிறார்கள், என்னென்ன சொல்லப் போகிறார்கள், எண்ணங்கள் எப்படி இருக்கும் என்பதையெல்லாம் இந்தப் பத்து நாட்களாகச் சொல்லி வருகிறார்கள். மந்திரிகள் படி இந்த ஐந்து வருஷ காலத்தில் எவ்வளவு வாங்கினார்கள் என்பதைக் கூட்டிக் காட்டிச் சொல்லும்போது அடுத்த வேளை சாப்பாட்டுக்கு இல்லாதவன் 'ஏ! ஆத்தே! இவ்வளவு பணத்தை வீணாக்கி விட்டார்களா?' என்று நினைக்கும்படி செய்யலாம். நம்முடைய நண்பர்கள் அரசியல்*



*வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு முன்பு என்ன நிலைமையில் இருந்தார்கள், அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டதற்குப் பிறகு இன்று எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று கணக்குப் பார்த்தால் நம் தரப்பில் அந்த மாதிரி ஆட்கள் அதிகமாக இல்லை. காங்கிரஸ்காரர்கள் பணத்தைக் கொடுத்து வாங்குவதாகச் சொன்னதன் காரணமாகத்தான் இந்தப் பதிலைச் சொல்ல வேண்டி நேரிட்டது.*

*சட்டசபையைப் பொறுத்தவரை எனக்கு முன்பு பேசிய மெம்பர் அவர்கள் கூறியது அவ்வளவையும் நான் ஆமோதிக்கிறேன். மந்திரிகளிடத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் சுலபமாகச் சென்று வருகிறார்கள். எதிர்க்கட்சி என்றால் பயமாக இருப்பதால் பியூன் கூட அவர்களை உள்ளே விட்டு விடுகிறான். ஆனால் நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரை 'சீப்' ஆன சமாசாரமாகத்தான் கருதப்படுகிறது. மந்திரிகளைப் பார்ப்பது மாத்திரமல்ல ; நாங்கள் சொல்கிற விஷயத்தைக் கேட்பதெல்லாம் கூடக் கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருக்கிறது. நம் ஆள் தானே என்று நினைக்கிறார்கள். நம் வீட்டுக்கே விரோதி வந்தால் கறிகாய்கள் எல்லாம் வாங்கி விசேஷமாகச் சமைத்து அவனை வரவேற்போம். அவன் வைது கொண்டே போவான். ஆனால் வீட்டிலேயே இருப்பவனுக்கு விசேஷ சமையல் கிடையாது. அந்த மாதிரி மந்திரிகள் எதிர்க்கட்சிக்காரர்களை நடத்துவது போல் கூட நம் கட்சிக்காரர்களை நடத்துவதில்லை என்று நினைக்கிறேன்.*

*இருபது நாட்களுக்கு முன்பு என்னுடைய தொகுதிலே, பி.டி.ஓ.க்கள், யூனியன் சேர்மன், ஆர்.டி.ஓ., மீர் இருக்கிற சிப்பந்திகள் எல்லோரும் சேர்ந்தார்கள். இரண்டு, மூன்று ஜீப்புகளை எடுத்துக் கொண்டார்கள் ; நோட்டீஸ் போட்டார்கள்—'மாயவரம் ரேஞ்சிலுள்ள எல்லாச் சேரிகளையும் பார்வையிடப் போகிறோம் ; என்னென்ன குறைகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் ஆர்.டி.ஓ.-விடம் தெரிவிக்கலாம்' என்று சொன்னார்கள். எல்லோரும் ஊர்வலமாகச் சென்று ஒவ்வொரு கிராமத்தையும் பார்த்தார்கள். பதினெட்டு கிராமங்களில் அன்று நான்கு கிராமங்களைப் பார்த்தார்கள். எதன் கீழ் அவர்கள் இப்படிச் செய்தார்கள் என்று புரியவில்லை. புரியாதது மாத்திரமல்ல ; தொகுதி எம்.எல்.ஏ-யைக் கலந்து கொள்ள வேண்டாமா, அவருக்கு அழைப்பு அனுப்ப வேண்டாமா என்பதைப் பற்றியும் புரிந்து கொள்ள முடியவில்லை. இதையெல்லாம் எப்படி நடத்துகிறார்கள் என்ற விஷயம் விசித்திரமாக இருக்கிறது. இந்த மாதிரி நிலைமை இருக்கக்கூடாது. மந்திரிகள் இதிலே விசேஷ கனம் செலுத்தி, எப்படிச் செய்தார்கள், யார் அனுமதியின் பேரில் செய்தார்கள், என் தொகுதி எம்.எல்.ஏ-யை அதிலே ஈடுபடுத்திக் கொள்ளவில்லை என்பதைப் பற்றியெல்லாம் விசாரிக்கவேண்டும்.*

*இன்றைக்கு சட்டசபை உறுப்பினர்களுக்காக இருக்கக்கூடிய ஹாஸ்டலில் ஒரு இடத்தில் கூட, என்னைப் போல் தெம்பு குறைந்தவர்களால் தாழ்ப்பாளைப்போட முடியாது. பிரமாதமாக வஸ்தாது வந்தால்தான் அந்தத் தாழ்ப்பாள்களைப் போட்டுத் திறக்க முடியும்.*

*[திரு. கோ. நாராயணசாமி நாயுடு]* [10th March 1966

பாத்ரூம்களில் ஓட்டைகள். பாத் ரூமுக்குச் செல்லும்போது டெடிமேடு கடுதாசிகளை எடுத்துக்கொண்டுதான் போகவேண்டும். அதை யார் என்னுடன் வந்தாலும் காண்பிக்கிறேன். அப்போதைக்கப்போது கடுதாசிகளை ஒட்டிக்கொள்கிறோம். அந்த ஹாஸ்டல் பொறுப்பை ஏற்றுக்கொள்பவர்கள் அதைப் பார்க்கவேண்டும். ரெவின்யூ மினிஸ்டர் அவர்கள் சென்ற தடவை இரண்டு மாடல் ரூம்களைக் காண்பித்து நன்றாக இருக்கிறதா என்று கேட்டார்கள். அப்போது மாடல் ரூம்களைக் காண்பித்தார்களே தவிர அதில் இருந்த படுதாக்கள் மற்றவற்றையெல்லாம் பிறகு கழட்டிக் கொண்டு போய் விட்டார்கள். இப்போது ஒன்றையும் காணோம். இந்த அறைகளில் இருக்கும்போது டிடென்ஷனில் இருந்த நிலைமை ஞாபகத்திற்கு வந்து விடுகிறது. டிடென்ஷனில் இருந்ததை விட இப்போது சிறப்பாக இருப்பது பூட்டு ஒன்றுதான். வேறு எல்லாம் கட்டில், மெத்தை உறை, தலையணை, போர்வை, யோப்பை எல்லாமே சர்வமும் அதுதான். இதைத்தான் நான் ரெவின்யூ அமைச்சர் அவர்களிடம் 'டிடென்ஷன் காம்ப்' மாதிரி இருக்கிறது என்று சொன்னேன். டிடென்ஷன் காம்பில் இருக்கும்போது ஊருக்குப் போனால் தேவலை என்று தோன்றும். அது போன்ற 'ஹோம் சிக் உணர்வு இப்போது ஏற்பட்டுவிடுகிறது. பழைய டிடென்ஷன் காம்பில் இருந்தவர்களுக்கு அந்த ஞாபகம் வருகிறது. எவ்வளவோ செலவாகிறது. இன்னும் கொஞ்சம் செலவை அதிகப்படுத்தினாலும் வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். 'விசிறி மட்டை இருந்தால் போதும், ஃபான் வேண்டியதில்லை ; வீட்டிற்குப் போனால் ஃபான் வேண்டுமென்று கேட்கிறோம்' என்று நினைக்கலாம். ஆனால் இன்றைக்கு இருப்பவர்கள் நாளைக்கு இருப்பதில்லை. ஐம்பது வருஷம் கழித்து இருக்கக் கூடிய நாகரிகத்திற்கு ஏற்ற முறையில் பார்த்துத்தான் செலவு செய்யவேண்டுமே தவிர, இன்றைய நிலைமையை மாத்திரம் வைத்துச் செய்வது சரியல்ல. வருகின்ற நாகரித்திற்கு என்னென்று அமைப்புகள் இருக்க வேண்டுமோ அதையெல்லாம் முன்கூட்டியே சிந்தித்துக் காரியங்களைச் செய்து முடிக்கவேண்டும்.

ஜனநாயகத்தில், இன்னொரு விபரீதத்தையும் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் ஊரில் ஒரு மில் இருக்கிறது. அதிலே ஷேர் போட்டிருக்கிறோம். பத்து லட்சம் ரூபாய்க்குக் கொஞ்சம் குறைவாக இருக்கும். அதற்கு ஒரு திறப்பு விழா வைத்தார்கள். திறப்பு விழா நடத்தப் போகிறோம் என்று எங்களிடத்தில் சொல்லவில்லை. முதல் மந்திரியும், தொழில் மந்திரியும் வந்தார்கள் அதிலே, வரவேற்புக் கொடுக்கிறவர்கள் அதிகாரிகள், வாழ்த்துக் கூறுகிறவர்கள் அதிகாரிகள் என்று எல்லாம் அவர்களாகத்தான் இருந்தார்களே தவிர, பொது ஜனங்களின் பிரதிநிதி என்ற முறையில் என் போன்றவர்களுக்கு என்ன பெருமையைக் கொடுத்திருக்கிறார்கள் ? இன்னொன்று, என்னுடைய பகுதியிலே ஒரு தொழிற்சாலை கட்டியிருக்கிறார்கள். அதிலே, புகைந்து கொண்டிருந்தது. புகைந்து கொண்டிருப்பது என்ன என்று தொழிலமைச்சர் அவர்களைக்



10th March 1966] *[திரு. கோ. நாராயணசாமி நாயுடு]*

கேட்டேன். நம்முடைய சர்க்காரில் இருந்து ஒரு தொழிற்சாலை வைத்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்குத் திறப்பு விழாக் கூடப் பண்ண மறந்துவிட்டோம் என்று சொன்னார்கள். பிறகு அதற்கு ஒரு திறப்பு விழா ஏற்பாடு செய்து அதிலே மந்திரியவர்கள் பேசும்போது, 'இங்கே புகைப் போக்கியிலிருந்து புகை போகிறதே, அது என்ன ?' என்று நாயுடு அவர்கள் கேட்டார்கள், அதன் பிறகுதான் அதற்குத் திறப்பு விழாவே நடத்தவில்லை என்பது தெரிந்து திறப்பு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது" என்று சொன்னார்கள். ஆனால் அந்தத் திறப்பு விழாவிலும் என்னைக் கூப்பிட்டு ஒரு வந்தனம் சொல் என்று கூடச் சொல்லவில்லை. சட்டசபை பிரதிநிதிகளாகிய எங்களுக்கு, எங்களுடைய தொகுதியிலே ஆரம்பிக்கப்படுகிற தொழிற்சாலைகளைப் பற்றிய விஷயங்களைக் கூடத் தெரிவிப்பதில்லை. அந்த மில் இன்று நன்றாக நடக்கிறதா என்றால் இல்லை. நஷ்டத்திற்கு நடந்து கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு 2,500 ரூபாய் நஷ்டம். நஷ்டத்தைக் குறைத்து லாபகரமாக நடத்தக்கூடாதா ?

சட்டசபை பிரதிநிதிகள் நகரத்தில் இருந்தால், அவர்களுக்கும் நகரத்திற்கும் சம்பந்தமே இருப்பதில்லை. 62 சதவிகிதம் ஓட்டு வாங்கியிருக்கிறோம். எனக்கு ஒரு பிரதிநிதித்துவம் இல்லை. சிமெண்ட் கொடுப்பது, மற்ற பர்மிட்கள் கொடுப்பது ஆகிய கமிட்டிகளில் எல்லாம் எம்.எல்.ஏ-க்களையும் சேர்த்துப் போட்டால் அந்தப் பொருள்கள் எல்லாம் எங்கே போகிறது என்று பார்த்துக் கொள்ள முடியும். எம்.எல்.ஏ மாத்திரம் யோக்கியமா என்று கேட்டால், ஓட்டு வாங்க மக்களிடம் செல்லவேண்டியிருப்பதால் ஓரளவு கண்காணிப்பாக இருக்க முடியும். யுத்த காலத்தில் சிமெண்ட், மற்ற கண்டிரோல் பொருள்களை விநியோகிக்க கமிட்டி போட்டதன் காரணமாக சரியான முறையில் விநியோகம் நடந்தது. பொது ஜனப் பிரதிநிதியை கமிட்டியில் போட்டால் பொருள்கள் உண்மையான ஆளுக்குப் போகிறதா அல்லது ஆர்.டி.ஓ.-வுக்கு வேண்டிய ஆளுக்குப் போகிறதா, மேலதிகாரிகளுக்கு வேண்டியவர்களுக்குப் போகிறதா என்றெல்லாம் கண்காணிக்கலாம். அந்த மாதிரி உரிமைகள் இன்றைய தினம் இந்தப் பக்கத்தில் இருக்கும் யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. தேர்தலில் நிற்கும்போது இன்னின்ன சாதித்திருக்கிறோம் என்று சொல்லவேண்டும். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் வெறும் குற்றச்சாட்டை மட்டும் சொல்லிவிட்டால் போதுமானது. நாம் ஆட்சிபீடத்தில் இருக்கும் காரணத்தால் சில காரியங்களைச் செய்து தீர வேண்டிய பொறுப்பிலும் கடமையிலும் இருக்கிறோம். சட்டசபை பிரதிநிதிகளையும் கலந்து கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அதிகாரிகளை அறிவுறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. செ. மாதவன் :* கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த மான்யத்திலே, குறிப்பாக சட்டமன்ற அங்கத்தினர்களுடைய பணிகளைப் பற்றி நம்முடைய மன்றமும், நம் அரசாங்கமும் ஒரு

சரியான திட்டவட்டமான கொள்கையை வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ‘கோட் ஆஃப் காண்டக்ட் ஃபார் லெஜிஸ்லேட்டார்ஸ்’ என்ற கருத்தை மத்திய அரசாங்கம் வலியுறுத்தியிருக்கிறது. சந்தானம் கமிட்டியும் இதற்கு பரிந்துரை தந்திருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூட இன்னொரு மன்றத்தில் அந்தக் கருத்தை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு விதிகள் அமைத்து அல்லது எல்லா கட்சிகளும் கூடி கொள்கை வகுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் கடமைகள், அவர்களது உரிமைகள் பற்றி ஒரு ஏற்பாடு செய்தால் அது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கீழே நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய ஊழல்கள், தவறுகள் இவற்றை அதிகாரிகள் செய்தாலும் அல்லது பிறர் செய்தாலும் அதை எடுத்துக் காட்டக்கூடிய ஒரு வாய்ப்பு சட்டமன்ற அங்கத்தினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்புகளை எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்பதற்கு சரியான வழிமுறைகளை வகுத்துத் தரவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், மக்களை அணுகக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும் போது, அது அரசாங்கம் ஏற்படுத்துகிற நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, பொறுப்புக்கள் கொடுக்க வேண்டுமென்ற கருத்து இங்குள்ள உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசு இதை நன்றாக உணர்ந்து இதற்கான பல அறிக்கைகளை அதிகாரிகளுக்கு அனுப்புகிறார்கள். பாராளுமன்ற அங்கத்தினர்களை மதிக்கக்கூடிய அளவிற்கு நம் மாநில அரசாங்கம் சட்டமன்ற அங்கத்தினர்களை கவனிக்கிறதில்லை என்பதுதான் எல்லோரும் சொன்ன குற்றச்சாட்டாகும். இந்தக் குற்றச்சாட்டை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றத்திலே கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் முதன் மந்திரியாக இருந்தபோது இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டு அவர்கள் அதிகாரிகள் அத்தனை பேர்களுக்கும் ஒரு சர்குலர் அனுப்பித்தார். எப்படி அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வது, சட்டமன்ற உறுப்பினர்களோடு எப்படி தொடர்பு கொள்வது என்பதற்கு இலக்கணம் வகுக்க முற்பட்டார்கள். கடிதங்களுக்கு பதில் அனுப்ப வேண்டுமா, பொதுமக்கள் பிரதிநிதிகள் கொடுக்கக் கூடிய ரெப்ரசென்டேஷன்ஸ் எந்த அளவிற்கு பரிசீலிக்கப்படவேண்டும் என்பதை விளக்கி ஒரு சர்குலர் அனுப்பித்தார்கள். இன்று நாம் மத்திய அரசாங்க அலுவலங்களுக்கு எழுதக்கூடிய புகார்களுக்கு, கடிதங்களுக்கு உடனடியாக பதில்கள் வருகின்றன. ஆனால் நம் மாநில அரசாங்கத்திற்கு அனுப்பக் கூடிய கடிதங்களுக்கு சர்க்கார் அளவில் எதாவது வந்தாலும் கீழே நிர்வாகத்தில் இதைப் பற்றி கவனிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதைப் பார்க்கிறோம். ஏற்கனவே இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட ஒரு உத்தரவைப் போட்டிருந்தும் அதை நிறைவேற்றாததற்குக் காரணம் என்ன என்பதைப் பரிசீலிக்க வேண்டும். நாங்கள் அதிகாரிகளைச் சந்தித்து தகவல்கள் சேகரிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அவர்களைச் சந்தித்து சில விவரங்கள் வாங்கவேண்டிய நிலை ஏற்படு



கிறது. உதாரணமாக, ஐந்தாண்டுத் திட்டப்படி போடப்பட்டிருக்கிற திட்டங்கள் திட்டப்படி செயல்படுகின்றனவா, அப்படி செயல்படுத்தப்படாவிட்டால் காரணம் என்ன, ஃபைல் எப்படியிருக்கிறது என்று கேட்டால் அதைப்பற்றிச் சொன்னால் ‘அஃபிஷியல் சீக்ரட்ஸ் ஆக்ட்’-ன் கீழ் அதுவரும் என்று அதிகாரிகள் பயப்படுகிறார்கள். திட்டப்படி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டனவா என்று சொல்வதற்குக் கூடவா பயம்? ஆகவே எந்தெந்தச் செய்திகளைப்பற்றி நாங்கள் கேட்கலாம், எந்தெந்த செய்திகளை அதிகாரிகள் சொல்லலாம் என்பதைப்பற்றியெல்லாம் விதிமுறைகள் ஏற்படவேண்டும் என்று சந்தானம் கமிட்டி சிபாரிசு செய்துள்ளது. அதை நம் அரசாங்கம் பரிசீலிக்க உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிப்பட்டதொரு சூழ்நிலை ஏற்பட்டால்தான் சட்டமன்ற அங்கத்தினர்கள் தங்கள் பணிகளை செவ்விய முறையில் ஆற்றுவதற்கு வழி ஏற்படும்.

தமிழக அரசாங்கம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அவர்களுடைய பிரதிநிதித்துவத்தையும் சேர்க்கக் கூடிய அரசாங்கமாக அமைய வேண்டும். அத்தனை தமிழர்களோடும் தொடர்பு கொள்ளவேண்டும். தமிழர்கள் எந்த நாட்டில் வாழக்கூடியவர்களாக இருந்தாலும் அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் நலனைப் பாதுகாக்க இந்த அரசாங்கம் குறிப்பாக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற என் கருத்தை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். நம் முதல் அமைச்சர் அவர்கள் அண்மையில் மலேஷியாவிற்கு சுற்றுப்பிரயாணம் செல்ல இருக்கிறார்கள். கோலாலம்பூரில் நடக்கக்கூடிய தமிழ் விழாவில் பங்கு ஏற்கிற வகையில் தமிழ்நாட்டிலிருந்து செல்லும் குழுவிற்கு தலைமை ஏற்றுச் செல்கிறார்கள். அது ஒரு அரிய வாய்ப்பாகும். அதைக்கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன், அதற்காக என் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழர்களுடைய பிரதிநிதி என்ற முறையில் தமிழ் பண்பாட்டை எங்கெங்கு காக்க முடியுமோ அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வது பற்றி அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். இலங்கையானாலும் சரி, பர்மாவானாலும் சரி, மலேஷியாவானாலும் சரி தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளுக்கு நம் தமிழக அமைச்சர்கள் சென்று அந்த மக்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் குறைகளைப் பரிசீலிக்க வேண்டும். வெளிநாடுகளில் வாழக்கூடிய தமிழ் மக்கள் நம் நாட்டிற்கு அடிக்கடி வருகிறார்கள். போக்குவரத்து கஷ்டங்களை தீர்க்க, அவற்றை மத்திய அரசாங்க சட்டங்கள்தான் கட்டுப்படுத்த முடியும். ஆனால் மாநில அரசாங்கத்திற்கு அதில் அதிகாரம் இல்லாவிட்டாலும் மாநில அரசாங்கம் யோசனைகள் கூறுவதற்கும் கஷ்டங்களை எடுத்துக் கூறுவதற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை விட மாநில அரசாங்கம் அதிக வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இந்த வாய்ப்பை நம் அரசாங்கம் பயன்படுத்த தவறுகிறது என்பதுதான் என் தாழ்மையான குற்றச்சாட்டு. காரணம் என்ன என்பதை பரிசீலிக்க வேண்டும். இன்று சுங்க இலாகாவில் உள்ள சட்டங்களில் உள்ள குறைகள், ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்

வொரு விதமான சட்டம் மேற்கொள்ளப்படுகிறது, இவற்றையெல்லாம் பரிசீலிக்கவேண்டும். இவற்றை மலேஷியாவிற்கு எடுத்துச் செல்வார்கள் என்று நம்புகிறேன். மலேஷியா செல்லும்போது எதிர்க்கட்சி என்று பாராமல் எதிர்க்கட்சிகளுக்கும் வாய்ப்பு கொடுக்கக்கூடிய நல்ல கொள்கையையும் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சட்டமன்ற அங்கத்தினர்கள் அப்படி தனியாக செல்லவேண்டுமென்று கருதினால் இந்த அரசாங்கத்திடம் முதலில் கருத்து கேட்கிறார்கள். முதலில் மனு போடவேண்டியிருக்கிறது. அந்த மனுக்கள் பரிசீலிக்கப்படுகிறபோது நம் அரசாங்கம் எந்த கருத்தைச் சொல்கிறது என்பதை புரிந்துகொள்ளமுடியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு சில சமயங்களில் அனுமதி மறுக்கப்படுகிறது. முதல் அமைச்சர் அவர்கள் உணருவார்கள், அனுபவத்தில் பார்ப்பார்கள் என்று நம்புகிறேன். அங்கு மலேஷியா காங்கிரஸ் என்றிருக்கிறது. அக்கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறது. எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி அங்குள்ள தமிழர்கள் யார் இங்கிருந்து சென்றாலும் தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில்தான் வரவேற்கிறார்கள் என்பதை என் அனுபவதில் கண்டேன். முதல் அமைச்சர் அவர்களும் அதைக் காண்பார்கள். அதே அனுபவம் எதிர்கட்சி அங்கத்தினர்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது, அந்தப் பெருமை அவர்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்று அவர்கள் கருத மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். நடைமுறையில் நம் அரசாங்கம் சில கருத்துக்களைச் சொல்லும்போது குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கு எதிரான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகிறது என்பதை வருத்தத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல் போக்குவரத்திலுள்ள கஷ்டங்களையும், உணர வேண்டும். அதைத் தீர்ப்பதற்கு தமிழர்களின் பிரதிநிதி என்ற முறையில் நம் மாநில அரசாங்கம் போராட வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். இலங்கை செல்வதற்கு இராமேஸ்வரம் பக்கத்தில் தனுஷ்கோடியில் ஒரு வாய்ப்பு இருந்தது. புயலால் அது பாதிக்கப்பட்டுவிட்டது. பாதிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும் வசதி செய்யப்படாத நிலையில்தான் அது இன்று வரையில் இருந்தது. சமீபத்தில் மண்டபத்தில் அதற்கு ஒரு ஏற்பாடு செய்வதாக தகவல் வந்திருக்கிறது. அதற்கு மத்திய அரசாங்கம் தயக்கம் காட்டினாலும் நம் மாநில அரசாங்கம் இதுபற்றி மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தவேண்டும். அப்படி வற்புறுத்தினால்தான் இப்படிப்பட்ட வசதிகள் பெருக வாய்ப்பு ஏற்படும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மத்திய சர்க்காரிடம் முன்பே விட்டார்கள். 10, 15 தினங்களுக்கு முன் ஒரு கடிதம் வந்தது.

கூறினேன். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு ஏற்பாடு செய்து இராமேஸ்வரம்—தலைமன்னருக்கு போக்குவரத்து—கப்பல் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது. நீங்கள் அதை முதலில் போய்த் தொடங்கி வைக்கவேண்டுமென்றுகூட வந்திருக்கிறது.





**திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் அவர்களின் முயற்சிக்கு நன்றி. இலங்கை செல்பவர்களுக்கு இது ஆறுதலாக இருக்கும். வெளிநாடுகளில் இருந்து வரக்கூடிய தமிழர் சமுதாயத்தைச் சேர்ந்த அகதிகளுக்கு, மற்ற பகுதிகளில், வட பகுதியில்இருந்து அகதிகளாக வரக்கூடியவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்யப்படுகின்றனவோ அந்த முயற்சிகள், அந்த அனுதாப உணர்வு அகதிகளாக வரக்கூடிய தமிழர்களுக்கு இல்லை. பர்மா, இலங்கை அகதிகளுக்கு மத்திய அரசாங்கம் போதிய ஆதரவு தர தவறுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தரப்பட்டிருக்கிற நிதி போதுமானதாகயில்லை. போதிய அதிகாரிகள் இல்லை என்று அவர்கள் சொல்லலாம். உண்மை அதுவல்ல. ஆனால் பொருளாதார பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிற காரணத்தினால்தான் பர்மா, இலங்கை போன்றயிடங்களில் இருந்து வந்துள்ள அகதிகளுக்கு குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்திருப்பவர்களுக்கு போதிய வசதி செய்யப்படாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் சுற்றுப்பயணத்தைப் பற்றி பல அங்கத்தினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதில் கட்சி சார்பற்ற ஒரு நிலை ஏற்படுத்தவேண்டும். அப்போதுதான் அமைச்சர்களுடைய சுற்றுப்பயணத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படும். எப்போதுமே சட்டமன்ற உறுப்பினர்கள் என்று வரும்போது, அவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியினராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு தகுந்த மரியாதை கொடுக்கவேண்டும். ஆனால் நடைமுறையில் எதிர்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பல நேரங்களில் புறக்கணிக்கப்படுகின்றார்கள். அவர்களுடைய கௌரவத்திற்கே குறைவு ஏற்படும் வகையில் அனேக இடங்களில் வேண்டுமென்றே அவமதிக்கப்படுகின்றார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும் அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்யும்போது, தேர்தல் நிதி சேகரிக்கிறார்கள், அமைச்சர்கள் என்ற முறையில் தான் செல்லுகின்றார்கள், அவ்விதம் போவதால் பலவிதமான தவறுகள் ஏற்படுகின்றன. ஆகவே அமைச்சர் என்ற முறையில் போக வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். கட்சித் தலைவர் என்ற முறையில், போகும்போதுகூட அதிகாரிகள் கூட செல்லுகின்றார்கள், இதன் காரணமாக தவறுகள் ஏற்பட ஏதுவாகிறது. இந்த நிலை இருப்பதால் அமைச்சர் மீதுள்ள நம்பிக்கை போய்விடும். ஆகவே இதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டைரக்டர் ஆஃப் விஜிலென்ஸ் போடப்பட்டது பற்றி இங்கு பேசப்பட்டது. 'ஆம்புட்ஸ்மென்' என்ற அமைப்பு இங்கு ஏற்படுத்தவேண்டும் என்று நாங்கள் எடுத்துச் சொன்னோம். மத்திய சர்க்கார் விஜிலென்ஸ் கமிஷன் போதும் என்று முடிவு எடுத்தது. அந்த நேரத்தில் நமது அமைச்சர் அவர்கள் இங்கு ஆன்டி-கரப்ஷன் டிப்பார்ட்மென்ட் என்று வைக்கவேண்டிய தேவையில்லை, இதற்கென்று ஒரு தனி அதிகாரியைப் போட்டால் போதும்

என்று சொன்னார்கள். பின்னால் இது கமிஷன் என்ற முறையில் அமைத்து, அதற்கு ஒரு தனி நபரே போதும் என்ற அளவில் ஒருவரை போட்டிருக்கிறார்கள். அவ்விதம் போடப்பட்டிருப்பது யார்? அவ்விதம் எதற்காக அவரைப் போட்டார்கள். இப்போது விஜிலென்ஸ் கமிஷனர் என்ற முறையில் இருந்து கொண்டிருக்கும் இந்த அதிகாரியை முன்பு ஒரு தடவை என்.ஜி.ஓ.-க்கள் சந்தித்தார்கள். என்.ஜி.ஓ.-க்களுடைய குறைகளைப்பற்றி அவர்களிடத்தில் தெரிவித்தபோது, அந்த அதிகாரி, உங்களைப்போன்றவர்கள் சென்னையிலும் மற்றும் சில இடங்களிலும் எதிர்கட்சிகளுக்கு ஆதரவு அளித்திருக்கிறீர்களே, அப்படியிருக்கும்போது, எப்படி இந்த சர்க்கார் நன்மை செய்யும் என்று பொறுப்புள்ள ஒரு அதிகாரி—என்.ஜி.ஓ.-க்கள் தலைவர்களிடத்தில் கேட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒருவரை, ரிட்டயரான ஒருவரை இந்த பதவிக்கு நியமிப்பது பொருத்தமாக இருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்த்து, கிட்டத்தட்ட 12 லட்சம், 13 லட்சம் செலவு செய்யக்கூடிய இந்த இலாகாவுக்கு ஒரு நீதிபதியை போட வேண்டும் என்று பல முறை எடுத்துக்கூறியிருக்கிறோம்—அந்த வகையில் ஒரு நீதிபதியை இந்த இலாகாவுக்கு நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மான்யக் கோரிக்கையை நான் ஆதரிக்கின்றேன். முக்கியமாக, அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்வதைப்பற்றி, நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நாடாளும் மன்னர்கள் நாட்டை நல்ல முறையில் ஆள்வதற்கு நடுநிசியில் யாருக்கும் தெரியாமல் மாறுவேடம் பூண்டு செல்வார்கள் என்பது அந்தக் காலத்தில் இருந்ததாக, பார்த்திருக்கிறோம். அந்தக் காலம் ஜனநாயகம் இல்லாத காலம். நாட்டு மக்கள் தங்கள் குறைகளை அச்சமில்லாமல் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தது அந்தக் காலத்தில்; ஆனால் இந்தக் காலம் அப்படியல்ல. ஜனநாயகத்தில் அடிப்படையில் நாமெல்லாம் சட்டமன்றத்திற்கு வந்திருக்கின்றோம். நாட்டிலுள்ள மக்கள் தங்கள் உரிமைகள் என்ன என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஜனநாயகத்தின் பேரால் சட்டமன்றத்திற்கு வந்து, மந்திரிகளைப் பார்த்து, கல்லுப் பிள்ளையார் மாதிரி இருக்கிறார்—கனம் ராமையா அவர்கள்—என்று மந்திரியை பார்த்து பேசுவதும், அவர் ஒரு இட்டிலி அல்ல, 10 இட்டிலி சாப்பிடுவார்—என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகின்ற அளவுக்கு உரிமை பெற்று இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் நாட்டை ஆளுகின்ற மன்னர்கள், நாட்டைப்பற்றி ஒன்றும் தெரியாமல் கிணற்றுத் தவளைகளாக கோட்டையில் மட்டும் உட்கார்ந்திருந்து கொண்டு வெறும் ஃபைல் புழுக்களாகவும், பூச்சிகளாகவும் இராமல் நாட்டு மக்களுடைய கஷ்டங்கள் என்ன, அவர்களுடைய குறைகள் என்னென்ன என்பதை நேரில் கண்டறிவதற்காக அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்கின்றார்கள். உதாரணமாக, எங்களூரில் கனம் அமைச்சர்





திரு. பக்தவத்சலம் அவர்கள் பெயரால் ஒரு குடியிருப்பு வைத்திருக்கிறோம். அதன் பக்கத்தில் புறம்போக்கு இடங்கள் இருக்கின்றன. அவற்றை கொடுக்கவேண்டும் என்று அங்கு திரு. காசி அவர்கள் மாவட்ட கலெக்டராக இருந்த போது கேட்டிருந்தோம். இந்த இடத்தில் ஏற்படுகின்ற சிக்கல்களை அமைச்சர் அவர்கள் நேராக வந்து பார்த்து முடிவு எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதன் காரணமாக அந்த இடத்திலிருக்கின்ற மக்களும் வளமான வாழ்க்கையை நடத்தக்கூடிய வாய்ப்பு கிடைக்கின்றது. ஆகவே அமைச்சர் அவர்களின் சுற்றுப்பயணம் மிகவும் அவசியம். ஏதோ கனம் அமைச்சர் திரு. மன்றாடியார் அவர்கள் செய்த சுற்றுப்பயணத்தில் 53 மணி நேரம் என்ன செய்தார் என்றெல்லாம் திரு. மதியழகன் அவர்கள் கேட்டார்கள். அமைச்சர் என்றால் அவருக்கும் உடல், உயிர் என்றெல்லாம் இருக்கிறது, அவர்களுக்கும் சுகம், என்று இருக்கிறது. அவர்களும் ரெஸ்ட் எடுக்கவேண்டும், அப்படியிருக்கும்போது, இத்தனை மணி நேரம் அவர்கள் சும்மா இருக்கலாமா, இத்தனை மணி நேரம் அவர்கள் வேலை செய்ய வேண்டுமே என்றெல்லாம் அமைச்சர்களை கட்டுப்படுத்த முடியுமா என்பதை என் போன்றவர்கள் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம். ஆகவே, இம்மாதிரி ஆங்காங்கு அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப் பயணம் அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொலிட்டிக்கல் கரப்ஷனைப்பற்றி சொன்னார்கள், காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு எதிராக நின்றவர்களுக்கு—அதாவது திருமதி விஜயலட்சுமி, திரு. ராதாகிருஷ்ணன் போன்றவர்களுக்கு உத்தியோகம் கொடுத்திருக்கிறார்கள் என்று உதாரணத்திற்காக எடுத்துக் கூறினார்கள். இவ்விதம் காங்கிரஸ்-க்கு இடைஞ்சலாக இருக்கின்றவர்களுக்கு உத்தியோகம் கொடுத்து விடுகின்றார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இவர்கள் யாரும் காங்கிரஸ்-க்கு இடைஞ்சலாக இல்லை, நாங்கள் உங்களிடத்தில் வந்து சேவை செய்கின்றோம் என்று வருகின்றார்கள். அப்படி வரும்போது—அவ்விதம் சேவை செய்யவேண்டும் என்ற மனப்பான்மையோடு அரசாங்கத்தினிடம் வரும்போது, அவர்களுக்கு பதவி கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது என்பதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதை பொலிட்டிக்கல் கரப்ஷன் என்று சொல்ல முடியாது. அதற்கு மாறாக, காங்கிரஸ் அரசாங்கத்தினுடைய பொலிட்டிக்கல் ஸ்செய்ட்ஃபார்வர்ட்னஸ்-ஸையும் 'ஹானஸ்டி'-யையும்தான் எடுத்துக்காட்டுகிறது.

அடுத்தபடியாக, காங்கிரஸ் பெயரால் இன்றைக்கு பதவிக்கு வந்திருக்கின்றவர்கள் விதவைக்கோலம் பூண்டிருக்கிறார்கள் என்றும், எங்களுடைய மனதை புண்படுத்துகின்ற வகையில் ஆளும் கட்சிக்காரர்கள் பேசிவருவதால் தான் நாங்களும் புண்படுத்துகின்ற வகையில் குத்திப் பேச வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்றும் சொன்னார்கள். ஆனால் இப்போது சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், யார் எந்த தாப்பிலிருந்து குத்துகின்றார்கள், இந்த தாப்பிலிருந்து அங்கே உள்ளவர்களை குத்துகின்றார்களா, அல்லது அங்கேயுள்ளவர்கள் இந்த தாப்பிலுள்ள

வர்களை குத்துகின்றார்களா என்பதை இந்த மன்றத்திலுள்ளவர்கள் அறிவார்கள். அந்த முறையில் குத்திப்பேசுகின்ற முறையில்தான் இன்றைய தினம் திரு. மதியழகன் அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ்காரர்கள் விதவைக் கோலத்தில் இருக்கிறார்கள் என்று. யார் விதவைகள், எங்கே இருக்கிறார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். அப்படியானால் இன்று மேல்சபையிலும், ராஜ்ய சபையிலும் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து பதவிகளில் இருப்பவர்கள் எல்லாம் விதவைகளா அல்லது அவர்களெல்லாம் நித்திய சுமங்கலிகளா, அல்லது நித்திய கல்யாணிகளா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்து, எம்.எல்.ஏ-க்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கார் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருந்தோம், எம்.பி. களுக்கு கார் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு ரயில்வே பாஸ்-ம் கொடுக்கப்படுகிறது. ரயில்வே மத்திய சர்க்கார் பொறுப்பில் இருக்கிறது, ஆகவே நமக்கு ரயில்வே பாஸ் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், நம்முடைய சக்திக்கு தகுந்தவாறு கார் வைத்துக்கொள்ளலாம். ஸ்டேட்-க்கு அலாட்மென்ட் கிடைப்பதில் எம்.எல்.ஏ.-க்களுக்கு என்று தனியாக ஏன் கொடுக்கக்கூடாது? எம்.எல்.ஏ.-க்களுக்கு கார் இருக்குமானால் அவர்கள் தங்கள் தொகுதிகளில் ஒழுங்கான முறையில் வேலை செய்ய முடியும். ஆகவே, எம்.எல்.ஏ.-க்களுக்கு கார் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, செக்ரட்டேரியேட்டில் வேலைசெய்கின்ற பெண்மணிகளில் அநேகம் பேர்கள் தாய்மார்களாக இருக்கிறார்கள். அவர்கள் மாலை 5½ மணி வரை வேலைசெய்கின்றார்கள். இப்படி வேலைசெய்கின்றவர்களுக்கு வீட்டில் குழந்தைகள் இருந்தால், அவர்களை தங்கள் தாய்மார்களிடத்திலோ அல்லது மாமியார்களிடத்திலோ விட்டு விட்டு வரவேண்டும். காலையில் குழந்தைகளை விட்டுவிட்டு மாலை ஐந்தரை மணிக்கு இங்கு வேலை செய்கின்ற தாய்மார்கள் வீட்டுக்குப் போகும்போது மாமியார்களின் முகம் எப்படியிருக்கும் என்பதைச் சொல்லவேண்டிய தேவையில்லை. ஆகையால், இங்கேயே ஒரு இடத்தில் 'க்ரிஷ்' ஏற்படுத்திக்கொடுத்தால் நலமாக இருக்கும். அரசாங்கம் தொழிற்சாலைகளில் இப்படிப்பட்ட 'க்ரிஷ்' ஏற்படுத்தவேண்டும் என்று சொல்லி வருகிறது. இந்த 'க்ரிஷ்' சில் குழந்தைகளை கொடுத்துவிட்டால் அங்கு அவர்களுக்கு பாலூட்டி, தாலாட்டி பார்த்துக்கொள்வார்கள்—தொழிற்சாலைகளில் எல்லாம் இப்படிப்பட்ட 'க்ரிஷ்' ஏற்படுத்தவேண்டும் என்று வற்புறுத்துகின்ற நேரத்தில், அரசாங்க செக்ரட்டேரியட்டிலும் ஒரு அழகான கட்டடத்தில் வசதியாக இந்த 'க்ரிஷ்'-ஐ அமைத்துக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

மந்திரிகள் சொந்தக்காரர்களுக்கு சலுகை காண்பிக்கின்றார்கள் என்று சொல்லப்பட்டது. மந்திரிகளின் சொந்தக்காரர்கள் தகுதியுள்ளவர்களாக இருந்தால் அதற்காக உத்தியோகத்திற்கு





வரக்கூடாது என்று எந்த நியதியும் கிடையாது. இன்றைக்கு விஜிலன்ஸ் கமிஷனராக இருக்கக்கூடிய திரு. வர்கீஸ் அவர்களும், டெப்புடி செக்ரட்டரி அவர்களும் மந்திரியின் சொந்தக்காரர்களா என்று கேட்க விரும்புகிறேன். மந்திரிகளின் சொந்தக்காரர்கள் என்பதற்காக யாரையும் தள்ளி வைக்க முடியாது. எல்லோருக்கும் கிடைக்கின்ற வாய்ப்பும் வசதியும் அவர்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மான்யங்களை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் :** கனம் சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, இன்று மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்றம், தேர்தல், அமைச்சர்கள், அவர்களுடைய தொடர்புடைய இலாகாவினர் ஆகியவைகளை மேற்கொண்டிருக்கின்ற மான்யக் கோரிக்கையை வரவேற்கின்றேன். சட்டமன்றம் என்று கூறும்போது, இந்த சட்ட மன்றம் ஒரு சிறப்பான சட்டமன்றம். எந்த நாட்டு வரலாற்றிலும் காண இயலாதவாறு அகத்தியன், தொல்காப்பியன், கீரன் முதலிய 12-00 noon
பெரும் புலவர்களை தலைவர்களாக கொண்டு மன்றம் நடாத்திய தமிழகத்தின் தனிப் பெரும் சட்டமன்றம் இது. ஆதலினாலே இந்தச் சட்ட மன்றத்தினுடைய நடவடிக்கைகள் மிகவும் பண்பான ஒரு முறையிலே, நாகரிகமான ஒரு முறையிலே அமைந்திருக்கின்றன என்று சொன்னால் அது இந்தத் தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்பையொட்டி வந்த பெரிய நிலை ஆகும். இதை யாவரும் வரவேற்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

சாதாரணமாக ஒரு மன்றத்திலே இரண்டு விதமான துர் நிலைகள் ஏற்படுகின்றன என்று வரையறுத்துக் கூறப்பட்டிருக்கின்றது.

'அவை அஞ்சி மெய் விதிப்பார் கல்வியும் கல்லார்
அவை அஞ்சா ஆகுலச் சொல்லும்'.

என்ற இரண்டு விதமான நடக்கக் கூடாத நிலைமைகள் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது. ஒன்று 'அவை அஞ்சி மெய் விதிர்ப்பார் கல்வி'—சபையிலே பேசுவதற்குக் கூச்சம் கொண்டு, தான் வைத்திருக்கின்ற, மனத்திலே கொண்டிருக்கின்ற பெரிய கருத்துக்களை எடுத்து விளக்கிக் கூறும்போது ஒரு கூச்சம் ஏற்பட்டு, கூற இயலாமை—இது ஒரு குற்றம். அடுத்த குற்றம் 'அவை அஞ்சா ஆகுலச் சொல்லும்' என்பது, படித்து நல்ல கருத்துக்களை மனத்திலே உட்கொள்ளாமல், ஏதோ பேசுவது, அதை அழகாகப் பேசுவது, அந்த ஆற்றல் பெற்றிருப்பது—ஆனால் கருத்து இருக்காது—என்பது. ஆகவே, இவ்விரண்டும் ஒரு சபையிலே அதிலும் குறிப்பாக தமிழகச் சட்ட மன்றத்திலே நடக்கக் கூடாத, நடக்காத இரண்டு கூடாத செய்கைகளாக அமையும் என்று முன்னமேயே வரையறுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

சாதாரணமாக சட்டமன்றம் என்று சொன்னால், பல அங்கங்கள் முக்கியமான அங்கங்கள், அதற்கு உண்டு. ஒன்று சபாநாயகர். அடுத்தது ஆளும் கணத்தார்கள் (குறுக்கீடு) அது திருக்குறளில்

வருகிறது. அடுத்தது எதிர் கணத்தார்கள். இவைகள் எல்லாம் மிக முக்கியமான அங்கங்களாக விளங்குகின்றன. நம் சட்ட மன்றத்திலே இருக்கின்ற ஆளும் கட்சி என்று சொல்லக் கூடிய பெரிய கட்சி இமய மலை முதல் குமரி முனை வரையிலும், மேல் கடல் முதல் கீழ் கடல் வரையிலும் பரந்து கிடக்கின்ற பாரத நாட்டை ஆளுகின்ற பெரிய கட்சியாக காங்கிரசாக அமைந்திருக்கிறது. நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டதும், காந்தி அடிகள் தலைவராக இருந்து வழி நடாத்திச் சென்றதும், மறைந்த மாணிக்கம் நேருஜி அவர்கள் வழி காட்டியாக இருந்ததுமான கட்சியாகிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக அமைந்திருப்பது ஆளும் கட்சியாகும் அடுத்தபடியாக சொல்லவேண்டுமானால், எதிர்க்கட்சி என்று இருக்கிற நிலையிலே, சுதந்திராக் கட்சியின் சார்பாக வீற்றிருக்கிற பெரியவர், அவர்கள் எல்லோராலும் மதிக்கப்படுகிற பெரியவர். நம் தாய் மொழியாகிய தமிழை ஐயம், திரிபு மயக்கம் என்ற மூன்று குற்றங்கள் நீங்க நன்றாகக் கற்றுணர்ந்த பெரியார். அது மட்டுமல்ல. நாட்டு விடுதலையில் பங்கு கொண்டு பணியாற்றிய பெரியவர். அவர்கள் ஒரு கட்சியின் தலைவராக வீற்றிருந்து பணியாற்றுகின்றார். அடுத்து வருவது எதிர்க்கட்சியிலே பெரும்பான்மை நிலையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம். அந்த திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியானது எனக்கு மிகவும் பொறுப்பான கட்சி, தனிப்பட்ட முறையிலே. காரணம் என்ன என்றால் என்னுடைய ஊர் ஈரோடு தான் அதற்குத் தோற்றுவாயாக அமைந்திருக்கிறது. இப்போது அந்தக் கட்சியில் இருந்து பணியாற்றிக்கொண்டிருக்கிற பல அறிஞர்கள், புலவர்கள் என்று கூடச் சொல்லுவேன், அவர்களெல்லாம் ஈரோடிலே உருவானவர்கள், பெரியாரிடத்திலிருந்து உருவானவர்கள் தான். இருந்தாலும் கூட குருவுக்கும் மிஞ்சிய சிஷ்யர்களாக இயங்குகிறார்கள். நாங்கள் திருந்தி விட்டாலும் கூட அவர்கள் திருந்த மாட்டோம் என்ற நிலையில் பணியாற்றுகிறார்கள். அது தான் எனக்கு அவர்கள் பேரில் உள்ள வருத்தம், குறை. இருந்தாலும் கூட, எதிர்க்கட்சி என்று சொல்லக் கூடிய ஒன்று, சீதை சொன்னது போல்—

அடுக்கும், ஈது அடாது ஆன்ற எதுவோடு
அறிவுகாட்டி இடிக்குனர் இல்லை
உள்ளார் எண்ணியது எண்ணி ஒன்னை
முடிக்குனர் என்றபோது
முடிவன்றி முடிவது உண்டோ

என்று அழகாகக் கூறுகின்றார். இராவணனைப் பார்த்து சீதை கூறுகின்றாள். அந்த அந்த சமயத்திலே, இது தவறு, இது நல்லது என்று சொல்லி, அழுத்தம் திருத்தமாகச் சொல்லி, இடித்து, வழிப்படுத்துகிற ஒரு நிலைமை இல்லை என்று சொன்னால், அந்த ஆட்சிக்கு அது ஒரு பெரும் குறையாக அமையும். யாரிடத்திலே குறை இல்லாமல் இருக்கிறது?





'படுவன பலவும்
குற்றம் பாங்கிலா
மனிதர் வாழ்க்கை'

என்று அப்பர் சுவாமிகள் சொல்லுகிறார். எல்லா இடத்திலும் குறை இருக்கின்றது. குறைகளைத் திருத்திக் கொள்ளவேண்டும் அதுதான் முக்கியம். இந்த வகையில் தமிழகத்துச் சட்டமன்றம் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது.

அடுத்து அமைச்சர் அவையைப் பற்றி ஒரு வார்த்தை. அதிலே அமைச்சர்களுடைய இலக்கணத்தைப் பற்றி அதிகமான செய்யுள்கள் இருக்கின்றன.

'மனத்திலும் வாயிலும் மெய்யிலும் செய்கை
அனைத்திலும் ஆன்று அமைந்தாராகி நினைத்திருந்து
ஒன்றும் பரியலராய் ஓம்புவார் இல் எனின்
சென்று படுமாம் உயிர்'

என்று மிக அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. நல்ல அமைச்சர்கள் இல்லாத ஒரு நாடு கெட்டே போய்விடும் என்று சொல்லுகிறார். வளப்பம் இல்லாமல் அமைவது என்பது ஒன்று. ஆனால் கெட்டே போய்விடும் என்று "சென்று படுமாம் உயிர்" என்று சொல்லுகிறார். 'மனத்திலும் வாயிலும் மெய்யிலும் செய்கை அனைத்திலும் ஆன்று அமைந்தாராகி நினைத்திருந்து ஒன்றும் பரியலராய் ஓம்புவார் இல் எனின் சென்று படுமாம் உயிர்' என்ற முறையில் காலக்கிரமத்தில் ஏற்படும் என்று கூறுகின்றார். அந்தச் சிறப்புள்ள அமைச்சர் அவை தமிழகத்திலே பணியாற்றுகிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் . . (மணி அடிக்கப்பட்டது)

* திரு. வி. ஆர் பெரியண்ணன் : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நடந்து முடிந்த பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களைப் பற்றி இந்த நேரத்திலே சிலவற்றைச் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களிலே பல கலவரங்கள் நடந்திருக்கின்றன. தேர்தல்களின்போது சில லஞ்சக் குற்றச்சாட்டுக்களும் இருந்திருக்கின்றன என்று அமைச்சர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதற்கெல்லாம் காரணம் தேர்தல் முறை தான் என்பதை நம் அமைச்சர் அவை நல்ல முறையில் உணர்ந்திருக்கிறது. ஆகையால் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களை மக்களே தேர்ந்தெடுக்கும் முறையை அடுத்த தேர்தலுக்குள்ளாவது திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்லாமல் பல பஞ்சாயத்து யூனியன்கள் இன்று செயல்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. காரணம் தேர்தல் நேரத்தில் ஏற்பட்ட கோளாறுதான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய நாமக்கல் வட்டத்தில் ஒரு பஞ்சாயத்து யூனியன் இன்னும் செயல்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. இது அரசாங்கத்திற்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

எருமைப்பட்டி பஞ்சாயத்தில் தலைவர் பதவிக்கு இருவர் போட்டியிட்டனர். ஒருவர் ஜில்லா காங்கிரஸ் தலைவர். மற்றொருவர் முன்னாள் மேல்சபை உறுப்பினராக (M.L.C.) இருந்தவர். போட்டியிலே முன்னாள் மேலவை உறுப்பினர் வெற்றி பெற்று விட்டார். தேர்தல் நேரத்தில் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவருக்காக போலீஸ் இன்ஸ்பெக்டர்களெல்லாம் தேர்தல் வேலையில் இறங்கி பல தவறுகள் செய்திருக்கிறார்கள் என்று உள்துறை அமைச்சருக்குக்கூட வந்திருக்கிறது. ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவருக்கு வேலை செய்தார்கள் என்று ஆதாரங்களோடு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர் மீது சொல்லப்பட்ட புகார்கள் மீது சேலம் ஜில்லா அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் அதைப் பற்றி உள்துறை அமைச்சரிடம் சொன்ன காரணத்தினால், அதற்காக ஒரு தனி அதிகாரியை அனுப்பி விசாரணை செய்தார்கள். அதன் பேரில் அவர் தாற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். முடிவு செய்வதற்குள் மறுபடியும் வேலையில் சேர் என்று உத்திரவு அளிக்கப்பட்டிருக்கிறது. விசாரணை முடியவில்லை. ஆனால் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார். இதுபோன்ற முறையிலே செய்கின்ற காரணத்தினால் மீண்டும் அதிகாரிகள் பல தவறுகள் செய்வதற்கு வாய்ப்பாக அமைகிறது, அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதுபோல் இருக்கிறது. தவறாக நடக்கக்கூடிய அதிகாரிகளின் மீது தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். கமிஷனர் தவறான முறையில் நடந்து கொண்டார் என்பதற்காக கலெக்டர் அவரை வேறு இடத்திற்கு மாற்ற உத்தரவிட்டார். ஆனால், இரண்டு மூன்று நாட்களுக்குள்ளேயே சென்னையிலிருந்து அதை நிறுத்திவைக்கவேண்டுமென்று உத்தரவு வருகிறது. அங்கே உள்ள மக்கள் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் மீது ஒரு குற்றம் சாட்டுகிறார்கள். அமைச்சர் பஞ்சாயத்து யூனியன் [illegible] முடிந்ததும், அங்கு இருக்கிற காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வீட்டில் நல்ல விருந்து சாப்பிட்டார். ஸ்தல ஸ்தாபன அமைச்சரை விருந்து சாப்பிட வேண்டாம் என்று சொல்லவில்லை. விருந்து சாப்பிடுவது தவறு என்று சொல்லவில்லை. ஆனால், இங்கு வந்த பிறகு, கமிஷனர் தவறு செய்தார் என்பதற்காக கலெக்டர் அவரை அந்த இடத்தைவிட்டு மாற்றி உத்தரவு போட்டிருந்தும், அந்த உத்தரவை நிறுத்தி வைத்து, அவர் அந்த இடத்திலேயே தொடர்ந்து இருக்கட்டும் என்ற உத்தரவு சென்னையிலிருந்து பிறப்பிக்கப்படுகிறது. அங்குள்ள மக்கள் அமைச்சர் விருந்து சாப்பிட்டுவிட்டு கலெக்டர் ஆர்டரை மதிக்காமல் அதை நிறுத்திவைக்குமாறு சென்னையிலிருந்து உத்தரவு வருகிறது என்று குற்றச்சாட்டைச் சொல்லி பேசிக்கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்தால் கலெக்டர் எப்படி நேர்மையாக நடந்துகொள்ள முடியும். எப்படி நேர்மையாக பணிபுரிய முடியும்? பஞ்சாயத்து யூனியன் ஜீப்பில் சுற்றிக் கொண்டு தேர்தல் வேலை செய்திருக்கிறார் அந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனர். நான் இரவு 12 மணிக்கு அவர் ஜீப்பில் போனதைப் பார்த்து பிடித்தேன். அதிகாரிகள் தவறுதலாக நடந்துகொண்டால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்துக்





கொள்ளவேண்டும். இருவரும் காங்கிரசைச் சேர்ந்தவர்களாதலால் அமைச்சர் அவை அவர்களிடையே சமாதானம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஒருவரோடு அடித்துக்கொண்டு இருந்தால், பஞ்சாயத்து யூனியனுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் செலவழிக்கப்படாத நிலை இருக்கிறது. பல ரோடுகள் வண்டிகள் போவதற்குக் கூட முடியாத நிலையில் இருக்கிறது. புதிய ஆசிரியர்கள் நியமனத்தை கல்வி இலாகா சாங்ஷன் செய்தும், ஆசிரியர்கள் பள்ளிகளில் நியமிக்கப்படவில்லை. பஞ்சாயத்து யூனியனில் போதிய அலுவலர்கள் இல்லாமல் உள்ள நிலையும் இருக்கிறது. இந்த நிலையில் எங்கள் மாவட்டத்தில் சில யூனியன்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இருவரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பதினால், அவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ளாமல் அவர்களிடையே சமாதானம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்களுடைய நேர்மையைப்பற்றிச் சொல்லுகிறேன். ஒரு தீர்மானம் வருகிறது. திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளும் தீர்மானம் வருகிறது. அப்பொழுது காங்கிரஸ் கமிட்டித் தலைவர் குரூப்பைச் சேர்ந்தவர்கள் ஒருவர் கூட அந்தக் கூட்டத்திற்குச் செல்லவில்லை. மற்றவர்கள் தீர்மானத்தை நிறைவேற்றிச் சென்றார்கள். இப்படித் தவறான முறையில் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கனம் முதல் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற சட்டசபை முதலிய மான்யக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்தை புலப்படுத்திக் கொள்ள முன்வருகிறேன்.

முதலாவதாக நமது சட்டசபை சம்பந்தப்பட்ட விஷயங்களை மனத்திலே கொள்ளவேண்டும். அங்கத்தினர்கள் பல கேள்விகளை அனுப்புகிறார்கள். விதிகள் இருக்கின்றன சுமார் 10 நாட்களுக்குள்ளேயே அந்த இலாகாக்கள் அதற்குரிய பதிலை அனுப்ப வேண்டும் என்று. ஆனால், மாதக்கணக்காக பல கேள்விகள் இலாக்காக்களிலிருந்து விடைகள் கிடைக்கப்பெறாமலேயே, அந்தக் கேள்விகள் கேட்கப்படாமலேயே அல்லது பதில்கள் அளிக்கப் பெறாமலேயே கிடக்கின்றன. அத்தகைய சில கேள்விகள் சபை கலைக்கப்பட்டு விட்டதினால் காலாவதியாகப் போய்விடுகின்றன. சில குறிப்பிட்ட கேள்விகளை எடுத்துக்கொண்டால் அவைகளுக்கு பதில் வருவதற்குள் அந்தக் கேள்விகள் எழுப்பப்பட்ட காலத்தில் இருந்த தேவை கேள்விப்பட்டியலில் இடம்பெற்றபொழுது இல்லாமல் போகிற அளவுக்கு காலம் ஆகிவிடுகிறது. கேள்வியின் இன்றியமையாமை கேள்வி போட்டபொழுது இருந்தது. கேள்வி கேட்டு 10 நாட்களுக்குள் பதில் வந்தால் அது சரியாக இருக்கும்.

மாதக்கணக்கில் காலதாமதம் ஆகி பதில் வந்தால் அதற்கான
இன்றியமையாமை இல்லாமல் போய்விடுகிறது. உதாரணமாக,
“வைகையில் எப்பொழுது நீர் விடப்படும்?” என்ற கேள்விக்கு
இரண்டு மாதங்களுக்குப் பிறகு பதில் கிடைத்தால், பயிர் அறுத்த
பிறகு அந்தக் கேள்விக்கு பதில் கிடைத்து என்ன பயன்? ஒரு
பயனுமில்லை. இம்மாதிரி பல உதாரணங்களை கூறிக்கொண்டே
போகலாம். இதே மாதிரி பல கேள்விகளுக்கு மிகமிக காலம்
தாழ்த்தி விடை அளிக்கப்படுகிறது என்ற புகார்கள் நமது சட்ட
சபை இலாகாவுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இவற்றைத்
துரிதப்படுத்த வேண்டும். அங்கத்தினர்களுடைய தலையாய
கடமை சில விஷயங்களை ஆட்சியினரின் கவனத்திற்குக் கொண்டு
வருவதோடு, அந்த விஷயம் ஆட்சி செலுத்துபவர்களின் கவனத்
திற்குக் கொண்டுவரப்பட்டது என்று பொது மக்களுக்கு பிரகட
னப்படுத்தப்பட்ட பிறகு தான் அந்த விஷயத்தின் முக்கியத்துவம்
எல்லாப் பகுதியினராலும் உணரப்படுகிறது என்பதையும் நாம்
மனத்திலே கொள்ளவேண்டும். இந்த நிலையிலே வினாக்களுக்கு
விடையளிப்பதிலே உடனடியாக இலாக்காக்கள் முக்கிய கவனம்
செலுத்தவேண்டும் என்று ஆளும் கணத்தார் தத்தம் இலாக்காக்க
ளுக்கு கடுமையான, அதாவது உறுதியான உத்தரவைப் போட்டு
அது செயல்படச் செய்யவேண்டும். ஏதோ ஒன்றிரண்டு கேள்வி
களுக்கு அதற்குரிய செய்திகள் அல்லது புள்ளிகள் அல்லது
விவரங்கள் கிடைப்பதற்குத் தாமதம் ஏற்படலாம். ஆனால்,
வந்திருக்கிற கேள்விகளின் பட்டியல் முழுமையும் எடுத்துக்
கொண்டு பார்த்தால், பெரும்பாலானவை வெளி ஜில்லாக்களுக்கு
போகவேண்டியதில்லை. அவைகளுக்கு இங்கு சென்னையில் இருக்
கிற இலாகாக்களிலிருந்தே பதில் தயாரிக்க முடியும். அப்படி
யிருந்தும்கூட காலாகாலத்தில் விடைகள் வராமல் இருக்கின்றன
என்பதை இச்சந்தர்ப்பத்தில் அமைச்சர்களின் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன்.

இனி அடுத்தது, உறுப்பினர்களுடைய வசதிகள் பற்றி பல
உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இங்கே ஓரளவுக்கு வசதி
இருக்கிறது, இல்லை என்று நான் மறுக்க இல்லை.

(திரு. மா. தண்டாயுதபாணி தலைமை)

ஆனால் இது போதவில்லை. பல இடங்களில், பல காலங்களில்
இதைப்பற்றிக் குறிப்பாகச் சொல்லிக் கொண்டு வருகிறோம்.
முதல் அமைச்சர் அவர்களும் பரிவோடு பார்க்கிறார்கள். இடம்
கிடைக்கவில்லை என்ற பல்லவி திரும்பவும் வந்துவிடுகிறது. ஆளும்
கட்சியிலுள்ள அம்மையார் அவர்கள் பேசுகிறபொழுது காங்கிரஸ்
கட்சி உறுப்பினர்களுக்கு என்று சொன்னார்கள். நான் காங்கிரஸ்
கட்சி உறுப்பினர்களுக்கு என்று அப்படிச் சொல்லமாட்டேன்.
அப்படிச் சொல்ல விரும்பவில்லை. எல்லாக் கட்சி அங்கத்தினர்
களுக்கும் அந்தந்தக் கட்சிக்கு என்று தனி அறை வேண்டும்.
கட்சி உறுப்பினர்கள் செம்மையாக பணிபுரியவேண்டு மென்றால்,
ஒவ்வொரு கட்சிக்கும் தனி அறை வேண்டும். அந்தக் கட்சியில்





உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு அந்த அறை
யின் விஸ்தீரணம் அமையவேண்டும். அங்கு குறைந்தபட்சம் ஒரு
டெலிபோன், ஒரு ‘அட்டாச்டு பாத் ரூம்’, ஒரு டைப்ரைடர்,
அந்த அளவுக்குத் தகுந்தமாதிரி மேஜைகள் இவ்வளவும் அங்கு
இருந்தாகவேண்டும். அப்பொழுதுதான் உடனுக்குடன் செவ்வனே
காரியங்களைச் செய்து நிறைவேற்ற முடியும். இது மிகவும்
இன்றியமையாதது. சட்டசபையினுடைய நடவடிக்கைகளை,
அதனுடைய நடவடிக்கைகளின் தரத்தை விளக்குகின்ற,
அதற்கு உதவுகின்ற ஒரு துறையாக இது அமையும் என்பதை நாம்
மனத்திலே கொண்டு, அதற்கேற்ப செயல்படவேண்டும்.

இனி, லைப்ரரி இருக்கிற இடமும், அங்கு வைக்கப்பட்டிருக்கிற
முறைகளும் அமைந்திருக்கிற நிலையில் நமக்கு தேவையான புத்த
கங்களை சுலபமாக எடுப்பதற்கு முடிவதே இல்லை. பேருக்கு
அங்கும் கார்டு இன்டெக்ஸ் ஸிஸ்டம் இருக்கிறது. ஏதோ கோலன்
எண்ணிக்கைகளும் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், ஏதாவது
ஆதர் நேமை வைத்துக்கொண்டு அல்லது புத்தகத்தினுடைய
பெயரை வைத்துக்கொண்டு புத்தகத்தைத் தேடினால் இருக்காது.
புத்தகத்திற்குரிய இண்டக்ஸ் கார்டு இருக்கும் டிராயரில். ஆனால்
அலமாரியில் புத்தகம் கிடைக்காது. அல்லது இண்டெக்ஸ் கார்டு
டிராயரை திறந்தால் அதில் ஏதாவது இருக்கும், அந்த இண்டக்ஸ்
கார்டை வைத்துக்கொண்டு, அந்த எண்ணிக்கையை அல்லது
ஆதரின் பெயரை வைத்துக்கொண்டோ புத்தகத்தை சுலபமாக
எடுத்துவிட முடியாது. நூலின் பெயரை வைத்துக்கொண்டு அது
எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியாது. இப்படி
அங்கே ஒரு பெரிய குழப்பம் இருக்கிறது. அந்த இடமோ ஒரு
லம்பர் ரூம் மாதிரி இருக்கிறது. நம்முடைய லைப்ரரிக்குச் சென்று
ஒரு புத்தகத்தைப் பார்க்கலாம், புரட்டலாம், சில புள்ளிகளைத்
தேடலாம் அங்கே உட்கார்ந்துக்கொண்டு என்றால் அது சாத்தியம்
இல்லை. சாதாரணமாக என்னுடைய வீட்டிலே வைத்துக்கொண்
டிருக்கிற நூல்களுக்குக் கூட இன்டெக்ஸ் கார்டு, மற்றவைகள்
செம்மையாக இருக்கின்றன. என்னிடத்திலே 10,000 புத்தகங்கள்
இருக்கின்றன. அதற்கே செம்மையான அமைப்பு வேண்டியிருக்
கிறது. ஆனால் ஒரு பெரிய லைப்ரரியில் பார்த்தால் புத்தகங்
களின் எண்ணிக்கை லட்சக் கணக்கிலே போகும். அவ்வப்
பொழுது புத்தகங்களைப் பார்ப்பதற்குப் போகிறோம் என்றால்
எப்படி அவைகளைக் கண்டுபிடிக்க முடியும்? எப்படி அவைகளைத்
தேட முடியும்? திடீரென்று இந்த மன்றத்திலே ஒரு வாதம்
நடந்துகொண்டிருக்கும்பொழுது அந்த வாதத்தின் தன்மையை
மறுக்கவோ அல்லது ஆதரிக்கவோ ஆதாரபூர்வமான விஷயங்களை
எடுத்துக்காட்டவேண்டுமென்றால், உடனே லைப்ரரிக்குப் போய்
ஏதாவது புத்தகம் கேட்டால், அது அந்த நாளைக்குப் பிறகு தான்
கிடைக்கும். நாம் சென்றவுடனேயே அந்தப் புத்தகத்தை கண்டு
பிடிக்க முடியும் என்ற நிலை ஏற்படவேண்டும். அந்த நிலையில்
நூலகம் இல்லாவிட்டால் நூலகம் இருப்பதன் நோக்கம் நிறை
வேறாது என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

[திரு. சா. கணேசன்] [10th March 1966

ஆகவே, அதற்கு வேண்டிய தகுதியும், திறமையும் அனுபவமும் உள்ள சிப்பந்திகளை வைக்கவேண்டும். அதிலே எண்ணிக்கை யிலும், தரத்திலும், ஆக இரண்டிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். லைப்ரரி ஸிஸ்டம் எதுவாக இருந்தாலும் சரி, ரங்க நாதன் முறையாகிய கோலன் முறையானாலும்—ரங்கநாதனே அந்த ஸிஸ்டத்தை மாற்றியிருக்கிறார்கள்—வேறு ஏதாவது புது ஸிஸ்டமாக இருந்தாலும் சரி, அது உடனே பயன் கொடுக்கக் கூடியதாக அமையவேண்டும், அதில் ஆளுங்கணத்தார், சம்மந்தப் பட்ட அமைச்சர், தக்க முறையை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

புதிய ஹாஸ்டல் சம்பந்தப் பட்டவரையில், இப்பொழுதே சில குறைபாடுகளைக் களைந்தெறிவது நலமாக இருக்கும். ஐந்தடி வராந்தா என்று சொல்லுகிறார்கள். சாதாரணமாக நம்முடைய சட்டசபை கூட்டத் தொடர் வெயில் காலத்தில்தான் வருகிறது. கொஞ்சம் அகலமான இடங்களாக அமைந்தால்தான் இருக்க வசதியாக இருக்கும். அப்படி இருக்கும் குறைகளை இப்பொழுதே அடிப்படையைத் திருத்த முடியாவிட்டாலும், மேலே பால்கனி மாதிரி நீட்டிவிட்டு கொஞ்சம் இன்னொரு 1 அல்லது 1½ அடி நீட்டி கொடுக்கலாம். அப்படிச் செய்தால் அது செம்மையாக அமையும். அதிகத் தொந்தரவுகள் இல்லாமல் அங்கத்தினர்கள் தங்கமுடியும். கூடிய வரையில் ஒற்றை அறைகளையும், பிறகு இரட்டை அறைகளையும், அவைகளில் பிற வசதிகளையும் சாதனங்களையும் கொடுத்து அமைக்க வேண்டும். இவற்றையெல்லாம் அடிப்படை யிலேயே திருத்திவிடுவது நலமாக இருக்கும். பின்னால் திருத்த வேண்டும், இடிக்க வேண்டும், மாற்ற வேண்டும் என்கிற அவசியங்கள் இல்லாமல் இருக்கும். ஆகவே, இப்பொழுதே வேண்டிய திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இனி எலெக்ஷன் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குத் தேர்தலில் யாரும் சட்டப்படிச் செய்ய முடிவது இல்லை. யாரும் கோபித்துக் கொள்ளக் கூடாது. நடக்கும் காரியங்கள் இன்றியமையாதது என்று பலரும் சொல்லுவார்கள். அப்படியென்றால், சட்டத்தை மாற்ற வேண்டும். சட்டத்தில் உள்ள, கடைப் பிடிக்க முடியாத விதிகளை அகற்ற வேண்டும். இல்லை, சட்டத்தை வைத்துக்கொண்டு சட்டத்தைப் பரிபூரணமாக பிரயோகித்து முழுக்க முழுக்க நிலை நாட்டவேண்டும். இதைக் கவனிக்க வேண்டியது ஆளுங் கணத்தாருடைய கடமை. இன்றைக்கு சட்டம் சரியில்லையென் பதைப் பார்க்கிறோம். உதாரணமாக, மூன்று கார்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று விதி வருகிறது. முதலிலே சட்டம், பிறகு, ரூல்கள், ஆர்டர்கள் என்று வருகின்றன. இது வரையில் எந்த எலெக்ஷனிலாவது, ஒரு கார் அல்லது இரண்டு கார்கள் அல்லது மூன்று கார்கள் மட்டும் வைத்துக் கொண்டு நடத்தியிருக்கிறோமா? என்பதை நெஞ்சில் கை வைத்து நமக்கு நாமே பதில் சொல்லிக்கொள்ள வேண்டும். 1,000 காலனுக்குக்



10th March 1966] [திரு. சா. கணேசன்]

குறைவாகப் பெட்ரோல் செலவு செய்து யாராவது தேர்தல் வேலை செய்திருக்கிறோமா? ஆகவே, தவறோ, தப்போ, உண்மையைச் சொல்லாமல் பாவத்தை வேறு ஈட்டிக்கொள்ளுகிறோம். ஒரு விதியை வைத்தால், அந்த விதி செம்மையாக, திறமையாக, நிலை நிறுத்தப் பெற வேண்டும். அந்த விதியையும் வைத்துக்கொண்டு, அதை மறுக்கிற நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்திவிட்டால், இரண்டும் கெட்டான் நிலையை உண்டாக்குவதாகத்தான் இருக்கும். இந்த நிலை இருக்கப் படாது. திருந்த வேண்டும்.

இனி தேர்தலிலே பணம் கொடுப்பது, ஆளையே கபளீகரம் செய்து விடுவது, இத்தியாதி காரியங்கள் நடக்கின்றன என்பதை மறுக்க முடியாது. பலர் இப்படிப்பட்ட புகார்களைக் கேட்டிருக் கிறார்கள்; செயல்களையும் கண்டிருக்கிறார்கள். அது யாராக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந் தாலும் சரி, அல்லது எதிர்க் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந் தாலும் சரி, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு முழுக்க முழுக்க சுதந்தரம் கொடுக்கப் பட வேண்டும். சுதந்திரம் கொடுப்பது மட்டுமல்ல, அப்படி நடவடிக்கை எடுக்கும்போது, யாரும் எந்த நிலையிலும் தலையிடு வதும் கூடாது எனபதை சொல்லுவதோடு மட்டுமின்றி, கண்டிப் பாக, பூரணமாக அதை நிறைவேற்றவேண்டும் என்றும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

இனி, தேர்தல் பிரசாரங்களிலே அமைச்சர்கள் நேரிடையாகத் தலையிடக் கூடாது. சட்டம் என்று நான் அதற்குப் போக இல்லை. ஜனநாயகத்தில் நடக்கிற காரியந்தான் என்று நாடுகளைக் காட்டி அதற்குரிய உபமானங்களைச் சொல்லிவிடமுடியும். இந்த விஷயங் களிலே, ஒன்றைச் சரி என்று நிலைநாட்டுவதும், சரி அன்று என்று சொல்லுவதோடு, அதை நிர்த்தாரணம் செய்வதும் அதைவிட மிக்க சுலபம். அதற்கெல்லாம் நான் போக விரும்ப இல்லை. அப்படி இடம் அளிக்கப்படாமல் இருப்பது அமைச்சர்களுக்குச் சிறப்பு. தங்களுடைய தொகுதிகளில் அவர்கள் அவ்வாறு ஈடுபடுவது தவறு என்று சொல்ல வர இல்லை. ஆனால் பிற பகுதிகளில், அமைச் சர்கள் போவார்களேயானால், அதை வேறு விதமாக சப்பைக்கட்டு கட்ட முயல்வது அவ்வளவாக எடுபடாது. என்னதான் கட்சி அமைப்பு என்று சொன்னாலும், கட்சி வேலை என்றாலும், அமைச்சர் போகிறார் என்றால், முன்னால் ஒரு ஜீப், பின்னால் ஒரு ஜீப் போகிறது. ஜில்லா கலெக்டர் பொது மேடையில் நிற்பதைப் பார்க்கிறோம். சரியாக மேடையில் இல்லாவிட்டாலும், மேடைக்கு அருகில் பின்புறம் நின்றுகொண்டு இருப்பார்கள். சுதந்தரமான, இஷ்டபூர்வமான தேர்தல் நடக்கக் கூடிய சூழ்நிலையை உண்டாக்கு கிறோமா என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்பதுதான் என் னுடைய வேண்டுகோள்.

தேர்தல் அலுவல்களில் அமைச்சர்கள் நேரிடையாக ஈடுபடக் கூடாது. கட்சியைப் பொறுத்தவரை, அவர்களுடைய கருத்துக் களைச் சொல்லலாம் என்றாலும், கட்சிக்காரியங்களை மேற்கொள்

[திரு. சா. கணேசன்] [10th March 1966

வது, ஆள்களைப் பொறுக்குவது, பணிகளை பங்கிடுவது, நிதியைத் திரட்டுவது, அதை வினியோகிப்பது, இவற்றிற்கெல்லாம் கவனம் செலுத்தினால், அதை ஜனநாயகம் என்று கொள்ளமாட்டாது உலகம். ஆகவே, அமைச்சர்கள் தேர்தல் பிரசாரங்களிலேயும், கட்சியின் தேர்தல் அலுவல்களிலும் தலையிடாமல் இருப்பது நியாயமும், சிறப்பும், பெருமையும், உள்ளதாக அமையும்.

இனித் தேர்தலிலே ஏற்படும் கஷ்டங்கள் பற்றிக் குறிப்பிடுகிறேன். இது பற்றி மூன்று ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். எண்ணிக்கையில் கோர்ட்டுகள் வளர்ந்திருக்கின்றன. அப்படி இருந்தும், மொபைல் கோர்ட்டுகள் நடத்தப்படுகின்றன. லட்சக் கணக்கான கேஸ்கள் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்புகளும் வழங்கியிருக்கின்றன. அந்த வசதி செய்யப் படுகிறது போல, இயங்கும் வோட்டுச்சாவடிகள் அமைத்து, வாக்காளர்கள் இருக்கும் இடம் தேடி, அவர்கள் வீட்டுக்குப் போகும் அளவில் அமைக்க முடியுமானால், பல வாகனங்களை வைத்துக்கொள்வது குறைந்து போகும். ஐந்து அல்ல, 250 கார்கள் வைத்துக்கொண்டு எலெக்ஷன் நடத்தியதை நான் கண்ணாலே பார்த்திருக்கிறேன். இத்தனை கார்களும் இல்லாமல் போய்விடும். அப்பொழுது ஒரு விதியை விதிக்க வேண்டும். அன்றையதினம், அதாவது வாக்குப்பதிவு செய்யும் நாள், யாரும் வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது, எல்லோருக்கும் ஒரு ரெஸ்டு கொடுத்து அப்படிச் செய்துவிடவேண்டும். வேட்பாளர், தேர்தல் ஏஜண்டு, போலிங் ஆபீசர்கள், உயர்தர அதிகாரிகள், போலீஸ், டாக்டர் ஆகியோர் கார்களும், ஆம்புலன்ஸ்;/ நெருப்பு வண்டி, போன்ற இவைதான் ஓடலாம் என்று சொல்லி, ஒரு 24 மணி நேரம் இந்தத் தடை என்று வைத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தேர்தல் காலத்தில் யாருக்கும் வண்டிகள் எடுத்துப்போக அனுமதி கிடையாது என்று சொல்லிவிட்டால்,
12-30 p.m. சுலபமாக இருக்கும்.

இப்படி மொபைல் போலிங் ஸ்டேஷன் அமைப்பில், அபேட்சகர்களோ அல்லது அவர்களுடைய ஏஜண்டுகளோகூட தேர்தல் பணியை, கண்காணிக்க அல்லது வோட்டுகளை சேலஞ்ச் செய்வது போன்றவைகளைச் செய்ய அந்த இயங்கும் சாவடியில் இருக்க அனுமதித்துவிடலாம். புதிய பெரும் செலவு இன்றி அவ்வப் பகுதியில் உள்ள பஸ்களையே இதற்கு ஏற்பாடு செய்து கொண்டுவிடலாம். இதை மனத்திலே கொண்டு செயல்படுவது நன்மை தரும் என்ற முழு நம்பிக்கையுடன் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். நிறையச் சொல்லிக் கொண்டு போகலாம். நேரமின்மையினால், முக்கியமான விஷயங்களை மட்டும் அப்படி அப்படியே சொல்லிவிட்டுச் செல்லுகிறேன்.

"ஹெட் ஆஃப் ஸ்டேட்" மானியத்தைக் குறித்து நாம் அதிலுள்ள முக்கியத்துவத்தை நன்குணர்ந்து அப்பணிகளைச் செம்மையாக நிறைவேற்ற, வேண்டிய நல்ல சூழ்நிலையை அமைத்துக் கொடுக்க நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். கலெக்டரிலிருந்து மற்றும் எத்தனையோ ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்



10th March 1966] [திரு. சா. கணேசன்]

களெல்லாம், அவரவர்களுடைய பணியைச் செம்மையாக நிறைவேற்றுவதற்கு அவகாசமும், தலையிடாத சூழ்நிலையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். இப்பொழுது சட்ட ரீதியாகச் சொல்லிவிடலாம், அங்கே முழுக்க முழுக்க அவர்களுக்குச் சுதந்திரம் கொடுத்திருக்கிறோம் என்று. "நிரூபி" என்றால் என்னால் நிரூபிக்க முடியாது என்பது உண்மையே. சிலவற்றை அனுமானப் பிரமாணத்தினால் அதனுடைய விளைவு என்ன என்று கணித்து, ஆராய்ந்து தேற முடியுமேயன்றி, பிரத்தியட்சப் பிரமாணத்தினாலே புலப்படுத்திவிட முடியாது. இது மாதிரி எத்தனையோ துறைகள். பல்வேறு அதிகாரிகள் ஆளும் கட்சியினருக்கு அல்லது அமைச்சருக்கு அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப நடக்க வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலையைச் சுமத்தினார்களா, சுமத்தவில்லையா, அவர்களே விரும்பிச் செய்கிறார்களா என்பதிலே நான் போகவில்லை. ஆனால் அத்தகைய நிலைமை இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த நிலை இல்லாமல், செம்மையாக அவர் இஷ்டப்படி எதைச் செய்தாலும் சரி என்று விட்டுவிட வேண்டும். தவறு, பிழை, குறை செய்திருப்பாரானால் அவர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிற பொறுப்பை மட்டும் தான் ஆளுங்கணத்தவர்கள் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். நடு நிலையிலே, இடை நிலையிலே நுழைந்து அல்லது சென்று அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதைக் கூறுவது அல்லது அவர் உணரும்படி செய்வது கூடாது என்பது என்னுடைய கோரிக்கை. அவர்கள் செம்மையாக நடப்பதற்குத் தகுந்தபடி, மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு மேல் நிலையிலிருந்து அடி நிலையில் இருக்கிறவர்களுக்கெல்லாம், தேசீய சர்க்கார் எந்த அளவில் சம்பள விகிதம், பயணப் படி விகிதம், கிராக்கிப் படி விகிதம் ஆகியவற்றைக் கொடுக்கிறார்களோ, அதே அளவு கொடுக்க வேண்டும். தேசத்தின் ஒருமைப்பாடு என்பது ஏதோ சில காரியங்களுக்குரிய கோஷமாக மட்டும் இருக்க அனுமதிக்கப் படக் கூடாது. ஒருமைப்பாட்டை உண்மையிலேயே நாம் நம்புகிறோம் என்றால், காரைக்குடியிலே ஒரே வட்டத்துக்குள் ஒன்றாம் நம்பர் வீட்டில் இருக்கிறவனும், இரண்டாம் நம்பர் வீட்டில் இருக்கிறவனும், எந்தச் சர்க்கார் அலுவலகத்தில் வேலை பார்த்தாலும் ஒரே விகிதத்தைப் பெற வாய்ப்பு இருக்கவேண்டும். மாநில சர்க்கார் சிப்பந்தி, ஒரே தொழிலைச் செய்கிறவர், இந்திய சர்க்கார் சிப்பந்தியைவிடக் குறைந்த சம்பளம் வாங்கவேண்டும் என்று என்ன நிர்ப்பந்தம்? இருவரும் அண்ணனும் தம்பியுமாக இருக்கலாம். இருவரும் ஒரே தொழிலைச் செய்கிறவர்களாக இருக்கலாம். ஸ்டெனோகிராஃபர் வேலையை இருவரும் செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். இரண்டு அலுவலகங்களும் காரைக்குடியிலே இருக்கின்றன. ஒரே வட்டத்திற்குள்ளே இருக்கின்றன சில இடங்களில். அங்கு இருக்கிறவர்களுக்கு ஒரு சம்பளம், இங்கு இருக்கிறவர்களுக்கு இன்னொரு சம்பளம் என்று ஏன் இருக்க வேண்டும்? செய்கிற வேலை ஒன்று; செய்யப்படுகிற இடம் ஒன்று; சூழ்நிலை ஒன்று; சீதோஷ்ண ஸ்திதி ஒன்று. காய்கறி, சாப்பாடு சாமான் விலைவாசி, வீட்டு வாடகை எல்லாம் ஒன்று; ஆனால்

அலுவலகத்தில் தான் பெயர் வெவ்வேறாகப் போடப்பட்டிருக்கிறது. ஒன்றில் "கவர்ன்மென்ட் ஆப் இண்டியா" என்றும், மற்றொன்றில், "கவர்ன்மென்ட் ஆப் மெட்ராஸ்" என்றும் போடப்பட்டிருக்கிறது. இதைத்தவிர வித்தியாசம் இல்லை. ஏன் இவர்கள் இரண்டு பேருக்கும் வித்தியாசமான சம்பளம்? ஏன் இதிலே பேதம்? சோஷலிசம் பேசுகிற நிலையிலே இந்த அடிப்படை நிலையிலே கூடச் சமத்துவத்தைக் கையாள, கடைப் பிடிக்க நம்முடைய சர்க்கார் ஏன் மறுக்கிறது? இது சிரிய கடமையா இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன். இதையெல்லாம் செவ்விய, நேரிய ஒருநிலைப் படுத்தவேண்டும்.

மத்திய அரசு ஊழியர் தேர்வுகளுக்கெல்லாம் ஆங்கிலத்தையும், ஹிந்தியையும் தேர்வு மொழிகளாகக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது, அத்துடன் தமிழ் மொழியையும் தேர்வு மொழியாகக் கொள்ளுவதற்கு முழுக்க முழுக்க வாய்ப்புக் கொடுக்க வேண்டும். சட்டப் பூர்வமாக இடம் இருக்கிறது என்று சொல்வது சுலபம். பதினான்கு மொழிகளையும் நாம் ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்று சொல்வது தத்துவார்த்த வாதமே தவிர பிரத்யக்ஷ வாதமாக மாட்டாது. பதினான்கு மொழிகளே இல்லை. சமஸ்கிருதம் எங்கே பேசப்படுகிறது? கணவனும் மனைவியும், பிள்ளையும் அப்பனும், மாமனும் மைத்துனனும் கலந்து பேசி உறவாடுகிற மொழியாக எங்கே விளங்குகிறது? முழுக்க முழுக்க இலக்கிய மொழியேயன்றி, அன்றாட வாழ்க்கையிலே, வாணிபம், கைத்தொழில், நிர்வாகம், அகவாழ்வு ஆகிய இந்தத் துறையிலேயும் பயிலப்படுகிற மொழியல்ல. பதினான்கு மொழிகள் என்பது இங்குள்ள சிறந்து வளர்ந்த மொழிகளினுடைய எண்ணிக்கைக் கோவையேயன்றி, உண்மை நிலையல்ல! ஆகவே, அந்த நெறியிலே தமிழ் என்றால் மற்ற மொழிகளையும் தான் நான் சொல்லுகிறேன். நான் தமிழன் ஆதலினாலே, தமிழ்நாட்டில் இருப்பவன் ஆதலினாலே, தமிழுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறேன். தமிழை, அனைத்திந்தியப் பணிமனைகளுக்குத் தேர்வு மொழியாக முழுக்க முழுக்கக் கைக்கொள்ளுவதற்கு முழு வாய்ப்பையும் வசதியையும் தரவேண்டும், அதற்கு வேண்டிய அனைத்தையும் நமது மாநில சர்க்கார் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதுமாதிரி நல்ல காரியங்களை, நியாயமாகத் தேவையான விஷயங்களைக் குறித்துக் கட்சி வர்ணம் பூசாமல், கட்சிக் கண்ணோட்டத்தோடு நோக்காமல், தேசத்தின் நிலை, மக்களின் நிலை, தேசத்தின் தேவை, மக்களின் தேவை இவற்றை மட்டும் கவனத்திலே கொண்டு செயல்படவேண்டும் என்று, கனம் சபைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஆளும் கணத்தவர்களைக் கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

*திரு. மு. கருணாநிதி: கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சட்ட மன்றம், தேர்தல், மாநிலத் தலைமை அலுவலகம், அமைச்சர்கள் என்ற தலைப்புகளின்கீழ் தரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகள் மீது, எங்கள் கட்சிச் சார்பாக வந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை





இங்கே எடுத்துக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். (கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கட்சியின் சார்பாக மட்டுந்தானா?) "எங்களுடைய கட்சியின் சார்பாக" என்று கூறும்போது, "எதிர்க்கட்சிகள் அனைத்தின் சார்பாக" என்றுதான் பொருள். ஆரம்பத்திலேயே கனம் முதல் அமைச்சர் அவர்கள் கலகமூட்டத் தொடங்குகிறார்.

இந்த நாள் சட்ட மன்றத்தைப்பற்றி விவாதிக்கின்ற நாள். ஆனால், இன்றுதான் மிகப் புதுமைகளெல்லாம் நடைபெற்றன. ஏறத்தாழ இந்த ஒன்பதாண்டுக் காலத்தில், கனம் சபாநாயகர் அவர்கள், 'கோரம்' இல்லாத காரணத்தால் தாமதமாக வந்தது இன்றுதான் என்று நான் கருதுகிறேன். அது மாத்திரமல்ல. அமைச்சர்களைப்பற்றிப் பேசுகிற இந்த மானியத்தில், அனைத்துக்கும் பதில் சொல்ல முதல் அமைச்சர் அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றாலும், எல்லா அமைச்சர்களுமே இன்றையதினம் இந்த மன்றத்தில் இருப்பார்களானால், இந்த மானியங்களைப் பற்றி விவாதிக்கின்ற நேரத்தில் வெகு பொருத்தமாக இருக்கும் என்கின்ற என்னுடைய எண்ணத்தையும் நான் இங்கே சுட்டிக் காட்டுவதில் தவறு இல்லை என்று கருதுகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

சட்ட மன்றம் அடிக்கடி கூட வேண்டும் என்ற கொள்கையை உடையது எங்களுடைய கட்சி. காரணம், இன்றையதினம் நடைபெறுகின்ற இந்தச் சட்ட மன்றக் கூட்டம் இந்தத் திங்களோடு முடிவுற்று, பிறகு இன்னும் எத்தனை திங்களுக்குப் பிறகு கூடப் போகிறது, இடையிலே எத்தனை திங்கள் இருக்கும் என்பதெல்லாம் நாம் அறிந்த ஒன்றுதான். இதற்கு முதல் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கக்கூடும், பதிலளித்திருக்கிறார்கள். "விஷயங்கள் இல்லாமல் சட்டசபையை அடிக்கடி கூட்டுவதால் செலவுதான் அதிகமாகும், பயன் ஏதும் இல்லை" என்றெல்லாம் அவர்கள் கூறக்கூடும். மூன்று நான்கு திங்களுக்குப் பிறகு கூடுகிற நேரத்தில் நாட்டிலே உடனடியாக எழுகிற சில முக்கியத்துவம் வாய்ந்த அவசரப் பிரச்சினைகளைக் குறித்து சட்டசபையிலே பேசலாம் என்று எண்ணுகிற நேரத்தில், சட்ட மன்றம் கூடாத காரணத்தால் அவை விடுபட்டு, பிறகு மூன்று நான்கு திங்களுக்குப் பிறகு சட்ட மன்றம் கூடும் நேரத்தில், அவற்றைப்பற்றி விவாதிக்கத் தொடங்கினால், "எப்போதோ நடந்த விஷயம், அது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் அல்ல" என்ற காரணத்தினால் அதனுடைய மதிப்பு மங்கிவிடுகிறது. ஆகவே, நீண்ட தொடர் கூட்டத்திற்கு அவசியம் இல்லை என்றாலும் ஒரு கிழமை, ஐந்து நாட்கள் அல்லது பத்து நாட்கள் என்ற அளவில் கூட்டங்களை நடத்துகின்ற வகையில் அடிக்கடி சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெறவேண்டுமென்ற கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மு. கருணாநிதி] [10th March 1966

தமிழகச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு நேர்மையுடனும், பண்பாட்டு உணர்ச்சியுடனும் நமது மரபு கெடாத வண்ணமும் நடைபெற்று வருகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். நமது முதல் அமைச்சர் அவர்களே கூட வரவுசெலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற பொது விவாதத்திற்குப் பதில் கூறுகிற நேரத்தில் இந்தக் கருத்தை எடுத்து வைத்துப் பாராட்டியதோடு எதிர்க்கட்சியினர் நடந்துகொண்டு வரும் முறையை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்கள். அதற்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் வேறு மேடையில் பேசுகின்ற நேரத்தில் எதிர்க்கட்சியைப் பற்றித் தாம் கொண்டிருக்கிற கருத்தை வெளியிடுகின்ற முறை வேறாக இருந்தாலும், சட்டமன்றத்திற்குள்ளே அவர் அன்றைய தினம் கூறிய கருத்து வரவேற்கத்தக்கதாகும்.

தமிழகச் சட்டமன்றத்தைப் பற்றி நாம் எண்ணுகின்ற நேரத்தில் இதர மாநில சட்டமன்றங்களிலே நடைபெறுகின்ற செய்திகளை நாம் பார்க்காமல் இல்லை. இன்றைய தினம் வங்காளத்தில் உணவுப் பிரச்சினையை ஒட்டி எழுந்த அமளி காரணமாகச் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதும், துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருப்பதும், கைது செய்யப்பட்டவர்களிலேயே சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பதும்—அதன் காரணமாக ஒவ்வொரு நாளும் சட்டமன்றத்தில் கூச்சலும், குழப்பமும், அமளியும் ரகளையும் தொடர்ந்து நடந்துகொண்டிருப்பதையும், மூக்கை உடைத்தார் என்பதாகவும், மூக்கை அறுத்தார் என்பதாகவும், சபாநாயகரை நோக்கி ஓடினார்கள் என்பதாகவும் பயங்கரமான தகவல்கள் எல்லாம் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

அதேபோல் ராஜஸ்தான் சட்டமன்றத்தை எடுத்துக்கொண்டால் கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்த வந்தபோது, அவர் உரையைப் படிப்பதற்கு முன்பாகவே பலர் ஒழுங்குப் பிரச்சினைகளைக் கிளப்பினார்கள், அதன் காரணமாகக் குழப்பமும், அமளியும் ஏற்பட்டன, கவர்னர் தம் உரையை ஆற்ற முடியாத அளவுக்கு நெருக்கடி ஏற்பட்டது என்பதான செய்தியை நாம் அறிகிறோம். ஆனால் இங்கே சுட்டிக்காட்டுகின்ற அளவுக்கு—நமது தமிழகச் சட்டமன்றத்தில் நம்முடைய மரபு காக்கப்படுகின்ற வகையில், பண்புகள் காக்கப்படுகின்ற வகையில் இந்த மன்ற உறுப்பினர்கள் வெகு நேர்த்தியான முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தமிழகத்திலே சென்ற ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் நாட்டில் அமளியும் ரகளையும் நடந்து கொண்டிருந்தபோதும், அதன் காரணமாக துப்பாக்கிப் பிரயோகம் நடந்துகொண்டிருந்தபோதும் போராட்டம் உச்ச கட்டத்தில் இருந்தபோதும் சட்டமன்றம் நடைபெற்றபோதும்கூட மரபு கெடாத வகையில் அங்கத்தினர்கள் நடந்துகொண்டுள்ள முறையைப் பார்த்தால் உள்ளபடியே மற்ற மாநில சட்ட மன்றங்களின் நிகழ்ச்சியோடு ஒப்பிட முடியாதவை என்பது தெரியும். அவ்வளவு நேர்மையுடன் இங்கே சபை நடவடிக்கைகள் நடைபெற்று வந்திருக்கின்றன.



10th March 1966] [திரு. மு. கருணாநிதி]

வேறு மாநில சட்டமன்றங்களில் நடைபெறும் முறையற்ற செயல்களை நம் மாநில சட்டமன்ற நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுப் பெருமைகொள்ளும் நேரத்திலேயே நாம் பார்த்துப் பின்பற்ற வேண்டிய நிகழ்ச்சியும் வேறு ஒரு மாநில சட்டமன்றத்தில் நடைபெற்றிருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக மகாராஷ்டிர மாநில கவர்னர் செரியன் அவர்கள் அந்த மாநில சட்டமன்றத்திலே உரை நிகழ்த்துவதற்குத் தொடங்கியவுடனே சில நிமிட நேரங்கள் மகாராஷ்டிரத்திலேயே உரை நிகழ்த்திவிட்டு, அப்புறம் தொடர்ந்து ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. திரு. செரியன் அவர்கள் மலையாளத்தைச் சேர்ந்தவர். தமிழகத்திலேயே வாழ்ந்தவர். தென்னகத்துப் பண்பாடுகளை உணர்ந்தவர் என்ற காரணத்தினால் மகாராஷ்டிர மக்களுக்கு இருக்கிற மொழி ஆர்வத்தை மதிக்கத்தக்க வகையில் அவர் நடந்துகொண்டிருப்பது பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். நமது சட்டமன்றத்திலும் அத்தகைய முறை பின்பற்றத்தகுந்தது. கவர்னர் உரை இப்படி இருக்கவேண்டுமென்று கூறுகிற காரணத்தினாலேயே கவர்னர் பதவி இருக்கவேண்டுமென்பதை ஆதரித்து விடுகிறேன் என்ற ஐயப்பாடு யாருக்கும் தேவையில்லை. கவர்னர் பதவி இருந்தால் அவர் ஆற்றுகின்ற உரை இப்படி இருக்கட்டும் என்ற யோசனையே தவிர இது வேறு அல்ல.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பத்திரிகையில் வந்த செய்தியை நானும் பார்த்தேன். மகாராஷ்டிர கவர்னர் அவர்கள் சிறிது நேரம் மராத்தியில் உரை நிகழ்த்தினார்கள், அப்புறம் ஆங்கிலத்தில் பேசினார்கள் என்பதாக. மராத்தி மொழியை ஆங்கிலத்தில் எழுதி வைத்துக்கொண்டு சிறிது நேரம் படித்தார்களாம். அதுபோல இங்கே வருகிற கவர்னர் அவர்களும் செய்ய வேண்டுமென்றால் செய்வார்கள். அது கனம் அங்கத்தினருக்குத் திருப்தி அளிக்குமானால் செய்யலாம்.

திரு. மு. கருணாநிதி : நான் மகாராஷ்டிர கவர்னர் அவர்களுக்கு மராத்தி மொழியில் உள்ள திறனைப் பாராட்ட முன்வரவில்லை. மராத்தி மக்களுக்குள்ள மொழி ஆர்வத்தைப் பாராட்டி, அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நடந்து கொள்ள முயன்ற உணர்ச்சியைத்தான் பாராட்டினேன். அதைக் கூடப் பாராட்டக் கூடாது என்றால் பாராட்டவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மகாராஷ்டிர கவர்னர் எனக்குச் சிறந்த நண்பர். எனக்கு அவரிடத்தில் மதிப்பு உண்டு. அவரது மொழித் திறனைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அங்கு நடந்த முறையைப் பற்றிச் சொன்னேன். அதுபோல இங்கும் நடக்கவேண்டுமா என்று கேட்டேன். அந்த கவர்னருடைய திறனைக் குறைவாகப் பேசவில்லை.

திரு. மு. கருணாநிதி : கவர்னர் பதவி என்பது தேவையில்லாத ஒன்று. அந்தப் பதவியின் காரணமாகச் செலவழிக்கப்படுகின்ற பணம் உள்ளபடியே வீண் விரயம் ஆகிறது என்ற கருத்தை நான்

பலமுறை எடுத்துச் சொல்லி வருகிறேன். அந்தப் பதவியில் இருப்பவர்களுக்கே கூட அந்தப் பதவி பிடிக்கவில்லை என்பதை அவர்களது வாய்மொழி மூலமாகவே கேள்விப்பட்டிருக்கிறோம். அவை செய்திப் பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. அண்மையில் டெல்லியில் நடந்த கவர்னர்கள் மகாநாட்டிலேயே கூட ஒரு கவர்னர் பேசும்போது, "நாங்கள் ராஜபவனக் கைதிகளாக இருக்கிறோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மகாராஷ்டிர கவர்னராக இருந்து அந்தப் பதவியைத் துறந்த அம்மையார் விஜயலட்சுமி பண்டிட் அவர்கள் "கவர்னர் பதவி என்பது ஆடம்பரமான, அலங்காரமான பொம்மைப் பதவியே தவிர அதனால் எந்தப் பயனும் கிடையாது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கவர்னராகப் பதவியில் இருந்திருக்கிற ஸ்ரீபிரகாசா அவர்களும் "இது சோர்வுள்ள, வேலை இல்லாத பதவி" என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். கேரளத்தில் இடைக்காலத் தேர்தலை நடத்தாது இருந்தால் தான் தாம் கவர்னராகப் பதவி ஏற்க முடியும் என்று முன்கூட்டியே உறுதிமொழி வாங்கிக்கொண்டு கேரள கவர்னராகப் பதவியேற்ற திரு. ஜெயின் அவர்களும் கூட அந்தப் பதவி பிடிக்காத காரணத்தினால் அதை ராஜிநாமாச் செய்துவிட்டு ஓடிவந்துவிட்டார்கள். நமது மாநில கவர்னர் அவர்களுக்கு அந்தப் பதவி பிடிக்கிறதா இல்லையா என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். மாநிலங்களில் கவர்னர் ஆட்சி என்று வருவதாக இருந்தால் அந்த நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு மாநிலத்தைக் கண்காணிக்கவேண்டும் என்பதற்காக இந்த முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது ஆளும் கட்சித் தரப்பில் இருந்து எடுத்துச் சொல்லப்படுகிற வாதமாகும். எல்லா மாநிலங்களிலும் ஏககாலத்தில் இப்படிப்பட்ட ஒரு அசாதாரண நிலை வந்துவிடவில்லை. வந்துவிடப்போவதும் இல்லை. எல்லா இடத்திலும் ஒரேசமயத்தில் 6 மாதத்திற்கு ஒருமுறை எங்கே ஆட்சி சாய்கிறது? ஆகவே டெல்லிப் பட்டணத்தில் இரண்டு மூன்று கவர்னர்களை வைத்துக்கொண்டுவிட்டால் போதும், எங்கெங்கே ஆட்சி சாய்கிறதோ அங்கங்கே அடுத்த தேர்தல் வரை அவர்களை அனுப்பி வைத்துவிடலாம். அப்படிச் செய்தால் இன்றையதினம் மாநில கவர்னர்களுக்காக என்று செலவழிக்கப்படுகிற பணம் வெகுவாக மிச்சப்படும்.

அடுத்து, இன்னொரு வாதத்தை நமது முதல் அமைச்சர் அவர்கள் எடுத்து வைக்கக் கூடும். கவர்னர் பதவி என்பது ஒரு ட்ரெடிஷன். எப்படி பிரிட்டானிய நாட்டில் அரசியார் சபைக்கு வந்து உரை நிகழ்த்திப்போவது சம்பிரதாயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதோ, அதுபோல இங்கே சபைக்கு கவர்னர் வருவதும் உரை நிகழ்த்திப் போவதும் ஒரு சம்பிரதாயம் என்றுகூட குறிப்பிட்டிருக்கிறார். எத்தனையோ சம்பிரதாயங்கள், வழிவழி வந்த பழக்கங்கள், ட்ரெடிஷன் என்று சொல்லப்பட்டு வந்தவை எல்லாம் மாற்றப்பட்டிருக்கின்றன. ட்ரெடிஷன் என்ற மதிப்புக் காரணமாக அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. வழிவழியாக





வந்த தேவ பானம் என்று சொல்லப்பட்டு வந்தது இன்றைக்கு மதுவிலக்குச் சட்டத்தின் மூலம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. வழிவழியாக முப்பத்து முக்கோடி தேவர்களுக்குப் பயன்பட்டு வந்ததாயிற்றே அது அப்படியே இருக்கவேண்டுமென்று சட்டம் பயந்து ஒதுங்கிவிடவில்லை. வருணாசிரம தர்மம் இன்றைக்குத் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் நிர்மூலம் ஆக்கப்பட்டிருக்கிறது. ட்ரெடிஷன் என்பதற்காக அல்லது வழிவழியாக வந்தது என்பதற்காக ஒன்றை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக் காலத்து மந்திரிகள் இப்படித்தான் இருந்தார்களா? பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூண்டு தலையிலே முடியும், கையிலே தடியுங் கொண்டு, "அமைச்சரே, மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?" என்று கேட்கும் அரசனுக்கு "ஆம் அரசே!" எனப் பதில் அளித்தார்கள் என்பார்களே, அதுபோலத்தான் இன்றைக்கு அமைச்சர்கள் வருகிறார்களா? அந்தச் சம்பிரதாயம் என்பது மாற்றப்படவில்லையா? அதுபோல மக்கள் ஆட்சியில், மக்கள் சர்க்காருக்குத் தேவையற்றவர் என்றால் கவர்னர் பதவியை எடுத்துவிட முன்வரவேண்டுமே தவிர அது ட்ரெடிஷனாக இருக்கவேண்டுமென்பது சரியல்ல. ட்ரெடிஷன் என்ற காரணத்தினால் இன்றைக்கு கவர்னர் பதவியை வைத்துக்கொண்டிருப்பது ஏராள பண விரயத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்பதோடு கூட ஆடம்பரங்களும், அலங்காரங்களும்--வெறும் கேலிக் காட்சிகளாகவும் தான் இருக்கிறதே தவிர மக்கள் சர்க்காருக்கு உகந்ததாக இல்லை. ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. இந்த மன்றத்திலே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வகையிலே செயல்படுகின்ற உறுப்பினர்களைப்பற்றி, பொதுவாக எதிர்க்கட்சி உறுப்பினர்களைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் என்ன எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தொடக்கத்திலேயே நான் சொன்னேன். இதிலே விபரீதமான வேடிக்கை என்னவென்றால் எதிர்க்கட்சியைப்பற்றி அவர் சட்டமன்றத்திலே கொண்டிருக்கின்ற எண்ணம் ஒன்று, வெளியிலே பேசுகின்ற கருத்துக்கள் வேறு. ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற ஆட்சியில் எதிர்க்கட்சி மிக மிக முக்கியமாகத் தேவை என்பதைக் கூறவந்த வள்ளுவர்,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்று கூறியிருக்கின்றார். கடிந்த அறவுரை சொல்லுகின்ற பெரியவர்கள் இல்லாமல் ஒரு மன்னன்—அந்தக் காலத்திலே வள்ளுவர் எழுதியதால் மன்னன் என்று எழுதினார், இந்தக் காலத்திலே எழுதியிருந்தால் மன்னன் என்று எழுதாமல் ஆட்சி என்று எழுதியிருப்பார்—இருப்பானேயானால் அப்படிப்பட்டவர்களைக் கொண்டிராத ஒரு மன்னன் பகைவர்கள் கெடுக்காமல், தானே கெட்டுவிடுவான் என்று குறிப்பிடுகிறார். இடித்துச் சொல்லுகின்ற, எடுத்துச் சொல்லுகின்ற, வாதிடுகிற, போராடுகிற சட்டமன்றத்திலே ஜனநாயக ரீதியிலே கருத்துக்களை எடுத்து வைக்கிற தன்மையில் எதிர்க்கட்சி செயலாற்றினால்தான் அது ஜனநாயகத்திற்கு வலிமையளிக்க முடியும். முதலமைச்சர் அவர்கள்

என்ன காரணத்தாலோ சில இடங்களிலே பேசுகின்றபொழுது குறிப்பிட்டார்கள், வெளிநாடுகளிலிருந்து வருகின்ற தலைவர்கள் எல்லாம் ஆளுங்கட்சித் தலைவர்களைச் சந்திப்பதில்தான் பெருமையடைகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்தாலோ, அவர்கள், அய்யோ, போச்சே, எதிர்க்கட்சித் தலைவர்கள் இவ்வளவுதானா கேவலம்—என்று சொல்வார்கள் என்று பேசியிருக்கிறார்கள். நான் திடுக்கிட்டுப்போனேன்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு"

என்ற குறளை உணர்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களா இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கொட்டினார்கள் என்று எண்ணித் திடுக்கிட்டேன். எதிர்க்கட்சி கேவலமான கட்சியாக இருக்கட்டும், இதை நான் வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறேன். ஒரு கேவலமான எதிர்க்கட்சியை ஆளுங்கட்சி பெற்றிருப்பதால் ஆளுங்கட்சிக்கு என்ன பெருமை வந்துவிடப் போகிறது. இப்படிப்பட்ட எதிர்க்கட்சியையா வெற்றிகண்டீர்கள் என்று கேட்கமாட்டார்களா ? போரஸ் மன்னனை வெற்றிகண்டதால் அலெக்ஸாண்டருக்குப் பெருமை வந்தது; கலிங்கத்தை வென்றதால் கருணாகரனைப்பற்றி ஜெயங்கொண்டார் பரணிபாடினார். ஆனால் முதலமைச்சர் அவர்கள் கேவலமான எதிர்க்கட்சி என்று கூறுவது அவருக்குப் பெருமையை அளிக்கக்கூடிய சங்கதியா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கோட்டையை இடித்தேன் ; கொடியை உயர்த்தினேன் ; அகழிகளைத் தூர்த்தேன்; அரசனைக் கைது செய்தேன் என்றால் வீரா, வீரா, மாவீரா; வருக; வருக; என்று வாழ்த்துபவர்கள். ஆனால், குப்பைமேட்டை முற்றுகையிட்டேன்; கோழிகளைப் பிடித்தேன்; கொடிமரத்தை நாட்டிவிட்டேன் என்று சொன்னால் வீராதி வீரர், சூராதி சூரர், தீராதி தீரர் என்று விருதுகள் வழங்குவார்கள். வலிவுள்ள எதிர்க்கட்சி, மதிக்கக்கூடிய எதிர்க்கட்சி இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டுவது தான் அவருக்குப் பெருமை, நாட்டுக்குப் பெருமை. கேவலமான எதிர்க்கட்சி என்று சொல்லி அதனுடைய தலைவர்களை யார் வந்து சந்திப்பார்கள், அவர்களுடைய வீட்டுக்கா வந்து சந்திப்பார்கள் என்று கோபத்துடன் பேசிய வார்த்தைகள் பொறுப்புவாய்ந்த, மதிப்பு வாய்ந்த முதலமைச்சர் அவர்களுடைய வார்த்தைகளா என்று எண்ணி, எண்ணி நான் ஏங்கியது உண்டு. எதிர்க்கட்சி இல்லாமல் ஜனநாயகம் நிலைபெறமுடியாது. சீவிச் சிங்காரித்து, பூச்சூடி, பொட்டிட்டு, பட்டுடுத்தி, புருவ வை தீட்டிக்கொண்டாலும் எவ்வளவுதான் பேரழகியாக இருந்தாலும், தான் ஒரு முறையாவது நிலைக் கண்ணாடிக்கு முன் நின்று சரிபார்க்கத்தான் தோன்றும். அதைப்போல ஆளுங்கட்சி என்னதான் அமோகமாக வாழ்ந்தாலும் எதிர்க்கட்சி என்ற நிலைக் கண்ணாடி தேவைதான். நிலைக் கண்ணாடியில் ரசம் இல்லை என்று கூறுவார்கள். முகம் இல்லாதவர்கள்தான் அப்படிக் கூறுவார்கள். ஆனால், அகமும், முகமும் உள்ள நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்படிக் கூறமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அம்மியும் குழவியும் சேர்ந்துதான் மிளகாயை அரைக்கமுடியும். அம்மிதான் ஆளுங்கட்சி, குழவிதான்



எதிர்க்கட்சி, இந்த இரண்டும் சேர்ந்துதான் செயலாற்றமுடியும். குழவி சிறியது என்று அம்மியை மட்டும் வைத்துக் கொண்டால் மிளகாய் அரைக்க முடியாது; சமையல் நடக்காது. ஆகவே, ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும், அம்மியும் குழவியுமாக இருந்து செயலாற்றினால்தான் ஜனநாயகம் உருவாகும் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு கஷ்டம். எதிர்க்கட்சியைப் பாராட்டுகிறார் என்ற காரணத்திற்காகக்கூட பல கண்டனங்கள் வரலாம். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், இந்தத் தள்ளாத வயதில்—தள்ளாத வயது என்று சொன்னால் முதலமைச்சர் அவர்களுக்குக் கோபம் வரும், எனக்கா தள்ளாத வயது என்று சொல்வார்கள், அவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்—நோய் நொடிகளில் விழுகின்ற காலத்திலேகூட ஆற்றுகின்ற பணி, எடுத்துக்கொள்ளுகின்ற சிரமம் இவற்றை கட்சி மாச்சரியத்தை விட்டு பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அதற்காக நான் அவரை வாழ்த்துகிறேன். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிட்டாரோ, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சலுகைகள் அளிக்கிறாரோ என்றெல்லாம்கூட இந்தச் சென்னை மாநகரில் சாந்தோம் பக்கத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர்கள் பேசியிருக்கிறார்கள். பக்தவத்சலம் அவர்களே, ஏன் சலுகை காட்டுகிறீர்கள், ஒழுங்காக நடந்துகொள்ளாவிட்டால் ஓட ஓட விரட்டுவோம் என்றும் அதைவிடப் பயங்கரமாகவும் பேசினார்கள் என்று நான் இங்கே குறிப்பிட்டபொழுது, முதலமைச்சர் அவர்கள் அதை ஒத்துக்கொண்டதை இந்த மன்றம் அறியும். இப்படிப்பட்ட நெருக்கடி காலங்களிலும்கூட முதலமைச்சர் அவர்கள், அவர்களைப் பொருட்படுத்தாமல் எதிர்க்கட்சிக்குப் பாதுகாப்பளிப்பதன் மூலம் ஜனநாயகத்தைக் காப்பதில் போதிய கவனம் செலுத்தவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கேரள இலக்கியத்தில் ஒரு கதை உண்டு. ஒரு யானை, அந்த யானை அதனுடைய பாகனுடைய கட்டளைப்படி தான் நடக்கும். அந்த யானை பெரிய பெரிய மலைபோன்ற மரங்களையும் கூட பாகன் கட்டளையிட்டவுடன் சுமக்கும். ஒரு திருவிழாவின்போது ஒரு குழி தோண்டப்பட்டு, அந்தக் குழியில் ஒரு கம்பத்தை நட வேண்டும் என்பதற்காக அந்த யானையிடம் கொடுத்து அந்தக் கம்பத்தை அந்தக் குழியில் நடச்சொன்னார்கள். ஆனால் யானை குழியில் கம்பத்தை நடாமல் நின்றது. பக்கத்திலே இருந்தவர்கள் எல்லாம் அதை விரட்டினார்கள். அப்படியும் அது நடவில்லை. பக்கத்திலே நின்ற பாகன் அங்குசத்தாலே குத்து குத்தென்று குத்தினான்; எல்லோரும் அந்த யானையை அடித்தார்கள். அப்படியும் அந்த யானை கம்பத்தை நடாமல் நின்றுகொண்டே இருந்தது. பெரிய பெரிய மரங்களைக்கூட கட்டளையிட்டவுடன் தூக்குகின்ற யானை, அன்று அந்தக் கம்பத்தை நடாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். கடைசியாக அந்த யானை துதிக்கையை குழியிலே விட்டு, ஒரு சிறிய பூனைக்குட்டியை வெளியே எடுத்துவிட்டது. யானை எவ்வளவு பெரியது என்பதையும், பூனை எவ்வளவு சிறியது என்பதையும் உணர்ந்திருக்கிறோம். அவ்வளவு பெரிய யானை சிறிய பூனைக்

[திரு. மு. கருணாநிதி] [10th March 1966

குட்டியைக் காப்பாற்றியிருக்கிறது. யானைதான் காங்கிரஸ் கட்சி பூனைதான் எதிர்க்கட்சி. யானை, சிறிய பூனைக் குட்டியைக் காப்பாற்றுவதற்காக அவ்வளவு கஷ்டங்களையும் எப்படிப் பொருட்படுத்தவில்லையோ அதைப்போல பொறுமையாக ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள். நான் இப்படிச் சொன்னேன் என்பதால், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கருணாநிதி எதிர்க்கட்சி பூனைக் குட்டி என்பதை ஒத்துக்கொண்டார் என்று முதலமைச்சர் அவர்கள் கூறலாம். அப்படிச் சொன்னால், யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும், அதுவும் 1967-ல் வரும் என்று கருதுகிறேன்.

இந்த மன்றத்தில் சிக்கனம், நிர்வாகச் செம்மை இவைகளுக்காக மந்திரிகள் கடைப்பிடிக்கவேண்டிய பல முறைகள் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. மந்திரிகள் சுற்றுப் பயணத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. மந்திரிகள் நாடு சுற்றவேண்டாமா, அவர்கள் மக்களை அறிய வேண்டாமா, சீர்கேடுகளை உணர்ந்து கொள்ள வேண்டாமா என்றெல்லாம் அம்மையார் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் அப்படிச் சொன்னதை மட்டும்தான் வரவேற்கிறேன். ஆனால் இந்த மன்றத்திலே செய்தித் துறை அமைச்சராகப பணியாற்றுகின்ற திரு. பூவராகன் அவர்கள் ஜூலை மாதத்திலிருந்து ஜனவரி மாதம் வரையில் சர்க்காருடைய பணத்தை மக்களுடைய வரிப்பணத்தைப் பயன்படுத்தி அமைத்த அவரது பயணங்கள் முழுமையும் அவருடைய சொந்தத் தொகுதியாகிய விருத்தாசலம் தொகுதியையே சுற்றிச் சுற்றி வருகிறது. 1965-ம் ஆண்டு ஜூலை
1-00 p.m. 19-ம் தேதி விருத்தாசலம் செல்கிறார். 20-ம் தேதி விருத்தாசலம் தொகுதி உயர்நிலைப் பள்ளி விழாவிலே கலந்து கொள்கிறார். அடுத்து அங்கே 20-ம் தேதி பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களையும், பஞ்சாயத்து போர்டு பிரசிடென்டுகளையும் ஒரு கூட்டத்தில் கூட்டிவைத்துப் பேசுகிறார். பிறகு மாதர் சங்க அமைப்பாளர்களையும், உறுப்பினர்களையும் கொண்ட ஒரு கூட்டத்தில் பேசுகிறார். பிறகு 7 மணிக்கு காங்கிரஸ் கட்சியின் பொதுக் கூட்டத்திலே பேசுகிறார். யாருடைய செலவிலே சர்க்கார் செலவிலே, மக்கள் தருகிற வரிப்பணம். அந்த வரிப் பணத்தைக் கொண்டு அந்த சுற்றுப் பயணம், அந்தச் சுற்றுப் பயணத்திலே? காங்கிரஸ் கட்சிப் பொதுக் கூட்டத்திலே அமைச்சர் பேசுகிறார். ஆகஸ்டு 19- ம்தேதி விருத்தாசலம், 27-ம் தேதி விருத்தாசலம், 28-ம் தேதி விருத்தாசலம் தொகுதி, 29-ம் தேதி விருத்தாசலம் தொகுதி, 30-ம் தேதி பகல் வரை அங்கு இருக்கிறார். செப்டம்பர் மாதம் 7-ம் தேதி விருத்தாசலம், 8-ம் தேதி விருத்தாசலம், 19-ம் தேதி விருத்தாசலம், 20-ம் தேதி விருத்தாசலம், 21-ம் தேதி விருத்தாசலம், பஞ்சாயத்து போர்டு பிரசிடென்டுகளையும். அங்கத்தினர்களையும் சந்தித்துப் பேசுகிறார். பஞ்சாயத்து சேர்மன், பஞ்சாயத்து போர்டு பிரசிடென்ட் ஆகியவர்களை அடிக்கடி சந்தித்து என்னதான் பேசுகிறாரோ தெரியவில்லை. அக்டோபர் மாதம் 19-ம் தேதி விருத்தாசலம், 20-ம் தேதி விருத்தாசலம். நல்ல வேளையாக நவம்பர் மாதம் தப்பிற்று. டிசம்பர் மாதம் 15-ம் தேதி விருத்தாசலம், 16-ம் தேதி விருத்தாசலம்



10th March 1966] [திரு. மு. கருணாநிதி]

ஜனவரி 8-ம் தேதி விருத்தாசலம், 9-ம் தேதி விருத்தாசலம். இப்படி ஒரு சுற்றுப்பயணத் திட்டம் சர்க்கார் செலவில் மக்கள் தருகிற வரிப்பணத்தில் தொகுதியைச் சுற்றிச் சுற்றி வருகிறார் நாடாளுகின்ற அமைச்சர். நடுநிசியில் மாறுவேடத்தில் சென்று நாட்டு நிலையை அறிய வேண்டிய அமைச்சர் பெருமக்களிலே ஒருவர் இப்படிப்பட்ட சுற்றுப் பயணத்தை மேற்கொள்கிறார்.

மந்திரிகள் சம்பளம் குறைக்கப்பட வேண்டுமென்று வரவு செலவுத் திட்ட விவாதத்திலேயே எடுத்துக் கூறினேன். முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். பதில் அளிக்கவில்லை. பதில் அளிக்க விட்டுப்போயிருக்குமே தவிர, பதில் அளிக்க மறுப்பார்கள் என்று எண்ணவில்லை. இப்போதாவது அதைப் பற்றிப் பதிலளிப்பார்கள் என்று கருதுகிறேன். ஏறத்தாழ மந்திரிகள் 1,500 ரூபாய் பெறுகிறார்கள். ஆனால் அவர்களுடைய டிரைவருடைய அடிப்படைச் சம்பளத்தைப் பார்த்தால், 70 ரூபாய் அடிப்படைச் சம்பளம்; கிராக்கிப்படி 33 ரூபாய்; வீட்டு வாடகை 10 ரூபாய்; ஸ்பெஷல் பே 10 ரூபாய்; ஆக மொத்தம் 123 ரூபாய் தருகிறார்கள். நானே என்னுடைய டிரைவருக்கு 120 ரூபாய் கொடுக்கிறேன்; வீடு வேறு கொடுத்திருக்கிறேன். ஆனால் மந்திரிகளுடைய டிரைவர்கள் 123 ரூபாய்தான் பெற முடிகிறது. சட்டசபையில் நாள் எல்லாம் கால் கடுக்கப் பணி புரிந்து கொண்டிருக்கும் காவலர்களுக்கு ஒரு நாளைக்குப் பத்தரையணாதான் படி கொடுக்கப்படுகிறது. அது அவர்களுக்குப் போதுமானதா? அதிலே கொஞ்சம் இரக்கம் காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டசபையில் கேட்கப்படுகிற கேள்விகள் மிக முக்கியமானவை. அந்தக் கேள்வி நேரம் சட்டசபையில் ஒரு இன்றியமையாத கட்டம். கேள்விகளுக்குச் சரியான தகவல்களை நாங்கள் பெற முடியவில்லை என்ற குற்றச்சாட்டைப் பல முறை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் அது கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதிலே மிகச் சாமர்த்தியம் வாய்ந்தவர்கள். தொழிலமைச்சர் அவர்கள் முற்றும் பதில் அளிக்க வேண்டுமென்பதிலே ஆர்வமுடையவர்கள். நான், ஏற்றத்தாழ்வு இருப்பதாகச் சொல்லவில்லை. அவர்கள் சாமர்த்தியத்தின் காரணமாக, யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொண்டு போகட்டும் என்ற முறையிலே பதில் கூறுவார்கள். இரண்டு நாளைக்கு முன்பு 'பாதுகாப்புச் சட்டத்தின் மீது பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்போது சில பத்திரிகை ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள்; சில பத்திரிகை ஆசிரியர்கள் கைது செய்யப்படவில்லை. இந்த வேறுபாட்டுக்கு என்ன காரணம்?' என்று கேட்டேன். கனம் முதலமைச்சர் அவர்கள் வெகு சாதுரியமாக 'சிலர் கைது செய்யப்படுவோம் என்று சந்தேகப்பட்டு அவர்களாகவே போய் சரணடைந்து விட்டார்கள்' என்று குறிப்பிட்டார்கள். இது எவ்வளவு உண்மைக்கு மாறான விஷயம் என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் சொல்ல விரும்புகிறேன். நான் நடத்துகிற 'முரசொலி' பத்திரிகையின் மீது பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்த மாதிரி ஒரு பத்திரிகை ஆசிரியர் நடந்து கொண்டதைத் தெரிந்துதான் சொன்னேன். ஒரு கட்டத்திலே யாரையும் கைது செய்ய வேண்டாமென்று சொல்லியிருந்தேன். அவ்வாறு ஒருவர் கைது செய்யப்படுவோமோ என்று நினைத்து தானாகவே சரணடைந்து விட்டார் என்று சொன்னது தெரிந்துதான் சொன்னேன். நான் சொன்னதில் உண்மைக்கு மாறானது ஒன்றுமில்லை.

திரு. மு. கருணாநிதி: இதைத்தான் சாமர்த்தியம் என்று சொல்கிறேன். அப்போதே ஒரு பத்திரிகை ஆசிரியரைப் பற்றி என்று விளக்கமாகச் சொல்லவில்லை. முரசொலி தினசரிக்குப் பொறுப்பாக இருக்கும் மாறன் அவர்கள் தொழில் அலுவலகத்தில் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தானாகப் போய்ப் போலீசாரிடத்தில் சரணடைந்து விடவில்லை. இது சம்பந்தப்பட்ட காரணம் தெளிவாகச் சொல்லப்படவில்லை என்பதால்தான் இதைச் சொன்னேன்.

பொதுவாக, இந்தச் சட்டமன்றத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் நம்முடைய அமைச்சர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதற்காக மத்திய சர்க்காரிடத்திலே போராட வேண்டும்; வாதாட வேண்டும் என்று வரவு செலவுத் திட்ட விவாதத்திலேயே குறிப்பிட்டு இருக்கிறேன். அவற்றைப் பற்றி நீண்ட நேரம் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று குறிப்புகள் வைத்திருந்தாலும், அவற்றைப் பற்றிப் பேச நேரம் இல்லாத காரணத்தால் அவற்றை விட்டு விட்டு ஒன்றே ஒன்றைப் பற்றி மட்டும் குறிப்பிட்டுப் பேசி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, மத்திய சர்க்காரிடத்திலே, மொழிப் பிரச்சினையிலே இந்த நாட்டு மக்களுடைய உணர்ச்சிகளை எடுத்துச் சொல்லி வழிவகை காணத் தவறியதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்பது தான் நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையின் சாராம்சமாகும். அதைப் பற்றிக் குறிப்பிடுவது என்னுடைய பேச்சுக்கு முடிவுரையாக அமையும் என்று கருதுகிறேன். மொழிப் பிரச்சினை பற்றி பேசும்போதெல்லாம், இந்தி மொழி பற்றி விவர்களுக்கு ஒன்றும் இல்லை; பெரியவருடைய உபதேசத்தின்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்' என்று கூறுவார்கள். பெரியவர், பெரியவர் என்று குறிப்பிடுவது யாரை என்று இந்த மன்றம் நன்கு தெரிந்து கொண்டுதான் இருக்கிறது. மக்களும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர் ஒரு காலத்திலே அமைச்சருக்கு பெரியவராக இருந்தாரே; அப்படி பெரியவர் என்று கூறுகிறார் என்று கருதுகிறேன். திரு. ராஜாஜி அவர்களைப் பெரியவர் என்று குறிப்பிடுவதிலே எந்த விதமான அபிப்பிராய பேதமும் இல்லை. அவருடைய உபதேசப்படிதான் நடக்கிறோம் என்று கூறுகிறார்களே; அதில் இருக்கிற அபிப்பிராயபேதத்தைத்தான் அழுத்தத்திருத்தமாகச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1938-ம் ஆண்டு ராஜாஜி அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் இந்தியை இங்கே நுழைத்தார். நுழைப்பதற்கு, கட்டாயமாக ஆக்குவதற்குக் காரணமாக இருந்த ராஜாஜி அவர்கள்தான்



இன்றையதினம் இந்தியை எதிர்க்கிறார். அவர் எங்கள் பக்கம் வந்திருக்கிறாரா அல்லது நாங்கள் அவர் பக்கம் போயிருக்கிறோமா என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பெரியவராவது எங்களை 'வாழ்க' என்று வாழ்த்துகிறார்; 'நீங்கள் ஆள வருக' என்று எங்களை வாழ்த்தி வரவேற்கிறார். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆதரிக்கிற ஒரு பெரியவர் 'பக்தவத்சலம் ஆட்சியை ஒழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்' என்று கூறுகிறார். இதற்குப் பிறகும், எப்படித்தான் மனம் துணிகிறதோ, எப்படித்தான் அவர்களுடைய ஆதரவைக் கோருகிறார்களோ எனக்குப் புரியவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொல்வதுதான் எனக்குப் புரியவில்லை.

**திரு. மு. கருணாநிதி:** விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், எங்களுடைய முன்னாள் தலைவர் பெரியார் ராமசாமி அவர்களைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். 'கனம் பக்தவத்சலம் அவர்களுடைய ஆட்சியை ஒழித்துக் கட்டி விட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன்' என்று குடந்தைப் பொதுக் கூட்டத்தில் முழங்குகிறார். குடந்தை நகரசபைத் தலைவரையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு கூறுகிறார். நகரசபைத் தலைவர் யார்? கதர்சட்டை போட்டவர், குடந்தைத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர். காங்கிரஸ் உறுப்பினர்—அவரையும் வைத்துக்கொண்டு சொல்லுகிறார். காங்கிரஸ் கட்சி போட்டுக்கொடுத்த மேடையில் பட்டொளி வீசப் பறக்கிறது. காங்கிரஸ் கட்சியின் கொடி. அதிலே 'பக்தவத்சலம் அவர்களின் ஆட்சியை ஒழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்' என்றால் உள்ளபடியே இந்தக் கூட்டுறவைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிற விஷயம் தெரிகிறது. என்னைப் பற்றிப் பேசுவது புரியாமல் இல்லை. அதற்கு நான் என்ன செய்கிறேன். என் குத்தலாகப் பேசுகிறார் என்றுதான் புரியவில்லை. நான் எந்த வகையிலே அதற்கு இணங்குகிறேன் என்பதுதான் புரியவில்லை.

**திரு. மு. கருணாநிதி:** அவருடைய ஆதரவைத் தேர்தல் நேரத்திலே விரும்புகிறார்கள். அவருடைய ஆதரவால் வாக்குப் பெறுகிறார்கள் என்பதுதான் என்னுடைய வாதம். அதைத்தான் இங்கே விளக்க விரும்புகிறேன். அவருடைய ஆதரவு எல்லாத் தேர்தல்களின் போதும் தேவை; பொதுத் தேர்தல் வர இருக்கிறது; அவருடைய ஆதரவு தேவை இல்லை என்று அமைச்சர் கூறுகிறாரா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** என்னைப் பற்றிக் குறிப்பாகச் சொல்வதுதான் புரியவில்லை. வேறு ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுவது வேறு விஷயம்.

**திரு. மு. கருணாநிதி:** "பக்தவத்சலம்" என்றால் காங்கிரஸ், "காங்கிரஸ்" என்றால் "முதலமைச்சர் பக்தவத்சலம்" என்று கருதிக் கொண்டிருந்தேன். அவர்கள் அது தனித் தனி என்று சொல்கிறார்கள். அதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

இந்தி மொழி பற்றி இங்கு ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை, தமிழகத்து மக்களுடைய உணர்ச்சிகளை மத்திய சர்க்காரில் எடுத்துச் சொல்கிற பொறுப்பை அமைச்சர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் எடுத்துச் சொல்கிற நேரத்தில், சென்ற ஆண்டு நடைபெற்ற சம்பவங்களை—கனம் சபாநாயகர் அவர்களே, உங்கள் வாயிலாக—அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சென்ற ஆண்டு இந்தியை எதிர்த்து, தமிழ் வாழ வேண்டுமென்பதற்காக இந்தி பேசாத மாநிலத்து மக்கள், உத்திரப்பிரதேச மக்கள் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிபவர்களாக, பீகாருக்குப் பின்னோடுபவர்களாக, ஒரிஸாகாரர்களுக்கு மண்டியிடுபவர்களாக, இந்தி பேசுகிற மக்களுடைய ஆதிக்கத்திற்கும் வெறிக்கும் அடிமையாக இருக்கமாட்டோம், தாய் மொழிக்கு ஏற்பட்ட ஆபத்தை, தமிழ் மொழிக்கு ஏற்பட்ட ஆபத்தைத் தடுக்கத் தயார், தயார் என்று ஆயிரக்கணக்கான தமிழர்கள் போர்க் கொடி உயர்த்தவும், அதன் காரணமாக நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொலை செய்யப்பட்டதும், பிஞ்சுக் குழந்தைகள் உயிர் பறிக்கப்பட்டதும், வயதானவர்கள், வாலிபர்கள் நடுத்தெருவில் துப்பாக்கிப் பிரயோகத்தால் ரத்த மழை பொழியப் பொழியச் சுடப்பட்டுக் கிடந்ததுமான அலங்கோலமான காட்சிகளை யாரும் மறந்துவிடுவதற்கில்லை.

**கனம் திரு. பூ. கக்கன்:** அதற்கெல்லாம் காரணம் தி.மு.க. தான்.

திரு. மு. கருணாநிதி: அதுமாத்திரமல்ல. உலகச் சரித்திரத்திலே எந்தப் போராட்டத்திலும் அது சுதந்திரப் போராட்டமானாலும் சரி, மொழிப் போராட்டமானாலும் சரி, எந்தப் போராட்டத்திலும் நடைபெறாத அளவிற்கு வீரத் தமிழ் சிங்கங்கள் சின்னசாமி, சிவலிங்கம், அரங்கநாதன் போன்றவர்கள் தங்கள் அரிய துணைவியரை, அருமைப் பெற்றோர்களை, தாங்கள் பெற்றெடுத்த குழந்தைகளை நினைத்துப் பார்க்கக் கூட நேரமில்லாமல் "எங்கள் மனைவிகளின் தாலி பறி போனாலும் பரவாயில்லை எங்களைப் பெற்றெடுத்த தமிழ் தாயின் தாலி பறி போக விட சம்மதிக்க மாட்டோம், சம்மதிக்கமாட்டோம்" என்று கூறி தங்கள் இன்னுயிரை நீத்தார்கள். தீயில் கருகிச் செத்த அவர்களின் பிணங்கள் மீது ஆணையிட்டுக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன், தமிழ் தாயின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன், இந்தி பேசாத மக்களின் உணர்வுகளை மதித்து தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து அவற்றை மத்திய அரசாங்கத்தினிடம் எடுத்துச் சொல்லவேண்டும். அப்படி எடுத்துச் சொல்வீர்களேயானால், இந்த நாட்டு மக்களுக்கு நீதி வழங்குவீர்களானால், இந்தி என்றென்றைக்கும் வரவே வராது என்று சொல்வீர்களானால், அந்த வெற்றிப் புன்னகையோடு திரும்பி வருவீர்களானால் நான் உறுதி அளிக்கிறேன், என் வலது கை எலும்பை உடைத்து அந்த எலும்பினால் முதல் அமைச்சர் அவர்களின் சிலையை செய்து வைக்க நான் தயாராயிருக்கிறேன். வெற்றிப் புன்னகையோடு திரும்புங்கள், தமிழ் தாயின் தன்மானத்தைக்





காப்பாற்றுங்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, மணி 1-10-க்கு மேலாகிறது. 1-45-க்கு மேல் பேசவேண்டியிருக்கும். முக்கால் மணி நேரத்தில் முடிக்கப் பார்க்கிறேன். அப்படி முடிக்க முடியவில்லையானால் அதற்கு மேலே பேச அனுமதிக்கவேண்டியிருந்தால் அப்படி அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மான்யங்கள் மூன்று, ஆனால் ஒன்றுக்கொன்று பொருத்தமானவைதான். எல்லாவற்றிற்கும் அடிப்படை இந்த மன்றம். இந்த மன்றத்தைப் பற்றிய மான்யம் ஒன்று. இதற்கு முன்பெல்லாம் இம்மன்றத்தைப் பற்றிய விவாதம் தனியாக எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டது. அதில் அதிகமான காரசாரத்திற்கு இடமிருக்காது. சர்ச்சை இருப்பதற்கு இடமில்லை. பொதுவாக மன்றத்தின் மதிப்பு பாதுகாக்கப்படவேண்டும், மன்ற அங்கத்தினர்களின் வசதிகள் கவனிக்கப்படவேண்டும், மன்றம் மேலும் சீரிய முறையில் இயங்க வேண்டும் என்ற கருத்து எல்லோருக்கும் உண்டு. ஆகவே, அவர்வர்கள் தங்கள் யோசனைகள், தங்கள் குறைகள் இவற்றைச் சொல்லுவார்கள். அடுத்தபடியாக, தேர்தல். தேர்தல் என்றவுடனே 1967 தேர்தல்தான் கண்முன்னே இருக்கிறது. ஆண்டுதோறும் தேர்தல் பற்றி தொடர்ந்து கவனம் செலுத்தவேண்டிய நிமித்தம் இருக்கிறது. ஆகவே, ஆண்டுதோறும் தேர்தல் பற்றி மான்யமும் வருகிறது. லெஜிஸ்லேச்சர் எப்படியோ அப்படியே தேர்தலும் அடிப்படையானதுதான். ஆகவே, இவற்றில் ஒரு ஒற்றுமை இருக்கிறது, பொருள் இருக்கிறது. அதேமாதிரித்தான் ஹெட் ஆஃப் ஸ்டேட்டும். இவற்றையெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு ஜனநாயக முறையில் சட்டமன்றத்தின் அங்கீகாரத்தின் பேரில் நடத்தவேண்டியிருக்கிறது. ஆகவேதான், இம் மூன்றும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. கனம் எதிர்க்கட்சி துணைத்தலைவர் அவர்கள் ஒன்று கூறினார்கள். இன்றைக்கு முக்கியமாக பல பிரச்னைகள் விவாதத்திற்கு வர இருந்தன. இன்றுதான் கூட்ட ஆரம்பத்தில் வெகு குறைவாக கனம் அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள் என்று கூறினார்கள். உண்மைதான். சாதாரணமாக, அமைச்சரவையைப் பற்றிய விவாதம் வருகின்றபோது அதில் எல்லோருக்கும் மிகுந்த அக்கறையிருக்கும். விசிட்டர்ஸ் காலரி கூட நிறைந்திருக்கும். பார்ப்பதற்கு, விவாதம் கேட்பதற்கு, முடிவைத் தெரிந்து கொள்வதற்கு என்று விஸிட்டர்ஸ் காலரியில் கூட நிறைந்திருக்கும். பார்ப்பதற்கு, விவாதம் கேட்பதற்கு, எதிர்பார்க்கப்படும். ஜனநாயகத்தில் முக்கியமாக எதிர்க்கட்சி வேண்டும். எதிர்க்கட்சி சீராக இயங்கவேண்டும் என்பதுதான் என் கருத்து. எதிர்க் கட்சியின் அவசியத்தை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். அதுபற்றி வற்புறுத்திக் கொண்டும்தான் வருகிறேன். எதிர்க்கட்சியை கேவலமாகப் பேசினேன் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சி வேண்டுமென்றுதான் இங்கும் சரி, வெளியிலும் கூட வற்புறுத்திப் பேசி வந்திருக்கிறேன். நான் எந்த சந்தர்ப்பத்தில் என்ன சொன்னேன் என்று பார்க்கவேண்டும்.

எதிர்க்கட்சிகளைப் பற்றி நான் குறைவாகப்பேசவில்லை. அப்படி எதிர்க்கட்சிகளைப்பற்றி குறைவாகப் பேசக்கூடிய மனமும் எனக்கு இல்லை. எந்த காண்டெக்ஸ்டில் பேசினேன்? ஒரு பெரிய கட்சியின் தலைவரைப் பற்றி குறைவாகப் பேசியதுபற்றிக் குறிப்பிட்டுப் பேசினேன். அவர்களை ஏன் அழைத்தார்கள்? என்கிறார்கள். வெளிநாடுகளில் இருந்து வருகிற பெரும் பெரும் தலைவர்கள் எல்லோரும் அவர்களைக் கண்டார்கள்; எங்களை காணவில்லையே என்று வருத்தப்பட்டால் என்ன பயன்? ரஷ்ய நாட்டுத் தலைவர்கள், இங்கிலாந்து நாட்டிலிருந்து வருகிற தலைவர்கள், அமெரிக்க நாட்டுத் தலைவர்கள் அவர்களை அல்லவா கேட்கவேண்டும். இதில் குறைபட்டுக் கொண்டால் என்ன பயன் என்று சொன்னேன். அந்தமாதிரி காண்டெக்ஸ்டில் சொன்னேனே தவிர, இங்கு ஏதோ பயந்து பேசவில்லை. இங்கேயானாலும் சரி, வெளியிலானாலும் சரி என்னைப் பொறுத்த வரையில் எனக்கு இரண்டுக்கும் வித்தியாசம் இல்லை, எங்கும் எனக்கு ஒரேமாதிரி அபிப்பிராயம்தான். எப்படிப் பேச வேண்டுமோ அப்படித்தான் பேசுகிறேன். இந்த மான்யம் அமைச்சரவையைப் பற்றிய நேரடி மான்யம். இதை நிராகரித்துவிட்டால் அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லை என்றுதான் அர்த்தம்.

To stress the want of confidence in the Ministry என்று ஒரு கட்மோஷன் வரும். அதுதான் முக்கியமாக எடுத்துக் கொள்ளப்படும். காரசாரமாக விவாதிக்கப்படும். பின்னர் வோட்டு எடுக்கப்படும். பழைய சட்டசபைகளில் எல்லாம் இப்படி நடந்தது என் நினைவிற்கு வருகிறது. அது கூட இல்லை இன்றைக்கு, அம்மாதிரி ஒரு கட்மோஷன், வெட்டுப் பிரேரணை கொடுக்கவில்லை. ஆட்சிமொழி பற்றி வெட்டுப்பிரேரணை கொடுத்திருக்கிறார்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் வேறு ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அப்படி ஒரு வெட்டுப்பிரேரணை வராமல் போய் விட்டதே என்று நான் வருத்தப்படுவதாக தவறுதலாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அப்படி சாதாரணமாக நடப்பதுண்டு. அதெல்லாம் இப்போது இல்லை. பல உறுப்பினர்கள் வரவில்லை என்று சொன்னார்கள். எல்லோரும் வந்திருக்கவேண்டியதுதான். ஒரு சில அமைச்சர்கள் வரவில்லை என்றால் அவர்களுக்கு தவிர்க்கக் கூடாத அலுவல்கள் இருக்கலாம். அமைச்சரவை மானியம் என்றால் எல்லோருக்கும் அக்கறை இருக்க வேண்டியதுதான், வேண்டாமென்று சொல்லவில்லை. போதிய உறுப்பினர்கள் வரவில்லையே என்று அவர்கள் சொன்னதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

எனக்கு ஒரு உற்சாகம் ஏற்பட்டது. இந்த விவாதத்தை துவக்கி வைக்க கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டபோது எனக்கு ஒரு உற்சாகம் ஏற்பட்டது. இதுவரை எப்படியிருந்தாலும் இனி பரவாயில்லை, ருசிகரமான விவாதத்தை துவக்கி வைக்கிறார்கள், இன்று நன்றாக இருக்கும் என்றுதான் நினைத்தேன். அதில்கூட எனக்கு ஒரு ஏமாற்றம். சாதாரணமாக கனம் உறுப்பினர் அவர்கள் ரொம்பக் குற்றச்சாட்டுகளை எல்லாம் சொல்லி, ஒன்று இரண்டு என்று பல குற்றச்சாட்டுகளை, சொல்லி, ரொம்ப





தீவிரமாக அமைச்சரவையைக் கண்டித்துப் பேசுகிற வழக்கம் அவர்களுக்கு உண்டு. அதை வரவேற்கிறோம். இன்று எண்ணிக்கையில் குறைவு இல்லை. ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல நான்கல்ல, 14 குற்றச்சாட்டுகளை அவர்கள் மறுபடியும் பிரயோகித்தார்கள். பழைய காலத்தில் பாணம் போடுவதைப் போல் போட்டார்கள். பிசைந்த மாவையே பிசைகிறது என்று சொல்வார்கள். புதிதாக மாவை எடுத்து பிசையாது பிசைந்ததையே பிசைவது எப்படியோ அப்படித்தான் இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டது லஞ்சக்குற்றங்கள். அதற்கு மேற்கோளாக சந்தானம் கமிட்டி என்று ஒரு கமிட்டியைக் காட்டினார்கள். அதுவும் சரிதான். அதை நான் மறுக்கவில்லை. இதற்கு அவர்கள் சொல்லுகின்ற உதாரணங்கள் என்ன? 14 குற்றச்சாட்டுகளை சொன்னார்கள். இதில் பலவற்றையும் சென்ற ஆண்டிலும் சொல்லியாகிவிட்டது. சென்ற ஆண்டு நானும் அதற்குப் பதில் அளித்தேன். அதற்குப் பிறகும் கேள்விகள் கேட்கப்பட்டன, நான் அவற்றிற்கு விடையளித்தேன். கூடுதலாகவே 15 நிமிடங்கள் ஆனது. இவையெல்லாம் கூறியாகிவிட்டது. அதற்கு மேல் புதிதாக 14 குற்றச் சாட்டுகளை சொல்லியிருந்தால் நல்லது. அப்படிப் புதிதாக கண்டு பிடித்து 14 குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அப்படி சொல்வதற்குக் கூட முடியவில்லை என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. ஒரு பக்கத்தில் எனக்கு ஏற்பட்ட ஏமாற்றம் இது தான். திறமை படைத்த மதியழகன் அவர்களால் கூட புதிதாக எதையும் சொல்ல முடியவில்லையே என்பது தான். 14 பாணங்களை தொடுத்தார்கள். ஆனால் இந்த பாணங்கள் எல்லாம் விழுந்து போன பாணங்கள் தான். விழுந்து போன பாணங்களை எடுத்துத் தொடுப்பதில் எந்த விதமான பிரயோசனமும் இல்லை. அவர்கள் புதிதாக 14 குற்றச்சாட்டுகளை—பாணங்களை கொடுத்திருக்க வேண்டும்—அது அவர்களால் முடியவில்லை என்பதை கனம் உறுப்பினர்கள் உணருவார்கள். நான் மறுபடியும் அவர்கள் சொன்ன ஒன்றிரண்டு குற்றச்சாட்டுகளைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். நான் இவற்றிற்கெல்லாம் பதில் சொல்லியாகிவிட்டது, என்றாலும் திரும்பவும் சொல்லுகிறேன். சாதாரணமாக உண்மைக்குப் புறம்பான ஒரு விஷயத்தைத் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருப்பது போரில் கையாளக்கூடிய ஒரு தந்திரம். கோயபெல்ஸ்-ஐப்பற்றி சொல்லியிருப்பதை நாம் அறிவோம். ஒரு முறைக்குப் பதில் இரண்டு முறை, பத்து முறை சொல்லிவிட்டால் ஏதோ ஓரளவுக்கு நம்பிவிடுவார்கள், மனதில் ஏதாவது ஓரளவுக்கு—சிறிதாவது—பதிந்துவிடும் என்பதுதான். இது போர் முறை. இது, தேர்தலுக்கும் கையாளப்படுகிறது. 1967 தேர்தல் வந்து விட்டது என்று சொல்கிறார்கள். 1967 வந்து விடத்தான் போகிறது. 1966-ம் ஆண்டு மூன்றாவது மாதத்தில் நாம் இருக்கிறோம். 1967 தேர்தல் சீக்கிரமாகவே வந்துவிடும். அதற்கு இது பயன்படுமா என்று வேண்டுமென்றால் முயற்சி செய்யலாம். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. எதையாவது சொல்லி வைத்தால் நான்கு பேர்களுடைய மனதில் ஏதாவது கொஞ்சம் பதியட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவை ஒவ்வொன்றுக்கும் நான் பதில் சொல்லப்போவதில்லை. ஒன்றிரண்டை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

அட்வகேட்-ஜெனரல் நியமனம் நடந்ததைப்பற்றிச் சொன்னார் கள். அதில் தவறு ஒன்றும் நடந்துவிடவில்லை. உயர்நீதி மன்றமே அவர்களுடைய திறமையைப் பற்றிப் பாராட்டியிருக்கிறது. அவர்கள் தான் அட்வகேட்-ஜெனரலாக இருக்கவேண்டும் என்று உயர்நீதி மன்றமே பாராட்டக்கூடிய அளவில் இருக்கிறது. இங் குள்ள உயர்நீதிமன்றம் மட்டுமல்ல, டெல்லியிலுள்ள உயர்நீதி மன்றம்கூட பாராட்டியிருக்கிறது. அப்படிப்பட்டவரை அட்வ கேட்-ஜெனரலாக தேர்ந்தெடுத்ததில் என்ன தப்பு? அவரைவிடச் சிறந்தவர் வேறு யாரும் இல்லை என்பதற்காகத்தான் அவரை அட்வகேட்-ஜெனரலாக நியமித்தோம். அட்வகேட்-ஜெனரலாக நியமிக்கவேண்டும் என்றால், இரண்டு தகுதிகள் இருக்கவேண்டும், ஒன்று நல்ல திறன் இருக்கவேண்டும், இரண்டாவது அரசாங்கத் திற்கு நம்பிக்கை இருக்கவேண்டும். அரசாங்கம் ஒரு கருத்தைச் சொன்னால் அதற்கு நேர்மாறான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. பொலிடிகல் அபாயின்ட்மெண்டாக இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. அதற்காக . . . "பொலிடிகல் பேட்ரனேஜ்" இருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அப்படி யாராவது சொல்வதாக இருந்தால் அதை நான் மறுப்பேன். அதுமட்டுமல்ல, அட்வகேட்-ஜெனரலை நியமிப் பது என்றால் நாமே நியமித்துவிடுவதில்லை. பிரமத நீதிபதியையும் கேட்டு, உயர்நீதி மன்றத்தையும் கேட்டுத்தான் இவ்வாறு நியமிக் கப்பட்டிருக்கிறதே தவிர எனக்கு வேண்டியவர் என்பதற்காக அவரை நியமிக்கவில்லை. ஆனால், ஜாதியைப்பற்றி சொல்லப்படு கிறது. எதற்கெடுத்தாலும் ஜாதி வந்துவிடுகிறது. நல்லவேளை யாக இவர் முதலியாராக இருக்கவில்லை. முதலியாராக இருந்து விட்டால் என் சொந்தக்காரர் என்று சொல்லிவிடுவார், நல்ல வேளையாக அவர் ரெட்டியார். இப்போது ரெட்டியார்கள்கூட முதலியார் என்று பட்டம் வைத்துக்கொள்கிறார்கள். முதலியாரும் ரெட்டியார் என்று வைத்துக் கொள்கிறார்கள். அந்த முறையில் பார்க்கும்போது, இவரும் என்னுடைய சொந்தக்காரர் என்று சொல்லிக்கொண்டே போகலாம். அதோடு பப்ளிக் பராஸிக்யூட்ட ரைப்பற்றி சொன்னார்கள். அவர்கள் முன்னால் எதிர்க்கட்சியில் இருந்தவர்கள்தான். அங்கிருந்துதான் வந்தார்கள். எனக்கு வழக்கறிஞராக இருந்தார் என்பதற்காக அவருக்கு பப்ளிக் பிராஸி க்யூட்டர் பதவி கொடுக்கவில்லை . . . எதிர்கட்சிகளுக்கும் அவர் வழக்காடியிருக்கிறார்.

**திரு. கே. ஏ. மதியழகன்** : எங்களுக்கு வழக்காடிய போது வழக்கு தோற்றுப் போய்விட்டது. உங்களுக்கு வழக்காடிய போது வழக்கு ஜெயித்தது . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : வழக்காடியபோதுதான் வழக் கறிஞரின் திறனைக் காண முடிந்தது. அவர்களுடைய திறனை நீதிபதியும் பாராட்டியிருக்கிறார்கள். கவர்ன்மென்ட் ப்ளீடர் நியமிக்க வேண்டியிருந்தது. பல முறை இவர்களைப்பற்றி விசாரித் தோம். நன்றாக விசாரித்துவிட்டுதான் போடவேண்டும் ஏதோ எலக்ட்ரிசிட்டி குழுவுக்கு ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். இதிலும் நன்றாக ஆலோசித்துத்தான் ஒருவரைப்





போட்டோம். அதல்லாமல் என்னுடைய சொந்தக்காரர் என்பதற் காக யாரையும் போடவில்லை. இந்த முறையில்தான் தேவானுக் ரஹம் அவர்களைப் போட்டோம். ஓய்வு பெற்றவராக இருந்தார். அவரை நியமித்தால் நல்லது என்று கூறப்பட்டது, அதை ஏற்றுக் கொண்டுதான் அவரை நியமித்தோம். அதேபோன்றுதான் முனிசிபல் நிறுவனத்திற்கும் ஒருவரைப் போட்டிருக்கிறோம். முன்னாள் நிதி இலாகாவில் பணியாற்றியவர் இவருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுத்து எக்ஸாமினர் ஆஃப் லோக்கல் பண்ட்ஸ் அக்கௌன்ட்ஸ் என்ற அமைப்பில் நியமித்தோம். பின்னால், அவருக்கு ஓய்வு பெறக் கூடிய வயது வந்தது. அந்த நேரத்தில்—நிதி விஷயத்தில் சரியான முறையில் வேலை பார்க்கக்கூடிய ஒருவரை முனிசிபல் நிறுவனத் திற்கு நியமிக்கவேண்டும் என்று வந்தது. நாலைந்து பேர்களைப் பற்றி ஆலோசித்தோம். கடைசியில்—ஸ்தல ஸ்தாபன இலாகாவுக்கு வருவாயை தேடிக்கொடுப்பதில் நல்ல நிபுணராக இருக்கக்கூடிய வரைப் பார்த்து நியமிக்கவேண்டும் என்று வந்தது. அந்த முறையில் நிதி இலாகாவில் பணியாற்றிக்கொண்டிருந்தவரை நியமித்தால் நல்லது என்ற முறையில் இவரை நியமித்தோம். கடைசியில் இவரைப் பற்றி விசாரிக்கப்போனபோது, இவர் எதிர்க் கட்சித் தலைவருக்கு சொந்தமானவர் என்று தெரியவந்தது. சம்பந்தி என்றுகூட சொல்லலாம். அதற்காக அவரை நியமிக்காமலா இருந்தோம்? அவருடைய நியமனத்தை நிறுத்தி விட்டோமா? ஏதோ முதலியாராக இருந்தால் முதலமைச்சரின் சொந்தக்காரர் என்று சொல்லிவிடுவது. சொந்தக்காரர் இல்லையே என்று சொன்னால் சம்பந்தி என்று சொல்வது, சம்பந்தி இல்லையே என்று சொன்னால், உங்கள் அப்பனுக்குச் சொந்தக்காரர், உங்கள் பாட்டனுக்குச் சொந்தக்காரர் என்று சொல்வது. இப்படிச் சொல்லிக்கொண்டேபோனால் என்ன அர்த்தம்? ஏதோ நமக்கு பிடிக்கவில்லை என்றால், இவர் அவருடைய சொந்தக்காரர் என்று எதையாவது சொல்லிவிட்டுப் போய்விடுவது, இப்படி ஏதாவது ஒரு தூசியைக் கிளப்பிவிட்டுப் போய்விடலாம். இதை உபயோகித்துக் கொண்டு, நம்மிடம் க்ஷாத்திரம் இருக்கின்றவர்கள் —சில பத்திரிகைக்காரர்கள் கூட—இதை வைத்துக்கொண்டு என்னென்ன சொல்ல முடியுமோ அதைச் சொல்லிக் கொண்டிருப் பார்கள். இப்படி எதையாவது சொல்லிக் கொண்டிருப்பதில் எந்தவிதமான பிரயாசனமும் இல்லை.

இன்னும் சொன்னார்கள், எங்கள் கட்சிக்கு விரோதமாக இருக் கின்றவர்களுக்கு வேலை கொடுத்துவிடுகிறோம் என்று. யாருக்கு என்ன வேலை கொடுத்தோம்? அவர்கள் குறிப்பிட்டது திரு. ராதா கிருஷ்ணன் என்பவரைப்பற்றியும், திருமதி விஜயலட்சுமி என்ப வரையும் பற்றி. அவர்கள் பி.எஸ்.பி. யிலிருந்து காங்கிரஸ் கட்சிக்கு வந்தார்கள். அதிலும் என்ன வேலை கொடுத்து விட்டோம்? சிறு சேமிப்பு இயக்கத்தில் கொடுத்தோம். கொஞ்சம் கஷ்டமான வேலை. இதில் உத்யோகப்பற்றற்றவர்கள் இருக்க வேண்டும் என்ற அளவில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இதற் கென்று தனி அதிகாரி இருக்கிறார்கள். இதை மாநில அளவில் விஸ்தரிக்கவேண்டும் என்ற முறையில் ஒரு குழு அமைக்கப் பட்டது. அதற்கு வைஸ் சேர்மனாக திருமதி விஜயலட்சுமி அவர்களை நியமித்தோம். இதில் என்ன தவறு இருக்கிறது?

**திரு. கே. ஏ. மதியழகன்:** இதற்கு ஆயிரம் ரூபாய் செலவாகிறது . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஆயிரமல்ல ஐயாயிரம் ரூபாயாக இருந்தாலும் அதை நான் பொருட்படுத்தவில்லை. பிரயாணச் செலவு என்ற அளவில்தான் கொடுக்கப்படுகிறது. (குறுக்கீடு) அதைத்தான் நான் சொன்னேன். ஆயிரம் அல்ல, ஆறாயிரமாக இருந்தாலும் அதைப்பற்றி கவலைப்படப் போவதில்லை. யாராக இருந்தாலும் வேலை செய்வார்களா என்பதைத்தான் பார்க்க வேண்டும். அந்த முறையில் பார்த்து ஒரு ஆளைப் போடும்போது, "ஏன் நீ போட்டாய்" என்று கேட்டால் என்ன அர்த்தம்? அப்படிக் கேட்டுக் கொண்டிருந்தால் எதற்கெடுத்தாலும் கேட்டுக் கொண்டேயிருக்கலாம். மேலும், ஒன்றைச் சொன்னார்கள். பல பேர்கள் யோசனை சொன்னார்கள், அந்த மன்றத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். அமைச்சர்கள், பத்திரிகையோடு தொடர்பு கொண்டவர்களாக இருக்கவேண்டும். அந்த முறையில் பத்திரிகையோடு தொடர்பு கொண்டிருப்பதற்கு, பிரஸ் ரிலேஷன் ஆபீசர் என்று ஒருவரைப் போட்டோம். இவரும் பி.எஸ்.பி. யிலிருந்து வந்தவர். பத்திரிகைகளோடு சிறந்த முறையில் தொடர்புள்ளவர். ஆகையால் இவரைப் போடுவது நல்லது என்று நினைத்துத்தான் இவரைப் போட்டோம். அதற்கும் ஹானரோரியம் என்ற முறையில்தான் கொடுத்து வருகிறோம். அவருடைய யோக்கியதாம்சத்திற்கு என்று கொடுக்கவேண்டுமென்றால் ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம். அப்படி ஒன்றும் நாம் கொடுக்கவில்லை. அந்த முறையில் ஒருவரை போடுவதில் என்ன தவறு இருக்கிறது?

அறநிலைய இலாகாவைப்பற்றி முன்பே சொன்னேன். இப்போதும் சொல்ல வேண்டாம் என்றுதான் நினைத்தேன். சாதாரணமாக இருந்தால் இதைப்பற்றி சொல்லியிருக்கமாட்டேன். இந்த இலாகாவின் தலைவர் நியமன விஷயத்தில் யாரைப் போடலாம் என்று உயர் நீதிமன்றத்தையும் கேட்டோம், பப்ளிக் சர்வீஸ் கமிஷனையும் கேட்டோம். அது மட்டுமல்ல, உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களையும் கேட்டோம், இவரைத்தவிர மாவட்ட நீதிபதி யாரையாவது போடலாம், அதற்குத் தகுந்த முறையில் யாரையாவது சொல்லுங்கள், அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று கேட்டோம். அதற்கு உயர்நீதிமன்றத்திலிருந்து, இவரையே போடலாம், இவருடைய பல ஜட்ஜ்மெண்ட்-களை நாங்கள் பார்த்திருக்கிறோம் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆகவே, இவரையே தலைவராகப் போடலாம் என்று சொன்னார்கள். அந்த முறையில்தான் அவரை நியமித்தோம். இதில் எனக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ரூல்ஸை ரிலாக்ஸ் பண்ணவே இல்லை
1-30 p.m. என்று சொல்லுகிறீர்களா? சப்-ஜட்ஜ் போடலாம் என்று ரூல் இருக்கிறது . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஆக்டே மாற்றப்பட்டிருக்கிறது. இந்த மன்றம் சட்டத்தையே மாற்றி இருக்கிறது. அப்போதும் ஹைக்கோர்ட்டைக் கேட்டோம். அவர்கள் இவரையே கமிஷனராகப் போடவேண்டும் என்று சொன்னார்கள். சீக்கிரத்திலேயே நீதிபதி உயர்வு வருகிறது என்று சொன்னார்கள். அவர்களைக் கேட்டுத்தான் போடுகிறோம். இவரையே போடுங்கள் என்று சொன்னார்கள். முதலியார், முதலியார் என்று சொல்லிவிட்டால் போதுமா? முதலியார் என்றால் எல்லோரும் சொந்தக்காரர்கள் என்று வைத்துக்கொள்ளுவதா? சொந்தக்காரன் என்றாலும், அதற்காக, தவறுதலாக, அத்து மீறி செய்திருந்தால் குற்றம் சொல்லலாம். அதுதான் குற்றமே தவிர மற்றப்படி ஒன்றும் இல்லை. தூசியைக் கிளப்பிவிடலாம். இன்ஸ்பெக்டர்-ஜெனரல், விஜிலன்ஸ் கமிஷனர், மகாதேவன், அருள் என்று கூறினார்கள். என்ன பண்ணினோம்? அருளுக்கு என்ன பண்ணினோம்? சிறந்த அனுபவம் உள்ள உத்தியோகஸ்தர்கள், உயர் நிலையில் உள்ள உத்தியோகஸ்தர்கள் போலீசிலே, லஞ்சத்தை ஒழிப்பதற்காக உயர்ந்த அதிகாரியைப் போடவேண்டும், ஐ.ஜி.-யை விட சீனியராக இருப்பது நல்லது, அப்படி இருந்தால் பார்க்கவேண்டுமென்று பார்த்துப் போட்டோம். அதே மாதிரி உயர்ந்த அதிகாரியைப் போடவேண்டுமென்று சொன்னார்கள். சில இடங்களில் ஐ.ஜி.-க்கு ஜூனியராகக் கூட இருக்கலாம். அந்த விதத்தில் தான் போட்டோம். இன்னொரு அதிகாரியை ஐ.ஜி.யாகப் போட்டோம். வேகன்ஸி வந்தது, போட்டோம். விஜிலன்ஸ் கமிஷனர் ஏன் போட்டார்கள் என்று சொன்னார்கள். முதலிலே அவசியம் இல்லை என்றுதான் நினைத்தோம். திரு. சந்தானமே என்னிடம் பேசினார். தகுந்தவர் வேண்டும், சீனியராக இருக்கிறார் என்று போட்டிருக்கிறது. எந்த சந்தானத்தை மேற்கோளாகக் காட்டினார்களோ, அவரே விடாமல் இரண்டு மணி நேரம் என்னுடன் பேசி விஜிலன்ஸ் கமிஷனர் போடவேண்டுமென்று சொன்னார். மேலே பதவி உயர்வு எதிர் பாராதவர்கள் என்ற முறையில் இருக்கவேண்டும். ஏனென்றால் சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு அச்சம் இருக்கக் கூடாது, அநியாயமாக லஞ்சக் குற்றம் சாட்டக் கூடாது என்று பார்ப்பார்கள், பயம் இல்லாமல் பணியாற்றவேண்டும். அதுதான் மத்திய அரசாங்கம் சொல்லுகிறது, சந்தானம் கமிஷன் சொல்லுகிறது. விஜிலன்ஸ் கமிஷனர் போடுவது என்றால் இரண்டு விதங்கள் இருக்கின்றன. ஒன்று நீதிபதியைப் போடலாம் அல்லது சீஃப் செக்ரட்டரி, ரிடயர் ஆனவரைப் போடலாம். இதிலே இரண்டு விதம் இருக்கிறது. இவரை நியமிக்கலாம் என்று முடிவு செய்தோம். டி.எம்.எஸ்., அடிஷனல் டி.எம்.எஸ். என்று குறிப்பிட்டார்கள். மெடிக்கல் எஜுகேஷனுக்குத் தனியாக டைரக்டரேட் இருக்கவேண்டும் என்று பல குழுக்கள் சிபார்சு செய்திருக்கின்றன. பல நிபுணர்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நம் மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகள் அதிகமாக இருக்கின்றன. அதற்காக அடிஷனல் டி.எம்.எஸ். போட்டு அவற்றைக் கவனிக்கச் செய்திருக்கிறோம்.

அவ்வாறே சுந்தரவடிவேலு நியமனம் என்று தந்தி நடையில் குறிப்பிடப்பட்டது. சுந்தரவடிவேலு என்றால் சுந்தரவடிவேலு. இதற்கு என்ன சொல்லுவது? (குறுக்கீடு) நீங்கள் அப்படி வைத்துக்கொள்ளலாம். அவகாசம் இல்லாமல் இருப்பதால் சொல்லுவது போதும். விளக்கம் வேண்டியவர்களுக்கு விளக்கம்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th March 1966

சொல்லலாம். இப்போது கல்வித் துறை விஸ்தரிக்கப்பட்டிருக்
கிறது. இரண்டு பேர்களை நியமித்தோம். ஒருவரை டைரக்டர்
ஆஃப் செகண்டரி எஜுகேஷன் என்று போட்டோம். இவரை
டைரக்டர் ஆஃப் ஹையர் எஜுகேஷன் என்று போட்டோம்.
தப்பு செய்த மாதிரி சொன்னார்கள். தப்பா இது? என்ன தப்பு?

அதிகாரிகளிடத்தில் தலையிடுகிறார்கள், கண்டிப்பாக வேலை
செய்தார்கள் என்று சொன்னார்கள். ஒரு அதிகாரியைப் பற்றி
குறிப்பிடாது இருப்பது நல்லது. இத்தனை அதிகாரிகளைக் குறிப்
பிட்டுக் காட்டி, ஜாதி என்றெல்லாம் சொன்னார்கள். போர்டு
மெம்பர் ராயப்பா என்று சொன்னார்கள். அவர் பெயரை இழுத்து
இருப்பது நல்லதல்ல. நன்றாகப் பணியாற்றுகிறார். அவருடைய
பெயரை இழுத்துச் சொன்னால் அது அவருக்கே நல்லதல்ல.
மாற்றுவது என்றால், போர்டு மெம்பராகப் பொறுப்பு கொடுக்
கிறோம். வேலையில் இருந்து கீழே தள்ளி விட்டார்களா? இதே
விற்பனை வரியை எடுத்துக்கொண்டு வேறு மெம்பர் பார்க்
கிறார். அந்த மெம்பர் பார்ப்பதில் போன வருஷம் வந்ததை விட
இந்த வருஷம் அதிகமாக வந்திருக்கிறது. எனக்கு இரண்டு நாட்
களுக்கு முன்பு ஸ்டேட்மெண்ட் வந்திருக்கிறது. வருவாய் குறைய
வில்லை. கண்டிப்பாகத் தான் இருக்கிறார். கண்டிப்பாக இருந்த
தற்காக எடுத்து விட்டோம் என்று சொல்லிவிட்டால் என்ன
பயன்? இப்போது விவசாயத் துறையிலே ஃபுட் ப்ரொடக்ஷ
னுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். கண்டிப்பாக
உற்பத்தி பெருகவேண்டும், பெற்றது போதாது என்ற கருத்து
இருக்கிறது. சுறுசுறுப்பாகப் பார்க்கிறார் என்று அவர் ஃபுட்
ப்ரொடக்ஷனில் இருக்கிறார். அவரே ஏதோ அதிருப்திப் பட்டுச்
சொல்லுகிற மாதிரி, அதை எடுத்துச் சொல்லுகிற மாதிரி சொன்
னால், அது அவருக்கே நல்லதல்ல. என்ன தப்பு செய்து
விட்டோம்? "ராயப்பா பணக்காரரைப் பிடித்தார் என்று மாற்றி
விட்டார்கள்" என்றார்கள். சொல்வது சுலபம். இவர் என்ன
பணக்காரர்களை விட்டு விட்டாரா? இந்த வருஷம் அதிகமாகி
யிருக்கிறது வருமானம்.

திரும்பவும் கபாலீஸ்வரர் கோவில் தர்மகர்த்தா விஷயம்—
கனம் அங்கத்தினர் அரங்கண்ணலுக்கு தெரியும்—இந்த விவகாரம்
பற்றி. முதலியாரைப் போட்டு விட்டார்கள் என்று குறை கூறப்
படுகிறது. ஆலயத்தின் தன்மையைப் பற்றிகூட ஆராய வேண்டி
யிருக்கிறது. இப்போது மீண்டும் பரிசீலித்தேன். வேறு
இனத்தவர், ஹரிஜன இனத்தைச் சேர்ந்தவரைப் போடவேண்டும்,
பிராம்மணரைப் போடவேண்டும். இது வரையில் இல்லாதவர்களைப்
போடவேண்டுமென்று நான் கருதினேன். ஆனால் புதிய
வழக்குக்கு இடம் அளிக்கக்கூடாது. வழக்கு தீரும் வரையில்
இதிலே கை வைப்பதற்கில்லை, டினாமினேஷனல் கோவிலா என்பது
தீர்ந்து விட்டால் போடலாம் என்று யோசனை கூறினார்கள்.
தவறுதலான கருத்து ஏற்படக்கூடிய அளவில் சாதிப்பது முறை
யல்ல. பதினான்கு குற்றச்சாட்டுகள் போடவேண்டுமென்று
சொல்லி, அவர்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கிக்கொண்டு
வந்தாலும், திரு. மதியழகன் அவர்களாலேயே இவ்வளவுதான்
சாட்ட முடிந்த குற்றச்சாட்டுகள் என்றால், மந்திரிகள் மீது



10th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

மொத்தத்தில் தவறுதல் செய்ததாகக் குற்றம் சாட்ட இடம் ஏற்பட
வில்லை என்று தான் ஏற்படுகிறது.

முதலிலே கவர்னர் அவர்கள் நியமனம் பற்றிப் சில உறுப்பினர்
கள் குறிப்பிட்டார்கள். எந்த மந்திரி சபையும் அமைக்க
முடியாது, மந்திரி சபை அமைத்தாலும் கவிழ்ந்து போகும்—
விரும்புங்கள், அதைப் பற்றிக் கவலைப்படவில்லை—மந்திரி சபையே
அமைக்க முடியாது, சட்ட சபையையே கலைந்து விடவேண்டு
மென்று ஏன் நினைக்கவேண்டும்? இத்தகைய நிலைமையைச்
சமாளிப்பதற்காக அல்ல கவர்னர் இருப்பது. ஜனநாயகம் தவறிப்
போகாது. ஏன் தவற வேண்டும்? அந்த அச்சம் எனக்கு இல்லை.
எதிர்க்கட்சியினருக்கும் இருக்கக் கூடாது. ஆனால் கவர்னர்
அதற்காக வேண்டும் என்பது அல்ல. அது எப்போதோ ஒரு முறை
வருகிறது. கவர்னருக்கு வேறு எவ்வளவோ பணிகள் இருக்
கின்றன. அரசியலமைப்புச் சட்டத்தில் வேறு பணிகள் போடப்
பட்டிருக்கின்றன. சிறுபான்மையோர்கள் உரிமை பாதுகாக்கப்
பட வேண்டும் என்ற பொறுப்பு இருக்கிறது. சிறுபான்மை
யோருக்கு மொழி விஷயத்தில் பாதுகாப்பு வேண்டும் என்ற
பொறுப்பு இருக்கிறது. அதோடு உத்தியோகஸ்தர்களைப் பொறுத்த
மட்டில் பொதுவாக, சர்வீஸ், ப்ரொமோஷன் பற்றி அரசாங்கம்,
சர்வீஸ் கமிஷன் எல்லாம் பார்த்த பிறகு கவர்னருக்குப் போய்
முடிவு செய்யப்படுகிறது. இதை திருஷ்டாந்தமாக தான்
சொன்னேன். அவர்களுக்கு ஓரளவுக்கு பொறுப்பு
இருக்கிறது. ஹெட் ஆஃப் அட்மினிஸ்ட்ரேஷன் வேண்டி
யிருக்கிறது, பணி இருக்கிறது, அவசியம் இருக்கிறது.
அதை உணர்ந்துதான் கவர்னரை வைத்துக்கொண்டிருக்கிறோமே
தவிர வேறு ஒன்றும் இல்லை. கவர்னர் செலவைக் குறைக்க
வேண்டும் என்று சொன்னார்கள். எந்த அளவு குறைப்பது?
கொஞ்சம் குறைத்தாலும் ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனால்
கவர்னர் பதவி வேண்டியிருக்கிறது. 'அமைச்சர்கள் சம்பளத்தைக்
குறை' என்று சொன்னார்கள். நான் விடையளிக்கத் தயங்கிக்
கொண்டிருந்தேன் என்று சொன்னார்கள். எத்தனையோ முறை
விடையளிக்கும்போது இது தவறிப் போய்விட்டது. அமைச்சர்
களுக்கு இப்போது இருக்கிற செலவினங்கள் எல்லாவற்றையும்
பார்த்தால் மாதாமாதம் கடைசியிலே, குறைந்த சம்பளம் வாங்கு
கிறவர்கள் சொல்லுகிற அதே முறையிலே தான் இருக்கிறது.
கனம் எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள்கூட நமது
அமைச்சர் கக்கன் அவர்களுடைய மனைவியார் சொன்ன
தைப்பற்றி குறிப்பிட்டார். அது தான் உண்மையான நிலை.
அமைச்சர்கள் இன்கம்டாக்ஸ் கொடுக்கிறார்கள், ஆன்யுவிடி கொடுக்
கிறார்கள். அதோடு யுத்த நிதிக்காக மாதா மாதம் தவறாமல்
பணம் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். மற்றவர்கள் கொடுக்
கிறார்களோ என்னவோ தெரியாது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள்
எவ்வளவு பேர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரியாது.
எல்லா உறுப்பினர்களும் மாதா மாதம் ரூ. 25 கொடுக்கவேண்டும்
என்று சொல்லப்பட்டது. ஏழை எளியவர்களும், தொழிலாளர்
களும் கொடுக்கிறார்கள். எத்தனை பேர்கள் மாதம் ரூ. 25 கொடுக்
கிறார்கள் என்று நான் பார்க்கவில்லை. ஆனால் அமைச்சர்கள்

[திரு. எம். பக்தவத்சலம்]

தவறாமல் மாதா மாதம் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அமைச்சர்களுக்கு பெரியதாக ஒன்றும் மிச்சப்படுத்துவதற்கு இல்லை. பிறரிடம் கடன் வாங்காமல் வாழ்க்கை நடத்துவது என்பது அமைச்சர்களுக்கு மிகவும் அவசியம். மற்றவர்கள் எப்படி இருந்தாலும், அமைச்சர்கள் கடன் வாங்காமல் தங்களுடைய வாழ்க்கையை நடத்தவேண்டியிருக்கிறது. ஏதோ ரூ. 100, 200 குறைத்துக்கொண்டோம் என்று சொல்லி குறைத்துக்கொண்டு அதனால் விளம்பரப்படுத்திக் கொள்வதில் ஒன்றும் பலன் இல்லை. அப்படிக் குறைத்து அதனால் பெரியதாக ஒன்றும் மிச்சப்படுத்தி விட முடியாது. அப்படி குறைத்துக்கொண்டு விளம்பரப்படுத்த வேண்டிய நிமித்தமும் இல்லை. இதிலே 'அபாலஜெடிக்'-ஆக இருப்பதற்கே அவசியமில்லை. மந்திரிகள் சுய மரியாதையாக வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய ஊதியம் வேண்டும். மோட்டார் கார் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் டிரைவர்களுக்கு அவர்கள்தான் சம்பளம் கொடுக்கிறார்கள் பெட்ரோல் விலை ஏறியிருக்கிறது. அதையும் அவர்கள்தான் கொடுக்கிறார்கள். எத்தனையோ எதிர்பாராத செலவுகள் வருகின்றன. ஆகையினால், அமைச்சர்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டும் என்று சும்மா சொல்லுவதில் பயனில்லை.

அதேமாதிரி பிரயாணத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவசியமான அளவுக்குத்தான் பிரயாணம் செய்கிறோம். பிரயாணம் என்றால் உல்லாசப் பிரயாணம் இல்லை என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன், எவ்வளவோ குறைத்துக்கொண்டுதான் இருக்கிறோம். சில சமயங்களில் நேராகப் பார்த்துத் தெரிந்துகொண்டு வருவதுபோல் காகிதத்தில் எழுதிவருவதன் மூலம் தெரிந்து கொள்ள முடியாது. ஆகவே, ஓரளவுக்கு பிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது. என்னைப் பொறுத்த மட்டில் பிரயாணத்தை எந்த அளவுக்கு தவிர்க்க முடியுமோ அந்த அளவுக்கு தவிர்த்துக்கொண்டுதான் வருகிறேன். ஆனால், முடியவில்லை. வரவில்லையே என்று புகார் வருகிறது. நான்கு ஐந்து மாதங்களாக நான் வரவேண்டும் என்று சொன்ன இடங்களிலெல்லாம் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியே எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. "என்னை எதிர்பார்க்காதீர்கள், நீங்கள் நடத்துங்கள்' என்று சொன்னாலும்கூட "நீங்கள்தான் வரவேண்டும், காத்துக்கொண்டிருக்கிறோம்' என்று சொல்லுகிறார்கள்.

பொதுவாக, நிர்வாகத்தில் தலையிடுகிறோம். நாங்கள் நிர்வாகத்தை தவறுதலாகப் பயன்படுத்திக்கொள்ளுகிறோம் என்றெல்லாம் குறை சொல்லப்பட்டது. அம்மாதிரி ஒன்றுமில்லை. கண்டிப்பாகத் தான் இருக்கிறோம். யாருக்கு திருப்தியில்லையோ, யாருக்கு வேண்டியது செய்யப்படவில்லையோ அவர்கள் தாராளமாக இப்படிக் குறைகளைச் சொல்லிக்கொண்டுதான் இருப்பார்கள். ஏதேதோ சுப்ரீம் கோர்ட்டு மோதிராம் கேஸ் என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவ்வளவு திறமையான வழக்கறிஞர் இல்லை. நான் எல்லாவற்றையும் மறந்து விட்டேன். மோதிராம் கேஸ் நடந்தது. சுப்ரீம் கோர்ட் ஒரு மாதிரி தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள், மந்திரிகள் தவறாக நடந்துகொள்ளுகிறார்கள் என்றெல்லாம் ஏதேதோ



10th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

சொல்லி தூபம் போட்டுவிடுவது, அது வாதத்தில் ஒரு வகை மோதிராம் கேஸை விளக்குவதற்கு எனக்கு அவ்வளவு திறமை இருக்கிறதா? அவ்வளவுதூரம் எனக்கு திறமை இல்லை. அம்மாதிரி பொதுவாகச் சொல்லுவதில் பலன் இல்லை.

மற்றொன்று, சட்டமன்ற ஹாஸ்டலில் இடம் போதாது என்று சொல்லுகிறார்கள். அது சட்டமன்றத் துறையைப் பற்றியது, முக்கியமானது. என்னுடைய சகா அமைச்சர், ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இப்பொழுது ஏதோ ஒரு மாடலை, பொம்மையைத்தான் வைத்திருக்கிறார்கள், சில பேர்கள் அதைப் பார்த்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஒரு கட்டடம் கட்டி அதை 'எக்விப்' பண்ணி, "ஃபர்னிஷ்" பண்ணி, அங்கத்தினர்களுக்குக் காட்டலாம், எப்படி இருக்கிறது என்று பார்க்கட்டும். பங்களூரில் விதான் சபையை ரொம்ப அழகாகக் கட்டியிருக்கிறார்கள். ஆனால், அம்மாதிரி கட்டுவதற்கு செலவு அதிகம் ஆகும். அம்மாதிரி தான் இந்த மன்றத்தின் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கை வருகிற தேர்தலில் 234 ஆக உயரப்போகிறது. அப்பொழுது 234 பேர்களும் இங்கேயே உட்கார்ந்து சட்டசபையை நடத்தலாம் என்றுதான் முடிவு எடுத்திருக்கிறோம். இல்லாவிட்டால் தனியாக ஒரு பார்லிமென்ட் ஹவுஸ் கட்டவேண்டும். அதற்குச் செலவு நிறைய ஆகும். பணம் போதாது. எவ்வளவோ அத்தியாவசியமான செலவுகள் இருக்கின்றன. ஆனால் ஹாஸ்டல் அவசியம். ஹாஸ்டல் கட்டுவதற்கு தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். தாமதம் ஒன்றுமில்லை. கட்டிக்கொண்டே இருக்கிறார்கள். ஃபவுண்டேஷன் போடுவதற்கு கொஞ்ச நாட்கள் ஆகிவிட்டன. ஹாஸ்டல் சீக்கிரத்திலே கட்டவேண்டும் என்றுதான் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். இங்கே போதிய இட வசதி இல்லை என்று சொன்னார்கள். மெம்பர்களுக்கு, ஒவ்வொரு பார்டிக்கும் என்று தனியாகப் போய் உட்கார்ந்து அலுவல்கள் பார்ப்பதற்கு இடமில்லை என்று சொன்னார்கள். இடவசதி அவ்வளவு திருப்தியாக இல்லைதான். இந்த வசதிகளெல்லாம் செய்து கொடுக்கவேண்டுமென்றால் தனியாக ஒரு பார்லிமெண்டு ஹவுஸ் கட்டவேண்டும். அதற்கு ஏராளமாக செலவு ஆகும். இதை அனுசரித்துத்தான் ஹாஸ்டல் மட்டும் இப்பொழுது கட்டுகிறோம். இதிலே டிரெடிஷன் ஒன்றுமில்லை. பணம் இல்லையே என்ற குறைதான். நல்ல டிரெடிஷனை நாம் வைத்துக்கொள்ளவேண்டியதுதான். அதற்காக எதை எடுத்தாலும் டிரெடிஷன், பழைய கால சம்பிரதாயம் என்று எடுத்துக் கொள்ளுவதில்லை. ஏதோ அட்ஜஸ்டு பண்ணி இங்கேயே நடத்திக்கொண்டு போகலாம் என்பதுதான் உத்தேசம். இது அல்லாமல் மற்றப்படி உறுப்பினர்களின் வசதிபற்றியும் சொல்லப்பட்டது. கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் நூலகத்தைப் பற்றிச் சொன்னார். இவைகளெல்லாம் பற்றி என்ன செய்வது என்பதைப் பரிசீலிக்கலாம்.

கேள்விகளுக்கு விடைகள் அளிப்பதைப் பற்றிச் சொன்னார்கள். கேள்விக்கு விடை அளிக்கிற ஒரு தன்மை இருக்கிறதே அதை எல்லோரும் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும். கேள்வி நேரம் ரொம்பவும் முக்கியமானது. ஜனநாயகத்தில், சட்ட

[திரு. எம். பக்தவத்சலம்] [10th March 1966

மன்றத்தில் அதை யாரும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள், கொஞ்சம்கூட விட்டுக்கொடுக்க மாட்டார்கள். கேள்வி நேரம் வேண்டாம் என்று சொன்னால், ஒருக்காலும் யாரும் அதை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். எதிர்க்கட்சியின் உரிமை அது. எப்படிப் பட்ட கேள்விகள் கேட்கப்படுகின்றன என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். கேட்ட கேள்விக்கு எதிர்பார்த்தபடி பதில் சொல்லவில்லை என்றால், பதில் திருப்திகரமாக இல்லை, எல்லாவற் றையும் சொல்லாமல் நிறுத்திவிட்டார்கள் என்று சொல்லப் படுகிறது. கேள்வி கேட்பதற்கு எப்படி அங்கத்தினர்களுக்கு உரிமை இருக்கிறதோ அப்படி விடை அளிப்பதற்கு மந்திரிகளுக்கு உரிமை இருக்கிறது. அதையும் கனம் உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். எப்படி கேட்பதற்கு உரிமை இருக்கிறதோ, அப்படி விடை அளிப்பதற்கும் எங்களுக்கு உரிமை உண்டு.

கேள்விகளுக்கு விடை அளிப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். கூடிய அளவுக்கு தாமதம் இல்லாமல் விடைகள் தயாரிக்கப்பட்டுத்தான் வருகிறது. சில சமயங்களில் தாமதமாக லாம். சுதந்திராக் கட்சித் தலைவர், இலாகாவுக்குச் சொல்லா மலே பதில் தயார் பண்ணமுடியும் என்று சொன்னார்கள். அப்படி இல்லை. தகவல் கிடைத்தவுடன் தாமதம் இல்லாமல் விடை அளிக் கப்படுகிறது. அவசரப்பட்டு விடை அளித்து, அதில் தவறு தலாகப் போய்விடக் கூடாது. பிறகு விடையைத் திருத்தவேண்டி யிருக்கும். எதிர்க்கட்சியில் உள்ளவர்களே விடை தவறு என்று எடுத்துக் காட்டுவார்கள். இதிலே கண்டிப்பாகத்தான் இருக் கிறோம். கூடியமட்டும் விரைவிலே துரிதமாக விடை அளிக்க வேண்டும் என்று எல்லா இலாகாக்களுக்கும் சொல்லியிருக்கிறோம்.

ஆசிரியர் தொகுதியைப் பற்றி குறிப்பிட்டார்கள். ஒன்று சொல்லுகிறேன். ஆசிரியர்களுக்கு அது ஆறுதல் அளிக்கும். ஆசிரியர் தொகுதியை எடுத்துவிடுவது என்பது இப்பொழுது இல்லை. தற்காலிகமாக அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை. அதனால் ஆசிரியர்கள் கொஞ்சம் தூங்கலாம். இப்பொழுது ஒன்றும் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. அதைப்பற்றி கவலை வேண்டாம். பின்னால் வரும்பொழுது பார்த்துக்கொள்ளலாம். இப்பொழுது ஒன்றுமில்லை.

'கோட் ஆஃப் காண்டக்ட் ஃபார் லெஜிஸ்லேடர்ஸ்' பற்றிச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்து, கனம் சபாநாயகர், மேல் மன்றத் தலைவர், நாங்கள் சில பேர்கள் எல்லோரும் கலந்து இதைப்பற்றிப் பேசினோம். சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். ஸ்பீக்கரும், சேர்மனு மாகச் சேர்ந்து ஒரு டிராப்டு செய்து கொடுங்கள் பிறகு ஒரு குழு அதை ஆராயலாம், அதற்குப் பிறகு அதை இந்த மன்றத்தில் வைக்கலாம் என்று முடிவு செய்தோம். இது ரொம்ப சிக்கலான விஷயம். இதைப்பற்றி ரொம்ப அதிகமாகவும் பேசக்கூடாது. ஏதோ மந்திரிகளைப் பற்றி லஞ்சம் என்றெல்லாம் பேசுவதைப் போல மன்ற உறுப்பினர்களைப் பற்றியும் பேசக்கூடாது. எங்களைப் பற்றி 14 அல்ல 14,000 குற்றங்கள் சொல்லலாம். ஆனால் மன்ற உறுப்பினர்கள் தவறு செய்துவிடுவார்கள், லஞ்சம் வாங்கிவிடுவார்



10th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

கள் என்ற எண்ணம் ஏற்படும்படி இதையெல்லாம் பற்றி அடிக்கடி பேசாமல் இருப்பது நலம். எங்களைப்பற்றி, அமைச்சர்களைப் பற்றி சொல்லுங்கள். ஆனால், மன்ற உறுப்பினர்கள் தவறு செய்து விடுவார்கள் என்ற கருத்து ஏற்படக்கூடிய வகையில் இதைப்பற்றி திருப்பித் திருப்பி சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. அதிகமாக மிகைப்படுத்திச் சொல்லி கனம் உறுப்பினர்கள் மீது தவறுதலான கருத்து ஏற்படுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது. இருந்தாலும் 'கோட் ஆஃப் காண்டக்ட்' வேண்டும் என்று ஒத்துக்கொண்டிருக் கிறோம், எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் வைத்துக்கொண்டு கோட் ஆஃப் காண்டக்ட் தயார் செய்ய இருக்கிறோம்.

தேர்தலைப்பற்றி சொன்னார்கள். வாக்காளர்கள் ஜாபிதாவில்— தவறுதலே வரக்கூடாது. அதை ரொம்ப ஜாக்கிரதையாகத்தான் தயாரிக்கவேண்டும். அவசரப்பட்டு மூன்று நாட்களில் ஒன்றும் தயாரிக்கப்படவில்லை. அவகாசம் கொடுத்துத்தான் தயாரிக்கப் படுகிறது. வாக்காளர் ஜாபிதா சீரான முறையில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதிலே கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது. போலிங் ஸ்டேஷனைப்பற்றி சொல்லப்பட்டது. மூன்று மைலுக்கு ஒரு போலிங் ஸ்டேஷன் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதிகப்படியாக எவ்வளவு போலிங் ஸ்டேஷன் எவ்வளவு குறைந்த தூரத்தில் வைக்க முடியுமோ அப்படி வைப்பதில் கவனம் செலுத் திக்கொண்டு தான் இருக்கிறோம். ஆனால், கிராமங்களில் அதிகமாக வைப்பதில் சில சிரமங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் எலெக் ஷன் கமிஷன் முடிவு செய்கிறது. அரசாங்கம் கூட அல்ல. அந்தக் கட்சி இந்தக் கட்சி என்பது அல்லாமல், அவர்கள் கேட் கிறார்கள், இவர்கள் கேட்கிறார்கள் என்பது அல்லாமல், எலெக்ஷன் கமிஷன் பார்த்துச் செய்கிறார்கள்.

மந்திரிகள் தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு, ஆறு மாதங்களுக்கு முன்பு ராஜீநாமா செய்யவேண்டும் என்று சொன் னார்கள். இதெல்லாம் திருப்பித் திருப்பி சொல்லப்பட்டு வருவது தான். இது கூட முதல் முதலில் எதிர்க் கட்சியினர் கூறிய கருத்து அல்ல, இந்தக் கருத்து எங்கிருந்து வந்தது? எல்லாம் அந்தப் பெரியவர் கருத்துத்தான். மந்திரிகள் ராஜீநாமா செய்துவிட்டால் மட்டும் போதுமா? நாங்கள் தேர்தலுக்கும் நிற்கவில்லை என்று உறுதி கொடுக்கவேண்டாமா? ஏனென்றால் 'நீங்கள் மந்திரியாக இருந்து இதையெல்லாம் செய்துவிட்டீர்கள் என்று ஜனங்கள் நினைத்துக்கொண்டிருப்பார்கள், அதனால் வோட்டு போட்டுவிடு வார்கள்' என்று சொல்லலாம். அதற்கு நாங்கள் என்ன செய்வது? ராஜீநாமா பண்ணிவிட்டால் மட்டும் போதுமா? நாங்கள் யாரும் தேர்தலில் நிற்கக்கூடாது, அப்புறம் காங்கிரசே தேர்தலில் நிற்கக் கூடாது, அப்பொழுது தான் நீங்கள் வரமுடியும். அவ்வளவுதூரம் செய்தால்தான் முடியும். சரி, ராஜீநாமா பண்ணுகிறோம் என்றால் போதுமா? ராஜிநாமா செய்தால் என்ன? கவர்னர் ரூல் வரும் கவர்னர் ரூல் என்றால் என்ன? அது யார் ரூல்? மத்திய ஆட்சி ரூல். அப்பொழுது மத்திய ஆட்சியும் ராஜீநாமா பண்ண வேண்டும். அங்கே பிரசிடெண்ட் ரூல் வரும். இன்றைக்கு மாநிலத்தில் ராஜீநாமா செய்து விட்டால் மட்டும் போதுமா? ராஜ-

[திரு. எம். பக்தவத்சலம்] [10th March 1966

நாமா செய்தால் அட்வைசர்கள் வருகிறார்கள். கேரளத்தில் என்ன நடக்கிறது? ஆமாம், கவர்னர் பொதுவாக இருக்கவேண்டும். அவர் மத்திய சர்க்காருக்கு உட்பட்டவர்தான். மாநில ஆட்சி வேண்டாம், மத்திய ஆட்சி வேண்டாம் என்றால், என்ன கருத்து? இங்கே நூதனமாக இந்தக் கருத்து சொல்லப்படுகிறது. இப்படி இங்கிலாந்திலே நடக்கிறதா? அமெரிக்காவிலே நடக்கிறதா? இப்பொழுது பொதுத்தேர்தல் யுனைடெட் கிங்டமில் வரப் போகிறது. வில்சன் அவர்கள் ராஜீநாமா செய்கிறாரா? எதிர்க் கட்சி அப்படிக் கேட்கிறார்களா? இங்கே நமக்கு நம் பேரிலேயே நம்பிக்கை கிடையாது. எப்படி எந்த வகையில் எல்லாம் சொல்வது என்று வருகிறது. அவ்வளவுதான். (சிரிப்பு).

எலெக்ஷன் பற்றிச் சொல்லும்போது கனம் சுதந்திராக் கட்சி அங்கத்தினர், 'நீங்கள் ஆயுதபாணியாக இருக்கிறீர்கள். நாங்கள் நிராயுதபாணிகள்' என்று சொன்னார்கள். நிராயுதபாணியாக இருந்தும் தானே அவர்கள் ஜெயித்து இருக்கிறார்கள். என்ன ஆயுதம் இருக்கிறது எங்களிடம்? நாங்கள் போவதும் மந்திரி ஹோதாவில் போகிறது இல்லை. அந்த சமயத்தில் பொது ஃபங்க்ஷன் கூட எதுவும் வைத்துக் கொள்வதில்லை. போன தேர்தலிலே அப்படித்தான் செய்தோம். பொதுக் கூட்டத்திலே கலெக்டர் இருக்கிறார் என்றார்கள். தேர்தல் கூட்டம், என்றால் அந்தக் கூட்டத்திற்கும் கலெக்டரோ, மற்ற அதிகாரிகளோ வருவதில்லை, யாரும் வருவதில்லை. போலீஸ் அதிகாரிகள் அமைதியைக் காக்க வருகிறார்கள். ஏதாவது தகவல் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிந்துகொள்ள வருவர். எல்லோரையும் கூட்டிக் கொண்டு போவதெல்லாம் கிடையாது. டூர் செய்வதைக் குறைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். தேர்தலுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே பொது வேலைகளை நிறுத்திவிடுகிறோம். நிர்வாக வேலை செய்தபிறகு ஏதாவது பொதுக்கூட்டத்திற்குப் போகக் கூடாது என்றால், அதை ஒப்புக் கொள்ள முடியாது. பொதுக் கூட்டத்திற்கு என்றே போகிறோம் என்றால், காங்கிரஸ் கூட்டத்திற்குப் போகிறோம் என்றால், அரசாங்கத்திற்கு செலவு கிடையாது. அதைப் பற்றி எத்தனையோ முறை சபையில் கேள்விகளுக்கு பதில் அளித்திருக்கிறேன். கட்சி வேலைக்கு என்று போனால், அதற்கு பிரயாணப்படி வாங்குவதில்லை.

தமிழிலே நடவடிக்கை நடக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். வேகமாகத்தான் தமிழிலே நடவடிக்கைகள் வந்து கொண்டு இருக்கின்றன. ஆங்கிலத்திலேயும் சொல்லுகிறோம். (குறுக்கீடு) இதுவரை யாரும் ஆட்சேபித்தது இல்லை. ஆங்கிலத்திலேயும் சொல்லுகிறோம். தமிழிலே சொல்ல வேண்டும் என்றால், அதற்கு ஆட்சேபனை இல்லை.

புதிய கருத்து ஒன்றை கனம் உறுப்பினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அம்மையார் குறிப்பிட்டார்கள். அவர்கள் நகரத்தில் இருக்கிறவர்கள். நகரத்து எம்.எல்.ஏ.-க்கள் நகரசபை அங்கத்தினர்களாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன் விஷயம் வேறு. அதுபோல இங்கே செய்வது யோசிக்க வேண்டிய



10th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

விஷயம். அங்கேயும் அவர்களுக்கு வோட்டிங் பவர் கிடையாது. வோட்டிங் பவர் வேண்டும் என்று கேட்கிறார்கள். அது முற்றிலும் வேறு விஷயம். பின்னால் சட்டம் வரும்போது, அதில் மாற்றம் செய்வதைப் பற்றி யோசிக்கலாம். இல்லை என்று இப்பொழுதே சொல்லவில்லை. சட்டம் செய்கிறபோது யோசிக்க வேண்டிய விஷயம் இப்பொழுது சட்டமன்றத்திலே உறுப்பினராக இருப்பதே மேல். சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பதில்தான் அதிகமாக வாய்ப்புகள் இருக்கின்றன.

சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு விதமாக மந்திரிகளைப் பார்க்க முடியவில்லை என்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்கள், எதிர்க்கட்சிக்காரர்கள்தான் பார்க்கிறார்கள், நாங்கள் பார்க்க முடியவில்லை என்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சிக்காரர்கள், தாங்கள் பார்க்க முடியவில்லை என்கிறார்கள். இது ஒன்றை ஒன்று அடித்து விடுகிறது. நாங்கள் யாரையும் பார்க்காமல் இல்லை. பார்க்கிறதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. அதோடு மட்டுமல்ல, அதிகாரிகளைப் பார்க்கவும் ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

தேர்தல் அலுவல்களைக் கவனிக்கக் கூடாது என்றார்கள். நான் சொல்லலாம், அங்கத்தினர்கள் சட்டமன்ற உறுப்பினர் வேலையைக் கூடக் கவனிக்கக் கூடாது என்று. நாங்கள் அமைச்சராக இருந்தாலும், ஜனநாயகத்திலே கட்சிக்காரர்கள்தான் என்பதை மறுக்க முடியாது. நிர்வாகத்தில் பொதுவாக கட்சிக்கு பொறுப்பு இருக்கிறது. ஆனால், கட்சி வேலை செய்வது என்றால், தவறாகப் பயன்படுத்துவதில்லை. நிர்வாகத்திற்குப் பாதகம் ஏற்படும் வகையில் எதுவும் செய்வதில்லை.

கடைசியாக, மொழிப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டார்கள். மொழிப் பிரச்சினை பற்றி விளக்கியிருக்கிறேன்; பொது விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போதும் சொன்னேன். மொழிப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லும்போது, இந்த நாடு ஒன்று என்பதை மனதில் வைத்துக் கொண்டால், அதிருப்தியோ, சிக்கலோ ஏற்படாது. மனத்தை தடைப் படுத்தாது. அப்படியின்றி, இப்பொழுது அதிலே சற்று 'மெண்டல் ரிஸர்வேஷன்' இருக்கிறது. ஆகையினால்தான், அது வேண்டாம், எதற்காக ஹிந்தி என்றெல்லாம் சொல்லுகிறார்கள். திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேன், இந்த மாநில மக்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எந்தவிதத்திலும் பாதகம் ஏற்படாது. நாங்கள் பாதுகாப்போம். 'எடுத்துச் சொல்லத் தவறியதற்காக' வெட்டுப் பிரேரணை. நாங்கள் எடுத்துச் சொல்லி வெற்றி பெற்றும் இருக்கிறோம், மத்திய சர்க்காருக்கு மட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத் தலைவர் இன்றைக்கு அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருப்பதால் அந்தக் கருத்தை காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒப்புக் கொண்டு வழி காட்டியிருக்கிறது. அதை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ள, ஒப்புக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறது. ஏற்றுக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் இங்கே இந்தியே வேண்டாமென்று சொல்லுகிறார்கள். இந்தி எதிர்ப்புக் கலவரத்தைப் பற்றி ரொம்ப ஆவேசத்தோடு, உருக்கத்தோடு, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேசினார்கள். நான் கேட்கிறேன். அவர்களுடைய

தலைவர், அவர்கள் சொல்லவில்லை என்றாலும், பல சம்பவங்களுக்கும் தாங்கள் பொறுப்பு அல்ல என்று கைகழுவி விடவில்லையா? முதலிலே சேர்ந்தார்கள் மாணவர்கள், அசம்பாவிதமான நிகழ்ச் சிகள் நடைபெற்றன; போலீஸ் ஆபீசர்கள்கூட கொலை செய்யப் பட்டார்கள். பல இடங்களில் பயங்கரமான சம்பவங்கள் நடைபெற்றன. பலவிதமான சேதங்கள் ஏற்பட்டன. அன்றைக்கு நாங்கள் பொறுப்பு அல்ல என்று சொல்லிவிட்டு, இன்றைக்கு இந்தி எதிர்ப்பு சம்பவங்களுக்கு நாங்கள்தான் பொறுப்பு என்று எப்படி உரிமை கொண்டாடுகிறார்கள் என்பது எனக்குப் புரிய வில்லை.

**திரு. மு. கருணாநிதி:** தமிழ் நாட்டில் ஏற்பட்ட உணர்ச்சி எதிரொலியைக் குறிப்பிட்டேன்; நாங்கள்தான் நடத்தினோம் என்று குறிப்பிடவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** உணர்ச்சி எதிரொலி என்று சொல்லுவது சரியில்லை. எத்தனையோ பேர்கள் முதலிலே சேர்ந்த வர்கள் பின்னுக்குப் போய்விட்டார்கள். அதை சமூக விரோதிகள் பயன்படுத்திக் கொண்டார்கள். மக்கள் இரை ஆனார்கள். இப் பொழுது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேச்சு கவலையைக் கொடுக்கிறது. மறந்து விட்டதையெல்லாம் கிளப்பி, "செய்தது எல்லாம் சரி, எல்லாம் ஹிந்திக்காகத்தான், மொழி பாதிக்கப்படு கிறது" என்று எல்லாவற்றையும் ஆதரிக்கும் முறையில், தவறுத லான பாதையில் சென்றாலும், மக்கள் மயங்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். அகில இந்தியாவிற்கும் பொது மொழி ஹிந்தி என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஹிந்தி தெரியாதவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும் என்பதெல்லாம் இப்பொழுது மத்திய சர்க்காரிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கா ரிடம் மாநிலத்தின் நன்மையையும், அகில இந்திய ஒற்றுமையையும் மறந்துவிடாமல் வற்புறுத்தியதன் விளைவாக வெற்றி பெற்று இருக்கிறோம். இன்றைக்கு தமிழ் மக்கள் அரசாங்க சர்வீஸ் சம்பந்தப்பட்டவரையில் எந்த விதமான அச்சமும் கொள்ள வேண்டியதில்லை. இன்றைக்கு இருக்கும் நிலையில், தேசத்து 14 மொழிகளிலும் பரீட்சை எழுதலாம். தமிழிலும் எழுதலாம். சென்ற முறை விவாதத்தின்போது ஐந்து மொழிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் எந்த ஐந்து மொழி என்று கொள்வது? ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மொழி வேண்டும் என்று கேட்பார்கள். ஒருவர் மராத்தி வேண்டும் என்பார், இன்னொருவர் குஜராத்தி என்பார், மற்றொருவர் கன்னடம் என்று கேட்பார்கள். அப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு மொழியைக் கேட்டால், அப்படி ஐந்து மொழி என்று கொடுத்து விட்டால், தமிழ் என்ன ஆவது?

2-00 p.m. **திரு. மு. கருணாநிதி:** சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொன்னால் உண்மைக்கு மாறானதும் உண்மையாகிவிடும் என்று கருதி முதல் அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். "ஐந்து மொழி களை ஆக்குங்கள்" என்று நான் கூறவில்லை. குடியரசு தின விழா வில் முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது, "இரண்டு, மூன்று,



நான்கு, ஐந்து மொழிகளை வைத்துக்கொள்ளலாம்" என்று சொன் னார்கள். "அதையாவது செய்ய முயற்சிப்பீர்களா?" என்று நான் கேட்டேன். அதைத் தவறாக வியாக்கியானம் செய்கிறார்கள். அவருடைய வாதப்படியே, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தைக் கூட்டிப் பார்த்தால் 14 மொழிகள் என்று வருகிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்,** நான் சொன்னதையே கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் திருப்பிக் கேட்கிறார்கள். அவர் ரொம்பப் படித்தவர்; கலை வல்லவர். நான் உண்மைக்கு மாறாகப் பேசுவதாக அவர் திருப்பித் திருப்பிச் சொல்வதனால் தான் நான் விளக்கம் கூறவேண்டியிருக்கிறது. அந்த முறையில் தான் சொல்லுகிறேன்.

ஹிந்தியோடு ஆங்கிலமும் இருக்கும். உலகத் தொடர்பு மொழி யாக ஆங்கிலம் வேண்டும். அகில இந்தியத் தொடர்பு மொழியாக ஹிந்தி இருக்கவேண்டும் என்றால் தற்காலம் ஆங்கிலத்தின் மூலமும் அந்தத் தொடர்பை வைத்துக்கொள்ளலாம், யாரும் பாதிக்கப் படவொட்டாமல். ஆனால், அகில இந்தியப் பரீட்சைக்கு தமிழி லும் எழுதக்கூடிய முடிவு ஏற்பட்டிருக்கிறது. இந்த வகையில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி வழிகாட்டியிருக்கிறது. அவ் வாறு எழுதுகிறவர்கள் இந்தியும், ஆங்கிலமும் படிக்கவேண்டும் என்று சொன்னேன். ஆகையால்தான் மும்மொழிக் கொள்கை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலச் சந்ததிகள் பாதிக்கப்படக் கூடாது, மாணவர்கள் சிறிதளவும் பாதிக்கப்படக் கூடாது, அவர்கள் தவறான வழிக்கு இரையாகக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. மாணவர்கள் மீது எனக்கு எப்போதுமே பரிபூரண நம்பிக்கை உண்டு. ஒருவர் இருவர் தவறான பாதையைக் காட்டினாலும், பொதுவாக மாணவர்கள் அதற்கு இரையாகமாட் டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், மேலும், மேலும் தமிழுக்குத்தான் நாம் முக்கியத்துவம் அளித்துக்கொண்டு வருகிறோம். ஒன்று நான் கூற வேண்டும். தமிழிலேயே போதிய அறிவு இல்லையென்றால் அவர்கள் உத்தியோகத்திற்கு லாயக்கற்றவர் களாகப் போய்விடுவார்கள். ஆங்கிலம் போதும் என்கிறார்களே அவர்களுக்கு எச்சரிக்கையாக நான் இதைச் சொல்லுகிறேன். ஆங்கிலம் வேண்டும். ஆனால், ஆங்கிலம் இருந்தால் போதும், தமிழ் வேண்டாம் என்று நினைக்கிறவர்கள் நாளைக்கு பாதகம் அடைவார்கள். ஆனால், அவர்களுடைய சந்ததியைப் பற்றி அச்சம் இல்லை. அவர்கள் எல்லோரும் படித்துவிடுவார்கள். இப் பொழுது உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கும் தமிழை படிக்க வேண்டியதன் அருமை தெரியும். அவர்கள் எல்லாவற்றையும் படிக் கின்றார்கள். ஒன்றும் தெரியாத மாணவர்களைத் தவறான பாதை யில் செலுத்த, அவர்களை கெடுக்க சிலர் பார்க்கிறார்கள். உத்தியோ கப் பரீட்சையெல்லாம் நாளைக்குத் தமிழிலே வந்துவிடும். அப் பொழுது தமிழிலேயே பரீட்சை எழுத வேண்டிய ஆற்றல் வேண்டும். தமிழுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமோ, எவ்வளவு வசதிகள் பெருக்கப்படவேண்டுமோ, எவ்வளவு தூரம் கவனம் செலுத்தவேண்டுமோ, எவ்வளவு தூரம்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th March 1966

பல நூல்கள் ஆக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டுமோ, அவற்றில் எல்லாம் கவனம் செலுத்தப்பட்டு, மற்ற வசதிகளும் பெருக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மூலம் அறிவை எந்த எந்த வகையில் வளர்க்க முடியுமோ, அதில் எல்லாம் பரிபூரணமாக இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. ஆகவே, மொழிப் பிரச்னையிலே ஏதோ இந்த அரசாங்கம் செய்யவேண்டியதைச் செய்யத் தவறிவிட்டது என்ற கூற்றை அடியோடு மறுத்து என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சட்டமன்ற மானியத்தின் மீது தரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரபணையைப் பொறுத்த வரையில், இந்த மன்றத்தின் மரபுக்கேற்ப, நாங்கள் வற்புறுத்தவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI SAW GANESAN : I beg leave of the House to withdraw my cut motion under Demand No. VI—State Legislature.

The cut motions were, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 17,26,500 under Demand No. VI—State Legislature.

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Sri K. A. Mathialagan to Demand No. VII—Elections was put and lost.

SRI SAW GANESAN : I beg leave of the House to withdraw my cut motion to Demand No. VII—Elections.

The cut motion, was, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 59,84,600 under Demand No. VII—Elections.

The Demand was put and carried and the Grant was made.

The cut motions to Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff—were put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 3,22,10,000 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff.

The Demand was put and carried and the Grant was made.

## V.—GOVERNMENT MOTION

### CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Demand, viz.—

XVI—Agriculture.

XVIII—Animal Husbandry.



10th March 1966] [Sri M. Bhaktavatsalam]

XXXIX—Capital Outlay on Agriculture.

XLVII—Capital Outlay on Schemes of Government Trading scheduled to be taken up on Wednesday, the 16th March 1966, and the Demands, viz.

I—Land Revenue Department.

IV—Stamps—Administration.

XXXI—Famine Relief.

XXXVII—Compensation to Zamindars.

XXVII—Public Works—Works.

XXVIII—Public Works—Establishment and Tools and Plant.

XLIII—Capital Outlay on Public Works scheduled to be taken up on Monday, the 14th March 1966 and the Demand, viz.

XXVI—Irrigation.

XLII—Capital Outlay on Irrigation scheduled to be taken up on Tuesday, the 15th March 1966, be taken up on Monday, the 14th, Tuesday, the 15th and Wednesday, the 16th March 1966 respectively.

The motion was put and carried.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்ளும் நாட்களில் இரண்டு மூன்று மாறுதல்கள் வந்துவிட்ட காரணத்தால் எந்த எந்த நாட்களில் எந்த எந்த மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைக் குறித்த விவரம் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The hon. Member's request will be attended to.

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE. 2-09 p.m.

### A. Statutory Rules and Orders

*Nil.*

### B. Reports, Notifications and other papers.

*42. Review on Labour in Madras State 1965-66.

† Errata to the Review on Labour in Madras State 1965-66.

* Circulated separately on 8th March 1966.

† Placed on the table of the House on 9th March 1966.

## APPENDIX

[*Vide* answer to starred question No. 229 at page 329]

*A*.—(*a*) Yes.

(*b*) & (*c*).—Yes. An investigation was made in this regard in 1960 and 1961 by a Public Health Division sanctioned for the purpose. The Division formulated proposals for tapping of 40 million gallons per day of water at seven points from the Cauvery. The Chief Engineer has finally recommended in March 1962 the pumping of 40 million gallons per day of water from Veeranam Tank in the Cauvery system being the nearest point to the City. The cost of this scheme was estimated then at Rs. 17·13 crores to install and Rs. 35 lakhs to maintain annually. As it is considered that any augmentation of the City Water-supply Scheme should ensure a mnimum additional supply of 110 million gallons per day to meet the drinking and industrial requirements in 1981, the possibility of tapping this quantity in the upper reaches of the Cauvery and conveying it in open lined channel by gravity flow is proposed to be investigated.

**பதில்.**—(அ) ஆம்.

(இ) & (உ).—ஆம், இதற்கென அமைக்க அனுமதிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பிரிவு ஒன்று 1960, 1961-ம் ஆண்டுகளில் தேர்வாராய்வு நடத்தியது. காவிரியிலிருந்து ஏழு இடங்களில் நாள் ஒன்றுக்கு 400 லட்சம் 'காலன்' நீரை இறைத்து அளிக்க இப்பிரிவு செயற்குறிப்புகளைத் தயாரித்தது. வீராணம் ஏரி சென்னை நகருக்கு மிக அருகிலமைந்திருப்பதால் அதிலிருந்து நாள் ஒன்றுக்கு 400 லட்சம் காலன் நீர் இறைத்து அளிப்பதற்குத் தலைமைப் பொறியாளர் 1963, மார்ச் மாதத்தில் முடிவாகப் பரிந்துரைத்தார். இதை நிறுவுவதற்கென இத்திட்டத்திற்கு ரூ. 17·13 கோடி செலவாகுமென்றும் ஆண்டுதோறும் இதை நிர்வகிப்பதற்கு ரூ. 35 லட்சம் செலவாகுமென்றும் அப்போது மதிப்பிடப்பட்டது. சென்னை நகருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவை அதிகப்படுத்தும் எத்திட்டமும் 1981-க்குள் நகரின் குடிநீர் வசதி, தொழில்வசதி இவற்றிற்கு 1,100 லட்சம் காலன் நீராவது அன்றாடம் கூடுதலாய்க் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கருதப்படுகிறது. எனவே, இதற்கெனக் காவிரியின் மேற்பகுதிகளில் இந்த அளவு நீரைத் திறந்த கால்வாய் மூலம் தங்கு தடையின்றி கொணர இயலுமா என்பது குறித்துத் தேர்வாராய்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 11th March 1966.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*காளையார் கோவில் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள்*

** குறுகிய கால கேள்வி எண் 3.—திரு. செ. மாதவன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் காளையார்கோவில் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்ததா ?*

*(இ) ஆம் என்றால், காரணம் என்ன ?*

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** *காளையார்கோவில் பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக முறையீடுகள் பெறப்பட்டன. இப் பஞ்சாயத்து யூனியன் நிதி நிலையைக் குறித்துப் புலனாய்வு செய்யப்படவிருக்கிறது. அதுவரையில் அரசாங்கம் பிப்ரவரி மாத இறுதிவாக்கில் ரூ. 50,000 (ஐம்பதாயிரம்) வழிவகை முன் பணம்* (Ways and Means Advance) *ஒன்றை இப் பஞ்சாயத்து யூனியனுக்கு அனுமதித்தது. இப் பணத்தைக் கொண்டு, யூனியன் பள்ளி ஆசிரியர்களுக்கு டிசம்பர், ஜனவரி மாதச் சம்பளங்களையும், மாநில உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு டிசம்பர் மாதச் சம்பளத்தையும் இந்தப் பஞ்சாயத்து யூனியன் இப்போது வழங்கி இருக்கிறது. யூனியன் பள்ளி ஆசிரியர்கட்கு பிப்ரவரி மாதச் சம்பளம், மானிய உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கட்கு ஜனவரி பிப்ரவரி மாதச் சம்பளங்களும் இன்னும் செலுத்தப் பட வேண்டும். இவை உறுதியாக விரைவில் செலுத்தப்படுவதற்காக அரசாங்கம் இரண்டாவது வழிவகை முன்பணமாக ரூ. 50,000 வழங்க அனுமதியளித்துள்ளது. எனவே, சம்பள நிலுவைகள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் செலுத்தப்பட்டுவிடும்.*

**திரு. செ. மாதவன் :** *தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து யூனியன் நிதியிலுள்ள கோளாறுதான் இதற்குக் காரணமா ? குறிப்பிட்ட பஞ்சாயத்திலே நிர்வாகத்தில் ஏற்பட்ட ஊழல் காரணமா என்று அறிய விரும்புகிறேன்.*

[11th March 1966

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நிர்வாகத்தில் ஏற்பட்ட ஊழல் காரணமாக இருக்க முடியாது. அங்குள்ள பொருளாதாரம் வரவு செலவு சம்பந்தப்பட்ட வரையில் எல்லாவற்றையும் பரிசீலனை செய்தால் தான் நல்லமுறையில் பதில் அளிக்கமுடியும்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, சம்பளம் கொடுக்கப் படவில்லை என்பது உடனடியாக கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அதைக் கலெக்டர் பரிசீலித்தாரா ? பரிசீலித்த பிறகு அரசாங்கம் 50,000 ரூபாய் கொடுத்ததா ? அல்லது, அரசாங்கமே முன்கூட்டிக் கொடுத்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** டிசம்பர் மாதத்தில் கொடுக்கவில்லை. இதை பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் கலெக்டருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். கலெக்டர் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து ஒரு சில வாரங்களுக்குள் இந்தப் பணம் கொடுக்கப்பட்டது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ரூ. 50,000 முன் பணம் கொடுக்கபட்டதற்கு முன்பு பஞ்சாயத்து யூனியனிலிருந்து விவரமான தகவல் கோரப்பட்டதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தனியாக அந்த பிரச்னை வரும் போதுதான் தகவல் கோர முடியும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஆசிரியர்களுடைய சம்பளத்தை பொறுத்தவரை மார்ச் கடைசி வரை கொடுக்கவேண்டும் என்பதற்காக பட்ஜெட் போட்டு பின்னும் ஒதுக்கவேண்டுமே, அப்படியிருக்கும்போது பற்றுக்குறை ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இவ்வாறு சில அலுவல்களிலிருந்து வேறு சில அலுவல்களுக்கு மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கலாம். இதைப்பற்றி ஆய்வு முடிந்த பிறகுதான் சொல்லமுடியும்.

**திரு. செ. மாதவன் :** ஆசிரியர்களின் சம்பளத்திற்குச் சர்க்காரே கிராண்ட் கொடுக்கிறார்கள். அப்படியிருக்கும் போது தவறுகள் ஏற்படலாமா ? அதற்கான காரணம் என்ன ? ஏற்படாமல் இருக்க பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பஞ்சாயத்து யூனியனிலே இது தான் முதலாவதாக நடந்திருக்கிறது என்று நினைக்கிறேன். இம்மாதிரி நடக்காமல் இருக்க முன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று கலெக்டருக்கு உத்தரவு போடலாம் என்று கருதுகிறேன்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** இப்பஞ்சாயத்து யூனியனிலே என்ன காரணத்தினால் அப்படி ஏற்பட்டது என்று பரிசீலிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



11th March 1966]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** முதலிலேயே பதில் அளித்தேன் கலெக்டருக்கு உத்திரவு போடுவது பற்றி கலெக்டர் அவர்கள் எக்ஸாமின் செய்து சர்க்காருக்கு ரிப்போர்ட் அனுப்புவார்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தாமதத்திற்கான காரணங்களை அறிந்து சட்டசபை முடிவதற்குள் சபை முன்பு அறிக்கை வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** குறுகிய காலத்திற்குள் இயலாது என்று நம்புகிறேன்.

**திரு. செ. மாதவன் :** இந்தப் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த அளவில் சேர்மென் எப்படியோ ஜெயித்து வந்து விட்டார்கள். அவர்கள் நிர்வாகத்தை நடத்த முடியாத அளவிற்கு இருந்தால் அவர்களுக்கு வோட் போட்டவர்களே திரும்பிவிட்டதன் காரணமாகத்தான் தயக்கம் ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இம்மாதிரி அரசியல் காரணமாக இருக்கமுடியாது என்று நினைக்கிறேன். 1374 பசலியில் 50 காசிலிருந்து 70 காசு வரையிலும் ரெவின்யூ சர்சார்ஜை உயர்த்துவதாக தீர்மானம் செய்திருக்கிறார்கள். இதன் மூலம் சுமார் 38 ஆயிரம் வரும். ஆகவே, இது சம்பந்தமாக தெளிவாக அறிக்கை கலெக்டரிடமிருந்து வந்த பிறகுதான் பதில் சொல்லமுடியும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** குறுகிய காலத்தில் அறிக்கை கிடைக்காது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால் எவ்வளவு காலம் ஆகும் ? அறிக்கை கிடைத்தால் அதனுடைய நகல் ஒன்றை சபையில் வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்டவரை எங்கு நிதி ஆதாரம் இருக்கிறது என்ற காரணத்தை எல்லாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். ஆகவேதான் குறுகிய காலத்தில் இயலாது என்று கூறினேன்.

**திரு. எஸ். முருகையன் :** பஞ்சாயத்து யூனியனில் ஒரு இனத்திலிருந்து இன்னொரு இனத்திற்கு மாற்றி போடப்பட்டதனால் பற்றுக்குறை ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அபிப்பிராயத்தை வைத்துக் கொண்டு உண்மை என்று சொல்வது முறையல்ல.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Are they not to raise additional income by collecting local surcharge for maintaining elementary education? May I know whether the Government have not issued specific instructions to them to raise local surcharge for meeting the deficit and supplementing their income and also for meeting the additional expenditure in respect of maintenance of schools ?

THE HON. SRI S. M. A. MAJID : A separate question is needed, Sir.

## விவசாய பல்கலைக் கழகம்

* 242 கேள்வி.—**திரு. மு. கருணாநிதி:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கோவையில் விவசாய பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) & (இ) இம்மாநிலத்தில் விவசாயப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதைக் குறித்து அரசாங்கம் இன்னும் முடிவு எதுவும் எடுக்கவில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்:** நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாயப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அதுதான் சொன்னேன் இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்று.

**திரு. எஸ். முருகையன்:** தஞ்சைக்கு அடுத்தபடியாக உணவு தானியம் உற்பத்தி செய்யக்கூடியது வட ஆற்காடு மாவட்டம். அங்கே வாழவைத்தான் பகுதியிலே 300 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் சாகுபடி செய்யாமல் இருந்து வருகின்றன. அவற்றைச் சாகுபடி செய்ய வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு விவசாய பல்கலைக் கழகம் ஏற்படுத்த முயற்சி செய்வார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்:** ஒரு இடத்தில் விவசாயம் செய்ய வேண்டும் என்பதற்காக பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதற்கில்லை.

**திரு. மா. தண்டாயுதபாணி:** இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தஞ்சையில் ஒரு விவசாய கல்லூரி எதிர்பார்த்தோம், கிடைக்கவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது தஞ்சைக்கு முதலிடம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** விவசாயத்தில், குறிப்பாக, தஞ்சை நெல் களஞ்சியமாக இருந்து உணவு கொடுக்கிறது. இருந்தாலும், விவசாயப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படுமா என்பது பின்னால் தான் முடிவு செய்யப்படும்.

## கள்ளக்குறிச்சி வட்டத்தில் விவசாயப் பள்ளி

* 243 கேள்வி.—**திரு. எல். ஆனந்தன்:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தாலுக்காவில் ஒரு விவசாயப் பள்ளி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது, எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



## ஜமீன் ஒழிப்புச் சட்டம்

* 244 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜமீன் ஒழிப்பு சட்டத்தின்படி சர்க்காரால் எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாகாமல் இருக்கும் கிராமங்கள் எத்தனை?

(இ) தாமதத்திற்கான காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) Six (6).

(*b*) Proceedings questioning the tenure of the estates are pending before the Special Appellate Tribunal (High Court) Madras or the Supreme Court of India.

**திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே சில கிராமங்கள் விஷயத்தில் சர்க்காருக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அப்படியிருந்தும்கூட செட்டில்மெண்ட் ஆபீசர் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. எந்தெந்த கிராமங்களில் அப்படிச் செய்யப்பட்டது? இராமனாதபுரத்திலே அம்மாதிரி செய்யப்பட்டதா?

**கனம் திரு. வெ. ராமையா:** இராமனாதபுரத்தைப் பொறுத்த வரை தென்கரை, செவ்வூர் போன்ற பகுதிகளுக்குத்தான் தீர்ப்பு கூறப்பட்டது. சர்க்கார் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

**திரு. செ. மாதவன்:** இராமநாதபுரம் மாவட்டம் தென்கரை கிராமத்தைச் சேர்ந்த வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்று, ஹைக்கோர்ட் தீர்ப்பை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளப்பட்டு, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பும் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக வந்துவிட்டது. அதன் பேரில் அரசாங்கத்திற்கு ரெப்ரசென்டேஷன் செய்து கொண்டிருந்தும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் சிவில் கோர்ட்டுக்குச் சென்று வார்த்தை வாங்கக் கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. சர்க்கார் அதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. வெ. ராமையா:** சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குப் பிறகு சர்க்கார் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவற்றை எடுத்துக்கொண்டு வருகிறது. எங்காவது சிக்கல் இருக்குமானால் அதை கனம் அங்கத்தினர் அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பினால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

* 245 *Q.*—**SRI S. MADHAVAN:** Will the Hon. the Minister for Food be pleased to state how many writs have been filed in the High Court as on 31st December 1965 questioning the validity of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963)?

THE HON. SRI V. RAMAIAH: 235 writ petitions have been filed in the High Court as on 31st December 1965 questioning the validity of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).

Sri S. MADHAVAN : R.R. Notification has already been cancelled and it has been notified as a new Inam estate under the Madras Act 26 of 1963.

*1374-ம் பசலிக்கு அவர்கள் ஏற்கனவே தேவஸ்தான மேல்வாரம் தாரர்களுக்கு தீர்வை கொடுத்துவிட்டார்கள். அந்த 1374-க்கே மீண்டும் கொடுக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. ஏற்கனவே செய்த ஆர். ஆர். நோட்டிபிகேஷன் கான்சலாகி விட்டது. ஆகவே இதுபற்றி பரிசீலனை செய்வார்களா ?*

**கனம் திரு. வெ. ராமைய்யா :** *கனம் அங்கத்தினர் இதைப்பற்றி தனியாக எழுதினால் பரிசீலனை செய்து அந்தக் கிராமத்திற்கு அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தும்.*

## *Cattle from Australia*

* 247 *Q.*—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether our State has received any gift of cattle, by the Australian "Society for those who have less"; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன் :** *(அ) ஆம்.*

*(இ) 14 மாடுகள் (4 காளைகளும், 10 பசுக்களும், கிடாரிகளும்) தமிழ் நாடு அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 10 மாடுகள் (4 காளைகளும், 6 பசுக்களும்) அரசாங்கமே விலங்கின வளர்ப்புத் துறைக்கும், 4 பசுக்கள் சாலிக் கிராமத்திலுள்ள சேவா சமாஜம் ஆண்கள் இல்லத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன.*

**திரு. சா. கணேசன் :** *ஆஸ்ட்ரேலியாவில் இருந்து 20 மாடுகளுக்குள்ளே தான் வந்தனவா ? அல்லது மேலும் கிடைத்ததா ? மேலும் கிடைப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.*

**கனம் திரு. பூ. கக்கன் :** *அவர்கள் கொடுத்த மாடுகள் 16. ஆனால் அங்கிருந்து இங்கே ஒரு மாட்டைக் கொண்டு வரவே அதிகம் செலவாகிறது. ஆகவே, அவர்கள் கொடுத்த உதவியை மட்டும் பெற்றுக்கொண்டோம்.*

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** *அங்கிருந்து அவர்கள் கொடுத்த மாடுகளைக் கொண்டு வருவதற்கான செலவு எவ்வளவு? அந்தப் போக்குவரத்துச் செலவை யார் ஏற்றுக்கொண்டார்கள் ?*

**கனம் திரு. பூ. கக்கன் :** *அந்தச் செலவு நம்முடையது தான். ஒரு மாட்டுக்குக் கிட்டத்தட்ட 5 ஆயிரம் செலவாகிறது. மொத்தத்தில் 65 ஆயிரம் செலவு செய்திருக்கிறோம்.*

**திரு. இராம. அரங்கண்ணல் :** *இந்த 14 மாடுகளையும் கொண்டு வருவதற்கான செலவே 65 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதை 65 ஆயிரம் ரூபாய் செலவு செய்தது சரியென்று அரசாங்கம் கருதுகிறதா ? அதற்குத் தகுந்த மாடுகள்தானா என்று அறிய விரும்புகிறேன்.*



**கனம் திரு. பூ. கக்கன் :** *அந்த மாடுகள் நல்ல பால் கொடுக்கிற மாடுகள்தான். வமிச அபிவிருத்தி அதிகமாக ஏற்படுகிறது.*

## *அரசாங்க மருத்துவ மனைகள்*

** 248 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) ஆலங்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்கு வேறொரு கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது உண்மையா ?*

*(இ) ஆமெனில், இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமைக்குக் காரணமென்ன ?*

*(உ) மேற்படி வேலை எப்போது தொடங்கப்படும் ?*

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** *(அ) முதல் (உ) வரை ; ஆலங்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த கட்டடத் திட்டம் 1967-68-ம் ஆண்டில் II-ம் பாகத் திட்டமாக ஆலோசனை செய்யப்படும்.*

** 249 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) சிதம்பரம் டவுன் அரசாங்க பெரிய ஹாஸ்பிட்டலை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?*

*(இ) ஆமெனில், அது எந்த நிலையிலுள்ளது ?*

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** *(அ) & (இ) சிதம்பரம் அரசாங்க மருத்துவ மனைக்குப் புதிய இடத்தில் புதுக் கட்டடம் கட்டுவது 1966-67-ம் ஆண்டில் II-ம் பாகத் திட்டமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.*

## *பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றுதல்*

** 250 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பன்னுருட்டி, நெல்லிக்குப்பம் ஆகிய டவுன் பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா ?*

*(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?*

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** *(அ) & (இ) ஆம். நெல்லிக்குப்பம், பன்னுருட்டி பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.*

*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :* இந்த இரண்டு நகரங்களும் முனிசிபாலிடிகளாக ஏப்ரல் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படுமா? அல்லது, அக்டோபர் மாதத்தில்தான் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தின் உத்தேசமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அப்ஜெக்ஷன்களுக்கு ஆறு வார காலம் தேவைப்படுகிறது சட்டப்படி. ஆகவே, ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிப்பது சாத்தியமில்லை என்று தோன்றுகிறது.

*திரு. செ. மாதவன் :* தலைவரவர்களே, புதிய நகராட்சிகள் திறக்கும்பொழுது அங்கேயுள்ள பொறுப்பானவர்கள் வரிபோடுவதிலே சில தவறுகள் இழைக்கிறார்கள். இதை உடனடியாகப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஸ்பெசிஃபிக்காக சம்பந்தப்பட்ட தகவல்களைத் தெரிவித்தால் வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

பள்ளி ஆசிரியர்கள்

* 251 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :<br>
திரு. செ. மாதவன் : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள், பள்ளிப் பணியாளர்கள் ஊதியத்தை ஒழுங்குபடுத்த கல்வி இலாகா சமீபத்தில் புதிய உத்தரவு ஏதேனும் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ஆம்.

(இ) அரசாங்கம் கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பித்துள்ளது—

(1) அரசாங்கச் சம்பள வீதங்களின் அடிப்படையில் கல்வித்துறை நிச்சயித்து அங்கீகரித்துள்ள சம்பள வீதங்கள் அப்படியே நீடிக்க வேண்டும்;

(2) ஆசிரியர்கள் 1964 மார்ச் மாதச் சம்பளமாக மொத்தம் எவ்வளவு ஊதியம் பெற்றார்களோ அதில் குறைவு எதுவும் ஏற்படாமல் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும்;

(3) அவர்கள் வாங்கி வந்த சம்பள வீதத்தின் அடிப்படையில் 1964 மார்ச் மாதத்திற்குரிய அவர்களுடைய மொத்த ஊதியத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட சம்பள வீதப்படி 1964 ஏப்ரல் 1-ம் தேதி முதல் அவர்களுக்குச் சேர வேண்டிய மொத்த ஊதியத்திற்கும் உள்ள வித்தியாசத்தை தனிப்பட்ட முறையில் அவருக்கு கொடுக்கப்படுகிற சம்பளமாகக் கருதி அவருக்குக் கொடுத்துவர வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட சம்பள வீதங்களில் பிற்பட்டு அவர் பெறும் சம்பள உயர்வுகளில் மேற்சொன்ன தனிச் சம்பளம் இணைத்துவிட வேண்டும்.

(4) 1960-ம் ஆண்டு சம்பளக் கமிஷனின் பரிவுரைப்படி குறைந்த அளவு உயர்வுத் தொகையான 5 ரூபாய், அரசாங்க மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில், பணியாற்றும் பணியாட்கள் அனைவருக்கும் 1-4-1964-ம் தேதி முதற்கொண்டே வழங்கப்பட வேண்டும்.



*திரு. செ. மாதவன் :* தலைவரவர்களே, ஏற்கனவே வழங்கப்பட்ட சம்பளங்களிலே குறைவு ஏற்படாமல் இருப்பதற்கு பாதுகாப்புத் தரப்படுகிறது என்று கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்களுக்கு சர்க்காருடைய புதிய உத்தரவுப்படி குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட சம்பளத்தைவிடக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்ற புகார்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தனவா? அவற்றின் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டனவா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

*புலவர் கா. கோவிந்தன் :* தனியார் நடத்துகின்ற பள்ளிகளைத் திடீரென்று மூடிவிடக்கூடிய நிலைகள் ஏற்பட்டு வருகின்றன. திருவாரூரில் விஜயபுரத்தில் தியாகசுந்தரம் என்பவர் நடத்திவருகிற பள்ளிக்கூடத்தை நிறுத்திவிடுவதற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலையிலே அங்கே வேலை பார்க்கின்ற ஆசிரியர்களுடைய நிலை என்ன? அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது விதிகளைப்பற்றியது. தனியார் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களைப்பற்றிய விஷயங்கள். மேலும் இது சம்பந்தமான விஷயங்கள் வேண்டுமென்றால் அதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

*திரு. சா. கணேசன் :* தனியார் பள்ளிகளிலே வேலைசெய்யும் ஆசிரியர்களுடைய சம்பளம், முதலியவற்றை வரையறை செய்து காப்பளித்து அனுப்பியிருக்கிற அரசாங்கத்தின் உத்தரவுகள் எல்லாப்பள்ளிகளிலும் அமல் படுத்தப்படுகின்றனவா? சில இடங்களில் அல்லது பல இடங்களில் அமல்படுத்தப்படவில்லையா? அதனாலே பாதிக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்கள் சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்களா? அப்படியானால், அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிப்பட்டவர் பள்ளிகளுடைய நிர்வாகிகள், பிரதிநிதிகள் எல்லோரையும் வைத்துக் கலந்து பேசித்தான் இந்த முடிவைக் கொண்டு வந்தது. அந்த முடிவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எல்லாப் பள்ளிகளும் அவற்றை நிறைவேற்றவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி நிறைவேற்றப்படவில்லை என்று ஏதாவது புகார்கள் வந்திருக்கிறதா, இல்லையா; ஏதாவது செய்தார்களா என்ற தகவல்கள் எல்லாம் என்னிடம் இல்லை.

*திரு. ஜே. மாதா கவுடர் :* சம்பளக் கமிஷன் சிபாரிசுப்படி அவரவர்களுடைய சர்வீஸ் ரிஜிஸ்தரில் 1960-ஆம் வருஷம் மே மாதத்தில் என்ன சம்பளம், பஞ்சப்படி என்று எழுதியிருக்கிறதோ அதை ஒட்டுமொத்தமாகச் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்பது

[11th March 1966

சம்பளக் கமிஷனின் சிபாரிசு. ஆனால், அதற்குக் குறைவாகக் கொடுக்கும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பே கமிஷன் செய்தது வேறு விஷயம். தனியார் நடத்துகின்ற பள்ளிகளிலே சம்பளம் எவ்வாறு நிர்ணயிப்பது என்பது முடிவு செய்யப்பட்டு உத்தரவு போடப் பட்டிருக்கிறது. நான் விடையளித்ததைப்போல் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

(The hon. Member Sri M. V. Karivengadam was seated next to the hon. Member Sri A. P. Dharmalingam)

MR. SPEAKER: The hon. Member Sri M. V. Karivengadam should sit in the seat allotted to him during question-hour.

(Accordingly, the hon. Member Sri M. V. Karivengadam occupied the seat allotted to him.)

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, புதுக்கோட்டையிலே தனியார் துறையின் மூலம் நடத்தப்பட்டு வந்த சாரதா பள்ளியில், அந்தப் பள்ளியை மூடிவிட்டதற்குப் பிறகு அதிலிருந்த ஆசிரியர்களை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் பணிபுரிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 5 ஆண்டுக் காலமாக அவர்களுக்கு சம்பளம் பட்டுவாடாச் செய்யப் படவில்லை. அதற்கு அரசினர் டெக்னிக்கல் பாயின்ட்ஸில் கோளாறுகள் இருப்பதற்காக நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஐந்து ஆண்டுக் காலம் போதும் என்று கருதி உடனடியாக அவர்களுக்குச் சம்பளத்தை வழங்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி அங்கத்தினர் தனிக் கேள்வி கேட்டாலும் சரி, அல்லது, எழுதி அனுப்பினாலும் சரி கவனித்து என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யலாம்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார்கள் நடத்துகின்ற பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு அரசாங்கம் நேரடியாகவே சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதே மாதிரி மற்ற மாவட்டங்களிலும் தனியார் நடத்துகின்ற பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் சம்பளத்தை அரசாங்கமே நேரடியாகவே கொடுக்க முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனியார் பள்ளிகளுடைய நிர்வாகிகளை, பிரதிநிதிகளை வைத்துத்தான் ஏற்பாடு செய்யப்படுகிறது. செய்யப்பட்ட ஏற்பாடு நடைபெறுகிறது. அதில் மாறுதல் வேண்டுமென்றால், இப்பொழுது இருக்கிற ஏற்பாடு திருப்திகரமாக இல்லை என்றால் அது கவனிக்கப்படும்.

**திரு. செ. மாதவன் :** அரசாங்கம் நிர்ணயித்த சம்பளத்திற்கும் ஏற்கனவே குறைவாகப் பெற்றுக்கொண்டிருந்த சம்பளத்திற்கும் இருக்கிற "டிபரன்ஸ் ஆப் பே" யை அரசாங்கமே கொடுக்குமா ? அல்லது தனியார்கள் கொடுப்பார்களா ?



11th March 1966]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த டிபரன்ஸை பெர்சனல் பேயாக அரசாங்கம் தான் கொடுக்கும்.

**திரு. மா. தண்டாயுதபாணி :** தனியார் நடத்துகின்ற பள்ளிகளிலே குறிப்பாக ஆரம்பப் பள்ளிகளிலே சில பள்ளிகளிலே சரியானபடி எல்லாம் நடத்தப்படவில்லை. அந்தப் பள்ளிகளை பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்கள் கேட்டால் கொடுக்கப்படுவதில்லை. தனியார் நடத்துகின்ற அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை பஞ்சாயத்துக் கூட்டமன்றங்களே நடத்துவதற்கு அனுமதி வழங்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தக் கேள்வி உயர்நிலைப் பள்ளியைப் பற்றியது. ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் தனியார் நடத்துகின்ற பள்ளிகளை பஞ்சாயத்து யூனியன் மேற்பார்வை செய்கிறது. தனிப்பட்டவர்கள் பள்ளிகள் நடத்திக் கொண்டிருந்தால் மேலும் ஒரு பள்ளி புதிதாக ஆரம்பிக்க வேண்டுமா என்பது பரிசீலனைக்குப் பிறகுதான் அனுமதி வழங்கப் படும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தனியார் பள்ளி நிர்வாகிகளை அழைத்து சர்க்கார் அவர்களிடத்திலே ஆலோசனை கேட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் பள்ளியிலே வேலை செய்யும் ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளையும் கலந்து ஆலோசித்தார்களா ? சர்க்கார் செய்யும் இந்த முடிவுக்கு அவர்கள் ஒத்துக் கொண்டார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆசிரியர்களைக் கேட்க வேண்டியதில்லை. ஆசிரியர்களுக்கு ஏதாவது குறைபாடு இருந்தால் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கலாம்.

**திரு. கே. பி. பழனி :** ஆரம்பக் கல்வி நிர்வாகம் அத்தனையையும் ஒன்றாகச் சேர்த்து போர்டு ஆஃப் எலிமெண்டரி எஜுகேஷன் என்ற அமைப்பை உருவாக்க அரசாங்கம் தெரிவிக்கலாம். 9-00 a.m.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்தமாதிரி யோசனை ஒன்றும் இல்லை.

* 252 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல்வி இலாகாவில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பிரசவ விடுமுறை (Maternity leave) சம்பளத்துடன் இரண்டு மாதம் என்றிருப்பதை மூன்று மாதமாக நீட்டிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இல்லை.

**திரு. ம. கமலநாதன் :** மெடர்னிடி லீவை மூன்று குழந்தைகளுக்கு மேலும் பெறக்கூடிய ஆசிரியைகளுக்கு நீடிப்பதில்லை என்று கேரள அரசு முடிவு செய்திருப்பதைப் போல் நம்முடைய அரசாங்கமும் முடிவு செய்யுமா ?

[11th March 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் முக்கூட்டுக்கூட்டத்தில் இந்தமாதிரி யோசனை வந்தது. மூன்று குழந்தைகளுக்கு மேல் நான்காவது பிரசவத்திற்கு மெடர்னிடி லீவ் கொடுக்கக்கூடாது என்ற யோசனை வந்தது. பலர் அதை ஆட்சேபித்தார்கள். நானும் என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன். நான்காவது குழந்தை பிறப்பதற்கு அவர்கள் காரணம் அல்ல. அதற்காக அவர்கள் தண்டிக்கப்படக் கூடாது. மெடர்னிடி லீவு எப்படியும் இருக்கவேண்டும். மெடர்னிடி லீவ் இல்லாமல் வேலை செய் என்று சொல்வது தவறு என்ற கருத்தைச் சொன்னேன். அதுதான் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

**திரு. சா. கணேசன் :** பிரசவ கால விடுமுறை என்பதிலே மூன்று குழந்தைகளுக்கு மேல் ஏற்படுகிற பிரசவமா அல்லது மூன்று பிரசவத்திற்கு மேல் ஏற்படுகிற பிரசவமா ? ஒரே பிரசவத்தில் கூட இரண்டு குழந்தைகளைப் பெற்று விடக்கூடும். ஆகவே, குழந்தை அடிப்படையிலா அல்லது பிரசவ அடிப்படையிலா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை, கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை. நான் என்னுடைய கருத்தையும், மத்திய அரசாங்கக் கருத்தையும் சொன்னேன். மெடர்னிடி லீவ் கொடுப்பதைக் கட்டுப்படுத்துவதாக இல்லை. மெடர்னிடி லீவ் கொடுக்கிற வரையில், மூன்று குழந்தைகளா அல்லது மூன்று பிரசவமா என்ற கேள்வி எழுவதற்கே இடமில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கேள்விக் குறிப்பில் ' ஆசிரியர்களுக்குப் பிரசவ விடுமுறை' என்று இருக்கிறது. இந்தப் பிரசவ விடுமுறை ஆசிரியைகளுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் தெரிந்து கொள்ளவேண்டும். சட்டபூர்வமாக 'ஆசிரியர்' என்றால் "ஆசிரியை" யும் சேர்த்துக் கொள்ளப்படும். கான்டெக்ஸ்ட்டைப் பார்த்துப் பொருள் கொள்ளவேண்டும். இது ஆசிரியைகளைத்தான் குறிக்கும்.

**கனம் சபாநாயகர் :** ஆசிரியர்களும் அப்ளிகேஷன் போட்டால் கொடுப்பார்கள். பிரசவ வேதனை வந்திருக்கிறது என்று ஆசிரியர்கள் அப்ளிகேஷன் போடலாமே. (சிரிப்பு).

*253 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :**
**திரு. சா. ராமசாமி :** } **கனம் முதல் அமைச்சர்**
தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்களின் ஓய்வுகால வயதை மாற்றியமைக்க வேண்டுமென்று கோரி ஆசிரியர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அண்மையில் ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



11th March 1966]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) & (இ) அரசாங்கத்தின் கீழும், மானிய உதவிபெறும் நிர்வாகத்தின் கீழும், ஊராட்சி மன்றங்களின் கீழும் உள்ள பலவகைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58 ஆக அரசாங்கம் 1963 மே மாதத்தில் உயர்த்தியது. ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 58-லிருந்து 60-ஆக உயர்த்துமாறு முறையீடுகள் அரசாங்கத்திடம் அவ்வப்போது வந்தவண்ணமிருக்கின்றன. ஆனால் இந்த வேண்டுகோளுக்கு இணங்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நமது நிர்வாகத்திலுள்ள ஆசிரியர்கள் 58 வயதுக்கு மேல் ஓய்வு பெற்ற பிறகு தனியார் பள்ளிக்கூடத்திலே அவர்களைப் போட்டு சம்பளம் கொடுக்கிறார்கள். அந்தத் தனியார் பள்ளிகளுக்கு அரசாங்கம் உதவித்தொகை அளிக்கிறது. அப்படி இருக்கும்போது அரசாங்கப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுடைய ஓய்வுகால வயதை 60 என்று ஏன் உயர்த்தக் கூடாது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஓய்வு பெறும் வயதை உயர்த்துவதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது பற்றாக்குறை எந்த அளவு இருக்கிறது என்பதுதான். அதைக் கவனிக்காமல் உயர்த்திவிட்டால் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும். ஐம்பத்தைந்து வயது என்று இருக்கும்போது பற்றாக்குறை இருக்கிறது என்ற காரணத்தால் 58 வயது என்று உயர்த்தப்பட்டது. தனிப்பட்டவர்களுடைய பள்ளிகளில் 60 வயது வரை வைத்துக் கொள்ள அவர்கள் அரசாங்க அனுமதி பெற்றுத் தான் வைத்துக் கொள்ளவேண்டும். அம்மாதிரி நிலை இருந்தால் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலும் அது கவனிக்கப்படும். அதை அப்போதைக்கப்போது அரசாங்கம் கவனித்து அனுமதி அளிக்கும். பொதுவாக, 58-ல் இருந்து 60-ஆக ஓய்வு பெறும் வயதை உயர்த்தினால் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும். அதுதான் முக்கியமான காரணம். ஆகவே, 58 வயதுக்கு மேல் உயர்த்துவதாக இல்லை.

**திரு. சா. கணேசன் :** ஆசிரியர்கள் வயதை 58 என்று உச்சவரம்பு வைத்து விடுவதால் இன்று இருக்கிற ஆசிரியர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதோடு, சிறந்த, அனுபவமுள்ள ஆசிரியர்களையும் இழக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கல்லூரிகளில் 60 வயதுக்கு மேல் 65, 67 வயது வரை பிரின்சிபால்கள், ப்ரொபசர்கள், சிறந்த தகுதி பெற்றவர்களை நீடித்துக் கொண்டு போக வழிவகைகள் இருக்கின்றன. இந்த மாதிரி அடிப்படையில் திறமையும், அனுபவமும் உள்ளவர்களை 60 வயது வரையில் வைத்துக் கொள்ள வேண்டும் ; வைத்துக்கொள்ள முன்வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்க கல்லூரிகளில் 58 வயது கூட இல்லை ; 55 வயதுதான் ஓய்வு கால வயது. அவர்கள் வயதை உயர்த்தவில்லை. காரணம், பற்றாக்குறையை ஒட்டி இதெல்லாம் மாற்றப்படுகிறது. நான் முன்பே கூறியபடி, 58 வயதிலிருந்து

60 வயது என்று ஓய்வு பெறும் வயதை உயர்த்தினால் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும். ஆகையால் அவ்வாறு செய்வதாக உத்தேசமில்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம்: தனியார் துறைப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் 58 வயதிற்கு மேல் பணிபுரிய வேண்டுமானால் அரசாங்க அனுமதியைப் பெறவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கப் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் அந்தமாதிரி அனுமதி வழங்கப்படுவது உண்டா? எந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வாறு வழங்கப்படுகிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** குறிப்பிட்ட கேஸ்களில் தகுந்த காரணம் இருந்தால் அரசாங்கம் கவனிக்கும். சாதாரணமாக அம்மாதிரிச் செய்வதில்லை.

**புலவர் கா. கோவிந்தன்:** உத்தியோகம் கொடுக்கிற நேரத்தில் ஹரிஜனங்களுக்கு வயதுக் கட்டுப்பாட்டில் கூடக் கொடுக்கிறார்கள். அதேபோன்று ஓய்வு பெருகின்ற நேரத்தில் ஹரிஜனங்களைப் பொருத்தவரை 2, 3 ஆண்டுகளுக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களும் ஆசிரியர் பணிக்குத் தகுதி பெற்றுக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போகும் என்ற காரணத்தால் ஹரிஜனங்களாக இருந்தாலும் வயதை அதிகப்படுத்த உத்தேசமில்லை.

திரு. சா. ராமசாமி: 58 வயதுக்கு மேல் ஒருவரை நியமிக்கும்போது உடல் நலத்திற்கேற்றவாறு மருத்துவச் சான்றுகள் பெற்று நியமிக்கலாம். அதேபோன்று 58 வயதுக்குள் ஓய்வு பெற விரும்புகிறவர்களுக்கும் தனிச் சலுகை அளிக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** 55 வயதுக்குள் ஓய்வு பெறுகிறவர்களுக்கு எவ்வாறு விதிகள் இருக்கின்றனவோ அதே விதிகள் 58 வயதுக்குட்பட்டவர்களுக்கும் பொருந்தும்.

* 254 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆதாரப் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது ஆதாரப் பயிற்சி பெறாத ஆசிரியர்களை நியமனம் செய்யக்கூடாது என்று அரசினரால் அறிவிக்கப்பட்டுள்ளதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes.

* 255 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹையர் கிரேடு ஆசிரியர்களாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்து செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றும் உத்தேசமுண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இல்லை.





திரு. சா. ராமசாமி: ஆரம்பப் பள்ளிகளிலே ஆங்கிலம் போதிக்கப்படுகின்ற பிரச்சினை வருகின்ற நேரத்தில் 5-ஆம் வகுப்பு வரை இருக்கின்ற பள்ளிகளில் ஒரே செகண்டரி கிரேடு ஆசிரியர் இருக்கிறார். தற்போது பயிற்சிப் பள்ளிகளில் ஆசிரியப் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ளும்போது எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறாதவர்களையும் எடுக்கக்கூடிய நிலைமையை அரசாங்கம் உருவாக்கி வருகின்ற காரணத்தால் அந்த ஆசிரியர்களை செகண்டரி கிரேடாக மாற்றும் பிரச்னையை ஆராய்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** செகண்டரி கிரேடில் இருக்கிறவர்கள் மெட்ரிகுலேஷனில் இவ்வளவு மார்க் வாங்க வேண்டுமென்று இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணி இருக்கவேண்டும். ஆரம்பப் பள்ளிகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் எல்லாவற்றிலும் இந்த மாதிரி பயிற்சி கொடுக்கப்படும் என்று கூற விரும்புகிறேன்.

திரு. ம. கமலநாதன்: இந்த ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கான பயிற்சி கொடுக்கும் திட்டம் எவ்வளவு ஆண்டுகளுக்கு நீடிக்கும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இனி புதிதாக பயிற்சி கொடுக்கப்படமாட்டாது.

**புலவர் கா. கோவிந்தன்:** ஆரம்பப் பள்ளிகளில் இனி எல்லா ஆசிரியர்களும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களகவே இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை என்று கூறப்படுகிறது. அப்படியிருக்கிற காரணத்தினால் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாறுவதற்கு வழிவகை செய்ய என்ன ஏற்பாடு செய்யப்படுகிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பொதுவாக செகண்டரி கிரேடு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஹையர் கிரேடாக இருக்கிறவர்களுக்கு தகுதியிருந்தால் அவர்கள் செகண்டரி கிரேடு பயிற்சி பெறலாம்.

திரு. சா. கணேசன்: கல்வியினுடைய தரமும் வளமும் உயர வேண்டுமென்று எண்ணுகிறபோது இன்று மாணவர்களுடைய உளப்பாங்கும் அவர்களுடைய அறிவு வேட்கையும் தரத்தால் உயர்ந்திருக்கிற காரணத்தினால் ஆசிரியர்களுடைய தரமும் உயர வேண்டும் என்பதில் சர்க்காருக்கு மிக்க அக்கறையுண்டு. அதன் காரணமாகத்தான் செகண்டரி கிரேடுதான் அடிப்படைத் தகுதியாக ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும் என்று விதிவகைகள் செய்தோம். இனி அந்த நிலையையே பின்பற்றிச் செல்லவேண்டும். அந்த நிலையில், இப்போதுள்ள ஹையர் கிரேடு ஆசிரியர்களை வெளியே போகச் சொல்ல முடியாது. இந்த நிலையில் பள்ளிக்கூட ஆசிரியர்கள் பள்ளி ஆசிரியர்களாக இருந்துகொண்டே பல பரீட்சைகளுக்குச் சென்று தேர்ச்சி பெற வாய்ப்பிருப்பதால் இந்த ஹையர் கிரேடு ஆசிரியர்களும் செகண்டரி கிரேட் பரீட்சை எழுதவும் அதற்கு மேலே போகவும் வழிவகைகள் செய்து அதற்கு வசதி

கள் செய்து கொடுப்பதுதான் நலனுடையதாக இருக்குமாதலால் அரசாங்கம் இதில் கருத்து செலுத்தி இதில் ஒரு முடிவிற்கு வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஹையர் கிரேடு ஆசிரியர்களில் தகுதி பெற்றவர்கள், செகண்டரி கிரேடுக்கு அவசியமான யோக்கியதை பெற்றவர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று சொன்னேன். எல்லோருக்கும் அளிக்கப்படுமா என்றால் அப்படி எல்லோருக்கும் அளிக்கப்படுவது முறை அல்ல. மாணவர்களின் தரம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னதை நான் வரவேற்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் இருந்தும் அந்த இடங்களில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை பலயிடங்களிலும் நியமிக்கிறார்கள். அதனால் பெரும்பாலான ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதைமாற்றி ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு ஊக்கம் அளிக்கத் தக்க வகையில் அவர்களுக்குள்ள இடங்களில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்காதிருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**கனம் திரு. எம்: பக்தவத்சலம் :** ஒரு பள்ளிக்கூடத்திற்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எவ்வளவு பேர்கள் வேண்டுமோ ஒருவர் அல்லது இருவர் என்று ஒரு பள்ளிக்கு எவ்வளவு பேர்கள் நியமிக்கப்படவேண்டுமோ அந்த அளவிற்குத்தான் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப்படலாம். அதற்கு மேல் நியமித்தால் கிரேடு சம்பளம்தான் கொடுக்கப்படும். ஆகவே ஹையர் கிரேடு சம்பளம் தான் கொடுக்கப்படும். ஆகவே ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிற காரணத்தினால் செகண்டரி கிரேடில் வேக்கன்ஸி இல்லாமல் ஹையர் கிரேடு வேகன்ஸி உள்ள இடத்தில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் நியமிக்கப்படுவது நிறுத்தப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு சம்பளத்தில் நியமிக்கப்பட்டால் அதை வரவேற்கத் தான் வேண்டும்.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** மாணவர்களின் தரத்தை உயர்த்துவதற்காக எல்லோரும் செகண்டரி கிரேடில் க்வாலிஃபை பண்ணிக் கொள்ளவேண்டும் என்ற நிலையில் இப்போது சர்க்கார் எண்ணிக் கொண்டு வருவதாகத் தெரிகிறது. அப்படியானால் ஏற்கனவே லோயர் கிரேடை எடுத்தது போல் இப்போதும் இந்த ஹையர் கிரேட் உள்ளவர்கள் எல்லாம் குறிப்பிட்ட கால அளவிற்குள் செகண்டரி கிரேடு படிப்பை முடித்து தயார் செய்து கொள்ள வேண்டுமென்ற திட்டத்தை சர்க்கார் அமல்படுத்த உத்தேசித்திருக்கிறதா ?



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது வேலை பார்க்கிற ஹையர் கிரேடு ஆசிரியர்கள் யாரும் வேலையிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் என்று முன்பே கூறினேன். அவர்களுக்கும் தெரியும் எப்படி செகண்டரி கிரேடு பயிற்சி பெறுவது என்பது. ஆகவே, எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பது ஆசிரியர்களுக்குத் தெரியும், அதை அவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஹையர் கிரேடு ஆசிரியர்கள் சம்பளத்தில் அந்த இடத்தில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பணியாற்றுவது வரவேற்கத் தக்கது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால் ஹையர் கிரேடு என்று இருப்பதையே எடுத்துவிடலாமே. ஹையர் கிரேடு உள்ள இடங்களில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமனம் செய்வதால் ஹையர் கிரேடு பயிற்சி பெற்றவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து விடும். இவர்களின் இடத்தை செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் ஆக்கிரமித்து விடுகிறார்கள். ஆகவே, அந்த இடங்களில் ஹையர் கிரேடு பயிற்சி பெற்றவர்கள் புக முடியாமல் இருக்கிறது. அதைத் தடுக்க வழிவகை செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஹையர் கிரேடு ஆசிரியர்கள் யாரும் வேலையில் இருந்து நீக்கப்படமாட்டார்கள் என்று சொன்னேன். புதிதாக ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலைக்கு வரும் பிரச்னைதான் இது. செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குரிய சம்பளம் இல்லாமல் குறைந்த சம்பளத்திற்குப் போவது என்றால் அவர்களுக்கு வேலை இல்லாமல்தான் போவார்கள். ஆகவே, இரண்டு வகைப் பேர்களுக்கும் வேலை இல்லாமல் இருந்தால் யாரைத் தேர்ந்தெடுக்கிறது ? அதிகப்படி தகுதியுள்ளவர்களைத்தான் வரவேற்பார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஹையர் கிரேடுக்குள்ள சம்பளமுள்ள இடத்தில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் வருவது என்றால் வேறு எங்கேயாவது வேலை கிடைத்துவிட்டால் திடீரென்று போய் விடுவார்கள். அவர்கள் தாற்காலிகமாகத்தான் இந்த வேலைக்கு வருகிறார்கள். ஆகவே, இந்தத் துறையில் நிரந்தரமாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிற வகையில் இடம் தேடித் தர முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எந்தத் துறையாக இருந்தாலும் ஒரு கொள்கை அனுசரிக்கப்பட்டு வருகிறது ; சாலச் சிறந்ததாகும் அது. ஒரு யோக்கியதை வைக்கிறோம். சம்பளத்தைச் சொல்கிறோம். செகண்டரி கிரேடுக்குப் பதில் ஒரு க்ராஜுவேட் வந்தால், ஒரு கிராஜுவேட் பயிற்சி பெற்று ஆசிரியராக வந்தால் அதை வரவேற்கத்தான் வேண்டும். இதனால் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். இனி நியமிப்பது இல்லை. புதிதாக இப்போது உற்பத்தியாவதில்லை. இருக்கிறவர்கள் ஆங்காங்கு பள்ளிகளில் இருக்கிறார்கள். செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் செகண்டரி கிரேடுக்குரிய சம்பளம் கிடைக்கும் வேலை இல்லாததினால்தான் இதற்கு வருகிறார்கள். ஆகவே, அவர்களை அமர்த்துவதில் தவறு இல்லை.

இதில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக ஏதாவது யோசனைகள் சொன்னாலும் அதைப் பற்றியும் பரிசீலிக்கலாம்.

**திரு. மு. பொ. வடிவேல்** : மதிய உணவுக்காகக் கொடுக்கப்படும் செக் பஞ்சாயத்து யூனியனிலிருந்து நேரடியாக ஆசிரியர்களுக்குப் போய்விடுகிறது. பஞ்சாயத்து தலைவர்களுக்கு தெரிவதில்லை. பஞ்சாயத்து தலைவரோடு கலந்து தெரிந்து கொள்ளுகின்ற முறையில் இந்தப் பணம் கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நான் இதைப்பற்றி முன்பே கூறியிருக்கிறேன். பஞ்சாயத்து தலைவர்களே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்கள் மூலமாக பணம் கொடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. அங்கங்கே இருக்கின்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் இதில் எந்தவிதமான புகார்களுக்கும் இடமில்லாமல் கவனித்துக்கொள்ளவேண்டும். இதற்கான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவ்விதம் ஏற்றுகொள்வார்களேயானால் இதற்கான பணத்தை அவர்கள் மூலமாகக் கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்** : தலைவர் அவர்களே, மதிய உணவு திட்டம் மிகச் சிறந்த திட்டம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏழைக் குழந்தைகளுக்கு இது மிகவும் அவசியம் தான். ஆனால் ஒரு சில பஞ்சாயத்துக்களில் தாங்கள் கொடுக்க வேண்டிய இரண்டு பைசாவையும் சரியாகக் கொடுக்காத நிலை இருக்கிறது. இதன் காரணமாக சர்க்கார் கொடுக்கின்ற ஆறு பைசாவையும் வாங்கிக்கொண்டும், குழந்தைகளுக்கு உணவு கொடுக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த உத்தரவை மாற்றி, மின்சாரக்கட்டணத்தை பஞ்சாயத்து யூனியனிலிருந்து கொடுத்து விட்டு, அந்த பஞ்சாயத்து நிதியிலிருந்து வசூலிப்பது போல், மதிய உணவுத் திட்டத்திற்காகவும் மொத்தமாக சர்க்காரே வசூலித்துக்கொண்டு, சர்க்காரிலிருந்தே செலவு செய்வதற்கு சர்க்கார் ஏதாவது சட்டம் பிறப்பிக்க முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : சில கிராமங்களில் 10 பைசா அளவுக்கு கிடைப்பதில்லை என்று சொல்லி சரியானபடி சாப்பாடு போடுவதில்லை என்ற புகார்கள் எனக்கும் வந்திருக்கின்றன. எனக்கு அதில் மிகுந்த கவலை உண்டு. இதற்கு என்ன பரிகாரம் செய்வது என்பது தான் ஆலோசிக்கவேண்டும். கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது ஒரு பரிகாரம். ஆனால், பஞ்சாயத்துக்களிலிருந்து சர்க்கார் வசூல் செய்யப்போனால் எங்களிடம் பணம் எங்கேயிருக்கிறது ? என்று சொல்லக்கூடும். எப்படியும் அந்த கிராமத்திலே 2 பைசா வசூலிக்கவேண்டும். இதற்காக ஆலோசனைக் குழுவில் ஒரு ஆலோசனையை நானும் கூறியிருக்கிறேன். பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் ஒப்புக்கொள்ளுமானால், இவ்விதம் தனியாக இரண்டு பைசாவை வசூல்



செய்ய முடியவில்லை என்றால், இரண்டு பைசாவை கிராமத்தில் எல்லோரிடமிருந்தும் வசூல் செய்வதற்கு சட்டம் செய்வதற்கும் நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு** : கனம் சபாநாயகர் அவர்களே, கிராமப் பொது மக்களிடமிருந்து இரண்டு பைசா அளவுக்கு ஆசிரியர்களால் வசூல் செய்வது கஷ்டமாக இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். நான் சொல்லவிரும்புவது, பஞ்சாயத்துக்களில் அங்கங்கே பல புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் சேர்மேன், பஞ்சாயத்துத் தலைவர்கள் இவர்கள் ஒன்று கூடி இதைப்பற்றி ஆலோசித்து, எந்தெந்த நிலங்களை மதிய உணவுக்காக பயிரிடுவதற்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதை தேர்ந்தெடுத்து, அதற்குக் கிணறு வெட்டி, சாகுபடி செய்வதற்கான வசதிகளையும் செய்து கொடுத்துவிட்டால், பொதுமக்களுடைய உதவி இல்லாமலேயே இந்தத் திட்டத்தை சரியாக நடத்தலாம். இன்னொன்று, அறுவடைக் காலங்களில் களங்களில் சென்று இதற்கென்று உதவி செய்யவேண்டும் என்று கேட்டால், எல்லோரும் தான்யங்களை தருவார்கள். இதைப் பெற்றுக்கொண்டு சரியான முறையில் நடத்தலாம். இந்த இரண்டு வித யோசனைகளையும் சட்டமன்ற உறுப்பினர்களும், பஞ்சாயத்துத் தலைவர்களும் ஏற்றுக்கொள்வார்களென்று நம்புகிறேன். ஆகவே, இதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகள் நல்ல யோசனைகள் தான். நான் வேறு ஒன்றைக் கூற விரும்புகிறேன். இதை சில கிராமங்களில் நிறைவேற்றி வருகிறார்கள். கிராமங்களில் பள்ளிக்கென்று பூதான இயக்கத்தை தோற்றுவிப்பது. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் குறைந்தது 5 ஏக்கர் அளவுக்கு கொடுக்கலாம். ஒவ்வொருவரும் அரை ஏக்கர் வீதம் கொடுக்கலாம். அரை ஏக்கரை இதற்காக பரிவர்த்தனை செய்து வாங்கி மொத்தம் ஐந்து ஏக்கர்களை ஒரு ஹோல்டிங் ஆக வைத்துக்கொள்ளலாம். அதைப் பஞ்சாயத்திலிருந்தே சாகுபடி செய்து பயன்படுத்திக்கொள்ளலாம். அப்போது யாருடைய தயவையும் எதிர்பாராமல் இந்தத் திட்டத்தை நடத்தலாம். புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன, அவற்றை உபயோகப்படுத்தலாம் என்பது வேறு விஷயம். இது கூட எங்கெங்கு முடியுமோ அந்த இடங்களில் எல்லாம் அரை ஏக்கர் வீதம் கொடுக்க யாரும் தயங்க மாட்டார்கள். இவ்வாறு ஐந்து ஏக்கர் வரை சேர்த்து வைத்துக்கொண்டால் எந்தவிதமான கஷ்டமும் ஏற்படாது. இவ்வாறு செய்யவேண்டும் என்று பல ஆண்டுகளாக நான் கூறி வந்திருக்கிறேன்.

**கனம் சபாநாயகர்** : கேள்விகள் முடிவடைந்தன.

[11th March 1966

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—CALLING ATTENTION TO DEATHS DUE TO CHOLERA IN NORTH ARCOT DISTRICT.

*புலவர் கா. கோவிந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபை விதிகளின் 41-வது விதியின் கீழ் வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு வட்டத்தில் குறிப்பாக அனக்காவூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் காலரா நோயினால் இறப்புக்கள் ஏற்பட்டதும் அப்பகுதியில் இக்கொள்ளை நோய் மேலும் பரவிக்கொண்டிருப்பது மான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் பொது சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.*

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Mr. Speaker, Sir, the Government understand that no case of cholera has been reported from Cheyyar taluk during the entire period of 1965. During 1966, only sporadic cases of cholera were seported from Vembakkam Panchayat Union.

During the month of February, five cases of cholera were reported from Vembakkam Panchayat Union. Out of the five attacks two proved fatal. From the Anakkavur Panchayat Union no cases have been reported either during the entire period of 1965 or during 1966 up-to-date. The number of inoculations done during 1966 in the infected areas is 2,906. The Public Health authorities are taking adequate preventive measures to arrest the spread of the epidemic. The staff position in the district is adequate to cope up with the situation.

The incidence of cholera in Cheyyar taluk in North Arcot District is as follows—

| Name of the taluk. | | Week ending. | Attacks. | Deaths. |
|---|---|---|---|---|
| Cheyyar | .. | 12—2—1966 | 1 | ... |
| Cheyyar | .. | 19—2—1966 | 4 | 2 |

## III.—STATEMENT BY CHIEF MINISTER REGARDING LANGUAGE OF 'COMMANDS' IN N.C.C. TRAINING.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபை, விதி 32-ன் கீழ் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன் —விளக்கம் அல்ல திருத்தம் என்று கூட சொல்லலாம். நான் கல்வி மான்யத்தின் மீது விடையளிக்கும் போது, என்.ஸி.ஸி. க்கு கமான்ட் கொடுப்பதைப்பற்றி சில உறுப்பினர்கள் குறிப்பிட்டதற்கு பதில் சொன்னேன், அதாவது கமான்ட் தமிழில் இருக்கும் என்று சொன்னேன். அது தவறு என்பதை இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். கமான்ட் என்று சொல்வது, ரைட், லெப்ட் என்று சொல்வது, அதை தமிழில் சொல்ல வேண்டுமென்றால், வலது, இடது என்று சொல்லவேண்டும். லெப்ட், ரைட் என்று சொன்னால் எல்லோரும் புரிந்துகொள்வார்கள். இந்தியில் இருந்தாலும் அதை புரிந்து கொள்ளமுடியும். வாயிலே இந்தி வார்த்தை நுழையாது என்று சொன்னால் அது வேறு விஷயம். ஆனால் இப்படிப்பட்ட கமான்ட் வார்த்தைகள் நாடு முழுமைக்கும்*



11th March 1966] [*திரு. எம். பக்தவத்சலம்*]

*ஒன்றாகத்தான் இருக்கவேண்டும். ஆனால் என் மனதில் சொல்ல நினைத்தது இன்ஸ்ட்ரக்ஷன் பற்றிதான் என்.ஸி.ஸி. உத்தியோகஸ்தர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது என்.ஸி.ஸி. யில் கொடுக்கின்ற இன்ஸ்ட்ரக்ஷனைப் பற்றி பேசிக்கொண்டிருந்தேன். இன்ஸ்ட்ரக்ஷன் இந்தியில் இருந்தது. இதை மாற்றி ஆங்கிலத்தில் இருக்கலாம் என்று சொன்னேன், அதோடு தமிழிலும் இருக்கலாம் என்று சொன்னேன். ஆங்கிலத்தில் இருப்பதால் பரவாயில்லை. ஆனால் தமிழிலும் இன்ஸ்ட்ரக்ஷன் இருக்கவேண்டும், தமிழிலேயே பயிற்சி சொல்லி கொடுக்க வேண்டும், தமிழிலேயே இன்ஸ்ட்ரக்ஷன் இருக்க வேண்டும் என்று சொன்னேன். அதற்குப் பதிலாக கமான்ட் தமிழில் இருக்கும் என்று சொல்லிவிட்டேன். அது தவறு. இன்ஸ்ட்ரக்ஷன்தான் தமிழில் இருக்க வேண்டும் என்று சொல்ல நினைத்தது. அதற்காக இந்தத் திருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67——*cont.*

### DEMAND NO. XII—POLICE.

THE HON. SRI P. KAKKAM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 10,07,68,600 under Demand No. XII—Police.'

SRI K. A. MATHIALAGAN: Sir, to discuss about the misuse of the Defence of India Rules provisions against political leaders and newspapers depriving the fundamental rights and to stress the release of detenues under the Defence of India Rules and withdrawal of cases against newspapers, I move the following cut motion standing in my name—

"That the allotment of Rs. 10,07,68,600 under Demand No. XII—Police be reduced by Rs. 100."

MR. SPEAKER: I think no other Member is moving his cut motion. The Demand and the cut motion are before the House for discussion.

*கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, நமது மாநிலத்தில் போலீசின் பெருமையைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். இந்த மன்றமும் அறியும், மக்களும் அறிவார்கள். சிறப்பு வாய்ந்த போலீஸ் இலாகா, நமது நாட்டுக்கு எப்போதெல்லாம் சோதனைகள் வந்தனவோ, அப்போதெல்லாம் சோதனைகளைத் தகர்த்தெறிந்து அப்புறப்படுத்த பெரும்பாடுபட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் மட்டுமல்ல. நமது பாரத நாட்டுக்கே பெரிய சோதனை வந்தபோது இங்கிருந்து நமது பட்டாளங்கள் அங்கு அனுப்பப்பட்டு, குறிப்பாக பஞ்சாப் மாநில எல்லையில் நமது நாட்டைப் பாதுகாப்பதில் சிறந்த பணி செய்தது. அது மட்டுமல்ல. இப்போதும், நாகாலாண்ட், அஸ்ஸாம் போன்ற பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு அங்கும் நமது பட்டாளங்கள், பட்டாணியர்கள், சிறந்த முறையில் பணி செய்து வருகின்றன. அவர்களுடைய சேவையை* 9-30 a.m.

[திரு. பூ. கக்கன்] [11th March 1966

ஒருநாளும் நாம் மறக்க முடியாது. அது மட்டுமல்ல, நமது மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சரிவரப் பாதுகாக்கப்படவில்லை என்றால் சமூக முன்னேற்றம் தடைப்பட்டு விடுமே, ஜனநாயகம் பாழ்பட்டுவிடுமே என்று நன்றாகப் பாதுகாத்து, மககளுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பாக இருந்து அவர்கள் பணி செய்து வருகிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விசேஷமாக இராணுவப் படையினர் நம்மை வெளி நாட்டு எதிரிகளிடமிருந்து பாதுகாக்கிறார்கள். அதே முறையில் போலீசார் உள் எதிரிகளிடமிருந்து பல வகைகளிலும் மக்களைப் பாதுகாக்கிறார்கள். உள்நாட்டு எதிரிகள் என்றால், குற்றம் புரிவோர், பதுக்கல் பேர்வழிகள், கள்ள மார்க்கெட் பேர் வழிகள், கள்ளக் கடத்தல் செய்கிறவர்கள், ஐந்தாம் படையினர், புரளியைக் கிளப்பி விடுவோர், கலவரத்தில் ஈடுபடுவோர் ஆவார்கள். இவர்களையும் சமாளித்து, இவர்கள் மக்களுக்கு எந்த விதமான தொந்தரவும் கொடுக்காதபடி, எங்கெங்கே இப்படி யெல்லாம் தொல்லை ஏற்படுகிறதோ அதைத் தடுத்து நிறுத்தி, போலீசின் பெருமையை, சிறந்த தன்மையை உலகம் அறியச் செய்து வருகிறார்கள். பாரத நாட்டில் மட்டுமல்லாமல், இதர தேசங்களிலிருந்து வந்து பார்ப்போர்களெல்லாம் மதராஸ் போலீசின் பெருமையை வாயார வாழ்த்தியிருக்கிறார்கள், பாராட்டியிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மது விலக்குத் திட்டத்தைப் பொறுத்த வரையில் பாரத நாட்டு அரசாங்கமே இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் நன்றாக நடைபெறுகிறது என்று சொல்லியிருக்கிறது. ஆகையால் அதைப் பற்றி எந்த விதப் பரிசீலனையும் செய்ய வேண்டியதில்லை, அதைத் தகர்க்க வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஏதோ ஒருவர் இருவர் குடித்து விட்டால் அதனால் எல்லாம் கெட்டு விட்டது என்று அர்த்தமல்ல. போலீசார் வெற்றியைப் பார்க்கும் போது, மது விலக்கின் வெற்றியைப் பார்க்கும்போது, கள்ளுக் கடைகள் இருந்தபோது எந்த நிலைமை இருந்தது, இப்போது எந்த நிலைமை இருக்கிறது என்று பரிசீலிக்க வேண்டும். கல்வித் துறையிலே, குறிப்பாக சமூகத் துறையிலே, மற்றும் இதரத் துறை களிலே மக்கள் எப்படி இருக்கிறார்கள், அப்போது எவ்வாறு காணப்பட்டார்கள், அவர்களுடைய குடும்பங்கள் எப்படி இருக் கின்றன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனகே தெரியும், பல ஏக்கர்கள் நிலமுடைய நிலச்சுவான்தார்கள், நிலம் வைத்திருக்கக் கூடிய விவசாயிகள், குடித்து குடித்து நிலத்தை விற்றிருக்கிறார்கள். அதனால் அநேக கேஸ்களில் ஈடுபட்டு சொத்துக்களை இழந்திருக்கிறார்கள். மதுவிலக்கு வந்த பிறகு, சிறந்த முறையில், குழந்தைகளையெல்லாம் படிக்க வைத்து மேலும் சிறப்பாக வாழ்வதோடு மட்டுமல்லாமல், கஷ்டங்கள் இருந்தாலும், அரசாங்கம் போட்டிருக்கும் திட்டங்கள் மூலமாகக் கஷ்டங்க ளெல்லாம் போகும் என்ற நோக்கத்தோடு வாழ்கிறார்கள். ஆங்காங்கு சில சமூக விரோதிகள் திருட்டுச் சாராயம் காய்ச்சு வதில் ஈடுபட்டால், அதனால் மது விலக்குக் கொள்கையே கெட்டு விட்டது, மது விலக்குத் திட்டம் நன்றாக நடைபெறவில்லை என்று



11th March 1966] [திரு. பூ. கக்கன்]

சொன்னால் அதை முற்றிலும் மறுக்கிறேன். அவ்வாறு சொல்லுவது நல்லதல்ல. மக்களை ஏமாற்ற சூழ்ச்சி செய்கிற, சதி செய்கிற முயற்சி என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீசாருடைய சம்பளம் எவ்வளவு தூரம் உயர்த்தப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு உயர்த்திக்கொண்டிருக்கிறோம். மேலும் உயர்த்துவோம். எதையும் வருவாய்க்குத் தகுந்தபடி தான் செய்யவேண்டியிருக்கிறது. நாடு உயர நாம் உயர்வோம் என்பதற்கிணங்க வருவாய் வரும்போது மேலும் கொடுப்போம். உயிரைத் திரணமாக மதிக்கக் கூடியவர்கள் போலீசார். கனம் அங்கத்தினர்கள் சொல்லுவது ஒரு பக்கம் வைத்துக்கொண்டாலும் எங்களுக்கு ஆசை இருக்கிறது. குறிப்பாக ஐ.ஜி.-க்கும் எங்க ளுக்கும் அவர்களுக்கு மேலும் உதவி செய்யவேண்டுமென்ற பெரிய நோக்கம் இருக்கிறது. 1961-62-ல் ரூ. 6.63 கோடி அவர்களுக்காகச் செலவழித்தோம். 1962-63-ல் ரூ. 6.25 கோடி செலவு செய்திருக் கிறோம். கடந்த ஆண்டைவிட கொஞ்சம் குறைந்திருக்கிறது. 1963-64-ல் ரூ. 7.26 கோடி செலவு செய்திருக்கிறோம். 1964-65-ல் ரூ. 7,26 கோடி செலவு செய்திருக்கிறோம். 1965-66-ல் ரூ. 8.76 கோடி செலவு செய்திருக்கிறோம். 1966-67-க்கு ரூ. 10,07,63,600 ஒதுக்கி யிருக்கிறோம்.

ஹெட் கான்ஸ்டேபிள், போலீசார் ஆகியவர்களின் சம்பளத்தை உயர்த்துவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு மட்டு மல்லாமல் போலீசாருக்கு யுனிஃபார்ம் அலவென்ஸ் கொடுக்க வேண்டுமென்று சிந்தித்து, ஓரளவு உதவி செய்திருக்கிறோம். வாஷிங், ஷேவிங் இதற்கு உதவி செய்யவேண்டுமென்று கவனித்து உதவி செய்திருக்கிறது. இன்னும் சில இடங்களில் டூர் போகும் போது சாப்பாட்டுச் செலவுக்கு கொடுக்கப்படும் தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்பதைப் பரிசீலனை செய்து அரசாங்கம் முடிவு எடுக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இந்த மன்றத்தில் பணிசெய்கின்ற வாட்ச் அண்ட் வார்ட் ஊழியர்களுக்குக்கூட யூனிபாரம் அலவன்ஸ் கூடுதலாகக் கொடுத் திருக்கிறோம். குறிப்பாக ஸார்ஜண்ட், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு 50 ரூபாய், ஹெட் கான்ஸ்டேபிளுக்கு 30 ரூபாய், போலீஸ் கான்ஸ் டேபிளுக்கு 20 ரூபாய் என்று வேலை செய்யும் நாட்களை வைத்துக் கொண்டு கொடுக்கிறார்கள். வேலை செய்யும்போது அவர்கள் சுத்த மாக இருக்க வேண்டுமென்று அரசாங்கம் இதைச் செய்து கொடுத் திருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் சில விஷயங்கள் சொல்லவேண்டியவைகளை ஏற்கன வேயே அச்சிட்டு மதிப்பிற்குரிய அங்கத்தினர்களுக்குக் கொடுத் திருக்கிறேன். விவாதத்திலே கனம் அங்கத்தினர்கள் சிறந்த ஆலோசனைகளைச் சொன்னால் மேலும் கவனிக்கிறேன் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. மாதவன் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, ஒரு அரசுக்கு போலீஸ் துறை இன்றியமையாத துறை என்பது குறிப்பிடத்தக்கது. கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் இங்கே சென்னை மாநில போலீஸ் துறையைப் பற்றி மிகவும் மகிழ்ச்சி

[திரு. செ. மாதவன்] [11th March 1966

யோடு பேசினார்கள். அவர்கள் சேவையைப் பாராட்டினார்கள். அவர்கள் சமுதாயத்திற்குச் செய்யக்கூடிய சேவையை நாங்களும் சேர்ந்து பாராட்டுகிறோம். இந்தத் துறைக்காக செலவழிக்கப்படும் பணத்தைப்பற்றி விவரம் கூறினார்கள். 1947-ம் ஆண்டு ரூ. 3 கோடி 87 லட்சத்தில் ஆரம்பித்து, இந்த ஆண்டு ரூ. 10 கோடி 70 லட்சம் கேட்கக்கூடிய அளவுக்கு பணம் அதிகப்படியாக செலவழிக்கப்படுகிறது என்று கூறினார். இந்தத் துறைக்காக செலவழிக்கப்படக்கூடிய பணம் இந்தத் துறையை விரிவு படுத்துவதற்கு செலவழிக்கப்படுகிறதா அல்லது இந்தத் துறையில் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வசதிகள் அளிப்பதற்காக செலவழிக்கப்படுகிறதா என்பதுதான் பிரச்னை. போலீஸ் துறையினருடைய வாய்ப்பு வசதிகளை அதிகரிக்கவேண்டும் என்ற கொள்கையிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், போலீஸ் துறையை விரிவுபடுத்தி, போலீஸ் ஆட்சிதான் ஜனநாயக ஆட்சி என்ற கொள்கையை நம்முடைய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என்றுதான் நான் கருதுகிறேன். இந்தத் துறைக்கு செலவழிக்கக்கூடிய பணம் இந்தத் துறையினருடைய திறமையை வளர்ப்பதற்கும், அவர்களுக்கு சட்ட அறிவு புகட்டுவதற்கும், நடைமுறையில் உள்ள விதிகளை, கிரிமினல் ப்ரொஸீஜர் கோடு விதிகளை அவர்கள் போதுமான அளவுக்கு படித்து புரிந்துகொள்ளுவதற்கு வாய்ப்பு, வசதிகள் செய்து கொடுப்பதற்கும், துப்புத் துலக்கும் துறையில் அவர்கள் புதிய வழிகளை பின்பற்றக்கூடிய சூழ்நிலைகளை மேற்கொள்ளுவதற்கும், விஞ்ஞான அறிவை பயன்படுத்தி அவர்கள் தங்களுடைய இலாகா வேலைகளைச் செய்வதற்கு வாய்ப்பு அளிப்பதற்கும், மனோதத்துவ இயலை அவர்கள் படித்து புரிந்துகொள்ளுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும், குற்றச் சட்ட இயலை படித்து அவர்கள் அதிகமாக இந்தத் துறையில் பணிபுரிவதற்கும் வேண்டிய வாய்ப்புகளைச் செய்து தருவதற்கும் இந்த அரசாங்கம் திட்டமிடவேண்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பல மாநிலங்களில் போலீஸ் கமிஷன் ஒன்றை அமைத்து வெள்ளையர் நிர்வாகத்தில் இருந்த அமைப்பை மாற்றி புதிய முறைகளை எப்படி பின்பற்றுவது என்று பரிசீலனை செய்திருக்கிறார்கள். உத்தரப் பிரதேசம், பீகார், பஞ்சாப், கேரளா போன்ற மாநிலங்களில் அம்மாதிரி போலீஸ் கமிஷன் நியமித்திருக்கிறார்கள். அதுபோன்ற போலீஸ் கமிஷனை நம்முடைய மாநிலத்தில் போட்டு, சமுதாயத்தில் போலீஸ் துறையைப்பற்றி இருக்கிற உணர்வை மாற்றி, இவர்கள் மக்களுக்கு சேவை செய்யக்கூடியதற்காக இருக்கிற துறையினர் என்பதைத் தெளிவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

போலீஸ் என்ற பெயரையே மாற்றலாம். சில நாடுகளில் இருப்பது போல சட்டத்தை செயல்படுத்தும் அமைப்பு 'லா என்போர்சிங் ஏஜென்சி' என்ற ஒரு பெயரைக் கொடுக்கலாம். அது பற்றியும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



11th March 1966] [திரு. செ. மாதவன்]

போலீஸ் துறையினருக்கு வீட்டு வசதி செய்துகொடுக்கப்படவேண்டும். 80 சதவிகிதத்திற்கு திட்டம் போட்டோம். ஆனால், 66 சத விகிதம் நிறைவேற்றியிருக்கிறோம் என்று சொல்லப்பட்டது. அந்தக் குறையை உடனே நிவர்த்திக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கிராமப் புறங்களில் வீட்டு வசதி இல்லாமல் இருக்கும் குறை போலீஸ்காரர்களுக்கு மிகப் பெருங்குறையாக இருந்து வருகிறது என்பதை இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சட்டத்தைப் பயன்படுத்தும்பொழுது அரசியல் காரணங்களுக்காக பயன்படுத்துகிறார்களா என்று அன்றாடம் நம்முடைய அரசாங்கம் பரிசீலித்தாக வேண்டும். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். 151-வது பிரிவின்கீழ் என்னென்ன காரணங்களுக்காக கைது செய்யப்படவேண்டும் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் கிரிமினல் ப்ரொஸீஜர் கோடு 151-வது பிரிவின் கீழ் தவறான காரணங்களுக்காக, அரசியல் காரணங்களுக்காக, எதிர்க் கட்சியினரை மடக்க வேண்டும் என்ற காரணங்களுக்காக அந்தப் பிரிவு பிரயோகிக்கப்படுகிறது என்ற குற்றச் சாட்டை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். உதாரணத்திற்காக, வெள்ளைக்காரர் ஆட்சியில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். வெள்ளைக்காரர் ஆட்சியில் மருதுபாண்டியன் உறவினர் ஒருவர் மதுரையிலே 151-வது பிரிவின் கீழ் கலெக்டரால் அரெஸ்டு செய்யப்பட்டார். மாவட்ட போலீஸ் அதிகாரியும் அவர் கருத்தை ஏற்றுக்கொண்டார். ஆனால் அங்கிருந்த வெள்ளைக்கார உயர் அதிகாரி அதை ஒத்துக்கொள்ளவில்லை. நீதிமன்றத்தை விளக்கம் கேட்டார். கலெக்டர், எஸ்.பி., 151-வது பிரிவின்கீழ் கைது செய்தது நியாயமா, இல்லையா என்று கேட்டார். நீதிபதி அந்தப் பிரிவின்கீழ் அரெஸ்டு செய்யக்கூடாது என்ற கருத்தைத் தெரிவித்தார். அதற்குப் பின்னாலே கைது செய்யப்பட்டவரை விடுதலை செய்தார்கள். இந்தக் கருத்தை அமைச்சர் அவர்கள் உள்ளத்திலே ஏற்றுக்கொள்ளவேண்டும். 151-வது பிரிவை தவறான முறையில் பயன்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாதுகாப்பு விதிகள் எதற்காக தோற்றுவிக்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். 1939-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட டிபென்ஸ் ஆப் இண்டியா ரூல்சை இன்றைக்கு 1966-ல் பின்பற்றுகிறோம். அன்றைக்கு வெள்ளைக்கார அரசாங்கம் வெளிநாட்டிலுள்ளவர்களை எதிர்ப்பதற்கு அந்த விதிகளை உருவாக்கினார்கள். அந்த விதிகளை நாம் பின்பற்றுகிறோம். இந்த விதிகள் எதற்காக பயன்படுத்தப்படுகின்றன? பத்திரிகைகள் மீது பயன்படுத்தப்படுகிறது. பத்திரிகைகள் தவறு செய்தால் அதைத் தடுப்பதற்கு, அவர்கள் மீது வழக்குகள் தொடர்வதற்கு ஏற்கனவே சட்டப் புத்தகத்தில் சட்டங்கள் இருக்கின்றன. அதைப் பார்த்து பயன்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் ஏன் தயக்கம் காட்டுகிறது? என்ன குற்றம் சாட்டப்படுகிறது? இந்த அரசாங்கத்தின் மீது துவேஷப் பிரசாரம் செய்

தார்கள், அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாத உணர்வு ஏற்படுத்துவதற்கான செய்திகளை பிரசுரித்தார்கள் என்ற காரணங்களுக்காக டிபென்ஸ் ஆப் இண்டியா ரூல்சின் கீழ் பத்திரிகைகளின் மீது வழக்கு தொடர்கிறார்கள். இதே காரணத்திற்காக ஐ பி. சி.-யின் கீழ் வழக்கு தொடரலாம். இதே காரணத்திற்காக ஐ.பி.சி.-யின் கீழ் வெள்ளைக்காரர் ஆட்சி காலத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. சுதேசமித்திரன் பத்திரிகை மீது 1908-ம் ஆண்டு செடிஷனுக்காக பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படவில்லை. ஐ.பி.சி.-யின் கீழ் அவர்கள் வழக்கு தொடர்ந்தார்கள். எதற்காக வழக்கு தொடரப்பட்டது? ஒரு நாளைக்கு உணவு இல்லாமல் நாட்டில் பஞ்சம் என்று எழுதியதற்காக நாட்டிலுள்ள சர்க்கார், சர்க்காரை நடத்தக்கூடிய வெள்ளைக்காரத் தலைவர்கள் அரசுக்கு லாயக்கற்றவர்கள், ஆள்வதற்கு லாயக்கற்றவர்கள் என்ற கருத்தைத் தெரிவித்ததற்காக ஸெடிஷன் குற்றத்திற்காக, ராஜத் துரோக குற்றத்திற்காக குற்றம் சாட்டினார்கள். நமது அரசாங்கம் அதே காரணத்திற்காக பாதுகாப்பு விதிகளைப் பயன்படுத்தி பத்திரிகைகள் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறது. சுதேசமித்திரன் பத்திரிகை என்ன கருத்து தெரிவித்தது? நாட்டிலுள்ள மக்கள் கனம் பக்தவத்சலத்தின் மீது நம்பிக்கையை இழந்து விட்டார்கள் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்பொழுது கோர்ட்டில் வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. ஒரு கோர்டில் தீர்ப்புக் கொடுக்கப்பட்டு, அதற்கு மேல் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினால் இது ஸப் ஜுடிஸ். இதைப் பற்றி கனம் அங்கத்தினர் வேண்டுமானால் பேசலாம் தாங்கள் அனுமதித்தால். ஆனால் நான் விடை அளிக்க இயலாது. ஏனென்றால் இது ஸப் ஜுடிஸ். பத்திரிகைக்காரர்கள் மீது வழக்கு கோர்ட்டில் இருக்கிறது. ஸப் ஜுடிஸ் ஆகையால் இதுபற்றி பேசுவது முறையல்ல.

**திரு. செ. மாதவன்:** அமைச்சர்களைப் பற்றி தாக்குவது தவறா? அரசாங்கத்தைப்பற்றி குறை கூறுவது தவறா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** 'ஸப்ஜெக்ட் மாடர் ஆப் தி ஆக்ஷன்' அதுதான் இப்பொழுது குவெஸ்சின். அதைப்பற்றி விமர்சனம் செய்யக்கூடாது. ஏனென்றால் விஷயம் ஸப் ஜுடிஸ்.

**திரு. செ. மாதவன்:** நான் பொதுவாகத்தான் குற்றம் சாட்டுகிறேன். அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவது தவறா? அது எப்படி ராஜத் துரோக குற்றமாகும்? பாதுகாப்பு விதிகளை எதற்காக பயன்படுத்த வேண்டும்? பாதுகாப்பு விதிகளை உருவாக்கிய பிரைம் மினிஸ்டர் அவர்களும், உள்துறை அமைச்சர் அவர்களும் அங்கு பாராளுமன்றத்தில் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். நாட்டின் பாதுகாப்புக்காக, வெளிநாட்டவர்களுடைய ஆக்கிரமிப்பை தடுப்பதற்காகத்தான் பாதுகாப்பு விதிகள் பயன்படுத்தப்படும் என்று அவர்கள் பாராளுமன்றத்தில் உறுதிமொழி தந்திருக்கிறார்கள். அன்றைக்கே இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.



சட்டமன்ற உறுப்பினர்கள் தவறாகப் பேசினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏராளமான சட்டங்கள் இருக்கின்றன. அவர்கள் கோர்ட்டுக்கே செல்ல முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அடிப்படை உரிமைகளை பறிக்கக்கூடிய அளவில் பாதுகாப்பு விதிகளை பயன் படுத்தியிருக்கிறார்கள் இந்த அரசாங்கத்தினர். எதற்காக அப்படி பயன்படுத்துகிறார்கள்? எதிர்க் கட்சியினரை பழி வாங்குவதற்காக போலீஸ் துறையை இந்த அரசாங்கம் பயன்படுத்திவருகிறது. உதாரணத்திற்கு ஒன்று கூறுவேன். மதுரை மாவட்டத்தில் சக்குடி வெள்ளையங்குன்றம் என்ற இடத்திற்கு உள்துறை அமைச்சர் 1965-ம் ஆண்டு நவம்பரில் போவதற்கு முன்னால் பொறுப்பு உள்ள ஒரு போலீஸ் அதிகாரி—சாதாரண போலீஸ் கான்ஸ்டேபிள் அல்ல—அந்த ஊருக்குச் சென்று எங்களுடைய அமைச்சர் அருகிறார், வருகிற காரணத்தினாலே பட்டொளி வீசிப் பறக்கின்ற இரு வண்ணக் கொடி, திராவிட முன்னேற்றக் கழகக் கொடி இங்கே இருக்கக்கூடாது என்று சொல்லி அவர் கையாலேயே அந்தக் கொடிக் கம்பத்தை ஆட்டி, அந்தக் கொடியை அறுத்து கீழே இறக்கி அங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரிடம் ஒப்படைத்து 'இங்கே இருந்து மதுரைக்குப் போங்கள். அங்கே உங்கள் தலைவர் இருக்கிறார்' அவரிடம் இந்தக் கொடியை ஒப்படைத்துவிடுங்கள்' என்று சொல்ல, அந்த அப்பாவித் தலைவரும் அப்படி கொடியை ஒப்படைத்தார். எதற்காக இது நடந்தது? காரணம் என்ன? உள் துறை அமைச்சரான கனம் கக்கன் அவர்கள் வரப்போகிறார், ஆகவே இப்படிச் செய்யலாம் என்று அந்த அதிகாரி எண்ணி விட்டார் போலும்! நம்முடைய உள்துறை அமைச்சர் வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி. 1953-ல் அப்பொழுது அவர் அமைச்சர் இல்லை என்று நம்புகிறேன். மேலூர் நகரத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி இறக்கப்பட்டது. கொடிக்கம்பத்தை காங்கிரஸ் கட்சி நண்பர்கள் வளைத்துக்கொண்டார்கள். கொடி இறக்கப்பட்டபொழுது அதற்கு மிகவும் அருகாமையில் நமது உள்துறை அமைச்சர் அப்பொழுது வேடிக்கை பார்த்துக்கொண்டு அதற்கு ஊக்கம் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அதை வைத்துக் கொண்டு தான் போலீஸ் அதிகாரிகள் . . . .

**கனம் திரு. பூ. கக்கன்:** நூறு வருஷங்களுக்கு முன்னால் நடந்ததுபற்றியெல்லாம் இப்பொழுது எதற்குச் சொல்லுகிறீர்கள்?

**திரு. கே. ஏ. மதியழகன்:** உண்மை இருக்கிறதா, இல்லையா என்று அமைச்சர் அவர்கள் கூறட்டும்.

**திரு. செ. மாதவன்:** அப்படிப்பட்ட ஒருவர் இந்தத் துறைக்கே அமைச்சராக வந்திருக்கிறார்.

**கனம் திரு. பூ. கக்கன்:** அதற்கெல்லாம் எப்பொழுதும் இந்த மந்திரி உடந்தையாக இருக்கமாட்டார்.

**திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்டவர் உள்துறை அமைச்சராக இன்றைக்கு வந்திருக்கிறார் என்ற எண்ணத்தினாலோ என்னவோ போலீஸ் அதிகாரி இம்மாதிரி திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை அறுத்தெறிந்தார். இம்மாதிரி செயலுக்கு அமைச்சர் உற்சாகமூட்டுவார் என்று எண்ணினாரோ என்னவோ போலீஸ் அதிகாரி?

பொதுவாக கைதிகள் லாக்கப்பில் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று பலமுறை இந்த மன்றத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதே போல் பொய் வழக்குகள் போடப்படுகிறன்றன. பொய் வழக்கு போட்டு பொய் சாட்சி சேகரிக்கக்கூடிய வாய்ப்பு போலீஸ் இலாகாவினருக்கு இருக்கிறது. வேண்டாதவர்கள் மீது வழக்கு போடப்படுகிறது. குறிப்பாக, இதற்கு மது விலக்குச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது. தங்களுக்கு பிடிக்காதவர்கள் மீது சாராய வழக்கு போடுவது, தங்களுக்கு பிடிக்காதவர்கள் மீது பழி வாங்குவதற்கு இம்மாதிரி பொய் வழக்குகள் போடுவது இந்த நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. நான் கூறுவதில் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். ஆனால் போலீஸ் துறையை ஏற்றுக் கொண்டு இருக்கிற அமைச்சர் கூறியதை உதாரணத்திற்காக இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள் பேசியிருக்கிறார்கள். லாக்கப்பில் கைதிகளை அடிக்கக்கூடாது என்று நான் ஒத்துக் கொள்ளுகிறேன் என்று கூறியிருக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் வீட்டிலே திருட்டு நடந்திருக்கிறது. திருட்டைப் பற்றி விசாரித்தார்கள். விசாரித்ததற்குப் பின்னாலே யார் உண்மையான திருடனோ அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்காக பொய்யாக வழக்கு போட்டார்கள். அதே போல பல குற்றச் சாட்டுக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதோடு நிற்காமல், எதிர்க் கட்சிக்காரர்களை பழி வாங்க வேண்டும் என்று போலீஸ் துறையை தூண்டிவிடும் குற்றச் சாட்டை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

* **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** கனம் சபாநாயகர் அவர்களே, உள் துறை அமைச்சரால் கொண்டு வரப்பட்டுள்ள போலீஸ் துறை மானியத்தை ஆதரித்து, சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே பல ஆண்டுகளாக போலீஸ் துறையினர், நம் மாநிலத்திற்கு மட்டுமல்லாமல் மற்ற பகுதிகளிலும் பணியாற்றியிருக்கிறார்கள். நமது போலீஸ் பிற மாநிலங்களாலும் பாரத மக்களாலும் போற்றும் வகையில், பணி புரிந்து வருகிறது. அந்த வகையில், நம்முடைய தமிழ் நாட்டு போலீஸ் துறை, தன்னுடைய கௌரவத்தையும், இந்த மாநிலத்தின் கௌரவத்தையும் உயர்த்திக் கொண்டு வருகிறது. அப்படி அவர்களின் மதிப்பு உயர்ந்து வருவது மகிழ்ச்சி கொள்ளக்கூடிய விஷயம். யுத்த காலங்களில் உள்நாட்டிலும், எல்லையையும் பாதுகாப்பதில் நம்முடைய போலீஸ் துறையினர், பல சிரமங்களையும் மேற்கொண்டு அந்தப் பகுதிகளில் சிறப்பாகப் பணியாற்றி, தன் கடமையை செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு, இந்தியா முழுவதும், பிற மாநிலங்களிலும் பாராட்டியிருக்கின்றனர். வேறு மாநிலங்களில்





கிளர்ச்சிகள் நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களிலே கூட, தமிழ் நாட்டிலிருந்து, நம்முடைய போலீஸ் படையை அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறார்கள் என்பதை பார்க்கிறோம்.

போலீஸ் துறையானது தமிழ் நாட்டில் நல்ல விதத்தில் பணி ஆற்றிவருகிறது ; அவர்களுடைய திறமையும், பண்பாடும் அவ்வாறு உயர்ந்து வருகிறது, என்பதைக் காட்டுகிறது. நம் மாநிலத்தில் கூட பல சோதனையான சந்தர்ப்பங்கள் அசம்பாவிதங்கள நடந்திருக்கின்றன. அப்பொழுதும் அவர்கள் மிகத் திறமையாக பணியாற்றியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு, இந்தி எதிர்ப்பு போராட்டம் என்று நடத்திய காலத்தில், நம்முடைய போலீசார் ஆற்றிய பணி எல்லோராலும் போற்றக் கூடிய முறையில் இருந்தது. அந்தச் சோதனை மிக்க நேரத்தில் மிக்கப் பொறுமையோடு பணியாற்றியிருக்கிறார்கள். மிகச் சிக்கலான சந்தர்ப்பங்களிலும் கூட அவர்கள் தங்கள் கடமையிலிருந்து வழுவாமல், பெரும் சோதனைக்காளாகி தங்கள் உயிரையும் கொடுத்து, பணியாற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த மாநிலத்திலும், இந்த மன்றத்திலும் அறிந்திருக்கிறார்கள். அதைப் பற்றிப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் சிறந்த பணி இந்த நாட்டுக்கும், மக்களுக்கும் செய்திருக்கிறார்கள்.

போலீஸ் துறையினரின் தரம், படிப்புத் தரம், வாழ்க்கை வசதிகள் நம்முடைய நாட்டில் இன்னும் பெருகவேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறோம். கிளர்ச்சி நடைபெறும் காலங்களில் அவர்கள் பாரபட்சமின்றி தங்கள் கடமையை ஆற்ற வசதியாக இருக்க வேண்டும். எதிர்க் கட்சிக்காரர்களும் அதைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், அவர்கள் சமயம் வரும்போது, இப்பொழுது, அந்தக் கிளர்ச்சியை, போர்க் கொடியை, நாங்கள்தான் உயர்த்தினோம் என்று நேற்று கனம் எதிர்க் கட்சி துணைத் தலைவர், அந்தக் கிளர்ச்சிகளை ஆதரிப்பது போல பேசினார்கள். நடவடிக்கை எடுக்கும் போது, பொது மக்கள் வெறுக்கும்படி காரியங்கள் நடந்த காலத்தில், தங்களுக்கும், அந்த சம்பவங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று பேசியதை யாரும் மறக்க முடியாது. ஆனால், இப்பொழுது சமயம் வருகிறபோது, அந்தக் கிளர்ச்சிக்கு நாங்கள் தான் காரணம் என்று மறைமுகமாக கூறிக்கொள்வது, பெருமை தரக்கூடியது அல்ல. அந்த வகையில் எதிர்க் கட்சி உபதலைவர் பேசியது வருந்தத்தக்கது. அதற்கு தக்க பதில் கனம் முதல் அமைச்சர் கொடுத்தார்கள். அப்படி மறைமுகமாக அந்தக் கிளர்ச்சிகளை ஆதரிப்பதன் மூலம், போலீசுக்கும், அரசாங்கத்திற்கும் சோதனை ஏற்படும் சந்தர்ப்பங்களை ஊக்குவிக்கும் வகையில் பேச்சுக்கள் சட்ட சபையில் பேசப்பட்டால், வெளியிலே, சமூகத் துரோகிகளுக்கு அவை மூலம் ஊக்கம் ஏற்படும், அந்த வகையில் சோதனைகள் நேருகின்றன. ஆகவே போலீசைப் பாராட்டி ஒரு புறம் பேசினாலும் கூட, போலீசுக்கும் அவர்கள் கையாளும் நடுநிலைக்கும், உள்ளும் புறமும் ஒத்த வகையில் சட்ட மன்றப் பேச்சுக்கள் அமைய வேண்டுவது அவசியம் என்று இந்த சந்தர்ப்பத்திலே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

சாதாரண போலீஸ்காரர், எஸ்.எஸ்.எல்.சி பயின்ற அளவில், இருத்தல் நல்லது. போலீஸ் சேவகர் பணிக்கு பெரிய குடும்பத்தினரும் செல்ல வேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் தூண்டக் கூடிய வகையில் போலீசாருடைய தரமும் உயரும் வகையில் அவர்களைப் பற்றிய பேச்சிக்களும் இங்கே அமைந்து, அதற்கு பொது மக்களும், நாமும் உதவியாக இருந்து, அவர்களுடைய பணியும் சிறப்பாக இருந்து விட்டால், அந்தத் துறையின் எதிர்காலம் நல்ல முறையில் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. அந்த வகையில் நாம் எல்லோரும் ஏற்பாடுகளைச் செய்வது நல்லதாக இருக்கும். போலீஸ் துறையின் தரம் உயருவதற்காக அவர்களுடைய படிப்பும் இன்னும் வாழ்க்கை வசதிகள் அதிகரிக்க, நம்முடைய மாநிலத்திலுள்ள சர்க்காரின் வருவாய்க்குத் தக்கபடி அந்த அந்த சந்தர்ப்பங்களிலே வேண்டியவற்றைச் செய்து கொண்டு வந்தால், நலமாக இருக்கும். அப்படி அவர்கள் நல்ல விதமாகப் பணியாற்றும் வகையில் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அதிகம் செய்து கொண்டு வரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அவ்வாறு அவர்களுடைய தரம் உயருவதற்கான வகையில் ஏற்படும் போலீஸ் துறை அதிகரிப்பைக் கூட மறுத்துப் பேசினார்கள். இப்பொழுது எனக்கு முன்னால் பேசிய அன்பர் கூட, போலீஸ் படையின் ஆட்சி நடை பெறுகிறது என்ற கருத்தில் பேசினார்கள். போலீஸ் படை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நன்மைதான். பிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ஜனத்தொகை அளவில் எவ்வளவு அதிகமாக இருக்கிறார்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம் நாட்டில் இருக்கும் அளவு மிகக் குறைவுதான். ஆகவே, போலீசாரைப் பெருக்க வேண்டுமென்றால், போலீஸ் ஆட்சி நடைபெறுகிறது என்கிற தவறான கருத்தை மேற்கொள்ளக் கூடாது. எவ்வளவுக்கெவ்வளவு காவல் நிலையங்கள் அதிகமாக இருக்கின்றனவோ, அந்த அளவுக்கு பொது மக்களுக்குப் பயம் இல்லாமல் வாழவும், குற்றம் குறைகள் தடுக்கப்படும் நிலையிலும் அமைகிறது. நாட்டிலே அமைதி நிலவுவதற்காக, பணிபுரிய வேண்டும் என்று போலீசை அதிகரிக்கிறோம். அதைப் போலீஸ் ஆட்சி என்று வேறு அர்த்தம் செய்து கொள்வது சரியானது ஆகாது. அம்மாதிரியான கருத்துக்கள் தவறானவை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எத்தகைய சமூக விரோத செயல்களில் யார் ஈடுபட்டாலும், அப்படிப்பட்டவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்தக் கட்சி அபிமானிகளாக இருந்தாலும், அவர்கள் சமூக விரோதச் செயலில் ஈடுபட்ட பிறகு, அவர்கள் எங்கள் கட்சி அபிமானம் உள்ளவர், அதனால் அவர் எங்கள் கட்சிக்காரர் என்று அர்த்தம் செய்து கொள்வது சரியல்ல. யார் ஒருவர் சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிறார்களோ, பொது நலனுக்குப் பாதகமாக செயல்படுகிறார்களோ. அத்தகையவர்கள், எங்கள் கட்சி அங்கத்தினர்கள், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று நாம் கொள்ளாமல், தீயசெயல்களில் ஈடுபட்டிருக்கிறவர்களை ஆதரித்துப் பேசாமல், எதுவும் சொல்லாமல் இருப்பது கவுரவமாக இருக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். அத்தகைய நடவடிக்கைகளிலே ஈடுபடுத்தும், ஊக்குவிக்கும் வகையில் சட்டமன்ற அங்கத்தினர்கள் பேசாமல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.





போலீசார் கடந்த பல ஆண்டுகளாக நாட்டிலே பணியாற்றி வந்திருக்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் நடுநிலைமையைக் கடைப் பிடித்து (மணியடிக்கப்பட்டது) கண்ணியமாக தமிழ் நாட்டில் பணியாற்றி வந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்.

***திரு. தோ. மு. நல்லசாமி**: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் கொண்டு வந்துள்ள, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

அன்னிய ஆட்சி காலத்திலே, இந்த இலாகா செய்து வந்த பணிக்கும், இன்றைக்கு சுதந்திரம் ஏற்பட்ட பிறகு, மக்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்த இலாகா புரியும் பணிக்கும், எத்தனையோ வேறுபாடுகள் உள்ளன. அவர்கள் ஆற்றி வரும் பணிகளை எண்ணிப் பார்த்தால், எத்தகையவை அவை என்கிற உண்மை புரியும். பொதுவாக, சட்டத்தை, ஒழுங்கை நாட்டிலே நிலைநாட்ட அவர்கள் எடுத்துவரும் தீவிரமான பணிகளைப் பற்றி இந்த நாடும், இந்த மன்றமும் கண்கூடாக அறியும். சமீப காலத்திலே ஏற்பட்ட இந்திக் கிளர்ச்சியின் காரணமாக, திருப்பூரில் இரண்டு போலீஸ் அதிகாரிகள் உயிரையே பலியாகக் கொடுத்து ஒழுங்கை நிலைநாட்டியிருக்கிற முயற்சியை எல்லோரும் அறிவோம். இந்த இலாகாவின் சேவை காரணமாக, குற்றங்களைக் கண்டுபிடிக்கும் தீவிரத்தின் காரணமாக குற்றங்கள் குறைந்து இருக்கின்றன. அதை ஒரு உதாரணத்தின் மூலமாக, இந்த மன்றத்திற்கு எடுத்துச் சொல்ல, சபாநாயகர் அவர்களே, அனுமதிக்க வேண்டும் என்று தங்களைக் 10.0 a.m
கேட்டுக் கொள்ளுகிறேன். கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் என்னுடைய பகுதியிலே ஒரு பெண் தன்னுடைய தோட்டத்திற்கு வேலைக்குப் போகும்போது, தனியாக இருந்தபோது, கொலை செய்யப்பட்டாள். அது நடந்து ஒரு வருஷம் ஒன்றரை வருஷத்திற்குப் பிறகு மறுபடியும் அதே மாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்தது. அப்பொழுது தான் ஊரில் உள்ள எல்லோரும் ஒன்றுகூடி, அத்தகைய நிகழ்ச்சிகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று போலீஸ் இலாகாவின் தலைமைக் காரியாலயத்திற்குத் தகவல் கொடுத்தோம். இப்பொழுது சமீப காலமாக வெற்றிகரமாக இயங்கிக் கொண்டு வருகின்ற துப்பறியும் நாய்களைக் கொண்டு பணி செய்து வருகிறார்களே, அது அப்பொழுது முதன் முதலாக ஆரம்பித்திருந்த சமயம். அப்பொழுது திருநெல்வேலியில் கண்காட்சிக்காக அந்த நாய்களை கொண்டு வைத்திருந்தார்கள்.

கம்பியில்லாத் தந்தி மூலம் தாக்கல் கொடுக்கப்பட்டு, அந்த நாய்கள் வரவழைக்கப்பட்டன. மூன்றாவது கொலை நடந்ததை அந்த நாய் வெற்றிகரமாக கண்டு பிடித்தது. அதனால் என்ன ஏற்பட்டது என்றால் அதற்குப் பிறகு அம்மாதிரி நிகழ்ச்சிகள் என்னுடைய வட்டாரத்தில் நடப்பது அறவே நின்றுவிட்டது என்று நான் உறுதியாக இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக நாம் பாராட்டுவோமா அல்லது குறை சொல்லுவோமா என்பதைப்பற்றி நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்து, 'ட்ராஃபிக்'கிலே போலீஸ் இலாகாவினர் எடுத்துக் கொள்ளும் முயற்சியைப் பார்க்க வேண்டும். எங்காவது 'பிஸி'யாக இருக்கும் சென்டர்களில் ஒரு ஐந்து அல்லது பத்து நிமிஷம் போலீஸ் இல்லாத நிலைமை ஏற்பட்டால், நம்முடைய போக்குவரத்தே தடைப்பட்டு 'ஜாம்' ஆய் விடுகிறது. இந்த நிலையில் அந்த இலாகாவினர் எடுத்துக்கொள்ளக்கூடிய சீரிய முயற்சியை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அடுத்து, தீயணைக்கும் படை நிலையத்தைப் பார்ப்போம். தீயணைக்கும் படையினர் எடுத்துக்கொள்ளக்கூடிய முயற்சி அளவற்றது. அவர்கள் எவ்வளவு நஷ்டத்தைத் தவிர்க்கிறார்கள் என்பதைப் பற்றியும் நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இப்படி ஒவ்வொரு முயற்சியிலும் அவர்கள் எடுத்துக்கொள்ளும் பணி மிகவும் பாராட்டத் தக்கது.

அது மட்டுமல்ல. எதிர்க்கட்சி மெம்பர்கள் பேசும்போது பார்த்தால், ஆளும் கட்சிக்குத்தான் இந்த இலாக்கா உதவிகரமாக இருக்கிறது என்பதைப்போல் பேசுகிறார்கள். அம்மாதிரி இல்லை என்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன். அதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் கடற்கரையில் சுதந்திராக் கட்சி ஒரு பெரிய கூட்டம் நடத்தினார்கள். அங்கே பார்த்தால் வெளியூரிலிருந்து வரக்கூடிய 'டிக்னிடரீஸ்' என்று சொல்லக் கூடியவர்கள் வரும் நேரத்தில் கொடுக்கக்கூடியதற்கும் மேலே அதிக பந்தோபஸ்து கொடுத்திருந்தார்கள். நாம் நடத்துவது ஜனநாயக அரசாங்கம். எதிர்க்கட்சிகளுடைய கருத்துக்களை மக்கள் கேட்கவேண்டும் என்ற கருத்தினை ஒத்துக்கொண்டிருக்கிறோம். அவ்வாறு சொல்லும்போது, ஆளும் கட்சியினராலோ அல்லது மற்றவர்களாலோ இடையூறு ஏற்படக் கூடாது என்பதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை நான் நேரிலே பார்த்தேன்.

ஒருசில இடங்களில் தவறு இருக்கத்தான் செய்யும். எந்த விதமான முயற்சியாக இருந்தாலும், அட்வான்டேஜும் இருக்கும், டிஸ்-அட்வான்டேஜும் இருக்கத்தான் செய்யும். ஒரு பக்கம் நன்மை இருந்தால் இன்னொரு பக்கம் தவறு இருக்கலாம். மது விலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் ஏதாவது சிறு தவறு ஏற்பட்டிருக்கலாம். அரசாங்க நிர்வாகத்திலும் சரி, தனியார் நடத்தும் நிர்வாகத்திலும் சரி, எதிலும் ஏதோ ஒருசில இடங்களில்





தவறு இருக்கும். ஒரு சிறு தவறு இருந்தாலும் அதை மிகையாக எடுத்துப் பெரிதுபடுத்திச் சொல்லி, அதனால் இந்தக் காரியம் வேண்டாம், இந்தத் தொழில் வேண்டாம், இந்த இலாகா வேண்டாம் என்று சொல்லிவிட முடியுமா ? இன்றைக்கிருக்கும் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள், தலைவர்கள் அல்லது இன்னும் மற்றவர்களெல்லாரும் ஊரிலிருந்து புறப்பட்டு சென்னைக்கு வந்து, மறுபடியும் அவர்கள் பத்திரமாக, ஒழுங்காகத் திரும்பவும் ஊர் போய் சேரும் வரை எந்த ஒரு இலாகா பொறுப்பு ஏற்றுக்கொள்ளுகிறது என்று பார்த்தால், அது இந்தப் போலீஸ் இலாகாதான் என்று நாம் சொல்லிவிடலாம். அந்த ஒரு நிலையை நாம் மறந்துவிட்டுப் பேசக் கூடாது. எங்காவது தவறுகள் இருக்கலாம். அந்தத் தவற்றைத் திருத்திக்கொள்வதற்கான ஆலோசனையைச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதால் நல்ல உற்சாகத்தோடு அவர்கள் பணியாற்ற முடியும். அதிகாரிகள் பலர் நல்ல சிறந்த பணியைச் செய்கிறார்கள். ஆவேசமாகச் செய்கிறார்கள். நல்ல காரியம் நடக்கவேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொள்ளுகிறார்கள். இதிலே ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தப் போலீஸ் இலாகாவானது நேர்மையாக இயங்குவதைத் தடை செய்வதற்குப் பொதுவாக நம்மைப் போன்ற அரசியல் வாதிகளும் ஓரளவுக்குக் காரணம் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எல்லோரும் 'கோட் ஆப் காண்டக்ட்' வைத்துக்கொண்டு, யாருமே போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரையோ, போலிஸ் இன்ஸ்பெக்டரையோ, ஐ.ஜி. யைக்கூடப் பார்ப்பதில்லை என்ற முறையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிட்டால், இந்த இலாக்கா ஒழுங்காக நடக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன். இந்த இலாகாவில் உள்ள எல்லா கிரேடு ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உற்சாகம் கொடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்து. எதிர்க் கட்சி நண்பர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நண்பர்கள் பேசும்போது, "போலீஸ்காரர்களுக்கு வீடு வேண்டும், அது வேண்டும், வசதி வேண்டும்" என்று பேசுவது அவர்களைச் சரிக்கட்டுகிற மாதிரி பேசுகிற பேச்சாகத் தொனிக்கிறது. இந்த இலாக்கா நன்றாக இயங்கி வருகிறது, அதை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

MR. SPEAKER: The hon. Member, Sri Nallasamy, has finished his speech within five minutes. So, I congratulate him. He made very constructive suggestions and he referred to all the points that he wanted to speak but yet he finished his speech within five minutes. I hope other hon. Members will follow his example and that is why I am making this observation.

* திரு. சா. ராமசாமி: கனம் தலைவர் அவர்களே, போலீஸ் துறை மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன். பொதுவாக, போலீஸ் துறையை இரு தரப்பினும் பாராட்டுகிற

[திரு. சா. ராமசாமி] [11th March 1966

நிலைமை இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு. நல்லசாமி அவர்கள், அரசியல்காரர்கள் போலீஸ் துறையில் தலையிடாமல் இருப்பது நல்லது என்று கூறினார்கள். அந்த முறையைக் கையாண்டால் மிக நலமாக இருக்கும் என்பதை நானும் வற்புறுத்திக்கூற ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, மது விலக்குச் சட்டத்தின் மூலமாக ஏழை மக்களை வாட்டுகின்ற ஒரு நிலைமை உருவாவதை நாம் காண்கிறோம். ஆளும் தரப்பில் உள்ளவர்கள் வேண்டுமானால் இந்தப் பிரச்னையை ஒத்துக் கொள்ளாமலிருக்கலாம். கிராமப் புறங்களில் எங்கு பார்த்தாலும் இந்தப் பிரச்னை அதிகமான அளவில் வளர்ந்து வருகிறது. அதனால் சில இடங்களில் ஏழைகள் அனாவசியமாகப் பாதிக்கப்படுகிற நிலைமை உருவாகிறது. 'மதுகாசம்' என்ற சித்த சம்பந்தமான டானிக்குகள் அதிகமான அளவில் எங்கும் பரவி அதன் மூலமாக அதைச் சாப்பிடுகிறவர்களைக்கூட பாதிக்கிற பிரச்னையைச் சில இடங்களில் நாம் கண்டு வருகிறோம். மது விலக்குப் பிரச்னையைப் பொறுத்த அளவிலேதான் போலீசாருக்கு அதிகமான தொந்தரவுகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஒரு ஸ்டேஷனில் பத்துப் பதினைந்து பேர்கள் இருந்தாலும், திடீர் என்று ஒரு பிரச்னைக்காக போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லும்போது, ஸப்-இன்ஸ்பெக்டரிலிருந்து அத்தனை பேர்களும் சம்பந்தப்பட்ட ஊருக்குச் சென்றிருப்பதாக அங்கே சொல்லுகிறார்கள். ரைட்டர் ஒருவரும், பாரா இருப்பவர் ஒருவரும்தான் அங்கே இருக்கிறார்கள். இதனால் சாதாரண வழக்குகள்கூட நீண்ட காலமாகப் பெண்டிங்' காகவே இருக்கும் நிலைமை ஏற்பட்டு வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு அஸிஸ்டெண்ட் ஸப்-இன்ஸ்பெக்டர் இருக்கவேண்டும் என்ற ஒரு பிரச்னை கிளப்பப்பட்டு வந்தது. இப்பொழுது எந்தக் காரணத்தினாலோ அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் உதவி ஸப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் இருக்கவேண்டும். தாலூக்கா ஆபீசில் ஹெட்க்வார்ட்டர்ஸ் டெபுடி தாசில்தார் இருப்பது போல அவர் இருக்கவேண்டும். உதவி போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் நியமிக்கப்படும் நிலை இல்லாவிடில் இரண்டு ஹெட் கான்ஸ்டபிளாவது இருக்கவேண்டிய நிலையை உருவாக்கி, இருவர் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் கண்டிப்பாக எப்போதும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவசரக் காலப் பிரச்னைகளை உடனுக்குடன் தீர்க்கக்கூடிய சூழ்நிலை உருவாகக்கூடும். மது விலக்குப் பிரச்னைக்காகவே போலீசாருடைய நாட்கள் வீணாவதால், அதிகப்படியான போலீஸ்காரர்களை நியமிக்கவேண்டும். அப்படி நியமனம் செய்து, பாதிப் பேர்களை மதுவிலக்குக்கு என்று ஒதுக்கிவிட்டு, பாதிப்பேரை மற்ற துறைக்கு வைத்துக்கொள்வது நலம் என்று தான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கப்படுகிற பயணப் படி போதுமான அளவில் இல்லை. ஒரு வேளை சாப்பாட்டிற்கே ஒரு ரூபாயிலிருந்து ரூ. 1.25 வரை செலவாகிறது. இந்த நிலையில்



11th March 1966] [திரு. சா. ராமசாமி]

அவர்களுடைய படியை உயர்த்திக் கொடுக்கவேண்டும். குறைந்த பட்சம் ரூ. 2.25 என்ற அளவிற்காவது தினப் படி கொடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

தீயணைக்கும் படையைப் பொறுத்த வரையில், முனிசிபாலிடி இருக்கும் ஏரியாவில்தான் தீயணைக்கும் படை இருக்கவேண்டும் என்ற நிலைமை இருந்து வருகிற காரணத்தால் பல இடங்களில் பெரும் பிரச்னைக்கு உள்ளாகவேண்டிய நிலைமை உண்டாகிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், சென்ற ஆண்டிலே ஆதனூர் என்னும் ஊரில் தீப்பிடித்துக்கொண்டது, அங்கிருந்து மாவட்டத் தலைமையிடமாகிய திருச்சிக்குத் தொலைபேசி மூலமாகத் தெரிவிக்கப்பட்டது. அங்குள்ள தீயணைக்கும் வண்டி வேறு இடத்திற்குச் சென்று விட்ட காரணத்தால் தஞ்சைக்குத் தகவல் கொடுத்தார்கள். அங்கிருக்கும் தீயணைக்கும் வண்டியும் வேறு எங்கோ சென்றுவிட்ட காரணத்தால், அங்கிருந்து கும்பகோணத்திற்கு அவர்கள் தகவல் கொடுத்தார்கள். கடைசியில், என்னஆயிற்று? முந்தின இரவு 9 மணிக்குத் தீப்பிடித்திருக்க, மறுநாள் காலை 9 மணிக்குத் தீயணைப்புப் படைவர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவே, இத்தகைய நிலையில் பெரும்பாலும் கிராமப்புறப் பகுதிகள்தான் பாதிக்கப்படுகின்றன. காரணம் போதிய அளவில் தீ அணைக்கும் நிலையமும் போக்குவரத்து வசதிகளும் இல்லாததுதான். எனவே, ஒவ்வொரு தாலுக்காத் தலைமையிடத்திலும் கண்டிப்பாக ஒரு தீயணைக்கும் படை இருக்கும் நிலைமையை அரசாங்கம் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக, திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூரில் தீயணைக்கும் படையை உடனடியாக நிறுவவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் டெலிபோன் வசதி அவசியம் செய்து கொடுக்க வேண்டும். டெலிபோன் வசதி செய்து கொடுக்க முடியாத இடங்களில், போலீஸ் ஸ்டேஷன் இருக்கும் இடங்களில் எல்லாம் தந்தி வசதியாவது அந்த ஊரில் இருக்கக் கூடிய நிலைமையை அரசாங்கம் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிச்சைக்காரர்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. சட்டத்தின் மூலமாக நாம் சில நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருந்தாலும், பஸ் ஸ்டாண்ட், ரயில் நிலையம் போன்றவைகளில் இறங்கி வெளிவருவதற்குக்கூட முடியாமல் பிச்சைக்காரர் தொல்லை நாளுக்கு நாள் உருவாகி வருவதால் கஷ்டம் ஏற்படுகிறது. எங்கிருந்தாலும் பிச்சைக்காரர்களை உடனடியாகப் பிடித்துக் கொண்டு சென்று, அவர்களுக்குரிய நிலையங்களில் சேர்ப்பிக்கக் கூடிய நிலைமையை அரசாங்கம் உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விஜிலன்சைப் பொறுத்தவரையில் ஓரளவு திருப்திகரமாக மாக இருந்தாலும், சில தலையீடுகளினால் ஒழுங்கான முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியவில்லை. இன்னும் கொஞ்சம் அதிகமான ஆட்களையும் போடவேண்டும். அதோடு சட்டத்தில் உள்ள சில குறைபாடுகளும் நீக்கப்படவேண்டும். குறிப்பாக இன்றைய தினம் லஞ்ச ஊழல் கேஸ் என்றால் பணம் கொடுத்தவர் நோட்டில் கையொப்பமிட்டு கொடுக்கவேண்டும். கொடுத்தவுடன் இவர்கள் அந்த அதிகாரியைப் போய்ப் பிடித்தால் அவரிடம் அடையாளமிடப்பட்ட அந்த நோட்டு இருக்கவேண்டும். அப்போதுதான் வழக்கு தொடர முடிகிறது. இந்த முறையினால் பணம் கொடுப்பவர்களும் பாதிக்கப்படக் கூடிய நிலை இருக்கிறது இதற்கு முன்னால் எல்லாம் ஒரு அதிகாரி லஞ்சம் வாங்குவதாக புகார் இருந்தால் அதுபற்றி பரிசீலனை செய்து அவரைப் பிடித்துத தண்டிக்கக் கூடிய நிலைமை இருந்தது. பணம் கொடுத்தவர்களுக்கும் தண்டனை என்றால் பணம் கொடுப்பவர்கள் பலர் சொல்வதில்லை. அதுவும் பணம் கொடுத்து காரியம் ஆகாவிட்டால்தான் அம்மாதிரி கொடுத்த விஷயம் வெளிப்படுகிறது. கொடுக்கக் கூடியவர்களுக்குள்ள தண்டனையை ரத்து செய்துவிட்டு, வாங்குபவர்கள் மீது நல்லமுறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் வகையில் சட்டம் திருத்தப்பட்டால்தான் இந்த லஞ்ச ஊழலை அடியோடு ஒழிக்க முடியும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். போலீஸ் மானியத்தின்கீழ் இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பத்து கோடி அந்த இலாகாவின் கீழ் செலவு செய்யப்பட்டாலும் கூட, இன்றைய தினம் அந்த இலாகாவின் கீழ் நிலையில் இருக்கிற சிப்பந்திகள் மிகவும் கஷ்டமான வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே கீழ் மட்டத்தில் இருக்கக்கூடிய போலீஸ்காரர்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு வேண்டிய முறையில் சம்பள உயர்வு, படி உயர்வு கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்றையதினம் போலீஸ்காரர்கள் என்கிற பெயரைக் கூட மாற்றுவது இன்றியமையாததாகும். ஒரு சுதந்திர நாட்டில் பிரிட்டிஷார் காலத்தில் இருந்த பெயரையே வைத்துக்கொண்டிருப்பது பொருத்தமாக இல்லை. அவர்களுடைய பெயரை பாதுகாப்புப் படையினர் என்பதாக மாற்றி அமைப்பது பொருத்தமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தீ அணைப்பு நிலையங்கள் நம் மாநிலத்தில் நிறைய ஆரம்பிக்க வேண்டும். உதாரணமாக என் தொகுதியை எடுத்துக் கொண்டால் திருத்துறைப்பூண்டி வட்டாரத்திலேயே தீ அணைப்புப் படை கிடையாது, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி தாலுக்காவுக்கு ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அதன் காரணமாக வேதாரண்யம் போன்ற பிரதேசங்களில் தீ விபத்து ஏற்பட்டால் தீ அணைப்புப்படை வருவதற்குள் தீ எரிந்து அணைந்துவிடும்.





ஆகவே வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, திருவாரூர், லெட்சுமாங்குடி போன்ற இடங்களுக்கு ஒரு தீ அணைப்புப் படையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊர்க்காவல் படை ஆங்காங்கே அமைத்திருக்கிறோம். இந்த ஊர்க்காவல் படையினருக்கும் தீ அணைப்புப் பயிற்சி அளிப்பது மிகவும் சிறந்ததாக இருக்கும். அதன் மூலம் அவர்கள் தீ அணைப்பதற்கு வேண்டிய உதவிகளையும் செய்வார்கள்.

புதிதாக சப்-இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். பி.ஏ. படித்தவர்கள் அல்லது இண்டர்மீடியட் படித்தவர்களைத் தான் சப்-இன்ஸ்பெக்டர்களாக நியமனம் செய்வது என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் நல்ல திடகாத்திரம் உள்ளவர்கள் இன்றையதினம் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களாகவே இருந்தாலும் அவர்களை சப்-இன்ஸ்பெக்டர் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் என்று சொல்லப்படுகிறது. உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் என்பதற்குப் பதிலாக அந்த அந்த ஸ்டேஷன்களில் பணி செய்து கொண்டிருக்கக் கூடிய ஹெட் கான்ஸ்டபிள்களுக்கு பதவி உயர்வு கொடுக்கலாம். மேலும் அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கும்போது ஒரு வருஷப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே அவர்கள் அந்த இலாகாவில் பல பயிற்சிகளைப் பெற்றவர்களாதலால் ஒரு வருஷப் பயிற்சி என்பதற்கு அவசியம் இல்லை. ஆறு மாத காலம் பயிற்சி கொடுத்தால் போதும் என்று செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பதனீர் இறக்குவதற்கு இன்றையதினம் மாவட்டங்களில் நிறைய லைசென்சு கொடுக்கப்படுகிறது. ஆனால் பலர் பதனீராக இறக்கி விற்பனை செய்யாமல் பனங்கள்ளாக விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரியான தவறைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். மதுவிலக்குச் சட்டத்தை நாம் அமலுக்குக் கொண்டுவர மிகவும் பிரயாசைப்பட்டு வருகிறோம். அதிகச் செலவும் செய்து வருகிறோம். அதே சமயம் பதனீர் என்ற பெயராலே குடிக்கப்பழகாதவர்களும் கூட பனங்கள்ளைக் குடித்துப் பழக சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது. இதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்து மதுவிலக்குக் கமிட்டி என்று சொல்கிறபோது ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனோடும் இணைந்து இந்தக் கமிட்டி செயல்படும்படியாக நாம் மதுவிலக்குக் கமிட்டிகளை ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் அங்கங்கே உள்ள அதிகாரிகளுக்குப் பல யோசனைகளைக் கூற முடியும், அதிகாரிகள் தவறாக நடந்து கொள்ளவும் சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கும். அதே சமயத்தில் பரவலாக மக்களிடத்தில் பிரசாரம் செய்யவும் உதவியாக இருக்கும்.

கடைசியாக, விவசாயிகளுடைய பிரச்சினையை எடுத்துக் கொண்டால், விவசாயிகளுக்கும், நிலச் சுவான்தாரர்களுக்கும் தகராறு வருகிறபோது அங்கங்கே உள்ள போலீஸ் அதிகாரிகள் பெருந்தனக்காரர்களாகிய நிலப் பிரபுக்கள் பக்கம் சென்று ஏழை ஹரிஜன் விவசாய தொழிலாளர்களை நிலப்பிரபுக்கள் சொல்கிறபடி நடக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்துகிற நிலைமை இருக்கிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் அப்படிச் சொல்வது சரியல்ல. இந்தச் சர்க்கார் என்றைக்குமே நிலப்பிரபுக்கள் பக்கத்தில் இருந்ததில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நான் அரசாங்கத்தைப் பற்றிச் சொல்லவில்லை. அங்கங்கே உள்ள சில அதிகாரிகள் நிலச்சுவாந்தார்களுக்கே பரிந்து பேசுகிறார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் மிகக் குறைந்த கூலி கொடுக்கிறார்கள். அது கட்டுப்படியாகவில்லை, விலைவாசி உயர்வுக்கு ஏற்றவகையில் தர வேண்டும் என்று அவர்கள் கேட்டால், விவசாயிகள் கலகம் விளைவிக்கிறார்கள் என்று போலீஸ் பட்டாளத்தை வரவழைத்து விடுகிறார்கள். போலீஸ்காரர்களும் நிலப்பிரபுக்கள் கொடுக்கிற கூலியைப் பெற்றுக்கொண்டுதான் அறுவடை செய்யவேண்டும் என்று ஹரிஜனத் தொழிலாளர்களை நிர்ப்பந்திக்கிறார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அப்படிச் சொல்வதும் சரியல்ல. அறுவடை நேரங்களில் கலவரம் ஏற்பட்டு, தானியம் அறுவடை ஆகாது போவதைத் தடுக்கத்தான் அவர்கள் லா அண்டு ஆர்டர் நிலவ நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கலாம். எங்கும் அப்படி நடப்பதாகச் சொல்வது சரியல்ல.

**திரு. ஆ. கு. சுப்பையா :** என் பகுதியில் நடப்பதைத்தான் சொன்னேன். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பதாக இந்த ஹரிஜனத் தொழிலாளர்கள் பாதிக்கும்படி போலீஸ்காரர்கள் தலையிடக் கூடாது என்று உத்தரவிடவேண்டும். அந்த மக்களுக்கு போதுமான பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையில் போலீஸ் நிர்வாகம் அமையவேண்டும். போலீஸ் அமைச்சுக்குக் கெட்ட பெயர் ஏற்படக்கூடிய வகையில் இல்லாமல் நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்திச் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. ராஜாராம் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் மானியக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு குறிப்பிடத்தக்க நல்ல மகிழ்சிக்குரிய ஒரு சரித்திரத்தைப் பெற்றிருக்கிற போலீஸ் இலாகாவானது தமிழகத்தின் சர்க்காருக்கு எந்த நேரத்திலும், எந்தக் காலத்திலும் பெருமைத் தேடித்தரத்தக்க நிலையிலே இருக்கிறது என்பதை எல்லோருமே ஏற்றுக்கொள்வார்கள். எல்லோருமே என்று நான் சொல்வது, சஹாரா பாலைவனத்தில், தண்ணீர் குடிக்கக் கேட்டால்கூடத் தண்ணீர் கொடுக்காத அரசாங்கம் என்று குற்றஞ்சாட்டிக்கொண்டிருப்பவர்களும், இந்த



நாட்டில் இருக்கின்ற காக்காய் தான் கருப்பு என்று சொல்லும் அதிகமாகப் பென்ஷன் தொகை பெற்றுக் கொண்டிருக்கின்ற பென்ஷன்தார்களும் தான் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். எதிர்க்கட்சிகாரர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்றால், நான் அதைப் பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. எதிர்க்கட்சி, எதிர்க் கட்சியாகவே எல்லாக் காலத்திற்கும் அமைந்துவிடக் கூடிய வாய்ப்பு இந்த ஜனநாயகத்திற்கு வாய்த்தது துரதிருஷ்டம் ஆகும். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் எதிர்க்கட்சியைப்பற்றி நேற்று அரிய பெரிய விளக்கங்களைத் தந்தார்கள். உதாரணங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள், யானை, பூனை என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். வேக வேகமாக வீட்டுக்கு வந்த வேதாந்தியிடம் அவனுடைய மனைவி, அவனைப்பார்த்து, இது ஏன் இப்படி, இங்கே என்ன, அங்கே என்ன, என்று கேட்க . . . .

**கனம் சபாநாயகர் :** யானை, பூனை எல்லாம் வேண்டாம், டிமாண்டைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. கோ. ராஜாராம் :** ஊருக்குத்தாண்டி, உபதேசம் உனக்கல்லடி பெண்ணே என்று சொன்னேனும். 1967-ல் நல்ல காலம் வந்துவிடும், அதற்காக அவர்கள் தங்களைப் பூனையாக்கிக்கொள்ளக் கூடத் தயாராக இருக்கிறார்கள். பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விடுமாம் என்பது பழமொழி. ஆகவே, இவர்கள் போலீஸ் துறை மட்டுமல்ல, ஒவ்வொரு துறையிலும், எல்லாத் துறைகளிலும் ஏதாவது குற்றம் சொல்லிக்கொண்டே இருக்க விரும்புகிறார்கள். நாங்கள் அப்படியல்ல. குற்றம் கண்டவிடத்துக் குற்றமென்றும், நல்லவை கண்டவிடத்து அதைப் பாராட்டியும் வருகிறோம். பூனைக்கும் ஒரு காலம் வரும் என்று சொன்னார்கள். ஆனால் இது பூனையல்ல, உத்திராட்சப் பூனை. ஆகவே, அந்த நல்ல காலம் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மருமகள் செய்த காரியத்தில் மாமியார் உண்மையாகக் குறை கண்டுபிடித்து, மெய்யாகக் குறை கண்டு சொன்னால் அந்த மருமகளுக்கு நடுக்கம் பிறக்கும், மாமியாரிடம் மதிப்பு இருக்கும். ஆனால், பிடிக்காத மருமகள் என்பதற்காக மாமியார் எடுத்ததற்கெல்லாம் குறை சொல்லிக்கொண்டிருந்தால் அந்த மாமியார் சொல்வது ஒரு வேடிக்கை நிகழ்ச்சியாகத்தான் மருமகளுக்கு இருக்கும். அதைப்போல எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் புகார்களைச் சொல்லிக்கொண்டே வருகின்ற நிகழ்ச்சிகளை நாங்கள் ஒதுக்கிவிடுகிறோம். கனம் சபாநாயகர் அவர்களும் எதிர்க்கட்சிக்காரர்கள் எந்த அளவுக்கு இதுவரை வந்த மானியங்களில் மானியத்தைப் பற்றிப் பேசுகிறார்கள், சப்ஜக்டை விலகி எப்படிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவார்கள். அண்மையிலே எதிர்க் கட்சிக்காரர்கள் 1967 தேர்தல் பிரச்சார பீரங்கி வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது என்று சொன்னார்களாம். நேற்று தேர்தல் பிரச்சார பீரங்கி எங்களுடைய காதைக் குடைந்துகொண்டிருந்தது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் . . .

**கனம் சபாநாயகர் :** இது போலீஸ் மானியம், அதைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. கோ. ராஜாராம் :** தசைகள் ஆடின, எலும்புகள் பாடின; எலும்பை ஒடிப்பேன், சிலை எடுப்பேன் என்றெல்லாம் பேசினார். கண்டால் கள்ளக்குறிச்சியைக் காண்பேன், இல்லாவிட்டால் திரும்பமாட்டேன் என்று சொல்லிய அவர் தான் இன்று எதிர்க் கட்சித் தலைவராகத் திரும்பியிருக்கிறார். அவர் எலும்பை ஒடிப்பேன், சிலை எடுப்பேன் என்று சொல்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் உள்துறை அமைப்பில் ஏற்படுகின்ற அழிவுகளுக்கும், சீர்கேடுகளுக்கும், சின்னாபின்னங்களுக்கும் எதிர்க் கட்சிதான் காரணம் என்பதைக் குற்றம் சாட்ட விரும்புகிறேன். நாயுடு குதிரை, செட்டியார் குதிரை என்பதையெல்லாம் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள், நாடகமாடினார்கள், தாலாட்டுப் பாடினார்கள். அவர்கள் போடுகின்ற இந்தத் தாலாட்டு நாடகத்தைக் கண்டு காவல் துறையிலே இருக்கின்றவர்கள் ஏமாந்துவிடுவார்கள், மக்கள் இந்தத் தாலாட்டிலே மயங்கி விடுவார்கள் என்றுதான் அவர்கள் இப்படிச் செய்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் குற்றங்கண்டவிடத்து எடுத்துச் சொல்லியும், பாராட்ட வேண்டிய நேரத்தில் அவர்களைப் பாராட்டியும் வருகிறோம்.

போலீஸ் இலாகா செம்மையாகப் பணியாற்றவேண்டுமென்றால் இன்னும் அதிலே கவர்ச்சிகரமான பல அம்சங்களைச் செய்ய வேண்டும். படித்த இளைஞர்கள் போலீஸ் இலாகாவிற்குத் தேவை. அவர்களுடைய சம்பள விகிதங்களும் கவர்ச்சிகரமாக இருக்க வேண்டும். இப்பொழுது சப்-இன்ஸ்பெக்டராக இருப்பவர் டெபுடி சூப்பிரண்டெண்டாக ரிடையர் ஆகமுடியாது. கான்ஸ்டபிளாக இருப்பவர் சப்-இன்ஸ்பெக்டராக ரிடையர் ஆக முடியாது என்று எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதில் மாற்றம் தேவை யென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஸ்டேட் போலீஸ் ஆபீசர்களுக்கும், இந்தியன் போலீஸ் ஆபீசர்களுக்கும் நிறைய இடைவெளிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஸ்டேட் போலீஸ் ஆபீசர்களும், ஐ.பி.எஸ். இல் உள்ளவர்களும் ஒரே தகுதியுடையவர்கள்தான், ஒரே திறமை உடையவர்கள்தான், ஒரே போட்டி பரிட்சைகளில் தேறியவர்கள்தான் உழைப்பு, சேவை எல்லாம் ஒன்றாக இருந்தாலும்கூட, இடையிலே இடைவெளி இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப் போக்கவேண்டும். அதேபோல் 10 டி.எஸ்.பி. இருந்தால் 30 ஏ.எஸ்.பி.-க்கள் இருக்கிறார்கள். தர்பாங்கா மகாராஜா போன்றவர்கள் எல்லாம்கூட இந்த விகிதத்தை உயர்த்தவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஸ்டேட் போலீஸ் ஆபீசர்கள் வேலையில் ஆர்வம் பெறுவதற்கு அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. பி. பழனி :** கனம் சபாநாயகர் அவர்களே, உள்துறை அமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கிற போலீஸ் மானியக் கோரிக்கையை வரவேற்று, ஆதரித்து என்னுடைய கருத்துக்





களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தி அமைதியைக் காக்கக் கூடிய மிக முக்கியமான இலாகா போலீஸ் இலாகா ஆகும். குறிப்பாக சமூக விரோத சக்திகள் சென்ற ஆண்டு மொழிக் கிளர்ச்சி என்ற பெயரில் நாட்டிலே நடத்திய போராட்டத்தின்போது, தங்களுடைய கடமையைச் செய்வதற்காக முன்வந்து, சில அதிகாரிகளும், பல ஜவான்களும் கடமைக்காக உயிர்நீத்தனர். அவர்களுக்கு நாம் வீரவணக்கத்தைச் செலுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த இலாகா 35 ஆயிரம் பேர்கள் உள்ள பெரிய இலாகா ஆகும். கடமையே உயர்வாகக்கொண்டு பணியாற்றுகின்ற அவர்களுக்கு நம் அரசாங்கம் கொடுக்கின்ற கூடுதல் சம்பளம் 102 ரூபாய்தான். உண்மையிலேயே போலீஸ் ஜவான்களுக்குக் கொடுக்கின்ற தொகை மிகவும் குறைவான தொகை. ஆகவே, குறைந்த பட்சம் 150 ரூபாயாக சம்பளத்தை ஆக்கவேண்டும். அதற்கு நம்முடைய அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகப் போலீஸ் இலாகாவைப் பார்க்கின்ற நேரத்திலே இந்தியாவிலே ஒரு நல்ல இடத்தை வகிக்கிறார்கள் என்ற நிலையில் அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒரு விரல் ரேகை வைத்து அந்தக் குற்றவாளி யார் என்று கண்டு பிடிப்பதில் ஆந்திரா, மகாராஷ்டிரம், சென்னை ஆகிய 10-30 a.m.
மூன்று இடங்களும் சிறப்பான நிலையைப் பெற்றிருந்த போதிலும், அண்மையில் சில ஆராய்ச்சிகள் வாயிலாக மற்ற இரண்டு மாகாணங்களையும் மிஞ்சக்கூடிய அளவு சென்னை மாநில போலீஸ் இலாகா பணியாற்றிக் கொண்டு வருவது பாராட்டத்தக்க ஒன்றாகும். நாயைப் பயன்படுத்தித் துப்புத் துலக்குவதில் ஆசியாவிலேயே நமது சென்னை மாநில போலீஸ் துறையானது முன்னணியில் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த வகையிலும் அவர்கள் பாராட்டுதலுக்குரியவர்கள். துப்புத் துலக்குவதிலே நம்முடைய போலீஸ் இலாகாவிலே காலதாமதம் ஏற்படுவதாக தோன்றுகிறது. ஓராண்டு, இரண்டு ஆண்டு கழித்துக் கூட முடிவு செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. துப்பு துலக்குவதில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள ஸ்காட்லண்டு யார்டுக்கு மாகாண போலீஸ் அதிகாரிகளை ஆண்டுதோறும் அனுப்பி பயிற்சி பெற ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று இருக்கிற போலீஸ்காரர்களுடைய எண்ணிக்கை மிக மிகக் குறைவு என்ற கருத்தை முன்பே பல அங்கத்தினர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள். ஆயிரம் மக்களுக்கு 92 என்ற அளவில், ஆயிரம் பேருக்கு ஒரு போலீஸ் என்று கூட இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே, போலீஸ்காரர்கள் திறம்பட சேவை செய்ய வேண்டுமென்றால் அவர்களுடைய எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும்.

அடுத்து, போலீஸ் லிமிட்-ஜூரிஸ்டிக்ஷன் கிட்டத்தட்ட 30 ஆண்டு, 40 ஆண்டுகளுக்கு முன்பு வரையறுக்கப்பட்ட நிலைமையிலேயே இருக்கிறது. அதனை மாற்றியமைத்து சிறப்பான முறை

யிலே, தூரத்தைச் சுருக்கக் கூடிய வகையிலே போலீஸ் ஜூரிஸ்டிக்ஷனைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

கடமையுணர்வு கொண்டு காரியமாற்றுகின்ற போலீஸ்காரர்களுக்குக் கட்டாய இன்ஷூரன்ஸ் திட்டம் வேண்டுமென்ற கருத்தைக் கடந்த சில ஆண்டுகளாக வலியுறுத்திக் கொண்டு வருகிறேன். இப்போதும் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். போலீஸ்காரர்களுடைய குறைகள், கஷ்டங்கள், தேவைகள் ஆகியவற்றை கவனிக்க போலீஸ் கமிஷன் அமைக்க அரசாங்கம் முன் வருமானால் அவர்களுடைய குறைகளைப் போக்க ஏதுவாக இருக்கும் என்ற கருத்தையும் இப்போது சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நம்முடைய சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகிறவர்களும் பாராட்டத்தக்க அளவுக்கு டிராபிக் கண்ட்ரோல் முறையானது இயங்கிக் கொண்டிருக்கிறது. முபசலில், மாவட்டங்களில், இவ்வளவு சிறப்பான போக்குவரத்து கண்ட்ரோல் முறை இருக்கிறதா என்று பார்க்கின்ற நேரத்தில் இல்லை என்று சொல்ல வேண்டிய நிலைமை தான் இருக்கிறது. காரணம் கொடுக்கப்படுகிற நேரத்தில், ‘ இங்கு பணி புரிகின்ற போலீஸ்காரர்களுடைய எண்ணிக்கை குறைவு, எனவே, சென்னை நகரத்தைப் போல் சிறப்பான டிராபிக் கண்ட்ரோல் முறையைச் செய்ய இயலவில்லை’ என்று குறிப்பிட்டார்கள். அந்தத் துறையிலும் விசேஷ கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இருக்கக்கூடிய ஜீப் போன்ற வாகன வசதியைப் பொறுத்து, ஒரு சில இடங்களில் டெபுடி சூப்பரின்டென்டெண்ட் போன்றவர்களுக்குக் கூட பிரத்தியோகமான ஜீப் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. இன்ஸ்பெக்டர் அளவில் ஜீப் வசதி செய்து கொடுத்தால் துரிதமாகவும், சிறப்பாகவும் பணி செய்ய இயலும்.

ஸ்பெஷல் பிராஞ்சில் பணியாற்றுகின்றவர்களுக்கு, குறிப்பாக அந்த அதிகாரிகளிடத்தில் ‘ அன்-ஆடிடெட் மணி ’ ஏழு எட்டாயிரம் ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்படுவதாகத் தெரிகிறது. அடிதளத்தில் இருக்கிற ஜவான்களுக்கு அந்தத் தொகை போய்ச் சேருகிறதா என்பதிலே நமது அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

போலீஸ் இலாகாவில் பணியாற்றும் போலீஸ் ஜவான்களுடைய குழந்தைகளுக்கு மருத்துவக் கல்வி, எஞ்சினியரிங் கல்வி போன்ற உயர்படிப்புக்கு அரசாங்கம் விசேஷ சலுகை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னை போன்ற நகரில் பணி புரிகின்ற மலபார் போலீஸ் ஜவான்கள். விடுமுறை நாட்களில் ஊருக்குத் திரும்பிச் செல்லுகின்ற நேரத்தில் விசேஷ பயணப்படி கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி போன்ற பகுதிகளில் தமிழ் மாநிலத்தில்





உள்ள ஜவான்களுக்குப் பிரயாணப்படி கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. அது குறித்தும் அரசாங்கம் சிந்தித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1960-ம் ஆண்டு மயிலாப்பூர் பாலஸ் ரோட்டில் சி.ஐ.டி. குவார்ட்டர்ஸ் கட்டப்பட்டதாகச் சொன்னார்கள். கடந்த ஆறு ஆண்டுகளாக அவர்கள் வாழ்கின்ற அந்த குவார்ட்டர்சில் அடிப்படை வசதிகள், நல்ல உறுதியான கதவுகள் கூட இல்லாத சூழ்நிலை இருப்பதாகத் தெரிய வருகிறது. அதற்கும் அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இப்போது மிகவும் சிறப்பான முறையில், பாராட்டத்தக்க வகையில் போலீஸ் இலாகாவானது பணியாற்றிக் கொண்டு வருகிறது. குறிப்பாக, மொழிக் கிளர்ச்சி ஏற்பட்ட நேரத்தில் எந்த வகையான அசம்பாவிதமும் இல்லாது சிறப்பித்த பெருமை தஞ்சை மாவட்டத்திற்கு உண்டு; தஞ்சை மாவட்டக் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் உண்டு என்பதைச் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டக் கடலோரப் பகுதிகளில் கள்ளக்கடத்தல் போன்ற சமூக விரோதச் செயல்கள் நடைபெறுவதாகத் தெரிகிறது. அதைக் கண்டு பிடிப்பதற்கு போதிய வசதியைச் செய்து தரவேண்டுமென்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்கைப் பற்றிக் கனம் அமைச்சர் அவர்களுடைய உரையிலும் குறிப்பிட்டார்கள். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் வாழ்க்கையில் ஓரளவு பொருளாதாரத் துறையில் வளர்ந்து இருக்கிறார்கள் என்றால் அதற்கு அடிப்படையான காரணம் மதுவிலக்குத் திட்டந்தான். அதைத் தீவிரமாக செயல்படுத்துவதற்கான ஊக்கமும் உற்சாகமும் அத்தனையும் போலீஸ் இலாகாவுக்கு அரசாங்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, போலீஸ் இலாகாவின் வெற்றி, போலீஸ் இலாகாவின் சிறப்பான பணி எதிலே அமைந்திருக்கிறது என்பது குறித்து நமது ஒப்பற்ற அமரர் நேருஜி அவர்கள் ஒரு முறை போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் அழகாகக் குறிப்பிட்டார்கள்.

‘ The success of a Police Officer lies wherever he may be stationed and whatever he may be doing in the measure he can obtain the co-operation of the public ’.

பொதுமக்கள் எந்த அளவுக்கு உதவி ஒத்துழைப்பைக் கொடுக்கிறார்களோ, அந்த அளவுக்குத்தான் போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய கடமையில் வெற்றி பெற முடியும் என்ற கருத்தைப் பண்டித நேரு அவர்கள் வலியுறுத்தி இருப்பதுபோல் மக்களுடைய ஒத்துழைப்பையும், உதவியையும் போலீஸ் இலாகாவுக்குத் திரட்டிக் கொடுக்கக்கூடிய அளவுக்கு, குறிப்பாக இந்த மன்றத்தில் உள்ள எதிர்க் கட்சி அன்பர்களும் நடந்து கொள்ளவேண்டுமென்று

கேட்டுக் கொண்டு, நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப் பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில கருத்துக் களை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

1938-39-ல் ஒரு கோடி 60 லட்சம் ரூபாயாக இருந்த போலீஸ் இலாகாச் செலவு 1965-66-ல் 8 கோடி 48 லட்சம் அளவுக்கும், 1966-67-ல் 10 கோடி ரூபாய் அளவுக்கும் வளர்ந்திருக்கிறது. ஓரளவு ஊதிய உயர்வு, பஞ்சப்படி உயர்வு இவற்றால் மட்டும் இந்தத் தொகை அதிகப்பட்டு விட்டது என்று சொல்ல முடியாது. இந்த நாட்டில் இருக்கிற ஏழைமை, இல்லாமை, வேலையில்லாத் திண்டாட் டம் ஆகியவற்றினால் சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் ஏற்படுகிற பங்கம் ஆகியவற்றை நீக்குகிற முறையில் போலீஸ் ஸ்டேஷன்கள் அதிகமாக ஏற்படுத்தப்பட்டும், அதிகமான காவலர்கள் நியமிக்கப் பட்டும் இருக்கிற காரணத்தால் இந்த அதிகச் செலவு ஆகியிருக் கிறது. ஆகவே, சமுதாயத்தில் ஏழைமை, இல்லாமை, வேலை யில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றைப் போக்குவதற்குப் பதிலாக, காவல் துறையை விஸ்தரித்துக் கொண்டே போவது அவ்வளவு நல்ல தல்ல. அப்படி விஸ்தரிப்பதானது நாம் பூரணமாகப் பின்னுக்குப் போவது போல்தான் இருக்கும்.

துப்பு துலக்குகின்ற திறனைப் பற்றி சொல்லும்போது நாளுக்கு நாள் போலீஸ் இலாகாவினுடைய துப்புத் துலக்கும் திறன் அதி கரித்து வருவதாகப் புள்ளி விவரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 55.4 பர்சன்டாக இருந்த துப்புத் துலக்குகிற திறன் இந்த ஆண்டு 56.1 சதவிகிதமாக அதாவது .7 சதவிகிதம் உயர்ந் திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே நான் சந்தேகப்படுகிறேன். மதுவிலக்கு வழக்குகளைக் கண்டு பிடிப்ப திலே, புலன் விசாரிப்பதிலே, போலீசார் தங்களுடைய கவனத் தை அதிகமாகச் செலுத்துகின்ற காரணத்தால், பீனல் கோடு வழக்குகளில் துப்புத் துலக்குகிற திறன் குறைந்து கொண்டு வரு கிறது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதே சமயத் தில் பார்க்கின்றபோது, சென்ற மூன்று மாதங்களுக்கு முன்பு தர்மபுரி டிஸ்ட்ரிக்ட் முனிசிபல் பங்களாவில் 7,000 ரூபாய் பெறு மான நகைகள் திருடு போயின. போலீஸ் நாய் தருவிக்கப்பட்டது. கை ரேகை நிபுணர்கள் தருவிக்கப்பட்டார்கள். அவர்கள் உடனடி யாக வந்தார்கள். அப்படி வந்தும் கூட துப்பு துலக்கப்படாததை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதேநேரத்தில் சாதாரணமாக மாங்காய் திருடி விட்டான், தேங்காய் திருடி விட்டான் என்று கையும் களவுமாக பிடிக்கப்பட்டு காவல் நிலையங்களுக்குக் கொண்டு வந்து துப்பு துலக்கியதாக அவர்களே ரிக்கார்டுசெய்து கொள்கிறார்கள். அந்த இனமும் அதில் சேரும், கை ரேகை பார்க்கப்பட்டால் யாருடைய கை ரேகை என்று கண்டு பிடிக்கப்பட்டதற்குப் பின்னால் கண்டு பிடிக்கப்பட்ட





கை ரேகை பழைய குற்றவாளியினுடைய கைரேகையாக இருந் தால் சாதாரணமாக அந்தக் குற்றம் புரிந்தவர் யார் என்று கண்டு பிடித்துவிடுகிறார்கள். புதிய குற்றவாளியாக இருந்தால் அதைக் கண்டு பிடிக்கிற திறமையை அதிகரிப்பதற்குள்ள வகையில் செயல் படவேண்டும். குற்றம் புரிந்தவர்கள் அவர்களாகவே காவல் நிலையங் களுக்கு வந்து குற்றத்தை ஒப்புக்கொள்ளும்போது அதுவும் துப்பு துலக்கப்பட்டதாக காட்டப்படுகிற தன்மையில்தான் துப்புத் துலக்குகிற திறன் அதிகரித்திருப்பதாக காட்டப்படுகிறது. துப்புத் துலக்குகிற திறன் குறைந்திருப்பதாகத்தான் சொல்லமுடியும். பெரிய, பெரிய களவுகள் எல்லாம் துப்புத் துலக்க முடியாத நிலை யில், அவை கண்டு பிடிக்கப்பட முடியாத நிலை, இருப்பதைப் பார்க்கிறோம்.

அடுத்தாற்போல், இந்த இலாகாவில் சட்ட நுணுக்கம், சட்ட அறிவு தெரிந்தவர்களையே சர்கிள் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்க வேண்டும். அவர்கள் சட்ட நுணுக்கம் தெரியாதிருக்கிற நிலையில் பல வழக்குகள் இன்று சரியாக துப்பு துலக்கப்பட்டிருந்தும், சட்டப்படி வழக்குகள் தொடரப்படாத காரணத்தினால் உயர்நீதி மன்றத்தில் பல வழக்குகள் தள்ளப்படுவதைப் பார்க்கிறோம். உண்மையான குற்றவாளிகள் கூட விடுதலை அடைகிற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, அந்நிலையைப் போக்குவதற்கு இனி யாவது பி.எல். பட்டதாரிகளைத்தான் சர்கிள் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அந்த முயற்சியில் அரசாங்கம் ஈடுபடவேண்டும்.

மதுவிலக்கு பற்றி இந்த மன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்கிறபோது ஆளும் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் நாங்கள் ஏதோ சர்க்காரைக் குறைகூற வேண்டுமென்று சொல்லுவது போல் நினைத்துக்கொண்டு மதுவிலக்குக்கு நாங்கள் விரோதம் போல் நினைத்துக்கொண்டு பேசத் தொடங்குகிறார்கள். அமைச்சர்கள் அவ்வப்போது சுற்றுலா வருகிறார்கள். அப்போது அவர்கள், கட்சி யைச் சார்ந்தவர்களை அழைத்து வைத்து எந்தெந்த வட்டங்களில் எந்த அளவிற்கு மதுவிலக்கு செயல்படுத்தப்படுகிறது என்று கேட்டால் நிச்சயமாக எங்களை விட நல்லமுறையில் எடுத்துச் சொல்வார்கள். ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் மாமூல்—மேல் மட்ட அதிகாரிகளுக்கு இருக்கிறது என்று சொல்ல மாட்டேன்—இருக் கிறது. மாவட்ட அளவில், தாலுகா அளவில் மாமூல் எல்லா அதிகாரிகளுக்கும் இருக்கிற நிலையில் ஊருக்கு ஐந்து, பத்து கள்ளு கடைகள் என்ற அளவில் தர்மபுரி மாவட்டத்தில், சேலம் மாவட் டத்தில் பரவலாக இருக்கிறது. அரசாங்கம் லைசென்ஸ் வழங்கி கள்ளுக்கடைகள் திறக்கவில்லையே தவிர மாமூல் கொடுக்கப்பட்டு ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் கள்ளுக்கடைகள் நடத்தப்படுகின்றன. என்பதை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் அங்கத்தினர் திரு. கரிவேங்கடம் அவர்கள் தர்மபுரி ஜில்லாவைச் சேர்ந்தவர். அங்கு போலீஸ் அதிகாரிகள் பணியாற்றுகிறார்கள். ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் கள்ளுக்கடை வைத்திருக்கிறார்கள் என்று இந்த மன்றத்தில்

சொன்னார்கள். ஏதாவது ஒரு இடத்தைப் போய் பார்த்து அதிகாரிகளிடம் சொல்லி தக்க நடவடிக்கைகள் எடுக்க அவர்கள் பிரயத்தனம் செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** இதற்கான முறையீடுகளைச் செய்திருக்கிறேன். இருக்கிற நிலை அதுதான். அதில் யாருக்கும் எத்தகைய சந்தேகமும் வேண்டியதில்லை. அமைச்சர்கள் மீது குறை சொல்லவேண்டும் என்றோ அல்லது அரசாங்கத்திற்கு களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற தீய எண்ணத்திலோ நான் சொல்லவில்லை. இப்படி நடக்கிறது. ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன், ஊருக்கு ஊர், அரசாங்கம் லைசென்ஸ் கொடுத்து நடத்துகிற நிலை போல், இப்போது கள்ளுக்கடைகள் தாராளமாக இருக்கின்றன.

**கனம் திரு. பூ. கக்கன்:** சட்டசபையில் எது வேண்டுமானாலும் பேசலாம். அப்படி பேச உரிமை இருக்கிறது. கனம் சபாநாயகர் அவர்களின் உத்தரவின் பேரில், அவர்களின் சம்மதத்தின் பேரில் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. மாமூல் கொடுக்கப்படுகிறது. ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் கள்ளுக்கடை இருக்கிறது என்றெல்லாம் சொல்வது நல்லதல்ல. போலீசார் செய்கிற பணிகளுக்கு அது இடையூறாக இருக்கும்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** போலீசாரின் பணிகளுக்கு இடையூறாக இருக்கவேண்டும் என்பதல்ல என் கருத்து. மதுவிலக்குச் சட்டம் தீவிரமாக செயல்படுத்தப்படவேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். பதனீர் இறக்க லைசென்ஸ் வழங்கப்படுகிறது. (மணியடிக்கப்பட்டது.)

* **திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மான்யத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இன்றைய தினம் மத்திய சர்க்கார் மிலிட்டரிக்காக அதிகப்படியான மான்யம் வழங்குகிறது. அதே போன்று நம் ராஜ்யத்திலும் போலீஸ் மான்யத்தை அதிகமாக உயர்த்த வேண்டும். சென்ற வருடம் நம் ராஜ்யத்தில் இந்தி எதிர்ப்பின் காரணமாக பெரிய நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்பட்டன. திருப்பூர் நகரத்தில் இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் உயிர்நீத்தார்கள். மக்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள் தங்கள் உயிரை நீத்தார்கள் என்பதற்காக அவர்கள் மறைவிற்கு நாம் நம் வருத்தத்தை தெரிவிக்கவேண்டும். நம் ராஜ்யத்தில் போலீஸ் சிறந்த பணியை ஆற்றிக் கொண்டு வருகிறது. ஆகவே, இன்றையதினம் மிலிடெரிக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருப்பது போல் நம் ராஜ்யத்திலும் போலீஸ்க்காக இந்த பத்து கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை அதிகமாக்கி அவர்களுக்கு அதிக சம்பளம், வீட்டு வசதி போன்றவைகளை செய்து கொடுத்தால் அவர்களுக்கு பெரிய உதவியாக இருக்கும். போலீஸ் நிர்வாகம் இன்றையதினம் சிறந்த முறையில் நடந்து வருகிறது.

சென்ற வருடம் நடந்த கிளர்ச்சியின்போது போலீசார் நிறைந்த அக்கரை எடுத்துக்கொண்டு மக்களுக்கு பாதுகாப்பு அளித்ததற்காக முதல் அமைச்சர் அவர்களுக்கும், போலீஸ்



அமைச்சர் அவர்களுக்கும், ஐ.ஜி. அவர்களுக்கும், போலீஸ் இலாகா காரியதரிசி அவர்களுக்கும், மற்றும் ஏனைய போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் என் பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற ராஜ்யங்களில் உள்ளதை விட நம் ராஜயத்தில் போலீசின் திறன் அதிகமாக இருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆனால் போலீஸ்காரர்களின் சம்பளம் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அவைகளில் நாம் கவனம் செலுத்தவேண்டும். இன்றைய தினம் மில்லில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு ஆணும், பெண்ணும் 150 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால் போலீசாரின் சம்பளம் 100 ரூபாய் தான். ஆகவே, அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 150 ரூபாயாவது கொடுக்கவேண்டும். அதோடு ஹெட் கான்ஸ்டேபில்ஸ், சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்களின் சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும். அப்படி செய்வதினால் அவர்கள் மக்களின் பாதுகாப்பு விஷயத்தில், அவர்களின் சௌகரியத்தில் அதிக அக்கறை உள்ளவர்களாக இருக்க முடியும்.

அதோடு ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு ஜீப் அல்லது ஒரு காராவது இருக்கவேண்டும். சப்-இன்ஸ்பெக்டர்ஸ்; இன்ஸ்பெக்டர்ஸ் இவர்களுக்கு ஜீப் இருக்கவேண்டும். அவர்கள் அவசரமாகச் செல்வதற்காக இந்த வசதி அவர்களுக்கு இருக்கவேண்டும். இன்று பஞ்சாயத்துக்களுக்குக் கூட ஜீப் கொடுத்திருக்கிறோம், விவசாய இலாகாவிற்கு கொடுத்திருக்கிறோம், அவசியம் இல்லாத இலாகாக்களுக்கு கூட ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவசரமாக தங்கள் காரியங்களை கவனிக்கவேண்டிய போலீஸ்காரர்களுக்கு ஜீப் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அடுத்த வருடத்திலிருந்தாவது எல்லா ஸ்டேஷன்களுக்கும், எல்லாப் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் ஜீப் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்றையதினம் திருப்பூர் டவுனுக்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன் தான் இருக்கிறது. தொழில் வளர்ச்சி, போக்குவரத்து இவை திருப்பூரில் ஈரோட்டை விட மூன்று மடங்கு அதிகமாக இருக்கிறது. ஈரோட்டில் மூன்று ஸ்டேஷன்கள் இருக்கின்றன. ஆகவே, திருப்பூருக்கு இனி ஒரு போலீஸ் ஸ்டேஷனாவது ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களையும், போலீஸ் அமைச்சர் அவர்களையும், ஐ.ஜி. அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். வருகிற ஏப்ரலில் இருந்தாவது அதைப் போட வேண்டும்.

இன்றைய தினம் ஹோம் கார்ட்ஸ்க்கு என்று ஒரு தனி இலாகா வைக்கப்பட்டிருக்கிறது, அதற்கு ஒரு டி.ஐ.ஜி. போட்டிருக்கிறார்கள் அந்த அந்த ஜில்லா எஸ்.பி. யின் கீழே அதையும் வைத்து விட்டால் நிர்வாகத்தை விஸ்தரித்துக் கொண்டு போகாமல் இருக்க உதவும். இன்றையதினம் ஃபையர் சர்வீஸ் நிறைய இருக்கிறது. அவற்றை இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் எடுத்துக் கொள்ளவேண்டும். இன்றையதினம் வியாபாரிகள் தங்கள் சரக்குகளை இன்ஷூர் செய்து விடுகிறார்கள். ஆகவே இதை போலீசோடு இணைப்பதை விட இன்ஷூரன்ஸ் கம்பனிகளோடு இணைத்துவிட வேண்டும்.

[திரு. கா. நா. பழனிசாமி-கவுண்டர்] [11th March 1966

ஃபயர் சர்வீஸ்களை எல்லாம் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளோடு சேர்த்து, அவர்களிடமிருந்து ஆண்டுக்கு இத்தனை ரூபாய் என்று வாங்கிக்கொண்டிருப்பது நல்லது என்று எண்ணுகின்றேன். அம் மாதிரி செய்வதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இன்றையதினம் போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்கள் பல இடங்களில் வீடுகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். சாதாரணமாக கிராமங்களில் இருக்கின்ற ஸ்டேஷனை எடுத்துக்கொண்டால் அதில் ஐந்து போலீஸ்காரர்கள் இருப்பார்கள், அவர்களுக்கு குடியிருக்க வீடு கொடுக்க வேண்டும். அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும், இன்னும் அவர்களுக்கு தேவையான பல வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும், அப்போது தான், அவர்கள் நிம்மதியாக வாழ முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வகையில் பார்க்கும்போது, இன்றையதினம் போலீஸ் நிர்வாகமானது இயங்கி வருகின்ற முறையைப் பார்த்தால், மக்களுடைய பாதுகாப்புக்கு மட்டுமல்ல, மக்கள் சந்தோஷமாக வாழ்வதற்கும் உதவி வருகிறார்கள். நகரத்தை எடுத்துக்கொண்டால், குறைந்தது 50 போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் வேலையை செய்வதற்கே கஷ்டமாகிவிடுகிறது. இந்த நிலையில் மதுவிலக்கு முறை சரியாக நடைபெறவில்லை என்று குற்றம் சொல்லப்பட்டுவருகிறது. தங்கள் முறையான வேலையும் பார்த்துவிட்டு, இந்த வேலையையும் போலீஸ்காரர்களால் சரியாக கவனிக்க முடிவதில்லை. காரணம் அவர்களுக்கு நேரம் இராது. இதைச் சரியான முறையில் கண்காணிக்கவேண்டும் என்றால் அதிகமான ஆட்களைப் போடவேண்டும். இதை எந்த அளவிற்கு வைத்திருக்கலாம் என்பதைப்பற்றி மத்திய சர்க்கார் பரிசீலித்து வருகிறார்கள். அதைப் பின்பற்றி நமது ராஜ்யத்திலும் இந்த மதுவிலக்குத் திட்டத்தை எந்த அளவுக்கு எடுக்கலாம் என்பதைப் பற்றி அடுத்த ஆண்டிலாவது முடிவெடுத்தால், போலீஸ்காரர்களுக்கும் வேலை குறையும், அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வருவதும் குறையும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இதைப்பற்றி அடுத்த ஆண்டிலாவது, மத்திய சர்க்கார் மதுவிலக்குத் திட்டத்தைப் பற்றி என்ன முடிவு எடுக்கிறார்களோ அதே போன்று நமது ராஜ்யத்திலும் மாற்றம் செய்துவிடுவது நல்லது என்று எண்ணுகிறேன். அப்படி வந்துவிட்டால் இன்றைய தினம் அரசாங்கம் மீதும், போலீஸ் இலாகாவின் மீதும் குறை சொல்லுவது நின்று போகும் என்று நம்புகிறேன்.

மேலும், போலீஸ் நிர்வாகம், மற்ற இலாக்காக்களைவிட சிறந்து விளங்குகிறது என்பதற்காக என்னுடையவும் இந்த மன்றத்தினுடையவும் மனப் பூர்வமான பாராட்டுதல்களையும் நன்றியையும் போலீஸ் அமைச்சர் அவர்களுக்கும், முதல் அமைச்சர் அவர்களுக்கும், போலீஸ் ஐ.ஜி. அவர்களுக்கும், போலீஸ் இலாகா காரியதரிசி அவர்களுக்கும் தெரிவித்துக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



11th March 1966]

***திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ்துறை மான்யக்கோரிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். சென்னையில் இருக்கிற போலீஸ் நிர்வாகம் மிகச் சிறப்பாக இயங்குகிறது என்று எல்லோரும் பாராட்டக்கூடிய அளவில் இருக்கிறது என்றால், அதைப்பார்த்து நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய அளவில் இருக்கிறது என்றால் உண்மையிலேயே நமது போலீஸ் துறையினர் அதற்கு தகுதியுடையவர்கள்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த முறையில் போலீஸ் துறையினர் தங்களுடைய சேவைகளைச் சிறந்த முறையில் செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களையும் மீறி சில இடங்களில் குற்றங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதில் மேலே இருக்கின்ற அதிகாரிகள் அக்கறை செலுத்தி இதை எப்படி திருத்துவது என்பதில் கவனம் செலுத்தினால் இக்குறைகளைத் தீர்த்துவிடலாம் என்று எண்ணுகிறேன். அதோடு அடித்தளத்தில் இருக்கின்றவர்களுடைய குறைகள் என்ன என்பதையும் சற்று கவனித்துவிட்டால், போலீஸ் இலாகா இன்னும் சிறந்த முறையில் இயங்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். குறிப்பாக, போலீஸ் ஸ்டேஷனுக்குள் போனால் மரியாதையோடு நடந்து கொள்கின்ற நிலைமை ஏற்படவேண்டும். நாம் பல மரியாதை வாரங்களை எல்லாம் அடிக்கடி கொண்டாடிக்கொண்டு வருகிறோம். அதே நேரத்தில் குற்றவாளியாக போலீஸ் ஸ்டேஷனுக்குள் போனால் அதற்குரிய மரியாதைதான் கிடைக்கும். ஆனால் வேறு சில காரணகளுக்காக அங்கு செல்லும்போது, சாதாரண மரியாதை கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை-'அட்மாஸ்ஃபியர்'-ரை ஏற்படுத்தினால் இன்னும் சிறந்ததாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் கடமையிலும் கறாராக இருக்கவேண்டியதுதான்: ஆனால், சாதாரண மனிதர்கள் யாராவது ஸ்டேஷனுக்குப் போனால் அவர்களை மரியாதையோடு நடத்துகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுத்தினால் இதைவிட சிறந்த இலாகா வேறு எதுவும் இருக்க முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸ்காரர்களுக்கு—அதாவது ஆவடியில் இருப்பவர்களுக்கு ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. இவர்களில் சிலர் அரசாங்க வீடுகளில் அதாவது க்வார்ட்டர்ஸ்-களில் இருந்தால் இந்த அலவென்ஸ் கிடையாது; ஆனால் வேறு வீடுகளில் இருந்தால் அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால், சென்னையில் இருக்கின்ற போலீஸ்காரர்களுக்கு ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. இவர்கள் க்வார்ட்டர்ஸ்-களில் இருந்தால் நல்லது; அதல்லாமல் தனியாக வேறு வாடகை வீடுகளில் இருந்தாலும், அவர்களுக்கும் ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் கொடுப்பதில்லை. இது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்த்து, ஆவடியிலுள்ள போலீஸ்காரர்களுக்கு இந்த அலவன்ஸ் கொடுக்கும்போது, ஏன் இவர்களுக்கு மட்டும் மறுக்கப்படுகிறது என்பதை ஆலோசித்துப் பார்த்து இவர்களுக்கும் அந்த ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்

கிறேன். அவர்களுக்கு இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுத்து விட்டால் கஷ்டம் ஒன்றும் இராது; அவர்களுடைய சம்பளத்தைக் கூட உயர்த்திக் கொடுக்கவேண்டாம், அதே நேரத்தில் இப்படிப் பட்ட குறைகளை தீர்ப்பது மிக, மிக அவசியம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கும் வீட்டு வசதி அளிக்கின்ற விஷயத்தில் மிகவும் முன்னேறியிருக்கிறது என்று தெரிகிறது. 66 சத விகிதம் வரை வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பார்க்கும் போது பெருமையாகத்தான் இருக்கிறது. மேலும் துரிதமாக அதிகமான அளவில் வீட்டுவசதி செய்து கொடுக்கவேண்டும், இப்படிப்பட்ட பல வசதிகளை செய்து கொடுத்தால், அவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எதிர்க்கட்சிக்காரர்கள், தாங்கள் கட்டுகின்ற கொடிகளை போலீஸ்காரர்கள் அகற்றிவிடுகிறார்கள் என்று குற்றஞ் சாட்டி கட்மோஷனும் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலைமை யைப்பற்றி நாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். கனம் அமைச் சர்கள் எங்காவது போகிறார் என்றால் உடனே கொடிகளைக் கட்ட ஆரம்பித்துவிடுகிறார்கள். கனம் அமைச்சர் ஒருவர் ஓர் ஊருக்கு போகிறார்கள் என்றால், அதற்கு முந்தினநாள், அதுவரை தூங்கிக் கொண்டிருக்கும் இரண்டு மூன்று ஆட்களை அழைத்து, கொஞ்சம் துணியை வாங்கி இரவோடு இரவாக தெருத்தெருவாக கட்டி விடுகிறார்கள்.

* * * * *

இப்படிக் கொடிகளை எல்லா வீடுகளிலும் வீட்டுக்காரர் களுடைய அனுமதி இல்லாமலேயே கட்டிவிடுகிறார்கள். இதன் காரணமாக பல சண்டைகள் ஏற்படுகின்றன. "ஏன் எங்கள் வீடுகளில், அல்லது, மரங்களில் கட்டுகிறீர்கள்" என்று கேட்டால் "நீ என்ன கேட்பது, அப்படித்தான் கட்டுவோம்" என்று சொல்லுகிறார்கள், இதனால் பல சச்சரவுகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட சச்சரவுகள் வராமல் தடுத்து சுமுகமான நிலைமை யை ஏற்படுத்துவதற்காக போலீஸ்காரர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள்; இது தவறு என்றால் அதை யார் ஏற்றுக் கொள்வார்கள்? கொடிகளின் மீது அவ்வளவு அக்கறை இருக்கிறது என்றால் தங்கள் உடல் பூராவும் கொடிகளை ஒட்டிக்கொண்டு போகட்டும்; யாரும் கவலைப்பட்டுக்கொள்ளமாட்டார்கள். ஆனால், தனிப்பட்டவர்களின் வீடுகளிலும், மரங்களிலும் அவர்களைக் கேட்காமலேயே கொடிகளைக் கட்டுகிறார்கள். பொது இடங்களில் ஒன்றையும் விடுவதில்லை. இந்த நிலை இருந்து கொண்டிருப்பது அரசியல் போக்குக்கு அழகல்ல என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். அவர்கள் இப்படிக் கட்டிக் கொண்டுதான் இருப் போம் என்று சொன்னால் திருப்பி எங்களுக்கும் கொடிகளை கட்டத் தெரியாதா என்ன? ஏதாவது விழாக்காலங்களில் வேண்டுமென்றால் கட்டிக்கொள்ளட்டும்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், சாதாரண காலங்களில் இப்படி கட்டுவது, கனம் அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்யும் போது அங்கங்கு இருக்கக்கூடிய வீடு

* Expunged as the Ordered by the Chair.





களின் மீதும், மரங்களின் மீதும், வேண்டாதவர்கள் வீடுகளின் மீதும், அவர்களுடைய விருப்பத்திற்கு எதிராக இப்படி செய்து கொண்டிருப்பார்களேயானால் நிச்சயமாக இது அகற்றப்பட வேண்டும், இதில் இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கனம் உள்துறை அமைச்சர் அவர்களைத் தாழ் மையாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் துறையை விஸ்தரிப்பது பற்றி சொல்லப்பட்டது. என் தொகுதியில் கொருக்குப்பேட்டையில்; மீனாம்பாள் சிவராஜ் நகர், டாக்டர் அம்பேர்த்கார் நகர் போன்ற பல சேரிகள் இருக்கின்றன. இந்தச் சேரிகளுக்கு என்று தனியாக அங்கு ஒரு அவுட் போஸ்ட் இருக்கவேண்டியது அவசியம். காரணம், இந்தச் சேரிகள் இரண்டு புறமும் ரயில்வே கேட்-கள் இருக்கின்றன. இந்த சேரிகளில் ஏதாவது போலீஸ் தேவைப்பட் டால் இந்த இடத்திற்கு வரவேண்டும் என்றால் மிக காலதாமதம் ஏற்படுகிறது; காரணம், ரயில்வே கேட்களை அரை மணி நேரத் திற்கு ஒரு தடவை தான் திறக்கிறார்கள். இதற்குள் அங்கே ஏதாவது அடிதடி சண்டை நடந்தால், அடித்துக்கொண்டிருப் பவன் அடித்துக்கொண்டேதான் இருப்பான், அடிபட்டுக் கொண் டிருப்பவன் அடிபட்டு செத்தே போய்விடுவான்: ஆகவே, சப்- இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் போய் எந்தவிதமான நடவடிக் கையும் எடுக்க முடியாது, ஆகவே, இப்படிப்பட்ட நெருக்கமான பகுதிகளில் அவுட் போஸ்ட் அமைக்கவேண்டும் என்று தாழ்மை யோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வரும்போது சென்னையில் டிராஃபிக் ப்ராபி ளத்தை போலீஸ்காரர்கள் மிக திறமையாக சமாளித்து வருகிறார்கள். அதோடு இன்னும் சில வசதிகளை செய்து கொடுப் போமேயானால் இன்னும் நல்ல முறையில் நமது போலீஸ் இலாகா வினர் போக்கு வரத்து முறைகளை நடத்துவார்கள் என்பதில் என் போன்றவர்களுக்கு நம்பிக்கையுண்டு. உதாரணமாக சில இடங் களில் லாரிகள் பெரும்பாலும் வழிகளில் நிற்கின்றன. யானைக் கவுனிக்கு அருகே சென்று பார்த்தால் இரவு நேரங்களில் லாரிகள் ஷெட்களில் இடம் இல்லாமல் வெளியில் நின்று கொண்டிருக் கின்றன. இதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால், ரமணன் தெரு, ஆதியப்பநாயக்கன் தெரு, இந்த இடங்களில் எல்லாம் லாரிகள் வெளியே நின்றுகொண்டிருக்கின்றன. காரணம், அந்தத் தெருக் களில் பல லாரி ஆபீஸ்கள் இருக்கின்றன, அங்கே நல்ல வாடகை கிடைப்பதால் பலரும் ஆபீஸ்-க்கு இடத்தை விட்டிருக்கிறார்கள். சில சமயங்களில் அந்த வழியாக போவதற்கே கஷ்டமாக இருக் கிறது. ஆகவே, லாரி ஸ்டாண்ட்-களை இன்னும் அதிகப்படுத்தினால் நல்லது. அதோடு. வுட்ஸ் ஆர்ஃப் என்ற இடம் மிக மோசமாக இருக்கிறது. அது பி. டபிள்யு. டி.-கையில் இருப்பதாக தெரிகிறது இதைச் சரியான முறையில் சீர்படுத்தினால் கீழே லாரிகளை விடலாம் மேலே லாரிக்காரர்கள் தங்கிக் கொள்ளலாம். இந்த அளவில் சீராக்கினால் இப்படிப்பட்ட சிக்கலான போக்கு வரத்து நிலைமை இருக்காது. குறிப்பாக, கொத்தவால்சாவடி பகுதியில் போனால்

நடந்து போகவே முடியாமல் இருக்கிறது. இந்த நிலைமையைக் கட்டாயமாக இலாகா தீவிரமாக ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் ஒரு பெரிய குறை; இதைப்பற்றி நான் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறேன். அந்தக் குறை தீரும் என்ற எண்ணத்தில் அதை நான் மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். பேசின் பிர்ட்ஜ் அகலப்படுத்தப்படாமல் அப்படியே இருக்கிறது. பதினேழு அடி அகலத்தில் பல ஊர்திகள் போக வசதி இல்லாமல் இருக்கிறது. இப்போது அதை 'ஒன்-வே டிராஃபிக்'-ஆக மாற்றி வியாசர்பாடியிலிருந்து வருகிறவர்கள் மூன்று மைல் சுற்றி வரவேண்டியிருக்கிறது. இந்தப் பாலத்தை அகலப்படுத்த திட்டம் இருக்கிறது. அகலப்படுத்துகிறேன் என்று அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார். இந்தப் பாலம் இவ்வளவு குறுகலாக இருக்கிற காரணத்தினால், கொஞ்ச நாள் முன்பு ஒரு ஆக்சிடெண்ட் ஆகி, டாக்டர் ஒருவர் உயிரிழந்துவிட்டார். பதினேழு அடி அகலத்தில் ஒரு பாலம் பல லட்சக்கணக்கான மக்கள் வாழும் சென்னையில் இருப்பது என்பது சென்னைக்கே அழகல்ல, ஆகையால் அதை அகலப்படுத்த வேண்டும் என்று எண்ணி அதை அகலப்படுத்த முன்வரவேண்டும். இதே மாதிரி இருக்கக் கூடிய பல பிரிட்ஜ்களையும் அகலப்படுத்தவேண்டும். அதோடு பிரிட்ஜ்களைக் கட்டும்போதே, இன்னும் 50 ஆண்டுகளுக்குப் பிறகு எப்படி இருக்கும் நிலைமை என்பதை ஆராய்ந்து, கட்டும்போதே அகலமாக, ஆழமாகக் கட்டிவிட்டால் நன்றாக இருக்கும் என்று "We must always plan with farsightedness" என்பதைத்தான் அவர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் நிலைமை என்ன என்று யோசித்துப் பார்த்து செய்தால் பல பிரச்னைகளை தீர்க்க வழியாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

மதுவிலக்கு கேஸ்களில் குடிசை வாழ் மக்களில் யாரோ ஒருவர்
11-00 a.m. தவறு செய்து விட்டால் எல்லோரையும் பிடித்து வைப்பது முறையல்ல. மேல் அதிகாரிகளாக இருந்தாலும், கீழே இருக்கிற கான்ஸ்டபிள்களாக இருந்தாலும், குற்றத்தைக் கண்டுபிடித்து, குற்றத்தைச் செய்தது யார் என்று கண்டுபிடித்து அவர்களை மட்டும் பிடித்து வரவேண்டும், எல்லோரையும் பிடித்துக்கொண்டு வரக் கூடாது என்று உத்தரவுகளைப் பிறப்பித்து அமல் நடத்தினால் போலீஸ் இலாகாவிற்குச் சமமான இலாகாவே இல்லை என்ற நிலைமை ஏற்படும். (மணி அடிக்கப்பட்டது).

*** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மதிப்பு மிக்க கனம் சபா நாயகர் அவர்களே, நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மான்யக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்:

இன்றைய தினம் போலீஸினுடைய பொறுப்பு மிகப் பெரிய பொறுப்பு. இந்த நாட்டிலே எத்தகைய குழப்பங்களோ கலகங்களோ உள்நாட்டில் ஏற்பட்டாலும்; தன் வாழ்க்கை, குழந்தை குட்டிகள் என்று கூடப் பாராமல் உடனடியாகச் சென்று, மக்க





ளுக்குப் பாதுகாப்பு கொடுக்கக் கூடிய அளவுக்கு போலீஸ் நிர்வாகம் இருக்கிறது என்றால்; அதைப் பற்றி ஜனநாயக நாட்டில் போலீஸ் நிர்வாகம் தான் நடக்கிறது என்று சொல்லுவார்களானால் அது வேதனைப்படக் கூடிய ஒன்று என்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அந்த அடிப்படையில் எல்லாத் துறைகளிலும் போலீஸ் இலாகாவைப் பொறுத்த வரையில்; ஜில்லா அளவிலும். மாநில அளவிலும் மிக நன்றாகப் பணி புரிகிறார்கள் என்பதைப் பார்க்கும் போது அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைக் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இன்றைக்குச் சிறு சிறு குறைகள் இருக்கின்றன என்றால் கீழே இருக்கிற போலீஸ்காரர்கள் உற்சாகமாக; ஊக்கமாக வேலை செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது என்றால். உண்மையில் பொருளாதார நெருக்கடி தான். இப்போது கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கூட, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவது பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். விரைவாகப் பரிசீலனையை முடித்து, அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி அவர்களுக்கு வீடு கட்டுவதில், கிராமப் பகுதிகளில் இன்னும் அந்த வேலை நன்றாக நடைபெறவில்லை. ஆகவே வீடு கட்டுவதைத் தீவிரப்படுத்தவேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக அற நிதிக்கு அரசாங்கம் 50,000 ரூபாய் இனாமாகக் கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு போலீஸார் குடும்பத்திற்கும் இதர வரும்படி வரும் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். இன்னும் ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் ரூபாய் ஒதுக்கி போலீஸாருடைய மனைவி மக்களெல்லாம் இதர தொழிலில் ஈடுபட்டு அவர்கள் குடும்பத்திற்கு உபரி வரும்படி வர ஏற்பாடு செய்தால் அவர்களுடைய குறைபாடுகள் ஓரளவு தவிர்க்கப்படும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு கிராமங்களில் இருக்கிற போலீஸ் நிர்வாகத்தில் ஏதாவது எங்காவது 4, 5 மைல்கள் தூரத்தில் கலகம் ஏற்பட்டுவிட்டால் உடனடியாக போலீஸ்காரர்கள், எஸ்.ஐ., போக முடியவில்லை. ஒவ்வொரு ஸ்டேஷன் எஸ்.ஐ.-க்கும் கார் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை, ஒரு மோட்டார் பைக்காவது கொடுத்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். இன்ஸ்பெக்டர்களுக்கு ஒரு ஜீப் கொடுப்பதையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

**கனம் சபாநாயகர் :** சொல்லத்தான் சொல்லுகிறீர்கள், கார் கொடுக்கவேண்டும் என்று சொல்லி வைக்கலாமே.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கார் கிடைக்காது என்று தெரியும்—மோட்டார் பைக்காவது கொடுத்தால் குற்றங்களைக் கண்டுபிடிக்க வசதியாக இருக்கும்.

நடந்து போகவே முடியாமல் இருக்கிறது. இந்த நிலைமையைக் கட்டாயமாக இலாகா தீவிரமாக ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் ஒரு பெரிய குறை; இதைப்பற்றி நான் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறேன். அந்தக் குறை தீரும் என்ற எண்ணத்தில் அதை நான் மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். பேசின் பிரிட்ஜ் அகலப்படுத்தப்படாமல் அப்படியே இருக்கிறது. பதினேழு அடி அகலத்தில் பல ஊர்திகள் போக வசதி இல்லாமல் இருக்கிறது. இப்போது அதை 'ஒன்-வே டிராஃபிக்'-ஆக மாற்றி வியாசர்பாடியிலிருந்து வருகிறவர்கள் மூன்று மைல் சுற்றி வரவேண்டியிருக்கிறது. இந்தப் பாலத்தை அகலப்படுத்த திட்டம் இருக்கிறது. அகலப்படுத்துகிறேன் என்று அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார். இந்தப் பாலம் இவ்வளவு குறுகலாக இருக்கிற காரணத்தினால், கொஞ்ச நாள் முன்பு ஒரு ஆக்சிடென்ட் ஆகி, டாக்டர் ஒருவர் உயிரிழந்துவிட்டார். பதினேழு அடி அகலத்தில் ஒரு பாலம் பல லட்சக்கணக்கான மக்கள் வாழும் சென்னையில் இருப்பது என்பது சென்னைக்கே அழகல்ல, ஆகையால் அதை அகலப்படுத்த வேண்டும் என்று எண்ணி அதை அகலப்படுத்த முன்வரவேண்டும். இதே மாதிரி இருக்கக் கூடிய பல பிரிட்ஜ்களையும் அகலப்படுத்தவேண்டும். அதோடு பிரிட்ஜ்களைக் கட்டும்போதே, இன்னும் 50 ஆண்டுகளுக்குப் பிறகு எப்படி இருக்கும் நிலைமை என்பதை ஆராய்ந்து, கட்டும்போதே அகலமாக, ஆழமாகக் கட்டிவிட்டால் நன்றாக இருக்கும் என்று " We must always plan with farsightedness " என்பதைத்தான் அவர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் நிலைமை என்ன என்று யோசித்துப் பார்த்து செய்தால் பல பிரச்னைகளை தீர்க்க வழியாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

மதுவிலக்கு கேஸ்களில் குடிசை வாழ் மக்களில் யாரோ ஒருவர்
11-00 a.m. தவறு செய்து விட்டால் எல்லோரையும் பிடித்து வைப்பது முறையல்ல. மேல் அதிகாரிகளாக இருந்தாலும், கீழே இருக்கிற கான்ஸ்டபிள்களாக இருந்தாலும், குற்றத்தைக் கண்டுபிடித்து, குற்றத்தைச் செய்தது யார் என்று கண்டுபிடித்து அவர்களை மட்டும் பிடித்து வரவேண்டும், எல்லோரையும் பிடித்துக்கொண்டு வரக்கூடாது என்று உத்தரவுகளைப் பிறப்பித்து அமல் நடத்தினால் போலீஸ் இலாகாவிற்குச் சமமான இலாகாவே இல்லை என்ற நிலைமை ஏற்படும். (மணி அடிக்கப்பட்டது).

*** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மதிப்பு மிக்க கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மான்யக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்:

இன்றைய தினம் போலீஸினுடைய பொறுப்பு மிகப் பெரிய பொறுப்பு. இந்த நாட்டிலே எத்தகைய குழப்பங்களோ கலகங்களோ உள்நாட்டில் ஏற்பட்டாலும்; தன் வாழ்க்கை, குழந்தை குட்டிகள் என்று கூடப் பாராமல் உடனடியாகச் சென்று, மக்க



ளுக்குப் பாதுகாப்பு கொடுக்கக் கூடிய அளவுக்கு போலீஸ் நிர்வாகம் இருக்கிறது என்றால்; அதைப் பற்றி ஜனநாயக நாட்டில் போலீஸ் நிர்வாகம் தான் நடக்கிறது என்று சொல்லுவார்களானால் அது வேதனைப்படக் கூடிய ஒன்று என்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அந்த அடிப்படையில் எல்லாத் துறைகளிலும் போலீஸ் இலாகாவைப் பொறுத்த வரையில்; ஜில்லா அளவிலும், மாநில அளவிலும் மிக நன்றாகப் பணி புரிகிறார்கள் என்பதைப் பார்க்கும் போது அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைக் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இன்றைக்குச் சிறு சிறு குறைகள் இருக்கின்றன என்றால் கீழே இருக்கிற போலீஸ்காரர்கள் உற்சாகமாக; ஊக்கமாக வேலை செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது என்றால், உண்மையில் பொருளாதார நெருக்கடி தான். இப்போது கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கூட, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவது பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். விரைவாகப் பரிசீலனையை முடித்து, அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி அவர்களுக்கு வீடு கட்டுவதில், கிராமப் பகுதிகளில் இன்னும் அந்த வேலை நன்றாக நடைபெறவில்லை. ஆகவே வீடு கட்டுவதைத் தீவிரப்படுத்தவேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக அற நிதிக்கு அரசாங்கம் 50,000 ரூபாய் இனாமாகக் கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு போலீஸார் குடும்பத்திற்கும் இதர வரும்படி வரும் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். இன்னும் ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் ரூபாய் ஒதுக்கி போலீஸாருடைய மனைவி மக்களெல்லாம் இதர தொழிலில் ஈடுபட்டு அவர்கள் குடும்பத்திற்கு உபரி வரும்படி வர ஏற்பாடு செய்தால் அவர்களுடைய குறைபாடுகள் ஓரளவு தவிர்க்கப்படும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு கிராமங்களில் இருக்கிற போலீஸ் நிர்வாகத்தில் ஏதாவது எங்காவது 4, 5 மைல்கள் தூரத்தில் கலகம் ஏற்பட்டுவிட்டால் உடனடியாக போலீஸ்காரர்கள், எஸ்.ஐ., போக முடியவில்லை. ஒவ்வொரு ஸ்டேஷன் எஸ்.ஐ.-க்கும் கார் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை, ஒரு மோட்டார் பைக்காவது கொடுத்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். இன்ஸ்பெக்டர்களுக்கு ஒரு ஜீப் கொடுப்பதையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

**கனம் சபாநாயகர் :** சொல்லத்தான் சொல்லுகிறீர்கள், கார் கொடுக்கவேண்டும் என்று சொல்லி வைக்கலாமே.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கார் கிடைக்காது என்று தெரியும்—மோட்டார் பைக்காவது கொடுத்தால் குற்றங்களைக் கண்டுபிடிக்க வசதியாக இருக்கும்.

தீ அணைக்கும் படையிலே பணியாற்றுகிறவர்களுக்கு வீட்டு வசதி இன்னும் சரியாகச் செய்து கொடுக்கவில்லை. தலைநகரிலாகிலும் ஜில்லா தலைநகர்களிலாகிலும் அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும்.

போலீசாருக்குக் கொடுக்கப்படும் பாட்டாவை அதிகரித்துக் கொடுக்கவேண்டும். போலீசாருக்கு தினசரி 1¼ ரூபாய் படி கொடுக்கப்படுகிறது. காப்பி விலை எவ்வளவு இருக்கிறது, சாப்பாட்டுக்கு எவ்வளவு ஆகிறது என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்து தினசரி படியாக 2½ ரூபாயாவது கொடுப்பது சாலச் சிறந்தது.

எங்காவது கலகம் ஏற்பட்டால் அவர்கள் உடனடியாகச் செல்ல வேண்டும். கையிலே, கொண்டுசெல்லப் பணம் இல்லாமல் மனைவி மக்களுடைய காதில், கழுத்தில் இருப்பதைக் கொண்டு போய் அடகுவைத்து பணம் வாங்கிக்கொண்டு செல்லவேண்டியிருக்கிறது. வெளியே செல்லும்போது அவர்களுக்கு முன்பணம் கொடுத்து அனுப்புவது சிறந்தது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே முதலிலே விவாதத்தை ஆரம்பித்து வைத்த கனம் அங்கத்தினர் வெள்ளைக்காரன் ஆட்சியையும், இன்றைக்கு இருக்கும் ஆட்சியையும் கம்பேர் செய்து அன்றைக்கு ஆட்சி நன்றாக இருந்தது, இன்றைக்கு ஆட்சி மோசமாகி விட்டது என்று சொன்னார். என்ன செய்வது? நாட்டிலே ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டும், வெள்ளையனை அகற்றவேண்டுமென்று பாடுபட்டு காங்கிரஸ் மகா சபை நல்ல நிலைமையை உருவாக்கியிருக்கிறது என்றால், வெள்ளையன் போய் விட்டானே என்று புலம்பிக் கொண்டிருப்பது வேதனைப் பட வேண்டியதாக இருக்கிறது. மீண்டும் வெள்ளையன் வரவேண்டுமா அல்லது வேறு அன்னியன் வரவேண்டுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மதுரை ஜில்லாவைப் பற்றி, மதுரை ஜில்லா அங்கத்தினர் கூட இல்லை, இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த அங்கத்தினர் மதுரை ஜில்லா பற்றிப் பேசினார்கள். மதுரை ஜில்லாவிலே பணி புரிகிற போலீஸ் அதிகாரிகள் எவ்வளவு திறமையாகப் பணி புரிந்தார்கள், பணி புரிகிறார்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். எங்கோ கொடி கட்டியதாகவும், அந்தக் கொடியை உடனே அப்புறப்படுத்தி அவரிடம் கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்று கூறியதாகவும் சொன்னார். கொடி எங்கெங்கே இருக்க வேண்டுமோ அங்கே இருக்கவேண்டும். அதை விட்டு அநாவசியமாகக் கொடிகளைக் கட்டி, வெறியாட்டத்திற்குக் கொண்டு விடக் கூடிய அளவுக்கு மக்களிடத்தில் நிலைமை ஏற்பட்டால், உடனடியாக அதை அப்புறப்படுத்தி எங்கு சேர்க்க வேண்டுமோ அங்கு சேர்ப்பது நியாயம், தர்மம் கூட. வருகிற காலம் தேர்தல் காலமாகி இருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் மீண்டும் மக்களைத் தூண்டி விடலாமா என்ற நிலைமையில் பேசுவது, பத்திரிகைகளில் எழுதுவது என்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை மேற்





கொண்டு ஒரு ஆண்டுக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்தால் நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் நல்லதல்ல. மிகவும் தீவிரமாக . . (மணியடிக்கப்பட்டது).

* திரு. எ. சுவாமிதாஸ்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேச விரும்புகிறேன்.

போலீஸ் இலாகாவில் பணியாற்றுகிற கீழ்த்தர அலுவலர்களுக்கு இப்போது அளிக்கப்படுகிற வாய்ப்பு வசதிகள் போதாது. அவர்கள் மழை என்றாலும், வெயில் என்றாலும் இடைவிடாது 24 மணி நேரமும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி, நல்ல வாழ்க்கைத் தரம் எல்லாம் சரியான முறையில், ஓரளவு நிம்மதியாக வாழக் கூடிய முறையில் அமைத்துக் கொடுத்தால் மட்டுமே பொது மக்களுடன் நல்ல உறவோடு பணியாற்ற வாய்ப்பு இருக்கும். ஒரு போலீஸ்காரரின் அடிப்படைச் சம்பளம், இன்றைய விலைவாசி உயர்வின் அடிப்படையில் 150 ரூபாயாவது இருக்கவேண்டும். சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர்களுக்கும் அதற்குத் தகுந்தாற்போல சம்பளம் இருக்க வேண்டும்.

சாதாரணமாக கொலை, களவு கேஸ் நடந்தால் இன்வெஸ்டிகேட் செய்ய சம்பவம் நடந்த இடத்திற்குப் போக போக்குவரத்து வசதி வேண்டும். அதற்குக் கார் வேண்டும். கார் வாடகைக்கு எடுத்தாலும், வேறு வசதியை ஏற்படுத்திக் கொண்டாலும், கையிலிருந்து பணத்தைச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிச் செலவு செய்து எத்தனை நாள் ஒரு இன்ஸ்பெக்டர் அல்லது சப்-இன்ஸ்பெக்டர் கேஸ்களை இன்வெஸ்டிகேட் செய்ய முடியும்? கையிலிருந்து செலவு செய்ய வேண்டிய நிர்பந்தம் இருக்கிற காரணத்தினால், பல கேஸ்களில் கவனத்தைச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இன்ஸ்பெக்டருக்காவது ஒரு ஜீப் கொடுக்க வேண்டும். யார் யாருக்கோ ஜீப்புகளை வழங்கியிருக்கிறோம்; போலீஸ் துறையில் இன்ஸ்பெக்டருக்காவது ஜீப்புகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் உடையைப்பற்றிச் சொல்லவேண்டுமென்றால், போலீஸ்காரர்களுக்கு இப்பொழுது நாம் வழங்குகின்ற உடைகள் நம்முடைய சீதோஷ்ண ஸ்திதி நிலைக்கு ஏற்றவாறு இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய ஐ.ஜி. அவர்கள் உடை மாற்றம் செய்யப் போவதாக முடிவு செய்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். நம்முடைய சீதோஷ்ணத்திற்குத் தகுந்தவாறு, மழை, பனி, வெய்யில் என்று பாராமல் பணிபுரியும் போலீஸ்காரர்களுக்கு உடை மாற்றம் செய்வதன் மூலம், தொப்பி மாற்றுவதன் மூலம் அவர்களுக்கு நல்ல முறையில் உடை அமைத்துக் கொடுத்தால் அவர்களுடைய கௌரவமும் உயரும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்கைப்பற்றி பேசினார்கள் உள்துறை அமைச்சர் அவர்கள். மது விலக்கு மிக வெற்றிகரமாக நடைபெறுகிறது, ஏழை மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள், வாழ்க்கையில் முன்னேறியிருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். கிராமப்புறங்களில் இருக்கின்ற என் போன்றவர்களுக்கு மதுவிலக்கு எப்படி கிராமாந்திரங்களிலே செயல்படுகிறது என்பது தெரியும். அதை மக்கள் வரவேற்கவில்லை. மது அருந்துவது குறைந்திருக்கிறதா, திருட்டுச் சாராயம் காய்ச்சுவது குறைந்திருக்கிறதா என்றால் இல்லவே இல்லை. மதுவிலக்கைத் தளர்த்தி கடைகளை வைத்து நடத்தினால், அதற்கு அரசாங்கம் லைசென்ஸ் கொடுப்பார்கள், வரி விதிப்பார்கள். இன்றைக்கு அப்படியில்லாமல் திருட்டுச் சாராயம் காய்ச்சுவதால் ஒரு பாட்டில் ரூ. 3-க்குக் கிடைக்கிறது. ஒரு லைசென்ஸ் வழங்கிய கடையில் வாங்குவது என்றால், குறைந்தது ரூ. 15 ஆகும். ஆகவே, பொது மக்கள் திருட்டுத் தனமாகக் காய்ச்சும் சாராயத்தைத் தான் குடிப்பதற்கு விரும்புகிறார்கள். பொருளாதார அடிப்படையில் வைத்துப் பார்த்தால் கூட, மது அருந்துவோர் அதைத்தான் விரும்புகிறார்கள். போதை தரும் பல வஸ்துக்கள் இப்பொழுது மக்கள் மத்தியிலே நடமாடுகின்றன. பல திருட்டுத்தனமாகக் காய்ச்சும் போதைதரும் பொருள்கள் நடமாடுகின்றன. இவைகளால் அருந்துவோரின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மதுவிலக்குச் சட்டம் அமலில் இருக்கிற காரணத்தினால், போலீஸ்காரர்களுடைய அன்றாட அலுவலிலும் கூட, அவர்களுடைய ஒழுக்கத்திலும் கூட சில சமயங்களில் ஐயப்பாடு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பொதுமக்களின் ஆதரவு மதுவிலக்குக்கு இல்லை. ஒருவர் திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறார் என்று போலீஸார் கண்டவுடன் ஒரு வழக்கைக் கண்டுபிடித்து கோர்ட்டில் தாக்கல் செய்துவிட முடியாது. காரணம், தேவையான சாட்சியங்கள் கிடைப்பதில்லை. பொதுமக்களுள் யாரும் சாட்சி சொல்லுவதற்கு முன்வருவதில்லை. இதனால் பல வழக்குகள் கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இந்த நிலை இருப்பதன் காரணமாக இதைப்பற்றிப் புனர் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

நான் இன்னொன்றும் கூற ஆசைப்படுகிறேன். பதநீர் இறக்குவதற்கு லைசென்ஸ் வழங்குவதை ரத்து செய்துவிடவேண்டும் என்று குறிப்பிட்டார். எங்கள் பக்கத்தில் பதநீர் இறக்கி அதிலிருந்து கருப்பக்கட்டி தயார் செய்து நாங்கள் பயன்படுத்துகிறோம். பதநீர் இறக்குவதற்குத் தடை விதித்தால், பதநீர் இறக்க முடியாமல் போய்விடும். கருப்பக்கட்டியும் செய்வதற்கு முடியாமல் போய்விடும். பதநீர் உடலுக்கு மிகவும் நல்லது. மேல் நாடுகளில் பீரை பொது மக்கள் அதிகமாக அருந்துகிறார்கள். நம்முடைய நாட்டில் அதிகமாக உழைப்பவர்கள் கள் அருந்தி வந்தனர். மிதமாகக் கள் அருந்துவதால் உடல் பலம் பெருகும், பல நோய்கள் அகலும். கள் சாப்பிடுவதால் போதையே இருக்காது. அதில் வேண்டுமென்று போதையைச் சேர்த்தால் தான் போதை இருக்கும். கள் மலிவான விலையில் கிடைக்கும். பிராந்தி போன்ற மதுவகைகள் ஒரு பாட்டில் ரூ. 100 என்று





வைத்து வசதியுள்ளவர்கள் மட்டும் அதை அருந்தும்படிச் செய்யலாம் ஏழைகள் பீர் அல்லது கள் சாப்பிட்டு அவர்களுடைய உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளுவார்கள். ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திருமதி சி. குழந்தையம்மாள் : கனம் சபாநாயகர் அவர்களே, நமது உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற போலீஸ் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். நமது மாநிலத்தில் போலீஸ் இலாகா நல்ல முறையில் பணியாற்றி வருகிறது என்பது பெரும்பாலும் பல மாநிலங்களில் இருப்பவர்களின் கருத்து. அதோடு கூட நமது பொது மக்கள் அனைவரும் பாராட்டுதலைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த முறையில் இன்று நம்முடைய பாதுகாப்புப் படையானது நல்ல பாராட்டுதலைப் பெற்று நாட்டிலே சேவை செய்துவருகிறது என்று சொன்னால், அவர்களுக்கு சில உதவிகளை நாம் மேலும் செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். கோவை ஜில்லாவைப் பொறுத்தவரைக்கும் ஆயுதம் தாங்கிய படை வைத்திருக்கிறார்கள். அங்கு பெரும்பாலும் தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதனால், அந்தப் படையானது நிரந்தரமாக அங்கே இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதை அதிகப்படுத்தவேண்டும். அது சம்பந்தமாக உள்ள குறைகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லா ஜன நெருக்கடி நிறைந்த ஜில்லாவாக இருப்பதினால் போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு போலீஸ் இலாகா 'நோ என்ட்ரி' போர்டு போடவேண்டுமென்றால், எஸ். பி. அவர்கள் அம்மாதிரி போர்டு போடுவதற்கு முன்னால், நகர சபைத் தலைவர் அவர்களின் அனுமதி பெறவேண்டும், ஹைவேஸ் டிபார்ட்மெண்டின் அனுமதி பெறவேண்டும், பி.டபிள்யு.டி.-யின் அனுமதி பெறவேண்டும். இத்தனையும் பெற்று அவர்கள் அம்மாதிரி போர்டு போடலாமென்றால், அவர்களுக்கு அதற்கான பணத்தைச் செலவழிப்பதற்கு அதிகாரம் கிடையாது. எஸ்பி.-க்கு 'நோ என்ட்ரி' போர்டு போடுவதற்கு வேண்டிய பணம் செலவழிப்பதற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால், திடீரென்று ஒரு இடத்தில் போர்டு போடவேண்டுமென்றால் மிகவும் காலதாமதம் ஆகிறது. இதைத் துரிதப்படுத்தவேண்டும். எஸ்.பி. அவர்களுக்கு ஒரு தொகை செலவழிப்பதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு மேலே இன்னொன்று. ஒரு இடத்தில் இம்மாதிரி 'நோ என்ட்ரி போர்டு' போடப்பட்டிருந்தது. அதில் கண்ணீர் வடிகிற மாதிரி சாயம் வழிந்து கொண்டிருந்தது. நான் அதைப் பற்றிக் கேட்டதற்கு ஃபாரின் சாயம் போடவேண்டும் அது இல்லாமல் இருப்பதினால் போர்டு அந்த நிலையில் இருக்கிறது' என்று சொல்லப்பட்டது. அம்மாதிரி வேண்டிய பாதுகாப்பு செய்வதற்காக அவர்களுக்கு வேண்டிய 'பாரின்

எக்ஸ்சேஞ்சு' போதுமான அளவுக்குக் கொடுத்து, போர்டின் தரம் உயர்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் நம்முடைய அமைச்சரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏதோ கொடியைப் பிடுங்கச் சொல்லி போலீஸ் இலாகாவினர் மிரட்டினார்கள். அப்பாவித் தலைவர் ஓடோடிச் சென்று திராவிட முன்னேற்றக் கழகக் கொடியைத் தலைவரிடம் ஒப்படைத்தார் என்று பரிதாப சுரமாகச் சொன்னார். அவர்களுடைய பரிதாபத்திற்கு நானும் இரங்குகிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கொடி காத்த குமரன் வரலாறு எல்லோருக்கும் தெரியும். கொடியின் தத்துவம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். போலீஸ் இலாகா மிரட்டியதற்காக கொடியைப் பிடுங்கி தலைவரிடம் கொடுக்க ஓடோடிச் சென்றார் என்றால் கொடியின் மீது என்ன பக்தி பற்று இருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மதுவிலக்குச் சட்டத்தினால் ஏழைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மிகவும் வருத்தத்தோடு சொன்னார்கள். மதுவிலக்குச் சட்டத்தினால் தான் கிராமங்களில் ஏழை மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு மனைவி மக்களோடு அடிதடி இல்லாமல் சந்தோஷமாக வாழ்கிறார்கள். ஆகவே, மதுவிலக்குச் சட்டம் இன்னும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்; அது இன்னும் நல்ல முறையில் இயங்கும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக போலீஸ் இலாகா பாதுகாப்பு வேலைகளைத் தீவிரப்படுத்துவதற்கு உதவியாக போலீஸ் துறையினர் கீழ்தளத்தில் இருப்பவர்களிலிருந்து மேல் தளத்தில் உள்ளவர்கள் வரை சில பேர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று சுற்றுப்பிரயாணம் செய்து தங்களுடைய அறிவை அபிவிருத்தி செய்துகொள்ளுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவர்களுடைய வெளி நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தினுடைய அனுபவம் அவர்களின் சேவைக்கு உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொதுமக்கள் சாட்சியம் சொல்லுவதிலிருந்து தப்பித்துக் கொண்டால் எப்படி போலீஸ் இலாகாவினர் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற முடியும் என்பதை 'ஸ்டடி' செய்வதற்கு வேண்டிய தீவிரமான நடவடிக்கை விடுக்க வேண்டும். அவர்களுக்குத் தகுந்த டிரையினிங் கொடுக்கவேண்டும். அவர்கள் இது சம்பந்தமான புத்தகங்களைப் படிப்பதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும். சரியான சாட்சியும் இல்லாததால் சில வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுவிடுகின்றன. அதுவும் சிறப்பாக மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளில் சாட்சியம் சொல்லுவதற்குப் பயப்படுகிறார்கள். விஜிலன்ஸ் பற்றியும் இதே குறை தான் சொல்லப்படுகிறது. போலீஸ் நல்ல முறையிலே தங்களுடைய சேவையைச் செய்யவேண்டும் என்றால் பொது மக்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். அதற்கு போலீஸ் இலாகாவினருக்கு நல்ல டிரையினிங் கொடுக்க வேண்டும். பொது





மக்கள் கவர்ச்சிகரமாகத் தங்களுடைய டிபார்ட்மெண்டு அதிகாரிகளுடன் ஒத்துழைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இதைப்பற்றி அடித்தளத்திலிருந்து மேல் தளம் வரை இருக்கும் அதிகாரிகள் பொது மக்களுக்கு விளக்குவதற்கான பயிற்சியை அவர்களுக்கு அளிக்கவேண்டும்.

போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதியைப் பொறுத்தவரையில் 80 சதவிகிதம் வரை செய்துகொடுக்கவேண்டும் என்று திட்டமிடப்பட்டிருந்தும், 66 சதவிகிதத்துக்குத் தான் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த டிபார்ட்மெண்டைப் பொறுத்த வரையில் இந்த வீட்டு வசதியை இன்னும் தீவிரப்படுத்தவேண்டும். என்னுடைய தொகுதியில் காட்டூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு இன்னும் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படவில்லை. பணம் இல்லை என்று சொல்லப்படுகிறது. இது தொழில் துறையினர் நிறைந்த பகுதி, நிச்சயம் அங்கே போலீஸ் ஸ்டேஷனுக்கு அவசியம் இருக்கிறது. அந்தப் போலீஸ் ஸ்டேஷன் டஞ்சன் மாதிரி இருக்கிறது. மிகக் குறுகிய இடத்தில் அடைத்து வைத்திருக்கிறார்கள், அப்படிப்பட்ட முக்கியமான இடங்களில் சீக்கிரம் போலீஸ் ஸ்டேஷன்களைக் கட்டுவதற்கு வேண்டிய பணத்தை அரசாங்கம் ஒதுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

***திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் கோரியிருக்கும் மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தின், போலீஸ் துறை மற்றைய மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது, என்பதை நாம் மட்டும் சொல்வதோடு வேறு இடத்திலிருந்து வரும் பிரமுகர்களும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த விதத்தில் சென்னை போலீஸ் சிறந்தது என்கிற அளவிற்கு அதற்குத் தனி மதிப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இவர்களுடைய துப்புத் துலக்குவது மிக தீவிரமாக இருக்கிறது. எந்த வழக்கானாலும் சரி, அவர்கள் நன்றாகக் கவனித்து அதிக நாள் பட்டாலும், நல்ல விதமாகத் துப்புத் துலக்குகிறார்கள். சாதாரணமாக குற்றம் செய்கிறவர்களுக்கு போலீஸ் நாய் இருக்கிறதே என்று பயம் இருக்கிறது. இதற்கு முன்பெல்லாம், போலீசார் பார்க்க மாட்டார்கள் என்கிற தைரியம் இருந்தது. ஆனால் இப்பொழுது, போலீசார் பார்க்காவிட்டாலும், போலீஸ் நாய் இருக்கிறது, கண்டுபிடித்து விடுமோ என்கிற பயம், அச்சம் இன்றைக்கு தவறுகள் செய்பவர்கள் மத்தியில் இருக்கிறது.

ஒரு கனம் அங்கத்தினர் எனக்கு முன்னாலே பேசும்போது சொன்னார்கள், குற்றங்களைச் சரியாகக் கணக்குக் கொடுக்க வில்லை; தேங்காய் மாங்காய் திருட்டுக்களைச் சேர்த்துக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றார்கள். அப்படியில்லை. அறிக்கையில். கண்டிருப்பது என்ன? 'சிறு குற்றங்கள் நீங்கலாக' என்றுதான் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, சிறு குற்றங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அப்படிப் பார்க்கும்போது, '1965-ல் நீதிமன்ற ஆட்சி எல்லைக்குட்பட்ட உள்ளபடியான வழக்குகள்

மொத்தம் 49,151' என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆகையினால், நம்முடைய போலீஸ் துறையினர், சென்ற ஆண்டு நிகழ்ச்சிகளில் கூட, தங்களுடைய உயிரையும் மதிக்காமல், தங்கள் திறமையின் காரணமாக சமாதானத்தை ஏற்படுத்தினார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். அதே நேரத்தில் அவர்கள் செய்யும் பணிக்குத் தக்க ஊதியம் கொடுக்கிறோமா என்றால்; இல்லை. ஒரு கான்ஸ்டபிளுக்கு ரூ 60 சம்பளம் கொடுக்கிறோம். அலவன்ஸ் ரூ. 33 கொடுக்கிறோம். ரூ. 60 சம்பளத்தில் ஒரு கான்ஸ்டபிள் தன்னுடைய குடும்பத்தை எப்படி நடத்த முடியும்? வேறு வழிகளில் எதையும் எதிர்பார்க்காமல் வாழ்க்கை நடத்த முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சாதாரணமாக ஒரு தோட்டத் தொழிலாளிக்கு சம்பளம் ரூ. 2.25 என்று இருக்கும் போது, போலீஸ் துறையில் போலீஸ்காரருக்கு ரூ. 2.10 ஒரு நாளைக்கு என்று கொடுப்பது போதுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்குக் கொடுப்பது மிக மிகக் குறைவு என்பதைப் பற்றி பொதுவான கருத்து இருக்கிறது. கனம் உள் துறை அமைச்சர் நிதி வசதி ஏற்பட்டால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். நிதி வசதி இல்லாவிட்டாலும் கூட, வேறு துறையில் குறைத்து, இவர்களுக்கு, போலீஸ்காரர்களுக்கு சலுகைகள் அளித்தால், நலமாக இருக்கும். ஆகவே, அவர்களுக்கு நிச்சயமாக சம்பள உயர்வு கொடுக்கப்படவேண்டும். தொழிலாளிகளுக்கு வேறு வகைகளில் போனஸ் போன்ற சலுகைகள் கொடுக்கப்படுகிறது. ஆனால்; இவர்களுக்கு நாம் கொடுப்பதெல்லாம் வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை; அல்லது விடுமுறை நாளில் வேலைக்கு அழைக்கப் பட்டால், ஒரு ரூபாய் கொடுக்கிறோம். அதே நேரத்தில் ஒரு தொழிலாளிக்கு, அதிகப்படியாக வேலை செய்தால் என்ன கிடைக்கிறது என்றால், இரண்டு மடங்கு கூலி கிடைக்க வேண்டும் என்று சட்டத்தைச் செய்து விட்டு, போலீஸ்காரர்களுக்கு மட்டும், அதைப் போலச் செய்யாமல், ஒரு ரூபாய் என்று சொல்லுவது நியாயமா என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே அவர்களுக்கு அதிகமாக ஊதியம் கொடுக்க பரிசீலிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு சப்-இன்ஸ்பெக்டராக இருக்கிறவர்களுக்கு ரூ. 140 அடிப்படைச் சம்பளம் என்று கொடுக்கிறோம். பி. ஏ. படித்து விட்டு, பட்டதாரிகளாக இருப்பவர்கள், ஓரளவுக்குத்தான் இந்த உத்தியோகத்திற்கு வருகிறார்கள். இந்த இலாகாவில், கான்ஸ்டபிள் சப்-இன்ஸ்பெக்டர் போன்றவற்றிற்கு அட்ராக்ஷன் கிடையாது. வேறு துறையில், மருத்துவத் துறை, என்ஜினியரிங் துறை போன்றவைகளில் இருப்பதுபோல, இந்தத் துறைக்கு அட்ராக்ஷன் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் ஊதியம் மிகக் குறைவாக இருப்பதுதான் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். உடனடியாக சம்பளத்தை உயர்த்துவதற்கு, இந்த பட்ஜெட்டில் ஒதுக்காவிட்டாலும், ஒரு உபமானியக் கோரிக்கையாவது கொண்டு வந்து, உடனடியாக அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





அடுத்தபடியாக, அவர்களுக்கு, உயிருக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? ஏதாவது சின்ன நிகழ்ச்சியில் கூட அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கிறோம் அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு, குற்றம் செய்யக் கூடியவர்களால் ஏதாவது ஏற்பட்டு விட்டால், அவர்களுடைய குடும்பத்திற்கு என்ன பாதுகாப்பு, அவர்களுடைய கதி என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். போலீஸ் இலகாவின் மூலமாக 1,000, 500 கொடுக்கலாம். ஆனால், அப்படிக் கொடுத்தால் சரியாகிவிடுமா? ஆகவே, போலீஸ் துறையில் இருப்பவர்களுக்கு ஒரு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வர வேண்டும். அது சர்க்காரால் கொண்டுவரப்படவேண்டும். விபத்திலே சிக்கியவருடைய குடும்பத்திற்கு பாதுகாப்பாக இருக்கும். ஒரு கான்ஸ்டபிள் என்றால் ரூ. 10,000-க்கும், சப்-இன்ஸ்பெக்டர் என்றால் ரூ. 25,000 அல்லது 30,000-க்கும் இன்ஷூரன்ஸ் ஏற்படுத்தப் படவேண்டும். அவர்களுடைய சம்பளத்திலிருந்து ஒரு பகுதியும், சர்க்காரே மற்றொரு பகுதியும் போட்டு பிரிமியம் செலுத்திக் கொண்டால், நலமாக இருக்கும். அவர்களுடைய குடும்பம் நிர்க்கதியாக தெருவில் நிற்காமல் இருக்கும். அப்படியெல்லாம் பாதுகாப்புக்கள் இல்லாமல் இருப்பதால்தான் இன்றைக்கு, படித்த மாணவர்கள் இந்தத் துறைக்கு வருவதில்லை என்பதைப் பார்க்கிறோம். படித்தவர்கள் தான் வருகிறார்கள். சம்பளமும் குறைவு, பாதுகாப்பும் இல்லை. பின்னால் ஏதாவது கொடுக்கிறார்கள் என்றாலும், கொடுப்பார்களா இல்லையா என்பது தெரியாத விஷயம். ஆகவே, முன் கூட்டியே அவர்களுக்கு இன்னின்ன பாதுகாப்பு இருக்கிறது என்று தெரிந்துவிட்டால் நலமாக இருக்கும். அவர்களும் தைரியமாக இருப்பார்கள். ஆகவே, இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

இப்பொழுது பொதுத் தேர்தல் வரவிருக்கிறது. அதற்கு முன்னதாகவே, அவர்கள் என்னென்ன செய்யவேண்டும் என்பது பற்றித் தெளிவாகத் தெரிவித்து, அவர்கள் தயாராக இருக்கும் வண்ணம் செய்ய வேண்டும். இந்தி எதிர்ப்பு . . . (மணியடிக்கப்பட்டது).

* திரு. எம். எஸ். மணி: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் துறையைப் பற்றிப் பேசும் போது, அவர்கள் இந்த நாட்டின் கண்காணிப்பாளர்கள் என்று பெருமையாக, இருதரப்பிலிருந்தும் பாராட்டினார்கள். அவர்களைப் பற்றிப் பேச வேண்டுமானால், அவர்களுக்குச் சங்கம் அமைக்கும் உரிமை இருந்தால், நான் அவர்களுக்கு அதிகப்படியாக ஓவர்டைம் அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்பேன். எட்டு மணி நேரத்திற்கும் மேல், போலீஸ் இலாகாவினர் 18 மணி நேரம், அல்லது 24 மணி நேரம் கூட வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

MR. SPEAKER: He is a policeman for all the twenty-four hours.

[11th March 1966

**திரு. எம். எஸ். மணி:** இரவு நேரமாக இருந்தாலும், வரவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு இரட்டிப்பு ஓவர்டைம் அலவன்ஸ் கொடுக்கவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமல்ல, இந்த போலீஸ்காரர்கள் மிகத் திறமையாகத் தங்களுடைய வேலைகளைக் கவனித்தாலும், அவர்களுடைய பணிகளில் சிலர் தலையிடுகிறார்கள். சில அதிகாரிகளைப் பொறுத்த வரையில், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தலையிடாமல் இருந்தால், எங்களுடைய வேலைகள் ஒழுங்காக நடக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இவர்கள் அந்த அதிகாரிகள் வேலை செய்ய முடியாதபடி இடைஞ்சல் செய்கிறார்கள்.

லைசென்ஸ் கொடுப்பதில், பொதுக்கூட்டம் நடத்த, சட்டமன்ற உறுப்பினர் போனால்தான் நடக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்பாகவே எழுதிப்போட்டாலும் கூட, கூட்டம் ஆரம்பிக்கும் வரை லைசென்ஸ் கொடுப்பதில்லை. எனவே, அப்படிப்பட்ட நிலையை மாற்ற உடனடியாக அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மது விலக்கு சம்பந்தமாக, அமைச்சர் தன் உரையில், அது வெற்றிகரமாக நடக்கிறது என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே அதை நான் மறுக்கிறேன். காரணம் என்ன? நான் மட்டுமல்ல, இந்திய மாஜி நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களே குறைபட்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள், காந்திய நிர்மாண வேலையிலிருந்து தவறிவிட்டார்கள் என்று குறைப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு பலர் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். போலீசாரால் பிடிக்க முடியவில்லை. ஏன்? அதில் வருமானம் இருக்கிறது. போலீசிற்கு சம்பளம் குறைவாக இருக்கிறது. விற்பனை செய்கிறவர்கள் தொல்லையாக இருக்கிறது என்று சும்மா இருந்தால்கூட, இந்தப் போலீசார், விற்பனை செய்யாவிட்டால், வழக்குத் தொடுப்பேன் என்று, சொல்லக்கூடிய நிலைமை திருச்சியில் இருக்கிறது. ஆகவே, சட்டத்தை அமல்
11-30 a.m. நடத்த முடியவில்லை. போலீஸ்காரர்களில் சில பேர் தங்களுடைய அதிகாரத்தைத் துர்விநியோகம் செய்கிறார்கள் என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. கள்ளச் சாராயக் கேஸ் பிடித்துக் கொடுத்தாலும், "இதிலே நாங்கள் தலையிடமாட்டோம்" என்று சொல்லும் நிலைமை இருக்கிறது. சமீபத்தில் திருச்சியில் நடந்த சம்பவம் ஒன்றை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ரத்னவேல் என்கிற தொழிலாளி, ஆர். எம். எஸ். பாக்கர், திருச்சி தெப்பகுளம் போஸ்ட் ஆபீசர் வேலை செய்துகொண்டிருந்தார். 15-1-1966 அன்று தபாலைப் பட்டுவாடா செய்துவிட்டு திருச்சி பாலக்கரை, சென்ட்ரல் டாக்கீஸ் வழியாகச் சைக்கிளில் வரும்போது, இரண்டு போலீஸ்காரர்கள் ரோடு நடுவிலே வந்திருக்கிறார்கள். போலீஸ்காரர் மீது உராய்ந்து கொண்டு வந்துவிட்டார் என்று கூறி அதற்காக அந்த இரண்டு போலீஸ்காரர்களும் அந்த இடத்திலேயே அவரை அடித்திருக்கிறார்கள். அடித்த இடத்திலேயே அந்த நபர் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். ரிக்ஷா வைத்துப் பாலக்கரை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் . . .



11th March 1966]

MR. SPEAKER: Is there a cas pending in the Court?

**திரு. எம். எஸ். மணி:** கோர்டில் இல்லை அங்குள்ள சப்-இன்ஸ்பெக்டர் நிலைமையைப் பார்த்து, "இவனை இங்கே வைக்கவேண்டாம், ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார். அந்த இரண்டு கான்ஸ்டபில்களும் அந்த நபரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் வராந்தாவில் போட்டுவிட்டு வந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அங்கிருந்த பொதுமக்கள் அந்த நபரை ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்தார்கள். அந்த நபர் 18-1-1966 அன்றிரவு இறந்துவிட்டார். அந்த நபர் இறந்துவிட்ட சம்பவத்திற்குப் பிறகு, ஆர்.எம்.எஸ். யூனியனைச் சேர்ந்தவர்கள் இது சம்பந்தமாக அதிகாரிகளுக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள். எனக்கும் தந்தி கொடுத்திருந்தார்கள். அதற்குப் பிறகு, அவருடைய மனைவியை, 31-1-1966 அன்று ஸ்டேஷனுக்கு டி.எஸ்.பி. கூட்டிவரச் சொல்லுகிறார் என்று கூட்டிவந்து "இதை உன்னால் நிரூபிக்க முடியுமா? அப்படி நிரூபிக்காவிட்டால் உன் மீதே வழக்குப் போடுவோம்" என்று பயமுறுத்தித் திருப்பியனுப்பி விட்டார்கள். அந்த அம்மாள்—இறந்தவரின் மனைவி—எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை இங்கே படித்துவிட்டு, அதை உங்கள் மூலமாக நான் தனம் அமைச்சர் அவர்களுக்கு கொடுத்து, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கணவனை இழந்த அந்த அம்மாள் எதிழுய கடிதம் இது. அதில் எழுதியிருப்பதாவது—

"31-1-1966 அன்று என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு டி.எஸ்.பி. அவர்கள் அழைத்துவரச் சொன்னார் என்று சொல்லி என்னை அழைத்துப் போனார்கள். அங்கு என்னைப் பயமுறுத்தி, நிரூபிக்க முடியுமா" என்று . . .

MR. SPEAKER: The Hon. Member need not read in full the contents of the letter.

**திரு. எம். எஸ். மணி:** முழுவதும் படிக்கவில்லை. பகுதியை மட்டும் படிக்கிறேன். "என்னைப் பயமுறுத்தி, "சந்தேகம் இல்லாமல் நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டு, என்னைத் தொந்தரவு செய்தார்கள். எனக்குப் பயமாக இருக்கிறது. ஆகவே இதிலே சி.ஐ.டி. ப்ராஞ்ச்சிலே விசாரிக்கச் சொல்லி பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று . . ."

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிற கேசைப்பற்றி, நேற்றைய தினம் நான் மதுரையிலிருந்து இங்கு வரும் வழியில், எஸ்.பி. அவர்களைத் திருச்சி ஸ்டேஷனிலே கூப்பிட்டு விசாரித்தேன். அவர் விசாரணை செய்து கொண்டிருக்கிறார். யார் குற்றம் செய்திருந்தாலும் விடப் போவதில்லை. அவர் விசாரணை செய்து கொண்டிருக்கிறார் என்று கனம் அங்கத்தினருக்குத் தங்கள் மூலமாக நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. எம். எஸ். மணி:** விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருந்தால் மிக்க நன்றியுடையவனாக இருப்பேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** எப்படி இறந்தார் என்பதை விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். போலீஸ்காரர் அடித்தாரா? வேறு காரணமாகச் செத்தாரா? என்பதிலே விசாரணை நடக்கிறது.

**திரு. எம். எஸ். மணி :** நல்ல முறையில் விசாரணை நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கடிதத்தைத் தங்கள் மூலமாக நான் கனம் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். (ஒரு கடிதம் கனம் உள்துறை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது) சில நேரத்தில் பாதிக்கப்படுகிறவர்களுக்குச் சரியான பாதுகாப்பு இல்லை என்பதற்காகத்தான் இந்த நேரத்திலே நான் இதைக் குறிப்பிட விரும்புவது. எனவே, இப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நல்ல பாதுகாப்பு அளிக்கவேண்டும். இப்படிப்பட்ட வழக்குகளில் மேல் அதிகாரிகள் நல்ல முறையில் விசாரிப்பதற்கு உடந்தையாக அரசாங்கம் இருக்கவேண்டும். ஏனென்றால் சில பெரியவர்கள் தலையிடுகிற காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கும் போலீஸ் மானியத்தின் மீது எதிர்க்கட்சி கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் இலாக்கா சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டக் கூடிய ஒரு இலாக்கா. மிகவும் புனிதமான பணியிலே ஈடுபட வேண்டிய இலாக்காவும் கூட, இந்த இலாக்காவிலே ஒரு பெரிய தர்மசங்கடமான நிலை ஏற்பட்டிருக்கிறது. எந்தக் கேசைப் போலீசிலே கொடுத்தாலும் கூட, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களா, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களா என்று பார்க்கின்ற நிலை பரவலாக ஏற்பட்டிருக்கிறது. இதனால், ஜனநாயகத்திலே நியாயத்தையும் சட்டத்தையும் நிலைநாட்ட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், ஆளும் கட்சியும், சம்பந்தப்பட்ட அமைச்சரும் தான். போலீஸ் அதிகாரிகளை, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்கிற குறையைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதன் காரணமாகத்தான் இந்த நிலை போலீஸ் இலாக்காவிலே ஏற்படுகிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** அமைச்சர்களோ அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களோ, " நாங்கள் சொல்வதைத்தான் கேட்கவேண்டும் " என்று ஒருகாலும் சொல்வதில்லை. " நியாயத்தைச் செய்யுங்கள் " என்று சொல்வோமேயொழிய, நாங்கள் சொல்வதைத்தான் கேட்கவேண்டும் என்று நாங்கள் சொல்லமாட்டோம் என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** ஆனால், அம்மாதிரி நிலை நடைமுறையில் இல்லை. எங்கு பார்த்தாலும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்கிற குற்றத்தை எடுத்துக்கொண்





டால் தான் நமக்கு நல்ல நிலை இருக்க முடியும், இல்லையென்றால் நமக்குக் கஷ்டம் ஏற்படும் என்ற முறையிலே தான் அதிகாரிகள் நடந்துகொள்ளுகிறார்கள். அது ரொம்ப வருந்தத்தக்கதாக இருக்கிறது. அந்த நிலை இந்த நாட்டிலே இருந்தால் இந்த நாடு ஜனநாயகத்திலே நல்ல முறையில் இயங்க முடியாது, அதைத் தவிர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரு கம்ப்ளெயின்டைக் கொடுத்தால் உடனடியாகப் போலீஸ் அதிகாரிகள் பார்க்க முடியாத நிலை இருக்கிறது. எங்கு பார்த்தாலும் நல்ல ரோடுகள் இல்லை, உடனே செல்வதற்கு. அவர்களுக்குக் கார் வேண்டியிருக்கிறது. கம்ப்ளெயின்ட் கொடுப்பவர்கள் கார் கொண்டு போய்க் கொடுக்க லாயக்கில்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட கேஸ்களில் அவர்கள் உடனடியாகப் போய்ப் பார்க்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு ஜீப் அவசியமாகக் கொடுக்கவேண்டும். அந்த ஜீப் எத்தனை நாள், எந்த எந்த ஸ்டேஷனுக்கு அலாட் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை இருக்கவேண்டும். அம்மாதிரி நிலை இருந்தால், கிராமங்களுக்குப் போய்ப் பார்த்து நல்ல முறையில் செய்ய முடியும்.

மது விலக்கைப் பொறுத்த வரைக்கும் இந்த மன்றத்தில் பலர் பேசினார்கள். மதுவிலக்கு இந்த நாட்டில் 'ஃபெயில்' ஆய்விட்டது என்று தான் சொல்ல முடியும். எங்கு பார்த்தாலும் மது கிடைக்கும் நிலை இருக்கிறது. பதனீர் இறக்குவதைப்பற்றி சொன்னார்கள். பதனீர் இறக்கும் இடங்களில் பெரும் பகுதி கள் இறக்குகிறார்கள். கள் இறக்குகிறவர்களை ஏன் குறிப்பாகச் சொல்லிப் பிடித்துக் கொடுக்கவில்லை? என்று அமைச்சர் கேட்கிறார்கள். ஸ்டேஷனில் சொன்னால், சொல்வதற்கு முன்னால் கள் இறக்கும் இடத்திற்குத் தகவல் போய் விடுகிறது. அவர்களுக்கு வருமானம் இருக்கிறது. சக அங்கத்தினர் ஒருவர் பேசும்போது, " அதிலே ஒரு வாடிக்கை இருக்கிறது " என்று சொன்னார்கள். அது உண்மை தான். வாடிக்கை இருக்கிறது. கள் இறக்கும் இடங்களிலிருந்து வாடிக்கையாக ஒரு தொகை ஸ்டேஷனுக்குக் கொடுக்கிறார்கள். அந்த மாமூலை வாங்கிக் கொண்டு அவர்கள் சொல்வது இல்லை. கம்ப்ளெயின்ட் செய்தாலும் உடனே தகவல் போய்விடுகிறது. இந்த மன்றத்திலே நான் முன்பு ஒரு முறைகூட இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். இப்போதும் இதைச் சும்மா விட்டு விடாமல், இதை அமைச்சர் அவர்கள் நன்றாகப் பரிசீலனை செய்து இதற்குத் தக்க பரிகாரம் காணவேண்டும். சாராயம் காய்ச்சுகிறார்கள். போலீஸ் நாய் ரொம்பப் பிரயோஜனமாக இருக்கிறது. ஏன் கள்ளச் சாராயம் காய்ச்சுகிற இடங்களிலே போலீஸ் நாய் மூலம் இந்தக் கேசைப் பிடிக்க ஏற்பாடு செய்யக் கூடாது? அதற்காகப் போலீஸ் நாய்களை அதிகப்படுத்தி, கள்ளச்சாராயக் கேஸ்களை அதிகமாகக் கண்டு பிடிக்கவேண்டும். அப்படிச் செய்தாலொழிய இந்த நாட்டில் மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியாது. அதையும் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[11th March 1966

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

என் பிராந்தியத்தில் ஒரு சூதாட்டம் இருக்கிறது. எங்காவது திருவிழா, நாடகம் இருந்தால், அங்கே சூதாட்டம் நடைபெறுகிறது. வண்டிப் பந்தயம் என்றால் அங்கே சூதாட்டம். எங்கெங்கே கூட்டங்கள் இருக்கிறதோ, அங்கெல்லாம் சூதாட்டம் ஆடுகிறார்கள். அதற்கும் வாடிக்கை இருக்கிறது. சூதாட்டம் ஆடப்படும் இடத்தில் வாடிக்கையாக ஒரு தொகை ஸ்டேஷனுக்குக் கொடுக்கிறார்கள். போலீஸ்காரர் போயிருந்து கூட நடக்கிறது. இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. "மது விலக்கு ஒழிந்ததனால் நன்மை இருக்கிறது. எல்லாக் குடும்பங்களும் வாழ்கின்றன" என்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் சூதாட்டம் பரவலாக இருந்து, எல்லாக் குடும்பங்களும் கெட்டுக் கொண்டிருக்கின்றன. அதைத் தவிர்க்க வேண்டும். கள்ளுக்கடைகளை ஒழித்ததால் நல்லது இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களானால், நல்லது. இருந்தால் உண்மையிலேயே போற்றத்தக்கது தான்.

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. பின் தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மதுரை, இராமநாதபுரம் பகுதியில் வாழ்கிறவர்கள், நிலைமை முன்பு இருந்ததற்கும், இப்பொழுது இருப்பதற்கும் உள்ள மாற்றம் தெரியாமல் பேசுகிறார் என்று நினைக்கிறேன்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: மது ஒழிக்கப்பட்டிருந்தால் நான் போற்றுவேன். கள் குடிப்பது இல்லாமல் போய்விட்டால் அதை நான் போற்றுவேன். மது ஒழிய வேண்டும் என்ற கொள்கைக்கு நானும் கட்டுப்பட்டவன் தான். ஆனால், இரண்டணாவிற்குக் கள் சாப்பிட்டதற்குப் பதிலாக இரண்டு ரூபாய்க்குச் சாராயம் சாப்பிடுகிற நிலை பெருத்திருக்கிறதே, அது தான் வருந்தத்தக்கதாக இருக்கிறது. அதை ஒழிக்கவேண்டும் என்று தான் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சூதாட்டத்தை அறவே ஒழிக்கவேண்டும். இதைப்பற்றி முன்பு ஒரு முறை இந்த மன்றத்தில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். அதற்கும் இதுவரையில் பரிகாரம் காணப்படவில்லை. அதற்கும் நல்ல முறையில் ஏற்பாடு செய்து சூதாட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

போலீஸ் இலாக்காவிலே இரண்டு பார்டி மீதும் ஜாமீன் கேஸ் போடுவதை இப்பொழுது பரவலாக ஆரம்பித்திருக்கிறார்கள். வாதி மீதும் பிரதிவாதி மீதும் ஜாமீன் கேஸ் போடப்படுகிறது. யார் குற்றம் செய்தாரோ, அவர் மீது கேஸ் போட வேண்டும். இரண்டு பேர் மீதும் போடுவது நாட்டுக்கு ரொம்ப அபாயகரமானது. அடிபட்டவன் மீதும், அடித்தவன் மீதும் ஜாமீன் கேஸ் என்றால் ஜனநாயகத்திலே இப்படி நடக்கலாமா? இந்த நிலை போக வேண்டும். யாராவது ஒரு பார்ட்டியை கண்டுபிடித்து, அந்தப் பார்ட்டி குற்றம் செய்தார் என்று அவர் மீது கேஸ் போட



11th March 1966]

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

வேண்டும். ஆகவே, இரண்டு பார்ட்டிகளும் மாட்டிக்கொண்டு திண்டாடுகிறார்கள். ஆகையால் இதைக் கவனித்து ஒரு பார்ட்டி மேல் கேஸ் போடவேண்டும்.

கனம் சபாநாயகர்: பல கட்சிகள் இருக்கிற கிராமங்களில்தான் இந்தச் சங்கடம். யார் குற்றவாளி என்று கண்டு பிடிக்க முடியாத போது இந்தத் தகராறு.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: அதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும். கண்டு பிடிக்கத்தானே அந்த இலாகா இருக்கிறது. இப்படி இரண்டு பார்ட்டிகளின் மீது ஜாமீன் வழக்குப் போடுவதை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆங்காங்கே பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஊர்களிலெல்லாம் அவசியம் போலீஸ் ஸ்டேஷன்கள் ஏற்படுத்த வேண்டும். அடுத்து போலீஸ்காரர்கள், ஹெட் கான்ஸ்டேபில்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று இந்த மன்றத்தில் சொன்னார்கள். உண்மையில் இன்றைய தினம் அவர்கள் நிலைமை மோசமாக இருக்கிறது. எல்லோருக்கும் சம்பள உயர்வு கொடுக்கின்ற நேரத்தில் அவர்களுடைய நிலையையும் பரிசீலனை செய்து சம்பள உயர்வு, படி உயர்வு அளிக்கவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் இலாகாவில் கீழ் நிலையில் இருப்பவர்கள் வீடு கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வீட்டு வாடகை எல்லாம் உயர்ந்துவிட்டது. குடியிருக்க இடமில்லாத கஷ்ட நிலை இருக்கிறது. ஆகவே, நூற்றுக்கு 80 சத விகிதம் அல்லது நூற்றுக்கு நூறு சதம் வீடுகள் கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச இந்தச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே; உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் கூற விரும்புகிறேன். இந்தக் காவல் துறையானது ஒவ்வொரு நாட்டுக்கும் இன்றியமையாதது. இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காகவும் இராணுவப் பட்டாளங்களும், நாட்டின் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக காவல்துறையினரும் அவசியமாக வேண்டியிருக்கிறது. ஆயினும் ஜனநாயக நாட்டில் காவல்துறையினரின் எண்ணிக்கை இவ்வளவு அதிகமாக இருப்பது அவசியம்தானா என்ற கேள்வியைப் போடுகிறார்கள். உண்மையில் மொழிக்கிளர்ச்சி நடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களும், கலவரங்களும்—அதை தேச விரோத சக்திகள் பயன்படுத்திக்கொள்ள முற்பட்ட நிலைமையையும் பார்க்கிறபோது இந்தக் காவல் துறையினரின் எண்ணிக்கை இவ்வளவு அவசியம் தான், இன்னும் கூட அதிகப்படுத்த வேண்டும் என்பதை எல்லோரும் உணர்வார்கள். நாட்டில் கிளர்ச்சி, போராட்டம் என்று ஏற்படுகிற

[11th March 1966

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

என் பிராந்தியத்தில் ஒரு சூதாட்டம் இருக்கிறது. எங்காவது திருவிழா, நாடகம் இருந்தால், அங்கே சூதாட்டம் நடைபெறுகிறது. வண்டிப் பந்தயம் என்ருல் அங்கே சூதாட்டம். எங்கெங்கே கூட்டங்கள் இருக்கிறதோ, அங்கெல்லாம் சூதாட்டம் ஆடுகிருர்கள். அதற்கும் வாடிக்கை இருக்கிறது. சூதாட்டம் ஆடப்படும் இடத்தில் வாடிக்கையாக ஒரு தொகை ஸ்டேஷனுக்குக் கொடுக்கிருர்கள். போலீஸ்காரர் போயிருந்து கூட நடக்கிறது. இதனுல் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. "மது விலக்கு ஒழிந்ததனுல் நன்மை இருக்கிறது. எல்லாக் குடும்பங்களும் வாழ்கின்றன" என்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சொல்லுகிருர்கள். ஆனுல் சூதாட்டம் பரவலாக இருந்து, எல்லாக் குடும்பங்களும் கெட்டுக் கொண்டிருக்கின்றன. அதைத் தவிர்க்க வேண்டும். கள்ளுக்கடைகளை ஒழித்ததால் நல்லது இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களானுல், நல்லது. இருந்தால் உண்மையிலேயே போற்றத்தக்கது தான்.

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. பின் தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மதுரை, இராமனுதபுரம் பகுதியில் வாழ்கிறவர்கள், நிலைமை முன்பு இருந்ததற்கும், இப்பொழுது இருப்பதற்கும் உள்ள மாற்றம் தெரியாமல் பேசுகிருர் என்று நினைக்கிறேன்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: மது ஒழிக்கப்பட்டிருந்தால் நான் போற்றுவேன். கள் குடிப்பது இல்லாமல் போய்விட்டால் அதை நான் போற்றுவேன். மது ஒழிய வேண்டும் என்ற கொள்கைக்கு நானும் கட்டுப்பட்டவன் தான். ஆனுல், இரண்டணுவிற்குக் கள் சாப்பிட்டதற்குப் பதிலாக இரண்டு ரூபாய்க்குச் சாராயம் சாப்பிடுகிற நிலை பெருத்திருக்கிறதே, அது தான் வருந்தத்தக்கதாக இருக்கிறது. அதை ஒழிக்கவேண்டும் என்று தான் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சூதாட்டத்தை அறவே ஒழிக்கவேண்டும். இதைப்பற்றி முன்பு ஒரு முறை இந்த மன்றத்தில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். அதற்கும் இதுவரையில் பரிகாரம் காணப்படவில்லை. அதற்கும் நல்ல முறையில் ஏற்பாடு செய்து சூதாட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

போலீஸ் இலாக்காவிலே இரண்டு பார்டி மீதும் ஜாமீன் கேஸ் போடுவதை இப்பொழுது பரவலாக ஆரம்பித்திருக்கிருர்கள். வாதி மீதும் பிரதிவாதி மீதும் ஜாமீன் கேஸ் போடப்படுகிறது. யார் குற்றம் செய்தாரோ, அவர் மீது கேஸ் போட வேண்டும். இரண்டு பேர் மீதும் போடுவது நாட்டுக்கு ரொம்ப அபாயகரமானது. அடிபட்டவன் மீதும், அடித்தவன் மீதும் ஜாமீன் கேஸ் என்ருல் ஜனநாயகத்திலே இப்படி நடக்கலாமா? இந்த நிலை போக வேண்டும். யாராவது ஒரு பார்ட்டியை கண்டுபிடித்து, அந்தப் பார்ட்டி குற்றம் செய்தார் என்று அவர் மீது கேஸ் போட



11th March 1966]

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

வேண்டும். ஆகவே, இரண்டு பார்ட்டிகளும் மாட்டிக்கொண்டு திண்டாடுகிருர்கள். ஆகையால் இதைக் கவனித்து ஒரு பார்ட்டி மேல் கேஸ் போடவேண்டும்.

கனம் சபாநாயகர்: பல கட்சிகள் இருக்கிற கிராமங்களில்தான் இந்தச் சங்கடம். யார் குற்றவாளி என்று கண்டு பிடிக்க முடியாத போது இந்தத் தகராறு.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: அதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும். கண்டு பிடிக்கத்தானே அந்த இலாகா இருக்கிறது. இப்படி இரண்டு பார்ட்டிகளின் மீது ஜாமீன் வழக்குப் போடுவதை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆங்காங்கே பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஊர்களிலெல்லாம் அவசியம் போலீஸ் ஸ்டேஷன்கள் ஏற்படுத்த வேண்டும். அடுத்து போலீஸ்காரர்கள், ஹெட் கான்ஸ்டேபில்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று இந்த மன்றத்தில் சொன்னுர்கள். உண்மையில் இன்றைய தினம் அவர்கள் நிலைமை மோசமாக இருக்கிறது. எல்லோருக்கும் சம்பள உயர்வு கொடுக்கின்ற நேரத்தில் அவர்களுடைய நிலையையும் பரிசீலனை செய்து சம்பள உயர்வு, படி உயர்வு அளிக்கவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் இலாகாவில் கீழ் நிலையில் இருப்பவர்கள் வீடு கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். வீட்டு வாடகை எல்லாம் உயர்ந்துவிட்டது. குடியிருக்க இடமில்லாத கஷ்ட நிலை இருக்கிறது. ஆகவே, நூற்றுக்கு 80 சத விகிதம் அல்லது நூற்றுக்கு நூறு சதம் வீடுகள் கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச இந்தச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே; உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் கூற விரும்புகிறேன். இந்தக் காவல் துறையானது ஒவ்வொரு நாட்டுக்கும் இன்றியமையாதது. இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காகவும் இராணுவப் பட்டாளங்களும், நாட்டின் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக காவல்துறையினரும் அவசியமாக வேண்டியிருக்கிறது. ஆயினும் ஜனநாயக நாட்டில் காவல்துறையினரின் எண்ணிக்கை இவ்வளவு அதிகமாக இருப்பது அவசியம்தானு என்ற கேள்வியைப் போடுகிருர்கள். உண்மையில் மொழிக்கிளர்ச்சி நடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களும், கலவரங்களும்—அதை தேச விரோத சக்திகள் பயன்படுத்திக்கொள்ள முற்பட்ட நிலைமையையும் பார்க்கிறபோது இந்தக் காவல் துறையினரின் எண்ணிக்கை இவ்வளவு அவசியம் தான், இன்னும் கூட அதிகப்படுத்த வேண்டும் என்பதை எல்லோரும் உணர்வார்கள். நாட்டில் கிளர்ச்சி, போராட்டம் என்று ஏற்படுகிற

போது அந்தச் சந்தர்ப்பத்தை குண்டர்களும், போக்கிரிகளும், சமூகத் துரோகிகளும் பயன்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் இல்லாது நாட்டில் அமைதி, ஒழுங்கு நிலைநாட்டப்படவேண்டுமென்றால், இந்தத் துறையை விஸ்தரித்தாலும் பரவாயில்லை என்று தோன்றுகிறது. நகரங்களிலே இம்மாதிரி கலவரம் ஏற்படும் போது போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிற அத்தனை சப்-இன்ஸ்பெக்டர்களும் வெளியில் சென்றுவிடுகிறார்கள். இந்த மாதிரி சூழ்நிலையில் தான் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, இந்தக் காவல் துறையின் பிரிவை விஸ்தரிக்கவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமது நாட்டிலே பாகிஸ்தானுக்கும், நமக்கும் போர் நடந்துகொண்டிருந்த போது—நாட்டுக்கு என்ன ஆபத்து வருமோ என்று நாம் அஞ்சிக்கொண்டிருந்த நேரத்தில் நாட்டைக் காவல் புரிவது, விளக்குகள் சரியாக அணைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பது ஆகிய வேலைகளை யெல்லாம் காவல் துறையினரும், ஹோம் கார்டுகளும் செம்மையான முறையில் கண்காணித்து வந்தார்கள். அதை நாம் மிகமிகப் பாராட்ட வேண்டும். அதை நாம் பாராட்டாவிட்டால் அவர்களுக்கு உற்சாகத்தை அளித்தவர்களாக மாட்டோம். மற்ற மாநில காவல் துறையினர்களைக் காட்டிலும் நம் மாநிலத்தில் தான் காவல் துறையினர் மிக நல்லமுறையில் நடந்து வருகிறார்கள். அதை நம் மாநிலத்தில் உள்ளவர்கள் மட்டும் அல்ல, வெளியில் உள்ளவர்களும் பாராட்டுகிறார்கள்.

எங்காவது ஒன்றிரண்டு குறை இருக்கலாம். அதை இல்லை என்று சொல்ல முடியாது. அம்மாதிரி குறைகளைக் கூடப் போக்கவேண்டும் என்பதற்காகத்தான் மரியாதை வாரம் என்றெல்லாம் நடத்துகிறோம். அவர்களும் தங்களுக்கு அளிக்கப்படுகிற பயிற்சியை ஒட்டி நடந்துகொள்வார்களானால், மிகவும் நலமாக இருக்கும் என்பதை இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கள், சாராயம் காய்ச்சுவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மதுவிலக்குச் சட்டத்தினால் இன்றையதினம் அடித்தளத்தில் ஏற்பட்டிருக்கிற பொருளாதார வளர்ச்சியை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த நாட்டில் இருந்த தொழிலாளர்கள், நெசவாளிகள் ஆகியோர்கள் எல்லாம் தம் வருமானத்தில் பாதி அல்லது முழுவதையும் குடிப்பதில் செலவிட்டுவிட்டு—வீட்டில் உள்ள மனைவி மக்களை பட்டினி போடுவதும், அடிப்பதுமாக இருந்தார்கள். அந்தமாதிரி சூழ்நிலை இன்றைக்கு இல்லை. இன்பமான குடும்பங்களையும், வீட்டிலே வறுமை இல்லாத நிலையும், ஒன்றிரண்டாவது நகைகள் போட்டுக்கொள்ளப்படுவதும்—நெசவாளர்களுடைய குடும்பங்களை வந்து பார்த்தால் தெரியும். கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களையும் நல்லமுறையில் கண்டுபிடித்து அதை அறவே தடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, அரிஷ்டம் என்ற பெயராலே பல இடங்களில் இன்றையதினம் பலவகையான டானிக்குகள் விற்கப்படுகின்றன. பத்து பதினான்கு வயதுடையவர்கள்கூட இதை வாங்கிச் சாப்பிட்டு மதுப் பழக்கத்திற்கு இரையாகிற நிலைமையை இது தோற்றுவித்து வருகிறது. ஆகவே, இவற்றையும் நீக்க தக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

அடுத்து, மதுரை தொகுதியில் லாரிகளை இன்ன இடத்தில் இன்ன நேரத்தில்தான் நிறுத்தி சரக்கு ஏற்றலாம் என்ற கட்டுப்பாடு இருந்தாலும், எல்லாக்காலங்களிலும் லாரிகளை நிறுத்தி சரக்கு ஏற்றுகின்ற நிலை இருக்கிறது. இதனால் போக்குவரத்து தடைபடுகிறது. ஆகவே, எந்த எந்த நேரத்தில் லாரிகளை எந்த இடத்தில் நிறுத்தி சரக்கு ஏற்றலாம் என்று இருக்கிறதோ, அந்த நிபந்தனைகளைக் கட்டாயமாக அமல்படுத்தவேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடைசியாக போலீஸ் இலாகாவில் உள்ளவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும், அலவன்சை உயர்த்த வேண்டும் வீட்டு வசதிகளை ஏற்படுத்தித்தரவேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

SRI K. S. G. HAJA SHERIFF: Mr. Speaker, Sir, I rise to speak in support of the Demand moved by the Hon. Minister for Home. Sir, it is a matter for satisfaction that the law and order situation in our State is by and large maintained very well. Although the number of crimes reported was slightly more, the number of crimes detected was large. That only shows how efficient and how eager the police officers are to detect crimes and take immediate steps to see that the crimes are brought down.

Sir, while speaking on the Police Demand. I could not but refer to the recommendations made by the Estimates Committee which went into this matter two years ago. After a very great deal of consideration, the Committee made about 85 recommendations. I am very sorry to say that though the Government have accepted and implemented about 30 or 35 recommendations, particularly, the recommendation relating to the pay structure of the constables, head constables and other officers has not been received well with the Government. Sir, I am one of those who feel that this category of police officers should be treated on a different footing because law and order is to be maintained and the risks that those belonging to the Police Department are facing, are very great. While other classes of people do their work for eight or ten hours, the policemen have to be always ready to do their duty at any time, in any emergency and at any place. So, the risk involved in their work is considerably heavy. Not only that. The maintenance of law and order relates to the peace and prosperity of the State. Unless law and order position is kept fairly well, there would not be peace; there would not be happiness; and prosperity cannot be built particularly at a time when we are working for economic emancipation. So, I feel that the pay

of at least the lower category of policemen should be revised. An ordinary peon or a cooly earns a couple of rupees but, on the other hand, a person who is devoted to his duty, gets less pay and this state of affairs will not attract the right type of people in the years to come. When we are giving free education up to the Eleventh Standard, the percentage of people receiving secondary education will become high in the next few years and they will come to this Department, if they are given higher emoluments. So, unless a good incentive and a reasonable pay are given, I am afraid, this Department will not attract the right type of persons. I, therefore, request the Government to kindly consider this aspect of the matter.

Sir, I would like to refer to another problem which is facing us, viz., the beggar problem. I am aware of the difficulties involved in this problem. Unless in every taluk or town there are beggar homes, these difficulties cannot be removed. We find that these beggars are becoming more and more dangerous to the society because they are suffering from very acute contagious diseases and their number is also increasing day by day. This aspect of the matter also should be looked into almost immediately.

Another problem which I would like to bring to the notice of the Government is the traffic problem. We find that thousands of cars and other vehicles are being put on the road every month and the traffic problem is becoming more and more acute. Unless we solve this problem in a very effective manner immediately, I am afraid that after some time it will become very unwieldy. In this connection, I suggest that in important towns and cities, fly-over roads should be constructed. There is also the problem of underground passage, etc., but if fly-over roads are constructed in important junctions where the traffic is very heavy, I am sure it will relieve to a very considerable extent the traffic congestion in cities. In this connection, I want to know whether lorries should be allowed to ply in very small streets in the City. I have been noticing that even in very small streets which cannot accommodate more than one car or other vehicle, lorries are being allowed to ply both during day-time and night, with the result a lot of inconvenience is caused to the people residing there. These lorries ply throughout 24 hours in those small streets, loading and unloading goods. This aspect of the matter requires to be attended to immediately and steps should be taken to see that lorries are not allowed to ply in the small streets where residential areas are located. In this connection, I remember that sometime ago, we decided to construct godowns at the outskirts of cities so that the traffic could be diverted from the city to the outskirts. I do not know whether those godowns are now ready and if they are ready, I suggest that immediate steps should be taken to see that the traffic is diverted to the outskirts of the city where godowns have been constructed. Thank you, Sir.





திரு. நா. இராசாங்கம்: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் துறையானது, எப்போதுமே பண்பட்டதுறை நிர்வாகத் திறம் உள்ள துறை என்று யாராலும் சொல்லப்பட்ட ஒன்று. ஆனால், அந்தத் துறைக்கு நாம் ஒதுக்குகின்ற பணம், தொகை நிதி இவைகள் எல்லாம் சரியான முறையில் ஒதுக்கப்படுகிறதா, செலவழிக்கப்படுகின்ற பணத்திற்குத் தகுந்த பலன் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தச் சட்டசபையிலே அந்தக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெறுகிறது. நிர்வாகத்திலே கண்ட குறைகளை எடுத்துச்சொல்லும்பொழுது அமைச்சர்கள் அவைகளைத் தங்கள் குறைகளாக எடுத்துக்கொள்ளக்கூடாது. நிர்வாகம் வேறு, அமைச்சர்கள் வேறு. அவ்வாறு எடுத்துச்சொல்லப்படுகின்ற குறைகள் இருக்கிறதா என்பதையெல்லாம் அமைச்சர்கள் பார்த்து, அவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற துறைகளைக்காட்டிலும் இதற்கு முக்கியத்துவம் உண்டு. ஏன் என்றால் இது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துகின்ற ஒன்று. சட்டமும் ஒழுங்கும், காங்கிரஸ்காரர்களுக்கோ, திராவிட முன்னேற்றக் கழகத்தார்களுக்கோ அல்லது கம்யூனிஸ்டுகளுக்கோ, வேறு எதிர்க்கட்சிகளுக்கோ மட்டுமல்ல, மந்திரிகள், மந்திரிகள் என்ற எண்ணத்துடன் சட்டத்தை நிறைவேற்றக் கூடாது, சட்டத்தைக் கையாள்கிறவர் என்ற எண்ணத்துடன் அவர்கள் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். நீதித் துறை தனியாக இருக்கும். நீதித் துறை நிர்வாகத்தில் அரசாங்கம் தலையிடக்கூடாது. நீதியை நிலைநிறுத்துவதிலே முதல் கட்டமாக இருப்பது போலீஸ் துறைதான். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தவேண்டிய போலீஸ் துறையில் குறுக்கீடுகள் அதிகமாகின்றன என்பது தான் இங்கே பிரச்னைக்குரியதாக இருக்கிறது. குறுக்கீடுகள் அரசியல் காரணங்களுக்காக வருகின்றன. பாவம் கீழே இருக்கிற உத்தியோகஸ்தர்கள், அச்ச மனப்பான்மை உடையவர்களாக இருக்கிறார்கள். அந்த நிலை இந்த நாட்டுக்குத் தேவையில்லை. அதோடு மட்டுமல்ல அமைச்சர்களும், தலைமை அதிகாரிகளும் இதைக் கவனிக்கவேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். எனக்கே நடந்த ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கடந்த நகர சபைத் தேர்தல் காலத்தில் என்னுடைய தோட்டத்தில் ஒரு பிராந்தி பாட்டில் கிடந்தது. அதைக்கொண்டுபோய் நான் ஏதோ பாட்டில் கிடக்கிறது என்று வீட்டில் கொடுத்தேன். நான் காலையில் தினமும் எழுந்து செல்வேன், மறுநாள் காலையிலும் அதேமாதிரி ஒரு பாட்டில் கிடந்தது. இப்படி 2, 3, 4 நாட்கள் வேலியைச் சுற்றிக் கிடந்தன. எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. தேர்தல் காலமாக இருக்கிறது. பக்கத்தில் வேறு ஒரு கட்சி. கட்சியைச் சொன்னால் மறுப்பு வரும் என்ற காரணத்தால் அதைச் சொல்லவில்லை. அந்தக் கட்சிக்காரர்கள் என் மீது சந்தேகத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதற்காக அப்படிச் செய்து வந்தார்கள். நான் இதைப் பற்றி மறுநாள் நடந்த பொதுக்கூட்டத்தில் 'என் மீது குற்றம் சுமத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் இப்படிச் செய்து வருகிறார்கள்;

[திரு. நா. இராசாங்கம்] [11th March 1966

ஆகவே, இதிலே உடனே போலீசார் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்' என்று பேசினேன். எழுத்து மூலம்
12-00 noon கூடக் கொடுக்கவில்லை. மதுவிலக்குக்குக் காங்கிரஸ்காரர்கள் தான் பாடுபட்டார்கள் என்று கூறுகிறார்கள். அதைவிட அதிகமாக நாங்கள் பாடுபட்டிருக்கிறோம். மதுவிலக்கை நிலைநாட்டுவதற்காக அடிபட்டிருக்கிறோம். அப்படி இருக்க, என் மீது குற்றம் சுமத்த வேண்டுமென்று வேறு கட்சிக்காரர்கள் அந்த மாதிரிச் செய்திருக்கிறார்கள். இலாகாவின் காரியங்கள் எல்லாம் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றுதான் அமைச்சர்கள் கூறுகிறார்கள். ஆனால், நடைமுறையில் அப்படி இருக்கிறதா என்று பார்ப்பதற்காகத்தான் இந்த விவாதம். போலீஸ்காரர்கள் மாமூலை எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. மாமூல் என்ற பெயரை வேண்டுமானால் விட்டு விடலாமே தவிர, அவர்கள் அதை எதிர்பார்க்கிறார்கள். அதற்குக் காரணம் வறுமைதான். அந்த வறுமை இருப்பதால் தான் அதை எதிர்பார்க்கிறார்கள். அவர்களைப் போற்றவேண்டியது அரசாங்கத்தின் கடமை. நாட்டின் ஒழுங்கையும், அமைதியையும் பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கின்ற அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். வீட்டு வசதி போன்ற மற்ற வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும்.

தீயணைக்கும் படை நகரசபைக்குப் பக்கத்தில் உள்ள மூன்று நான்கு தாலுகாக்களில் மட்டுந்தான் இருக்கிறது. கிராமங்களில் இல்லை. நகரத்தில் ஓட்டு வீடுகள், மெத்தை வீடுகளாக இருக்கும் காரணத்தால் அங்கு தீ விபத்து அதிகமாக ஏற்பட வழியில்லை. ஆனால் கிராமத்தில் ஓலைக் குடிசைகளாக இருப்பதால் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. தீயணைக்கும் படைக்குத் தெரிவித்து அவர்கள் வந்து சேருவதற்குள் இங்கு எல்லாம் எரிந்து தீய்ந்து விடுகிறது. அதற்கு இப்போது கிராமத் தொண்டர் படை என்று அமைத்து அவர்களுக்கு இதிலே சிறிது பயிற்சி கொடுக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தப் பயிற்சியை கொடுப்பதற்கான பயிற்சித் திட்டங்களை உருவாக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : கனம் தலைவர் அவர்களே, போலீஸ் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். பாரதத்திலே தமிழ்நாட்டினுடைய போலீஸ் இலாகா பாராட்டக்கூடிய அளவிலே மிகச் செம்மையாக நடந்து வருகிறது. போலீஸ் இலாகா இந்த அளவுக்குச் செம்மையாக நடந்து வருவதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. போலீஸ் இலாகாவானது சமுதாயத்திலே அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பாடுபடுகிற இலாகா. அந்த அமைதி நிலவினால்தான் சமுதாய முன்னேற்றத் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்ற முடியும் என்பதை அறிந்தே, அமைதியே உருவான கனம் கக்கன் அவர்களுக்கு இந்தத் துறையை நமது முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருப்பது மிக மிகப் பொருத்தமானது. அந்தத் துறையிலே இருக்



11th March 1966] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

கின்ற அதிகாரிகளும் நல்ல முறையிலே, பாராட்டக்கூடிய வகையிலே செயலாற்றி வருகிறார்கள். எங்கு அநீதி தாண்டவமாடுகிறதோ, அதர்மம் நடக்கிறதோ, சட்டம்; ஒழுங்கு மீறப்படுகிறதோ, அங்கெல்லாம் சென்று அமைதி ஒழுங்கை நிலைநாட்டுவதிலே போலீஸ் துறையினர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். கோடி கோடியாகக் கோலோச்சுகிறவர்கள் செலவழித்தாலும் கூட, சமுதாயத்தில் அமைதி இல்லையென்றால் திட்டங்கள் வெற்றி பெற முடியாது. 'தடியெடுத்தவர்கள் தண்டல்காரர்கள்' என்று போலீசாரைப் பற்றி கருதும் நிலைமை ஒரு காலத்தில் இருந்தது. இப்போது பேச்சுரிமை, எழுத்துரிமை, கொடுத்திருக்கும் நிலையில் சட்டத்திற்கு உட்பட்டு காரியங்கள் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பெரும் பொறுப்பு போலீஸ் இலாகாவுக்கு இருக்கிறது.

முக்கியமாக, மதுவிலக்கைப் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. மதுவிலக்கைச் செயல்படுத்துவது மிகவும் கஷ்டமான காரியம். மதுவிலக்கை அமல்படுத்துவதில் எவ்வளவோ பேர் உயிர் நீத்த நிலைமைகளைக் கூடப் பார்க்கிறோம். எங்கள் மாவட்டத்தில் மதுவிலக்குக் குற்றத்தைச் செய்கிறவர்களைப் பிடிப்பதற்காகச் செல்லும்போது எவ்வளவோ பேர் உயிரையே இழந்திருக்கிறார்கள். அத்தகைய தியாகச் செம்மல்களாகப் போலீஸ் இலாகாவிலே பணி புரிகிறவர்கள் இருக்கிறார்கள். அதற்குப் பல திருஷ்டாந்தங்களைக் கூற முடியும். சென்ற ஆண்டு கிளர்ச்சிகள் மொழியின் பெயராலும், அகவிலையின் பெயராலும் நடைபெற்றன. அப்போது புயலுக்கும் மழைக்கும் நடுவே உயிரையே தியாகம் செய்த செம்மல்கள் பலர்.

அடுத்து முக்கியமானது, சென்னை நகரில் அமைக்கப்பட்டிருக்கும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு முறை. சிவப்பு விளக்கு எரிந்தவுடன் நிற்கவேண்டும்; மஞ்சள் விளக்கு எரிந்தவுடன் வண்டிகள் எல்லாம் அசைய ஆரம்பிக்கின்றன. பச்சை விளக்கு எரிந்தவுடன், ஏதோ போட்டியில் ஓடுவது போல் ஒன்றன்பின் ஒன்றாக வேகமாகச் செல்வது பார்ப்பதற்கு மிக மிக அற்புதமாக இருக்கிறது. அந்தப் போக்குவரத்து முறையை மிக அற்புதமாக அமைத்திருக்கிறார்கள். மக்கள் போக்குவரத்திலே இயந்திரமயமாகவே ஆகிவிடுகிறார்கள். சென்னை போன்ற நெருக்கடியிருந்த நகரத்தில் இத்தகைய போக்குவரத்து முறை மிக மிக அவசியமாகும்.

போலீஸ் இலாகாவைப் பொறுத்தவரை சமூக வேலைகள் நன்றாக நடந்து வருகின்றன. போலீசார் வீட்டு மாதர்களுக்காக சிறு சிறு தொழில்களைச் செய்து தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வழி செய்திருக்கிறார்கள். ஆவடியில் சென்று பார்த்தால் 'கிளாஸ் டியூப்' செய்கிற வேலையைக் கூடப் பெண்கள் செய்வதைப் பார்க்க முடியும். போலீஸ் இலாகாவிலுள்ளவர்களுக்கு உடை தைக்கும் பொறுப்புக்கூட அவர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்து பதினைந்து தையல் மெஷின்களைக் கொடுத்து அவற்றைத் தைப்பதற்கு வழி செய்து கொடுத்திருக்

கிறார்கள். அந்தந்த மாவட்டங்களிலே இந்த ஏற்பாடு இருக்கிறது. சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் வேலைகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். கைத்தொழில் சிறப்பாகச் செய்ய முடியாதவர்களுக்குப் பசுமாடுகளைக் கொடுத்து அதன் மூலம் வருவாயைப் பெருக்கிக் கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல ஏற்பாடு என்று கூற விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரை பெண்களுக்காகத் தனியாக ஹோம் கார்டு பிரிவு இல்லை. மதுரையில் இருக்கிறது, திருச்சியில் இருக்கிறது, சென்னையில் இருக்கிறது, நெல்லையில் மட்டும் இல்லை. நெல்லையில் அதிகமான பெண்கள் கல்லூரிகள் இருக்கின்றன. கல்வியிலே முன்னேற்றமடைந்த மாவட்டம்; பெண்கள் அதிலே சேரவேண்டுமென்று ஆவலுடன் இருக்கிறார்கள். அங்கும் அதற்கான ஒரு பிரிவை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எந்த நிலையிலும் அஞ்சாது பணி புரிந்து வருகிற போலீசாருக்குச் சம்பளம் கூட்டித் தரவேண்டுமென்று கூறுவது மிகப் பொருத்தமான ஒன்றேயாகும். உயிர் போகும்போது தண்ணீர் என்று கேட்டபோது அவர்கள் மீது பெட்ரோலை ஊற்றிக் கொளுத்தினார்கள். சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுகையில் அத்தகைய உயிர்த்தியாகத்தைச் செய்கிற போலீஸ் இலாகாவுக்குப் 10 கோடி என்ன, எவ்வளவு கோடி வேண்டுமானாலும் ஒதுக்கலாம். போலீசாருக்குச் சம்பள உயர்வு கொடுப்பது போலவே அவர்களுடைய குடும்பத்தார் மருத்துவக் கல்லூரியிலும், பொறி இயல் கல்லூரியிலும் சேர்ந்து படிப்பதற்கான தனிச் சலுகைகளையும் கொடுக்க முன் வரவேண்டும். முன்பு போலீஸ் ஊழியர் மகன் போலீஸ் இலாகாவிலேயே வேலை பார்ப்பான் என்ற நிலைமை இருந்தது. இனி அந்த நிலைமை இல்லாமல் அவர்கள் மருத்துவம், பொறி இயல், பாலிடெக்னிக் ஆகியவற்றில் எல்லாம் சேர்ந்து முன்னுக்கு வருவதற்கு தகுதியுள்ளவர்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டும்.

* **திரு. கி. இரா. சம்பந்தம்:** கனம் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது கொண்டு வரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் நிர்வாகமானது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வேலை செய்து கொண்டு வருகிறது. அதைப்பற்றி ஆளுங் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் சொன்னார்கள். கான்ஸ்டபிள்களுக்கு உணவுப் பிரச்சினையை சமாளிக்கவேண்டிய நிலைமையானாலும் சரி, எலக்ஷன் சமயத்திலும் சரி, எந்த நோத்திலும் வேலை செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விட்டு அவர்களுக்குக் கொடுத்து வரும் ஊதியம் மிகவும் குறைவான அளவு இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும். மேலும், அவர்களுக்கு ஒரு சைக்கிள் கொடுக்கவேண்டும். திடீரென்று ஒரு பிரச்சினையைக் கண்காணிக்கவேண்டுமென்றால் துரிதமாக அவர்கள் போய்க் கவனிப்பதற்கு ஒரு சைக்கிளை அரசாங்கத்திலிருந்தே கொடுக்கவேண்டும். சப்-இன்ஸ்பெக்டர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு





மோட்டார் சைக்கிள் கொடுக்க வேண்டும். இரண்டு மூன்று ரேஞ்சுக்கு ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிற காரணத்தால் சுற்றி அலைந்து அங்கிருக்கக்கூடிய குற்றங்களை உடனடியாகக் கண்டு பிடிப்பது என்றால் அதற்கு மோட்டார் சைக்கிள் இருந்தால்தான் முடியும். இன்ஸ்பெக்டராக வேலைபார்ப்பவர்களுக்கு கார் அலவன்ஸ் கொடுக்கலாம். இதுபோன்ற வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தால், அவர்களின் சம்பளத்தை உயர்த்துவது, வீட்டு வாடகைப் பிரச்னை போன்றவற்றையும் தீர்த்து விட்டால் அவர்களுக்கு கெட்ட பெயர் வாங்கும் நிலை ஏற்படாது. அவர்கள் பொதுஜன ஊழியர்கள் என்ற நிலைக்கு கொண்டு வந்து விடலாம்.

அடுத்தபடியாக, போலீஸ் கான்ஸ்டேபிள்களுக்கு அந்தக் காலத்தில் கொடுக்கப்பட்ட பிரயாணப்படிதான் இன்றும் கொடுக்கப்பட்டு வருகிறது. இன்று பஸ் கட்டணம், ரெயில்வே கட்டணம், சாப்பாட்டுக் கட்டணம் எல்லாம் உயர்ந்திருக்கிறது. அப்படி எல்லாம் உயர்ந்திருக்கிற நேரத்தில் அவர்கள் அன்று பிறந்த மேனியாகவே இருக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அவர்களின் பிரயாணப்படியை உயர்த்தவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏழைகளுக்குத்தான் அதிகக் குழந்தைகள் உண்டு என்று சொல்வதுண்டு. நிச்சயமாக ஏழைகளுக்குத்தான் குழந்தைகள் அதிகமாக இருக்கிறார்கள். என்.ஜி.ஓ-க்களைப் போலவே கான்ஸ்டபிள்களும் வேலை செய்து வருகிறார்கள். அவர்களின் குழந்தைகளுக்கு கல்லூரிப் படிப்பிற்கு உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டும். இப்போது பத்தாவது வரையில் கொடுத்து வருகிறோம். கல்லூரிப் படிப்பிற்கும் அவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கான்ஸ்டேபிள்ஸ் ட்யூட்டியில் இருக்கும்போது, எந்த மாதிரி வந்தாலும் அவர்கள் ரூட் பூராவும் பாரா இருக்க வேண்டிய நிலை வருகிறது. ராத்திரியாக இருக்கட்டும், பகலாக இருக்கட்டும், எந்த நேரமாக இருந்தாலும் சரி எந்த நேரத்தில் அவர்களை லாரியில் கொண்டு வந்து விட்டுப் போகிறார்களோ, அது முதல் அந்த முக்கியஸ்தர்கள் திரும்பிச் செல்கிற வரையில் அவர்கள் அங்கேயே இருக்கவேண்டியிருக்கிறது. ஆகவே அப்படி அவர்கள் வேலை செய்கிற இடத்திலே ஃபுட் பார்சல் கொடுக்கலாம். இலங்கையில் அந்தமாதிரித்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படிச் செய்தால்தான் அவர்கள் தங்கள் வேலையை நன்கு கவனிக்கமுடியும். அவர்கள் வரும் நேரத்தில் இவர்கள் சாப்பாட்டிற்கு சென்று விடுகிறார்கள். உடனே மேல் அதிகாரி இவர்கள் மேல் குற்றம் திணிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே அந்நிலையை மாற்றியமைக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ரெயில்வே ஊழியர்களுக்கு இருப்பதுபோல் இவர்களுக்கும் கூட்டுறவு முறையில் ஸ்டோர்கள் அமைத்து உணவுப் பொருள்கள், கண்ட்ரோல் பொருள்கள் இவை கிடைக்கும்படிச் செய்யவேண்டும். இவர்கள் வேலைக்குப் போய் விட்டால்

குழந்தைகளை வைத்துக்கொண்டு பார்ப்பதே பெண்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. அவர்களே குடும்பத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்க வேண்டிய ஒரு நிலை ஏற்படுவதால் ரெயில்வே ஊழியர்களுக்கு இருப்பதுபோன்று போலீஸ்காரர்களுக்கும் கூட்டுறவு ஸ்டோர்கள் இருக்கவேண்டும்.

மதுவிலக்கைப்பற்றிப் பேசும்போது, மதுவிலக்கை ஆரம்பித்த காலத்தில் அந்தக் கொள்கையைப்பற்றிச் சொல்கிற நேரத்தில் இங்கிலாந்திலுள்ள ஜி.டி.எச். கோல் என்பவர் காந்தி அடிகள் உப்பு வரிபற்றிச் சொன்ன கருத்தை ஆதரித்தாலும் மதுவிலக்கை அவர்கள் அன்றே கண்டித்தார்கள். அமெரிக்காவில் எல்லோரும் படித்தவர்கள் தான். அங்கு அவர்கள் மதுவிலக்கை ஆரம்பித்துப் பார்த்தார்கள், நடத்த முடியவில்லை. இங்கு அதை நாம் ஆரம்பித்து விட்டு சரியாக நடத்தமுடியாமல் அதுவும் போலீஸுக்கு விட்டு விட்டு இருக்கிறார்கள். உள்ள குற்றங்களையே கண்டு பிடிக்க முடியவில்லை, அப்படியிருக்க இது வீடுவிடாக குடிசைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

* திரு. நா. துரைப்பாண்டியன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சபையில் போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கிற ஊதியம் போதாது என்று எல்லோரும் சொல்கிறார்கள். இப்போதுள்ள விலைவாசி உயர்வு காரணமாக அவர்களுக்குச் சம்பளத்தை மட்டும் கூட்டினால் போதாது. அரசாங்கம் இடும் கட்டளைகளை நல்லமுறையில் நிறைவேற்றவும், நாட்டில் அமைதியையும், பாதுகாப்பையும் அவர்கள்தான் உருவாக்குகிறார்கள். ஆகவே அன்னார்களின் குடும்பங்களை ஆதரிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை. அந்த முறையில் நம் சர்க்கார் கொண்டு வந்திருக்கிற சட்டப்படி ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அளிக்கப்படும் சலுகைகளைப் போன்று போலீஸ் சமுதாயம் என்ற முறையில் போலீஸ் டிப்பார்ட்மெண்டில் எந்தெந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் அத்தனையும் செய்து கொடுக்கும்படி இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்கு பற்றிப் பேசும்போது எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அது தோற்றுவிட்டது என்று சொன்னார்கள். இந்த மதுவிலக்கைக் கொண்டுவந்ததன் நோக்கம் ஏழை விவசாயிகள், ஹரிஜன மக்கள் நகரசுத்தி தொழிலாளர்கள் போன்றவர்கள் மதுவால் பாதிக்கப்பட்டு அதன் காரணமாக அவர்களின் குடும்பங்கள் அல்லல்படுகின்றன என்பதற்காகத்தான் மகாத்மா காந்தி அடிகளும், காங்கிரசும் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கருதினார்கள். அதன் காரணமாக மதுவிலக்குத் திட்டம் கொண்டு வரப்பட்டது. மதுவிலக்குத் திட்டம் தோற்றுவிடவில்லை என்று நான் ஆணித்தரமாகச் சொல்லவிரும்புகிறேன்.



மதுவிலக்குத் திட்டம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், ஏழை விவசாயிகள், ஹரிஜன மக்கள், நகரசுத்தி தொழிலாளர்கள் இவர்கள் அன்று எந்த நிலையில் இருந்தார்கள், இன்று என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். அதிலிருந்தே தெரியும் இத்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டிருக்கிறது என்பது. சிலவிடங்களில் நிர்வாகத்தில் உள்ள சில கஷ்டங்கள் காரணமாக மேற்கொண்டு அதை இன்னும் நல்லமுறையில் அமல் நடத்த முடியாமல் இருக்கலாம். குறிப்பாக, திருச்செந்தூர் தாலுகாவில் குலசேகரப் பட்டணம் என்ற இடத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அது திசையன்விளை போலீஸ் ஸ்டேஷன் லிமிட்டோடு கலக்கிறது. குலசேகரப்பட்டணம் ஸ்டேஷனில் ஜூரிஸ்டிக்ஷன் 17 மைல் இருக்கிறது. 16 மைலுக்கு அப்பால் உள்ள ஒரு ஊரில் ஒருவன் கள்ளச் சாராயம் காய்ச்சினால் 16 மைலுக்கு அப்பாலுள்ள குலசேகப்பட்டணத்திற்குப் தகவல் கொடுக்க முடியாமல் போகிறது. அந்நிலையில் அந்த இடம் திசையன்விளை ஸ்டேஷன் ஜூரிஸ்டிக்ஷனில் இல்லாமல் இருந்தாலும் அங்கு போய் நடவடிக்கை எடுக்க திசையன்விளை ஸ்டேஷனுக்கு அதிகாரம் கொடுக்கும் விதத்தில் சட்டத்தைத் திருத்தவேண்டும். போலீஸ் ஸ்டேஷன்கள் முழுவதற்கும் ஃபோனும், ஜீப்பும் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்த அளவிற்குக் கொண்டு வரமுடியாவிட்டாலும், கடற்கரையோரமாக, மணற்பாங்கான இடங்களில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு உண்மையாகவே ஜீப் கொடுத்தால் கள்ளச் சாராயம் இல்லாமலேயே போய் விடும் என்பதை மறுக்கமுடியாது.

நிர்வாகத் துறையில் ஆளும் கட்சியினர் குறுக்கிடுகிறார்கள் என்று திரு. மணி அவர்கள் சொன்னார்கள். இப்படி அவர்களிடம் அதிகாரிகள் சொன்னார்கள் என்றால் அவர்களிடம் இவர்கள் எதற்காகப் போனார்கள்? இவ்விதமாக ஆளும் கட்சி அங்கத்தினர்களும், எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் அதில் தலையிடுகிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். நாங்கள் அதிகாரிகளிடம் போகும்போது, எங்கள் வட்டாரத்தில் மிக முக்கியமானவர்கள் சம்பந்தப்பட்ட கேஸ் ஒன்றுக்காகச் சென்றிருந்தபோது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் ஆளும் கட்சி அங்கத்தினர்களையாவது எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம், ஆனால் எதிர்க்கட்சி. அங்கத்தினர்கள் என்றால் அவர்கள் இதைப் பெரிதுபடுத்திவிடுவார்கள் என்று பயப்பட வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆக, எல்லாக் கட்சினருமே தலையிடுகிறார்கள் என்ற நிலைதான் ஏற்படுகிறது. அன் ஆடிட்டட் பண்ட்ஸ், துப்பறியும் நிபுணர்கள், கான்ஸ்டேபிள்ஸ், ஹெட் கான்ஸ்டபிள்ஸ், வேறு பல மேல் அதிகாரிகள் போன்றவர்களுக்குச் சரியான முறையில் போய் சேர்ந்தால் அவர்கள் கேஸ்களைத் துரிதமாகக் கண்டு பிடிக்க உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக வீடுகள்பற்றிச் சொன்னார்கள், போலீஸ்காரர்கள் எல்லோருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். பண வசதி குறைவாக இருந்தாலும், காலதாமதம் ஏற்பட்டாலும்

போலீஸில் உள்ள கெசெட்டட் ஆபீசர்கள், டெப்டி சூப்பரின்டென்டென்ஸ்க்கு அவர்கள் அத்தனை பேர்களுக்கும் வீடுகள் கட்டித் தரப்படவேண்டும். அவர்கள் ஒருவர் கூட வாடகை வீட்டில் இருக்கக்கூடாது. அவர்கள் சர்க்கார் வீடுகளில்தான் இருக்கவேண்டும். போலீஸ்காரர்களுக்குள்ள பிரயாணப்படிபற்றிச் சொன்னார்கள். நாம் புரட்சிகரமாக அரசாங்கத்தை நடத்துகிறோம். பல பல திட்டங்களைப் போடுகிறோம். ஆனால், இந்தப் போலீஸ்காரர்களுக்கு வெள்ளையன் காலத்தில் கொடுத்துவந்த படி தான் இன்றும் இருக்கிறது. அன்று சாப்பாடு விலை இரண்டு அணா. இன்று 1½ ரூபாயாக இருக்கிறது. ஆகவே, அதையும் உயர்த்தவேண்டும். ஆக, முன்பு சொன்னதுபோல் ஹரிஜனங்களுக்கு நாம் செய்து கொடுக்கக்கூடிய சலுகைகள் அத்தனையும் போலீஸ் ஜாதி என்று குறிப்பிட்டு அவர்கள் அத்தனை பேர்களுக்கும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தகுதி மிக்கத் தலைவர் அவர்களே, போலீஸாருடைய தயவு எங்களுக்கு வேண்டுமென்ற காரணத்தினால் நாங்கள் ஏதோ பேசுவதாக ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார். காவல் துறையினர் எல்லோருக்கும் காவல் புரிகிறவர்களே தவிர, அவர்கள் யாருக்கும் தனியாக காவல் செய்யவேண்டுமென்பது எங்கள் நோக்கம் அல்ல. காவல் துறையினரின் சேவை இந்த நாட்டிலுள்ள அத்தனை பேர்களுக்கும் தேவை. ஆகவே, அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய வசதிகள் குறித்து எந்த விதமான வித்தியாசமான கருத்தும் இருக்கமுடியாது. 1945-46-ல் என்று கருதுகிறேன். உலக உத்தமர் காந்தியடிகள் சென்னை கடற்கரையில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்கள், என்றைக்கு இந்த நாட்டில் போலீஸ்காரர்கள் இல்லை என்ற நிலை வருகிறதோ அன்று தான் இந்த நாடு சுபீட்சம் அடைந்திருக்கிறது என்று சொல்ல முடியும் என்று குறிப்பிட்டார்கள். அதைக் கேட்டதும், அங்கேயிருந்த போலீஸ்காரர்கள் தங்கள் தொப்பிகளைக் கழற்றிக்கொண்டு வெளியில் வந்து தெரியாமல் உட்கார்ந்து கொண்டதும் இப்போதும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. இப்படி இருக்க வேண்டும் என்று சொன்னவர்களின் வாரிசாக இருக்கிறோம் என்று சொல்லுகிறவர்களின் ஆட்சியில் இப்படிப்பட்ட நிலைமையிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் நாங்கள் சில குறைகளை எடுத்துக்காட்டுகிறோம். இந்த கருத்துக்களைச் சொல்லும்போது, யாருடைய தயவையும் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் இதைச் சொல்லவில்லை என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையில் காவல் துறையினர் யாராக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியினராக இருந்தாலும், எதிர்க்கட்சியினராக இருந்தாலும் சரி, யாருடைய தயவுக்காகவும் காவல் துறையினர் கட்டுப்பட்டவர்களாக இருக்கக்கூடாது என்பது தான் எங்களுடைய நோக்கம். காவல் துறையினர் கட்டுப்பாடாக இராவிட்டால் நாட்டில் ஜனநாயக ஆட்சி நடைபெறாது, வேறு ஆட்சிதான் நடைபெறும்.





இங்கே பேசுகின்றபொழுது, ஆளும்கட்சி உறுப்பினர் அவர்கள் ஏதோ நாங்கள் எங்களுடைய கட்சியின் கொடிகளைக் காத்துக் கொள்ள முடியாமல் கோழைத்தனம் காட்டுவது போலவும், அவர்கள் ஏதோ கொடியைக் காத்த குமரன் வழியில் வந்த பரம்பரையினர் போலவும் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய வீட்டிலேயே கட்டியிருந்த எங்கள் கழகக் கொடியை அவிழ்த்த நேரத்தில் கூட அதை நாங்கள் தாங்கிக்கொண்டு தான் இருந்தோம், காரணம், எங்களுடைய கடமையுணர்ச்சியும், கட்டுப்பாடும் தானே தவிர கோழைத்தனம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி எங்களுக்குக் கூறியிருக்கிறார்கள், "தம்பி, குழந்தைகளைப் போல் நடந்து கொள்ளாதீர்கள், பெருந்தன்மையோடு நடந்து கொள்ளுங்கள்" என்று. அதன் அடிப்படையில் தான் இப்போதும் நாங்கள் கட்டுப்பாட்டோடும், பெருந்தன்மையோடும் நிச்சயமாக நடந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

போலீஸ்காரர்களுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுப்பதற்குப் பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருந்தாலும், காவல் துறையினரைப்பற்றிச் சரியாக பரிசீலனை செய்வதற்காக, ஒரு கமிஷனை ஏற்படுத்தி, அதன் மூலமாக அவர்களுடைய தேவைகள் என்ன, அவர்கள் இன்னும் நல்ல முறையில் சேவை செய்வதற்கு இன்னும் என்ன தேவை என்று பரிசீலனை செய்து பார்த்து அவர்கள் ஒரு ரிப்போர்ட் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அந்த ரிப்போர்ட் இந்தச் சபைக்கு வைக்கப்படவில்லை என்றாலும், அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது, இருந்தும், போலீஸ்காரர்களுடைய சம்பளம் உயர்த்தப்படவில்லை என்ற நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. உண்மையிலேயே ஏதோ சுட்டார்கள், சுட்டார்கள் என்றும், சொல்லும் போது, ஏதோ பணியாரம் சுட்டார்கள் என்று நினைக்கிற அளவுக்கு—அன்றைய தினம் சுட்ட காலத்தில் அவர்களுக்கு இரண்டு ரூபாய் உயர்த்தப்பட்டது, ஆனால், இன்றைக்கு ஏதாவது சம்பளத்தில் உயர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏமாந்திருக்கிறார்கள் என்பதைச் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் இப்படிச் சொல்லிவிடுவதினால் போலீஸ்காரர்கள் ஏமாந்துவிட மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கனம் அமைச்சர் அவர்கள் இப்படிக் குறுக்கிட்டுப் பேசுவதினால் அவர்கள் ஏமாந்துவிடமாட்டார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லும்போது. அதில் எங்களுடைய பணமும் சேர்ந்திருக்கிறது என்பதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்படவேண்டும் என்றால், தங்கள் சொந்தப்பணத்

திலிருந்து யாரும் கொடுத்துவிடுவதில்லை. காவல் துறையினர், எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நிர்வாகத்தில் இருக்கின்ற கட்சிக்கு உட்பட்டவர்களாகத்தான் பணியாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே துப்பறியும் நாய்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, போலீஸ் நாய்கள் என்று சொல்லப்பட்டு வருகிறது. சென்ற கூட்டத்திலும் இதைப்பற்றி நான் சொன்னேன், போலீஸ் நாய்கள் என்று சொல்லாமல் 'டிட்டக்டிவ் டாக்ஸ்' என்ற பெயரில் துப்பறியும் நாய்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ்காரர்கள் புலிகளாக இருந்திருக்கிறார்கள் என்று சொல்வது போய் இன்றைய தினம் துப்பறியும் நாய்கள் என்று சொல்வதைக் கேட்கக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. இருப்பினும் போலீஸ் நாய்கள் என்று குறிப்பிடுவதைவிட துப்பறியும் நாய்கள் என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையில் துப்பறியும் திறமையைப்பற்றி நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். நம் காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட கள்ளநோட்டு வழக்குகள், வடநாட்டு மோசடி வழக்குகள், இவைகள் எல்லாம் வெகு திறமையாகக் கண்டு பிடிக்கப்பட்டு நல்ல பெயரைத் தேடியிருக்கிறார்கள். இதில் அதிகமான போலீஸ்காரர்களை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்வதைவிட குறைந்த போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டே அவர்களுக்கு இரட்டிப்புச் சம்பளம் கொடுத்தால் இன்னும் திறமையாகத் துப்பறியும் வேலைகளில் பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவர்களுடைய திறமையைப்பற்றி நாம் பாராட்டத் தவறுவதில்லை. நாம் மட்டும் அல்ல, நாம் ஏதோ அவர்களுடைய தயவுக்காக பாராட்டுகிறோம் என்றாலும் கூட, வெளிநாட்டுக்காரர்கள் நம் நாட்டு காவல் துறையினரைப்பற்றி பாராட்டியிருக்கிறார்கள். ஆவடியில் காங்கிரஸ் மகாநாடு நடந்தபோது நான் சென்றிந்தேன். அம்மகாநாடு முடிந்து சென்றபோது அங்கு வந்திருந்த வெளிநாட்டுக்காரர்கள், நமது காவல் துறையினர் எந்த அளவுக்குப் போக்குவரத்தை ஒழுங்கான முறையில் கட்டுப்படுத்தினர் என்பதைப்பற்றி பாராட்டினார்கள். இப்படி மற்ற மாநிலத்தினரும் பாராட்டக் கூடிய அளவில் இருக்கின்ற நமது காவல் துறையினருக்கு வெறும் பாராட்டுகள் மட்டும் போதாது. அவர்கள் வயிறார உண்ண வேண்டும் என்பதையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அதைப்போலவே குற்ற இலாக்காவினர் மிகவும் திறமையாகப் பணியாற்றி வருகிறார்கள். ஆனால் இவர்களுடைய வேலையில் மற்றவர்கள் தலையிடக்கூடாது என்பது தான் எங்கள் நோக்கம். அவர்கள் திறமையாகப் பணியாற்றக்கூடாது என்பதற்காக நாங்கள் இவற்றை யெல்லாம் சொல்லவில்லை. இப்படிப்பட்ட நிர்வாகத்தில் பல தவறுகளும் நடைபெறுகின்றன என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சில குறைகளை நாங்கள் எடுத்துக் கூறுகின்றோம். உதாரணமாக, ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னை அழைத்து இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக எல்லாக் கட்சி அங்கத்தினர்களையும்





கேட்பது போல், என்னையும் அழைத்துப் பேசினார்கள். அவ்விதம் பேசிய நேரத்தில் எனக்கு ஒரு காப்பி வாங்கிக் கொடுத்தார் என்ற காரணத்திற்காக திருச்சியிலிருந்து கள்ளக்குறிச்சிக்கு மாற்றப்பட்டார். அதிலிருந்து 15, 20 நாட்களுக்குள் மன்னார்குடிக்கு மாற்றப்பட்டார். இப்போது வேலூருக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். இப்படி மாற்றப்பட்டதற்கு அவர் ஏதாவது குற்றம் செய்திருந்தால் அதைத் தவறு என்று நான் சொல்லமாட்டேன், அல்லது போலீஸ் அதிகாரிகள் ஒரே இடத்தில்தான் பணியாற்ற வேணடும் என்றும் சொல்லவில்லை. அவர் மாற்றப்பட்தற்குக் காரணம், தர்மலிங்கத்திற்குக் காப்பி வாங்கிகொடுத்தார் என்பது தான், என்பதைக் கேள்விப்படுகின்ற நேரத்தில் இந்த இலாகாவை நிர்வகிக்கின்றவர்கள் எந்த அளவுக்கு இருக்கின்றார்கள் என்பதைத் தான் நாம் பார்க்கின்ற நேரத்தில் மிகவும் வேதனையாக இருக்கிறது. இந்தக் காவல்துறை இன்ஸ்பெக்டரை எங்கள் பக்கத்தில் ஹானஸ்ட் குப்புசாமி என்று சொல்லி அழைப்பார்கள். இப்படிப் பட்டவருக்கே . . .

**கனம் திரு. பூ. கக்கன் :** இவ்வளவு ஹானஸ்ட்டாக இருப்பவர் எதற்காகக் காப்பி வாங்கிக் கொடுக்கிறார் ?

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** எனக்கு மட்டும் காப்பி வாங்கிக் கொடுக்கவில்லை, காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினருக்கு வாங்கிக் கொடுத்தார், அங்கிருந்த காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கும் வாங்கிக் கொடுத்தார். நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர், அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கும்போது, எனக்கு மட்டும் காப்பி வாங்கிக் கொடுப்பதில் என்ன தவறு வந்துவிட்டது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** யாராக இருந்தாலும், போலீஸ் ஸ்டேஷனில் காப்பி வாங்கிக்கொடுப்பது நல்லதல்ல.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** உண்மையிலேயே இது அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்த்த பதில் அல்ல.

**கனம் சபாநாயகர் :** அங்கத்தினர் எதிர்பார்த்தபடியெல்லாம் அமைச்சர்களுடைய பதில் இருக்குமா, என்ன ?

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அதைப்போலவே என்னுடைய பகுதியில் இப்போது, சமீபத்தில் ஒரு ஹெட் கான்ஸ்டபிள் சஸ்பெண்டு செய்யப்படிருக்கிறார். இதற்குக் காரணம், மண்டலக் காங்கிரஸ்காரருடைய வீட்டில் செக்ஷன் 420-ன்படி சோதனை போட்டார் என்பதற்காக சஸ்பென்ட் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விசாரித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்து, போலீஸ்காரர்கள் கைது செய்வதைப்பற்றி கைவிலங்கு போடுவதைப்பற்றி ஒரு வரைமுறை இருக்கிறது என்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். துறையூரில் ஒரு மூட்டை நெல்லைக் கொண்டு சென்றான் என்பதற்காக ஒரு விவசாயியை கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். இது அவசியமா என்பதைப் பார்க்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது). இப்படிப்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [11th March 1966

பட்ட நிலை நீடிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இதே போல சாராய வழக்கு கண்டுபிடிக்கச் சென்ற போலீஸ்காரர்கள் தாக்கப்பட்டார்கள் என்ற காரணம் காட்டி. அங்கிருக்கும் அரிஜன சேரிக்குள் நுழைந்து அங்கே இருக்கிறவர்களை அழைத்து மொட்டை அடித்து தினம் தினம் ஊர்வலமாகக் கடை வீதிகளில் அழைத்து வந்து அவமானப்படுத்துகிறார்கள். இதற்குப் பரிகாரம் செய்யவேண்டும்.

*** திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு நடைபெறக்கூடிய போலீஸ் மானியக் கோரிக்கை விவாதத்தில் நானும் சில வார்த்தைகள் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காகத் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மான்யத்தில் பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்து வைக்கப்பட்டன. காலத்தினுடைய மிகப் பெரிய அருமையை உணர்ந்து நான் சொல்ல வேண்டிய சில விஷயங்களை மிகச் சுருக்கமாகச் சொல்லலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக போலீஸ் துறையைப்பற்றி விவாதிக்கின்ற நேரத்தில் மிக முக்கியமாக நம்மை அலைக்கழித்துக் கொண்டிருப்பது இந்தியப் பாதுகாப்புச் சட்டமாகும். இந்தப் பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, இது அரசியல் சட்டத்திற்கு முரணானது, விரோதமானது, துஷ்பிரயோகத்திற்கு வழி வகுப்பது, இதனால் நம்முடைய அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்றெல்லாம் நான் இரண்டாண்டு காலமாகச் சொன்ன நேரத்தில் எல்லாம் என் மீது கனம் முதலமைச்சர் அவர்கள் சீறி விழுந்திருக்கிறார்கள். எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்யவேண்டும், அல்லது தேர்தலை ஒத்தி வைக்கவேண்டும் என்று சொன்ன நேரத்தில், அந்தக் கோரிக்கையைக் கேலிமொழிகளாகப் பேசினார்கள். இன்றைய தினம், பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்ற கோரிக்கை எல்லாக் கட்சிகளையும் கடந்து, அரசியல் எல்லை, காவல் எல்லாம் நடந்து, ஒரு தேசீயப் பிரச்னையாக மாறியிருக்கிறது. ஆச்சாரிய கிருபாளனி அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும், பெரும் பெரும் நீதிபதிகளும் இதை ரத்து செய்ய வேண்டும் என்ற அளவில் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அதற்கு மத்திய அமைச்சர்கள் கொடுக்கின்ற பதில், இதை ரத்து செய்வதற்குக் காலம் பார்த்துக்கொண்டிருக்கிறோம், கெடு பார்த்துக்கொண்டிருக்கின்றோம் என்று சொல்லுகின்ற நிலை வந்திருக்கிறது. எங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் பாதுகாப்புச் சட்டத்தைப்பற்றி மாநிலங்கள் அவையில் கடந்த வாரத்தில் பேசுகின்ற நேரத்தில் 'defying determined judgment of jurists, disregarding political advice given by eminent constitutional lawyers and arrogating to themselves the sum total of political wisdom' என்று கூறி ஆளவந்தவர்கள் தங்களை
12-30 p.m. அரசியல் ஞான சாகரங்களாகக் கருதி பாதுகாப்புச் சட்டத்தை நீடிப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளார். அவர்களாவது அரசியல் வாதி. இந்த நாட்டிலே இருக்கிற மூன்று பெரிய நீதிபதிகள் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், திரு. மஹாஜன், திரு. எஸ். ஆர். தாஸ், திரு. சின்ஹா என்பவர்களும். பல வைஸ் சான்சலர்களும்,



11th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

நம்முடைய தமிழகத்தில் இருக்கிற வைஸ் சான்சலர்களான திரு. ஸி. பி. ராமசுவாமி அய்யர் அவர்களும், திரு. லட்சுமணசுவாமி முதலியார் அவர்களும் உள்ளிட்ட 34 பிரமுகர்கள் ஜனாதிபதி அவர்களிடமும், பிரதமர் அவர்களிடமும், ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அதிலிருந்து சில வார்த்தைகளைச் சொன்னாலே கூட என்னுடைய வாதத்திற்கு வலிமை அளிக்கும் என்று கருதி, அதிலிருந்து சில குறிப்புக்களைப் படிக்கிறேன். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையிலே—

'The time has now arrived when the executive should reconsider its attitude and take the bold step of revoking the proclamation of grave emergency made in October 1962. What moves us is a solicitude for the fundamental rights of the citizens many of which stood suspended during the emergency and for the fair name of our democracy which stands tarnished in the eyes of the world by the adoption of methods of characteristic of a Police State.'

என்று சொல்லியிருக்கிறார்கள். அடிப்படை உரிமைகள் மூன்றாண்டுகளாகப் பறிக்கப்பட்டுள்ளன. உலகின் கண்களின் முன் நமது நாட்டின் நற்பெயர் கறைபடுத்தப்பட்டிருக்கிறது, போலீ ராஜ்யத்தில்தான் இந்த முறைகேடுகள் உண்டு, இவை போக வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள், திரு. மஹாஜன், திரு தாஸ் என்ற நீதிபதிகளும், துணைவேந்தர்களும் இப்படிக் கூறி விட்டு இன்னும் சொல்லுகிறார்கள்—

'Leaving aside the short period following the Chinese aggression and the period of the recent conflict with Pakistan, could it be seriously suggested that the country was in a state of emergency as was contemplated by the Constitutional provisions.'

என்று சொல்லுகிறார்கள். நெருக்கடி நிலை இல்லை என்றால் தேசத் துரோகி என்று எங்களைப் பழி சொல்லி வருகிறார்கள். ஆனால் பெரும் நீதிபதிகள் இன்றைக்கு நெருக்கடி நிலைமை தேவையில்லை என்று சொல்லுகிற நேரத்தில், சீனாக்காரன் படையெடுத்த நேரத்தையும், பாகிஸ்தான் படையெடுத்த நேரத்தையும் தவிர மீதியுள்ள பெரிய காலம் இந்திய அரசியல் சட்டம் எதற்கு எமர்ஜென்சி இருக்க வேண்டும் என்று அப்படிப்பட்ட நிலை நிர்ணயத்ததோ அப்படிப்பட்ட நெருக்கடிக் காலமல்ல, நெருக்கடி நிலை தேவையில்லை என்று தீர்ப்புக் கூறிவிட்டு இறுதியாகக் கூறியுள்ளனர்—

'A grave emergency lasting over three years resulting in the exercies of powers by the Executive over such a long period has not been known in any democratic country.'

என்று மூன்றாண்டுகளுக்கு மேலாக அதிகாரவர்க்கத்திடம் சகல உரிமைகளையும் ஒப்படைத்து, நெருக்கடி நிலையை இவ்வளவு நீண்ட காலத்திற்கு, நீட்டிய நிலைமை வேறு எந்த ஜனநாயக நாட்டிலும் நடைபெறவில்லை என்று இடித்துரைத்துள்ளனர். இன்றைக்கும் நான் கேட்கிறேன். பல வழக்குகளில் தீர்ப்பு வந்துள்ளது. கேரள நாட்டு மண்ணெண்ணெய் வியாபாரி வழக்கில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஒரிஸாவில் பாதுகாப்புச் சட்டம் அரசாங்கத்தால் தான்தோன்றித்தனமாகப்

பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என்று தீர்ப்பு வந்துள்ளது. திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இது கான்ஸ்டிட்யூஷனல் டிக்டேட்டர்ஷிப் என்று அரசியல் சட்டத்தோடுகூடிய சர்வாதிகாரம் என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு திரு. நந்தா அவர்களும், திருமதி இந்திரா காந்தி அவர்களும் யோசிக்கிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, இதனுடைய அடிப்படை அம்சத்தை உணர்வதாக இல்லை. மாநில அமைச்சர்கள், குறிப்பாக நம் முதல் அமைச்சர் அவர்களும் . . .

MR. SPEAKER : Sri Nanda and Srimathi Indira Gandhi cannot reply to the references made to them here by the hon. Member.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இதை நான் குறிப்பிடக் காரணம், மாநில அமைச்சர்கள் இதை நீடிக்கவேண்டுமென்று சொல்லி, வெளி நாட்டுப் படையெடுப்புப்பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை என்றாலும், உள்நாட்டு அரசியல் எதிரிகளை நசுக்குவதற்காக இது நீடிக்கப்படவேண்டுமென்று தவணை கேட்டு வந்துள்ளனர். பாதுகாப்புச் சட்டம் நீடிக்க வேண்டும் என்று வற்புறுத்திய முதலமைச்சர்களில் நமது முதலமைச்சர் அதிகமாக வற்புறுத்தினார் என்று எனக்குச் செய்தி வந்துள்ளது. இன்று காலையில் சபைக்கு வந்தவுடனே நான் முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டினேன். இடதுசாரி கம்யூனிஸ்டுகளில் 30 பேர்களை நேற்றைய தினம் விடுதலை செய்திருக்கிறார்கள் என்பதற்காகப் பாராட்டினேன். அவர்களில் 50 பேர்கள் இன்னும் உள்ளே இருக்கிறார்களே, அவர்கள் மட்டும் ஏன் இன்னும் சிறையில் இருக்கவேண்டும்? அவர்கள் வெளியில் இருந்தால் பாதுகாப்புக்கு என்ன கெடுதல் செய்து விடுவார்கள்? தேசத் துரோகம் என்றால் வேறு சட்டங்களின்படி சிறையில் வைக்கட்டும். ப்ரிவென்ட்டிவ் டிட்டென்ஷனில், தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் போடட்டும். வேறு சட்டம் இருக்கும்போது, அதன் கீழ் செய்யட்டும்.

* * * * *

இந்த அடிப்படையில் மிக முக்கிய அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும். அப்போதுதான் சுதந்தரமான பொதுத் தேர்தல் சாத்தியமாகும்.

* * * * *

இன்றைக்குச் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட கட்சி இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி. திரு. ராமமூர்த்தி, எம். ஆர் வெங்கட்டராமன் போன்ற அவர்களின் தலைவர்கள், பொதுத் தேர்தலுக்கான ஆயத்தங்களில் ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் வகையில் விடுதலை செய்யப்பட வேண்டும். திரு. ராமமூர்த்தி இந்தச் சபையின் எதிர்க் கட்சித் தலைவராய் இருந்தவர். *

பாதுகாப்புச் சட்டத்தை இன்னும் வைத்திருப்பது, டாஷ்கன்ட் பிரகடனத்திற்குப் பிறகும், குறிப்பாக திரு. சாஸ்திரி அவர்களின் மறைவுக்குப் பிறகும் வைத்திருப்பது, அவர்களுடைய

* Expunged as ordered by the Chair.





கல்லறையையே அவமதிப்பதாகும் என்று சொல்லிக்கொண்டு, இரண்டே இரண்டு விவரங்களைப்பற்றி மட்டும் பேசி முடித்துக் கொள்கிறேன்.

எதிர்க் கட்சித் துணைத் தலைவரும், என் நண்பரும் ஆன, திரு. கருணாநிதி அவர்களுக்கு மலேயாநாடு செல்ல பாஸ்போர்ட் மறுக்கப்பட்டிக்கிறது. அதற்கான காரணங்கள் என்ன என்ற விவாதத்தில் ஈடுபட விரும்பவில்லை. பாஸ்போர்ட் கொடுப்பது என்பது மாநில அரசுக்கு இருந்த அதிகாரம். இன்றைக்கு எவ்வளவோ விவகாரங்களில் நமது மாநில அதிகாரம் சரணாகதி அடைந்தது போல, சரணாகதி சர்க்காரிடமிருந்து பாஸ்போர்ட் கொடுக்கும் அதிகாரம் டில்லிக்கு போய்விட்டது. திரு கருணாநிதி அவர்களுக்கு பாஸ்போர்ட் மறுக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்த அனுமதியிலே பாரபட்சம் ஏன் காட்டப்படுகிறது? ஓர் சீரான கொள்கை கிடையாதா? நான் கூட இலங்கை நாட்டுக்குப் போக இரண்டு தடவைகள் பாஸ்போர்ட் கேட்டேன். எனக்குக் கிடைக்கவில்லை. கேட்கும் வேலையையே விட்டுவிட்டேன். நான் டில்லிக்குச் சென்றிருந்தபோது அங்கு மந்திரியாக இருக்கிற திரு. தினேஷ் சிங் அவர்களைச் சந்தித்தேன். பாஸ்போர்ட் விவகாரம் ஏன் இப்படி நடக்கிறது?

திரு. கருணாநிதி அவர்களின் தமிழ்ப் பேச்சில் தென்றலின் இனிமையை, எரிமலையின் சீற்றத்தை, புயலின் வேகத்தை, அருவியின் ஆலோலத்தை, இடி முழக்கத்தை மலேயா மக்கள் பார்த்து விடுவார்கள். இது நடைபெறக்கூடாது என்ற ஒன்றைத் தவிர வேறு காரணம் எனக்குத் தெரியவில்லை. அரசியல்தான் காரணம் என்றால் திரு. கருணாநிதி அவர்கள் தனியாகக் கூட போகவேண்டாம், நமது கனம் முதல் அமைச்சர் அவர்கள் தமிழ் மகா நாட்டுக்கு மலேயா போக இருக்கிறார்கள் நமது குழுவின் தலைவராக, அந்த மகாநாட்டுக்குச் செல்லும் குழுவுக்குத் துணைத் தலைவராக, திரு. கருணாநிதி அவர்களை அழைத்துச் செல்லுவது அவருடைய பரந்த மனோபாவத்தைக் காட்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் மான்யத் துறையிலே பல விவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். மொழிக் கிளர்ச்சிபற்றி எல்லோருக்கும் தெரியும். கடந்த ஆண்டில் 200 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். 50 இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. எல்லாக் கொடுமைகளும் நடைபெற்றிருக்கின்றன. ரத்தக் களரியே ஏற்பட்டது. இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களை விசாரிக்க ஒரு நீதிபதி விசாரணை வைக்கவேண்டும் என்று சொன்னோம். அதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவில்லை. முன்னேற்றக் கழகம்தான் செய்தது என்று குற்றம் சாட்டத் தவறவில்லை. நீதிபதி விசாரணை ஏன் வைக்கவில்லை? ஏன் இப்படி மூடி மறைக்கிறீர்கள்? ஏன் ஓடி ஒளிந்தீர்கள்? நடந்த அதிகாரிகள் R. D. O. விசாரணைகளுக்கான தஸ்தாவேஜுகளைச் சட்ட சபையின் முன்பு வைக்க ஏன் முன்வரவில்லை? இனிமேலாவது வைப்பதாக உறுதி அளிப்பார்களா? அந்த விசாரணைகளிலும் பல பலவீனங்கள் வெளிப்பட்டதால்தான் அறிக்கையை வைக்க

வில்லை. இதற்குக் காரணம் என்ன? உண்மையான காரணம் இருக்கிறது. ஒரே ஒரு உதாரணத்தை கனம் உள் துறை அமைச்சருக்குச் சொல்லுகிறேன். இந்தக் கலவரம் ஆரம்பிக்கக் காரணமாக இருந்தது, அங்குரார்ப்பணம் ஆனது மதுரையில் ஊர்வலம் போனபோது மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தின் முன்பு பட்டப் பகலில் அரிவாளைக் கொண்டு வெட்டிய சம்பவம். வெட்டிப் போட்ட வீரய்யா என்பவன் மூன்று மாதங்கள் வரையில் கைது செய்யப்படவில்லை. சட்டம் இருக்கிறது; அதிகாரி இருக்கிறார். அமைச்சர் இருக்கிறார்; போலீஸ் இருக்கிறது; கோர்ட் இருக்கிறது; ஜெயில் இருக்கிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** கோர்ட்டில் கேஸ் இருக்கும்போது அதைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசுவது நல்லதல்ல.

**திரு. கே. ஏ. மதியழகன் :** வழக்குபற்றி நான் அதன் உள்ளே செல்லவில்லை. பட்டப்பகலில் பலபேர் முன்னிலையில், போலீஸ் அதிகாரிகள் முன்னிலையில் வெட்டினவர் நடமாடிக்கொண்டிருந்தார் நாட்டிலே. ஜனவரி 25-ம் தேதி வெட்டினவர் ஏப்ரல் மாதம் கடைசிவரை கைது செய்யப்படவில்லை. நாட்டிலே எதற்காக போலீஸ் இருக்கிறது. எதற்காக அதிகாரம் இருக்கிறது? ஏதோ நள்ளிரவிலே புகுந்து வெட்டினார் என்பதல்ல. பட்டப்பகலிலே நடந்திருக்கிறது. ஆனால் கைது செய்யப்படவில்லை மூன்று மாதம். இதைப் பார்த்த பிறகு தமிழகத்தில் நமது உயிர், உடல், உரிமை இவைகளுக்குப் பந்தோபஸ்து, பாதுகாப்பு இருக்கிறது என்று எப்படி மனம் துணிந்து கூறமுடியும்? இந்த விவகாரத்தில் போலீஸ் அதிகாரிகள் தவறு செய்திருந்தால் அவர்களுக்கு ஏன் தண்டனை கொடுக்கவில்லை? போலீசில் மிகவும் திறமையான போலீஸ் உயர் அதிகாரிகள் இருக்கிறார்கள். நம்முடைய ஐ.ஜி. அவர்களின் திறமையில் எனக்குப் பெரு மதிப்பு உண்டு. ஆனால், அந்த ஆளை ஏன் அவர்களால் கைது செய்யமுடியவில்லை? அவராக கைது செய்யவில்லையா? அமைச்சர்களின் நிர்ப்பந்தமா? என்ன காரணம்? இது யாருக்கும் கௌரவமல்ல. இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு, நியாயம், அறநெறி உயிரோடு இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒன்றை மட்டும் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களை கைது செய்திருக்கிறார்கள். அவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டு என்ன? நீங்கள் அனுமதி தந்தால், எவ்வளவு சாதாரண, அற்ப காரணங்களுக்காக பாதுகாப்பு சட்டம் பாய்கிறது என்பதாக அவர் மீதுள்ள குற்றப் பத்திரிக்கையை படிக்கிறேன். இல்லை என்றால் அதை அப்படியே விட்டுவிடுகிறேன்.

**கனம் சபாநாயகர் :** கோர்ட்டில் வழக்கு இருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** On very flimsy and superficial grounds they resort to Defence of India Rules. இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு, நீங்கள் சொல்லுவதற்கு முன்னால் நான் முடித்துக்கொள்ளுகிறேன்.



**கனம் சபாநாயகர் :** நான் மூன்று தடவை 'பெல்' அடித்து விட்டேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தி எதிர்ப்புக் கலவரங்களில் 200 பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களுக்கும் நஷ்டத்திற்கும் முழுப் பொறுப்பேற்க வேண்டியது இந்த அரசாங்கம்தான்.

* **திரு. கோ. நாராயணசாமி நாயுடு :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஒரு குறிப்பிட்ட நேரம் வரையில் எதிர்க்கட்சி போலீஸ் இலாகாவினரைத் தாக்கிக்கொண்டே வந்தார்கள். இப்பொழுது அதை மாற்றி சம்பந்தம் இல்லாதவர்களையும் தாக்கிக்கொண்டிருக்கும் வேடிக்கையை நாம் பார்க்கிறோம். போலீஸ்காரர்களுக்கு சௌகரியம் செய்துகொடுப்பது பற்றிப் பேசினார்கள். அவற்றையெல்லாம் நாமும் உணர்ந்திருக்கிறோம். இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மத்தியில் இருந்து நியாயமாக நடக்கிறார்கள் என்று இரண்டு தரப்பிலும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது நிரம்ப நல்ல காரியம்.

போலீஸ்காரர்களுக்கு வேலை ஜாஸ்தி, அபாயமும் அதிகம். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இன்னும் சில இடங்களில் அவர்களுக்கு சில சௌகரியங்கள் சரியாகச் செய்துகொடுக்கப்படவில்லை. பாக்கி இடங்களில் எப்படி இருந்தாலும், போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஏன் ஜீப் கொடுக்கக்கூடாது? ஏன் போலீஸ்காரர்களுக்கு நல்ல வீட்டு வசதி செய்து கொடுக்கக்கூடாது? அம்மாதிரி வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டியது மிகவும் முக்கியம்.

சென்ற வருஷம் நடத்தப்பட்ட, பெரிய சதித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட, இந்தி எதிர்ப்பு என்ற பேரால் நடத்திய அக்கிரமங்களின் பொழுது, பல கிராமங்களில் நம்முடைய போலீஸ் இலாகாவினர் நடந்து கொண்ட விதத்தைப்பற்றிப் பாராட்டுதல் தெரிவிக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் அவர்கள் செய்த சேவை பிரமாதம். நம்முடைய தரப்பிலிருந்து அந்த நேரத்தில் அவர்களுக்கு எதையெல்லாம் செய்து கொடுக்கக்கூடுமோ அதையெல்லாம் செய்தோம். மேலும் செய்வதற்கு நாம் நிச்சயம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்கு மதுவிலக்குத் திட்டத்தைப் பற்றிச் சொல்லப்பட்டது. உலகம் ஆரம்பித்ததிலிருந்து ஆயிரமாயிரம் வருஷங்களாக ஹரிச்சந்திர நாடகத்தை நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். பலர் அந்த நாடகத்தைக் கண்டு களிக்கிறார்கள். அதற்காக பொய் சொல்லுவது நின்றுபோய்விட்டதா? வேஷம் போட்டவனே பொய் சொல்லுகிறான். அதே மாதிரி திருட்டு நின்றுவிட்டதா? வேத ஆரம்ப காலத்திலிருந்தே திருட்டு இருந்துகொண்டிருக்கிறது. ஒரு ரிஷி திருடினார், அதற்காகத் தன்னுடைய கையை அவரே வெட்டிக்கொண்டார் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

கடுமையான சட்டங்களைப் போட்டிருக்கிறோம். கடுமையாக அமல் நடத்துகிறோம். கடுமையான தண்டனை கொடுக்கிறோம். திருடியவர்களை இழிவுபடுத்துகிறோம். இப்படியெல்லாம் செய்து கொண்டிருந்தும் திருட்டே இல்லாமல் நின்றுபோய் விட்டதா? கிடையாது. படிக்காதவன் தான் திருடுகிறான், பொய் சொல்லுகிறான் என்பதும் இல்லை. படித்தவன் தான் இன்னும் தெளிவாக 100 தடவை அழுத்தம் திருத்தமாகப் பொய் சொல்லுகிறான். காரணம், சட்டம் அவனுக்கு நன்றாகத் தெரியும். இவ்வளவும் செய்தும் திருட்டு நிற்கவில்லையே. இதற்காகப் போலீஸ் நடவடிக்கை வேண்டாமா? போலீஸ்காரர்களில் நல்லவர்கள் இருக்கிறார்கள். திறமையாக வேலை செய்பவர்கள் இருக்கிறார்கள். பிரமாதமாக வேலை செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆனால் வெட்கப்படத்தக்கவர்களும் சிலர் இருக்கிறார்கள். அதிலே ஒன்றிரண்டு எங்கள் ஊர் பக்கத்திலே இருக்கிறார்கள். பொதுப்படையாகச் சொல்லுகிறபொழுது திருட்டு முன்பைவிட அதிகம் நடக்காமல் இருக்கிறது என்று தான் சொல்லவேண்டும். எல்லாவற்றையுமே போலீஸ் நிறுத்திவிட முடிகிறதா? மதுவிலக்குச் சட்டத்தை அமல் நடத்துவது சம்பந்தமாக எங்கேயோ சில இடங்களில் சரியாக நடக்கவில்லை என்பதற்காக எல்லாமே சரியாக நடக்கவில்லை என்று சொல்லுவது சரியல்ல. ஏதோ ஒன்றிரண்டு குற்றம் நடந்துவிட்டால், அதற்காக அந்த சட்டத்தையே நீக்கி விடுவது என்றால், பிறகு குற்றமே இருக்காது, போலீசாரே தேவையில்லை. கிட்டத்தட்ட 'அநார்கிசம்' வந்துவிடும். இப்பொழுது இருப்பதைவிட இன்னும் திறமையாக அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும், வேலை செய்யவேண்டும் என்று சொல்லலாம்.

போலீஸ் இலாகாவை இரண்டாகப் பிரித்துவிட்டால் இன்னும் திறமையாக வேலை நடக்கும் என்று நினைக்கிறேன். டவுன் போலீசில் கிரைம் பிராஞ்சு என்று பிரித்திருக்கிறார்கள். அந்த மாதிரி டிராபிக் போலீசைத் தனியாகப் பிரித்து, அவர்களுக்குப் பூரண வசதி செய்து கொடுத்து, அவர்கள் மந்திரி வரும்பொழுது எப்படி 'அரேன்ஞ்மெண்டு' செய்ய வேண்டும் என்பதையெல்லாம் பார்த்துக் கொள்ளட்டும். இப்பொழுது போக்குவரத்து வரவர அதிகமாகிக் கொண்டிருக்கிறது. நான் சின்னப் பிள்ளையாக இருக்கும்பொழுது எங்கள் ஊரிலே ஒரு கார் கூடக் கிடையாது. ஏதாவது ஒரு கார் வந்தால் பள்ளியில் இருந்து எல்லோரும் அடித்துப் பிடித்துக் கொண்டு அந்தக் காரைப் பார்ப்பதற்கு முன்னால் ஓடுவோம். பள்ளிக்கூட வாத்தியார் முரட்டு வாத்தியாராக இருந்தால் கூட அவரிடமிருந்து தப்பி காரைப் பார்ப்போம். இப்பொழுது கார் என்றால் பார்ப்பதற்கே அபிமானம் இல்லாமல் இருக்கிறது. பிறக்கக்கூடிய குழந்தைகளுக்குக் கூட கார் ஹார்ன் சத்தத்தைக் கேட்டுக் கேட்டு சாதாரண சம்பவமாகிவிட்டது. பெண்களுக்குக் கூட ஹாரன் அடிப்பது புரியவில்லை. அவர்கள் சாதாரணமாக கார் பக்கத்தில் வரும்போது இடுப்பை வளைத்துக்கொடுக்கிறார்கள். ஆண்கள் அப்படியே நிற்கிறார்கள். பூமி சுற்றுகிறது பூமி வேகமாக சுற்றுகிற காரணத்தினால், பெரிய ஓசையை எழுப்புகிறது. காதுக்கு அவ்வளவு பெரிய ஓசையைக் கேட்கும் சக்தியில்லை. அதனால் அந்த ஓசையே கேட்கவில்லை. போய்விடுகிறது. அதே





போல் திரும்பத் திரும்ப ஹார்ன் சப்தத்தைக் கேட்டுக் கேட்டு, அந்த ஓசையை செவி ஏற்றுக்கொண்டும் பழகி போய்விட்டபடியால் அந்தச் செவி இயந்திரம் மூளையைத் தட்டி எழுப்புகிற சக்தியை இழந்துவிடுகிறது. நாட்டிலே ஹார்ன் சப்தம் அவ்வளவு அதிகமாகி விட்டது. ஆகவே ஹார்ன் ஓசையை மாற்றி அமைப்பதற்கு போலீஸ் துறையினர் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஓரளவுக்கு விபத்துக்களைத் தடுக்க முடியும்.

அடுத்தபடியாக, போலீஸ் ஸ்டேஷனில் எப்பொழுது போய்ப் பார்த்தாலும் அவர்கள் எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். இரவில் பார்த்தால் கூட எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். சாதாரணமாக போலீஸ்காரர்களுக்கு எழுத்து வேலை மிகவும் ஜாஸ்தியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அவர்களுக்குள்ள எழுத்து வேலையைக் குறைக்கவேண்டும். அவர்களுக்கு டைப்ரைடிங் மெஷின் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன். அப்படிக் கொடுத்திருந்தால் ஏன் அவர்கள் எப்பொழுதும் எழுதிக்கொண்டே இருக்கவேண்டும்? கேட்டால் மேலே சூப்பரிண்டென்டுக்குப் போகவேண்டும், அவர்களுக்குப் போக வேண்டும், இவர்களுக்குப் போக வேண்டும், 3 காபி வேண்டும், 4 காபி வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த எழுத்து வேலையைச் செய்து கொடுப்பதற்கு ஒரு கிளார்க் கொடுக்கலாம். இல்லாவிட்டால் சில போலீஸ்காரர்களுக்கு முழுவதும் எழுத்து வேலை செய்வதற்கு என்றே ட்யூடி போட்டுவிடவேண்டும். (குறுக்கீடு) ரைட்டர் இருந்தாலும், எஸ். ஐ-யும் எழுகிறார், சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் எழுதுகிறார். அவர்களுடைய எழுத்து வேலையைக் குறைத்தால் இப்பொழுது இருப்பதைவிட அவர்கள் இன்னும் திறமையாக வேலை செய்ய முடியும் என்று நான் நினைக்கிறேன்.

சமுதாயத்தில் எல்லாத் துறையிலும் கெட்டவர்கள் இருப்பது போல இந்தத் துறையிலும் சில கெட்டவர்கள் இருக்கலாம். வேறு எந்தத் துறையில் இருந்தாலும், இந்தத் துறையில் கெட்டவர்கள் இருந்தால் அவர்களை எவ்வளவு சீக்கிரம் நீக்கிவிட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நீக்கிவிடவேண்டும். இந்தத் துறையில் ஓரளவுக்காவது கெட்டவர்கள் இல்லாமல் குறைந்து இருந்தால்தான் நல்லது. வெளி நாடுகளுக்கு இவர்களை அனுப்பி டிரெயினிங் கொடுக்க வேண்டும். ஸ்காட்லண்டு யார்டு போலீஸ் போன்ற இடத்திற்கு இவர்களை டிரெயினிங்குக்கு அனுப்ப வேண்டும். குற்றம் செய்த வழியிலேயே சென்று குற்றம் செய்தவரைக் கண்டுபிடிக்கவேண்டும். முதலில் குற்றவாளி யார் என்று முடிவு செய்துவிட்டு, பிறகு அதற்குத் தகுந்தபடி சாட்சியங்களை ஜோடிப்பது என்பது கூடாது. திருட்டு நடந்தால், திருடப்பட்ட சாமான்கள் பூராவும் போலீஸ் ஸ்டேஷனுக்கோ அல்லது கோர்ட்டுக்கோ வந்துவிடவேண்டும். இப்பொழுது அப்படி வருவதில்லை. அதற்கெல்லாம் இடமில்லாமல் குற்றச்சாட்டுகளை அவ்வப்பொழுது விசாரணை செய்யவேண்டும், பெரிய அதிகாரிகள் பல பகுதிகளில் வந்து என்ன கெடுதல், தப்பு செய்கிறார்கள், சொல்லுகிறார்கள் என்பதைப் பற்றி விசாரிக்க வேண்டும். சில சமயங்களில் ஜனங்கள்

புகார்களைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். நாமும் சில சமயங்களில் நம்புகிறோம். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் சரியாக விசாரணை செய்யவேண்டும். போலீஸ் மீது சந்தேகம் வரும். சந்தேகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இது தான் நியாயம், போலீஸ் செய்து வருவது சரி என்று ஜனங்கள் சொல்லிக்கொள்ளவேண்டும். கெட்ட பெயர் கூடியவரையில் வராமல் போலீஸ் அதிகாரிகள் பார்த்துக்கொள்ளவேண்டும். தவிர்க்கக் கூடிய குற்றங்களைத் தவிர்க்கவேண்டும். அலட்சியம் காரணமாக எதையும் விட்டுவிடக்கூடாது. இந்த எலெக்ஷன் வருவதற்குள் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஜீப் கொடுத்துவிடவேண்டும். கூடுமான வரையில் போலீஸ்காரர்கள் நல்ல பெயர் எடுத்துக்கொள்ள வேண்டும். நிரந்தரமாக ஒரே இடத்தில் ஒருவரை வைத்திருக்கக் கூடாது. எங்கள் தாலூகாவில் ஒருவரே பல வருஷங்களாக S. I. ஆக இருக்கிறார். திரும்பத் திரும்ப அங்கேயே இருந்து இப்பொழுது சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருக்கிறார். இன்னும் அங்கேயே மேலே அவர் டெப்யூடி சூபரின்டென்டென்டாகக் கூட வந்து விடலாம். அப்படி ஒருவர் ஒரே இடத்திலேயே இருந்தால் அவருக்கு விருப்பு வெறுப்பு ஏற்படுவதற்கு சந்தர்ப்பங்கள் இருக்கக்கூடும். கடவுளுக்குக் கூட அவருடைய சிருஷ்டியைப் பார்த்து ஆசை வருகிறது; ராக்ஷஸனைப் பார்த்தால் கோபம் வருகிறது. விருப்பு வெறுப்பினால் சில பேர்களை அணைப்பார்கள். சில பேர்களை ஒதுக்குவார்கள். அந்த நிலை ஏற்படாமல் செய்யவேண்டும் என்று மந்திரி அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தின் மீது, நண்பர் மதியழகன் தந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், போலீஸ் மானிய வெட்டுப் பிரேரணையின் மீது பேசுகிற காரணத்தினால், ஏதோ அந்த இலாகாவையே கண்டித்துப் பேசுவதாகவோ, அந்த இலாகா இருத்தல் ஆகாது என்ற எண்ணத்தில் பேசுவதாகவோ, ஆளும் கட்சி உறுப்பினர்கள் கருதிக்கொள்ளுவது நல்லதல்ல, பொறுப்புள்ளதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த இலாகாவில் ஒரு சில அதிகாரிகள், அல்லது இலாகாவிலே இருக்கிற தனிப்பட்ட சிலர் அல்லது, இலாகாவிலே இருக்கிற அதிகாரிகள் வேறு சிலருடைய தலையீட்டால், தவறுகள் விளைவிக்கத் தூண்டப்படும் நிலையில் இருக்கிறவர்கள் பற்றி எடுத்துச் சொல்வது அவசியம். அதற்காகவும் தான் போலீஸ் மானியம் இந்த சட்ட மன்றத்திலே விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தப் போலீஸ் மானியத்தை இந்த மன்றத்தின் முன் வைத்த உள் துறை அமைச்சரவர்கள், போலீசார் இந்த மாநிலத்தில் செய்து வருகிற நல்ல பல பணிகளைப் பாராட்டி, நன்றியினைத் தெரிவித்தார்கள். அந்த நன்றி அறிவிப்போடு, எதிர்க் கட்சியினரும், அந்த இலாகாவைப் பொறுத்தவரையில், நன்றி அறிவிக்கத்





தயங்கார் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். போலீஸ் இலாகாவின் மீது எதிர்க்கட்சிக்கு நிச்சயமாக வெறுப்பு இல்லை. அதிகாரிகளானாலும், காவல் துறை வீரர்களானாலும், அவர்கள் பல வகையிலும், இந்த மான்யத்தின் மூலம், நன்மைவாய்க்கப் பெற சீரியநற் கருத்துக்களை. வெட்டுப் பிரேரணைகள் அறிவிக்கின்றன. உதாரணமாக, "காவல் துறையினர் திறமையாகவும், தூய்மையாகவும், பணியாற்ற அவர்களின் கல்வித்தரம், படி ஆகியவைகள் உயர்த்தப்பட வேண்டும்" என்றும், "போலீசாருடைய

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

சம்பளத்தை உயர்த்த வேண்டும்" என்றும், "குடியிருப்பு வசதிகளைத் துரிதப்படுத்துதல் வேண்டும்" என்றும், "கடமையாற்றும் வசதிக்காக, ஒவ்வொரு சர்க்கில் இன்ஸ்பெக்டருக்கும் ஒரு ஜீப் கார் வழங்க வேண்டும்" என்றும், "போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு உடுப்பு 'அலவன்ஸ்'ஸை அதிகப்படுத்த வேண்டும்" என்றும், உடை, சலவைக்கூலி, சவரக்கூலி, முதலிய படிகளை உயர்த்த வேண்டும்" என்றும், "விலைவாசி உயர்வுக் கேற்ப சாப்பாடு படிகளை உயர்த்திட வேண்டும்" என்றும், 'கடமையைச் செய்யும்பொழுது, இழப்புக்கு ஆளாகும் காவலர்க்கு தக்க நிவாரணம் அளிக்க வேண்டும்" என்றும், இத்தகைய வெட்டுப் பிரேரணைகள் தான், பெரும்பாலும் எதிர்க் கட்சி உறுப்பினர்களால் தரப் பட்டு இருக்கின்றன, இதிலிருந்தே, போலீஸ் இலாகாவில் பணி புரிகின்ற நண்பர்கள் மீது எதிர்க் கட்சியில் இருக்கின்றவர்களுக்குப் பகை உணர்ச்சி கிடையாது என்பது விளங்கும். இலாகாவில் ஒரு சிலர் தவறுக்கு ஆளாகின்றார்கள். அல்லது தவறு செய்யத் தூண்டப்படுகின்றார்கள். அதிலே தவிர்க்க முடியாத அளவில் சிக்கிக் கொள்ளுகிறார்கள். குற்றம் குறைகள் இருப்பதைச் சொல்லுகிறோம் என்றால், அது எங்களுக்கு மேல், ஆளும் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் அதிகமாகப் பயன்படும் என்றுதான் எடுத்துச் சொல்லுகிறோம்.

உள் துறை அமைச்சர் கொடுத்திருக்கும் அறிக்கையில், 1964-ம் ஆண்டு வழக்குகளின் எண்ணிக்கை 48,947. அதுவே 1965-ல் 49,151 என்றும், 117 தான் கூடுதலாக இருப்பதால், அது குறைந்த கூடுதலே என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மற்ற மானியங்களைப் போல அல்ல இது. விவசாயம் போன்ற வேறு மானியங்களில் 1964-ம் விளைச்சல் இவ்வளவு, 1965-ல் இவ்வளவு அதிகம் என்று சொல்வது சரியாக இருக்கும். அதேபோல இந்த மானியத்தில் கருதமாட்டார்கள், எதிர்பார்க்கவும் கூடாது. இந்த மானியத்தைப் பொறுத்த வரையில், 1964-ம் ஆண்டு இருந்த குற்றங்களின் எண்ணிக்கையைவிட 1965-ம் ஆண்டு குற்றங்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கவேண்டும். 1966-ம் ஆண்டு இன்னும் குறைவாக இருக்கவேண்டும். குற்றங்கள் குறையக் குறையத்தான் போலீஸ் இலாகாவின் திறமை அதிகரித்திருக்கிறது என்று வெளிப்படையான அர்த்தம். அந்த வகையில் உலகத்திலே சிறந்த போலீஸ் படை என்று அழைக்கத் தகுந்தது, பிரிட்டிஷ் போலீஸ் படை என்று குறிப்பிடப் படுகிறது. அந்தப் பெருமையை அந்த போலீஸ் படைக்கு அளித்த பெருமைக்குரியவர்கள், அதைத் திட்டமிட்டு நிறுவிய, இங்கிலாந்து நாட்டில் போலீஸ்

கமிஷனர்களாக இருந்த ரோவன், மேயின் ஆகிய இரண்டு பேர்களும் ஆவர். அவர்கள் போலீஸ்காரர்கள் கடமைகளைப் பற்றி எழுதிய நூல் ஸ்காட்லண்டு யார்டு நூலகத்தில் இருக்கிறது. அந்த நூலில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்; "உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு, நிதானமிழக்காமல், செயலாற்றுவதே ஒரு போலீஸ் அதிகாரிக்குத் தேவையான சிறந்த தகுதி என்பதை ஒரு போலீஸ் வீரன் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். நிதானமாகவும், உறுதியுடனும், ஒரு போலீஸ் வீரன் கடமையாற்றினால், அவசியமேற்பட்டால், அருகில் இருப்பவர்களும் அவனுக்கு உதவி செய்வார்கள்" என்று கூறிவிட்டு, போலீஸ் படையின் நோக்கம் பற்றிக் கூறும்போது, "குற்றங்களைத் தடுப்பதே முக்கிய நோக்கம் என்பதை ஒவ்வொரு போலீஸ் வீரரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். போலீஸ் படையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தனக்குத்தானே காவல் என்ற நினைவுடன் ஒழுக்கம் பேணவேண்டும். குற்றங்கள் இல்லாது ஒழிந்தால் அதுவே போலீஸ் படையின் திறமைக்குச் சிறந்த சான்று ஆகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், அந்த நூலிலே.

பிரிட்டனிலே போலீஸ்காரர்கள் வெறும் காவல் துறைப் பணிகளை மட்டுமே கவனிப்பது என்பது இல்லை. கிராமப் பகுதிகளுக்கும், விவசாயம், சுகாதாரம் போன்ற துறைகளின் தேவைகளையும் கவனிக்கும் பணிகளையும் ஏற்றுச் செய்கிறார்கள். பிரிட்டன் நாட்டில் போலீஸ்காரர்களுடைய வரலாற்றினைப் படிக்கும்போது, பிரிட்டானிய நாட்டிலே அபாயகரமான குற்றவாளிகளை, தப்பி ஓடுவார்களோ என்று, ஓர் இடத்திலிருந்து வேறு இடத்திற்கோ, நீதிமன்றத்திற்கோ அழைத்துச் செல்லும்போதே விலங்கிடுகிறார்கள். ஆனால், இங்கே விலைவாசிப் போராட்டத்தின் போது, நண்பர். பாலகிருஷ்ணன் அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றது எவ்வாறு? எவ்வளவு பொறுப்பான இடத்தில் இருக்கிறவர்? எத்தனை மக்களுடைய வாக்குகளைப் பெற்று, இந்த மன்றத்திலே வீற்றிருக்கிறார்? அப்படிப்பட்டவரை, கொஞ்சம் அலட்சியமாக இருந்து விட்டால் தப்பி ஓடிவிடுவார், பயங்கரமானவர் என்று, கைகளில் விலங்கிட்டு போலீசார் அழைத்துச் சென்ற காட்சியும் ஞாபகத்திற்கு வருகிறது.

பிரிட்டானிய நாட்டில், ஒரு கான்ஸ்டபிளுடைய சம்பளம், என்ன? அண்மையில் ஒரு புத்தகத்தில் பார்க்க நேர்ந்தது. ஆண்டு ஒன்றுக்கு, ஒரு பிரிட்டிஷ் போலீஸ்காரருடைய சம்பளம், 700 பவுன். மாதம் சுமார் 58 பவுன், அதாவது ரூபாய்க் கணக்கில் சொன்னால், ரூ. 758. இது ஒரு போலீஸ் கான்ஸ்டபிளுடைய சம்பளம். மாதம் ஒன்றுக்கு ரூ. 758; அதாவது இங்கே இருக்கும் அசிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடைய சம்பளத்திற்கு ஒப்பானது. அவர்களுடைய சம்பளம் கூட ரூ. 740 தான். பிரிட்டன் நாட்டில் இருக்கிற, போலீஸ் கான்ஸ்டபிளுக்கு ரூ. 758 என்றால், ஓய்வு பெற்ற போலீசார் ஊதியத்தில் பாதியைப் பென்ஷனைப் பெறுகிறார்கள். முப்பது ஆண்டு காலம் வேலைசெய்து விட்டு, ஓய்வு பெற்றால், மூன்றில் இரண்டு பங்கு ஊதியத்திலிருந்து கணக்கிட்டுத் தரப்படுகிறது.





இங்கே ஏறத்தாழ 27,006 போலீஸ் கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். இந்த மாநிலத்திலே அடிப்படைச் சம்பளம் ரூ. 65 முதல் ரூ. 90 வரை. ஒரு ஹெட் கான்ஸ்டபிளுக்கு ரூ. 85 முதல் ரூ. 105 வரை. அவர்கள் மாத்திரம் ஏறத்தாழ 3,089 பேர்கள் இருக்கிறார்கள். சப்-இன்ஸ்பெக்டர்கள் 1,[illegible]4 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தரப்படும் சம்பளம் ரூ. 140. போலீஸ் இலாக்கா ஸ்டாஃப் நர்சுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் ரூ. 140. நான் அதைக் குறைக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஒரு நர்சுக்கும் ரூ. 140, ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் ரூ. 140 தான். அதாவது அடிப்படைச் சம்பளம். அதே நேரத்திலே, ஃபையர் சர்வீசிலே இருக்கிறவர்கள் சம்பந்தப்பட்டவரை அவர்களுக்கு உடை சலவை இவற்றிற்காகத் தரப்படும் படி ரூ. 1 முதல் ரூ. 3 வரை இருக்கிறது. ஃபையர் சர்வீசில் இருக்கிறவர்களுடைய உடை அடிக்கடி அழுக்கடையக் கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் அலவன்ஸ் ரூ. 1 முதல் ரூ. 3 வரை என்பது எப்படிப் போதுமானதாகும்? வசதிகள் இல்லாமையும் ஊதியம் குறைவாகத் தரப்படுவதும் நேர்மையையும், நீதியையும், நியாயத்தையும் சில சமயங்களிலே தவற விடுவதற்கான காரணங்களாக அமைகின்றன என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

மது விலக்குச் சட்டத்தின் காரணமாகக் கைது செய்யப்படுகிற 1-00 p.m.
வர்களில் சாராயம் குடித்தவர்கள் அதிகமாகக் கைது செய்யப்படுகிறார்கள். அதே நேரத்தில், சாராயம் காய்ச்சிய வழக்குகள் அந்த அளவுக்கு இல்லை. இதைத்தான் கனம் உறுப்பினர்கள் பலர் இங்கே சுட்டிக் காட்டினார்கள். எதிர்க் கட்சிகளிலே உள்ளவர்கள் கொஞ்சம் வெளிப்படையாகச் சொன்னார்கள். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள், அவர்களால் சொல்ல முடிந்த அளவுக்குச் சூசகமாகத் தெரிவித்தார்கள். 'மாமூல்' என்ற முறை, இந்தச் சாராயம் காய்ச்சும் இடங்களுக்குச் செல்லுகிற போலீஸ்காரர்களை, நடுவிலே நந்தி போல் இருந்து, தடுத்து நிறுத்தி விடுகிறது என்ற நிலை இங்கே எடுத்து விளக்கப்பட்டது. மாமூல் அங்கு மட்டுமா?

பள்ளிக்கொண்டா என்கிற பகுதியினுடைய போலீஸ் ஸ்டேஷன். பருகூர் என்கிற பகுதியினுடைய போலீஸ் ஸ்டேஷன். காவேரிப்பாக்கம் என்ற பகுதியினுடைய போலீஸ் ஸ்டேஷன். இந்த இடங்களில் எல்லாம் போகிற வருகிற லாரிகளின் மொத்த எண்ணிக்கை ஒரு நாளுக்கு சுமார் 600 இருக்கும். இந்த 600 லாரிக்காரர்களும் எந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றாலும், ஏதோ ஆண்டவனுக்குக் கும்பிடு போடுவது போல, போலீஸ் ஸ்டேஷனில் லாரி ஒன்றுக்குப் பத்து பைசா கொடுத்துவிட்டுச் செல்லவேண்டும் என்ற ஒரு நியதி இன்றையதினம் இருக்கிறது. இதை நான் இங்கே வெளிப்படையாக எடுத்துச் சொல்லுகிறேன். அந்தப் பகுதியிலே இருக்கும் பல சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இந்த உண்மை நிச்சயமாகத் தெரியும். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் ஒரு நாளைக்குச் சுமார் ரூ. 50, ரூ. 60 வசூலிக்கப்படுகிறது. காஞ்சீபுரம் போகும் வழியில்—முதல்

அமைச்சர் அவர்களும் பார்த்திருக்கக்கூடும்—ஒரு கோயில் வாசலில் கார் போகும் நேரத்தில் ஒரு சிறுவன் ஓடி வந்து உண்டியைக் குலுக்குவான். இஷ்டப்பட்டவர்கள் காசு போட்டுவிட்டுப் போவார்கள். ஆனால், இது அப்படி அல்ல. கண்டிப்பாக நிற்க வேண்டும். போலீஸ் ஸ்டேஷனுக்கு முன் வண்டி நிற்க வேண்டும். பத்து பைசா கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டும். கொள்ளிடம் பாலத்தில் சுங்க வரி செலுத்துவதைப் போல இப்படிப் பங்கு தர வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை, இருக்கின்ற ஊதியம் போதாது என்கிற இந்த நிலைமைகளால் ஏற்படுகிற தவறுகள் இவை என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஊதியம் போதாது என்றால் இப்படி வாங்கவேண்டும் அல்லது வாங்குவது நல்லது என்று கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்களா ?

**திரு. மு. கருணாநிதி :** நான் சொல்லாவிட்டாலும் அப்படிச் சொல்லும்படியாக அமைச்சர் விரும்புகிறார் என்று கருதுகிறேன். நான் அப்படி நிச்சயமாகச் சொல்லமாட்டேன்.

பிரிட்டானிய நாட்டில் போலீசாருக்கு எப்படி அறிவுரை தரப் படுகிறது என்று சொன்னேன். இங்கே கூட, ஊட்டியில் அடிக்கடி போலீஸ் சூபரின்டெண்டுகள் மாநாடு நடைபெறுகிறது. அந்த மாநாட்டிலே கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் அவர்கள் இவைகளையெல்லாம் எடுத்து விளக்கியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்றுதான். சில பகுதிகளை நான் உள்ளபடியே வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

கைதிகள் துன்புறுத்தப்படுவதை அந்த மாநாட்டில் அமைச்சர் ஒருவர் வெகுவாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார். 'லாக் அப்' மாணவர்களைச் சுட்டிக்காட்டி, இவை தவிர்க்கப்பட வேண்டும், இவை அதிகமாகின்றன என்று கனல் கக்க அந்த மாநாட்டில் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ. வீட்டில் திருட்டு நடைபெற்ற வேடிக்கையையும் அமைச்சர் அவர்கள் அந்த ஊட்டி மாநாட்டில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ. வீட்டில் திருட்டு நடைபெற்றது. அந்தத் திருட்டு நடைபெற்ற பிறகு எம்.எல்.ஏ. போலீசில் புகார் செய்கிறார். உண்மையிலேயே திருடியவனைப் போலீசார் பிடிக்கவில்லை. மாறாக, ஒரு புதிய திருடனைப் பிடிக்கிறார்கள். புதிய திருடனைப் பிடித்தாலும் பழைய சாமான் அவனிடம் இருக்காது. ஆகவே, புதிய சாமானை அவன் கையில் கொடுத்து, இவன் தான் இந்த சாமானைத் திருடியவன்; இவன்தான் எம்.எல்.ஏ. வீட்டுச் சாமானைத் திருடியவன் என்று அவன் மீது வழக்கு போடுகிறார்கள். எம்.எல்.ஏ. பறிகொடுத்த பொருள் அதுவா ? என்று பார்க்கிறார். "இது நான் பறிகொடுத்த பொருள் அல்ல" என்று அந்த எம்.எல்.ஏ. கூறிவிடுகிறார். இதைக் கூட அமைச்சர் அவர்கள் ஊட்டி மாநாட்டில் எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.





ஒரு போலீஸ் அதிகாரி தனக்கு வேண்டாத ஒருவரைக் கைது செய்கிறார். அப்படிக் கைது செய்துவிட்ட பிறகு அவன் மீது என்ன வழக்கு போடுவது என்று யோசிக்கிறார். சுலபமான வழக்கு சாராய வழக்கு. அந்த வழக்கைத் தலையிலே சுமத்தி அவனைச் சிறையிலே போடுகிறார். இதையும் அந்த அமைச்சர் ஊட்டியில் நடைபெற்ற போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

இன்னொரு விபரீதம். அமைச்சர் அவர்களே அந்த மாநாட்டில் கூறியது. திருநெல்வேலியில் ஒரு கொலை நடைபெற்றது. அந்தக் கொலைக்கு முதல் நாளே, கொலை செய்யப்பட்டவர் போலீஸ்காரர்களுக்குத் தகவல் கொடுக்கிறார். "நான் இந்த நேரத்தில் கொலை செய்யப்படலாம். ஆகவே எனக்குப் பாதுகாப்பு கொடுங்கள்" என்று அபயம் கோரி, போலீஸ் இலாக்காவிற்கு அவர், தன்னைப் பாதுகாக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுகிறார். ஆனால், போலீஸ் இலாகா அதைக் கவனிக்கத் தவறி விடுகிறது. திட்டமிட்டபடி கொலை நடந்து விடுகிறது. கொலை முடிந்த பிறகு, சிலரை சிறைக்குப் பிடித்துப் போனார்கள். அந்த எதிரிகளும் வழக்கிலே விடுதலை பெற்று விடுகிறார்கள். இப்படி ஒரு அக்கிரமம் நடைபெற்றிருப்பதை அந்த அமைச்சர் ஊட்டி மாநாட்டில் எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார். நான் 'அமைச்சர்', 'அமைச்சர்' என்று சொல்ல அவரை யாரோ எவரோ என்று ஆராயத் தேவையில்லை. மதிப்பிற்குரிய நம்முடைய முதல் அமைச்சர் அவர்களே தான் இவைகளையெல்லாம் அந்த ஊட்டி போலீஸ் அதிகாரிகள் மாநாட்டிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இவைகளை நாங்களா சொல்லுகிறோம் ? இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் சொல்லப்பட்டிருக்கின்றன. போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தை நேர்மையான முறையில் பயன்படுத்தாமல், "நான் கொலை செய்யப்படுவேன், வந்து என்னைக் காப்பாற்றுங்கள்" என்று அபயக் குரலைக் கொடுக்கும்போது ஓடோடி வந்து ! காப்பாற்றுவதற்குப் போலீஸ் இலாக்காவிலே உள்ள முக்கியமானவர்கள் தயங்குகிறார்கள் என்றால், பிறகு யாருக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு இருக்க முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதே அமைச்சர், பிறகு 1965-ம் ஆண்டில் நடைபெற்ற ஊட்டி மாநாட்டில். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றிப் பேசப்பட்ட நேரத்தில், "இந்தி எதிர்ப்பின்போது எங்கள் மீது மாணவர்கள் கற்களை வீசினார்கள்" என்று ஒரு அதிகாரி சொன்ன நேரத்தில், "அவர்களையெல்லாம் இரக்கமின்றி கையை ஒடியுங்கள், காலை ஒடியுங்கள்" என்று கூறியதாக நான் கேள்விப்பட்டேன். (ஷேம், ஷேம்).

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** "கையை ஒடி, காலை ஒடி" என்று நான் சொன்னதாக ஆதாரபூர்வமாகச் சொல்ல வேண்டுமே யொழிய 'ஷேம், ஷேம்' என்று சொல்லுவதில் பிரயோஜனம் இல்லை. "கையை ஒடி, காலை ஒடி" என்ற வார்த்தைகள் என் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகள் அல்ல.

**திரு. மு. கருணாநிதி:** 1961-க்கான நடவடிக்கைகள் பற்றிச் சொன்னேன். அதற்கான நடவடிக்கைக் குறிப்பு இருக்கும். அதே போல் 1965-க்கான நடவடிக்கைக் குறிப்பை முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்தால் . . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் சொன்னது எனக்குத் தெரியும். "கையை ஒடி, காலை ஒடி" என்று ஒருக்காலும் நான் சொல்லவில்லை. அம்மாதிரி சொல் என் வாயிலிருந்து வரவே வராது.

**திரு. மு. கருணாநிதி:** அது இல்லை என்று நிரூபிக்கவேண்டியது அமைச்சருடைய பொறுப்பு.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஏதாவது ஒன்றைச் சொல்லி விட்டு, அதை நிரூபி என்பது ஒரு அற்புதமான முறையாக இருக்கிறது. எதையாவது ஒன்றைச் சொல்லிவிடுவது. பிறகு "இல்லை" என்று நிரூபிக்கவேண்டும் என்று சொல்வதென்றால், இதுவா முறை?

**திரு. மு. கருணாநிதி:** நான் ஏதாவது ஒன்றைச் சொல்லவில்லை. இப்போதும் உறுதியாகச் சொல்லுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் அப்படிக் கூறியிருக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அப்படி ஒருக்காலும் கூறவில்லை என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** அவர்கள் கூறுவது உண்மை என்றால், நடவடிக்கைக் குறிப்பை இந்த மன்றத்தில் வைக்க அவர்கள் தயாராய் இருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** போலீஸ் மாநாட்டு நடவடிக்கைகளையெல்லாம் இங்கே வைப்பதில்லை.

**திரு. மு. கருணாநிதி:** போலீஸ் அதிகாரி கொலையைத் தடுக்க முடியாமல் ஒரு கொலை ஏற்படுகிற அளவுக்கு நிலைமையை வளர்த்தார் என்று சொன்னேன். நடந்துவிட்ட கொலையைக் கண்டு பிடிக்கவில்லை என்றால் அது மிகப் பரிதாபம்.

1965-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் செங்கற்பட்டுக்குப் பக்கத்தில் ஒரு வாலிபனுடைய பிணம்—27 அல்லது 28 வயது நிரம்பாத ஒரு வாலிபனுடைய பிணம்—கிடக்கிறது. தொடைக்குக் கீழே கால்கள் கிடையாது, கை விரல்கள் இல்லை, ரத்தமும் இல்லை என்றால் வேறு இடத்தில் கொலை செய்யப்பட்டிருக்கிறார். நான் இதைச் சொன்னால்கூட ஏதோ தெரியாமல் 'ரத்தம்' 'எலும்பு' என்று பேச ஆரம்பிக்கிறானே என்று காங்கிரஸ் கட்சி நண்பர்கள் சொல்வார்கள். ரத்தம் இருக்கும் காரணத்தால், அவைகளைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. அங்கே அந்தப் பிணம் கிடக்கிறது. அதனுடைய அடையாளங்கள் தெரியாத அளவுக்கு அங்க ஹீனப்படுத்தப்பட்டு, அறுக்கப்பட்டு, காது அறுக்கப்பட்டு அந்தப் பிணம் செங்கற்பட்டிலே கிடக்கிறது. அந்த வாலிபனுடைய பையில் ஒரு பிரயாணச் சீட்டு இருக்கிறது. சென்னை எழும்பூரி



லிருந்து திண்டிவனம் வரையில் செல்வதற்குப் பிரயாணச் சீட்டு இருக்கிறது. அந்தப் பிரயாணச் சீட்டோடு ஒரு மூன்று ரூபாய்க்குச் சில்லறைத் தொகை இருக்கிறது. அவன் டிக்கட் எடுத்த மூன்றாவது நாள்தான் அந்தப் பணம் அந்த இடத்தில் கண்டுபிடிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு போலீசார் சென்றார்கள். துப்பறியும் நாய் பயன்படுத்தப்பட்டது, இரயில்வே கேட் வரையில் போயிற்று என்ற அளவுக்குத்தான் வந்ததே தவிர, கொலை நடந்தது உண்மை, பிணம் கிடந்தது உண்மை, கால் இல்லாத முண்டமாகக் கிடந்தது உண்மை, மூக்கு அறுபட்டுக் கிடந்தது உண்மை. ஆனால், இதுவரையிலும் அந்தக் கொலை கண்டுபிடிக்கப்பட முடியவில்லை. இது இன்றையதினம் இருக்கிற நிலைமை.

போலீஸ் அதிகாரிகள் இன்னும் பயங்கரமான தவறுகள் சில செய்கிறார்கள் என்பதற்குச் சில ஆதாரங்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பது என்னுடைய தலையாய கடமையாகும். பருகூரிலிருந்து பங்களூருக்குக் கிருஷ்ணகிரி வழியாக ஒரு லாரி போகிறது. லாரியினுடைய எண் MYM 4281. உமாசங்கர் டிரான்ஸ்போர்ட்டைச் சேர்ந்த லாரி. அதை ஓட்டிச் சென்ற டிரைவரின் பெயர் அப்பு. அந்த லாரி போயிருக்கிறது. போகிற நேரத்தில் பருகூர் போலீஸ் ஸ்டேஷன் ஸப்-இன்ஸ்பெக்டர் லாரியை நிறுத்துகிறார். பங்களூரை நோக்கிப் போகிற லாரியை நிறுத்துகிறார். டிரைவருக்கும் அவருக்கும் வாக்குவாதம் நடைபெறுகிறது. அந்த வாக்குவாதத்தைத் தொடர்ந்து டிரைவர் லாரியை ஓட்டிக்கொண்டு போய்விடுகிறார். உடனேயே இவர் இன்னொரு லாரியில் ஏறித் தொடர்ந்து பின்னால் போய் இருக்கிறார். அந்த லாரி டிரைவர் கிருஷ்ணகிரியில் லாரியை நிறுத்திவிட்டு டீ சாப்பிடப் போயிருந்த சமயம் இன்ஸ்பெக்டர் லாரியைப் பிடித்து அதில் ஏறிக்கொண்டு, அதை திரும்பவும் பருகூருக்குக் கொண்டுவருகிறார். இது அந்த லாரி டிரைவருக்குத் தெரியாமல் நடக்கிறது. வருகிற வழியில் எட்டு மைல் தொலைவில் இந்த லாரி விபத்துக்கு உள்ளாகிறது. இந்த விபத்து ஏற்பட்ட பிறகு, அந்த இன்ஸ்பெக்டர் அந்த லாரியின் முதலாளி சுப்பாராவ் என்பவருக்குத் தெரியப்படுத்தி, அவருடன் சமாதான முயற்சி செய்து கொண்டு 500 ரூபாய் ரொக்கமாகவும், மோகன் ராம் என்பவருக்கு 1,500 ரூபாய்க்குப் பாண்டு எழுதிக்கொடுத்து, அது சுப்பராவ் பெயரில் மேடோவரும் செய்யப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டு சர்வென்ட் தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்கக் கூடாது. அப்படி வாங்குவதாக இருந்தாலும் முன் கூட்டியே அனுமதிப் பெற்று வாங்க வேண்டும். இந்த வழக்கிலே குறிப்பிட்ட சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் மோகன்ராமிடம் கடன் வாங்கியிருப்பதாகப் பாண்டு தயாரிப்பதற்குமுன் அனுமதி வாங்கியிருக்கிறாரா? அல்லது அதற்குப் பிறகு அனுமதி வாங்கியிருக்கிறாரா? இதை உள் துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று—பொறுப்பான சட்டமன்ற உறுப்பினர்கள் எங்காவது தவறு நடந்தால் அதை எடுத்துக்காட்டுகிறபோது எவ்வளவு அலட்சியப்படுத்தப்படுகிறது என்பதற்கு மேலும் ஒரு ஆதாரம் கூற முடியும். திண்டிவனப் பகுதியில் கொடிமா என்கிற கிராமம் இருக்கிறது. அங்கே இருந்த நடராச ஆச்சாரி, பெரிய தம்பி கவுண்டர் ஆகிய இரண்டு பேர்களும் சேர்ந்து ஒரு வாரச் சீட்டு நடத்தினார்கள். அந்தச் சீட்டுக்குப் பெயரே அண்டாச் சீட்டு. அதை நம்பி ஏராளமான பெண்கள் சீட்டுக்கு ரூபாய் 36.80 காசு வீதம் கொடுத்தார்கள். சீட்டு விழுபவர்களுக்கு அண்டா வாங்கிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சீட்டுக்குச் சேர்ந்த பணத்தை எடுத்துக் கொண்டு அந்த ஆசாமிகள் ஊரை விட்டே ஓடிவிட்டார்கள். இவர்கள் ஓடிய விஷயத்தை 13-10-1965-லேயே மயிலம் போலீஸ் ஸ்டேஷனுக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து 19-10-1965-இல் திரு. தங்கவேலு எம்.எல்.ஏ. அவர்கள் விக்கிரவாண்டி போலீஸ் ஸ்டேஷனுக்கு ரிஜிஸ்டர் தபாலில் ஒரு மனு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தபாலையே 22-ஆம் தேதி கையெழுத்திட்டுத்தான் அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வாங்கியிருக்கிறார். இதுவரை அதன் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மனுவைக் கூட இன்று நான் அமைச்சர் திருமுன் வைக்கிறேன்.

அடுத்து, மையூர் கிராமம் செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கிறது. அந்த மையூரில் ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்த ஊராட்சி மன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. திருவேங்கடம் அவர்கள் வெற்றி அடைந்தார்கள். அவருக்கு எதிராக தேர்தலில் வேலை செய்து தோற்றவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் அவர்கள். அவர் மத்திய அமைச்சர் திரு. அழகேசனின் மைத்துனர். அவர் திரு. திருவேங்கடம் அவர்களது வெற்றிக்கு எப்படிப் பாராட்டு நடத்தினார் தெரியுமா? திரு. திருவேங்கடம் மாமண்டூர் ஹோட்டலை விட்டு வெளியே வருகிறார். இவர்கள் பத்துப்பேர்களாக அவரை இழுத்துப்போட்டு அடித்துவிட்டு ஓடியிருக்கிறார்கள். அடிபட்ட ஊராட்சி மன்றத் தலைவர் திரு. திருவேங்கடம் அவர்கள் மதுராந்தகம் போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் செய்தார்கள். அதற்குள் அவர்களுக்கு என்ன செய்தி கொடுக்கப்பட்டதோ, ரிப்போர்ட் செய்த திரு. திருவேங்கடத்தையே கைது செய்து உள்ளே தள்ளிவிட்டார்கள். பத்துப்பேர்களாகச் சேர்ந்து தம்மை அடித்தார்கள் என்று ரிப்போர்ட் செய்யப்போனவரே கைதுசெய்யப்பட்டவிந்தையைப் பார்க்கிறோம். அதற்குப் பிறகு வழக்கு நடைபெற்றது. கீழ்க் கோர்டிலே 50 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அப்பீலில் விடுதலை பெற்றுவிட்டார், அவர் வழக்கிலும் வெற்றி பெற்று விட்டார் என்ற ஆத்திரத்தில், "நீ விடுதலை பெற்றுவிட்டாயா? உன் தலையை வெட்டுவோம்" என்று அவருக்குத் தபாலில் எழுதினார்கள். திரு. விஸ்வநாதன் எம்.எல்.ஏ. அவர்களும், திரு. திருவேங்கடம் அவர்களும் போலீஸ் ஐ.ஜி. அவர்களைச்





சென்று நேரில் பார்த்து அந்தக் கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மறுநாள் வேறு ஒரு வழக்கைக் காட்டி அதே திரு. திருவேங்கடம் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்த வகையில்தான் இன்றையதினம் போலீஸ் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது திருவண்ணாமலையில் பெரிய கலவரம் நடந்தது. அந்தக் கலவரத்தைத் தூண்டிவிட்டவர்களைப் பிடித்து அவர்கள் மீது எப்.ஐ.ஆர். தயாரிக்கப்பட்டது. ஆனால் அப்படித் தயாரிக்கப்பட்ட எப்.ஐ.ஆர்.-இல் இருந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள். அதன் காரணமாக என்ன ஆயிற்று? எப்.ஐ.ஆர். தயாரிக்கப்பட்டதோடு சரி, வழக்கு எதுவும் தொடராது அப்படியே விட்டுவிட்டார்கள். இப்படி சார்ஜ்ஷீட் போடாமல் விட்டதற்குக் காரணம் யாருடைய தலையீடு?

அடுத்து, தென்னார்க்காடு மாவட்டத்தில் திருவதி கிராமத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது. சில எதிரிகளைத் தேடிக்கொண்டு சப்-இன்ஸ்பெக்டர் சின்னப்பா என்பவர் போலீஸ்காரர்களுடன் கூட திருவதி கிராமத்திற்குச் சென்றார்கள். காடாம்புலியூர் நிலைய குற்ற எண் 110/65, செக்ஷன் 147, 148, 341, 332, 307 ஐ.பி.ஸி. சம்பந்தப்பட்ட எதிரிகளை அவர்கள் தேடி வந்தனர். அவர்களைக் கைதும் செய்துவிட்டனர். அந்த நேரத்தில் 6 பேர்கள் அவர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டு அடித்தனர். அவர்களையே கொலைசெய்ய முயன்றனர். எதிரிகளையும் விடுவித்துவிட்டனர். அந்த சப்-இன்ஸ்பெக்டரும், போலீஸ்காரர்களும் உயிருக்குப் பயந்து அடிபட்டு ஓடி வந்தார்கள். வந்து ஒரு படையுடன் கூடச் சென்று சம்பந்தப்பட்ட எதிரிகளைப் பிடித்து கைது செய்து அவர்கள் மீது பண்ருட்டி நிலையத்தில் எப்.ஐ.ஆர். தயாரித்தார்கள். "எங்களைக் கொலை செய்ய முயன்றார்கள்" என்றே எழுதி கையொப்பமிட்டிருக்கிறார் அந்த சப்-இன்ஸ்பெக்டர் சின்னப்பா அவர்கள். ஆனால் அந்த 6 பேர்களும் காங்கிரஸ்காரர்கள் என்று கேள்வி. நடந்தது என்ன? யார் தலையிட்டார்கள்? எங்கே வழக்குத் தொடரப்பட்டது? வழக்கே தொடரப்படவில்லை; அவர்கள் விடப்பட்டுவிட்டார்கள். போலீஸ்காரர்களுடைய கதியே இது என்றால் நீதி எங்கே இருக்கிறது? நியாயத்தை எப்படிப் பெறுவது? அந்த எப்.ஐ.ஆர். குறிப்பையும் அமைச்சர் திருமுன்பு வைக்க விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்று, நண்பர் திரு. மதியழகன் அவர்கள் பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். பத்திரிகைகள் மீது பாதுகாப்புச் சட்டம்—எழுதினால் பேசினால்—முரசொலி, மாலைமணி ஆகியவற்றின் மீது பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது. நான் ஒரு பத்திரிகையில் வந்த வாசகத்தை அப்படியே படித்துக் காட்டுகிறேன். அதைப் படித்த பிறகு கனம் அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு கோபம் வருமோ தெரியாது. தலைப்பு "கம்யூனிஸ்டுகளும் நானும்" என்பதாகும்.

"நாளைக்கு ரஷ்யாக்காரன் இந்த நாட்டின்மீது படையெடுத்தால் நான் ரஷ்யாக்காரனை ஆதரித்து சுட்டுக்கொல்லப்படவோ அல்லது இந் நாட்டுச் சிறையில் இருக்கவோதான் தயாராய் இருப்பேனே யொழிய காங்கிரஸ் கட்சிக்கு இந்திய தேசாபிமானத்துக்கு அடிமையாக ஒரு நிமிஷமும் இருக்கச் சம்மதிக்க மாட்டேன்.

[திரு. மு. கருணாநிதி] [11th March 1966

இத்தனைக்கும் நான் ஒன்பதுமாற்றுக் கம்யூனிசக்காரனுமல்ல". இத்தனையும் நான் எழுதியிருந்தால் கருணாநிதியைப் பாளையங்கோட்டைக்கு அல்ல, பாலைவனக்கோட்டைக்கே அனுப்பியிருப்பார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அத்தனைபேர்களையும் கண்காணாத் தேசத்திற்கு அனுப்பியிருப்பார்கள். எழுதியது யார்? "நாளைக்கு ரஷ்யாக்காரன் படையெடுத்தால் நான் ரஷ்யாக்காரனை ஆதரித்து சுட்டுக்கொல்லப்படவோ அல்லது இந்நாட்டுச் சிறையில் இருக்கவோ விரும்புவேனே தவிர இந்திய தேசாபிமானத்துக்கு அடிமையாக ஒருநிமிஷமும் இருக்கச் சம்மதிக்க மாட்டேன்" என்று எழுதியவர்—எனக்குச் சொல்ல வெட்கமாக இருக்கிறது—இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கின்ற பெரியார் திரு. ஈ. வே. இராமசாமி அவர்கள். 5-2-1966 "விடுதலை" பத்திரிகையில் இந்தத் தலையங்கத்தை எழுதியிருக்கிறார். பாதுகாப்புச் சட்டம் எங்கே போயிற்று? பாதுகாப்புச் சட்டம் பெரியார் என்ற பெயரைக் கண்டவுடனே மழுங்கிவிட்டதா? அவர் காலடியில் மண்டியிட்டுவிட்டதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எதிர்க்கட்சி உபதலைவர் அவர்கள் மிக உருக்கமாக, ஆத்திரமாகப் பேசுகின்றார்கள். அவர் சொன்ன கருத்துக்கும், இதற்கும் உள்ள அடிப்படையான வித்தியாசத்தை உணர வேண்டும். பாதுகாப்புச் சட்டத்தை உபயோகப்படுத்துவது என்றால் எந்தச் சூழ்நிலையில், எந்தச் சந்தர்ப்பத்தில், எந்த மாதிரியாக கருத்து வெளிப்படுத்தப்படுகிறது என்பதை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்துதான் உபயோகப்படுத்தவேண்டும். "ருஷ்யா படையெடுத்தால்" என்றால் ருஷ்யா நம் மீது படையெடுத்திருக்கும் காலத்தில் எழுதப்பட்டிருந்தால் அதுவேறு விஷயம். ருஷ்யா படையெடுக்கவும் இல்லை.

**திரு. மு. கருணாநிதி:** ருஷ்யா படையெடுக்கவில்லை. ஆகவே, ருஷ்யா படையெடுத்திருந்தால் என்று எழுதப்பட்ட தலையங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் விடப்பட்டது என்கிற வாதத்தைவிட, தேர்தலில் அவரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நப்பாசை காரணமாகத்தான் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறதே தவிர வேறில்லை என்று பதில் கூறியிருக்கலாம்—நாளைக்கு வேறு ஒரு பத்திரிகை "அமெரிக்கா படையெடுத்தால் அதை ஆதரித்துச் சுட்டுக் கொல்லப் பட்டாலும் சரி, தேசாபிமானத்தின் பேரால் இந்த நாட்டில் அடிமையாக இருக்கமாட்டோம்" என்று எழுதுவதற்கு மற்ற மற்ற பத்திரிகைகளுக்கு உரிமை கொடுக்கிறாரா என்று கேட்கிறேன். தேசாபிமானம் தேவை இல்லை என்று ஒருவர் எழுதுகிறார். காங்கிரஸ் கட்சிக்கு இந்திய தேசாபிமானத்துக்கு அடிமையாக ஒரு நிமிஷமும் இருக்க சம்மதிக்கமாட்டேன் என்று ஒருவர் எழுதுகிறார்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சிலர் அதை மறைமுகமாகத் தெரிவிக்கிறார்கள். சிலர் நேர்முகமாகத் தெரிவிக்கிறார்கள். அதுதான் வித்தியாசம்.



11th March 1966]

**திரு. மு. கருணாநிதி:** இந்தப் பதில் முதல் அமைச்சர் அவர்களுக்கே திருப்தி அளிக்கக் கூடியதாக இருந்தால், அவரது மனச்சாட்சிக்கு சரியானதாகப் பட்டால்—கேவலம் சில பல வோட்டுக்களுக்காக இந்த நிலைக்குப் போய்விட்டார்களே என்று கவலை தெரிவித்து இதற்கு மேல் பேச விரும்பாமல் என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**கனம் திரு. பூ. கக்கன்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய டிமாண்டில் பல மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பங்குகொண்டார்கள். பெரும்பாலும் எல்லோரும் போலீஸ் இலாகாவினுடைய பெருமையை வாயார வாழ்த்தினார்கள். அதை நாம் கண்கூடாகப் பார்த்தோம், கேட்டோம். போலீஸ் இலாகாவினுடைய சேவையைப் பாராட்டி அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்ற முறையிலே நடந்துகொண்ட கனம் உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். பேசிய அங்கத்தினர்கள் பொதுவாக, மதுவிலக்குப் பற்றியும், சம்பள விகிதங்கள் பற்றியும், வீட்டு வசதிபற்றியும், போக்குவரத்தைப்பற்றியும், மரியாதை வாரம் கொண்டாடுவதைப் பற்றியும், தீயணைக்கும் படையினரைப்பற்றியும், பிரயாணப்படியை உயர்த்துவதுபற்றியும் பேசினார்கள். திரு. மதியழகன் அவர்களும், திரு. கருணாநிதி அவர்களும் பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றியும் கடைசியாக எடுத்துச் சொன்னார்கள்.

முதலிலேயே நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக போலீசாருக்கு என்ன உதவிகளைச் செய்திருக்கிறோம் என்பதைச் சொல்லிவிடுகிறேன். அவர்களுக்கு அதிக உதவிகளைச் செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும். அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் பாடுபடுகிறது. நான் முதலிலே சொன்னபடி, போலீஸ் இலாகாவில் பணிசெய்கின்ற காவலாளர்கள் தான் மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பாக இருந்து வருகிறார்கள். அதோடு மட்டுமல்ல; நாட்டிலே நீதியையும், ஒழுங்கையும் நிலை நிறுத்துவதற்கும் அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட சிறந்த சேவையாளர்களுக்கு நாம் எல்லா நன்மைகளையும், குறிப்பாக அரசாங்கத்தின் மூலம், என்ன என்ன நன்மைகளைச் செய்யமுடியுமோ அவற்றைச் செய்வதற்கு முன்வருவோம் என்பதை நான் மதிப்புக்குரிய கனம் அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மதுவிலக்குத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது மாமூலைப்பற்றிச் சொன்னார்கள். மேலெழுந்த வாரியாகத்தான் சொன்னார்களேயொழிய எந்த இடத்திலே, யாரால் வாங்கப்பட்டது, எவரால் கொடுக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டினை விவரமாகச் சொல்லவில்லை. அவற்றை விவரமாகச் சொன்னால் தான் நானும் விசாரிப்பதற்கு வழி செய்ய முடியும். அதைவிட்டுவிட்டு மேலெழுந்தவாரியாக, மாமூல் மாமூல், என்று சொல்வது சரியல்ல. அப்படிச் சொல்வது நன்றாகச் சேவை செய்யக்கூடியவர்களைத் தடைப்படுத்துவது ஆகும், அவர்களுக்கு அநீதி செய்வதாக ஆகும். குற்றத்தை யார் செய்தார்கள் என்று நிரூபிக்கவேண்டும்.

அப்படிச் செய்தால்தான் அதிகாரிகளிடத்திலே விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க முடியும். அப்படியில்லாமல், மாமூல், மாமூல், என்று சட்டசபையில் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்ல வேண்டியதில்லை. அரசாங்கத்தின் மீது பழி சுமத்துவதற்காகச் செய்கின்ற ஏற்பாடு தான் இது. தேர்தலுக்கு முன்பாக அவர்கள் செய்துகொள்ளும் ஏற்பாடுதான் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி ஏதாவது இருந்தால் அதைப்பற்றி கடிதம் மூலமாக மந்திரிகளிடத்திலோ அல்லது அதிகாரிகளிடத்திலோ சொல்லி நியாயம், பரிகாரம் தேடிக் கொள்ளலாம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: மாமூல் வாங்குபவர்களைப்பற்றி கடிதம் மூலமாக எழுதியனுப்பலாம் என்று சொன்னார்கள். எழுதியனுப்பினால் அமைச்சர்கள் கவனிப்பார்களா? அல்லது செக்ஷன் 47 டிஸ்ட்ரிக்ட் போலீஸ் ஆக்ட் பிரகாரம் என்மேல் வழக்குத் தொடருகிறார்களே அதைப்போல் வழக்குத் தொடருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: இப்படிச் சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது. மாமூல் வாங்குகிறார்கள், மாமூல் வாங்குகிறார்கள் என்று சொல்லுகிறவர்கள் அதை நிரூபிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மக்கள் மதுவிலக்குத் திட்டத்தினால் நல்ல உதவிகளைப் பெற்றிருக்கிறார்கள். நோய் உள்ளவர்களுக்கு அரசாங்க டாக்டர்கள் மூலமாகப் பெர்மிட் கொடுத்து, அவர்களுடைய உயிருக்குப் பாதுகாப்பாக அரசாங்கம் இருக்கிறது. எங்கு சென்றாலும் அதிகமாகக் காய்ச்சப்படுகிறது, திருட்டுத்தனமாகக் காய்ச்சப்படுகிறது, பதனியைக் கள் ஆக இறக்குகிறார்கள் என்றெல்லாம் குற்றங்கள் சொல்வது நல்லதல்ல. பதனியை இறக்குபவர்கள் கள்ளை இறக்குகிறார்கள் என்பதை நிரூபித்தால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்குக் கொடுத்திருக்கிற பெர்மிட் கான்சல் செய்யப்படும். ஆகவே, மதுவிலக்குச் செய்ததன் மூலமாக நாட்டு மக்களுக்குப் பெரும் நன்மைகள் தான் ஏற்பட்டிருக்கின்றனவேயொழிய வேறு ஒன்றும் பாதகமில்லை. ஆகவே மீண்டும் மீண்டும் மக்கள் இதை முக்கியமான பிரச்னையாக நினைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு, குறிப்பாகக் கல்வித்துறையிலே அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புச் செய்து வருகிறார்கள். அவர்களிடம் கள்ளச் சாராயத்தை ஊக்குவிக்கக்கூடிய முறையிலே, மாமூல், மாமூல், என்று மாமூலைத் தேடக்கூடிய அளவிலே சொல்லிக் கொண்டிருப்பது நியாயமல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வீடு கட்டும் திட்டத்தைப்பற்றிப் பல அன்பர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். வீடு கட்டும் திட்டத்தின் மூலமாகத் தகுந்தபடி வீடுகள் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். இதில் 1965-இல் சாதனை 212 வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதில் 141 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது 67 சத விகிதம் ஆகும். மேலும், வீடு கட்டும் திட்டத்தைச் சிறப்பாகச் செய்வதற்குத் தக்க ஏற்பாடுகளையெல்லாம் செய்துவருகிறோம் என்





பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு நாம் திட்டமிட்டது 1,012 வீடுகள், அதில் 643 வீடுகள் கட்டபபட்டிருக்கின்றன. இது 64 சத விகிதம ஆகும். பாக்கி இருப்பவைகளையும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம். ரிசர்வ் அஸிஸ்டெண்ட் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு 149 வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டியதில் 145 வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். இது 100-க்கு 100 கட்டப்பட்டுவிட்டன. ஹெட்கான்ஸ்டபிள்களுக்கு 2,703 வீடுகள் கட்ட வேண்டுமென்பதில் 2,270 வீடுகள் கட்டியிருக்கிறோம். இது 84 சத விகிதம் ஆகும். கான்ஸ்டபிள்களுக்கு 15,261 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இது திட்டமிட்டத்தில் 82 சத விகிதம் ஆகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போலீஸாருக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதில் அரசாங்கம் அதிகப்படியான அக்கறை எடுத்துக்கொள்ளும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். போலீஸார் சம்பள விகிதத்தைப் பற்றிகூட நான் ஆரம்பத்தில் என்னுடைய உரையிலே சொன்னேன். முன்பு கான்ஸ்டபிள்களுடைய சம்பளம் 30-½-40-ஆக இருந்தது. இப்பொழுது 65-1-70-2-90-ஆக உயர்த்திருக்கிறோம். ஹெட கான்ஸ்டபிள்களுடைய சம்பளம் முன்பு 40-1-50 ஆக இருந்தது; இப்பொழுது 85-2-105 ஆக உயர்த்தியிருக்கிறோம். சப்-இன்ஸ்பெக்டர்களுடைய சம்பளம் முன்பு 60-2-80-1-90-ஆக இருந்தது; இப்பொழுது 110-3-140 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு முன்பு 80-3-95-4-115 இப் 1-30
போது 140-5-220. ரிசர்வ் இன்ஸ்பெக்டருக்கு முன்பு 175-10-275; p.m.
இப்போது 225-15-375. இப்படிக் கணிசமாகச் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். வருங்காலத்திலே நமது மாநிலத்தின் வருமானத்தை அனுசரித்து அதிகமாகக் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்கள் இங்கே சம்பளத்தை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, வெளியே போய் வரி போட்டுவிட்டார்கள், ஆட்டுக்கு வரி போட்டு விட்டார்கள், கோழிக்கு வரி போட்டு விட்டார்கள், குஞ்சுக்கு வரி போட்டு விட்டார்கள் என்று பேசுகிறார்கள்.

தீயணைக்கும் படையைப்பற்றிக் கனம் அங்கத்தினர்கள் எல்லாம் சொன்னார்கள். உடையார்பாளையம் வட்டாரத்தில் தீயணைக்கும் படையை வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். தற்போது பெரம்பலூர், திண்டிவனம் ஆகிய பகுதிகளில் அதை வைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். எந்தெந்த இடத்தில் தீயணைக்கும் படையை அமைக்க வேண்டுமென்பதைப் பற்றிப் பரிசீலனை செய்து ஒரு லிஸ்ட் தயார் செய்திருக்கிறார்கள். அதன்படிதான் தீயணைக்கும் நிலையங்களை ஏற்படுத்தி வருகிறோம்.

ஹோம் கார்ட்ஸ் பாய்ஸ் கிளப்பைப் பற்றியெல்லாம் இந்தச் சமயத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உத்தியோகத்தில் இருப்பவர்கள், வாலிபர்கள் எல்லாம் சேர்ந்து நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் இவற்றிலே சேர்ந்து பணியாற்றினார்கள். நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டபோது,

நாட்டுக்குப் பாகிஸ்தானால் ஆபத்து நேர்ந்தபோதும் அவர்கள் செய்த பணி எல்லோருக்கும் தெரியும். குழந்தைகள் எல்லாம் வருங்காலத்திலே சிறந்த தலைவர்களாக வரவேண்டுமென்பதற்காகத் தான் பாய்ஸ் கிளப் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஹோம் கார்ட்ஸில் சேர்ந்திருக்கிற சகோதரிகள் எல்லாம் கூடப் பாராட்டுக்குரியவர்கள்.

சப்-இன்ஸ்பெக்டர்களுக்கெல்லாம் ஜீப் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குப் பணம் அதிகமாகத் தேவைப்படும். இன்ஸ்பெக்டர் லெவலில் வாகனங்கள் கொடுத்து உதவ பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். 1966-67-ல் ஓரளவு வாகனங்கள் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

போலீஸ் உத்தியோகஸ்தர்களுடைய எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போவது நல்லதல்ல என்று மதிப்புக்குரிய திரு. மாதவன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அதே சமயத்தில் பல அங்கத்தினர்கள் ஸ்டேஷன்களில் சப்-இன்ஸ்பெக்டர் இல்லை, கான்ஸ்டபிள் இல்லை, ஆளே இல்லை; குறைகளைச் சொல்ல அங்கு ஆட்கள் இருக்க வேண்டாமா, ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஹெட் கான்ஸ்டபிள் போட வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். ஹெட் கான்ஸ்டபிள்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியவர்களை எல்லாம் எந்த அளவுக்குப் போடவேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது. போலீசின் எண்ணிக்கையை மட்டுமல்லாது அவர்களுடைய தரத்தையும் உயர்த்த அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

போலீஸ் இலாகாவிற்கு ஆட்களே வரவில்லை என்று சொன்னார்கள். பி.ஏ., பட்டதாரிகள் எல்லாம் சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்கெல்லாம் வரத் தயாராக இருக்கிறார்கள். வக்கீல் படிப்பு படித்தவர்கள் கூட வரத் தயாராக இருக்கிறார்கள். கனம் கரிவேங்கடம் அவர்கள் சட்டம் தெரிந்தவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். சட்டம் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. ஆள் லாயக்காகவும் இருக்க வேண்டும். பொதுவாக, படித்த அன்பர்களுக்கு அரசாங்கம் ஆதரவு காட்டி வருகிறது.

நம்முடைய இலாகாவில் 10,390 பேர் ஊர் காவல் படையில் இருக்கிறார்கள். மேலும் அவசியமானால் அந்த எண்ணிக்கையை அதிகமாக்கக் கூட அரசாங்கம் முன் வரும்.

க்ஷேமநல நிதியைப் பற்றி ஸ்ரீமதி பொன்னம்மாளும் மற்ற அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். நம்முடைய அரசாங்கம் போலீசாருடைய பெனவலன்ட் ஃபண்டுக்காக 50,000 ரூபாய் கொடுத்து வருகிறது. மேலும் அவர்கள் ஒரு லட்ச ரூபாய் போட்டால் அரசாங்கம் ஒரு லட்சம் ரூபாயும், இரண்டு லட்சம் ரூபாய் சேர்த்துக் கொடுத்தால் அரசாங்கம் இரண்டு லட்சம் ரூபாயும் கொடுக்கத் தயாராக இருக்கிறது. மற்றப்படி போலீசார் குடும்பப் பெண்களுக்குக் கைத்தொழில் தெரிந்திருந்தால் அதற்கான வசதிகளையும் செய்து கொடுத்து அவர்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள வழி செய்யப்பட்டிருக்கிறது.



அவர்களுக்குத் தொழில்களைக் கற்றுக் கொடுத்து உப தொழில்களைச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் இந்த அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது.

பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றி மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒரு கட் மோஷன் கொடுத்திருக்கிறார்கள். பாதுகாப்புச் சட்டத்தை எடுத்துவிட வேண்டுமென்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரல். ஏன் இவ்வளவு அவசரப்படுகிறார்கள் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. பாதுகாப்புச் சட்டம் சென்ற நகரசபைத் தேர்தலின் போது இருந்தது; இடைத் தேர்தலின் போது இருந்தது. 1967 தேர்தலுக்குள் பாதுகாப்புச் சட்டத்தை எடுத்துவிடுங்கள் என்று ஏன் இப்போது பேசுகிறார்கள்? அவர்கள் தங்கள் இஷ்டப்படி எதை வேண்டுமென்றாலும், நடக்காததை எல்லாம் பேசி மக்களிடத்திலே தப்புப் பிரசாரம் செய்து மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற ஏற்பாடு செய்கிறார்களா? அது நல்லதல்ல. நாட்டுக்கு ஆபத்து என்றால் நமக்கெல்லாம் ஆபத்துதான். பாரத நாட்டுப் பிரதம மந்திரி அவர்கள் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். தேவையில்லாமல் ஒரு நாள் கூட இதை வைத்திருக்க மாட்டோம் என்று கூறியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திலே, எப்போது நம் நாட்டுக்கு ஆபத்தில்லை, இந்தச் சட்டத்தை எடுத்து விடலாம் என்று எண்ணுகிறார்களோ அப்போது இதை எடுத்து விடுவார்கள். இவர்கள் சொல்வது போல் எடுத்துவிட்டு நாளைக்கு ஆபத்து வந்தது என்றால் 'இப்படி அரசாங்கம் எடுத்தது அநீதி' என்று அப்போது பேசுவார்கள்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** பாதுகாப்புச் சட்டம் எடுக்கப்பட்டாலும் 358-வது பிரிவுப்படி ஜனாதிபதி அவசரச் சட்டப் பிரகடனம் செய்யலாம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** 'வருமுன் காப்போன்' என்று சொல்வார்கள். எந்தெந்த சமயத்தில் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். ஏதோ வேண்டுமென்றே எதிர்க்கட்சிக்காரர்களைக் கஷ்டப்படுத்த வேண்டும், அவர்கள் முயற்சிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லி மக்களிடம் பிரசாரம் செய்வது நல்லதல்ல. அதைப் பார்த்து மக்கள் ஏமாந்து விடமாட்டார்கள். நாட்டின் பாதுகாப்பிற்காக, நாட்டு மக்களின் நன்மைக்காக இருக்கிறது பாதுகாப்புச் சட்டம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** பாதுகாப்புச் சட்டம் இருக்கவேண்டுமென்று மீண்டும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சட்ட மந்திரியாக இருந்து பதவி விலகிய திரு. சென் அவர்கள் பாராளுமன்றத்தில் இந்தப் பாதுகாப்புச் சட்டம் தேவையில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி என்ன சொல்கிறார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : வெளியே இருக்கிறவர்கள், காங்கிரஸ்காரர்களாக இருக்கலாம், மற்றவர்களாக இருக்கலாம், அவர்களுக்கு வேறு வேறு கருத்துக்கள் இருக்கலாம், அல்லது உண்மையை உணராமல் இருக்கலாம். ஆனால், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு நிலைமை நன்கு புலப்படுகிறது. இப்போது சீனர்கள் தொல்லை எவ்வளவு அதிகமாகப் பெருத்திருக்கிறது என்பது வெளியே இருக்கிறவர்களுக்கு, அவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் சரி, முன்னாள் அமைச்சர்களாக இருந்தாலும் சரி, தெரிந்து இருக்க முடியாது. இன்று சீனாவின் தொல்லை, 'மெனஸ்', அதிகப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு பாதுகாப்புச் சட்டம் வேண்டாம், நெருக்கடி நிலை இல்லை என்று ஒருகாலும் கூறி விட முடியாது. அதைப் பிரயோகிக்கும் விஷயத்தில் கூட நான் முன்பே விளக்கியிருக்கிறேன். அது அந்தந்த நிலையைப் பொறுத்தது என்று. பாதுகாப்புச் சட்டத்தை —அனாவசியமாக ஒரு நாள்கூட நாங்கள் வைத்துக் கொள்ள மாட்டோம் என்று உறுதி கூறியிருப்பதை நானும் வற்புறுத்துகிறேன். பாதுகாப்புச் சட்டத்தை, எந்தெந்த வகையில், எவ்வளவு தூரம் பிரயோகிப்பது என்பது அந்தந்த நிலையைப் பொறுத்தது. மும்மரமாக ஒரு போர் நிலைமை அல்லது நம் தமிழ் நாட்டில் சென்ற ஆண்டு ஏற்பட்டது போன்ற ஒரு பயங்கரமான நிலை ஏற்பட்டால் அப்படிப்பட்ட நிலையில் பிரயோகிப்பது ஒன்று. சாதாரணமாக அவற்றில்லாமல் சீனர்களின் தொல்லை இருக்கிறபோது. டாஷ்கண்ட் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்ட பிறகு இப்போதுள்ள நிலைமை வேறு. தேர்தல் வந்து விட்டால் தேர்தலை ஒட்டிய நிலைமை வேறு. நாட்டின் நேரடியான பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட சூழ்நிலை தவிர மற்றப்படி இந்தப் பாதுகாப்புச் சட்டம் பிரயோகிக்கப்பட மாட்டாது என்று மத்திய அரசாங்கம் உறுதி கூறியிருக்கிறது. அந்த உறுதியை நானும் இங்கு சொல்லியிருக்கிறேன். அதைத் தான் நான் கனம் அங்கத்தினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : போர் இருக்கும்போது அல்லது உள் நாட்டுக் கிளர்ச்சிகள் இருக்கும்போது அது பயன்படுத்தப்படும் என்று கூறினார்கள். இவ்வளவெல்லாம் இருக்கும்போது திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசினார்கள் என்பதற்காகப் பாதுகாப்புச் சட்டம் அவர்கள் மீது பாய்ந்தது ஏன் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : பாதுகாப்புச் சட்டப்படி பாதுகாப்புக் கைதியாக வைப்பது ஒன்று. ப்ராசிக்யூஷன் செய்வது ஒன்று. பலவிதமாக இருக்கிறது. அந்தந்த சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**கனம் திரு. பூ. கக்கன்** : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் பாதுகாப்புச் சட்டத்தை அது தேவையில்லாதபோது எடுப்பதற்கு மத்திய சர்க்கார் முன்வரும் என்ற வாக்குறுதியைப் பிரதம மந்திரி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, முன்னுக்குப் பின் முரணாக, உண்மைக்கு விரோதமாகச் சொல்லி குதர்க்க வாதமும், நாட்டிலே குழப்பத்தையும் செய்ய வேண்டாம் என்று எதிர்க் கட்சி அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.





கொடிபற்றி திரு. மாதவன் அவர்கள் சொல்லும்போது ஒரு இடத்தில் அவர்கள் கொடியை எடுத்து விட்டதாகச் சொன்னார்கள். அந்தத் தகவல் எனக்குத் தெரியாது. மதிப்பிற்குரிய மாதவன் அவர்களுக்கு அது தெரிந்திருந்தால் என்னிடம் கேட்டிருக்கலாம். இதற்கு முன் கொடி கட்டாது மந்திரி போகும்போது மட்டும்தான் வருகிறது.

திரு. செ. மாதவன் : ஏற்கனவே போலீஸ் அனுமதித்த கொடி அது.

கனம் திரு. பூ. கக்கன் : அங்கத்தினர் அவர்கள் அதுபற்றிய விவரங்களைச் சொன்னால் விசாரிக்கிறேன். உண்மையைச் சொன்னால் விசாரிக்க நான் முன் வருகிறேன். மந்திரி போகும்போது எடுக்கச் சொல்லிவிட்டார் . . .

திரு. செ. மாதவன் : நான் அப்படிச் சொல்லவேயில்லை. மந்திரி எடுக்கச் சொன்னார் என்று சொல்லவேயில்லை.

**கனம் திரு. பூ. கக்கன்** : மந்திரி போகும்போது அங்குள்ளவர்கள் எடுத்து விட்டுப்போனார்கள் என்று சொன்னார்கள். இதையெல்லாம் சொல்லி அரசாங்கத்தின் மீது பழி சுமத்த முடியாது என்று திரு. மாதவன் அவர்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நேரம் அதிகமில்லாததால் முடித்துக்கொள்கிறேன். ரெயில்வே பணி புரிகிற சிப்பந்திகளுக்கு, இருப்புப் பாதை காவல் சிப்பந்திகளுக்கு இந்த நேரத்தில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். 'ஆன்டி சோஷல் எலிமென்ட்ஸ்' வந்து தண்டவாளங்களை அகற்றிக் கெடுதல் செய்து ரெயிலைக் கவிழ்க்க யத்தனம் செய்ததைத் தடுத்து ரெயிலையும், மக்களையும் காப்பாற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சமயத்தில் என் பாராட்டைத் தெரிவிக்கவேண்டும். அவர்கள் உண்மையான சேவையை மனத்தில் கொண்டு நாட்டுக்குப் பணி செய்ய மேலும் முன் வருவார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். போலீஸ் படைகளின் ஒழுங்கு, மேம்பட்ட நிலையில் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. சட்டம், ஒழுங்கு இவைகளைப் பாதுகாப்பதிலும் பல்வேறு உணவுக் கட்டுப்பாடு ஆணைகளை எல்லாம் அவர்கள் செயல்படுத்தியதிலும் மிகவும் போற்றத் தக்க வகையில் பணியாற்றினார்கள். ஆயுதப் படைப் பிரிவினர் உட்பட போலீஸ் படையைச் சேர்ந்த அதிகாரிகளும், பணியாளர்களும் மிக்க உண்மையுடனும் ஆர்வத்துடன் பணியாற்றினார்கள். போலீஸ் படையினரின் ஒழுங்கு தொடர்சியாக உயர்த்த நிலையில் இருந்தது. போலீஸுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பில் மிகச் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டது. இதற்குத் தமிழக மக்களின் ஒத்துழைப்பும் உதவியும் இருந்து வந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

போலீஸ் சர்க்கார் என்று சொன்னார்கள். அதை யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இது மக்கள் சர்க்கார், பல திட்டங்கள் தீட்டப்பட்டு மக்கள் அதனால் பயன்பெற்று வருகிறார்கள். மக்களுக்காகச் சர்க்கார் பணியாற்றுகிற நேரத்தில் மக்களும் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுத்து வருகிறார்கள். எதிர்க் கட்சித் துணைத்

[திரு. பூ. கக்கன்] [11th March 1966

தலைவர் அவர்கள் சில குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். முன்பே அவற்றைப் பற்றிச் சொல்லியிருந்தால் விசாரித்திருக்கலாம். இந்தச் சமயத்தில் இங்கு வந்து சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குற்றங்கள் உண்மையா இல்லையா என்பதை விசாரித்துத் தான் முடிவு சொல்ல வேண்டும். எதையும் இங்கு வந்து சொல்லலாம்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பதற்கிணங்க உண்மையைத் தெரிந்து கொண்டுதான் பரிகாரம் தேட வேண்டுமே தவிர சொன்னவுடனேயே பரிகாரம் தேட முடியாது. எதிர்க் கட்சி உப தலைவர் அவர்கள் சொன்னவுடனே அதுதான் உண்மை என்று நம்பி விட முடியாது. விசாரித்துப் பார்த்துத்தான் சொல்ல வேண்டுமே தவிர விசாரிக்காமல் ஒன்றும் சொல்ல முடியாது என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

The cut-motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: 'The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 10,07,68,600 under Demand No. XII—Police".

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

1-49 p.m.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

## A. Statutory Rules and Orders.

* 149. *Notification issued with G.O. Ms. No. 241, Home, dated the 29th January 1966 Amending Rule 34 of the Madras Distillery Rules, 1930 published with Home Department Notification S.R.O. No. A-3469 of 1960, dated 9th May 1960 at pages 220-229 of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the 18th May 1960 as subsequently amended.* [*(Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937) (Madras Act X of 1937).*]

## B. Reports, Notifications and other papers.

Nil

* Laid on the Table of the House on 10th March 1966.